Zam No6
No2.10
161 95

The Indian Law Gazette.

PART I.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் I.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னைப்பட்டணம், 1917ஞு ஜனவரிமீ [நெ. 1.

EFFECT OF ADOPTION ON PRE-EXISTING RIGHTS.

ஒருவனை தத்தெடுத்துக்கொள்வதினால் அவனுக்கு அதற்குமுன் அவன் பிறந்த குடும்ப சொத்திலிருந்த ஹக்கு பாத்தியதை சுதந்தரங்களின் பயனை அவனை ஸ்ரீகாரமா யெடுத்துக்கொண்டபிறகு அவன் அடைவானாயென்பது.

இந்த லாப்பாயின்ட்டைப்பற்றி தீர்ப்பாயிருக்கும் தீர்மானங்கள் :—

(1) பிஹாரிலால் v. கைலாஸ்சந்தர் (1896) 1 கல்-வீ-நோ. 121.

(2) பிர்புத்ரா v. கல்படாரு (1905) 1 கல்-லா-ஜ 388.

(3) வெங்கடநாசிம்ஹ v. ரங்கைய அப்பாராவ் (1905) இ-லா-ரி. 20 ம 437.

(4) டட்டாட்ரய்யா v. கோவிந்த்ஸம்பாஜி (1916) இ-லா-ரி 40 பம் 429.

மந்திராலோசனை சபையார் (Privy Council) மெதூர் (Medur) கேசை தீர்மானம் செய்தபோது "ஒருவனைத் தத்தெடுத்துக்கொள்வதினால் அவனுக்கு அதற்குமுன் அவன்பிறந்த குடும்ப சொத்திலிருந்த ஹக்கு பாத்தியதை சுதந்தரங்களை அவன் இழந்துவிடுகிறானா இல்லையாவென்பதைப்பற்றி தீர்ப்புசொல்லாமல் விட்டுவிட்டார்கள். இவ்விஷயத்தைப்பற்றி இந்தியாவிலுள்ள ஹைக்கோர்ட்டார்கள் வெவ்வேறுவிதமான தீர்மானம் செய்திருக்கிறார்கள். மேற்செப்பிய கேசுகளிலெல்லாவற்றிலும் முந்திய கேசை தீர்மானம்செய்தவர் மிஸ்டர் ஜஸ்டிஸ் அமீர் அலி, அந்தக்கேசு மஹாபாரத சட்டத்தின்கீழ் தீர்ப்புசெய்யப்பட்டது.

ஆனால் இந்த கேசிலுள்ள லாப்பாயின்ட்டுக்கு அதனால் முக்கியமாய் யாதொரு விபரீதமான பேதமும் உண்டாகாது. இவ்விதமாய் ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் செய்யப்பட்டிருக்கும் தீர்மானங்கள் நியாய தர்க்க சாஸ்திர யுக்தமான கிரந்தங்களை யொட்டி செய்யப்பட்டவைகள்தானென்று சொல்லவேண்டும். இந்த சாஸ்திரங்களுக்கு மூலாதாரமான மனு சாஸ்திரத்தின் 9-வது அத்தியாயம் 142-வது சுலோகம்தான் இவ்விதமான தீர்மானங்களுக்கு ஆதாரம். ஆனால் அந்த சாஸ்திரங்களில் சொல்லியிருப்பவைகளின் பொருளை அர்த்தம் செய்வதிலும், அவைகளை தற்காலம் வாசிக்கும் விதங்களிலும்தான் இவ்விதமாய் வெவ்வேறு விபக்தமான தீர்மானங்கள் ஏற்படுகின்றன. இதுவிஷயமாய் இந்த சாஸ்திரங்களிலுள்ள பொருளை அர்த்தம்செய்வதில் உண்டாகும் பேதாபேதங்களைப்பற்றியும் வெவ்வேறுவித அபிப்பிராயங்களைப்பற்றியும் Mr. கொலாப்சந்த்ர சர்க்கார்சாஸ்திரியும், Mr. M. ரங்காச்சாரியாரும் மெதூர் (Medur) கேசில் சொல்லிய சாட்சியத்தில் மிக்க தெளிவாயும் வெளிப்படையாயும் கூறியிருப்பதால் அவர்கள் மூலாதாரமான கிரந்தங்களை யனுசரித்து கோர்ட்டார் முன்சொல்லிய வாக்குமூலங்களை பொதுவாய் நியாயவிசாரணையில் ஊக்கமுள்ளவர்கள் எல்லோருக்கும் வெளிப்படையாய் சொல்லுவது மிக்க யுக்தமமென்று எமக்குத் தோன்றுகிறபடியால் யாம் அவர்கள் கிரந்தங்களை யனுசரித்துச்சொல்லிய வாக்குமூலங்களை இதனடியில் விவரமாய் எடுத்துக் கூறுகின்றோம். ஒருவனை தத்தெடுத்துக்கொண்டால் அவன் தான் பிறந்த குடும்பத்தில் 'மரித்து' விட்டவனாகப் பாவிக்கப்படுவானென்று சொல்லும் கோட்பாட்டிற்கு ஆதாரம் மனு சாஸ்திரத்தின் காந்தம்தான். அவனை அவ்விதமாய் இன்னொரு குடும்பத்திற்கு

தத்தாய் போவதினால்தான் பிறந்த குடும்பசொத்தில் அவனுக்குள்ள சுதந்தரங்களையும் இன்னும் அவன் தன்னுடைய சொந்த கஷ்டார்ஜிதத்தில் சுயமாய் சம்பாதித்த சொத்துகளிலுள்ள உரிமைகளையும் இழந்துவிடுவானென்பதற்கு அவன் இறந்துபோனவனாக எண்ணப்படுவானென்பது ஒவ்வினதாயிருக்கிறது.

இவ்விதமாய் சட்டத்தை அனுசரித்துவர எத்தனித்தால் சாதாரணமாய் மிக்க கஷ்டங்கள் நேரிடுமென்றும், முக்கியமாய் அவ்விதமான சொத்துகளை கிரயம், கொதுவை, தானம்முதலிய பராதீனங்களில் பெறுகிறவர்களுக்கும் இனி யேற்படும் வார்சுகளுக்கும் மிக்ககஷ்டமும் அசௌகரியமுமான இடையூறுகளை விளைவிக்குமென்பதற்கும் ஐயமே கிடையாது.

ஆகையால் மந்திராலோசனை சபையிலுள்ள (Privy Council) ஜுடிஷல் கமிட்டியார் இவ்விஷயத்தைப்பற்றி கெரிகோலிடானி (1879) இ-லா-ரி 5 கல் 776-வது கேசில் திர்க்கயோசித்து தீர்ப்புசொல்லியிருப்பதாகத் தோன்றுகிறது. இவ்விதயான கஷ்டங்கள் ஹிந்துலாவில் சொல்லியுள்ள இதர விஷயங்களுக்கும் இடையூறுகளை விளைவிக்கின்றன. அதாவது, ஒரு ஹிந்து விதவை அல்லது யாதேனும் ஒரு ஹிந்து குடும்பத்தைச்சேர்ந்த தாயாதி ஸ்ரீகாரத்திற்குமுன் கிரயம், கொதுவை, தானம் முதலான பராதீனங்கள் செய்திருந்தால் அவ்விதமான பராதீனங்களுக்கும் கஷ்டங்களை விளைவிக்கின்றன. ஆகையால் ஒருவனை தத்தெடுத்துக்கொள்வதினால் அவனுக்கு அவன் பிறந்த குடும்ப சொத்துகளிலுள்ள பாக சுதந்தரத்தை அவன் ஸ்ரீகாரமாய்ப்போவதற்கு முன் கிரயம் முதலான பராதீனங்கள் செய்துவிடுவதற்கு அவனுக்கு ஹக்கு இருந்திடினும் அவனை ஸ்ரீகாரமாயெடுத்துக்கொண்டபிறகு அவன் தான் பிறந்த குடும்ப சொத்துகளிலுள்ள சுதந்தரங்களை இழந்துவிடுகிறானென்பது தகராறின்றி ஏற்படுகிறது.

Mr. கொலாப்சந்த்ர சர்க்கார் சாஸ்திரியார் (Mr Golap Chander Sarkar) என்பவரை பிரசனார்த்தமான கேள்விகள் கேட்டு விசாரித்ததில் அவர் சொல்லிய சாக்ஷி வாக்குமூலங்களை இதனடியில் கூறுகிறோம் :—

9-வது வினா:—மனுசாஸ்திரத்திலுள்ள 9-வது அத்தியாயம் 141-வது சுலோகத்தையும் அதன்பேரில் மேடாடிதி (Medhatithi) என்பவர் சொல்லியிருக்கும் வியாக்கியானத்தையும் 142-வது சுலோகத்தையும் அதன்பேரில், ஷை மேடாடிதி சர்வாக்ன நாராயனா (Sarvagna Narayana) குல்லூகா (Kulluka) ராகவானந்தா (Raghavananda) நந்தனா (Nandana) இவர்கள் சொல்லியிருக்கும் வியாக்யானங்களையும் தயவுசெய்து தர்ஜமாசெய்து சொல்லுங்கள்.

விடை:—மனுசாஸ்திரம் 9-வது அத்தியாயம், 141-வது சுலோகம்:—ஒருவனுடைய 'தத்ரிமா புத்திரன் (Datrima Son) (அதாவது தத்தாய் கொடுக்கப்பட்ட புத்திரன்) நல் நடவடிக்கையும் நற்குணங்களு முள்ளவனாயிருப்பானாகில் அவன் வேறே கோத்திரத்தோராகிய குடும்பத்திலிருந்து ஸ்ரீகாரமெடுத்துக்கொள்ளப்பட்டவனாயிருந்தாலும் தத்தெடுத்துக்கொள்பவருடைய சொத்திற்கு அவன் சுதந்தரவாளியாய் அதை எடுத்துக்கொள்ள உரிமையுள்ளவனாகிறான்.

இந்த சுலோகத்தின் பேரில் 'மேடாடிதி Medhatithi' என்பவருடைய வியாக்கியானங்கள் :—

மனுசாஸ்திரம் 9-வது அத்தியாயம் 185-வது சுலோகத்தில் கூறியிருக்கும் கிரந்தத்தில் "சகோதரர்களும் அல்லது தகப்பன் அல்லது தகப்பனரின் தூரபந்தத்வமுள்ள மூதாதைகளும் ஒரு சொத்துக்கு சுதந்தரவாளிகளாகாமல் பிள்ளைகள்தான் சொத்துகளையெடுத்துக் கொள்வார்களென்று" சொல்லியிருக்கிறது. ஆனால் தத்தெடுத்துக்கொள்ளப்பட்ட குடும்பத்தில் ஒரு "ஔரச-Aurasa" புத்திரனிருப்பானாகில் கெத்ரேஜா (Khetraja) புத்திரனுக்கும் (அதாவது பெண்சாதியாய் நேமித்துக் கொண்டவளுக்குப் பிறந்தபிள்ளை) அம்மாதிரியான இன்னும் இதர பிள்ளைகளுக்கும் அவர்களுக்கு ஜீவனாம்சம் கொடுத்துவரும்படி மாத்திரம்தான் கேட்க ஹக்குண்டு (மனுசாஸ்திரம் 9-வது அத்தியாயம் 163-வது சுலோகத்தைப்பார்க்கவும்.) தகப்பன் சம்பாதித்த ஆஸ்திக்கு 'ஔரச புத்திரன்-Aurasa Son' தான் சுதந்தரவாளியாவான். ஆனால் அவன் (ஔரச புத்திரன்) அந்த குடும்பத்திலுள்ள வேறே விதமான பிள்ளைகளுக்கு தயாவிஷயமாய் ஜீவனாம்சம் கொடுத்துவர வேண்டுமென்பது அவசியம். ஆகையால் தத்ரிமா-Datrima புத்திரன் அவனை தத்தெடுத்துக்கொள்ளும் தகப்பனுடைய சொத்தை யெடுத்துக்கொள்வானென்பது மனுசாஸ்திரம் 9-வது அத்தியாயம் 185-வது சுலோகத்தினால் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. ஆனால் 141-வது சுலோகத்தில் தத்தெடுத்துக்கொள்பவனுடைய குடும்பத்தில் ஒரு ஔரசபுத்திரனிருப்பானாகில் தத்தெடுத்துக்கொள்ளப்பட்டவன் விஷயமாய் சட்டம் இன்னதென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. அப்படிக்கில்லாவிடில் அந்த சுலோகத்தில் சொல்லியிருக்கும் கிரந்தம் வேறெவ்விதத்திலும் பயன்படாது.

ஆனால் ஔரசகுமாரனிருக்கும் குடும்பத்தில் தத்தெடுத்துக்கொள்ளப்பட்ட ஸ்ரீகாரபுத்திரனுக்கு என்னபாகமுண்டோ அதைச் சொல்லவும்? இதைப்பற்றி மூத்தகுமாரனுடையபாகத்தை குறிப்பிட்டில்லாததால் கிலர் அவனுக்கும் ஔரசபுத்திரனுக்கும் சமபாகமுண்டென்று சொல்லுகிறார்கள். இப்படி சொல்வது நியாயமாயில்லை. ஏனென்றால் அவ்விதமாய் இருவருக்கும் சமபாகமாயெடுத்துக் கொள்ள வேண்டியதென்று அபிப்பிராயங் கொள்ளும் விஷயத்தில் நேமித்துக்கொள்ளப்படும் குமாரத்தியின் விஷயமாய் சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அம்மாதிரியாகவே தத்தெடுத்துக்கொள்ளப்படும் ஸ்ரீகாரபுத்திரன் விஷயமாகவும் சமபாகமாய்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வெளிப்படையாய்சொல்ல வேண்டியதாயிருக்கும். (மனுசாஸ்திரம் 9-வது அத்தியாயம் 134-வது சுலோகம்) ஆகையால் நேமித்துக்கொள்ளப்பட்ட பெண்சாதிக்குப்பிறந்த பிள்ளைக்கு எப்படி 6 ல் ஒன்று அல்லது 8-ல் ஒன்று பாகமென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறதோ அவ்விதபாகவேதானென்று யூகித்தறிந்துக் கொள்ளவேண்டியது. (மனுசாஸ்திரம் 9-வது அத்தியாயம் 164-வது சுலோகம்) நேமித்துக்கொள்ளப்பட்ட பெண்சாதிக்குப் பிறந்த புத்திரனுக்கு எப்படி 6-ல் ஒரு பாகமென்று மனு சொல்லியிருக்கிறாரோ அப்படியே 'தத்ரிமா-Datrima' புத்திரனுக்கும் அதேபாகம் தானென்று பகிரங்கமாய்ச் சொல்லவேண்டும். (மனுசாஸ்திரம் 9-வது அத்தியாயம் 159) 'உபத்தியாய-Upadhyaya' என்பவர் தத்தாய் கொடுக்கப்பட்ட புத்திரனுடைய பாகம் நேமித்துக்கொள்ளப்பட்ட பெண்

161195

சாதிக்குப்பிறந்த புத்திரனுடைய பாகத்தைவிட குறைவாய்தானிருக்கவேண்டுமென்று யூகித்துக்கொள்ளவேண்டுமேயல்லாமல் யாதொருபாகமே கிடையாதென்றுவது அல்லது ஔரசகுமாரனுக்கும் இவ்விதமான புத்திரனுக்கும் சமபாகமுண்டென்றுவது அல்லது நேமித்துக்கொள்ளப்பட்ட பெண்சாதிக்குப்பிறந்த பிள்ளைக்கும் சமபாகமுண்டென்றுவது சொல்ல நியாயமில்லை.

மனு சாஸ்திரம் 9-வது அத்தியாயம் 142-வது சுலோகம்:— ஒரு கோத்திரத்தில் பிறந்த ஒரு பிள்ளையை இன்னொருகோத்திரமுள்ள ஒரு குடும்பத்திற்குதத்தாக கொடுத்துவிட்டால் அப்படிப்பட்ட தத்ரிமா-Datrima புத்திரன் அவனுடைய கோத்திரத்தையும் கொண்டுபோனவனாக எண்ணப்படமாட்டான்.

(இன்னும் வரும்)

CURRENT DECISIONS.

நிகழ்கால தீர்ப்புகள்.

Madras High Court.

மதராஸ் ஹைக்கோர்ட்டு.

நெ. 1.

28—11—1916.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் சீப் ஜஸ்டிஸ் வாலிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீம்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சீனிவாசய்யங்கார்.

இரண்டாவது அப்பீல் நெ. 979 & 1712 of 1914.

லாப்பாயிண்ட்:—அப்பீல் கோர்ட்டில் ஒரு நம்பரை வாபஸ் (Withdraw) செய்துக்கொள்ளலாமாவென்பது.

தீர்மானம்:—ஒரு அப்பீல் கோர்ட்டில் முதல் கோர்ட்டு டிக்ரியைமாற்றி தீர்ப்பெழுதும் பொழுது சி-பு-கோ. 23-வது ஆர்டர் 1-வது ரூலின்கீழ் வாதி தன்னுடையதாவாவை வாபஸ் (Withdraw) செய்துக்கொண்டு புதிதாய் வேறேதாவா கொண்டுவர உத்தரவளிப்பதற்கு அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—Mr. C. S. வெங்கடாச்சாரியாருக்காக Mr. V. K சீனிவாசய்யங்கார்—அப்பீல் வாதியின் வக்கீல், Mr. D. L. நரசிம்ஹம்—ரெஸ்பான்டெண்ட் வக்கீல்.

31 ம-லா ஜ 29.

நெ. 2.

4—12—1916

ஜட்ஜிகள்.— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

லெட்டர்ஸ்பேடெண்ட் அப்பீல் நெ. 115 of 1916.

லாப்பாயிண்ட்:—ஒரு வியாஜ்ஜியத்தில் பிரதிவாதி விசாரணை தேதியில் ஆஜராகி விவரணப்பத்திரிகை (Written Statement) தாக்கல் செய்யாவிட்டால் ஒருதலை பட்சம (Exparte) எக்ஸ்பார்ட்டி என்று சொல்லலாமா ?

மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் தீர்மானப்படி மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர் ஒப்புக்கொள்ளவில்லை.

ஒரு பிரதிவாதி நேரில் ஆஜராகி சி-பு-கோ 8-வது ஆர்டர் 1-வது ரூல்படி அவனுடைய எதிர் வாதத்தின் விவரண பத்திரிகை (Written Statement) தாக்கல் செய்யாவிட்டால் பிரதிவாதியை ஒருதலைப் பட்சம் (Exparte) எக்ஸ்பார்ட்டி யென்று சொல்லலாம்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர் தீர்மானப்படி:—பிரதிவாதியை ஒருதலைப்பட்சம் (Exparte) எச்ஸ்பார்ட்டி என்று சொல்லப்படும்விதி பிரதிவாதி நேரில் ஆஜராகாவிட்டால் சொல்லப்படுமேயல்லாமல் மற்றப்படி அவன் நேரில் ஆஜராகி விவரணப்பத்திரிகை (Written Statement) தாக்கல் செய்யாவிட்டால் அவனை ஒருதலைப் பட்சமென்று (Exparte) எக்ஸ்பார்ட்டியென்று சொல்லலாகாது

மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் தீர்மானப்படி:—சி-பு-கோ 8-வது ஆர்டர் 1-வது ரூல்படி கோர்ட்டில் தாக்கல் செய்வேண்டுமென்றிருக்கும் விவரணப் பத்திரிகை தாக்கல்செய்யாமலிருப்பது சி-பு-கோ 8-வது ஆர்டர் 10-வது ரூல்படி தண்டனையாசப் பாவிக்கப்பட்டு பின்செப்பிய சி-பு-கோ 8-வது ஆர்டர் 10-வது ரூல்படி பிரதிவாதியை ஒருதலைப்பட்சம் (Exparte) என்றுதான் சொல்லவேண்டும்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர் தீர்மானப்படி:—8-வது ஆர்டர் 9-வது ரூலின்படி தாக்கல் செய்யவேண்டிய விவரணப் பத்திரிகைகளுக்கு (Written Statements) மாத்திரம்தான் சி-பு-கோ 8-வது ஆர்டர் 10-வது ரூல், சம்பந்தப்படுமேயல்லாமல் மற்றப்படி சி-பு-கோ 8-வது ஆர்டர் 1-வது ரூலுக்கு சம்பந்தப்படாது.

லாயர்கள்:— Mr. E. [illegible] ஐயர்—அப்பீல் வாதியின் வக்கீல், Mr. N. சந்தரசேகர ஐயர்—ரெஸ்பான்டெண்டின் வக்கீல்.

31 ம-லா-ஜ 29.

நெ. 3.

6—12—1916.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் சீப் ஜஸ்டிஸ் வாலிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர்ரஹிம்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சீனிவாசய்யங்கார்.

சிவில் மிசலேனியஸ் உத்தரவின் பேரில் அப்பீல் நெ. 370 of 1915.

லாப்பாயிண்ட்:—கடனைச் செலுத்த சக்தியற்ற இன்சால்வெண்ட் கொடுக்க வேண்டியகடன் மொத்தத்திற்கு ஒருவன் ஜாமீன்தாரனாயிருந்தால் அவன்

ஒரு க்ரெடிட்டர் (Creditor) என்று எண்ணப்படுவானு என்பது.

ப்ரொவின்ஷியல் இன்சால்வென்ஸி ஆக்டின் (Provincial Insolvency Act.) 37-வது பிரிவின் தாத்பரியப்படி கடனைச் செலுத்த சக்தியற்ற இன்சால்வெண்டின் கடனை செலுத்துவதற்கு ஜாமீன்தாரியாயிருப்பவன் ஒரு க்ரெடிட்டர் (Creditor) கடன் கொடுத்தவனென்று பாவிக்கப்படுவான்.

இதற்காதாரமாய் பெயின் எக்ஸ்பார்ட்டிரீட் (1897) I. Q. B. 122-ம்

ப்லாக்பூல் மோடார் கம்பெனி லிமிடெட் ஹாமில்டன் v. ப்லாக்பூல் மோடார் கம்பெனி லிமிடெட் (1901) 1ch 77 பார்க்கவும்.

லாயர்கள்:—Mr. M. D. தேவதாஸ்—அப்பீல் வாதியின் வக்கீல், A. கிருஷ்ணசாமி ஐயர்—ரெஸ்பாண்டெண்ட் வக்கீல்.

31 ம-லா-ஜ 31.

நெ 4.

13—12—1916.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

இரண்டாவது அப்பீல் நெ. 100 of 1915.

லாப்பாயின்ட்:—ஹிந்து லாவின்பிரகாரம் ஒரு ஹிந்து ஏக குடும்பத்திலுள்ள ஸ்ரீகாரபுத்திரன் ஒருவன் அந்த குடும்பத்தைச்சேர்ந்த விதவைக்கு ஜீவனும்சம்கொடுத்துவர கட்டுப்பட்டவனுகின்றுனு என்பது.

ஒரு ஹிந்து ஏககுடும்பத்தைச்சேர்ந்த நான்கு சகோதரர்களில் ஒருவன் தன்னுடைய விதவைப் பெண்சாதியைவிட்டு இறந்துபோனுன். மற்ற சகோதரர்கள் அவளுக்கு வருஷத்தில் இவ்வளவு மொத்தம் ஜீவனும்சமாய் கொடுத்துவருகிறோமென்று ஒப்புக்கொண்டு அவள்பேருக்கு ஒரு ஜீவனும்ச உடன்படிக்கையில் கையெழுத்துபோட்டு எழுதிக்கொடுத்தார்கள். அதற்குப்பின் அந்தவிதவை காலஞ்சென்ற அவளுடைய புருஷனுக்கு ஒரு ஸ்ரீகாரபுத்திரனை தத்தெடுத்துக்கொண்டாள். பிறகு குடும்பசொத்துகள் யாவற்றையும் அந்த குடும்பத்திலுள்ள தாயாதிகள் அவர்களுக்குள் பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்கள்.

தீர்மானம்:—இதற்கு விரோதமாய் யாதொரு அக்ரிமென்டு மில்லாதபட்சத்தில் குடும்பத்தைச்சேர்ந்த விதவைக்கு ஜீவனும்சம்கொடுத்து அவளைக் காப்பாற்ற ஸ்ரீகாரபுத்திரன் கட்டுப்பட்டவனுயிருக்கிறுனென்றும், அதுவுமன்றி முன்னமே ஜீவனும்சம் கொடுத்துவருவதாக விதவைக்கு ஜீவனும்ச உடன்படிக்கை யெழுதிக்கொடுத்தவர்கள் அந்த அக்ரிமென்டின்கீழ் அந்த விதவைக்கு ஜீவனும்சமாக கொடுத்துவந்த தொகைகளையும் ஸ்ரீகார புத்திரன் அவர்களுக்குச்செலுத்தக் கட்டுப்பட்டவனு யிருக்கிறுனென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்காதாரமாய் (1915) மதராஸ் வீக்லி நோ. 187 பார்க்கவும்.

லாயர்கள்;—மிஸ்டர் A. V. விஸ்வநாத சாஸ்திரி—அப்பீல்வாதியின் வக்கீல், மிஸ்டர் C. V. அனந்தகிருஷ்ணய்யருக்காக, மிஸ்டர் P. V. பரமேஸ்வர ஐயர்—ரெஸ்பாண்டெண்டின் வக்கீல்.

31 ம-லா-ஜ 32.

நெ. 5.

15—12—1916

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட். மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ்.

இரண்டாவது அப்பீல் நெ. 985 of 1916.

லாப்பாயின்ட்:—தீர்ப்புக்கடனாளி ஒரு டிக்ரியின்கீழ்கொடுக்கவேண்டிய தொகையை வசூல் செய்வதற்காக ஒரு சொத்தை விற்பனைசெய்ததில், தீர்ப்புக்கடனாளிக்கு அந்தசொத்தை விற்பனைசெய்ய ஹக்கு கிடையாதென்னும் காரணத்தினுல் ஏலவிற்பனையில் அந்த சொத்தை வாங்கினவன்தான் செலுத்தினகிரய மொத்தத்தை வசூல்செய்வதற்கு பழய சிவில் புரோசிஜர் கோடின்படியிருந்த ஒரு ஹக்கு புது கோடின்படி கிடையாதென்பது.

ஒரு வியாஜ்ஜியத்தின் வாதி ஒருவன் 1907ஹு எப்ரல்மீ 22உ கோர்ட்டு ஏல விற்பனையில் சில சொத்துகளை வாங்கி அந்த சொத்துகளை தன்வசப்படுத்தும்படி கோர்ட்டில் தாவாசெய்தான். தீர்ப்புக்கடனாளிக்கு அந்த சொத்தை விற்பனை செய்வதற்கு ஹக்கு கிடையாதென்று கோர்ட்டார்கண்டு 1909-ம் ஹு அக்டோபர்மீ 4உ அந்த வியாஜ்ஜியத்தை தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் ஏல விற்பனையில் கிரயத்திற்கு வாங்கினவன் அவன் செலுத்தின கிரய மொத்தத்தை வசூல்செய்வதற்காக டிக்ரிதாரன்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தான்.

தீர்மானம்:—கிரய மொத்தத்தை வசூல்செய்வதற்கு வியாஜ்ஜியமூலம் கோர்ட்டு ஏலவிற்பனை தேதியில் உண்டாயிற்றென்றும், பழய சிவில் புரோசிஜரின்படி வாதி கிரயமொத்தத்தை வசூல்செய்வதற்கு ஹக்கு உண்டென்றும் ஆனுல் புது சி-பு. கோடின்படி அப்படிப்பட்ட ஹக்கு இல்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது.

புது சிவில் புரோசிஜர் கோடின்படி கோர்ட்டு ஏல விற்பனையில் வாங்கினவன் தீர்ப்புக்கடனாளிக்கு ஏல விற்பனையில் வாங்கினசொத்தை விற்பனைசெய்ய ஹக்கு கிடையாதென்னும் காரணத்தினுல் கிரயமொத்தத்தை வசூல்செய்வதற்கு தாவா தொண்டுவர ஹக்கு கிடையாது. ஆனுல் புதுகோடின் 21-வது ஆர்டர் 93-வது விதியின்படி ஏலவிற்பனை றத்தான பிறகு கோர்ட்டுக்கு ஒரு மனுகொடுத்து பரிகாரம் அடையலாமென்று சொல்லியிருக்கிறது.

லாயர்கள்:—ஹானரபில் T. ரங்காச்சாரியர், K. பாஷியம்—அப்பீல்வாதிகளின் வக்கீல்கள், Mr. C. V. அனந்தகிருஷ்ணய்யர்—ரெஸ்பாண்டெண்டின் வக்கீல்.

31 ம-லா-ஜ 32.

OUR LAW COLLEGE.

எங்களுடைய சட்ட கலாசாலை.

எங்களுடைய சட்ட கலாசாலையின் புரோபசர் முன் ஹைகோர்ட்டில் பெஞ்சு கிளார்க்காயிருந்து கனம்பொருந்திய, சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜுகளிடத்திலும், ரிஜிஸ்ட்டிரார்களிடத்திலும், இன்னும் அனேக தேர்ந்த சட்டஞான மேதாவிகளிடத்திலும் நற்சாட்சிப் பத்திரங்கள்பெற்று முன் இந்த "இந்திய சட்ட கெஜெட்" டிற்கு பத்திராதிபருமா யிருந்தவராகிய வ. நாதமுனி முதலியார். (Professor) அவருடைய சிஷ்யர்களுடைய பெயர்கள் :—

(1) அனந்தாச்சாரி, (2) சக்ரவர்த்தி ஐயங்கார், (3) துரைசாமி முதலியார், (4) பார்த்தசாரியார், (5) தணிகாசல முதலியார்.

COMMENTARY ON IMPARTIBLE ESTATES IN HINDU LAW.

ஹிந்துலாவில் ஒரு குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்வதற்கு கூடாமையென்று விவகரிக்கப்பட்டிருக்கும் சொத்துகளைப்பற்றி வியாக்கியானம்.

மாணுக்கர்கள்:—நமஸ்காரம் ஐயா!

புரோபஸர்:—நீங்கள் எல்லோரும் சுகமாயிருப்பீர்களென்று நான் நம்முடைய ஜெகதீசனை சதா பிரார்த்திக்கின்றேன்.

ஹிந்துக்களுக்குள் மிக்க பக்தி விசுவாசத்துடன் அனுசரித்துவரும் ஸ்மிருதிகளில் பாகப்பிரிவினைக்கு லாகியுள்ளதல்லவென்று சொல்லப்படும் சில ஸ்திதிகள் உண்டென்று ஹிந்துலாவிலும் வாசித்திருப்பீர்களல்லவா. அப்படிப்பட்ட 'பாகிக்கக்கூடாத' சொத்துகள் இன்னின்னதென்று அடியில் விவரித்து வியாக்கியானத்துடன் கூறுகிறேன் கேளுங்கள் :—

மிஸ்டர் அனந்தாச்சாரியரே! ஹிந்துலாவை யெடுத்து (Impartible Estates) பாகிக்கக்கூடாத ஸ்திதிகளென்று சொல்லியிருக்கும் அத்தியாயத்தை வாசியும்.

(ஹிந்துலா புஸ்தகத்தை எடுத்து மேற்கூறிய அத்தியாயம் வாசிக்கப்பட்டது)

பு:—ஓர் ஹிந்து குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்துக்கொள்வதற்கு சில சொத்துகள் லாகியுள்ளவைகளல்லவென்றும் அப்படிப்பட்ட சொத்துகளை குடும்பத்திலுள்ளவர்கள் முறை போட்டுக்கொண்டு அனுபவிக்கவேண்டுமென்றும் 'விரஹஸ்பதியும்,' 'காத்யாயனுவும்' சொல்லியிருக்கிறுர்கள்.

அ:—மேற்கூறியபடி ஒரு ஹிந்து குடும்பத்தைச்சேர்ந்த பிள்ளை ஒருவன் அவனுடைய தகப்பன் ஜீவித்திருக்கும்பொழுதே அவனுடைய பிதரார்ஜ்ஜித சொத்தில் தகப்பனுக்குள்ள சுதந்தரத்தைத் தனக்கு பாகித்துக்கொடுக்கும்படி அவனுடைய தகப்பன்மீது தாவாசெய்ய நியாயமுண்டா?

பு:—ஓர் மூதாதையினிடமிருந்து வரப்பட்ட சொத்தை ஒரு ஹிந்துகுடும்பத்திலுள்ள தகப்பனும் பிள்ளையும் சமமாய் பாகித்துக்கொள்ளலாமென்கிற பொதுவிதி யிருந்திடினும் ஓர் பிதரார்ஜ்ஜித சொத்தில் தகப்பனுக்குள்ள சுதந்தரத்தை அவன் ஜீவித்திருக்கும்பொழுதே பிள்ளை தனக்குப் பாகித்துக்கொடுக்கும்படி அவனுடைய தகப்பன் அனுமதியின்றி தகப்பன்மீது தாவா செய்வதற்கு நியாயம் கிடையாது.

ச:—ஓர் ஹிந்து குடும்பத்திலுள்ள வஸ்திரங்களையும், உடுப்புகளையும், ஆபரணங்களையும் இன்னும் இதுபோன்ற சொத்துகள் எதையும் பாகித்துக்கொடுக்கும்படி கேட்பதற்கு நியாயமுண்டோ?

பு:—அப்படிப்பட்ட சொத்துகளை பாகித்துக்கொடுக்கும்படி கேட்பதற்கு நியாயமில்லையென்று சொல்லியிருப்பது சரியல்லவென்று கூறப்பட்டிருக்கிறது. ஏனென்றுல் ஐஸ்வரியவான்களுடைய குடும்பத்திலுள்ள ஆடை ஆபரணங்கள் தான் மிக்கவிலையுள்ளவைகளா யிருப்பதால் அவைகளை பாகிக்கத்தக்கதல்லவென்று சொல்லியிருப்பது சரியல்ல.

து:—அவ்விதமான சொத்துகளை எவ்விதமாய் பாகித்துக் கொடுக்கவேண்டுமென்று ஹிந்துலாவில் கூறியிருக்கிறது.

பு:—ஓர் ஹிந்து குடும்பத்தின் ஆடை ஆபரணங்களை அந்த குடும்பத்திலுள்ள பாகஸ்தர்களுக்கு பாகித்துக் கொடுக்கவேண்டுமானல் அவ்விதமாயுள்ள ஆடை ஆபரணங்களையெல்லாம் விற்று மூதலாக்கி அப்படி வசூலாகிய மொத்தத்தை தாமாஷாப்படி அவர்களுடைய பாகாச்சாரவீதம் பாகஸ்தர்களுக்கு பாகித்துக் கொடுக்கவேண்டும்.

பா:—ஹிந்து குடும்பத்திலிருந்து யாருக்காவது கடன் கொடுக்கப்பட்டிருந்தால் அதை எவ்விதமாய் பாகித்துக் கொடுக்கவேண்டியதோ அதை தயவுசெய்து சொல்லுங்கள்.

பு:—ஓர் ஹிந்து குடும்பத்திலிருந்து யாருக்காவது கடன் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த கடன் பத்திரத்தின்பேரில் வசூலாகவேண்டிய திரவியத்தை வசூல்செய்து அதை பாகஸ்தர்களுக்கு தாமாஷாப்படி பாகித்துக் கொடுக்கவேண்டும்.

அ:—ஹிந்து குடும்பத்திலுள்ள தின்பண்டங்களை எவ்விதமாய் பாகித்துக் கொடுக்கவேண்டுமோ அதை எங்களுக்குச் சொல்லவேண்டும்.

பு:—ஒரு ஹிந்து குடும்பத்தில் சமையல்செய்து வைக்கப்பட்டிருக்கும் தின்பண்டங்களை பாகித்துக் கொள்ளவேண்டுமானல் அதை ஒருவன் எடுத்துக்கொண்டு சமையல்செய்யப்படாமலிருக்கும் வஸ்துக்களை தாமாஷாப்படி பாகித்துக்கொடுக்கவேண்டும்.

ச:—ஹிந்துகுடும்பத்திலுள்ளவர்கள் கிணறு அல்லது குட்டை ஜலத்தை எவ்விதமாய் அனுபவிக்கவேண்டும்.

பு:—ஓர் கிணற்றில் அல்லது குட்டையிலிருக்கும் ஜலத்தை அந்த குடும்பத்திலுள்ள பாகஸ்தர்கள் அவர்களுக்கு எப்படி தேவையாயிருக்கிறதோ அப்படியே அந்த ஜலத்தை சமமாக அனுபவித்துக்கொள்ளலாம்.

து:—ஓர் ஹிந்து குடும்பத்தில் வேலைசெய்யும் தொழிலாளிகளைப்பற்றி என்ன சட்டமோ அதைச் சொல்லவேண்டும்.

பு:—ஓர் ஹிந்து குடும்பத்தில் வேலைசெய்யப்பட்டவனாவது அல்லது செய்யப்பட்டவளாவது ஒருவராயிருந்தால் அந்த வேலைக்காரன் அல்லது வேலைக்காரி அந்த குடும்பத்திலுள்ள பாகஸ்தர்களுக்கு முறைப்படி வேலை செய்துவரவேண்டும்; வேலைக்காரர்கள் அநேகராயிருக்கும்பட்சத்தில் அவர்களையும் பாகஸ்தர்கள் சமபாகமாய் பாகித்துக்கொள்ளலாம்.

பா:—தெய்வீக விஷயமான பூஜைசாமான்களை பாகித்துக்கொள்வதற்கு சட்டம் என்ன ஐயா!

பு:—தெய்வீக விஷயமாயுள்ள பூஜை சாமான் முதலான வஸ்துக்கள் யாவற்றையும் ஓர் ஹிந்து குடும்பத்தில் சமபாகமாய் பாகித்துக்கொள்ளவேண்டியது.

த:—இன்னும் பாகிக்கக்கூடாத சொத்துகளைப்பற்றி உள்ள சட்ட முழுமைக்கும் எங்களுக்கு வியாக்கியானத்துடன் தயவுசெய்து சொல்லுங்கள்.

பு:—பாகித்துக்கொள்ளக்கூடாத சொத்துகளைப்பற்றி ஹிந்துலாவில் சொல்லியிருக்கும் சட்டம் முழுமைக்கும் ஆதியோடந்தமாய் மிஸ்டர் J. D. மெயின்துரை (Mr. J. D. Mayne) பின்வருமாறு சுருக்கமாய் கூறியிருக்கிறார்:—அதாவது,

ஓர் பாகிக்கக்கூடாத சொத்து பிதரார்ஜ்ஜிதமாயிருக்கும் பட்சத்தில் அந்த சொத்து முன்னிருந்த சொந்தக்காரனுக்குப் பின்வரும் சுதந்தரவாளியாகிய வாரசுக்குமாத்திரந்தான் சொந்தமென்று சொல்லலாகாது. ஆனல் அந்த சொத்துக்கு வாரசாய்வருபவனுக்கும் இன்னும் அந்த சொத்துக்கு தாயாதி பாகஸ்தர்களென்று வருபவர்களுக்கும் சொந்தமென்றுதான் சொல்லவேண்டும்.

(மெயின்ஸ் ஹிந்துலா 5-வது பிரிதி 369-வது பக்கம் பார்க்கவும்.)

பா:—பாகிக்கக்கூடாத சொத்தின் விஷயமாய் மந்திராலோசனை சபையார்முன் (Privy Council) தீர்மானம் யாதேனுமிருந்தால் அதை தயவுசெய்து எங்களுக்குச் சொல்லுங்கள்.

பு:—பாகிக்கக்கூடாத சொத்தின் விஷயமாயுள்ள இந்த தாத்பரியத்தின் கருத்தை சீராய் ஆராய்ந்துபார்த்து மந்திராலோசனைசபையார் (Privy Council) இகனடியில் கண்டிருக்கும்வண்ணம் தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள்.

வெங்கடசூரியமகிபதி v. கோர்ட் ஆப் வார்ட்ஸ் இ-லா-ரி 22 மதராஸ் 383 பக்கமும் இன்னும் இதற்காதாரமாய் இ-லா-ரி 27 மதராஸ் 435-வதுபக்கம் பார்க்கவும்.

ஓர் பாகிக்கக்கூடாத சொத்துக்கு சுதந்தரவாளியாரென்று பார்த்தாலோ, குடும்பத்தில் பிறந்த ஜேஷ்டன்தான் அந்தசொத்து முழுமைக்கும் சுதந்தரவாளியென்பது எல்லோரும் அறிந்தவிஷயமே. ஆனல் ஜேஷ்டன் என்பது வம்ச பரம்பரையை யொட்டி வரிசைக்கிரமமாயிருக்க

வேண்டுமோ அல்லது எவ்விதமாயிருக்கவேண்டுமென்பதை தீர்மானிப்பது அநேக கேசுகளில் கஷ்டமாயிருந்ததாக சொல்லப்பட்டிருக்கின்றது. ஒரு குடும்பத்தில் ஜேஷ்டனாயிருப்பவனின் பரம்பரையை யொட்டி பிறந்தவனையென்று ருஜுசெய்யவேண்டியது அவசியமென்று மெயின் சொல்லியிருக்கிறார் (மெயின்ஸ் ஹிந்துலா 713-வது பக்கம் பார்க்கவும்.)

மந்திராலோசனை சபையாரும் (Privy Council) ஜேஷ்டாம்சம் என்னும் விதியை அனுசரித்து பாகிக்கக்கூடாத சொத்தைப்பற்றி தீர்ப்பு சொல்லவேண்டியதென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஜேஷ்டாம்சம் என்பதைப்பற்றி செய்யப்பட்டுள்ள 1869-ம் வருஷத்திய 1-வது ஆக்டின்படிக்கு வம்சபரம்பரை வரிசைக்ரமமாய்தான் இருக்கவேண்டுமென்றிருக்கிறது. மூத்தவன் பரம்பரையில் பிறந்தவன் கனிஷ்ட பரம்பரையில் உதித்தவனைப்பார்க்கிலும் விசேஷமானவனென்று அவனைத்தான் சொத்துக்கு சுதந்தரவாளியென்று மந்திராலோசனை சபையார் (Privy Council) தீர்மானித்திருக்கிறார்கள் இ-லா-ரி 20 அ 77.

இதுவுமன்றி ஓர் குடும்பத்திலுள்ள ஜேஷ்டனுடைய வம்ச பரம்பரையில் பிறந்த பேரன் அந்தக் குடும்பத்தில் பிறந்திருக்கும் கனிஷ்ட குமாரனுக்கு யாதொரு சுதந்தரமும் கிடையாதென்று சொல்லி பாகிக்கக்கூடாத சொத்தை தன்பக்கம் சுவாதீனம் செய்துக்கொள்ள நியாயமுண்டு.

இ-லா-ரி 6 பம் 613 ராம்சந்திர v. வெங்கட்ராவ்; இ-லா-ரி 5 அ 61, இ-லா-ரி 26 கல் 90 (பிரிவி கவுன்சல் கேசு.) நார்கந்தி v. வெங்கடா இ-லா-ரி 4 ம 250 & 265. இ-லா-ரி 6 ம 250; 6 ம-ஹை-ரி 99; கச்சியுவ v. கச்சி கல்யாண். இ-லா-ரி 11 ம-லா-ஜ 191; இ-லா-ரி. 23 அ 128; இ-லா-ரி 29 அ 62 சுப்பிரமணி ஐயர் v. சிவசுப்பிரமணிய இ-லா-ரி 17 ம 325; ஜெதீஷ் v. ஷிபோ இ-லா-ரி 28 அ 100; 23 அ 369; 8 அ 17 வீ-ரி 55; சுந்தரலிங்கசாமி v. ராமசாமி இ-லா-ரி 26 அ 55; இ-லா-ரி 26 அ 246 பார்க்கவும்.

பு:—சிஷ்யர்களே! ஓர் பாகிக்கக்கூடாத சொத்தையுடைய குடும்பத்தில் ஜேஷ்டனாயிருப்பவன்தான் ராஜ்ஜிபரிபாலனத்திற்கு சுதந்தரவாளியென்று கூறியிருப்பதற்கு மூலாதாரக் கருத்து யாதென்று பார்க்குமளவில்:—

பண்டைகாலத்தில் ஒவ்வொரு ராஜ்ஜியத்திலும் கனிஷ்ட புத்திரரர்யிருப்பவருக்கு யுவராஜ் பட்டமளிப்பதுவழக்கம். ஆதிகாலத்தில் சாக்ஷாத் மகாவிஷ்ணுவாகிய ஸ்ரீராமமூர்த்தி தன் ராஜ்ஜியத்தைவிட்டு வனவாசம்போயிருந்த பன்னிரண்டு வருஷகாலமும் அவருடைய யுவராஜ் பட்டம்பெற்ற பரதர் என்பவர் மேற்கூறிய ஸ்ரீராமபிரானுக்கு வார்சாக அரசாண்டுக்கொண்டிருந்து பிறகு ஸ்ரீராமபிரான் மேற்கண்ட பன்னிரண்டு வருஷங்களும் கடந்து லங்கையுத்தத்திற்குப்பின் அயோத்திக்கு வந்தபோது ராஜரீகத்தை 'பரதர்' தன்னுடைய சகோதரராகிய 'ஸ்ரீராமமூர்த்திக்கு' ஒப்புவித்துவிட்டதாக வாசித்திருக்கின்றோமல்லவா — அதைப்போல்தான் இப்போது பாகிக்கக்கூடாத சொத்துகளின் விஷயமாய் ஜேஷ்டாம்சம் என்னும் விதி அனுசரிக்கப்பட்டுவருவதாக தெரியவருகிறது.

த:—ஓர் ஹிந்துகுடும்பத்தில் தத்துபுத்திரனும் ஔரசபுத்திரனும் இருந்தால் சட்டம் என்னசொல்லுகின்றது ஐயா.

பு:—ஓர் பாகிக்கக்கூடாத சொத்துள்ள குடும்பத்தில் ஓர்தத்து புத்திரனிருந்து, அதற்குப்பின் கிரமமாய் பிறந்த ஔரச புத்திரனிருப்பானகில் ஸ்ரீகார புத்திரனுக்கு அந்த சொத்து சேராமல் ஔரச குமாரனுக்குத்தான் ராஜ்ஜியம் சேருமென்று தீர்ப்பாயிருக்கிறது. ராமசாமி v. சுந்தரலிங்கசாமி இ-லா-ரி. 17 ம 435 பார்க்கவும்.

ச:—ஓர் ஹிந்துகுடும்பத்திலுள்ள விதவைகள் பெண்களவிஷயமாய் சட்டம் என்ன முறையிடுகிறது ஐயா.

பு:—ஓர் ராஜ்ஜியத்தின் சுதந்தரம் குடும்பத்தைச் சேர்ந்த விதவைகளுக்கும், குமார்த்திகளுக்கும், போகாதென்று ஹிந்துலாவின் ஆதிகருத்தாயினும்; வழக்கத்தை ருஜுசெய்து விதவைகளும், பெண்களும்கூட ராஜ்ஜியத்திற்கு சுதந்தரவாளியாயிருக்கிறார்கள். விதவைகளுக்குள் மூத்தவள்தான் ராஜ்ஜியத்திற்கு சுதந்தரவாளியேயல்லாமல் இளைய பெண்சாதியல்ல. இ-லா-ரி 1 ம 453. குமாரத்திகளுக்குள் இளையவளைப்பார்க்கிலும் மூத்த பெண்ணே சுதந்தரவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

காத்தம நாச்சியார் v. துரைசிங்க 6 ம-ஹை-ரி. 310; இ-லா-ரி-8 அ 99; இ-லா-ரி 23 அ 128. 7 சதர்திவாலத் கோர்ட் 198; 6 வீ-ரி. முதல் பிரிவிகவுன்சல் கேஸ். இ-லா-ரி-23 அ 147; இ-லா-ரி-16 ம 51; 5 முர் 169;

இ-லா-ரி-2 அ 263 ; 2 6-வீ-ரி-255 ; 32 கல் 4 இ லா-ரி-11 ம-லா-ஹ 28; பார்வதி v. ஜெகதிஸ் 29 ஜெ 82.

த:—ஓர் பாகிக்கக்கூடாத சொத்துள்ள குடும்பத்தில் தாயாதிகளிருந்தால் சட்டம் என்ன ஐயா.

ஓர் பாகிக்கக்கூடாத சொத்துக்கு சுதந்தரவாளியாய்வரும் ஜேஷ்டன் அந்த குடும்பத்தைச்சார்ந்த மற்ற தாயாதிகளாகிய இளையவர்களைக் காப்பாற்றவேண்டுமென்பது ஓர் கடமை.

ச:—ஓர் ஹிந்து குடும்பத்திலுள்ள பிள்ளைகள் தகப்பன் மீது ஜீவனும்சத்திற்கு தாவா செய்ய நியாயமுண்டா ஐயா ?

பு:—சாதாரணமாய் ஒரு ஹிந்து குடும்பத்திலுள்ள தகப்பன் ஒருவன் யுக்தவயதடைந்த அவனுடைய மற்றப்பிள்ளைகளைக்காப்பாற்ற வேண்டுமென்பது சட்டப்படி அவசியமில்லாவிடினும் 1 ம-வீ-ரி-494-வது தீர்ப்பின்படி குடும்ப சொத்து சட்டதிற் கிணங்க பாகிக்கக்கூடாதசொத்தாயிருந்தால் அந்த குடும்பத்தில் பிறந்தபிள்ளை தனக்கு ஜீவனும்சம் கொடுத்து வரவேண்டுமென்று தாவா செய்ய நியாயமுண்டு.

ஹிம்மத்சிங் v. கோபால்சிங் இ-லா-ரி-2 பம் ஹை-ரி-94 ; ராமசந்திர v. சகாராம் இ-லா-ரி-2 பம் 346- பஞ்சனுதையன் v. நீல கண்டையன் இ-லா-ரி- 7 ம 191 ; 5 மூர் 82 ; இ-லா-ரி-27 கல் 156 (பிரிவிகவுன்சல் கேஸ்) இ-லா-ரி-31 கல் 561; இ-லா-ரி-20 ம 275; 1-கல்-லா-ஹ-28 ; 1 கல்-லா-ஜ ; இ-லா-ரி-21 அ 232 ; மாதவா v-நாராயண இ-லா-ரி 9-ம-243.

(ஹிந்துலா சம்பந்தமான இதர விஷயங்களும் இன்னும்வரும்.)

DIALOGUE

சம்பாஷணை.

இடம் - திருவள்ளூர் கிராமமுன்சீப் கோர்ட்டு.

பொன்னம்பலம்:—வாரும்! வாரும்! கிராமமுன்சீப் அவர்களே.

கிராமமுன்சீப்:—என்ன விசேஷம்.

பொ:—நமது சென்னை ராஜதானியிலுள்ள கிராம கோர்ட்டுகள் எவ்விதமாய் பரிபாலனம் செய்யப்பட்டு வருகிறதோ அதைப்பற்றி கவர்ன்மெண்டார் ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறார்களே அது உமக்குத் தெரியுமோ.

கி:—எனக்கொன்றும் தெரியாது, என்ன விசேஷம் சொல்லும்.

பொ:—கிராமகோர்ட்டுகளில் நம்பர்கள் அதிகமாய் தாக்கலாய், பைசல்செய்து வரப்படுவதை கவர்ன்மெண்டார் பார்வையிட்டு தற்காலம் ஏற்பட்டிருக்கும் கிராமகோர்ட்டுகள் குறைவாயிருக்கின்றனவென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

கி:—அப்படியா ? எந்தெந்த ஜில்லாக்களின் விஷயமாய் கவர்ன்மெண்டார் இவ்விதமாய் அபிப்பிராயப்படுகிறார்கள்.

பொ:—முக்கியமாய் பெல்லாரி, குண்டூர், மதுரை, நெல்லூர், தஞ்சாவூர் ஜில்லாக்களில் கிராமகோர்ட்டுகள் விசேஷமாய் குறைவாயிருக்கின்றனவென்று வற்புறுத்தி கூறியிருக்கின்றார்கள்.

கி:—ஆகையால் சர்க்காரார் அது விஷயமாய் என்ன ஏற்பாடு செய்தார்கள். அதை கேட்க மிக்க ஆவலுள்ளவனா யிருக்கின்றேன்.

பொ:—மேற்சொல்லிய இந்த ஜில்லாக்களின் கலெக்டர்களை இப்படிக் குறைவாயிருப்பதற்குக் காரணமென்னவென்று கவர்ன்மெண்டார் வினவினார்கள்.

கி:—அதற்கு அந்த கலெக்டர்கள் என்ன ரிப்போர்ட்டு செய்தார்கள்.

பொ:—அவர்கள் செய்த ரிப்போர்ட்டுகளை கவர்ன்மெண்டார் பார்வையிட்டதில் கிராமமுன்சீப்புகளை ஏற்படுத்துவதில் மிக்க ஜாக்கிரதையாயும், கவனத்துடன் அவர்களை நேமிக்கவேண்டியதென்று அபிப்பிராயம்கொண்டார்கள்.

கி:—மேற்கூறிய கலெக்டர்களைமாத்திரம் வினவினார்களா அல்லது எல்லா ஜில்லாகலெக்டர்களையும் அதைப்பற்றி ரிப்போர்ட்டு செய்யும்படி கேட்டார்களா ?

பொ:—இன்னும் கோயம்பத்தூர், சேலம் ஜில்லா கலெக்டர்கள் செய்த ரிப்போர்ட்டுகளைப் பார்வையிட்டு மேற்கூறிய ஜில்லாக்களில் கிராமகோர்ட்டுகள் மிகக் குறைவாயிருப்பதாய் கவனித்திருக்கிறார்கள்.

கி:—இதற்குக் காரணம் என்னவென்று மேற்கூறிய கலெக்டர்கள் ரிப்போர்ட்டு செய்தார்கள் ?

பொ:—ஐயா ! கிராமமுனிசீபே ! அவர்கள் சொல்லிய காரணங்களை பின்வருமாறு கூறுகின்றோம் கவனித்துக்கேளுங்கள்.

(1) கிராமக்குடிகள், கோர்ட்டென்றுசொல்லப்படும் நியாயஸ்தலத்திற்குப் போய் அவர்களுக்குள்ள தகரார்களைப் பைசல் செய்துக்கொள்வதைப்பார்க்கிலும் அந்தந்த கிராமத்தில் வசிக்கும் இதர கிராமவாசிகளைக்கொண்டே தங்கள் தங்களுடைய வியாஜ்ஜியங்களைப் பரிசீலனை செய்துக்கொள்ளுவது உத்தமமென்று எண்ணி மிக்க பௌரஷத்துடன் கிராமங்களிலே வழங்கிடும் கிராமவாசிகள் பஞ்சாயத்து தாரர்களைக்கொண்டே அவர்களுடைய வழக்குகளைப் பைசல் செய்துக்கொள்ளுகிறார்களென்று ஒரு காரணம் கூறியிருக்கிறார்கள்.

கி:—கிராமக்குடிகள் இவ்விதமாய் தங்களுடைய வியாஜ்ஜியங்களை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் நியாயஸ்தலமென்று சொல்லப்படும் கிராமக்கோர்ட்டுகளுக்குப் போகாமலே பைசல் செய்துக்கொள்வதற்குக் காரணம் என்னவென்று கலெக்டர்கள் சொல்லியிருக்கிறார்கள் ஐயா ! அதை எமக்கு விளங்கச்சொல்லும்.

பொ:—கேளுமையா சொல்லுகிறேன். இதற்குக் காரணம் ‘கிராமமுனிசீப்’ என்று சொல்லப்படும் அந்தஸ்திலே ‘கிராமமுனிசீப்பு’கள் மிக்க ஒழுங்கீனமாய் கிராமங்களில் நடந்து வருகிறார்களாம். மேலும் கிராமமுனிசீப் என்னும் அந்தஸ்துக்குள்ள அதிகாரங்களைத் தற்காலத்திலுள்ள ‘கிராமமுனிசீப்பு’கள் நியாயப்படி திறமையுடன் செலுத்த லாகியுள்ளவர்களோ அல்லவோ என்று சந்தேகித்து அவர்கள்மீது கிராமவாசிகளுக்கு நம்பிக்கை குறைவாயிருக்கின்றதென்றும், இன்னும் காலம் மிக்க கஷ்டமாயிருப்பதால் கோர்ட்டுசிலவை உத்தேசித்தும், என்று காரணம் சொல்லியிருக்கிறார்கள்.

கி:—இன்னும் என்ன காரணம் சொல்லியிருக்கிறார்கள், அவைகளையும் எமக்கு பூர்த்தியாய் சொல்லுங்கள் ஐயா !

பொ:—சில கலெக்டர்கள் அடியிற்கூறியவண்ணம் காரணம் என்றெழுதி யிருக்கிறார்கள்:—அதாவது, ஒரு கிராமத்திற்குத் தலைவனாய் ஏற்படுத்துவது வம்சப்பரம்பரையை யொட்டி தொன்றுதொட்டு ஒரு குடும்பத்திலேயே வரவேண்டுமென்கிற விதி ஒன்றிருப்பதால் ஒரு கிராமத்தில் நல்ல அந்தஸ்துள்ள மிக்க கவனமுள்ளவராயும், நல்நடவடிக்கை யுள்ளவராயும், வாசிப்பில் தேர்ந்தவராயும், பொதுவாய் கிராமவாசிகளுக்கும் மதிப்புள்ளவராயுமிருப்பவரைப் பொறுக்கி எடுத்து நேமிப்பதற்கு ரெவினியூ இலாக்காவிலுள்ள இந்த ரூல் ஓர்விதத்தில் தடையாயிருப்பதாயும் சொல்லியிருக்கிறார்கள்.

கி:—இன்னும் அவர்கள் சொல்லியிருப்பதைஎல்லாம் எமக்கு விசிதமாய்ச் சொல்லும் ஐயா ?

பொ:—தென்ஆர்க்காடுஜில்லா கலெக்டர் இந்த குறைவுபாட்டைத் தீர்ப்பதற்கு ஓர் பரிகாரமாய் ஒவ்வொரு கிராம முனிசீப்புக்கும் ‘வில்லேஜ் மானுயல்’ என்று சொல்லப்படும் புஸ்தகத்தில் முக்கியமாய் கிராமஉத்தியோகஸ்தர்கள் கவனித்து நடக்கவேண்டிய தொழில்களையும், முறைகளையும்பற்றி சொல்லும் பாகத்தைமாத்திரம் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ஒரு புஸ்தகமாய்க் கொடுத்து அவர்களை அதிலுள்ளவைகளை வாசித்துக் கவனித்துவரும்படி செய்வது நலமாயிருக்குமென்று எடுத்துக்கூறியதை கவனித்து கவர்ன்மெண்டார் இதுவிஷயம் பிரத்தியேகமாய் யோசிக்கப்படுமென்றும் சொல்லியிருக்கிறாகள்.

கி:—இன்னும் ஏதாகிலும் விசேஷமுண்டோ ?

பொ:—கிராம முனிசீப்புகள் ஒவ்வொருவரும் பைசல் செய்துவரும் வியாஜ்ஜியங்களைப் பார்க்கிலும் பெஞ்சு கோர்ட்டுகளில் பைசலாகிவரும் தாவாக்கள் ஏற்கனவே அதிகமாயிருக்கின்றனவாம். பெஞ்சுகோர்ட்டார்கள் மிக்க உறுதியாய் அவர்களுடைய தொழிலை செய்துவருகிறார்களென்று கவர்ன்மெண்டார் மிக்க திருப்தியடைந்திருக்கிறார்களாம். மேலும் இந்த பெஞ்சுகோர்ட்டார் இவ்விதமாய் அவர்களுடைய தொழில்களைச் செய்துவருவார்களானால் தொன்று தொட்டு வம்ச பரம்பரையிலேயே நேமிக்கப்பட்டுவரும் கிராம முனிசீப்புகளிலுள்ள குறைவுபாடுகள் நிவர்த்தியாவதற்கு இது ஓர் மார்க்கமாயிருக்குமென்று உத்தேசிக்கப்படுகிறது.

கஞ்ஜம்ஜில்லா கலெக்டர் அவர்கள் அவருடைய ஜில்லாவில் பெஞ்சு கோர்ட்டுகள் முன்னமேயே ஏற்பட்டில்லாவிடில் பெஞ்சுகோர்ட்டுகள் ஏற்படுத்துவதற்குத்தகுந்த கிருஷைகள் உடனே செய்யவேண்டுமென்று சொல்லி கோபாலபூர், இசாபுரம், ஆஸ்கா, ரசெல்கொண்டா

இந்த இடங்களில் பெஞ்சு கோர்ட்டுகள் ஏற்படுத்தவேண்டுமென்று அவர் சிபார்சுசெய்ததை ஒப்புக்கொண்டு கவர்ன்மெண்டார் 1909ஞு ஜுன்மீ 9உயுள்ள ஜுடிஷல் கவர்ன்மெண்ட் உத்தரவு (G. O.) நெ. 765 பிறப்பித்திருக்கிறார்கள். அதன்பிரகாரம் இப்பொழுது மேற்சொல்லிய இடங்களில் பெஞ்சு கோர்ட்டுகள் ஏற்படுத்தப்பட்டன.

கி:—கிராமகோர்ட்டுகளில் இப்பொழுது அதிககேசுகள் வருகின்றனவா?

போ:—ஐயா, கிராமமுனிசீபே! இந்த ராஜதானியில் கிராமகோர்ட்டுகளில் வியாஜ்ஜியங்கள் அதிகரித்துவருவதைக் கண்டு கவர்ன்மெண்டார் அதிக திருப்தி அடைந்திருக்கிறார்களாம். ஆனால் ஏற்கனவே இந்த ராஜதானியிலுள்ள எல்லா கோர்ட்டுகளிலும் வியாஜ்ஜியங்கள் அதிகரிக்கின்றனவென்பதும் இப்பொழுது பார்வையிடும் சிவில் நியாய விசாரணையைப்பற்றிய ரிப்போர்ட்டினால் தெரியவருகிறது. சென்ற சில ஆண்டுகளின் ரிப்போர்ட்டுகளின்படி இந்த சென்னை ராஜதானி முழுமைக்கும் பைசலாகும் சிவில் வியாஜ்ஜியங்களில் கிராமக்கோர்ட்டு வியாஜ்ஜியங்கள் ஏறக்குறைய நாலில் ஒரு பங்கிற் கதிகமாகவேயிருக்கிறதாம்.

கி:—ஐயா! இவைகளையெல்லாம் பார்வையிட்டு கவர்ன்மெண்டார் என்ன ஏற்பாடுகள் செய்தார்கள்?

போ:—கிராம கோர்ட்டுகளில் தலைமையாயிருந்து இந்த வியாஜ்ஜியங்களைப் பைசல் செய்யவேண்டிய உத்தியோகஸ்தர்கள் தக்கபடி வாசிப்பில் தேர்ந்து லாகியுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்பது மிக முக்கியமான அம்சமாம். பெஞ்சு கோர்ட்டுகளில் தலைமையாயிருந்து வியாஜ்ஜியங்களைப் பைசல் செய்யக்கூடிய திறமையுள்ள நபர்களை ஒவ்வொரு கிராமத்திலும் இன்னார் இன்னாரென்று குறித்தெடுத்திருக்கும் பட்டியை (லிஸ்டை) மறுபடியும் ஒவ்வொரு கிராமத்திலும் கவனித்துப்பார்த்து பொறுக்கியெடுத்து அவர்களுடைய பெயர்களையெல்லாம் ஓர் லிஸ்டில் தயார்செய்து வைக்கும்படிக்கு வேண்டிய கிருத்தியங்கள் செய்துவரவேண்டியதாம். இந்த ராஜதானியிலுள்ள ஒவ்வொரு கலெக்டரும் இது விஷயத்தைப்பற்றி கவனித்துவரவேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்களாம்.

கி:—கவர்ன்மெண்டார் இதன்விஷயமாய் பிறப்பித்திருக்கும் உத்தரவுகளையெல்லாம் தயவுசெய்து எமக்குச் சொல்லும்?

போ:—ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள கிராமவாசிகள் அவர்களுடைய தகரார்களைப் பரிசீலனை செய்துகொள்ள கிராம கோர்ட்டுகளுக்குத்தான் போகவேண்டுமென்று கவர்ன்மெண்டார் நிர்பந்திக்கக் கூடாமையாயிருந்தாலும், கலெக்டர்களும் அவர்களுக்கு உதவியாயிருக்கும் அஸிஸ்டெண்ட்டுகளும் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள கிராமகோர்ட்டுகளில் மிக்க லாகியுள்ளவர்களைத்தான் தலைமையாயிருக்கவேண்டுமென்பதற்கு அந்தந்த கிராமத்தில் மேற்சொல்லியபடி தயார்செய்யவேண்டிய லிஸ்டுகளை அப்போதைக்கப்போது சித்தப்படுத்தச்சொல்லி அடிக்கடி ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் பார்வையிட்டுவர வேண்டியதாம். மேலும் மேற்சொல்லிய உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் நேமிக்கப்படும் ஒவ்வொரு கிராமமுனிசீப்பும் தகுந்தவராயென்றும், உத்தியோகத்தை நடத்துவதற்கு... போதுமான வித்தையுள்ளவராயென்றும் தங்களால்கூடியவரையில் மிக்க ஜாக்கிரதையாய் கண்டறிந்துகொள்ள வேண்டியதாம்.

கி:—இன்னும் என்ன உத்தரவுகள் செய்திருக்கிறார்கள் ஐயா?

போ:—இந்த சென்னை ராஜதானியில் நியாயபரிபாலனம் செய்துவரும் கோர்ட்டுகள் இவ்வளவென்று கணக்கெடுத்தலும் இன்னும் அதைச்சேர்ந்த இதர விஷயங்களைப்பற்றியும் அநேக ஒழுங்கீனங்களும் தப்பிதங்களும் நேரிடுவதாய் கவர்ன்மெண்டார் முன்னமேயே கண்டித்திருந்தும் இந்த வருஷத்து ரிப்போர்ட்டிலும் அப்படிப்பட்ட குறைவுபாடுகளிருப்பதாய் கவர்ன்மெண்டார் கண்டு இந்த கிராமகோர்ட்டுகள் விஷயங்களைப்பற்றி கணக்கிட்டு எடுப்பதில் சிப்பந்திகள் சரியாய் செய்துவருகிறார்களா இல்லையாவென்று ஜில்லா கலெக்டர்கள் பார்வையிட்டு கண்டித்துவர வேண்டுமென்று கவர்ன்மெண்டார் அவர்களுக்கு வற்புறுத்திச் சொல்லுகிறார்கள்.

நாம் ஏற்கனவே நம்முடைய பத்திரிகையின் விளம்பரத்தில் சொல்லியிருப்பதின்படி கவர்ன்மெண்டாரும் "கிராம முனிசீப்புகள்" வாசிப்புள்ளவர்களாகவும் அவர்கள்முன் விசாரணைக்குவரும் வியாஜ்ஜியங்களை அப்போதைக்கப்போது ஏற்பட்டுவரும் சட்டங்களையும் அதன்பேரில் ஹைக்கோர்ட்டார் செய்துவரும் தீர்மானங்களையும் அறிந்து நியாயப்படி பைசல் செய்வதற்காக வேண்டிய சட்ட ஞானத்தைப் பெறுவதற்கு நம்முடைய "இந்திய சட்ட கெஜெட்"டில் வெளியாய்வரும் முக்கியமான விஷயங்களும் நாம் இனி பிரசுரிக்க உத்தேசித்திருக்கும் மேலே சொல்லியிருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு முக்கியமான புஸ்தகங்களையும் மிக்க பிரயோஜனகரமானதென்றும் இது ஒரு தகுந்த சஞ்சிகையென்றும் கனம்பொருந்திய ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகளும் இன்னும் கற்றுணர்ந்த சட்டஞான மேதாவிகள் முதலானவர்கள் நற்சாக்ஷிப்பத்திரங்கள் (Testimonials) கொடுத்திருப்பதை நம்முடைய பிரதிமாதத்திய சஞ்சிகையின் மேல்புறத்தில் (டைடில்) பேஜிலும் இன்னும் நம்முடைய விளம்பரத்திலும் முன்னமேயே பிரசுரம்செய்திருக்கிறோமல்லவா! அவைகளை ஒவ்வொரு கிராமமுனிசீப்புகளாகிய நம்முடைய நேயர்கள் வாசித்துப்பார்த்தால் அவர்கள் உடனே நம்முடைய கெஜெட்டிற்கு சந்தாதாரர்களாய் இந்த மாதாந்தர சஞ்சிகையையும் இனி நாம் வெளியிட உத்தேசித்திருக்கும் புஸ்தகங்களையும் வாங்கி வாசித்து விசேஷ சட்டஞானமடைந்து கவர்ன்மெண்டார் மேற்கூறியபடி செய்திருக்கும் அவர்களுடைய உத்தரவில் சொல்லியிருப்பதின்படி கிராமமுனிசீப்புகளும், பெஞ்ச் மாஜிஸ்டிரேட்டுகளும், இன்னும் இதர ரெவினியூ ஜுடிஷல் உத்தியோகஸ்தர்களும், ஜெமீன்தாரர்களும் பொதுவாய் கிராமவாசிகள் எல்லோரும் அவரவர்களுடைய தொழில்களை பாரபட்சமின்றியும், பிசகு முதலியவைகளில்லாமலும் நியாயப்படி செய்துவருவதற்கு விசேஷ திறமையுள்ளவர்களாவார்களென்பதற்கு ஐயமில்லை. ஆகையால் இந்த சென்னை ராஜதானியிலுள்ள நம்முடைய நேயர்களாகிய கிராமமுனிசீப்புகளனைவரும் இன்னும் ரெவினியூ ஜுடிஷல் உத்தியோகஸ்தர்கள் ஜெமீன்தாரர்கள் பொதுவாய் கிராமவாசிகள் அனைவரும் காலத்தை வீண்போக்காமல் உடனே நம்முடைய "இந்திய சட்ட கெஜெட்" என்னும் மாதாந்தர சஞ்சிகைக்கும், புஸ்தகங்களுக்கும் கையொப்பநேயர்களாகி இதைவாங்கி வாசித்துவருவார்களென்று கோருகிறோம்.—சுபம். ஜெகதீசன் ரட்சிப்பாராக!

MISCELLANEOUS SUITS.

நானாவிதமான வியாஜ்ஜியங்கள்.

Madras High Court.

மதராஸ் ஹைக்கோர்ட்டு.

நெ. 1.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

இரண்டாவது அப்பீல் நெ. 737, 738 of 1913.

சுப்பிரமணியம் செட்டியார்—அப்பீல்வாதி—(முதல் பிரதிவாதி)

v.

கதிரேசன் செட்டியார் வகையறாக்கள்—ரெஸ்பான்டெண்டுகள்—(வாதிகள் 2 முதல் 6 பிரதிவாதிகள்.)

லாப் பாயிண்ட்:—நாட்டுக்கோட்டை செட்டிகளிடம் போட்டுவைத்த பணம் டிப்பாசிட்டா அல்லவாவென்பது.

லிமிட்டேஷன் ஆக்ட், ஆர்ட்டிகல் 59, 60 டிபாசிட் (Deposit) என்பதின் பொருள்-எஜமானனிடம் ஏஜண்டு பணம் கொடுத்துவைத்தல் - அப்படிப்பட்ட விஷயத்தில் அந்தபணத்தை என்னென்று பாவிக்கப்படுமென்பது-லிமிட்டேஷன் ஆக்ட் எந்த ஆர்ட்டிகல் சம்மந்தப்படுமென்பது.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—வாதி ஒருவன் பிரதிவாதியின் வியாபார கம்பெனியில் தனக்குச் சொந்தமான பணத்தைப்போட்டுவைத்து அதற்காக அந்த காலத்தில் நடப்பு வட்டி என்னவோ அந்த வட்டி வீதம் வட்டி கட்டிக்கொடுக்கவேண்டுமென்றும் வாதிக்கு பணம் வேண்டியிருக்கும்போது அதிலிருந்து தொகை வாங்கிக்கொள்ளலாமென்றும் ஏற்பாடுசெய்துகொண்டிருந்தால்-அப்படி போட்டுவைக்கப்பட்ட பணம் டிபாசிட் (Deposit) டேவுணியாய் போட்டுவைக்கப்பட்ட பணமென்று பாவிக்கப்படுமாகையால் அவ்விதமான டிபாசிட்டின் விஷயத்தில் லிமிட்டேஷன் ஆக்ட் 60 வது ஆர்டிகல்தான் சம்பந்தப்படுமென்பது.

(Banker) பாங்கரல்லாத ஒரு வியாபாரியின் கையிலுள்ள பணம் யாரிடத்தில் போட்டுவைக்கப்பட்டிருக்கிறதோ அவன் (Banker) பாங்கராயிருப்பானால் அவனிடத்தில் லேவாதேவி செய்பவனுடைய பணம் அவனிடத்தில் அது டிப்பாசிட்டாயிருக்கிறதென்று எப்படி சொல்லப்படுமோ அதைப்போலவே அப்படிப்பட்ட பணம் டிபாசிட்டென்றுதான் சொல்லவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

பரமகுடி டி-மு-கோர்ட் 1910-ம் வருஷத்திய அசல்நெம்பர் 826-ல் செய்யப்பட்ட டிக்ரியின்பேரில் மதுரையில் ராமநாதபுரம் டெம்பொரரி சப்கோர்ட்டில் தாக்கலாயிருந்த 1912-ம் வருஷத்திய அப்பீல் நெ. 234-ல் பிறப்பிக்கப்பட்ட டிக்ரியின்பேரில் ஹைகோர்ட்டில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

கேசின்விவரம் ஹைக்கோர்ட்டார் தீர்ப்பில் விளங்கும்.

லாயர்கள்:—Mr. C. S. வெங்கடாசாரியாருக்காக Mr. V. K. சீனிவாசய்யங்கார், அப்பீல் வாதியின் வக்கீல்,—Mr. K. V கிருஷ்ணசாமி ஐயர்—ரெஸ்பான்டென்டின் வக்கீல்.

ஹைக்கோர்ட்டார் தீர்மானம்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்—தாவா வாதி பிரதிவாதியின் கம்பெனியிலிருந்து வசூல்செய்யக் கொண்டுவந்த தாவா மொத்தங்கள் லிமிட்டேஷன் ஆக்ட் 60-வது ஆர்ட்டிகலின் தாத்பரியப்படி டேவுணியாய் அதாவது டிப்பாசிட்டாய் (Deposit) போட்டுவைக்கப்பட்ட பணமா அல்லவா யென்பதுதான் இந்த இரண்டுகேசுகளிலும் முக்கியமான கேள்வி. சப்கோர்ட்டில் அவைகள் டிப்பாசிட்டென்றுதான் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் சப்ஜட்ஜ் அப்படி கண்டது சரியல்லவென்று எங்கள்முன் இந்த இரண்டாவது அப்பீல்கள் கொண்டுவரப்பட்டன. இரண்டாவது அப்பீல் நெ. 737 of 1913-ல் வாதி இரண்டுதடவைகளில் பிரதிவாதியின் கம்பெனியில் டிபாசிட்டாய் கட்டிவைத்த மொத்தங்களில் செல்லானதுபோக நிலுவைநிற்கும் பாக்கி அசல் தொகையும் அதற்குள்ள வட்டியும் பிரதிவாதி தனக்கு கொடுக்கவேண்டிய பாக்கி யிருக்கிறதென்றுசொல்லி அதை வசூல்செய்ய வாதி தாவா செய்தார். முதல்தடவை கட்டினமொத்தம் ரூபாய் 550-தை வாதி பிரதிவாதியின் கம்பெனியில் (அசிஸ்டன்ட்) உதவி உத்தியோகஸ்தராய் அமர்ந்த 1906-ம் ஹு மார்ச்சுமீ 3ுவக்கு முன்னமேயே கட்டப்பட்டது. இரண்டாவதுதடவை கட்டின மொத்தம் ரூபாய் 526—12—0. வாதி பிரதிவாதியினுடைய கம்பெனியில் மூன்றுவருஷகாலம் வேலை செய்துவந்ததற்காக பிரதிவாதி வாதிக்கு கொடுக்கவேண்டிய சம்பளமொத்தத்தில் பேர்பாதிமொத்தம் வீதம் மேற்கண்ட மூன்று வருஷங்களிலும் பிரதிவாதியினிடத்திலேயே சேர்த்துவைக்கப்பட்டு, பிறகு வாதி பிரதிவாதியினுடன் உதவி உத்தியோகஸ்தராய் (Assistant) சேர்ந்தபோது (3-3-1906) அந்த மொத்தத்தையும் அவருக்கு (வாதிக்கு) பாக்கியென்று பிரதிவாதியின் கம்பெனி புத்தகத்தில் பத்தெழுதி வைக்கப்பட்டது. பிறகு வாதி அந்த மொத்தங்களில் யாதொரு பணமும் வாங்கிக்கொள்ளவில்லை. பிரதிவாதியும் அவைகளில்யாதொன்றும் செலுத்தவில்லை. ஆனால் வியாபாரிகளின் மாமூல்படிக்கு வாதி அந்த மொத்தங்களை வாங்கி தன்னிஷ்டப்படி வினியோகப்படுத்தலாமென்று இந்த கேசில் ருஜுசெய்யப்பட்டது. வாதி அந்த மொத்தத்தை பிரதிவாதியினிடம் போட்டுவைத்து தனக்குவேண்டுமானால் வாங்கிக்கொள்ளலாமென்று ஏற்பாடு செய்துக்கொண்டு அந்த பணத்தை போட்டுவைத்திருந்தார். இதுவுமன்றி அந்த மொத்தத்திற்கு நடப்பு வட்டிவீதம் வட்டி கட்டிக் கொடுக்கப்படுமென்றும் இன்னும் அந்த மொத்தம் தேவையென்று எப்பொழுது கேட்கப்படுகிறதோ அப்பொழுது கொடுக்கப்படுமென்றும் சட்சிதாரர்களுக்குள் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டிருந்ததாக கீழ் அப்பீல் கோர்ட்டார் அதாவது, சப்கோர்ட்டார் கண்டு தீர்மானித்திருக்கிறார்கள். லிமிட்டேஷன் ஆக்ட் 59-வது ஆர்ட்டிகலின் தாத்பரியப்படி தாவாமொத்தம் கடனாய்கொடுக்கப்பட்ட மொத்தமென்றும், ஆகையால் தாவாவிற்கு காலாவதிதோஷம் வந்துவிட்டதென்றும் அப்பீல்வாதி தகராருசெய்தார். இப்படிப்பட்ட வாதத்திற்கு ஆதாரமாய், இச்சாதன்ஜி v. நாதா (1888) இ-லா-ரி 13 பம் 338-ம்; தாரம்தாஸ் v. கங்காதேவி (1907) இ-லா-ரி 29 அ 773-ம்; மதராஸ் அபீஷல் அசைனி v. ஸ்மித் (1908) இ-லா-ரி 32 ம 68-ம் எடுத்துக் கூறப்பட்டன. மதராசில் தீர்மானிக்கப்பட்ட கேசு அர்பத்னட் இன்சால்வென்ட் மனுவில் அநேகர் தங்களுக்கு பணம் கம்பெனியாரிடமிருந்து சேரவேண்டுமென்று கொண்டுவந்த தாவாக்களில் (Claims) ஒன்று. அந்த கேசில் கோர்ட்டார் பாங்கருக்கும் (Banker) பாங்கில் லாவாதேவி செய்யப்பட்டவர்களுக்குமுள்ள லாவாதேவியைப்பற்றி சட்டத்தில் வாஸ்தவத்தில் என்ன நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறதோ அதன் கருத்தை யோசித்து தீர்மானிக்கவேண்டியதாயிருந்தது. அதை கோர்ட்டார் தீர்க்கயோசித்து அதன்நிமித்தமாய் சட்டம் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் அவ்விதமாய் ஏற்படுத்தியிருக்கும் சட்டத்தை நான் மிக்க வணக்கத்துடன் ஒப்புக்கொள்ளுகிறேன். அவர்கள் அப்படி ஏற்படுத்திய சட்டத்திற்கு முக்கியமான ஆதாரம் இன்னதென்று ஏற்கனவே இப்பொழுது இதுவிஷயமாய் கோர்ட்டுகளில் வழங்கிவரும் பின்வரும் இரண்டு கேசுகளில் காணலாம்.

(1) போலி v. ஹில் 2 H. L C. 28; (2) ஹாலெட்ஸ் எஸ்டேட்ஸ் விஷயமாய் 1880 (13ch Div 696) பின்செப்பிய தீர்மானம் சரியானதென்று பிரிவிபக்பாங்க் கேசாகிய சிங்க்லேர் v. ப்ரௌஹாம் (1914) A. C. 398-ல் ஜுடிஷல் கமிட்டி பிரபுக்களால் (House of Lords) மறுபடியும் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

இது விஷயமாய் ஏற்பட்டிருக்கும் சட்டம் யாதென்று இதனடியில் காணலாம்.

வாஸ்தவமாய் பாங்கரும், பாங்கில் லாவாதேவி செய்பவரும் கடன் கொடுத்தவனுக்கும் கடன் வாங்கினவனுக்கும் என்ன சம்பந்தமுண்டோ அவ்விதமாகவே பாவிக்கப்படுவார்கள். (போலி v. ஹில் 2 H. L. C. 28 பார்க்கவும்) பாங்கில் லாவாதேவி செய்பவனொருவன் பாங்கில் கட்டும் பணத்தை பாங்கர் உபயோகிக்கலாகாதென்றாவது அல்லது அந்த ஏற்பாட்டின்பேரில் தனக்கு வெளியில் வசூலாகவேண்டிய தொகையை பாங்கர் வசூல் செய்யலாமென்று அதிகாரம் கொடுத்து உடன்படிக்கை செய்துக் கொண்டிருந்தால் பாங்கர் அவருக்கு ட்ரஸ்டியாக (Trustee) பாவிக்கப்படுவாரானதால் அந்த பாங்கில் லாவாதேவி செய்யப்பட்டவன் பாங்கரிடமிருந்து தனக்குச் சேரவேண்டிய தொகையை பாங்கர் நம்பிக்கைத்துரோகம் செய்தால் பாங்கருடைய பொது சொத்திலிருந்து வசூல் செய்துக்கொள்ள ஹக்குண்டு. அப்படி வசூல் செய்துக்கொள்ளுவதினால் என்ன தாத்பரியம் ஏற்படுமென்றால் ட்ரஸ்டியாயல்லாமல் மற்றபடி பாங்கர் தன்னுடைய கையிலிருந்த பணங்களை செலவிட்டதாக ஏற்படும் (ஹாலெட்ஸ் எஸ்டேட்ஸ் கேசைப்பார்க்கவும் (1880) 13 ch Div 696) அப்பீல் வாதியின் வக்கீல் பிரஸ்தாப கேசில் சொல்லியிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மேற்கூறிய கேசு சம்பந்தப்படாதென்றும் அந்தகேசில் கண்டிருக்கும் தாத்பரியம் லிமிடேஷன் ஆக்டின் ஆர்ட்டிகல்களை அர்த்தம்செய்து தெரிந்துக்கொள்ளுவதற்காக சம்பந்தப்படுத்தலாமென்றும் வாதித்து கேசின் சந்தர்ப்பத்தையும் சட்டத்தையும் யோசிக்குமளவில் லிமிட்டேஷன் ஆக்ட் 60-வது ஆர்ட்டிகலில் சொல்லியிருக்கும் வண்ணம் டிபாசிட்டாய் கட்டிவைக்கப்பட்ட கடன் மொத்தமாக சொல்லலாகாதென்றும் வாதிக்கிறார். தாம்தாஸ் v. கங்காதேவி (1907) இ-லா-ரி 29 அ 773-வது கேசின் சந்தர்ப்பங்கள் இந்த கேசின் சந்தர்ப்பங்களுக்கு ஒவ்வினதாகையால் சட்டப்படி கடனாய்க்கொடுக்கப்பட்ட பண லாவாதேவியின்விஷயமாய் லிமிடேஷன் ஆக்ட் 60-வது ஆர்ட்டிகல் சம்பந்தப்பட்டதாக எண்ணப்படமாட்டாதென்று அந்த கேசில் தீர்மானித்திருக்கிறார்கள். இச்சாடஞ்சி v. நாதா (1888) இ-லா-ரி 13-பம் 342 லும், இம்மாதிரியாகவே முடிவு சொல்லியிருக்கிறார்கள்.

'டிப்பாசிட்' என்னும் பதம் சட்டப்படி கடனாய்கொடுக்கப்பட்ட பணத்திற்கு சம்பந்தப்படாதென்பதை ஆமோதித்துக்கொள்ளத்தக்கதல்லவென்றும் பாங்கில் லாவாதேவி செய்யப்பட்டவன் ஒருவன் பிரத்தியேகமாய் ஒரு ஏற்பாடு செய்துக்கொண்டு கட்டிவைக்கும் பணத்திற்கும் அப்பாதைக்கப்போது வாங்கிக்கொள்ளுவதற்காக கட்டிவைக்கும் பணத்திற்கும் உள்ள பேதத்தைக் காண்பிக்கும்பொருட்டு 'டிபாசிட்' என்னும் பதம் சாதாரணமாய் பாங்கில் வழங்கிவரும் சொல்லென்றும் கூறலாம். அப்படிக்கிருந்திடினும் மேற்கண்ட இரண்டு விஷயங்களிலும் கட்டிவைக்கப்பட்ட தொகையை பாங்கர் உபயோகித்துக்கொள்ளலாமென்றுதான் எண்ணப்படும். அதில் ட்ரஸ்ட் என்றும் ஏற்படவில்லை. இஷாசந்தர்பாஹாரி v. ஜீபன்குமாரி பீபீ (1888) இ-லா-ரி 16 கல் 25-ல் இதற்கு பேர்விரோதமாய் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த கேசில் பாங்கில் செய்துவரும் லாவாதேவியின்விஷயமாய் பொது ஜனங்கள் என்ன தாத்பரியம் கொண்டு செய்கிறார்களோ அதையும், லாவாதேவி செய்பவர்களுக்காக பாங்கர் அவர்களுடைய பணத்தை எவ்விதமாய் பாங்கில் கட்டிவைக்கப்பட்டதென்று சொல்லுகின்றார்களோ அதையும் யோசித்து லிமிடேஷன் ஆக்ட் 60-வது ஆர்ட்டிகலின் தாத்பரியத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மிக்க கவனத்துடன் விசாரணைசெய்து தீர்மானிக்கப்பட்ட ஒரு கேசில் கற்றுணர்ந்த ஜட்ஜிகள் அவ்விதமாய் கொண்ட தாத்பரியத்திற்கு ஆதாரமாய்த் தகுந்த முகாந்தரங்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இம்மாதிரியாகவே மதராஸ் ஹைக்கோர்ட்டாரும் பெருந்தேவி தாயார் அம்மாள் v. நம்மாள்வார் செட்டி (1895) இ-லா-ரி 18 ம 390-லும் அபிப்பிராயம் கொண்டார்கள். இந்தகேசு கல்கத்தா கேசைவிட விசேஷமானது. அந்த கேசில் யாரிடத்தில் டிப்பாசிட்டாய் கட்டிவைக்கப்பட்டதோ அவர் பாங்கரல்ல. ஆனால் ஒரு ஷாப்கீப்பராகையால் அது இந்தக் கேசைப்போல வேதானென்று சொல்லவேண்டும். இந்த கேசுகளெல்லாம் 1877-ம் வருஷத்திய லிமிடேஷன் ஆக்டின்கீழ் தீர்மானம்செய்யப்பட்டது. ஆனால் தற்காலம் புதிதாய் ஏற்பட்ட ஆக்டில் "பாங்கரிடத்திலுள்ள லாவாதேவி செய்யப்பட்டவர்களுடைய பணமும்" சேர்ந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் பாங்கராயில்லாமல் சாதாரண வியாபாரியினிடத்தில் கட்டிவைக்கப்பட்ட பணமும் டிப்பாசிட் 'Deposit' தானென்று சொல்லவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆகையால் கீழ்கோர்ட்டார் தீர்மானம் சரிதானென்று நாங்கள் தீர்மானித்து இந்த இரண்டாவது அப்பீல்களைச் சிலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்:—நானும் மேற்செப்பிய தீர்மானத்தை ஒப்புக்கொள்ளுகிறேன்.

Subramanian Chetty v. Kathiresan Chettiar & ors. 30, Madras Law Journal 245.

நம்முடைய நேயர்களாகிய சந்தாதாரர்களில் ஒருவர் நம்மை பின்வருமாறு "செட்டிப்பிள்ளைகள் கடைகளில் பணம் போட்டுவைத்திருந்தால் லிமிடேஷன் ஆக்ட் இத்தினைவது சட்டப்படி 3-வருட காலாவதியல்லவென்றும் ஷை லிமிடேஷன் ஆக்ட் இத்தினைவது சட்டப்படி கேட்ட தேதிமுதல் மூன்றுவருட காலாவதியென்றும், அது டிபாசிட்டு என்றும்................" இது சம்பந்தமாகவுள்ள வாப்பாயின்டை மதராஸ் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருப்பதை தேடி யெடுத்து தனசகு தெரிவிக்கும்படியும் இன்னும் மேற்கூறிய வாப்பாயின்டின் விஷயமாயுள்ள தீர்மானங்களையெல்லாம் எடுத்துக்கூறும்படியும் கேட்டதற்கு நாங்கள் இசைந்து மேற்கண்டிருக்கும் மதராஸ் ஹைக்கோர்ட்டார் தீர்மானத்தையும் இன்னும் இதுவிஷயமாயுள்ள ஆதாரமான தீர்ப்புகளையும் எடுத்துக் காண்பித்திருக்கின்றோம். இது ரொக்க லாவாதேவி செய்கிறவர்களுக்கு (Bankers) உபயோகமுள்ளது. முக்கியமாக தனவைசியாளென்னும் நாட்டுக்கோட்டைசெட்டிமார்களுக்கு மிக அத்தியாவசியமானது.—ப—ர்.

THE JAGHIRDAR OF ARNI.

ATTACHMENT OF ALLOWANCE.

ஆரணி ஜாகீர்தாரரின் மனவர்த்தி சிலவுக்காக கொடுக்கப்படும் பணத்தை (Allowance) ஜப்தி செய்தல்.

15–1–1917.

Mr. R. பெருமாள்நாயுடு என்பவர் 1916-ம் வருஷத்தில் மேற்படி ஜாகீர்தாரின்பேரில் ரூபாய் 2700-க்கு மதராஸ் ஹைகோர்ட்டு அசல்தாப்பில் டிக்ரிபெற்று அந்த டிக்ரி மொத்தம் இன்னும் அவருக்குச் செல்லாகவில்லையென்று அவருடைய வக்கீல் Mr. T. எத்திராஜ முதலியாரைக்கொண்டு ஷை ஜாகீர்தாரரின் மனவர்த்தி சிலவுக்குக் கொடுத்துவரப்படும் அலவென்சு ரூ. 3500-ஐ, ஜப்திசெய்யும்படிக்கு மனுசெய்து அந்தமனுவின்மீது அவருக்கு அனுகூலமாய் ஷை அலவென்சில் பேர்பாதி ஜப்திசெய்யும்படிக்கு உத்தரவுபெற்று அந்த உத்தரவை கோர்ட் ஆப் வார்ட்ஸ் காரியதரிசி (Secretary) யாகிய மிஸ்டர் பேட் I. C. S. அவர்களுக்கு அனுப்பினதின்மேல் ஆரணி ஜாகீர்தார் அதற்கு எதிர்மனு ஒன்று தயார்செய்து 8–1–1917-ல் தாக்கல்செய்தார்.

கோர்ட்டார் அந்த ஆட்சேபனை மனுவை இரண்டுவாரம் நிறுத்திவைத்தார்கள்.

மிஸ்டர் கியூஜெண்ட் கிராண்ட் பாரிஸ்டர் 15௳ கோர்ட்டில் ஆஜராகி அந்த பணம் ஜாகீர்தாரரின் சம்பளம் அல்லவென்றும் ஜப்திசெய்ய நியாயமில்லையென்றும் ஆட்சேபித்தார். கோர்ட்டார் ஆட்சேபனையை ஆமோதித்துக்கொண்டு ஜப்தியை ரத்துசெய்துவிட்டார்கள்.

Egmore Police Court.

எழும்பூர் போலீஸ் கோர்ட்டு.

AN ASSAULT CASE.

போலீசாரைத் தாக்கி அடித்த கேசு.

8—1—1917.

மதராஸ் சதரன் மராட்டா ரயில்வே உத்தியோகஸ்தராகிய W. G. கார்டன் என்னும் துரை ஒருவர் சென்ற டிசம்பர்மீ 21௳ முற்பகலில் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அவர்களுடைய சர்க்கார்வேலையைச் செய்துகொண்டிருக்கையில் அவர்களைத்தாக்கி அடித்ததாக குற்றம் சாட்டப்பட்டு ஷை போலீஸ் கோர்ட்டில் அவரை விசாரணைசெய்தபோது அவர் அக்குற்றத்தை செய்ததாக ஒப்புக்கொண்டதனால் மாஜிஸ்டிரேட் அவர்கள் அவரை குற்றவாளியென்று தீர்மானித்து ரூபாய் 150 அபராதம் செலுத்தும்படி தண்டனை விதித்தார்.

REVIEW OF BOOK.—புஸ்தக ஆராய்ச்சி.

வர்த்தகயுக்தி:—இப்பெயருள்ள ஓர் புத்தகம் மிஸ்டர் M. A. நல்லயப்ப முதலியாரவர்களால் நம்முடைய பார்வைக்கு அனுப்பப்பட்டது. இதை பார்வையிட்டதில் இப்புத்தகம் வர்த்தகர்களுக்கும், மற்றும் பொது ஜனங்களுக்கும் மிகவும் உபயோகமுள்ளதாய் பல அனுபவ விஷயங்களை எடுத்துக்கூறி எளிய தமிழில் வரையப்பட்டிருக்கிறது. இப் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களை வர்த்தகர்களும், வர்த்தகத்துறையிலிறங்க நினைப்போரும் கவனித்து நடப்பார்களேயாகில் க்ஷேமமடைவதில் சந்தேகமிராது.

District Court of South Arcot.

தென் ஆர்க்காடு ஜில்லா கோர்ட்டு, கடலூர்.

மிஸ்டர் S. G. ராபெர்ட்ஸ் I. C. S முன்பாக,

A VILLAGE RIOT.—ஒரு கிராமக்கலகம்.

SEVERE STRICTURES ON THE POLICE.

போலீஸ் உத்தியோகஸ்தரை மிக்க கடினமாய் கண்டித்தல்.

8—1—1917.

சொற்பகாலத்திற்குமுன் சிதம்பரம் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் ராவ்பகதூர் துரைசாமி ஐயர் எதிரில் 32 நபர்கள் கலகம்செய்து, கலகத்தில் உபத்திரவம்செய்ததாகவும், போலீசார் காவலிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிப்போனதாகவும் அக்கிரமமாய் சிலரை காவலில் அடைத்துவைத்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டதில் 9-பேர் குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்டு சில வருஷகாலம் கடின காவலிலிருக்கும்படி தண்டனை விதிக்கப்பட்டார்கள். அந்த தீர்மானத்தின்பேரில் செஷன்ஸ் ஜட்ஜ் முன்கொண்டுவரப்பட்ட அப்பீல், விசாரணைசெய்யப்பட்டு சென்றமாதம் 5௳ பைசல் செய்யப்பட்டது.

ப்ராசிகியூஷன் தரப்பார் சொல்லியபிரகாரம் கேசின்விபரமென்னவென்றால் சென்ற மார்ச்சுமீ 29௳ திட்டகுடி போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் சில போலீசாரும், கிராமத்தாரும், இன்னும் சிலரும் கூட்டமாய் அப்பீல்வாதிகளின் கிராமத்திற்குச்சென்று ஷை செப்பியதினத்திற்கு முன்தினம் சில ரயத்துகள் (பயிர்செய்யும் குடிகள்) கலகம்செய்து திருடு நடந்ததாக சொல்லிய கேசில் பிரதம விசாரணை நடத்துவதற்குப்போனார்கள். அப்பொழுது சிவில் கோர்ட்டு அமீனா ஒருவன் அவர்களில் ஒருவர்மேல் சிவில்வாரண்டிருப்பதாக அவரைப்பிடிக்க எத்தனித்தான். சப் இன்ஸ்பெக்டர் 11-வீடுகள் நுழைந்து பரிசோதனை (Search) செய்ததில் கிரிமினல் விவகாரமான தொன்றும் காணவில்லை. அவர் 6-நபர்களை அரெஸ்டுசெய்து அவர்களை இன்னும் விசாரிப்பதற்காக பெண்ணாடத்திற்கு (Pennadam) அழைத்துகொண்டுவரும்படி சில கான்ஸ்டேபிள்களிடம் உத்தரவுசெய்துவிட்டு அவர் கிராமத்தைவிட்டுப் போய்விட்டார். அவர் கொஞ்சதூரம் போகையில் ஒரு பெரிய சப்தத்தைக்கேட்டு மறுபடியும் திரும்பிப்பார்த்தபோது அவ்விடத்தில் அநேகர் பெருங்கூட்டமாய் போலீஸ் கான்ஸ்டேபிள்களை எதிர்த்துத் தாக்கிக்கொண்டிருப்பதைக்கண்டார். அவர் அவ்விடத்திற்கு ஓடிப்போய் பார்த்தபொழுது ஜனங்களும் போலீசாரும், ஒருவரையொருவர் எதிர்த்து தாக்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். அவர், அவரவர்களுக்கு எவ்வளவு புத்திமதி சொல்லியும் நிஷ்ப்பிரயோஜனமாய் அவரையே தாக்குவதாக அவரை பயமுறுத்தி அவரிடத்திலிருந்த துப்பாக்கியை முறுக்கித்திருப்பி இழுத்துக்கொள்ளப் பிரயத்தனப்பட்டமையால் அவர் அதன்மேல் விதியில்லையென்பதாக அந்த பெருங்கூட்டத்தாரின்பேரில் துப்பாக்கியின் வெடியைச்சுட்டார். அப்பெருங்கூட்டத்தார் போலீசாரின் நடவடிக்கையைக்கண்டு பெருங்கோபம்கொண்டு அவர்களை (போலீசாரை)

மிக்க கொடூரமாய் அடித்து அவர்களை ஒரு வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் 4-மணிநேரம் காவலில் அடைத்துவைத்தார்கள். அதன்மேல் அவர்களுடைய கிராமக்கர்ணமும் இன்னும் சிலரும்சேர்ந்து அவர்களை விட்டுவிடும்படி அவர்களுக்கு புத்திசொன்னதின்பேரில் அவர்கள் அவர்களை (போலீசாரை) விட்டுவிட்டார்கள். பிறகு போலீசார் அக்கிரமமாய் அவர்கள் பேரில் துப்பாக்கிவெடிவிட்டுஅவர்களில் ஒருவனை மிக்க கொடூரமாய் உபத்திரவம் செய்தார்களென்றும் ஒரு கொட்டகையை கொளுத்திவிட்டார்களென்றும், கிராமத்தாரால் குற்றம் சாட்டப்பட்டு அதற்காக கர்ணம் போலீசாருடைய வாக்குமூலங்களை எடுத்துக்கொண்டு பிறகு போலீசார் பிடிபட்டிருந்த சிறையிலிருந்துவிடுபட்டு அன்றுதினம் நடுராத்திரி பெண்ணாடம்போய்ச்சேர்ந்தார்கள். மறுநாள் சப்மாஜிஸ்ட்ரேட் அவர்கள் பிரதமவிசாரணைசெய்தார். எதிரிகள் போலீஸ் உத்தியோகஸ்தர் மிக்ககர்வத்துடன் அக்கிரமமாய் யாதொருகாரணமின்றி அவர்கள்மீது துப்பாக்கிவெடி விட்டார்களென்று எதிர்வாதம் கூறினார்கள். ப்ராசிக்கியூஷன் தரப்பாரின் சாக்ஷிகள் குற்றம் செய்தவர்கள் இன்னார் இன்னாரென்று குறித்துக் காண்பித்தது நம்பத்தக்கதாகவும், ஒப்புக்கொள்ளத்தக்கதாகவும் இல்லை. சப்மாஜிஸ்ரேட் அவர்கள் 32-குற்றவாளிகளில் 2-நபரை பிரதமத்திலேயே விட்டுவிட்டு 30-நபர்மேல் குற்றம் சாட்டி (சார்ஜுசெய்து) அவர்களில் கடைசியாய் இருவரை விடுதலைசெய்துவிட்டு மற்றவர்களை கடினகாவலிலிருக்கும்படி சிக்ஷை விதித்தார். அவர்களில் இருவர் அந்த தீர்மானத்தின் பேரில் செஷன்ஸ் ஜட்ஜுக்கு செய்துகொண்ட அப்பீலை நாளதுமாதம் 5௳ தாக்கல்செய்துகொண்டு கீழ்கோர்ட்டார் குற்றம்சாட்டி தீர்மானம்செய்தது சரிதானென்று ஊர்ஜிதம் செய்து அவர்களை மூன்றுவருஷகாலத்திற்கு யாதொரு கலகமின்றி அமரிக்கையாயிருக்க ஜாமீன்கொடுக்கும்படி உத்தரவு செய்தார்.

கற்றுணர்ந்த செஷன்ஸ் ஜட்ஜ் மிஸ்டர் S. G. ராபர்ட்ஸ் I. C. S. அவர்கள்செய்த தீர்மானத்தில் ப்ராசிக்கியூஷன்தரப்பார் இந்தகேசில் நடத்தின நடவடிக்கையையும் நீதியையும்பற்றி தான் கொண்ட அபிப்பிராயத்தை பின்வருமாறு மிக்க கடினமான வார்த்தைகளில் எழுதினார். இந்த கேசில் போலீசார் தஸ்தாவேஜுகளாயுள்ள சாட்சியத்தை கோர்ட்டார் முன்கொண்டுவராமல் மறைத்துவிட்டது மிக்க அக்கிரமமான காரியமென்று நான் கண்டித்து வற்புறுத்தி கூறுகின்றேன். இனியாவது அவர்கள் இதை கவனித்து நடப்பார்களென்பது என்னுடைய கோரிக்கை. இந்த ராஜதானியில் போலீசார் இப்படி நடப்பது பொதுவாய் ஜனங்கள் கலகமின்றி அமரிக்கையாயிருப்பதைக் கெடுத்து அபாயம் விளைவிப்பதற்கும், போலீசார்மேல் ஒரு மானக்கேடுண்டாவதற்கும் காரணமாயிருக்கிறது இந்தக்கேசில் பிரதமத்தில்குற்றம் செய்யப்பட்டதாக தெரிவித்த ரிப்போர்ட்மாத்திரம் 11-வது குறிப்பிட்ட தஸ்தாவேஜாக சாக்ஷியத்தில் தாக்கல்செய்யப்பட்டு இன்னும் ப்ராசிக்கியூஷன் முதல்சாக்ஷி சப் இன்ஸ்பெக்டர் 164-வது பிரிவின்கீழ் செய்த பிரதம விசாரணையும், பிறகு ப்ராசிக்கியூஷன் 3, 5, 10, 12-வது சாக்ஷிகளுடைய விசாரணைகளும் 3, 8, 9, 12, குறிப்புள்ள தஸ்தாவேஜுகளாய் கோர்ட்டார்முன் கொண்டுவரப்பட்டதேயல்லாமல் மற்றப்படி எதிர் தரப்பார் தாக்கல்செய்த மஹஜர்கள் முதலிய இவைகளையெல்லாம் வெளிக்கு கொண்டுவராமலேயே மறைத்துவிட்டபடியால், அவைகளை எதிர்தரப்பார் அவர்களுக்கு அனுகூலமாய் தாக்கல்செய்தார்கள். இவ்விதமான நடவடிக்கையை கண்டித்து ஒழுங்குபடுத்துவதற்கு என்னமாக்க

மென்றால் "வருகிற அபிஷியல் வருஷம் முதற்கொண்டு ஒவ்வொருகேசிலும் 'யாதாஸ்த்,' பிரியாதியின்பிரதி, முதல் தெரிவிக்கும் ரிப்போர்ட்டு, இன்குவஸ்ட்டென்று சொல்லப்படும் விசாரணை ரிப்போர்ட்டு மஹஜர் நாமா, மஹஜர் நாமா சோதனைப்பட்டி, 164-வது பிரிவின்கீழ் எடுத்த ப்ராசிக்கியூஷன் சாக்ஷிகளின் வாக்குமூலங்கள், இன்னும் இம்மாதிரியான இதர தஸ்தாவேஜுகளை" எந்த போலீஸ் உத்தியோகஸ்தர் தாக்கல்செய்யாமல் விட்டுவிடுகிறாரோ அவரை வேலையிலிருந்து நீக்கிவிடுவதுமல்லாமல் இன்னும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு யுக்தமாய்த்தோன்றும்வண்ணம் கிராட்யூயிடி (Gratuity) பென்ஷன் இவைகளுமில்லாமல் போய்விடுமென்று போலீஸ் கெஜெட்டில் அறிக்கைசெய்து விளம்பரப்படுத்துவது நல்லதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

Assistant Magistrate's Court PUDUKOTTAH.

புதுக்கோட்டை அசிஸ்டென்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்.

Mr. G. கிருஷ்ணசாமி ஐயர் முன்பாக.

FABRICATING FALSE EVIDENCE.

பொய்சாட்சியம் சிருஷ்டித்தல்.

6—1—1917.

கேசின் விவரம்:—அரிமலத்தில் ஒரு நாட்டுக்கோட்டைசெட்டியாகிய R. M. K. S. சடையப்பசெட்டியென்பவர், அழகப்பசெட்டியார் தனக்கு ரூ. 90 கொடுக்கவேண்டுமென்று சொல்லி அதை வசூல்செய்வதற்கு சீப்ஜட்ஜ் கோர்ட்டில் ஒரு சிவில் வியாச்சியம் தாக்கல்செய்தார். அந்தக்கேசில் பிறப்பிக்கப்பட்ட சம்மன்களில் 'பிரதிவாதி தாவாவைப் பெற்றுக்கொள்ளாமல்-சாக்ஷி சம்மனைமாத்திரம்'பெற்றுக்கொண்டாரென்று' அந்த சம்மன்களின்மேல் எழுதும்படி செய்வித்து பிறகு கடைசியாய் பிரதிவாதி கோர்ட்டில் நேராக ஆஜராகவேண்டியதென்று ஒரு வாரண்டு பிறப்பிக்கப்பட்டது. அந்த வாரண்டின்பேரில் 'பிரதிவாதி ஊரில் இல்லை, ரங்கூனிலிருக்கிறார்' என்று எழுதிவைக்கப்பட்டது.

மாஜிஸ்டிரேட்டின் தீர்மானம்:—குற்றவாளி சீப்கோர்ட் சம்மன் ஒ றை பிரதிவாதிக்கு சேர்ப்பிப்பதில் (Serve) பொய்சாக்ஷியம் சிருஷ்டித்ததாக குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடந்ததில் அவர் இ. பி. கோ. 193-வது பிரிவின்கீழ் இரண்டு விஷயங்களில் குற்றம்செய்தவன்தானென்று தீர்மானிக்கப்பட்டு முதல் குற்றத்திற்காக ஒருமாதம் வெறுங்காவலும், ரூபாய் 200 அபராதம் செலுத்தும்படிக்கும், இரண்டாவது குற்றத்திற்காக ஒருமாதம் வெறுங்காவலிலிருக்கும்படிக்கும் தண்டனை விதிக்கப்பட்டான். இரண்டு தண்டனைகளும் ஏககாலத்தில் நடக்கவேண்டியதென்றும், அபராதத்தை செலுத்தாதபட்சத்தில் இன்னொருமாதம் வெறுங்காவலிலிருக்கவேண்டுமென்றும் சிக்ஷை செய்யப்பட்டான்.

VILLGE OFFICERS SHEET.

கிராம ஆபிசர்களுடைய பக்கம்.

REGULATION XI, of 1816.

1816-ம் வருஷத்திய 11-வது ரெகுலேஷன் சட்டதிட்டம்.

1816ஞூ செப்டெம்பர்மீ 13வ ஜாரிசெய்யப்பட்டது.

மதராஸ் கவர்ன்மெண்டாருக் குட்பட்ட ராஜ்ஜியங்கள் முழுமைக்கும் போலீஸ் ஏற்பாடுகள் பொதுவா யிருப்பதற்காக செய்யப்பட்ட சட்டதிட்டங்கள்.

1-முதல் 7 வது பிரிவுவரையில் ரத்தாய்விட்ட சிலசட்டங்களில் போலீஸ் உத்தியோகங்களை செய்வதற்குத் தகுந்த நபர்கள் யார் என்பதும் கிராம அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்களும், அவர்கள் செய்யவேண்டிய தொழில்களும், போலீசாருக்குறிய வேலைகளும் இவைகளைப்பற்றி விவரிக்கப்பட்டிருக்கின்றன.

8. கிராமங்களில் குற்றங்கள் செய்யப்பட்டதென்றாவது, திருடர் கூட்டங்கள் அல்லது திருடர்களென்று சந்தேகிக்கப்பட்ட நபர்கள் கிராமத்தில் பிரவேசித்தார்களென்றாவது அல்லது, அப்படிப்பட்டவர்கள் கிராமத்தில் வந்து தங்கியிருக்கிறார்களென்றாவது, கிராம அதிகாரிகளுக்கு தெரியவந்தால் அவர்கள் அப்படிப்பட்டவிஷயத்தை ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொண்டு அந்த குற்றவாளிகளைக்கண்டறிந்து அவர்களைப்பிடித்து கிராமத்திற்கு யாதொரு கெடுதலும் நேரிடாமல் பந்தோபஸ்தாய் வைத்திருப்பதற்காக என்ன கிருத்யைகள் செய்யவேண்டுமோ அவைகளை அவர்கள் ஒருவருக்கொருவர் கலந்து சகாயமாயிருந்து செய்துவரவேண்டியது.

9. கிராமங்களில் சந்தேகத்திற்கிடமுள்ள புது நபர்கள் பிரவேசிப்பார்களானால் கிராம அதிகாரிகள் அப்படிப்பட்ட நபர்கள் அவர்களுடைய கிராமங்களில் வந்திறங்கியிருக்கிறார்களென்றும் இன்னும் அவர்களைப்பற்றி என்னென்ன தெரிந்துக்கொள்ளக் கூடுமோ அவைகளையும் விசாரித்தறிந்து ஜில்லா (டிஸ்டிரிக்ட்) போலீஸ் உத்தியோகஸ்தருக்கு தெரிவிக்க (Report) வேண்டியது.

10. (1) கிராமங்களில் சிலர் ஒருவருக்கொருவர் திட்டிக்கொண்டு மேல்விழுந்து அற்பமான சண்டை அல்லது சிறு கலகங்கள் செய்தார்களென்று கிராம அதிகாரிகளுக்குத் தெரியவந்தால், அவர்கள் அப்படிப்பட்ட நபர்களை வாச்சாமூலமாய் விசாரணை செய்து அவர்களை விலக்கி அந்தக்கேசைத் தள்ளிவிட்டாவது அல்லது அவ்விதமானகுற்றம் சாட்டப்பட்டவர்கள் அந்தக் குற்றத்தைச் செய்தவர்கள்தானென்று ருஜுவாகி அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்பது அவசியமென்று கிராம அதிகாரிகளுக்குத் தோன்றினால் அவர்கள் அந்த குற்றவாளிகளை 12-மணி நேரத்திற்கு அதிகப்படாமல் கிராமத்திலுள்ள ஒரு சாவடியில் அல்லது சத்திரத்தில் அடைத்துவைக்க அதிகாரமுண்டு அல்லது குற்றவாளிகள் தாழ்ந்த குலஸ்தரா யிருக்கும்பட்சத்தில் அவர்களை அதிலும் கேவலமானதண்டனை செய்யலாமென்று கிராம அதிகாரிக்குத் தோன்றினால் அவர் அவர்களை 6-மணிநேரத்திற் கதிகப்படாமல் தொழுமரத்தில் போட்டுவைக்கும்படி உத்தரவுசெய்ய அதிகாரமுண்டு.

11. இந்தப்பிரிவின் முதலாவது உட்பிரிவின்படி கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை அவர்கள் நிறைவேற்றி தண்டனை விதித்த கேசுகளையெல்லாம் அவர்கள் ஜில்லா (District) போலீஸ் உத்தியோகஸ்தருக்குத் தெரிவிக்க (ரிப்போர்ட்செய்ய) வேண்டியது. ஆனால் அவர்கள் குற்றவாளிகளை விலக்கி கேசை தள்ளுபடிசெய்த விஷயங்களை அவர்கள் ரிப்போர்ட்டு செய்யவேண்டு மென்பது அவசியமல்ல.

11. (1) திருட்டுசொத்துகளை ஒளித்துவைக்கப்பட்டிருப்பதாக கிராம அதிகாரிகளுக்கு நம்பத்தகுந்த சமாச்சாரம் தெரியவந்தால் அவைகளைக் கண்டுபிடிக்க உடனே தகுந்த கிருத்யைகள் செய்யாவிடில் அவைகளை எடுத்துக் கொண்டுபோய்விடுவார்களென்று நினைப்பதற்குத் தகுந்த காரணமிருப்பதாகத் தோன்றினால் அவர்கள் சோதனைசெய்யும்படி உத்தரவுசெய்து அந்த சொத்துகளைக் கண்டுபிடிக்கும்பட்சத்தில் அவைகளை பந்தோபஸ்துசெய்து அவைகளைத் திருடின குற்றவாளியையும் அப்படிக்கண்டுபிடிக்கப்பட்ட திருட்டுசொத்துகளையும் ஜில்லா (District) போலீஸ் உத்தியோகஸ்தருக்கு அனுப்பிவிடவேண்டியது. ஒளித்துவைக்கப்பட்ட இடம் வாசம்செய்யும் வீடாயிருந்தால் சூரியன் உதயமான பின்னும், சூரியன் அஸ்தமானமாவதற்கு முன்னும் தான் சோதனை செய்யவேண்டியது.

(இன்னும் வரும்.)

The Indian Law Gazette.

PART I.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஞூ ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் I.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ஞூ பிப்ரவரிமீ [நே. 2.

EFFECT OF ADOPTION ON PRE-EXISTING RIGHTS:—Continued.

ஒருவனை தத்தெடுத்துக்கொள்வதினால் அவனுக்கு அதற்குமுன் அவன் பிறந்த குடும்ப சொத்திலிருந்த ஹக்கு பாத்தியதை சுதந்தரங்களின் பயனை அவனை ஸ்வீகாரமா யெடுத்துக்கொண்டபிறகு அவன் அடைவானா யென்பது:—தொடர்ச்சி.

(1917ஞூ ஜனவரிமீ 1-ம் பாகம் 3-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேதாடிதீஸின் வியாக்கியானம் (Medhatithi's Commentary) மனுநீதி சாஸ்திரத்தைப்பற்றி (மாண்டலீக்-Mandalik) என்பவரால் செய்யப்பட்ட கிரந்தத்தின்பேரில் மேதாடிதீஸ் என்பவருடைய வியாக்கியானங்களின் முதல்வரியிற் கண்டிருக்கும் "துக்தம்-tuktam" என்று வாசிக்கப்படும் பதம் பிசகாயிருப்பதாகத் தோன்றுகிறது. அந்தப்பதம் "யுக்தம்-yuktam" என்றிருக்கவேண்டுமென்று நாம் நினைக்கிறோம். ஏனென்றால் அந்தவரியில் இப்பொழுதிருப்பதைப்போலவே அந்தவரியைவாசித்தால் அந்த முதல் வாக்கியத்தின் தர்ஜமா (translation) எப்படியிருக்குமென்றால் "இந்த கிரந்தத்தில்கூட 'தத்ரிமா-Datrima' புத்திரனுக்கு அவனை தத்தெடுத்துக்கொண்ட தகப்பனாருடைய சொத்தில் ஒருபாகம் கிடைக்கவேண்டும் என்பதாய் வெளிப்படையாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது." ஆனால் அந்தகிரந்தத்தில் அவ்விதமாய் சொல்லப்பட்டிராததினால் அது பிசகென்றுதான் சொல்லவேண்டும். ஆகையால் அந்த முதல்வரியில் "யுக்தம்" என்னும் பதமிருப்பதாக நாம் அதைத் தர்ஜமா செய்கின்றோம். ஒரு கோத்திரத்தில் ஜனித்தவன் இன்னொரு கோத்திரமுள்ள குடும்பத்திற்கு தத்தாகப் போவானாகில் அவன்-தான்பிறந்த குடும்பத்தின் மூதாதையின் "கோத்திரத்தையும், ரிக்தத்தையும்-(ஸ்திதியையும்)" கொண்டுபோனவனாகானென்னும் காரணத்தினால் "தத்ரிமா-Datrima" புத்திரனுக்கும் தத்தெடுத்துக்கொண்ட தகப்பனுடைய சொத்தில் ஒருபாக முண்டென்று சொல்வதுதான் நியாயமென்று இந்த கிரந்தத்தினாலும் ஏற்படுகிறது. அப்படி இன்னொரு குடும்பத்திற்கு தத்தாக போகப்பட்டவன் அவனுடன்பிறந்த குடும்பத்தின் மூதாதையின் கோத்திரத்தையும், ஸ்திதியையும்கொண்டுபோனவனாகானென்று சொல்வதினால் அவனுடைய மூதாதைக்கு அந்த கோத்திரத்திற்கும், ஸ்திதிக்கும் சம்பந்தமாயுள்ள பிண்டம் கொடுப்பதற்கும், எள்ளும்

தண்ணீரும்வார்த்து தர்ப்பணம் செய்வதற்கும் யோக்கியதையுள்ளவனுகான். அவன் பிறந்த குடும்பத்தின் மூதாதைக்குச் செய்யவேண்டிய "ஸ்ராத்தம் - Sraddha" என்னும் கிரியை செய்வதும் அவன் இன்னொரு குடும்பத்திற்கு தத்தாக போனபோதே அர்த்தகிரியமாய் அவனைவிட்டு நீங்கிப்போகின்றது. ஒருவன் தனக்குப்பிறந்த புத்திரனை இன்னொரு குடும்பத்திற்கு தத்தாக கொடுத்துவிடுவானுகில் அப்படி ஸ்வீகாரமாய் கொடுத்துவிடப்பட்ட பிள்ளை அவனுடைய சொந்தகப்பனுக்கு பிண்டம்முதலான "ஸ்ராத்தம் - Sraddha" கிரியைச் செய்ய யோக்கியதையுள்ளவனல்ல. அவன் தத்தாக போனபோதே அந்த கிரியைகளைச் செய்யும் சுதந்தரமும் அவனைவிட்டு நீங்கிவிடுகின்றன. இன்னும் அந்த குடும்பத்திலுள்ள "கிரித்ரிமா - Kritrima" முதலான அவனுடன்பிறந்த இதர பிள்ளைகள் விஷயத்திலும் இம்மாதிரியாகவேதான அர்த்தம் செய்யவேண்டும். ஒரு பெண்ணுக்கு விவாகமாகும்போதே அவள் கெர்ப்பமாயிருப்பாளாகில் அவளுக்குப் பிறக்கும் பிள்ளைக்கும் அம்மாதிரியாக இரண்டு தகப்பன்மார்களுக்குப் பிறந்த இதர பிள்ளைகளுக்கும் அவ்விதமாக யேற்படும் இரண்டு தகப்பன்மார்களுடைய சொத்துகளை அடைய நியாயமுண்டென்று சொல்லலாம். "மாண்டலிக்ஸ் - Mandalik's Edition" கிரந்தத்திலிருக்கும் "ஹாரேட் - Haret" என்னும் பதம் "ஹாரேயேட் - Harayet" என்றிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. ஏனென்றால் மேலே சொல்லியிருப்பதைப்போலவே "தத்ரிமா - Datrima" பிள்ளையைக்கூட இரண்டு தகப்பன்மார்களுடைய புத்திரனைப் பாவித்து அவனுக்கும் இரண்டு தகப்பன்மார்களுடைய சொத்துகளை யடைய நியாயமுண்டென்று சொல்லுகிறார்கள். இந்த வாக்கியத்திலும் இன்னும் இதர வியாக்கியானங்களிலும் சொல்லியிருப்பது நன்ருய் அர்த்தமாகவில்லை. ஒரு குடும்பத்திலிருந்து இன்னொரு குடும்பத்திற்கு தத்தாய் கொடுத்துவிடப்பட்ட பிள்ளை அவனுடன் அவன் பிறந்த குடும்பத்தின் கோத்திரத்தையும் "ரிக்தத்தையும் - Riktha" (ஸ்திதியையும்) கொண்டுபோனவனல்லவென்று சொல்வதற்கு அத்தாட்சியாய் கிரந்தத்தில் யாதொரு ஆதாரமும் வெளிப்படையாய் சொல்லப்பட்டில்லை.

"ஸர்வாக்ஞ நாராயண கிரந்தத்தின்மேல் வியாக்கியானம் - Commentary on Sarvagna Narayana":—"தத்ரிமா - Datrima" பிள்ளைக்கு அவன் பிறந்த சொந்தகப்பனுடைய சொத்துகளில் யாதொருசம்பந்தமும் கிடையாதென்பதாய் மேலே சொல்லியிருக்கும் கிரந்தத்தில் "கோத்ரம்-Gotram" என்பதைப்பற்றி ஆரம்பிக்கும் முதல் பாகத்திலேயே வெளிப்படையாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த காரணத்தை யனுசரித்து அப்படிப்பட்ட "தத்ரிமா - Datrima" புத்திரன் இரண்டு தகப்பன்மார்களுடைய புத்திரனுகானென்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால் அவன் தத்தாய்ப் போகும்போதே அவனை தத்தா யெடுத்துக்கொள்ளப்பட்ட தகப்பனுருடைய கோத்திரத்தைச் சேர்ந்தவனுய்விடுகிறுன். ஒரு ஸ்திரீயின் புருடனுடைய இளைய சகோதரனுக்குப் பிறந்த பிள்ளையும், நியமித்துக்கொண்ட குமாரத்தியின் பிள்ளையும், இவர்கள்மாத்திரம்தான் இரண்டு தகப்பன்மார்களுக்குப் பிறந்த பிள்ளைகளாவார்கள். ஏனென்றால் அவர்களுக்கு இரண்டு தகப்பனுர்களிருப்பதினுல் அவர்கள் அப்படி சொல்லப்படுவார்களென்று கூறியிருக்கின்றது. "கோத்திரத்தையும், ரிக்தத்தையும் - Gotra and Rikta" அனுசரித்துச சொல்லும் விஷயத்தில் யாவனொருவன் தன்னுடைய பிள்ளையை தத்தாக கொடுத்துவிடுகிருனே அவனுக்கு அப்படிப்பட்ட தத்தாய் கொடுத்துவிடப்பட்ட பிள்ளை "ஸ்வதா - Swadha, ஸ்ராத்தம்-Sraddha" என்னும் உத்தரகிரியைச் செய்யவேண்டிய கடமை அவன் ஸ்வீகாரமாய் போகும்போதே அவனை (அந்தப்பிள்ளையை) விட்டு நீங்கிப்போய்விடுகிறது.

"குல்லூகாவின் வியாக்கியானம்-Commentary of Kulluka":—ஒருவனுக்கு ஸ்வீகாரமாய்கொடுத்துவிடப்பட்ட "தத்தகா - Dattaka" புத்திரன் அவன் பிறந்த சொந்த தகப்பனுடைய "கோத்திரத்தையும், ரிக்தத்தையும்" கொண்டுபோனவனுகான். அவன் தன்னுடைய சொந்த தகப்பனுக்கு கொடுக்கவேண்டிய "பிண்டத்தை"க் கொடுக்கவும் அர்ஹனுகமாட்டான். அவன் யாருடைய குடும்பத்திற்குப் போகின்ருனே அந்த குடும்பத்திலுள்ள அவனை தத்தெடுத்துக்கொண்ட தகப்பனுடைய கோத்திரத்தையும், ரிக்தத்தையும் - (ஸ்திதியையும்) சேர்ந்தவனுய்விடுவானுகையால் அப்படி தத்தாய் போகப்பட்டவன் அவனை தத்தெடுத்துக் கொள்ளப்பட்ட தகப்பனுக்கு பிண்டம் கொடுக்கவேண்டியவனுவான். ஆகையால் "பிண்டம்" அந்தப் பிண்டத்துடன் கொடுக்கவேண்டிய "ஸ்வதா - Swadha, ஸ்ராத்தா - Sraddha" இவைகளையெல்லாம் அவன்பிறந்த சொந்த தகப்பனுக்கு கொடுக்கவேண்டியதென்னும் கடமை அவனைவிட்டு நீங்கிப்போகின்றது.

ராகவானந்தாவின் வியாக்கியானம் - Commentary of Raghavananda:—"தத்ரிமா - Datrima" புத்திரன் அவன் பிறந்த சொந்த தகப்பனுடைய "கோத்ரம், ரிக்தம், பிண்டம் - Gotra, Riktha, Pinda" இவைகளுக்கு யாதேனும் சம்பந்தமுள்ளவனுவானு-ஆகமாட்டானு என்பதைப்பற்றி சந்தேகமாயிருப்பதால் மேலேசொல்லப்பட்ட கிரந்தத்தில் "கோத்ரா - Gotra" என்பதைப்பற்றி ஆரம்பிக்கும் முதல் பாகத்திலேயே பின்வருமாறு வெளிப்படையாய்க்

கூறப்பட்டிருக்கின்றது: "கோத்ரா, ரிக்தா - Gotra and Riktha" என்னும் பதங்களில் "ரிக்தா-Riktha" என்னும் பதத்திற்கு இவ்விடத்தில் "ஸ்திதி, ஆஸ்தி - Wealth" என்று அர்த்தம், ஏனென்றால் "அமரா - Amara" வின் அகராதி யெழுதிய கிரந்தகர்த்தா "ரிக்தா, தன, வசு - Riktha, Dhana and Vasu" என்னும் பதங்களின் அர்த்தமெல்லா மொன்றுதானென்று சொல்லுகிருர். ஒரு குடும்பத்திற்கு தத்தாய் போகப்பட்டவன் "கோத்ரம், பிண்டம்" என்பதைக் கொண்டுபோனவனுகமாட்டான்; ஏனென்றுல் அவன் கொடுக்கப்பட்ட பிண்டம் அவனைப்பெற்ற சொந்த தகப்பனுக்குப் போய்ச் சேராது. பிண்டம் என்பது கோத்ரத்தையும், ரிக்தத்தையும் பொட்டினதாகையால் தத்து போகப்பட்டவன் அவன் பிறந்த அவனுடைய சொந்த தகப்பனுக்கு "ஸ்வதா-Swadha" என்னும் "ஸ்ராத்தம்-Sraddha" செய்வதற்கு யோக்கியதை யுள்ளவனுகான். ஆகையால் இதன் மொத்தக்கருத் தென்னவெனில் தத்துபோகப்பட்டவன் "கோத்ரம், ரிக்தம், பிண்டம்," இவைகளுக்கு ஹக்குள்ளவனுகான். ஒருவனுக்கு "ஔரச, க்ஷேத்ரஜா - Aurasa, Kshetraja" புத்திரர்களில்லாவிடில் பத்துவித பிள்ளைகளுண்டென்று "கோவிந்தா-Govinda" என்பவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிருர்; ஆகையால் இவ்விதமான ஔரச, க்ஷேத்ரஜா புத்திரர்களில்லாவிடில் தத்து புத்திரனுக்கு தத்தெடுத்துக்கொண்ட தகப்பனுடைய சொத்துக்கு ஹக்குண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி சொல்வது சரியல்ல; ஏனென்றுல் இவ்விதமான ஔரச, க்ஷேத்ரஜா, புத்திரர்களிருந்தாலும் தத்துபோகும் "தத்ரிமா - Datrima" புத்திரன்தான் சொத்துக்கு சுதந்தரவாளியாய் ஸ்திதியை யடைவானென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிக்கில்லாவிடில் கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் 141-வது விதியில் தத்ரிமா புத்திரன் என்று கூறப்பட்டிருக்கும் விதி நிஷ்பிரயோஜனமாய்விடும். ஆகையால் ஔரச புத்திரன் ஒருவனிருந்திடினும் "தத்ரிமா - Datrima" புத்திரன் தான் தத்தெடுத்துக்கொள்ளப்பட்டவனுடைய சொத்தை அடைவானென்று இந்த கிரந்தத்தில் நிபந்தனை செய்யப்பட்டிருப்பதாயும் அப்படிக்கில்லாவிடில் அந்த நிபந்தனை யாதொரு பயன்படாமற் போகுமென்பதாயும் "மேதாடிதி - Medhatithi" என்பவர் சொல்லுகிருர்.

நந்தனு என்பவரின் வியாக்கியானம்-Commentary of Nandana:—"தத்ரிமா - Datrima" புத்திரன் அவன் பிறந்த சொந்த தகப்பனுடைய "கோத்ரத்தையும், ரிக்தத்தையும் - Gotra and Riktha" அடையாமல் அவன் எந்த குடும்பத்திற்கு தத்தாகப் போகின்ருனே அந்த குடும்பத்தின் "கோத்ரத்தையும், ரிக்தத்தையும்" அடையவேண்டியவனுவானென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு காரணம் மேற்படி கிரந்தத்தின் பின்பாதியில் காணலாம்; அதாவது:—

பிண்டம் கொடுப்பதற்கு யோக்கியதை யுள்ளவன்தான் "கோத்ரத்தையும், ரிக்தத்தையும் - Gotra and Riktha" அடைவானே யல்லாமல் மற்றப்படி யாரும் அதைப் பெறுவதற்கு ஹக்குள்ளவர்களாகார்கள். ஆகையால், ஒருவன் அவனுடைய புத்திரனை இன்னொரு குடும்பத்திலுள்ளவனுக்கு தத்தாக கொடுத்துவிடுவானுகில் அப்படி தத்தாய் கொடுக்கிறவனுக்கு தத்துபோய்விட்டவன் பிண்டம் முதலானது கொடுக்க யோக்கியதையுள்ளவனுகான்.

[இன்னும்வரும்.]

MADRAS LEGISLATIVE COUNCIL.

சென்னை சட்ட நிரூபண சபை.

நாளது 1917-ம் ஹூ பிப்ரவரிமீ 6உ ஷை சபை கூடியதில் கனம்பொருந்திய மெம்பர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு காருண்யகவர்ன்மெண்டார் சொன்ன மறுமொழிகளும், நமக்கு முக்கியமாய் வேண்டியவைகளை இதனடியிற் காணலாம்.

—○(:o:)○—

குறிப்பு:—கேள்வி கேட்டவர்களின் பெயரை அந்தந்த கேள்வியின் தலைப்பில் காணலாம்.

மேற்படி சபையில் ஆஜராயிருந்த மெம்பர்களின் பெயர்கள்:—(1) Sir. P. S. சிவசாமி ஐயர், (2) Sir. அலெக்ஜாண்டர் கார்டியூ, (3) Mr. H. F. W. கில்மான், (4) சர்ஜன் ஜெனெரல் W. B. பானெர்மான், (5) Sir. ராபெர்ட் க்லெக், (6) Messrs. J P. பெட்போர்ட் (7) R. A. க்ரெஹாம், (8) L. E. பக்லி, (9) A. R. நாப், (10) கர்னெல் W. M. எல்லிஸ், (11) Mr. M. E. கௌச்மான், (12) Mr. S. B. பர்ரே, (13) திவான் பஹதூர் P. ராஜகோபாலாசாரியார், (14) Messrs. S. ஸ்ரீனிவாச ஐயங்கார், (15) J. H. ஸ்டோன், (16) C. G. டாடண்டர், (17) ஆர்க்காட்நபாப் (இளவரசர்) (18) The Most Reverend J. எலென், (19) Mr T. ரிச்மாண்ட், (20) Sir. ப்ரான்ஸின் ஸ்ப்ரிங், (21) ராவ்பகதூர் சூரியநாராயணமூர்த்தி நாயுடு, (22) செருகோடா ஜெமீன்தார், (23) பொப்பிலி ராஜா, (24) Mr. T. ரங்காச்சாரி, (25) The Rev. G. பிட்டென்டிரிச், (26) Mr. A. சூரியநாராயணராவ், (27) ராவ்பஹதூர் M. ராமச்செந்திரராவ், (28) Mr. A. S. கிருஷ்ணராவ், (29) Mr. P. S. சிவராவ், (30) திவான்பஹதூர் A. சுப்பராயலுரெட்டி (31) Mr. B V. நரசிம்ம ஐயர், (32) Mr. K. சதாசிவபட், (33) ராவ்பஹதூர்

ராமானுஜாசாரி, (34) Mr. K. ராமய்யங்கார், (35) Mr. K. R. V. கிருஷ்ணராவ், (36) ராமநாதபுரம் ராஜா, (37) Mr. B. வெங்கடபதிராஜு, (38) Mr. K. சிதம்பரனாத முதலியார், (39) Mr. K. குமாரன் ராமன் கவ்லப்பரமுப்பில் நாயர், (40) யக்குப்ஹுசேன் சாஹிப் பஹதூர், (41) கான்பகதூர் A. T. G. M. ஆமெட் தம்பி மரக்காயர் சாஹிப் பஹதூர், (42) Mr. கார்டன் ப்ரேஸர் (43) Mr. G. H ஹெக்கின் பாதெம், (44) Mr. E. F. பார்பெர்.

புதிய மெம்பர்கள்.

(1) கனம்பொருந்திய Mr. A. R. நாப், (2) கனம்பொருந்திய Mr. C. H. ஹெக்கின்பாத்தெம் இவர்கள் பிரமாணம்செய்து அவர்களுடைய அந்தஸ்தை ஒப்புக்கொண்டார்கள்.

Madras High Court Judges.
மதராஸ் ஹைகோர்ட்டு ஜட்ஜுகள்.

16-வது வினு:—Mr. T. K. ராமானுஜாசாரியார்.—(a) மதராஸ் ஹைக்கோர்ட்டிலிருக்கும் டெம்பொரெரி ஜட்ஜுகளை எடுத்துவிட்டு காயமான ஜட்ஜுகள் எத்தனைபேரிருக்கவேண்டுமென்பதைப்பற்றி ஸ்டேட் செக்ரிடெரியினிடத்திலிருந்து யாதேனும் உத்தரவு வந்ததா (b) அப்படி உத்தரவுகள் வந்திருந்தால் அவைகளை சபையாருக்குத் தெரிவிக்கக்கூடுமா அல்லது அவைகளை அச்சிட்டு வெளியிடக்கூடுமா?

16-வது விடை:—மதராஸ் ஹைக்கோர்ட்டில் காயமாய் இத்தனை ஜட்ஜுகளிருக்கவேண்டுமென்பதைப்பற்றி இன்னும் ஆலோசனை செய்துக்கொண்டிருக்கிறார்கள்.

Acts Assented to.
அங்கீகரிக்கப்பட்ட ஆக்டுகள்.

1916-ம் ஹூத்திய மதராஸ் சிட்டி சிவில் கோர்ட், ப்ரெஸிடென்ஸி ஸ்மால்காஸ்கோர்ட் ஆக்டுகளை திருத்துவதற்கான ஆக்டுகள் சென்ற நவம்பர்மீ 21உ கூடிய சபையில் சட்டமாய் மஞ்சூர் செய்துக்கொள்ளப்பட்டு அவைகளை ஆலோசனசபையிலுள்ள மாட்சிமைதங்கிய கவர்னர் அவர்களால் சென்ற டிசம்பர்மீ 12உ அங்கீகரிக்கப்பட்டதென்று கனம்பொருந்திய செக்ரிடெரி அவர்கள் தெரிவித்தார். அவைகள் சென்ற டிசம்பர்மீ 30உ மாட்சிமைதங்கிய கவர்னர் ஜெனரல் அவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டதென்று சட்டநிருபண சபையின் சபாநாயகர் தெரிவித்தார்.

ஷை சிட்டி சிவில்கோர்ட், ப்ரெஸிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்டுகளை திருத்துவதற்கான ஆக்டுகளை இதனடியில் அச்சிட்டிருக்கின்றோம்.

MADRAS ACT No. V. OF 1916.

சென்னப்பட்டணம 1916-ம் ஹூத்து 5-வது. ஆக்ட்.

AN ACT TO AMEND THE PRESIDENCY SMALL CAUSE COURTS ACT, 1882, AND THE MADRAS CITY CIVIL COURT ACT, 1892.

1882 - ம் ஹூத்து ப்ரேஸிடேன்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டேகளாக்டையும், 1892-ம் ஹூத்திய சேன்னை ராஜதானிப் பட்டணத்து ஸிவில்கோர்ட் ஆக்டையும் திருத்துவதற்கான ஆக்ட்.

சில விவரங்களில் 1892-ம் ஹூத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து ஸிவில்கோர்ட் ஆக்டையும், மதராஸ் ப்ரெஸிடென்ஸிக்குச் சம்பந்தப்படுகிறவரையில் 1882-ம் ஹூத்து ப்ரெஸிடென்ஸீ ஸ்மால்காஸ் கோர்ட்டுகளாக்டையும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும், ஷை ஆக்டுகளை அந்தப்படி திருத்துவதற்காக, இந்தியா கவர்ன்மென்டாருடைய 1915ஹூத்து ஆக்ட் 79-வது பிரிவைச்சேர்ந்த 2-வது உட்பிரிவில் சொல்லியிருக்கிறபடி, கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால்:—

1. இந்த ஆக்டை, சென்னை ராஜதானிப் பட்டணத்து ஸிவில் கோர்ட்டையும் ப்ரெஸிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டுகளையும்பற்றிய 1916-ம்ஹூத்து திருத்துவதற்கான ஆக்டென்று சொல்லலாம்.

2. 1882-ம் ஹூத்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டுகளாக்டிலும், 1892-ம் ஹூத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து ஸிவில் கோர்ட் ஆக்டிலும் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்டாரால் பரிசீலனை செய்யப்படக்கூடியவைகளாய் வியாஜ்ஜிய விஷயத்தின் மதிப்பு அல்லது தொகை ஆயிரம் ரூபாய்க்கு அதிகப்படுகிற சகல வியாஜ்ஜியங்களையும், வாதி இஷ்டப்படுகிற பட்சத்திலே, சென்னை ராஜதானிப் பட்டணத்து ஸிவில் கோர்ட்டில் கொண்டுவரலாம்; 1892-ம் ஹூத்திய சென்னை ராஜதானிப் பட்டணத்து ஸிவில் கோர்ட் ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி அப்படிப்பட்ட வியாஜ்ஜியங்களைப் பரிசீலனை பண்ணி பைசல்செய்ய ஷை கோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டு.

3. (1) 1882-ம்ஹூத்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டுகளாக்டிலும், 1892-ம் ஹூத்திய சென்னை ராஜதானிப் பட்டணத்து ஸிவில் கோர்ட் ஆக்டிலும் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, 1882-ம்ஹூத்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டுகளாக்டில் குறிப்பிடப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்தில், அந்த ஆக்டின் 39-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி சென்னையிலுள்ள ஹைக்கோர்ட் ஆவ் ஜடிகேசர் என்னும் நீதிவிவகார விசாரணைநடத்தும் ஹைக்கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துக்கொள்ளப்படாமல், அந்த ஹைக்கோர்ட்டார் - ஷை வியாஜ்ஜியத்தைத் தங்களுடைய சொந்தகட்டுக்குக் கொண்டுவரலாம். அல்லது அதை சென்னை ராஜதானிப்பட்டணத்து ஸிவில் கோர்ட்டுக்கு மாற்றலாம்.

(2) மேலேகண்டபடி யாதொரு வியாஜ்ஜியத்தை சென்னை ராஜதானிப் பட்டணத்து ஸிவில் கோர்ட்டுக்கு மாற்றும்படி உத்தரவுசெய்யப்படாமல் 1882-ம் ஹூத்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டுகளாக்ட் 39-வது பிரிவைச்சேர்ந்த, 2, 3, 4-வது உட்பிரிவுகளிலும் 40-வது பிரிவிலும் கண்ட நிபந்தனைகள்-அவசியமான மாறுதல்களுடனும், சென்னை ராஜதானிப்பட்டணத்து ஸிவில் கோர்ட்டின் திரவிய விஷயமான அதிகார வரம்புகளுக் குட்பட்டும், பிரயோகப்படும்.

OUR LAW COLLEGE.
எங்களுடைய சட்ட கலாசாலை.

எங்களுடைய சட்ட கலாசாலையின் புரொபசர் வ. நாதமுனி முதலியார்.

அவருடைய சிஷ்யர்களுடைய பெயர்கள்:—

1 அனந்தாச்சாரி, 2 சக்ரவர்த்தி ஐயங்கார், 3 துரைசாமி முதலியார், 4 பட்டாசாரியார், 5 தணிகாசல முதலியார்.

HINDU LAW.—ஹிந்து லா.

மாணுக்கர்கள்:—காலைவந்தனம்.—நமஸ்காரம், ஐயா!

புரோபஸர்:—நீங்கள் எல்லோரும் அதிசீக்கிரத்தில் சட்ட ஞானமடைந்து பாக்கியவந்தராய் தேக சௌக்கியத்துடன் நம்மை ரக்ஷிப்பவராகிய ஜெகதீசனருளினால் நீடித்தகாலம் ஜீவித்திருப்பதற்கான ஆயுள் பெற்று வாழ்ந்திருப்பீர்களென்று நான் நம்முடைய கடவுளை மனப்பூர்வமாய் துதிக்கின்றேன்,

மா:—ஆரியர்களென்று சொல்லப்படும் நம்மினத்தோராகிய ஹிந்து ஜனங்களுக்குள் நேரிடும் குடும்ப விவகாரமான வியாஜ்ஜியங்களைப் பரிசிலனைசெய்வதற்கான சட்டம் யாதோ அதை எங்களுக்கு வியாக்கியானத்துடன் தெளிவாய்ச்சொல்லுவீர்களென்று பிரார்த்திக்கின்றோம், ஐயா.

பு:—நம்முடைய முன்னோர்களும் நாமும் அனேக ஆண்டுகளாக தொன்று தொட்டு வாசம் செய்யும் இந்த இந்தியா தேசத்தை ஆளும் இங்கிலீஷ்காரர்கள் நமக்கு ஏற்கனவே செய்துவரும் அநேக சுகிர்தமான நற்செய்கைகளில் ஒன்றாகிய நியாயபரிபாலனம் செய்வதற்கான ஸிவில், கிரிமினல், ரெவினியூ முதலான விஷயங்களைப் பற்றி அவர்கள் அப்போதைக்கப்போது புது-புது, சட்ட திட்டங்கள் செய்துவருகின்றார்களல்லவா? அதைப் போலவே நம்முடைய ஹிந்து ஜனங்களின் குடும்பங்களுக்குள் சகஜமாய் நேரிடும் (1) மதாசாரவிஷயங்களிலும் (2) ஸ்ரீதனம் (Stridanam) 2 (a) ஸ்வீகாரம்-தத்து (Adoption), 2 (b) பாகம் (Partition), 2 (c) விவாகம் (Marriage)முதலான குடும்பவிஷயங்களிலும், ஹிந்து ஜனங்களாகிய நம்மினத்தாருக்குள் நீடித்தகாலமாய் வழங்கி தொன்று தொட்டு அனுஷ்டானத்திலிருந்து வந்த ஹிந்து நீதிமொழிகளாகிய தர்மசாஸ்திரங்களையேநமக்கு சட்டங்களாக ஒப்புக்கொண்டு மேலேசொல்லப்பட்டிருக்கும் காலத்தில் ஷை ஸிவில், கிரிமினல் கோர்ட்டார்கள் நீதிமொழிகளாகிய அந்த தர்மசாஸ்திரங்களடங்கிய "ஹிந்துலா - Hindu Law" என்று சொல்லப்படும் சட்டத்தையனுசரித்தே அப்படிப்பட்ட வியாஜ்ஜியங்களில் தீர்மானம் செய்துவருகின்றார்கள்.

மா:—அப்படிப்பட்ட நீதிமொழிகளாகிய பழய தர்மசாஸ்திரங்கள் இன்னின்னவைகளென்று எங்களுக்கு நன்றாய் புலப்படும்படி வியாக்கியானத்துடன் தயவு செய்து சொல்வீர்களென்றுகேட்டுக்கொள்ளுகிறோம், ஐயா.

பு.— ஷை கோர்ட்டுகளில் நடந்தேறிவரும் நடவடிக்கைகளுக்கும், தீர்மானங்களுக்கும் ஆதாரமாயுள்ள ஸ்மிருதிகளாகிய (Smiritis) வேதங்கள் முதலான மூலப்பிரமாணங்களை யனுசரித்தே ஷை தர்ம சாஸ்திரங்களை செய்திருப்பதாக ஸ்மிருதிகர்த்தர்கள் சொல்லுகிறார்கள். அப்படிக்கிருந்திடினும் விவகாரங்களில் பிரயோகிக்கப் படவேண்டிய விதிகள் இன்னவையென்று பெரும்பாலும் வேதங்களில் சொல்லப்படிராததை நோக்கி ஸ்மிருதிகர்த்தர்கள் அவரவர்கள் ஜீவித்திருந்த காலங்களில் மாமூலாய் வழங்கி அனுஷ்டானத்திலிருந்துவந்த ஆசாரங்களை யொட்டியே தர்ம சாஸ்திரகிரந்தங்களை எழுதியிருப்பார்களென்று யூகிக்கத்தக்கதாயிருக்கிறது.

மா:—தாங்கள் மேற் கூறிய ஸ்மிருதிகள் எத்தனையுண்டோ அவைகளையும் அவைகளின் பயன்களைப்பற்றியும் எங்களுக்குச் சொல்லுங்கள், ஐயா.

பு:— ஸ்மிருதிகள் அநேகமிருக்கின்றன, அவைகளாவன:—மூலகிரந்தங்களாகியமனு (Manu), யாக்ஞவல்கியர் (Yagjnavalkiya), நாரதர் (Naradar), வசிஷ்டர் (Vasishtar), கௌதமர் (Gautamar), போதாயனர் (Bodhayanar), ஆபஸ்தம்பர் (Apasthambar), யமர் (Yamar), ஆங்கிரஸர் (Angeerasar), அத்திரி (Athiri), தக்ஷர் (Dhatchar), தேவலர் (Thavalar), சங்கர் (Sankar), லிகிதர் (Ligithur), காத்தியாயனர் (Kathiyayanar), பிருகஸ்பதி (Biruguspathi), வியாசர் (Vyasar), பராசரர் (Parasarar), முதலான மஹாரிஷிகளுடைய கிரந்தங்கள் பண்டைகாலத்தில் அநுஷ்டானத்திலிருந்து வந்தது. ஆனால் தற்காலத்தில் முதல்செப்பிய மனு (Manu), யாக்ஞவல்கிய (Yagjnavalkiya) ஸ்மிருதிகள் மாத்திரம் பெரும்பாலும் விசேஷமாய் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. மற்றஸ்மிருதிகளில் சிலதில்முழுவதும், சிலதில் சில பாகம்மாத்திரம் ரத்தாய்விட்டன.

மா:—ஐயா, தாங்கள் மேற்கூறிய ஸ்மிருதிகளின் பலாபலனை எங்களுக்கு விளங்கச் சொல்லுங்கள்:—

பு:—ஹிந்துக்களுடைய சாஸ்திரங்களெல்லாம் ஆதியில் சம்ஸ்கிரத பாஷையில் எழுதப்பட்டிருந்ததால் அவைகளை வாசித்து அவைகளின் பொருளைசரியாய் கண்டறிவது நன்றாய்க்கற்றுணர்ந்த பண்டிதர்களுக்குக்கூட கஷ்டமாயிருந்தபடியால் அவைகளை பல பண்டிதர்கள் பலவிதமாய் வெவ்வேறு அர்த்தம் செய்துவந்தார்கள். ஆகையால் தற்காலத்தில் பழய ஸ்மிருதிகளையே அநுசரிக்காமல் நன்றாய் கற்றுணர்ந்த பெரிய வித்வான்கள் அவைகளை எவ்விதமாய் அர்த்தம் செய்து அவைகளை யொட்டியேசெய்திருக்கும் வியாக்கியானங்களை இப்பொழுது ஆதாரமாய்க்கொண்டு விவகாரங்களைப் பைசல் செய்து வருகின்றார்கள். மேற்கண்ட ஸ்மிருதிகள் செய்யப்பட்டதின்பின் ஜனங்கள் அவரவர்களுடைய ஆசாரங்களில் தினைதினை வெவ்வேறு விதமாய் மாறுதல்கள் செய்துவந்தார்களாதலால் ஸ்மிருதிகர்த்தர்கள் தங்களுடைய வாசிப்புத்திறமையினுலுள்ள யுக்தியைக்கொண்டு அந்த ஸ்மிருதிகளிலுள்ள சுலோகங்களுக்கு வெவ்வேறு அர்த்தம் செய்து அந்த ஸ்மிருதிகளை யநுசரித்தே சில கிரந்தங்களை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

மா:—இவ்விதமாய் ஸ்மிருதிகளின் பேரில் வியாக்கியானங்களெழுதி கிரந்தங்கள் செய்தவர்களுடைய நாமதேயங்களை எங்களுக்குச் சொல்லுங்கள், ஐயா.

பு:—மேற்கூறிய பழய ஸ்மிருதிகள் எல்லாவற்றிலும் மனு ஸ்மிருதி (Manusmriti), மிக்க விசேஷமானதென்று பாவிக்கப்பட்டு மற்ற ஸ்மிருதி கர்த்தர்கள் கூட மேபடி மனு ஸ்மிருதியை தங்களுடைய ஸ்மிருதிகளில் ஆதாரமாய்க் கண்டிருக்கின்றார்கள். மேற்கூறிய மனு ஸ்மிருதியின்பேரில் அநேக வித்வான்கள் வியாக்கியானங்கள் எழுதியிருக்கின்றார்கள். அவர்களில் குல்லூகபட்டரால் (Kulluka Battar) செய்யப்பட்டுள்ள வியாக்கியானங்கள் மிக்க சிலாகித்து சொல்லத்தக்கவை. இது இப்படியிருக்க "யாக்ஞவால்கியா (Yagjnavalkiya) ஸ்மிருதியின் பேரில் விக்கியானேசுவரர் (Vigyaneswarar)" என்னும் மஹாயோகீஸ்வரர் சுமார் 7, 8, நூற்றாண்டுகளுக்கு முன் "மிதாக்ஷர (Mithakshara), மென்னும் வியாக்கியானத்தை எழுதியிருக்கின்றார். அந்த மிதாக்ஷர மென்னும் வியாக்கியானம் இப்பொழுது இந்த தேசத்திலுள்ள மாகாணங்களில் "பங்காளா (Bengal) என்னும் பிரதேசத்தைத்தவிர மற்ற மாகாணங்களிலெல்லாம் ஆதாரமாய் அநுசரிக்கப்பட்டு வருகின்றது.

மா:—இன்னும் மற்ற ஸ்மிருதிகளின் பேரிலும் வியாக்கியானங்கள் செய்தவர்களாரோ அவர்களுடைய நாமதேயங்களையும் எங்களுக்குத் தயவு செய்து சொல்லுங்கள், ஐயா.

பு:— மாதவாசாரியார் (Madhavachariar) என்பவர் "பராசரஸ்மிருதி" (Parasarasmriti) யின்பேரில் "மாதவியம்" (Madhaviyam) என்கிறவியாக்கியானம் செய்திருக்கிறார். கிருதயுகத்துக்கு "மனுஸ்மிருதி"யும், கலியுகத்தில் பராசரஸ்மிருதியும் செய்யப்பட்டதாம். பராசரஸ்மிருதி கலியுகத்துக்கு முக்கியமான ஆதாரமென்று சொல்லிடினும் "யாக்ஞவல்கிய" (Yagjnavalkiya) ஸ்மிருதி எல்லா ஸ்மிருதிகளிலும் மிக்க விசேஷமானதாக பாவிக்கப்படுகின்றது.

மா:—தாயபாக (Dhayabagha) ஸ்மிருதியைப்பற்றி எங்களுக்குத் தெரியச்சொல்லுங்கள், ஐயா.

பு:—சுமார் 500 வருஷங்களுக்குமுன் ஜீமுதவாகனர் (Jimuthavahanar) என்வர் பங்காள (Bengal) மகாணத்தில "மிதாக்ஷரத்தை" (Mitakshara) பிரயோகிக்காமல் அதைக் கண்டித்துவிட்டு அந்த மாகாணத்தில் நடந்தேறிக்கொண்டு வந்த ஆசாரங்களை யநுசரித்து பங்காளத்தி (Bengal) ற்கென்று தனியாய் "தாயபாக" கிரந்தத்தை தகுந்த ஆதாரமாக செய்திருக்கிறார்.

மா:—இந்தியாவிலுள்ள மகாணங்களெல்லாவற்றிலும் எந்தெந்த கிரந்தங்கள் செலாவணியாய்க் கொண்டிருக்கின்றனவோ அவைகளை எங்களுக்கு விளங்கச் சொல்லுங்கள் ஐயா.

பு:—மேற்கூறிய "மிதாக்ஷர" "தாயபாக" கிரந்தங்களுடன் சில மாகாணங்களில் வெவ்வேறு சில கிரந்தங்களும் பிரயோகிக்கப்படுகின்றன. அப்படியேற்பட்டிருக்கும் வேறு சில கிரந்தங்களெல்லாம் "மிதாக்ஷர, தாயபாக" கிரந்தங்களுக்குப்பின் செய்யப்பட்டதாயிருந்திடினும் அவைகள் சில விஷயங்களில் பேதப்படுகின்றன.

பங்காள மாகாணத்தில் "தாயபாக"த்தோடுகூட "ரகுநந்தனரால் (Ragunandhana) செய்யப்பட்ட தாயதத்துவமென்கிற கிரந்தமும், ஸ்ரீகிருஷ்ண தர்க்காலங்காரால் (Srikrishnatharkalankar)" தாயக்கிரம சங்கிரகமென்கிற கிரந்தமும், ஜகன்னாதரால் (Jagannadhar)செய்யப்பட்ட விவாத பங்கார்ணவம் (Viaydhabangarnavam) என்கிற கிரந்தமும் ஆதாரமாக செலாவணியாய்க் கொண்டிருக்கின்றன; ஆனால் பங்காள மாகாணம்தவிர மற்றெல்லா மாகாணங்களிலும் ராஜதானிகளிலும் "மிதாக்ஷர"மே முக்கியமான ஆதாரமாக செலாவணியாய்க் கொண்டிருந்தாலும் அதனுடன் (மிதாக்ஷரத்துடன்) ஆதாரமாய்ப் பிரயோகிக்கப்பட்டுவரும் கிரந்தங்கள் சில மாகாணங்களில் வித்தியாசப்படுகின்றன.

தென் இந்தியாவிலுள்ள சென்னை ராஜதானியில் (Madras Presidency) தேவானந்த பட்டரால் (Dhevananda Battar) செய்யப்பட்டஸ்மிரிதிசந்திரிகை (Smriti Chandrika), பிரதாபருத்திரர் (Prathaparudrar) என்பவரால் செய்யப்பட்ட ஸரஸ்வதீ விலாஸம் (Sarasvathivilasam), மாதவரால் (Madhavar) செய்யப்பட்ட "தாயவிபாகம் (Dhayavibagam)" வரதராஜரால் (Varadarajar) செய்யப்பட்ட வியவகாரநிர்ணயம் (Vyavaharanirnayam) என்னும் கிரந்தங்களும் "மிதாக்ஷர"த்துடன் தகுந்தஆதாரங்களாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. (12 மூ-இ-அ-12-M-I-A-43-வது பக்கம் பார்க்கவும்.)

வடஇந்தியா அதாவது மேலிந்தியா என்று சொல்லப்படும் பம்பாய் ராஜதானியில் (Bombay Presidency) நீலகண்டரால் செய்யப்பட்ட வியவகாரமயூகம் (Vyavakaramayuka) என்கிற கிரந்தம் "மிதாக்ஷரத்துடன்" ஆதாரமாய் செலாவணியாய்க் கொண்டிருக்கிறது. மகாராஷ்ட்ரம், வடகன்னடதேசங்களில் "மிதாக்ஷரமே" முக்கியமான ஆதாரமாய் செலாவணியாய்க் கொண்டிருக்கின்றது. குஜருத்திலும் (Guzerat), பம்பாய்பட்டணத்திலும் (Town Bombay) "வியவகாரமயூகம் (Vyavaharamayuka)" என்னும் கிரந்தம் மிதாக்ஷரத்தைவிட விசேஷமான ஆதாரமாய் மதிக்கப்படுகின்றது. (இ. லா. ரி. 2 பம் 418 I L. R. Bom. 418.) வடகொங்கண தேசத்தில் கூட மிதாக்ஷரத்தைப் பார்க்கிலும் "மயூகமே" (Mayuka)" விசேஷமானதாக ஆதரிககப்பட்டு வருகின்றதென்றது. (இ-லா-ரி-3 பம் 353-I. L. R. 3 Bom. 353.)

காசிராஜ்ஜியத்தில் (Benares) "மிதாக்ஷரத்"தோடுகூட வீரமித்ரோதயம் "Viramitrodayam", "நிர்ணயசிந்து Nirnayasindhu" என்று சொல்லப்படும் கிரந்தங்களும் தகுந்த ஆதாரங்களாக செலாவணியாய்க் கொண்டிருக்கின்றன.

மிதில தேசத்தில் (Mithila) "மிதாக்ஷரத்துடன் "வாசஸ்பதி மிச்றர்" Vasaspathimisrar" என்பவரால் செய்யப்பட்ட "விவாத சிந்தாமணி (Vivathachinthamoni), வியவகார சிந்தாமணி (Viyavakara Chinthamoni) என்னும் கிரந்தங்களும் இன்னும் விவாதசந்திரிகை (Vivathachandrikai), ரத்தினாகரம் (Ruthnakaram) என்னும் கிரந்தங்களும் பிரயோகிக்கப்படுகின்றன. (12 மூ-இ-அ-134, 146; 12 M. I. A. 134, 146.)

"ஸ்வீகாரம் (Adoption)" விஷயங்களைப்பற்றிய கிரந்தங்களாகிய தத்தகசந்திரிகை (Dhathakachandrika), தத்தகமீமாம்ஸை (Dhathakameemamsai); இவைகளில் முன்செப்பிய " தத்தக சந்திரிகை " யென்பது பங்காள தேசத்திலும், தென்னிந்தியாவாகிய தக்ஷணத்திலும், பின் செப்பிய தத்தக மீமாம்ஸை யென்பது காசி ராஜ்ஜியத்திலும் பிரமாணங்களாகச் சொல்லப்படுகின்றன. மேற்செப்பிய கிரந்தங்கள் எந்தெந்த தேசங்களில் அனுஷ்டானத்திலிருந்து வருகின்றனவோ அவற்றை இதனடியிலுள்ள அட்டவணையில் காணலாம் :—

நெ.	செலாவணியாகும் மாகாணம்.	கிரந்தத்தின் பெயர்.	கிரந்தகர்த்தர்.
1.	தென்னிந்தியா யெனப்படும் தக்ஷண தேசம் (தமிழ் நாடு) (Deccan.) ...	1. மிதாக்ஷரம்	விக்ஞானேஸ்வரர்.
		2. ஸ்மிருதி சந்த்ரிகா ...	தேவாநந்தபட்டர்.
		3. ஸரஸ்வதிவிலாசம் ...	பிரதாப ருத்திரதேவர்.
		4 தாயவிபாகம்	மாதவர்.
		5. வியவகார நிர்ணயம் ...	வரதராஜர்.
		6. பராசரமாதவீயம் ...	வித்தியாரண்ணியர்.
		7. தத்தக சந்த்ரிகை ...	குபேரர்.
2.	மேலிந்தியாவெனப்படும் மகாராஷ்ட்ர தேசம் (Upper India.)	1. மிதாக்ஷரம் (வடகனரா) மஹாராஷ்ட்ர தேசங்களில் பெரும்பாலும் முக்கியமான ஆதாரமாய் வழங்கிவருகின்றன.	விக்ஞானேஸ்வரர்.
		2. வியவகார மயூகம் - குஜராத்தேசத்திலும், பம்பாய் பட்டணத்திலும் மிதாக்ஷரத்தைவிட விசேஷமானதாய் வழங்கி வருகின்றது. ...	நீலகண்டர்.
		3. தத்தக மீமாம்ஸை. ...	நந்தபண்டிதர்.
3.	பங்காள (Bengal) கவுட தேசம்.	1. தாயபாகம்	ஜீமுதவாஹனர்.
		2. தாயதத்துவம்	ரகுநந்தனர்.
		3. தாயக்கிரம சங்கிரஹம் ...	ஸ்ரீ கிருஷ்ணதர்க்காலங்காரர்.
		4. விவாத பங்கார்ணவம் ...	ஜகன்னாதர்.
		5. தத்தக சந்த்ரிகை ...	குபேரர்.
4.	காசி ராஜ்ஜியம்.	1. மிதாக்ஷரம்	விக்ஞானேஸ்வரர்.
		2. வீரமித்ரோதயம் ...	மித்திரமிச்சிரர்.
		3. நிர்ணயசிந்து	கமலாகரர்.
		4. தத்தகமீமாம்ஸை ...	நந்தபண்டிதர்.
5.	திருஹித் - வடபிஹாரெனப்படும் மிதிலதேசம். ...	1. மிதாக்ஷரம்	விக்ஞானேஸ்வரர்.
		2. விவாதசிந்தாமணி ...	வாசஸ்பதிமிச்ரர்.
		3. வியவஹாரா சிந்தாமணி ...	வாசஸ்பதிமிச்ரர்.
		4. விவாதசந்த்ரிகை ...	லக்ஷ்மிதேவி.
		5. விவாதரத்னாகரம் ...	சண்டேஸ்வரர்.
		6. தத்தக மீமாம்ஸை ...	நந்தபண்டிதர்.

(இன்னும் வரும்.)

DIALOGUE.

சம்பாஷணை.

இடம்:—மதராஸ் ஹைக்கோர்ட்டு—வக்கீலாபீஸ்.

போன்னம்பலம்:—வக்கீல் அவர்களே! காலை வந்தனம் ஐயா.

வக்கீல்:—காலை வந்தனம்; க்ஷேமந்தானே என்ன சமாச்சாரம்.

போ:—ஜெகதீசன் கிருபையாலும் உம்முடைய ஆசீர்வாதத்தாலும் க்ஷேமமே. சிவில் கோர்ட்டுகளில் சில நடவடிக்கைகள் நடத்த வேண்டியதாயிருக்கிறது அதன் விஷயமாய் சட்டம்யாதோ அதை எனக்குத் தயவுசெய்து தெரியச் சொல்லவேண்டுமென்று மிக்க வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன் ஐயா.

வ:—சிவில் கோர்ட்டுகளில் நடவடிக்கைகள் நடத்துவதற்காக 1908-ம்ஹு சிவில் புரோசிஜர்கோட் (Civil Procedure Code Act V of 1908) என்று ஒரு சட்டம் இருக்கிறது அதை வாசிப்பாயானால் எல்லா நடவடிக்கைகளும் நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம்.

போ:—அந்த சட்டத்திலுள்ள நிபந்தனைகளை எனக்கு வியாக்கியானத்துடன் தயவு செய்து சொல்லுங்கள் ஐயா.

வ:—சிவில புரோசீஜர் கோட் இதோ யிருக்கிறது, அதில் முதல் பிரிவை வாசியும்.

போ:—முதல் பிரிவு வாசிக்கப்பட்டது.

(1) இந்த சட்டம் 1908-ம் ஹுத்திய சிவில் புரோசீஜர் கோட் என்று சொல்லப்படும்.

(2) அது 1909-ம்ஹு ஜனவரிமீ 1உ முதற்கொண்டு அமுலுக்கு வந்து நடந்தேறிவரவேண்டியது.

(3) இந்த பிரிவும், 155 முதல் 158 வரையிலுள்ள பிரிவுகளும் பிரிட்டிஷ் இந்தியா முழுதிலும் வியாபிக்கின்றன; ஷை கோடிலுள்ள மற்ற பிரிவுகளெல்லாம் ஷெடூலில் விவரிக்கப்பட்டுள்ள ஜில்லாக்கள் தவிர, பிரிட்டிஷ் இந்தியா முழுவ வியாபிக்கின்றன.

வத்வான் கன்டோன்மென்ட் மிலிட்டெரி ஸ்டேஷன் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தைச் சேர்ந்தது தான் (திருக்கூவம் v. B. B. & C. I. Railway இ-லா-ரி 9 பம் 244; ஆகா v. கோஹென் இ-லா-ரி 13 கல் 221) ஒரிஸா (Orissa) மாகாணத்தின் ட்ரிபுடெரி மாஹால்ஸ்கள் பிரிட்டிஷ் இந்தியாவைச்சேர்ந்ததல்ல மட்டான் v. காட்டு இ-லா-ரி 29 கல் 400.

சிவில்புரொஸீஜர் கோடின்நிபந்தனைகள் ஏஜென்ஸி மாகாணங்களுக்கு (Agency tracts)ச் சம்பந்தப்படமாட்டாது (13 ம—லா—ஜ—ரி 15 ஜெய்ப்பூர் மஹாராஜா v. நீலாதேவி.)

சாந்தால் பர்கானஸ் (Santhal Parganas) மாகாணங்களில் ரூபாய் 1000க்கு அதிகமான வியாஜ்ஜியங்களுக்கு ஷை கோடின் நிபந்தனைகள் சம்பந்தப்பட்டவைதான். (டங்காரம் v. ராஜ்கிஷோரி. இ—லா—ரி—18 கல் 133).

வ:—இரண்டாவது பிரிவை வாசியும்.

போ:—2-வது பிரிவு வாசிக்கப்பட்டது:-இந்த ஆக்டின் முன்பின்தொடர்ச்சிக்கு விரோதமிருந்தாலொழிய மற்றபடிக்கு.—

(1) " கோட " (Code) என்றால் விதிகளென்றும் அர்த்தமாகும்.

(2) "டிக்ரி" (Decree) என்றால் ஒரு வியாஜ்ஜியத்தில் தகராராயிருக்கும் கட்சிதாரர்களுக்குச் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் முடிவான டிக்ரியென்றாவது அல்லது பிரதமடிக்ரியென்றாவது கடசியாய்ச்சொல்லப்படும் தீர்மானமென்று கூறப்படும். ஒரு பிராதை (Plaint) தள்ளிவிடப்படும் உத்தரவும்; 47 அல்லது 144-வது பிரிவின்கீழ் செய்யப்படும் உத்தரவும் இதில் அடங்கியதுதான்; ஆனால்,

(a) ஒரு உத்தரவின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீலென்று சொல்லப்படும் யாதேனும் ஒரு உத்தரவின்பேரில் அப்பீல் செய்துகொள்ளக்கூடியதாயிருந்தால் அப்படிப்பட்ட உத்தரவும்.

(b) கட்சிதாரர்களில் இருதரத்தாரும் ஆஜராகாமல் ஒரு வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்யும்உத்தரவும் இந்த பிரிவில் அடங்கினதல்ல.

விவரணம்:—ஒரு வியாஜ்ஜியத்தை அர்த்தகிரயமாய் பைசல் செய்வதற்குமுன் இன்னும் சில நடவடிக்கைகள் நடத்தவேண்டிய அவசிய மிருந்தால் அப்பொழுது அதை பிரதமடிக்ரி(Preliminary Decree) என்று சொல்லப்படும். அப்படி மேலுக்கு நடத்தவேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் நடத்தியபிறகு அது பூர்த்தியான டிக்ரியென்று சொல்லப்படும் ; ஒரு டிக்ரி பிரதம டிக்ரியாகவும் ; அது கடசியாய் பைசல் செய்யப்பட்ட பூர்த்தியான டிக்ரியாகவு மிருக்கலாம்.

"டிக்ரி" என்னும் பதத்திற்கு இந்தகோடில் சொல்லியிருக்கும் விவரணப் படிக்கு ரெவினியூ கோர்ட்டாருடைய "டிக்ரி" யென்று அர்த்தமாகாது. (ஆங்கார் v. பூப் இ-லா-ரி- 16 அ 496) 1869ம்ஹுத்திய 8-வது பங்காள ஆக்டின் 37-வது பிரிவின்கீழ் செய்யப்பட்ட உத்தரவு ஒரு "டிக்ரி" யென்றுதான் சொல்லப்படும் (புரோஜெந்தரோ v-கிருஷ்ணு-இ-லா-ரி-7-கல்684) மதராஸ் தீர்வை வசூல் செய்வதற்கான ஆக்டின் (Madras Rent Recovery Act) 27-வது பிரிவின்கீழ் செய்யப்படும் உத்தரவுகூட "டிக்ரி" யென்றுதான் சொல்லப்படும். பெருமாள் v. ராஜகோபால் இ-லா-ரி. 13 ம 248.

1863-ம்ஹுத்திய 20 வது ஆக்டின்(Act XX of 1863) 18-வது பிரிவின் கீழ் ஒரு தாவாவை தாக்கல் செய்துக்கொள்ளப்படா தென்று செய்யப்படும் உத்திரவு ஒரு " டிக்ரி "யல்ல (காஜெம் v. அஜீம் இ-லா-ரி 18 கல் 382)பெங்கால்டெனென்ஸி ஆக்டின் (Bengal Tenancy Act) 84-வது பிரிவின் கீழ் சிவில் கோர்ட்டாரால் செய்யப்படும் உத்தரவுகூட "டிக்ரி"யல்ல (பீரி v பசோட்ச இ-லா-ரி-19 கல் 485) ட்ரஸ்ட் ஆக்டின் (Trust Act) கீழ் ஒரு ட்ரஸ்டியை நீக்கிவிடலாகாதென்று செய்யப்படும் உத்தரவுகூட "டிகரி"யல்ல (நாத்து v-மெக்அபீ-இ-லா-ரி-19 அ 131) ஒரு கோர்ட்டின் உத்தரவை கீழ்ப்படிந்து நடக்காததற்காக கோர்ட்டார் தண்டனை செய்து பிறப்பிக்கும் உத்தரவுகூட "டிக்ரி"யல்ல (கோது v. சூரெஜ் இ-லா-ரி-27 அ 480) 1864-ம் ஹுத்திய 2-வது மதராஸ் ஆக்டின் (Madras Act II of 1864)40-வது பிரிவின் கீழ் சிவில் கோர்ட்டாரால் செய்யப்படும் உத்தரவுகூட டிக்ரியல்ல (சிதம்பரம் v. ராமசாமி-5 ம-லா-ஜ-ரி 91) இன்டெர் ப்ளீடெர் (Inter Pleader) வியாஜ்ஜியங்களில் பிரதிவாதிகளின் சுதந்தரங்களைப்பற்றி செய்யப்படும் தீர்மானம் ஒரு "டிக்ரி" யென்றுதான் சொல்லப்படும் (முஹாராஜ்சிங் v. சிட்டார் 4 அ-லா-ஜ 683) மதாச்சார சம்பந்தமாயுள்ள ஆக்டின் 18-வது பிரிவின்கீழ் (Religious Endowment Act.) ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவருவதற்காக செய்யப்படும் உத்தரவு "டிக்ரி" யல்ல (பொஜபர் அலி v. மிர்ஜா இ-லா-ரி 34 கல் 584.)

ஒரு " அட்மினிஸ்ட்ரேஷன் டிக்ரி "யென்று சொல்லப்படும் டிக்ரி ஒரு "டிக்ரி"யல்ல ஆனால் அது ஒரு பிரதம டிக்ரி யென்று சொல்லப்படும்-ஸ்ரீநாத் v. ராதாாத் இ-ல-ா-ரி 9 கல் 773, 777.

பாகப்பிரிவினை ஆக்டின் (Partition Act IV of 1893) 2, 3, அல்லது 4-வது பிரிவின் கீழ் விற்பனை செய்யும்படிக்குப் பிறப்பிக்கப்படும் உத்தரவு ஒரு "டிக்ரி" யென்றுதான் சொல்லப்படும். (1893-ம் வருஷத்திய 4-வது ஆக்ட் 8-வது பிரிவைப்பார்க்கவும்.)

சிவில் புரோசீஜர் கோட் 9-வது ஆர்டர் 2-வது ரூலின்கீழ் செய்யப்படும் உத்தரவு ஒரு "டிக்ரி" யல்ல (லக்கி v. புத்துன்னிசா இ-லா-ரி 9 கல் 627.)

சிலவுகள் விஷயமாய் செய்யப்படும் உத்தரவு "டிக்ரி" யல்ல (இ-லா-ரி 21 ம 421 ராமகிஸோர் v. ஸ்ரீரங்கா) வாதி அல்லது வாதியின்வக்கீல் ஆஜராகவில்லையென்று ஒரு வியாஜ்ஜியத்தை தள்ளுபடி செய்யும் உத்தரவு "டிக்ரி"யல்ல (மஹாராஜா v. லிங்கம் 12 ம-லா-ஜ-ரி 473 ; அம்ரிதோ v. ராம் இ-லா-ரி 29 கல் 60) யாதோ ஒரு பரிகாரமடைய வேண்டுமென்று கட்சிதாரருக்குள் சில விஷயங்களைப்பற்றி தீர்மானிக்கும்பொருட்டு நடத்தும் நடவடிக்கையில் ஏற்படும் லாப்பாயின்டின் விஷயமாய் செய்யப்படும் உத்தரவு " டிகரி" யல்ல (பெஹாரி v. கேடெர் இ-லா-ரி 18 கல் 469.

கட்சிதாரர்கள் விசாரணைதேதியில் ஆஜராகவில்லையென்று ஒரு அப்பீலை தள்ளுபடிசெய்யும் உத்தரவு "டிக்ரி"யல்ல (ஜெகர்நாத் v. புத்தன் இ-லா-ரி. 23 கல் 115), (அன்வார் v. ஜாபெர் இ-லா-ரி 23 கல் 827) ஆனால் (ராம்சந்த்ரா v. மாதெவ் இ-லா-ரி 16 பம் 23; ராதா v. சந்தி இ-லா-ரி. 30 கல் 660) புல்பெஞ்சு தீர்மானம் பார்க்கவும்.

அப்பீல் யாதாஸ்தை (Appeal Memorandum) தள்ளுபடிசெய்யும் உத்தரவு "டிக்ரி" யென்றுதான் சொல்லப்படும் (ஐயனு v. நாகபூஷணம் இ-லா-ரி 16 ம 285 டேனி ஜெமீன்தார் v. பீன்னயா இ-லா-ரி 22 ம 157.)

பாப்பராய் வியாஜ்ஜியம் செய்வதற்கு உத்தரவளிக்கும்படி கொண்டுவரப்பட்ட மனுவின் பேரில் அப்படிப்பட்ட உத்தரவளிக்கப்படமாட்டாதென்று செய்யப்படும் உத்தரவும்; ஒரு வியாஜ்ஜியத்தை பயிலிலிருந்து தள்ளுபடிசெய்துவிடப் படுமென்று செய்யும் உத்தரவும் "டிக்ரி" யென்றுதான்சொல்லப்படும் (பல்தியோ v. கூலா இ-லா-ரி 9 அ 129.)

ஆனால் ஒரு அப்பீல் யாதாஸ்தை சரியான கோர்ட்டில் தாக்கல்செய்யும்படிக்கு வாபஸ் செய்துவிடப்பட்ட யாதாஸ்தின்பேரில் செய்யப்பட்ட உத்தரவு "டிக்ரி" யல்ல (மாகாபீர் v. பிஹாரி இ-லா-ரி 13 அ 320.)

ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்டின் 87-வது பிரிவின்கீழ் கொதுவை மொத்தத்தைச் செலுத்துவதற்கு இன்னும் கொஞ்சகாலம் கொடுப்பதற்காகசெய்யப்படும் உத்தரவு (34-வது ஆர்டர் 3-வது ரூல்) ஒரு "டிக்ரி" யென்றுதான் சொல்லப்படும் (ரஹிமா v. நேபால் இ-லா-ரி 14 அ 520.)

ஒரு டிக்ரியை நிறைவேற்றுவதற்காக செய்துகொள்ளப்படும் மனுவை ஆட்சேபித்துகொண்டுவரப்படும் ஆட்சேபனை மனுக்களில் கட்சிதாரர்கள் ஆஜராகவில்லையென்று தள்ளுபடிசெய்யும் உத்தரவு ஒரு "டிக்ரி" யென்றுதான் சொல்லப்படும். (லால்நாராயண் v. மஹமத் இ-லா-ரி 28 கல் 81.)

ஒரு அப்பீலுக்கு காலாவதிதோஷம் நேரிட்டபிறகு கொண்டுவரப்பட்டதென்று அப்பீலை தள்ளுபடிசெய்யும் உத்தரவு " டிக்ரி" யென்றுதான் சொல்லப்படும் (13 ம-லா-ஜ-ரி 300 சாமிநாதா v. வெங்கடசுப்பா.)

ஒரு இன்ஸால்வென்ஸி மனுவில் ஒரு தாவாவை ராஜிசெய்யும்படிக்கு செய்யப்படும் உத்தரவு ஒரு "டிக்ரி" யென்றுதான் சொல்லப்படும். (ஹரிலால் இன்சால்வென்ஸி மனு 10 க-வீ-நோ 884.)

ஒரு தாவா ஒரு சோர்ட்டில் தாக்கல் செய்துகொள்ளப்பட மாட்டாதென்று உத்தரவு செய்யப்பட்டு அந்த உத்தரவின்பேரில் அப்பீல்செய்து அப்பீல்கோர்ட்டார் அந்த தாவாவை தாக்கல்செய்துகொண்டு விசாரணை நடத்தும்படிக்கு முதல் கோர்ட்டாருக்கு உத்தரவனுப்பினால் அப்படி அப்பீல்கோர்ட்டார் செய்த உத்தரவு ஒரு "டிக்ரி"யல்ல (பிரஜாலால் v. உபேந்த்ரா 6 கல்-லா-ஜ. 214.)

ஒரு வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட உத்தரவின்பேரில் அப்பீலுண்டா இல்லையா வென்பது கோர்ட்டின் அதிகாரவரம்பை யொத்ததே யல்லாமல் கேசின் சாராம்சத்தை யொத்ததல்ல (பெருமாள் v. வெங்கடராமா இ-லா-ரி 11 ம 130.)

[இன்னும்வரும்.]

MISCELLANEOUS SUITS.

நானாவிதமான வியாஜ்ஜியங்கள்.

KING'S BENCH DIVISION HIGH COURT OF JUSTICE.

மஹாராஜாவின் பெஞ்ச் டிவிஷன் என்னும் நியாய விசாரணை ஹைக்கோர்ட்.

18—1—17.

கெ. 2.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிட்லி. மிஸ்டர் ஜஸ்டிஸ் ஆவோரி.

லாப்பாயின்ட்:—(Fallen Trees on a high way-Liability) ஜனங்கள் போக்குவரவு செய்யும் ரஸ்தாவில் மரங்கள் விழுந்துகிடப்பதனால் ஜனங்களுக்கு நேரிடும் துன்பத்திற்காவது அல்லது நஷ்டத்திற்காவது அம்மரங்களுக்குச் சொந்தக்காரன் உத்தரவாதியாவானென்பது.

கேசின் விபரம்:—சென்ற 1915ஹு டிசம்பர்மீ 27உ பெருங்காற்றுமழையடித்து ஒரு குடியானவன் அனுபோகத்திலிருந்த மனையின்பேரில் நின்றுகொண்டிருந்த மரங்கள் முறிந்து ஜனங்கள் நடமாடும் பெரிய ரஸ்தாவில் விழுந்துகிடந்தன. வாதிகளாகிய ரெவரென்ட் (Rev.) H. K. ஹட்சன் என்பவரும் அவருடைய துரைசானியாகிய Mrs. மாட் ஹட்சனும் மறுநாள் ராத்திரி மோட்டார்பண்டியில் சவாரி செய்துகொண்டு போனபோது ரஸ்தாவில் விளக்குகளில்லாமல் மிக்க இருளாயிருந்தமையாலும் மோட்டார்பண்டியின் விளக்கு மரங்களின்மேல் பிரகாசிக்காததினாலும் அந்த மோட்டார்வண்டி அங்கே கீழ்முறிந்து விழுந்துகிடந்த மரங்களில் மோதி

உடைந்துபோனபடியால் மேற்செப்பிய வாதிகள் தங்களுக்கு அதனால் மிக்கநஷ்டம் நேரிட்டதென்றும் அந்த நஷ்டத்தை (அதாவது 130-பவுன்) பிரதிவாதியாகிய (அந்த மரங்கள் நின்றுகொண்டிருந்த நிலத்திற்குச் சொந்தக்காரனாகிய) குடியானவனிடத்திலிருந்து வசூல்செய்வதற்கு (பிஷப்ஸ் ஸ்ட்ராட்போர்ட் கவுண்டி கோர்ட்டில்-Bishops Stratford County Court) தாவாசெய்தார் ஷை கோர்ட்டின் ஜட்ஜ் வீலர் (Wheeler) என்பவர் பிரதிவாதிக்கு முன்னமேயே சொல்லியிருந்தும் அவன் அம்மரங்களை எடுக்காமலும் ஜனங்களுக்கு அப்படி விழுந்துகிடப்பதைப்பற்றி எச்சரிக்கைசெய்யாமலும் அவ்விடத்தில் ஒரு விளக்கு வைக்காமலும் அலட்சியமாயிருந்தவன்தானென்று தீர்மானம்செய்து பிரதிவாதியின்பேரில் 35-பவுனுக்கு டிக்ரிசெய்தார். அந்த தீர்மானத்தின் பேரில் பிரதிவாதியாகிய குடியானவன் மேற்படி ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டான்.

லாயர்கள் :—மிஸ்டர் ப்ராங்க் பிலிப்ஸ் (Mr Frank Philips)—வாதிதரப்பிலும், மிஸ்டர் R. W. டர்னர் (Mr. R. W. Turner)—பிரதிவாதியின் தரப்பிலும் ஆஜரானார்கள்.

மிஸ்டர் டர்னர் என்பவர் அம்மரங்கள் தெய்வீகமாய் விழுந்துவிட்டமையால் அதனால் நேரிட்ட தடங்கலை நிவர்த்திசெய்யும் தொழில் பிரதிவாதியினுடையதல்லவென்றும் ஆகையால் அந்த நஷ்டத்திற்கு அவன் ஜவாப்தாரியாகமாட்டானென்றும் வாதித்து 1835-ம் ௵த்திய ரஸ்தாக்களைப்பற்றிய சட்டத்தின் (Highways Act of 1835) 26-வது பிரிவின்படி ஜனங்கள் போக்குவரவாயிருக்கும் ரஸ்தாவில் விழுந்துகிடக்கும் மரங்களை எடுத்துவிடவேண்டிய பொருப்பு ரஸ்தாக்களை மேல்பார்வை பார்த்துவரும் உத்தியோகஸ்தர் தொழிலாகையால் அதைச் செய்யத் தவறிப்போவதினால் நஷ்டத்தைக்கேட்க தாவாகொண்டுவர வியாஜ்ஜியமூலமுண்டாகாதென்றும் அது ஒரு குற்றத்தைச் சுமத்தமாத்திரம்தான் இடம் கொடுக்குமென்றும் வாதித்தார். இந்த கேசில் இது சமாச்சாரம் பிரதிவாதிக்கு முன்னமேயே தெரிந்திருந்தபோதிலும் ரஸ்தாவில் ஜனங்கள் நடமாடுவதற்கு ஆடங்கமிருந்திடினும் அந்த தடங்கலை நிவர்த்திசெய்ய விளக்கு முதலானது வைத்து பந்தோபஸ்துசெய்யும் தொழில் நிலத்தை அனுபவிக்கும் குடியானவனுடையதுதானென்று சொல்வதற்கு நியாயமில்லை. இதற்காதாரமாய் அவர் பட்டர் பீல்ட் (Butterfield) v. பாரெஸ்டர் (Forester), ஈஸ்ட் 11 East 60 ; டேவிஸ் (Davies) v. மாண் (Mann) 10 Mand W. 546; நிக்கல்ஸ் (Nichols) v. மார்ஸ்லெண்ட் (Marsland) L. R. 10 Ex. 255 கேசுகளை எடுத்துக் கூறினர்.

மிஸ்டர் ப்ராங்க் பிலிப்ஸ் (Mr. Frank Philips):—என்பவர் அந்த மரங்கள் பிரதிவாதிக்குத்தெரியாமல் தெய்வீகமாய் விழுந்து பிரதிவாதியின் பராமரிக்கையாயில்லாவிடினும் அவைகள் ரஸ்தாவில் ஆடங்கமாயில்லாமல் அவைகளைச் சிலவுசெய்து எடுத்து நிவர்த்திசெய்யவேண்டிய தொழில் ஷை ரஸ்தாக்களின் ஆக்ட் (Highways Act) 65-வது பிரிவின் கீழ் பிரதிவாதியினுடையதுதானென்று சொல்லி அவன் வேணுமென்று அதை எடுக்காமல் விட்டுவிட்டவனாகிறானென்று வாதித்தார். அவன் அவைகளை உடனே எடுத்து நிவர்த்திசெய்வது கூடாமையான காரியமாயிருந்தபோதிலும் அவன் அவைகளை நிவர்த்திசெய்வது ஜனங்களுக்கு சௌகரியமாய் பந்தோபஸ்து செய்யவேண்டிய கடமை அவனுடையதுதானென்று வாதித்து, குல்லி (Gu!ly) v. ஸ்மித் (Smith) 12 Q. B. D. 121 கேசை தன்னுடையவாதத்திற்கு ஆதாரமாய் எடுத்துக் கூறினர்.

தீர்ப்பு:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிட்லி (Mr. Justice Ridly):—பிரதிவாதிக்கு தன்னுடைய நிலத்திலிருந்து சில மரங்கள் ரஸ்தாவில் விழுந்துவிட்டதென்று தெரிந்திருந்தும் அவைகளை எடுக்காமலிருந்ததினால் அவன் வாதிகளுக்கு நஷ்டம் கட்டிக்கொடுக்க பந்தப்பட்டவன்தானென்று கவுண்டி கோர்ட் ஜட்ஜ் அவருடைய தீர்மானத்தில் கண்டிருக்கிறார். ஆனால் அவர் அவ்விதமாய் தீர்மானம்செய்ததற்கு ஆதாரமான சாட்சியம் ஒன்றும் ரெக்கார்டில் கிடையாதென்று ஹைக்கோர்ட் ஜட்ஜ் அபிப்பிராயப்படுகிறார். அவ்விடத்தில் சதா விளக்குபோட்டு வைக்கவேண்டியதென்றாவது அல்லது ஒரு காவலாளியை வைக்கவேண்டுமென்பதாவது பிரதிவாதியினுடைய தொழில் அல்லவென்று கண்டு அவர் பிரதிவாதியின் அப்பீலை மஞ்சூர்செய்துக்கொண்டு தாவாவை தள்ளுபடி செய்துவிட்டார்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஆவோரி, (Mr. Justice Avory):—அவரும் அவ்விதமாகவே அபிப்பிராயம் கொண்டார். மரங்கள் விழுந்துவிட்டதற்கு பிரதிவாதி ஜவாப்தாரி அல்லவென்றும் கவுண்டி கோர்ட் ஜட்ஜ் கண்டிருப்பதின்படி பெருங்காற்றுமழையில் அம் மரங்கள் தெய்வீகமாய் விழுந்துவிட்டனவென்றும் அம் மரங்களை எடுத்துவிடும்படி ரஸ்தாக்களின் ஆக்ட்படிக்கு ரஸ்தாக்களின் சர்வேயர் பிரதிவாதிக்கு நோட்டீசு ஒன்றும் கொடுக்கவில்லையானதாலும் அவ்விடத்தில் விளக்கு போடாமலிருந்தது பிரதிவாதியின் அசட்டையல்லவென்றும் அவ்விடத்தில் காவல் வைக்கவேண்டிய தொழில் பிரதிவாதியினுடையதல்லவென்றும் கண்டு பிரதிவாதியின் அப்பீலை மஞ்சூர் செய்துக்கொண்டு தாவாவை தள்ளுபடி செய்துவிட்டார்.

Allahabad High Court.

அலஹபாத் ஹைக்கோர்ட்.

நெ. 3.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் டட்பால்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ராபிக்.

ரயில் வண்டியில் நடந்த களவு.

12-1-1917.

கேசின் விபரம்:—லக்னௌ பட்டணத்தில் மார்ட்டினியர் பெண்கள் பாடசாலையில் உதவி (Assistnat) உபாத்தியாயராயிருக்கும் மிஸ். ஜாக்ஸன் என்னும் துரைசானி பாரிலி என்னும் பட்டணத்திலிருந்து காத்கோடம் என்னும் பட்டணத்திற்கு ரயிலில் பிரயாணம் செய்யும்போது அவள் ரயிலில நித்திரைசெய்துகொண்டிருக்கையில் சாபிலால் என்பவன் ஒருவன் அவள் முகத்தைக் கவுந்து பார்த்துக்கொண்டிருந்தான். ஜாக்ஸன் துரைசானி விழித்துப்பார்த்தபோது அவள் எதிரி சாபிலாலைக்கண்டு அவனைத் தள்ளினாள் ஆனால் அவன் மறுபடியும் அந்த துரைசானியெதிரில்வந்து அவளிடத்திலிருந்த பணத்தைத் தரும்படி கேட்டான். அதன்பேரில் அந்த துரைசானி கூக்குரலிட்டபோது எதிரி அவளை முகத்தில் அடித்து அவளுடைய தலையணியின்கீழிருந்த பணப்பையை யெடுத்தான். அந்த பையிலிருந்த பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு பையை துடைத்து காலிசெய்துவிட்டு அவ்விடத்திலிருந்த ஒரு கைக்கெடியாரத்தையும், கொலுசையும் அவனுடைய ஜேபியில் போட்டுக்கொண்டான். அதன்பேரில் மிஸ் ஜாக்ஸன் துரைசானி ரயிலிலிருந்த அபாயச் சங்கிலியை இழுத்தாள் ஆனால் அது யாதொரு பயன்படாமல் வேலை செய்யவில்லை. எதிரி அவளைப்பார்த்து "இப்பொழுது நான் உன்னை விடமாட்டேன் உன்னைக் கொன்றுவிடுவேன்" என்று சொன்னான். அவள் பெருங்கூச்சலிட்டு வண்டியிலிருந்து வெளியே குதித்துவிட எத்தனித்தாள். அவாளிருவருக்கும் ஜடுதிநேரிட்டது. எதிரி ரயிலபண்டியின் கதவைத் திறந்து கால் வைத்து நிற்கும் பலகையின்மேல் நின்று கடசியாய் ரயில்பண்டியிலிருந்து கீழே இறங்கிவிட்டான். மிஸ். ஜாக்ஸன் என்பவள் தனக்கு சகாயம் செய்யும்படிக்கு கூக்குறளிட்டாள் அதிசீக்கிரத்தில் ரயில்பண்டி ஸ்டேஷனில் நின்றுவிட்டது. அவள் தனக்கு நேரிட்ட விபத்தை அங்கே சொன்னபோது எதிரியை பிடித்துக்கொண்டார்கள். இம்மாதிரியாகவே மிஸ்ஸெஸ் டி. லா. போசி என்பவள் ரயிலில் பிரயாணம்செய்யும்போது அவளிடமிருந்து திருடின சொத்துகளெல்லாம் அவனிடத்திலிருந்தன. பாரிலி ஸெஷன்ஸ்ஜட்ஜ் அவன் அந்த சொத்துகளைத்திருடி உபத்திரவம்செய்த குற்றவாளிதானென்று தீர்மானித்து அவனை ஆயுசுபரியந்தம் தீபாந்தர சிக்ஷைசெய்தார். அந்த ஸெஷன்ஸ் ஜட்ஜ் தீர்மானித்ததின்பேரில் கைதி அலஹபாத் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டான். ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகள் அவன் குற்றவாளிதானென்பதற்குச் சந்தேகமில்லையென்று சொல்லி அப்பீலைத் தள்ளிவிட்டார்கள். அவன் அதற்குமுன் ஒருதடவை இதேமாதிரியாக ரயில்பண்டியில் திருடின குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டு சிட்சையடைந்தவனென்று கண்டு அவனை இப்பொழுது தண்டித்தது மிக்க கடினமானதல்லவென்று தீர்மானித்தார்கள்.

Interesting Trusteeship Suit of Tinnevelly.

திருநெல்வேலியில் மனோஹரமான தர்மகர்த்துவ வியாஜ்ஜியம்.

நெ. 4.

29-1-1917.

திருநெல்வேலி சப்கோர்ட்டில் ஜனங்களெல்லோரும் மிக்க ஊக்கத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விரவநல்லூர் தேவாலய வியாஜ்ஜியத்தில் சப்ஜட்ஜ் மிஸ்டர். M. பஜுலுடீன் சாயப் பஹதூர் பிறப்பித்த உத்தரவுகள்.

கேசின் விபரம்:—பூமிநாத சுவாமி தேவாலயத்தின் ஹக்குதாரின் வார்சுகள் திருவாடுதுரை மடத்தின் பண்டாரசன்னதி தர்மகர்த்தா (Trustee) ஸ்ரீலஸ்ரீ, அம்பலவாண பண்டாரசன்னதி என்பவர் தேவாலய சம்பந்தமாய் தன்வசத்திலிருந்த அனேக சொத்துகளை சரியாய் பரிபாலனம்செய்யாமல் நம்பிக்கைத் துரோகமான செய்கைகள் செய்தாரென்னும் அநேக காரணங்களைக்கண்டு அவரை தர்மகர்த்துவத்திலிருந்து நீக்கிவிடும்படிக்கு வியாஜ்ஜியம் செய்தார்கள். சப்ஜட்ஜ் அவர்கள் அந்தகேசில் எழுதிய தீர்மானத்தில் முக்கியமாய் அடியிற்கண்டிருக்கும் விஷயங்களைப்பற்றி கூறியிருக்கின்றார்:— அவைகளாவன! மேற்படி பண்டாரசன்னதி அவர்கள் அநேக குற்றங்கள் செயதிருப்பவராக ருஜு செய்யப்பட்டிருப்பதால் மேல்விசாரணையும் தணிக்கையுமில்லாமல் இனி அவரிடத்தில் தேவாலயசொத்துகளை வைத்துவைப்பது பந்தோபஸ்தல்லவென்று அபிப்பிராயம் கொண்டார். இந்த வியாஜ்ஜியத்தில் பண்டாரசன்னதியின் கையில் இப்பொழுது தேவாலயத்திற்குச் சொந்தமான ரூ 49,800 இருக்கின்றபடியால் அவரை மடத்து தர்மகர்த்துவத்திலிருந்து நீக்கி அவர்பேரில் டிக்ரிசெய்தால் யாதொரு பயன்படாதாகையல் அப்படி செய்வது அவசியமல்லவென்று கண்டார். ஏனென்றால் அப்படி தர்மகர்துவத்திலிருந்து அவரை நீக்கிவிட்டால் ஷை ரூ 49,800-ம் அவரிடத்திலிருந்து வசூலாவது கஷ்டமென்று தீர்மானித்தார். ஆகையால் கோர்ட்டார் செய்த டிக்ரி யென்னவென்றால்:—

அவர் டிக்ரி தேதி முதற்கொண்டு இரண்டுவாரங்களுக்குள் ஷை ரூ. 49,800-ம் இன்னும் அவர்கையில் டிக்ரி தேதிவரையில் சேர்ந்திருக்கும் சில்லரைரொக்கங்களையும் கோர்ட்டில் கட்டிவிட்டு வரவு, சிலவு, கணக்குகளுக்கு ஒரு பிரமாணப்பத்திரிகையும் தாக்கல் செய்துவிடுவாராகில் அவரே ஷை மடத்திற்கு தர்மகர்த்தாவாக இருந்து வரவேண்டுமென்றும் அப்படி மேற்கண்ட தொகைகளை அவர் கோர்ட்டில் செலுத்தவும் வரவு, சிலவு கணக்குகளின் பிரமாணப் பத்திரிகை தாக்கல்செய்யவும் தவறிப்போவாராகில் அவரை தர்மகர்த்துவத்திலிருந்து நீக்கிவிடப்படுமென்றும் அவர்பேரில் மேற்கண்ட தொகைகளுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு ரூ. 6, வட்டியுடன் டிக்ரி செய்யப்படுமென்றும் தேவாலய விஷயமாய் வேறு ஏற்பாடுகள் செய்யப்படுமென்றும் மேற்கண்ட தொகைகளை கோர்ட்டில் கட்டிவிட்டால் ஷை தேவாலயத்தை, பரிபாலனம் செய்வதற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்தப்படுமென்றும் அந்த கமிட்டியில் ஷை தர்மகர்த்தாவும், ஹக்தாரின் வார்சுகளும் இன்னும் சிலரும் மெம்பர்களாயிருந்து மேல்விசாரணை, தணிக்கை முதலானது செய்து பரிபாலனம்செய்துவரவேண்டுமென்றும் ஷை தொகையை கட்டின ஒருவாரத்திற்குள் மடத்தாரால் ஒழுங்கேற்படுத்தப்படுமென்றும் தீர்மானித்தார். அந்த நம்பர்களில் ஒன்றின் சிலவுகளை மடத்தார் கட்டவேண்டுமென்றும் டிக்ரி செய்யப்பட்டது.

Madras High Court.

மதராஸ் ஹைக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். / மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர். } முன்பாக

A HUMAN SACRIFICE NEAR MADRAS.

மதராசுக் கருகாமையில் மானிடபலி கொடுக்கப்பட்டதென்ற கேஸ்.

கே. 5.

29–1–1917.

வியாஜ்ஜிய சங்கிரகம்:— செங்கல்பட்டு ஜில்லா பொன்னேரி கிராமத்திற் கருகாமையிலிருக்கும் ஆயாநல்லூர் கிராமத்தில் 1916-ம்ஹு ஜூன்மீ 25உ இராத்திரி குப்புசாமிமுதலி யென்னும் முதல் எதிரி (குற்றவாளி) நாசப்ப நாயுடு என்பவரை கொன்றுவிட்டதாகவும், இரண்டாவது எதிரி (குற்றவாளி) மேற்கண்ட கொலைகேசில் முதல் எதிரிக்கு உடந்தையாயிருந்து சகாயம் செய்தானென்றும் ஷை இரண்டு எதிரிகளும் குற்றம்சாட்டப்பட்டு செங்கல்பட்டு ஸெஷன்ஸ் ஜட்ஜ் முன்பாக விசாரணை செய்யப்பட்டார்கள். மேற்படி ஸெஷன்ஸ் ஜட்ஜ் அவர்கள் இரண்டாவது எதிரியாகிய சுப்பய்யனென்னும் பிராமணனை விடுதலை செய்துவிட்டு முதல் எதிரியாகிய குப்புசாமி முதலி என்பவனை சட்டத்தில் கூறியிருக்கும், மிகக்கொடுமையான தண்டனையாகிய தூக்குசிட்சை விதித்தார்.

கேசின் விபரம்:—இரண்டாவது எதிரி ஒரு மாந்திரீகன்; அவன் தன்னுடைய மந்திரவலுவினால் ஜனங்களுடைய வியாதியை சொஸ்தப்படுத்தி விடுவதாயும் இன்னும் பூமியின் கீழ்புதைத்து வைக்கப்பட்டிருக்கும் புதயலென்று சொல்லப்படும் திரவியத்தைக் கண்டுபிடித்து யெடுத்துக்கொடுப்பதாயும் சொன்னதின் பேரில் முதல் எதிரியும் இன்னும் சில ப்ராசிகியூஷன் தரப்பு சாக்ஷிகளும் செல்லியம் மன் கோவிலுக் கருகாமையில் ஒரு பள்ளத்தைத் தோண்டி அந்த பள்ளத்தில் ஒரு குடத்தில் சில நாணயங்களிருப்பதைக் கண்டெடுத்தார்கள் அந்த கிராமதேவதை எதிரிகளின் மூலமாய் அந்தப் பள்ளத்தில் சில விக்ரஹங்களிருப்பதாகவும் அவைகளை பூமியிலிருந்து வெளியேயெடுத்து ஒரு புதிய ஆலயம் கட்டி அதில் அந்த விக்ரஹங்களை அமர்த்தும்படி கனவில் வந்து சொன்னதாகவும் கூறப்பட்டது. இன்னொரு பள்ளம் வெட்டியதில் அதில் இரண்டு விக்ரஹங்களும் இன்னொரு குடமும் கண்டெடுக்கப்பட்டன. இன்னும் சில திரவியங்களெடுத்துக்கொடுப்பதாய் வாக்களித்து மூன்றும் தடவைகூட பிரயத்தனம் செய்த 25-ந்தேதி இராத்திரி எதிரிகள் மரணமடைந்தவனையும் இன்னும் சில ப்ராசிகியூஷன் சாக்ஷிகளையும் அந்தப் பள்ளத்திற் கருகாமையில் அழைத்துக்கொண்டு போனார்கள்.

ப்ராசிகியூஷன் தரப்பார் ருஜுசெய்த பிரகாரம் எதிரிகள் அந்த பள்ளத்தண்டை பலி கொடுத்தால் தான் காரியம் சித்திக்குமென்று சொல்லி மரணமடைந்தவனையும் ஒரு ஆட்டுக்கிடாவையும் அவ்விடத்தில் வெட்டி அந்தப் பள்ளத்தில் போட்டுவிட்டதாக ஏற்படுகிறது.

எதிரிகள் குற்றவாளிகளல்லவென்று எதிர்வாதம் கூறினார்கள்.

அப்பீல் வாதியின் வக்கீல் ராவ் சாஹிப் G. வெங்கடராமையா என்பவர் ப்ராசிகியூஷன் தரப்பாரின் சாக்ஷியம் நம்பத்தக்கதல்லவென்று வாதித்தார் இப்படிப்பட்ட கேசு எப்பொழுதும் நேரிடாத விஷயமாயிருப்பதால் கனம்பொருந்திய ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகள் அந்த மாந்திரிகத்திற்காக உபயோகப்படுத்தின பித்தளைக் குடங்களை நேரில் வரவழைத்துப்பார்த்தார்கள்.

கீழ்கோர்ட்டார் செய்த சிட்சை சரிதானென்பதற்கு பப்ளிக் ப்ராசிகியூடரான Mr. E. R. ஆஸ்பர்ன் (Public Prosecutor) ஆஜராகி பேசினார்.

கனம் பொருந்திய ஹைகோர்ட்டு ஜட்ஜுகள் கீழ்கோர்ட்டார் செய்த தீர்மானம் சரிதானென்று ஒப்புக்கொண்டு அப்பீல் வாதியை தூக்குபோடும்படி விதித்த சிக்ஷையை ஊர்ஜிதப்படுத்தினார்கள்.

VILLAGE OFFICERS SHEET.

கிராம ஆபீசர்களுடைய பக்கம்.

REGULATION XI of 1816.—Continued.

1816-ம் வஷத்திய 11-வது ரெகுலேஷன் சட்டதிட்டம்.

1816ஹு செப்டெம்பர்மீ 13உ ஜாரிசெய்யப்பட்டது.—தொடர்ச்சி.

மதராஸ் கவர்ன்மேண்டாருக் குட்பட்ட ராஜ்ஜியங்கள் முழுமைக்கும் போலீஸ் ஏற்பாடுகள் போதுவாயிருப்பதற்காக செய்யப்பட்ட சட்டதிட்டங்கள்.

1917ஹு ஜனவரிமீ 1-ம் பாகம் 16-ம் பக்கத் தொடர்ச்சி.

11. 2, 3, திருட்டு சொத்துக்களை விற்பனைசெய்வதாக குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் விஷயமாய் என்ன நடவடிக்கை நடத்த வேண்டுமோ அதைப்பற்றியது. அது 1862-ம்ஹுத்திய 17-வது ஆக்டினால் ரத்தாய்விட்டது.

12. வழிதப்பிப் போகும் நாடோடிகளின் விஷயமாய் கிராம உத்தியோகஸ்தர்கள் என்னசெய்யவேண்டுமோ அதைப்பற்றியது இதுவும் 1857-ம்ஹுத்திய 3-வது ஆக்டின்படி ரத்தாய்விட்டது.

13. (I) கொலைசெய்யப்பட்டதாக சந்தேகிக்கத்தக்கநபரின் தேகத்தைக்கண்டதாக கிராம அதிகாரிக்குச் சமாச்சாரம் தெரியவந்தால் அவர் உடனே ஊர்கர்ணத்துடனும் இனனும் கிராமத்தில் நல்ல அந்தஸ்துள்ள இரண்டு அல்லது மூன்று கிராமவாசிகளுடனும் கொலை செய்யப்பட்டதாக சொல்லும் அந்த இடத்திற்குச் சென்று அவர்களெதிரில் கொலையுண்ட நபரின் தேகத்தைக் கண்டு பிடிப்பதற்கும், கண்டு பிடித்ததன்மேல் அந்ததேகம் இன்னாருடையதென்றும் இன்னும் கொலை நடந்ததைப்பற்றி என்னென்ன சமாச்சாரம் தெரிந்துக் கொள்ளக்கூடுமோ அவைகளைப்பற்றியும், சாட்சியம் சொல்லக்கூடிய நபர்களை விசாரணை செய்ய வேண்டியது அல்லது கொலை செய்யப்பட்ட நபரின்பிராணன் போய் அவன் இறந்து போயிருப்பானாகில் மரணமடைந்தவன் ஏன் கொலைசெய்யப்பட்டான் என்பதைப்பற்றியும் விசாரணை செய்யவேண்டியது.

13. (2) அப்படிப்பட்ட தேகத்தை கண்டுபிடித்ததாகத் தெரிந்த உடனே கிராம அதிகாரி யாதொரு தவக்கமின்றி ஜில்லா (District) போலீஸ் உத்தியோகஸ்தருக்கு அறிக்கைசெய்து நோட்டீசு அனுப்பவேண்டியது. போலீஸ் உத்தியோகஸ்தர் சரியானகாலத்தில் அந்த இடத்திற்கு வந்துவிடுவாராகில் அவரெதிரில் அந்த திரேகத்தைக் கண்டுபிடிப்பதற்கான சந்தர்ப்பங்களையெல்லாம் விசாரணை செய்யவேண்டியது.

13. (3) அப்படிப்பட்ட விசாரணையை நடத்துவதற்கு போலீஸ் உத்தியோகஸ்தர் வராதபட்சத்தில் கிராம அதிகாரி விசாரணை செய்யப்பட்ட நபர்களின் சாட்சி வாக்குமூலத்தை கர்ணத்தை எழுதும்படி செய்வித்து, அந்த தேகம் இன்னாருடைய தேகமாக தோன்றுகிறதென்பதைப்பற்றி அவசியமான அம்சங்களை அதில் குறித்து அவ்விடத்தில் நடத்தியவெல்லா நடவடிக்கைகளைப்பற்றியும் குறிப்பிட்டு ரிப்போர்ட்டு ஒன்று தயார்செய்யவேண்டியது. அந்த ரிப்போர்ட்டில் தன்னுடைய சொந்தலிகிதத்தில் கையெழுத்துசெய்து அவ்விதமான பிரதம விசாரணை நடக்கையில் அவ்விடத்திலிருந்த இரண்டு அல்லது அதற்கதிகமான நகரவாசிகளிடத்திலும், கர்ணத்தினிடத்திலும், அதில் சாக்ஷிகையெழுத்துகள் போடும்படி செய்வித்து அந்த ரிப்போர்ட்டை அவரெடுத்த சாட்சி வாக்குமூலத்துடன் போலீஸ் உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டியது.

13. (4) கிராம அதிகாரி இவ்விதமாக அனுப்பின ரிப்போர்ட்டு முதலிய நடவடிக்கைகளை வரப்பற்றிக் கொண்டதன்மேல் அந்த கிராம அதிகாரியின் அதிகாரவறம்பிற்குள் அந்த கொலைசெய்த நபர் அல்லது நபர்களிருப்பதாக சந்தேகிப்பதற்கு காரணமிருப்பதாகத் தோன்றினால் கிராம அதிகாரி உடனே அப்படிப்பட்ட நபர் அல்லது நபர்களை அறிந்து கண்டுபிடித்து அவர்களை உடனே ஜில்லா போலீஸ் உத்தியோகஸ்தரிடத்திற்கு அனுப்பவேண்டியது.

14. கிராம அதிகாரிகள் இந்த சட்டதிட்டத்தின் 10-வது பிரிவின்கீழ் சிக்ஷைசெய்து காவலில் அடைத்துவைக்கப்படும நபர்கள் இன்னார் இன்னாரென்று ரிஜிஸ்டர்களில் பதிவுசெய்து வைக்கவேண்டியது. இப்படிப்பட்ட ரிஜிஸ்தர்களை அவர்கள் பிரதிமாதத்திலும் அவரவர்களுடைய ஜில்லா போலீஸ் உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டியது அவர்களால் அவைகள் மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பப்படும்.

ரிஜிஸ்தரின் நமூனா (Form) 1828-ம் ஹுத்திய 9-வது ஆக்ட் 2-வது பிரிவின்படி ரத்தாய்விட்டது.

15-முதல் 46-வரையில் கிராம உத்தியோகஸ்தர்களை நியமித்தலும் அவர்கள் செய்யவேண்டிய தொழில்களும், கொத்வால்களும் அவர்களுடைய ஜவான்களும்

செய்யவேண்டிய தொழில்களும், தாசில்தார்களும் இன்னும் இதர ரெவினியூ உத்தியோகஸ்தர்களும் செய்துவரவேண்டிய போலீஸ் கட்மைகளும், அனேககேசுகளில் தாசில்தாரர்களுக்குள்ள அதிகாரங்களும் அவர்கள் நடத்திவரவேண்டிய நடவடிக்கைகளும், சொற்ப குற்றங்களுக்கு கால நிர்ணயமும், ஜெமீன்தாரர்கள் போலீஸ் உத்தியோகஸ்தர்களாய் செய்யவேண்டியதும், பெரிய பட்டணங்களில் போலீஸ் அமீனுக்களும் நபர்கள் சொத்துக்களை கொதுவை அல்லது கிரயம் செய்வதில் சந்தேகமான சந்தர்ப்பங்களிருப்பதாக நினைத்து நபர்களை வாரன்டில் பிடித்தலும் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் நபர்களை நிர்பந்தித்து ஹிம்சைசெய்து அவர்களைத் தாக்குதலும் பெண்கள் சோரம்போவதான கேசில் போலீஸ் உத்தியோகஸ்தருக்குள்ள அதிகாரமும். 1862-ம் ஞுத்திய 17-வது ஆக்டின்படி ரத்தாய்விட்டது.

47 மாஜிஸ்ட்ரேட்டுகள் அவர்களுடைய ஜில்லாக்களில் கலகமின்றி அமரிக்கையாயிருக்க வேண்டுமென்பதற்கு ஜவாப்தாரிகளாயிருக்கவேண்டும். ஆனால் அவர்களுடைய ஜில்லாக்களில் அமரிக்கையாயிருப்பது கெட்டு கள்ளர் கூட்டத்தினாலாவது சமாதான மில்லாமல் கலகம் செய்பவர்களாலாவது கலகம்நேரிட்டு அவர்களை எதிர்த்து அடக்க அவர்களிடத்தில் போதுமான சிப்பந்திகளில்லாவிடில் அவர்கள் சமீபத்திலுள்ள மிலிட்டெரி ராணுவத்தின் சகாயத்தைக்கோறி கேட்கவேண்டியது

48-முதல் 51-வரையில். போலீசிலும், ரெவினியூ வேலைகளிலும் போலீஸ் ஜவான்களை சமமாய் நியமிக்க வேண்டியது; துப்பாக்கி முதலிய வெடி மருந்துகள் செய்வதற்கு பெறவேண்டிய லைசென்சுகள், மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குள் உள்ள அந்தரங்கமான சம்பந்தங்கள், தானியங்களைக் குறித்தாவது தண்ணீரை உபயோகிப்பதனாலாவது உண்டாகும் தகரார்கள் முதலிய விஷயமாய் மாஜிஸ்ட்டுகள் செய்யவேண்டிய வேலைகள்:—

1862-ம் ஞுத்திய 17-வது ஆக்டின்படி ரத்தாய் விட்டது.

52-வழிதப்பிப் போகும் நாடோடிகள் விஷயங்களை பைசல்செய்வது. 1857-வது ஞுத்திய 3-வது ஆக்டின்படி றத்தாய் விட்டது.

53-முதல் 56-வரையில். பல்லாக்கு தூக்குகிறவர்கள் முதலானவர்களுக்குச் செலுத்தவேண்டிய கூலியின் வீதங்கள், பொய்த்திராசு, நிறை, இடை குண்டுகள், படிகள்விஷயமாய்ச் செய்யப்படும் பிராதுகள்; போலீஸ் உத்யோகஸ்தர்களுக்கு மாஜிஸ்ட்ரேட்டுகள்தான் உத்தரவுகள்பிறப்பிக்கலாம். கவர்ன்மெண்டாருக்கு நேராய் கடிதங்கள் எழுதலாம்.

1862-வது ஞுத்திய 17வது ஆக்டின்படி ரத்தாய்விட்டது.

REGULATION IV OF 1821.

1821ஞு ஜூன்மீ 15உ ஜாரி செய்யப்பட்டது.

சென்னை ராஜதினியிலடங்கிய மாகாணங்களிலுள்ள போலீஸ் ஏற்பாடுகளை இன்னும் மேலுக்கு சீர்திருத்தி ஒழுங்கேற்படுவதற்கான சட்டதிட்டம்.

1-முதல் 5-வது பிரிவுகள். போலீஸ் அமீனுக்களுக்குள்ள அதிகாரத்தை அதிகப்படுத்தல்; கீழ் உத்யோகஸ்தர் செய்ய வேண்டிய தொழில்களும் கடமைகளும் கீழ் உத்தியோகஸ்தர்கள் விசாரணைகள் நடத்துதல்; சில அற்ப திருட்டு கேசுகளில் போலீஸ் அதிகாரிகள் சிக்ஷை செய்வதற்குள்ள அதிகாரங்கள்; அபராதங்கள் விதித்தலும், நஷ்டஈடு (Compensation) தீர்ப்புச்செய்தலும்.

1862-ம் ஞுத்திய 17-வது ஆக்டின்படி ரத்தாய் விட்டது.

6. (1) 1816-ம் ஞுத்திய 11-வது சட்டதிட்டத்தின் 10 பிரிவு 1-வது உட்பிரிவின்படி கிராம அதிகாரிகள் அற்ப குற்றங்களில் தண்டனை விதிக்கலாமென்று கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் இந்த சட்டதிட்டத்தின்படி அதிகரிக்கப்பட்டு அந்த பிரிவில் செய்யப்பட்டிருக்கும் நிபந்தனைகளின்படி மிக்க விபரீதமான சந்தர்ப்பங்களினாலல்லாமலும் சதாகெட்ட நடவடிக்கையுள்ளவர்களல்லாமலும், திருடப்பட்ட சொத்தின் கிரயம் 1-ரூபாய்க்கு அதிகப்படாமலு மிருக்கும் அற்பமான திருட்டு கேசுகளிலும் கிராம அதிகாரிகள் சிக்ஷை விதிக்க அதிகார முண்டென்று இந்த பிரிவின்படி நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது.

(2) இந்த பிரிவின் 1-வது உட்பிரிவின்படி கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படிருக்கும் அதிகாரத்தை நிறைவேற்றி சிக்ஷை விதிக்கும்படியான கேசுகளை அவர்கள் ஜில்லா (District) போலீஸ் உத்தியோகஸ்தருக்குத் தெரிவிக்கவேண்டியது.

7-முதல் 10-வரையில் 1816-ம் ஞுத்திய 9-வது சட்டத்தின் 37-வதுபிரிவின் றத்து. சொற்பகேசுகளில் மாஜிஸ்ட்ரேட்டும், டிஸ்ட்ரிக்ட் போலீஸ் அதிகாரியும் சாட்சியம் எடுக்கவேண்டிய நிமித்த மில்லையென்பதும் மாதாந்தரம் அனுப்பவேண்டிய ரிட்டர்ன்கள் அனுப்ப வேண்டிய நிமித்த மில்லையென்பதும், பிரமாணங்கள் செய்விப்பதிலுள்ள யுக்தாயுக்த அதிகாரமும்.

1862-ம் ஞுத்திய 17-வது ஆக்டின்படி ரத்தாய்விட்டது.

The Indian Law Gazette.

PART I.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் I.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ஞு மார்ச்சுமீ [நே. 3.

EDITORIAL :—Continued.

1917ஞு பிப்ரவரிமீ பத்திராதிபர் வியாசத் தொடர்ச்சி.

நந்தன என்பவரின் வியாக்கியானம்:—(Commentary of Nandana) - வியாக்கியானம் எழுதினவர்களில் அநேகர் இந்த கிரந்தத்தை வெவ்வேறுவிதமாய் வாசித்து வியாக்கியானம் எழுதியிருக்கிறார்களென்று தெரியவருகிறது. "மெதாடிதி" என்பவர் இந்த கிரந்தத்தை "ஹாரெட்" என்னும் பதமாக வாசித்து வியாக்கியானம் எழுதியிருக்கிறார். நந்தன என்பவர் "பாஜெட்" என்று வாசித்துவியாக்கியானம் கூறியிருக்கிறார். மற்ற வியாக்கியானிகள் இந்த கிரந்தத்தை எவ்விதமாய் வாசித்து வியாக்கியானங்கள் எழுதியிருக்கிறார்களென்பது தெளிவாய் புலப்படவில்லை. "டாடாட்டா-Dadatah" என்னும் பதத்தை "கொடுக்கப்பட்டவரிடமிருந்து" From the giver என்று நான் தர்ஜமா செய்திருக்கிறேன்-இதை நான் மேதாடிதி என்பவர் கூறிய வியாக்கியானத்தை அனுசரித்து ஐந்தாம் வேற்றுமைக்கும், ஏழாம் வேற்றுமைக்கும் பொதுவாய் நடுத்தரமாயுள்ள ஒரு வேற்றுமையாக (Ablative) அர்த்தம் செய்து தர்ஜமாசெய்தேன். ஆனால் "குல்லூக்கா" என்பவர் இதை உற்பத்தியை காட்டுகிற ஆறும் வேற்றுமையாக (Genitive) அர்த்தம்செய்து வியாக்கியானம் கூறியிருக்கிறார். இவ்விரண்டு விஷயங்களிலும் பதத்தின் பொருள் ஒன்றுதானென்று எனக்குத் தோன்றுகிறது. "கோத்ரா" "ரித்திரா" என்னும் பதங்களுக்குச் சரியான இங்கிலீஷ் பதங்களில்லாததால் நான் அந்தப் பதங்களை இங்கிலீஷில் தர்ஜமா செய்யவில்லை; ஏனென்றால் "கோத்ரா" என்னும் பதத்திற்குச் சரியான அர்த்தமென்னவென்று யோசித்துச் சொல்லுமளவில் பூர்வகாலத்திலிருந்து ரிஷிகளில் ஒருவருடைய பரம்பரையில் உதித்த ஒரு புருஷனுடையஸந்ததியில்தொன்று தொட்டு யாதொரு பங்கமுமின்றி வம்சபரம்பரையாயுள்ள தகப்பன் வம்சத்தில் பிறக்கும் ஸந்ததி என்பது தான் "கோத்ரா" (Gotra) என்னும் பதத்திற்கு சரியான பொருளென்று ஏற்படுகிறது. எந்த ரிஷியின் பரம்பரையில் ஒரு புருஷன் ஜனிக்கிறாரோ அவர் அந்த ரிஷியின் பெயரையே தன்னுடைய கோத்ரம் என்று வழங்கி வருகிறார் அல்லது அந்த

ரிஷியின் பரம்பரையில் உதித்த தகப்பனுருக்குத்தான் பிறந்ததாக கோத்ரம் சொல்லுகிறுர். ஒரு சொத்தை சம்பாதித்து அந்த சொத்துக்குச் சொந்தக்காராயிருப்பவருக்கு ஒருவர் பந்து யென்னும் காரணத்தைக் கொண்டு அவர் அந்த சொத்துக்கு சுதந்தரவாளி யென்று சொல்லும் ஹக்கு பாத்தியதைதான் ரிக்தா (Riktha) என்னும் பதத்திற்குச் சரியான அர்த்தம். இந்த ரிக்தா என்னும் பதத்தை சில வேலைகளில் "Heritage-பிதிரார்ஜ்ஜிதம்" என்பதாய் பிசகாக தர்ஜமா செய்யப்படுகிறது. ஆனுல் "மிதாக்ஷரத்தில்" சொல்லியிருக்கிறபடி ஒரு சந்ததியில் பிறந்த ஆண்பிள்ளைக்கு அவர் எந்த பரம்பரையைச் சேர்ந்த தகப்பனுருக்குப் பிறந்தாரோ அந்த தகப்பனுரின் அல்லது அந்த புருஷவம்சத்தில் தொன்று தொட்டுள்ள மூதாதையின் சொத்துகளுக்கு ஹக்கு பாத்யதை உண்டாகிறது. அவ்விதமாயுண்டாகும் சொத்தை "Heritage-பிதிரார்ஜ்ஜிதம்" என்று சொல்லலாகாது.

இந்த கிரந்தத்தை நான் தர்ஜமா செய்திருப்பது அந்த பதத்தின் பூர்ண அர்த்தமும், பலனும் சரியாக வெளிப்படையாய்ச் சொல்லப்பட வில்லை யென்பதாய் தான் சொல்லவேண்டும். இந்த கிரந்தத்தில் இது விஷயமாய்ச் சொல்லும் அத்தியாயத்தில் கண்டிருப்பதைப்பற்றி வேறே கிரந்தங்களில் என்ன சொல்லி யிருக்கிறதோ அவைகளை யெல்லாம் தீர யோசித்துத் தான் இதற்குப் பொருள் கூறவேண்டியதாயிருக்கிறது. இந்த கிரந்தத்தின் நோக்க மென்னவெனில் தத்தாய் கொடுத்துவிடப்பட்ட பிள்ளையின் நிலைமை எவ்விதமாய் மாறுகிறதென்று வெளிப்படையாய் காட்டுவதற்குத்தானென்று சொல்லவேண்டும். "மனு" என்பவர் எழுதியிருக்கும் 168-ம் நெம்பர் கிரந்தத்தின் 9-வது அத்தியாயத்தில் ஒரு பிள்ளையை, அந்த பிள்ளையின் தகப்பன் அல்லது தாயார் அல்லது தாய்தகப்பன் இருவரும் தத்தாய் கொடுக்கலாமென்று வெளிப்படையாய் சொல்லியிருப்பதைக் கவனிக்கவும். ஒரு பிள்ளையை அந்தப் பிள்ளையின் தாயார் தத்தாய் கொடுத்தால் அவ்விஷயத்திற்கு கூட இந்த கிரந்தத்தில் சொல்லியிருப்பது சம்பந்தப்படும். பூர்வீகமாயுள்ள "முற்பிதா-Progenitor" என்னும் பதத்திற்கு முற்பிதா அதாவது மூதாதையென்று அர்த்தமாவது மல்லாமல் அந்த முற்பிதா அல்லது மூதாதையின் வம்ச பரம்பரையைச் சேர்ந்த எல்லா நபர்களென்றும் அர்த்தமாகும். முற்பிதாவின் கோத்ரம் அற்றுப்போவதை (நீங்கிப்போவதை)ப் பற்றி செய்யப் பட்டிருக்கும் நிபந்தனையை யோசிக்குமளவில் அப்படி கோத்ரம், நீங்கிப்போனவராகச் சொல்லப்பட்டவர் அவருடன் சகோதரர்களாக யிருந்த பந்துவர்க்கங்களிலிருந்தும் நீங்கினவராகத்தான் அர்த்தம் செய்ய வேண்டும்.

தாய்வர்க்கங்களிலுள்ள பந்துக்களின் சம்பந்தத்தைப் பற்றி மனு என்பவர் யாதொன்றும்சொல்லவில்லை யென்பதை மிக்க கவனத்துடன் நோக்கிப் பார்க்கவேண்டியதாயிருக்கிறது. இதற்குக் காரணம் யாதென்று ஆலோசிக்குமளவில் "மனு" என்பவர் ஜீவித்திருந்த காலத்தில் ஒரே ஜாதியிலுள்ள ஒரே வம்சத்தைச் சேர்ந்த பந்துக்களைப்பற்றி அவர்களுடைய பந்தத்தவம் விசேஷமானதாக அவர் சொல்லவில்லையென்று யூகித்துக் கொள்ளவேண்டியதாய்த் தானிருக்கிறது. வார்ஸு பாத்தியதையால் அடையக்கூடிய ஹக்கு பாத்தியத்தின் விஷயமாய் "ரோம்-Rome" தேசத்திலுள்ள பன்னிரண்டு அட்டவணைகளில்உதிரத்தைச் சேர்ந்த ஒரே வம்ச பந்துக்களின் வார்சு பாத்தியத்தை எப்படி ஒப்புக்கொள்ளவில்லையோ அவ்விதமாகவே, மனு என்பவரும் அவர்களுடைய வார்சு உரிமையை சம்மதிக்கவில்லை. இதுவுமல்லாமல் ஒருவருடைய தாய் வம்சத்தைச் சேர்ந்த மூதாதைகளாகிய பந்துக்களுக்கு பிண்டம்கொடுக்கவேண்டு மென்பதைப்பற்றி கூட மனு சாஸ்திரத்தில் (Manu's code) யாதொரு நிபந்தனையும் செய்யப்பட்டில்லை. ஒருவருடைய குமாரத்தியின் பிள்ளையைப் பற்றியும், தாய் வர்க்கத்தைச்சேர்ந்த பாட்டனுரைப் பற்றியும் சொல்லும் கிரந்தங்களில் வார்சுபாத்தியத்தால் அடையக்கூடிய பிதிரார்ஜிதத்தின் சம்பந்தமாயும் "ஸ்ரார்த்த-Srardha" சடங்கு என்பதின் விஷயமாகவும் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனைகளில் "புத்திரிக புத்திர" அல்லது புத்திரியாக நேமித்துக் கொண்டவளுக்குப் பிறந்த பிள்ளையை ஒரு விதமான உதவிப் புத்திரனென்பதாய் காட்டியிருக்கிறது. அவைகளில் குமாரத்தியின் புத்திரன் ஒருவருக்குப் பிறந்த புத்திரன் என்பதாகவும், தாய்வர்க்கத்திலுள்ள தாயின் தகப்பன் அல்லது தகப்பன் வம்சத்திலுள்ள தகப்பனுடைய தகப்பன் அல்லது பாட்டனுர் என்பதாகவும் பாவிக்கப்படுகிறது. இந்த கிரந்தத்தில் இது விஷயமாயுள்ள அத்தியாயத்தில் புத்திரனென்று சொல்லப்படுவானென்பதைப்பற்றி இதர கிரந்தங்களில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகளுடைய கருத்தையும் இந்த கிரந்தத்தில் செப்பியிருப்பதுடன் கலந்து வாசித்துப் பார்த்தால் ஒருவரை தத்தாய் வேறொரு குடும்பத்திற்கு கொடுத்துவிட்டால் அவர் எந்த குடும்பத்தில் ஜெனித்தாரோ அந்த குடும்பத்தில் அவர் சாதாரணமாய் மரணமாய் விட்டவராக எண்ணப்பட்டு அவர் சுதாவாய்ப் பிறந்த குடும்பத்திலுள்ள அவருடைய பந்துக்களுக்கு செய்யவேண்டிய ஔகிகஆத்மார்த்தமான சடங்குகளின் சம்பந்தம் அவரை விட்டு நீங்கிப் போகிறதென்பதுதான் அதனுடைய முழுக்கருத்தென்பதாய்ச் சொல்லவேண்டியதாயிருக்கிறது.

• 10-வது கேள்வி:-Question. ஸ்மிரிதி சந்திரிகா (Smrithi Chandrika)வின் 10-வது அத்தியாயம் 12-முதல் 15-வது பாராக்களில் சொல்லியிருப்பவைகளையும், "பராஸரமாதவ்ய-Parasara madhaviya" த்தில் "டட்டகதினம்-Dattakadinam" முதலானவைகள் முதற்கொண்டு "டாடாட்டா - Dadatah" முதலியவைகள் வரையிலும் "டட்டக மிமாம்ஸா-Dattaka Mimamsa" வின் VI (6)வது ஸ்லோகத்தின் 6, 7, 8 பாராக்களையும் "டட்டக சந்திரிகா-Dattaka Chandrika" வின் 11-வது பிரிவின் 18,19, பாராக்களையும் தயவு செய்து தர்ஜமா செய்யுங்கள்.

பதில்-Answer:—ஆகையால் "கலி-Kali" காலத்தில் ஒருவர் தான் பிறந்தபின்பு அவருக்கு இரண்டாவது தகப்பனுராய் ஏற்படுகிறவர் அவருடைய (இரண்டாவது (Second) தகப்பனுருடைய சொத்துக்களை அவர் ஒரு பிள்ளைக்கு ஒப்புவித்து விட்டாரென்றுல் அப்படி இரண்டாவதாக (Secondary) யேற்படும் பிள்ளை-" Dattaka-டட்டக பிள்ளை " யென்று சொல்லப்படும் புத்திரனைத் தான் குறிக்கும். இது விஷயமாய் "மனு" என்பவர் வெளிப்படையாய் என்ன சொல்லி யிருக்கிறுரென்றுல்-ஆனுல் அப்படி யேற்படும் தகப்பனுரின் "டட்ரிமா-Datrima" புத்திரர் நல்லகுணங்களுடன் சன்மார்க்கமான நடவடிக்கையுள்ளவரா யிருப்பாராகில் அவர் (அவ்விதமா யேற்படும் புத்திரர்) வேறே கோத்திரத்திலிருந்து வாங்கப்பட்டவராயிருந்தாலும் அவருடைய (அவ்விதமா யேற்படும் தகப்பனுர்கள்) சொத்துக்களையெல்லாம் வாஸ்தவமாய் அடையவேண்டியவராவாரென்று சொல்லியிருக்கிறுர். இந்த கிரந்தமாகிய "மனு சாஸ்திரம்" 9-வது அத்தியாயம் 141-ஐ வாசித்துப்பார்த்தால் அதில் சொல்லியிருப்பது "மாண்டலிக்-Mandalik" பிரிதியில் (Edition) கூறியிருப்பதற்கு கொஞ்சம் வித்தியாசப்படுகின்றது.

நான் மேற்கூறிய கிரந்தம் எது வென்றுல் கல்கத்தா கவர்ன்மென்ட் ஸமஸ்கிரத சர்வகலாசாலை (Government Sanscrit College) யில் ஸ்மிரிதி வித்வானு (Professor of Smrithi) யிருக்கும் பாத்சந்தர் ஸிரோமணி யென்னும் பண்டிதரால் (Pandit Bharat Chander Siromani) இயற்றப்பட்டுள்ள கல்கத்தா பிரிதியாகிய (Calcutta edition) ஸ்மிரிதி சந்திரிகா (Smrithi Chandrika) வைதான் நான் உதகரித்துச் சொன்னேன். அந்தக் கல்கத்தா பிரிதியில் "ஸஹர டெய்ப்-Saharetaib" என்பதற்குப் பதிலாய் " அஹரடெய்ப் - Aharetaib " என்று சொல்லி யிருக்கிறது. அந்த பதத்தின் அர்த்தம் யாதெனில் "though-அப்படி யிருந்தபோதிலும்" வேறே கோத்திரத்தைச் சேர்ந்தவரிடத்திலிருந்து வாங்கினபோதிலும் அந்த பிள்ளைதான் சொத்துகளை அடைவானென்பதாய் ஏற்படுகிறது. இந்த ஸ்லோகத்தில் மூன்றுவது அடியை "தேவஸ்வாமின் Davaswamin" என்பவரால் பின்வருமாறு விவரிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய சொத்து முழுவதையும், கோத்ரத்தையும் அவர்தான் பெறவேண்டியது. இவ்விதமாய் ஒரு தகப்பனுண்டாகும் கிரியையைச் செய்வதினுல் (அதாவது-தத்தெடுத்துக் கொள்ளப்படும் தகப்பனுர் ஒருவர் ஏற்படும் கிரியையைச் செய்வதினுல்) அப்படி தத்தெடுத்துக்கொண்ட தகப்பனுருடைய சொத்துகளுக்கு அவ்விதமாய் ஸ்வீகாரம் செய்துகொண்ட "தத்ரிமா-Datrima" புத்திரன் சுதந்தரவாளியாவாரென்பதும் அப்படிப்பட்ட தகப்பனுடைய கோத்ரத்தை அவர் சேர்ந்தவராவாரென்பதும் பரிஷ்காரமாய் ஏற்படுகிறதென்று தெரிந்துக்கொள்ளவேண்டியது. ஆனுல் ஒருவரை வேறொரு குடும்பத்திற்கு தத்தாய் கொடுத்துவிடுவதினுல் அந்தப் பிள்ளை அவர் பிறந்த குடும்பத்தில் அவருக்கிருந்த பந்துத்துவம், பாத்யதை யெல்லாம் அவரை விட்டு நீங்கிப் போய் விடுகிற தென்று சொல்வதினுல் அவ்விதமாய் தத்தாய்போகும் "தத்ரிமாDatrima" பிள்ளை அவர் பிறந்த சொந்த தகப்பனுருடைய சொத்துக்குள்ள சுதந்தரமான பாத்தியதையை இழந்து அந்த சொந்த தகப்பனுரின் வம்சபரம்பரையிலுள்ள கோத்ரத்தையும் விட்டு நீங்கினவராவாரென்றுதான் சொல்லவேண்டும். இந்த அபிப்பிராயத்தைக்கொண்டுதான் "மனு" என்பவர் "தத்ரிமா Datrima" புத்திரன் அவர் பிறந்த சொந்த தகப்பனுரின் "தேகத்தையும், ரிக்தத்தையும் - Gotra and riktha" பெறமாட்டாரென்று வெளிப்படையாய்ச் சொல்லி யிருக்கிறுர்.

"பராஸர மாதவ்ய - Parasara Madhavya" 63-வது பாரா :—.

"தத்தக-Dattaka" என்பவரும் அவரைப் போன்ற பிள்ளைகளும் அவர்கள் பிறந்த சொந்த தகப்பனுரின் "கோத்ரத்தையும் ரிக்தத்தையும் - Gotra and riktha" பெறமாட்டார். இந்த கிரந்தத்தில் "மனு" என்பவர் இதைத்தான் வெளிப்படையாய் கூறியிருக்கிறுர் :—"தத்ரிமா புத்திரர் ஒருவர் தான் பிறந்த சொந்த தகப்பனுருடைய கோத்ரத்தைக் கொண்டு போனவராகார்-ரிக்தத்தையும் பெறவேண்டியவராகார். பிண்டம் கோத்ரத்தைச் சேர்ந்ததாகையாலும் "ரிக்தம் ஸ்வதா-Swadha" ஆத்மார்த்தமான ஆகாரமானதாலும் தத்தாய் கொடுத்தவரிடத்திலிருந்து இவ்விரண்டும் பரிஷ்க்காரமாய் நீங்கிவிடுகிறது. இவ்விடத்தில் எடுத்துக் கூறிய "மனு என்பவரின் கிரந்தத்தில் "ஹரெட் - Haret" என்பதற்குப் பதிலாய் "பாஜெட் - Bhajet" என்பதாய் சொல்லப்பட்டிருக்கிறது-ஆனுல் இவ்விரண்டு பதங்களுக்கும் அர்த்தம் ஒன்றுதான்.

"டட்டகமீமாம்ஸா-Dattakamimamsa" 6, 7, 8 பாராக்கள் VI (6-வது) ஸ்லோகம்:— இதுவு மன்றி "மனு"என்பவா இன்னொருவிதியை வெளிப்படையாய் கூறியிருக்கிறுர். அதாவது—"ஒருவருடைய சொந்த தகப்பனுருடைய கோத்ரத்தையும் ரிக்தத்தையும் தத்ரிமாபுத்திரர் கொண்டு போனவராகார். கோத்ரத்தைச் சேர்ந்தது. பிண்டம் "ஸ்வதா-Swadha" ஆத்மார்த்தமான ஆகாரம் கொடுப்பதென்னும் சடங்குசெய்வது ரிக்தத்தைச் சேர்ந்ததென்றும், ஆகையால் இவைகளிரண்டும் தத்தாய் கொடுத்தவரை பரிஷ்காரமாய் விட்டு நீங்கிவிடுகிறது. தத்ரிமா புத்திரன் தத்தாய் கொடுத்தவருடைய கோத்ரத்தையும் ரிக்தத்தையும் பெற்றவராகார். இதைப்போலவே ஸ்வதா-Swadha, ஸ்ரார்தா-Sradha சடங்குகள் செய்வது பிள்ளையை தத்தாய் கொடுத்தவரை விட்டு நீங்கிவிடுகிறது. ஏனென்றுல் "பிண்டம்" என்பது கோத்ரத்திற்கும் ரிக்தத்திற்குப் பின்னும் போகவேண்டியதாகும்.

(இன்னும்வரும்.)

OUR LAW COLLEGE.

எங்களுடைய சட்ட கலாசாலை.

எங்களுடைய சட்ட கலாசாலையின் புரொபசர் வ. நாதமுனி முதலியார்.

அவருடைய சிஷ்யர்களுடைய பெயர்கள் :—

1 அனந்தாச்சாரி, 2 சக்ரவர்த்தி ஐயங்கார், 3 துரைசாமி முதலியார், 4 சட்டராசாரியார், 5 தணிகாசல முதலியார்.

HINDU LAW—ஹிந்து லா.

(1917-ம்ஹு பிப்ரவரிமீ 1-ம் பாகம் 24-ம் பக்கத் தொடர்ச்சி.)

மாணுக்கர்கள்:—காலை வந்தனம், நமஸ்காரம் ஐயா!

புரோபசர் :—நம்மை ரக்ஷிப்பவராகிய ஜெகதீசனருளினுல் நீங்கள் எல்லோரும் திரேக சௌக்கியத்துடன் சட்ட ஞானத்தில் தினேதினே விருத்தியாகி யாதொரு குறைவின்றி செல்வவந்தராயிருக்கவேண்டுமென்று நான் கடவுளை பிரார்த்திக்கின்றேன்.

மா :—நாம் வசிக்கும் இந்தியா தேசத்திலுள்ள பல மாகாணங்களில் பலவிதமான கிரந்தங்களை அனுஷ்டித்து வருவதாக சொன்னீர்களே; அவைகளை பொட்டியே பல ஸம்பிரதாயங்களிருப்பதாக சொல்லுகிறீர்களே; அவைகள் இன்னின்னவைகளென்று எங்களுக்குத் தயவுசெய்து சொல்லுங்கள் ஐயா!

பு :—முன் சொல்லிய வெவ்வேறு கிரந்தங்களை ஆதாரங்களாக ஒப்புக்கொள்ளும் காரணத்தினுல் ஐந்து ஸம்பிரதாயங்களிருப்பதாக சொல்லப்பட்டிருக்கின்றது; அப்படிக் கிருந்திடினும் வங்காள மாகாணததிலுள்ள ஸம்பிரதாயம் தவிர மற்ற நான்கு ஸம்பிரதாயங்களில் சில வித்தியாசங்களிருந்தபோதிலும் சாதாரணமாய் மித்தாக்ஷரத்தையே (Mitakshara) முக்கிய ஆதாரமாகக் கொண்டிருப்பதால் (1) கவுட ஸம்பிரதாயம், (2) காசி ஸம்பிரதாயம் என இரண்டு ஸம்பிரதாயங்கள்தா னிருப்பதாக எண்ணத்தக்கதா யிருக்கிறது.

மா:—இந்த ஸம்பிரதாயங்கள் எவ்விதமாய் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றனவோ அவைகளை எங்களுக்குத் தெரியச் சொல்லுங்கள் ஐயா.

பு :—அந்தந்த ஸம்பிரதாயங்களைச்சேர்ந்த இடங்களில் வாசஞ்செய்கிற ஹிந்து குடிகளுக்கு அங்கங்கே பிரமாணமாயிருக்கிற தர்மசாஸ்திரங்களில் சொல்லப்படும் மார்க்கமே அனுசரிக்கத் தக்கது. ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்திற்குப்போய் குடியிருப்பதனுல் அவருக்கு அவர் போய் வசிக்கும் புது தேசத்து மார்க்கம் உறித்தானதல்ல அதற்குத் திருஷ்டாந்தமாய் :—தக்ஷண தேசம் (Deccan) எனப்படும் தென் தேசத்திலிருந்து வங்காள தேசத்திற்கும் அல்லது வங்காள தேசத்திலிருந்து தென் தேசத்திற்கும் ஹிந்து ஒருவர் போய் வாசம் செய்வாராகில் அவர் முன் அனுசரித்து வந்த தர்ம சாஸ்திரங்களையே அனுஷ்டித்துவர வேண்டுமே யல்லாமல் மற்றப்படிதான் புதிதாய் வந்து குடியிருக்கும் தேசத்தின் மார்க்கத்தை பாராட்டலாகாது. இதற்காதாரமாய் (2 மூ-இ-அ-132 ; 12 மூ-இ-அ. 91 பார்க்கவும்.) சட்டம் அப்படிக் கிருந்திடினும் அவர் தன்னுடைய முந்திய ஆசாரங்களை விட்டு தான் போன புது தேசத்தில் விவாக விஷயங்களையும் அல்லது ஸ்ரார்த்தம் முதலான கர்மகாரியங்களையும் புது தேசத்திலுள்ள மார்க்கமாய் அனுசரித்துவந்ததாக தெளிவாய் ருஜு செய்யப்பட்டால் அவருக்கு புது தேசத்திலுள்ள தர்ம சாஸ்திரங்களே செலாவணியுள்ளதென்று 12 மூ-இ-அ, 96-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆரியரைச் சேர்ந்த ஹிந்து மதஸ்தர் ஒருவர் கிரிஸ்து அல்லது மகம்மதிய மதத்தை சேர்ந்தாராகில் அவருக்கு ஹிந்து தர்ம சாஸ்திரங்கள் செல்லாது. (10 மூ-இ-அ, 537. 1865ஹுத்திய 10-வது ஆக்டாகிய இந்தியன் ஸக்ஸெஷன் ஆக்ட்டை பார்க்கவும்.) சட்டம் அப்படி யிருந்தபோதிலும் அவருக்கு முன்னிருந்த சுதந்திரங்களும், பாத்தியதைகளும் போகாது.

அவ்விதமாய் ஹிந்துக்கள் அவர்களுடைய மதத்தை விட்டு கிறிஸ்து அல்லது வேறே மதத்தில் சேர்ந்து விட்டால் அவர்களுக்கு இஷ்டமிருந்தால் அவர்கள் முன் அனுசரித்து வந்த தாயபாக ஏற்பாட்டையே அனுசரிக்க இஷ்டமிருந்தால் அவர்கள் அப்படியே செய்யலாம்; இல்லாவிடில் தள்ளிவிடலாமென்று மந்திராலோசனை சபையார் (Privy Council) தீர்ப்பு செய்திருக்கிறுர்கள். (9 மூ-இ-அ, 195.)

ஆனுல் 1865-ம் ஹுத்திய 10-வது ஆக்டாகிய இந்தியன் ஸக்ஸெஷன் ஆக்ட் அமுலுக்கு வந்த பிறகு கிருஸ்து மதஸ்தர்களுக்கும், கிருஸ்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அந்த சட்டந்தான் செல்லுமே யல்லாமல் ஹிந்து தாயபாக மார்க்கங்கள் செல்லாது.

பம்பாய் ராஜதானியிலிருக்கும் கோஜா ஜாதியர்களும், கச்சிமேமனு ஜாதியார்களும் துலுக்க மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தபோதிலும் ஹிந்து தர்ம சாஸ்திரங்களையே அனுசரித்து வருகிறுர்கள் (I பம்-ஹை-ரி. 71, 73; 2, பம்-ஹை-ரி, 292; 12 பம்-ஹை-ரி. 294; இ-லா-ரி. 3 பம் 34; இ-லா-ரி. 6 பம் 452; இ-லா-ரி, 9 பம் 115; இ-லா-ரி. 10 பம் 1). பவுத்த, ஜைன, ஸீக் மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஹிந்து தர்ம சாஸ்திரங்களே செல்லுமென்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது (8 ஸ-ரி- 116; 10 பம்-ஹை-ரி 258; இ-லா-ரி. 1 அ 688.)

பிரம்மஸமாஜ மதஸ்தர்களுக்கும் ஹிந்து தர்ம ஸாஸ்திரங்களே செல்லத்தக்கினதென்றும் அவர்கள் ஹிந்து மதாச்சாரங்களைவிட்டு நீங்கினவர்களாயினும் 1865-ம் ஹுத்திய 10-வது ஆக்டாகிய இந்தியன் ஸக்ஸெஷன் ஆக்ட் 331-வது பிரிவின் கருத்தின்படி அவர்கள் ஹிந்துக்களென்றே வாதிக்கத் தக்கதாயிருக்கிறது.

எந்த மாகாணத்திலாவது, எந்த குலத்திலாவது, குடும்பத்திலாவது ஏதாவது விசேஷ ஆசாரங்களாவது, நடவடிக்கைகளாவது, வாடிக்கைகளாவது அநேக காலமாய் அனுசரிக்கப்பட்டு வந்ததாக ருஜு செய்யப்பட்டால் அவைகள் தர்மஸாஸ்திரங்களுக்கு விரோதமாயிருந்திடினும் நியாயஸ்தலங்களில் செல்லத்தக்கவைகளென்றும் அந்த பழக்கங்கள் தடையின்றி செலாவணியுள்ளதென்றும் மனுஸ்மிருதி, யாக்ஞவல்கியா ஸ்மிருதி முதலிய தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பிரிவிகவுன்சிலார்கூட அம்மாதிரியே தீர்ப்பு செய்திருக்கிறுர்கள். (12 மூ-இ-அ. 436 ; 3 ம-ஹை-ரி. 50)

தர்ம ஸாஸ்திரங்களுக்கு விரோதமாய் சில நடவடிக்கைகள், பழக்கங்கள் விசேஷாச்சாரங்கள் நடுவில் யாதொரு ஆடங்கமுமில்லாமல் நடந்தேறி வந்ததாகவும் அவைகளை தங்களுக்கு நியாயமான ஆசாரங்களாக அறிவுடனும், சம்மதத்துடனும் அனுசரித்து வந்ததாகவும் ருஜு செய்யவேண்டியது அவசியம் இல்லாவிடில் அவ்விதமான நடவடிக்கைகளையும் பழக்கங்களையும் விசேஷாச்சாரங்களையும் கோர்ட்டார் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். (3-ம-ஹை-ரி 75, 77; 14 மூ-இ-அ. 570, 585.)

அப்படிப்பட்ட விசேஷாச்சாரங்கள் அநேககாலமாய் நடந்தேறி வந்து நடுவில் விட்டு விடப்பட்டதாக ருஜு செய்யப்பட்டால் கோர்ட்டார் அவைகளை ஒப்புக்கொள்ளாமல் தர்ம ஸாஸ்திரங்களிலுள்ள கோட்பாடுகளை யனுசரித்தே தீர்மானம் செய்து வருகிறுர்கள். அதற்கு திருஷ்டாந்தமாய் வங்காள மாகாணத்தில் ஒரு ஜமீன்தார் பாகப்பிறிவினை செய்துகொள்கிற நடவடிக்கையில்லாமல் குடும்பத்தில் ஜேஷ்டனுயிருக்கப்பட்ட மூத்த குமாரனே எப்பொழுதும் ராஜ்யம் செய்துகொண்டிருந்த வாடிக்கை அநேக காலமாய் நடந்தேறி வந்தது. ஆனுல் 20 வருஷ காலமாய் இந்த ஜமீன் சொத்து குடும்ப பொது சொத்தென்று எண்ணத் தக்கவிதமாய் அனுபவித்துவந்த காரணத்தைக்கொண்டு முன் பாகிக்ககூடாத சொத்தாயிருந்திடினும், பின்பு பாகிக்ககூடியதுதானென்று மந்திராலோசனை சபையார் (Privy Council) தீர்மானம் செய்திருக்கிறுர்கள் (இ-லா-ரி. 1 கல் 186.)

மா :—ஹிந்துக்களுடைய நடையுடை பாவனைகளைப் பற்றி பிரிவிகவுன்சிலரால் செய்திருக்கப்பட்ட தீர்மானங்களெல்லாவற்றையும் எங்களுக்கு பூர்த்தியாய் சொல்லுங்கள் ஐயா.

பு :—சிலர் ஒன்றுகூடி தாங்களே ஏதோ ஒருவிதமாய் நடக்கிறதென்று ஒரு புது ஏற்பாடு செய்துகொண்டார்களென்னும் காரணத்தால் மட்டும் எல்லோருக்கும் செல்லத் தகுந்ததென்னும் ஒரு விசேஷமாய் ஏற்படமாட்டாது. (8 மூ-இ-அ. 420; 9 மூ-இ-அ. 242; இ-லா-ரி. 3 அ 738.)

மேலும் குலத்திற்கே இழிவான வாடிக்கைகள் அநேக காலமாய் நடந்தேறி வந்ததாக ருஜு செய்தபோதிலும் அவைகளை கோர்ட்டார் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

பம்பாய் ராஜதானியில் சில ஜாதியார்களில் புருஷன் பெண்சாதிக்கு ஒத்துமை தப்பிப்போய் புருஷனை விட்டு விட்டு அவனிஷ்டத்திற்கு விரோதமாய் பெண்சாதி வேறொருவனை விவாகம் செய்துக்கொள்ளும் வாடிக்கை யிருக்கிறதென்று ஒரு கேசில் வாதிக்கப்பட்டது. அப்படிப்பட்ட வாடிக்கை குலத்திற்கே இழிவானதாயிருப்பதால் செல்லத்தக்க தல்லவென்று ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறுர்கள். (2 பம்-ஹை-ரி. 124; 7 பம்-ஹை-ரி. 133 A. C. J.) அம்மாதிரியாகவே ஒரு தாசியின் பிள்ளைக்கு வார்சு பாத்தியதை உண்டாக்குகிற வாடிக்கை உண்டென்று வாதிக்கப்பட்டது. ஆனுல் கோர்ட்டார் அந்த வாதத்தை ஒப்புக்கொள்ளவில்லை. (இ-லா-ரி. 2 பம் 140.)

ஹிந்துக்களுடைய ஆசார விவகாரங்களில் தர்மஸாஸ்திரங்களும் வியாக்கியானங்களும் மூலாதாரங்களாக எண்ணப்பட்டு அவைகளை கல்கத்தா, பம்பாய், அலகாபாத், மதராஸ் இந்த நான்கு ஹைகோர்ட்டார்களும், மந்திராலோசனை சபையாரும் (Privy Council) அப்போதைக்கப்போது செய்துவரும் தீர்மானங்களெல்லாவற்றைப் பார்க்கிலும், முக்கியப் பிரமாணமாக அநுசரித்துவரப்படுகின்றன. வாதிக்கப்படும் அம்சங்களில் தர்மஸாஸ்திரங்களை ஆராய்ந்து அபிப்பிராயம் கூறுவதற்காக 1859-ம் வருஷம் வரையில் நியாயஸ்தலங்களில் பண்டிதர்களை ஏற்படுத்தியிருந்தார்கள். அந்த பண்டிதர்கள் கூறும் அபிப்பிராயங்கள் சரியாயிருந்தாலும், பிசகாயிருந்தாலும் அவர்கள் சொல்லும் அபிப்பிராயங்களை அநுசரித்தே முன் காலங்களில் தீர்மானம்செய்துவந்தார்கள். ஆனால் தற்காலத்தில் ஸ்மிருதிகள் முதலிய மூல கிரந்தங்களுக்கு இங்கிலீஷ் பாஷையில் தர்ஜமாக்கள் செய்யப்பட்டிருக்கிற காரணத்தால் தர்ம ஸாஸ்திரங்களிலுள்ள விஷயங்களையும் நியாயாதிபதிகள் தாங்களே சுவயமாய் தெரிந்துகொண்டு தீர்ப்பு செய்து வருகிறார்கள். இவ்விதமாய் நான்கு ஹைகோர்ட்டுகளிலும் பிரிவிகவுன்ஸலிலும் செய்துவரும்படியான தீர்மானங்களை பிரதிமாதமும் இந்தியன் லா ரிபோர்ட்டுகளாக பிரசித்தம் செய்து வருகிறார்கள். இந்த தீர்மானங்களில் கூறப்படும் தர்ம ஸாஸ்திரங்களை மெயின், வெஸ்ட் பூலர், கவெல், ஜாலி, பானர்ஜி, மித்திர, சிரோமணி, சர்வாதிகாரி முதலான வித்துவான்கள் இங்கிலீஷ் பாஷையில் பெரிய பெரிய ஹிந்துலா என்று சொல்லப்படும் கிரந்தங்களை செய்திருக்கிறார்கள். இங்கிலீஷ் பாஷையிலுள்ளவைகளை தென் இந்தியா குடிகள் சுலுவாய் வாசித்தறிந்துக் கொள்ளும் வண்ணம் அவைகளை யெல்லாம் செந்தமிழில் தெளிவாய் எழுதி இந்த "சட்ட கேஜெட்" டில் பிரதிமாதமும் பிரசுரித்து வரப்படுகின்றன.

:—ஹிந்துக்களுக்குள் நடந்தேறிவரும் பலவித விவாஹங்களைப்பற்றி சட்டம் யாதோ அதை எங்களுக்குத் தெரியச் சொல்லுங்கள் ஐயா!

—"விவாகம் – MARRIAGE".—பூர்வகாலத்தில் (1) பிரம்ம, (2) தைவ, (3) ஆர்ஷ (4) பிரஜாபத்ய, (5) காந்தர்வ, (6) ஆசுர, (7) ராட்சஸ, (8) பைசாசமென்று ஹிந்துக்களுக்குள் 8 வித விவாகங்கள் நடந்தேறி வருகின்றன. அவைகளில் பிரம்ம, தைவ, ஆர்ஷ, ப்ராஜபத்யமென்கிற நான்கு கன்னியாதானங்கள் பிராமணர்களுக்கு யோக்கியமானவைகள், ஸ்திரீ புருஷர்கள் மனமொப்பி சேருவது காந்தர்வ விவாகமென்று சொல்லப்படும். சண்டையில் ஜெயித்து அல்லது பலவத்காரமாகக் கொண்டுபோயாவது செய்யும் விவாகம் ராக்ஷஸ விவாகம். காந்தர்வ ராக்ஷஸ விவாகங்கள் க்ஷத்திரியர்களுக்கு யோக்கியமானவைகள். பெண்ணை விக்கிரயம் செய்தால் அது ஆசுர விவாகம். இது வைசியர், சூத்திரர் இவர்களுக்கு யோக்கியமானவைகள். தூக்கத்தாலாவது, மயக்கத்தாலாவது, பைத்தியத்தாலாவது மெய்மறந்து சுரணையில்லாமலிருக்கும் ஸ்திரீயுடன் புணர்வது-மோசஞ்செய்தாவது பலவந்தப்படுத்தியாவது ஸம்போகம் செய்கிறதென்று சொல்லப்படுமாகையால் அதை பைசாச விவாகமென்று சொல்லப்படும். இது எந்த ஜாதியாருக்கும் அடுத்ததல்ல. இவ்விதமாய் ஹிந்து தர்மஸாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

மேற்கூறிய 8 விதங்களில், பிரம்ம விவாகம் (கன்னிகாதானம்) ஆசுர விவாகம் (கன்னிகா விக்ரயம்) இந்த இரண்டு விவாகங்கள்தான் தற்காலத்தில் அநுஷ்டித்து வரப்படுகின்றன. ஆதிகாலத்தில் ஆரியர்களில் ஏற்பட்டிருக்கும், பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்ர, என்று சொல்லப்படும் நான்கு ஜாதியர்களுக்கும் வெவ்வேறு விதமான விவாகங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன; ஆனால் இப்பொழுதுள்ள எல்லாஜாதியர்களுக்கும்பிரம்ம, ஆசுர விவாகங்கள்தான் நடந்தேறி வருகின்றன. தற்காலத்தில் இந்தியாவிலுள்ள அநேக மாகாணங்களில் பிராமணர்களுக்கும் சூத்திரர்களுக்கும் ஆசுர விவாகமேதான் நடந்தேறி வருகின்றன. பெரும்பாலும் சில மாகாணங்களில் பிராமணர்களுக்குள் ஆசுர விவாகமும், சூத்திரர்களுக்குள் பிரம்ம விவாகமும் நடந்தேறி வருகின்றன. இவ்விதமாய் நடந்தேறி வருவதைப்பற்றி மதராஸ் ஹைகோர்ட்டார்கூட அநேக கேசுகளில் தீர்மானித்திருக்கிறார்கள். (1859-வது வருஷத்திய மதராஸ் ஹைகோர்ட்டு ரிப்போர்ட்டுகள் 44-வது பக்கம் பார்க்கவும்) சென்னை ராஜதானியில் அநேக இடங்களில் ஆசுர விவாசம் (கன்னிகா விக்கிரயம்) பிராமணர்களுக்குள் நடந்தேறி வருகின்றன வென்பது ஸாஸ்திரங்களில் சொல்லியிருப்பதற்கு விரோதமாயிருந்திடினும் பிராமணர்கள் அவ்விதமாய் செய்துவரும் ஆசுர விவாகம் (கன்னிகாவிக்கிரயம்) சட்டப்படி செல்லத்தக்கினதுதானென்று மதராஸ் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள் (இ-லா-ரி. 13 ம 83 பார்க்கவும்). தற்காலத்தில காந்தர்வ விவாகங்கள்கூட சில மாகாணங்களில் நடந்தேறி வருவதாக தெரியவருகின்றது. 1817 ம் ஷத்தில் க்ஷத்திரியர்களுக்குள் காந்தர்வ விவாகம் செல்லத்

தக்கினதுதானென்று வங்காள மாகாணத்தில் ஸதர் கோர்ட்டார் அநேக கேசுகளில் தீர்மானம் செய்திருக்கிறார்கள். அது அப்படிக்கிருந்திடினும் அலகபாத் ஹைகோர்ட்டார் க்ஷத்திரிய வம்சத்தார் காந்தர்வ விவாகம் செய்வது சட்டப்படி செலாவணியுள்ளதல்ல வென்றும் இது வரையில் அவ்விதமான விவாகங்களில் ஏற்பட்ட பெண்சாதிகள் தாசிகளுக்குச் சமானமென்றும் அவர்களுக்குப் பிறக்கும் சந்ததிகள் தாசிகளுக்குச் சமானமானவர்களென்றும் தீர்மானம் செய்திருக்கிறார்கள் (இ-லா-ரி. 3 அ 738). காந்தர்வ விவாகம் செய்யுங்காலையில் ஹோமம் முதலிய சடங்குகள் செய்து விவாகம் நடந்தேறி யிருந்தால் அப்படிப்பட்ட விவாகம் செலாவணியுள்ள தென்று மதராஸ் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (இ-லா-ரி. 12 ம 72; 13 மூ-இ-அ. 506 பார்க்கவும்.) அவ்விதமாய் செய்துகொள்ளும் காந்தர்வ விவாகம் ஹோமம் மந்திரம் முதலிய சடங்குகளுடன் நடந்தேறியதா யிருந்தபோதிலும் அவைகள் ஹிந்து தர்ம ஸாஸ்திரங்களாகிய ஸ்மிருதிகளில் விவரித்துச் சொல்லப்பட்டிருக்கிற காந்தர்வ விவாகமென்று சொல்வதற்கு எவ்வளவு யூகித்துப் பார்த்தபோதிலும் புலப்பட வில்லை.

ஒரு ஹிந்து பெண்ணுக்குத் தக்க புருஷனைப் பார்த்து நேமகம்செய்யும் அதிகாரம் பிரதமத்தில் தகப்பனாருக்குண்டென்றும் அவருக்குபிறகு கிரம வரிசையாய் பிதாமகன், தமையன், சிறியதகப்பன், பெரியதகப்பன், மாமன், தாயாதி இவர்களுக்குண்டென்றும் இவர்களில் யாருமில்லாவிடில் அந்த பெண்ணின் தாயாருக்கு அந்த சுதந்தரமுண்டென்றும், அந்த பெண்ணிற்கு பந்துக்கள் யாரு மில்லாவிடில் தானே அவள் கோறிய புருஷனை விவாகம் செய்துக்கொள்ளலாமென்றும் மிதாக்ஷரம் முதலான தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஹிந்து புருஷன் ஒருவன் அவனுடைய பெண்சாதி குழந்தைகளுடன் குலத்தை விட்டு நீக்கிவிடப்படுவானாகில் அந்தப் பெண்ணின் தாயாரே தன்னுடைய சுயஇச்சையாக அந்தப்பெண்ணுக்கு விவாகம் செய்யலாம் (இ-லா-ரி. 11 பம் 247). ஆனால் மற்றப்படி வேறெந்த விஷயங்களிலும் அந்தப் பெண்ணின் தகப்பனாருடைய அநுமதியில்லாமல் தாயாராவது வேறெந்த பந்துக்களாவது விவாகம் செய்தால் அந்த விவாகம் செல்லத் தக்கினதல்ல. (இ-லா-ரி. 12 பம் 10; இ-லா-ரி. 14 ம 316 பார்க்கவும்.) ஒரு ஹிந்து பெண்ணினுடைய தாயாரின் அநுமதி யில்லாமல் தகப்பனார் அவருடைய குமாரத்திக்கு விவாகம் செய்ய நியாயமுண்டென்று தெளிவாய் யேற்படுகிறது.

ஒரு பெண்ணுக்கு விவாகம்செய்யும்படியான பாத்தியதை தகப்பனாருக் குண்டேயல்லாமல் தாயாருக்கில்லையென்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருப்பவைகளெல்லாம் பாகப்பிறிவினையாகாத அவிபக்த குடும்பத்திற்கு செலாவணியுள்ளதே யல்லாமல் மற்றப்படி விபக்த குடும்பங்களில் அந்த பெண்ணின் பெரியதகப்பன் அல்லது சிறியதகப்பனாருடைய அநுமதிகூட செல்லத்தக் தக்கின தல்லவென்றும் பெண்ணின் தாயாருடைய அநுமதி முக்கியமாய் அவசியமென்றும் தாயாருக்குத்தான் அதிக பாத்தியதை யுண்டென்றும் குடும்பத்திலுள்ள வேறெந்த பந்துக்களுக்கும் ஒரு கன்னிகைக்கு விவாகம் செய்ய அதிகாரம் கிடையாதென்றும் மதராஸ் ஹைக்கோர்ட்டார் 4 ம-ஹை-ரி. 336-ல் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஒரு ஹிந்து பெண்ணுக்கு விவாகம் செய்விக்க ஸபத்தினி மாதாவைவிட மாதா மகனுக்கு (தாயின் தகப்பனாருக்கு) அதிக பாத்தியதை யுண்டென்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (7 ஸ. ரி. 321.)

மேலே கூறியவர்கள் தவிற வேறெந்த பந்துவாவது ஒரு ஹிந்து கன்னிகைக்கு விவாகம் செய்விக்க எத்தனப்பட்டால் அவ்விதமாய் நடத்தப்போகும் விவாகத்தை கோர்ட்டில் மனுசெய்து நிறுத்திவிடலாமென்று இ-லா-ரி. 11 பம் 253-ல், தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஹிந்து பெண்ணை ரக்ஷிப்பவர்கள் கெட்ட எண்ணத்துடன் அந்த கன்னிகைக்கு விரோதமான ஸம்பந்தம் நடத்தி யாதோ ஒரு பிரயோஜனத்தை யடைய வேண்டுமென்கிற கருத்துடன் விவாகம் செய்விக்க பிரயத்தனப்பட்டால் அவ்விதமாய் நடத்தப்போகும் விவாகத்தை கோர்ட்டுமூலமாய் நிறுத்திவிடலாம். ஒரு பெண்ணின் சொந்த தகப்பனே அவ்விதமான துர் எண்ணத்துடன் யாதோ ஒரு பிரயோஜன மடையும்பொருட்டு அந்த பெண்ணுக்கு விரோதமான இடத்தில் விவாகம்செய்விக்க பிரயத்தனம் செய்தால் அதன்விஷயமாய் கோர்ட்டார்கூட சம்மந்தப்பட்டு அவ்விதமான விவாகத்தை நிறுத்துவதற்கு நியாயம்கிடையாது. (இ-லா-ரி. 12 பம் 480.)

ஒரு விவாகத்தை நடத்தலாகாதென்று கோர்ட்டார் உத்தரவுசெய்தபிறகுகூட அந்த உத்தரவைமீறி அவ்விதமான விவாகத்தை நடத்திவிட்டால் கோர்ட்டார் அப்படி விவாகத்தைநடத்தினவர்களை சிட்சை செய்வார்களே யல்லாமல் மற்றப்படி அவ்விதமாய் நடந்தேறியவிவாகத்தை றத்து செய்யமாட்டார்கள். (இ-லா-ரி. 11 பம் 247; இ-லா-ரி. 12 கல் 140; இ-லா-ரி. 14 ம 260.)

ஒரு பெண்ணுக்கு விவாகம் நடந்தேறிய பிறகு அந்த விவாகம் அனுமதி கொடுக்கவேண்டியவர்களுடைய அனுமதி பெறுமல் நடந்தேறியதென்றுவது, அந்த கன்னிகையை வேறொருவருக்கு விவாகம் செய்துகொடுப்பதாக நிட்சய தாம்பூலம் மாத்திரிருந்ததென்றுவது; அந்த பெண்ணுக்கும் விவாகம் செய்துகொடுக்கப்பட்ட புருஷனுக்கும் பொருத்தநிமித்தம் கிடையாதென்றுவது அல்லது அந்த புருஷன் பெருக்தரோகம், பைத்தியம், அல்லது கோஜாத்தனமுள்ளவனென்றுவது காரணங்கள் கூறி அப்படி நடந்தேறிவிட்ட விவாகத்தை றத்து செய்வதற்கு நியாயம் கிடையாதென்று முன் ஹைக்கோர்ட்டில் ஜட்ஜாயிருந்த கற்றுணர்ந்த கனம்பொருந்திய முத்துசாமி ஐயரவர்கள் வெங்கடாச்சாரியார் கேசில் அதன் விஷயமாயுள்ள தர்மசாஸ்திரங்களையெல்லாம் தீர விசாரணைசெய்து தீர்ப்புசெய்திருக்கிறுர் (இ-லா-ரி. 14 ம 316.)

மேற்கூரிய வெங்கடாச்சாரி கேசில் பெண்ணின் தாயார் தகப்பனுடைய அனுமதி பெற்றுதான் விவாகம் செய்வதாக புரோகிதரிடத்தில் பொய்வார்த்தை சொல்லி விவாகத்தை நடத்திவிட்டாள். பிறகு பெண்ணின் தகப்பனுர் அவருடைய அனுமதிபெறுமலேயே தாயார் விவாகத்தை நடத்திவிட்டாளென்று ஆட்சேபித்ததின்பேரில் பெண்ணை விவாகம் செய்துக்கொண்ட மாப்பிள்ளை அவ்விதமாய் நடந்தேறிவிட்ட விவாகம் செல்லத்தக்கினதுதானென்று ஊர்ஜிதம் செய்யும்படிக்கு கோர்ட்டில் தாவாசெய்தார். கனம்பொருந்திய ஜட்ஜ் முத்துசாமி ஐயரவர்கள் இதுவிஷயமாயுள்ள தர்மசாஸ்திரங்களை நன்றுய்ப் பரிசோதித்தறிந்து அவ்விதமாய் நடந்தேறிய விவாகத்தை ஊர்ஜிதப்படுத்தினுர். ஆனுல் ஜனங்கள் இந்த தீர்மானத்தை ஆதாரமாய்க்கொண்டு இனி பெண்ணின் தகப்பனுருடைய அனுமதி பெறுமலேயே விவாகம் நடத்திவிடத் துணிவார்களென்னும் காரணத்தினுல் மேற்கூறிய கற்றுணர்ந்த ஜட்ஜ் அவர்கள் அவ்விதமாய் தகப்பன் அனுமதியில்லாமல் ஒரு பெண்ணுக்கு விவாகம் நடத்தாமலிருக்கும்படி மிக்க சமத்காரமாய் அந்த தீர்மானம் எழுதியிருக்கிறுர்.

ஷை வெங்கடாசாரியார் கேசில் ஏற்பட்ட முக்கியமான அம்சங்களை இதனடியில் காணலாம்:—

ஒரு விவாகம் தர்மசாஸ்திரப்படி முடிவாவதற்கு (1) "கன்னிகாதானம்" (2) "ஸப்தபதி" என்று இரண்டு காரியங்கள் பூர்த்தியாய் நடந்தேறினுல்தான் விவாகம் முடிவானதென்று சொல்வதற்கு நியாயமுண்டு.

(1) "கன்னிகாதானம்" என்றுல் ஒரு கன்னிகையை போஷித்துரக்ஷிப்பவர்கள் அந்த பெண்ணின் க்ஷேமலாபங்களாகிய நல்ல விஷயங்களைக் கோறி நல்லமனதுடன் தக்க புருஷனை விசாரணை செய்து அந்த பெண்ணை விவாகம் செய்துகொடுப்பதுதான் "கன்னிகாதானம்" என்று சொல்லப்படும்.

(2) "ஸப்தபதி"யென்றுல் ஒரு கன்னிகையை விவாகம் செய்துகொடுக்கும்போது மாப்பிள்ளை அந்த பெண்ணினுடைய கையின் சுண்டுவிரலைப் பிடித்துக்கொண்டு ஹோமகுண்டத்தைச் சுற்றி அக்கினிக்கெதிரில் மந்தரபூர்வங்களை உச்சரித்து தர்மஸாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடி ஏழடி எடுத்துவைத்து நடக்கிறதுதான் "ஸப்தபதி" யென்று சொல்லப்படும். இவ்விதமாய் ஒரு விவாகம் நடந்தேறிவிட்டால், பிறகு அவ்விதமாய் நடந்தேறின விவாகத்தை றத்து செய்யலாகாது. ஒரு பெண்ணை ரக்ஷிப்பவர்கள் மேற்கூறியவண்ணம் விவாகம் செய்துகொடுத்துவிட்டால் அந்தவிவாகத்தை என்னகாரணத்தினுலும்மாற்றுவதற்கு நியாயமில்லையென்று முடிவானசட்டம் யேற்பட்டிருக்கிறது. ஒருபெண்ணை மோசஞ்செய்து பலவத்காரமாய் கட்டாயப்படுத்தி கொண்டுபோய் விவாகம் நடந்தேறிவிட்டால் அப்படிப்பட்டவிவாகம் "ஸப்தபதி" முதலான கிரியைகளுடன் செய்யப்பட்டதென்று ருஜுசெய்யப்பட்டாலும் சட்டப்படி செலாவணியுள்ள தல்லவென்று தீர்ப்பாயிருக்கிறது. ஏனென்றுல் ஒருபெண்ணை ரக்ஷிப்பவர் எதிரில்லாமல் அவருடைய சம்மதமின்றி நடந்தேறிய விவாகத்தில் கன்னிகாதானமில்லையாகையால் "ஸப்தபதி" முதலான கர்மம் நடந்தேறியதென்று சொன்னபோதிலும் அது செலாவணியுள்ளதாக விவாக சம்பந்தமுள்ளதென்று ஏற்படாது. மேற்கூறியிருக்கும் வெங்கடாச்சாரிகேசில் ஒரு பெண்ணை போஷித்து ரக்ஷித்துவந்த தாயார் அந்தகன்னிகையின்க்ஷேமத்தைக்கோறி நிஞ்சித்தாகிலும் துர்எண்ணமில்லாமலும் பலவத்காரமில்லாமலும் அந்த பெண்ணுக்குத்தகுந்த புருஷனைப்பாரத்து நிட்சயம்செய்து அவளுடைய பெண்ணுக்கு விவாகம் செய்யப்பட்டதென்று நம்பிக்கை யுண்டாகும் பட்சத்தில் அவ்விதமாய் நடந்தேறிய விவாகம் கிரமமாய் நடத்தவேண்டிய கன்னிகாதானம், ஸப்தபதி முதலிய கிரியைகள் செய்து தான் விவாகம் நடந்தேறியதாக பாவிக்கப்பட்டு புருஷனுடைய சம்மதமின்றி விவாகத்தை நடத்தியது தர்மஸாஸ்திரத்திற்கு விரோதமாயிருந்திடினும் விவாகம் நடந்தேறியபிறகு அந்த விவாகத்தை றத்து செய்வதற்கு நியாயம் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. விவாகம் பூர்த்தியாவதற்கு மேற்கூறிய கன்னிகாதானம், ஸப்தபதி இந்த இரண்டு அம்சங்கள் முக்கியமாய் நடந்தேறவேண்டியதென்று ஏற்படுகிறது. கோர்ட்டார் அந்த விவாகம் கிரமமாய் செய்யப்பட்டதாகத்தான் எண்ணுவார்கள். அப்படி கிரமமாய் நடந்தேறவில்லையென்று சொல்பவர்தான் அதை ருஜுசெய்யவேண்டியவராவார். (இ-லா-ரி. 12 கல் 140.)

(இன்னும் வரும்.)

DIALOGUE

சம்பாஷணை.

இடம்:—மதராஸ் ஹைக்கோர்ட்டு—வக்கீலாபீஸ்.

(1917-ம்ஹு பிப்ரவரிமீ 1-ம் பாகம்
27-ம் பக்கத் தொடர்ச்சி.)

போன்னம்பலம்:—வக்கீல் அவர்களே காலை வந்தனம் ஐயா!

வக்கீல்:—காலைவந்தனம், என்ன விசேஷம்.

போ:—முன் சிவில்கோர்ட்டு நடவடிக்கையில் "டிக்ரி" என்பதற்கு என்ன அர்த்தமோ அதை எனக்குத் தெரியச் சொன்னீர்களே! இன்னும் சிவில் புரோஸீஜர் கோடில் என்னென்ன மொழிகள் உபயோகப்படுகின்றனவோ அவைகளின் பொருளையும் எனக்கு வியாக்கியானத்துடன் தயவுசெய்து சொல்லுங்கள் ஐயா!

வ.—சிவில் புரோஸீஜர் கோடின் 2-வது பிரிவு 3-வது உட்பிரிவை எடுத்து வாசியும்:—

[மேற்கூறிய உட்பிரிவு வாசிக்கப்பட்டது.]

வ:—அதில் "Decree-holder" (3) என்று சொல்லப்பட்டிருக்கும் பதத்திற்கு பொருள் என்னவென்றுல்:—ஒரு சிவில் கோர்ட்டில் எந்த நபருக்கு அனுகூலமாய் டிக்ரி அல்லது நிறைவேற்றலுக்குறித்தாய் ஒரு உத்தரவு செய்யப்படுகின்றதோ அந்த நபரைத்தான் "டிக்ரிதாரன்" என்று சொல்லப்படும். பழய சிவில் புரோஸீஜர் கோடில் "எந்த நபருக்கு அப்படி செய்யப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவு மாற்றி விடப்படுகின்றதோ (Transferred) அப்படிப்பட்ட நபர்கூட டிக்ரிதாரனென்று அர்த்தமாகுமென்று சொல்லியிருந்தது" ஆனுல் இப்பொழுது அமுலிலிருக்கும் புது சிவில் புரோஸீஜர் கோடில் அந்த பதங்களை இந்த உட்பிரிவிலிருந்து எடுத்துவிட்டார்கள். ஒரு டிக்ரிதாரன் மாற்றிவிட்ட (ட்ரான்ஸ்பர்செய்துவிட்ட) டிக்ரியின் பலனை அவரிடத்திலிருந்து ட்ரான்ஸ்பர் (Transfer) பெற்றவர் புது கோடின் 146-வது பிரிவின்கீழ் டிக்ரியை நிறைவேற்றி அந்த டிக்ரியின்கீழ் அடையவேண்டிய பரிகாரத்தைப் பெறலாமென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது.

அதன்கீழிருக்கும் பிரிவை வாசியும்:—

[உட்பிரிவு வாசிக்கப்பட்டது.]

வ:—அதில் "District" (4) என்று சொல்லப்பட்டிருக்கும் பதத்திற்கு அசல்விசாரணை செய்வதற்கு யோக்கியதையுள்ள இதற்குப்பின் "District Court" ஜில்லா கோர்ட்டென்று சொல்லப்படும் பிரதான சிவில் கோர்ட்டின் அதிகாரவறம்பிற் குள்பட்ட பிரதேச எல்லைகளுக் குள்ளிருக்கும் ஜில்லா என்று அர்த்தமாகும்.

இதில் சாதாரணமாய் அசல்விசாரணை நடத்திவரும் ஹைக்கோர்ட்டின் சிவில் அதிகார வறம்பிற்குட்பட்ட பிரதேச எல்லைகளென்றும் அர்த்தமாகும்.

அதன் கீழிருக்கும் உட்பிரிவை வாசியும்:—

[வாசிக்கப்பட்டது.]

போ:—ஐயா! அதில் பிரதேச கோர்ட்டென்று சொல்லப்பட்டிருக்கிறதே அதை எனக்கு நன்றுய் அர்த்தமாகும்படி தயவுசெய்து சொல்லுங்கள் ஐயா!

வ:—"Foreign Court" (5) "பாரேன் கோர்ட்டு":—பிரிட்டிஷ் இந்தியாவின் அதிகாரத்திற்குள்பட்ட பிரதேச எல்லைகளைச் சேரமல் வெளியேயிருக்கும் கோர்ட்டென்று அர்த்தமாகும். அந்த கோர்ட்டாருக்கு பிரிட்டிஷ் இந்தியாவில் அதிகாரம் கிடையாது. அப்படிப்பட்ட கோர்ட்டு ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் ஏற்படுத்தப்பட்டதல்ல.

இங்கிலாந்திலிருக்கும் மந்திராலோசனைசபையாருக்கு (Privy Council) பிரிட்டிஷ் இந்தியாவில் அதிகாரவறம்புண்டாகையால் அதை (Privy Council) பாரென் கோர்ட்டென்று சொல்லலாகாது. ஆனுல் இங்கிலாந்திலுள்ள மற்ற கோர்ட்டுகளெல்லாம் பாரென் கோர்ட்டுகளென்றுதான் சொல்லவேண்டும். 8 B. 571 Bowles v. Bowles.

"Foreign Judgment" (6) பாரென் தீர்மானமென்பது ஒரு பாரென் கோர்ட்டாருடைய தீர்மானமென்று பொருள்படும்.

ஒரு பாரென் தீர்மானம் பிரிட்டிஷ் இந்தியாவில் எப்பொழுது ஒரு வியாஜ்ஜியத்திற்கு தடங்கலுண்டாகச் செய்யுமென்பதற்கு புது சிவில்

புரோஸீஜர் கோட் 13-வது பிரிவைப்பார்க்கவும். பர்ரென் தீர்மானங்களைப்பற்றி என்னென்ன யூகித்துக்கொள்ளத்தக்கதோ அவைகளை 14-வது பிரிவில் காணலாம். அதன்கீழ் வாசியும்.

அதனடியிலுள்ளபிரிவு வாசிக்கப்பட்டது:-

வ:—"Government Pleader" (7) "கவர்ன்மென்ட் பிளீடர்" கவர்ன்மென்ட் தரப்பில் இந்த கோடில் சொல்லப்பட்டிருக்கும் தொழில்களைச் செய்வதற்கு லாயராய் வேலை பார்க்கும்படி பிரதேச கவர்ன்மென்ட்டாரால் நேமிக்கப்பட்ட உத்தியோகஸ்தரென்றும் அவ்விதமாய் ஏற்படுத்தப்பட்ட கவர்ன்மென்ட் ப்ளீடருடைய உத்தரவுகளின்கீழ் வேலைபார்த்துவரும் ஓர் நபரென்றும் அர்த்தமாகும். பிரதேச கவர்ன்மென்ட்டாரால் இவ்விதமாய் நேமிக்கப்படும் உத்தியோகஸ்தர் 15-வது உட்பிரிவில் விவரித்திருக்கிறபடி ஒரு லாயராய் (Pleader) இருக்கவேண்டுமென்பது அவசியமாக தோற்றவில்லை. கவர்ன்மென்ட் லாயர் (Government Pleader) இந்த கோடின்படி என்னென்ன தொழில்களைச் செய்யவேண்டுமென்பதைப்பற்றி வெளிப்படையாய் புது சி. பு. கோ 27-வது உத்தரவு 4-வது விதியிலும்) (Rule 4); 33-வது உத்தரவு 9-வது ரூலிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

போ:—ஒரு சிவில் கோர்ட் ஜட்ஜ் என்று சொல்லப்பட்டவர் யார் ஐயா!

வ:—ஒரு சிவில் கோர்ட்டில் தலைமை உத்தியோகஸ்தராயிருப்பவர் நியாயாதிபதி (Judge-ஜட்ஜ்) (8) என்று சொல்லப்படுவார்.

17-வது உட்பிரிவில் விவரித்திருக்கிறபடி ஒரு "ஜட்ஜ்" கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தரென்று சொல்லப்படும் ஒரு பப்ளிக் உத்தியோகஸ்தர்.

ஒரு ஜட்ஜ் தன்னுடைய தொழில்களை நல்ல எண்ணத்துடன் செய்வதில் யாதோ ஒரு செய்கையைச் செய்தாரென்று அவர்மீதில் நஷ்டத்திற்கு தாவாகொண்டுவர நியாயம்கிடையாது. நரசய்யா v. ஸ்டுயெர்ட் (Stuart) 2-ம ஹை-ரி. 396; (Teyen) டியென் v. ராம்லால் இ-லா-ரி. 12 அ 115. ஆனால் அவர் (Judge) சட்டத்திற்கு விரோதமாய் கவனமின்றி அஜாக்கிரதையாய் அவருடைய அதிகாரவறம்பிற்கு மீறி அக்கிரமமான செய்கைகளைச் செய்வாராகில் அவர்பேரில் நஷ்டத்திற்காக தாவாசெய்ய நியாயமுண்டென்று கலெக்டர் v. சிதம்பரம் இ-லா-ரி. 1 ம 89-லும்; Sinclair v. Broughton இ-லா-ரி. 9 கல் 341-லும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இதன் கீழுள்ள பிரிவை வாசியும்:—

[வாசிக்கப்பட்டது.]

வ:—"Judgment" (9) ஜட்ஜ்மேன்ட்-தீர்மானம்:—ஒரு ஜட்ஜ் செய்யும் டிக்ரி அல்லது உத்தரவிற்கு ஆதாரங்களாக என்னென்ன முகாந்திரங்களை அவர் எடுத்துக் கூறுகின்றாரோ அவைகள்தான் (Judgment) தீர்மானமென்று சொல்லப்படும். அப்படிசெய்யப்படும் தீர்மானத்தில் என்னென்ன அடங்கியிருக்க வேண்டுமென்பதைப்பற்றி 20-வது உத்தரவு 4-வது ரூலைப் பார்க்கவும். தீர்மானங்களை தித்தபாடு செய்வதைப்பற்றி என்ன விதியோ அதை சி. பு கோ. 152-வது பிரிவைப் பார்க்கவும்.

அதன் கீழிருக்கும் பிரிவை வாசியும்:—

[வாசிக்கப்பட்டது.]

வ:—"Judgment debtor" (10) ஜட்ஜ்மேண்ட் டேட்டார், "தீர்ப்புகடனாளி" என்பது யார்பேரில் டிக்கிரி அல்லது நிறைவேற்றுதலுக் குறித்தான உத்தரவு செய்யப்படுகிறதோ அப்படிப்பட்ட நபரென்று அர்த்தமாகும். சிவில் புரோஸீஜர் கோடு 143-வது பிரிவைப் பார்க்கவும்.

மேலுக்கு வாசியும்:—

[வாசிக்கப்பட்டது.]

வ:—"Legal representative".—(11) "சட்டப்படி யேற்படும் வார்சு" என்பது காலம் சென்ற ஒரு நபருடைய சொத்திற்கு சட்டப்படி யார் சுதந்தரவாளியாக யேற்படுகிறாரோ அவரென்றும்; மரணமடைந்த ஒரு நபரின் சொத்து தன்னுடைய தென்று வாதித்து யார் வியாஜ்ஜிய மாடுகிறாரோ அவரென்றும், காலம் சென்ற ஒரு நபரின் சொத்துக்கு யார் சுதந்தரவாளியென்று தாவா கொண்டு வருகிறவரென்றும், யார்பேரில் தாவா செய்யப்படுகின்றதோ அவரென்றும் அர்த்தமாகும்.

புது சிவில் புரோஸீஜர் கோடில் விவரிக்கப்பட்டிருக்கும் மேலே கூறிய விவரணம்-பியாமணி v. எல ஹாடட் 8 க-வீ-நோ. 843; ஆமார் v. ஸேபக் இ-லா-ரி. 34 கல் 642, 652-ல் செய்யப்பட்டிருக்கும் தீர்மானங்களை யனுசரித்து இந்த புது விவரணம் செய்யப்பட்டது. "வார்சு" என்பதைப் பற்றி சாத்தகேலன் v. கோவிந்தா இ-லா-ரி. 17 ம 186லும். குனி v. ஆல்மரண்ட் இ-லா-ரி. 30 கல் 1045-லும், சொல்லப்பட்டிருக்கும் விவரணங்கள் இப்பொழுது செல்லத்தக்கினவைகளல்ல. சட்டப்படிக்கு யேற்படும் வார்சு என்பதைப்பற்றி 50-வது பிரிவின் கீழ் பார்க்கவும்.

அதன் கீழுள்ள பிரிவை வாசியும்:—

[வாசிக்கப்பட்டது.]

வ:—"Mesne profits" (12)—"மாசூல்கள்" என்பதற்கு, யாராவது ஒரு நபர் ஒரு சொத்தை சட்டத்திற்கு விரோதமாக அக்கிரமமாய் அனுபவித்து வாஸ்தவமாய் அதிலிருந்து அடைந்த பலன்களென்றும் அல்லது தக்க முயற்சி செய்து அடையக்கூடிய பிரதி பலன்களென்றும் அவ்விதமாயடையும் அல்லது அடையக்கூடுமான பலன்களின்மேல் ஏற்படும் வட்டியும் அதைச்சேர்ந்ததென்றும் அர்த்தமாகும். ஆனால் அவ்விதமாய் சட்டத்திற்கு விரோதமாக அக்கிரமமாய் ஒரு சொத்தை அனுபவிப்பவர் அந்தசொத்தை விருத்தி செய்து அவ்விதமாய் அவரால் செய்யப்பட்ட விருத்திகளினால் அவரடையும் பிரதி பலன்களை இவ்விதமான மாசூல்களாக அர்த்தம் செய்யலாகாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமான மாசூல்களுக்காக செய்யப்படும் டிக்கிரி செய்வதற்காக பழய கோடில் (Act XIV of 1882) 211-வது பிரிவில் சொல்லப்பட்டிருந்த விவரணங்களைப் பற்றி புது கோடின் 20-வது ஆர்டர் 12-வது ரூலைப் பார்க்கவும். (The word Mesne implies a terminus *ad quem* as well as *a quo*—வினாய்க் v. ஆபாஜி, இ-லா-ரி. 12 பம் 416 பார்க்கவும்).

ஒரு வியாஜ்ஜியத்தின்பிரதிவாதி ஒரு சொத்தை சட்டத்திற்கு விரோதமாக அக்கிரமமாய் அனுபவிப்பதாக ருஜுவாகாமல் யாதோ ஒரு ஹக்கு பாத்தியதையைக் கொண்டு அனுபவிப்பதாக ருஜுவாகும்பட்சத்தில் இந்த உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கு மாசூல்களுக்கு (Mesne profits) தாவா செய்வதற்கு நியாயமில்லையென்று சுப்பய்யர் v. ரங்கா 9 ம-லா-ஜ-ரி. 163-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சொத்தை சட்டத்திற்கு விரோதமாக அக்கிரமமாய் அனுபவிக்கிறவரென்று சொல்லப்படுகிறவர் அவர் அந்த சொத்தில் எவ்வளவு விஸ்தீரணம் அக்கிரமமாய் அனுபவிப்பதாக ருஜு ஏற்படுகிறதோ அவ்வளவுமட்டுக்குமாத்திரந்தான் அவர் அக்கிரமமாய் அனுபவிப்பவராக பந்தப்பட்டவராவாரென்று அபாஸ். v. பவீஷ் உடீன் இ-லா-ரி. 24 கல் 413-ல் தீர்மானித்திருக்கிறார்கள். பிரதிவாதி ஒரு சொத்தை எவ்வளவு காலம் வரையில் வாஸ்தவமாய் அனுபவித்து அதன் பலன்களை பெற்றாரோ அல்லது பெறக்கூடியவராயிருந்திருப்பாரோ அவ்வளவுகாலத்திற்கு மட்டுந்தான் அவர் அந்த மாசூல்களைச் செலுத்த பந்தப்பட்டவராவாரே யல்லாமல் மற்றப்படி அவர் அந்த சொத்தை எவ்வள்வுகாலம் அனுபவியாமல் விலகியிருந்தாரோ அவ்வளவு காலத்திற்கு அவர் அந்த சொத்தை சட்டத்திற்கு விரோதமாக அக்கிரமமாய் அனுபவித்தவராக சொல்லப்படமாட்டாரென்று இ-லா-ரி. 24 கல் 413, 416-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஒருவர் ஒரு சொத்தை சட்டத்திற்கு விரோதமாக அக்கிரமமாய் அனுபவித்ததினால் எவ்வளவு மாசூல் வசூல் செய்திருப்பார் அல்லது அவர் அந்த சொத்தை சரியாய் பரிபாலனம் செய்து எவ்வளவு மாசூல் வசூல் செய்திருக்கக்கூடு மென்பதைப்பற்றி கோர்ட்டார் யோசிக்கவேண்டிய நிமித்தமில்லை. ஆனால் முக்கியமாய் கோர்ட்டார் யோசிக்கவேண்டிய அம்சம் யாதெனில் டிக்ரிதாரர் அந்த சொத்தை அனுபவிக்கவொட்டாமல் அக்கிரமமாய் சொத்தின் அனுபிவத்திலிருந்து விலக்கப்படாமலிருப்பாராகில் அவர் (டிக்கிரிதாரர்) அந்த சொத்திலிருந்து எவ்வளவு மாசூல் வசூல் செய்திருப்பாரென்பதை தான் ஆலோசிக்க வேண்டியது. (லக்கி v கள்ளி இ-லா-ரி. 4 கல் 882; 5 W. R. Mis 37 பார்க்கவும்).

ஒரு நிலத்தை அனுபவிப்பவன் அந்த நிலத்தில் தூலங்களாக உபயோகப்படும் வெட்டுமரங்கள் பயிரிட்டு அம்மரங்களை வெட்டி விற்பனை செய்து அதனால் அடையும் பலன்கள் "மாசூல்கள்" (Mesne profits) என்று தான் சொல்லப்படுமென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். தோட்டத்தில் v. மேதாடத் 8 ம-லா-ஜ-ரி. 273; 2 W. R. Mis. 50.

ஒரு சொத்தை அனுபவிப்பவர்கள் துர் எண்ணத்துடன் அதைக்கைப்பற்றி யில்லாவிடினும் அந்த சொத்திலிருந்து அவர்களுடையும் பலன்களை அவர்கள் கொடுக்க பந்தப்பட்டவர்களாவார்கள். 10 W. R. 486 (Bajjnath v. Badhoo) வட்டிக்குப்பதிலாய் கொடுக்கவேண்டிய மாசூல்கள் டிக்ரியின்கீழ் ஏற்படும் மாசூல்களை கணக்கிட்டுத் தெரிந்துக்கொண்டபிறகு கொடுக்வேண்டிய வட்டி யென்பதாய் அர்த்தம் செய்யலாகாது. ராதாராமன் v. சுர்ணமாயி இ-லா-ரி, 30 கல் 507; இ-லா-ரி. 25 அ 275 (நார்பட் v. ஹார்) ஒரு டிக்கிரியில் மாசூல்கள் கட்டிக் கொடுக்கவேண்டியதென்று மாத்திரம் கண்டிருந்து வட்டியைப்பற்றி யாதொன்றும் சொல்லி யில்லாவிடில் டிக்கிரியில் கண்டபடி மாசூல்களை தீர்ப்புக் கடனாளி டிக்கிரிதாரருக்குச் செலுத்தும் வரையில் அவர் கொடுக்கவேண்டிய மாசூல்களுக்கும் வட்டி கட்டிதான் செலுத்தவேண்டியதென்று கிரிஷ் v. ஸோஷி இ-லா-ரி. 33 கல் 329; ராம் v. மாதன் இ-லா-ரி 21 அ 425, 32 புல்பெஞ்ச் கேஸ் தீர்மானித்திருக்கிறார்கள். வட்டி கட்டி கொடுக்கவேண்டுமா இல்லையா யென்று உத்தரவு செய்வது கோர்ட்டாருடைய யுக்தா யுக்தமான இஷ்டத்தின்படி தானென்று சொல்லவேண்டும். கிருஷ்ணாநந்த v. குண்வார் இ-லா-ரி. 10 கல் 785. டிக்கிரியின் கீழ் உத்தரவு செய்யவேண்டிய வட்டி வீதம் 100-க்கு 6 வீதமாய் தானிருக்கவேண்டும். அருணாசலம் v அருணாசலம் இ-லா-ரி. 15 ம 203. அப்படி வட்டி கட்டிக்கொடுக்கவேண்டுமென்பதும் மூன்று வருஷங்களுக்கு அதிகப்படலாகாதென்றும் அல்லது அந்த மூன்று வருஷங்களுக்குள் சொத்தை ஸ்வாதீனம் செய்யும்வரையிலென்றுதான் டிக்ரி செய்யலாமென்றும் கிரிஷ் v. ஸோஷி இ-லா-ரி. 27 கல் 951 பிரிவிகவுன்சில் கேசில் தீர்மானித்திருக்கிறது.

(இன்னும் வரும்.)

MISCELLANEOUS SUITS.

நானாவிதமான வியாஜ்ஜியங்கள்.

DISTRICT & SESSIONS COURT OF SALEM.

சேலம் ஜில்லா ஸெஷன்ஸ் கோர்ட்டு.

சேலம் ஜில்லா ஸெஷஸ் ஜட்ஜ் முன்பாக.—

ஒரு டிப்டி மாஜிஸ்ட்ரேட்டை மிக்க கடினமாய் கண்டித்தல்.

நெ. 6.

லாப்பாயின்ட் :—ஒரு கிரிமினல் கேசில் எதிரி (குற்றவாளி) தன்னுடைய சாக்ஷிகளை சம்மன் செய்து கோர்ட்டில் ஆஜர் செய்திருந்தால் மாஜிஸ்ட்ரேட் அந்த சாஷிகளை வரவழைத்து விசாரணை செய்யாமல் கேசை முடித்து விடலாகாதென்றும், அப்படிப்பட்ட சாக்ஷிகளிடத்தில் முச்சிலிக்கா வாங்கி வரவழைத்து விசாரணை செய்யவேண்டியது அவசியமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வியாஜ்ஜிய சங்கிரஹம்:— அப்பாவு கவுண்டனென்னும் அர்த்தனாரி கவுண்டன் என்பவன் இந்தியன் பினல் கோட் 211-வது பிரிவின்கீழ் சங்கரி முதல் கிலாஸ் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் அவர்களால் குற்றவாளி யென்று தீர்மானிக்கப்பட்டு ஆறு மாத கடினகாவலிலிருக்கும்படி சிக்ஷை விதிக்கப்பட்டான். எதிரி (குற்றவாளி) அந்த தீர்மானத்தின் பேரில் சேலம் ஸெஷன்ஸ் ஜட்ஜுக்கு அப்பீல் செய்துக்கொண்டான். அப்பீலில் எதிரி தரப்புவக்கீல் சாக்ஷி சம்மன் செய்து கோர்ட்டில் ஆஜராயிருந்த சாட்சிகளை டிப்டி மாஜிஸ்ட்ரேட் அவர்கள் நிறுத்தி வைக்கப்பட்ட விசாரணை தேதியில் ஆஜராகும்படி கட்டாயப்படுத்துவதற்கு அவர்களிடத்திலிருந்து முச்சிலிக்கா பெறவேண்டியது அவசியமல்லவென்று நிராகரித்து விட்டது சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கை யென்று வாதித்தார். அதன்பேரில் டிப்டி மாஜிஸ்ட்ரேட் அவர்கள் அவ்விதமாய் நடந்தது வாஸ்தவம்தானென்பதை ருஜு செய்வதற்கு ஒரு பிரமாணப் பத்திரிகை (Affidavit) தாக்கல் செய்யும்படிக்கு கீழ்கோர்ட்டில் ஷை கேசை நடத்தின சேலம் Mr. N. சீனிவாசய்யர் என்பவருக்கு ஸெஷன்ஸ் ஜட்ஜ் உத்தரவனுப்பினார். அவர் அப்படியே ஒரு பிரமாண பத்திரிகை தாக்கல் செய்தார் அதன்பேரில் ஸெஷன்ஸ் ஜட்ஜ் அவர்கள் அந்த பிரமாணப் பத்திரிகையில் கண்டிருந்த விஷயங்களைப் பற்றி ரிப்போர்ட்டு செய்யும்படி உத்தரவு செய்தார். டிப்டி மாஜிஸ்ட்ரேட் அவர்கள் பிரமாணப் பத்திரிகையில் செப்பியிருந்த சில விஷயங்கள் சுத்த பொய் யென்று ரிப்போர்ட்டு செய்தார். அதன்மேல் ஸெஷன்ஸ் ஜட்ஜ் அவர்கள் கீழ்கோர்ட்டு வக்கீல் அதன் விஷயமாய் இன்னும் என்ன சொல்ல விரும்புகின்றாரோ அதை தெரிவிக்கும்படி உத்தரவு செய்தார் அவரும் அப்படியே இன்னொரு ஸ்டேட்மென்ட் அனுப்பினார். ஸெஷன்ஸ் ஜட்ஜ் அவர்கள் அப்பீல் வாதியின் வக்கீல் Mr. Y. K. சேஷய்யர், பப்ளிக் ப்ராசிக்யூடர் Mr. M. D. சுப்பய்யர் இவர்களுடைய வாதங்களைக் கேட்டுக்கொண்டு கீழ்கோர்ட்டார் எதிரி குற்றவாளி தானென்று தீர்மானிக்கப்பட்டு அவன் பேரில் விதிக்கப்பட்ட சிட்சையை ரத்து செய்துவிட்டு அப்பீல் வாதியை விடுதலை செய்யும்படிக்குத் தீர்மானம் செய்தார் அந்த தீர்மானத்தின் 2-வது பாராவில் இந்த கேசுக்கு ஒற்றுமையாய் பின்வருமாறு சில விஷயங்கள் கண்டிருந்தன அவைகளாவன:

அப்பீல் க்ரவுண்டுகள் (Grounds) ஒன்றில் எதிரி (குற்றவாளி) மாஜிஸ்ட்ரேட்டின் முன்பாக அவனுடைய பிரியாதில் சொல்லியிருந்த விஷயங்கள் வாஸ்தவம் தானென்று ரூபிப்பதற்குப் போதுமான சாவகாசம் (டயம்) கொடுக்கவில்லையென்று சொல்லியிருந்தது. மாஜிஸ்ட்ரேட் அவர்கள் எதிரியின்சாட்சிகளை சம்மனனுப்பி வரவழைத்து அவர்களை நிறுத்திவைக்கப்பட்ட விசாரணைதேதியில் ஆஜராகும்படிக்கு அவர்களிடத்திலிருந்து முச்சிலிக்கா பெறுவது அவசியமல்லவென்று நிராகரித்துவிட்டு எதிரி தரப்பில் சம்மனனுப்பி ஆஜராயிருந்த ஏழு சாக்ஷிகளில் மூன்று சாட்க்ஷிகளை மாத்திரம் விசாரித்துவிட்டு கேசில் கடசியாய் தீர்மானம் சொல்லி விட்டாரென்று எதிரி (குற்றவாளி) முறையிட்டுக்கொண்டான் எதிரி தரப்பில் கீழ் கோர்ட்டில் கேசை நடத்தினவர். எதிரி சொல்வது வாஸ்தவம்தானென்று பிரமாணப் பத்திரிகையும் தாக்கல் செய்தார். அந்த பிரமாண பத்திரிகையை மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பி அதில் கண்டிருந்த விஷயங்களைப் பற்றி அவர் என்ன சொல்லவேண்டியதிருந்ததோ அதையும் தெரிந்துக் கொள்ளப்பட்டது. மாஜிஸ்ட்ரேட் அந்த பிரமாணப் பத்திரிகையில் கண்டிருந்த சில விஷயங்களெல்லாம் சுத்த பொய்யென்று தெரிவித்தார். ஆனால் மாஜிஸ்ட்ரேட் சொன்ன சில பேச்சுகள் துர்ப்பாக்கியமாய் முழுதும் பிசகென்று யேற்பட்டது. அதற் சுத்தாட்சியாய், மாஜிஸ்ட்ரேட் அவருடைய (2-1-17 தேதியுள்ள) கடிதத்தின் இரண்டாவது பாராவில் எதிரி தரப்பு சாட்சிகளை அவர் சம்மனனுப்பி வரவழைக்கவில்லை யென்று செல்லுகிறார். ஆனால் கேசிலுள்ள ரெக்கார்டுகளை உதசரிக்கையில் அந்த சாட்சிகளுக்கு சம்மனனுப்பி வரவழைக்கப் பட்டதாய் ஏற்படுகின்றது. ரெக்கார்டிலிருக்கும் விஷயத்தைப் பப்ளிக் ப்ராசிக்யூடர் மாஜிஸ்ட்ரேட்டுக்கு எடுத்துக் காண்பித்தபோது மாஜிஸ்ட்ரேட் தன்னுடைய குமாஸ்தா ஆபீஸ் வேலையின் மாமூலைப்போல அவருடைய (மாஜிஸ்ட்ரேட்டின்) உத்தரவில்லாமலேயே சம்மன்கள் எழுதி பிறப்பித்திருக்கலாமென்று மறு உத்தரம் கூறினார். அது எப்படிக்கிருந்திடினும் எதிரியின் சாட்சிகளுக்கு பிரதமத்தில் சம்மனனுப்பி அவர்களை வரவழைக்கப்பட்டதென்னும் பேச்சு வாஸ்தவமென்று ஏற்படுகிறது. ஆகையால் மாஜிஸ்ட்ரேட் அந்த சாட்சிகளுக்கு சம்மனனுப்பி வரவழைத்திருப்பதால் அவர்கள் கேசு நிறுத்திவைக்கப்பட்ட தேதியில் ஆஜராகவேண்டுமென்று அவர்களிடத்திலிருந்து முச்சிலிக்கா வாங்கியிருக்கவேண்டுமென்பது அவர் சட்டப்படி கட்டாயமாய் செய்திருக்க வேண்டிய விசெம்தான். (இதற் காதாரமாய் இ-லா-ரி. 10 கல் 931 ; இ-லா-ரி. 30 கல் 121 பார்க்கவும்.)

கடைசி விசாரணை தேதியில் மற்ற சாட்சிகளை விசாரிக்கவேண்டிய அவசியமில்லை யென்று எதிரி தரப்பு வக்கீல் எதிரியின் விவரணப் பத்திரிகையின் மேல் ஒரு குறிப்பு எழுதினாரென்பது சந்தேகமின்றி வாஸ்தவம்தான். ஆனால் அவர் (எதிரி தரப்பு வக்கீல்) இப்போது சொல்வதென்னவென்றால் மற்ற சாட்சிகளை வரவழைத்து விசாரிப்பதற்காக மாஜிஸ்ட்ரேட் கேசை நிறுத்தி வாய்தா கொடுக்கமாட்டேனென்று பரிஷ்காரமாய் நிராகரித்து விட்ட பின்புதான் அவர் அந்தக் குறிப்பை எழுதினதாக சொல்கிறார். இது இப்படிக்கிருக்க மாஜிஸ்ட்ரேட்டின் சவுகரியத்திற்காக அவர் கேசை நிறுத்தி வைக்க வேண்டுமென்பதாய்ச் சொன்னதாக வக்கீல் தான் சுதாவாய் நினைத்துக் கொண்டாரென்றும் எதிரி வக்கீலே கேசை நிறுத்தி வைக்க வேண்டாம் அன்றையதினமே கேசை முடித்து பைசல் செய்து விடுங்களென்று கேட்டுக் கொண்டாரென்றும் மாஜிஸ்ட்ரேட் சொல்கிறார். இப்படி அவர் (வக்கீல்) சொல்லியிருப்பாரென்று எனக்குத் தோன்றவில்லை. ஆனால் கடைசி விசாரணை தேதியில் வாஸ்தவமாய் என்ன நேரிட்டதோ அதைப்பற்றி மாஜிஸ்ட்ரேட் சொல்வது சரியா அல்லது வக்கீல் சொல்வது சரியா யென்பதைப் பற்றி எனக்குத் திருப்திகரமாய் ஏற்படவில்லை.

மாஜிஸ்ட்ரேட்டுக்கும் வக்கீலுக்கும் நேரிட்ட விஷயங்களைப் பற்றி ஒருவருக்கொருவர் ஒவ்வாமல் இவ்விதமாய்ப் பேசுவது மிக்க துர்ப்பாக்கியமாயிருக்கிறது. எதிரி (குற்றவாளி) தன்னுடைய கேசை ருஜு செய்வதற்குப் போதுமான சட்டப்படிக்குள்ள சாவகாசம் தனக்கு கொடுக்கப்படவில்லை யென்னும் அந்த காரணத்தைக்கொண்டே அவன் பேரில் இ-பி-கோ. 211-வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட சிட்சையை ரத்து செய்ய வேண்டியதென்றும் வாதிக்கும் வாதத்திற்குத் தக்க முகாந்தரமிருப்பதாக எனக்கு திருப்திகரமாய் புலப்படவில்லை.

கேசில் சொல்லப்பட்டிருக்கும் விபரங்களினாலேயே கேசின் சந்தர்ப்பங்கள் நன்றாய் விளங்குவதால் அவைகளைப்பற்றி வியாக்கியானித்துச் சொல்வது அனாவசியமென்று எனக்குத் தோன்றுகிறது.

Madras High Court.

மதராஸ் ஹைகோர்ட்டு.

நெ. 7.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர். / மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர். }

A DEFAMATION APPEAL.

மான நஷ்டத்திற்காக கொண்டுவந்த கேசில் அப்பீல்.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—1912-ம் ௵ ஆகஸ்ட் ௴ ஸ்டான்டெர்ட் (Standard) பேப்பருக்கு வர்த்தமான மெழுதும் மிஸ்டர் N. P. சுப்பிரமணிய ஐயர் என்பவர் சில வக்கீல்கள் கேசுகளை நடத்துவதைப்பற்றி மதராஸ் ஸ்டான்டேர்ட் பேப்பரில் யேதோ சில விஷயங்கள் எழுதினார். அவர்களில் முக்கியமாய் தஞ்சாவூர் கோர்ட்டில் வக்கீலாயிருக்கும் Mr. P. V. நாகநாத சாஸ்திரி என்பவர் ஷை சுப்பிரமணிய ஐயர் சாட்சியாய் வாக்குமூலம் கொடுத்த ஒரு கேசில் நடத்திய நடவடிக்கைகளைப் பற்றி அவதூறாய் ஷை ஸ்டான்டெர்ட் பேப்பரில் எழுதியிருந்தாராம். அதன்பேரில் ஷை P. V. நாகநாத சாஸ்திரி என்பவர் ஷை சுப்பிரமணிய ஐயரின் பேரில் தஞ்சாவூர் டி. மு. கோர்ட்டில் மானநஷ்டவியாஜ்ஜியம் செய்து ரூ. 5000 ம், தனக்கு நஷ்டமாக கட்டிக் கொடுக்கவேண்டுமென்று தாவா செய்து ரூ. 500-க்கு டிக்ரி பெற்றார். கீழ் அப்பீல் கோர்ட்டார் டி. மு. கோர்ட்டு டிக்ரி சரிதானென்று ஊர்ஜிதப்படுத்தி ஷை நஷ்டம் ரூ. 500 ஐ, ரூ. 10 ஆக குறைத்து விட்டார்கள். அதன்பேரில் இருதரப்பாரும் ஹைகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—சுப்பிரமணிய ஐயர் ஸ்டான்டெர்ட் பேப்பரில் எழுதியது அவதூறுதானென்று கண்டு கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்மானத்தை ஊர்ஜிதப் படுத்தி இரண்டாவது அப்பீல்களை சிலவுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

லாயர்கள்:—Mr. G. S. ராமச்சந்திர ஐயர்—சுப்பிரமணிய ஐயருடைய வக்கீல். ஹானெரெபில் Mr. T. ரங்காச்சாரியாரும், Mr. கணபதி ஐயரும். Mr. P. V. நாகநாத சாஸ்திரியாரின் வக்கீல்கள்.

Additional District Magistrates Court, Tanjore.

தஞ்சாவூர் அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு.

நெ. 8.

Mr. R. நாராயண ஐயர், I. C. S.—முன்பாக.

THE DHARMAPURAM MUTT CASE.

தர்மபுரம் மடத்து கேசு.

ஸெஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பப்படமாட்டாதென்று தள்ளுபடி செய்தல்.

தஞ்சாவூர். 19-3-1917:—மதராஸ் சர்வகலாசாலை (University) யில் ரீடர் (Reader) உத்தியோகத்திலிருக்கும் Mr. அநவிர்தநாயகம் பிள்ளை M. A., L. T., யும் அவருடைய சிநேகிதராகிய Mr. சுப்பிரமணியம் பிள்ளை M. A., B. L., இவர்கள் இருவரும் மேற்படி தர்மபுரம் பண்டார சந்நதியாயிருப்பவர்-அவருடைய அந்தஸ்தை நிர்வகிக்க தகுந்தவரல்லவென்று அவர் பேரில் விசேஷமான குறைவு பாடுகளை காட்டி அந்த பதவியிலிருந்து அவரை நீக்கிவிடுவதற்காக மாயவரம் சப்கோர்ட்டில் தாவா செய்தார்கள். ஷை அநவிர்த நாயகம் பிள்ளை யென்பவர் ஷை தாவாவை வாபஸ் செய்துகொள்ளாவிட்டால் அவரையும் அவருடைய சிநேகிதராகிய சுப்பிரமணிய பிள்ளையையும் கொன்று விடுவதாக ஷை பண்டார சந்நதியால் பயமுறுத்தப்பட்டார்களென்று சொல்லி ஷை அநவிர்த நாயகம் பிள்ளை அவர்கள் ஷை தர்மபுரம் மடத்தின் பண்டார சன்னதியின் பேரில் மாயவரம் டிப்டி மாஜிஸ்ட்ரேட் Rao Sabib S. N. V. ராஜாச்சாரியாரிடத்தில் செய்த பிரியாதை – அவர் (டிப்டி மாஜிஸ்ட்டிரேட்) தள்ளுபடி செய்து விட்ட நடவடிக்கைகளை (Proceedings) புனர்விசாரணை (Revision) செய்யும்படிக்கு ஷை அடிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் மனு செய்துக் கொண்டார்கள். அந்தப் புனர் விசாரணை ரிவிஷன் கேஸில் ஷை அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் சென்ற வியாழக்கிழமை அவருடைய தீர்மா

னத்தைச் சொன்னார். அடியில் கண்டிருப்பது அந்த தீர்மானத்தின் சங்கிரகம்:—மேலே கண்ட இரண்டு நபர்கள் சொல்லிய வாக்குமூலம் ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் மிக்கவிரோதமா யிருப்பதனால் அவர்கள் நம்பத்தக்கினசாட்சிகள் தானென்று சொல்வதற்கு கிஞ்சித்தேனும்ஹேதுகிடையாதென்று டிப்டிமாஜிஸ்ட்டிரேட்முடிவான அபிப்ராயம் கொண்டதாக சொல்லியிருப்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் ப்ராசிக்யூஷன்தாரப்பர்ருடைய கேசுக்கு விரோதமாயிருப்பது யாதெனில் மேலே கூறிய இரண்டு நபர்களும் சாட்சி சொல்வதற்கு பெட்டியில் வருவதற்கு முன் எதிரி அவர்களைக் கொன்று விடுவதாய் பயமுறுத்தினதாக யாதொன்றும் சொல்லவில்லை; அதை நோக்குமளவில் அப்படி அவர் பயமுறுத்தி யிருப்பாரென்று நம்புவதற்காவது அல்லது சில மணிநேரம் அவர்கள் மயக்க முற்று சக்தியற்றவர்களாய் விட்டார்களென்று சொல்வதற்காவது யாதொருகாரணமும் கிடையாது. அவர்களுக்குயாதோ சொற்ப பணம் கொடுத்ததாகவும் அவர்கள் இன்னும் அதற்குமேல் சொற்ப பணம் கோறினதாகவும் ஒருவிதமாய்ச் சொல்லும் பேச்சைக் கேட்க நான் வியசனப்படுகிறேன். மாயவரம் வக்கீல் சாம்பசிவம் செட்டியார் தாவா வாதி அந்த வியாஜ்ஜியத்தை வாபஸ்செய்து கொள்வதற்காக வேண்டிய மனுவின் மசோதாவை அவரை எழுதும்படி கோறியதாக அவர் சொல்லும் சாட்சியம் நம்பத் தக்கினதல்லவென்று சொல்வதற்கு நான் கொஞ்சம் அனுமானிக்கின்றேன். அவ்விதமாய் நேரிட்டிராதென்னும் விஷயத்தை கவனிக்கு மளவில் அப்படி சொல்லும்பேச்சு நம்பத்தக்கின தல்லவென்று வெளிப்படையாய் தெரிகிறது.

மாயவரம் வக்கீல் சீத்தாராம சாஸ்திரி சப் ஜட்ஜுக்கு எழுதின மனுக்கள் அவருடைய வீட்டில் எழுதி கையெழுத்துபோடப்பட்டதென்று (அவர்) சொல்லும் சாட்சியத்தை கிஞ்சித்தேனும் அனுமானிக்காமலேயே (வாஸ்தவமானதல்லவென்று) தள்ளிவிடுகிறேன். அந்த சாட்சியம் கல்பனை யென்று தெரியவருவதுமல்லாமல் வாபஸ் மனு கொடுப்பதற்காக மடத்தார் அன்றைய தினம் அவர் செய்யவேண்டிய வேலைக்கு அவருக்கு கொடுக்கவேண்டிய பீஸ் கொடுத்து அவரை வக்கீலாய் நேமித்துக்கொண்டிருப்பார்க ளென்னும் சந்தர்ப்பத்திலேயே அது பொய்யான சாட்சிய மென்பதாய் தெளிவாய் ஏற்படுகிறது. அந்த தஸ்தாவேஜுகள் மடத்தில்தான் பூர்த்தியாய் எழுதி கையெழுத்து போடப்பட்டதென்று நான் நம்புகிறேன. எதிரியை, மடாதிபதி அந்தஸ்திலிருந்து நீக்கிவிடவேண்டுமென்கிற கருத்துடன் ஏற்பட்ட அந்த வியாஜ்ஜியத்தை (மானபங்கமான) வாபஸ் செய்துக்கொண்டது மிக்க பலமுள்ள எதிரியின் தந்திரத்தினாலும் பயமுறுத்தல்களினாலும் உண்டாயிருக்குமென்று நான் உறுதியாய் நம்புகிறேன். ஆனால் ஏற்கனவே மடத்தின் விஷயமாய் விரோதமாயிருக்கும் இதர துரோகிகளைப்போல் இந்த கீழ்படியாத சிஷ்யனை அத்தக்ஷணமே கொன்று புதைத்து விடுவதாக் பயமுறுத்தியது வாஸ்தவமாயிருந்தால் மனுதாரர் பிரதமத்திலேயே அவ்விதமான பயமுறுத்தல்களை அவருடைய பிரியாதில் ஸ்பஷ்டமாகவும் கண்டிப்பாகவும் சொல்லியிருப்பாரல்லவா! அவ்விதமாய் கொன்று விடுவதாக பயமுறுத்தியதான சமாச்சாரம் யாதொன்றும் அதில் கிடையாது. அப்படிக் கிருந்திடினும் மனுதாரரும் அவருடைய சினேகிதரும் இந்த முக்கியமான சம்பவங்களை அவர்களை முதலில் விசாரணை செய்த சப் இன்ஸ்பெக்டருக்காவது அல்லது போலீஸ் அதிகாரிகளுக்காவது ஆதியிலேயே சொன்னவர்களல்ல. இப்படிப்பட்ட முக்கியமான கேசிலுள்ள கட்சிதாரர்களின் அந்தஸ்தை கவனித்து டிப்டி மாஜிஸ்ட்ரேட் ஆதியில் பிரியாதியை (Complainant) தானே விசாரணை செய்து பிராதை பைசல் செய்யாமல் அவர் கேசை போலீசாருக்கு அனுப்பி விட்டதை நோக்குமளவில் அது ஓர் துர்ப்பாக்கியமாய்த் தோன்றுகிறது. அவ்விதமாய் நேரிட்டிரா தென்பதற்கு இன்னும் அநேக சந்தர்ப்பங்களிருக்கின்றன. ஆகையால் அவ்விதமான சந்தர்ப்பங்களையும் பிரதமத்தில் பிரியாதி அந்த சமாச்சாரத்தை டிப்டி மாஜிஸ்ட்ரேட்டுக்காவது அல்லது போலீசாருக்காவது அல்லது சப் ஜட்ஜுக்காவது சொல்லவில்லை யென்னும் சந்தர்ப்பத்தையும் ஆலோசித்து பண்டார சன்னதியை ஸெஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பவேண்டுமென்பதாய் என்னெதிரில் திருப்திகரமாய் ருஜு செய்யப்படவில்லை யென்று நான் அபிப்பிராயப் படுகிறேன். ஆகையால் நான் மனுவை கிரிமினல் புரோஸீஜர் கோட் 436-வது பிரிவின்படி தள்ளுபடி செய்கிறேன்.

VILLAGE OFFICERS SHEET.

கிராம ஆபீசர்களுடைய பக்கம்.

REVENUE NOTIFICATION.

ரெவினியு விளம்பரம்.

☞ பூஸ்திதிகளின் கிஸ்தியை மணி ஆர்டர் மூலமாய்ச் செலுத்தலாமென்பதைப் பற்றியது.

இதனால் தெரிவிக்கப்படுகிற தென்னவென்றால், இனிமேல் ரயத்துகள் தங்கள் கிஸ்திகளைக் கிராம உத்தியோகஸ்தர்களிடம் ரொக்கமாய்ச் செலுத்துவதற்குப் பர்த்தியாக தபால் ஆபீஸ் மணி ஆர்டர் மூலமாய்ச் செலுத்துவதற்கு கவர்ன்மெண்டாரால் அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படும்.

2. (செலுத்தவேண்டிய இடத்தில்) இராத பட்டாதாரர்களும் மற்றவர்களும் தங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்காவது தாங்கள் எந்தநிலங்களில் பற்றுள்ளவர்களா யிருக்கிறார்களோ அந்த நிலங்களுக்காவது பாக்கியாகிற கிஸ்தியைத் தக்ககாலத்தில் செலுத்திவிடக் கூடியவர்களாயிருக்கும்பொருட்டு அவர்களுடைய பிரயோஜனத்தையே முக்கியமாய் உத்தேசித்து ரெவினியு மணியார்டர்களை ஏற்படுத்தியிருக்கிறது. நிலத்தீர்வைகளையும் லெஸ்வரிகளையும் நிலவிஷயமாகப்பாக்கியாகிற அல்லது நிலத்தீர்வையோடுகூட சாதாரணமாய்ச் செலுத்தத்தக்கதாகிய வேறேயாதொரு பாபத்தையும் அனுப்புவதற்காகமாத்திரமே ஷை ரெவினியு மணியார்டர்களை உபயோகிக்கவேண்டும்; வேறே எந்த காரியமாயிருந்தாலும்சரி அதற்காக ஷை மணியார்டர்களை உபயோகிக்கக்கூடாது.

3. ஒரே ரெவினியு கிராமத்தில் பல பட்டாக்களிலடங்கிய நிலங்களை யாதொரு ரயத்து கைப்பற்றில் வைத்திருந்தாலும் அந்த நிலங்களில் அவர்பற்றுள்ளவராயிருந்தாலும், அவர் அப்படிப்பட்ட சகல பட்டாக்களுக்காகவும் பாக்கியாகிற நிலத்தீர்வையை ஒரே ரெவினியு மணியார்டர் மூலமாய் அனுப்பலாம்; ஆனால், அப்படிப்பட்ட ஒவ்வொரு பட்டாவுக்காகவும் செலுத்தப்பட்ட தொகையைத் தனித்தனியாகப் பதியவேண்டும்.

4. ரயத்துக்கு இஷ்டமிருந்தால் இந்த ஏற்பாட்டை அனுசரிக்கலாமென்றும், அவருக்கு இஷ்டமில்லாதபட்சத்தில், அவர் இந்த ஏற்பாட்டின்படி தொகை செலுத்தவேண்டுமென்னும் நிர்பந்த மில்லையென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும்.

5. ரெவினியு மணியார்டர் நமூனாவானது கறுப்பு இங்கியினால் இளஞ் சிவப்புநிறக் காகிதத்தில் அச்சிட்டிருக்கிறது; அது சாதாரண உள்நாட்டு மணி ஆர்டர் நமூனாவை விடச் சிறிது நீளமாயிருக்கும். அது மூன்றுபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது—

(a) மணியார்டர்.

(b) அக்னாலெட்ஜ்மென்ட் (மணியார்டர் பெற்றுக்கொண்டதற்காக ரசீது).

(c) கூபன்.

இந்த மணியார்டரைப்பற்றி விவரித்துச் சொல்வது அனாவசியம்; ஏனென்றால், சாதாரண உள்நாட்டு மணியார்டர் நமூனாவில் அதைப்போன்ற பாகம் எவ்விதமாயிருக்கிறதோ பெரும்பாலும் அதுமாதிரியாகவே ஷை மணியார்டரும் இருக்கிறது. மேல்பாகத்தில் எழுதவேண்டியதைப் போஸ்ட் ஆபீஸாரும், கீழ்பாகத்தில் எழுதவேண்டியதைத் தொகை அனுப்புகிறவரும் எழுதவேண்டும்.

நிலத்தீர்வையைப்பற்றிய விவரங்களை எழுதுவதற்காக அக்னாலெட்ஜ்மெண்டில் தலைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன; தொகை அனுப்புகிறவர் பின்னால் தாமே பார்த்துத் தெரிந்துகொள்வதற்காக ஷை விவரங்களை எழுதவேண்டும். அதில் மணியக்காரர் கிரமமாய்க் கையெழுத்துப் போட்டதன்மேல், அது தொகை அனுப்பினவருக்குத் தபால் ஆபீஸ் மூலமாகத் திருப்பி யனுப்பப்படும்.

கூபனை மணியக்காரர் நிறுத்திக்கொள்ளவேண்டும். நிலத்தீர்வையைப்பற்றி இந்த பாகத்தில் எழுதவேண்டிய விவரங்களையும் தொகை அனுப்புகிறவர் மணியக்காரருக்குத் தெரிவதற்காக எழுதவேண்டும்.

ரெவினியு மணியார்டரில் எவ்வித திருத்தமும் செய்ய அனுமதியில்லை. யாதொரு (ரெவினியு மணியார்டர்) நமூனாவில் திருத்தங்கள்செய்து அதைக் கொண்டுவந்து கொடுத்தால், எழுதவேண்டியவற்றையெல்லாம் புதிதாயொரு நமூனாவில் எழுதும்படி தொகையனுப்புகிறவரைக் கேட்கவேண்டும்.

6. ரெவினியு மணியார்டர் நமூனாக்கள் ரயத்துகளுக்கு தாராளமாய்க் கொடுக்கப்படும்; ரயத்துகள் இந்த நமூனாக்களைப் பெறும் விஷயத்தில் எவ்வித நிர்ப்பந்தமும் ஏற்படுத்தக்கூடாது. ரெவினியு மணியார்டர் நமூனாக்கள் போதுமான அளவுக்கு ஒவ்வொரு தபால் ஆபீஸிலும் எப்போதும் கிடைக்கும்.

7. யாதொரு மணியார்டரின் தொகையில் ஒரு (அணாவுக்குக் குறைந்தவைகளாகிய) தம்படிகளைச் சேர்க்கக்கூடாதென்று தடுக்கும்விதியானது ரெவினியு மணியார்டர்களுக்குப் பிரயோகப்படாது; ஒரு தம்படிக்குக் குறையாமல் ஒரு அணாவுக்குக்குறைவாக எத்தனை தம்படிகளிருந்தாலும் அவைகளை ரெவினியு மணியார்டர்களில் சேர்க்கலாம்.

8. ரெவினியு மணியார்டர் நமூனாவிலே எழுதவேண்டியவற்றையெல்லாம் எழுதும் விஷயத்தில் அந்த மணியார்டர் அனுப்பும் ஆபீஸார் தொகை அனுப்புகிறவருக்கு சகாயம் செய்யவேண்டும்; அவசியமிருந்தால், அவருக்குப் பதிலாகத் தாங்களே அந்த நமூனாவில் அவைகளை எழுதவேண்டும்; ஆனால் இவ்விதம் செய்வதற்காக தபால் இலாகாவைச்சேர்ந்த எந்த உத்தியோகஸ்தரும் யாதொரு கட்டணமாகிலும் வேறே எவ்வித இனாமாகிலும் நேராகவோ அல்லது மற்றப்படியோ கொடுக்கும்படி கேட்கவுங்கூடாது, கொடுத்தால் அங்கீகரிக்கவுங் கூடாது. யாதொரு உத்தியோகஸ்தர் இந்த உத்தரவைமீறி நடந்தால், அந்தக் குற்றத்துக்காக அவர் உத்தியோகத்தி னின்றும் தள்ளிவிடப்படுவார், மேலும், அவர் சட்டப்படி இன்னும் ஏதாவது தண்டனை ஏற்பட்டிருந்தால், அதற்கும் உட்பட்டவராவார்.

9. ரெவினியு மணியார்டர்கள், சந்தர்ப்பத்துக்கேற்றபடி போஸ்ட் மாஸ்டராலோ தபால்காரனாலோ அல்லது கிராமத் தபால்காரனாலோ கிராம மணியக்காரர்முன் ரொக்கமில்லாமல் கொண்டுவந்து கொடுக்கப்படும். ஒவ்வொரு மணியார்டர் பாகத்திலும் பதிவுசெய்யப்பட்டிருக்கிறபடி அந்த ஆர்டரின் தொகையானது, அக்னாலெட்ஜ்மெண்டிலும் கூபனிலும் பதியப்பட்டிருக்கிற தொகையோடு ஒத்திருக்கிறதா என்று மணியக்காரர் பார்க்கவேண்டும். வித்தியாசமொன்றும் இல்லாதிருக்கிறபட்சத்திலே, அவர் ஒவ்வொரு ரெவினியு மணியார்டரின் அக்னாலெட்ஜ்மெண்ட் பாகத்திலும் கையெழுத்துப்போட்டு, கூபனைக் கிழித்தெடுத்துத் தம்முடைய உபயோகத்துக்காக வைத்துக்கொண்டு மணியார்டரை ஒப்பித்த போஸ்ட் ஆபீஸ் உத்தியோகஸ்தரிடத்தில் அந்த நமூனாவின் மிகுதிபாகத்தைக் கையெழுத்துபண்ணப்பட்ட அக்னாலெட்ஜ்மெண்ட் சகிதமாகக் கொடுத்துவிடவேண்டும். பிறகு, ரெவினியு மணியார்டர்களுடன்கூடவே போஸ்ட் ஆபீஸ் உத்தியோகஸ்தர் கொண்டுவந்து காட்டும் தபால்காரன் புத்தகத்திலாவது கிராமத் தபால்காரன் ரெஜிஸ்டரிலாவது மணியக்காரர் தம்மிடத்தில் ஒப்பிக்கப்பட்ட ஒவ்வொரு கூபனுக்காகவும் ரசீது எழுதிக் கொடுக்கவேண்டும். அவர் போஸ்ட் ஆபீஸ் உத்தியோகஸ்தரை எந்தக்காரணத்தினாலாயினும் சரி காக்கவைத்திருக்கக்கூடாது;

அவர் ஒவ்வொரு ரெவினியு மணியார்டரின் கூபன் பாகத்தையும் கிழித்தெடுத்துக் கொண்டவுடனே ஷை உத்தியோகஸ்தரை அனுப்பிவிடவேண்டும்.

10. யாதொரு ரெவினியு மணியார்டரின் அக்னாலெட்ஜ்மெண்டிலாவது கூபனிலாவது தொகை யனுப்புகிறவர் நிலத்தீர்வையைப்பற்றிய விவரங்களைப் பூர்த்தியாய் எழுதாதிருந்தாலும், மணியார்டரிலாகிலும், கூபனிலாகிலும் தொகை யனுப்புகிறவர் தம்முடைய கையெழுத்துப் போடாமல் விட்டுவிட்டிருந்தாலும், மணியக்காரர் அந்த தஸ்தவேஜுக்காக ரசீது எழுதிக் கொடுக்காமல் அதைப் போஸ்ட் ஆபீஸ் உத்தியோகஸ்தரிடத்தில் திரும்பவும் கொடுத்துவிடவேண்டும். அப்படிப்பட்ட மணியார்டர்களில் விடுபட்டுப்போனவைகளை எழுதித் திருப்பி யனுப்புவதற்காக, அவைகள் எந்த ஆபீஸிலிருந்து அனுப்பப்பட்டதோ அந்த ஆபீஸுக்கு அவைகளைப் போஸ்டல் ஸெர்விஸ் லகோடாவில் போட்டனுப்பவேண்டும்.

11. பிறகு மணியக்காரர் – (கிரமப்படியுள்ள எந்த ரெவினியு மணியார்டருக்காகத் தாம் போஸ்ட் ஆபீஸ் உத்தியோகஸ்தருக்கு ரசீது கொடுத்திருக்கிறாரோ அப்படிப்பட்ட) ஒவ்வொரு ரெவினியு மணியார்டரின் தொகையையும் ரொக்கமாகவோ அல்லது கரென்ஸி நோட்டுகளாகவோ தம்மிடத்தில் செலுத்தப்பட்டிருந்தாற்போலவே தம்முடைய கணக்குகளில் வரவு செலவு செய்விக்கவேண்டும்.

பிறகு மணியக்காரர் - ஒவ்வொரு ரெவினியு மணியார்டரிலும் நிலத்தீர்வையைப்பற்றிய விவரங்களடங்கிய கூபனை மாதவாரி கட்டுகளாக ஜாக்கிறதையாய்ச் சேர்த்து வைக்கவேண்டும்.

12. யாதொரு ரெவினியு மணியார்டரின் தொகையானது - சம்பந்தப்பட்ட நிலத்துக்குடையவர் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தவேண்டிய தொகையைக்காட்டிலும் குறைவாயிருந்தால் அப்போதுகூட அதைக் கிராமக் கணக்குகளில் வரவுவைத்துக்கொள்ள வேண்டும். அப்படிக்கல்லாமல், ஷை தொகையானது டிமாண்ட் தொகையைவிட அதிகமாயிருந்தால், அதிகமாயுள்ள தொகையை ஜாஸ்தி வசூலின்கீழ் வரவுவைக்கவேண்டும்.

13. ஸப் ட்ரெஷரிக்கு அடுத்தமுறை பணம் இருசால் செய்யவேண்டிய தேதி வந்தவுடனே, சகல ரெவினியு மணியார்டர்களின் தொகைகளையும் (R. M. O. நி. 4 நமூனாப்படி) ஒரு ஜாபிதாவில் கிரமமாய்ப் பதிவு செய்து இதா வசூல் தொகைகளுடன் இருசாலில் சேர்க்கவேண்டும்.

14. ஷை ஜாபிதாவில் தாசில்தாராகிலும் தாலூகா ஷிரஸ்தாராகிலும் தாலூகா ஹெட் அக்கௌண்டண்டாகிலும் கிரமமாய்க் கையெழுத்துப்போட்டதன் மேல் அது தாசில்தாரரால் திருப்பி யனுப்பிவிடப்படும். அந்த ஜாபிதாவை, நிலத்தீர்வையைப்பற்றிய விவரங்களடங்கிய கூபன்களுடன் கிராமமணியக்காரர் சேர்த்துவைக்கவேண்டும்.

15. மணியக்காரர் ஒப்பித்துக்கொண்ட ரெவினியு மணியார்டர்களின் தொகைகளை, தொகையனுப்பினதில் யாதொரு கிரமப்பிசகினாலாயினும் வேறே யாதொரு காரணத்தினாலாயினும் கிராமக் கணக்குகளில் வரவு வைத்துக்கொள்ள முடியாதபட்சத்திலே, அப்படிப்பட்ட ரெவினியு மணியார்டர்களின் விவரங்களை ஷை ஜாபிதாவின் பின்பக்கத்தில் எழுதி, அவைகளைக் கூபன்களுடன் சேர்த்து தாசில்தாருக்கு அனுப்பவேண்டும். அப்படிப்பட்ட ரெவினியு மணியார்டர்களின் மொத்தத் தொகையை தாசில்தாருக்கு இருசால் செய்யப்படும் தொகையில் சேர்க்கக்கூடாது.

16. தொகை யனுப்பினதில் யாதொரு கிரமப்பிசகு இருப்பது காரணமாக யாதொரு ரெவினியு மணியார்டரின் தொகை ரெவினியு கணக்குகளிலே வரவு வைத்துக்கொள்ளப்படாதிருந்தால், அதை "வேண்டாமென்று நிராகரிக்கப்பட்ட" ரெவினியு மணியார்டராக பாவித்துத் தாசில்தாரர் தம்முடைய ஹெட்க்வார்டரிலுள்ள போஸ்ட்மாஸ்டர் அல்லது ஸப் போஸ்ட்மாஸ்டருக்கு அனுப்பி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.

17. யாதொரு ரெவினியு மணியார்டர் அனுப்பியிருந்து அது - சம்பந்தப்பட்ட மணியக்காரரிடத்தில் கடைசியாய்க் கிஸ்திதேதி சழிந்தபிறகு ஒப்பிக்கப்பட்டால், அப்படி மணியார்டர் அனுப்பின காரணத்தினாலே தொகை யனுப்பினவர் ரெவினியு இலாகாவில் நிர்ணயிக்கப்பட்ட தண்டனைகளினின்றும் நிவாரணையாகமாட்டார்.

18. சென்னை ராஜதானிப் பட்டணத்தில் கிராம மணியக்காரர்கள் இல்லை ; அவர்களுடைய அலுவல்களைக் கர்ணங்கள் செய்கிறார்கள். ஆகையால், எந்த ரெவினியு மணியார்டர்களின் தொகை சென்னப்பட்டணம் தாசில்தாருக்குச் செலுத்தத்தக்கதாயிருக்கிறதோ அந்த ரெவினியு மணியார்டர்களை, ஒவ்வொரு ஆர்டரிலும் கண்டிருக்கும் டிவிஷனைச்சேர்ந்த கர்ணத்தினிடத்தில் அதற்குச் சம்பந்தப்பட்ட போஸ்ட் ஆபீஸார் ஒப்பிக்கவேண்டும்.

19. யாரிடத்தில் ரெவினியு மணியார்டர்கள் மேலேகண்டபடி ஒப்பிக்கப்படுகின்றனவோ அந்தக் கர்ணம் - இதில் வேறோரிடத்தில் மணியக்காரர்களின்விஷயத்தில் நிர்ணயித்திருக்கிற முறையை அனுசரித்து நடந்து அந்த ரெவினியு மணியார்டர் தொகையைத் தாம் அடுத்தமுறை அனுப்பும் இருசாலின் பாகமாக பாவிக்கவேண்டும்.

20. தபால்காரன் அல்லது கிராமத்தபால்காரன் ஷை அக்னாலெட்ஜ்மெண்டுகளை ஒப்பித்து, ஒவ்வொரு விஷயத்திலும் தபால்காரரின் புத்தகத்திலோ அல்லது கிராமத் தபால்காரன் ரெஜிஸ்டரிலோ தொகை யனுப்பினவரின் கையெழுத்தையாகிலும் அவருடைய ஏஜெண்டின் கையெழுத்தையாகிலும் வாங்கிக்கொள்ளவேண்டும்.

21. ஒப்பிக்கப்படாத அக்னாலேட்ஜ்மெண்டுகளை (மணியார்டர்) அனுப்பின ஆபிஸிலே (அந்த ஆபிஸ் ஹெட் ஆபிஸாயிருந்தால்) 12-மாசகாலம் வைத்திருக்க வேண்டும் ; அப்போதும் அவைகள் பேவாரிஸாயிருந்தால் அவைகளை அழித்துவிடவேண்டும்.

22. அச்னாலெட்ஜ்மெண்ட்டுகள்-ரெவினியு மணியார்டர் மூலமாகத் தொகையனுப்பினவர்களுக்கு அனாவசியமான எவ்வித தாமதமுமில்லாமலும் செலவின்றியும் ஒப்பிக்கப்படுவதற்கு, (மணியார்டர்) அனுப்பும் ஆபிஸுகளின் போஸ்ட்மாஸ்டர்களும் ஸப் போஸ்ட்மாஸ்டரகளும், ப்ராஞ்ச்போஸ்ட்மாஸ்டர்களும் ஜவாப்தாரிகளாவார்கள்.

The Indian Law Gazette.

PART I.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஞூ ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் I.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ஞூ ஏப்ரல்மீ [நெ. 4.

EDITORIAL.

பத்திராதிபர் வியாசம்.

SHOULD THE MASSES KNOW THE LAW.

ஸாதாரண ஜனங்களுக்கும் சட்டம் தெரிந்திருக்க வேண்டுமா?

எங்கு சென்றாலும் அங்கு லாயர்கள் நிறைந்திருக்கும் இந்த 20-வது நூற்றாண்டில் ஸாதாரணஜனங்களில் ஒவ்வொருவருக்கும் நமது நாட்டில் புழங்கி வரும் சட்ட திட்டங்கள் தெரிந்திருக்க வேண்டியது அவசியமா! வென்ற கேழ்வியின் ஜவாப்பைத் தெரிந்து கொள்ளுவது மிக்க பிரயோசனமாக யிருக்கும். பொதுவாக் கிராமந்தரங்களில் வாஸஞ் செய்யும் ஜனங்களும் பின்னும் நமது தேசத்தவர்களில் படிக்க எழுதத் தெரியாத் பெரும்பான்மையோரும் "கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்" நமக்கு எதற்காக சட்ட திட்டங்கள் தெரிந்திருக்க வேண்டும்! ஏதும் கேசுகள் வருங்காலத்தில் வக்கீல்களிடம் போய் யோசனை செய்து கேசுகளை நடத்தினால் போதாதா? சட்ட திட்டங்கள் தெரிந்திருந்ததனால் வக்கீலில்லாமல் கோர்ட்டுகளில் கேசுகளை நாமே நடத்திக் கொள்ளப்போகிறோமா! வென்று பேசிக் கொள்வதை யாம் பலவாறு நேரில் கேட்டிருக்கிறோம். இது முற்றிலும் தப்பான அபிப்பிராயம். ஜனங்களில் ஒவ்வொருவருக்கும் நமது தேசத்தில் புழங்கிவரும் சட்ட திட்டங்களின் ஸாராம்ச மின்னதென்று தெரிந்திருக்கும் விஷயத்தில் இப்போது ஸிவில், கிரிமினல் கோர்ட்டுகளிலும், ரிவினியூ ஆபீசுகளிலும், பைல் செய்யப்பட்டு வரும் கேசுகளில் 4-ல் 1 பங்குகூட பைல் ஆகமாட்டாதென்பது திண்ணம். இப்போது பைலாகிவரும் கேசுகளின் எண்ணிக்கையில் 4-ல் 1 பங்கு கேசுகள் தான் பைசலாகும், என்பதினால் இப்பொழுது நமது தேசத்தவர் கோர்ட்டு விபாஜ்ஜியங்களுக்காகச் சிலவு செய்து வரும் ஏராளமான தொகையில் 4-ல், 1 பங்கு தான் சிலவாகும் என்பது அர்த்தமல்லவா? கோர்ட்டு வியாச்சியங்களுக்குப் போவதனால் பணச் சிலவுமட்டுமா நேரிடுகிறது, எவ்வளவு அலைச்சல், எவ்வளவு சிரமம், எவ்வளவு மனக்கவலை, நேரிடுகிறது. ஆகையினால் 4-ல் 1 பங்கு வியாச்சியங்கள் மட்டும் பைலாவதினால், நமது தேசத்தவர்களுக்கு இப்போது கோர்ட்டு வியாச்சியங்களுக்காக நேரிடும் சிலவில் முக்கால் பங்கும், அலைச்சல்,

தேக சிரமம், மனக்கவலை முதலியவைகளில் முக்கால் பங்கும் லாபப்படுகிறதல்லவா. விபாச்சியங்களின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதின் காரணமெல்லாம் கூடி நமது இந்திய ஜனங்களில் 100-க்கு 95 பெயர்கள் படிக்க எழுதத் தெரியாமலிருப்பதை யிட்டு நாட்டில் புழங்கி வரும் சட்ட திட்டங்கள் இன்னதென்று தெரிந்து கொ கொள்ளாமலிருப்பது தான். அடியில் சொல்லப்பட்டிருக்கிற விஷயத்தைக் கவனிப்பதினால் மேற் கூறிய சங்கதியின் உண்மை புலப்படும். மேனாடுகளில் ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடத்துக்குப் போய் படிக்க வேண்டுவது கட்டாயம். இந்தியாவில் குழந்தைகளுக்கு வைசூரி குத்திக்கொள்ள வேண்டுவது கட்டாயமென்று சட்டம் ஏற்படுத்தி, வைசூரி குத்தப்படாத குழந்தைகளின் பெற்றோர்கள் அல்லது கார்டியன்களுக்கு ஷை குழந்தைகளுக்கு இன்ன காலத்துக்குள் வைசூரி குத்திக்கொள்ள வேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் வைசூரி குத்தத்தவறுகிறவர்கள் பேரில் பிராது தாக்கல் செய்து ஷை யார்களை தண்டனைக்குக் கொண்டு வருகிறார்கள். அதுபோல மேனாடுகளில் ஒவ்வொரு குழந்தையையும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவேண்டுமென்பது சட்டம். அப்படி தன் குழந்தையை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாத பெற்றோர் அல்லது கார்டியனுக்கு இன்ன தெய்திக்குள் குழந்தையை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்துவிடுகிறார்கள். அந்தத் தினத்துக்குள் குழந்தையை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பத் தவறினால் அந்த நபரின் பேரில் கோர்ட்டில் நடபடிக்கை நடத்தப்பட்டு அந்த நபருக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. இவ்விதமாக மேல் நாடுகளிலுள்ள எல்லோரும் படித்தவர்களாகவேயே யிருக்கிறார்கள். இப்படிக் கட்டாயமாக படிக்க வேண்டிய படிப்பு இவ்வளவென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது வரை படித்த பிறகு, பின் ஐ வேசும், மேல் படிப்பிக்க மனதுமுள்ள பெற்றோர்கள், அல்லது கார்டியன்கள் தங்கள் குழந்தைகளை, தங்களுக்கு இஷ்டமிருக்கும் வரை படிப்பிக்கிறார்கள். மற்றவர்கள் குறிப்பிடப்பட்ட அளவு படித்து முடிந்த உடன், அவரவர்களுக்கு இஷ்டமுள்ள தொழில்களைப் பின்பற்றுகிறார்கள் படிப்பாகிய ஸாதனம் கைவசமிருப்பதினால் எத்தொழிலைப் பின் பற்றியவராக யிருந்தாலுமே ஸரி அவரவர்கள் பின் பற்றிய தொழிலுக் குறிய புஸ்தகங்களை வாங்கிப் படித்து அபிவிருத்தி அடைகிறார்கள் அல்லாமலும் உலகத்தில் நடக்கும் சங்கதிகள் இன்னதென்று தெரிந்து கொள்ளும் அபிலாஷை அவர்களுக்கு உண்டாகி விடுகிறது. இந்த எண்ணத்தோடு பத்திரிகைகளை ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்கிறார்கள். "ஆடை பாதி, ஆள்பாதி" என்பது பழமொழி அதாவது "ஆடை யில்லாதவன் அரை மனிதன்" என்பது பொருள். அது போல "பத்திரிகை படியாதவன் பாதி மனிதன்" என்பதும் உண்மையாக யிருக்கிறது. பத்திரிகைகளைப் படிப்பதனால் யேர்ப்படக்கூடிய பயன்களை எல்லாம் எழுதுவதென்றால் அஸாத்தியமான காரியம். அதாவது நூற்றுக்கணக்கான பக்கங்கள் எழுதிக் கொண்டே யிருக்கலாம் அதற்கு இந்த இந்திய சட்ட கேஜெட்டு இடம் கொடுக்காதாகையால், பத்திரிகைகளின் பயன்களை பற்றி சுருக்கி சொல்வோம். இவ்வுலகத்தில், எத்தேசத்திலுமுள்ள எவருக்குமானாலுமே ஸரி, எவ்வகையிலும் சிறப்புப் பெற்று ஸுகஜீவிகளாயிருப்பதற்கு மூலாதாரமாயுள்ள கருவி கல்வியே. அக் கல்வியானது ஒரு பாஷையை எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வதில் மட்டும் அடங்கவில்லை. ஒரு பாஷையை எழுதப்படிக்கத் தெரிந்து கொள்வது மட்டுந்தான் கல்வி யென்பதுமில்லை.

(இன்னும் வரும்.)

அறிக்கை.

இதனடியில் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டுசட்ட ஸம்மந்தமான விஷயங்களைப் பற்றி எழுத விரும்புவோர், தமிழ் பாஷையில் எழுதி அனுப்பும் வியாஸங்களை அங்கீகரித்து இந்திய சட்ட கெஜெட்டில் பிரசுரம் செய்யப்படும். ஷை வியாஸங்கள் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களினுடைய அருமையையும், எழுதப்பட்ட வியாஸங்களினுடைய தன்மையையும் நிதானித்து பூல்ஸ்காப் பேபர் அள்வில் அச்சிடப்பட்ட 4 பக்கங்கள் கொண்ட ஒரு பாரத்திற்கு ரூ. 3 முதல் ரூ. 6 வரையில் பிரதிப் பிரயோஜனம் கொடுக்கப்படும்.

இந்திய சட்ட கெஜெட்டு ஆபீசுக்கு அனுப்பப்படுகிற வியாசங்களை காரணம் தெரிவிக்காமலே பூராவும் அங்கீகாரம் செய்யாமல் நிராகரிக்கவாவது அல்லது சில பாகத்தை ஒப்புக்கொண்டு, சில பாகத்தை நிராகரிக்கவாவது மானேஜருக்கு சுதந்திரம் உண்டு.

ஒப்புக்கொள்ளாமல் நிராகரிக்கப்படும் வியாஸங்களை, திரும்ப அனுப்பப்படமாட்டாது.

MADRAS LEGISLATIVE COUNCIL.
சென்னை சட்ட நிரூபண ஸபை.

நாளது 1917-ம் ஞு ஏப்ரல் மீ 2உ திங்கள்கிழமை ஷை ஸபை கூடியதில், கனம் பொருந்திய மெம்பர்கள் கேட்ட கேழ்விகளும், அதற்கு காருண்யமுள்ள கவர்ன்மெண்டார் அவர்கள் சொன்ன மறுமொழிகளும் முக்கியமானவைகளை இதனடியில் காணலாம்.

குறிப்பு :—கேழ்வி கேட்டவர்களின் பெயரை அந்தந்தக் கேழ்வியின் தலைப்பில் காணலாம்.

மேற்படி ஸபையில் ஆஜராயிருந்த மெம்பர்களின் பெயர்கள் :—கனம், ஸர். அலெக்ஸாண்டர் கார்டியூ, கனம் மிஸ்டர் H. F. W. கில்மான். கனம் திவான் பகதூர் P. ராஜகோபாலாச்சாரியார், கனம் R A. க்ரேஹாம், கனம் S. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், கர்னல் W. M. எல்லிஸ், கனம் S. B. மர்ரே, கனம்

I. H. ஸ்டோன், கனம் ஸர் ப்ரான்ஸிஸ் ஸ்ப்ரிங், கனம் B. V. நரஸிம்மய்யர், கனம் A. S. கிருஷ்ணராவ் பந்துலு, கனம் A. ஸூரிய நாராயண பந்துலு, கனம் ஆர்காட்ராஜ குமாரர், மிகவும் மதிப்புள்ளரெவெரெண்டு J. எய்லென், கனம் C. H. ஹிக்கின்பாதம், கனம் கார்டன் ப்ரேஸர், கனம் E. F. பார்பர், கனம் T. ரங்காச்சாரியார், கனம் காவலப்பரா மூப்பில் நாயர், கனம் திவான் பகதூர் A. ஸுப்பராயலு ரெட்டியார், கனம் யாக்கூப்ஹஸ்ஸான் ஸாகிப் பகதூர், கனம் ராமநாதபுரம் ராஜா, கனம் போலாவரம் ஜமீந்தார், கனம் செறுகர்டாஜமீந்தார், கனம் B. வெங்கடபதிராஜா, கனம் போபிலிராஜா, கனம் ராவ் பகதூர் S. R. M. அண்ணாமலை செட்டியார், கனம் ராவ் பகதூர் K. ஸூரிய நாராயண மூர்த்தி நாயுடு, கனம் K. சதாசிவபட், கனம் K. ராம அய்யங்கார், கனம் சிவராவ், கனம் ராவ்பகதூர் M. ராமச்சந்திர ராவ் பந்துலு, கனம் ராவ்பகதூர் V. K. ராமானுஜாச்சாரியார், கனம் ஸர்ஜன் ஜனரல் W. B. பானர்மான், கனம் மஹம்மது அலீஸுடீன் ஸாகிப் பஹதூர், கான்பஹதூர் கனம் C. G. டாடண்டர், கனம் M. E. கௌச்சமான், கனம் L, E. பக்லி, கனம் ஸர்ராபர்ட் க்ளெக், கனம் திவான் பகதூர் R. ராமசந்திரராவ், கனம் A. R. நாப், கனம் J. P. பெட்போர்டு, கனம் K. சிதம்பரநாத முதலியாரும்.

NEW MEMBERS.
புதிய மெம்பர்கள்.

கனம் திவான்பகதூர் R. ராமசந்திர ராவும், கனம் கான்பகதூர் முகம்மது அலீஸ் உட்டீன் ஹுஸ்ஸேன் ஸாகிப் பஹதூரும், ஆகிய இவர்கள் ராஜ பக்தியுடன் வேலை பார்ப்போமென்பதற்கு ஏற்பட்டிருக்கிற வழக்கப்படிக்குள்ள பிரமாணத்தைச் செய்து சட்ட நிர்மாண ஸபையில் ஸ்தானத்தை வகித்தார்கள்.

BILL TO AMEND THE MADRAS REGULATION XI OF 1816.

1816-ம் ஞுத்திய, மதராஸ் ரெகுலேஷன் செக்ஷன் 10 ஐச்சீர் திருத்துவதற்கான மசோதா.—

மிஸ்டர் நரஸிம்மய்யர்.

1816-ம் ஞுத்திய 11-வது ரெகுலேஷனின் 10-வது பிரிவின்படிக்குள்ள குற்றங்களாகிய, திட்டுதல், ஸ்வல்பமாய் தாக்குதல், சண்டை போடுதல் இவைகளைப்போன்ற சுவல்பமான கேசுகளில் சம்மந்தப்பட்ட எதிரிகளின் பேரில் குற்றம் ருஜுவாகும்பக்ஷத்தில், ஷை எதிரி அல்லது எதிரிகளை 12 மணி நேரத்திற்கு மேல்படாமல் ஓர் காலத்திற்கு கிராமச்சாவடியில் காவற்படுத்தி வைக்கவாவது, குற்றவாளி அல்லது குற்றவாளிகள் கீழ் ஜாதியைச் சேர்ந்தவர்களாக யிருந்தால் அவர்களை தொழுவில் போடுவதென்னும் அவமானத்திற்கிடமான தண்டனை செய்வது தகுதியற்றதாகயிராவிட்டால் அவர்களை 6 மணி நேரத்திற்கு மேற்படாமல் ஒரு காலத்திற்கு தொழுவில் போட்டு வைப்பதென்னும் (குட்டையில் மாட்டி வைக்கும்) படி உத்தரவு செய்ய கிராமமாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரம் ஷை ரெகுலேஷன் 10-வது பிரிவினால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட கொடிய தண்டனையை ரத்துச் செய்வதற்கான மசோதா தான் மேற் சொல்லியது. மேல் கண்ட தொழுவில் போடும் தண்டனையையே சட்டத்திலிருந்து எடுத்து விட வேணுமென்ற மசோதாவை சட்ட நிர்மாண ஸபையில் கொண்டுவர, கனம் மிஸ்டர் B. V. நரஸிம்மய்யர் அனுமதி கேட்டு அடியில் கண்டபடி பேசினார்கள்:—1816-ம் ஞுத்து 11-வது ரெகுலேஷனின் 10-வது பிரிவை, நியாயச் சட்டத்தில் வைத்துக்கொண்டிருப்பது, சட்டத்துக்கே கேவலமானதென்று வர்த்தமான பத்திரிகைகளாலும், கீழ் ஜாதியைச் சேர்ந்தவர்களாலும் எண்ணப்பட்டிருக்கிறது. தொழுவில் மாட்டும் தண்டனையை, கவர்ன்மெண்டார், அவர்களே ரத்துச் செய்ய எண்ணி யிருக்கிறார்கள். ஆனால் இந்த ஒரு விஷயத்திற்காக மட்டும் ஒரு மசோதாக் கொண்டு வருவது அஸௌகரியமென்றும், அப்படி அதைக் கொண்டு வருவது தவறுதலான காரியமென்றும் சொன்னார்கள். அந்த ரெகுலேஷன் பூராவையுமே புனராலோசனை செய்து பார்ப்பதற்கு வெகு காலம் செல்லும். இந்த மசோதாவை ஸபை முன் கொண்டு வருகிறது அஸௌகரியமென்று சொல்வதானது அஸௌகரியப்படுமென்ற நினைப்பைத் தவிற வேறில்லை.

கனம் மிஸ்டர் சிவ ராவ்.

இந்த மசோதாவை ஸபை முன் கொண்டுவரவேண்டியது ஸரியான விஷயமென்று பலப்படுத்தியதோடு, தொழுவில் மாட்டும் தண்டனை விதிப்பதானது அநாகரீகமான காலத்திய நடவடிக்கைகளின் சேஷமாகயிருப்பதாகவும், எவ்வளவு சீக்கிரம் அந்த தண்டனையையே ரத்துச் செய்து விடப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நலமாயிருக்குமென்றும் பேசினார்.

கனம் மிஸ்டர் கில்மான்.

பின்வருமாறு பதில் சொன்னார் :—தொழுவில் மாட்டும் தண்டனை, கௌரவக் குறைவானதென்றே (அவமானமானதென்றே) கவர்ன்மெண்டார் எண்ணி, ஷை தண்டனையை கூடிய சீக்கிரம் சட்டத்திலிருந்து எடுத்துவிட விரும்புகிறார்கள்.—தொழுவில் மாட்டும் தண்டனையை ஏற்படுத்தியிருக்கும் வில்லேஜ் கோர்ட்டு ஆக்டை சீர்திருத்தத்துடன் இந்த கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டார் அவர்களுக்கு அனுப்பினார்கள். சீர்திருத்தத்திற்காக அனுப்பப்பட்ட ஸங்கதிகளை எல்லாம் இந்தியா கவர்ன்மெண்டார் அவர்கள் அநேகமாக ஒப்புக்கொண்டு, சீர்திருத்தப்படவேண்டிய விஷயங்களில் சிலதையும் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். ஷை விஷயங்கள் இப்போதுசரி பார்த்து வரப்

படுகின்றன. மறுபடியும் அதைச் சட்டத்தின் மூலமாகவே ஒப்புக்கொள்ளும் பொருட்டாக இந்தியா கவர்ன்மெண்டார் அவர்களுக்கு மறுபடி அனுப்பப்படும். இந்த விஷயம் அடுத்த நவம்பர் மீத்தில் இந்த ஸபையில் கொண்டுவரப்படுவது அநேகமாக ஸாத்தியமானது தான். ஆகையினால் கனம் மெம்பர் இதைப்பற்றி ஒரு மசோதாக் கொண்டு வருவது அனுவசியமானது. கனம் மெம்பர் மசோதாவில் சொல்ல விரும்பும் விஷயங்களெல்லாம் கவர்ன்மெண்டார் அவர்களே செய்து கொண்டுவருகிறார்கள். இந்த மசோதா விஷயமான பிரேரணம் அனுவசியமானது. இந்த மசோதாவை கவர்ன்மெண்டார் அவர்கள் ஒப்புக்கொள்ள அசக்தர்களாக யிருக்கிறார்கள்.

இந்த பிரேரெபணையை சபையில் கொண்டு வந்ததில் முன்னுக்கு வரவில்லை.

கனம் மிஸ்டர் B. V. நரஸிம்மய்யர்.

கே: 86.—அடியில் கண்ட கேழ்விகளுக்கு கவர்ன்மெண்டார் அவர்கள் தயவு செய்து பதில் சொல்லுவார்களா?

(a) 1915, 1916-ம் ஷுங்களில் கீழான ஜாதிக்காரர்களில் எத்தனை பெயர்களுக்கு தொழுவில் மாட்டும் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த தண்டனை விதிப்பதை நிக்கிரகம் செய்து கவர்ன்மெண்டார் அவர்கள் அனுப்பிய உத்தரவுக்குப் பிறகு இந்த தண்டனை விதிக்கப்பட்ட கேசுகள் எத்தனை?

(b) மேல் கண்ட கவர்ன்மெண்டு உத்தரவு பிறப்பிவிக்கப்பட்ட பிறகு, தொழுவில் மாட்டும் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கேசின் தீர்மானத்தின் பேரில், கவர்ன்மெண்டாருக்கு சட்டத்தில் கண்ட விதிகளை அனுஷ்டியாமலிருக்கும்படி உத்தரவு செய்ய அதிகாரமில்லையென்ற காரணத்தின்பேரில், தொழுவில் மாட்டிய தண்டனையை உறுதி செய்த தீர்மானம் அடங்கிய 1917-ம் ஷு பிப்ரவரிமீ 2உ பிரசுரம் செய்யப்பட்ட "லாவீக்லி" சட்ட ஸஞ்சிகையின் 8-வது பக்கத்திலடங்கியிருக்கும் குறிப்புகளைப்பற்றி கவர்ன்மெண்டார் அவர்களுடைய நோட்டீசுக்குக் கொண்டு வரப்பட்டதா?

(c) அந்தக் கேசின் எதிரியான அலமாவை பக்கிரி சாம்பான் என்பவன், தன்னை கவர்ன்மெண்டு உத்தரவுக்கு விரோதமாக, தொழுவில் மாட்டினதாக நாகபட்டணம் ஸப் கலெக்டரிடம் புகாராச் செய்தானென்பதைப்பற்றியும், அவர் அந்த மனுவின் பேரில் யாதொரு நடவடிக்கையும் நடத்தாமல் 1916-ம் ஞு அக்டோபர் மீ 16உ யன்று அந்த மனுவை உள்ளே போட்டு விட்டாரா (Lodged) வென்பதை விசாரித்துத் தெரிவிப்பார்களா?

(d) ஸர்கார் உத்தியோகஸ்தரில்லாத ஒரு மெம்பரை இந்த தண்டனையை ஷெ ஆக்ட்டைவிட்டு எடுத்து விடும்படிக்காக ஒரு மசோதாவை ஸபையில் கொண்டு வரும்படி அனுமதி கொடுப்பார்களா?

(e) அல்லது, இந்த காலெண்டர் வருஷத்திற்குள், இந்த தண்டனையை ரத்துச் செய்த நிபந்தனையை அடங்கிய அல்லது இதற்கேன்றே உண்டாக்கப்பட்ட ஒரு மசோதாவை கவர்ன்மெண்டார் அவர்களே சபையில் கொண்டுவருவார்களா?

ஜ: 86. (a) 1915-ம் ஷுத்தில் 812 கேசுகளில் தொழுவில் மாட்டும் தண்டனை விதிக்கப்பட்டன. 1916-ம் ஷுத்துக்கு கணக்கு இன்னும் கிடைக்கவில்லை.

(b) லாவீக்லியில் கண்ட குறிப்புகளை கவர்ன்மெண்டார் அவர்கள் படித்துப்பார்த்தார்கள். கவர்ன்மெண்டு உத்தரவில் கண்ட விஷயத்தை கிராம மாஜிஸ்ட்ரேட்டுகள், 1816-ம் ஞுத்து 11-வது ரெகுலேஷன்படி தங்களுக்குள்ள அதிகாரத்தைச் செலுத்தும் பொழுது அவர்களுடைய யுக்தத்தைச் செலுத்த வேண்டிய மாதிரியைப்பற்றி அவர்களுக்கு உபகாரமாக யிருக்கும்பொருட்டு தான் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. கவர்ன்மெண்டு உத்தரவின் மூலமாக சட்டத்தின் மூலமாய்க் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை கட்டுப்படுத்துவது அந்த உத்தரவின் கருத்தல்ல.

(c) இந்த விஷயமாக ஏதும் ரிப்போர்ட்டைக் கேழ்ப்பது அவசியமில்லை என்று கவர்ன்மெண்டார் நினைக்கிறார்கள்.

(d) } (e) } யும், கவர்ன்மெண்டாரவர்கள், ஷெ தண்டனையை ரத்துச் செய்வதற்காக வில்லேஜ் கோர்ட்டுகளின் சீர்திருத்த மசோதா வில் யேர்ப்பாடு செய்திருக்கிறார்கள். அந்த மசோதா ஸமீப காலத்திற்குள் ஸபை முன் கொண்டுவரப்படும்.

இந்திய யுத்தக் கடன்.

பல துளி பெரு வெள்ளம்! உங்களிடம் மிகவும் சொல்பமான தொகைதானே யிருக்கிறதென்று யோசிக்க வேண்டாம். சொல்பத் தொகையையும் சரியான வட்டிக்கு நிற்பயமான யிடத்தில் கொடுத்து வைக்க இது ஓர் மிக்க நல்ல சமயம். முந்துங்கள்! முந்துங்கள்!!

ரூ. 7-12-0 இன்று கொடுத்தால் 5 ஞுத்துக்கு ரூ. 10 ஆக திரும்ப பெற்றுக்கொள்ளலாம். எந்த தபால் ஆபீசிலும், கவர்ன்மெண்டு பாங்கிலும் செலுத்தலாம்.

இப்படிச் செய்வதினால் ஆத்மசேவை, தேசசேவை, ராஜசேவை ஆகிய இம்மூன்றும் ஏககாலத்தில் செய்ததுமாகும். ஆகையால் அவரவர்களால் இயன்ற மட்டில் மேல் கண்டபடி செலுத்தவும். ப—ர்.

DIALOGUE

சம்பாஷணை.

இடம்:—வக்கிலாபீஸ்.

பேழம்பட்டி மிட்டாதார் வக்கிலிடம் வருகிறார்.

பே.-மி:—குமாஸ்தாப் பிள்ளை அவர்களே சுகமா? அய்யரவர்கள் இருக்கிறார்களா?

கு:—வாருங்கள், சுகந்தானா! உங்கள் விட்டில் யாவரும் சுகந்தானே? அய்யரவர்கள் உள்ளே யிருக்கிறார்கள் தெரிவிக்கிறேன்.

வக்:—குமாஸ்தாப் பிள்ளை இன்று வாயிதாக் கட்டுகளைக் கொண்டு வாரும்.

கு:—இதோ யிருக்கிறது கட்டுகள். பேழம்பட்டி மிட்டாதார் தங்களைப் பார்க்க விரும்புகிறார்.

வ:—அப்படியானால் உள்ளே வரச் சொல்லும்.

பே.-மி:—நமஸ்காரம், க்ஷேமமா? என் ஏஜெண்டு பொய் சொல்லாமெய்ய பிள்ளையை அனுப்பி யிருந்தேனே. இவ்விடம் வந்தாரா?

வ:—என்னிடம் வந்ததாக எனக்கு யாதில்லை. குமாஸ்தா பிள்ளை! மிட்டாதாரவர்களுடைய ஏஜெண்டு இவ்விடம் வந்தாரா?

கு:—இவ்விடம் வரவேயில்லை, ஆனால் ஒரு மனுஷனிடம்—அந்த நம்பிக்கை மோசக் கேசில் சாக்ஷிகளுக்குப் படி கட்ட வேண்டுமா? எத்தனை ரூபா வேண்டுமென்று கேட்டு அனுப்பினார். படி கட்ட வேண்டியதில்லை என்று சொல்லி அனுப்பி விட்டேன். அப்பால் அவர் இங்கே வரவில்லை.

பே.-மி:—என்னய்யா அநீதமாக யிருக்கிறது. இனி யாரைத்தான் நம்புகிறது. காலம் கெட்டுப்போச்சுதே.

வக்கீல்:—என்ன ஸங்கதி சொல்லுங்கள்.

பே.-மி:—பணம் பெரிதல்ல—என்னை ஒன்றும் தெரியாத முட்டாள் என்று எண்ணி விட்டானே.

வ:—யாரோ உங்களை மோசம் செய்து விட்டாப் போலிருக்கிறது. ஆனால் உங்களை ஏமாத்தினவர்கள் சொல்லை நம்பினீர்களா இல்லையா.

பே.-மி:—ஆம் நம்பி ஏமாந்து போனேன்.

வ:—அவன் சொன்ன விஷயத்தில் நுட்பம் இன்னதென்று தெரியாததினாலே தானே ஏமாந்தீர்? அப்போது நீர் தெரியாதவர்தானே?

பே.-மி:—அவன் என்னை ஒன்றுந் தெரியாதவனென்று நினைத்ததில் குற்றமில்லை. நான் ஒன்றும் தெரியாதவனென்பதற்குச் சந்தேகமுமில்லை.

வ:—நடந்ததைச் சொல்லுங்கள்.

பே.-மி:—நம்பிக்கை மோசக் கேசை எனக்காக நடத்துகிற என் ஏஜெண்டு, என்னை நம்பிக்கை மோசம் செய்து விட்டார்.

வ:—என்ன ஸங்கதி—உங்கள் ஏஜெண்டின் பேரோ பொய் சொல்லா மெய்ய பிள்ளை என்றிருக்கிறது ஆனால் அவர் பொய்யைத் தவிர மெய்பேசுகிறதே இல்லைப்போலும்!

பே.-மி:—ஆமய்யா, அந்தச் சண்டாளன் துஷ்டனென்று எல்லோரும் சொன்னார்கள். அதைப் பற்றி நமக்கென்ன நம்மிடம் ஏதும் பிசகு செய்யத் துணியமாட்டான் என்று எண்ணி மோசம் போனேன். அய்யா! நம்பிக்கை மோசக் கேசில் நமது பக்கம் சாக்ஷிகளுக்குப் படி கட்டவேண்டுமென்று ரூ. 50 கேட்டார். கொடுத்தேன். படி கட்டி ஆய்விட்டதாக என்னிடம் தெரியப் படுத்தினார். அதை நான் உண்மை யென்று நம்பினேன். இப்போது குமாஸ்தா பிள்ளை அவர்கள் படி கட்ட வேண்டியதில்லை யென்று சொல்லுகிறார்கள்.

வ:—பேஷ் நன்றாயாச்சுது—"ஈயார்தேட்டைத் தீயார் கொள்வார்" என்பது பொய்யாகுமா! உங்களுக்கு விபவத்தைக் கொடுத்த பகவன் ஞானத்தைக் கொடுக்க வில்லை. ஒரு விஷயம் தெரியா விட்டாலும் அதைத் தெரிந்து கொள்ளுவதில் ஆசையும் இல்லை. உங்களுக்கு இப்போது 50 வயதிருக்கும், இதுவரை எத்தனையோ கிரிமினல் கேசுகள் நடத்தியுமிருக்கிறீர்கள். அப்படி யிருந்தும், இன்ன கேசுகளுக்குப் படி கட்டவேண்டியது இன்ன கேசுக்குப் படி கட்டவேண்டியதில்லை என்பது நீங்கள் இதுவரை தெரிந்து கொள்ளவில்லை.

பே.-மி:—அய்யா! இதுவரை நான் சுமார் 50 கேசுகளில் வாதியாக யிருந்து நடத்தி யிருப்பேன். போலீசார் வாதியாக யிருந்து நடத்தின கேசுகளிலும் மற்றெல்லாக் கேசுகளிலும், நான் படி கட்டாத கேசு கிடையாது. எல்லாக் கேசுகளிலும் படி கட்டவேண்டுமென்று என் ஏஜெண்டுகள் ரூபாய் வாங்கியிருக்கிறார்கள்.

வ:—நீங்களோ மனதார நல்ல மனதுடன் ஒரு காசு கொடுக்கப்போகிற தில்லை. ஏழைகள் பிழைக்கட்டுமே!

பே.-மி:—போனது போச்சு இனியாவது ஜாக்கிரதையாக யிருக்கிறேன். தயவு செய்து கிரிமினல் கேசுகளில் இன்னின்ன கேசுகளுக்குப் படி கட்டவேண்டியது, இன்னின்ன கேசுகளுக்குப் படி கட்ட வேண்டிய தில்லை என்பதைப் பற்றி எனக்குச் சொல்ல வேண்டும்.

வ:—அப்படியே சொல்லுகிறேன் கேளுங்கள் ஸம்மன் கேசுகள் அல்லாத வாரண்டு கேசுகளில், வாதி பக்கம் சாக்ஷிகளையாவது, எதிரி அல்லது எதிரிகளையாவது, எதிரி பக்கம் சாக்ஷிகளையாவது ஸம்மன் செய்வதற்கு ஸம்மன் படி கட்டவேண்டிய தில்லை.

பே.-மி:—ஸம்மன் கேசென்றால் என்ன?

வ:—வாறண்டு கேசுகள் இல்லாத கேசுகள் எல்லாம் ஸம்மன் கேசுகள்தான்.

பே.-மி:—வாறண்டு கேசுகள் என்றால் என்ன?

வ:—மரண தண்டனை அல்லது தீபாந்தர தண்டனை அல்லது 6மீ த்துக்கு மேல் பட்டு காவல் தெண்டனை விதிக்கக் கூடிய கேசுகள் எல்லாம் வாறண்டு கேசுகள் தான்.

பே.-மி:—அப்போ ஸம்மன் கேசு என்றால் எனக்கு நன்றாய் துலங்க வில்லையே.

வ:—இவ்வளவு சொல்லியும் தெரியவில்லை என்று சொல்லுகிறீர்கள். (Shame) வெழ்க்க கேடு! பினல் கோடு, கிரிமினல் புரொஸீஜர் கோடு, கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு, சாக்ஷியச் சட்டம் எல்லாம் தமிழில் விற்கிறது. இதுகளை எல்லாம் வாங்கிப் படிக்கக் கூடாதா அல்லது ஒருவரைப் படிக்கச் சொல்லியாவது கேழ்க்கக் கூடாதா?

பே.-மி:—இனி அப்படியே செய்கிறேன். இந்த ஆக்ட்டுகள் எல்லா வற்றின் சுருக்கத்தை எடுத்து இலேசான நடையில் எழுதிய புஸ்தகங்கள் கிடைக்குமா?

வ:—அதுவும் தெரியாதா. தேவையானால் மதராஸ், பிராட்வே 1/149-எ, நெ. உள்ள இடத்தில் பொதுஜன நன்மைக்காக ஸ்தாபித்திருக்கும் இந்திய சட்ட கெஜெட் ஆபீசுக்கு எழுதினால் சகலமும் தெரிந்து கொள்ளலாம்.

பே.-மி:—அப்படியா! சரி, ஸம்மன் கேசென்றால் என்ன சொல்லுங்கள்.

வ:—அபராத தண்டனையாவது அல்லது 6மீ அல்லது 6மீ த்துக்குக் கீழ்ப்பட்டு காவல் தண்டனையாவது விதிக்கக்கூடிய கேசுகள் எல்லாம் ஸம்மன் கேசுகள் தான்.

பே.-மி:—வாறண்டு கேசுகளுக்குப் படி கட்டவேண்டியதில்லை. பின்னும் எந்தெந்தக் கேசுகளுக்கெல்லாம் படி கட்டவேண்டிய தில்லை?

வ:—போலீசார், குற்றவாளியை, கோர்ட்டிலிருந்து வாறண்டு பிறப்பிவிக்கப்படாமலிருக்கும் போதே தாங்களாகப் பிடித்துக்கொண்டு போகக்கூடிய கேசுகள் சம்மந்தமாக வாதிபக்கம் சாக்ஷிகள், எதிரி, எதிரி பக்கம் சாக்ஷிகள் இவர்களை ஸம்மன் செய்வதற்குப் படி கட்டவேண்டிய தில்லை.

பே.-மி:—போலீஸார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடிய கேசுகள் என்பது எதைப் பார்த்தால் தெரியும்?

வ:—கிரிமினல் புரொஸீஜர் கோடின் 2-வது ஷெடியூலில் 1-வது கலத்தில் இத்தனாவது பிரிவுப்படிக்குள்ள குற்றம், 2-வது கலத்தில், இன்ன குற்றம், 3-வது கலத்தில் போலீஸார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடிய கேசா அல்லது வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாத, கேசா, 5-வது கலத்தில் எதிரியை ஜாமீன்பேரில் விடலாம் அல்லது விடக்கூடாது, 6-வது கலத்தில் இராஜியாய்ப் போகலாம் அல்லது இராஜியாய்ப் போகக்கூடாது, என்ற எல்லா விவரங்களும் துலங்கும்.

பே.-மி:—போலீஸார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடிய கேசுகளுக்குப் படி கட்டவேண்டியதில்லை, ஸரி—வாறண்டு கேசுமில்லாமல், போலீஸார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாததாயுமிருக்கிற கேசில் கக்ஷிக்காரன் படி கட்ட சக்தி இல்லாத ஏழையாக இருக்கிறான். அப்படிப்பட்ட கேசில் படியில்லாமல் ஸம்மன் பிறப்பிவிக்க கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டா இல்லையா?

வ:—கோர்ட்டு பீஸ் ஆக்டுப்படி ஸம்மன் படி வாங்காமலேயே ஸம்மன் பிறப்பிவிக்க கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

பே.-மி:—படி கட்டவேண்டிய கேசுகளில் எதிரிக்கு படி கட்டவேண்டிய தாரணை எப்படி? சாக்ஷிக்குப் படி கட்டவேண்டிய தாரணை எப்படி?

வ:—கோர்ட்டு கட்டிடத்தி லிருந்து 6 மைலுக்கு மேற்பட்ட தூரத்திலிருக்கும் ஊரிலுள்ள எதிரி அல்லது சாக்ஷி ஒவ்வொருவருக்கும் அணா 8 ஸம்மன் படி கட்டவேண்டும்.

அதே ஊரிலிருக்கப்பட்ட எதிரி அல்லது சாக்ஷிகள் பாக்கி எத்தனை பேர்களிருந்தாலும் அவர்களில் ஒவ்வொருவருக்கும் அணா 4 வீதம் ஸம்மன் படி கட்டவேண்டும்.

பே.-மி:—6 மைலுக்கு உள்பட்ட ஊரிலிருப்பவர்களுக்கு படி கட்டவேண்டிய தாரணை எப்படி?

வ.—கோர்ட்டுக் கட்டிடத்திலிருந்து 6 மைலுக்குட்பட்ட ஊரிலிருக்கும் எதிரி அல்லது சாக்ஷி ஒவ்வொருவருக்கும் அணா 4 வீதம் ஸம்மன் படி கட்டவேண்டும். அதே ஊரிலிருக்கும் எதிரி அல்லது சாக்ஷிகள் பாக்கி எத்தனைபேர்களிருந்தாலும் அவர்களில் நபர் 1-க்கு அணா 2 வீதம் சேர்த்துக் கணக்கிட்டு படி கட்டவேண்டும்.

பே.-மி:—எதிரி அல்லது சாக்ஷிக்கு வாறண்டு பிறப்பிவிக்கவும் இதே தாரணைப்படிதான் படி கட்ட வேண்டுமா அல்லது எப்படி?

வ:—வாறண்டுப் படி தாரணை வேறு. கோர்ட்டுக் கட்டிடத்திலிருந்து 6 மைலுக்கு மேற்பட்ட ஊரிலிருக்கும் எதிரி அல்லது சாக்ஷிகளுக்கு பிடிவாறண்டு பிறப்பிவிக்க அணா 12, வாறண்டுப் படி கட்ட வேண்டும். அதே ஊரில் எத்தனை எதிரிகள் சாக்ஷிகளிருந்தாலும் வாறண்டுப் படி மாத்திரம் நபர் 1-க்கு அணா 12 வீதம் கட்டியே தீரவேணும்.

பே.-மி:—6 மைலுக்கு உட்பட்ட ஊரிலுள்ள எதிரி அல்லது சாக்ஷிக்கு வாறண்டு பிறப்பிவிக்கப் படி விபரம் எப்படி?

வ:—6 மைலுக்குட் பட்ட ஊரிலிருக்கப்பட்ட எதிரி அல்லது சாட்சிக்கு வாறண்டு பிறப்பிவிக்க நபர் 1-க்கு அணா 6 வீதம் படி கட்டவேண்டும். பாக்கி நபர் எத்தனை பேர்களிருந்தாலும் அவர்களில் ஒவ்வொருவருக்கும் நபர் 1-க்கு அணா 6 வீதமே படி கட்டவேண்டும்.

பே.-மி:—இப்படி பிறப்பிவிக்கப் படுகிற வாறண்டு எவ்வளவு காலம் ஊர்ஜிதத்திலிருக்கும்?

வ:—ஒரு வாறண்டு பிறப்பிவித்தது முதல் 15 தினங்களுக்குள் அந்த வாறண்டு நிறைவேற்றப்படாமலிருந்து, அந்த வாறண்டில் கண்ட சாக்ஷி அல்லது எதிரியைத் தருவித்துத்தான் தீரவேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டால், அந்த வாறண்டு நிறைவேற்றப்படாமலிருக்கும் ஒவ்வொரு 15 நாளைக்கும் அல்லது அதற்குட்பட்ட காலத்துக்கும் மேற்கண்ட தாரணைகளின்படி, வாறண்டுப் படி கட்டிக்கொண்டே யிருக்கவேண்டும்.

பே.-மி:—கோர்ட்டுக் கட்டிடத்திலிருந்து இன்னின்ன ஊர் இத்தினை இத்தினை மைல் என்று கக்ஷிக்காரர்கள் சொல்லுவதை கோர்ட்டில் ஏற்றுக்கொள்வார்களா?

வ:—கோர்ட்டுக் கட்டிடத்திலிருந்து 6 மைலுக்குட்பட்ட கிராமங்கள் இன்னின்ன தென்பதையும், 6 மைலுக்கு மேல்பட்ட கிராமங்கள் இன்னின்ன தென்பதையும், கண்டு ஒரு ஜாப்தா ஒவ்வொரு கோர்ட்டு வாசலிலும் தொங்கவிட்டிருக்கும். அதைப் பார்த்துக்கொண்டு அல்லது கோர்ட்டு உத்தியோகஸ்தர்களிடமிருந்து தெரிந்துகொண்டு படி கட்டவேண்டும்.

பே.-மி:—ஸாக்ஷி, எதிரிகளுக்கு ஸம்மன் படி கட்டவேண்டியது. ரொக்க ரூபாயாகக் கட்டுகிறதா, அல்லது எப்படிச் செய்கிறது?

வ:—ஸம்மன் படி ரொக்க ரூபாயாகக் கட்டக் கூடாது. ஸம்மன் செய்யவேண்டிய சாக்ஷி அல்லது எதிரி வகையறாக்கள் பெயர்களை அவர்கள் பூரா விலாசங்களுடன் கண்டு படி மனு எழுதி, அதில் ஸம்மன் படி எத்தனை ரூபா கட்ட வேண்டுமோ அத்தனை ரூபாய்க்கு கோர்ட்டு பீஸ் லேபில் வாங்கி ஷெடி மனுவில் ஒட்டி கோர்ட்டில் தாக்கல் செய்து விடவேண்டும்.

பே.-மி.—கோர்ட்டுகளிலும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களிடமும் தாக்கல் செய்யும் பிராது மனுக்களுக்கெல்லாம் லேபில்கள் ஒட்ட வேண்டுமா, சிலதுகளுக்கு லேபில் ஒட்ட வேண்டிய தில்லையா?

வ:—நான் இப்போது சொல்லப்போகிறவைகளுக்கு கோர்ட்டு பீஸ் லேபில் ஒட்ட வேண்டியதில்லை.

(1) போலீஸார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடிய கேசுகளில் மாஜிஸ்ட்ரேட்டிடம் தாக்கல் செய்யும் பிராது.

(3) போலீசாரிடம் எழுதிவைக்கும் பிராது.

(2) கிராம மாஜிஸ்ட்ரேட்டிடம் எழுதி வைக்கும் பிராது.

(4) ஜெயிலிலிருக்கும் கைதிக்காக, வக்கீலினாலாவது அல்லது ஷெடி கைதியின் சிநேகிதர் அல்லது பந்துக்களாலாவது தாக்கல் செய்யப்படும் மனுக்கள்.

(5) தண்டனைப் பட்டு ஜெயிலிலிருப்பவனுக்காக தாக்கல் செய்யப்படும் அப்பீல் பெட்டிஷன்.

அப்பீல் செய்யும் பொழுது அப்பீல் பெட்டிஷனுடன் தாக்கல் செய்யப்படவேண்டிய கீழ் கோர்ட்டு தீர்ப்பில், பொதுவாக 360 வார்த்தைகளுக்கு ஒரு 8 அணா லேபில் வீதம் ஒட்டவேண்டிய லேபில் ஒட்ட வேண்டியதில்லை.

பே.-மி:—லேபில் ஒட்டவேண்டிய மனுக்களில் இன்னின்ன மனுவுக்கு இவ்வளவு இவ்வளவு லேபில் ஒட்டவேண்டு மென்பதை அறிய விரும்புகிறேன்.

வ:—லேபில் ஒட்டவேண்டிய விபரத்தை சொல்லி வருகிறேன் கேளுங்கள்.

ஒரு அணா லேபில் ஒட்டவேண்டிய மனுக்கள்.

(1) ரிவினியூக் கோர்ட்டில் தாக்கல் செய்யும் மனுக்கள்.

(2) எந்தக் கோர்ட்டுகளிலும் தாக்கல் செய்யும் நகல் மனுக்கள்.

(கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு 2-வது ஷெடியூல் I-வது விஷயம் (a) பார்க்க.)

8 அணா லேபில் ஒட்டவேண்டிய ரிக்கார்டுகள்.

(1) போலீசார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாத கேசுகளில் மாஜிஸ்ட்ரேட்டிடம் தாக்கல் செய்யும் பிராது.

(கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு 2-வது ஷெடியூல் 1-வது விஷயம் (b) பார்க்க.)

(2) வாய் மொழியாய் தெரிவிக்கப்பட்ட பிராதை, மாஜிஸ்ட்ரேட்டார் எழுதிக்கொண்டு அந்தப் பிராதில் லேபில் ஒட்டும் படிக்கு உத்தரவு செய்தால்.

(கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு 18-வது பிரிவைப் பார்க்க.)

(1) ஹைக்கோர்ட்டு அல்லாத மற்றக் கோர்ட்டுகளில், தாக்கல் செய்யப்படவேண்டிய வக்காலத்துகளில் ஒரு 8 அணா லேபில் ஒட்ட வேண்டியது. ஹைக்கோர்ட்டுகளில் தாக்கல் செய்யவேண்டிய வக்காலத்துகளில் ஒரு இரண்டு ரூபாய் லேபில் ஒட்ட வேண்டியது. ஆனால் ஹைக்கோர்ட்டில் தாக்கல் செய்யப்படவேண்டிய வக்காலத்திலாகட்டும் நகல் மனுவல்லாத எந்த மனுவிலாகட்டும், 2 ரூ. லேபில்தான் ஒட்டவேண்டும்.

பே.-மி :—காப்பிக் காயிதங்களில் வாங்கிய பப்ளிக்கு நகல்களை (Certificated Copies) கோர்ட்டுகளில் சாக்ஷியமாக தாக்கல் செய்யும் போது ஷை தஸ்தாவேஜுகளில், கோர்ட்டு பீஸ் லேபில்கள் ஒட்டச் சொல்லுகிறார்களே அதன் கணக்கு எப்படி.

வ :—காப்பிக் காயிதங்களில் வாங்கப்பட்ட பப்ளிக் நகல்களை எந்தக் கோர்ட்டிலாவது ஆபீசிலாவது தஸ்தாவேஜாக தாக்கல் செய்யும்பொழுது ஷை நகல்களிலுள்ள ஒவ்வொரு 360 வார்த்தைகளுக்கும் அவைகளின பின்னங்களுக்கும் ஒரு எட்டு அணா லேபில் வீதம் ஒட்டவேண்டும்.

பே.-மி :—தாங்கள் சொல்வது எனக்கு நன்றாக விளங்கவில்லை தெரியும்படி தெளிவாகச் சொல்ல வேண்டும்.

வ :—360 வார்த்தைகளுக்கு ஒரு எட்டணா லேபில் ஒட்டவேணும், 360 வார்த்தைகளுக்கு மேல் பட்டு, கூட ஒரு வார்த்தை யிருந்தாலும் கூட 1 எட்டு அணா லேபில் ஒட்டவேணும்; அதாவது 361 வார்த்தைகள் முதல் 720 வார்த்தைகள் வரை இரண்டு 8 அணா லேபில்கள் ஒட்டவேண்டும். 721 முதல் 1080 வார்த்தைகள் வரை 3 எட்டு அணா லேபில்கள் ஒட்டவேண்டும். இப்படியே கணக்கிட்டு லேபில ஒட்ட வேண்டும்.

பே.-மி :—கோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டிய எல்லா தஸ்தாவேஜுகளுக்கும், இதே விதிதானா, சில தஸ்தாவேஜுகளுக்கு வேறுவிதமாயும் உண்டா?

வ :—கிரிமினல் கோர்ட்டுகளில் ஸிவில் கோர்ட்டு தீர்ப்பு (Judgment) நகலை தாக்கல் செய்யும் பொழுது ஷை தீர்ப்பு நகலில் எத்தனை வார்த்தைகளிருந்தபோதிலுமே, ஒரே எட்டு அணா லேபில் ஒட்டினால் போதுமானது.

ஸிவில் கோர்ட்டு டிக்ரி நகலை தாக்கல் செய்யும்பொழுது அதில் எத்தனை வார்த்தைகளிருந்தாலுமே அதில் 2 ரூ. லேபில் ஒட்ட வேண்டும்.

பே.-மி :—ஒரு எளிய கக்ஷிக்காரன் சம்மந்தப்பட்ட கேசில் அநேக தஸ்தாவேஜுகள் தாக்கல் செய்யப்படவேண்டியதிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு தஸ்தாவேஜிலும் ரூல்படி லேபில் ஒட்ட அவனுக்கு ஐவேஜில்லை. இப்பேர்ப்பட்ட கேசுகளில், லேபில் ஒட்டாமல் ஷை தஸ்தாவேஜுகளை தாக்கல் செய்து கொள்ள கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டா?

வ :—கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

ஒரு தஸ்தாவேஜை தாக்கல் செய்வதானது நியாயம் தவறிப்போகாமலிருப்பதைத் தடுப்பதற்கு அவசியமானதென்று கோர்ட்டாருக்குத் தோன்றினால், அந்தக் கோர்ட்டார், அந்த தஸ்தாவேஜுக்கு மேல்கண்ட தாரணைப்படி ஒட்ட வேண்டிய லேபில் ஒட்டாமலேயே அந்த தஸ்தாவேஜைத் தாக்கல் செய்து கொள்ளலாம்.

(கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு 34-வது பிரிவைப் பார்க்க).

பே.-மி :—இப்படி எதிரிகளுக்கும்–சாக்ஷிகளுக்கும் ஸம்மன் பிறக்க வேண்டியதற்காக படி கட்டுகிறோமே, இந்தப் படிப்பணத்தை எந்தக்கேசிலாவது எதிரியிடமிருந்து வாதி வசூல் செய்ய சட்டமிருக்கிறதா?

வ :—கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு 18 வது பிரிவின்படி வாய் மொழியாய் செய்த பிராதின் பேரில் ஒட்டிய 8 அணா கோர்ட்டு பீஸ் லேபிலின் கிரையம், போலீஸார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாத கேசுகளில் மாஜிஸ்ட்ரேட்டிடம் கொடுத்த பிராதுகளில் ஒட்டிய 8 அணா கோர்ட்டு பீஸ் லேபிலின் கிரையம், போலீசார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாத கேசுகளில் சாக்ஷிகளை ஸம்மன் செய்வதற்காக எவ்வளவு தொகை படி கட்டப்பட்டதோ அந்தத் தொகையையும் எதிரியைத் தண்டிக்கிற கேசுகளில் எதிரியிடமிருந்து வசூல் செய்து வாதிக்குக் கொடுக்கவேண்டும். (கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு 34-வது பிரிவைப் பார்க்க).

பே.-மி :—இந்த விதிகள் எந்தெந்த கோர்ட்டுகளுக்குச் செல்லும்.

வ :—கோர்ட்டு பீஸ் ஆக்ட்டுப்படிக்குள்ள மேலே கண்ட விதிகள், ஹைக்கோர்ட்டு வரை செல்லும். கிரிமினல் கேசுகளில் கோர்ட்டு பீஸ் ஆக்ட்டுப்படி 3-வது கிளாஸ் மேஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டு முதல் ஹைக்கோர்ட்டு வரையிலுள்ள கிரிமினல் கோர்ட்டுகளில் நடக்கும் நடபடிக்கைகளில் கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு விஷயமாய்த் தெரிந்து கொள்ள வேண்டிய விதிகள் வேறு கிடையாது.

பே.-மி :—இன்று நான் இவடம் வந்து தங்களைப் பேட்டி செய்து என் கேசின் விஷயங்களை நானே நேரில் தெரிந்து கொள்ள முயற்சி செய்திராத விஷயத்தில் எனது ஏஜெண்டின் நடவடிக்கைகள் எனக்குத் தெரிய வராமல் இன்னும் நான் ஏமாந்து கொண்டேயிருக்கவேண்டியதாக யிருக்கும். தங்களை மிகவும் சிரமப்படுத்திவிட்டேன். இருந்தாலும் கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு ஸம்மந்தமான ரூல்கள் பூராவும் அறிந்து கொண்டேன். இனி ஞாயிற்றுக்கிழமை தோறும் இவடம் வந்து விடுகிறேன். ஏதாவது சட்ட ஸம்மந்தமான விஷயத்தை எனக்குப் போதிக்கக்கிருபை செய்ய வேண்டும்.

வ :—நல்லது அப்படியே செய்கிறேன், ஏதும் லா ஜர்னல்களை வாங்கிப்படிக்கக் கூடாதா?

பே.-மி :—தமிழில் ஏதும் சட்ட சம்மந்தமான பத்திரிகைகளிருந்தால் சொல்லுங்கள் தருவித்துப் படிக்கிறேன்.

வ :—இந்திய சட்ட கெஜெட்டைத் தவிர சட்ட சம்மந்தமான தமிழ் பத்திரிகைகள் ஒன்றும் தமிழ் பாஷையில் சிறந்தது கிடையாது. அந்தப் பத்திரிகையில் அநேகம் முக்கியமாயுள்ள விஷயங்கள் எல்லாம் அடங்கியிருக்கின்றன. சந்தாவும் மிகக் குறைந்ததாகயிருக்கிறது.

பே.-மி :—ஆனால் அப்படியே இந்திய சட்ட கெஜெட்டை உடனே தருவித்துப் படிக்கிறேன். உத்தரவு கொடுங்கள் போய் வருகிறேன்.

வ :—அப்படியே போய் வாருங்கள்.—

(இன்னும்வரும்)

OUR LAW COLLEGE.

எங்களுடைய சட்ட கலாசாலை.

எங்களுடைய சட்ட கலாசாலையின் புரொபசர் உலகறிந்த திருநெல்வேலி வக்கீல் K. R. கிருஷ்ணமாச்சாரியார் அவருடைய மாணாக்கர்களுடைய பெயர்கள் :—

1 அனந்தாச்சாரி, 2 சக்ரவர்த்தி ஐயங்கார், 3 துரைசாமி முதலியார், 4 சட்டராசாரியார்; 5 தணிகாசல முதலியார் வகையராக்கள்.

HINDU LAW—ஹிந்து லா.

மாணாக்கர்கள் :—ஷாலைவந்தனம் அய்யா!

புரோபசர் :—நமது சட்டகலா சாலைக்கும் அதனைக்காப்பாற்றிவருகிற, மாட்சிமை தங்கிய கவர்ன்மெண்டார் அவர்களுக்கும், அதில் பயின்று வரும் மாணாக்கர்களுக்கும், அதை ஆதரித்து வருகிற நண்பர்களுக்கும் எவ்வகையிலும் பிரக்கியாதியுடன் கூடின ஜயத்தை, ஜகத்ரக்ஷகன் கிருபை கூர்ந்தருளுகிறார்.

மா :—அவ்விதமே கடவுள் கிருபை செய்கிரார் என்பதற்குச்சந்தேகமில்லை.

பு :—தணிகாசல முதலியார்! போன பிரஸங்கத்தில் முன் புரொபஸர் அவர்கள் நிறுத்திய விஷயம் இன்னதென்பது ஞாபகமிருக்கிறதா?

தணி :—தகப்பனாருடைய ஸம்மதமின்றி தாயார் தன் பெண்ணின் க்ஷேம லாபங்களைக்கருதி ஒரு புருஷனுக்கு தன் பெண்ணை கன்னிகாதானம் ஸப்தபதி முதலிய கிரியைகளுடன் விவாகம் செய்து கொடுத்து விடும் விஷயத்தில் அந்தக்கல்யாணத்தை சட்டப்படி செல்லக்கூடியதென்று கோர்ட்டார் அங்கீகரிப்பார்களென்றும், அந்த விவாஹமானது சட்டப்படி நடந்தேறவில்லை என்று சொல்பவர், தான் சொல்லும் சங்கதியை ருஜுச்செய்யவேண்டும் என்றும் இதற்கு ஆதாரம் (இ-லா-ரி 12-கல் 140.) இருப்பதாகவும் சொல்லி முடித்தார்.

பு :—மிகவும் நல்லது. இதற்கு மேல் சொல்லுவோமா?

அன :—பிரசங்கம் செய்ய ஆரம்பித்துவிட்டால் அமிருததாரையாக வருஷித்து விடுகிறீர்கள். அதைக்கேட்டு நாங்களும் அமிருதபானம் செய்தவர்களாய் பிரும்மானந்தத்துடன் இருந்து விடுகிறோம். முன் பிரஸங்கம் செய்த விஷயங்களில் சில ஸந்தேகங்கள் ஜனித்திருக்கின்றன. அவைகளைத்தெரிவிக்கும்படி அனுமதி கொடுத்தால், சொல்லுகிறேன்.

பு :—‘நடக்கிறகால் தான் இடறும்’ என்பது போல் விஷயங்கள் தெரிந்தவர்களுக்குத்தான் ஸந்தேகம் யேர்ப்படுவது ஸஹஜம். அப்படியிருந்தும் நாம் பல நாளாக ஹிந்து லாவைப்பற்றி உங்களுக்குப் பிரஸங்கம் செய்து வந்தும், நீங்கள் இதுவரை எந்த விஷயத்திலும் ஸந்தேகமிருப்பதாகத்தெரிவிக்கவே இல்லை. ஸந்தேகமிருக்கும் விஷயங்களைத்தெரிவித்தால், உங்களுக்கு வேண்டும் விஷயங்களை பேரவாவுடன் போதிப்பேன்.

அன :—ஹிந்து மதஸ்தன் ஒருவன் கிரிஸ்தவ மதத்தில் சேர்ந்து விடுகிறான். அவனுக்கு ஹிந்து லா சம்பந்தப்படுமா?

பு :—சம்பந்தப்படமாட்டாது.

அன :—அவனுக்கு எந்த ஆக்ட்டு சம்பந்தப்படும்?

பு :—ஹிந்துக்களுக்கு ஹிந்து லா எப்படியோ அதுபோல் கிரிஸ்தவர்களுக்கு இண்டியன் ஸக்ஸெஷன் ஆக்ட்டு, (Indian Succession Act) அதாவது இந்தியன் வார்ஸ் ஆக்ட்டு என்று ஒரு சட்டம் ஏற்பட்டு இருக்கிறது. அந்தச்சட்டந்தான் சம்பந்தப்பம் 2 ம 209; 6 கல், 794; 11 ம 209; 23-படும். 543; 19-பம் 183; 9 ம 169.

அ :—அவன் கிரிஸ்தவன் ஆகிறதற்கு முன் அவன் குடும்பத்திலிருந்த சொத்தில் அவனுக்கு உள்ள பங்கு கிடைக்குமா?

பு :—அவனுக்குப்பங்கு கிடைக்கும் (1850-ம்௵த்திய 21வது ஆக்ட்டைப்பார்க்க).

அ :—ஹிந்துவாகயிருந்த ஒருவன் மகம்மதிய மதத்திற்குப்போய் விடுகிறான். அவனுக்கு எந்த ஆக்ட்டு சம்பந்தப்படும்.

பு :—அவனுக்கு மகம்மதிய லாத்தான் சம்மந்தப்படும்.

அ :—அவன் மகம்மதிய மதத்தில் சேருவதற்கு முன் அவன் குடும்பத்திலுள்ள சொத்துக்களில் அவனுக்கு ஹிந்து லாப்படி பங்கு கிடைக்குமா?

பு :—அவன் மகம்மதிய மதத்தில் சேருவதற்குமுன் அவன் குடும்பத்திலிருந்த சொத்து விஷயமாய் ஹிந்து லாவும் அவன் மகம்மதிய மதத்தில் சேர்ந்த பிறகு சம்பாதித்த சொத்துகளுக்கு மகம்மதியன் லாவும் சம்மந்தப்படும் (10-மூர்-இ-அ-537; 10 பம்-1.)

அ :—ஹிந்துவாகயிருந்த ஒருவன் மகம்மதிய மதத்தில் சேர்ந்த பிறகும் ஹிந்துக்களுடைய அனுஷ்டானங்

களையே அனுஷ்டித்துக்கொண்டு வருகிறான். அவனுடைய சொத்துகளுக்கு ஹிந்து லா சம்மந்தப்படுமா? மகம்மதிய லா சம்மந்தப்படுமா?

பு:—அப்படியானால் அவனுக்கு ஹிந்து லாத்தான் சம்மந்தப்படும்.

அ:—அப்படிச்சொல்வதற்கு ஆதாரங்களிருக்கிறதா?

பு:—பம்பாய் கல்கத்தா ஹைக்கோர்ட்டுத்தீர்ப்புகளிருக்கின்றன. (6-பம் 452; 9-பம், 115; 10-பம் 1; 20-பம் 57; 3-கல் 694)

அ:—இதைப்போலொத்த வேறு திருஷ்டாந்தங்களும் இருக்கின்றதா?

பு:—பம்பாய் இராஜதானியில் கோஜா ஜாதியார்களென்றும், கச்சிமேமனு ஜாதியார்களென்றும் இருக்கிறார்கள். இவர்கள் மகம்மதிய மதத்தைப் பின்பற்றினவர்கள். ஆனால் அவர்களுடைய அனுஷ்டானங்கள் மட்டும் ஹிந்து மதத்திற்குறிய தர்ம சாஸ்திரங்களின்படிக் குள்ளவைகளாக யிருந்து வருகின்றன. ஆகையால் அவர்களுக்கு ஹிந்து லாவே சம்மந்தப்படுகிறது (1-பம் ஐ-கோ-ரி-71, 72; 2-பம் ஐ-கோ-ரி 292; 12-பம் ஐ-கோ-ரி 294; இ-லா-ரி. 3-பம் 34; இ-லா-ரி 6-பம் 452; இ-லா-ரி 9-பம் 115; இ-லா-ரி 10-பம்-1.)

இது நீங்கலாக பௌத்தர், ஜெயின்னியர், ஸீக் ஜாதியார், பிரம்ம ஸமாஜத்தைச்சேர்ந்தவர்கள்—இவர்களும் வெவ்வேறு மதத்தைச்சேர்ந்தவர்களாகயிருந்தாலும் அவர்கள் ஹிந்து தர்ம சாஸ்திரப்படிக்குள்ள அனுஷ்டானங்களின்படி நடந்து வருவதால் அவர்களுக்கும் ஹிந்து லாவே சம்மந்தப்படுகிறது. (8 வீக்லி ரிப்போர்டர் 116; 10 பம்-ஐ-கோ-ரி 258; இ-லா-ரி 1-அல 688.)

து-மு.—ஹிந்து லா எதிலிருந்து உண்டாச்சுது? அதன் வறலாறென்ன?

பு:—ஹிந்து லாவென்பது தெய்வீகமாய் யேர்ப்பட்ட சுருதி, ஸ்மிருதி, முதலானவைகளின் மூலமாய் ஆதரிக்கப்பட்டு தொன்று தொட்டும், வம்சபரம்பரையாகவும் அனுஷ்டானத்திலிருந்து வருகிற சட்டத்தொகுதியாயிருக்கிறது.

து-மு.—சுருதி என்பதும் ஸ்மிருதி என்பதும் என்ன?

பு:—சுருதி என்பது தெய்வத்தினிடமிருந்து கேழ்கப்பட்டது. அதாவது தெய்வத்தால் உபதேசிக்கப்பட்டது. ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்று சொல்லப்பட்ட நான்கு வேதங்களும் சுருதி என்று சொல்லப்படும்.

ஸ்மிருதி என்பது, தெய்வத்தன்மை பொருந்திய மகான்களான மனுசக்கிரவர்த்தி, நாரதர், கௌதமர், வஸிஷ்டர், காத்தியாயனர், போதாயனர், பராசரர், ஆபஸ்தம்பர், யாக்ஞவல் கியர், இன்னும் அநேகமகா ரிஷீஸ்வரர்களால், இஹபரஸாதனங்கள் அனைத்தைப்பற்றியும் குறித்த நீதிகள் அடங்கிய வேதங்களாகிய சுருதிக்கிணங்க இவ்வுலக வாழ்கைக்குறிய சொத்து சுதந்திரம் முதலியவைகளின் அனுபோக விஷயங்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கிற தர்ம சாஸ்திரங்கள்தான். இந்த தர்ம சாஸ்திரங்கள் சுருதிகளுக்குப்பொருத்தமாகவும் பற்பல தேசங்களில் அங்கங்கே ஜனங்களுக்குள் தொன்று தொட்டு நடந்தேறி வந்துகொண்டிருக்கிற ஆசார அனுஷ்டான வியவஹாரங்களுக்கு அனுஸரணையாகவும் எழுதப்பட்டிருக்கின்றன.

மேற்சொல்லிய சுருதி, ஸ்மிருதி இதுகளைத் தவிர பூர்வகால சரித்திரங்களாகிய பதினெண்புராணங்களும் ஹிந்து லாவின் மூல ஆதாரங்களாகயிருந்து கொண்டிருக்கின்றன.

து-மு—ஸ்மிருதிகளில் முதல் முதல் எழுதப்பட்டதும் அதிக முக்கியமாக உள்ளதும் எது?

பு:—மனுஸ்மிருதி தான்.

து-மு—மனுஸ்மிருதிக்குப்பின் அடுத்து எழுதப்பட்டதும் அடுத்தபடியாய் முக்கியமாயுள்ளதும் எது?

பு:—யாக்ஞவல்கியரால் எழுதப்பட்ட ஸ்மிருதித்தான். மற்றவர்களால் எழுதப்பட்ட ஸ்மிருதி இதற்கும் பின்னால் எழுதப்பட்டவைகளாகயிருக்கின்றன.

து-மு.—சுருதி ஸ்மிருதிகள் என்ன பாஷையிலிருக்கின்றன.

பு:—தேவ பாஷையான ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து வருகின்றன.

து-மு.—அப்படியானால் ஐரோப்பிய நியாயாதிபதிகளும், ஸம்ஸ்கிருத பாஷை தெரியாத மற்ற நியாயாதிபதிகளும், ஹிந்து லாப்படி வருகிற கேசுகளை எப்படி பைஸல் செய்து வந்தார்கள்.

பு:—ஹிந்துலாப்படி கேசுகள் விசாரணை செய்யப்படும் பொழுது ஒவ்வொரு நியாய ஸ்தலத்திலும் சுருதி ஸ்மிருதிகளில் நிபுணர்களான பண்டிதர்களை கூட வைத்துக்கொண்டு அவர்களுடைய அபிப்பிராயத்தையும் கலந்து கொண்டு பைசல் செய்து வரப்பட்டது. இப்படி 1859-ம் வருஷம் வரை நடந்தேறி வந்தது. அதற்குள் சுருதி ஸ்மிருதிகளை எல்லாம் இங்கிலீஷில் தர்ஜமாச்செய்து வைத்துக்கொண்டு நியாயாதிபதிகளே ஷை கேசுகளை பைசல் செய்து வருகிறார்கள்.

த-மு.—ஹிந்துக்களுக்கு ஹிந்து லாவும், தர்ம சாஸ்திரங்களும் பிரதான மென்றும், கோர்ட்டில் ஹிந்து லாக்கேசுகளில் அவைகளையே ஆதாரங்களாக மதிப்பதாகச்சொன்னீர்களே. ஹிந்து லாவிலும் தர்ம சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்ட விஷயங்களுக்கு எதிரிடையாக ஒரு சட்டமும் நடவடிக்கையும் நடக்கிறதே இல்லையா?

பு:—சுருதி ஸ்மிருதி முதலிய புராதன கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கும் நியாயங்களையும், விதிகளையும் அநேகமாக ஒப்புக்கொண்டு அவைகளின்படிக்கே நடவடிக்கைகள் நடத்திவருகிறார்கள். ஆகிலும் சில விஷயங்களில் கால தேசவர்த்தமானங்களுக்கிணங்க அவைகளில் சில மாறுபாடுகளையும் புதிய விதிகளையும் சில ஆக்ட்டுகள் ஸ்வரூபமாக ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

த-மு.—அப்பேர்ப்பட்ட சில மாறுபாடுகளும், புதிய விதிகளும் அடங்கிய ஆக்ட்டுகளைத்தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

பு:—I. ஹிந்து மதத்தைச்சேர்ந்த ஒருவன், ஜாதி பிரஷ்டனாகவாவது, மத பிரஷ்டனாகவாவது போய்விட்டால் அவன் தன் குடும்ப சொத்திலிருக்கும் எவ்வகைப்பாத்தியதையையும் இழந்து விடுகிறான் என்பது தர்ம சாஸ்திரங்களின் கொள்கை.

ஆயினும், ஹிந்து மதத்திலிருக்கும் ஒருவன் தன் மதத்தை விட்டு, மகம்மதிய அல்லது கிறிஸ்தவ, அல்லது வேறு எவ்வித மதத்தில் சேர்ந்து கொண்டதினிடமாய் ஜாதி பிரஷ்டனாகவும் மதப் பிரஷ்டனாகவும் போய் விடுவானேயாகில், அவன் தன் குடும்ப சொத்துக்களிலுள்ள பாத்தியதையை இழந்து விடாமலிருக்கும்பொருட்டு, கவர்ன்மெண்டார் அவர்கள் இந்தியா கவர்ன்மெண்டு 1850-ம் ஹுத்து 21-வது ஆக்ட்டு (Act XXI of 1850 Indian Succession Act.) பிறப்பு வித்திருக்கிறார்கள்.

II. சுருதி, ஸ்மிருதிகளின்படி பிராம்மணாள் முதலிய மேலான ஜாதியாருக்குள் மாங்கல்யத்தை இழந்து விட்ட பெண்டுகளுக்கு மறுபடி விவாஹம் செய்யக்கூடாது என்பது ஏற்பாடு.

என்றாலும் ஹிந்து விதவைகளில் யாரும் தனக்கு இஷ்டமுண்டானால் மறுபடி கலியாணம் செய்துக்கொள்ளலாமென்ற விபரமாக 1856-ம் ஹுத்திய 15-வது ஆக்ட்டு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

III. ஹிந்துக்களில் ஆண் பிள்ளைகள் 16 வயதுக்குள்பட்டவர்கள் மைனர்களென்றும் 16 வயது ஆகிவிட்டால் மேஜர் ஆகிவிடுகிறார்களென்றும் ஹிந்து தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படிக்கிருந்தும், இதற்கு நேர் எதிரிடையாக அடியில் கண்டபடி ரூல்கள் ஏற்ப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆண் பிள்ளைகளுக்கு, சாதாரணமாய் 18 வயது முடிந்த பிறகு தான் மெஜாரிட்டி வருவதாயும், அதிலும் ஒருவன் நியாயஸ்தலத்தாரால் நியமிக்கப்பட்ட கார்டியனுடைய சம்ரக்ஷணையிலாவது கோர்ட் ஆப் வார்ட்ஸ் (Court of Wards)க்காரருடைய மேல் பார்வையிலாவது யிருந்தால் அப்பேர்ப்பட்டவனுக்கு 21 வயது ஆன பிறகு தான் மைனாரிட்டி நீங்குவதாகவும் 1875-ம் ஹுத்திய 9-வது ஆக்ட்டாகிய இந்தியன் மெஜாரிட்டி ஆக்ட்டி (Indian Majority Act)னால் விதிக்கப்பட்டிருக்கிறது.

IV. ஹிந்து வாயுள்ள ஒருவன் வாங்கிய கடன்களைத்தீர்க்க வேண்டியதின் கடமையைப்பற்றி, ஹிந்து தர்ம சாஸ்திரங்களில் இதன் கீழே எழுதப்பட்டிருக்கிறபடி விதிக்கப்பட்டிருக்கிறது. "யாராயிருந்த போதிலும் தான் பட்ட கடன் பூராவையும் பாக்கியன்னியில் தீர்க்க வேண்டியது அவன் கடமை. தான் வாங்கிய கடனை மோசம் செய்வதற்கு மேல்பட்ட பாவம் ஏதும் இல்லை. அப்படி வாங்கின கடனைக்கொடுக்காமல் மோசம் செய்து விட்டு இறந்து போகிறவன் கடன் அப்படியே தீர்ந்து போகிறதில்லை. அப்படி மோசம் செய்து விட்டு இறந்து போகிறவன் மறு ஜன்மத்தில் கடன் கொடுத்து மோசம் போனவனுடைய குடும்பத்தில் மனுஷரூபமாகவோ, நாற்கால் ஜந்துரூபமாகவோ (அதாவது ஆடு மாடு குதிரை கழுதை வகையறு) பிறந்து உழைத்து கடன் தொகையைச்செலுத்துகிறான். ருணபாதையிலிருந்து எவராலும் எந்தவகையிலும் தப்பித்துக்கொள்வது அஸாத்தியம். அல்லாமலும் தான் பட்ட கடனைச்செலுத்தாமல் இறந்து போகிறவன் எவ்வகைப்பட்ட பெரிய புண்ணியம் செய்திருந்தாலும், ஷை புண்ணியங்களாலுண்டாகக்கூடிய பலன்கள் எல்லாம் கடன் கொடுத்து ஏமாந்து போனவனையே சேருகிறது. ஆகச்சே ஒவ்வொருவருக்கும், வாங்கின கடனைத்தீர்த்து விட்டு மறு ஜோலி பார்க்கவேண்டியதே முதல் கடமையாக யேர்ப்பட்டிருக்கிறது."

இதல்லாமல் தான் வாங்கின கடனைத்தீர்த்து விடுவதோடு ஒருவனுடைய கடமை முடிந்து போகிறதில்லை. தன் தகப்பன் பாட்டன் முதலிய முன்னோர் பட்ட கடன்களைத்தீர்ப்பதும், ஹிந்து தர்ம சாஸ்திரங்களின்படி ஒருவனுடைய கடமையாக யேர்ப்பட்டிருக்கிறது. ஒருவனுடைய ஆண் குழந்தையை அவனுடைய புத்திரனென்று சொல்லுகிறார்கள், ஏனென்றால் ஒருவன் இறந்ததன் மேல் அவனுக்கு ஆண் ஸந்ததியிருந்து உத்தரக்கிரியைகளைச்செய்யாவிடில் அவன் புத் என்னும் நரகத்துக்குப்போவதாகவும் புத் என்னும் நரகத்துக்கு தன்னைப்போகவிடாமல் செய்யும் காரணத்தால் ஒருவனுடைய ஆண் ஸந்ததிக்கு புத்ரன் என்னும் பெயர் வந்திருக்கிறது. ஆகையால் தன் முன்னோர்கள் அதாவது தகப்பன் பாட்டன் முதலியவர்கள் நரகத்துக்குப்போய் விடாமல் கார்ப்பது புத்திரர், பௌத்திரர்களுடைய கடமையாக நமது ஹிந்து தர்ம சாஸ்திரங்களால் யேர்ப்படுகிறது.

ஆகையால் ஒருவனுடைய தகப்பனாவது, பாட்டனாவது தான் பட்ட கடனைத் தீர்க்காமல் இறந்து போயிருந்தால் ஷையார்கள் ஏதும் சொத்து வைக்காமல், ஷை ஒருவனை நிற்கதியாக

விட்டு விட்டுப் போயிருந்தபோதிலும் ஹிந்து தர்ம சாஸ்திரங்களின்படி, ஷை ஒருவன் புத்திரன் அல்லது பௌத்திரன் ஷையார்கள் பட்ட கடனைத்தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறான். ஏனென்றால் ஷையான் அந்தக்கடன்களைத் தீராத விஷயத்தில் அவனுடைய முன்னோர்கள் நரகமடைந்து விடுகிறார்கள். அவர்களை நரகம் சேரவொட்டாமல் காக்க வேண்டியது அவனுடைய கடமையாகயிருக்கிறது. தகப்பன் பட்ட கடனை பிள்ளை வட்டியுடனும் பாட்டன் பட்ட கடனை பேரன் வட்டியில்லாமலும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்களென்று பிரஹஸ்பதி கூறியிருக்கிறார். வெகு காலத்துக்கு முன் நமது ஆங்கிலேய அரசாக்ஷியிலேயே அவ்விதம் தீர்ப்பும் செய்யப்பட்டிருக்கிறது. (2 பம். ஐ. கோ. ரி. 64).

ஆனால் இப்போதய ஏற்பாடு வேறுவிதமாகயிருக்கிறது. அதாவது தகப்பன், பாட்டன் இவர்களிடமிருந்து ஏதும் சொத்தை அடைந்திருந்தால் மட்டும், அப்படி அடைந்த சொத்து என்ன தொகை பெறுமோ அவ்வளவு தொகைக்குறிய கடன்களை மட்டும் பிள்ளை, பேரன் இவர்கள் தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். (2. ம. ஐ. கோ. ரி. 336 ; 4. ம. ஐ. கோ. ரி. 1 ; இ-லா-ரி. 4 ம. 45 ; இ-லா-ரி. 6. பம். 309.)

V. ஒருவன்தான் சொத்துக்களை (Will) உயில் என்னும் மரண சாஸனத்தின் மூலமாக விநியோகம் செய்யும்படியான ஏற்பாடு ஹிந்து தர்ம சாஸ்திரங்களிலிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் ஹிந்து ஒருவன் தன் சொத்துக்களை தன் ஜீவ திசைக்குப் பிறகு இன்னின்னார் அடைய வேண்டுமென்ற யேர்ப்பாட்டைச் செய்யும்படிக்காக 1870-ம் ஹுத்திய 21-வது ஆக்ட்டு (Hindu Wills Act.) ஹிந்து உயில் ஆக்ட்டு என்னும் சட்டம் பிறப்பிவிக்கப்பட்டிருக்கிறது.

VI. எப்பேர்ப்பட்ட பெரிய விஷயமானாலுமே ஸரி அதற்கும் ஹிந்து தர்ம சாஸ்திரங்களின்படி எழுத்து மூலமான தஸ்தாவேஜிகள் யேர்ப்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியமில்லை. முன் காலங்களில் அப்படி எழுதி வாங்கும் தஸ்தாவேஜுகள் ஓலையில் எழுதப்பட்டும், வாங்கும் கடனுக்கு ஈடாக தன் புண்ணிய பாபங்களையே காட்டுவதும் வழக்கமாயிருந்தது. அதாவது வாங்கின கடனை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் செலுத்தத் தவறினால். "பங்குனி மாதம் வழி நடந்த பாபத்தில்" போவேனாகவும் என்றும், "காராம் பசுவைக் கொன்ற பாபத்தில்" போவேனாகவும் என்றும் இப்படிப் பலவாறாக எழுதுவது வழக்கம்.

ஆனால் இப்பொழுதோவென்றால் எந்த சின்ன விஷயத்திற்கும் தஸ்தாவேஜு யெழுதுவதும் அதை ரிஜிஸ்டர் செய்வதும் வழக்கத்தில் ஏற்பட்டு விட்டது. நூறு ரூபாயும் அதற்கு மேல்பட்டும் கிரையம் பெறக்கூடிய ஸ்தாவர சொத்துக்களை ஒத்தியாவது, கிரையமாவது, தானமாவது செய்யும்போதும், அல்லது வேறு எவ்விதமாகவாவது பராதீனம் செய்யும்போதும், எழுத்துமூலமான தஸ்தா வேஜின் மூலமாகவேயே செய்யவேணுமென்று 1882-ம் ஹுத்து இந்தியா கவர்ன்மெண்டு ஆக்ட்டாகிய ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் (Transfer of Property Act)ல் சொல்லப்பட்டிருக்கிறது.

சக் :—ஹிந்துலாவின் ஏற்பாடுகளின்படி இந்தியாவிலுள்ள எல்லா ஹிந்துக்களும் அனுஷ்டிக்கிறார்களா அல்லது ஹிந்துக்களாயிருந்தாலும் ஹிந்துலாவின் ஏற்பாடுகளின்படி அனுஷ்டிக்காதவர்களும் இருக்கிறார்களா ?

பு :—ஹிந்துக்களாக யிருந்தும், ஹிந்து லாவின் ஏற்பாடுகளை விட்டு, வேறுவிதமான அனுஷ்டானங்களை உடையவர்களு மிருக்கிறார்கள்.

சக் :—அவர்கள் எந்த ஜாதியார் ?

பு :—மலையாளத்தில் வசிக்கும் நாயர் ஜாதியார்கள்.

சக் :—அவர்கள் எந்த விஷயத்தில் ஹிந்துலாவின் ஏற்பாடுகளின்படி நடக்கிறதில்லை ?

பு :—வார்சு பாத்தியம் வார்சு வரிசைக்கிரமம் இந்த விஷயங்களில் !

சக் :—நாயர் ஜாதியார்களின் சட்டத்தைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

பு :—உலகத்தில் எந்த தேசத்திலும் தகப்பனுடைய சொத்து அவனுடைய குழந்தைகளுக்கு என்ற ஏற்பாடு வழக்கத்திலிருக்கிறது. ஆனால் மலையாளம் நாயர் ஜாதிகளுக்குள் அவ்விதமில்லை. அநேகமாய் உலகத்தில் தகப்பனைப் பற்றிய மக்கள் தாயம் நடந்தேறி வருகிறது. ஆனால் மலையாளம் நாயர் ஜாதிகளுக்குள் தாயைப் பற்றியதாக யிருக்கிறது. பர்த்தாவுக்குப் பிறக்கும் குழந்தைகள் அவனுடைய பெண்சாதியின் வீட்டிலேயே வளர்ந்து அந்த பெண்சாதி பிறந்த குடும்பத்தோடு சேர்ந்தவர்களாய்விடுகிறார்கள். ஆகையால் ஆண் குழந்தையின் தாயுடன் பிறந்தவனான மாமன் சொத்துக்களுக்கு மருமகன் பாத்தியஸ்தன் என்ற மருமக்கள் தாயம் அங்கு வழங்கி வருகிறது.

நாயர்களுடைய குடும்ப சொத்துக்கு "தார்வாடு" என்றும், குடும்பத்தில் பிறக்கும் மூத்த மகனுக்கு 'காரணவன்' என்றும் பெயர். குடும்பத்தில் பிறக்கும் மூத்தவனான காரணவனே குடும்பசொத்தாகிய தார்வாடு யென்பதை அடைந்து பரிபாலனம் செய்வதற்கு யோக்கியனாக யிருக்கிறான். கூடப் பிறந்த மற்ற ஸகோதரர்களுக்கு தார்வாடைப் பிறித்துக் கொடுக்கும் வழக்கம் அங்கே இல்லை. தார்வாடு என்னும் குடும்ப சொத்தை காரணவனென்னும் மூத்த குமாரன் அடைந்து அநுபவித்து மற்றவர்கள் ஷை சொத்திலிருந்து ஜீவனாம்சத்தை மட்டும் பெற்றுக்கொள்ள பாத்தியஸ்தர்களாக யிருக்கிறார்கள்.

MISCELLANEOUS SUITS.

நானாவிதமான வியாஜ்ஜியங்கள்.

VAITHEESWARANKOIL DEVASTHANAM.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள வைதீஸ்வரன் கோவில்.

மேல்கண்ட தேவஸ்தானத்தின் காரியாதிகளை நடத்துவது ஸம்மந்தமான புதிய ஏற்பாடு.

நெ. 9.

ஒரு முக்கியமான தேவஸ்தானமாகிய வைதீஸ்வரன் கோவிலின் காரியாதிகள் இப்பொழுது தர்மபுரம் மடம் பண்டார ஸன்னிதி அவர்கள் ஒருவராலேயே நடத்தப்பட்டு வருவதாகவும், ஷை காரியாதிகள் இன்னும் அதிக நன்றாய் நடக்கும்படிக்குள்ள ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேணுமென்று கேட்டு மாயவரம் ஸப் கோர்ட்டில், கனம் அட்வோகேட் ஜெனரல் அவர்களால் ஒரு வியாச்சியம் தாக்கல் செய்யப்பட்டிருந்து, ஷை கோவிலின் காரியாதிகளை பண்டார ஸன்னிதி அவர்கள் நடத்துவதில் ஒழுங்கீனங்களிருந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. தக்க விசாரணை செய்ததின்பேரில், ஷை கோவிலின் ஐவேஜுகளை பண்டார ஸன்னிதி அவர்கள் தான் சொந்தத்துக்கும் தன் மடத்துக் காரியாதிகளுக்கும் உபயோகப்படுத்தி யிருப்பதாக ஸபார்டிநேட் ஜட்ஜ் அவர்கள் தீர்மானித்தார்கள். ஆகையால் ஷை தேவஸ்தானத்தின் காரியாதிகளை மடத்தினுடையவாவது அல்லது அதன் வேலைக்காரர்களுடையவாவது ஸ்வயேச்சையான ஆளுகையை விட்டு நீக்க வேண்டியது அவசியமாக யிருந்தது. ஆகிலும் ஷை கோவிலின் காரியாதிகள் பண்டார ஸன்னிதி அவர்களாலேயே நடத்தப்பட்டு வருவது நீடித்த வழக்கமாகயிருந்து வருவதை உத்தேசித்து ஷை ஸ்தானத்திலிருந்து பண்டார ஸன்னிதி அவர்களை பூராவும் நீக்கி விடுவதும் உசிதமல்ல. இத்யாதி காரணங்களால் ஸபார்டிநெட் ஜட்ஜ் அவர்கள் கனம் அட்வோகேட் ஜெனரல் அவர்களின் பிரார்த்தனைப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்து, ஷை கோவிலின் காரியாதிகள், பண்டார ஸன்னிதி அவர்கள் உள்பட 3. தர்மகர்த்தர்களடங்கிய ஒரு ஸபையாரால் நடத்தப்பட்டு வரவேண்டுமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள். மற்ற 2 தர்மகர்த்தர்களுக்காக சீயாழி, மாயவரம் தாலூக்காக்களில் வாசஞ் செய்பவர்களில் 2 பேர்களை கோர்ட்டில் தெரிந்தெடுத்து நியமுகம் செய்யப்படவேண்டும். அப்படி நியமிக்கப்பட்ட தர்மகர்த்தர்கள் 5 வருஷம் வேலை பார்க்கலாம். பிறகு அட்வோகேட் ஜெனரல் அவர்கள் மறுபடி மனுச்செய்ததின் பேரில் ஷை சுவாமியை வணங்குகிற பக்தர்கள் ஷை 2 தர்மகர்த்தர்களையும் தெரிந்தெடுத்துக்கொள்ளும்படி கோர்ட்டார் உத்தரவு செய்வார்கள். கோவில்கணக்குகளை பரிசோதனை செய்வதற்கும் வேண்டும் யேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏப்பிரல்மீ 26உ முதல் இந்தப் புதிய ஏற்பாடு ஊர்ஜிதத்துக்கு வரும்.

குறிப்பு :—தேவஸ்தானங்களின் காரியாதிகளை நன்றாக நடத்திவர வேண்டுமென்னும் பேரவா தங்களுக்கிருப்பதாக உலகத்தவருக்கு வெளிப்படையாகக்காட்டிக்கொண்டும் ஆனால் அந்தரங்கத்தில், தேவஸ்தானங்களின் அதிகாரங்களை வகிப்பதினால் தங்களுக்கு கௌரவம் யேர்ப்படுமென்றும், அதனால் அநேக ஸாதகங்களிருக்கின்றனவென்றும். பற்பல நோக்கங்களுடன் தேவாலயங்களின் "தர்மகர்த்தா" உத்தியோக முதலியவற்றை சிலர் ஏற்றுக்கொள்ளத் தலைப்படுகின்றனர். வாஸ்தவத்தில், கோயிற் காரியாதிகளை நன்றாய் நடத்த வேண்டுமென்கிற அந்தரங்க அபிலாஷையுடன் ஷை உத்தியோகத்தை வகிக்க முன் வருபவரும் அபூர்வமாகச் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் எத்தன்மையோராக விருப்பினும், இவர்களுடைய மேல் பார்வையினால், கோவில் உத்ஸவாதிகள் முதலியன திருப்திகரமான மாதிரியாக ஸரிவர நடந்தேறி வருவதோடு, ஷை கோவிலுக்குப்போக வேண்டுமென்ற நோக்கம் பொது ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய விதமாகவும், ஷை கோவிலுக்குப்போகிறவர்களுக்கு யாதொரு இடையூறும் நேரிடாதவிதமாகவும் ஷை கோவில் அப்போதைக்கப்போது பழுது பார்த்து சுசியாக வைத்துக்கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக வெளியூர்களிலுள்ள கிராமாந்தரங்களில் வசித்து, கோவில்களில் தர்மகர்த்தா முதலிய உத்தியோகங்களை யேற்றுக்கொண்டு அலுவல் நடத்திவருபவர்கள், ஷை உத்தியோகத்தில், தாங்கள் இஷ்டப்பட்ட படிக்கெல்லாம் செய்யலாம். தாங்கள் இட்டது சட்டம் என்று நினைத்தும், ஷை உத்தியோகத்தில் தங்களுக்கு ஏதும் பொறுப்பு இல்லை யென்று நினைத்துமிருக்கிறார்கள். சட்டத்தில் செய்யக்கூடாத ஒரு காரியத்தை ஒருவன் செய்வானேயாகில் அவன் கிரிமினல் தரப்பிலும், ஸிவில் தரப்பிலும், உத்தரவாதம் செயயவேண்டியவனாகி விடுகிறான். அதுபோலேவேயே கோவிலில் பழுதுபார்க்க வேண்டியதை கவனித்துப் பழுது பாராமலிருந்து விடுவதனால் கோவிலுக்குப் பலவகையாலும நஷ்டமும் கோவிலுக்குப் போகும் ஜனங்களுக்கு கஷ்டமும் ஏற்பட்டு விடுகிறது. இதற்கு உதாரணமாக அடியில் கண்டதும் 19-4-1917-ல் சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டில் பைசல் சேய்யப்பட்டதுமான கேசை இந்த ஸஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறோம். ப-ர்.

Madras High Court.

மதராஸ் ஹைக்கோர்ட்டு.

CLAIM AGANIST A·TEMPLE.

ஒரு கோவிலின்பேரில் நஷ்ட வியாஜ்ஜியம்.

நெ. 10.

ரூ. 12,000 நஷ்ட ஸமாதானத்திற்காக தீர்ப்புச் செய்யப்பட்டது.

சென்னப்பட்டணம், மைலாப்பூரிலுள்ள மாதவப் பெருமாள் கோவிலுக்கு மிஸ்டர் விநாயக முதலியார் என்பவர் தர்மகர்த்தாவாக யிருந்து வருகிறார். அந்தக் கோவிலின் கதவு கீழே விழுந்து விடும்படியான அபாயகரமான நிலமையிலிருந்து வந்தது. அதை சரியான காலத்தில் கவனித்து பழுதுபார்க்காமலிருந்து விட்டபடியால் ஷை கதவு பார்த்தஸாரதி அய்யங்கார் என்ற ஒருவர்பேரில் விழுந்து அவருடைய கால்கள் சாசுவத ஊனமாகி விட்டன. அதன்பேரில் ஷை பார்த்தசாரதி அய்யங்கார் தனக்கு தன்கால்கள் இனி ஸ்வாதீனப்படமாட்டாதென்றும் ஆகையால் தனக்கு நஷ்ட ஸமாதானமாக ரூ. 5,000 கிடைக்கவேண்டுமென்றும், ஷை மாதவப்பெருமாள் தேவஸ்தானத்தார்பேரில் ஷை பார்த்தஸாரதி அய்யங்கார் ஸிவில் வியாச்சியம் ஹைக்கோர்ட்டு

அஸல் தரப்பில் தாக்கல் செய்திருந்தார். ஷை வியாச்சியம் நாளது ஏப்ரல்மீ 19வ வியாழக்கிழமை யன்று, கனம்: மிஸ்டர் ஜஸ்டர் கூட்ஸ் ட்ராட்டர் துரை அவர்கள் முன்புக்கு விசாரணை செய்யப்பட்டது. ஷை கேசின் ஸாக்ஷியத்தில், கதவு விழுந்ததனால் யேர்ப்பட்ட காயத்தின் மூலமாக ஷை பையனுடைய கால்கள் சாசுவதமாக ஊனப்பட்டுப் போய்விட்டதாகவும், அவன் இனி நடக்க முடியாதென்றும் டாக்டருடைய வாக்கு மூலத்தினால் ருஜுவாச்சுது.

ஷை கோவில் தர்மகத்தாவாகிய மிஸ்டர் விநாயக முதலியாரை சாக்ஷியாக விசாரணை செய்ததில், தர்மகர்த்தா ஹோதாவில், ஷை விஷயத்தில் தனக்குள்ள பொறுப்பை ஒப்புக்கொண்டார்.

வாதி தரப்பில் ஆஜரான மிஸ்டர் நூஜெண்டு க்ராண்ட்துரை, வாதி-பிராதில் கேட்டிருக்கும் நஷ்ட ஸமாதானத் தொகையாகிய ரூ. 5,000 இந்தக் கேசின் தன்மையை உத்தேசிக்கும் பொழுது மிகவும் குறைந்த தொகை யென்றும், ஆகையால் பிராதை சீர்திருத்த அனுமதி கொடுக்க உத்தரவு செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டார். அவ்விதமே அனுமதி கொடுக்கப்பட்டதின்பேரில் ரூ. 12,000 நஷ்ட ஸமாதானத் தொகையாகக் கேழ்க்கப்பட்டது. கோவில் ஐவேஜியிலிருந்து வாதிக்கு ரூ. 12,000-மும் கோர்ட்டுச் சிலவுடன் கொடுக்கும்படி தீர்ப்புச் செய்யப்பட்டது.

லாயர்கள்:—வாதிபக்கம் மிஸ்டர் நியூஜெண்ட்கிராண்ட், பிரதிவாதி பக்கம் மிஸ்டர் C. P. ராமஸாமி அய்யர், ஆஜரானார்கள்.

VILLAGE SHEET.

கிராம ஜனங்களுடைய பக்கம்.

சர்க்கார் ஜலம் பாய்வது சம்பந்தமாய் ஓர் முக்கியமான தீர்ப்பு.

ஜட்ஜிகள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர்ரஹீம் (பிரதான ஜட்ஜாக அலுவல் பார்ப்பவர்).

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ்.

இவர்கள் முன்பாக.

1914-ம் ளுத்திய 2-வது அப்பீல் நெ. 945.

ஆலோசனை சபையிலுள்ள இந்தியா மந்திரி அவர்கள் அப்பீல் வாதி—(பிரதிவாதி).

வி. ஏ. மகாதேவ சாஸ்திரியள்—அப்பீல் பிரதிவாதி-(வாதி).

மாயவரம் டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டு 1910-ம் வருஷத்திய அஸல் வியாச்சிய நெ. 50-ன் டிக்கிரியின்பேரில் மாயவரம் ஸபார்டினேட் ஜட்ஜ் கோர்ட்டில் 1912-ம் ளுத்திய 181-ம் நெ. அப்பீல் செய்யப்பட்டு அந்த அப்பீல் டிக்கிரியின் பேரில் இந்த 2-வது அப்பீல் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

1915-ம்ளு செப்டம்பர்மீ 17வ வெள்ளிக்கிழமை இந்த 2-வது அப்பீல் ஈயரிங்குக்கு வந்து அப்பீலுக்குறிய ஆதாரங்களையும் (Grounds of Appeal) கீழ் அப்பீல் கோர்ட்டாருடையவும், அசல் கோர்ட்டாருடயவும், தீர்ப்புகளையும், டிக்கிரிகளையும், கேசில் சம்பந்தப்பட்ட மற்ற முக்கியமான ரிக்கார்டுகளையும் படித்தும், அப்பீல் வாதி பக்கம் கவர்ன்மெண்டு ப்ளீடர் அவர்களாலும், அப்பீல் பிரதிவாதி பக்கம் வக்கீல் மிஸ்டர் T. R. வெங்கடராம சாஸ்திரி அவர்களாலும் பேசப்பட்ட வாதங்களையும் கேட்டும், 1915-ம்ளு செப்டம்பர்மீ 23வ வரை ஷை கேசின் விஷயங்களை எல்லாம் நன்றாய் ஆலோசனை செய்ததின்பேரில் ஜட்ஜிகள் சேஷகிரி அய்யர் அவர்கள், குமாரஸ்வாமி சாஸ்திரியள் ஆகிய இருவர்களும் ஷை கேசை புல் பெஞ்சு (Full Bench) அபிப்பிராயத்துக்காக அனுப்பி அடியில் கண்ட உத்தரவைப் பிறப்பித்தார்கள்.

இந்தக் கேசின் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட தண்ணீர் தீர்வையை வாப்ஸ் செய்யும்படிக்காக இந்த வியாஜ்யம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பிரதிவாதியின் வாய்க்காலில் ஓடுகிற தண்ணீரின் கசிவைக் கொண்டு வாதியின் வாழைத்தோட்டம் தண்ணீர் பாச்சப்பட்டிருப்பதாக டிஸ்ட்ரிக்ட் முனிசிப் தீர்மானித்தார். பிரதிவாதியின் வாய்க்காலில் அல்லது வாய்க்காலுக்கு பக்கத்திலுள்ள வாழைகளுக்கு மட்டும் பிரதிவாதியின் வாய்க்கால் ஜலம் பாய்ந்ததென்றும், மற்ற வாழைகளுக்கு ஷை ஜலம் பாயவில்லை யென்றும் ஸபார்டினேட் ஜட்ஜ் தீர்மானித்ததாகத் தெரியவருகிறது. தீர்வை யேற்படுத்தக் கூடிய வாழைகள் இன்ன தென்றும், தீர்வை ஏற்படுத்தப்படக்கூடாத வாழைகள் இன்ன தென்றும் பிரித்துச் சொல்லாமலே, கலெக்டர், ஷை கசிவு தண்ணீரினால் வாதி பிரயோஜனம் அடைந்திருக்கிறார் என்று எழுத்து மூலமாய்ச் சொல்லாததினால் தீர்வை ஏர்ப்படுத்தியது சட்ட விரோதமென்று அவர் தீர்ப்புச் செய்தார். இ-லா-ரி. 34 ம. 21-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற இந்திய மந்திரி அவர்களுக்கும், ஸ்வாமி நாரதீஸ்வரர் என்பவருக்கும் நடந்த வியாச்சியத்தில் கலெக்டர் வியாச்சியம் தாக்கல் செய்ததே தண்ணீர் பாய்ந்தது, அவர் அபிப்பிராயத்தில் அனுகூல மிருந்ததென்று எழுத்து மூலமாகச் சொன்னதற்கு ஸமானந் தானென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேசில் எழுத்து மூலமான ஸ்டேட்டுமெண்டு தாக்கல் செய்திருப்பதையும் அப்படியே எண்ணவேண்டுமென்று கற்றுணர்ந்த கவர்ன்மெண்டு ப்ளீடர் அவர்கள் அனுவாதம் செய்கிறார்கள். கலெக்டருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் யுக்தமானது நியாய ஸம்மந்தமாயுள்ளது. அது 1865-ம்ளுத்திய 7-வது ஆக்டின்படி கவர்ன்மெண்டாருடைய நடவடிக்கையை ஆக்ஷேபித்துக் கொண்டு வரப்படுகிற வியாச்சியங்களில் முக்கியமான விஷயங்களை பைசல் செய்யும் பாத்தியதையை ஸிவில் கோர்ட்டாருடைய பரிசீலனையிலிருந்து எடுத்துவிடக் கூடியதாக ஆய்விடும். தீர்வை ஏற்படுத்து முன்னாடியே இந்த விஷயத்தில் கலெக்டர் தன் கவனத்தைச் செலுத்தி யிருக்க வேண்டும். இ-லா-ரி. 35 ம 197-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற ராஜா ராமசந்திர அப்பாராவுக்கும், இந்திய மந்திரி அவர்களுக்கும் நடந்த கேசு விஷயமாய் 206-ம் பக்கத்தில் ஜட்ஜ் சங்கர நாயர் அவர்கள் சொல்லி யிருக்கும் அபிப்பிராயமானது இந்த அபிப்பிராயத்திற்கு ஒத்திருக்கிறது. 1894-ம் ளுத்திய 2-வது ஆக்டின்படிக்குள்ள இதே மாதிரி அதிகார விஷயமான கேசுகளாகிய 1911-ம் ளுத்திய 668, 672-ம் நெ. 2-வது அப்பீல்களில் 1894-ம் ளுத்திய 2-வது ஆக்டுப்படி உறுதிமொழி எழுதாமலே அதிகாரமில்லாத எந்த சங்கதிகளையும் கவர்ன்மெண்டார் செய்யும்பொழுது, அந்தச் செய்கையே உறுதிமொழி ஆகுமென்று தீர்மானிப்பது கிரமமான விஷயம் என்று கற்றறிந்த ஜட்ஜிகள் சொல்லுகிறார்கள். நாங்களும் அப்படியே அபிப்பிராயப் படுகிறோம். ரிவினியூ இன்ஸ்பெக்டர் அபிப்பிராயம் எழுதி அதில் டிப்டி கலெக்டர் அடையாளக் கையெழுத்துச் செய்திருக்கும் நடபடிக்கையே அந்தப் பிரிவுப்படிக்குப் போதுமானதென்று கற்றறிந்த கவர்ன்மெண்டு ப்ளீடர் அவர்கள் வாதிக்கிறார்கள். இந்த வாதத்தை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது. கலெக்டர் என்ற வார்த்தையில் ரிவினியூ இன்ஸ்பெக்டர் அடங்க வில்லை. தீர்வை ஏற்படுத்தப்பட்ட கக்ஷிக்காரருக்கு இந்த நீர் பாய்ச்சலினால் அனுகூல மிருந்ததா வென்பதைத் தீர்மானிக்க வேண்டிய விஷயத்தை ஸிவில் கோர்ட்டாருடைய பரிசீலனையிலிருந்து எடுத்துவிடும் பொருட்டே அப்படித் தீர்மானிக்க வேண்டியதில் உபயோகிக்கும் யுக்தத்தை மேலான உத்தியோகஸ்தருக்கே சரியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அப்பீல் பிரதிவாதியின் கற்றறிந்த வக்கீல் கசிவு தண்ணீரால் "நீர் பாய்ச்சுகிறது." (Irrigation by percolation) என்பதின் அர்த்தத்தைப் பற்றித் தீர்மானம் செய்யவேண்டுமென்றும் பலமாய் வாதிக்கிறார். ஜலம் இயற்கையில் தன்படியாய் கசிவது நீர்பாய்ச்சலாக மாட்டாதென்று வாதிக்கப்பட்டது. இந்த விஷயத்தைப் பற்றி டிஸ்ட்ரிக்ட் முனிசிபு கல்வித்திறமை பொருந்திய ஒரு தீர்ப்பை எழுதி யிருக்கிறார். இந்தக் கேசில் சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயங்களை எல்லாம் யோசித்து அடியில்கண்ட கேழ்விகளை புல் பெஞ்சு (Full Bench) தீர்மானத்துக்கு அனுப்ப வேண்டியது அவசியம் என்று நினைக்கிறோம்.

(1) தண்ணீர் பாய்ச்சினதினால் அனுகூலம் தானென்று 1865-ம் ளுத்து 7-வது ஆக்ட்டு பிரிவு, I (b) ப் படிக்கு, கலெக்டர் தானே நேரில் எழுதக்கடமைப்பட்டிருக்கிறாரா ?

(2) இந்த அதிகாரத்தை அவர் தனக்கு கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கக்கூடுமா ?

(3) தண்ணீர் தீர்வை விஷயமாய் வியாச்சியம் செய்ய அனுமதி கொடுத்ததும், செய்யப்பட்ட வியாச்சியத்தில் எதிர் வாதம் செய்ததும் பிரிவு 1 (b) யின் நிபந்தனைகளை அனுஸரித்து நடந்ததாகுமா ?

(4) கசிவு தண்ணீரினால் "நீர் பாய்ச்சல்" என்பது பூமியில் ஊறின ஜலத்தை மரங்களின் வேர்கள் குடிக்கிறதற்கும் ஸம்மந்தப்படுமா ?

இந்த 2-வது அப்பீல் 1916-ம் ளு ஜூலைமீ 21வ வெள்ளிக்கிழமை புல் பெஞ்சு (Full Bench) தீர்மானத்திற்காக அனுப்பப்பட்ட விஷயங்கள் ஈயரிங்குக்கு வந்து, ஷை கேசை புல் பெஞ்சு தீர்மானத்திற்கு அனுப்பும்படி செய்யப்பட்ட உத்தரவைப் படித்தும் அப்பீல் வாதிக்காக கவர்ன்மெண்டு ப்ளீடரும், அப்பீல் பிரதிவாதி பக்கம் வக்கீல் மிஸ்டர் T. R. வெங்கட்டராம சாஸ்திரி, மிஸ்டர் அய்யாசாமி அய்யர் இவர்களும் தெரிவித்த விஷயங்களைக் கேட்டும், இன்று வரை ஷை கேசின் விஷயங்களை ஆலோசனை செய்தும், கோர்ட்டார் அடியில்கண்ட அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள்.

அபிப்பிராயம்.

பிரதான ஜட்ஜாக வேலை பார்ப்பவர்கள் (The Officiating Chief Justice). இந்தக்கேசை புல் பெஞ்சு அபிப்பிராயத்துக்கு அனுப்பும்படி, பிறப்பிக்கப்பட்டிருக்கிற உத்தரவில் கண்ட கேழ்விகளுக்கு ஜவாப்பானது 1865-ம் ளு 7-வது ஆக்ட்டின் (Irrigation Cess Act VII of 1865). 1-வது பிரிவின் அர்த்தத்தைப் பொறுத்ததாக யிருக்கிறது. அந்தப்பிரிவு பின் வருமாறு இருக்கிறது:—நிலங்களுக்கு தண்ணீர் பாய வேண்டிய விஷயத்தில், கவர்ன்மெண்டாருக்குப் பாத்தியப்பட்ட யாதாமொரு நதி, நீரோட்டம், வாய்க்கால், இவைகளிலிருந்தாவது, அல்லது கவர்ன்மெண்டாரால் உண்டாக்கப்பட்ட குளம் முதலியவைகளிலிருந்தாவது சாகுபடி செய்யப்படுகிற நிலத்திற்கு தண்ணீர் சவுதரிக்கப்பட்டாலும், பாய்ச்சப்பட்டாலும், (b) கவர்ன்மெண்டாருக்குப்பாத்தியப்பட்ட நதி, நீரோட்டம், வாய்க்கால் இவைகளிலிருந்து, அல்லது கவர்ன்மெண்டாரால் உண்டு பண்ணப்பட்ட குளம் அல்லது நீர்த்தாவு இவைகளிலிருந்து நேரிலாவது, அல்லது வேறு எந்த விதத்திலாவது ஓடிப்பாய்ந்தாலும், அப்பேர்ப்பட்ட நதி, நீரோட்டம், வாய்க்கால், குளம் முதலிய நீர்த்தாவுகள் இவைகளிலிருந்து கசியும் ஜலமானது நேரில் பாய்ந்தாலுமே, பக்க நிலத்தில் விழுந்து, அதன் மூலமாகப்பாய்ந்தாலுமே, அல்லது அப்பேர்ப்ப

ட்ட ஜலமானது வேறு நீர்த்தரவில் விழுந்து அதிலிருந்து பாய்ந்தாலுமே, அப்படிப்பாயும் ஜலமானது, ஷை சாகுபடிக்கு அனுகூலமானது தானென்றும், ஷை சாகுபடி செய்யப்பட்ட பயிர் விளைவதற்குப்போதுமான தென்றும், (ரிவினியூ போர்டார் அவர்களுடையவும், கவர்ன்மெண்டார் அவர்களுடையவும் மேல் பார்வைக்குட்பட்டு,) கலெக்டர் அபிப்பிராயப்பட்டால், கவர்ன்மெண்டார் தங்கள் இஷ்டப்படி தண்ணீர் பாய்ச்சப்பட்ட ஷை நிலத்திற்கு சட்டப்படி பிரத்தியேகமான தீர்வை ஏற்படுத்தலாம். ஷை ஆக்டின் பீடிகையில் சொல்லப்பட்டிருப்பதாவது. "தேசத்திற்கும், நிலசுவான்களுக்கும், குடித்தனக்காரர்களுக்கும், அதிக லாபம் உண்டாகவேண்டுமென்ற எண்ணத்துடன், நீர்ப்பாசனம், வாய்க்கால் முதலியதுகளை அமைப்பதற்காகவும் அப்படி அமைக்கப்பட்டவைகளை அபிவிருத்தி செய்வதற்காகவும், இந்த இராஜதானியில் அநேக ஜில்லாக்களில் கவர்ன்மெண்டார் ஏராளமான தொகை இதுவரை சிலவு செய்தும் இன்னும் சிலவு செய்து கொண்டு மிருப்பதாலும் இப்பேர்ப்பட்ட நீர் ஆதாரங்களிலிருந்து சாகுபடி நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதினுல், ஷை நிலங்களில் கிடைக்கிற அதிக வரும்படியின் பிரயோசனத்தை கவர்ன்மெண்டார் அடையவேண்டியது ஸரியாயும் நியாயமாயுமிருக்கிறபடியால் அடியில் கண்டபடி விதிக்கப்படுகிறது" இவ்விதமாக, நீர்ப்பாசன வஸதிகளையும் வாய்க்கால் முதலியதுகளை கட்டுவதிலும் அவைகளை அபிவிருத்தி செய்வதிலும் கவர்ன்மெண்டார் செய்கிற சிலவுகளையும் அப்பேர்ப்பட்ட நீர்ப்பாசன வஸதிகளினுல் நிலசுவான்கள் அடைகிற லாபத்தையும் உத்தேசித்து கவர்ன்மெண்டாருக்கு பாசனத்தீர்வை ஏற்படுத்தப்பாத்தியதை யிருப்பதாக சென்னப்பட்டணம் சட்டத்தினுல் வெளியாகிறது. ஆனுல் நீர்ப்பாசன வஸதியானது ஸ்வயம் நதியாகவாவது, அல்லது நீரோட்டமாகவாவது யிருப்பதனுல் அவைகளை அமைப்பதிலாவது, அபிவிருத்தி செய்வதிலாவது கவர்ன்மெண்டார் யாதொரு பணச்சிலவும் செய்யாமலிருந்த போதிலுமே, பாசனத்தீர்வை ஏற்படுத்தும் பாத்தியதையை கவர்ன்மெண்டாருக்கு ஷை சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது விஷயமான ஷை சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் ராஜ்ய நீதிக்கு மேல் போனதாகயிருக்கிறது. அது எப்படி யிருந்தாலுமே, சட்டத்தில் உபயோகித்திருக்கப்பட்ட பதங்களின் பேரில் அர்த்தம் செய்து அவைகளை அனுஷ்டானத்துக்குக்கொண்டுவர நாம் கடமைப்பட்டிருக்கிறோம். புல் பெஞ்சு அபிப்பிராயத்திற்கு அனுப்பும்படி செய்யப்பட்ட உத்தரவில் கண்ட 1-வது கேழ்விக்கு, கலெக்டர் தானே நேரில் எழுதக்கடமைப்படவில்லையென்றும் எந்த நிலத்துக்கு தண்ணீர் தீர்வை ஏற்படுத்தப்படுகிறதோ அந்த நிலத்துக்குத் தண்ணீர் பாய்வதனுல் அனுகூலமிருக்கிறதென்றும், அந்த நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டிருக்கிற மாகுல் விளைவுக்கு போதுமான பாய்ச்சலிருக்கிறதாவென்று திருப்தி செய்து கொள்ளும் கடமையானது நியாய ஸம்மந்தமான (Judicial) கடமை யில்லை என்றும். ஆகையால் அந்தக் கடமையை சரியானபடி செலுத்தியிருக்கிருருவென்று பார்க்கும் அதிகாரம் ஸிவில் கோர்ட்டாருக்கு இல்லையென்றும் ஜவாப்சொல்லவேண்டியதிருக்கிறது. தாவா நீர்ப்பாய்ச்சல் அனுகூலமானதென்று ரிவினியூ உத்தியோகஸ்தர் எழுத்து மூலமாக எழுதவேண்டுமென்று சட்டத்தில் ஒரு இடத்திலும் சொல்லப்படவில்லை. ரிவினியூ உத்தியோகஸ்தரால் செய்யப்படவேண்டிய கடமையானது ரிவினியூ மேல் அதிகாரிகளாலும், கவர்ன்மெண்டாராலும் மேல் பார்க்கக்கூடிய நிர்வாக சம்மந்தம் (Executive) உள்ளதாக யிருக்கிறது. தண்ணீர் தீர்வை ஏற்படுத்தும் விஷயத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற கலெக்டராவது அல்லது வேறு எந்த ரிவினியூ உத்தியோகஸ்தராவது, தன் அபிப்பிராயத்தை எழுத்து மூலமாக எழுதாத காரணத்தால், ஏற்படுத்திய தீர்வையானது சட்ட விரோதமானதென்று தீர்மானித்து ஷை தீர்வையை ரத்து செய்து விடும்படிக்கான நிபந்தனைகளை சட்டத்தில் காணவில்லை. இ-லா-ரி. 34-ம-21-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற, இந்தியா மந்திரி அவர்களுக்கும், ஸ்வாமி நாரதீஸ்வரர் என்பவருக்கும் நடந்த கேசு சங்கதியில், இதே அபிப்பிராயத்தை இந்த ஹைக்கோர்ட்டார் ஷை லா ரிப்போர்ட்டின் 24-ம் பக்கத்தில் வெளியிட்டிருக்கிருர்கள். அந்தத்தீர்மானம் ஸரியானதென்பதில் சந்தேகமேயில்லை. 1-வது கேழ்விக்கு ஜாவாப்பானது, இல்லை யென்று மறுப்பதாகையால் 2, 3-வது கேழ்விகளுக்கு இடமில்லை.

(இன்னும் வரும்.)

வரப்பெற்றது:—கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி சன்னதி வீதி 40-வது நெ. வீட்டிலிருக்கும் K. R. இராகவய்யங்கார் அவர்கள் அனுப்பிய (மாதிரி) தந்தப்பொடி, சுகாநந்த பரிமளத் தைலம், "தசாங்கம்," யென்னும் வாசனை வஸ்துக்களால் சேர்க்கப்பட்ட வாசனைத் தூள் கிடைக்கப் பெற்றனம். அவைகளில் சுகாநந்தப் பரிமளத் தைலம் குளிர்ச்சி பொருந்தியதாயும், தசாங்கம் அதிக பரிமள முள்ளதாயு மிருக்கிறது. பல்பொடியோ மெத்த விலை சகாயமுள்ளதாக விருக்கிறபடியால் சகலரும் வாங்கி உபயோகிக்கலாம். ப-ர்.

The Indian Law Gazette.

PART I.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஸு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் I.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ஸு மேமீ [நெ. 5.

EDITORIAL.

பத்திராதிபர் வியாசம்.

SHOULD THE MASSES KNOW THE LAW?
(Continued.),

ஸாதாரண ஜனங்களுக்கும் சட்டம் தெரிந்திருக்க வேண்டுமா?
(தொடர்ச்சி).

கல்வி என்பது அநேக ரூபங்களாக யிருக்கின்றன. ஒவ்வொரு விஷயத்தையும் குறித்த ஆதாரங்களெல்லாம் எழுத்து மூலமாக எழுதப்பட்டு சாஸ்திரங்கள் அல்லது கிரந்தங்கள் ரூபமாக யிருந்து வருகின்றன. எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் ஷை கிரந்தங்களைப்படித்து அதில் கண்ட விஷயங்களைத் தெரிந்துகொள்ளுகிருர்கள். படிக்க எழுதத் தெரியாதவர்கள் அப்படிப்படித்தவர்களிடமிருந்து தங்களுக்கு வேண்டும் விஷயங்களைத் தெரிந்து கொண்டு, ஷை விஷயங்களை அடிக்கடி அப்பியாசம் செய்து அவைகளில்நன்ருய்த் தேறிவிடுகிருர்கள். வைத்தியசாஸ்திரம், ஸங்கீத ஸாஹித்திய சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம், (கட்டடங்கள் கட்டுவது சம்பந்தமான சாஸ்திரம்) இவைகளையும், தச்சு வேலை, கொல்லு வேலை, பித்தளை வெங்கலம் செம்பு முதலியதுகளில் செய்யும் கன்னுர வேலை, தங்கம், வெள்ளி முதலியவைகளில் செய்யும் தட்டார வேலை இவைகளையும், பயிரிடும் தொழில் சம்பந்தமான விஷயங்களையும், வர்த்தக சம்பந்தமான விஷயங்களையும், சித்திர மெழுதுதல், வர்ணவேலைகள் செய்தல் இவைகளையும், நீராவி யந்திரங்களை ஓட்டுவது ஷை யந்திரங்களை உண்டு பண்ணுவது முதலியவைகளைப்பற்றியும், எழுதப்பட்டுள்ள அநேக கிரந்தங்களிருந்தும் ஷை கிரந்தங்களை நேரில் படித்துத் தெரிந்து கொள்ளுவதற்குறிய சாதனமாகிய "படிக்க எழுதத்தெரிவது" என்னும் கருவியில்லாமையால் மேற்கண்ட பிரகாரம் படிக்க எழுதத் தெரிந்தவர்களிடமிருந்தே விஷயங்களைக்கற்றுக்கொண்டு நிபுணர்களாய் விடுபவர்களே நமது நாட்டில் பெரும்பான்மையோர். அதற்கு உதாரணமாக ஒவ்வொரு ஊரிலுமுள்ள தச்சு வேலை, கொல்லு வேலை, தட்டார வேலை, கன்னுர வேலை, நாகஸ்வரம் வாசிக்கும் வேலை, இவைகளைச் செய்யும் தொழிலாளிகளையே சொல்லலாம். படிக்க எழுதத் தெரியாத அநேகர்கள் ஸங்கீத ஸாஹித்

திய சாஸ்திரங்கள் ஸம்பந்தமான வீணை, பிட்டில், ஸ்வரபத்து, விதார், ஹார்மோனியம் முதலிய வாத்தியங்களில் தேர்ச்சியடைந்து கியாதி பெற்றிருப்பதை நாம் பார்த்து வருகிறோம். இரண்டு கண்ணும் தெரியாதவும் பிறவியிலேயே குருடாகப் பிறந்தவருமான சரப சாஸ்திரி என்னும் வேதிய குலத்தில் உதித்தவர் புல்லாங்குழல் வாசிப்பதில் உலகறிந்தகியாதியை அடையவில்லையா? படிக்க எழுதத் தெரியாமலேயே சகல விதமான வித்தையையும் கற்றுக்கொள்வது ஸாத்தியமாக யிருந்தாலும் "பொன் மலர் நாற்றமுடைத்து" அதாவது ஸ்வர்ணபுஷ்பத்துக்கு வாஸனையும் யேர்ப்பட்டால் எவ்வளவு அனுகூலமாக யிருக்குமோ அதுபோல படிக்க எழுதமட்டும் தெரிந்திருக்குமாகில் தான் கற்கும் வித்தையை எளிதில் சுருக்கமான காலத்திற்குள் கற்றுக்கொள்ளவும், சற்றுக்கொண்ட பிறகு அதை அபிவிருத்தி செய்து சொள்ளவும் மிகவும் அனுகூலமாக யிருக்கும். இதன்றி பத்திரிகைகளைத் தானே நேரில் படித்து உலகத்தில் நடந்தேறிவரும் பல விஷயங்களைப்பற்றியும் அப்போதைக்கப்போது தெரிந்துகொள்ளக்கூடும். அப்படித் தெரிந்து கொள்வதின் பிறயோசனம் அறிவை வளரச் செய்வதாகும். மேனுடுகளிலுள்ள ஜனங்கள் எவ்வகையிலும் நாளுக்குநாள் அபிவிருத்தி அடைவதின் காரணம், அவர்களுக்குத் தன் தேசபாஷையைப் படிக்க எழுதத்தெரிந்திருக்கும் யோக்கியதை தான் முதல் காரணம். அப்பால் அந்த யோக்கியதையோடு, உலகத்திலுள்ள பல விஷயங்களின் ஸாராம் சங்களையும் தெரிந்துகொள்வதில் ஊக்கமும், தன்னுடைய அபிருசிக்கு தக்கவாறுதான் பின்பற்றுவதற்கு ஒரு தொழிலைத் தெரிந்தெடுக்கவும் தான் பின்பற்றும் தொழிலை சரியான விதத்தில் ஆரம்பம் செய்து அதை விடா முயற்சியுடன் சரியானபடி நடத்தி தான் பின்பற்றும் தொழிலில் முன்னுக்கு வந்துவிடுகிறுர்கள். இதெல்லாம் பத்திரிகைகளை நாள்தவருது படித்து உலகத்திலுள்ள பற்பல ஜாதியார்களுடைய நடையுடைபாவனை ஒழுக்கம் ஆசார அனுஷ்டான முதலானவைகளையும், அவர்கள் இவ்வுலகத்தில் மேன்மை பெற்று விருத்தி யடைந்தோ அல்லது கீழான நிலமையிலிருந்து வருவதற்கோ உறியகாரணங்கள் முதலிய யாவத்து சங்கதிகளையும் தெரிந்து கொள்ளுகிறுர்கள். இப்படி அவர்கள் விஷயங்களைத் தெரிந்துகொள்வது பத்திரிகைகளின் மூலமாகத்தான். நமது இந்துதேசத்திற்கு ஐ. ஸி. எஸ். (I. C. S.) பரிக்ஷையிற்றேறி விட்டும் ஐ. எம் எஸ். (I. M. S.) பரிக்ஷை தேறி விட்டும் இன்னும் இஞ்சினீரிங் (Engineering) முதலிய பரிக்ஷைகளில் தேறிவிட்டும் ஸர்க்கார் உத்தியோகங்களுக்கு வந்திருக்கும் ஐரோப்பியர்களைத் தவிர, பற்பல வகையான வியாபாரங்கள் செய்யும் பொருட்டும், அப்பேர்ப்பட்ட வியாபாரிகளுக்குள் அலுவல் பார்க்கும் பொருட்டும் அநேக வெள்ளைக்காரர் வந்திருக்கிறுர்கள். அவர்கள் இன்னவிதமாய் தங்கள் முயற்சிகளை நடத்துகிறுர்கள் என்பதும் அவர்கள் நமது தேசத்தவர்களைக் கொண்டே தங்கள் வேலைகளை நடத்திக் கொண்டு ஏருளமான பணத்தை சம்பாதித்து விடுகிறுர்கள். இவர்கள் 5,000 மைலுக்கு மேல்பட்ட தூரத்திலிருக்கும் மேல் நாடுகளில் நடக்கும் சங்கதிகளை எல்லாம் பத்திரிகைகளின் மூலமாகத் தெரிந்து கொள்ளுகிறுர்கள். மேல் நாடுகளில் கூலிஆட்களும், ரிக்ஷா வண்டி யிழுப்பவர்களும் பின்னும் தாழ்ந்த நிலமையிலிருக்கும் மற்றோரும், பத்திரிகைகளை வாங்கி வாசிக்கிறுர்கள். எல்லாக் குழந்தைகளையும் பள்ளிக்கூடத்திற்கு கட்டாயமாக அனுப்பித்தீரவேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கும் விதி அனுஷ்டானத்திற்கு வருமுன், வாசிக்க எழுதக் கற்றுக்கொள்ளாதவர்களும் பத்திரிகைகளில் கண்ட சமாச்சாரங்களைத் தெரிந்து கொள்ளாமலிருப்பதில்லை. பத்திரிகைகளை வாங்கி வாசிக்கத் தெரிந்தவர்களைக் கொண்டு வாசிக்கச் சொல்லியாவது சங்கதிகளைத் தெரிந்து கொள்ளுகிறுர்கள். இப்படி பத்திரிகைகளுக்கு ஆதரவு ஜாஸ்தியாக ஏற்படவே, ஒவ்வொரு பத்திரிகையிலும் லக்ஷக்கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டு வருகின்றன. மேல் நாடுகளிலிருக்கும் ஜனத்தொகையில் 100-க்கு 75 பேர்களுக்குக்குறை வின்றி பத்திரிகைகள் தருவித்து வாசிக்கிறுர்கள். லண்டன் நகரில் பிரசுரம் செய்யப்படும் டிட்பிட்ஸ் (Tit Bits) என்னும் வாராந்தப் பத்திரிகையில் சுமார் 8 லக்ஷம் பிரதிகள் அச்சிடப்பட்டுச் சிலவாகி வருகிறதென்று தெரியவருகிறது. ஆனுல் நமது இந்தியா தேசத்தில், அதிலும் முக்கியமாய் நமது தமிழ் நாட்டில் ஆதரிப்போரில்லாமையினுல், வெளி வரும் பத்திரிகைகளின் எண்ணிக்கையே மிகவும் குறைவு. படித்தவர்களிலும் கூட 100-ல் 5 பேர்கள் பத்திரிகைகள் தருவித்து வாசிப்பது துர்லபமாக யிருக்கிறது.

சாதாரணமாக எழுதப்படிக்கத்தெரிந்து பத்திரிகைகளைப் படித்து விஷயங்களை நன்குகத் தெரிந்து கொள்ளும் காரணத்தால், இந்தியாவில் ஒரு வருஷகாலத்துக்குள் தாக்கல் செய்யப்படும் வியாச்சியங்களின் எண்ணிக்கையை விட இங்கிலாண்டு கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்படும் வியாச்சியங்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்திருக்கிறது. ஒரு ஆங்கிலேய ஐ. ஸி. எஸ். ஸப் கலெக்ட்டர் துரையவர்கள் ஒரு ஸமயம் பேசிய காலத்தில் இந்தியாவில் ஒரு ஜில்லாவில் ஒரு வருஷத்தில் எத்தனை கேசுகள் தாக்கல் செய்யப்படுகின்றனவோ, அத்தனை கேசுகள் இங்கிலாந்து பூராவுமே தாக்கல் செய்யப்படுகிறதில்லை யென்று சொன்னுர். அதற்குக் காரணம், ஆங்கிலேயர் அடைந்திருக்கும் கல்விக்குறிய நாகரீகத்தினுல் சட்டத்தில் எந்தச் செய்கையைச் செய்தால் குற்ற மென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தச் செய்கையையும், தனக்கு பாதகமாக ஏற்படக்கூடிய செய்கையையும் செய்யாமலும், எதைச் செய்யாவிடில் குற்றமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தச் செய்கைகளைச் செய்தும், ஒழுங்காய் நடந்து வருவது தான்.

இப்படியே சட்ட ஸம்மந்தமான விஷயங்களை சகலருக்கும் தெரிவிக்கும் பொருட்டே லாரிப்போர்ட்டுகள் யேர்ப்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைகளைத் தருவித்துப் படிப்பதனுல் சட்ட சம்மந்தமான சகல விஷயங்களும் நமக்குத் தெரியவருகின்றன. லாரிப்போர்ட்டுகளெல்லாம் ஆங்கிலேய பாஷையிலிருப்பதினுல் ஆங்கிலம் தெரியாதவர்கள் லாரிப்போர்ட்டுகளில் கண்ட விஷயங்களைத் தெரிந்து கொள்ள மார்க்கமில்லாமலிருந்து வந்தது. இதற்காகவேயே இந்த இந்திய சட்ட கெஜெட் என்னும் சட்ட ஸஞ்சிகை ஏற்படுத்தப்பட்டது. ஜனங்கள் இதன் உபயோகத்லை நாளடைவில் அறிந்து இந்த பத்திரிகையை ஒவ்வொரு தமிழ் கிராமத்திலும் தருவித்து வாசித்து விருத்தி அடைவார்களென்ற நம்பிக்கையுடன் இந்த இந்தியன் சட்டகெஜெட்டில் பிரசுரிக்கப்படும் விஷயங்களை நன்கு தெரிந்தெடுத்து இனிய, சுலபமான நடையில் எழுதியும் இன்னும் அதை பலவகையில் தமிழ் நாட்டு ஜனங்களனைவருக்கும் உபயோகமுள்ளதாகச் செய்வதற்குள்ள சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. அப்படியிருந்தும் ஜனங்கள் அனைவரும் இதன் உபயோகத்தை நன்குய் தெரிந்து கொள்ளாததின் காரணம் ஸாதாரண ஜனங்களுக்கும் சட்டம் தெரிந்திருக்க வேண்டுமோ என்ற சந்தேகமான கேழ்வி தான். ஆகையால் நாம் ஆரம்பித்த விஷயத்தைத் தொடர்ந்து சொல்லுவோம்.

ஜனங்களுடைய க்ஷேமலாபங்களை உத்தேசித்து அவர்களுக்கு சட்டங்கள் தெரிந்திருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறதா! அல்லது அவர்களுக்கு சட்டம் தெரிந்திருக்கவேண்டிய தென்பது விதியா! என்ற விஷயம் தீர்மானிக்கப்பட வேண்டியதாக யிருக்கிறது. அவர்களுக்கு சட்டம் தெரிந்திருக்கவேண்டியது விதி. அல்லாமலும் சட்டம் தெரிந்திருப்பதினுல் உண்டான ஸாதனங்கள் பல உண்டு.

சட்டம் எல்லாருக்கும் தெரிந்திருக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் ஒவ்வொரு சட்டமும் சட்டமாக ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரப்படு முன் மசோதாவாகப் பிரசுரம் செய்யப்படுகிறது. அந்தச் சட்டங்களின் நிபந்தனைக்குட்பட்டு நடக்கவேண்டியவர்களான ஜனங்கள், அந்த மசோதாவைப் படித்து அந்த மசோதாவிலிருக்கும் குறைவுகளைச் சீர் திருத்தவும், பாதகமான விஷயங்களை எடுத்து விடவும் சேர்க்கவேண்டிய விஷயங்களைச் சேர்க்கவும் இப்படிப்பலவாருன ஏற்பாடுகளை சொல்லவேண்டு மென்று எண்ணி ஆங்கிலேய பாஷையில் தயார் செய்யப்படும் மசோதாவை பற்பல சுதேச பாஷைகளிலும் மொழி பெயர்த்து அனுப்பப்படுகிறது.

ஆங்கிலேய பாஷையிலுள்ள மசோதாவை சீர்திருத்தம் முதலியது செய்வதற்காக பற்பல ஜில்லா அதிகாரிகளுக்கும் லா ஆபீஸர்களுக்கும், மற்றும் முக்கியமாயுள்ள உத்தியோகஸ்தர்களுக்கும் அனுப்புவதும், சுதேச பாஷைகளில் மொழி பெயர்ப்புச் செய்த பிரதிகளை பட்டணம் கெஜெட்டுடனும் ஒவ்வொரு ஜில்லா கெஜட்டுடனும் அனுப்புவது வழக்கமாகயிருக்கிறது. இப்படி சுதேச பாஷைகளில் அனுப்பப்படும் மசோதாக்களை நமது தமிழ் நாட்டு ஜனங்கள் கவனிக்கிறதேயில்லை. அப்படியிருக்க அவர்கள் அதைப் படித்ததாக எப்படி நினைக்கக்கூடும். அதற்கு ஏற்பட்ட காலம்வரை, ஜனங்களிடமிருந்து மசோதாவின் பேரில் சீர்திருத்தம் வருமென்று கவர்ன்மெண்டார் அவர்கள் எதிர்பார்க்கிறுர்கள் ஜனங்களோ அந்த மசோதாவை படிக்கவே செய்யவில்லை. ஆகையால் அவர்களில் யாரும் ஏதும் சீர்திருத்தம் அனுப்புகிறதில்லை. கவர்ன்மெண்டில் உடனே அந்த மசோதாவை சட்டமாக ஊர்ஜிதத்துக்குக்கொண்டு வந்து விடுகிறுர்கள். இது காரணம் பற்றியே மேஜரான ஒவ்வொருவரும் சட்டம் தெரிந்தவர்களாக எண்ணப்படுகிறுர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அல்லாமலும் (Ignorantia Juris non excusat· Ignorance of Law does not excuse.) சட்டத்தை அறியாமலிருப்பதானது மன்னிக்கமாட்டாது என்றும், (Ignorantia Juris, quod quisqui Scire tenetur neminem excusat. Ignorance of law, which every one is bound to know, does not excuse) ஒவ்வொருவரும் அறிந்திருக்கவேண்டிய சட்டம் தெரிந்து கொள்ளாமலிருப்பது மன்னிப்புக்கு இடமாகமாட்டாது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலே, எந்தச் சட்டமும் சட்டமாக ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரப்படுமுன், மசோதாவாக ஏற்படுத்தப்பட்டு அது அந்தச் சட்டம் வழங்க வேண்டிய இடங்களிலெல்லாம் பிரசித்தம் செய்யப்பட்டு, பின் சட்டமாக ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரப்பட்ட சங்கதியையும், எல்லாரும் தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிற சட்டம் தனக்குத் தெரியாதென்பது மன்னிப்புச் செய்ய மாட்டாதென்றும் சொல்லியிருக்கப்பட்ட சங்கதியையும் நன்குய் ஆலோசனை செய்யும்பொழுது, சகல ஜனங்களுக்கும் சட்ட திட்டங்கள் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டுமென்றே நிஸ்ஸந்தேகமாக ஏற்படுகிறது.

இந்தக் கொள்கையை அனுஸரித்தே மக்நாட்டனுடைய கேசுத்தீர்ப்பில் ச்சீப் ஜஸ்டிஸ் டிண்டால் (Per Tindal, C. J. in his Judgment in Mc. Naughten's case) என்பவர் ஒருவனுக்குச் சட்டம் தெரியுமென்பதற்கு ருஜூவில்லாமலேயே ஒவ்வொருவருக்கும் சட்டம் தெரிந்தேயிருக்கிறதென்று நினைத்து சட்டம் செலாமணியாகிவருகிறது என்று சொல்லியிருக்கிறுர்.

இதுவுமல்லாமல் ஒரு தேசத்தான் மற்றொரு தேசத்துக்குப் போகும்போது தான் எந்தத்தேசத்துக்குப் போகிறுனே அந்தத் தேசத்தின் சட்டதிட்டங்களைத்

தெரிந்து கொள்ளவேண்டுமென்றும் அப்படித் தெரிந்து கொள்ளாமல் அந்தத் தேசத்தின் சட்டதிட்டங்களுக்கு விரோதமாக ஏதும் குற்றச் செய்கையைச் செய்துவிட்டு சட்டம் அறியாமையால் செய்துவிட்டேனென்று சொல்வதினால், மன்னிக்கப்படமாட்டானென்றும் ப்ரூம் என்பவரால் செய்யப்பட்ட வியாக்கியானம் 832-ம் பக்கத்தில் (Broom's commentary P. 832) சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக ஒரு இராஜாங்கத்தைச் சேர்ந்தவர்கள் மற்றொரு இராஜாங்கத்தைச் சேர்ந்த இடத்துக்குப் போன காலத்தில், போயிருக்கும் இடத்துக்குரிய இராஜாங்கத்தாரின் சட்ட திட்டங்களை அறிந்து கொள்ளவேண்டியது அவசியம் என்றால் அந்தந்த இராஜாங்கத்தைச் சேர்ந்த ஜனங்கள் அந்தந்த இராஜாங்கத்தாரின் சட்டதிட்டங்களை கட்டாயம் தெரிந்துகொள்ளத்தான் செய்யவேண்டுமென்பதில் என்ன சந்தேகமிருக்கிறது.

சட்டம் இன்னதென்பதே தெரியாத காரணத்தால் சட்டத்தின் நிபந்தனைகளின்படி நடவாத ஒருவனைத் தண்டிப்பதானது மிகவும் கொடூரமானதென்று முதலில் காணப்படும். ஆனால் மேலே சொல்லப்பட்ட வித்தாந்தங்களின் (Maxims) மூலகாரணங்களை நன்றாய்த் தெரிந்து கொள்ளும் பொருட்டாக அந்த வித்தாந்தங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிற "அறியாமை" என்னும் பதத்துக்கு அந்த இடத்தில் சரியான அர்த்தம் என்ன வென்று தெரிந்துகொள்ளவேண்டும். "சட்டம் அறியாமை" என்பதை சட்டத்தைப்படிக்காமல் அசட்டை செய்வதில் அல்லது சட்டத்தைத் தெரிந்துகொள்ள மறுதளிப்பதில் யேர்ப்படும் மனப்பூர்வமான அறியாமை என்று நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது. வார்டன் என்பவரால் எழுதப்பட்ட வித்தாந்தங்களைப் பார்க்க. (Vide Wharton's Maxims). மேலே கண்ட சித்தாந்தங்களை சட்டம் அறியாமை என்பதற்கு உள்ள சரியான அர்த்தத்தோடு சேர்த்து படிக்கும்பொழுது சட்டமறியாமை மன்னிக்காது என்ற விதியானது மிகவும் சிறந்ததாக இருக்கிறதென்று நாம் காண்கிறோம். அந்த விதியாருக்கு சம்மந்தப்படுகிறதென்றால் யிஷ்டமுண்டானால் யார் படித்து சட்டத்தை தெரிந்து கொள்ளக் கூடியவர்களாயிருந்தும் சட்டத்தைப் படிக்க அசட்டை செய்து அல்லது படித்து தெரிந்துகொள்ள மறுக்கிறார்களோ அவர்களுக்குத் தான்.

ஆகையால் சகல சட்டங்களின் சாராம்சங்களை மாதமாதம் ஆங்கிலம் பயிலாத பொது ஜனங்களுக்கென்றே போதிக்க வெளிவந்துகொண்டிருக்கும் இந்திய சட்ட கெஜெட்டை படித்து தாங்களும் தெரிந்து கொள்ளுவதுடன் மற்றுமுள்ள சாதாரண ஜனங்களுக்கும் சட்டத்தை தெரிவிப்பது ஒவ்வொரு கற்றறிந்த கனவானின் கடமையாகும்.

(இன்னும் வரும்)

அறிக்கை.

இந்திய சட்ட கெஜெட்டாபீஸ்.

இதனடியில் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டுசட்ட ஸம்மந்தமான விஷயங்களைப் பற்றி எழுத விரும்புவோர், தமிழ் பாஷையில் எழுதி அனுப்பும் வியாஸங்களை அங்கீகரித்து இந்திய சட்ட கெஜெட்டில் பிரசுரம் செய்யப்படும். ஷை வியாஸங்கள் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களினுடைய அருமையையும், எழுதப்பட்ட வியாஸங்களினுடைய தன்மையையும் நிதானித்து பூல்ஸ்காப் பேபர் அளவில் அச்சிடப்பட்ட 4 பக்கங்கள் கொண்ட ஒரு பாரத்திற்கு ரூ. 3 முதல் ரூ. 6 வரையில் பிரதிப் பிரயோஜனம் கொடுக்கப்படும்.

இந்திய சட்ட கெஜெட்டு ஆபீசுக்கு அனுப்பப்படுகிற வியாசங்களை காரணம் தெரிவிக்காமலே பூராவும் அங்கீகாரம் செய்யாமல் நிராகரிக்கவாவது அல்லது சில பாகத்தை ஒப்புக்கொண்டு, சில பாகத்தை நிராகரிக்கவாவது மானேஜருக்கு சுதந்திரம் உண்டு.

ஒப்புக்கொள்ளாமல் நிராகரிக்கப்படும் வியாஸங்களை, திரும்ப அனுப்பப்படமாட்டாது.

இந்திய யுத்தக் கடன்.

பல துளி பெரு வெள்ளம்! உங்களிடம் மிகவும் சொல்பமான தொகைதானே யிருக்கிறதென்று யோசிக்க வேண்டாம். சொல்பத் தொகையையும் சரியான வட்டிக்கு நிற்பயமான யிடத்தில் கொடுத்து வைக்க இது ஓர் மிக்க நல்ல சமயம். முந்துங்கள்! முந்துங்கள்!!

ரூ. 7-12-0 இன்று கொடுத்தால் 5 வருஷத்துக்கு ரூ. 10 ஆக திரும்ப பெற்றுக்கொள்ளலாம். சேவிங்ஸ் பாங்கியுள்ள எந்த தபால் ஆபீசிலும், சென்னை மாகாண தலைமை பாங்கிலும், கிளை ஆபீஸ்களிலும் செலுத்தலாம்.

இப்படிச் செய்வதினால் ஆத்மசேவை, தேசசேவை, ராஜசேவை ஆகிய இம்மூன்றும் ஏககாலத்தில் செய்ததுமாவதுடன், இந்தியாவின் நன் மதிப்பும் பெருகும். ஆகையால் அவரவர்களால் இயன்ற மட்டில் கடன் கொடுக்கவும். ப—ர்.

OUR LAW COLLEGE.

எங்களுடைய சட்ட கலாசாலை.

எங்களுடைய சட்ட கலாசாலையின் புரொபசர் உலகறிந்த திருநெல்வேலி வக்கீல் K. R. கிருஷ்ணமாச்சாரியார் அவருடைய மாணாக்கர்களுடைய பெயர்கள் :—

1 அனந்தாச்சாரி, 2 சக்ரவர்த்தி ஐயங்கார், 3 துரைசாமி முதலியார், 4 சட்டராசாரியார், 5 தணிகாசல முதலியார் வகையராக்கள்.

HINDU LAW—ஹிந்து லா.

மாணாக்கர்கள் :—(எழுந்து) காலை வந்தனம் அய்யா!

புரோபசர் :—உங்களுக்கு எல்லாவகையிலும் நன்மை உண்டாகவும். நமது ராஜாங்கத்தாருக்கும் நேயப் படைகளுக்கும் அதி சீக்கிரத்தில் கியாதியுடன் கூடிய வெற்றியை அருள் புரியவும் கடவுளைப் பிரார்த்திக்கின்றனம்.

மா :—அவ்விதமே ஆகும்படி நாங்களும் பிரார்த்திக்கின்றோம்.

பு :—சக்ரவர்த்தி அய்யங்கார்! போன பிரசங்கத்தில் நாம் நிறுத்திய விஷயம் இன்னதென்று யாதிருக்கிறதா? சொல்லும் பார்ப்போம்.

ச :—மலையாளத்திலுள்ள நாயர் ஜாதிகளுடைய குடும்ப சொத்துக்கு வார்ஸ் கிரமம் எப்படி யேற்பட்டிருக்கிறதென்ற விஷயத்தைப்பற்றிச் சொன்னீர்கள்.

பு :—அதற்கு மேல்பட்ட விஷயங்களைக்குறித்து சொல்லுவோமா.?

துரை :—ஹிந்துலா கேசுகள் சம்பந்தமாய் லா ரிப்போர்ட்டுகளைக் குறித்து ஆங்காங்கு சொல்லுகிறீர்களே. லா ரிப்போர்ட்டுகளின் வாலாற்றைப்பற்றி கேட்க விரும்புகிறோம்.

பு :—லா ரிப்போர்ட்டுகள் ஹிந்து-லா கேசுகளிலும் மற்ற சட்டப்படிக்குள்ள கேசுகளிலும் விவஹரிக்கப்படுகின்றனவாகையால் அதன் வறலாறு தெரிந்திருக்கவேண்டிய தவசியந்தான். சொல்லுகிறேன் கேளுங்கள்.

தணி :—இந்தியாவில் இப்பொழுது எத்தனை ஹைக்கோர்ட்டுகள் எந்தந்த விடங்களில் இருக்கின்றன.

பு :—இந்தியாவில் முன் நாலு ஹைக்கோர்ட்டுகள் இருந்தன. ஆனால் இப்பொழுது கூட ஒரு ஹைக்கோர்ட்டு சேர்க்கப்பட்டிருக்கிறது. வங்காள ராஜதானிக்கு கல்கத்தாவில் ஒரு ஹைக்கோர்ட்டும் (இப்பொழுது புதிதாய்) பாட்னாவில் ஒரு ஹைக்கோர்ட்டும், வடமேற்கு மாகாணங்களுக்கு அலஹபாத்தில் ஒரு ஹைக்கோர்ட்டும் பம்பாய் ராஜதானிக்கு பம்பாயில் ஒரு ஹைக்கோர்ட்டும் சென்னப்பட்டணம் ராஜதானிக்கு சென்னப்பட்டணத்தில் ஒரு ஹைக்கோர்ட்டும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

மேலேகண்ட ஒவ்வொரு ஹைக்கோர்ட்டிலும் பைசல்செய்யப்படும் முக்கியமான அப்பீல் கேசுகளில் செய்யப்படும் தீர்மானங்களை சஞ்சிகைகள் மூலமாக "இந்தியன் லா ரிப்போர்ட்ஸ்" என்னும் பெயருடன் வெளியேற்றுகிறார்கள்.

அ :—இந்த லா ரிப்போர்ட்ஸுகளால் என்ன பிரயோசனம்.

பு :—சட்டங்களில் சந்தேகாஸ்பதமாயும் ஒரு அர்த்தத்துக்கு மேல்பட்டு அர்த்தம் கொடுக்கக்கூடியதானவுமான வார்த்தைகளை உபயோகித்திருக்கும்பொழுது அவைகளுடைய கருத்து இன்னவென்பது முதலிய விசேஷ ஸங்கதிகள் ஹைக்கோர்ட்டு தீர்ப்புகளில் வெளியிடப் படுகின்றன. ஆகையால் அவைகள் முக்கியமான ஆதாரங்களாக கொண்டாடப்பட்டு வருகின்றன.

சக் :—இந்தியா ஹைக்கோர்ட்டுத் தீர்மானங்களை ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டுகளென்றும் (High Court Reports) இந்தியன் லா ரிப்போர்ட்ஸ் (Indian Law Reports) யென்றும் சொல்லுகிறார்களே! இவைகளுடைய வித்தியாசமென்ன? இவைகளுடைய சரித்திரம் என்ன? அவைகளை அறிய விரும்புகிறோம்.

பு :—பற்பல ஹைக்கோர்ட்டின் ரிப்போர்ட்டுகள் பற்பல பெயருடன் அடியில் கண்டவாறு வெளியாய் வந்தன. பெங்கால் லா ரிப்போர்ட்ஸ்களென்றும் (Bengal Law Reports) கல்கத்தா லா ரிப்போர்ட்டுகளென்றும் (Calcutta Law Reports) வடமேற்கு மாகாணங்கள் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டுகளென்றும் (North West Provinces High Court Reports) பம்பாய் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டுகளென்றும் (Bombay High Court Reports) சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டுரிப்போர்ட்டுகளென்றும் (Madras High Court Reports) பிரதிமாசமும் வெளியிடப்பட்டு வந்தன.

1875-ம் ஆு வரை ஷை ஸஞ்சிகைகள் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டுகள் என்ற பெயருடன் நடந்தேறிவந்தன. அப்பால் 1876-ம் வருஷத்தில் நமது மாக்ஷிமை தங்கிய கவர்ன்மெண்டார் ஷை ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டுகளுக்கு இந்தியன் லா ரிப்போர்ட்டு என்ற ஒரு பொதுவான பெயரைக் கொடுத்து ஒவ்வொரு ஹைக்கோர்ட்டின் தீர்மானத்தையும் ஒவ்வொரு பாகமாக அது முதல் அச்சிடப்பட்டு வரும்படிக்கான ஏற்பாட்டை செய்துவிட்டார்கள். அவைகளுக்கு இந்தியன் லா ரிப்போர்ட்டு கல்கத்தா ஸீரீஸ் என்றும் இந்தியன் லா ரிப்போர்ட்டு அலஹபாத் ஸீரீஸ் என்றும் இந்தியன் லா ரிப்போர்ட்டு பம்பாய் ஸீரீஸ் என்றும் இந்தியன் லா ரிப்போர்ட்டு மதராஸ் ஸீரீஸ் என்றும் பெயர் வழங்கிவருகின்றன. ஷை இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலும் முந்திய ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டுகளிலிருந்ததுபோலவேயே ஒவ்வொரு ஹைக்கோர்ட்டு தீர்மானங்களையும் பிரதிமாதமும் அச்சிட்டு வெளியேற்றி வருகிறார்கள். ஸீரீஸ் என்றால் தொகுதி யென்றர்த்தம். இப்படி வெளியேறிவரும் ரிப்போர்ட்டுகள் சாதாரணமாக ஒவ்வொரு ஹைக்கோர்ட்டு சம்மந்தமாயும் வருஷம் 12-மாதங்களிலும் வெளியிடப்பட்டு ஷை 12-சஞ்சிகைகளையும் ஒன்றாக சேர்த்து தைத்து பயிண்டு செய்து அவைகள் ஒவ்வொன்றுக்கும் வாலியம் என்று பெயர்வைத்து அதற்கு எண்ணிக்கை நம்பரும் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஒரு வருஷத்தில் ஒரு ஹைக்கோர்ட்டு சம்பந்தமான அதிகமான கேசுகள் ஷை லா ரிப்போர்ட்டில் வெளியிடப்பட்டால் அவைகளில் கைக்கு அடங்குமட்டும் அதாவது சௌகரியமான பைண்டு செய்யக்கூடிய அளவுக்கு எடுத்துக்கொண்டு அதற்கு வாலிய நம்பர் கொடுக்கிறதுமுண்டு.

துரை:—கேசுகளுக்கு ஆதாரமாக மற்ற ஹைக்கோர்ட்டு தீர்ப்புகளைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறீர்களே அது எப்படி? அதை அறிய விரும்புகிறோம்.

பு:—ஒரு கேசில் ஒருவகையான முடிவுக்கு வருவதற்கு ஆதாரமாக ஒரு ஹைக்கோர்ட்டு தீர்ப்பை குறிப்பிட்டுச் சொல்லும்போது ஷை தீர்ப்பை அடியில் கண்டபடி சொல்லப்படும். உதாரணம்:—

10. கல். ஹைகோ. ரி. 47 என்றால் கல்கத்தா ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டு 10-வது வாலியம் 47 பக்கம் என்றும், 3 பம் ஹைகோ. ரி. 33 என்றால் பம்பாய் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டு 3-வது வாலியம் 33 வது பக்கம் என்றும், 5 ம ஹைகோ. ரி. 100 என்றால் மதராஸ் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டு 5-வது வாலியம் 100 வது பக்கம் என்றும் அர்த்தம். 9-ம 100 என்று (ஹைகோ. ரி.) என்பதைக் காணுமல் சொல்லப்பட்டிருந்தால் இந்தியன் லா ரிப்போர்ட்டு மதராஸ் ஸீரீஸ் 9-வது வாலியம் 100-வது பக்கம் என்றும் 8 அல. 150 என்றால் இந்தியன் லா ரிப்போர்ட்டு அலஹபாத் ஸீரீஸ் 8-வது வாலியம் 150-வது பக்கம் என்றும், 25-கல். 350 என்றால் இ. லா. ரி. கல்கத்தா ஸீரீஸ் 25-வது வாலியம் 350-வது பக்சம் என்றும் அர்த்தம்.

இது நீங்கலாக சர்க்காரிலிருந்து பிரசுரம் செய்யப்படும் மேல்கண்ட சட்ட சம்பந்தமான ரிப்போர்ட்டுகள் நீங்கலாக மற்றவர்களாலும் மதராஸ் லா ஜர்னல் என்றும், மதராஸ் லா டைம்ஸ் என்றும், லா வீக்லி என்றும், பற்பல பெயருள்ள சட்ட சஞ்சிகைகள் இந்த ராஜதானியிலும் மற்ற ராஜதானிகளிலும் வெளியேற்றப்படுகின்றன.

சட்:—இது நீங்கலாக இங்கிலாந்திலும் சில லா ரிப்போர்ட்டுகள் வெளியேற்றப்படுகின்றனவே அவைகளின் சரித்திரமென்ன?

பு:—மேல்கண்ட விதமாகவே இந்தியாவிலிருந்து சீமையில் ப்ரிவி கௌன்ஸில் என்னும் நியாய ஸ்தலத்துக்குக் கொண்டுபோகப்பட்ட அப்பீல் கேசுகளின் தீர்மானங்களை 1875-ம் ஆு வரை மூர் என்னும் துரை அச்சிட்டுப் பிரசுரம் செய்துவந்தார். அதற்கு மூர்ஸ் இந்தியன் அப்பீல்ஸ் என்று பெயர் வழங்கிவருகிறது. (அதாவது இந்தியாவிலிருந்து வந்த அப்பீல்களின் தீர்மானங்கள் மூர் என்பவரால் வெளியிடப்பட்டதென்று அர்த்தம்.)

1876-ம் ஆு முதல் ஷை ரிப்போர்ட்டுக்கு இந்தியன் அப்பீல் என்று மாத்திரம் பெயர்வழங்கி வருகிறது. அவைகளுக்கும் இந்தியன் லா ரிப்போர்ட்டுகளுக்கு எவ்விதம் வால்யூம் நம்பர் போடப்பட்டு வருகிறதோ அவ்விதமே வாலியூம் நம்பர் கொடுக்கப்பட்டு வருகிறது.

உதாரணம்:—6 மூ. இ. அ. 375 என்றால், மூர்ஸ் இந்தியன் அப்பீல் 6-வது வாலியூம், 376-வது பக்கம் என்று அர்த்தம்.

5. இ. அ. 498 என்றால், இந்தியன் அப்பீல் 5-வது வாலியூம் 498-வதுபக்கம் என்று அர்த்தம். முன் புரொபெஸர் அவர்கள் விவாஹ விஷயமாக ஏதோ கொஞ்சம் பிரஸங்கம் செய்திருப்பதாக, காலேஜ் ரிக்கார்டுகளினால், தெரியவருகிறது. அவர்கள் நிறுத்திய இடத்திலிருந்து சொல்வோமா?

மா:—அவர்கள் பிரஸங்கம் செய்து வெகு நாளாகிவிட்டது. மேலும் அவர்கள் சொன்ன விஷயங்களிலும் அநேக சந்தேகங்கள் எங்களுக்கு ஜெனித்திருக்கின்றன. ஆகையால் கிருபை கூர்ந்து விவாஹ விஷயத்தைப்பற்றி அடியிலிருந்து துவக்கி சுருக்கமாகவாவது சொல்லக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அ:—ஸ்திரீ புருஷர்கள் விவாஹம் செய்துகொள்ளுவதற்கு சாஸ்திரோக்தமான நியாயம் ஏதாவதுண்டா?

பு:—ஸாதாரணமாக பிரஜாவிருத்தியின் பொருட்டும் குல விருத்தியின் பொருட்டும் அவரவர்கள் ஜாதி மதங்களுக் கேற்பட்ட வைதீக கர்மங்களைச் செய்வதற்குறிய யோக்கியதையை யடையும்பொருட்டும் ஆண் பெண் ஒவ்வொருவரும் விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று ஹிந்து தர்ம சாஸ்திரங்களால் யேற்படுகிறது.

த:—மேல் கண்ட சாஸ்திர சம்பந்தமான சங்கதிகளைத் தவிர ஸ்திரீ புருஷர்கள் விவாகம் செய்துகொள்ளுவதற்குறிய நியாயங்களேதேனும் உண்டா?

பு:—மானிடர்களுடைய பொது நன்மையை உத்தேசித்தும் ஐக்கிய பக்தியம், ஸ்நேகம் தொழில்களைச் செய்யும் முயற்சி முதலிய செய்கைகள் செய்வதற்காகவும் ஸ்திரீ புருஷர் இருவரும் சாதாரணமான ஐக்கிய பத்தியத்துடன் மாத்திரம் இருப்பது போதாதென்று விவாகம் என்று சொல்லப்பட்ட கிரியையை நடத்திக்கொண்டு புருஷன் ஸ்திரீ என்ற விசேஷ சம்பந்தத்துடன் உஜ்ஜீவிக்கவேண்டியது மிகவும் அவசியம். மேல் சொல்லியபடி விவாகம் என்பதைச் செய்துகொண்டு ஒருவர்க்கொருவர் சாஸ்திரப்படிக்கும் ஜாதி யாசாரப்படிக்கும் யேற்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு உட்படுத்திக் கொண்டிராவிட்டால் அதினால் அனேக கெடுதல்களும் விபரீதங்களும் நேர்ந்து பொது ஜனங்களுடைய அமரிக்கையும் நன்னடக்கையும், க்ஷேமலாபங்களும் கெட்டு அராஜரீகமான தேசம்போல் உலகம் துயரில் அழுந்தியிருக்கும். இவ்வுலகத்திலுள்ள பல தர்ம ஆசரமங்களுக்குள் இக்கலியுகத்தில் கிருகஸ்த தர்ம ஆசரமமே மிக்க சிறந்ததென்று எல்லாப் பேரியோர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். கிருகஸ்த தர்ம ஆசரமமென்பது ஸ்திரீ புருஷர்கள் விவாகமென்றும் ஸம்ஸ்காரத்தினால் ஒருவரை யொருவர் கட்டுப்படுத்திக்கொண்டு இல்லறங்களுக்குறிய ஸகல காரியாதிகளையும் நடத்திக்கொண்டும் குடும்ப விருத்தி செய்துகொண்டும் இருப்பதுதான். ஆனது பற்றியே கிரகஸ்தாசரமத்தை பின்பற்றியிருக்கும் ஸ்திரீ புருடர்களுக்கு லபிக்கும் நன்மைகளும் சுகங்களும் அளவிறந்ததாய் இருப்பதுடன் ஷை ஆசரமமே கௌரவமுள்ளதாகவும் யாவராலும் மதிக்கப்படுகிறது.

சக்:—ஸ்திரீ புருஷர்களுக்குள்ள விவாக சுதந்தரங்களும் விவாகத்துக்குறிய கிரிைகளும் எல்லா தேசத்திலும் ஒன்றுபோல இருக்குமா?

பு:—ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு மதத்தை பின்பற்றுகிறவர்களுக்குள்ளும் மாறுபாடாகவேயே இருக்கின்றன.

துரை:—ஸ்திரீ புருஷர் இருவர்களுக்குள் புருஷருக்கு ஸ்திரீகளைக்காட்டிலும் ஜாஸ்தியான ஸ்வதந்தரங்கள் கொடுக்கப்பட்டு ஸ்திரீகள் புருஷர்களைசார்ந்தவர்களாக இருக்கக் காரணமென்ன.

பு:—புருஷர்களுக்கு ஸ்திரீகளைக் காட்டிலும் பொதுவாக தேக தார்ஷ்டிகமும் (பலம்) மனோதயிரியமும் ஜாஸ்தியாக இருப்பதினால் ஸ்திரீயானவள் ஏற்கனவே புருஷனுக்கு உள்பட்டவளாக இருக்கவேண்டியதாய் இருக்கிறது. இக்காரணத்தினாலேயே விவாக விஷயத்திலும் மற்றெவ்விஷயத்திலும் புருஷனுக்கு ஸ்திரீகளை காட்டிலும் அதிக சுதந்தரம் ஏற்பட்டிருப்பதாக ஹிந்துலாவின் பற்பல பாகங்களிலுள்ள எவ்விஷயத்தினாலும் வெளியாகிறது. அல்லாமலும் ஹிந்து புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் இருக்கும் மற்றோர் முக்கியமான விஷயம் யாதெனில் இந்து புருஷர்கள் விவாகம் செய்துகொள்ளாமலேயே சாஸ்திரங்களுடையவும் மதங்களுடையவும் வர்ணாச்ரம தர்மங்களுடையவும் கோட்பாடுகளுக்கு யாதொரு யெவ்வித பாதகமுமின்றி தங்கள் வாழ்நாட்களை முடித்துவிடலாம். ஆனால் இந்து மதத்தைச்சேர்ந்த பெண்கள் எத்தேச வாசிகளாயிருப்பினும் எவ்வகுப்பைச்சேர்ந்தவராயினும் விவாகம் செய்துகொண்டே தீரவேணும்.

தணி:—ஹிந்து மதத்தைச்சேர்ந்த ஆண் பிள்ளைகள் கல்யாணம் இல்லாமலே வாழ்நாளை கழிக்கலாமென்று சொன்னீர்கள். ஆனால் விவாகம் செய்துகொண்டால் ஒரே ஸ்திரீயைத்தான் விவாகம் செய்துகொள்ளலாமா? அல்லது பல ஸ்திரீகளை விவாகம் செய்யலாமா?

பு:—விவாகம் செய்துகொண்ட ஒருவனுக்கு முதலாவது தாரம் ஆண் ஸந்ததி யில்லாமலாவது அல்லது மலட்டுத்தனமாகவாவது அல்லது துர்வியாதியினால் பீடிக்கப்பட்டாவது அல்லது நடத்தைப் பிசகாய் இருந்தாலாவது அல்லது துர்குணம் உள்ளவளாய் இருந்தாலாவது புருஷன் 2-வது பார்யையை விவாகம் செய்துகொள்ளலாமென்று யேற்படுகின்றது. ஆனால் ஹிந்துக்களுக்குள் தொன்றுதொட்டு நடந்தேறிவரும் வழக்கங்களினால் ஷை காரணங்கள் யாதொன்றும் இல்லாமலேயே புருஷன் இஷ்டப்படி யெத்தனை தாரங்களையும் விவாகம்செய்துகொள்ளுவதற்கு தடையில்லை யென்று தெரியவருகிறது. புருஷன் ஒரு தாரம் இருக்கும் பொழுது மறுபடியும் விவாகம் செய்துகொள்ளும் காரணத்தால் முன் தாரங்கள் இவனை விட்டு நீங்கிப் போக நியாயமாக மாட்டாது. (I ம. ஹை. கோ. ரி. 375).

ச:—புருஷர்கள் பல தாரங்களை விவாகம் செய்துகொள்ளுவது போல் ஸ்திரீகள் பல புருஷர்களை விவாகம் செய்துகொள்ளலாமா?

பு:—ஒரு ஹிந்து ஸ்திரீயானவள் யேக காலத்தில் ஒரு புருஷனுக்கு மேற்பட்டு விவாகம் செய்துகொள்ளக்கூடாது. ஆனால் அப்படி விவாகம் செய்து

கொள்ளும் வழக்கமானது ஹிந்து ஜாதியைச் சேராத நாகரீகமற்ற ஜாதியாருக்குள்ளும் காடு மலை முதலிய இடங்களில் வாசம் செய்து வரும் ஜனங்களுக்குள்ளும் இருந்து வருவதாக தெரியவருகிறது. ஆனால் ஒரு ஹிந்து ஸ்திரீயானவள் தன் புருஷன் உயிரோடு இருக்கும் பொழுது வேறு ஒரு புருஷனை விவாகம் செய்துகொள்ளுவாளாகில் அவள் இந்தியன் பினல் கோடு 494-வது பிரிவின்படி ஏழு வருஷம் கடுங்காவல் தண்டனைக்கும் அபராதத்துக்கும் உள்ளாவாள். தண்டிக்கப்படக்கூடிய குற்றம் செய்தவளாகிறாள்.

சட் :—ராக்ஷஸம் பைசாசம் என்னும் விவாகங்களை இக்காலத்தில் நடத்தலாமா?

பு :—அவ்விருவகைப்பட்ட விவாகங்களையும் இக்காலத்தில் நடத்தினால் இ. பி. கோடு 366, 376-வது பிரிவுகளின்படி கடின் காவல் விதிக்கப்படக்கூடிய குற்றங்களாகும்.

சட் :—விவாகம் செய்துகொள்ளுகிற ஆண் பெண்களுடைய வயதைப்பற்றி யேதும் விதிகளுண்டா?

பு :—விவாகம் செய்துகொள்ளும் ஸ்திரீ புருஷர்களில் புருஷன் மேல் பட்டவனாயும் ஸ்திரீயை ஆண்டு அடக்கி ஆளவேண்டியவனாக இருப்பதினாலும் ஸ்திரீ தேக வளர்ச்சியுடையவளாய் இருக்கிறபடியாலும் புருஷனைக் காட்டிலும் சீக்கிரமாக ப்ரௌடையாகிறவளாகையாலும் ஸ்திரீயைப் பார்க்கிலும் புருஷன் வயதில் அதிகமாக இருக்கவேண்டும் என்ற கொள்கைகள் யிருப்பதாக தர்ம சாஸ்திரங்களினால் வெளியாகின்றது.

அ :—இந்த கொள்கையை இந்து மதத்தைச் சேர்ந்த எல்லா ஜாதியாராலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதா?

பு :—இது பிரம்ம க்ஷத்திரிய வைசியர்கள் எல்லோராலும் சூத்திரர்களில் அனேகராலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

து :—இக்கொள்கையை மீறி நடக்கும் ஹிந்துக்கள் உண்டா?

பு :—தென் இந்தியாவிலுள்ள சூத்திர ஜாதியாரில் சிலரும் தொட்டிய ஜாதியை சேர்ந்தவர்களும் சிறு பையனுக்கு பெரிய பெண் பிள்ளையைக் கல்யாணம் செய்து கொடுக்கும் துர் வழக்கம் நடத்தி வருகிறார்கள்.

தணி :—அப்படியானால் அப்படிப்பட்ட கல்லியாணம் சட்டப்படி செல்லத்தக்கதாக உள்ளதா? டை ஸ்திரீகளுக்கு பிறக்கும் குழந்தை இப்பையனுடைய குழந்தையாகப் பாவிக்கப்பட்டு வருகிறதா?

பு :—அப்படிப்பட்ட வழக்கத்தை அனுசரித்து செய்யும் விவாகங்கள் செல்படி உள்ளதாக யிருந்து வருவதல்லாமல் அது தவிர அந்த பெண் பிள்ளைகளுக்கு பிறக்கும் குழந்தைகள் யாவும் அப்புருஷனுக்கு பிறந்ததாகவே யெண்ணப்பட்டு வருகின்றன.

து :—விவாக சம்பந்தமான நிபந்தனைகள் அனைத்தையும் அறிய விரும்புகிறோம்.

பு :—விவாகம் செய்துகொள்ளும் ஆண் பெண் ஒரே ஜாதியாயும் ஆனால் வெவ்வேறு குடும்பத்தையும் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். விவாகம் செய்துகொள்ளும் ஆண் பெண் இருவர்களும் ஒரே கோத்திரத்தையும் குலத்தையும் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது. கலியாணம் செய்துகொள்ள உத்தேசிக்கும் பெண்ணானவள் கல்யாணம் செய்துகொள்ளும் புருஷனுக்கு தகப்பன் வழியைச் சேர்ந்தவளாக இருந்தால், 7 தலைமுறை விட்டும், தாய் வழியைச் சேர்ந்த பந்துவாயிருந்தால் 5 தலைமுறை விட்டும் இருக்கவேண்டும். ஆனால் இப்பொழுது இந்த விதியை அவ்வளவு கண்டிப்பாய் அனுஷ்டிக்கிறதில்லை.

து :—ஜாதிவிட்டு ஜாதியில் கல்யாணம் செய்துகொள்ளும் வழக்கம் எப்பொழுதாவது இருந்ததா?

பு :—முன் யுகங்களில் மேல் ஜாதி புருஷர்கள் கீழ் ஜாதிப் பெண்களையும் விவாகம் செய்துகொள்ளலாமென்று யிருந்தது. ஆனால் இப்பொழுது அவ்வழக்கம் நின்றுபோய்விட்டது.

அ :—ஒரு பெண்ணை விவாஹம் செய்துகொடுக்க அதிகாரமில்லாத ஒருவன், அந்தப் பெண்ணினுடைய விவாஹத்தைநடத்த ஏற்பாடுகள் செய்துவிடுகிறான். அந்தக் கல்லியாணத்தை நிறுத்த முடியுமா?

பு :—அப் பெண்ணினுடைய ஸரியான பாத்தியஸ்தர்கள் அந்தக்கல்லியாணத்தைத் தடுக்கும்பொருட்டு கோர்ட்டில் மனுச்செய்துகொள்ளலாம். அதன் பேரில் மேற்படி விவாகத்தை நடத்தவொட்டாமல் கோர்ட்டார் தடுத்துவிடுவார்கள். (11 பம்-253.)

தணி :—விவாகம் நிச்சயமானதின்பேரில் வதுவரர் இருதிறத்தாருக்குள் யாதாமொருவர் கல்லியாணத்தை நிறுத்த முயற்சித்தபொழுது கோர்ட்டார் பலவந்தஞ் செய்து கல்லியாணத்தை நடத்திவைக்க அதிகாரமுண்டா?

பு :—அப்படி நடத்திவைக்க கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. 1877 ம் ஆண்டு முதலாவது ஆக்டாகிய ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட் (Specific Relief Act) 21-ம் பிரிவு 6-வது உட்பிரிவைப் பார்க்க.

அ :—விவாகத்தை நடத்துவதாய் ஏற்பாடுகள் செய்துவிட்டு பின் கல்யாணத்தை நிறுத்திவிட்டால் அதற்கு யாதொரு பரிகாரமுமில்லையா?

பு :—செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு விரோதமாய் யாதாமொருவர் விவாகத்தை சரியான காரணமில்லாமல் நிறுத்திவிட்டால் அதனால் யேற்படும் நஷ்டங்களை அவன்பேரில் மற்றவன் வியாஜ்ஜியம் தாக்கல்செய்து நஷ்ட பரிகாரம் பெற்றுக்கொள்ளலாம். (11 பம். 412, 21 பம். 23, 7 பம். ஐ. கோ. ரி. 122, இ. லா. ரி. 11 பம்-422.)

(இன்னும் வரும்.)

DIALOGUE.

சம்பாஷணை.

இடம் :—பேழம்பட்டி மிட்டாதார் பங்களா.

பே.-மி :—யாரடா அங்கே? ஸ்தானாதிபதிப்பிள்ளை யிருக்கிறாரா?

ஸேவகன் :—புத்தி. ஆபீஸில் இருக்கிறார்கள். கூட்டி வருகிறேன்.

ஸ்தா :—நமஸ்காரம்

பே.-மி :—ஸ்தானாதிபதிப்பிள்ளை! நாளை ஞாயிற்றுக் கிழமை ஆச்சுதே. வக்கீல் அய்யர் அவர்களிடம் வருவதாக போன ஞாயிற்றுக்கிழமை சொல்லி வந்தேனல்லவா? நாளை காலை புறப்படவேண்டுமே!

ஸ்தா :—ஸமுகத்தில் தேகத்துக்குக் கொஞ்சம் அஸௌகரியமாக யிருப்பதாக உத்தரவாச்சுதே. நாளை ஞாயிற்றுக்கிழமை தானே, வக்கீல் அய்யர் அவர்களை இவ்விடம் கூட்டி வந்து விட்டாலென்ன?

பே.-மி :—அதுவும் நல்ல ஏற்பாடுதான். அப்படியானால் நீர் இன்று ராத்திரியே நமது லாண்டோவைத் தயார் செய்யச் சொல்லி வக்கீல் அய்யர் அவர்களுக்கு அனுப்பும். நீரும் நேரில் போய் வக்கீல் அய்யர் அவர்களிடம் எனக்குக் கொஞ்சம் தேக அஸௌகரியமாக யிருப்பதாக தெரிவித்து அவர்களை நாளை நமது தோட்ட பங்களாவில் தமாஷாகச் சிறிது நேரம் கழித்துப் போகும்படி கேட்டுக்கொள்ளும். அப்படியே, விசேஷமாக வாங்க வேண்டிய சாமான்களையும், வாங்கிக் கொண்டு ராத்திரியே நீர் திரும்ப இவ்விடம் வந்து சேரவேணும். நமது லாண்டோவையும், குதிரைகளையும் வக்கீல் அய்யர் அவர்கள் வீட்டிலேயே நிறுத்தி வாரும்.

(முத்து ராமன் பட்டி ஜமீந்தார் பேழம்பட்டி மிட்டாதாரிடம் வருகிறார்.)

ஸம்பிரதிப்பிள்ளை :—நமஸ்காரம்.

மு.ரா.ஜ :—நமஸ்காரம்! ஐயா இருக்கிறார்களா?

ஸம் :—மாராஜா! இருக்கிறார்கள்.

மு.ரா.ஜ :—இன்று மதுரைக்கு வக்கீல் அய்யர் அவர்களிடம் போகப்போகிறதாக ஸமாச்சாரம் கேழ்விப்பட்டேனே! போகிறார்களா?

ஸம் :—போகிறதாகத்தான் இருந்தார்கள். கொஞ்சம் தேக அஸௌகரியத்தினால் போகவில்லை. ஆனால் வக்கீல் அய்யர் அவர்கள் இன்று இங்கே வருகிறார்கள்.

மு.ரா.ஜ :—மிகவும் ஸந்தோஷமாச்சுது. மிட்டாதார் அவர்களிடம் நான் வந்திருக்கிறதாகத் தெரியப்படுத்தும்.

ஸம் :—புத்தி, அப்படியே தெரிவிக்கிறேன். ஓய் காதர் பெக் சாயபு! ஐயாவிடத்தில் முத்து ராமன்பட்டி மகாராசா வந்திருக்கிறதாகத் தெரியப்படுத்தும்.

கா-பே :—மாராஜா ஸலாம். முத்து ராமன் பட்டி மகாராஜா அவர்கள் விஜயம் செய்திருக்கிறார்கள்.

பே-மி :—நமது வெல்வெட் மெத்தை போட்ட ஸோபாவை எடுத்து வெளியில் போட்டு விட்டு அவர்களை உள்ளே வரச்சொல்லு.

கா-பே :—மகாராஜா! தயாராக யிருக்கிறார்கள்.

மு ரா-ஜ :—சேவிக்கிறேன். சுகமா?

பே-மி :—என்ன அத்தி பூத்தது போலும், கார்த்திகைப் பிறை கண்டது போலுமிருக்கிறதே.

மு-ரா-ஜ :—தாங்கள் இன்று வக்கீல் அய்யர் அவர்களிடம் போவதாகக் கேழ்விப்பட்டேன். அவர்களிடம் சில விஷயங்களைப்பற்றி ஆலோசிக்க வேண்டியதாக யிருக்கிறது. தங்கள்கூடப் போனால் ஸௌகரியமாக யிருக்குமென்று நினைத்து நான் இவடம் வந்தேன்.

பே-மி :—தாங்கள் நல்ல சகுனம் பார்த்துப்புறப்பட்டீர்கள் போலிருக்கிறது. கும்பிடப் போன தெய்வம் குறுக்கிட்டு வந்ததுபோல, வக்கீல் அய்யர் அவர்களே இன்று இவடம் வருகிறார்கள். இன்னும் சற்று நேரத்துக்குள் இவடமிருப்பார்கள்.

மு-ரா-ஜ :—மிகவும் ஸந்தோஷமாச்சுது. தங்கள் கிருபையால் எனக்கு ஒரு விதமான குறைவுமில்லை.

பே-மி :—நமது லாண்டோ வருகிற சப்தம் கேழ்க்கிறது ஸம்பிரதிப் பிள்ளை! வக்கீல் அய்யர் அவர்கள் வந்து விட்டார்களா பாரும்.

ஸ்தா-பி :—வக்கில் அய்பர் அவர்கள் வந்து விட்டார்கள்.

பே-மி :—
மு-ரா-ஜ :— } நமஸ்கரிக்கிறோம்.

வ-அ :—உங்களிருவருக்கும் ஸர்வாபிஷ்டத்தையும் அனுக்கிரஹம் செய்யும் பொருட்டு கடவுளைப் பிரார்த்திக்கிறேன். முத்து ராமன் பட்டி ஜமீந்தார் அவர்களே! தாங்கள் இவடம் எப்பொழுது வந்தீர்கள்.

மு-ரா-ஜ :—நான் இப்போதுதான் இவடம் வந்தேன்.

வ-அ :—மிட்டாதார் அவர்களே, தேகம் ஏதோ அஸௌகரியமென்று கேழ்விப்பட்டேனே! என்ன ஸங்கதி.

பே-மி :—விசேஷமாய் ஒன்றுமில்லை. தேகம் அசௌகரியமாக நேற்று யிருந்தது. இன்று ஸரியாக யிருக்கிறது.

மு-ரா-ஜ :—சில சங்கதிகள் யோசனைசெய்யும் பொருட்டு மிட்டாதார் அவர்களையும் கூட்டிக்கொண்டு தங்களிடம் இன்று புறப்பட்டு வருகிறதற்கிருந்தேன்.

வ :—உங்களை யாரும் ஏமாற்றிவிட்டார்களா என்ன ?

மு-ரா-ஜ :—அப்படிக்கி ஒன்றுமில்லை? தெரியப்படுத்துகிறேன்.

வ :—மிட்டாதாரவர்களே! ஜமீந்தாரவர்கள் சங்கதி என்ன? ஏதோ ஏமாந்திருக்கிறாப் போலிருக்கிறதே.

பே-மி :—அவர்கள் இப்பொழுதுதான் வந்தார்கள். என்னிடமும் யாதொன்றும் சொல்லவில்லை. தங்களிடம் என்னைக்கூட்டிக்கொண்டு போவதற்காக வந்ததாகச் சொன்னார்கள். அதற்குள் நீங்களும் வந்துவிட்டீர்கள்.

வ :—நமது தேசத்தில் பாளையப்பட்டுக்காரர்களுக்கு கல்வியும் நாகரீகமும் வரப்போகிறதில்லை. அவர்கள் தங்கள் காரியாதிகளை நேரில் தானகப் பார்த்துக்கொள்ளப் போகிறதுமில்லை. நல்லது தங்களை இந்திய சட்ட கெஜெட்டைத் தருவிக்கச் சொன்னேனே தருவித்தீர்களா ?

பே-மி :—தாங்கள் உத்திரவு செய்த மறுதினமே எழுதிவிட்டேன். நேற்று சஞ்சிகைகளும் வந்து விட்டன.

வ :—படித்து பார்த்தீர்களா ? சஞ்சிகையின் அமைப்பு எப்படி யிருக்கிறது?

பே-மி :—தாங்கள் உத்திரவு செய்தபடியே சட்ட சம்பந்தமாய் ஜனங்களுக்குத் தெரியவேண்டிய சகல சங்கதிகளையும் சுலபமான நடையில் விவரமாக யெழுதப்பட்டிருக்கிறது. இது மிகவும் உபயோகமான புஸ்தகமென்பதில் சந்தேகமில்லை.

மு-ரா-ஜ :—இப்பொழுது நான் கேழ்க்கும் விஷயங்களுக்கெல்லாம் எனக்கு மறுமொழி அளிக்க எனக்கு கிருபை செய்யுங்கள். விஷயங்களைத் தெரிந்துகொண்டு நான் வந்த சங்கதியை பின்னிடு தெரியப்படுத்துகிறேன்.

வ :—வேண்டும் விஷயங்களைக் கேளுங்கள். சொல்லிக்கொண்டே வருகிறேன்.

மு-ரா-ஜ :—கிரிமினல் கேசுகள் சம்பந்தமான காலாவதி (Limitation) விஷயத்தைப்பற்றி அறிய விரும்புகின்றேன்.

வ :—மிட்டாதாரவர்களே ! நான் சொல்லும் விஷயங்களை தாங்களும் கவனமாய்க் கேளுங்கள்.

மு-ரா-ஜ :—செய்யப்பட்ட குற்றச்செய்கைகளின் விஷயமாய் பிருது கொடுக்கக் காலாவதியுண்டா ?

வ :—கிரிமினல் கோர்ட்டுகளில் குற்றச்செய்கை முதலியதுகளைப்பற்றிய பிருது கொடுக்க சட்டப்படி காலாவதி யுண்டென்று குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிற கேசுகளைத் தவிற மற்றதுகளுக்கு காலாவதி கிடையாது.

குற்றச் செய்கை நடந்து எவ்வளவு காலத்திற்குப் பின்னிட்டாகிலும் பிருது கொடுக்கலாம். ஆனால், குற்றச்செய்கை நடந்தவுடன் கூடிய சீக்கிரத்தில் பிருது கொடுக்காத விஷயத்தில், பிருது எந்த கோர்ட்டில் தாக்கல் செய்யப்படுகிறதோ அந்தக் கோர்ட்டார் பிருதின் உண்மையைப்பற்றி சந்தேகிக்க நேறிடும். ஆகையால் குற்றச் செய்கை நடந்தவுடன் பிருது கொடுக்கிறதற்காகச் செய்யவேண்டிய நடவடிக்கைகளை கூடிய சீக்கிரத்தில் நடத்துவதுதான் நலம்.

பே-மி :—பிருது கொடுப்பதற்கு காலாவதியில்லையென்று சொன்னீர்களே? அதற்கு ஏதும் ஆதாரம் இருக்கிறதா?

வ :—கோர்ட்டுகளில் நடவடிக்கைகள் நடத்துவதற்கு காலாவதி குறிப்பிடப்பட்டிருக்கிற சட்டமாகிய 1877-ம் வருஷம் (15-வது) லிமிடேஷன் ஆக்டில் (Limitation Act) எல்லாக் கேசுகளுடைய காலாவதிகளைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிரிமினல் அப்பீல்கள் செய்வதற்கு காலாவதி யேற்படுத்தப்பட்டிருக்கிறது. மேற்படி ஆக்டில் கிரிமினல் பிராதுகள் செய்ய காலாவதி குறிப்பிடப்படவில்லை. இருந்தால் சொல்லப்பட்டிருக்கும். கால நிர்ணயச் சட்டத்தில் சொல்லப்படாத சங்கதிகளுக்கும் அதிலும் விசேஷமாய் கிரிமினல் நடவடிக்கைகள் நடத்துவதற்கும் காலாவதியே கிடையாதென்று இ-லா-ரி 10-அல 350-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மு-ரா-ஜ :—பிராது கொடுக்கக் காலாவதி யில்லை. அது போல காலாவதி யில்லாத இன்னும் சில விஷயங்களை அறிய விரும்புகின்றேன்.

வ :—கி. பு. கோடு. 203, 204, 245, 247, 253, 258, இந்த பிரிவுகளின்படி தள்ளுபடி செய்யப்பட்ட பிருதுகளின் பேரில் மேற்பரிசோதனை (Revision) மனுவை தாக்கல்செய்யவும் காலாவதி யில்லை.

ஆனால் தள்ளுபடி செய்யப்பட்ட கேசு முடிவான 3 மாதத்துக்குள் தாக்கல் செய்யப்படவேண்டுமென்று அனுஷ்டானம் (Practice in vogue) வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மு-ரா-ஜா :—கி-பு-கோடு-203, 204, 247, 253, 258, ஆவது பிரிவுகளின்படி தள்ளுபடி செய்யப்பட்ட பிராதுகளின் சம்பந்தமான விஷயங்களைச் சொன்னீர்கள். அந்தந்த பிரிவுகளின் விஷயம் இன்னதென்பதை அறிய விரும்புகிறேன்.

வ :—கி-பு-கோடு-203-வது பிரிவு என்பது மாஜிஸ்ட்ரேட்டு இடம் எந்தப் பிராதும் பிரைவேட் கக்ஷிக்காரர்களால் தாக்கல் செய்யப்பட்டவுடன் ஷை பிராதின் வாதியை பிராதில் கண்ட சங்கதிகளின் விஷயமாய் பூர்த்தியான பிரமாண வாக்குமூலம் வாங்கி அதின்பேரில் பிராதில் கண்ட எதிரிகளையும் சாக்ஷிகளையும் தருவித்து விசாரித்து ஒழுங்குப்படி பைசல் செய்வதற்குப் போதுமான ஹேஷ்யங்கள் இருப்பதாக அந்த மாஜிஸ்டிரேட்டுக்குத்

தோன்றும் விஷயத்தில் மேல் கண்ட எதிரி சாக்ஷிகள் வகையறுவுக்கு சம்மன் பிறப்பிவித்து ஷை கேசை விசாரித்துப் பைசல் செய்யவும், அப்படி செய்வதற்கு போதுமான காரணங்கள் இல்லையென்றுவது, வாதியின் பிராதினாலும் அவனால் கொடுக்கப்பட்ட பிரமாண வாக்கு மூலத்தினாலும் பிராதில் கண்ட எதிரி அல்லது எதிரிகளின் செய்கையானது எந்த கிரிமினல் சட்டத்தின்படிக்கும் குற்றச்செய்கையாக மாட்டாதென்றுவது அல்லது ஸிவில் கோர்ட்டுகளில் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டிய சங்கதி யென்றுவது மாஜிஸ்டிரேட்டுக்குத் தோன்றினால், ஷை பிராதை உடனே தள்ளுபடி செய்ய அவருக்கு யுக்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுதான் கி. பு. கோடு 203-வது பிரிவின் விஷயம்

கி. பு. கோடு 204-வது பிரிவென்பது யாதெனில் :—மாஜிஸ்டிரேட்டு மேல் நடத்தப்படவேண்டிய கேசுதானென்று நினைக்கும் கேசுகளில், எதிரி அல்லது எதிரிகளையும், வாதி பக்கம் சாக்ஷி அல்லது சாக்ஷிகளையும், சம்மன் செய்வதற்கு கோர்ட்டு பீஸ் ஆக்டின் நிபந்தனைகளின்படி படி கட்ட வேண்டிய கேசாயிருந்தால் அவ்விதம் ஒரு தினத்தைக் குறிப்பிட்டு அதற்குள் படி கட்டும்படி வாதிக்கு உத்திரவு செய்யப்படும்.

குறிப்பு.—படி கட்டவேண்டிய கேசுகள் இன்னதென்பதும் படி கட்டவேண்டாத கேசுகள் இன்னதென்பதையும் இந்திய சட்ட கெஜெட் 1917-ம் வருஷத்தின் ஏப்பிரல்மீ சஞ்சிகையில் 54-ம் பக்கத்தைப் பார்வை யிடுவதனால் வியக்தமாய்த் தெரியவரும்.

மேல் கண்ட குறிப்பிட்ட வாயிதாக்குள் வாதி படிகட்ட தவறிவிட்டால் அவனுடைய பிருதை கி. பு. கோடு 204-வது பிறிவுப்படி தள்ளுபடி செய்யப்படும். இதுதான் 204-வது பிரிவின் விஷயம்.

கி. பு. கோடு 247-வது பிரிவு என்னவென்றால் :—வாதி பிராது கொடுத்ததின்பேரில் பிராதில் கண்ட எதிரி அல்லது எதிரிகளுக்கு சம்மனையோ, வாறண்டையோ முதலில் பிறப்பிவிக்கும் யுக்தம் மாஜிஸ்டிரேட்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட யுக்தத்தைச் செலுத்தி ஒரு பிராதில் கண்ட எதிரி அல்லது எதிரிகளுக்கு முதலில் சம்மன் பிறப்பிவிக்கப்பட்ட ஒரு கேசில் ஷை கேசு விசாரணைக்காக போடப்பட்டிருக்கும் வாயிதாவிலாவது பின்னும் ஷை கேசு முடியும்வரை யேற்படுகிற எந்த வாயிதாவிலாவது வாதியைக் கோர்ட்டில் கூப்பிடுகிற காலத்தில் வாதி அஜராய் இராவிட்டால் கோர்ட்டாருக்கு ஷை கேசை வேறு காரணங்களை யுத்தேசித்து வாயிதா மாற்றித்தான் தீரவேண்டுமென்று கோர்ட்டாருக்குத் தோன்றினாலொழிய ஷை பிராதை உடனே தள்ளி விடும் யுக்தம் கோர்ட்டாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது தான் 247-வது பிரிவின் விஷயம்.

கி. பு. கோடு 253-வது பிரிவென்பது யாதெனில் 1917-ம் வருஷம் ஏப்ரல்மீத்து இந்திய சட்ட கெஜட் சஞ்சிகையில் 54-வது பக்கத்தில் வாரண்டு கேசு என்றால் இன்னதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி வாரண்டு கேசென்று யேற்படும் கேசில் வாதி பக்கம் சாக்ஷி விசாரணை முடிந்து ஷை வாதி பக்கம் சாக்ஷியத்தினால் எதிரி செய்ததாக யேதும் ருஜு யேற்பட்டிருப்பதாக மாஜிஸ்டிரேட்டு நினைத்தால் அப்பேர்ப்பட்ட விஷயங்களுக்கு சமாதானம் சொல்லும்படி எதிரியைக் கேட்டு அவன் அவ்விதம் சமாதானம் சொன்னதின்பேரில் அவன்பேரில் யாதொரு ருஜுவும் யேற்படவில்லை யென்று மாஜிஸ்டிரேட்டு அபிப்பிருயப்பட்டால் ஷை எதிரியை குற்ற பத்திரிகை படிக்காமலே விடுதலை செய்துவிடும் யுக்தம் கோர்ட்டாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுதான் கி. பு. கோடின் 253-வது பிரிவின் விஷயம்.

கி. பு. கோடு 258-வது பிரிவென்பது யாதெனில் :—வாரண்டு கேசுகளில் கி. பு. கோடு 253-வது பிரிவுப்படி குற்ற பத்திரிகை படியாமலேயே யெதிரியை விடுதலை செய்யாமல் குற்ற பத்திரிகை படித்த கேசுகளில் யெதிரி பக்கம் சாக்ஷி விசாரணை முடிந்து அதன்பேரில் யெதிரி குற்றம் செய்யவில்லை யென்று மாஜிஸ்டிரேட்டு அபிப்பிருயப்பட்டால் அவனை விடுதலை செய்யவும் குற்றம் ருஜுவானதென்று நினைத்தால் அவனைத் தண்டிக்கவும் யுக்தம் கோர்ட்டாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேல் கண்டபடி செய்யப்படும் விடுதலையைப்பற்றித்தான் மேலே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

மு-ரா-ஜ :—பிராது செய்யவும் மற்றும் நடவடிக்கைகள் நடத்தவும் காலாவதி உள்ள கேசுகளை அறிய விரும்புகிறேன்.

பிராது செய்ய காலாவதியுள்ள கேசுகளும் அவைகளின் காலமும்.

10 நாளைக்குள்.

வ :—1866-ம் வருஷத்திய 2-ம் ஆக்டாகிய ஆடுமாடுகளுக்கு தொத்து வியாதிகள் உண்டாவது ஸம்பந்தமான சட்டம் (Cattle Diseases Act) 16-வது பிரிவுப்படி பிராது செய்யவேண்டும்.

ஷை 16-வது பிரிவாவது :—ஆடு மாடுகளுக்கு தொத்து வியாதியில்லாமலிருக்க தொத்து வியாதி யிருப்பதாக வீணாய் பிரஸ்தாபித்து அக்ரமமாய் ஷை ஆடு மாடுகளை ஒருவன் பிடித்துக்கொண்டே போவானாகில் அப்படி அக்ரமமாய் பிடித்துக்கொண்டு போனதைப்பற்றி ஷை ஆடு மாடுக்குடையவன் பிராது கொடுப்பது ஸம்மந்தமான விஷயங்கள் தான் ஷை 16-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

(இன்னும் வரும்)

MISCELLANEOUS SUITS.

நானாவிதமான வியாஜ்ஜியங்கள்.

மதராஸ் ஹைக்கோர்ட்டில்

நெ 11.

1917-ம் ஞு மார்ச்சுமீ 13உ செவ்வாய்க்கிழமை

கனம் : ஜஸ்டிஸ் எய்லிங், கனம் : ஜஸ்டிஸ் நேப்பியர் முன்பாக.

(கோயம்புத்தூர் டிவிஷன்) ஈரோடு பெஞ்சு மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டு 1916-ம் ஞுத்து பெஞ்சு கேசுகள் 227-ம் நெ. முதல் 237-ம் நெ. வரை கேசுகளில் பிரதிவாதிகளை விடுதலை செய்ததிலிருந்தும் 1898-ம் ஞுத்து கிரிமினல் புரொசீஜர் கோடு 417 வது பிரிவுப்படி செய்யப்பட்ட அப்பீல்கள்.

இந்த அப்பீல்கள் 1917ஞு ஜனவரிமீ 30உ செவ்வாய்க்கிழமையிலும் பிப்ரவரிமீ 14உ புதன்கிழமையிலும், 19உ திங்கட்கிழமையிலும், மார்ச்சுமீ 5உ திங்கட்கிழமையிலும் ஹியரிங்குக்கு வந்து பிரதிவாதிகள் நேரிலாவது வக்கீல் மூலமாகவாவது ஆஜராகாமல் அப்பீல் மனுக்களும் சாட்சியங்களும் கீழ்க்கோர்ட்டு நடவடிக்கைகளும் பார்வையிடப்பட்டு இன்றையதினம் வரை ஆலோசனையிலிருந்ததில் கோர்ட்டாரால் பின் வருமாறு தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது.

தீர்ப்பு.

இந்த அப்பீல்கள் ஈரோடு பெஞ்சு மாஜிஸ்டிரேட்டார்கள் முன்பாக 1889-ம் ஞுத்து டௌன் நியூஸன்ஸ் ஆக்ட்டு 282-வது பிரிவு 5-வது உட்பிரிவுப்படிக்குள்ள குற்றங்கள் சாட்டப்பட்ட அநேக பிரதிவாதிகளை விடுதலை செய்ததினின்றும் கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்டவைகள். விடுதலை செய்ததற்குக் காரணம் ஆர்டரில் சொல்லப்பட்டபடி "ஆக்ட்டுப் படிக்குள்ள குற்றங்களுக்காகப் பிராசிக்கியூஷன் செய்ய சீப் ஸானிட்டரி இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமில்லை" என்பதுதான். சார்ஜு ஷீட்டு போட, அதாவது, கிரிமினல் புரோசீஜர் கோடு 190 (1) (b) பிரிவில் சொல்லப்பட்டபடி விஷயங்களைப் பற்றி போலீஸ் ரிப்போர்ட்டு செய்ய ஸானிட்டரி இன்ஸ்பெக்ட்டருக்கு அதிகாரமில்லையென்று தான் பெஞ்சு கோர்ட்டார் வாஸ்தவத்தில் அபிப்பிராயப்பட்டதாக நாம் நினைக்கிறோம். இந்தக் கேசுகளின் நடவடிக்கைகள் அவ்விதமாக ஆரம்பஞ் செய்யப்பட்டதாக அவர்கள் தீர்மானித்திருப்பதாகத் தோன்றுகிறது. இந்த விஷயத்தில் அவர்கள் தப்பாக அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால் முனிசிபல் வேலைக்காரரை போலீஸ் உத்தியோகஸ்தருடைய அதிகாரங்களைச் செலுத்தும்படியாக 282 (4) வது பிரிவுப்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்களால் அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிற விஷயங்களில் டிஸ்டிரிக்ட்டு முனிசிபாலிட்டி ஆக்ட்டுப்படிக்குள்ள குற்றங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற "பிராசிக்கியூஷன் செய்யப்பட்டவர்களுடைய சார்ஜு ஷீட்டு" என்ற தலைப்புள்ள அச்சு பாரத்தை ஸானிட்டரி இன்ஸ்பெக்ட்டர் உபயோகப் படுத்தியதால் அவர்கள் தவறுதலாய் அபிப்பிராயப்படும்படியாயிற்று. ஒப்புக்கொள்ளப்பட்டபடியே ஸானிட்டரி இன்ஸ்பெக்ட்டருக்கு அவ்விதமான அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறது. கேசைத் தன்னுடைய பைலில் எடுத்துக்கொண்ட மாஜிஸ்டிரேட்டு இந்த ரிக்கார்டை போலீஸ் ரிப்போர்ட்டாக ஒப்புக்கொண்டிருந்தால், நடவடிக்கைகள் சட்ட விரோதமாயிருந்திருக்கும். ஆனால் அது அவரால் 190 (1) (a) பிரிவுப்படிச் செய்யப்பட்ட பிராதாகப் பாவிக்கப்பட்டு 200-வது பிரிவுப்படி வாதியை விசாரித்தும் அதே பிரிவுப்படி பிராது எழுத்து மூலமாய் ஏற்பட்டு வாதியால் கையெழுத்துப் போடப்பட்டுமிருப்பதாகத் தெளிவாய்த் தெரிகிறது. தஸ்தாவேஜியிலிருந்தே இது தெரிகிறது. பிராது குறிப்பிட்ட ஒரு பாரத்தில் இருக்கவேண்டுமென்று கோடில் (Code) சொல்லப்படவில்லை. இந்த தஸ்தவேஜு கோடு 4 (I) (h) பிரிவில் பிராதின் லக்ஷணஞ் சொல்லியிருக்கப்பட்டிருக்கிறபடி "மாஜிஸ்டிரேட்டு நடவடிக்கை நடத்துவதற்காக எழுத்து மூலமாகச் சொல்லப்பட்டதாக" யிருக்கிறது. ஆகையால் நடவடிக்கைகள் சரியானபடி துவக்கப்பட்டிருக்கின்றன. விடுதலை செய்திருப்பதை மாற்றி மாஜிஸ்டிரேட்டுகள் ஷை கேசுகளை பைலில் எடுத்துக்கொண்டு சட்டப்படி முடிவு செய்யும்படியாய் நாம் உத்திரவு செய்யவேண்டியதாயிருக்கிறது.

கழுதையின் காதுகளை மடலோடு வெட்டினால் குற்றமாகும் யென்பதைப் பற்றிய தீர்ப்பு.

நெ. 12.

1916-ம் ஞுத்து கிரிமினல் ரெவிஷன் கேஸ் நெ. 819-ல் 1917-ம் ஞு மார்ச்சுமீ 20உ சென்னை ஹைக்கோர்ட்டாரால் செய்யப்பட்ட ஆர்டர். இ. பி. கோ. 428-வது பிரிவுப்படி குற்றஞ் செய்திருப்பதாகத் தீர்மானித்திருப்பது தப்பிதமென்று நாங்கள் நினைக்கவில்லை. பிரதிவாதி இரண்டு கழுதைகளினுடைய காதுகளை மடலோடு வெட்டிவிட்டான். இது 428-வது பிரிவின் கருத்துப்படி 'முடமாக்குதல்' என்னுங் குற்றமாகாது என்று வாதிக்கப்படுகிறது. மாரிய கௌண்டனுக்கும் ஸ்ரீனிவாச ரங்காச்சாரிக்கும் நடந்து 35 ம 594-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசில் ஒரு குதிரையின் காதுகளை வெட்டி யெறிவது இந்தியன் பினல் கோடின் கருத்துப்படி "முடமாக்குதல்" என்னுங் குற்றமாகுமென்று இந்தக் கோர்ட்டின் தீர்மானம் இருக்கிறது. சக்கரவர்த்திக்கும் அண்ணால் லெக்ஷு மனுக்கும் நடந்து 18 பம். லா. ரி 28-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசிலும் இதே அபிப்பிராயங்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் பிந்திய கேசில் பிராணியின் காதுகள்

முழுவதும் வெட்டப்படாமல் ஒரு பாகம் மட்டும் துண்டிக்கப்பட்டதால், அது 'முடமாக்குதல்' என்னுங் குற்றமாகவில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இந்தக் கேசில் காதுகள் முழுவதும் எடுக்கப்பட்டிருப்பதால் இது 35 ம 594-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசில் செய்யப்பட்ட தீர்மானத்தின்படிக்குள்ளதாயிருக்கிறது. அவ்விதச் செய்கை பிராணியின் காது கேட்கும் சக்தியை பாதிக்கக்கூடியதாக விருக்கிறதுடன் அது நிச்சயமாய் உறுப்புகளைக் குறைத்தல் ஆகிறது.

நெ. 13.

மாத்ரு பூதஸ்வாமி கோவில்.

திருச்சினாப்பள்ளியிலுள்ள மேற்சொல்லிய கோவிலின் பொது தர்மகர்த்தர்கள் நிலைமையில் இருவர்களால் ரெலிஜியஸ் என்டோமண்டஸ் ஆக்டு (Religious Endowments Act) 92-வது பிரிவுப்படி ஷை கோவிலைச் சேர்ந்த 2 கட்டளைகளுக்கு விசேஷ தர்மகர்த்தர் நிலைமையில் தர்மபுரம் மடம் பண்டார ஸந்நதியின்பேரில் விசேஷ தர்மகர்த்தரை நீக்குவதற்காகவும் சொத்துக்களுக்கு ஜாப்தா தயாரிக்கவும், ஒரு ஸ்கீம் (Scheme) ஏற்படுத்துவதற்கும் கணக்குகள் பார்ப்பதற்கும் பண்டார ஸந்நதியால் கட்டளை நடத்தப்படாமல் நிறுத்தப்பட்ட காலத்தில் கட்டளைக்காக வாதிகளால் சிலவு செய்யப்பட்ட தொகையை வரப்பற்றுவதற்காகவும் கொண்டுவரப்பட்ட வியாச்சியத்தின் பேரிலுண்டான முதலாவது அப்பீலில் கனம்: ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு சொன்னார்கள். திருச்சினாப்பள்ளி ஸபார்டிநேட்டு ஜட்ஜி பைசல் சொல்லுவதற்கு முன் முந்திய பண்டார ஸந்நதி இறந்துபோய் விட்டார். அவருக்குப் பின் அவர் ஸ்தானத்தில் வந்தவரைப் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டது.

ஸபார்டிநேட் ஜட்ஜி சில பாகங்களைத் தள்ளி வாதிகள் பக்கம் தீர்ப்புச் செய்து ஒரு ஸ்கீமும் (Scheme) ஏற்பாடு செய்தார். பின் வந்தவருடைய விசேஷ தர்மகர்த்தர் ஸ்தானமும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இரு கக்ஷிக்காரர்களும் அப்பீல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் ஸபார்டிநேட்டு ஜட்ஜி ஏற்படுத்திய ஸ்கீமில் மாறுதல்கள் செய்து கட்டளை சொத்துக்களை நிர்வாகம் பண்ணுவதற்காக சப் கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட மானேஜரை வைத்துக்கொண்டு மானேஜருக்கு மேற்கொண்டு அதிகாரங்களுங் கொடுத்துத் தீர்ப்புச் செய்தார்கள். ஷை சொத்துக்களின் வருமானங்கள் எல்லாம் அவர் பொறுப்பிலேயே யிருப்பதுடன் அது விஷயமான எல்லா வசூல்களுக்கும் சிலவுகளுக்கும் அவர் உத்திரவாதியாயிருக்கவேண்டியது. பண்டார ஸந்நதியின் உதவியுடன் அவர் சொத்துக்களை பகிரங்கமான ஏலத்தில் குத்தகைக்கு விடவேண்டும். பண்டார ஸந்நதியை முதல் வாதியாகச் சேர்த்து அல்லது அவ்விதஞ் சேர்வதற்கு மறுதளித்தால் அவரை முதல் பிரதிவாதியாகச் சேர்த்துத் தன் பேரிலேயே வியாச்சியங் கொண்டுவரவேண்டும். சரியான கணக்குகள் வைக்க வேண்டிய பொறுப்பும் அவரைச் சேர்ந்தது. மனேஜரிடமிருந்து வாங்கித் தான் சிலவு செய்த தொகைகள் சம்பந்தப்பட்டமட்டில் பண்டாரஸந்நதி சரியான கணக்குகள் வைத்துக்கொள்ளவேண்டியது. திருச்சினாப்பள்ளி தேவஸ்தானம் கமிட்டி ஒவ்வொரு வருஷமும் ஒரு ஆடிட்டரை நியமித்து அவருக்கு கட்டளை ஐவேஜியிலிருந்து நியாயமான சம்பளமும் ஏற்படுத்த வேண்டியது. ஆடிட்டர் தன்னுடைய ரிப்போர்ட்டையும் பாலன்ஸ் ஷீட்டையும் (Balance Sheet) ஷை கமிட்டிக்கு அனுப்ப வேண்டியது. அவைகள் ஆராதனை செய்வோர்கள் (Worshippers) பரிசோதிக்கும்படியாயிருக்கவேண்டும்.

ஸ்கீமில் அப்போதைக்கப்போது வேண்டிய திருத்தங்கள் செய்வதற்காக ஆராதனை செய்வோர்களும் கக்ஷிக்காரர்களும் மனுச் செய்து கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடும் செய்யப்பட்டது.

வாதிகளுக்கு மெஸர்ஸ். டி. ஆர். இராமசந்திரய்யரும், பீ. ஆர். கணபதி அய்யரும்-பிரதிவாதிக்கு மிஸ்டர் டி. ஆர். நரஸிம்மய்யங்காரும் ஆஜரானார்கள்.

நெ. 14

நடவடிக்கை சம்பந்தமான ஒரு விஷயம்.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர், மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வேல் முன்பாக.

பிரதிவாதிக்காக கிரமமாகக் கேசின் விஷயங்கள் தெரிவிக்கப்பட்டும் முக்கியமான சங்கதிகளுக்கு ஜவாப்பு செய்யக்கூடியதுமான வக்கீல் ஆஜராகும்போது பிரதிவாதி நேரில் கோர்ட்டிலாஜராகும்படி கோர்ட்டார் கட்டாயப்படுத்தலாமா! என்ற விஷயம் ஆலோஜிக்கப்படவேண்டிய அம்சமாயிருந்த ஒரு அப்பீல் பைசல் செய்யப்பட்டது.

தனக்காக ஒரு வக்கீல் ஆஜராகியும் தான் சாட்சியம் சொல்லாததால் கேசு தனக்கு விரோதமாகத் தீர்மானிக்கப்படக்கூடிய சம்பவத்திற்கு ஒப்புக்கொண்டிருக்கும் காலத்தில் பிரதிவாதி கோர்ட்டில் நேரிலாஜராகக் கடமைப்பட்டவனல்லவென்று அப்பீல் வாதிகளுக்காக வாதிக்கப்பட்டது.

கனம் : ஹைக்கோர்ட்டார் இந்தக் கக்ஷியை நிராகரித்து கக்ஷிக்காரனுக்காக வக்கீல் ஆஜராகுங் கேசிலுங்கூட கோர்ட்டார் அவனை நேரிலாஜராகும்படி உத்தரவு செய்யலாமென்றும் அவ்விதம் ஆஜராகத் தவறினால் எக்ஸ்பார்ட்டி (Ex-parte) ஆகவே கேசை விசாரிக்கலாமென்றும் தீர்மானித்தார்கள்.

அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் கே. ஆர். குருஸ்வாமி அய்யரும், பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் டீ. ஆர். வெங்கட்டராம சாஸ்திரியும் ஆஜரானார்கள்.

நெ. 15.

தீர்ப்பில் நபரைக் குறித்து (தூஷணையாக)ச் சொல்லியது.

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீம், மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்ரீனிவாஸய்யங்கார் முன்பாக.

கும்பகோணம் ஸபார்டிநேட் ஜட்ஜியால் ஒரு சாக்ஷியைக் குறித்துச் சொல்லப்பட்ட சில விஷயங்களை (ரிக்கார்டிலிருந்து) நீக்குவதற்காக ரெவிஷன் மனு மூலமாய் மிஸ்டர் டீ. ஆர். இராமச்சந்திரய்யர் கேட்டுக் கொண்டார். அவர் (ஸபார்டிநேட் ஜட்ஜி) தன்னுடைய தீர்ப்பில் சாக்ஷியைக் "கருங் குரங்குபோலக் கறுப்பானவன்" என்று வர்ணித்தும் அவனுடைய மூகத்தைக் கறுப்பு மையால் பூசினால் அது அவனுடைய முகத்தில் ஒரு வெளுப்பான பாகமாகத்தான் காணப்படும் என்றும் சொல்லியிருக்கிறார். அந்த தூஷணைகள் சாக்ஷிக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்ததென்றும் ஒரு சாக்ஷியைப் பற்றித் தன்னுடைய தீர்ப்பில் அவ்விதமான தீங்கு விளைக்கிற தூஷணவார்த்தைகளை சபார்டிநேட் ஜட்ஜி பிரயோகித்திருப்பது மிகவும் கிரமப் பிசகென்றும் மிஸ்டர் ராமச்சந்திரய்யர் சொன்னார். பிரார்த்தனைப்படி அந்தப் பாகங்களைத் தீர்ப்பிலிருந்து எடுத்துவிடவேண்டுமென்று ஹைகோர்ட்டார் உத்தரவு செய்தார்கள்.

நெ. 16.

சொத்தில் பாகத்திற்காக வழக்கு.

1917-ம் ஹ மேமீ 4உ வெள்ளிக்கிழமை.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங், மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர் முன்பாக.

குடும்பத்திலுள்ள பெண்களில் ஒருத்தியை விவாகஞ் செய்துகொடுக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன் ஒரு அன்னியனைக் குடும்பத்திற் சேர்த்துக்கொண்டு அவன் குடும்பத்துடனிருந்து குடும்ப சொத்துக்களின் அபிவிருத்திக்காக வேண்டிய வேலை செய்தால் மற்றவர்களுடன் அவனுக்கும் பாகம் கிடைக்கத்தக்கதா என்ற விஷயம் தீர்மானிக்கப்படவேண்டிய அம்சமாயிருந்த கிருஷ்ணா ஜில்லா அப்பீல் ஒன்றில் பைசல் சொல்லப்பட்டது.

இந்தக் கேசில் வாதிக்கு 3-ல் 1 பங்குக்குப் பாத்தியமுண்டென்று ஸபார்டிநேட் ஜட்ஜி தீர்மானித்தார்.

இரண்டு தலைமுறைக் காலம் முழுமையும் கக்ஷிக்காரர்களுடைய நடத்தையானது வாதியின் புருஷனுடைய மூல புருஷனுக்கு குடும்ப சொத்தில் 3-ல் 1 பாகம் கொடுக்கவேண்டுமென்பதாக அன்னியனுடைய குடும்பத்திற்கும் மற்றக் குடும்பத்திற்கும் ஒப்பந்த மிருந்ததாக வைத்துக்கொண்டாலொழிய வேறு விதமாகக் காரணஞ் சொல்ல முடியாததாயிருந்ததென்றும், அவ்வித ஒப்பந்தம் சட்ட சம்மதமானதென்றும் சட்டப்படி பாத்தியதை யேற்படும்படியான அனுபோகத்தாலும் (சட்டத்திலேற்படுத்தப்பட்ட) தடை (Estoppel) யாலும் வாதிக்குப் பாகத்திற்குப் பாத்தியமுண்டென்றும் ஹைகோர்ட்டார் தீர்மானித்து கீழ்க்கோர்ட்டு பைசலை உறுதிப்படுத்தி அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

அப்பீல் வாதிக்காக மெஸர்ஸ் எல். ஏ. கோவிந்தராகவய்யரும், டீ. ஆர். இராமச்சந்திரய்யரும்—அப்பீல் பிரதிவாதிக்காக மெஸர்ஸ் டீ. செஞ்சையாவும், டீ. பிரகாசமும், வெங்கடரமணராவும் ஆஜரானார்கள்.

நெ. 17.

172 வீதம் வட்டி.

1917-ம் ஹ மேமீ 4உ வெள்ளிக்கிழமை

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர், மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்ரீனிவாசய்யங்கார் முன்பாக.

வருஷம் 1-க்கு ரூ. 100-க்கு ரூ. 172 வீதம் வட்டி போடப்பட்டிருந்த ஒரு பிராமிசரி நோட்டின்பேரில் செய்யப்பட்ட வியாச்சியத்தில் ஏற்பட்ட வட்டி அபாரதத் தன்மையானதென்றும் அது கிடைக்கத் தக்கதில்லையென்றும் அசல் ரூ. 100-க்கு வட்டி ரூ. 24 வீதம் தீர்மானித்து மாயவரம் ஸபார்டிநேட் ஜட்ஜி தீர்ப்புச் செய்தார்.

ஹைகோர்ட்டார் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பை மாற்றியதுடன், கக்ஷிக்காரர்களுக்குள் விசேஷமான அல்லது நம்பி வைக்கும்படியான சம்பந்த மில்லாத ஸ்திதியிலும், மோசடி, செல்வாக்கைக் கிரமந் தப்பி உபயோகப்படுத்தியிருத்தல், தவறுதல் அல்லது அதைப்போன்ற வேறு விஷயத்தைச்சொல்லி ருசுப்படுத்தாமலுமிருக்கிற ஸ்திதியிலும் ஒப்பந்த வட்டியை மாற்றக் கோர்ட்டுக்கு அதிகாரமில்லையென்றும் தீர்மானித்தார்கள்.

மனுதாருக்கு வக்கீல் மிஸ்டர் வீ. புருஷோத்தமய்யர்—ரெஸ்பாண்டெண்டுக்கு வக்கீல் மிஸ்டர் ஜி. எஸ். இராமச்சந்திரய்யரும் ஆஜரானார்கள்.

VILLAGE SHEET.

கிராம ஜனங்களுடைய பக்கம்.

சர்க்கார் ஜலம் பாய்வது சம்பந்தமாய் ஓர் முக்கியமான தீர்ப்பு.

(1917-ஹ ஏப்ரல்மீ சஞ்சிகை முதல்பாகம் 64-வது பக்கத் தொடர்ச்சி.)

"கவர்ன்மெண்டுக்குப்பாத்தியப்பட்ட நதி அல்லது வாய்க்காலிலிருந்து பூமிக்குள் கசியும் ஜலத்தை மரங்களின் வேர்கள் குடிப்பதன் மூலமாய் மரங்களுக்கு நீர்ப்பாய்ச்சப்படுகிற கேசுகளையும், கசிவு ஜலத்தினால் நீர் பாய்ச்சுவது" என்று வைத்துக்கொள்ளக்கூடுமாவென்ற 4-வது கேழ்வியானது சொஞ்சம் முக்கியமாக உள்ளதுதான். ஷை ஆக்ட்டின் 1-வது பிரிவில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைகள் அநேக விஷயங்களை அடக்கிக்கொண்டிருக்கின்றன. இந்தக் கேசுக்கு ஸம்மந்தப்படுகிறதான (பி) (b) உள் பிரிவில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிற 'நீர் பாய்ச்சல்' என்னும் வார்த்தையானது கவர்ன்மெண்டுக்குப்பாத்தியப்பட்ட நதி அல்லது வாய்க்காலிலிருந்து, தீர்வை ஏற்படுத்த உத்தேசிக்கப்படுகிற நிலத்தின்மேல் நேராயாவது அல்லது வேறு எவ்விதத்திலாவது ஜலம் ஓடிப்பாய்கிற விஷயங்களுக்கு சம்மந்தப்படுகிறது. ஆனால் "தண்ணீர்.........ஊற்றுக்கசிவினாலாவது.........நிலத்துக்குப்பாய்ந்தால்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டுக்குப்பாத்தியப்பட்ட நதி அல்லது நீரோட்டத்திலிருந்து வரும் ஜலத்தினால் நிலம் பாய்ச்சப்பட்டால் என்று சொல்லப்படவில்லை. இந்த இடத்தில் 'நீர் பாய்கிறது' என்கிற வார்த்தையானது, ஜலம் பாய்ச்சுகிறது'-'நனைக்கிறது' என்ற விசாலமான அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறதேயல்லது, நிலத்தின் வழியாய் ஓடுகிற வாய்க்கால்களினால் அல்லது நீரோட்டங்களினால் நிலங்களுக்கு ஜலம் சவுகரித்துக்கொடுப்பது என்ற விசேஷ அர்த்தத்தில் உபயோகிக்கப்படவில்லை. ஷை பதத்துக்கு இப்படி அர்த்தம் செய்கிறதாகயிருந்தால் தீர்வை ஏற்படுத்தப்படும் நிலமானது கவர்ன்மெண்டுக்குப் பாத்தியப்பட்ட நதி அல்லது நீர் ஓட்டத்திலிருந்து மிகவும் தூரத்திலிருந்தாலுமே, கேழ்வையற்ற விதமாக ரிவினியூ அதிகாரிகள் தங்கள் மனம் போன போக்குப்படிக்கெல்லாம் தீர்வை விதித்து பெரிய கஷ்டங்கள் ஏற்படுகிறதற்கு இடமாயிருக்குமென்று அப்பீல் வாதிகள் பக்கத்தில் ஆஜரான வக்கீல் T. R. வெங்கட்டராம சாஸ்திரி வற்புறுத்திப்பேசினார். வக்கீல் எதிர்பார்க்கிறபடி ரிவினியூ அதிகாரிகளுக்கு இந்த விஷயத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரமானது முற்றிலும் கட்டுப்படுத்தப்படாததாகயில்லை. ஒரு குறிப்பிட்ட நிலத்துக்கு கவர்ன்மெண்டுக்குப்பாத்தியப்பட்ட நீர் ஆதாரத்திலிருந்து ஜலம் பாய்ச்சப்பட்டதா, அல்லவாவென்ற விஷயமானது கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு பைசல் செய்யப்படவேண்டியதே யல்லாமல், ரிவினியூ அதிகாரிகளுடைய அபிப்பிராயத்துக்கு விடப்பட்டதல்ல. ஸர்க்கார் நீர் ஆதாரங்களிலிருந்து ஜலம் பாய்ச்சப்பட்டதென்று தீர்மானிக்கப்பட்டால் மட்டிலுந் தான், ஷை நீர்ப்பாய்ச்சலினால் ஷை நிலத்துக்கு அனுகூலமுண்டா! ஷை நிலத்திலிருக்கும் சாகுபடி விளைவதற்கு ஷை நீர்ப்பாய்ச்சல் போதுமாவென்ற விஷயங்களை ரிவினியூ அதிகாரிகள் தீர்மானிக்கவேண்டியதாகயிருக்கும். ஸாதாரணமாக ஒரு நதி அல்லது நீரோட்டத்தின் ஜலமானது கரைகளிலிருந்து அதிக தூரத்துக்கு கசிந்து ஓடுமாவென்பதும் ஸந்தேகமாகயிருக்கிறது. கற்றறிந்த கவர்ன்மெண்டுப் பிளீடர் அவர்களும் சுமார் 50 அடித்தூரத்துக்கு மேல்பட்ட இடத்துக்கு கசிந்து ஓடாதென்றும் வாதிக்கிறார் அல்லாமலும், பயிரங்கமில்லாத அதாவது ஒருவருக்குப்பாத்தியப்பட்டதான கிணர்களுக்கு கவர்ன்மெண்டு நீராதாரங்களிலிருந்து ஜலம் ஊறினாலும், அவைகளுக்கு தீர்வை விலக்கென்று ரிவினியூ போர்டாரவர்கள் 6 நெம்பர் ஸ்டாண்டிங் ஆர்டரின் 8-வது பக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் 4-வது கேழ்விக்கு ஜவாப், உண்டென்பது தான்.

ஜட்ஜ் சேஷகிரி அய்யர்:—இந்தக் கேசில், எனது கற்றுணர்ந்த சகோதரர் ஜட்ஜ் பிலிப்ஸ் துரையவர்கள் தயார் செய்திருக்கும் தீர்ப்பை (Judgment) வாசிப்பதினாலுண்டான நன்மையை நான் அடைந்திருக்கிறேன். அவர் செய்த தீர்மானங்களை நான் பொதுவாக ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் வியக்தமான அபிப்பிராயங்களுக்காக புல் பெஞ்சுக்கு (Full Bench) இந்தக் கேஸை அனுப்பிய ஜட்ஜுகளில் நான் ஒருவராகையால் நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

1-வது பிரிவு (b)ல் சொல்லப்பட்ட அபிப்பிராயம் கொடுப்பதை கலெக்டர் தன்னுடைய நிர்வாக முறைமையில் செய்கிறாரே யொழிய நியாய ஸம்பந்தமான முறைமையில்லவென்று நினைப்பதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். அவர் எந்த முடிவுகளுக்கு வருகிறாரோ அந்த முடிவுகள் கக்ஷிக்காரர்களையும் ஸிவில் கோர்ட்டுகளையும் கட்டுப்படுத்துபவையானதென்பது உண்மையே. ஆகையால் அவர் முன்பாக எல்லா ஸமாசாரங்களும் தெரிவிக்கப்படவேண்டியதும் அந்த ஸமாச்சாரங்களை அவரே பரிசீலனை செய்யவேண்டியதும், கூடுமானால் அதனால் பாதிக்கப்படக்கூடிய கக்ஷிக்காரருக்குச் சொல்லிக் கொள்ளவேண்டிய விஷயங்களைச் சொல்லிக் கொள்ளுவதற்கு ஒரு அவகாசம் கொடுக்கவேண்டியதும் அவசியமாயிருக்கின்றது. ஆனால் நியாய ஸம்பந்தமாய் அவர் செய்யவேண்டிய கட்டாயமில்லை. கலெக்டர் என்ன அபிப்பிராயத்துக்கு வருகிறாரென்பது மிகவும் முக்கியமான பலன்களைப் பயக்குவதாதலால், அந்த விஷயத்தில் தன்னால் கூடிய மட்டில் முக்கிய கவனத்தைச் செலுத்துவாரென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. நிர்வாக அதிகாரிகளின் மேல் ஞாய ஸம்பந்தமுறைமையில் செய்யவேண்டிய பொறுப்புகளைச் சுமத்துகிற மற்ற ஆக்ட்டுகளில் உபயோகப்படுத்த பட்டிருக்கும் வார்த்

ஷைகளுக்கும் இந்த ஆக்டில் பிரயோகிக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக் காட்டி இந்த விஷயத்தில் கலெக்டர் எழுத்து மூலமாய் எழுதிவைக்கவேண்டியதென்று எதிர் பார்க்கப்படவில்லையென்று கற்றுணர்ந்த கவர்ன்மெண்டு வக்கீல் என்னைத் திருப்தி செய்துவிட்டார். ஆகையால் முதல் கேள்விக்குஇல்லை என்று பதில் சொல்லுவதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். இந்த அபிப்பிராயத்தின்படிக்கு இரண்டாவது மூன்றுவது கேள்விகளை நாம் கவனிக்கவேண்டிய தவசியமில்லை.

வாதம் நடக்கும்போது நாலாவது கேள்வி விஷயமாய் 'கசிவினுல் தண்ணீர் பாய்ச்சுதல்' என்ற சொற்றொடரில் 'பூமியின் அடிப்பாகம் வழியாக ஜலம் விடுவது' சரியாய் அடங்குமா என்ற ஸந்தேகங்கள் தோன்றின. Mr. வெங்கடராம சாஸ்திரியார் தனது திறமை வாய்ந்தவாதத்தில் நமது கவனத்துக்குக் கொண்டுவந்த 'நீர்பாய்ச்சுதல்' என்பதின் அர்த்தத்திலிருந்து நீர்பாய்ச்சப்பட்டதாகச் சொல்லப்படும் நிலத்துக்கும் வாய்க்கால் ஜலத்துக்கும், மத்தியில் ஏதாவது கண்ணுக்குப் புலப்படுவதாயும் ஸம்பந்தமுள்ளதாயுமிருக்கவேண்டும் என்ற அர்த்தம் தவனிக்கிறது அதே காலத்தில் இந்தியா மந்திரி அவர்களுக்கும் சுவாமி நாரதீஸ்வாருக்கும் நடந்து இ.லா.ரி. 34 ம 21-ல் சொல்லப்பட்ட தீர்மானத்தில் காட்டப்பட்டிருக்கிறபடி பழைய தீர்மானங்களில் கண்ட அபிப்பிராயப்படிக்கு இந்த ஆக்டின் வார்த்தைகளும் சட்டத்தினுடைய நோக்கமும் அனுசரணையாக இல்லாமல் இருப்பதானது கசுவுஜலத்தினுல் பாயப்பட்ட எல்லா மாசூல்களுக்கும் இந்த ஆக்ட் சம்பந்தப்படவேண்டுமென்ற நோக்கத்துடன் உண்டாக்கப்பட்டிருக்கிறதென்று காட்டுகிறது.

இவ்விதமாய் சட்டத்தின் மூலமாய் விதியை ஏற்படுத்தி யிருப்பது சரிதானு இல்லையாயென்று சொல்லுவது நம்முடைய வேலையல்ல. பிரிவுகளில் வார்த்தைகள் யெப்படி உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதோ அதற்குத் தகுந்தபடி அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. கற்றறிந்த கவர்ன்மெண்டு பிளீடர் அவர்களால் மிகவும் வற்புருத்திச் சொல்லப்பட்ட இந்த விஷயத்தை நாங்கள் ஒப்புக்கொண்டதற்கு வேறு சில காரணங்களும் உண்டு. சாஸ்திர புஸ்தகங்களில் நீர்க்கசிவு என்ற வார்த்தைக்குச் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தப்படி நீர்த்தாவிலிருந்து ஐம்பது அடி தூரத்துக்குமேல்பட்டு ஷை நீர்க்கசிவு போய்ச்சேரமாட்டாதென்று ஏற்படுத்துவது ஒரு காரணம். கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்ட சுகாதார சாஸ்திரத்தைப் பார்க்க. ஊற்றுகளிலிருந்து (ஷை ஊற்றுகளானது கவர்ன்மெண்டு நீர்த்தாவுகளாய் இருந்தாலுமே இல்லாவிட்டாலுமே) தண்ணீரை அடைகிற கிணறுகள் வகையரு நேர்வழியிலாவது அல்லது வேறுவழியிலாவது வருகிற கசிவு தண்ணீரை உடைத்தாயிருக்கிறதாக எண்ணக்கூடாதென்று கவர்ன்மெண்டு ப்ளீடர் அவர்கள் சொல்லுவது தான் இரண்டாவது காரணம். நிலத்தீர்வை யேற்படுத்திய விஷயமாய் ஏற்பட்ட கவர்ன்மெண்டு நிலத்தீர்வை யேற்படுத்திய விஷயத்தில் செய்யப்பட்ட எதிர்வாத சம்பந்தமாய் கவர்ன்மெண்டாரவர்கள் பிறப்பிவித்திருக்கிற உத்திரவுகளினுல் இந்த இரண்டாவது சொன்ன காரணம் பலப்படுகிறது 225-வது பக்கத்தைப் பார்க்க. வெட்டு கிணறுகளில் ஊறும் தண்ணீரானதுகவர்ன்மெண்டு ஊத்துகளிலிருந்து ஊறும் தண்ணீர் இல்லை யென்று விலக்கி கவர்ன்மெண்டு நிலையான உத்திரவுகளில் (Standing orders)6-வது உத்திரவில் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்பேர்ப்பட்ட விலக்குகளினுல் கொஞ்ச விஸ்தீரணமுள்ள நிலங்கள்தான் பாதிக்கப்படும். அதாவது ஓடுகிற நீரோட்டத்திற்கு மிகவும் அருகில் இருக்கப்பட்ட நிலங்களும் அவைகளின்பேரில் இருக்கிறதும் ஷை நீரோட்டத்தண்ணீர் பாய்கிறதுமான பயிர்களும் தான். ஆகையால் 4-வது கேழ்வியை இல்லை யென்று சொல்லுவதற்கு என் கற்றுணர்ந்த மேல்கண்ட ஜட்ஜ் கொடுத்திருக்கும் அபிப்பிருயத்தில் நானும் ஒத்துக்கொள்ளுகிறேன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ்:—அபிப்பிருயத்துக்காக நமக்கு அனுப்பியிருக்கும் முதல் கேழ்விக்கு இல்லையென்ற ஜவாப் தான் கொடுக்கப்படவேண்டியிருக்கிறது. 1865-ம் வருஷத்திய 7-வது ஆக்டின் 1 (b) பிரிவில் கலெக்டர் ஏதும் ஸர்டிபிகேட்டை கொடுக்கவேண்டுமென்று சொல்லப்படவில்லை. ஆனுல் போர்டாருடையவும் கவர்ன்மெண்டாருடையவும் மேல் பார்வைக்கு உள்பட்டு, அப்பேர்பட்ட நீர் பாய்ச்சலானது நிலத்துக்கு அனுகூலமானதென்றும் ஷை நிலத்திலிருக்கப்பட்ட பயிர் விளைவதற்கு போதுமானதென்றும் கலெக்டர் அபிப்பிருயங் கொடுத்தால் அந்த நிலத்துக்கு கவர்ன்மெண்டார் வேறு தண்ணீர்த் தீர்வை யேற்படுத்துகிறது நியாயந்தான் என்று ஷை ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கும் அவசியமெல்லாம் கூடி நீர்ப்பாய்ச்சலானது நிலத்துக்கு அனுகூலமாயிருந்து கலெக்டர் அபிப்பிராயப்பட்டு இருக்கவேண்டியது என்பது தான். இந்திய மந்திரி அவர்களுக்கும், சுவாமி நாரதீஸ்வருக்கும் இ.லா.ரி. 34 ம 21-ல் பிரசுரிக்கப்பட்டிருப்பதும், இந்திய மந்திரி அவர்களுக்கும், அம்பலவாண பண்டாரச்சந்நதிக்கும் நடந்து இ.லா.ரி. 34 ம 366-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற தீர்மானங்களில் அடியில் சண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது. "சர்க்கார் நீர்த்தாவுகளிலிருந்து பாச்சப்பட்ட ஜலத்தினுல் அனுகூலம் இருந்ததா என்றவும் ஷை ஜலமானது நிலத்தில் இருந்தபயிர் விளைவதற்கு போதுமானதா என்றவுமான விஷயங்களை தீர்மானிப்பது ஸிவில் கோர்ட்டாரைச் சேர்ந்த வேலையில்லையென்றும், ஆனுல் ரெவினியூ போர்டாருடையவும் கவர்ன்மெண்டாருடையவும்மேல்பார்வைக்கு உள்பட்ட கலெக்டருடைய அபிப்பிருயத்தைப் பொருத்ததென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கலெக்டரால் யேற்படுத்தப்பட்ட தீர்வையானது மேலதிகாரிகளால் றத்து செய்யப்படாமையினுலேயே இந்த வாதி இந்த தீர்வையை செலுத்த கடமைப்பட்டிருக்கிறுனென்பது ஸ்பஷ்டமாய் வெளியாகிறது".

(இன்னும் வரும்.)

The Indian Law Gazette.

PART I.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் I.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ஹு ஜூன்மீ [நே. 6.

EDITORIAL.

பத்திராதிபர் வியாசம்.

SHOULD THE MASSES KNOW THE LAW?

(Continued.)

ஸாதாரண ஜனங்களுக்கும் சட்டம் தெரிந்திருக்க வேண்டுமா?

(தொடர்ச்சி).

ஜனங்கள் கீழ்படிகிறதற்குக் கடமை பட்டிருக்கிற சட்டதிட்டங்களைத் தெரிந்து கொள்ள தவறிவிடுவது அவர்களுடைய குற்றமேயாகிறபடியால் அவர்கள் அதினுல் நேருகிற முடிவை யடைந்துதான் தீரவேணும். அல்லாமலும் எந்தெந்த கக்ஷிக்காரர்களுக்கு சட்டம் தெரிந்திருக்கிறதென்றும் யார்யாருக்குச் சட்டம் தெரியாதென்றும் ஒரு நியாயாதிபதியாலும் அறிந்து கொள்ளமுடியாது. ஆகையால் குற்றஞ்செய்த ஒவ்வொருவனும் தனக்குச் சட்டம் தெரியாத காரணத்தால் குற்றஞ் செய்ததாகச் சொல்லித் தப்பித்துக் கொண்டு போய்விடக் கூடும். ஆகையால்தான் சட்டம் தெரியாததால் குற்றஞ் செய்து விட்டதாகச் சொல்லும்கக்ஷியை ஒப்புக்கொண்டு அவனை மன்னிக்கக்கூடாதென்று சொல்வது.

சட்டம் தெரியாதென்ற காரணத்தால் செய்த குற்றத்தை மன்னிக்க முடியாதென்னும் விதியை ஒவ்வொருவருக்கும் கட்டாயமாகத் தெரிந்திருக்க வேண்டிய சட்டங்கள் சம்பந்தப்பட்டமட்டிலுந் தான் ஊர்ஜிதத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆகையால் ஜனங்களுக்குக் கட்டாயமாய்த் தெரிந்திருக்க வேண்டாத சட்டதிட்டங்களை தெரிந்து கொள்ளாததனுல் செய்யுங் குற்றச் செய்கைகளுக்காக மன்னிப்புச் செய்யப்படும். ஜனங்கள் தெரிந்து கொள்ளக் கடமைப்படாத விஷயங்களைத் தெரிந்து கொள்ளாததற்காக அவர்கள் பால் குற்றம் சாட்ட முடியாது. மனிதர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பற்றியும், இன்னின்னபடி செய்ய வேண்டுமென்பதைப் பற்றியும் இன்னின்னதைச் செய்யக் கூடாதென்பதைப் பற்றியும், விதிகள் யேர்படுத்தப்

பட்ட சட்டங்களாகிய இந்தியன் பினல் கோடு, ஒப்பந்த விஷயமான சட்டங்கள் (Laws of Contract) காலநிர்ணய ஆக்ட்டு, ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டு, ஸ்டாம்பு ஆக்ட்டு முதலிய ஆக்ட்டுகளின் ஸாராம்சம் இன்ன தென்பதை ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டியது கட்டாயம் என்பது நிச்சயமான விஷயம். ஆனால் கோர்ட்டாருடைய தகவலுக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கிற நடபடிக்கைச் சட்டங்களை (Laws of Procedure) ஜனங்கள் தெரிந்து கொள்ளக் கடமைப் படவில்லை. ஆகையால் ஒரு வியாச்சியத்தில் பிரதிவாதியாக யிருப்பவன், ஷை வியாச்சியம் காலாவதி தோஷத்தால் செல்லாதென்று கக்ஷியைச் சொல்லத் தவறி விட்டாலும், ஷை வியாச்சியத்தின் பிராது அல்லது வேறு ரிக்கார்டின் மூலமாக ஷை காலாவதி வெளியானால் கோர்ட்டாரே ஷை காலாவதி தோஷத்தைக் கவனிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள் (இந்தியன் காலாவதிச் சட்டத்தைப் பார்க்க). நடபடிக்கை தெரியாத கக்ஷிக்காரனுக்கு கோர்ட்டாரே உதவிசெய்யக் கடமைப் பட்டிருக்கிறார்கள். காலநிர்ணயச் சட்டத்தில் கண்ட காலாவதிக்குள் வாதி வியாச்சியம் செய்யத்தவறி விடுவானேயாகில் வாதிக்கு கோர்ட்டில் உதவி செய்யமாட்டார்கள்? தனக்கு சட்டத்தைத் தெரிந்து கொள்ளக் கூடிய அவகாசங்கள் சரியானபடி யிருந்தும் மனதார வேணுமென்று தெரிந்து கொள்ளாமலிருப்பது மன்னிக்கப் படமாட்டா தென்பதை மறந்து விடக் கூடாது. வேணு மென்று அசட்டை செய்யாமல், சட்டத்தைக் கற்றுக் கொள்ள, தெய்வகதியால், அதாவது போதுமான அறிவு வராத, அல்லது புத்திமாறுட்ட மாகயிருக்கிற காரணங்கள் போலொத்ததினால் தவறிவிட்டால், அது மன்னிக்கப்படு மென்று ஏற்படுகிறது.

மேலே சொல்லப்பட்ட விஷயங்களினால் ஜனங்களில் ஒவ்வொருவருக்கும் சட்டதிட்டங்களில் அநேகம் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டியதாகவும், அப்படித் தெரிந்திராவிடில் அதனால் அநேகம் கஷ்ட நஷ்டங்கள் ஸம்பவிக்கிற தாகவும் ஏற்படுகிறது. அநேக சட்டதிட்டங்கள் ஸிவில்கேசுகளிலாகட்டும் கிரிமினல் கேசுகளிலாகட்டும் பிரதிவாதி அல்லது எதிரியாக வருகிறவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாக ஏற்படாவிட்டாலும் வாதிகளாக வருகிறவர்களுக்கு கட்டாயம் தெரிந்திருக்க வேண்டியதாயிருப்பதாக ஏற்படுகிறது. இன்ன காலத்தில் இன்ன கேசில் இன்னின்னார் வாதியாகவும், பிரதிவாதி அல்லது எதிரியாகவும்தான் வரப்போகிறார்கள் என்ற ஏற்பாடு கிடையாதாகையாலும் எந்தக்காலத்திலும் எந்தக்கேசிலும் யாரும் வாதியாகவாவது பிரதிவாதி அல்லது எதிரியாகவாவது வரக்கூடியது ஸம்பாவித மாகையாலும், எல்லாருக்கும் எல்லா சட்ட திட்டங்களும் நடபடிகைகளும் தெரிந்திருக்க வேண்டியது முற்றிலும் அவசிய மென்றே ஏற்படுகிறது.

இது சங்கதிகளை உத்தேசித்தே ஒவ்வொரு சட்டமும் ஊர்ஜிதத்துக்கு கொண்டு வரப்படுமுன் மசோதாவாகப் பிறப்பிவிக்கப்பட்டு, ஷை மசோதாவுக்கு, தமிழ் தெலுங்கு, முதலிய பற்பல சுதேச பாஷைகளில் தர்ஜிமாவும் செய்து அச்சிட்டு பட்டணம் கெஜெட்டுடனும் அந்தந்தஜில்லாகெஜட்டுடனும் நகல்கள் அனுப்பப்படுகின்றன. இப்படிச் செய்யும் நோக்கம் யாதெனில் இந்த மசோதாவை எல்லாரும் படித்து அந்த மசோதாவில் கண்டசங்கதிகளை சட்டமாக ஊர்ஜித்துக்குக் கொண்டு வரலாமா, ஏதும் சீர்திருத்தங்கள் வேண்டுமாவென்று ஆலோசித்து அப்படி யேதும் சீர்திருத்தங்கள் அவசிய மிருந்தால் அவைகளை மாட்சிமை தங்கிய கவர்ன்மெண்டாரவர்களுடைய தகவலுக்குக் கொண்டுவரவேண்டு மென்ற நோக்கத்துடன்தான். ஆனால்நமதுநாட்டுஜனங்களோ மிகவும் விந்தையான தன்மையுள்ளவர்களாக யிருக்கிறார்கள். எந்த விஷயத்திலும், அதிலும் கட்டாயமாக சட்ட விஷயத்தில் சங்கதிகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலே கிஞ்சிற்றேனும் இல்லாதவர்களாக யிருக்கிறார்கள். மேற்கண்ட மசோதாக்கள் சில மாதங்களுக்கு மசோதாவாகவே யிருக்கும். யாரும் ஏதும் சீர் திருத்தங்களைக் கோருகிறார்களா வென்று பார்த்துவிட்டு பின்னிடுஷை மசோதாவை (ஆக்ட்டு) சட்டமாகவேயே ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவந்து விடுகிறார்கள். இந்த மசோதாவும்சட்டமும் கெஜெட்டுகள் தருவிக்கிறவர்களுக்குத் தானே போகும். நமது நாட்டு ஜனங்களோ கெஜெட்டுகளாவது பத்திரிகைகளாவது தருவித்துப் படிக்கிறதே யில்லையே! அவர்களுக்கு இந்த மசோதாவாவது அப்பால் ஆக்ட்டாவது

வாவது வந்திருப்பது தான் எப்படித் தெரியக்கூடும். அது தெரியவும் மார்க்கமில்லை. ஆனால் சில கிராமமுனிசிப்புகள் முதலிய சில கிராம நவுக்கர்கள் கெஜெட்டுகள் தருவிக்கிறார்களே அவர்களாவது ஷை மசோதா ஆக்ட்டு முதலியதைப் படிக்கிறார்களோ வென்றால் அவர்களும் படிக்கிறதேயில்லை. நம்முடைய நாட்டு ஜனங்கள் இவ்வித பரிதாபமான நிலைமையிலிருந்தால் அவர்கள் நாகரீக மடைந்து முன்னுக்கு வரும் காலம் எப்பொழுதோ அதைபகவானே அறியவேண்டும்.

இதுசங்கதிகளை எல்லாம் நன்றாக ஆலோசித்தும் ஜனங்களுக்கு ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பு முதலிய பற்பல விஷயங்களினுடைய ஸாராம்சங்களையும் எடுத்துப் புகட்ட வேண்டு மென்ற சிறந்த நோக்கத்துடன் இந்த இந்திய சட்ட கேஜேட் என்னும் பத்திரிகையை ஆரம்பிவித்து ஏராளமானபொருள் சிலவிட்டு சென்ற 11வருஷகாலமாக நடத்திவரப்படுகிறது. இநத பத்திரிகையின் அமைப்பைபற்றியும், அருமையான உபயோகத்தைப்பற்றியும்,கனம் பல ஹைக்கோர்ட்டுஜட்ஜிகள் முதலிய சட்டஞானமேதாவிகளால் கொடுக்கப்பட்டிருக்கும் நற்சாட்சிப் பத்திரங்களால் தெரியவரும். இந்த சட்டஸஞ்சிகையை எல்லாரும்வாங்கிப்படித்துப்பயனடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் பத்திராதிபருக்கு லாபமென்பது ஏதும் கிடைக்கமார்க்க மில்லாத குறைந்த சந்தாத் தொகையையும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த பெரும்போர் நடந்து வரும் இந்தக்காலத்தில் அச்சிடுவதற்குரிய கருவிகளாகிய கடிதாசு, மஸி (இங்கி) முதலியது எளிதில் கிடைக்காமலும், கிடைத்தாலும் முன்னிருந்த விலைக்கு 4. 5. மடங்குகிரையம் கொடுக்க வேண்டிய திருப்பதையும் உத்தேசித்து இந்த ஜூன்மீ முதல் சந்தாவை சற்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தப் பத்திரிகையின் சிறந்த அமைப்பும் உபயோகமும் சகல ஜனங்களுக்கும் தெரிந்திருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், இந்த இந்தியசட்ட கெஜட்டின் பிரதிகளை இனமாக அநேகம் கிராமமுனிஸீப் வகையறாக்களுக்கு அனுப்பினோம். அப்படி இலவசமாக அனுப்பப் பட்ட பிரதிகளையும் வலியவந்த மகாலக்ஷ்மியைக் காலாலுதைத்துத் தள்ளியது போல், சில மகான்கள் பெற்றுக் கொள்ள மறுதளித்துத் திருப்பி விட்டார்கள். இதைப் பார்க்கிலும் விந்தையானஸங்கதி என்ன யிருக்கக்கூடும்.

ஆகையால் நமது இந்திய சட்ட கேஜேட்டின் சந்தாதார்களும் மற்ற நண்பர்களும் கிருபை கூர்ந்து இந்த லோகோபகாரமாயுள்ள விஷயத்தில் தலையிட்டு இந்த இந்திய சட்ட கெஜெட்டை முன்னுக்குக் கொண்டுவரும் வழிகளை ஊக்கத்துடன் செய்யும்படி கோரப்படுகிறது.

மடத்து சொத்துக்களை அடமானம் செய்தல்

மடங்களின் சொத்துக்களை ஆதாரமாய் வைத்துக் கடன் வாங்கவோ அல்லது அவைகளை விற்பனை செய்யவோ மடாதிபதிகளுக்குள்ள அதிகாரம் பாத்தியதை என்னவென்பதைப்பற்றி சென்னை ஹைகோர்ட்டார் செய்திருக்கும் தீர்மானங்கள் சில உள. மேற்படி மடாதிபதிகளின் விநியோக பாத்தியதையை ஒட்டி பிரிவி கௌன்சில் தீர்ப்பு ஒன்று நாளது வருஷம் மே மீ இந்தியன் லா ரிப்போர்ட் மதராஸ் பாகத்தில் விவரமாய் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

தென்னிந்தியாவில் அநேக மடங்கள் இருப்பதினாலே பொதுவாய் மடங்களுக்கே செல்வாக்கு ஏற்பட்டிருக்கின்றன. ஆகவெ சட்ட பூர்வமாய் மேற்படி மடங்களின் சொத்துக்களுக்கும் ஆதீன கர்த்தர்களுக்கும் குறிப்பாயுள்ள சம்பந்தாசம்பந்தம் எவ்வளவு, மடங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் மடத்துச் சொத்துக்களின் பேரில் ஆதீன கர்த்தாக்களுக்குள்ள அதிகாரம் எவ்வளவு என்ற விஷயங்களிலே ஜனசமூகத்தினருக்கு கவனம் பிறந்திருக்கிறது. ஏனென்றால் மடங்களின் ஆதீன சர்த்தர்களது திட்டமான நிலைமைகளையும் அதிகாரங்களையும்பற்றி மதராஸ் ஹைகோர்ட் ஜட்ஜிகளின் அபிப்பிராயம் குழம்பிக் கொண்டிருக்கிறது. இம்மாதிரி மடங்களுக்கு தலைவர்களான ஆதீன கர்த்தாக்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்துகொண்டிருக்கிறவர்களும் செய்து வரக்கூடியவர்களுமான ஜனங்கள் அநேகர் இருக்கக்கூடு மாகையாலும், இம்மாதிரியான மதஸ்தாபனங்களுக்கும் மடாதிபதி களுக்கும் சட்டப்படி ஏற்பட்டுள்ள சம்பந்தமும் அவர்களுக்குள்ள பாத்தியதை இன்னதென்றும் பொது ஜனங்களுக்குத் தெரியவேண்டியதுநிரம்பவும் அவசிகமாயிருக்கிறது. இதைப் பற்றின அம்சங்களை விபரமாக இன்னொரு பிரதியில் விஸ்தரிப்போம்.

பண்ணையாள்கள் அடிமைக்காரர்களா?

வாதியினிடம் பிரதிவாதி ரூபாய் 40. கடன் வாங்கி அது விஷயமாய் கடன் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுத்தார். அதன் ஷரத்து பின்வருமாறு இருந்தது. 'தங்களிடம் கடனாக வாங்கிக்கொண்டது ரூபாய் 40-இதற்காகத் தங்களுக்கு ஈடாக என்னுடைய பண்ணையாள்களாகிய கரணுபுரம், அவன் பெண்சாதி வீரி, குமாரன் சமுத்திரம் இவர்களை அடமானமாக வைத்திருக்கிறேன். நாளது தேதியில் அவர்களை தங்கள் வசமும் ஒப்புவித்து விட்டேன். வட்டிக்குப் பதிலாக அவர்களிடமிருந்து வேலை வாங்கிக் கொள்ளவேண்டும். சரியாய் அவர்கள் வேலை செய்யத்தவறினால் நான் தங்களுக்கு நூற்றுக்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ஒன்றாக கூடிய வட்டியையும் முதலையும் கொடுக்கக்கடவேனாகவும்." பண்ணையாட்கள் சரியாக வேலை செய்யவில்லையென்ற வியாஜ்ஜிய மூலத்தைக்கொண்டு வாதி பண்த்திற்கு தவாசெய்து விட்டார். ஹைகோர்ட்டில் இந்த விசித்திரமான கேஸ் தீர்ப்புக்கு வந்தது. ஜஸ்டிஸ் சீனிவாஸ ஐயங்கார் அம்மாதிரியான பாண்டு சட்டப்படி செல்லத்தக்கதல்லவென்று அபிப்பிராயப்பட்டார். ஏனெனில் நிபந்தனைகளை ஒத்துக்கொண்டால் மானிடர்களை ஆடுமாடுகள்போல் விற்பனை செய்வதாகுமென்றும், அவர்கள் அடிமைத்தனத்துக்கு உள்பட்டுவிடுவார்களென்றும், அப்படிச் செய்வது சட்டத்திற்கு விரோதமென்றும் சொல்லிவிட்டு வாதியின் அப்பீலைத் தள்ளிவிட்டார். இனி அம்மாதிரியான ஏற்பாடுகள் நடக்காமலிருக்கும் பொருட்டு பொது ஜனங்களுக்கு இந்தக் கேஸின் விவரத்தை அறிவித்தோம்.

போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் நே. 197.

(முதல் பாகம் 96-ம் பக்கம் 2—வது காலம் தொடர்ச்சி.)

(III) இராஜதானிப்பட்டணங்களில் இந்த விஷயமாய் நடத்தப்படும் நடவடிக்கைகள் இராஜதானிப்பட்டணத்தில் மேல் கண்ட விதமாக தன் சொத்து விஷயமாக யாதொரு யேர்ப்பாடும் செய்யாமல் இறந்து விடுகிறவனுடைய சொத்தின் கிரையம் ரூ. 200 க்கு மேல் போகாமலிருக்கும் பக்ஷத்தில் ஷை சொத்தை போலீஸார் கைப்பற்றிக்கொண்டு யார் தன்னுடைய சொத்தென்று ருஜூச் செய்கிறாரோ அவருக்கு போலீஸ் கமிஷனருடைய உத்தரவுப்படி கொடுக்கப்படும். (6-8 85 போட்ட 2278-ம் நிம்பர் போர்ட் ப்ரொஸீடிங்ஸ் 16. 4. 86 போட்ட 935-ம் நிம்பர் ப்ரொஸீடிங்ஸ், 28-2, 88 போட்ட 190-நிம்பர் ப்ரொஸீடிங்ஸ் இவைகளைப்பார்க்க.)

2. பாதை முதலியதுகளில் கிடக்கும் பேவார்ஸ் சொத்துக்களைப்பற்றி :—பயிரங்கமான இடங்களில் ஏதும் சாமான்கள் கிடந்து அவைகளை யாரும் கண்டு எடுத்து, அவைகள் இன்னாருக்கு சொந்த மென்று தெரியாமலிருந்தால், சொந்தக்காரன் இன்னானென்றே தெரியாதவரையில், ஷை சாமான்களுக்கு அவைகளைக் கண்டெடுத்தவனே பாத்தியஸ்தனாகி விடுகிறான். ஷை சாமான்களை கண்டெடுத்தவருக்கு அப்படிச் செய்ய இஷ்டமிருந்தால் ஷை சாமான்களை போலீஸ்ஸ்டேஷனில் கொண்டு போய் ஒப்புவித்துவைக்கலாம். போலீசார் ஷை சாமான்களை தங்களிடம் வைத்துக்கொண்டு அது சங்கதியைப்பற்றி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு ரிப்போர்ட்டு செய்வார்கள். அப்பால் ஷை சங்கதியைப்பற்றி சொத்துக்குடையவர்கள் உண்டானால், 3 மாதங்களுக்குள் ஆஜராய் ஷை சொத்துக்கள் விஷயமாய் தங்களுக்கிருக்கும் பாத்தியதையை ருஜூச் செய்து ஷை சாமானகளைப் பெற்றுக் கொள்ளலாமென்று ஜில்லா கெஜெட்டில் விளம்பரம் செய்யப்படும். ஷை மூன்று மாதங்களுக்குள் யாரும் பாத்தியஸ்தர்கள் ஆஜராகாத விஷயத்தில் ஷை சாமான்களைக் கண்டெடுத்தவருக்கே திரும்ப கொடுத்து விடப்படும். யாரும் பாத்தியஸ்தர் ஆஜராகி, அவருடைய பாத்தியதையைக் குறித்து யாரும் ஆக்ஷேபிக்காத விஷயத்தில், ஷை சாமான்களை அந்தப் பாத்தியஸ்தரிடமே கொடுத்து விடப்படும். ஷை சொத்துக்கள் விஷயமாய் ஒரு பாத்தியஸ்தருக்கு மேல்பட்ட பாத்தியஸ்தர்கள் ஆஜராய் ஒருவர் பாத்தியதையை மற்றொருவர் ஆக்ஷேபித்து தாவாச் செய்யும் விஷயத்தில், ஷை யார்கள் ஸிவில் கோர்ட்டில் வழக்குச்செய்து அவரவர்களுடைய பாத்தியதையை ஸ்தாபித்துக் கொண்டு வரும்படி சொல்லி விடப்படும். ஸிவில் கோர்ட்டாருடைய தீர்மானப்படி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டு நடந்து கொள்வார்.

அறிக்கை.

இந்திய சட்ட கெஜெட்டாபீஸ்.

இதனடியில் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு சட்ட ஸம்மந்தமானவிஷயங்களைப்பற்றி எழுத விரும்புவோர், தமிழ் பாஷையில் எழுதி அனுப்பும் வியாஸங்களை அங்கீகரித்து இந்திய சட்ட கெஜெட்டில் பிரசுரம்செய்யப்படும். ஷை வியாஸங்கள் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களினுடைய அருமையையும், எழுதப்பட்ட வியாஸங்களினுடைய தன்மையையும் நிதானித்து பூல்ஸ்காப்பேப்பர் அளவில் அச்சிடப்பட்ட 4 பக்கங்கள் கொண்ட ஒரு பாரத்திற்கு ரூ. 3 முதல் ரூ. 6 வரையில் பிரதிப் பிரயோஜனம் கொடுக்கப்படும்.

இந்திய சட்ட கெஜெட் ஆபீசுக்கு அனுப்பப்படுகிற வியாசங்களை காரணம் தெரிவிக்காமலே பூராவும் அங்கீகாரம் செய்யாமல் நிராகரிக்கவாவது அல்லது சில பாகத்தை ஒப்புக்கொண்டு, சில பாகத்தை நிராகரிக்கவாவது மானேஜருக்கு சுதந்திரம் உண்டு.

ஒப்புக்கொள்ளாமல் நிராகரிக்கப்படும் வியாஸங்களை, திரும்ப அனுப்பப்படமாட்டாது.

OUR LAW COLLEGE.

எங்களுடைய சட்ட கலாசாலை.

எங்களுடைய சட்ட கலாசாலையின் புரொபசர் உலகறிந்த திருநெல்வேலி வக்கீல் K. R. கிருஷ்ணமாச்சாரியார் அவருடைய மாணுக்கர்களுடைய பெயர்கள் :—

1 அனந்தாச்சாரி, 2 சக்ரவர்த்தி ஐயங்கார், 3 துரைசாமி முதலியார், 4 சட்டராசாரியார், 5 தணிகாசல முதலியார் வகையராக்கள்.

HINDU LAW—ஹிந்து லா.

சக்ரவர்த்தி அய்யங்கார் :—விவாகம் செய்து கொள்ள உத்தேசித்த புருஷன் விவாகத்துக்காக பெண்ணைச் சேர்ந்தவர்களிடம் கொடுத்திருந்த பணம் திரும்பக் கிடைக்குமா ?

பு :—கிடைக்கும் (10 கல் 1054)

துரை :—விவாகத்திற் கேற்பட்ட பற்பல கிறிகைகளில் எந்த கிறியை செய்த பின் கல்லியாணத்தை ரத்து செய்யமுடியாது.

பு :—மேல் ஜாதியாருடைய விவாகங்களில் கன்னிகாதானம், பாணிக்கிரகணம் என்னும் கிறியைகளுக்குப் பின் நடத்தப்படும் ஸத்தபதி என்னும் கிறியை முடிந்த பிறகு விவாகம் பூர்த்தியாய் விட்டது. ஸப்த்தபதி என்பது ஹோமாக்னிக்கு முன்பாக வதூவரர்கள் யேழு அடி எடுத்து வைப்பதுதான். இது செய்யப்பட்ட பிறகு கல்யாணத்தை ரத்து செய்ய முடியாது (14 ம 316)

மா :—விவாகம் முடிந்தவுடன் தன் பெண்சாதி ஆய் விட்ட ப்ரௌடையாகாத பெண்ணை புருஷன் தன்கூட அனுப்பி விடும்படி பெண்ணின் பெற்றோர்களை கட்டாயப்படுத்த பாத்தியதை உண்டா ?

பு :—அப்படி அனுப்பும்படி கட்டாயப்படுத்த புருஷனுக்கு பாத்தியதை கிடையாது (17 கல் 298; 24 ம 255; 23 ஸதர்லண்டு வீக்லி ரிப்போர்டர் 178.)

அ :—பெண்சாதியானவள் ப்ரௌடையான பிறகு புருஷன்கூட இருக்க மாட்டேனென்று சொல்லலாமா? அல்லது அவள் புருஷனோடுகூடவே யிருக்கக் கடமைப்பட்டிருக்கிறாளா ?

பு :—பக்குவவதியான பிறகு பெண்சாதியானவள் புருஷன்கூட வசிக்க கடமைப்பட்டவளாகிறாள். (11 மு-இ-அ. 551; 28 கல் 751) அவளை சம்ரக்ஷணை செய்ய புருஷனும் கடமைப்பட்டிருக்கிறான். (13 அல 126)

கு :—மேலே பெண்சாதி புருஷன்கூட இருந்து வசிக்க கடமைப்பட்டிருக்கிறதாகச் சொன்னீர்கள். ஆனால் புருஷன் வேறு பெண்சாதியை மணம் செய்து கொள்ளுகிறான் அல்லது வைப்புவைத்துக்கொள்ளுகிறான் அல்லது புருஷன் அங்கஹீனனாய் விடுகிறான் அல்லது தொடிய வியாதியஸ்தனாய் விடுகிறான் அல்லது சம்போகஞ் செய்ய சக்தியற்றவனாய் இருக்கிறான். இப்பேர்ப்பட்ட கேசுகளில் பெண்சாதி புருஷனை விட்டு விலகியிருப்பதற்கு போதுமான காரணங்களா யில்லையா ?.

பு :—ஷை காரணங்கள் பெண்சாதி புருஷனை விட்டு விலகி யிருப்பதற்கு போதுமான காரணங்களாக மாட்டாது (1 ம-ஹை-கோ-ரி. 375 ; 10 பம் 301., 13 அல 126. 17 ம 260; 20 ம. 470 19 கல் 84 ; 21 பம் 610)

கு :—புருஷன் தாசியை வீட்டிலே வைத்துக்கொண்டு அவளோடு ஸம்ஸர்க்கம் செய்துகொண்டிருக்கிறான். இந்த கேசில் புருஷன்கூட வசிக்க மாட்டேனென்று அவள் சொல்லலாமா ?

பு :—தாசியை வீட்டில் வைத்துக்கொண்டிருந்தாலும் பெண்சாதியை உபத்திரவம் செய்யாவிட்டால் அவனை விட்டு விலகி யிருக்க அவளுக்கு அதிகாரமில்லை. (1 ம-ஐ-கோ-ரி. 376.)

ஸா :—பெண்சாதி புருஷனைவிட்டு நீங்குவதற்கு போதுமான காரணங்கள்தான் எவை?

பு :— 1 புருஷன் மதப் பிரஷ்டமாய்ப் போய்விடுகிறான். 2 அவனுடைய தாய் சகோதரிகள் முதலியவர்கள் பெண்ணை (அவன் பெண்சாதியை) அடித்து நிர்பந்தம் செய்கிறார்கள். 3. புருஷன் கெட்ட தொத்து வியாதியினால் அவஸ்தைப்பட்டு பெண்சாதி சமீபத்திலிருந்தால் அவளுக்கு ஷை வியாதி அணுகி பிராணபாயம் உண்டாகும் என்று தோன்றுவது, இப்பேர்ப்பட்ட விஷயங்களில் பெண்சாதி புருஷனைவிட்டு நீங்கிவிடலாம். (11. மு-இ-அ 126 ; இ-லா-ரி. 1 பம் 364; இ-லா-ரி. 5 கல 500 ; இ-லா-ரி. 13 அ 126)

மகம்மதிய கிருஸ்துவ முதலான அன்னிய மதஸ்திரீகளையாவது நீசஸ்திரீகளையாவது வைப்

பாக வைத்திருப்பவன் ஹிந்து தர்மசாஸ்திரங்களின்படி மதப் பிரஷ்டனாய் விடுகிறான். ஆகையால் அவனுடன் ஹிந்து மதப்பெண்சாதி கூட இருக்க மாட்டேனென்று சொல்லலாம். (14 ஸதர்லண்டு வீக்லீ ரிப்போர்டர் 145 ; 6 அல. 617).

ஒருவன் தன் பெண்சாதியை யெப்பொழுதும் கொடூரமாய் நடத்தி அவளை இம்சை செய்து வருகிறது (2) புருஷன் தன் ஜீவனுக்கேஹானி செய்வானென்றபயம், அவனுடைய மூர்க்கமாயும், குரூரமாயும் உள்ள செய்கைகளால் அவளுக்கு உண்டாவது- இப்பேர்ப்பட்ட கேசுகளிலும் பெண்சாதி புருஷனை விட்டு விலகி யிருக்கலாம். இப்படி சரியான காரணங்களின் பேரில் பெண்சாதி புருஷனை விட்டு விலகி யிருந்தால் அவளுக்கு தனி ஜீவனும்சம் புருஷனிடத்திலிருந்து கிடைக்கும். (19 கல் 84; 1 பம் 164 ; 11 மு.இ.அ. 551 ; 13 அல 126 ; 5 கல் 500).

ராமச்சந்திர ராவ் :—ஒரு ஹிந்து ஜாதிப்பிரஷ்டனாய் விடுகிறான் அவன் தன் பெண்சாதியை தன் வசப்படுத்திக்கொள்ள வியாஜ்ஜியம் செய்ய அவனுக்கு பாத்தியதையுண்டா ?

பு :—அப்படி வியாஜ்ஜியம் செய்ய அவனுக்கு பாத்தியதை யில்லை. (5 ஸதர்லண்ட் வீக்லீ ரிப்போர்டர் 235.)

தங்கவேலு செட்டி :—பெண்சாதி ஜீவனும்சத்தை யிழந்து விடுவதற்குறிய காரணங்களென்ன ?

பு :—1. தகுந்த காரணமில்லாமல் அவள் புருஷனை விட்டு விலகி யிருப்பது. (2) விபசாரியாய் இருப்பது இப்பேர்ப்பட்ட கேசுகளில் புருஷன் ஜீவனும்சம் கொடுக்கமாட்டான். (இ. லா. ரி. 2 பம் 634 ; 1 ம ஹை. கோ. ரி. 372 ; 2 ம ஹை. கோ. ரி. 377).

குருசாமி அய்யர் :—தகுந்த காரணமின்றி தன்னை விட்டு விலகி யிருக்கும் பெண்சாதியை தன்னுடன் கூட இருந்து வாழும்படி செய்வதற்கு என்ன செய்யலாம் ?

பு :—புருஷன் கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்து கோர்ட்டில் தீர்ப்புப் பெற்றுக்கொள்ளலாம் (13 அல 126.)

குமாரசாமி ரெட்டியார் :—அந்த தீர்ப்புப் படிக்கும் அவள் நடக்கத்தவறினால் அவளை என்ன செய்கிறது ?

பு :—ஷை தீர்ப்பின் படி பெண்சாதி நடக்கத்தவறினால் அவளை ஆறு மாதம் வரையில் ஸிவில் சிறைச்சாலையில் வைக்கவாவது அல்லது அவளுடைய ஸ்திரீதனம் சொத்தை ஜப்தி செய்யவாவது அல்லது இரண்டும் செய்யவாவது கோர்டாருக்கு அதிகாரம் உண்டு (இ. லா. ரி. 5 க. 500 ; இ. லா. ரி. 13 அல் 126 ; இ. லா. ரி. 10 பம் 301.)

ச :—புருஷன் பெண்சாதியை விட்டு விலகி யிருந்தால் புருஷனைச் சேர்த்துக் கொள்ள பெண்சாதி செய்ய வேண்டியதென்ன ?

பு :—பெண்சாதி புருஷன் பேரில் வியாஜ்ஜியம் செய்து தீர்ப்புப் பெற்றுக் கொள்ளலாம். (13 அல 126.)

ரு :—பெண்சாதியை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுவதற்காகச் செய்யும் வியாச்சியத்திற்கு காலாவதியுண்டா ?

பு :—புருஷன் பெண்சாதி யென்ற சம்பந்தமானது அவர்கள் உயிருடன் இருக்கும் காலம் வரை விலகமாட்டாதாகையால் ஷை வியாஜ்ஜியங்களுக்கு காலாவதி கிடையாது. எப்பொழுது வேண்டுமோ அப்பொழுது செய்யலாம். (இ. லா. ரி. 13 அல 126.)

அ :—மேல் கண்ட பிருது எத்தனை ரூபாய்க் காகிதத்தில் செய்யப் படவேண்டும்.

பு :—ஐந்து ரூபாய் முத்திரைக் கடுதாசியி (Stamp Paper) ல் பிருது செய்யவேண்டும்.

மா :—பெண்சாதி வாங்கிய கடன்கள் புருஷனை கட்டுப்படுத்துமா ? எந்தயெந்த கேசுகளில் கட்டுப்படுத்தும்.

பு :—புருஷன் பெண்சாதிகள் ஒன்றாய் வாசம் செய்யும் காலத்தில் அவசியமான குடும்பச் சிலவுகளுக்காக பெண்சாதியால் வாங்கப்படும் கடன்களுக்கு புருஷன் கட்டுப்படவேண்டியது.

நியாயமான காரணமன்றி ஒருவன் தன் பெண்சாதியை விலக்கி வைத்திருந்தால் அவள் தன் காலக்ஷேபத்துக்காக புருஷன் பேரைக்கொண்டு ஏதாவது கடன் வாங்கினால் அந்தக் கடனையும் புருஷன் தீர்க்கக் கடமைப்பட்டவன் ஆவான். (1 ம-ஹை-கோ-ரி 375)

த :—ஸ்திரீகள் எந்தெந்த ஸந்தர்ப்பங்களை வைத்து புனர்விவாகஞ் செய்துகொள்ளலாம் ? அப்படி விவாகம் செய்துகொள்ளலாமென்பதற்கு சாஸ்த்ர சம்பந்தமான ஆதாரங்கள் ஏதேனும் உண்டா ?

பு :—புருஷன் இறந்துபோய்விடுவது (2) தேசாந்திரம் போய் வெகு காலமாய் திரும்பி வராமல் இருப்பது (3) பும்ஸத்வம் இல்லாமல் இருப்பது (4) ஜாதி பிரஷ்டனாய்ப்போய்விடுவது. இப்பேர்ப்பட்ட கேசுகளில் புனர்விவாகம் செய்யலாமென்று நாரதருடைய ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரௌடையாவதற்கு முன் புருஷனை யிழந்த பால்ய விதவைகள் புனர் விவாகம் செய்துகொள்ளலாமென்று மனுஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறதாக தெரியவருகிறது. ஸ்திரீகள் புனர் விவாகம் செய்துக்கொள்ளக்கூடாதென்ப

தற்கு பூர்வகாலகிரந்தங்களில் போதுமான ஆதாரங்களில்லாமலிருந்தாலும் இந்த யுகத்தில் ப்ராம்மணர் முதலிய உயர்ந்த ஜாதியார்கள் ஸ்திரீகளுக்கு புனர் விவாகம் செய்யக்கூடாதென்று செய்திருக்கும் ஏற்பாடு நெடுநாளாய் வழங்கி வருகிறது. சூத்திரர்களில் தாழ்ந்தவகுப்பைச் சேர்ந்த மறவர் தொட்டியர்கள் முதலிய ஜாதியார்களும் இலங்கைத் தீவிலுள்ள தமிழர்களும் விதவைகளுக்கு சாதாரணமாய் புனர் விவாகம் செய்கிறார்கள். (6 ம-ஹை-கோ-ரி 129 ; 1 ம 226 ; 17 ம 479.)

ரா :—எல்லா ஜாதி விதவைகளும் இஷ்டமானால் புனர் விவாகம் செய்துகொள்ளலாமென்று ஏதும் சட்டதிட்டங்களிருக்கின்றனவா ?

பு :—விதவை விவாகம் சட்டப்படி செல்லுமென்று இந்தியா கவர்ன்மெண்டு 1856-ம் ௵த்திய 15-வது ஆக்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

ஸா :—புனர் விவாகம் செய்துகொள்ளும் விதவைக்கு ஜீவனும்சம், தாயபாகம் முதலிய பாத்தியதைகள் இருக்குமா போய்விடுமா ?

பு :—புனர் விவாகம் செய்துகொண்ட விதவை முதல் புருஷனுடைய குடும்பத்திலிருந்தும் குலத்திலிருந்தும் நீங்கினவளாய் விட்டபடியால் அவனுடைய சொத்தில் அவளுக்கிருந்த சகல பாத்தியதைகளையும் புனர் விவாகத்துக்குப் பின் இழந்து விடுகிறாள்.

ஸந்தானம்.

புரொபஸர் :—விவாக சம்பந்தமான சங்கதிகளைச் சொல்லியாய்விட்டது. இனி விவாகத்தினால் உண்டாகக்கூடிய சந்ததி அபிவிருத்திக் குரியசந்தானம் முதலியனவற்றைப் பற்றிப் பேசுவோம்.

ச :—சந்தானத்தை அபேக்ஷிப்பதின் காரண மென்ன ?

பு :—உலகத்தில் பிரஜாவிருத்தி யடைவதற்காகவும் அவரவர்களுடைய வம்ச விருத்திக்கும் அவர்களுக்கு வியாதி வார்த்திக திசை முதலியவை நேரிடுங் காலத்தில் அவரவர்களைப் போஷித்துக் காப்பாற்றவும், ஜீவதிசைக்குப்பின் உத்தரக்கிரியைகள் முதலியவற்றைச் செய்வதற்காகவும் அவரவர்கள் சம்பாதித்து வைத்த சொத்துக்களை அவரவர்களுக்குப் பின்வார்சுக் கிரமமாய் அடைந்து ஆண்டனுபவித்து அவர்கள் பெயரை விளங்கச் செய்யவும் ஆகிய லோகானுஷ்டானங்களைச் செய்யும் பொருட்டு ஒவ்வொருவரும் சந்தானத்தை யடைய வேண்டியதா யிருக்கிறது.

அ :—மேல்கண்ட இவ்வுலக வாழ்க்கைக்குறிய அனுபோகங்களைத் தவிர சந்தானத்தினால் பரத்துக்கு ஆகவேண்டிய விஷயங்கள் ஏதேனும் உண்டா ?

பு :—சந்தானத்தை யெவன் அடைகிறானில்லையோ அவன் இகத்தில் தன்னை ஆதரிப்பாறின்றிவருந்துவதுடன் இறந்த பின்னும் "புத்" என்னும் நரகத்தையடைகிறானென்று நமது ஹிந்து தர்மசாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. அதுகாரணம் பற்றியே உத்பவிக்கும் ஸந்தானத்துக்கு (மகனுக்கு) "புத்திரன்" (புத் என்னும் நரகத்திலிருந்து விடுவிக்கிறவன் என்ற காரணப் பெயரும் கொடுக்கப் பட்டிருக்கிறது.)

ச :—யார்யாரை புத்திரனென்று சொல்லலாம்.

பு :—அடியில் கண்ட பதினான்குவகைப் புத்திரர்களுண்டு.

மா :—அவைகள், எவை யெவை என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

பு :—(1) ஔரஸபுத்திரன் (2) புத்திரிகா புத்திரன் (3) க்ஷேத்திரஜன் (4) பெண்சாதி திருட்டுத்தனமாய் வியபசரித்துப் பெற்ற பிள்ளை. (5) கன்னிகையின் புத்திரன் (6) ஒரு ஸ்திரீயை விவாகம் செய்து கொள்ளும்பொழுது அவளுடன் அடைகிற (விவாகத்திற்கு முன் அவளுக்குப்பிறந்த) பிள்ளை (7) புனர் விவாகம் செய்துகொள்ளுகிறவனுடைய முதல் தாரத்துக்குப் பிறந்த பிள்ளை (8) ஸ்வீகாரன் அல்லது தத்துப் பிள்ளை (9) கிருத்தரமன் (10) விலைக்கு வாங்கின பிள்ளை (11) அனாதியாயிருந்து எடுத்து வளர்க்கப்பட்ட பிள்ளை. (12) தானே வந்து சேர்ந்தபிள்ளை (13) சூத்திர ஸ்திரீக்குப் பிறந்த பிள்ளை (14) வைப்பாட்டி பிள்ளை.

மா :—ஔரஸ புத்திரன் என்றால் என்ன ?

பு :—தன்னுடைய ஆத்துமாவே மறுபடியும் பிரதிபலித்தது போல் தன் மனைவியிடமாகத் தனக்குப் பிறக்கும் பிள்ளைக்கு ஔரஸ புத்திரன் என்று பெயர். அதாவது தன் உதரத்திலிருந்து உண்டான பிள்ளை என்று அர்த்தம்.

மா :—ஔரஸபுத்திரன் ஒருவருக்குப்பிறக்காமல் போய்விட்டால, சாஸ்திரப்படி வேறு வகையில் புத்திரனைப் போல வேறு யாரையும் பாராட்ட நியாயமுண்டா ?

பு :—இகபரம் இரண்டிற்கும் இன்றியமையாததான இப்புத்திரபாக்கியமானது தெய்வகதியில் ஒருவனுக்கு யில்லாமல் போவதும் ஸம்பாவிதமாகையால் அப்படிப்பட்ட ஸமயங்களில் புத்திரன் போல் ஒத்த ஒருவனை வேறு விதமாயாவது அடைந்து கொள்ளலாம் என்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸரியான வழியிலாவது ஸரியென்று

ஒப்புக்கொள்ளத்தகாத வேறு அநேக வழிகளினு லாவது ஓர் புத்திரனை யடைய வேண்டுமென்று சொல்லப்பட்டதினுல், ஸந்தான பாக்கியத்தின் ஆவசியகமும் மகிமையும் வெளிப்பட்டது.

மா :—மேலே சொல்லப்பட்ட வழிகளின் மூலமாக வெல்லாம் புத்திரர்களை அடையும் வழக்கம் இப் பொழுது நடந்தேறி வருகிறதா ?

பு :—மேற் சொல்லிய பலவழிகளாலும் புத்திரனை யடையும் வழக்கம் பற்பலகாரணங்களால் நாள டைவில் கொஞ்சங் கொஞ்சமாக நின்றுகொண் டேவர கடைசியில் இப்போது ஆண் ஸந்ததியில் லாமற்போனுல் ஸ்வீகாரத்தால் புத்திரனையடை கிற வழக்கமொன்றே நமது நாட்டில் அநுஷ்டா னத்தில் இருந்துவருகிறது.

மா :—கிருத்திரமன் என்று மேலே சொல்லப்பட்டதே கிருத்திரமன் என்றுல் என்ன ?

பு :—ஸ்வீகாரத்தால் புத்திரனை யடையும் வழக்கமில் லாத சில இடங்களில் பெற்ற தாய்தகப்பனுல் கொடுக்கப்படாமல் தானே ஸம்மதித்து வந்தடை கிற பிள்ளையை இஷ்டத்தின் பேரில் ஒப்புக் கொண்டு புத்திரன் போல் பாவித்துக் கொள்ளும் வழக்கம் ஏற்பட்டு வருகிறது. இப்படி அடையப் படும் பிள்ளைக்கு கிருத்திரமன் என்று பெயர்.

மா :—தானே ஸம்மதித்து வந்தடைகிற பிள்ளை மைன ராகவுமிருக்கலாமா, அல்லது மேஜராகவேயே யிருக்க வேண்டுமா ?

பு :—புத்திரனுக எடுத்துக் கொள்ளப் படுவதற்கு அப் பிள்ளையினுடைய ஸம்மதம் வேண்டியிருக்கிறபடி யால் அவன் மைனாரிட்டியிலிருந்து நீங்கினவனுக யிருக்கவேண்டும்.

மா :—இப்படி வந்து சேரும் கிருத்திரமனுக்கு புது தகப்பனுடைய குடும்பத்தில் ஏற்படும் பாத்தி யதைகள் என்ன ?

பு :—புதுத்தகப்பனுக்கு உத்தரக்கிரியை முதலியவ ற்றைச் செய்யவும் அவனுடைய சொத்து சுதந்தி ரங்களை யடையவும் உறியவனுக ஆய்விடுகிறுன்.

மா :—இந்த கிருத்திரமனுக்கு அவன் பிறந்த குடும் பத்தின் சொத்து சுதந்திரங்களில் பாத்தியதை உண்டா இல்லையா ?

பு :—பிறந்த குடுபத்தினின்றும் அதனுடைய சொத்து சுதந்தரங்களினின்றும் விலகாதவனுகவேயே யிரு க்கிறுன்.

மா :—இவ்வித வழக்கம் எந்த எந்த தேசங்களில் வழங்கி வருகிறது ?

பு :—இவ்வித வழக்கம் மிதிலை நாட்டிலும், பஞ்சாப் காஷ்மீரப் பிரதேசங்களிலும், இலங்கைத் தீவிலும் மலையாளத்திலுள்ள நம்பூரி பிராம்மணர்குள்ளும் வழங்கிவருகிறது. இ-லா-ரி. 11-ம. 164,

மா :—மேலே கண்ட விதங்களைத் தவிர வேறு எந்த வகையிலாவது வேறு யாரையாவது பிள்ளையாகப் பாவிக்கும் வழக்கம் வேறு எந்த ஜாதியிலாவது நடந்தேறி வருகிறதா ?

பு :—தென்னிந்தியாவிலுள்ள சில ரெட்டி ஜாதிகளுக் குள் பிள்ளையில்லாமல் போனுல் பெண்ணின் புரு ஷனை மருமகனை பிள்ளையாகப்பாவிக்கும் வழக் கம் நடந்தேறி வருகிறது. இதற்கு இல்லத்த ஸ்வீ காரம் என்று பெயர்.

மா :—இப்படிப்பட்டவனுக்கு தன் சொந்தத்தகப்ப னுடைய சொத்தில் பாத்தியதை உண்டா ?

பு :—தன் சொந்தத் தகப்பனுடைய சொத்துக்கும் பாத் யஸ்தனுகவேயே யிருக்கிறுன். இ-லா-ரி. 4 ம. 272; 6-ம-267; 21 ம 226.

மா :—ஒருவனை மற்றொரு குடும்பத்தில் வாத்ஸல்லி யத்துடன் வளர்த்து அவனை அபிமானப் பிள்ளை யாக வைத்துக் கொண்டால், அப்படிப்பட்டவனு க்கு ஷை குடும்பத்தில் ஏற்படக்கூடியபாத்தியதை கள் என்ன?

பு :—சாஸ்திரவிதிகளின்படி இவனுக்கு அபிமானமாக வளர்க்கப்பட்ட குடும்பத்தில் யாதொரு பாத்தி யதையும் கிடையாது. அபிமானத் தகப்பனுக்கு இவன் வார்ஸாகமாட்டான். அந்தத் தகப்பனுல் இஷ்டத்தின் பேரில் ஏதாவது சொத்துக் கொடுக் கப்பட்டிருந்தால் மட்டிலும் அவன் அடையலா மே தவிர வேறுவித சுதந்திரம் ஒன்றும் அவனு க்கு ஏற்படமாட்டாது. இ. லா. ரி. 29 அல 209.

புத்திரஸ்வீகாரம்.

மா :—ஒரு ஸ்வீகாரத்தில் ஸம்மந்தப்பட்டவர்கள் யார்?

பு :—ஸ்வீகாரம் செய்து கொள்ளுகிறவன், ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப் படுகிற பிள்ளை, அப்பிள்ளை யை ஸ்வீகாரம் கொடுப்பவர். இவர்கள் மூன்று பேர்களும் ஸம்மந்தப்படுகிறுர்கள்.

மா :—யார் யார் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம்

பு :—ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளுகிறவனுக்கு ஸ்வீகா ரம் செய்து கொள்ளுகிறகாலத்தில் ஆண் ஸந்ததி யில்லாமலிருக்கவேண்டும்.

மா :—ஒருவனுக்கு யார் யாரை ஆண் ஸந்ததியென்று சொல்லலாம் ?

பு :—(1) புத்திரன் (பிள்ளை) (2) பௌத்திரன் (பிள்ளை யின்பிள்ளை) (3) பிரபௌத்திரன் (பிள்ளையின் பிள் ளையின் பிள்ளை, கொள்பேரன்) இவர்கள் ஆண் ஸந்த திகளென்று சொல்லப்படுவார்கள்.

மா :—ஒருவனுக்கு அவன் பிள்ளையை ஆண் ஸந்ததி யென்று சொன்னது ஸரியே, பிள்ளையின் பிள்ளை யையும், (பேரனையும்) பேரனுடைய பிள்ளையை யும் (கொள்பேரனையும்), ஒருவனுக்கு ஆண் ஸந் ததி யென்று சொல்வதற்குக் காரணமென்ன ?

(இன்னும் வரும்.)

DIALOGUE.

ஸம்பாஷணை.

இடம் :—முத்துராமன் பட்டி ஜமீன்தார் தோட்டம்.

மு-ஜ :—கேட்டில் யாரடா யிருக்கிறது ?

ஸேவகன் :—மகாராஜ் ஸலாம்.

மு-ஜ :—ஸம்பிரதிப்பிள்ளையை கூட்டிவா, ஜல்தி.

ஸேவகன் :—மகாராஜ் தங்களை அழைத்துவரச்சொல்லி உத்தரவாச்சுது.

ஸம்ரதி :—ஸேவிக்கிறேன்.

மு-ஜ :—நாளை ஞாயிற்றுக்கிழமை யாச்சுதே, நமது வக்கீல் அய்யர் அவர்களை நாம் இவ்விடம் வரும் படி கேட்டுக் கொண்டதாகத் தெரியப்படுத்தி அவர்களை இவ்விடம் அழைத்துக் கொண்டுவர வேண்டும்.

ஸம் :—அப்படியே செய்கிறேன்.

மு-ஜ :—நமது சிநேகிதர் பேழம்பட்டி மிட்டாதார் அவர்களையும் இவடம் வரும்படி நான் கேட்டுக் கொண்டதாகத் தெரியப்படுததும்.

ஸம் :—உத்திரவு.

மு-ஜ :—நமது மோட்டார் காரை வக்கீல் அய்யர் அவர்களுக்கு அனுப்பிவையும்.

(ஸம்ரதிபிள்ளை பேழம்பட்டி அக்குதாராவர்கள் பங்களாவுக்குப் போகிறுர்.)

பே-மி :—ஸம்பிரதிப்பிள்ளை ! எங்கேயிருந்து வருகி றீர் ?

ஸம் :—மகாராஜா சமுகத்தில் ஒருசங்கதி தெரிவிக்கும் படி அனுப்பி வித்தார்கள்.

பே-மி :—ஏதும் விசேஷமுண்டா ?

ஸம் :—விசேஷம் அப்படி ஒன்றுமில்லை. நாளை வக்கீல் அய்யர் அவர்களை தோட்டத்துக்குக் கூட்டி வரும்படிக்கும், சமுகத்திலும் அவ்வடத்துக்கு விஜயம் செய்யும்படி தெரியப்படுத்தும்படி உத்த ரவு செய்தார்கள்.

பே-மி :—நாளைகாலை 8 மணிக்குத் தோட்டத்துக்கு வந்து சேருவதாகத் தெரியப்படுத்தும். வக்கீல் அய்யர் அவர்களிடமும் நாமும் தோட்டம் வருவ தாகத தெரியப்படுத்தும் :

ஸம் :—உத்தரவுப்படியே சேய்கிறேன்.

(ஸம்ரதிப்பிள்ளை வக்கீல் அய்யர் அவர்களி டம் வருகிறுர்.)

வக்கீல் :—ஏதய்யா, ஸம்பிரதிபிள்ளை, வெள்ளைகாக்கை பறந்தது போலிருக்கிறதே ?

ஸம் :—விசேஷம் ஒன்றுமில்லை எஜமானவர்களை நாளை மகாராஜா தோட்டத்தில் சிறிது நேரம் கழிக்கும் படி கேட்டுக் கொண்டுவரும்படி உத்தரவு செய்தி ருக்கிறுர்கள். பேழம்பட்டி மிட்டாதர் அவர்களும் அவ்வடம் வருவதாகத் தெரியப்படுத்தச் சொன் னுர்கள்.

வக்கீல் :—மோட்டாரை இவ்விடம் நிறுத்தி விட்டுப் போம். நாளைகாலை 9 மணிக்கு அவ்வடம் வந்து சேருகிறேன்.

(ஸம்பிரதிப்பிள்ளை முத்து ராமன்பட்டி ஜமீந் தாரிடம் வக்கீல்வருவதாக ஒப்புக் கொண்டதைத் தெரிவித்தார்.)

(பே-மி ; மு-ஜவின்தோட்டத்தக்கு வந்து விட்டார் கள். வக்கீல் அய்யர் அவர்களும் வந்துவிட்டார் கள்.)

மு-ஜ. } நமஸ்காரம், தங்கள்வரவை எதிர்பார்த்துக்
பே-மி. } கொண்டே யிருக்கிறோம்.

வக்கீல் :—பேழம்பட்டி மிட்டாதார் அவர்கள் இவி டம் வந்தது எப்போது.

பே-மி :—இன்று காலமேதான் இவிடம் வந்தேன்.

வக்கீல் :—போன ஞாயிற்றுக் கிழமையத்தினம் 10 நாளைக் காலாவதிக்குள் நடத்தப்பட வேண்டிய நட படிக்கை களைப் பற்றிச் சொல்லப்பட்டது. இனி அதற்குமேல் சொல்லுகிறேன் கேளுங்கள்.

3 மாதங்களுக்குள்

பிராணிகள் விஷயத்தில் கொடூரமாயிருப்பதைத் தடுப்பதற்காக உண்டாக்கப்பட்டிருக்கிற 1890-ம் ஹுத்து 11-வது ஆக்ட் (Prevention of cruelty to Animals Act) ப்படி பிராது செய் யவேண்டியது.

ஆயுதம் ஆக்ட்டு (Arms Act) 1878-ம் வருஷத்திய 11-வது ஆக்ட்டு 33-வது பிரிவுப்படி பிறுது செய்ய வேண்டியது.

சென்னப்பட்டணம் 1859-ம் வருஷத்து 25-வது ஆக்டாகிய மதருஸ் போலீஸ் ஆக்ட்டு (Madras Police Act). 53-வது பிரிவுப்படி பிறுது கொடுத்து மேல் நடத்தவேண்டியது.

1861-ம் வருஷத்து 5-வது ஆக்டாகிய போ லீஸ் ஆக்ட்டு 42-வது பிரிவுப்படி பிறுது செய்ய வேண்டியது.

1878ம் வருஷத்து 8வது ஆக்டாகிய ஸீகஸ்டம்ஸ் (Sea Customs Act) 198வது பிரிவுப்படி பிருது செய்ய வேண்டியது.

வ:—கி. பு. கோடு 195-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிற குற்றத்தை ஒரு கேசில் ஸம்மந்தப்பட்ட கக்ஷிக்காரன் அல்லது சாக்ஷிக்காரர்கள் செய்ததற்காக அவர்களை பிராஸிகியூஷன் செய்ய ஸாங்கிஷன் கேழ்க்க காலாவதியில்லை. ஆனால் எந்தக் கேசின் ஸம்மந்தமாக அந்தக் குற்றச்செய்கைகள் செய்யப்பட்டதோ, அந்தக் கேசு முடிந்த உடன் கூடிய சீக்கிரத்தில் ஸாங்கிஷன் மனு தாக்கல் செய்வது நலம்.

மு-ஜ:—கி. பு. கோடு 195-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிற குற்றச் செய்கைகள் எவை?

வ:—இ. பி. கோடு 172-வது பிரிவு முதல் 188-வது பிரிவு முடிய அதாவது (172, 173, 174, 175, 176, 177, 178, 179, 180, 181, 182, 183, 184, 185, 186, 187, 188).

பே-மி:—இந்த இ. பி. கோடு ஒவ்வொரு பிரிவும் இன்னின்ன விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறதென்ற விபரத்தை அறிய விரும்புகிறோம்.

வ:—மேலே கண்ட பிரிவுகளெல்லாம் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய அதிகாரத்தை மீறி நடப்பதைப்பற்றிச் சொல்லுகின்றன. அவைகள் ஒவ்வொன்றையும் இன்னின்னதென்று இதோ விவரித்துச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

இ. பி. கோடு 172-வது பிரிவு என்பது ஒருவன் பேருக்குப் பிறந்திருக்கிற ஸம்மன் அல்லது நோட்டீஸ், அல்லது உத்தரவை, ஷை யானுக்குச் செலுத்துவதற்காகக் கொண்டுபோகும் போது, ஷை ஸம்மன், அல்லது நோட்டீசு, அல்லது உத்தரவைத் தனக்குச் செலுத்த ஒட்டாமல் செய்யும் பொருட்டு, ஒளிந்து கொள்ளுவதென்னும் குற்றம் தான்.

மு-ஜ:—அப்படி ஒளிந்து கொண்டதாக ருஜுவானால் என்ன நடக்கும்?

வ:—அப்படிச் செய்கிறவனுக்கு ஒரு மாஸம் வெறுங்காவலாவது, அல்லது ரூ 500 அபராதமாவது அல்லது ஷை தண்டனை இரண்டும் சேர்ந்தாவது விதிக்கலாம்.

மு-ஜ:—இ. பி. கோடு 173-வது பிரிவென்பது, என்ன?

வ:—இ. பி. கோடு 173வது பிரிவென்பது, தன் பேருக்காவது! அல்லது வேறொருவர் பேருக்காவது பிறந்த ஸம்மன், அல்லது நோட்டீஸ் அல்லது உத்தரவை, தனக்கு அல்லது வேறொருவருக்குச் செலுத்த வொட்டாமல் தடுப்பது (2) அல்லது மேற் கண்ட ரிக்கார்டுகளில் எதையாவது, எந்த இடத்திலும் ஒட்டவிடாமல் தடுப்பது, (3) அல்லது ஷை ரிக்கார்டுகளில் எதையாவது, ஒட்டியிருப்பதை கிழித்து எறிவது (4) அல்லது ஒரு நோட்டீஸ் அல்லது உத்தரவை விளம்பரம் செய்ய வொட்டாமல் தடுப்பதுதான்.

பே-மி.—இதற்குத் தண்டனை என்ன?

வ:—முன் மேலே இ. பி. கோடு 172-வது பிரிவுக்கு என்ன தண்டனை சொலலப் பட்டிருக் கிறதோ அதே தண்டனைதான் இந்தக் குற்றத்திற்கும்.

மு-ஜ:—இ. பி. கோடு 174-வது பிரிவென்பது என்ன?

வ:—ஒருவன் ஒரு ஸர்க்கார் உத்தியோகஸ்தனால் தன் பெயருக்கு பிறப்பிவிக்கப்பட்ட ஸம்மன், நோட்டீஸ், உத்தரவு, அல்லது இஸ்தியார் பிரகாரம், ஷை ரிகார்டுகளில் குறிபிடப்பட்டிருக்கும், தினத்திலும், இடத்திலும், நேரத்திலும் வேணு மென்று ஆஜராகாம லிருந்தாலும், அல்லது ஆஜராய்விட்டு அந்த ஸர்க்கார் உத்தியோகஸ் தருடைய அனுமதி யில்லாமலேயே அந்த இடத்தை விட்டுப் போய்விட்டாலும், அல்லது ஷை உத்தியோகஸ்தர் பின்வாயிதாக்களில் ஆஜராகும்படி சொன்ன தேதியிலும், இடத்திலும் ஆஜராகாம லிருந்தாலும், அப்படிப்பட்ட நபர் இ. பி கோடு 174 வது பிரிவுப்படிக் குள்ள குற்றத்தைச் செய்தவனாகிறான்

பே-மி:—இதற்குத் தண்டனை எனன?

வ:—முன்பிரிவு களுக்குச் சொல்லப்பட்ட தண்டனை தான் இந்தக் குற்றத்திற்கும்.

மு-ஜ:—இ. பி கோடு 175 வது பிரிவென்பதென்ன?

வ:—ஒரு தஸ்தாவேஜு அல்லது வேறு எந்தவஸ்துவையாவது கொண்டுபோய் ஆஜர் செய்ய கடமைப்பட்ட ஒருவன், ஒரு ஸர்க்கார் உத்தியோகஸ் தருடைய உத்திரவின்படி ஷை ரிகார்டு அல்லது வஸ்துவைக் குறிப்பிட்ட இடத்திலும், தினத்திலும் நேரத்திலும் கொண்டுபோய் (மனதார) ஆஜர் செய்யத் தவறினால், அப்படிப்பட்டவன் இ. பி. கோடு 175-வது பிரிவுப்படிக்குள்ள குற்றத்தை செய்யத்தவறுகிறான்.

பே-மி:—அதற்குத் தண்டனை எவ்வளவு?

வ:—மேலே முன்பிரிவுகளுக்குச் சொல்லப்பட்ட தண்டனைதான் இந்தக் குற்றத்திற்கும்.

மு-ஜ:—இ. பி. கோடு 176-வது பிரிவென்பதென்ன?

வ:—ஒரு குற்றச்செய்கை முதலிய விஷயங்களைப்பற்றி ஸர்க்கார் உத்தியோகஸ்தருக்குத் தகவல் கொடுக்க

வேண்டிய ஒருவன், அதாவது கடமைப்பட்ட ஒருவன், அவ்விதம், வேணுமென்று தெரியப் படுத்தாமலிருந்து விட்டால், அது இ. பி. கோடு 176-வது பிரிவுப்படி குற்றமாகிறது.

பே-மி:—அதற்குத் தண்டனை என்ன?

வ:—முன் பிரிவுகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனை தான் இதற்கும்.

மு-ஜ:—ஸர்க்கார் உத்தியோகஸ்தர் களுக்கு, என்னென்ன விஷயங்களைப்பற்றி யார், யார் தெரிவிக்க கடமை பட்டிருக்கிறார்கள்.

வ:—கி. பு. கோடு 45வது பிரிவில் இந்த விஷயம் துலங்கும். அவைகளை அடியில் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஒவ்வொரு கிராமப் பெரிதனக்காரனும் கிராமக் கணக்கனும், கிராமக்காவல் காரனும், கிராமப் போலீஸ் உத்தியோகஸ்தனும் ஒரு நிலத்துக்கு சொந்தக்காரன், அல்லது ஷை நிலத்தை அனுபவிப்பவனும் அல்லது ஷை சொந்தக்காரர் அல்லது அனுபோகதாருடைய காரியஸ்தனும், ஸர்க்காருக்காகத் தீர்வைவசூல் செய்பவரும், அல்லது ஷை ஊரிலிருக்கும் கோர்ட் ஆப் வார்ட்ஸ் (Court of wards) உத்தியோகஸ்தரும் சில விஷயங்களைப் பற்றித்தெரிவிக்க கடமை பட்டிருக்கிறார்கள்.

பே-மி:—அப்படி அவர்கள் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிற விஷயங்கள் இன்னின்ன தென்று அறிய விரும்புகிறோம்.

வ:—அப்படித் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிற விஷயங்கள் இன்னின்ன தென்பதைப் பற்றி கீழே விபரமாகத் தெரிவிக்கிறேன், கவனமாய்க் கேளுங்கள். (1) மேலே சொல்லப்பட்ட வர்கள் இருக்கும் ஊரில் வழக்கமாக திருட்டுச் சொத்தை வாங்குகிறவன் அல்லது விற்கிறவன் சாசுவதமாகவாவது அல்லது தற்பொழுதுக் காவது அந்த இடகதில் வசித்தால் அந்த சங்கதியையும் (2) தந்தித்திருடன் கொள்ளை செய்பவன், காவல் தண்டனையிலிருந்து ஓடிவந்து விட்டவன் குற்றம் செய்துவிட்டு ஒளிந்து கொண்டிருப்பவன் இவர்கள் மேல் கண்டவர்களுடைய கிறுமத்துக்கு வந்தாலும் அந்தவழி சென்றாலும் அதைப்பற்றியும். (3) ஷை கிறுமத்திலாவது அல்லது ஷை கிறுமத்து அருகான்மை யிலாவது ஜாமீன் பேரில் விடக்கூடாத ஒரு குற்றத்தையோ அல்லது இ. பி. கோடு 143, 144, 145, 147, அல்லது 148-வது பிரிவின்படிக் குள்ளகுற்றச் செய்கையை செய்ய நினைத்தாலும் அல்லது செய்து விட்டாலும் அவைகளைப் பற்றியும் (4) ஷை கிறுமத்திலாவது அல்லது ஷை கிறுமத்துக்கு அருகான்மையிலாவது திடீலென்றாவது அல்லது சுபாவத்துக்கு விரோதமாகவும் அல்லது சந்தேகாஸ்பதமான மறணங்கள் ஏதும் நேரிட்டால் அதைப்பற்றியும் (5) ஷை கிறுமத்துக்குச் சமீபமாய் ஆனால் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியில், பிரட்டிஷ் இந்தியாவில், நடந்தால் இ. பி. கோடு 302, 304, 382, 392, 393, 394, 395, 396, 397, 398, 399, 402, 435, 436, 449, 450, 457, 458, 459, 460, இந்தபிரிவுகளின்படி குற்றமாக்கக் கூடிய செய்கைகள் எதையும் எவனும் செய்தாலும் அல்லது செய்ய நினைத்தாலும் அதைப்பற்றியும் (6) சீமை சமாதானத்துக்கு விரோதமாகச் செய்யப்படும் செய்கையைப் பற்றியும், குற்றச் செய்கைகளைத் தடுப்பதற்குண்டான ஏற்பாடுகளைப் பற்றியும் ஒரு மனிதன் அல்லது சொத்தைக் குறித்து நடக்கும் விஷயங்களைக் குறித்து டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டு தெரிவிக்கும்படி உத்திரவு செய்திருக்கும் விஷயத்திலும் மேலே கண்டவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர் களுக்குத் தெரிவிக்க கடமைப் பட்டிருக் கிறார்கள்.

பே-மி:—அப்படிச் செய்யத் தவறினால் என்ன தண்டனை?

வ:—மேல்கண்ட குற்றச் செய்கைகளுக்கு சொன்ன தண்டனைதான்.

மு-ஜ:—இ. பி. கோடு 177-வது பிறிவில் கண்ட விஷயமென்ன?

வ:—மேலே கண்டபடி எந்தவிஷயத்தைப் பற்றியும் தெரிவிக்க கடமைப் பட்டவர்கள் பொய்யானசங்கதிகளைத் தெரிவித்தால் அது இ. பி. கோடு 177 வது பிரிவின்படிக்குள்ள குற்றமாகும்.

பே-மி:—இதற்குத் தண்டனை என்ன?

வ:—ஆறுமாதம் காவல் தண்டனையாவது அல்லது ஆயிரம் ரூபாய் அபறுதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கலாம்.

மு-ஜ:—முன் கி. பு கோடு 203, 204, 245, 247, 253, 258, இந்தப் பிரிவுகளின்படி தள்ளுபடி செய்யப்பட்ட பிராதுகளின் பேரில் மேல் பரிசோதனை (Revision) மனுதாக்கல் செய்ய காலாவதி இல்லையென்று சொன்னீர்கள். கி. பு. கோடு 245 வது பிரிவைத் தவிர மற்றப்பிரிவுகளின் விஷயம் இன்னதென்று சொன்னீர்கள் கி. பு. கோடு 245 வது பிரிவின் சங்கதி என்ன?

வ:—கி. பு. கோடு 245வது பிரிவில் ஸம்மன்ஸ் கேசுகளில் விசாரணை முடிவான தின்பேரில், ருஜுவாகாவிட்டால் எதிரியை விடுதலை செய்வதையும், குற்றம் ருஜுவானால் தண்டனை செய்வதையும் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. அப்படி செய்யப்படுகிற விடுதலையின் பேரில் ரிவிஷன் மனுதாக்கல் செய்யக் காலாவதியில்லை.

பே-மி :—இ. பி. கோடு 178-வது பிரிவில் கண்ட விஷயம் என்ன ?

வ :—யாதாமொருவன் ஒரு நியாயஸ்தலத்தின் முன் சாக்ஷியாக விசாரிக்கப்படும்பொழுது ஷை கோர்ட்டார் செய்யச் சொல்லும் பிரமாணத் தினபேரில் அல்லது உறுதி மொழியின்பேரில் சொல்லமாட்டேன் என்று சொல்லும் குற்றம்.

பே-மி :—இதற்கு தண்டனை என்ன ?

வ :—ஆறுமாத வெறுங் காவல் தண்டனையாவது, அல்லது ரூ. 1000-வரை அபராததண்டனையாவது அல்லது இரண்டுமாவது கொடுக்கலாம்.

மு-ஜ :—இ. பி. கோடு 179-வது பிரிவில் எதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது?

வ:—யாதா மொருவன் எந்த சங்கதியைப்பற்றியாவது தனக்கு தெரிந்ததை உண்மையாகச் சொல்வதாக ஒரு ஸர்க்கார் அதிகாரிமுன் பிரமாணம் செய்துவிட்டு அப்பால் கேழ்கும் கேழ்விகளுக்கு ஜவாப் சொல்லமாட்டேனென்று சொல்லுங் குற்றம்.

மு-ஜ :—இந்தக் குற்றத்திற்கு என்ன தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது ?

வ:—ஆறுமாதம் வெறுங்காவல் தண்டனையாவது 1000 ரூ வரை அபாாதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கலாம்.

பே-மி :—இ. பி. கோடு 180-வதுபிரிவில் எதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது ?

வ:—யாதாமொருவன் தான் கொடுத்த வாக்குமூலம் அல்லது ஸ்டேட்டுமெண்டில் கையெழுத்துப் போடும்படி சொல்லப்பட்டபொழுது அப்படி கையெழுத்துப்போட மாட்டேனென்று சொல்லும் குற்றம்.

பே-மி :—இதற்கு விதிக்கப் படக்கூடிய தண்டனை என்ன?

வ :—மூன்று மாத வெருங்காவல் தண்டனையாவது 500 ரூ வரை அபாாத தண்டனையாவது அல்லது இரண்டுமாவது விதிக்கலாம்.

மு-ஜ :—இ. பி. கோடு 181-வது பிரிவு எதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது?

வ :—சட்டப்படி பிரமாணம் செய்து வைக்க அதிகாரமுள்ள ஒரு ஸர்க்கார் உத்தியோகஸ்தரிடம், உண்மையைச் சொல்வதாகப் பிரமாணம்செய்து விட்டு உண்மையைச் சொல்லாமல், பொய்யான வாக்குமூலம் கொடுக்கும் குற்றம்.

பே-மி :—இந்தக் குற்றத்திற்கு விதிக்கப்படக் கூடிய தண்டனை என்ன ?

வ :—இந்த குற்றத்திற்கு-3-வருஷங்கள் வரை இருவகைக்காவலில் எதிலாவது வைக்கலாம், அபாரதமும் போடலாம்.

மு-ஜ :—இ. பி. கோடு 182-வது பிரிவுஎதைப் பற்றிச் சொல்லுகிறது.

வ :—மற்றொருவனுக்குக் கெடுதலை உண்டு பண்ணவேண்டு மென்ற நோக்கத்துடன்ஒரு ஸர்க்கார் உத்தியோகஸ்தரிடம் பொய்யான சங்கதியைத் தெரியப்படுத்தி, அந்த ஸர்க்கார் உத்தியோகஸ்தர், செய்யவேண்டிய சங்கதியை செய்யாமலிருக்கும்படிக்காவது, அந்தப் பொய்யான சங்கதியைக் தெரிவித்திரா விட்டால் செய்யா மலிருக்கக் கூடிய சங்கதியைச் செய்யும் படிக்காவது செய்வதென்னுங் குற்றம்.

மு-ஜ :—இந்தக் குற்றத்திற்கு என்ன தண்டனை விதிக்கக் கூடும்.

வ :—6 மாத காலம் வரை இருவகைக்காவலில் எதிலாவதுவைக்கும் படிக்காவது அல்லது 1000ரூ வரை அபாாதம் போடவாவது அல்லது இரெண்டு தண்டனையும் விதிக்கவாவது செய்யலாம்.

பே-மி :—இ. பி. கோடு 183-வது பிரிவில் எதைப்பற்றிச் சொல்லி யிருக்கிறது.

வ .—சட்டப்படிக்கு அதிகார முள்ள ஒரு ஸர்க்கார் உத்தியோகஸ்தன் வந்து, ஒருவனுடைய சொத்தை ஜப்தி செய்யும் பொழுது அப்படி ஜப்தி செய்யாமலிருக்கும்படி தடுப்ப தென்னும் குற்றம்..

பே-மி :—இதற்கு என்ன தண்டனை விதிக்கலாம் ?

வ :—இந்தக் குற்றத்திற்கு ஆறுமாதம்வரை இருவகை காவலிலெதிலாவது வைக்கவாவது அல்லது 1000 ரூ வரை அபராதம் போடவாவது அல்லது இரண்டு தெண்டனையும் விதிக்கவாவது செய்யலாம்.

மு-ஜ :—இ. பி. கோடு 184-வது பிரிவு எதைப்பற்றிச் சொல்லுகிறது?

வ :—சட்டப்படி அதிகாரமுள்ள ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தனால் ஒரு சொத்து ஏலம் போடப்படும் பொழுது, அந்த ஏலத்தை நடத்தவொட்டாமல் தடுப்பதென்னும் குற்றம்.

மு-ஜ :—இந்தக் குற்றத்துக்கு விதிக்கக் கூடிய தெண்டனை என்ன ?

வ :—ஒரு மாதத்துக்கு இருவகைக் காவலில் எதிலாவது வைக்கும்படிக்காவது அல்லது 500 ரூ வரை அபாாதம் விதிக்கவாவது அல்லது இந்த இரெண்டு தண்டனையும், விதிக்கவாவது செய்யலாம்.

பே-மி :—இ. பி. கோடு 185-வது பிரிவு எதைப்பற்றிச் சொல்லுகிறது?

வ :—சட்டப்படி அதிகாரமுள்ள ஒருஸர்க்கார் உத்தியோகஸ்தனால் நடத்தப்படும் ஏலத்திலாவது, தானாவது மற்ற யாதாமொருவனாவது, ஷை ஏலத்தில் கேழ்க்க சட்டப்படி தடைப்பட்டிருக்கும் பொழுது, தனக்காகவாவது, அந்த மற்ற யாதா மொருவருக்காவது, ஏலத்தில் அந்த சொத்தை எடுப்பது, அல்லது எந்த நிபந்தனைகளின் பேரில் அந்த ஏலம் கேழ்க்கவேண்டுமென்றிருக்கிறதோ அந்த நிபந்தனைகளின்படி நடக்க வேண்டியதில்லை என்ற எண்ணத்துடன் ஷை ஏலத்தில் எடுப்பது, என்னுங்குற்றம்.

(இன்னும் வரும்.)

MISCELLANEOUS SUITS.

நாநாவிதமான வியாஜ்ஜியங்கள்.

தன்னுடைய பெண்சாதியால் செய்யப்பட்ட ஸிவில் குற்றங்களுக்கு புருஷனுடைய பொறுப்பு.

நெ. 18.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ப்ரே.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹாரிட்ஜ்.

கோல V. டீ. ட்ராபோர்ட்டு

புளூம்ஸ்பரி கௌண்டி கோர்ட்டு ஜட்ஜியாகிய ப்ரே என்பவர் செய்த தீர்ப்பின்பேரில் கொண்டுவரப்பட்ட இந்த அப்பீலில் தன்னுடைய பெண்சாதியால் ஏற்பட்ட ஸிவில் குற்றங்களுக்குப் புருஷனுடைய பொறுப்பு எவ்வளவு என்ற விஷயம் தாவா செய்யப்பட்டது. லேடி டீ. ட்ராபோர்ட் என்பவளால் (வாதியை) மோடார் வண்டி ஓட்டுபவனாக நியமிக்கப்பட்டிருந்ததில் மோடார் வண்டி நிறுத்தப்படு மிடத்தின் பழுதான நிலமையால் அவனுக்கு கெடுதியேற்பட்டது. அவன் லேடி டீ. ட்ராபோர்டு பேரிலும் அவளுடைய புருஷன்பேரிலும் சேர்த்து நஷ்டத்திற்காக வியாச்சியங் கொண்டு வந்தான். ஜூரி (Jury) அவனுக்கு 100 பவுன் நஷ்டம் கொடுத்தார்கள். அதன்பேரில் கௌண்டி கோர்ட்டு ஜட்ஜி, புருஷனாகிய ஸர் ஹம்பரி டீ. ட்ராபோர்டு பக்கம் தீர்ப்பு செய்து நஷ்டம் ஜாஸ்தியென்ற காரணத்தின்பேரில் பெண்சாதியின் பேரிலுள்ள தாவா வைப்புனர் விசாரணை செய்யும்படியாகவும் உத்தரவு செய்தார். இப்பொழுது வாதியால் அப்பீல் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்பீல வாதிக்காக மிஸ்டர் ஹால்டின். கேஸியும், மிஸ்டர் ஸி.டி. வில்லியம்ஸனும், ஸர் ஹம்ப்ரி டீ. ட்ராபோர்டுக்காக மிஸ்டர் ஏ.இ. உட்கேட்டும், லேடி டீ. ட்ராபோர்டுக்காக மிஸ்டர் பேரெக்கும் ஆஜரானார்கள்.

(1) புருஷனாகிய பிரதிவாதியின் பேரில் யாதொருகேசுமில்லை யென்று கௌண்டி கோர்ட்டு ஜட்ஜி தீர்மானித்தது சட்டப்படி பிசகான தென்றும் (2) ஜூரியால் கொடுக்கப்பட்ட நஷ்டி ஜாஸ்தியான தென்று அவர் தீர்மானித்தது சட்டப்படி தவறென்றும் இரண்டு முகாந்தரங்களின் பேரில் அப்பீல் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

பிந்திய முகாந்தரத்தை முதலில் எடுத்துக்கொண்டு நஷ்டி ஜாஸ்தியென்று தீமானித்திருப்பது தாவாச் செய்யக்கூடிய தீர்மானம் என்று மிஸ்டர் ஹால்டின் எடுத்துச் சொன்னார். கௌண்டி கோர்ட்டு ஜட்ஜியால் விஷய சம்பந்தமாய்ச் செய்யப்பட்ட தீர்மானத்தின் பேரில் அப்பீல் செய்யத்தக்கதில்லை யென்றும் நஷ்டி ஜாஸ்தி என்று தீர்மானித்திருப்பது ஜட்ஜியின் அபிப்பிராயத்தை வெளியிட்டதாகமட்டும் எடுத்துக்கொள்ளவேண்டு மென்றம் அது தாவாச் செய்யத்தகாததல்ல வென்றும் அவர் சொன்னார். தாவாச் செய்ய முடியாமலிருப்பதற்குத் தீர்மானம் முற்றிலும் விஷய சம்பந்தமாயிருக்க வேண்டும். எந்தசரியான ஜூரியாலும் அவ்வளவு நஷ்டி கொடுக்கப்பட்டிருக்க முடியாது என்கிற அபிப்பிராயம் அபிப்பிராயத்தைத் தவிர வேறொன்றுமில்லை. அது சுத்த விஷய சம்பந்தமான தீர்மானமாக மாட்டாது.

ஹெர்பர்ட்டு என்பவருக்கும் பாக்ஸ் என்பவருக்கும் நடந்து 32 டைம்ஸ் லாரிப்போர்ட்டு 261-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசையும் ப்ரௌன் என்பவருக்கும் பீன் என்பவருக்கும் நடந்து 1910-ம் ஹூ A. C. 373-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசையும், ஹோ என்பவருக்கும் L & N. W. ரெயில்வே கம்பெனிக்கும் நடந்து 1892-ம் ஹூ 1 Q.B. 3918-ல் பிரசுரிக்கப்பட்ட கேசில் செய்யப்பட்ட தீர்மானத்திலிருந்து தான் விடுவிக்கப்பட்டதற்கு ஆதாரமாக எடுத்துச்சொன்னார்.

மற்ற அம்சம் விஷயமாய், தன்னுடைய பெண்சாதியால் ஏற்பட்ட ஸிவில் குற்றங்களுக்குப் புருஷன் ஜவாப்தாரியானவன். இந்த கேசிலுள்ள புருஷன் பேரில் கௌண்டி கோர்ட்டு ஜட்ஜி தீர்ப்புச்செய்திருக்கவேண்டும். (எர்ல் என்பவருக்கும் கிங்ஸ் கோர்ட்டு என்பவருக்கும் நடந்து 1900-ம் ஹூ Ch. 91-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசு; 16 டைம்ஸ் லா ரிபோர்ட்டு 511-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசு). ஸர் ஹம்ப்ரி டீ. ட்ராபோர்டுக்காக மிஸ்டர் உட் கேட்டு, பெண்சாதியால் ஏற்பட்ட ஸிவில் குற்றங்கள் ஒப்பந்தத்தின் பேரில் உண்டானதாயில்லாமல் சுத்த ஸிவில் குற்றங்கள் என்று சொல்லப்பட்டவைகளா யிருந்தால் மட்டும் புருஷனுக்குப் பொருப்பு ஏற்படுமென்று சொன்னார். லிவர்பூல்வகையரா அஸோஸியேஷனுக்கும் பேர்ஹாஸ்டுக்கும் நடந்து 9 Ex. 422-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசு.

தீர்ப்பு.

அகஸ்மாத்தான சம்பவத்தின் காரணமாக இந்தத் தாவா ஏற்பட்டதென்று ஜஸ்டிஸ் ப்ரே சொன்னார்.

வாதி, லேடி டீ. ட்ராபோர்டு என்பவளால் மோட்டார்வண்டி ஓட்டுகிறவனாக நியமிக்கப்பட்டான். அவனுடைய மோட்டார் வண்டிநிற்குமிடம் பழுது பார்க்கப்படாமலிருந்ததால் வாதிக்குத் தேகக்காயங்களேற்பட்டது. வியாச்சியம் ஒரு ஜூரியின் முன்பாக விசாரணைக்கு வந்தது. புருஷன்பேரில் யாதொரு வியாஜ்ஜியமூலமுமில்லையென்றும் ஜூரி, பெண்சாதியின் பேரில் 100 பவுன் நஷ்டிக்காகக் கொடுத்ததின் பேரில் அவள் புனர் விசாரணை செய்ய வேண்டுமென்று மனுக்கொடுத்ததில் எந்தச் சரியான மனிதர்களும் அவ்விதம் தீர்மானித்திருக்க முடியாது என்ற காரணத்தால் புனர்விசாரணை மனுவை அங்கீகரித்தும் கௌண்டி கோர்ட்டு ஜட்ஜி தீர்ப்புச் செய்தார். புனர்விசாரணை விஷயமான சங்கதி சம்பந்தப்பட்டமட்டில் புனர்விசாரணைக்கு உத்தரவு செய்த கௌண்டி கோர்ட்டு ஜட்ஜி ஆர்டரின் பேரில் எந்த சந்தர்ப்பங்களில் அப்பீலுண்டென்ற விஷயம் ஹோ என்பவருக்கும் L. & N.W. ரெயில்வே கம்பெனிசகும் நடந்த 1892-ம் ௵த்து I. Q. B. 391-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசில் ஆலோசிக்கப்பட்டிருந்தது. அந்தக்கேசு (இந்தக்) கோர்ட்டைக் கட்டுப்படுத்தக்கூடியது. ஜூரியின் அபிப்பிராயம் சாக்ஷியத்தின் பலத்திற்கு விரோதமாயிருந்ததென்ற காரணத்தின் பேரில் புனர் விசாரணைக்கு உத்தரவு செய்வதற்கு நஷ்டி அதிகமாகயிருக்கிறதென்ற காரணத்தின்பேரில் புனர்விசாரணைக்கு உத்தரவு செய்வதற்கும் யாதொரு வித்தியாசமும் ஏற்படக் கூடியதில்லை) தன்னுடைய அபிப்பிராயத்தில் கௌண்டி கோர்ட்டு ஜட்ஜி சரியான விதியை அனுசரித்தார். அவருடைய தீர்மானம் ஆக்ஷேபணைக்கி இடந்தருவதன்று.

ஆதாரமாகச் சொல்லப்பட்ட ஹெர்பர்ட்டு என்பவருக்கும் பாக்ஸ் என்பவருக்கும் நடந்த கேசில் லார்ட் அட்கின்ஸன் என்பவரால் சொல்லப்பட்ட விதி இந்தக் கேஸைப் பாதிக்க வில்லை. ஆக்ஷேபிக்கப்படாமலிருப்பதற்கு கௌண்டிகோர்ட்டு ஜட்ஜியின் தீர்மானம் சுத்த விஷய சம்பந்தமாயிருக்க வேண்டுமென்று மட்டும் அது சொல்லுகிறது. ஆகையால் [illegible]க் காரணத்தின்பேரில் செய்யப்பட்ட அப்பீல் தள்ளுபடியாக வேண்டியது.

புருஷன் கட்டுப்பட்டவனா என்கிற மற்றொரு விஷயம் கடினமானது எர்ல் என்பவனுக்கும் கிங்ஸ்கோட்டு என்பவனுக்கும் நடந்த 1900-ம் ௵த்தில் 2 Ch. 504 வது பக்கத்திலும் 16- டைம்ஸ் லா ரிப்போர்ட்டு 512-லும் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசில் பெண்சாதியின் ஸிவில் குற்றங்களுக்கும் புருஷனுக்குமுள்ள சம்பந்தம் ஆலோசிக்கப்பட்டது. அதில் லார்ட் ஜஸ்டிஸ் காலின்ஸ் சொன்னதாவது- தன் பெண்சாதியால் ஏற்பட்ட ஸிவில் குற்றங்களுக்குப் புருஷன் ஷெயார்கள் ஸ்திரி புருஷர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் ஜவாப்தாரியாயிருக்கிறான். ஆனால் ஸிவில் குற்றத்தை ஒப்பந்தத்திலிருந்து பிரிக்க முடியாமல் ஒப்பந்தத் தோடு சேர்ந்ததாயிருந்தால் அவன் ஜவாப்தாரியில்லை. இந்தக்கேசில் வியாச்சிய மூலம் பெண்சாதியின் ஒப்பந்தத்தின்படி செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாததால் ஏற்பட்டது. அது அந்த ஒப்பந்தத்தின் மூலமாய் மட்டும் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தைத் தவிர வேறுவிதத்தில் மோட்டார் வண்டி நிற்கிற இடத்தில் (வாதி) பிரவேசிக்கவேண்டிய பிரமேயம் யாதொன்றும் கிடையாது. வியாச்சிய மூலத்தின் சாரம் அவ்விதமான பிரமேயம். அது தொடர்ச்சியாயிருந்து கொண்டிருக்கும் ஒப்பந்தத்தின் மூலமாய் உண்டாகி துயர்ச்சியான் கடமையை யேற்படுத்தும் தொடர்ச்சியான பிரமேயம். இந்தக் கேசில் ஏற்பட்ட கெடுதி, ஒப்பந்தத்தைச் சாராதது அல்ல, ஆகையால் புருஷன் ஜவாப்தாரியாக மாட்டான். இந்தக் காரணத்தின் பேரிலும் அப்பீல் தள்ளுபடியாக வேண்டியது.

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹாரிட்ஜ் ஆமோதித்தார். முதல் அம்சம் விஷயமாக ஹோ என்பவருக்கும் L. &, N. W. ரெயில்வே கம்பெனிக்கும் நடந்த கேசின் தீர்மானத்திற்குத் தாங்கள் கட்டுப்பட்டிருப்பதாக அவர் சொன்னார். இரண்டாவது அம்சம் விஷயமாய், வியாச்சியம் எஜமானன் வேலைக்காரன் என்ற சம்பந்தத்தின் பேரில் ஏற்பட்டதென்றும் வாதிக்கும் லேடி டீ ட்ராபோர்டு என்பவளுக்குமுள்ள ஒப்பந்தத்தை முற்றிலும் பொறுத்ததாயிருக்கிறதென்றும் அவர் சொன்னார். ஒப்பந்தத்தால் ஏற்பட்டகடமையைத் தன் பெண்சாதி நிறைவேற்றாததால் ஏற்பட்ட தவறுதலுக்குப் புருஷன் ஜவாப்தாரியாவானா என்கிற விஷயம் ஏர்ல் என்பவருக்கும் கிங்ஸ்கோட்டு என்பவருக்கும் நடந்த கேசிலும் லிவர்பூல் வகையரா அஸோஸியேஷனுக்கும் பேர் ஹர்ஸ்ட் என்பவருக்கும் நடந்த கேசிலும் சர்ச்சை செய்யப்பட்டு பாரன் ஆல்டர்ஸனால் 9 Ex. 427-ல் சொல்லப்பட்ட விதியேற்படுத்தப்பட்டது. புருஷனைக் கட்டுப்படுத்துவதற்கு ஸிவில் குற்றம் சுத்தஸிவில் குற்றமாகவும் ஒப்பந்தத்திற்கு எவ்விதத்திலும் சம்பந்தப்படாததாயுமிருக்கவேண்டும். இந்தக்கேசில்வியாச்சியமூலம்முழுவதும் நியமுக ஒப்பந்தத்தைப் பொறுத்ததாயிருக்கிறதுடன் தாவா அதிலிருந்தும் வேறுபிரிக்க முடியாதபடி சம்பந்தப்பட்டதாயிருக்கிறது.

ஆகையால் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டு அப்பீல் செய்ய அனுமதி கொடுக்கப்படவில்லை.

VILLAGE SHEET.

கிராம ஜனங்களுடைய பக்கம்.

சர்க்கார் ஜலம் பாய்வது சம்பந்தமாய் ஓர் முக்கியமான தீர்ப்பு.

(1917-௵ மே௴ சஞ்சிகை முதல்பாகம் 80-வது பக்கத் தொடர்ச்சி.)

ராஜா ராமசந்திர அப்பாராவுக்கும் இந்திய மந்திரி அவர்களுக்கும் நடந்த இ.லா.ரி. 35 ம 197-ல் பிறசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசில் ஜஸ்டிஸ் சங்கரநாயரும் அதே அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார். "நீர்ப் பாய்ச்சலானது" அந்த நிலத்திலிருந்த பயிர்களுக்கு அனுகூலமாய் இருந்ததென்று தீர்மானிப்பதானது நிலத்தில் பயிர் இருக்கும்போதே செய்யவேண்டுமென்றும் நிலத்தில் இருந்த மாசூல் அறுவடையான பிறகு ஷை விஷயத்தைப்பற்றி விசாரணை செய்வது சட்டத்தினால் கருதப்படவில்லையென்றும் ஷை பிரிவு 1. (b) யினால் அவர் சொல்லுகிறார். ஆகையால் தீர்மானத்துக்காக கேழ்விகளை அனுப்பின கற்றறிந்த ஜட்ஜிகள் ஷை பிரிவின் மூலமாய் கலெக்டருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற யுக்தமானது (discretion) நியாய சம்பந்தமானதென்று அபிப்பிராயப்படுவது பிசகென்று நினைக்கிறேன். அவர் நீர்ப்பாய்ச்சலானது அனுகூலமானதுதானென்று அபிப்பிராயப்படுவதற்கு காரணம் எதுவாயிருந்தாலுமே சரி, அந்த அபிப்பிராயப்படுவதற்குள்ள முகாந்தரங்கள் இருப்பதாக சமாதானம் அவரே செய்துகொள்ளுகிறார். அது அப்படியாகில் ஆக்ட்டுப்படி சர்டிபிகேட் அவசியமில்லை. ஆகையால் இந்த கேழ்விக்கும் இல்லையென்ற பதிலைத்தான் சொல்லவேண்டும். இந்த அபிப்பிராயத்தினால் 2, 3-வது கேழ்விகளை யோசிக்கிறது அனாவசியமாக இருக்கிறது. 'கசிவினால் நீர்ப்பாய்ச்சல்' என்ற பதமானது பூமியில் ஊறின தண்ணீரை மரங்களின் வேர்கள் குடிக்கிறதானகேசுகளுக்கும் சம்மந்தப்படுமா யென்ற விஷயத்தைப்பற்றிய 4-வது கேசு சம்பந்தமாய் மிகவும் விஸ்தாரமாகப் பேசப்பட்டது. அப்பீல் பிரதிவாதி பக்கம் ஆஜரான கற்றறிந்த வக்கீல் கசிவினால் நீர்ப்பாய்ச்சுவதென்பது தண்ணீர்ப் பாய்ச்சப்பட்ட நிலத்துக்கு அடியில் கூடின தண்ணீர் பாய்வதற்குச் சம்பந்தப்படமாட்டாது என்று வாதிக்கிறார். இருந்தாலும் இந்த இரண்டு வார்த்தைகளைப்பற்றி ஆக்டில் தெளிவாய்ச் சொல்லப்படாததால் அவைகளின் அர்த்தத்தைப்பற்றி அகராதியைப் பார்த்ததில் "நீர்ப் பாய்ச்சுவது" என்பதற்கு ஈரத்தை உண்டாக்குவது, நனைவு, ஈரமாக்குவது என்று சொல்லப்பட்டிருக்கிறது (1) அதன்மேரில் ஓடுகிற வாய்க்கால் அல்லது நீரோட்டத்தின் மூலமாய் ஷை நிலத்துக்கு தண்ணீர் சவுதரிப்பது என்றும் (2)தண்ணீர்ப் பாய்ச்சுவதென்னும் விசேஷ அர்த்தங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு விசேஷ அர்த்தங்களில் முதலாவது அர்த்தத்தை இந்த கேசில் உபயோகப்படுத்தவேண்டுமென்றும், வாய்க்கால் அல்லது நீரோட்டமானது நிலத்தின்மேல் கூடி ஓடினாலொழிய நீர் பாய்ச்சல் என்பதே ஆகமாட்டாதென்றும் வாதிக்கப்பட்டது. இதே வார்த்தைகளைப்பற்றி பற்பல அகராதிகளில் சொல்லியிருக்கப்பட்டிருக்கும் அர்த்தங்களில் ஒவ்வொருவர் ஒவ்வொருவகையான பதங்களை உபயோகப்படுத்தி யிருப்பதனால் அந்த அர்த்தங்களை இங்கே உபயோகப்படுத்த இடமில்லை "தண்ணீர்ப்" பாய்ச்ச என்ற விசேஷ தலைப்பின் கீழ் உள்ள பொதுவான அர்த்தமோ இருக்கிறது. பின் சொல்லிய அர்த்தத்தை யெடுத்துக்கொண்டால் நீர் பாச்சுதல் என்று தான் அர்த்தமாகிறது. பிரகிருத கேசில் கவர்ன்மெண்டு நீர்த்தாவிலிருந்துதான் தண்ணீர் கசிகிறது. "கசிவு" என்ற வார்த்தைக்கு துவாரமுள்ள வஸ்துவைப் போலொத்ததின் மூலமாக கசிவதென்ற அர்த்தமென்று ஆக்ஸ் போர்ட் புது ஆங்கிலேய அகராதியில் சொல்லப்பட்டிருக்கிறது. கசிவினால் தண்ணீர் பாய்வதென்பது பூமியில் ஊறி பாய்ச்சப்பட்ட நிலத்துக்குப் போகிற தண்ணீரென்று நாம் நினைக்கவேண்டும். நிலத்தின்பேரில் கூடி தண்ணீர் ஓடாத விஷயத்தில் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாதென்று கற்றறிந்த வக்கீல் செய்கிற வாதத்துக்கு அனுசரணையாக இந்த விவரணத்தினால் யாதொன்றும் வெளியாக வில்லை. இது சரியானதாக யிருக்க முடியாதென்று நிரூபணம் செய்வதற்காக தண்ணீரானது அடி நிலத்தில் ஓடும்பொழுது அந்தத் தண்ணீருடைய சிலபாகம் நிலத்துடைய மேல்மட்டத்துக்கு கடைசியில் வந்தாலுமே ஸரி, ஆரம்பத்தில் வந்தாலுமே ஸரி எப்படியாவது ஊறிவந்ததீறமென்பதைச் சொல்லவேண்டியது அவசியமாயிருக்கிறது. பூமியின் உள்ளே கூடி உண்டாகும் கசிவை, நீர்ப்பாய்ச்சலென்று நாம் அபிப்பிராயப்படும் விஷயத்தில் அடி நிலத்துக்காவது. பூமியிலிருக்கிற கிணறுகளுக்காவது போகிற எந்த ஜலத்துக்கும் 1 (b) பிரிவுப்படி தண்ணீர் தீர்வை யேர்ப்படுத்தப்படுமென்ற எண்ணத்தின் பேரில் இவ்விதமாக வாதிக்கப்படுகிறது. அவ்விதமாக தண்ணீர் தீர்வையேர்ப்படுத்தலாமா கூடாதாவென்பதைப்பற்றி இப்போது தீர்மானிக்கவேண்டியது அவசியமில்லை. ஆனால் பக்கத்திலுள்ள நதி அல்லது நீரோட்டத்தில் பெய்தமழை யின் ஜலத்தினால் ஒரு கிணத்துக்குள் ஊறும் ஜலத்தை கவர்ன்

மெண்டு நீர்ப்பாசனவசதியிலிருந்து ஊறினதாகச் சொல்லமுடியாது. நீர்ப்பாசனத்தாவிலிருந்து அந்தக் கிணறு எவ்வளவு தூரத்திலிருக்கிறதென்பதைப் பொறுத்ததாயிருக்கிறது. நீர்த்தாவிலிருக்கிற ஜலமானது ஒரு குறிப்பிட்ட தூரத்துக்குத்தான் ஊரக்கூடும் அதற்குமேல் பட்டு ஊறும் ஜலமானது பூமிக்குள் ஓடிக்கொண்டிருக்கிற நீறாத்துகளிலிருந்தாவது பூமிகளுக்குள் ஓடிக்கொண்டிருக்கும் வாய்க்கால்களிலிருந்து ஊறினதாக நினைக்கவேண்டும் இப்படி. ஊருவது பூமியின் தன்மைக்குத் தக்கதாக இருக்கும் கசிவு ஜலத்தைக்கொண்டு நீர்ப்பாய்ச்ச வேண்டுமானல் அந்தத் தண்ணீரானது முதலாவது நீர்மட்டத்துக்கு வரவேணுமென்ற கக்ஷியை நாம் ஒப்புக் கொள்வதாயிருந்தால் கவர்ன்மெண்டு நீர்தாவுகளிலிருந்துபாய்ச்சப்படுகிற ஜலத்துக்கு யேற்படுத்துகிற தீர்வைகளையெல்லாவற்றையும் யேற்படுத்தக் கூடாதென்ற தடையாய் விடும் கவர்ன்மெண்டு நீர்தாவுகள் எதிலிருந்தாவது கசிந்த தண்ணீரினுன் எந்த நிலமாவது நீர்பாய்ச்சப்பட்டதாவென்ற விஷயத்தைத் தீர்மானிப்பது ரிவினியூ உத்தியோகஸ்தர்களுடைய கடமையாயிருக்கிறது அவ்விதம் தண்ணீர்ப் பாய்ச்சப்பட்டால் ஆக்டுப்படி தண்ணீர் தீர்வை ஏற்படுத்தப் பட்டுவிடுகிறது தண்ணீர் பூமியின் கீழே கூடி ஓடி பக்கங்களிலுள்ள நிலங்களுக்கு அனு கூலம் செய்த கேசுகளில் தண்ணீர் தீர்வை ஏற்படுத்துவது கவர்ன்மெண்டாருடைய நோக்கமில்லையென்று காட்டும்பொறுட்டு, போர்ட்டாருடைய நிலையான உத்திரவுகளையும் (Board's Standing-Orders) இந்தியா கவர்ண்மெண்டார் அவர்களுடைய உத்தரவுகளையும் எங்களுக்குக் காண்பிக்கப் பட்டது. இப்படிச் செய்ததற்குக்காரணம், ஷை ஆக்டுப்படி தண்ணீர்த்தீர்வை ஏற்படுத்தப் படக்கூடாதென்று கவர்ண்மெண்டார் அவர்களை தெரிநதுகொண்டார்கள். மேற்கண்ட இரண்டு உத்திரவுகளிலிருந்தும் இவ்விதமான அபிப்பிராயம் வெளியாவதாக நினைப்பது அவசியமில்லை யென்று எனக்குத் தோன்றுகிறது அப்பேர்ப்பட்ட தண்ணீருக்குத் தீர்வை ஏற்படுத்த தங்களுக்கு பாத்தியதையிருப்பதாக கவர்ண்மெண்டார் அபிப்பிரயப்பட்டாலும் பொது ஜன நோக்கத்தை யுத்தேசித்து அப்படிசெய்யாமலிருக்கும்படி தங்களுடைய உத்தியோகஸ்தர்களுக்கு உத்திரவு செய்வது உசிதமென்று நினைக்கிறார்கள். கிணறு வெட்டுவதை அபிவிருத்தி செய்வது கவர்ண்மெண்டாருடைய நோக்கமாய் யிருந்துகொண்டிருக்கிறது. ஆகையால் கவர்ன்மெண்டுநீர்வசதிகளிலிருந்து கசியும் ஜலமானது அப்படி வெட்டப்பட்ட கிணறுகளுக்குள் போனதின் மூலமாய் உண்டான ஜலத்துக்கு தீர்வை யேற்படுத்தினுலும் கிணற்றுக்கு தீர்வை யேற்படுத்தக்கூடாது என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

நான் மேலே சொன்னபடிக்கு இந்த கேழ்வி சம்பந்தப்பட்ட. விஷயங்களெல்லாம் நீர கசிவினுல் தண்ணீர் பாய்ச்சுவது என்ற வார்த்தைகளுடைய அர்த்தத்தைப் பொருத்ததாய் இருக்கிறது.

போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் நெ. 197.

(பிரிவு 1. ஒருவன் வசமிருந்த சொத்து ஸர்காருக்குச் சேருவதை குறித்த விஷயம்.)

(I) வார்ஸுகள் யாரும் இல்லாதவர்கள் தங்கள் வசமிருந்த ஸொத்துகளைப் பற்றி ஏதும் உயில் முதலியது எழுதி வைக்காமல் இறந்து போய் விட்டால் ஷை ஸொத்து விஷயமாக இன்ன நடக்குமென்பதைப் பற்றி-வெளியூர்களிலுள்ள ஹிந்துக்கள், மகம்மதியர்கள், மற்றவர்கள் ஆகிய இவர்களில் யாரும் வார்ஸ் யேதும் இல்லாமலும் தான் இறக்குமுன் தன் வசமிருக்கும் சொத்து இன்னருக்கு சேரவேண்டுமென்புதைப் பற்றி உயில் ஏதும் எழுதிவைக்காமல் இறந்துபோய் விட்டால் அந்த சொத்தை டிஸ்ட்ரிக்ட்டு மாஜிஸ்ட்ரேட்டு கைப்பற்றிக் கொள்ள வேண்டும். அந்த சொக்தானது 50 ரூ அல்லது 50 ரூபாய்க்குக் குறைந்திருந்தால் உடனே அதை ஏலம்போடச் செய்து, விற்ற துகையை கவர்ன்மெண்டுக்கு (இராஜாங்கத்தாருக்குச்) சேர்த்துவிடவேண்டும். (28-2-88, போட்ட 190-ம் நிம்பர் போர்டு ப்ரொஸீடிங்ஸைப்பார்க்க) மற்ற கேசுகளில் (விஷயஙகளில்) ஸபார்டிநேட் ஜட்ஜி யிருந்தால், அவருக்கும் ஸபார்டிநேட் ஜட்ஜ் இல்லாத இடங்களில் ஜில்லா ஜட்ஜிக்கும் ரிப்போர்ட்டுச் செய்ய வேண்டும். அப்படி ரிப்போர்ட்டுச் செய்ததின்பேரில் ஷை ஸபார்டிநேட் ஜட்ஜ் அல்லது டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜ் 1802-ம் ஸுத்து 3-வது ரெகுலேஷன் 16-வது பிரிவின் 7-வது உட்பிரிவின் பிரகாரம் உத்தரவு பிறப்பிவிப்பார். பின்னீடு ஸப் ஜட்ஜ் அல்லது டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜ் முன்பாக அந்தச் சொத்து தன்னுடையதென்று யாரும் பாத்தியம் கொண்டாடிக் கொண்டு வந்து, அப்படி வருபவருக்கு ஷை சொத்தில் யாதொரு பாத்திபதையுமில்லை யென்று சந்தேகிப்பதற்கு ஹேஷியமும் ஏற்பட்டால் ஷை கேசு கோர்ட்டில் விசாரணை நடக்கும்போது அதைக் கவனித்து ஷை சொத்து விஷயமாய் கவர்ன்மெண்டாருக்கு யிருக்கும் பாத்தியதையையும் தெரிவிக்கவேண்டும். இப்படி வார்சு இல்லாமலும் தன்னுடைய வசமிருக்கும் சொத்துக்கள் இன்னருக்கு சேரவேண்டுமென்பதைப் பற்றி உயில் எழுதி வைக்காமல் இறந்து போய் விட்ட ஒருவனுடைய சொத்தை ஷை சொத்துக்கு அபாத்தியனுகயிருக்கும் யாரும் அதைக் கைப்பற்றிக்கொண்டு விட்டால், 1802-ம் ஸுத்து 3-வது ரெகுலேஷன் 16-வது பிரிவு 4-வது உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம், ஷை சொத்தை மீட்டுக் கொள்ளும் பொறுட்டு ஷை யான் பேரில் வியாச்சியம் தாக்கல் செய்ய வேண்டியது. (26-6-1907) போட்ட 175-ம் நிம்பர் போர்டு ப்ரொஸீடிங்ஸைப் பார்க்க.)

(II) ஐரோப்பியர்களால் மேல்கண்டபடி விட்டுவிட்டு இறந்து போய்விட்டால் அந்த சொத்து விஷயமாக நடக்கவேண்டிய ஏற்பாடு இன்னதென்பது. ஐரோப்பியர்களும் இந்திய வார்சு ஆக்ட்டு (Indian Succession Act) ஸம்மந்தப்படக்கூடிய மற்றவர்களும் தங்கள் வசத்திலிருக்கப்பட்ட சொத்து விஷயமாய் யாதொரு ஏற்பாடும் செய்யாமல் இறந்து போய் விட்டால் அந்த ஸொத்தை அட்மினிஸ்ட்ரேடர் ஜெனரல் கைப்பற்றிக்கொள்வார்.

(இதன் தொடர்ச்சி முதல் பாகம் 84-வது பக்கம் பார்க்க.)

The Indian Law Gazette.

PART I.

இந்திய சட்ட கெஜெட்:

1906-ஸு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் I.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ஸு ஜூலைமீ [நெ. 7.

EDITORIAL.

பத்திராதிபர் வியாசம்.

சட்டம் உண்டுபண்ணி யிருப்பதின் நோக்கம் துஷ்டர்களை அடக்குவது.

கடவுளுடைய அருளினுல் அரசர்களாயிருப்பவர்கள் நீதி தவருமல் ராஜ்யபரிபாலனம் செய்வதற்கும், தங்களுடைய ராஜ்யங்கள் விஷயத்திலாவது அல்லது தங்கள் ஸம்ரக்ஷணையிலிருக்கும் பிரஜைகள் விஷயத்திலாவது கொடிய அன்னிய அரசர்கள் அல்லது அன்னிய ராஜ்யங்களிலிருக்கும் மற்றத் துஷ்டர்கள் ரவேசித்து அக்கிரமச் செய்கைகளைச் செய்யவொட்டாது பாதுகாப்பதற்கும், ஸாம, தான, பேத, தண்டமென்னும் சதுர்வித உபாயங்களையும் பிரயோகிக்க வேண்டியது அவசியமாகயிருக்கிறது. துஷ்ட நிக்கிரஹம் செய்வதும் சிஷ்ட பரிபாலனம் செய்வதும் அரசர்களுடைய முக்கியமான கடமைகளாக ஏற்பட்டிருக்கின்றன. இந்தக் கடமைகளில் துஷ்ட நிக்கிரஹம் செய்வது அத்தியாவசியமானது. துஷ்ட நிக்ரஹமென்பது துஷ்டர்களை அடக்குவதுதான். துஷ்டர்களென்றல், மூர்க்கர் என்று மாத்திரம் அர்த்தமல்ல, நியாயமான சங்கதிகளைச் செய்யாமல் அந்நியாயமான சங்கதிகளைச் செய்பவர்கள்தான் துஷ்டர்கள். தங்கள்விஷயமாய் மற்றவர்கள் எந்தச்செய்கையைச் செய்தால் தங்களுடைய மனசுக்கு வருத்தம் உண்டாகுமோ அப்பேர்ப்பட்ட செய்கையைக் கொஞ்சமும் யோசியாது பிறர் விஷயமாய்ச் செய்பவர்களே துஷ்டர்களாவார்கள்.

குற்றஞ்செய்தவர்களை உடனே தண்டிக்க ஜனங்கள் விரும்புவது.

ஒருவன் எவ்வளவு நல்ல சுபாவத்தையும் குணங்களையும் உடையவனுக யிருந்தாலுமே, தன்னுடைய பொருள்களில் எதையும் தன்னுடைய அனுமதியாவது ஸம்மதயாவதில்லாமல் அன்னியர்கள் யாரும் கொண்டுபோக ஸம்மதிக்க மாட்டான், அப்படியே கொண்டுபோய் விட்டால், கொண்டு போகப்பட்ட பொருளின், கிரயத்திற்கும், உபயோகத்திற்கும் தக்கபடி ஓயாத மனவருத்தமும் கொண்டு போனவனிடத்தில் அடங்காத கோபமும் உண்டாவது மனிதர்களின் இயற்கையான சுவபாவமாகயிருந்து கொண்டிருக்கிறது. ஒருவனுக்குப் பாத்திய முள்ள ஒரு அசையும் பொருளை (ஜங்கமசொத்தை) அந்தப்பொருள் விஷயத்

தில் யாதொரு எவ்விதப்பாத்தியதையுமில்லாத மற்றொருவன், பொருளுக்குச் சொந்தக்காரனுடைய ஸம்மதம் அல்லது அனுமதி யில்லாமலாவது அல்லது அவனுக்குத் தெரியாமலாவது கொண்டுபோய் விடுவானேயாகில் அது திருட்டென்று சொல்லப்படும். இவ்விதமாக ஒருவனுடைய பொருளை மற்றொருவன் திருடிக்கொண்டுபோய் விட்டால், பொருளுக்குடையவன், தன் பொருளைத் திருடன் கொண்டுபோகும் பொழுது தான் கண்டிருந்தால் அவன் உயிருடன் பிழைத்துப் போயிருப்பானு, தன் கண்ணில்படாமல் அனியாயமாகத் தப்பிப் போய்விட்டானேஎன்று சொல்லி புலம்புகிறான். தன் பொருளைத் திருடன் திருடிக்கொண்டு போகையில் அவனைக் கண்டுபிடியாவிட்டாலும், பின்னிட்டாகிலும் துப்புத்துலக்கி, ஸாத்தியப் பட்டால் தன் பொருளையும் கண்டுபிடித்து, எப்படியாவது, திருடிக்கொண்டு போனவனை ஜெயிலுக்கு அனுப்பிவிட வேண்டுமென்று நினைக்கிறான். மேலும் திருட்டுப்போன தன் பொருள் தனக்குத்திரும்பக் கிடைத்தாலுமே கிடைக்க விட்டாலுமே திருடிக்கொண்டு போனவனை ஜெயிலுக்கு அனுப்பித் தீரவேண்டுமென்று நினைப்பது திருட்டுக் கொடுக்கும் பெரும்பான்மை யோரின் கொள்கையி லிருந்துகொண்டிருக்கிறது.

துஷ்டர்களை அடக்குவதற்காக கிரிமினல் கோர்ட்டுகள் ஏற்படுத்தியிருப்பது.

உலக இயற்கை இப்படியிருக்க, பிறர் பொருள்களை சிலர் தாராளமாகத் திருடுகிறார்கள். அல்லாமலும் தன் வீட்டு ஸ்திரீகளை அன்னியபுருஷர்கள் கண்ணெடுத்துப் பார்த்துவிட்டால், அப்படிப் பார்த்தவர்கள்பேரில் யாருக்கும் கோபம் வந்துவிடுகிறது இவ்விதம் யாருக்குக் கோபம் வருகிறதோ அவர்களிலேயே சிலர் பிறருடைய ஸ்திரீகளின் விஷயமாயச் செய்யும் அக்கிரமச் செய்கைகளை சொல்லிமுடியாது. தன்னை ஒருவன் மோசம் செய்துவிட்டால், மோசம் செய்தவனிடம், மோசம் செய்யப்பட்டவனுக்கு வரும் கோபத்துக்கு எல்கைகிடையாது. பிறரால் மோசஞ்செய்யப்பட்டவர்களே, தன்னை மோசஞ்செய்யாத வேறு சிலரை மோசம்செய்து விடுகிறார்கள், இவைபோலொற்ற அநேகம் குற்றச்செய்கைகளில் எதையும் கூசாது மனந்துணிந்து செய்பவர்கள்தான் துஷ்டர்கள் என்னப்படுவார்கள். இப்பேர்ப்பட்ட துஷ்டர்களை நிக்கிரகம் செய்து (அடக்கி) சிஷ்டர்களைப் பரிபாலனம் செய்யும் பொருட்டே (அதாவது யோக்கியர்களுடைய சரீரம், உயிர் முதலியவற்றையும் பொருளையும் காப்பாற்றிக்கொடுப்பது) கிரிமினல் சட்டங்களும், கிரிமினல் கோர்ட்டுகளும், போலீஸ் இலாகாவும் (Police Department) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

குற்றச்செய்கைகளுக்கு கிரிமினல் கோர்ட்டுகளில் பரிகாரம் பெற்றுக்கொள்ளும்படி ஏற்பாடு செய்திருப்பதின் காரணம்.

குற்றச் செய்கைகளால் ஏற்படுகிற சகல கஷ்டநஷ்டங்களுக்கும் ஸிவில் கோர்ட்டுகளில் வியாஜ்ஜியம் செய்து பரிகாரம் பெற்றுக்கொள்ளக்கூடுமென்று (Law of Torto) என்னும் சட்டத்தினால் வெளியாகிறது. அப்படிக்கிருக்க குற்றச் செய்கைகளை அடக்கும் பொருட்டு, கிரிமினல் சட்டங்களும் கிரிமினல் கோர்ட்டுகளும், ஏற்படுத்தி யிருப்பதின் கருத்தென்னவென்று தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாக யிருக்கிறது. கொடிய செய்கைகளை பிறர் விஷயமாக மனந்துணிந்து செய்யுந்தன்மை யுள்ள கடினமான மனதையுடைய துஷ்டர்களை ஸாம, தான, பேத, தண்டமென்னும் சதுர்வித உபாயங்களில் தண்டமென்றும் நான்காவது உபாயத்தினால் தான் அடக்கமுடியும். ஒருவருக்கு முள் தைத்துவிட்டால், அந்த முள்ளை, எப்படி அந்த முள்ளைப்பார்க்கிலும் அதிகக் கூர்மையும் பலமுமான ஊசியைக்கொண்டு எடுக்கிறோமோ அதுபோல துஷ்டர்களை அவர்களைப்பார்க்கிலும் அதிகக் கடினமான சித்தத்துடன் சிக்ஷை செய்வதின் மூலமாகத்தான் அடக்க முடியும். இது சங்கதியை உத்தேசித்தே "அடிவுதகிருப் போல் அண்ணன் தம்பியும் உதவமாட்டான்," "அடியாத மாடு பணியாது," "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமென்பார்கள்" என்றபழமொழிகள் ஏற்பட்டிருக்கிறாப்போலிருக்கிறது. நாகரீகமில்லாத பூர்வகாலத்தில், ஒருவனுடைய பல்லை மற்றொருவன் வேணுமென்று அக்கிரமாய் உடைத்துவிட்டால் அந்த மற்றொருவனுடைய பல்லை பிடுங்கிவிடும் படிக்கும், ஒருவனுடைய கண்ணை மற்றொருவன் வேணுமென்று குத்திவிட்டால், அந்த மற்றொருவனுடைய கண்விழியைப் பிடுங்கிவிடும் படிக்கும், ஒருவனுடைய உயிரை மற்றொருவன் வாங்கிவிட்டால் அந்த மற்றொருவனுடைய உயிரையும் வாங்கி விடும்படிக்கும் பழிக்குப்பழி வாங்குகிற தண்டனைகள் விதிக்கப்பட்டு வந்திருக்கிறது. மாட்சிமைதங்கிய நமது பிரிட்டிஷ் அரசாக்ஷியில், இப்பொழுது இந்தியன் பீனல்கோடிலும மற்றக்கிரிமினல் சட்டங்களிலும் ஒவ்வொரு குற்றத்திற்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தண்டனையும் சொத் யப்படுகிற குற்றத்தின் தன்மைக்கு இணைக்கமும் பூர்வகாலத்தில் பழிக்குப்பழிவாங்கின தண்டனை விதித்துவந்த தாகிய வழக்கத்திற்கும் ஒத்துமை யாகவுமிருக்கிறது இந்தியன் பீனல்கோடிலும், பிறர்உயிரை மாய்த்துக் கொலையென்னுங்குற்றத்தைச் செய்தவனுக்கு மரண தண்டனையே விதிக்கப்பட்டிருக்கிறது. ஒருவனை அக்கிரமமாக கைநீட்டி அடிக்கப்போனவனுக்கு கிரிமினல் கோர்ட்டுகளில், இப்பொழுது அனுஷ்டானத்தில் சொல்ப அபராதந்தான் விதிக்கப்படுகிறது ஒருவனுக்குக் கொடுந்துன்பம் உண்டாக்கினவனுக்கு, காவல்தண்டனையும் அபராத தண்டனையும் விதிக்கப்படுகிறது. ஒருவனுடையசொத்தைத் திருடினவனுக்கு, அபராத தண்டனையாவது காவல் தண்டனையாவது அல்லது இரண்டுதண்டனையுமாவது விதிக்கப்படுகிறது. கட்டிடம் நுழைந்து களவுசெய்தவனுக்கு காவல் தண்டனையும் அபராததண்டனையும் விதிக்கப்படுகிறது. இப்பேர்ப்பட்ட கண்டிப்பான ஏற்பாடுகளடங்கிய சட்ட திட்டங்களினால் குற்றம் செய்தவர்களுக்குத் தக்கபடி தண்டனை விதித்து நிறைவேற்றிவரும் பொழுதே ஓயாமற் செய்

யப்படுகிற குற்றச் செய்கைகளைப் பார்க்கும் பொழுது கண்டிதமான சட்டங்களும் கிரிமினல் கோர்ட்டுகளுமில்லாவிட்டால் ஒருவருடைய சரீரமும், பொருளும், உயிரும் பந்தோபஸ்தாக யிருக்கமாட்டாதென்பது நிச்சயம்.

இவ்விதமாகத் தண்டனை செய்து புத்திவருத்த வேண்டிய துஷ்டர்களுக்கு ஸிவில் கோர்ட்டுத்தீர்ப்பினால் யாதொரு புத்தியும் வரமாட்டார்தென்றே கிரிமினல் சட்டங்களும், கிரிமினல் கோர்ட்டுகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அல்லாமலும குற்றஞ்செய்தவனுக்கு தண்டனை விதிக்கும் நோக்கமானது அவன் அந்தப்படி குற்றச் செய்கையை மறுபடி ஒருபொழுதுஞ் செய்யாத விதமாய் அவனுக்குப் புத்தி வருத்தும்படிக்காகவும், அவனுக்கு விதிக்கப்படுகிற தண்டனையை மற்றவர்கள் பார்த்துப் பயந்து குற்றச் செய்கைகளைச் செய்யாமலிருக்கும்படி மற்றவர்களுக்கும் புத்தி வருத்தும்படிக்காகவு மிருக்கிறது.

மற்றும் காரணங்கள்.

இது சிற்க செய்யப்பட்ட குற்றச் செய்கைகளுக்கும் ஸிவில் கோர்ட்டிலேயே பரிகாரம் தேடிக்கொள்ளும்படிக்கு ஏற்படுத்தாமல் பிரத்தியேகமாக கிரிமினல் கோர்ட்டுகள் ஏற்படுத்தி யிருப்பதற்கு வேறுகாரணங்களு மிருக்கின்றன. ஸிவில் வியாச்சியங்களுக்கு வியாச்சியத்தின் தன்மைக்கும் வியாச்சிய மூலத்தின் பெருமான தொகையின் மதிப்புக்கும் தக்கபடி மவுண்டு என்னும் கோர்ட்டு கட்டணத்தை நூறு ரூபாய் வியாச்சியத்திற்கு ரூ. 7-8-0 வீதம் வியாச்சியம் போடும்பொழுதே, முதலில் ஸ்டாம்பு ரூபமாக கட்டவேண்டியதாக யிருக்கிறது. பிரதிவாதி சம்மன்படி யென்றும், சாக்ஷி சம்மன்படி யென்றும், வழிப்படி யென்றும், சாப்பாட்டுப்படி யென்றும், கமிஷன்பீஸ் என்றும் பலவாறான சிலவுகள் ஸிவில் கேசுகளில் ஏற்படுகிறது. மேலும் ஸிவில் கேசுகளில் ஒழுங்குப்படிக்கும் சட்டப்படிக்கும் நடத்தவேண்டிய நடவடிக்கைகளெல்லாம் நடத்தி கேசுகள் பைசலாவதற்கு வருஷக்கணக்காகச் செல்லுகிறது. இவ்வளவு சங்கதிகளும், சொத்துக்களின் விஷயமாய் தாயாதிக்காரர்களுக்குள்ளும், ஸமீப பந்துக்களுக்குள்ளும் வருகிற பாத்தியா பாத்திபதை வழக்குகளுக்கும், கொடுக்கல் வாங்கல் வியாச்சியங்களுக்கும், மற்ற இச்சாமாத்திரமான சங்கதிகளில் நேரிட்டதாக நினைக்கிற நஷ்டங்களுக்கும் பரிஹாரம் கேழ்ப்பதுமான வியாச்சியங்களுக்கும் ஸரியாக இருக்கும் இதேவிதமாக, ஒருவருடைய கற்பு நிலைமைதவறாத ஸ்திரீயை ஜோராவலிசெய்து கற்புநிலைமையை அழித்தவன்பேறிலும் ஒருவரை அக்கிரமமாக வழிமறித்து மண்டையை உடைத்து அவரிடத்திலிருந்த சொத்தை எல்லாம் பிடுங்கி வழிப்பறி செய்த ஒருவன் பேரிலும், ஒருவரைக் கொலைசெய்த ஒருவன் பேரிலும், ஸிவில் வியாச்சியம் செய்து பரிஹாரம் பெற்றுக்கொள்ளும்படி ஏற்பாடு செய்திருந்தால், ஸிவில் வியாச்சியம் பைஸல் செய்யப்படும்வரையில் குற்றஞ் செய்தவன் எங்கேயாவது போய் ஒளித்துக்கொள்ளுவான். குற்றம் செய்ததாகச் சொல்லப்பட்டவனை உடனே விசாரியாமல் விட்டுவிடக்கூடாது என்ற நோக்கத்தின்பேரில் அதிசீக்கிரத்தில் நடவடிக்கை நடத்தப்படுகிறது. மேலும் தன் ஸம்ஸாரத்தின் கற்புநிலைமை அழிக்கப்பட்டு மனவருத்தத்துடனிருப்பவனையும், உயிரைப்பறிகொடுத்ததினால் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிற கொலையுண்டவனுடைய, பந்துக்களையும், மவுண்டு முதலிய கோர்டுக்கட்டணங்கள் கட்டச்சொல்வது நியாயமில்லை யென்றும் நன்குணர்ந்து மாட்சிமைதங்கிய நமது கவர்ன்மெண்டாரவர்கள் அடியல் சொல்லப்பட்டிருக்கிற முக்கியமான 2 நோக்கங்களுடன், கிரிமினல் சட்டஙகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

(1) கக்ஷிக்காரர்களுக்கு கூடியமட்டிலும் சிரமமில்லாமல் குற்றச் செய்கைகளை அடக்கவேண்டியது.

(2) கூடியவரை குறைந்தகாலத்துக்குள்ளும் சிலவுக்குள்ளும் குற்றச் செய்கைகள் நடந்ததாகச் சொல்லப்பட்டதின் உண்மையைக் கண்டுபிடித்து நியாயம் செய்ய வேண்டியது என்ற 2 நோக்கங்களுடனுந்தான்.

கிரிமினல்நீதிவிசாரணை கூடியவரையில் சிலவில்லாமலும் துரிதமாயும் நடத்தப்படவேண்டியதென்பது.

இந்த நோக்கங்களுக்கிணங்க, கிராமமாஜிஸ்ட்ரேட்டுகளிடத்தில் எழுத்துமூலமாகத் தெரியப்படுத்தப்பட்ட குற்ற ஸமாசாரத்தைக் குறித்த பிராதுகளுக்கு கோர்ட்டுபீஸ் லேபில் வேண்டியதில்லை யென்றும், ஷை கிராம மாஜிஸ்ட்ரேட்டார்முன் விசாரணை செய்யப்படும் கேசுகளில் எதிரி சாக்ஷிகள் இவர்களை சம்மன்செய்து வருத்துவதற்குப் படிமுதலியது கட்டவேண்டியதில்லை யென்றும், போலிசாரிடம் எழுத்துமூலமாகத் தெரியப்படுத்தப்பட்ட குற்ற ஸமாசாரப் பிராதுகளுக்கும் கோர்ட்டு பீஸ் லேபில் ஒட்டவேண்டியதில்லை யென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (1870-ம் ௵த்து 7-வது ஆக்டாகிய, கோர்ட்டுபீஸ் ஆக்ட்டு 18-வது பிரிவு, 16-வது உட்பிரிவைப்பார்க்க) போலீசார் வாரண்டில்லாமல் பிடிக்கக்கூடியதென்று 1898-ம் ௵த்திய 5-வது ஆக்ட்டாகிய கிரிமினல் புரொஸிஜர் கோடின் 2-வது ஷெடியூலின் 3-வது கலத்தில் கண்டவும், அதற்கு நேர் 2-வது கலத்தில் இன்ன குற்றமென்று விவரிக்கப்பட்டிருக்கிறவும், முதலாவது கலத்தில் அது இன்ன பிரிவென்று சொல்லப்பட்டிருக்கிறதுமான கேசுகளுக்கு எதிரிகளுக்காவது வாதிபக்கம், எதிரிபக்கம் சாக்ஷிகளுக்காவது, ஸம்மன் வாறண்டு முதலியது பிறப்பிவிப்பதற்கு சம்மன்படி கட்டவேண்டியதில்லை யென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (கோர்ட்டுபீஸ் ஆக்ட்டு 31-வது பிரிவைப் பார்க்க.)

வாறண்டு கேசுகளிலும், எதிரிகள், வாதிபக்கம் சாக்ஷிகள், இவர்களுக்கு சம்மன் வாறண்டு முதலியதுகள் பிறப்பிவிக்க படிகட்டவேண்டியதில்லையென்று சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

OUR LAW COLLEGE.

எங்களுடைய சட்ட கலாசாலை.

எங்களுடைய சட்ட கலாசாலையின் புரொபசர் உலகறிந்த திருநெல்வேலி வக்கீல் K. R. கிருஷ்ணமாச்சாரியார்.

அவருடைய மாணுக்கர்களுடைய பெயர்கள் :—

1 அனந்தாச்சாரி, 2 சக்ரவர்த்தி ஐயங்கார், 3 துரைசாமி முதலியார், 4 சட்டராசாரியார், 5 தணிகாசல முதலியார் வகையராக்கள்.

HINDU LAW—ஹிந்து லா.

பு:—பிள்ளையைப்போலவேயே, பேரனும், கொள்பேரனும், உத்தரக்கிரியைகள், சிரார்த்தம் (திதி) முதலியவைதீககருமங்களைச் செய்யத்தகுந்தவர்களாகவும் தாயபாத்தியத்தில் பிள்ளைக்குச்சமானமான பாத்தியதைகளை உடையவர்களாக யிருக்கிறபடியால் பேரனையும், கொள்பேரனையும் ஒருவனுக்கு ஆண் ஸந்ததி யென்று சொல்லப்படுகிறது. ஆகையால், ஒருவனுடைய, புத்திரன், பௌத்திரன், பிரபௌத்திரன் இவர்கள் உயிரோடிருக்கும் போது ஸ்வீகாரம் செய்துகொள்ளக்கூடாது.

மாணு:—ஒருவனுடைய கொள்பேரனுடைய மகன் உயிரோடிருந்தால், அந்த ஒருவன் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா-கூடாது?

பு:—ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம். ஏனென்றால் மூன்று தலைமுறைவரையில் உள்ளவர்களுக்குத்தான் கொள்பாட்டனுருடைய உத்தரகிரியைகள் முதலியதைச் செய்யும் பாத்தியதையுண்டு. கொள்பேரனுடைய பிள்ளைக்கு ஷை உத்தரக்கிரியை முதலியதைச் செய்யும் பாத்தியதைகளில்லாதபடியால், ஷை கொள்பேரனின் பிள்ளையை ஒருவனுக்கு ஆண் ஸந்ததியென்று சொல்லப்படவில்லை. ஆகையால்தான் ஒருவனுக்குக் கொள் பேரனுடையபிள்ளை உயிரோடிருந்தால், ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாமென்று சொல்லப்படுகிறது.

மாணு:—மேற்கண்டபடிக்குள்ள ஆண் ஸந்ததியிருக்கும்போது ஒருவன் ஸ்வீகாரம் செய்துகொள்ளுகின்றான். அது செல்லாதென்பதற்கு ஆதாரமுண்டா?

பு:—அப்படிச் செய்துகொளளும் ஸ்வீகாரம் செல்லமாட்டாதென்பதற்கு 21. மூர். இ. அ. 181; இ. லா. ரி. 22. பம் 482; இ. லா. ரி. 23. பம். 236; இந்த ஆதாரங்களிருக்கின்றன.

மாணு:—ஒருவனுடைய, ஔரஸ புத்திரன், பௌத்திரன், பிரபௌத்திரன், தத்தபுத்திரன், பௌத்திரன், பிரபௌத்திரன் இவர்களில் யாராவது இருக்கும்போது இவர்கள் அனுமதியின்பேரில் ஸ்வீகாரம் செய்து கொண்டால் அந்த ஸ்வீகாரம் செல்லுமா?

பு:—அந்த ஸ்வீகாரம் செல்லமாட்டாது. 4 மூ. இ. அ. 1.

மாணு:—ஒருவனுடைய ஔரஸ புத்திரன் ஸ்வீகார புத்திரன் இவர்களிருக்கும்போது ஸ்வீகாரம் செய்துகொள்ள நியாயமுண்டா?

பு:—ஔரஸபுத்திரனாவது ஸ்வீகார புத்திரனாவது ஜாதிப்பிரஷ்டனாகவாவது மதப் பிரஷ்டனாகவாவது போய்விட்டாலும், ஸன்னியாசியாகப் போய்விட்டாலும், தேசாந்திரியாகப் போய் 12 வருஷங்களுக்கு அவன் இருக்கும் இடமே தெரியாமல் போய்விட்டாலும், ஔரஸ புத்திரன் குஷ்டரோகியாகவாவது, நபும்ஸகனாகவாவது, பித்தனாகவாவது, பிறவிக்குருடனாகவாவது, செவிடாகவாவது, ஊமையாகவாவது, அங்கஹீனனாகவாவது பிறந்தால் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம். ஆனால் மேற்சொன்ன அங்கஹீனர் வியாதிஸ்தர் முதலியோருக்கு சரியானபிள்ளையாவது பேரனாவதிருந்து அந்தசந்ததியான் தனக்கு 3 தலைமுறைக்குட்பட்டனாகவும் இருந்தால் அப்போது ஸ்வீகாரம் செய்துக்கொள்ளக்கூடாது.

மாணு:—ஜாதி பிரஷ்டனாகவாவது மதப்பிரஷ்டனாகவாவது போய்விட்ட ஔரஸபுத்திரன் அல்லது ஸ்வீகாரபுத்திரனிருக்கும்போது ஸ்வீகாரம் செய்துகொண்டால் ஸ்வீகாரம் செய்துகொண்டவனுக்கு குடும்ப சொத்துக் கிடைக்குமா?

பு:—ஜாதி பிரஷ்டனாகவாவது, மதப்பிரஷ்டனாகவாவது போய்விட்ட ஔரஸபுத்திரன் அல்லது ஸ்வீகாரப் புத்திரனுக்கு குடும்பசொத்தில் யிருக்கும் பாத்தியதை போய்விடாதென்று 1850 ம் ஹு 21 வது ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் ஸ்வீகாரம் செய்து கொள்ளப்பட்டவனுக்கு குடும்பசொத்தில் யாதொரு பாத்தியதையும் கிடையாதென்று ஏற்படுகிறது ஆனால் ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டனுக்கு சுவய ஆர்ஜிதச் சொத்திருந்தால் அந்தச் சொத்து ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டவனுக்குக் கிடைக்கும். சுவார்ஜிதச் சொத்தை தன்னிஷ்டம் போல் சிலவு செய்யும்அதிகாரம் இருப்பதனால் தன் சொத்துக்களை ஸ்வீகாரப் பிள்ளைக்கு உயில் மூலமாக பாத்தியப்படுத்திவிட்டால் ஷை சொத்துக்கள் ஸ்வீகாரப்பிள்ளைக்கு கிடைக்கும்.

மாணு:—விவாகம் செய்துகொண்டு கிரகஸ்தனாகயிருப்பவன்தான் ஸ்வீகாரம் செய்துகொள்ளலாமென்ற விதியுண்டா? யார் யாரெல்லாம் ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம்?

பு:—விவாகமாயிருப்பவன்தான் ஸ்வீகாரம் செய்துகொள்ளலாமென்ற விதியில்லை. வம்ச விருத்தியையும், அந்தியகாலத்தில் உத்தரகிரியை முதலிய கர்மங்கள் செய்யவேண்டியதையும், தனக்குப்பின் தன் சொத்து சுதந்திரங்களை அடைந்து தன் பெயரை விளங்கச்செய்யவேண்டியதையும் கருதி யாவரும் புத்திரனை அடைய விரும்புகிறபடியால் விவாக மில்லாதவனும்(பிரம்ம சாரியும்) தாரம் இழந்தவனும் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம். 2. ம. ஹை. கோ. ரி. 367; 4. ம. ஹை. கோ. ரி. 270; இ. லா. ரி. 12 பம் 329; இ. லா. ரி. 12. அல. 352.

மாணு:—சாஸ்திரங்களினால், குடும்ப சொத்துக்களிலிருக்கும் தாயபாத்தியம் முதலியவைகளுக்கு யோக்கியதை யற்றவர்களென்று விலக்கப்பட்டிருக்கிற நபும்ஸகன் தீராத குஷ்டரோகி, பிறவிக்குருடர், செவிடர், கைகாலில்லாத மொண்டி, மொட்டம். முதலியவர்கள் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

பு:—மேற்கண்டவர்கள் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாம் (இ. லா. ரி. 28-கல் 168) ஆனால் அப்படி அவர்கள் எடுத்துக் கொண்ட ஸ்வீகாரப் பிள்ளைக்கு பிதுரார்ஜிதச் சொத்தில் யாதொரு பாத்தியதையுமில்லை. ஆனால் அவர்களுக்குக் கிடைத்த ஜீவனம்சமும், அவர்களுடைய சுயார்ஜிதச்சொத்தும் அந்த ஸ்வீகாரப் பிள்ளைகளுக்குக் கிடைக்கும்.

மாணு:—புத்தி ஸ்வாதீன மில்லாத பைத்தியக்காரர் முதலியவர் செய்து கொள்ளும் ஸ்வீகாரம் செல்லுமா?

பு:—ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளுவதானது மனப் பூர்த்தியான செய்கையாக யிருக்கவேண்டியதிருப்பதால் புத்தி ஸ்வாதீன மில்லாதவர்கள் செய்து கொள்ளும் ஸ்வீகாரமானது செல்லமாட்டாது. இ. லா. ரி. 8 கல். 149; 10. மூ. இ. அ. 429.

மாணு:—ஸ்வீகாரம் செய்து கொள்ள வேண்டியதற்கு காலநிர்ணயம் உண்டா?

பு:—ஒருவன் இன்ன காலத்தில் அல்லது இவ்வளவு காலத்துக்குப் பிறகு தான் ஸ்வீகாரம் செய்து கொள்ள வேண்டுமென்ற கால நிர்ணயமாவது வயது நிர்ணயமாவது கிடையாது.

மாணு:—ஒருவனுடைய ஸ்திரீ கர்ப்பமாக யிருக்கும் காலத்தில் ஸ்வீகாரம் செய்துகொண்டால் செல்லுமா?

பு:—ஸ்வீகாரம் செய்துகொண்டால் சட்டப்படி செல்லும் (இ. லா. ரி. 3. ம. 180; 12 பம். 105.)

மாணு:—ஸ்வீகாரத்துக்குப் பிறகு ஔரஸபுத்திரன் பிறந்துவிட்டால் ஸ்வீகாரம் ஊர்ஜிதத்திலிருக்குமா? ஊர்ஜிதத்திலிருக்குமாகில் ஸ்வீகார புத்திரனுக்குப் பாகம் எப்படி, ஔரசபுத்திரனுக்கு பாகம் எப்படி கிடைக்கும்?

பு:—ஸ்வீகாரத்திற்குப்பிறகு சொந்தப்புத்திரன் பிறந்துவிட்டால் ஸ்வீகாரம் ரத்தாகமாட்டாது. பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய ஜாதிகளுக்கும், ஸ்வீகாரத்துக்குப் பிறகு ஔரசபுத்திரன் பிறந்து விட்டால் குடும்பசொத்தை ஐந்துபாகம்வைத்து ஔரஸ புத்திரனுக்கு நான்குபங்கும், ஸ்வீகார புத்திரனுக்கு ஒருபங்கு வீதம் கிடைக்கும். இரண்டு ஔரஸ புத்திரர்கள் பிறந்துவிட்டால் குடும்ப சொத்தை ஒன்பது பங்குவைத்து ஒவ்வொரு ஔரஸபுத்திரனுக்கு நான்குபங்கும் ஸ்வீகார புத்திரனுக்கு ஒருபங்கு வீதம் கொடுக்கப்படும். பல ஔரஸ புத்திரர்கள் பிறந்துவிட்டால் ஸ்வீகார புத்திரனுடையபங்கு மிகவும் குறைந்துவிடுகிறது. (இ. லா. ரி. 17 பம் 100.)

மாணு:—இந்தவிதி நான்காவது வகுப்பாராகிய சூத்திரர்களுக்கு சம்மந்தப்படுமா?

பு:—சூத்திரர்களுக்குள் அவ்வித வித்தியாசமில்லை. அவர்களில் ஸ்வீகாரபிள்ளையும் சொந்தபிள்ளையும் ஸமபாத்தி யஸ்தர்களாகவேயே யிருக்கிறார்கள். (இ. லா. ரி. 4 ம. 272.)

மாணு:—மைனராயிருப்பவர்கள் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

பு:—மைனர்களாகயிருந்தாலும், ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும் நோக்கம் இன்னதென்று அறிந்து கொள்ளக்கூடிய பகுத்தறிவை அடைந்திருந்தால் அவர்கள் ஸ்வீகாரம் செய்துக்கொள்ளலாம் அல்லது தானிறந்தபிறகு ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி தன்பெண்சாதிக்கு அனுமதி கொடுக்கலாம் (15 ஸ்தர்லாண்ட்ஸ் வீக்லி ரிப்போர்டர் 548; இ. லா. ரி. 1-கல் 289; 15 பம் 565; 19 ஸ்தர். வீ. ரி. 127; 3. இ. அ. 83)

மாணு:—மைனர்களாக இருக்கிற விதவைகள் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

161195

பு:—புருஷனுடைய அனுமதி பெற்றுக்கொண்டிருக்கிற ஒரு மைனர் விதவையும் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம். (18 கல் 69)

குறிப்பு:-ஆனால் ஸர்க்காரால் (கோர்ட் ஆப் வார்ட்ஸாரால்) பாதுகாக்கப்பட்டு வரப்பட்ட மைனர்கள், மேல்சண்டவிதம் செய்வதற்கு ஜில்லாகலெக்டர் மூலமாக கோர்ட் ஆவ் வார்ட்ஸாருடைய அனுமதியைப் பெறவேண்டும். (இ. லா. ரி. 1. க. 289; இ. லா. ரி. 2. பம் 529; 9. மூ. இ. அ. 289)

மாணு:—ஒரே காலத்தில், 2. 3. ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

பு:—அப்படி எடுத்துக் கொண்டால் செல்லாது (இ. லா. ரி. 12, கல் 406; 686)

மாணு:—ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வது, தம்பதிகள் (ஸ்திரீ புருஷர்) இருவர்களுடைய நன்மையையும் உத்தேசித்துத் தானே செய்கிறது. அப்படியிருக்கிறபடியால் புருஷன் ஸ்திரீ இருவர்களும் ஸம்மதித்த பிள்ளையைத் தான் ஸ்வீகாரம் செய்துகொள்ள வேண்டுமா அல்லது எப்படி?

பு:—ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளவாவது, அல்லது ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை என்றாவது தீர்மானிக்கும் சுதந்தரியம் புருஷனுக்கே ஏற்பட்டுள்ளது. ஆகையால் ஸ்வீகாரம் செய்து கொள்வதற்கு பெண்சாதியினுடைய அனுமதியாவது சம்மதமாவது வேண்டுமென்பது அவசியமில்லை. அப்படி ஸ்திரீயின் ஸம்மதம் அவசியமில்லாமல் விருப்பத்தோடு ஒரு குறிப்பிட்ட பிள்ளையை ஸ்வீகாரம் செய்து கொள்ளுவதற்கு ஸ்திரீ ஸம்மதிக்காவிட்டாலும், அவளுடைய ஸம்மதத்தை எதிர்பார்க்காமலேயே புருஷன் தன் சம்மதம் போல ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம். அப்படிச் செய்துக் கொள்ளும் ஸ்வீகாரம் சட்டப்படி செல்லும் (4. மூ. இ. அ. 2.)

மாணு:—தம்பதிகள் (புருஷன், ஸ்திரீ) இருவர்களில் ஸ்வீகாரம் செய்துகொள்வது, யாருக்காக?

பு:—புருஷன் பொருட்டாகவேயே ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வது.

மாணு:—புருஷன் இறந்தபிறகு அவனுடைய விதவை, அவனுடைய அனுமதியைக்கொண்டு ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுகிறாள். அப்படி எடுத்துக்கொள்ளும் ஸ்வீகாரம், தனக்காகவா அல்லது புருஷனுக்காகவா?

பு:—ஸ்திரீகள் தங்களுக்காக ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள அதிகாரமில்லை. அவர்கள் செய்து கொள்ளும் ஸ்வீகாரம் புருஷனை உத்தேசித்தே யிருக்கவேண்டும். 7. பம். ஹை. கோ. ரி. 553)

மாணு:—புருஷன் அனுமதியின்றி ஸ்வீகாரம் செய்து கொள்ளக்கூடாது என்ற விதியானது எல்லா தேசத்திலும் வழங்கிவருகிறதா?

பு:—மிதிலைதேசத்து ஸ்திரீகள் புருஷன் அனுமதியின்றி தானாகவேயே ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம். மற்றத்தேசத்து ஸ்திரீகள், புருஷன் உத்திரவின்றி புருஷனுக்காக ஸ்வீகாரம் செய்து கொண்டாலும் தனக்காக ஸ்வீகாரம் செய்து கொண்டாலும் அது சொல்லமாட்டாது. (12. மூ.இ. அ. 356.)

மாணு:—ஸ்திரீகள் தங்களுக்காகவேயே ஸ்வீகாரம் செய்துகொள்ளுகிற கேசுகளே கிடையாதா?

பு:—ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வது முக்கியமாய் புருஷனுடைய மோக்ஷ ஸாதனத்தை கருதித்தான் என்பது கொள்கையாகையால்; பம்பாய் இராஜதானியிலுள்ள மகாராஷ்டரதேசங்களில், புருஷன் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று வியக்தமாய் உத்தரவு செய்திருந்தாலொழிய, அவன் ஸ்வீகாரம் செய்துகொள்வதற்கு அனுமதி கொடுத்ததாகவேயே பாவித்து, விதவைகள் யாருடைய அனுமதியும் இல்லாமலேயே ஸ்வயமாக ஸ்வீகாரம் செய்து கொள்வது வழக்கத்திலிருந்து வருகிறது. பொதுவாய் தங்களுக்காகவேயே ஸ்வீகாரம் செய்துகொள்ளும் சுதந்திரம், ஸ்திரீகளுக்கு இல்லாவிட்டாலும், தென்இந்தியாவில்மட்டும் தாஸிகளுக்குள் பெண்களை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும் வழக்கம் வெகு காலமாக பழக்கத்திலிருந்து வருகிறது. இந்த வழக்கத்தை பிரதானமாகக்கொண்டு, ஷை ஸ்வீகாரமும் செல்லத் தக்கதாகவேயேயிருக்கிறது (11. ம. 398; 12. ம, 273.)

குறிப்பு:—இப்படிச் செய்துகொள்ளும் ஸ்வீகாரமானது தன்சொத்து முதலியதுகளை தன் வாரிஸாக அடையவேண்டுமென்ற நோக்கத்துடன் செய்தால்மட்டும்தான் செல்லும் (இ. லா. ரி. 26 பம். 491) அப்படிக்கின்றி விபசார முதலியது செய்வதற்காக ஒரு மைனர் பெண்பிள்ளையை ஸ்வீகாரம் செய்துகொள்ளும்பட்சத்தில், அந்த ஸ்வீகாரம் செல்லமாட்டாது. (இ. லா. ரி. 4. பம். 545; 21. ம. 229)

மாணு:—பிள்ளையை ஸ்வீகாரம் கொடுக்கும் அதிகாரம் யாருக்கு உண்டு?

பு:—தகப்பனுக்கே அதிகாரமின்றி தாயின் ஸம்மதம் தேவையில்லை. (11. பம். ஐ. கோ. ரி. 199)

மாணு:—தாய் - புருஷன் அனுமதியின்றி பிள்ளையை ஸ்வீகாரம் கொடுக்கலாமா?

பு:—கொடுக்கக்கூடாது.

மாணு.—புருஷன் அனுமதியின்றி எப்போதாவது பெண்சாதி ஸ்வீகாரம் கொடுக்கலாமா?

பு:—அடியில்கண்ட ஸந்தர்ப்பங்களில் அப்படி ஸ்வீகாரம் கொடுக்கலாம். (1) புருஷன் இறந்துவிட்டாலுமே (2) வெகுகாலமாக இருக்குமிடம் தெரியாமல், தேசாந்திரம் போய்விட்டாலுமே (3) ஜாதி பிருஷ்டனாகப் போய்விட்டாலுமே (4) ஸன்னியாசியாகப் போய்விட்டாலுமே (5) தீராதபைத்தியக் காரனாகப் போய்விட்டாலுமே கொடுக்கலாம். (இ. லா. ரி. 2. பம். 377.)

மாணு:—தகப்பன், மேல்கண்ட கேசுகளில் உயிரோடிருந்தும் அவனுடைய அனுமதிபெறமல் தாய் ஸ்வீகாரம் கொடுப்பதற்கு என்ன நியாயம்?

பு:—மேல்கண்ட கேசுகளில் தகப்பன் இறந்துபோனவனாகவேயே, சாஸ்திரப்படி பாவிக்கப்படுகிறன்.

மாணு:—புருஷன் இறந்தபிறகு விதவை தன்பிள்ளையை எப்பேர்ப்பட்ட கேசுகளில் ஸ்வீகாரம் கொடுக்கக்கூடாது?

பு:—தன் பிள்ளையை ஸ்வீகாரம் கொடுக்கக்கூடாதென்று, சொல்லிவிட்டு, புருஷன் இறந்துபோயிருந்தால், பிள்ளைகளில் ஒருவரையும் விதவை ஸ்வீகாரம் கொடுக்கக்கூடாது. (இ. லா. ரி. 11. ம 113.)

மாணு:—தாய் தகப்பன் இல்லாத பையன்களை அந்தப் பய்யனுடைய ஜேஷ்ட ஸகோதரன், பாட்டன், பெரிய தகப்பன் சிறிய தகப்பன் முதலியவர்கள் ஸ்வீகாரம் கொடுக்கலாமா?

பு:—தாய் தகப்பன் இல்லாத பையன்கள் ஸ்வீகாரத்துக்கு சாஸ்திரப்படி யோக்கியமானவர்களல்ல. (10 பம். ஹை கோ. ரி. 268 ;6 பம். ஹை. கோ-ரி 83; 2 ம. ஹை கோ-ரி 268) ஆகையால் ஸகோதரன் பாட்டன் முதலியவர்களுக்கு ஸ்வீகாரம் கொடுக்கப்பாத்தியதையில்லை (3- பெங்கால் லா-ரி 337, 10-பம். ஹை-கோ-ரி-235)

மாணு:—தாய் தகப்பன் இல்லாத பையன்களை ஸகோதரன் முதலிய பந்துக்கள் ஸ்வீகாரம் கொடுக்கக்கூடிய ஸந்தர்ப்பம் ஒருபோதும் கிடையாதா?

பு:—அவர்கள் (தாய் தகப்பன்) உயிரோடிருக்கும் போது ஒருவருக்கு தன் பிள்ளையை ஸ்வீகாரம் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்து, ஸ்வீகாரம் கொடுக்கு முன் அவர்கள் திடீரென்று இறந்து போய்விட்டால், மற்றப்பந்துக்கள் அதே நபருக்கு ஸ்வீகாரம் கொடுத்துவிட அதிகாரமுண்டு.

மா:—பின்னும் ஸ்வீகாரத்துக்கு லாயக்கில்லாத பிள்ளைகள் யாவர்.

பு:—ஊமை, குருடு, செவிடு, அங்கஹீனம், குஷ்டரோகம் முதலியவைகளால் பீடிக்கப்படும் பிள்ளைகள்.

மாணு:—ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள உரித்தான பிள்ளைகள் யாவர்.

பு:—தர்மசாஸ்திரப்படி, தன்னுடைய கோத்திரத்தில் அண்ணன் தம்பிகளின் பிள்ளைகள், அல்லது ஸமீப தாயாதிகளின் பிள்ளைகள் இவர்கள் தான் (15 கல். லா. ரி. 405; இ-லா-ரி-3-க 587; 6, பம். ஹை கோ. ரி 70; இ.லா.ரி 10 பம். 80.)

மாணு:—மேலேகண்டவர்கள் நீங்கலாக, பின்னும் தத்து எடுத்து கொள்ளக்கூடாதவர்கள் யார்?

பு:—ஏகபுத்திர ஸ்வீகாரம்; ஜேஷ்ட புத்திர ஸ்வீகாரம் இவைகள் கூடாது. (இ. லா. ரி. 14 பம். 249.)

மாணு:—ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் பிள்ளை சாஸ்திரப்படி எப்படி யிருக்கவேண்டியது.

பு:—(1)ஸ்வீகாரப் பிள்ளை ஐந்துவயதுக்குட்பட்டுயிருக்கவேண்டும் (2) அவனுக்கு ஜனன குடும்பத்தில் (அதாவது அவன் பிறந்த குடும்பத்தில்) சவுளம் (குடுமிவைப்பது) செய்திருக்ககூடாது.

மாணு:—ஏகபுத்திரன் வைத்துக்கொண்டிருப்பவர்கள் ஷை புத்திரனை, தனக்கும் புத்திரனாக வைத்துக் கொண்டு, ஸ்விகாரமாகவும் வேறொருவருக்குக் கொடுக்கலாமா?

பு:—ஜனனபிதாவுக்கும், ஸ்விகார பிதாவுக்கும் அவனே உத்தரகிரியைகள் நடத்தவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டு, ஏகபுத்திரனை வேறொருவருக்கு ஸ்விகாரம் கொடுப்பதும் உண்டு. இப்படிக்கொடுக்கும் ஸ்விகாரத்துக்கு துவியாமுஷியாயண ஸ்விகாரம் என்று பெயர்.

மாணு:—ஒருவன் தன் பெண்சாதிக்கு ஸ்விகாரம் செய்து கொள்ள அனுமதிகொடாமலேயே இறந்துபோய்விட்டான். அவள் ஸ்விகாரம் செய்து கொள்ள, வேறு யாருடைய அனுமதியாவது பெற்றுக்கொள்ளலாமா?

பு:—ஸ்விகாரம் செய்துகொள்ள, தன் ஸ்திரிக்கு அனுமதி கொடாமலேயே ஒருவன் இறந்துபோயிருந்தால், அவனுடைய அனுமதிக்குப்பதிலாக, அவனுடைய தகப்பனார் (ஸ்திரீயின் மாமனார்) அவருமில்லாவிட்டால் அந்த ஸ்திரீயின் மைத்துனர்கள் இவர்களிடமாவது, அனுமதி பெற்றுக்கொண்டு ஸ்விகாரம் செய்துகொள்ளலாம் (12. மூ. இ. அ. 397; இ. லா. ரி. 1. ம. 69; 1. ம. 174.)

மாணு:—ஸ்விகாரம் செய்துகொள்ள அனுமதிகொடுப்பது எவ்விதமிருக்கவேணும்?

பு:—பெண்சாதிக்கு ஸ்விகாரம் செய்துகொள்ள அனுமதி தகுந்தசாக்ஷிகள் முன்புக்கு வாய்மொழியாய் கொடுக்கலாம். (7 மூ. இ. அ. 54, 64.) 10 ரூ. விலையுள்ள முத்திரைக்கடுதாசில் (ஸ்டாம்பில்) அனுமதியை எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுக்கவேண்டும்.

குறிப்பு:—முத்திரைக் கடுதாசியில் எழுதிக் கொடுத்துவிட்டு, ரிஜிஸ்டர் செய்யாமலிருந்துவிட்டால் பிரயோசனமில்லை.

ஸ்வீகாரம்செய்ய அனுமதி உயில் தஸ்தாவேஜு மூலமாய் எழுதிக்கொடுக்கலாம்.

குறிப்பு:—அனுமதி எழுதுகிறதாயிருந்தால், உயிலுக்கு சட்டப்படி முத்திரைக்கடுதாசாவது, ரிஜிஸ்டர் செய்வாவது வேண்டியதில்லை.

மாணு:—புருஷன் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளச் சொல்லி அனுமதி கொடுத்து, ஸ்வீகாரமும் எடுத்துக்கொண்டு, ஷை பிள்ளை இறந்துபோய்விட்டால் என்ன செய்கிறது. இப்பேர்ப்பட்ட கேசுகளுக்கு முன் பந்தோபஸ்து எப்படி செய்து கொள்ளலாம்.

பு:—புருஷன் பெண்சாதிக்கு, ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள அனுமதி கொடுக்கும் போதே, ஸ்வீகாரப் பிள்ளை இறந்து போகும்படி நேரிடுமாகில் இரண்டாவது ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படிக்கும் அவனும் இறந்துபோய் விடுவானாகில் அந்த ஸ்திரீக்கு இஷ்டப்பட்டபடி எத்தனை ஸ்வீகாரம் வேண்டுமோ அத்தனை ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமென்று அனுமதிவாங்கி விடவேண்டும். அப்படியானால் எத்தனை ஸ்வீகாரம் வேண்டுமோ அத்தனை ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம். (இ.லா.ரி. 1.க. 289; இ. லா .ரி. 1. ம. 174; 10. மூ. இ. அ. 279; 4. மூ. இ. அ. 1.)

மாணு:—ஒருவனுக்கு 2 பெண்சாதிகளிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்துகொள்ள அனுமதி கொடுக்கலாமா?

பு:—அப்படி அனுமதிகொடுத்தால் அது செல்லமாட்டாது அப்படி அனுமதி கொடுத்து, 2 பெண்சாதிகளும் தனித்தனியே வெவ்வேறு பிள்ளைகளை ஸ்வீகாரம் செய்து கொள்ளாமல், ஒருத்தி மட்டும் ஸ்வீகாரம் செய்து கொண்டாலுமே, மேல்கண்ட சட்டப்படி செல்லக்கூடாத அனுமதியின் பேரில் செய்து கொண்ட ஸ்வீகாரம் ஆகையால்; இந்த ஸ்வீகாரமும் செல்லமாட்டாது (இ. லா. ரி. 19; க. 513.)

மாணு:—ஒரு அவிபக்த குடும்பத்தில் அநேகம் ஸபிண்டர்களிருக்கிறார்கள் அதில் ஒருவன் இறந்து போகிறான் அவன் பெண்சாதியை ஸ்வீகாரம் செய்து கொள்ள வேண்டாமென்று சொல்லிவிட்டு இறந்து போகிறான். அப்பால் உயிருடன் ஷை குடும்பத்திலிருக்கும் ஸபிண்டர்கள் அனைவரும் அந்தவிதவை ஸ்வீகாரம் செய்துகொள்ள ஸம்மதிக்கிறார்கள். அவள் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

பு:—ஸ்வீகாரம் செய்து கொள்ளக் கூடாது. இப்பேர்பட்ட விஷயத்தில் மாமனார் முதலிய யாருடைய அனுமதியும் உபயோகப்படமாட்டாது.

மாணு:—ஒரு அவிபக்த குடும்பத்தில் அநேகம் ஸபிண்டர்களிருக்கிறார்கள். புருஷன் ஸ்திரீக்கு ஸ்வீகாரம் செய்து கொள்ள அனுமதி கொடுக்காமல் இறந்து போய்விடுகிறான். அந்த விதவை ஸ்வீகாரஞ்செய்து கொள்ள ஸபிண்டர்களில் பெரும்பான்மையோர் ஸம்மதிக்கிறார்கள். சிலர் ஸம்மதிக்கவில்லை. ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

பு:—எல்லா பாகஸ்தர்களுடைய அனுமதியையும் பெற்றுக் கொண்டுதான் ஸ்வீகாரம் செய்துகொள்ள வேண்டும் இல்லாவிடில் அந்த ஸ்வீகாரம் செல்லமாட்டாது. (1. ம. 69; 26. ம. 267)

மாணு:—அவிபக்த தாயாதிகளிலாவது; விபக்த தயாதிகளிலாவது; ஸ்வீகாரம் செய்துகொள்ள அனுமதி கொடுக்க மறுதளிப்பவர்களுக்கு, திரவியத்தைக் கொடுத்தோ அல்லது வேறு நியாயமில்லாத வழிகளினாலோ அவர்களுடைய அனுமதியும் பெறப்படுகிறது. அப்போது ஸ்வீகாரம் செய்து கொண்டால் செல்லுமா?

(இன்னும் வரும்.)

REVIEW OF BOOKS.

புஸ்தக ஆராய்ச்சி

RATNA PRAKASH.

ரத்தின பிரகாசம்:—இப்பெயர் வாய்ந்த புத்தகம் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது.

இதன் ஆசிரியர் Mr. T. B. ஜயசங்கர் தேவே அவர்கள் மிகுந்த பிரயாசையுடனும் ஊக்கத்துடனும் இவ்வருமை நூலை பதிப்பித்திருக்கிறதாகத்தெரிகிறது. இதிலிருக்கும் விஷயங்களை வாசித்தால் சாதாரண ஜனங்களும் (ஸதிரீ-புருஷர்கள்) நவரத்தினங்களின் குண தோஷங்களை அறிந்துகொண்டு, அவைகளை மதிப்பிடவும் கூடுமான, சக்தி உண்டாவதுடன் அவைகளை அணிந்துகொள்வதினாலுண்டாகும் நன்மை தின்மைகளையும் எளிதில் அறிந்துகொள்ளுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்புத்தகம் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. இது வேண்டுவோர்கள், தஞ்சாவூர் ஜே. தேவே அண்டு கம்பெனியாருக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம். இதன் விலை அணா 8 ஆகும்.

GUJARATI TYPE FOUNDRY.

குஜராதி டைப் பவுண்ட்ரி:—இக்கம்பெனியார் நமக்கு அனுப்பிய அழகானவும், நேர்த்தியான பயிண்டும் செய்யப்பட்ட பெரிய காட்லாக் ஒன்றை நாம் பார்வையிட்டனம். அதில் குறிக்கப்பட்டிருக்கும் பலவித மாதிரி எழுத்துகளும் (Types) பார்டர்களும், சின்னங்களும், (Emblems) ப்ளாக்குகள் முதலிய அச்சுவேலைக்குரிய எல்லா சாமான்களும், வெகு சுத்தமாகவும், ஒழுங்கானவைகளாகவும் மேல் நாட்டார்களின் வேலைகளுக்குச் சமான்மானவைகளாகவும் செய்துவருகிறதாகதென்படுகிறது. விலை விஷயத்திலும் சகாயமாகவேயிருக்கிறது.

இவர்களின் விலாசம்:—கிர்கான், கெய்வாடி, பம்பாய்.

DIALOGUE.

சம்பாஷணை.

(சாக்ஷியம் சொல்லுவதைப் பற்றி.)

இடம்:—திண்டுக்கல் புஷ்ப பங்களா.

(வக்கீல் ஒரு பெரிய கேசு சம்மந்தமாக டிஸ்ட்ரிக்டுக் கோர்ட்டாரால் கமிஷனராக நியமுகம்செய்து அனுப்பப்பட்டு புஷ்ப பங்களாவில் ஜாகை வைத்துக்கொள்ளுகிறார்.)

சூரியநாராயணய்யர்:—(புஷ்ப பங்களாவின் மானேஜர்) நமஸ்காரம், தங்களுக்காக இந்த பங்களாவை திட்டம் செய்திருக்கிறது. இங்கே ஜாகை வைத்துக்கொள்ளத் தயவுசெய்யவேண்டும்.

வக்கீல்:—மிகவும் சந்தோஷம். அப்படியே செய்கிறேன்.

சூரி:—வென்னீரும் தயாராக யிருக்கிறது—ஸ்நாநம் செய்யலாம்.

வ:—ஸ்நானமாகிவிட்டது, காபி சாப்பிட்டாகி விட்டது. உமது எஜமானர், ஸோமஸ்கந்த அய்யரவர்களை நான் பார்க்க விரும்புவதாகத் தெரியப்படுத்தும்.

சூரி:—எஜமானவர்கள் காபிசாப்பிட்டானஉடன் வந்து தெரிவிக்கும்படி உத்திரவு செய்திருக்கிறார்கள். இதோபோய் அவர்களைக் கூட்டி வருகிறேன்.

ஸோ:—சூரிய நாராயணய்யரே, வக்கீல் அய்யரவர்களுக்கு வேண்டும்ஸௌகரியங்களெல்லாம் செய்து கொடுத்தீரா! அவர்கள் இப்போது என்ன செய்கிறார்கள்.

சூரி:—நமது புஷ்ப பங்களாவில் வேண்டும் ஸவுகரியங்கள் செய்து கொடுத்தேன், அவர்கள் ஸ்நாநம் செய்து காபிசாப்பிட்டாச்சுது. தங்களைப்பார்க்க அபேக்ஷிக்கிறார்கள்.

(ஸோமஸ்கந்தய்யரவர்கள் வக்கீலிடம் வருகிறார்கள்.)

ஸோ:—நமஸ்காரம் க்ஷேமமா, நான் செய்த பாக்கியமே பாக்கியம், தாங்கள் இந்த இடத்தில் வரும்படி நேரிட்டது என் நல்ல அதிர்ஷ்டந்தான்.

வக்:—நமஸ்காரம், குழந்தைகளெல்லோரும் க்ஷேமமா! தங்களுடைய புஷ்ப பங்களாவின் வஸதியைப் பற்றி வெகுநாளாய் கேழ்விப் பட்டிருக்கிறேன் அதை வந்து நேரில் பார்த்து ஒருநாளாவது அதில் தங்கியிருக்க வேண்டுமென்று வெகுநாளாக அவாவுடனிருந்தேன். இன்று அது லபித்தது நான் இவ்விடம் வந்தவேலையை முடித்துவிட்டு சாயரக்ஷை தங்களை பார்க்கிறேன்.

ஸோ:—அப்படியே செய்வோம். இன்று இரவு போஜனம் தயார் செய்கிறேன். எனது ஜாகைக்கு விஜயம் செய்யக் கேட்டுகொள்ளுகிறேன்.

வக்:—அபபடிச் செய்வதில் என்ன தடையிருக்கிறது மிகவும்சந்தோஷம்.

(வக்கீல் மாலை 5-மணிவரை கமிஷனராகப் போனவேலையைப்பார்த்து முடித்து விடுகிறார்.)

ஸோ:—வந்த ஜோலி முடிந்ததா ?

வக்:—மிகவும் துறட்டான வேலை, ஒருவாறாக முடிந்தது.

ஸோ:—தங்களிடம் சில விஷயங்களைக் கேட்டு அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

வக்கீல்:—வேண்டும் விஷயங்களைக் கேளுங்கள் சொல்லுகிறேன்.

ஸோ:—எனக்கு இப்போது 50-வயதாகிறது இதுவரை ஒருகோர்ட்டுக்கும் நான் சாக்ஷியாகப்போனதில்லை ஜூலை 13உ வாயிதாவுக்கு ஜில்லா கலெக்டர் ஆபிசிலிருந்து சாக்ஷி ஸம்மன் வந்திருக்கிறது. கோர்ட்டில் ஸாக்ஷியாய்ப் போனால் வக்கீல்கள் தாருமாறாய் கேழ்வி கேழ்ப்பார்களாம், சொல்லாவிட்டால் அதட்டிக் கேழ்ப்பார்களாம். கோர்ட்டார் வேறுகேழ்வி கேழ்ப்பார்களாம் அவர்அவர்களிஷ்டம்போல ஜவாப் சொல்லாவிட்டால் சாக்ஷியாகப் போகிறவனுக்கு இடையூரு நேரிடுமாம். ஆகையால் சாக்ஷியாய் போகிறவர்கள் நடந்து கொள்ளவேண்டிய விஷயங்களைப்பற்றிக் கேழ்க்கிறேன் சொல்லத்தயவு செய்யவேணும்.

வக்:—தாங்கள் பினல்கோடு முதலியதுகள் தமிழிலிருப்பவைகளைக்கூட வாங்கி படிக்கிறதில்லையோ?

ஸோ:—நான் ஏதோ என் காலத்தை கிருஷ்ணா, ராமா, வென்று பகவன்னாமங்களைச் சொல்லிக் கொண்டு காலத்தை நடத்தி வருகிறேன். பினல் கோடு எனக்கு எதற்கு.

வ:—சென்னப்பட்டணம் பிராட்வே 1/149-A, கட்டிடத்தில் இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ் என்றுயிருக்கிறது அதில் ஒரு சட்டபத்திரிகை பிரசுரம் செய்துவருகிறார்கள். ஷை பத்திரிகையில் ஜனங்களுக்கு, ஸிவில், கிரிமினல், ரிவினியூ விஷயங்கள் ஸம்பந்தமாயும், ரிவினியூ போர்டு உத்தரவுகள், கவர்மெண்டு உத்தரவுகள், பல ஹைக்கோர்ட்டு தீர்மானங்கள், முதலியது ஸம்மந்தமாயும், தெரிந்திருக்கவேண்டிய ஸகல சட்ட விஷயங்களும் பிரசுரம் செய்யப்பட்டுவருகின்றன.

ஸோ:—அதற்கு வருஷச்சந்தாத் தொகை எவ்வளவு ?

வ:—மிகவும் குறைந்த சந்தா-வருஷம் ஒன்றுக்கு ரூ 6—0—0 தான்.

ஸோ:—அதில்நான் மேலேசொன்ன விஷயங்கள் அடங்கி யிருக்கிறதா ?

வ:—1917-ம் ஹு ஜூன்மாத பத்திரிகையில் முதல் பாகம் 92-வது பக்கத்தைப் படித்தால் இந்த விஷயமிருப்பது தெரியவரும்.

ஸோ:—அப்படியானால் நாளைக்கே ஷை இந்திய சட்ட கேஜெட்டுக்கு ஒரு சந்தாதாராகச் சேர்ந்து கொள்ளுகிறேன். இப்போது கேழ்கும் விஷயங்களுக்கு மாத்திரம் பதில் சொல்ல தயவு செய்ய வேணும்.

வ:—அப்படியே செய்கிறேன்.

ஸோ:—சாக்ஷியாய்க் கோரப்பட்டவன், கேழ்க்கப்பட்ட கேழ்விகளுக்கு ஜவாப் சொல்ல மாட்டேனென்று சொல்லிவிட்டால் என்னநடக்கும்.

வ:—சாக்ஷி சொல்லுகிறதற்காகவாவது, அல்லது ஏதாவது தஸ்தா வேஜு அல்லது வேறு, எந்த ஸாமானையாவது கோர்ட்டுமுன்புக்கு ஆஜர்செய்வதற்காகவாவது, சாக்ஷியாய்கோரப்பட்ட ஒருவன் போதுமான முகாந்திரமில்லாமல் கேழ்க்கப்பட்ட கேழ்விகளுக்கு ஜவாப் சொல்ல மாட்டேனென்றாலும், ஷை தஸ்தாவேஜு அல்லது சாமானை ஆஜர்செய்ய மாட்டேனென்றாலும், அந்தக்கோர்ட்டார் அந்த சாக்ஷியை ஒருவாரத்துக்கு மேல் போகாத காலத்திற்கு அந்தக் கோர்ட்டு உத்தியோகஸ்தன் வசம் ஒப்புவித்து காவல் படுத்தலாம்.

ஸோ:—கோர்ட்டு உத்தியோகஸ்தனிடம் ஒப்பிவித்த பிறகு சாக்ஷிகேட்ட கேழ்விக்கு ஜவாப் சொல்லவோ, அல்லது கேழ்க்கப்பட்ட சாமானை ஆஜர் செய்யவோ சம்மதித்து விட்டால் என்னநடக்கும்.

வ:—அந்த ஒருவாரத்துக்குள் எப்பொழுது கேட்ட கேழ்விக்கு ஜவாப் சொல்லவோ, அல்லது ஆஜர் செய்யச்சொன்ன தஸ்தாவேஜை ஆஜர் செய்ய ஷை சாக்ஷி சம்மதிக்கிறானோ அப்பொழுது அவன் அந்தக்காவலிலிருந்து விடுதலை செய்யப்படுவான்.

ஸோ:—அந்த ஒருவாரத்துக்குள் அந்தசாக்ஷி அப்படிச் செய்ய சம்மதிக்காவிட்டால் என்ன நடக்கும்.

வ:—அந்த சாக்ஷி ஒருவாரத்துக்குள் அப்படிச் செய்ய சம்மதிக்கா விட்டால், கி. பு. கோடு 480 அல்லது 482-வது பிரிவுகளின் படி நடவடிக்கை நடத்தப்படும். (கி. பி. கோடு, பிரிவு 485.)

ஸோ:—கி. பு. கோடு 480-வது பிரிவு என்ன ?

வ:—இ. பி. கோடு 175, 178, 179, 180, பிரிவுகளின் ஸங்கதி இன்னதென்பதைப்பற்றி சென்ற ஜூன் மாசத்து சட்ட கெஜட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இ. பி. கோடு 228-வது பிரிவு இதனடியில் கண்டபடி :—ஒருஸர்க்கார் உத்தியோகஸ்தன் நியாய விசாரணை செய்து கொண்டிருக்கும் பொழுது, அவரிடம் அவமரியாதையாக நடந்து கோபமூட்டினாலும், அவரை வேலை செய்யவொட்டாது இடஞ்சல்செய்தாலும் 6மீ வரை வெறுங்காவல் தண்டனைக்காவது, அல்லது ரூ. 1000 வரை அபராத தண்டனைக்காவது உள்படுத்தப்படுவான்.

ஒரு ஸிவில், கிரிமினல் அல்லது ரிவினியூக் கோர்ட்டார் முன்பாக, இ. பி. கோடு 175, 177, 179, 180, அல்லது 228.வது பிரிவுகளின்படிக்குள்ள குற்றஞ் செய்யப்பட்டால் அப்படிக் குற்றம் செய்பவன் ஐரோப்பியனா யிருந்தாலுமே அவனை உடனே பிடிக்கும்படி செய்து காவலில்வைக்கலாம். அன்று கோர்ட்டுக்கலையுமுன் கோர்ட்டாருக்கு அப்படிச் செய்யத் தோன்றினால் அந்தக் குற்றத்தை தன் பரிசீலனையில் எடுத்துக்கொண்டு அந்த நபர் ரூ. 200—க்குமேல் போகாத அபராதம் கொடுக்கும்படிக்கும் தவறினால் ஒருமாதம் காவலிலிருக்கும்படிக்கும் தண்டனை விதிக்கலாம். (கி. பு. கோடு 480-வது பிரிவு.)

குறிப்பு :—பொதுவாய், இந்து தேசத்துப் பிரஜைகள் ஸிவில், கிரிமினல், ரிவினியூ கோர்ட்டு அதிகாரிகளா யிருந்தால், அவர்கள் குற்றத்திற்காக, ஐரோப்பியராக யிருக்கப்பட்டவர்களை விசாரித்து தண்டிக்கப்படாதென்பது சட்டம். ஆனால் மேலே கண்ட நிபந்தனை, இந்த விதிக்கு விலக்கு.

ஸோ:—கி. பு. கோடு 482-வது பிரிவென்பது என்ன?

வ:—கி. பு. கோடு 480-வது பிரிவுப்படி, தான் விதிக்கக்கூடிய மேல்கண்ட தண்டனைகாணாதென்று தோன்றினால் அதிகத் தண்டனை விதிப்பதற்காக மேல்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுக்கு இந்தக் கேசை அனுப்பிவிடவேண்டும்.

ஸோ:—இதற்கு இ. பி. கோடுப்படி தண்டனையும் உண்டோ.

வ:—சாக்ஷியாயிருப்பவன் தன்வசம் யிருக்கப்பட்ட தஸ்தாவேஜை ஆஜர் செய்யமாட்டேனென்று சொல்வது இ. பி. கோடு 175-வது பிரிவுப்படி குற்றம்.

(சாக்ஷியாயிருப்பவன் கேட்ட கேழ்விக்கு ஜவாப் சொல்லமாட்டேனென்றால், அது இ. பி. கோடு 179-வது பிரிவிப்படி குற்றம். இவைகளின் தண்டனை வகையறாவைப்பற்றி ஜூன் மாசத்து ஸஞ்சிகையில் சொல்லப்பட்டிருக்கிறது.)

ஸோ:—ஸாக்ஷியாய் ஆஜராகும் ஒருவனை சில கேழ்விகள் கேழ்கப்படுகிறது. அந்தக் கேழ்விகளுக்கு சாக்ஷி ஜவாப் சொல்லும் விஷயத்தில், ஷை ஜவாப்பு ஸாக்ஷியை தண்டனைக்குள்ளாக்கக் கூடியதாகயிருக்கிறது அப்பேர்ப்பட்ட கேழ்விகளுக்கு ஸாக்ஷி ஜவாப்பு சொல்லி தீரவேண்டுமா ?

வ:—ஒரு ஸாக்ஷி கேழ்வி கேழ்கப்படும்பொழுது கேழ்கப்படுகிற கேழ்விகளுக்குச் சொல்லும்

ஜவாப்பானது அந்த சாக்ஷியை குற்றவாளியாக்கக் கூடியதாக யிருந்தாலுமே அல்லது தண்டனைக்குள்ளாக்க கூடியதாக யிருந்தாலுமே அந்தக் கேழ்விக்கு அவன் ஜவாப் சொல்லித் தான் தீரவேணும் ஆனால் கட்டாயத்தின் பேரில் சொல்லப்பட்ட ஜவாப்பினால் ஏற்படும் ஸங்கதியை வைத்துக்கொண்டு, அந்த சாக்ஷியைப் பிடிக்கவாவது அல்லது வேறு அவனுக்கு விரோதமான கிரிமினல் நடவடிக்கையில் இந்த வாக்குமூலத்தை உபயோகப்படுத்தவாவது கூடாது. ஸாக்ஷி சொன்ன ஜவாப்பானது பொய்யாக ஏற்பட்டால் பொய் வாக்குமூலங் கொடுத்ததற்காக பிராஸிக்யூஷன் செய்யலாம் (ஸாக்ஷி யச்சட்டம் 132-வது பிரிவு)

ஸோ:—ஸாக்ஷியாக ஆஜராகும் ஒருவனை வக்கீல் பிசகான கேழ்விகளைக் கேழ்கிறார்: அந்தக் கேழ்விகளுக்கு ஜவாப் சொல்ல ஸாக்ஷிக்கு மனதில்லை அப்பேர்ப்பட்ட ஸந்தர்ப்பத்தில் என்ன செய்யலாம்.

வ:—ஸாக்ஷியைக் கேழகப்படுகிற கேழ்வியானது சரி, அல்லது சரியில்லை யென்று தீர்மானம் செய்யும் அதிகாரம் கோர்ட்டாருக்கு யிருக்கிறது. (சாக்ஷியச்சட்டம் 148-வது பிரிவு) ஆகையால் ஷை சாக்ஷி, கேழ்கப்படும் கேழ்விகள் சரியில்லாத கேழ்விகளென்றும் ஷை கேழ்விகளுக்குத் தான் ஜவாப் சொல்ல வேண்டுமாவென்று கோர்ட்டாரிடம் கேழ்கலாம். கோர்ட்டார் பைஸல் படி நடந்து கொள்ளலாம்.

ஸோ:—ஒருவன் வாதி தரப்பில் சாக்ஷியாக இஜராகிறான் என்று வைத்துக்கொள்வோம் அந்த சாக்ஷியை பிரதிவாதி தன் வக்கீலைக்கொண்டு "நீ கள்ளுக்குடிக்கிற வழக்கம் உண்டல்லவா" என்பதுபோலொத்த தப்பான கேழ்விகளைக் கேழ்கச்சொல்லுகிறான் அப்பேர்ப்பட்ட கேழ்விகளை வக்கீல் கேழ்க சட்டம் இடம் கொடுக்குமா?

வ:—ஒரு சாக்ஷியினுடைய நடத்தையைப்பற்றி ஸாக்ஷியைக் கேழ்வி கேழ்க்கும்பொழுது, கேழ்வி கேழ்கப்படும் சங்கதி உண்மை யென்று நிதானிக்கப் போதுமான காரணமிருந்தாலொழிய அந்தக்கேழ்வியைக் கேழ்க்ககூடாது. (சாட்சிய சட்டம் 149-வது பிரிவு.)

ஸோ:—போதுமான காரணமின்றி தப்பான கேழ்விகளை ஒரு வக்கீல் கேட்டால் என்ன நடக்கும்?

வ:—ஒரு ஸாக்ஷியினுடைய நடத்தை விஷயமாக ஒரு பாரிஸ்டர், ப்ளீடர், வக்கீல் அல்லது அட்டர்ணி போதுமான காரண மில்லாமல் அனாவசியமான கேழ்வியைக் கேட்டதாக ஒரு கோர்ட்டார் அபிப்பிராயப் பட்டால் அவருடைய (அந்த பாரிஸ்டர் வகையறாவுடைய) நடத்தையைப் பற்றி, ஹைக்கோர்ட்டார் அல்லது, அந்த பாரிஸ்டர் வகையறா வழக்கமாகப் பேசி வருகிறாரோ அந்தக் கோர்ட்டாருக்கு இந்த சங்கதியைப்பற்றி ரிப்போர்ட்டுச் செய்யலாம் (சாக்ஷியச் சட்டம் 150-வது பிரிவு)

ஸோ:—மரியாதைக்கு குறைவான அல்லது இகழ்சியமானதென்று நினைக்கப்படுகிறகேழ்விகளை சாக்ஷிகளை எப்போது கேழ்க்கும்படி இடங் கொடுக்கப்படும்? எப்போது இடங் கொடுக்கப்படமாட்டாது ?

வ:—ஒரு சாக்ஷியை கேழ்க்கப்படுகிற கேழ்வியானது எந்தக் கேஸ் விஷயமாய் அந்த சாக்ஷியை விசாரிக்கப்படுகிறதோ அந்தக் கேசின் சங்கதிக்குக் கொஞ்சம் சம்மந்தமுள்ளதாக யிருந்தாலும், அந்தக் கேசின் விவாதாம்சங்களுக்கு நேரில் சம்மந்தப்பட்டதா யிருந்தாலொழிய அந்தக் கேழ்விகளை கோர்ட்டார் மரியாதைக்குறைவான அல்லது இகழ்ச்சியான கேழ்விகளென்று நினைத்தால் அந்தக் கேழ்விகளைக் கேழ்க்க வொட்டாமல் தடுத்துவிடலாம் (சாக்ஷியச்சட்டம் 151-வது பிரிவு)

அல்லாமலும் ஒரு சாக்ஷியை அவமானம் செய்ய வேண்டுமென்றாவது அல்லது இடஞ்சல் செய்ய வேண்டு மென்றாவது எண்ணங்கொண்டு, சரியான கேழ்வியையுங் கூட அனாவசியமானதும் கோபம் மூட்டக்கூடியதுமான விதமாகக் கேட்டால் அந்தக் கேழ்வியைக் கேழ்க்கவொட்டாமல் கோர்ட்டார் தடுத்துவிடலாம். (சாக்ஷியச்சட்டம் பிரிவு 152)

ஸோ:—கோர்ட்டில் ஸாக்ஷியை விசாரிக்கும் கிரமம் எப்படி?

வ:—ஒரு சாக்ஷியை எந்தப் பக்கத்தில் சாக்ஷியாகக் கோரப்படுறதோ அந்தக் கக்ஷிக்காரர் அல்லது அவர் பக்கம் வக்கீல் அந்த சாக்ஷியை விசாரிப்பார். பின்னீடு எதிர் கக்ஷிக்காரர் அல்லது அவர் பக்கம் வக்கீல் அந்த சாக்ஷியை குறுக்குக்கேழ்வி (கிராஸ்) கேழ்ப்பார். அந்தக் குறுக்குக்கேழ்விக்கு ஜவாப்பாகச் சொல்லப்பட்ட சங்கதியில் ஸந்தேகாஸ்பதமாக ஏதாவது ஏற்பட்டால் அதை விவரிக்கும்பொருட்டு அந்த சாக்ஷியை சாக்ஷி கோறின கக்ஷிக்காரர் அல்லது அவர் பக்கம் வக்கீல் மறுபடியும் அந்த சாக்ஷியை கேழ்வி கேழ்க்கலாம் (சாக்ஷயச்சட்டம் பிரிவு 138)

ஸோ:—ஒரு கக்ஷிக்காரன் தான் கோறின சாக்ஷியைத் தானே எப்போதாவது குறுக்குக்கேழ்வி கேழ்க்கலாமா?

வ:—ஒரு சாக்ஷியைத் தன் பக்கத்தில் கோறின ஒரு கக்ஷிக்காரனுக்கு அந்தச் சாக்ஷி எதிர் கக்ஷிக்காரன் பக்ஷமாக யிருந்துகொண்டு தனக்கு விரோதமாகத்தான் சொல்லுவானென்று சாக்ஷியைப் பெட்டியிலேற்றி விசாரிக்க ஆரம்பித்தபிறகு

தெரிந்துகொண்டால் அது விபரத்தைக்கோர்ட்டாரிடம் தெரிவித்து, அவர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு அந்த சாக்ஷியை வேண்டும் குறுக்குக் கேழ்விகள் கேழ்க்கலாம் (சாக்ஷியச் சட்டம் பிரிவு 154.)

ஸோ:—சாக்ஷிகளை கோர்ட்டாரும் தனக்குத் தோன்றின கேழ்விகளைக் கேழ்ப்பாரகளென்று சொல்லுகிறீர்களே அதன் விபரம் எப்படி?

வ:—கேசின் உண்மையை அறிந்துகொள்ளும் பொருட்டு கோர்ட்டார் கேசுக்கு சம்மந்தமுள்ளவும் சம்மந்தமில்லாதவுமான தனக்குத் தோன்றுகிற எந்தக் கேழ்விகளையும் எந்த மாதிரியாகவும் எந்தக் காலத்திலும் சாக்ஷிகளையாவது கக்ஷிக்காரர்களையாவதுகேழ்க்கலாம் அவர்களை அவர்களிடத்திலிருக்கிற ஒரு தஸ்தாவேசு அல்லது மற்ற சாமானை தன் முன்புக்கு ஆஜர்செய்யும்படி உத்தரவு செய்யலாம்.

ஸோ:—அப்படி கோர்ட்டாரால் கேழ்க்கப்படும் கேழ்விகளின் பேரில் இருதரப்பு கக்ஷிக்காரர்களாவது அவர்கள் வக்கீல்களாவது குறுக்குக் கேழ்விகள் கேழ்க்கலாமா?

வ:—கோர்ட்டாரால் கேழ்க்கப்படும் கேழ்விகளையாவது, செய்யப்படும் உத்தரவுகளையாவது கக்ஷிக்காரர்களாவது அவர்கள் பக்கம் வக்கீல்களாவது தடுக்கப் பாத்தியதை இல்லை. அப்படிக் கேட்ட கோர்ட்டுக் கேழ்விகளின்பேரில் கோர்ட்டார் அனுமதி யில்லாமல் குறுக்குக் கேழ்வி கேழ்க்கக் கூடாது. சாக்ஷிகளைக் கேழ்வி கேழ்க்கும் விஷயத்தில் மேலே சொன்ன சாக்ஷியச்சட்டம் 148 149-வது பிரிவுகளின் நிபந்தனைகள் கோர்ட்டாருக்கும் சம்மந்தமுண்டு.

ஸோ:—ஸெஷ்ஷன்ஸ் கோர்ட்டில் ஜூரி அல்லது அஸெஸ்ஸரும் ஜட்ஜ்போலவேயே யிருந்து கேசை விசாரிக்கிறார்களே. அவர்கள் சாக்ஷிகளை குறுக்குக் கேழ்விகள் கேழ்க்கலாமா?

வ:—ஜூரி அல்லது அஸெஸர்களை வைத்துக்கொண்டு விசாரிக்கப்படும் கேசுகளில், சாக்ஷிகளை அவர்களும் அவர்களுக்கு அவசியமென்று தோன்றுகிற கேழ்விகளைக் கேழ்க்கலாம். (சாக்ஷிய சட்டம் பிரிவு 166.)

ஸோ:—ஒருசாக்ஷி சொல்லும் சாக்ஷியமானது, உண்மையானதென்றாவது பொய்யானதென்றாவது தோன்றினால் கோர்ட்டார் அதுவிஷயத்தில் எவ்விதமாக நடத்துவார்கள்.

வ:—சாக்ஷி சொல்லும்போது ஒரு சாக்ஷியினுடைய நடத்தையைக் குறித்து அந்தக்கோர்ட்டாருக்குத் தோன்றும் அபிப்பிராயத்தை அந்தச் சாக்ஷியின் வாக்கு மூலத்திலேயெ குறித்துவைக்கக் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. (கி. பு. கோடு பிரிவு 363) ஆகையால் கோர்ட்டார் ஸந்தேகிக்கக்கூடிய விதமாக, சாக்ஷிக்காரர்கள் சாக்ஷி சொல்லும் போது நடந்துகொள்ளக்கூடாது. மேலும் ஷை கேசின் தீர்ப்பில், கோர்ட்டார் தன் அபிப்பிராயத்தில், இன்ன சாக்ஷி, மிகவும் கௌரவமுள்ள சாக்ஷியென்றும் உண்மையைப் பேசியிருப்பதாகவும், இன்ன சாக்ஷி பொய்சொல்லி யிருப்பதாகவும் எழுதலாம். பொய்சொல்லியதாக எழுதியிருந்தால் அந்தச் சாக்ஷியின்பேரில், பொய்வாக்குமூலங் கொடுத்ததற்கு தண்டிக்கும்பொருட்டு பிராஸிக்யூஷன்செய்ய ஷை கோர்ட்டார் அனுமதி கொடுக்கவும் கூடும்.

ஸோ:—கோர்ட்டாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கையெழுத்து வாங்கவேண்டுமென்று சட்டத்தில் (கி. பு. கோடில்) இல்லையென்று சொல்லுகிறீர்களே, அதைப்பற்றி எங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

வ:—ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களிடம் சாக்ஷிகள் கொடுத்த வாக்குமூலத்தில், அவர்களிடம் (சாக்ஷிகளிடம்) கையெழுத்து வாங்கவேண்டுமென்று சட்டத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு 1862-ம் ஞு மார்ச்சு மீ 7வ போட்ட புரொஸீடிங்ஸில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸோ:—ஸர்க்கார் உத்தியோகஸ்தரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கையெழுத்துப் போடமாட்டேனென்றால் என்ன நடக்கும்.

வ:—ஸர்க்கார் உத்தியோகஸ்தரிடம் கொடுத்தவாக்குமூலத்தில் கையெழுத்துப் போடமாட்டேனென்றால், இ. பி. கோடு 180-வது பிரிவிப்படி 3 மீ வெறுங்காவல் அல்லது ரூ. 500 அபராதம் அல்லது இரண்டு தண்டனையும் விதிக்கலாம். சாக்ஷிகள் பொய்யானவாக்குமூலம்கொடுத்தால் இ.பி. கோடு 193-வது பிரிவுப்படி குற்றமாகும். இது விபரங்கள் முன்னமேயே 1917-ம் ஞுத்து ஜூன் மீ இந்திய சட்ட கெஜெட்டில் விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை வாங்கி படித்திருந்தால் உங்களுக்கு இது விபரங்கள் நன்றாய் தெரியவரும்.

ஸோ:—போலீசார்கள் அடிக்கடி இந்தக்கிராமத்துக்கு வருகிறார்கள். ஊரில் கொஞ்சம் பெரியவனென்று பெயரிருப்பதால் எந்தக் கேசுகளைப் பற்றியும் வாக்குமூலம் கொடுக்கும்படி கேழ்க்கிறார்கள். வாக்குமூலம் கொடுத்துவிடாமல் இதுவரை தப்பித்துக்கொண்டே வருகிறேன். ஆகையால் போலீசார் முன் வாக்குமூலம் கொடுப்பது விஷயமான சங்கதிகளையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(இன்னும் வரும்)

VILLAGE SHEET.

கிராம ஜனங்களுடைய பக்கம்.

போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் நெம்பர் 58, 1-வது பாரா.

(உட்பிரிவு செய்ய அதிகாரங் கொடுக்கும் விளம்பரம்)

1. இதனால் இதற்கு சம்பந்தப்பட்ட யாவருக்கும் தெரிவிப்பது யாதெனில் தீர்வை யேற்படுத்தப்படாமல் பொது அனுபோகஞ் செய்யப்பட்டு வரும் இனும் சொத்தின் பங்காளிகளெல்லாம் இனுமிலிருந்து அடையக்கூடிய நன்மைகளையும் கவர்ன்மெண்டுக்குச் செலுத்த வேண்டிய குயிட்ரெண்டு (quit-rent) வரியையும் பிரிவினை செய்துகொள்ளத் தமக்குள் ஒப்பந்தஞ் செய்துகொண்டு (ஆனால் இவ்விதமாகப் பிரிக்கப்பட்டு ஒரு நபரால் செலுத்தப்படவேண்டிய குயிட்ரெண்டு 2-அணா அல்லது அதற்கு மேற்பட்டிருந்தாலொழிய கலெக்டரை அங்கீகரிக்கும்படி கேட்கத்தக்கதில்லை), நிலத்தை உட்பிரிவினை செய்ததற்கு அல்லது அனுபவிக்கும் குடிகளிடமிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் அல்லது குத்தகையைப் பிரித்துக்கொண்டதற்கு முழு விபரங்களுங் காட்டி எல்லாரும் கையெழுத்துச் செய்து சரியான ஸ்டாம்பில் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட ஒரு உடன்படிக்கையை கலெக்டர் முன்பாக ஆஜர் செய்து மேற் சொல்லிய உடன்படிக்கையை யாதொரு தவிர்தலுமில்லாமல் எல்லாப் பங்காளிகளும் யாதொரு நிபந்தனைகளுக்கு முட்படுத்தாமல் ஒப்புக்கொண்டதாக உறுதி சொல்லும் விஷயத்தில் அவ்வித சங்கதியைப் பகிரங்கமாக விளம்பரஞ்செய்து அதற்கு யாதொரு ஆட்சேபனையும் சொல்லப்பட்டு ஸ்தாபிக்கப்படாத விஷயத்தில் அங்கீகரிக்கப்பட்டுத் தாக்கல் செய்யப்பட்ட இனுமில் ஒரு தனிப்பங்கிலிருந்து கவர்ன்மெண்டுக்கு வரவேண்டிய தீர்வைக்காக பாக்கிதாரனுடைய இதர சொத்துக்களை விற்றும் போதாமலிருந்தால் ஷை பங்கு ஷை தீர்வைக்காக முதலாவது கட்டுப்பட்டதென்றும் அதற்கப்புறமும் சர்க்காருக்குச் செல்லவேண்டிய தொகையிருந்தால் இனுமிலுள்ள மற்றப் பங்குகளை விற்பதினாலோ அல்லது மற்றப் பங்காளிகளுக்குப் பாத்தியப்பட்ட இதர சொத்தை விற்பனை செய்வதினாலோ அல்லது இரண்டு விதத்தினாலேயும் மற்றப் பங்காளிகளிட மிருந்து வசூலிக்க கலெக்டருக்கு அதிகாரமுண்டென்றும் ஒப்புக்கொள்ள கலெக்டர் தயாராயிருக்கிறார்; (2) கொண்டுவரப்பட்ட விஷயங்களுக்கு ஆக்ஷேபனை செய்யத்தகுந்த கக்ஷிக்காரர்களால் ஆக்ஷேபனை யேற்பட்டால், அதைப்பற்றிக், கலெக்டர் விசாரணை செய்து அவைகளின் சாராம்சத்திற்குத் தக்கப்படி பைசல் செய்வார்.

குறிப்பு. மேற்கண்ட சங்கதி மைனர் இனும் சொத்துக்களுக்கு ஏற்பட்டதல்ல. அவைகள் ரயத்துவாரி நிலத்தைப்போல எல்லாப் பங்காளிகளுடைய கோரிக்கையின்பேரிலும் உட்பிரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு உட்பிரிவும் அதைக் கைப்பற்றி யிருப்பவன்பேரால் தாக்கல் செய்யப்படும். ஆனால் முழு இனும் சொத்துக்கு ஏற்பட்ட தீர்வைக்கும் மொத்தம் குயிட்ரெண்டுக்கும் என்ன விதிப்பு இருக்குமோ அதே வீதிப்பு உட்பிரிவின் பேரிலுள்ள தீர்வைக்கும் அதற்கு ஏற்படுத்தவேண்டிய குயிட் ரெண்டுக்கு மில்லாமலிருக்கும் விஷயத்தில் உட்பிரிவுக்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாது. அப்படிப்பட்ட கேசுகளில் டிவிஷனல் ஆபீஸர் உட்பிரிவு செய்ய அனுமதி கொடுத்து குயிட் ரெண்டை வீதிப்புச்செய்யலாம்.

போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் நே. 197.

(ஜூன் மீ முதல்பாகம் 84-ம் பக்கத் தொடர்ச்சி)

[பிரிவு 2-வார்ஸ் இல்லாமலும், இறக்குங்காலத்தில் உயில் முதலியது எழுதிவைக்காத காரணத்தினாலும், அசையாப்பொருள்கள் சர்க்காரைச்சேருவதைப்பற்றிய விஷயங்கள்.]

3 இந்த விஷயத்தில் போர்டாரவர்களுக்கு யிருக்கும் அதிகாரங்களும் அவர்களுடைய கடமைகளும் 1817-ம் ஞுத்து 7-வது ரெகுலேஷன் 6, 7, 8-வது பிரிவுகளின் நிபந்தனைகளின்பிரகாரம், வார்ஸு இல்லாத காரணத்தாலும், இறந்துபோனவர் உயில் முதலியது எழுதிவைக்காமலும்போன காரணத்தாலும் சர்க்காருக்குச் சேரவேண்டிய ஸ்தாவர சொத்துகளை ரிவினியூ போர்டாருக்கு மேல் பார்த்துவரவும்; சொத்திருக்கும் ஸ்தலத்திலுள்ளவர்கள் மூலமாக ஷை சொத்து விஷயமான எல்லாத் தகவல்களையும் தெரிந்துகொண்டு போர்டாருடைய அபிப்பிராயத்தில் எவ்விதமாக ஷை சொத்தை சர்க்காருக்காக ஏலம்போடவேண்டியது அல்லது ஷை சொத்தின் விஷயமாக எவ்விதம் பைசல்செய்யவேண்டியது என்ற விஷயங்களைப்பற்றி கவர்ன்மெண்டாருக்கு ரிப்போர்ட்டுச் செய்யவும் அதிகாரமுண்டு. ஷை கேசில் ரூ. 500 க்கு மேல்பட்ட சொத்தில்லாத விஷயத்தில் அப்பேர்ப்பட்ட கேசுகளை கவர்ன்மெண்டாருக்கு ரிப்போர்ட்டுச் செய்யாமலேயே, போர்டாரே பைசல் செய்துவிடலாம்.

1885-ம் ஞு ஆகஸ்டு மீ 6வ போட்ட போர்ட் புரொஸீடிங்ஸ் நெ. 2278, 1896-ம் ஞு ஜூன் மீ 26வ போட்ட போர்ட் புரொஸீடிங்ஸ் நெ. இவைகளைப் பார்க்க.

4. மேல்கண்ட விஷயங்களில் கலெக்டர்களுடைய அதிகாரங்களும் கடமைகளும் கலெக்டர் ஷை ஸ்தலத்தில் போர்டாரவர்களுடைய, பிரதிநிதியாயிருப்பவர் ஏதும் ஸ்தாவர சொத்தானது வார்ஸ் இல்லாத காரணத்தாலாவது அல்லது இறந்துபோனவர் உயில் முதலியது எழுதிவைக்காத காரணத்தாலாவது, வாஸ்தவத்தில் ஸர்க்காருக்குச் சேரவேண்டியதென்று கலெக்டருக்குத் தெரியவந்தால் ஷை சொத்துக்கு

பாத்தியஸ்தர்களிருந்தால், ஒரு குறிப்பிட்ட தேதி முதல் 6 மாசங்களுக்குள் தாவாச்செய்து கொள்ளும்படி ஜில்லாக்கெஜெட்டில் விளம்பரம் செய்ய வேண்டும். அப்படி ஏதும் தாவாக்கள் செய்யப்பட்டால், அவர் அவைகளை விசாரிக்கவேண்டும். குறிப்பிடப்பட்ட 6௴ வாயிதாக்கழிந்தபிறகும், போடப்பட்ட தாவாக்களை எல்லாம் விசாரணை செய்யப்பட்டபிறகும், ௸ கேசின் சாராம்சங்களைப்பற்றி அதாவது ௸ சொத்தை ஸர்க்காருக்கு சேர்த்துக்கொள்ளவோ, அல்லது அந்த சொத்து யார்வசமிருக்கிறதோ அவர்கள் ௸ சொத்தை ஸமாதானமாக ஸர்க்காரில் ஒப்புவித்துவிடாத பக்ஷத்தில் கவர்ன்மென்டாருடைய பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ளும்படி வியாச்சியம் செய்யவோ ஏற்பாடுசெய்யும்படி, போர்டாரவர்களுடைய உத்தரவுக்காக ரிப்போர்ட்டுச் செய்யவேண்டும். சொத்தானது ஒருவர் வசத்திலு மில்லாமலிருந்தாலுமே அல்லது அந்த சொத்தை கைப்பற்றிக் கொள்வதற்கு யாதொரு தடங்கலுமில்லாம லிருந்தாலுமே, இந்த விஷயம் கலெக்ட்டருடைய தகவலுக்குவந்த உடனேயே ௸ சொத்தைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டும். ஆனால்௸ சொத்தைக் கைப்பற்றுவதற்கு ஏதும் ஆக்ஷேபணையிருந்து, ௸ சொத்தைக் கைப்பற்றிக்கொண்டு அதை மேல் பார்த்து பாதுகாத்து வருவதற்குள்ள யேற்பாடுகளைச் செய்வதற்கு தாமதப்படுவதனால் அந்த சொத்து அழிந்துபோய்விடக் கூடாததாக யிருக்கும்பக்ஷத்தில், ௸ கேசைப்பற்றி வழக்கமான விதமாக பைசலாகும் வரை ௸ சொத்து அவர்வசமே இருக்கும்படி விட்டு வைக்கலாம். ஏதும் கெடுதல் நேர்ந்துவிடும் போலிருக்கும்பக்ஷத்தில், முன் யேற்பட்டிருக்கும் சாக்ஷியத்தின் பேரில், கவர்ன்மெண்டாருடைய பாத்தியதையை ஸ்தாபிக்கும்பொருட்டு உடனே வியாச்சியம் செய்வதற்காக போர்டாரவர்களுக்கு எழுதவேண்டும். ஸர்காருக்குச் சேரவேண்டிய ஸ்தாவர சொத்துக்கள் ஸம்மந்தமான ரிப்போர்ட்டுகள் 3-வது அனுபந்தத்தில் கண்ட நமூனாவில் போர்ட்டாரவர்களுக்கு ரிப்போர்ட்டுச்செய்ய வேண்டியது.

1904-ம் ௵ ஜனவரி௴ 20௳ போட்ட போர்டாருடைய புரொஸீடிங்ஸ் நெம்பர் 12. 1905-ம் ௵ டிசம்பர்௴ 23௳ போட்ட போர்டாருடைய புரொஸீடிங்ஸ் நெம்பர் 328. இவைகளைப்பார்க்க.

5. வார்ஸ் இல்லாத காரணத்தினால் ஸர்க்காருக்குச்சேரவேண்டிய சொத்துக்கள் கடசியில் எவ்விதம் பைசல் செய்யப் படுகிறதென்பது.—வார்ஸ் இல்லாத காரணத்தினால் ஸர்க்காரைச் சேர்ந்துவிட்ட சொத்துக்களை அவைகள் 12-வருஷகாலம் ஸர்க்கார் அனுபோகத்திலிருக்கும்வரை, அதாவது அந்த சொத்தின் விஷயமாக தாவாச்செய்ய பாத்தியதை யுள்ளவர்களெல்லாரும் தாவாச்செய்து முடியும்வரை, விற்றுவிடக்கூடாது, அப்படி விற்குங்காலத்தில், யேலநோட்டீஸில் ௸ நிலத்தின் தீர்வையானது, பின்னீடு யேர்ப்படக்கூடிய அந்த ஜில்லா செட்டில்மெண்டில் மாறுபடக்கூடியதென்று விபரமாய்க் கண்டு எழுதவேண்டும்.

1885-ம் ௵ ஆகஸ்டு௴ 6௳ போட்ட போர்டாருடைய 2278-ம்நெம்பர் புரொஸீடிங்ஸ்–1905-ம் ௵ ஜூன்௴ 14௳ போட்ட கவர்ன்மெண்டு உத்தரவு நெம்பர் 557; 1905-ம் ௵ ஜுலை௴ 12௳ போட்ட போர்டாருடைய 147-ம் நெம்பர் புரொஸீடிங்ஸ் இவைகளைப் பார்க்க.

3-வது பிரிவு ஸரியான வார்ஸில்லாமல்போன காரணத்தால் ஸர்க்காருக்குச் சேர்ந்துபோகக்கூடியசொத்துக்களை, ௸ சொத்துக்களுக்கு, சட்டப்படி வார்ஸில்லாமல் ஆனால், சுபாவத்தில் வார்சுகளாயிருப்பவர்களுக்குக் கொடுத்து விடுவதைப் பற்றி.

6. இந்திய வார்ஸ் ஆக்ட்டு (Indian succession Act) ப்படிக்குள்ள கேசுகளில்:—1865-ம் ௵த்து இந்திய வார்ஸ் ஆக்ட்டு (Indian succession Act)ப்படி முறைக்கேடாய் பிறந்தவர்கள் (Illegitimate persons) வார்ஸில்லாமலும் தங்களுடைய சொத்துகள் விஷயமாய் உயில் முதலியது எழுதிவைக்காமலும் இறந்துபோய் அவர்களுக்கு சரியான முறைப்படி வார்சுகளில்லாமல் போன காரணத்தால் ௸ யாருடைய சொத்துக்கள் கவர்ன்மெண்டாரைச் சேர்ந்து விடும்பொழுது, அவர்களுடைய சொத்துகளில் அவைகளைக் காப்பாற்றுவதில் யேர்ப்பட்ட சிலவுகளையும், இராஜாங்கத்தாருக்குச் சேரவேண்டிய பாகத்தையும் கழித்துக்கொண்டு மீதமுள்ளதை, ஆக்ட்டுப்படி முறைக்கேடான பிறப்பில்லாவிட்டால் யாரைச்சேருமோ அவர்களுக்குக் கொடுக்கப்படும். ஸர்க்காருக்குச் சேரவேண்டிய பாகம் அடியில் கண்ட தாரணைப்படி விதிக்கப்படுகிறது.

சொத்து 5,000-ரூக்கு உள்பட்டிருந்தால் எட்டில் ஒரு பாகமும், ௸ 5,000 ரூ. முதல் 10,000 ரூ. வரையிருந்தால் 6-ல் ஒரு பாகமும், ௸ 10,000 ரூ. முதல் 50,000 ரூ. வரை யிருந்தால் 5-ல் ஒரு பாகமும், ௸ 50,000 ரூ முதல் 100,000 ரூ. வரையிருந்தால் 4-ல் ஒரு பாகமும், ௸ 100,000 ரூபாயும் அதற்கு மேல் பட்டு மிருந்தால் 3 ல் ஒரு பாகமும் வீதம் எடுத்துக் கொள்ளப்படும்.

1885-ம் ௵ ஆகஸ்ட்டு௴ 6௳ போட்ட போர்டாரவர்களுடைய 2278-ம் நெம்பர் புரொஸிடிங்ஸையும் 1898-ம் ௵ டிஸம்பர்௴ 15௳ போட்ட போர்ட்டாரவர்களுடைய 342-ம் நெம்பர் புரொஸீடிங்ஸையும் பார்க்க.

குறிப்பு (1) இறந்துபோனவன் தன் சொத்துக்களை இன்னவிதம் வினியோகம் செய்யவேண்டுமென்பதைப்பற்றி தனது அபிப்பிராயத்தை வெளியிட்டு யெழுதிவைத்த செல்லத்தகாத தன்மையுள்ள மரணசாஸன விஷயத்தில், சில அபூர்வ கேசுகளில் அந்த சாசனப்படிக்கே செய்ய வேண்டும்.

(2) முறைக்கேடாய் பிறந்த ஒருவனுடைய தகப்பன், பெற்றோருடைய கடமையை அந்த ஒருவன் விஷயமாய்ச் செலுத்தத் தவறிவிட்டால், இந்த ஆக்ட்டுப்படிக்குள்ள விதிகளை விட்டு விட்டு தாய் அல்லது அவன் வழி பந்துக்களுக்கு விசேஷபாத்தியதை கொடுக்கவேணும்.

1885-ம் ௵ ஆகஸ்டு௴ 6௳ போட்ட போர்டாரவர்களுடைய 2278-ம் நெ. புரொஸீடிங்ஸைப்பார்க்க.

(7) இந்தியன் வார்ஸ் ஆக்ட்டு (Indian Succession Act) ப்படிக்கல்லாத கேசுகளில் இந்தியன் வார்ஸ் ஆக்ட்டு ஸம்மந்தப்படாதவர்களாகிய ஹிந்துக்கள், மகம்மதியர்கள் மற்றவர்கள் ஆகிய இவர்களுடைய சொத்துக்கள் ஸரியான வார்சுகளில்லாத காரணத்தால் கவர்ன்மெண்டாரைச் சேர்ந்துவிடும் பக்ஷத்தில், முறைக்கேடாய் பிறந்திராவிட்டால் அந்த சொத்தை அடைந்திருக்கக்கூடிய, அல்லது சட்டப்படி செல்லக்கூடாமல் போனாலும் இயற்கையில் அந்த சொத்தை அடையக் கூடிய யாதாமொருவனுடைய பாத்தியதையைப்பற்றி தயாளமாகவே பிரதேசகவர்ன்மெண்டார் யோசிக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டார் அவர்கள் உத்தரவு செய்திருக்கிறார்கள். மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, வார்ஸில்லாமல் சர்க்காருக்குச் சேருகிற சொத்துக்கள் எல்லாம் அவைகளின்கிரையம் எவ்வளவு பெறுமானதாக யிருந்தாலுமே ஸரிபிரதேச கவர்ன்மெண்டார் அவர்களே பைசல் செய்து விடலாம்.

1885-ம் ௵ ஆகஸ்ட்டு௴ 6௳ போட்ட 2278-ம் நெம்பர் புரொஸீடிங்ஸ், 1901-ம் ௵ டிஸம்பர்௴ 2௳ போட்ட 288-ம் நெம்பர், போர்ட்டு புரொஸீடிங்ஸ், 1911-ம் ௵ ஆகஸ்ட்டு௴ 15௳ போட்ட கவர்மெண்டாரவர்களுடைய 2486-ம் நெம்பர் உத்தரவு.

8. மருமக்கட்டாயம், அல்லது அலிய ஸந்தானலாபடிக்குள்ள கேசுகள். மருமக்கட்டாயம் அல்லது அலியஸந்தான லாப்படிக்கு, வார்ஸில்லாமல் ஸர்க்காருக்குச் சேரும் சொத்துக்களை, இறந்தவர்களுடைய உத்திரகிரியைகளின் சிலவுகளைச் செய்தும், கடன்களைத்தீர்த்தும் விட்ட பிறகு மீரும் தொகை ரூ. 500-க்கு மேல் போகாமலிருக்கும் பக்ஷத்தில் இறந்தவர்களைச் சேர்ந்த இயற்கையான வார்சுகளுக்குக் கொடுத்துவிடும் அதிகாரம் போர்ட்டார் அவர்களுக்கு உண்டு. மீரும் சொத்து ரூ 500-க்குமேல் போனால் ௸ கேசைப் பற்றி கவர்ன்மெண்டார் அவர்களுடைய உத்தரவுக்காக எழுதவேண்டும்.

1885-ம் ௵ ஆகஸ்டு௴ 6௳ போட்ட போர்டாரவர்களுடைய 2278-ம் நெம்பர் புரொஸீடிங்ஸ் 1890-ம் ௵ ஜுன்௴ 27௳ போட்ட போர்ட்டார் அவர்களுடைய 374-ம் நெம்பர் புரொஸீடிங்ஸ் 1892-ம் ௵ ஆகஸ்டு௴ 10௳ போட்ட கவர்ன்மெண்டார் அவர்களுடைய 827-ம் நெம்பர் (Confidential) உத்தரவு, 1892-ம் ஆகஸ்டு௴ 19௳ போட்ட போர்டாரவர்களுடைய 445-வது நெம்பர் (Confidential) புரொஸீடிங்ஸ் இவைகளைப்பார்க்க.

குறிப்பு:—மலபார் நாட்டில், நிலங்களிலுள்ள ஜன்மாந்திர பாத்தியதைகள் கவர்ன்மெண்டுக்குச் சேர்ந்து அவைகள் கவர்ன்மெண்டாருக்காக கிரையம் செய்யப்படும்பொழுது, கிரயத்தொகையில் நூத்துக்கு பத்து ரூபாய் ௸ ஸ்தலத்திலுள்ள ரஸ்தாக்கள், பாலங்கள் முதலியவற்றை அபிவிருத்தி செய்வதற்காகக் கொடுக்கப்படுகிறது.

4-வது பிரிவு சில்லரை விஷயங்கள். (Miscellaneous.)

9. முழுகி உடைந்துபோன கப்பல்களிலுள்ள சாமான்கள் விஷயமாயும், கண்டெடுக்கப்பட்ட புதயல்கள் விஷயமாயுமுள்ள சங்கதிகள்:—உடைந்து முழுகிப்போன கப்பல்களிலிருக்கும் சாமான்களின் பாத்தியதை கொண்டாடும் விஷயங்களை 1889-ம ௵த்து 10 வது ஆக்ட்டு, 1891-ம் ௵த்து 6-வது ஆக்ட்டு, 1891-ம் ௵த்து 12-வது ஆக்ட்டு இவைகளால் சீர்திருத்தப்பட்டிருக்கிற 1880-ம் ௵த்து 7-வது ஆக்ட்டு 71-79-வது பிரிவுகளின்படிக்கும் 1908-ம் ௵த்து 15-வது ஆக்ட்டு 14-வது பிரிவுப்படிக்கும் கொண்டுவரப்படுகிறது.

1885-ம் ௵ ஆகஸ்டு௴ 6௳ போட்ட போர்டாரவர்களின் ப்ரொஸீடிங்ஸ் நெம்பர் 2278-1907-ம் ௵ ஜூலை௴ 26௳ போட்ட 604 நெம்பர் கவர்ன்மெண்டு உத்திரவு-1907-ம் ௵ ஆகஸ்டு௴ 17௳ போட்ட போர்டார் அவர்களுடைய 231-ம் நெம்பர் உத்தரவு இவைகளைப் பார்க்க.

10. கிரிமினல் கோர்ட்டார்களால் ஜப்தி செய்யப்பட்ட ஸ்தாவர சொத்துக்களை விற்பது:—ஸர்க்காருக்குத் தீர்வை செலுத்தப்பட்டு வருகிற ஸ்தாவர சொத்தை 1898-ம் ௵த்திய 5-வது ஆக்ட்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடு 88-வது பிரிவுப்படி ஜப்தி செய்யப்பட்டிருக்கும்பொழுது, ௸ நிலத்தை கலெக்ட்டர் கைவசப்படுத்திக்கொண்டு எந்த கோர்ட்டாரால் ௸ நிலம் ஜப்தி செய்யப்பட்டதோ அந்தக் கோர்ட்டாருடைய உத்தரவுப்படி ௸ நிலத்தை விற்பனை செய்யவேண்டும்.

பினல் கோடின்படி பிடுங்கிக்கொள்ளப்பட்ட ஸ்தாவரசொத்துக்கள் விஷயமான ஸங்கதிகள்:—பினல் கோடின்படிக்காவது அல்லது மற்றச் சட்டங்களின் படிக்காவது கவர்ன்மென்டாரால் ஸ்தாவர சொத்துக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டால், கவர்ன்மெண்டு நிலங்களை பராதீனம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற விதிகளின்படிக்கல்லாது வேறுவிதமாக கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களால் பராதீனம் செய்யப்படக் கூடாது.

11. வார்ஸ் இல்லாத காரணத்தால் கவர்ன்மெண்டாரைச் சேரவேண்டிய சொத்துக்கள் சட்ட விரோதமாக வியாபிக்கப்பட்டிருந்தால் அதைப்பற்றி யாதாமொருவன் (Private Person) தகவல்கொடுக்கிறானோ அவனுக்கு, கவர்ன்மெண்டாருக்குச் சேருகிற சொத்தின் பெறுமானத்தில் 100-க்கு பத்து வீதம் ஏனும் கொடுக்கப்படும். ஆனால் அப்பேர்ப்பட்ட கேசுகளைப்பற்றி கவர்ன்மெண்டாருக்கு ரிப்போர்ட்டுச் செய்யவேண்டும்.

1885-ம் ஹு ஆகஸ்டுமீ 6வ போட்ட போர்டார் அவர்களுடைய 2278-ம் நெம்பர் புரொஸீடிங்ஸ்—1908-ம் ஹு மேமீ 21வ போட்ட போர்டாரவர்களுடைய 101-ம் நெம்பர் புரொஸீடிங்ஸ் இவைகளைப் பார்க்க.

Miscellaneous—சில்லரை விஷயங்கள்.

ஸ்டாண்டிங் ஆர்டர் நெ. 196 காட்டு மிருகங்களை அழிப்பதற்கு கொடுக்கப்படும் எனும்களைப்பற்றிய விஷயங்கள். எனும் கொடுக்கப்படும் தாரணையும் அப்படி எனும் கொடுக்க அதிகாரமுள்ள உத்தியோகஸ்தர்களும் :—கலெக்ட்டர்களும் டிவிஷனல் ஆபீஸர்களும் காட்டு மிருகங்களை அழிப்பதற்காக 1-வது அனுபந்தத்தில் கண்ட தாரணைப்படி எனுங்கொடுக்க அதிகாரமுள்ளவர்களாகயிருக்கிறார்கள். அப்படிச் செய்யவேண்டியது அவசியமென்று கலெக்ட்டரால் நினைக்கப்படுகிற இடங்களிலுள்ள சுவாதீன அதிகாரமுள்ள தாசில்தார்களுக்கும் டிப்டி தாசில்தார்களுக்கும் இந்த எனும் கொடுக்கும் அதிகாரத்தை கொடுத்துவைக்க போர்டார் தயாராகயிருப்பார்கள். எல்லாக் கேசுகளிலும், வேட்டைக்காரர்கள் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய எனும் தொகையைப் பற்றி தாசில்தார் மூலமாகவும், டிப்டி தாசில்தார் மூலமாகவும் கேழ்க்கவேண்டும். அவர்கள் இதைப்பற்றி ரிப்போர்ட்டுச்செய்யவேண்டும்.

காட்டு மிருகங்களை அழிப்பதற்கு எனும் தாரணை.

ஜில்லாக்கள்.	கடுவாய் வேங்கை.	சிறுத்தைப்புலி.	கரடி.	காட்டுநாய்.
விசாகபட்டணம்.	ரூ. 100.	,,	ரூ. 15.	,,
கஞ்சம்.				
தென் கன்னடம்.				
மலபார்.	ரூ. 70.			
கோதாவரி.		ரூ 25.	ரூ 5.	ரூ. 10
கடப்பை.				
சேலம்.				
மற்ற ஜில்லாக்கள்	ரூ. 35.	,,	,,	,,
தென் கன்னடம்.	,,	ரூ. 35.	,,	,,

1890-ம் ஹு பிப்ரவரிமீ 12வ போட்ட போர்டாரவர்களுடைய புரொஸீடிங்ஸ் நெ. 86; 1905-ம் ஹு மார்ச்சுமீ 27வ போட்ட போர்டாரவர்களுடைய புரொஸீடிங்ஸ் நெ. 67; 1910-ம் ஹு நவம்பர்மீ 1வ போட்ட கவர்ன்மெண்டு உத்தரவு நெ. 3462; 1910-ம் வருஷம் டிசம்பர்மீ 20வ போட்ட போர்டாரவர்களுடைய 336-ம் நெ. உத்தரவு; 1913-ம் ஹு டிசம்பர்மீ 18வ போட்ட 2718-ம் நெ கவர்ன்மெண்டு உத்தரவு; 1914-ம்ஹு ஜனவரிமீ 6வ போட்ட போர்டாரவர்களுடைய 12 நெ. உத்தரவு.

குறிப்பு :—(1) அனுபந்தத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறதாரணைகள் கொடுக்கப்படக்கூடிய தாரணையில் உயர்ந்த தாரணை—எந்த ஜில்லாவிலாவது அதற்குறிய சந்தர்ப்பங்கள் நேரிடும் பக்ஷத்தில் மேலே குறிக்கும் எந்த ஜெந்துவின் விஷயமாகவாவது அல்லது எல்லா ஜெந்துக்களின் விஷயமாகவாவது தாரணையைக் குறைக்கவோ அல்லது வெகுமதியையே எடுத்துவிடவோ கவர்ன்மெண்டார் செய்வார்கள். மேற்கண்ட ஜந்துக்களின் குட்டிகளைக் கொன்றாலும், ஜந்துக்களையே அதிக சிரமமில்லாமலாவது அல்லது அதிக அபாயத்திற்கு உட்படாமலாவது கொன்றாலும் மேல்கண்ட உயர்ந்த தொகைக்குக் குறைவாகக் கொடுத்தால் போதுமானது. வேங்கைப் புலிகளும், சிறுத்தைப் புலிகளும் அடிக்கடி மனிதர்களைக் கொன்று கொண்டிருக்கும் பிரதேசங்களில், இந்தஜந்துக்களைக்கொல்வதற்கு வெகுமதி கொடுக்கும் உத்தியோகஸ்தர்கள் உதாரமாக வெகுமதி கொடுக்கவேண்டும். 1890-ம் ஹு பிப்ரவரிமீ 12வ போட்ட போர்டாரவர்களுடைய 86-ம் நெ. புரொஸீடிங்ஸ்—1905-ம் ஹு மார்ச்சுமீ 27வ போட்ட போர்டாரவர்களுடைய புரொஸீடிங்ஸ் நெ. 67 இவைகளைப் பார்க்க.

(2) அனுபந்தத்தில் சொல்லப்படாத மற்றக் காட்டு மிருகங்களைக் கொல்வதற்கு சாதாரணமாய் எனும் கொடுக்கப்படுகிறதில்லை. அப்பேர்ப்பட்ட மிருகங்களை வேட்டைக்காரன் உயிருடன் பிடித்துக் கொண்டு வந்தாலுமே, கொன்று கொண்டுவந்தாலுமே அவைகள் அந்த வேட்டைக்காரனுடைய சொத்தாய் விடுகிறது. அந்த ஜந்துக்களை விற்பதனால் கிடைக்கக்கூடிய தொகையானது வெகுமதியாய்க் கொடுக்கப்போதாதென்று அதிகாரிகளுக்கு தோன்றினால், அப்பேர்ப்பட்ட கேசுகளில் கவர்ன்மெண்டாரவர்களுக்கு எழுதி அனுமதி பெற்றுக்கொண்டு சரியான வெகுமதி கொடுக்கலாம்.

1895-ம் ஹு மார்ச்சுமீ 8வ போட்ட போர்டாரவர்களுடைய சில்லரை புரொஸீடிங்ஸ் நம்பர் 1201; 1895-ம் ஹு மேமீ 1வ போட்ட போர்டாரவர்களுடைய சில்லரை புரொஸீடிங்ஸ் நம்பர் ,2179; 1895-ம் ஹு சூன்மீ 11வ போட்ட சில்லரை புரொஸீடிங்ஸ் நம்பர் 2942 இவைகளைப்பார்க்க.

(3) வெகுமதி கொடுக்கும் உத்தியோகஸ்தர்கள் வழக்கமாய் ஆள்களை கொன்றுவருகிற வேங்கைப்புலி முதலிய காட்டு மிருகங்களைக் கொல்வதற்காக மேலே கண்ட தாரணையைப் பார்க்கிலும் விசேஷ வெகுமதி கொடுக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டால் ரிவினியூ போர்டாரவர்களுடைய அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேனும். அப்படிக் கொடுக்கும் எனும் தொகையானது ரூ. 500-க்குமேல் போகிறதாகயிருந்தால் கவர்ன்மெண்டார் அவர்களுடைய அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

(4) காட்டு மிருகங்களைக் கொல்லுவதற்காகக் கொடுக்கப்படும் வெகுமதி வகையறாக்களைப்பற்றிய விதிகளை அப்போதைக்கப்போது ஜில்லா கெஜெட்டுகளில் பிரசுரம் செய்யவேண்டும், அல்லாமலும், அவகாசம் நேரிடும்போதெல்லாம் அதைப்பற்றி வேட்டைக்காரர்களுக்கு ரூபில் நேரிலேயே சொல்லவேண்டும்.

(இன்னும் வரும்)

The Indian Law Gazette.

PART I.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் I.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ஹு ஆகஸ்ட்டுமீ [நெ. 8.

EDITORIAL.

பத்திராதிபர் வியாசம்.

கிரிமினல் சட்டதிட்டங்கள் யேற்பட்டதின் வரலாறு.

(தொடர்ச்சி.)

ஸம்மன் கேசுகள், வாறண்டு கேசுகள், போலீசார் வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடிய கேசுகள், வாறண்டில்லாமல் பிடிக்கக்கூடாத கேசுகள், ஜாமீன் பேரில் விடக்கூடிய கேசுகள், விடக்கூடாத கேசுகள், இவைகள் இன்னின்ன தென்பதைப்பற்றி பின்னீடு விவறிக்கப்படும்.

பாவம் பழிக்கஞ்சாது ஒருவனைக் கொலை செய்பவனும், ஒருவர் ஸ்திரீயின் கற்பை யழிப்பவனும் ஒருவனை மோசஞ்செய்பவனும் ஒருவனுடைய சொத்தை திருடுகிறவனும் இன்னும் ஒருவன் விஷயமாய் இப்பேர்ப்பட்ட எந்த அக்கிரமமான செய்கைகளையும் செய்பவனும், சமயம் நேரிடும்பொழுது எல்லார் விஷயமாயும் துஷ்டச் செய்கைகளை செய்வானென்பதில் சந்தேகமில்லை. இது காரணத்தினாலேயே யாதாமொருவர் விஷயமாய் கொடிய செய்கைகளைச் செய்கிற ஒரு துஷ்டனை அசேஷ ஜனங்களும், தங்கள் விஷயத்திலேயே அவன் குற்றச் செய்கைகளை செய்ததாக எண்ணி அவனை தண்டனைக்குக் கொண்டு வருவதற்கு வேண்டும் முயற்சை செய்வது உலக இயற்கையாய் இருந்து வருகின்றது. பிரஜைகளுடைய உயிர்களையும் சொத்துக்களையும் தங்களுடையதாக பாவித்து நீதியுடன் அரசுபுரிந்து வருகிற ராஜாங்கத்தார் தங்களுடைய பிரஜைகளில் யாருக்கும் தீங்கு செய்கிற துஷ்டர்களை தங்களுக்கே நேரில் தீங்கு செய்தவர்களாகயெண்ணி அவர்களைத் தகுந்த தண்டனைக்குக் கொண்டு வருவது தங்கள் கடமையென்று நினைத்து எல்லாக் கிரிமினல் கேசுகளிலும் தாங்களே வாதியாகயிருந்துகொள்ளுகிறார்கள். வீவில் கேசுகளில் கக்ஷிக்காரர்கள் தங்களுக்குள் ஸமாதானமாகப் போகவும் ஸ்மாதானமாய் போய்விட்டால் வியாச்சியத்தை நிறுத்திக்கொள்ளவும் பாத்தியதை கக்ஷிக்காரர்களுக்குண்டு. கிரிமினல் கேசுகளில் பிராதுகளை அவ்விதம் நிறுத்திக்கொள்ளும் பாத்தியதை அனேகமாய் எல்லாக் கேசுகளிலும் ராஜாங்கத்தாருக்கு

இருக்கிறதேயல்லாது கக்ஷிக்காரர்களுக்கில்லை. இதை யுத்தேசித்தே வாறண்டு கேசுகளில் பிறாதை நிறுத்திக் கொள்ளுவதற்கு யாதொரு யேற்பாடும் செய்யப்படவில்லை. சம்மன் கேசுகளில் பிராதை நிறுத்திக் கொள்ளுவதற்கு கி. பு. கோடு. 248, வதுபிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் கேசை நிறுத்திக் கொள்ளுவதற்குப் போதுமான முகாந்தரங்களிருப்பதாக மாஜிஸ்டிரேட்டைத் திருப்தி செய்து அவருடைய அனுமதி பெற்றுக்கொண்டுதான் கேசை நிறுத்திக்கொள்ளலாமென்று கண்டிப்பான நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தியன் பீனல் கோடிலுள்ள மொத்தம் 511, பிரிவுகளில், 361 பிரிவுகள் வரை, குற்றங்களுக்குத்தண்டனை விதிக்கும் பிரிவுகளாய் இருக்கின்றன. இந்த 361 பிரிவுகளில், அடியில் குறிப்பிடப்பட்டிருக்கிற 23, பிரிவுகளில் கண்ட குற்றங்களுக்காகச் செய்யப்படும் பிராதுகள் மட்டுந்தான் கோர்ட்டார் அனுமதி யில்லாமலேயே ராஜியாய் போகக்கூடியதென்று கி. பு. கோடு. 345-வது பிரிவினால் தெரிகிறது. அவைகளின்ன தென்பதை பின்னால் சொல்லப்பட்டிருக்கின்றது.

மாட்சிமை தங்கிய ஆங்கிலேய அரசாட்சியின் பெருமையானது "Prevention is better than Cure," என்னும் பழமொழியை, அதாவது ஒரு வியாதி அல்லது ஒரு கெடுதலான சங்கதி அல்லது சங்கடம் நேர்ந்து விட்டபிறகு அதற்குப் பரிஹாரம் தேடுவதைப்பார்க்கிலும் அப்பேர்ப்பட்ட சங்கதி நேரிடாமலேயே யிருக்கும்படி தடுக்கக்கூடிய முன்உபாயங்களைத் தேடிக்கொள்வது நலம் என்னும் பழமொழியைக் கைக்கொண்டு அரசர்களுக் குறிய சதுர்வித உபாயத்தோடு ராச்சியத்தையும் பிரஜைகளையும் காப்பாற்றி வருவதில் தானிருக்கிறது. இந்த கொள்கையைக் கைக்கொண்டு ஒரு குற்றஞ் செய்தவனுக்கு அவன் செய்த குற்றத்தின் தன்மைக்கும் அவன் அந்தக் குற்றத்தைச் செய்தவிதம், சந்தர்ப்பம், இவைகளுக்குத் தக்கபடி அந்தக் குற்றஞ் செய்தவன் மறுபடி ஒரு குற்றமுஞ் செய்யாமல் அவனுக்குப் புத்தி வரும்படியான மாதிரியாகவும், மற்றவர்கள் அவனுக்கு விதிக்கப்படுகிற தண்டனையைப் பார்த்து குற்றச் செய்கைகளை செய்யப்பயப்படும்படியான மாதிரியானவுமான தண்டனை விதிக்கப்படுகின்றது. இந்தியன் பீனல் கோடில் குற்றத்திற்குத் தக்கபடி தண்டனைகள் யேற்படுத்தி யிருப்பது கூட அவ்வளவு பெரியதல்ல. அந்தத் தண்டனைகளை கண்டிப்பாகவும், விதரணையாகவும் நிறைவேற்றுவதற்காகச் செய்யப்பட்டிருக்கிற ஏற்பாடுகள் மிகவும் மெச்சத்தக்கதா யிருக்கின்றது. ஜெயில் தண்டனையை நிறைவேற்றும் விஷயமாய்ச் செய்யப்பட்டிருக்கும் 1900-ம் வருஷத்திய 3-வது ஆக்டாகிய கைதிகள் ஆக்டினுடையவும், 1894-ம் வருஷத்திய 9-வது ஆக்டாகிய ஜெயில் ஆக்டினுடையவும், ஜெயில் ஆக்டுப்படி கவர்ன்மெண்டாரவர்களால் செய்யப்பட்டிருக்கிற விதிகளினுடையவும் யேற்பாடுகளை நன்றாய்ப் படித்து ஆலோசித்துப் பார்க்கையில் மாட்சிமை தங்கிய நமது பிரிட்டிஷ் ராஜாங்கத்தாருக்குப் பிரஜைகள் விஷயமாய் இருக்கும் நல்லெண்ணமும், தமது பிரஜைகளை எவ்விதத்திலாவது நல்ல நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற அபிப்பிராயமும் நன்கு விளங்கும்.

ஜாதி, மதம், ஆச்சாரம், அனுஷ்டானம், இவைகளை அவரவர்களின் வரணாசிரம தர்மங்களின்படி மிகவும் கண்டிப்பாய் கவனித்து வந்த நமது ஹிந்து முன்னோர்களின் வம்சத்தைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும் ஜெயில் ஆக்டின்படி செய்யப் பட்டிருக்கிற விதிகளையும், ஜெயிலிலிருக்கும் கைதிகளால் செய்யப்படும் குற்றங்களுக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கிற தண்டனைகளையும் படித்துப் பார்ப்பார்களேயாகில் ஜெயிலைப் பூலோகநரகமாயும் ஜெயிலில் வைக்கப் பட்டிருக்கிறவர்களை நரகானுபவஞ் செய்பவர்களாயும் மதிக்க வேண்டியதாகவேயிருக்கும். இவ்வளவு இழிவாக ஜெயிலிலிருப்பவர்களை நரகானுபவஞ் செய்கிறவர்கள் என்று சொல்லக்காரணமென்ன? அவர்களுக்கு ஜெயிலென்னுமிடத்தில், காற்று, மழை, வெய்யில், முதலியவைகளிலிருந்து அவர்கள் தேகத்தைக் காப்பாற்றக்கூடிய கட்டடங்கள் இல்லையா வென்று கேழ்க்கக்கூடும். ஜெயில் தண்டனையை அனுபவிப்பவர்களில் பெரும்பான்மையோருக்கு அவரவர்கள் சொந்தக்கிராமத்தில், சிலருக்குசிறிய குடிசைகளும் சிலருக்கு மச்சுக்கட்டடமென்று பெயர் மட்டும் பூண்டு வியாதிகளையே விளைவிக்கக்கூடிய இடத்தில் கொஞ்சமும் காற்றோட்டமில்லாதவும், தூசி அழுக்கு முதலியவைகளும் எலி முதலிய பாதககரமான அனேக ஜந்துக்கள் நிறைந்தவுமான வீடுகள் தானிருக்கும். ஆனால் ஜெயிலென்னும் இடமோ வென்றால் அதிகயாய் ஜனங்கள் வசிக்கும் வீடுகளைவிட்டு போதுமானமட்டில் விலகியதாயும் நல்ல காற்றுள்ளதாயுமிருக்குமிடத்தில், சுகாதார சாஸ்திரப்படி தேகசுகத்துக்குறிய சங்கதிகளை யெல்லாம் கவனித்து, வெய்யில், மழை, பனி, காற்றுக் காலங்களிலும் யாதொரு கஷ்டமுமின்றி வசிக்கும்படியான முதல்தரமான கட்டடங்கள் கட்டப்பட்டு அவைகளிலாவது அவைகள் பக்கங்களிலாவது, யாதொரு அழுக்கு, தூசி, குப்பை, ஈரம் முதலியது யாதொன்றுமில்லாமல் பிரதிதினம் சுத்தி செய்யப்பட்டு வரப்பட்ட நேர்த்தியான கட்டடமாகயிருக்கிறது.

வசிப்பதற்கு இடத்திற்குக் குறைவில்லை. சாப்பிட ஆகாரத்திற்கும் குடிக்கத் தண்ணீருக்கும் குறைவுண்டோ வென்றால், அதுவும் கிடையாது. உத்தமமான ஜாதி, வம்சம் இவைகளில் ஜனித்து நற்குண நற்செய்கையுள்ளவர்களோடு பழகினவர்களாவது சரியான ஐவேசுள்ளவர்களாவது சாதாரணமாக ஜெயிலுக்குப்

போகிறதில்லை. இப்பேர்ப் பட்டவர்களில் அபூர்வமான சிலர் தங்கள் ஊழ்வினையின் தோஷத்தால் மட்டுக்கு மிஞ்சின காமாதுரமான செய்கைகள் சம்பந்தமான குற்றங்களுக்காகவும், மட்டுக்குமிஞ்சின அகங்காரத்தினாலும் கோபத்தினாலும் செய்யப்படும் குற்றச் செய்கைகளுக்காகவும் தண்டிக்கப்பட்டு ஜெயிலுக்கு அனுப்பப்படுகிறார்கள். ஜெயிலிலிருப்பவர்களில் பெரும்பான்மையோர் சாதாரணமாகவும் தணிந்தவுமான நிலைமையிலுள்ளவர்களாகவே யிருக்கிறார்கள். இவர்களிலனேகர் தங்கள் வீடுகளிலிருக்கும் காலத்தில் விடிந்து எழுந்திருந்தவுடன் அவரவர்களுக்கிருக்கும் வேலைகளைப் பார்த்துவிட்டு ஆகாரம் கிடைத்தபோது அல்லது சௌகரியப்பட்டபொழுது தான் சாப்பிடுவார்கள். மிகவும் சிறிய கிராமங்களில் வசிக்கும் பிராமணர்கள்கூட, கம்பம்புல்லு, கேப்பை, சோளம், சாமை முதலிய தானியங்களையேதான் சாப்பாட்டுக்காக உபயோகப் படுத்துகிறார்கள். சிலருக்கு நெல் விளைந்தாலும் அதை விற்றுப் போடுகிறதே யல்லாது தன் சொந்தச் சாப்பாட்டுக்கு உபயோகப்படுத்துகிறதில்லை ஏனென்றால், நெல் அரிசி சாப்பாடு சிலர் தேகத்துக்கு ஒத்துக்கொள்ளுகிறதில்லை சிலருக்கு நெல் சாப்பாடு சாப்பிட்டால் தேகம் பலங்குறைந்து மெலிந்துவிடுகிறது. ஆகையால் கிராமாந்தரங்களில் வசிப்பவர்கள் நெல் தவிர மற்ற தானியங்களையே சாப்பாட்டுக்கு உபயோகிப்பவர்களா யிருக்கிறார்கள். ஆகையால் ஜெயிலில் சாப்பாட்டுக்காக உபயோகப் படுத்தும் தானியங்களைப்பற்றி குறைவு சொல்ல இடமில்லை. ஜெயிலிலுள்ளவர்களுக்கு பிரதிதினமும் காலை, 7-மணிக்குள் காலைச்சாப்பாடும் 11-மணிக்கு பகல்சாப்பாடும், மாலை 5-மணிமுதல் $5\frac{1}{2}$-மணிக்குள் சாயங்காலச் சாப்பாடும் தவறாமல் சரியானபடி கொடுக்கப்பட்டு வருகிறது. குடிக்கும் தண்ணீரோவென்றால் அசுத்தமான வஸ்துக்கள் சேரமார்க்கமே யில்லாத மிகவும் சுத்தமான இடத்தில் வெட்டப்பட்டு பாதுகாத்துக் கொள்ளப்பட்ட கிணற்றிலிருந்து இறைக்கப்பட்ட சுத்தமான ஜலத்தை நன்றாய் வடிகட்டினதாய்த்தான் இருக்கின்றது. ஆனால் ஜெயிலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் தங்கள் கிராமங்களில் இருக்கும்பொழுதோ வென்றால் அசுத்தம் நிறைந்த ஏரிகளிலும், ஊரணிகளிலும் தெப்பக்குளங்களிலுமுள்ள கட்டுக்கடையான ஜலத்தையே எவ்வகையாலும் சுத்தம் செய்யாமலேயே உபயோகிப்பார்கள். அப்பேர்ப்பட்ட பேர்கள் மேற்கண்ட சுத்தமான கிணற்று ஜலத்தையே பிரதிதினமும் ஸ்நான பானங்களுக்கு உபயோகிக்கிறார்கள்.

வஸ்திரம், படுக்கை வகையராக்களில் குறைவுண்டோ வென்றால் அதுவுமில்லை. ஆண்பிள்ளைக் கைதிகளில் ஒவ்வொருவருக்கும் ஒரு கட்டையான உடுப்பு, கால் சட்டை, குல்லா, லங்கோட்டி, (கோவணம்) இவைகள் சேர்ந்த ஜதை ஒன்று 12 மாதத்திற்குக் குறைந்த காலத்திற்குத் தண்டனைப் பட்டவர்களுக்கும் மேற்கண்ட ஜதையில் இரண்டு அதற்கு மேற்பட்ட காலத்திற்கு தண்டனைப் பட்டவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. ஆண்பிள்ளைக் கைதிகளுக்கு ஒருபுது உடுப்பும் குல்லாவும் 9 மாதத்துக்குஒரு தடவையும், 6 மாதத்துக்கு ஒரு தடவை 1 ஜோடி கால் சட்டையும் கொடுக்கப்படுகிறது. பெண்பிள்ளைக் கைதிகள் ஒவ்வொருவருக்கும் 6 கஜ நீளத்தில் ஒரு கஜ அகலத்தில் 2 புடவைகள் 9 மாதத்துக்கு ஒரு தடவைகொடுக்கப்படுகிறது. மழைகாலம், பனிகாலத்தில் அதாவது அர்ப்பிசிமாதம் முதல் மாசி மாதம் வரையில் உபயோகிக்க வேண்டியதற்காக முழுவதும் ரோமத்தால் நெசவு செய்த துணியிலேயே தைக்கப்பட்ட உடுப்பும் கொடுக்கப்படுகிறது. கயிற்றினால் 8 அடி நீளம் $2\frac{1}{2}$ அடி அகலத்தில் செய்யப்பட்ட பாய் 1-ம் கம்பளி 1-ம் படுக்கையாகக் கொடுக்கப்படுகிறது. பாயின் நீளம் 8 அடி யிருப்பதின் காரணம், படுக்கைக்கு வேண்டிய நீளத்தை விரித்துக்கொண்டு பாக்கி நீளத்தைச் சுற்றி தலையணையாக வைத்துக்கொள்ள வேண்டியதற்காகத்தான். கைதிகள் கீழே தரையில் படுக்கவே கூடாது. செங்கல்லினாலும், மண்ணினாலும், 6 அடி நீளம் $2\frac{1}{2}$ அடி அகலம், 9 அங்குல உயரத்தில் கட்டப்பட்டு, சிமிட்டிச் சுண்ணாம்பினால் பூசி ஸன்னமிடப்பட்ட திரணையில் ஒவ்வொரு கைதியும் தூங்கவேண்டியது. அதே திரணைகளிலேயே தலை சும்மாடுகளும் செங்கல்லினாலும், மண்ணினாலும் கட்டப்பட்டிருக்கும். இப்பேர்ப்பட்ட சும்மாடுகள் கட்டப்பட்டிருந்தால் 8 அடி நீள முள்ள பாய்க்குப் பதில் 6 அடி நீளமுள்ள பாய் கொடுக்கப்படும். இந்தக் கைதிகளிலனேகர் தங்கள் வீடுகளிலிருக்கும்போதோ வென்றால், தரையிலும் தங்கள் வீட்டு வாசல் தெருக்களிலும், விரிப்பு முதலியதுகள்யாதொன்றுமில்லாமலும் உடம்பைப் பூராவாக மூடிக்கொள்ளக்கூடச் சரியான துணிகூட இல்லாமலும் படுப்பது வழக்கம்.

பொழுது போக்குக்கும் தேகாப்பியாசத்திற்கும் வேலைக்கும் குறைவுண்டோ வென்றால் அதற்கும் குறைவில்லை. கிராமாந்தரங்களிலும்பட்டிதொட்டிகளிலுமுள்ள சாதாரண ஜனங்கள் தாங்கள் சொந்தத்துக்காவது கூலிக்காவது நிலங்களை உழுவதிலும், பயிர்களுக்குகிணறுகளிலிருந்து தண்ணீர் இறைப்பதிலும், குப்பை உரம் முதலியதுகளை நிலங்களுக்கு சுமப்பதிலுமாக வேலை செய்தே பொழுது போக்குகிறார்கள். ஆனால் ஜெயிலிலோ வென்றால் பற்பல வகையான மிகவும் விநோதமும் உபயோகமுமுள்ள கைத்தொழில்களை கைதிகளுக்கு எளிதாகக் கற்பித்து வேலைவாங்குகிறார்கள். இப்படிச் செய்வதானது (1) கைதிகளைப் பந்தோபஸ்தாய் வைப்பதிலும், அவர்களுக்கு அன்ன வஸ்திரம் முதலி

யது கொடுப்பதிலும் சிலவாகும் பொருளுக்கு அவர்களைக் கொண்டே வேலை வாங்கி ஈடு செய்யலாமென்றும் (2) கைதிகளுக்கு, மிகவும் உபயோகமுள்ள கைத்தொழில்களைக் கற்பித்துக் கொடுப்பதனுல் அவர்கள் ஜெயிலிலிருந்து விடுதலை செய்யப்பட்ட பின் தாங்கள் ஜெயிலில் கற்றுக்கொண்ட விசேஷமான கைத்தொழில்களின் பெருமையைக் காட்டிச் சரியானபடி வேலை செய்து நாணயமாய்க் காலக்ஷேபம் செய்வதில் நோக்கமாய் இருப்பார்களே யல்லது, சம்பாத்தியம் செய்யும் வழி தெரிந்திருப்பதை விட்டு மறுபடி குற்றச் செய்கைகளைச் செய்து ஜெயிலிற் போய்ச் சேரமாட்டார்களென்ற நோக்கங்களுடனுந் தான். ஜெயில்களில் யேற்படுத்தி யிருக்கும் கைத்தொழில்களை நன்றாக அபி விருத்திசெய்து லாபகரமான விதமாய் நடத்துவதை உத்தேசித்தும், கைதிகள் அவரவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட வேலையில் தேர்ச்சியடையும் பொருட்டும், வேலையைச் சரியானபடி கற்றுக்கொண்டு திருப்திகரமாகச் செய்யாதவர்களுக்கு ஜெயில் ரூல்களின்படிக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிற தண்டனை கிடைக்குமென்றும், வேலையில்சமர்த்தரென்று பெயர் வாங்கி வேலையை ஊக்கத்தோடு செய்தவர்களுக்குக் கைதிகளா யிருக்கிற மற்றவர்களுக்கில்லாத சில சுதந்தரங்கள் வகையராக் கிடைக்குமென்றும் விதிகளை யேற்படுத்தி யிருக்கிறார்கள். இதன்னியில் ஒவ்வொரு ஜெயிலிலும் வேலை யில்லாத ஞாயிற்றுக்கிழமை முதலிய தினங்களில் கைதிகளின் உபயோகத்திற்காக சூப்பிரன்டெண்டென்டு ஒப்புக்கொண்ட சில புஸ்தகங்கள் இங்கிலீஷிலும் அந்தந்த ஜில்லாவின் சுதேச பாஷையிலும் வாங்கி வைக்கப்பட்டிருக்கும்.

மேலே கண்ட வேலைகளை அவரவர்கள் தேகபலத்துக்குத் தகுந்தபடி தெரிந்து கொடுக்கப்படும். கைதிகளுக்குச் சீக்கு முதலியது நேரிட்டால் அதைப்பற்றி உடனுக்குடனே பார்த்து, வேண்டும்ஔஷதங்களைக் கொடுக்கப்படும். கைதிகளுக்கு வைத்தியம் பார்க்கிறதற்கென்றே பிரத்தியேகமான வைத்திய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அல்லாமலும் கைதிகளின் சரீர சுகம் கெட்டுப்போகாமலிருக்கும்படிக்கும் வியாதிகளே அணுகாமலிருக்கும்படிக்கும் வேண்டிய விஷயங்களையும் முன் பாதுகாப்புகளையுஞ் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. கைதிகள் பலத்திற் குறைந்து போய் விட்டார்களா? இளைத்துப்போய் விட்டார்களா? என்று அறிந்து கொள்ளும் பொருட்டு 2-வாரத்துக்கொருதடவை ஞாயிற்றுக்கிழமை தோறும் ஒவ்வொரு கைதியையும் நிறுத்து பார்க்கிறார்கள். துல்லியமான இடையைக் கண்டுபிடிக்கும் பொருட்டு அடியில் கண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

(இன்னும் வரும்.)

DIALOGUE.

சம்பாஷணை.

(சாக்ஷியம் சொல்லுவதைப் பற்றி.)

இடம்:—திண்டுக்கல் புஷ்ப பங்களா.

(முன் மாதத் தொடர்ச்சி.)

வ:—போலீசார் முன் விசாரிக்கப்படுகிற சாக்ஷிகள், வாய்மொழியாக விசாரிக்கப்படுவார்கள். போலீசார் கேட்கிற கேள்விகளுக் கெல்லாம் சாக்ஷிகள் ஜவாப்புச் சொல்லவேண்டும். ஆனால் தான் சொல்லுகிற ஜவாப்பே தன்னைக் குற்றவாளி யாக்கும்படி யானதாகவாவது அல்லது தண்டனைக்குள்ளாக்கும்படியான தாகவாவது ஏற்படும்படியான கேள்விகளுக்கு ஜவாப்புச்சொல்ல வேண்டியதில்லை (கி. பு. கோடு பிரிவு 161.)

ஸோ:—போலீசாரிடம், சாக்ஷிகள் உண்மையைத்தெரிவிக்காவிட்டால் பொய் வாக்குமூலம் கொடுத்த குற்றத்திற்கு அவர்களை உட்படுத்த முடியுமா?

வ:—உலகத்தில் பொதுவாக மனிதர்கள் உண்மையையே பேச வேண்டு மென்பதும் பொய் பேசுவது இழிவானக் காரிய மென்பதும் ஜனங்களின் இயற்கையான கொள்கையாக யிருக்கவேண்டும். ஆகையால் சாக்ஷிகள் போலீசார் கேட்டகேள்விகளுக்கு உண்மையைத்தான் சொல்லவேண்டும். ஆனால் 1882-ம் ஆண்டுத்து கி. பு. கோடு 161-வது பிரிவில் போலீசாரிடம் சாக்ஷிகள், கொடுக்கும் வாக்குமூலத்தில், சாக்ஷிகள் உண்மையைச் சொல்லக் கடமை பட்டிருக்கிறார்கள் என்ற வார்த்தைகளிருந்தன. இப்போதிய 1898-ம் ஆண்டத்திய 5-வது ஆக்ட்டில் (கி. பு. கோடில்) 161-வது பிரிவில் ஷை வார்த்தைகளில்லை. ஆகையால் போலீசாரிடம் சாக்ஷிகள் உண்மையைச் சொல்லாவிட்டால் பொய் வாக்குமூலம் கொடுத்தற் கேற்பட்ட தண்டனைக்கு உள்ளாகமாட்டார்களென்று ஏற்படுகிறது.

ஸோ:—போலீசாரிடம், சாக்ஷிகள் கொடுக்கும் வாக்குமூலங்களில் எதிலுமே உண்மையைச் சொல்ல வேண்டியதில்லையா?

வ:—கி. பு. கோடு 175 வது பிரிவுப்படி தற்கொலை முதலிய மரணத்தைப்பற்றி, போலீசாரிடம்சாக்ஷிகள் உண்மையைச் சொல்லவேண்டும்.

ஸோ:—போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சாக்ஷிகள் கையெழுத்துப் போடவேண்டுமா?

வ:—போலீசார் முன் சாக்ஷிகள் தெரிவித்த சங்கதிகளை போலீசார் எழுதிக்கொண்டு, அதில் கையெழுத்துப் போடச்சொன்னால், கையெழுத்துப் போட வேண்டியதில்லை. (கி. பு. கோடுபிரிவு 162.)

ஸோ:—போலீசார் முன் விசாரிக்கப்பட்ட சாக்ஷிகளை போலீசார் முச்சலிக்கா கொடுக்கும்படி சொன்னால் சாக்ஷிகள் முச்சலிக்காக் கொடுக்கவேண்டுமா? அப்படி முச்சலிக்காக் கொடுக்காவிட்டால் என்ன நடக்கும்.

வ:—போலீசாரால் விசாரிக்கப்பட்ட சாக்ஷிகளை தங்கள் முன்புக்காவது அல்லது வேறி கோர்ட்டார் முன்புக்காவது வேண்டும்போது அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஆஜராவதாக முச்சலிக்காக்கொடுக்கும்படி கேட்டு அந்தச் சாக்ஷிகள் முச்சலிக்கை கொடுக்கமாட்டேனென்றால் அவர்களைப் பிடித்து மாஜிஸ்ட்ரேட்டிடம் பந்தோபஸ்தில் அனுப்பிவிடலாம் (கி. பு. கோடு பிரிவு 171)

ஸோ:—மாஜிஸ்ட்ரேட்டிடம் போனபிறகு என்ன நடக்கும்?

வ:—அந்த மாஜிஸ்ட்ரேட்டிடம் போனஉடனே முச்சிலிக்காக் கொடுக்காவிட்டால், முச்சலிக்காக் கொடுக்கும்வரை அல்லது கேசு விசாணை முடியும்வரை அவர்களைக் காவலில் வைத்திருக்கலாம்

குறிப்பு:—ஒருகேசின் வாதியாவது, அல்லது சாக்ஷிகளாவது மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும்போது போலீசார் அவர்களைப் பின் தொடர்ந்துபோய் அனாவசியமான தடங்கல் அல்லது இடஞ்சல் செய்யக்கூடாது. வேண்டுமானால், அவர்களிடம் சொந்த முச்சலிக்கா வாங்கிக் கொள்ளலாம் (கி. பு. கோடு பிரிவு 171.)

கோர்ட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும்போது அல்லது கோர்ட்டிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கும்போது சாக்ஷி வகையராக்களை வாறண்டு முதலியதுகளுக்காகப் பிடிக்கக்கூடாது.

ஸோ:—ஒருவனுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தத்தவறிவிட்டால் சட்டப்படி நடத்தப்படும் நடவடிக்கைகள் என்ன?

வ:—ஒருவனுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தத் தவறினால் அப்படி தவறுகிறவனுக்கு காவல்தண்டனை விதிக்கலாம். (இ. பி. கோடு 64-வது பிரிவு)

ஸோ:—எவ்விதமான காவல் தண்டனை விதிக்கலாம். கடினகாவலா அல்லது வெறுங்காவலா?

வ:—காவல் தண்டனையுடன், அபராத தண்டனையும் சேர்த்து விதிக்கப்பட்ட கேசுகளில், அபராதம் செலுத்தத்தவறினதற்காக விதிக்கப்படும் காவல் தண்டனையானது அபராதத்துடன் சேர்த்து விதிக்கப்பட்டிருக்கும் காவல்தண்டனை வெறுங்காவலாகவோ, கடினகாவலாகவோ எப்படி யிருக்கிறதோ அப்படி யிருக்கவேண்டும் (இ. பி. கோடு 66-வது பிரிவு)

ஸோ:—எனக்கு நன்றாய் புரியவில்லை; தெரியும் படி சொல்லக் கேட்டு கொள்ளுகிறேன்.

வ:—ஹரிஹர அய்யர்என்பவருக்கு ஒருமாதம் வெறுங்காவலும் ரூ. 50 அபராதமும் விதிக்கப்படுகிறது என்றுவைத்துக் கொள்வோம். அவர்தனக்கு விதிக்கப் பட்ட ரூ. 50 அபராதத்தைச் செலுத்தத் தவறி விட்டாரே யாகில் அவருக்கு வெறுங்காவல் தண்டனை விதிக்கப்படும்.

இன்னும் ஒரு உதாரணமும் சொல்லுகிறேன் கேளுங்கள்.—

8 AUG 1917

முனியாண்டி என்பவனுக்கு 3-மாதங் கடின காவலும் ரூ. 100 அபராதமும் விதிக்கப்படுகிறது. அவன் ரூ. 100 அபராதத்தைச் செலுத்தத் தவறிவிடுவானேயாகில் அவனுக்குக் கடின காவல் தண்டனை விதிக்கப்படும்.

ஸோ:—காவல் தண்டனையுடன் விதிக்கப்படுகிற அபராதத்தைச் செலுத்தத் தவறிவிட்டால் விதிக்கப்படக் கூடிய காவல் தண்டனையின் தாரணையைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

வ:—மேல் நான் சொன்னபடி காவல் தண்டனையுடன் கூட விதிக்கப்படுகிற அபராதத்தைச் செலுத்தத் தவறினால் எந்தக் குற்றத்திற்காக காவல் தண்டனையும் அபராத தண்டனையும் சேர்த்து விதிக்கப் பட்டிருக்கிறதோ அந்தக் குற்றத்திற்கு, மேல் கண்ட தண்டனை விதித்த கோர்ட்டாருக்கு எவ்வளவு காவல் தண்டனை விதிக்க அதிகார மிருக்கிறதோ, அந்த அதிகாரத்தில் 4-ல் ஒரு பங்கு காவல் தண்டனை விதிக்கலாம். (கி. பு. கோடு பிரிவு. 33-பி.)

ஸோ:—இன்னும் தெளிவாய்ச் சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

வ:—மூன்று வருஷக்காலம் தண்டனை விதிக்கப்படக் கூடிய, இ. பி. கோடு 379-வது பிரிவுப்படிக்குள்ள திருட்டுக் குற்றத்திற்காக ஒருவனுக்கு காவல் தண்டனையும், அபராத தண்டனையும் விதிக்கப்படுகிறதென்று வைத்துக்கொள்ளுவோம். களவு குற்றத்திற்கு மூன்று வருஷத் தண்டனை யேற்பட்டிருந்தாலும், அந்தக் குற்றத்திற்கு தங்களுடைய, பூரா அதிகாரத்தைச் செலுத்தினபோதிலும், ஒரு 1-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு 6 மாதமும் 3-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு 1 மாதமும் தான் தண்டிக்கலாமென்று கி. பு. கோடின் 32-வது பிரிவினால் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், மேலே கண்ட அபராதத்தைச் செலுத்தத்தவறினதற்காக

1, 2, 3, வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் தாங்கள் இந்தக் குற்றத்திற்கு விதிக்கக்கூடியதண்டனையாகிய 2 வருஷம் 6 மாஸம், 1 மாஸம் இவைகளில் 4-ல் ஒரு பங்காகிய, 6 மாஸம், $1\frac{1}{2}$ மாஸம், 1 வாரம் இந்த தண்டனைகளைத்தான் விதிக்கலாம்.

பின்னும் ஒரு உதாரணமும் சொல்லுகிறேன் கேளுங்கள் :—மூன்று மாஸம் காவல் தண்டனை விதிக்கக்கூடிய ஒரு குற்றத்திற்காக, ஒருவனுக்கு காவல் தண்டனையோடு அபராதமும் விதிக்கப்படுகிறதென்று வைத்துக்கொள்வோம்; அவன் அந்த அபராதத்தைச் செலுத்த தவறி விடுவானேயாகில் 1 வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு 3 மாஸமும் 2 வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு $1\frac{1}{2}$ மாஸமும், 3 வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு 1 வாரமும் காவல் தண்டனை விதிக்கலாம்.

மற்றும் ஒரு உதாரணமும் சொல்கிறேன் கேளுங்கள் :—ஒரு வருஷம் காவல் தண்டனை விதிக்கப்படக்கூடிய ஒரு குற்றத்திற்காக, ஒருவனுக்கு காவல் தண்டனையோடு அபராததண்டனையும் விதிக்கப் படுகிறதென்று வைத்துக் கொள்வோம்; அபராதத்தைச் செலுத்தத் தவறினால் 1-வது வகுப்புமாஜிஸ்ட்ரேட்டு 3 மாஸமும் 2 வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு $1\frac{1}{2}$ மாஸமும் 3 வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு 1 வாரமும் காவல் தண்டனை விதிக்கலாம்.

அடியில் கண்ட விஷயங்களையும் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பு :—காவல் தண்டனையோடு சேர்ந்து விதிக்கப்படுகிற அபராதத்தைச் செலுத்தத் தவறினதற்காக கி. பு. கோடு 33 வது பிரிவுப்படிக்கு பற்பல வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் விதிக்கக்கூடிய தண்டனையில் 4-ல் ஒருபங்கு தண்டனையானது அடியில் கண்ட தாரணைக்கு ஒரு போதும் மேல் போகமாட்டாது.

1—வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு 6—மாஸம்.
2—வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு $1\frac{1}{2}$—மாஸம்.
3—வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு 1—வாரம்.

குறிப்பு:—2. ஒரு குற்றத்திற்காக காவல் தண்டனை விதிப்பதில் ஒரு மாஜிஸட்ரேட்டு தன் பூரா அதிகாரத்தையும் உபயோகப் படுத்தியிருந்தாலும் அதோடு கூட அபராதம் செலுத்தாமலிருப்பதற்காக விதிக்கப்படும் கால் தண்டனையும் சேர்த்து மேல்கண்ட தாரணைப்படி விதிக்கலாம்.

ஸோ :—காவல் தண்டனை யாவது, அபராத தண்டனை யாவது விதிக்கப்படக்கூடிய கேசுகளில் அபராதம் மட்டும் விதிக்கப்பட்டு அந்த அபராதத்தைச் செலுத்தத் தவறினால் எவ்வளவு காலத்துக்குக் காவல் தண்டனை விதிக்கலாமென்பதை அறிய விரும்புகிறேன்.

வ :—காவல் தண்டனையோடு அபராத தண்டனையும் விதிக்கப்படக்கூடிய கேசுகளிலாவது, அல்லது காவல்தண்டனையாவது அபராத தண்டனையாவது விதிக்கப் படக்கூடிய கேசுகளிலாவது, அபராத தண்டனைமட்டும் விதிக்கப்பட்டால் அந்த அபராதத்தைச் செலுத்தத் தவறுவதற்காக எந்தக்குற்றத்திற்கு அபராத தண்டனை விதிக்கப்பட்டதோ அந்தக் குற்றத்திற்கு சட்டப்படி விதிக்கப்படக்கூடிய பூராக்காவல் தண்டனையில் 4-ல் ஒரு பங்கு விதிக்கலாம். (இ. பி. கோடு பிரிவு 65.)

ஸோ :—இதை விளங்கச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வ :—2-வருஷம் காவல் தண்டனையாவது அல்லது அபராத தண்டனையாவது அல்லது இரண்டுமோவது விதிக்கப்படக்கூடிய குற்றமாகிய இ. பி. கோடு 147-வது பிரிவில் கண்ட கூட்டக்கலகம் செய்த குற்றத்திற்காக அபராதமட்டில் விதிக்கப்படுகிறதென்று வைத்துக்கொள்வோம். இந்தக் கேசில் அபராதத்தைச் செலுத்தத் தவறினால் 1-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு அந்தக் குற்றத்திற்கு ஏற்பட்டிருக்கிற மொத்த தண்டனையாகிய 2-வருஷத்தில் 4-ல் ஒருபங்காகிய 6-மாஸமும், 3-வது வகுப்பு மாஜிஸ்ட்ரோட்டு 6-மாஸமும், தண்டிக்கலாம். ஆனால் 3-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு ஒரு மாஸந்தான் தண்டிக்கலாம். ஏனென்றால் அவருக்கு ஒரு மாஸத்துக்கு மேல் தண்டிக்க அதிகாரம் கிடையாது.

குறிப்பு:—விதிக்கப்படும் அபராதத்தைச் செலுத்தாதற்காக இ. பி. கோடு 65-வது பிரிவுப்படி கொடுக்கப்படும் காவல் தண்டனையானது கி. பு. கோடு 32-வது பிரிவுப்படி தங்களுக்குள்ள அதிகார தாரணைக்குமேல் பட்டுப் போய்விடாமல், மாஜிஸ்ட்ரேட்டுகள், கவனமாக யிருக்க வேண்டுமென்று கி. பு. கோடு 33-வது பிரிவு (ஏ) உட்பிரிவில் சொல்லப் பட்டிருப்பதையும் மனதில் வைக்கவேணடும். 65-வது பிரிவில்கண்ட மொத்த தண்டனையில் 4-ல் ஒருபங்கு தண்டனையானது அந்தந்த மாஜிஸ்ட்ரேட்டின் அதிகாரத்துக் குட்பட்ட தண்டனையாகியிருந்தால் பூராத்தண்டனையையும்செலுத்த அதிகாரமுண்டு. தங்கள் அதிகாரத்துக்கு மேல் போய்விட்டால் தங்கள் அதிகாரத்துக்குட்பட்ட காவல் தண்டனையைத்தான் விதிக்கலாம்.

ஸோ :—இந்த விஷயத்தைப் பற்றி இன்னும் தெளிவாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

வ :—6 மாஸம் காவல் தண்டனையாவது அல்லது அபராத தண்டனையாவது அல்லது இரண்டுமாவது விதிக்கப்படக்கூடிய கி. பு. கோடு 151-வது பிரிவுப்படிக்குள்ள குற்றத்திற்காக, அபராதமட்டும் விதிக்கப்படுகிறதென்று வைத்துக் கொள்வோம். இந்தக் கேசில் அபராதம் செலுத்தத் தவறினால், 1-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு அந்தக் குற்றத்திற்கேர்ப்பட்ட மொத்த தண்டனையில் 4-ல் ஒரு பங்கு $1\frac{1}{2}$ மாஸமும், 2-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு $1\frac{1}{2}$ மாஸமும், 3-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு 1 மாஸமும் தண்டிக்கலாம். 3-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கு 1 மாஸத்திற்கு மேற்பட்டு தண்டிக்கும் அதிகாரமில்லையாதலால் அவர் தன் அதிகாரத்திற்குட்பட்டு 1 மாஸம் தான் தண்டிக்கலாம்.

மற்றும் ஒரு உதாரணம் சொல்லுகிறேன் கேளுங்கள் :— ஒரு வருஷம் காவல் தண்டனையாவது அல்லது அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கப்படக் கூடிய குற்றமாகிய இ. பி. கோடு 153-வது பிரிவுப்படிக்குள்ள குற்றத்திற்காக அபராத தண்டனைமட்டும் விதிக்கப்படுகிறதென்று வைத்துக் கொள்வோம். இந்தக் கேசில் அபராதம் செலுத்தத் தவறினால் 1, 2-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் 3 மாஸமும் 3-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு 1 மாஸமும் தண்டனை விதிக்கலாம்.

ஸோ :—அபராதமட்டும் விதிக்கக்கூடிய கேசுகளில்விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தத் தவறினால் விதிக்கப்படக்கூடிய காவல் தண்டனையின் தாரணை எப்படி.

வ :—அபராதம் மட்டும் விதிக்கப்படக்கூடிய கேசுகளில், விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தத் தவறினால் ரூ. 50 க்கு மேல் போகாத அபராதத்திற்கு 2 மாஸத்திற்கு மேல்படாத காலத்திற்கும், ரூ. 100 க்கு மேல்போகாத அபராதத்திற்கு 4 மாஸத்திற்கு மேல் போகாத காலத்திற்கும் அதற்கு மேல்பட்ட தொகை எவ்வளவாக யிருந்தாலுமே 6 மாஸத்திற்குமேல் போகாத காலத்திற்கும் வெறுங்காவலில் வைக்கலாம். (இ. பி. கோடு பிரிவு 67.)

ஸோ :—அபராதத் தொகை செலுத்தாததற்காக காவலில் வைக்கப்படுகிறவன் ஷை காவலிலிருந்து எப்பொழுது விடுதலை செய்யப்படுவான்.

வ :—விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தாத தற்காக ஒருவன் காவலில்வைக்கப்பட்டிருந்தால் அந்த அபராதத்தொகை பூராவும் செலுத்தப்பட்டால் அல்லது வசூலிக்கப்பட்ட உடன் அவன் காவலிலிருந்து விடுதலை செய்யப்படுவான் (இ. பி. கோடு பிரிவு 68.)

ஸோ :—விதிக்கப்பட்ட அபராதத்தில் சில பாகத்தை மட்டும் செலுத்தி விட்டு மீதத்தைச் செலுத்தாமலிருந்தால் நடக்கும் நடபடிக்கை என்ன ?

வ :—ஒருவனுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை செலுத்தத் தவறுவதற்காக அவனுக்குவிதிக்கப்பட்டிருக்கும் காவல் தண்டனை நாள் பூராவும் தீர்ந்து போகுமுன் விதிக்கப்படப்பட்ட அபராதத்தில் சில பாகத்தைமட்டும் செலுத்தி விட்டு மீதத்தைச் செலுத்தாம லிருந்தானே யாகில், போடப்பட்டிருக்கிற அபராதத் தொகைக்கும், அபராதம் செலுத்தத்தவறினால் இருக்கும்படி விதிக்கப் பட்டிருக்கிற காவல் தண்டனை நாளுக்கும் ஈவுபார்த்து வசூலாகி யிருக்கிற தொகை போக, வசூலாகாமலிருக்கிற அபராததொகைக்குள்ள நாள் பூராவும் காவலிலிருந்து முடிந்துவிட்டால் வசூலாயிருக்கிற தொகைக்குள்ள காவலிலிருக்க வேண்டிய நாளைத்தள்ளி, உடனே அபராதம் போடப் பட்டவன் காவலிலிருந்து விடுதலை செய்யப்படுவான். (இ. பி. கோடு பிரிவு, 69.)

ஸோ :— இதை இன்னும் விளங்கச் சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

வ :—சங்கரன் என்பவனுக்கு ரூ. 100 அபராதம் விதிக்கப்பட்டு, அந்த அபராதத்தைச் செலுத்தத்தவறினால் மூன்று மாதம் காவலிலிருக்கும்படி தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். தீர்ப்புத் தேதியிலிருந்து 15-வது தினத்தில் ரூ. 50 வசூல் செய்யப்படுகிறது. செலுத்தப்பட்ட ரூ. 50-க்கு வஜாக்கிடைக்க வேண்டியது ஒண்ணரை மாதக் காவல் தண்டனை ரூ. 50 வசூலாகும்போதா யிருந்து தீர்ந்த மாஸம் அரை போகபாக்கி ஒருமாஸம் காவலிலுருந்து தீர்ந்த உடன் காவலிலிருந்து விடுதலை செய்யப்படுவான்.

ஸோ :—விதிக்கப்படும் அபராதத்தொகையை எவ்வளவு காலம் வரை வசூல் செய்யலாம்.

வ :—விதிக்கப் படப்பட்ட அபராதத்தொகையில் கொஞ்சங்கூட வசூலாகாமல் பூராவும் பாக்கி யிருந்தாலுமே, அல்லது சொல்பத்தொகை வசூலாகி மீதம் வசூலாகாமல் பாக்கி யிருந்தாலுமே வசூலாகாமல் பாக்கி யிருக்கிற தொகையை அபராதம் விதிக்கப்பட்ட தேதி முதல் 6-வருஷங்களுக்குள் எப்போதாவது வசூல் செய்பலாம். (இ. பி. கோடு பிரிவு 70.)

ஸோ :—6 வருஷங்களுக்குள் அபராதத் தொகையை வசூல் செய்யா விட்டால் பின்னீடு ஷை தொகையை ஒரு போதும் வசூலிக்கக் கூடாதா ?

வ :—அபராதம் போடப்பட்டு, ஷை அபராதத்தொகை பூராவையும் செலுத்தாமல் பாக்கி வைத்திருக்கிற நபருக்கு, வசூலாகாமல் பாக்கி யிருக்கிற அபராதத் தொகை எந்தக் குற்றத்திற்காக விதிக்கப்பட்டதோ அதே குற்றத்திற்காக 6 வருஷங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குக் காவல் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் அபராதம் விதித்த

தேதி முதல் 6 வருஷ மாயிதாக் கழிந்து போய் விட்டாலும் விதிக்கப்பட்டிருக்கிற 6 வருஷத்துக்கு மேல்பட்ட காவல் தண்டனை கழியு முன் எப்போதாவது செலுத்தப்படாமல் பாக்கியிருக்கிற அபராதத்தை வசூல் செய்து கொள்ளலாம் (இ. பி. கோடு பிரிவு 170.)

ஸோ:—அபராதம் விதிக்கப்பட்டவன் அபராதத் தொகையைச் செலுத்தாமலேயே இறந்து போய் விடுவானே யாகில் என்ன நடக்கும்.

வ:—அபராதம் விதிக்கப்பட்ட நபர் அபராதம் விதிக்கப்பட்ட தேதி முதல் 6 வருஷங்களுக்கு முன்னமேயே இறந்துபோய் விட்டாலுமே அபராதத் தொகையைச் செலுத்தும் கடமை அவனை விட்டு நீங்கி விடமாட்டாது அவன் உயிருடனிருக்கும் போது அவன் பட்ட கடன் அவன் இறந்த பின் சட்டப்படி, எந்த சொத்தின் பேரில் வசூல் செய்யப்படுமோ அந்தச் சொத்தின் பேரில் அபராதத்தை வசூல் செய்யலாம். (இ. பி. கோடு பிரிவு 70.)

ஸோ:—அபராதம் விதிக்கப்படப்பட்டவன் இறந்து போனபின் அவனிடமிருந்து அபராதத்தை எப்படி வசூல் செய்வது.

வ:—அபராதம் விதிக்கப் படப்பட்டவன் அபராதம் விதிக்கப் பட்ட 6-வருஷங்களுக்குள் இறந்து போய் விட்டால், அவனுடைய கடன்களுக்காக ஜவாப்தாரியாக்கப் படக்கூடிய அவனுடைய சொத்துக்களிலிருந்து வசூலாகாத அபராதத் தொகைக்கு ஈடு செய்யலாமென்று இ. பி. கோடின் நிபந்தனைகளிருந்தாலும் அவன் இறந்த பிறகு வசூலாகாத அபராதத் தொகைக்கு ஈடு செய்வதற்காக அவனுடைய ஸ்தாவர சொத்துக்களை ஜப்தி செய்யவாவது ஏலம் போடவாவது கூடாது. அந்தச் சொத்துக்களின் பேரில், ஸீவில் வியாச்சியம் போட்டு அபராதத்தை வசூல் செய்பலாம். (இ. லா. ரி. 20. கல். 278.)

ஸோ:—அபராதம் செலுத்தத் தவறுவதற்காக விதிக்கப்பட்ட காவல் தண்டனை பூராவையும் ஒருவன் அனுபவித்துவிடுகிறான் அப்படியானால் வசூலாகாத அபராதத்தை வசூல் செய்யலாமா?

வ:—அபராதம் செலுத்தத் தவறினால் அனுபவிக்கும்படி விதிக்கப்பட்ட காவல் தண்டனைக்காலம் பூராவையும் ஒருவன் காவலிலிருந்து தீர்த்துவிட்டாலுமே செலுத்தப்படாமல் பாக்கியிலிருக்கிற அபராதத்தைச் செலுத்த வேண்டிய கடமை அவனை விட்டு நீங்கிவிடாது. ஏனென்றால் அபராதம் செலுத்தத் தவறினால் விதிக்கப்படும் காவல் தண்டனையானது அபராதம் செலுத்துவதற்கு பதிலாக விதிக்கப் பட்டதல்ல. ஆனால் அந்தக்காவல் தண்டனையானது விதிக்கப்பட்ட அபராதத்தை கோர்ட்டு உத்திரவுப்படி உடனே செலுத்தாததின் மூலமாக கோர்ட்டுஉத்தரவை அலக்ஷியம் செய்வதற்காகவும் அபராதம் விதிக்கப்பட்டவனுக்குக் கொடுக்கப் பட்ட தண்டனையே யல்லது வேறில்லை. (ஸதர் லண்ட்ஸ் வீக்லி ரிப்போர்ட்டர் 3-வது வாலம் 61-ம் பக்கம்.)

இந்த விஷயத்தைப்பற்றி பினல் கோடின்கிரந்த கர்த்தாக்கள் பின்வருமாறு சொல்லி யிருக்கிறார்கள்:—

"அபராதம் செலுத்த தவறுகிறதற்காக விதிக்கப்படுகிற காவல் தண்டனையை ஒருவன் அனுபவித்துத் தீர்த்துவிட்டாலும், அப்படிக் காவலிலிருந்ததை அபராதம் செலுத்துவதற்கு பதிலாக நினைத்து அவன் அபராதத்தைச் செலுத்தி விட்டதாக நாம் எண்ணமாட்டோம். குற்றஞ் செய்த ஒருவன் சரீர தண்டனையை அடைய சம்மதிக்கிறனு அல்லது பொருளை இழப்பதான அபராத தண்டனையை அடைய சம்மதிக்கிறனு வென்று அவன் சம்மதத்தைக் கேழ்க நாம் சம்மதிக்கமாட்டோம் அப்படி அவர்கள் சம்மதத்தைக் கேட்டு நாம் செய்கிறதாகயிருந்தால் அபராதம் கொடுக்கமனமில்லாதவர்கள் எல்லோரும் காவல்தண்டனை அனுபவிப்பதே தங்களுக்கு சம்மதமென்று சொல்லிவிடுவார்கள். அபராதம் கொடுக்க சம்மத மில்லாதவர்கள் எல்லோரையும் அபராத தண்டனையிலிருந்து விலக்கிவிட வேண்டியதாகவேயே யிருக்கும். காவல் தண்டனையை இலேசானதாகவும் அபராத தண்டனையை அதிகக் கடினமான தாகவும் நினைத்து அபராத தண்டனைக்குப் பயந்து குற்றச் செய்கைகளைச் செய்யத் துணியாமலிருக்கக் கூடியவர்களையே அபராத தண்டனையி லிருந்து விலக்க வேண்டியதாக யிருக்கும். ஆகையால் அபராதம் செலுத்தத் தவறினால் விதிக்கப்படுகிற காவல் தண்டனையை ஒருவன் அனுபவித்துவிட்டதினால் அபராதம் செலுத்த வேண்டிய கடமை அவனைவிட்டு நீங்கிவிடமாட்டாதென்று நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். அபராதம் செலுத்த தவறினதற்கு அவன் சரீரம் ஜவாப்தாரியாக மாட்டாது ஆனால், அவனுடைய சொத்துக் கொஞ்சகாலத்திற்கு ஷை அபராதத் தொகைக்கு ஜவாப்தாரியாக யிருக்கும்".

ஸோ:—அபராதம் விதிக்கப்படப்பட்ட கேசுகளில் அபராதம் செலுத்தப்படப்படாத விஷயத்தில் என்ன நடக்கும்.

(இன்னும் வரும்.)

OUR LAW COLLEGE.

எங்களுடைய சட்ட கலாசாலை.

எங்களுடைய சட்ட கலாசாலையின் புரொபசர் உலகறிந்த திருநெல்வேலி வக்கீல் K. R. கிருஷ்ணமாச்சாரியார் அவருடைய மாணுக்கர்களுடைய பெயர்கள்:—

1 அனந்தாச்சாரி, 2 சக்ரவர்த்தி ஐயங்கார், 3 துரைசாமி முதலியார், 4 சட்டராசாரியார், 5 தணிகாசல முதலியார் வகையராக்கள்.

HINDU LAW—ஹிந்து லா.

ADOPTION—ஸ்வீகாரம்.

(முன் மாதத் தொடர்ச்சி.)

பு:—தாயாதிகள் மோசக்கருத்தினலாவது, அக்கிரமமான வழிகளினலாவது அல்லது பொருள் லாபத்தை உத்தேசித்தாவது, ஸ்வீகாரம் செய்து கொள்ள அனுமதிகொடுத்தால் அந்த ஸ்வீகாரம் செல்லப்பட மாட்டாது. (இ. லா. ரி. 2. ம. 270; 8. ம. 545; 26. ம, 627; 7. இ. அ. 173)

மாணு:—விபக்த தாயாதிகளில், ஸ்வீகாரம்செய்து கொள்ள சிலர் அனுமதி கொடுக்கிறார்கள், சிலர் மறுதளிக்கிறார்கள், அப்போது ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

பு:—விபக்த குடும்பமாயிருக்கும் பக்ஷத்தில் விபக்த தாயாதிகளில் சிலர் அனுமதி கொடுத்தாலும் போதும். (இ. லா. ரி. 2. ம. 202)

மாணு:—அனுமதி கொடுக்க சிலர் மறுதளிக்கும்போது செய்து கொண்ட ஸ்வீகாரம் எப்போதாவது செல்லுமா?

பு:—அப்படி அனுமதி கொடுக்க மறுதளித்தவர்கள் கெட்ட எண்ணத்தின் பேரிலாவது, பொறுமையினலாவது மறுதளித்திருந்தால், ஸ்வீகாரம் செல்லும். (இ. லா. ரி. 2. ம. 202)

மாணு:—புருஷன் ஸ்விகாரம் எடுத்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு இறந்து போய் விட்டால், பெண்சாதி (விதவை) புருஷன் சொன்ன நிபந்தனைகளின் படிக்கே ஸ்வீகாரம் செய்துகொள்ள வேண்டுமா, அல்லது அவள் இஷ்டப்போல செய்து கொள்ளலாமா?

பு:—புருஷன், ஸ்வீகாரம் செய்துகொள்வதற்கு பொதுவான அனுமதி கொடுத்திருந்தால், விதவை தனக்கிஷ்டமான பிள்ளையை ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம்.

ஒரு பையனைக்குறிப்பிட்டு அவனையே ஸ்வீகாரம் செய்யும்படி சொல்லியிருந்தால் அந்தபையனைத்தவிர வேறு யாரையும் ஸ்வீகாரம் செய்து கொள்ளக்கூடாது.

மாணு:—அந்த பையனுடைய பெற்றோர்கள் இந்த விதவையின் வேண்டுதலின் பிரகாரம் பையனை ஸ்வீகாரம் கொடுக்கமாட்டேனென்றுசொல்லிவிட்டால் வேறுபையனை ஸ்வீகாரம்செய்து கொள்ளலாமா?

பு:—கூடாது.

மாணு:—அந்தப்பையன ஸ்வீகாரம்செய்து கொள்ளப்படுமுன்னமேயே இறந்து போய்விட்டால் வேறு பையனை ஸ்வீகாரம்செய்து கொள்ளலாமா?

பு:—அப்போதும், வேறு பையனை ஸ்வீகாரம்செய்து கொள்ளக்கூடாது.

மாணு:—புருஷன் இறக்குங்காலத்தில் பெண்சாதி கர்ப்பிணியாகயிருந்தால் பிறக்கும் குழந்தை இறந்து போகும் விஷயத்தில் ஸ்வீகாரம் செய்துகொள்ளும்படி அனுமதிகொடுத்துவிட்டு இறந்தான். அந்த ஸ்திரீக்கு பெண்குழந்தைபிறந்து ஜீவித்திருந்தால், இந்த விதவை ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

பு:—செய்துகொள்ளக்கூடாது.

மாணு:—ஸ்வீகாரம் செய்துகொள்ளும்படி அனுமதி கொடுத்து புருஷன் இறந்துபோகிறான். ஸ்வீகாரம் செய்துகொள்வது புருஷனுக்காகவேயல்லது பெண்சாதிக்காக இல்லையென்று மேலேசொல்லப்பட்டது. அப்படியாகில், அந்த விதவைக்கு ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள மனமில்லாமல் போய்விடுமாகில் அவளை ஸ்வீகாரம் யெடுத்துக்கொள்ளச் சொல்லி கட்டாயப்படுத்தலாமா?

பு:—அந்த விதவைக்கு இஷ்டமிருந்தால் ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம். இஷ்டமில்லையானல ஸ்வீகாரம் செய்து கொள்ளும்படி அவளை யாரும் கட்டாயம் செய்யமுடியாது. (இ. லா. ரி. 7. கல். 288; 7. மூ. இ. அ. 196.)

மாணு:—ஒருக்கால் தாயாதர்கள் கட்டாயப்படுத்தியதின்பேரில் ஷை விதவை ஸ்வீகாரம் செய்து கொண்டால், ஷை ஸ்வீகாரம் செல்லுமா?

பு:—செல்லமாட்டாது (இ. லா. ரி. 13. ம. 214–220).

மாணு:—ஸ்வீகாரம் செய்துகொள்ள, அனுமதி பெற்றுக் கொண்ட இவ்வளவு காலத்துக்குள் தான் ஸ்வீகாரம் செய்து கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையுண்டா ?

பு:—அப்பேர்ப்பட்ட நிபந்தனை கிடையாது. மைனராகயிருக்கும் ஒருவன் தன் மைனர் பெண்சாதிக்கும் ஸ்வீகாரம் செய்துகொள்ள அனுமதி கொடுக்கக்கூடுமாகையால் ஷை மைனராக விருந்த பெண்சாதி ஸ்வீகாரம் செய்துகொள்ள அனுமதி பெற்றுக் கொண்டதற்கு பிறகு சுமார் 80 வருஷத்துக்கு மேல் ஜீவித்திருப்பதும் ஸாத்தியமும் ஸம்பாவிதமுமான காரியம். அப்பேர்பட்ட கேசுகளில் அவளுடைய வாழ்நாட்களின் கடைசிக் காலத்திலும் முன்பெற்ற அனுமதியைக்கொண்டே ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம்.

(4. பம். ஹை. கோ. ரி. 191; இ. லா. ரி. 9. பம் 58)

மாணு:—இப்படி ஸ்வீகாரம்செய்துகொள்ள புருஷனால் கொடுக்கப்படும் அனுமதியானது எதுவரை ஊர்ஜிதத்திலிருக்கும், அல்லது எந்த காரணத்தாலும் ரத்தாகிவிடமாட்டாதா ?

பு:—ஸ்வீகாரத்துக்கு அதிகாரம் கொடுத்தவனுடைய ஆஸ்தி (சொத்துக்கள்) அந்த விதவையின் கைவசமிருந்து வேறொருவர்வசம் போகும்வரை ஷை அனுமதி ஊர்ஜிதத்திலிருக்கும். அப்படி சொத்து ஷை விதவையின் கைவிட்டுப் போனபிறகு செய்து கொள்ளும் ஸ்வீகாரம் செல்லமாட்டாது. (இ. லா. ரி. 10. ம. 205; 10. மூ. இ. அ. 279; இ. லா. ரி. 17. க. 122; 8. கல். 302; 18. கல். 69; 18. கல் 385; 7. ம. 401; 8. இ. அ. 229; 14. இ. அ. 67; 9. பம். 94; 17 பம். 164; 26. பம். 526.)

மாணு:—சொத்து விதவையின் கைவிட்டு, அவள் பராதீனம் செய்யாமல் எப்படிப் போய்விடும்.

பு:—ஒருவன் இறக்கிற காலத்தில் அவனுக்குப் பிள்ளையிருக்கிறான், அந்தப் பிள்ளைக்கு அல்பாயுஸாக யிருப்பதை ஜாதகரீதியாய் அவன் உணர்ந்து அந்தப் பிள்ளை இறந்து போனால் ஸ்வீகாரம் செய்துகொள்ளும்படி தன் பெண்சாதிக்கு அனுமதி கொடுக்கிறான். அந்தப் பிள்ளை அவன் எதிர் பார்த்திருந்த பிரகாரமே விவாகமான பிறகு இறந்து போய்விடுகிறான் அப்போது சொத்துக்கள் எல்லாம் (விதவையின் சொத்துக்களெல்லாம்) அவனுடைய மகன் பெண்சாதி (மருமகள்) யினுடையதாய் விடுகிறது. அப்போது ஸ்வீகாரம் செய்து கொள்ளும் பாத்தியம் போய்விடும்.

மாணு:—மருமகளிறந்த பிறகு பிள்ளை இறந்து போனால், அந்த விதவை ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா ?

பு:—செய்துகொள்ளலாம், ஏனென்றால் மகன் இறந்த உடன் ஆஸ்திகள் எல்லாம் மறுபடி விதவை கைவசமே வந்து விடுகிறது. ஆகையால் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம். (10 மூ. இ. அ. 311; 22. ஸதர். வீ. ரி. 121)

மாணு:—முதலில் மகனிறந்து அப்பால் மருமகளும் இறந்துபோய்விட்டால் அப்போதாவது விதவை ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

பு:—அப்போது ஸ்வீகாரம்செய்துகொள்ளக்கூடாது. (10 மூ. இ. அ. 279; இ. லா. ரி. 10 ம. 205; இ. லா. ரி. 17 க. 122)

மாணு:—மேல்கண்ட காரணங்கள் நீங்கலாக விதவை பெற்றுக் கொண்ட ஸ்வீகார அனுமதி வேறுகாரணங்களால் ரத்தாய் விடக்கூடுமா?

பு:—விதவையானவள் விபசாரியாகப் போய்விட்டால் அவள் ஸ்வீகாரம் செய்துக்கொள்ள அனுமதி பெற்றிருந்தாலும் அவள் ஸ்வீகாரம் செய்து கொள்ளக்கூடாது. ஏனென்றால் ஸ்வீகாரம் வாங்கிக்கொள்ளும் போது செய்ய வேண்டிய சாஸ்தாரீதியான காரியங்களை செய்கிறதற்கு அவள் யோக்கியதையற்றுப் போய்விடுகிறாள். ஆனால் விபசாரதோஷத்துக்கு ஏற்பட்ட பிராயச்சித்தங்களைச் செய்துவிட்டு ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம். விபசாரம் செய்து அதனால் கர்ப்பந் தரித்துவிட்டால், அப்பேர்ப்பட்டவளுக்கு பிராயச்சித்தமே கிடையாது. ஆகையால் அவள் ஸ்வீகாரம் செய்து கொள்ளவும் முடியாது. (5-கல் ஹை. கோ. ரி. 362; 13. கல். ஹை. கோ. ரி. 39.)

மாணு:—ஸ்வீகாரம் செய்து கொள்ளுவதில், அதற்குறிய முக்கியமான கர்மங்கள் என்ன ?

பு:—ஸ்வீகாரம் கொடுக்கப்படுகிற பிள்ளையை ஸ்வீகாரம் கொடுப்பவர் தானம் செய்ய வேண்டும். அந்த தானத்தை ஸ்வீகாரம் வாங்குகிறவர் பெற்றுக்கொள்ளவேண்டும். இதற்கு (ஸ்வீகாரதானம், ஸ்வீகார பரிக்கிரஹம்) என்று சொல்லப்படும்.

மாணு:—பிரம்ம, க்ஷத்திரிய, வைசியர்களுக்கும் ஸ்வீகார காலத்தில் ஏதோ மந்திரம் முதலியது சொல்லுகிறார்களே அதன் கருத்தென்ன?

பு:—ஸ்வீகாரதானம் வாங்கப்போகிறவர் ஸ்வீகாரதானம் செய்பவரிடம் சென்று, அவர் பிள்ளையைத் தனக்கு ஸ்வீகாரம் கொடுக்கவேண்டுமென்று கேட்பதும், அவர் அப்படியே கொடுத்தேனென்று சொல்லி தானம் கொடுப்பதும் அப்பால் ஸ்வீகார பிதா-ஸ்வீகாரப் பிள்ளையைப் பார்த்து, "உன்னை நான் தானம் வாங்கிக் கொண்டேன், சாஸ்திரப் படிக்குள்ள மதஸம்மந்தமான கிரியைகளைச் செய்வதற்கும் வம்சம் விருத்தியாவதற்காகவும் - உன்னைப் பெற்றுக் கொண்டேன்" என்று சொல்வதற்குறிய மந்திரங்கள் தான் சொல்லப்படுகிறது.

மாணு:—ஸ்வீகாரம் செய்து கொள்ளுவதில் இன்னும் முக்கியமான கிரியை எது ?

பு:—ஸ்வீகாரம் நிலைறவேற வேண்டுமானால் தத்த ஹோமம் செய்து தீரவேண்டும். முதல் மூன்று வகுப்பாருக்கும் தத்த ஹோமம் அவசியம். நான்காவது வகுப்பாராகிய சூத்திரர்களுக்கு தத்த ஹோமம் அவசியமில்லை. (13. கல். ஹை. கோ. ரி. 401; இ. லா. ரி. 5. கல். 770; இ. லா. ரி. 6. கல். 381; இ. லா. ரி. 5. ம. 358; இ. அ. 250; 7. ம. 548; 13. ம. 214, 219; 11. பம். 381.)

குறிப்பு:—சூத்திர ஜாதியிலும் சில இடங்களில் தத்தஹோமம் செய்துவிட்டே தான்பரிக்கிரஹம் செய்கிறது வழக்கமாக ஏற்பட்டிருக்கிறது. அப்படி வழக்கம் ஏற்பட்டிருக்கும் இடங்களில் தத்தஹோமம் செய்து தான பரிக்கிரஹம் செய்தாலொழிய ஸ்வீகாரம் செல்லமாட்டாது. (இ. லா. ரி. 6. கல். 381; இ. லா. ரி. 11. ம. 5; இ. லா. ரி. 13. ம. 214.)

மாணு:—சாஸ்திரப்படி தத்தஹோமத்தைச் செய்யாமலேயே, ஸ்வீகாரம் செய்துகொள்ளக்கூடிய கேசுகள் உண்டா ?

பு:—முதல் மூன்று வர்ணத்தார்களில் ஸ்வீகாரம் செய்து கொள்ளப் போகிற பிள்ளை ஸகோதிரனாக இருந்தாலும், அல்லது ஸ்வீகாரம் செய்து கொள்ளுகிறவருடைய, பெண்ணினுடைய பிள்ளை (தௌஹித்திரன்)யாகயிருந்தாலும் தத்தஹோமம் செய்யவேண்டியதில்லை (இ. லா. ரி. 5. க. 770; இ. லா. ரி. 39. பம். 441; இ. லா. ரி. 11. பம். 381; இ. லா. ரி. 6. அ. 276; இ. லா. ரி. 13. ம. 214; இ. லா. ரி. 11. ம. 5; இ. லா. ரி. 24. டம். 218)

மாணு:—தாயாதர்களுடைய சாவு முதலியதால் ஏர்படும் சூதகம் (தீட்டு) அணுகியிருக்கும் காலத்தில், ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

பு:—சூத்திரர் முதலியவர்களுக்கு சாஸ்திரப்படிக் கேர்ப்பட்டிருக்கிற வைதீக கர்மங்கள் ஒன்றும் அவசியமாக இல்லாதபடியால் சூதக காலத்திலும் அவர்களால் செய்து கொள்ளப்படும் ஸ்வீகாரம் செல்லத்தக்கதாகவேயே யிருக்கிறது. (இ. லா. ரி. 5 ம. 358; 9. மூ. இ. அ. 506) ஆகிலும் முதல் மூன்று வகுப்பினரும் தீண்டலாகயிருக்கும் காலத்தில் ஸ்வீகாரம் செய்துக்கொள்ளக் கூடாது. (இ. லா. ரி. 13 ம. 214; 18 ப. 397.)

மாணு:—பிரம்ம, க்ஷத்திரிய, வைசியர் என்னும் முதல் மூன்று வர்ணத்தார்களும் தீண்டலாக யிருக்கப் பட்டகாலத்தில் ஏன் ஸ்வீகாரம் செய்துகொள்ளக்கூடாது?

பு:—தீட்டாக யிருக்கப்பட்ட காலத்தில், வேத மந்திரங்களை சொல்லவே கூடாதென்று நிபந்தனையிருப்பதாலும், ஸ்வீகாரம் செய்து கொள்ளுங் காலத்தில் வைதீக கர்மங்களுக்குறிய வேத மந்திரங்களைச் சொல்ல வேண்டிய திருப்பதாலும், தீட்டாகயிருக்கும் காலத்தில் முதல் மூன்று வர்ணத்தார்களும் ஸ்வீகாரம் செய்து கொண்டால் செல்ல மாட்டாது. (இ. லா. ரி. 13. ம. 222)

மாணு:—ஸ்வீகாரத்திற் குறிய கிரியைகள் பிரசங்கமாகத்தான் செய்ய வேண்டுமா அல்லது எப்படி ?

பு:—ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளுகிறவர், தனது தாயாதர்கள், மற்றுமுள்ள பந்துக்கள் முதலியவர்களையும், ஸ்வீகாரம் எந்த இடத்தில் நடக்கிறதோ அந்தக்கிராமத்தார்களையும் வரவழைத்துவைத்துக்கொண்டு ஸ்வீகாரத்திற் குறிய கிரியைகளைச் செய்யவேண்டு மென்பது சாஸ்திரங்களின் கொள்கை. இக்காலத்தில் அவ்வாறு கண்டிப்பாய் அனுஷ்டிக்கா விட்டாலும் அவ்வாறு செய்வதே வைதிக லௌகீகங்களுக்கு பொருத்தமாகயிருக்கும். ஏனென்றால் ஷை ஸ்வீகார விஷயமாய் யேதும் வியாச்சியம் நேரிடுமிடத்து மேல்கண்டபடி நடத்தப்படும் நடபடிக்கைகள் ஸ்வீகாரத்தை உறுதிப்படுத்துவதற்குரிய சாக்ஷியங்களாகயேர்ப்படும்.

மாணு:—புருஷன் ஸ்வீகாரம் செய்து கொள்ளும்படி அனுமதி கொடுத்திருந்தும் அந்த அனுமதி, ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வதற்குப் பிரயோசன மில்லாமல் போகிற ஸந்தர்ப்பங்கள் உண்டா ?

பு:—ஸ்வீகாரம் செய்து கொள்வதற்கு புருஷனிடமிருந்து அனுமதி பெற்றிருக்கிற ஒரு விதவையானவள், ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வதற்கு சட்டப்படி யாதொரு கால வரையரை யில்லாவிட்டாலும் அந்த அனுமதியானது நிறைவேற்ற முடியாத நிலைமையிலாவது அல்லது உபயோகமற்ற மாதிரியிலாவது ஏற்பட்டு விட்டால் ஷை விதவை ஸ்வீகாரம் செய்து கொள்ளும் பாத்தியதையை இழந்துவிடுவாள்.

மாணு:—மேல்கண்ட சங்கதியை நிரூபிக்கும்படி ஒரு கேசு சொல்லும்படி பிரார்த்திக்கின்றனம்.

பு:—ஹரிதாஸ் என்ற ஒருவர் அவர் ஜீவந்தரா யிருக்கையில் ரோகியாகியிருந்த பாண்டுரெங்கன் என்ற ஓரேமகன் இறந்துபோய்விடும் விஷயத்தில் ஸ்வீகாரம் செய்து கொள்ளும்படி, தன் பெண்ஜாதி

யாகிய பத்மாவதிக்கு அனுமதி கொடுத்துவிட்டு இறந்து போகிறார். அந்த பாண்டுரெங்கன் என்பவன் கலியாணம் செய்து கொள்ளாமலேயே இறந்து போய்விடும் விஷயத்தில், பாண்டுரெங்கனுடைய சொத்துக்கு பத்மாவதியே வார்சு பாத்தியதையை அடைந்து விடுகிறாள். அந்தக் காலத்தில் அவள் எடுத்துக் கொள்ளும் ஸ்வீகாரம் செல்லும். ஆகையால் ஷை சொத்தும் அந்த ஸ்வீகாரப் பிள்ளைக்கு கிடைக்கும். (8. ம. ஹை. கோ. ரி. 108; இ. லா. ரி. 1. ம. 174; இ. லா. ரி. 7. பம். 225; இ. லா. ரி. 20. பம். 250; இ. லா. ரி. 25 பம். 306.)

ஆனால் பாண்டுரங்கன் என்பவன் விவாகம் செய்து கொண்டபிறகு இறந்து போவானேயாகில் அவனுக்குப்பின் அவனுடைய விதவையே வார்ஸாய் விடுவாள். சொத்தும் அவளையே சேர்ந்துவிடுவதுடன் ஷை சொத்தில் பத்மாவதிக்கு யாதொரு பாத்தியதையும் இல்லாமல் போய் விடும். ஆகவே இந்த நிலமையில் பத்மாவதியால் எடுத்துக் கொள்ளும் ஸ்வீகாரம் செல்லமாட்டாது. ஸ்வீகாரம் ஒருக்கால் செய்து கொண்டாலுமே ஸ்வீகாரப்பிள்ளைக்கு சொத்துக்கிடைக்க மாட்டாது. இந்த நிலமையில் பத்மாவதிக்கு ஹரிதாஸ் ஸ்வீகாரம் செய்து கொள்வதற்காகக் கொடுத்த அதிகாரமும் செல்லாமல் போய்விடும். (இ. லா. ரி. 7 ம. 401, இ. லா. ரி 9. பம். 94, இ. லா. ரி. 8 கல். 302, இ. ல. ரி, 17. பம். 164, இ. லா. ரி. 26. பம். 526, இ. லா. ரி. 18. கல். 69, இ. லா. ரி. 18. கல் 385; 10 மூ. இ. அ. 279, 8 இ. அ. 229. 14 இ அ. 67.)

மாணு:—புருஷனுடைய அனுமதிப் பிரகாரம் ஸ்வீகாரம் செய்துக் கொண்ட விதவை அல்லது விதவைகளுக்கு ஸ்வீகாரத்துக்குப்பிறகு அவர்களுடைய புருஷனுடைய சொத்தில் ஏதும் பாத்தியதை உண்டா?

பு,—ஸ்வீகாரம் செய்துகொண்டபிறகு சொத்து முழுவதும் ஸ்வீகாரப் பிள்ளைக்கே சேர்ந்துவிடுகிறது. அந்த விதவை அல்லது விதவைகளுக்கு அவர்களுடைய புருஷனுடைய சொத்திலிருந்து ஜீவனும்சம்மட்டும் தான் கிடைக்கும். (இ. லா. ரி. 1. ம. 174; இ. லா. ரி. 7 பம். 225; இ. லா. ரி. 11 பம். 381-397; 5 பம். ஹை. கோ. ரி. 181, 192; 3. மூ. இ அ. 229.)

மாணு:—ஸ்வீகாரம் செய்து கொண்டபிறகு ஔரஸ புத்திரன் பிறந்த கேசுகளில் ஔரஸ புத்திரன் இறந்து போய்விட்டால் ஸ்வீகார புத்திரனுக்கு யேற்படும் பாத்தியதை என்ன?

பு:—சொத்துப் பிரிவினை யாகிறதற்கு முன் அவனிறந்தால் அந்த ஔரஸ புத்திரனுடைய ஸொத்துக்கள் சகலமும் ஸ்வீகார புத்திரனைச் சேர்ந்ததாய்விடும். (1. ம. ஹை. கோ. ரி. 49.)

மாணு:—ஸொத்துப் பிரிவினையான பிறகு ஔரஸ புத்திரன் இறந்து போனுல், அவனுடைய சொத்துக்கள் என்னமாகும்?

பு:—ஔரஸ புத்திரனுக்குப் பெண்குழந்தை யிருக்கும் பக்ஷத்தில் ஸொத்துக்கள் அந்தப் பெண்ணைச்சேர்ந்துவிடும்.

மாணு:—முன் பிரஸங்கத்தில் துவியா முஷியாயணன் பெற்றதகப்பனுக்கும் ஸ்விகாரத் தகப்பனுக்கும் உத்தரகிரிபை முதலியது செய்யலாமென்று சொல்லப்பட்டது. ஷை துவியா முஷியாயணனுக்கு உபயகுடும்ப சொத்திலும் இருக்கும் பாத்தியதைகள் எப்படி?

பு:—துவியா முஷியாயணன் விதிப்படி ஸ்விகாரம்செய்துக் கொள்ளப்பட்டவனுக்கு பெற்றத்தகப்பனுடைய சொத்திலும் ஸ்விகாரத்தகப்பன் சொத்திலும் பாத்தியதை யேர்ப்பட்டு விடுகிறது. இவனுடைய பெற்றதகப்பனுக்கு வேறு புத்திரன் பிறந்து விட்டால் துவியாமுஷியாயணனுக்கு. பின்னீடு பிறந்த பிள்ளையின் பாகத்தில் பாதிகிடைக்கும்.

மாணு:—இது விஷயத்தை விபரமாய்ச் சொல்லக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பு:—குடும்பத்திலிருக்கும் சொத்தை 3 பாகம் வைத்து துவியா முஷியாயணனுக்கு ஒருபாகமும், பின் பிறந்த பிள்ளைக்கு 2-பாகமும் கிடைக்கும். துவியாமுஷியாயண ஸ்வீகாரம் கொடுத்தபிறகு 2. பிள்ளை பிறந்தால் சொத்தை 5-பாகம் வைத்து பின் பிறந்த பிள்ளைகள் ஒவ்வொரு வருக்கும் 2-பாகங்களும் துவியா முஷியாயணனுக்கு ஒரு பாகமும் கிடைக்கும்.

மாணு:—ஸ்வீகாரத்திற்குப்பிறகு ஔரஸ புத்திரன் பிறந்து விட்டால் குடும்ப சொத்தில் ஔரஸ புத்திரனுக்கு 4-பங்கும் ஸ்வீகாரப் பிள்ளைக்கு ஒரு பங்கும் கிடைக்குமென்று முன் பிரசங்கத்தில் சொல்லப்பட்டது. இது எல்லாத் தேசங்களுக்கும் பொதுவான விதியா அல்லது சில தேசங்களில் மட்டும் வழங்கிவரும் விதியா?

(இன்னும் வரும்.)

REVIEW OF BOOKS.

புஸ்தக ஆராய்ச்சி.

Light of Wisdom.

ஞான தீபிகை:—இப்பெயர் வாய்ந்த நூல் ஒன்றை "பெண்கல்வி" பத்திராதிபராகிய ஸ்ரீமான் அ. சேஷாத்ரி சர்மா அவர்களால் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டதற்கு வந்தன மளிக்கின்றனம்.

ஷை நூலை கவனித்துப் பார்வையிட்டதில் இது மெத்த அருமையானதாகவும் அபூர்வமானதாகவும் தெரிகிறதுடன் இதை வாசிப்பவர்களுக்கு சன்மார்க்க போதனையையும், நல்லொழுக்க உணர்ச்சிகளையும், மனோதத்துவ வுணர்ச்சிகளையும், அபிவிருத்தி செய்வதில் சந்தேகமிராது. இது சர்வ மதத்துக்கும் பொதுவான கொள்கைகளும் நீதிகளுமடங்கிய ஓர் சிறந்த நூலாகவுமிருக்கிறது. சகல ஸ்திரீ புருஷர்களுக்கும் ஸன்மார்க்கத்தையும் நீதியையும் உண்மையையும், ஞானத்தையும் தைர்யத்தையும் போதித்து உலோகவாழ்க்கை க்ரமத்தை ஸரியாக அமைக்க இந்நூல் தகுந்தது யென்று யெமக்கு புலப்படுகின்றது. இத்தகைய நூலை யாவரும் வாசித்து அதனாலுண்டாகும் நல்ல பயனை அடைவார்களென நம்புகிறோம்.

இதன் விலை ரூ. 1.

VILLAGE SHEET.

கிராம ஜனங்களுடைய பக்கம்.

(முன் மாதத் தொடர்ச்சி.)

(5) இப்படிக் கொடுக்கப்படும் எனும் தொகைகளை, கூடிய சீக்கிரம் பட்டுவாடா செய்து விடும்படிக்குள்ள ஜாக்கிரதையை எடுத்துக்கொள்ளவேண்டும். 1890-ம் ஸ் பிப்ரவரிமீ 12உ போட்ட போர்டாரவர்களுடைய புரொஸீடிங்ஸ் நெ. 86; 1910-ம் ஸ் நவம்பர்மீ 1உ போட்ட கவர்ன்மெண்டு உத்தரவு நெ. 3462; 1910ஸ் டிஸம்பர்மீ 20உ போட்ட போர்டாரவர்களுடைய 336-ம் நெ. புரொஸீடிங்ஸ் 1913 ம் ஸ் ஆகஸ்டுமீ 23உ போட்ட கவர்ன்மென்டாரவர்களுடைய 2549 (Revenue) உத்தரவு; 1913-ம் ஸ் செப்டம்பர்மீ 25உ போட்ட கவர்ன்மெண்டு உத்தரவு நெ. 2852 (Revenue); 1913-ம் ஸ் அக்டோபர்மீ 22உ போட்ட போர்டாரவர்களுடைய 304-ம் நெ. புரொஸீடிங்ஸ் இவைகளைப் பார்க்க.

2. வேட்டைக்காரர்கள் எனும் கொடுக்கும் அதிகாரிகளை எவ்விதம் திருப்தி செய்யவேண்டுமென்ற நிபந்தனைகள்:—மிருகங்களைக் கொன்றதாகச் சொல்லும் வேட்டைக்காரர்கள் தாங்கள் கொன்ற மிருகங்களுடைய மண்டையோடு, பற்கள் பதனிடப்படாத தோல் நகங்கள் இவைகளையும், எந்தக் கிராம எல்லைக்குள் ஷை மிருகம் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறதோ அந்தக் கிராம பெரிய தனக்காரனிடமிருந்து ஷை மிருகமானது இத்தனும் தேதி கொல்லப்பட்டதென்ற விபரத்துக்கு ஒரு ஸர்டிபிகேட்டும் வாங்கிக்கொண்டுபோய் ஆஜர் செய்யவேண்டும்.

குறிப்பு (1) காடுகளில் வாசம் செய்கிற ஜாதியார்கள், பலியிடும் காரியாதிகளுக்கு வேண்டுமென்று அபேக்ஷித்தாலுமே, அல்லது ஷை மிருகங்களைக் கொன்றவர்கள், அவைகளை ஜயசின்னமாக வைத்துக் கொண்டிருக்க அபேக்ஷித்தாலுமே தோல்களை கொடுத்துவிட்டுப் போகும்படி செய்யவேண்டியதில்லை. ஆனால் அப்பேர்ப்பட்ட கேசுகளில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் வெகுமதியிலிருந்து தோலின் கிரையத்தொகையைக் கழித்துக் கொள்ளவேண்டும். எனும் கொடுக்கும் உத்தியோகஸ்தர் தானே நேரில் விசாரணை செய்து ஷை வேட்டைக்காரனே ஷை ஜந்துவைக் கொன்றது வாஸ்தவமாவென்பதை திருப்தி செய்து கொள்ளவேண்டும்.

1890-ம் ஸ் பிப்பரவரிமீ 12உ போட்ட போர்டாரவர்களுடைய புரொஸீடிங்ஸ் நெ. 86; 1909-ம் ஸ் எப்பிரல்மீ 14உ போட்ட கவர்ன்மெண்டு உத்தரவு நெ. 992; 1909-ம் ஸ் எப்பிரல்மீ 27உ போட்ட போர்டாரவர்களுடைய 92-ம் நெ. புரொஸீடிங்ஸ் இவைகளைப் பார்க்க.

(2) கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி இந்த ஜில்லாக்களின் ஏஜென்ஸிட்ராக்ட்டுகளில், எனும் கொடுப்பதற்கு கிராம பெரிய தனக்காரனிடமிருந்து ஸர்டிபிகேட்டு அவசியமில்லை. மற்ற ஜில்லாக்களில் கலெக்டர்கள் விசேஷ உத்தரவு பிறப்பித்து இந்த ஸர்டிபிகேட்டு ஆஜர் செய்யவேண்டியதில்லையென்று ஏற்பாடு செய்துவிடலாம். ஆனால் இப்படி உத்தரவு செய்வதற்கு ஷை ஸர்டிபிகேட்டு வாங்கி வருவதற்கு சிரமப்படுமென்றும் எனுமாகக் கேழ்க்கப்படும் தொகை நியாயமாகக் கேழ்க்கப்படுகிறதென்றும் திருப்தி யடைந்திருக்கவேண்டும்.

(3) ஒரு குறிப்பிட்ட ஜந்துவைக் கொல்வதற்காக விசேஷ வெகுமதி (எனும்) கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருந்தால், அதே ஜந்துவைத்தான் கொல்லப்பட்டதென்பதை உறுதிசெய்துகொள்வதில் மிகவும் ஜாக்கிரதையாக யிருக்கவேண்டும்.

1890-ம் ஸ் பிப்ரவரிமீ 12உ போட்ட போர்டுபுரொஸீடிங்ஸ் நெ. 86; 1892-ம் ஸ் ஜூன்மீ 16உ போட்ட போர்டு புரொஸீடிங்ஸ் நெ. 299; இவைகளைப் பார்க்க.

3. மண்டை ஓடு, தோல் இவைகளை என்ன செய்யப்படுகிறது என்பதைப்பற்றிய விஷயங்கள்—மண்டை ஓடு தோல் இவைகளை அடியில் கண்டபடி செலவிடப்படுகிறது:—எனும் செலுத்தப் பட்ட உடனேயே, எனும் தொகை கொடுக்கும் உத்தியோகஸ்தர் முன்னிலையிலேயே மண்டை ஓட்டை உடைத்துவிடவேண்டும். ஆனால் அது விஷமமாய் யாதொரு பிறட்டும் நடக்கமாட்டாதென்று தோணும் விஷயத்தில், கலெக்டர்கள், மண்டை ஓடுகளை அவர்கள் இஷ்டப்படி செலவிட்டு விடலாம். அந்தத் தோலை ஜில்லா கஜானாவுக்கு அனுப்பிவிடவேண்டும். அப்படி அனுப்புவது எனுமாகக் கொடுக்கப்பட்ட தொகைக்கு ஷை தோல் ஆதாரமாக யிருக்கும் பொருட்டுத்தான். அந்தத் தோலை அனுப்புவதுடன் ஷை தோலுக்கு எனும் தொகை கொடுக்கப்படு முன் ஷை தோலை தானே சரிபார்த்ததான ஸர்டிபிகேட்டும் தொகை செலுத்துகிற உத்தியோகஸ்தரால் அனுப்பப்படவேண்டும்.

(ii) தனக்கு அனுப்பபடுகிற தோல்களுக்கு முன் எனும் கொடுக்கப்படவில்லையென்ற விஷயத்தை நிர்த்தாரணம் செய்துகொள்ளுவது கஜானா டிப்டி

கலெக்ட்டருடைய கடமை, அப்படிச் செய்வதற்காக ஷை தோலை நன்ருக பரிசோதித்துப் பார்க்கவேண்டியதற்கு கஜாஞு சார்ஜ் டிப்டி கலெக்ட்டர் ஜவாப்தாரியாக யிருக்கவேண்டியது. அப்படி சோதனை செய்த பிறகும் ஷை தோலை கொடுத்த எனும் துகைக்கு ஆதாரமாக தாக்கல் செய்துகொண்ட பிறகும், எல்லாத் தோல்களிலும் வாலுக்கு அடிப்பக்கத்தில் ஒரு அங்குல உளியைக்கொண்டு, முக்கோணத்தின் இரெண்டு பக்கங்கள்போல் ஆடும்படியான மாதிரியாக இரெண்டு வெட்டு வெட்டவேண்டும் அப்பால் நகங்களை தோலிலிருந்து அப்புறப்படுத்திவிடவேண்டும். அவைகளை சந்தர்ப்பம் நேரிடும்போது யேலம் போட்டுவிடவேண்டும்.

குறிப்பு. அன்னிய நாடுகளிலிருந்து தோல் இறக்குமதி செய்யப்படுகிறதென்று ஸந்தேகிக்கக் கூடிய ஓரத்திலிருக்கும் ஜில்லாக்களில், ஷை தோல்களைப் பரிசோதனை செய்வதில் மிகவும் ஜாக்கிரதையாக யிருக்கவேண்டும். அவசியமானல் தாசில்தார் டிப்டி தாசில்தார் இவர்கள் மூலமாய் ஸ்தல விசாரணையும் செய்யவேண்டும்.

1890-ம் ஞு பிப்ரவரிமீ 12வ போட்ட போர்டாருடைய 86-ம் நெ. புரொஸீடிங்ஸ்—1912-ம் ஞு மேமீ 24வ போட்ட கவர்ன்மெண்டு உத்தரவு நெ. 1555; 1912 ஞு ஜுலைமீ 15வ போட்ட கவர்ன்மெண்டு உத்தரவு நெ. 2118 இவைகளை பார்க்க.

4. வருஷாந்தரக் கணக்குகள்:—2-வது அனுபந்தத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற பாரப்படிக்கு அந்த வருஷத்தில் கொல்லப்பட்ட காட்டு மிருகங்கள் பாம்புகள் இவைகளின் எண்ணிக்கையை கண்ட கணக்குகளை கலெக்ட்டர்கள் ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ 10வக்கு முன் அனுப்பவேண்டும். அப்பேர்ப்பட்ட கணக்குகளில், கொல்லப்பட்ட ஜந்துக்களின் நடப்பு வருஷத்து எண்ணிக்கைக்கும் சென்ற வருஷத்து எண்ணிக்கைக்கும் வித்தியாசப்படுவதற்குள்ள முகாந்தரங்களையும் கண்டு எழுதவேண்டும். இந்தக் கணக்குகளில் துப்பாக்கி லைஸென்ஸ் கொடுக்கப்படுகிறது ஸம்மந்தமான தகவல்கள், 1878-ம் ஞுத்து இந்தியன் ஆயுத ஆக்ட்டு ஸம்மந்தமாய் அனுப்பப்படுகிற வருஷாந்தர கணக்குகளில் கண்டதகவலுக்கு ஒத்துமையாக யிருக்கிறதாவென்று சரிபார்க்க வேண்டும்.

1875-ம் ஞு ஜுன்மீ 11வ போட்ட போர்டார் அவர்களுடைய புரொஸீடிங்ஸ் நெம்பர். 1588; 1888-ம் ஞு ஜுன்மீ 12வ போட்ட போர்டாரவர்களுடைய புரொஸீடிங்ஸ் நெம்பர் 529; 1901-ம் ஞு செப்டம்பர்மீ 17வ போட்ட போர்டார் அவர்களுடைய புரொஸீடிங்ஸ் நெம்பர். 225; 1898-ம் ஞு நவம்பர்மீ 8வ போட்ட போர்டார் அவர்களுடைய புரொஸீடிங்ஸ் நெம்பர். 295; 1894-ம் ஞு மேமீ 29வ போட்ட போர்டாரவர்களுடைய 219-ம் நெ. புரொஸீடிங்ஸ் இவைகளைப்பார்க்க.

(5) யானை வேட்டையாடுவதற்கு லைசென்ஸ் கொடுக்க போர்டார் அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி லைசென்ஸ் கேழ்க்கப்படும்மனுக்களை கலெக்ட்டர்கள் வாங்கி ரிவினியூ போர்டாருக்கு அனுப்பவேண்டும். போக்கிரித்தனமாக கெடுதல்கள் செய்துவரும் யானைகளை (மதயானைகளை) வேட்டையாடுவதற்கு கலெக்ட்டரே லைசென்ஸ் கொடுத்துவிடலாம். போக்கிரித் தனமாக யில்லாத யானைகளை வேட்டையாடுவதற்கு லைசென்ஸ்லை கொடுக்ககூடாது. ஆனல் அபாயம் நேரிடக்கூடிய விதமாக அவ்வளவு ஜாஸ்தியான எண்ணிக்கையுள்ள யானைகளிருப்பதாக ரிப்போர்ட் செய்யப் பட்டால் அப்படி அனுமதி கொடுக்கலாம்.

1875-ம்ஞு மேமீ 7வ போட்ட கவர்ன்மெண்டு உத்தரவு நெ. 597 (Public) 1884-ம் ஞு டிஸம்பர்மீ 18வ போட்டபோர்டாரவர்களுடைய புரொஸீடிங்ஸ் நெ. 4342; 1913-ம் ஞு ஆகஸ்டுமீ 23வ போட்ட கவர்ன்மெண்டு உத்தரவு நெ. 2549; (Revenue) 1913-ம் ஞு செப்டம்பர்மீ 25வ போட்ட கவர்ன்மெண்டு உத்தரவு நெம்பர். 2852; (Revenue) இவைகளைப் பார்க்க.

குறிப்பு. அனுமதி பெற்றுக்கொண்டு போக்கிரித்தனமாக கெடுதல் செய்துவருகிற யானைகளை (மதயானைகளை) வேட்டை யாடுகிறவர்களை ஷை யானைகளின் தந்தங்களை (கொம்புகளை) எடுத்துக் கொள்ளும் படிக்கு உத்தரவு செய்ய போர்டார் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்டபடி யில்லாத ஸாதாரண யானைகளை வேட்டையாட அனுமதி கொடுக்கப்பட்டவர்களை கொம்பை எடுத்துக் கொளளும்படி சாதாரணமாய், அனுமதி கொடுக்கக்கூடாது. விசேஷகேசுகளில் அப்படி அனுமதி கொடுக்கிறதாக யிருந்தால் கவர்ன்மெண்டார் அவர்களுடைய உத்தரவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

1914-ம் செப்டம்பர்மீ 8வ போட்ட கவர்ன்மெண்டு உத்தரவு நெ. 2596 ; (Revenue) 1914-ம் ஞு அக்டோபர்மீ 2வ போட்ட போர்டாரவர்களுடைய 415-ம் நெ. புரொஸீடிங்ஸ் இவைகளைப்பார்க்க.

CATTLE POUNDS.
கொண்டித் தொழு.

ஸ்டாண்டிங் ஆர்டர் நெம்பர். 205.

(அடைக்கப்பட்ட கால் நடைகள்.)

கொண்டித் தொழுவில் வைத்திருக்கக் கூடிய குறைந்தகாலம்:—பேவார்சாக உள்ள கால் நடைகளை, அவைகளை ஏலம் போடும் முன்னடி சட்டப்படி 14 நாளைக்காவது கொண்டித் தொழுவில் வைக்க வேணுமென்ற விதியை, அவைகளை ஏலம் போடுவதினல் கிடைக்கும் கிரையத்துகையானது ஷை 14-நாள்களுக்கு அவைகளின் தீவனக் கூலிக்கே போதாதாகயிருந்தாலுமே கவனித்தே தீரவேணும்.

1869-ம் ஞு ஜுலைமீ 30வ போட்ட போர்டாரவர்களுடைய புரொஸீடிங்ஸ் நெ. 5569 பார்க்க.

(2) ஏலம்போட்டதில் வசூலாகும் துகையானது ஷை கால் நடைக்கு தீவனத்துக்காக சிலவழிக்கப்பட்ட துகைக்கு மேலிருந்தால் அதை என்ன செய்வதென்பது—கொண்டித் தொழுவில் அடைபட்ட கால் நடைகளை யேலம் போட்டதில் அவைகளுக்குத் தீவனத்துக்காக சிலவிடப்பட்ட துகைக்கு மேல்பட்டு கிடைத்த அந்தத் துகையை 3-மாத காலம் யாரும் தனக்குச் சேரவேண்டியதென்று பாத்தியம் கொண்டாடாத விஷயத்தில் அவைகளை 'கசர்' தாக்கல் செய்து XVII (17) போலீஸ் ஹெடிங்கில் தாக்கல் செய்ய வேண்டும்.

1893-ம் ஞு ஜனவரிமீ 31வ போட்ட போர்டார் அவர்களுடைய 38-ம் நெம்பர். புரொஸீடிங்ஸைப் பார்க்க.

(3) கொண்டித் தொழுவில் அடைக்கப்பட்ட கால் நடைகளுக்கு, ஷைகால் நடைகளுக்கு உடையவர்கள் தீவனம் போடக்கூடாது. 1871-ம் ஞுத்து 1 வது ஆக்ட்டு 9-வது பிரிவுப்படி கொண்டித் தொழுவில் அடைப்பட்ட கால்நடைகளுக்கு தீவனம் போடும் வேலை பவுண்டு கீபரைச் சேர்ந்த தாகையால் ஷை கால்நடைகளின் சொந்தக்காரர்கள் ஷை கால் நடைகளுக்கு அவைகள் கொண்டித்தொழுவில் இருக்குங்காலத்தில் தீவனம் போடுவதற்கு இடம் கொடுக்கக்கூடாது. தொத்து வியாதிகளால் பீடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கால் நடைகள் ஆஸ்பத்திரி கொண்டித் தொழுக்களிலிருக்கும் போது ஷை கால்நடைகளுக்கு உடையவர்கள், ஷை கால் நடைகளுக்கு தீவனமும் மருந்துகள் முதலியதும் கொண்டு கொடுக்க, 1866-ம் ஞுத்து 2வது ஆக்ட்டு 9-வது பிரிவுப்படி, இடங்கொடுக்கலாம்.

1894-ம் ஞு ஜனவரிமீ 20வ போட்ட போர்டார் அவர்களுடைய 32-ம் நெம்பர். புரொஸீடிங்ஸ் பார்க்க.

(4) பவுண்டுகீபர் களுக்குக் கொடுக்கப்படும் கமிஷனைப்பற்றிய விஷயம்:—கொண்டித் தொழுவில் அடைக்கப்படுகிற கால்நடைகள் விஷயமாய் விதிக்கப்படுகிற அபராதம், கால்நடைகளுக் குடையவர்களால் செலுத்தப் பட்டாலுமே அல்லது ஷை கால் நடைகளை ஏலம் போட்டு துகை வசூல் செய்யப்பட்டாலுமே பவுண்டு கீப்பர்களுக்கு கமிஷன் கொடுக்கப்படும்.

1894-ம் ஞு ஜனவரிமீ 20வ போட்ட போர்டார் அவர்களுடைய புரொஸீடிங்ஸ். நெம்பர் 32 பார்க்க.

VILLAGE COURT BILL.
கிராம கோர்ட்டுகளின் மசோதா.

இதின் நோக்கமும் காரணங்களும்.

மேற்கண்ட மசோதாவானது, 1888-ம் ஞுத்து கிராம கோர்ட்டுகளுக்குறிய சட்டத்தை சீர்திருத்துவதற்காக உண்டாக்கப்பட்டிருக்கிறது. அந்த மசோதா உண்டாக்கப் பட்டிருப்பதின் நோக்கங்களும், காரணங்களும் இன்னதென்பதை அடியில் குரிக்கப்பட்டிருக்கிறது:—

சென்னப்பட்டணம் ராஜதானியிலுள்ள கிராமக் கோர்ட்டுகள் சென்ற நூரு வருஷங்களுக்கு மேற்கொண்டே யேர்ப்பட்டு நடந்து வருகின்றன. 1888-ம் ஞுத்தில் கிராமக் கோர்ட்டுகளுக்குறிய சட்டம் திருத்தப்பட்டு ஷை சட்டம் 1889-ம் ஞு முதல் நாளது வரை ஊர்ஜிதத்திலிருந்து வருகிறது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் கிராமகோர்ட்டுகள் இரெண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன (1) கிராம முனிஸீப், தான் ஒருவராகவே கேசுகள் பைசல் செய்யும் கோர்ட்டு (2) ஷை ஆக்ட்டு 9-வது பிரிவுப்படி யேர்ப்படுத்தப் பட்ட பெஞ்சு கோர்ட்டு. சென்னப்பட்டணம் இராஜதானியிலுள்ள கிராமமுனிசீப்புகள் எல்லாரும் சேர்ந்து தனிமையாகப் பைசல் செய்யும் வகுப்பைச் சேர்ந்த கேசுகளில் வருஷம் ஒன்றுக்கு 130,000 (லக்ஷத்து முப்பதினயிரம்) கேசுகள் பைஸல் செய்து வருகிருர்கள். பெஞ்சு கோர்ட்டு

களுக்கு அவ்வளவு பரவியில்லை (அவ்வளவு பிரசித்தி பெற்று புழங்கப்படவில்லை) வருஷம் ஒன்றுக்கு 7,000 கேசுகள்தான் பைசல் செய்திருக்கிறார்கள்.

மேற்கண்ட இருவகைக் கோர்ட்டுகளும் ஸிவில் கேசுகள் பைசல் செய்யும் கோர்ட்டுகளே யாகும். பெஞ்சு கோர்ட்டு என்பது இன்னதென்பது அனேகமாய் யாவரும் அறிந்திருப்பார்கள். ஆகிலும் அது இன்னதென்பதை அறியாத சிலரும் இருக்கக் கூடுமாகையால் அதன் விபரத்தையும் அடியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸிவில் ஹோதாவில் ஸாதாரணமாக கிராம முனிசீப் தனிமையாகயிருந்து பைசல் செய்கிற வியாச்சியத்தின் துகை ரூ. 20, தான், அதற்கு மேல்பட்ட துகைகள் சம்மந்தமான வியாச்சியங்கள் இப்போது டிஸ்டிரிக்ட்டு முனிசீப்புக் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. டிஸ்டிரிக்ட்டு முனிசீப்புக் கோர்ட்டினாலுண்டாகும் கஷ்டநஷ்டங்களைத் தவிர்க்க விரும்பும் கக்ஷிக்காரர்கள், ரூ. 20-க்கு மேல்ப்பட்ட வியாச்சியங்களை கிராம பெஞ்சு கோர்ட்டில் தாக்கல் செய்து வருகிறார்கள். கிராம பெஞ்சு கோர்ட்டில் கிராம முனிசீப் அக்கிராசனாதிபதியாகவும், வாதியால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒருவரும் ஷை வியாச்சியத்தின் பிரதிவாதியால் தெரிந்தெடுக்கப் பட்ட ஒருவரும் ஷை கிராம முனிசீப்பின் கூடயிருந்து கேசை விசாரித்து பைசல் செய்வார்கள். இப்படி ஒவ்வொரு கிராமத்திலும் கிராம முனிசீப்களுடன் கூடயிருந்து கேசுகள் விசாரித்து பைசல் செய்ய லாயக்குள்ளவர்கள் இன்னின்னார் என்பதைக்காட்டக்கூடிய ஜாப்தாவொன்று, ஜில்லாக்கலெக்ட்டராபீசில் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு கிராமக்கோர்ட்டிலும் வைக்கப்பட்டிருக்கும். மேற்கண்ட பிரகாரம் கிராம முனிசீப்கள் வருஷம் ஒன்றுக்கு 1,30,000 கேசுகள் வரை பைசல் செய்துவந்தும் கிராம முனிசீப்புகளே விசாரித்து பைசல் செய்யக் கூடிய பின்னும் 60,000 சொல்பத்துகைகளுள்ள வியாச்சியங்கள், கிராம முனிசீப்பு கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்படாமல் டிஸ்டிரிக்ட்டு முனிஸீப் கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்பட்டு ஷை கோர்ட்டுகளிலேயே பைசல் செய்யப்பட்டிருக்கின்றன. கவர்ன்மெண்டாரவர்களுடைய விசாரணையில் கிராமக் கோர்ட்டு ஆக்ட்டு 9-வது பிரிவுப்படி இப்போது யேர்ப்படுத்தப்பட்டிருக்கும் பெஞ்சு கோர்ட்டுகள் சரியானபடி நடந்து வரவில்லை யென்று வெளியாவதினால், ஷை பெஞ்சு கோர்ட்டை எடுத்துவிட்டு பஞ்சாயத்து கோர்ட்டாகச் செய்துவிட உத்தேசித்திருக்கிறார்கள். ஷைபஞ்சாயத்து கோர்ட்டுகளிலும் பழய பெஞ்சு கோர்ட்டிலிருந்தபிரகாரமே கி. மு. வைத்தவிர உபய கக்ஷிக்காரர்களாலும் தெரிந்தெடுக்கப்படுகிற 2; பேர்கள் கூடயிருந்து விசாரித்துக் கேசைப் பைசல் செய்வார்கள், ஆனால் இந்தப்பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் முன்னிருந்தபடியல்லாமல் வேறுவிதமானதாகயிருக்கும்—கிராம முனிசீப்புக்கு ஸிவில் கேசுகளில் ரூ. 20 வரையுள்ள கேசுகளை விசாரிக்கலாமென்னும் அதிகாரம் 1883-ம் ௵த்தில் கொடுக்கப்பட்டது. இப்போது கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு ரூ. 50 வரை அதிகாரம் கொடுக்கப்படுகிறது 1816-ம் ௵த்து கிராமப் பஞ்சாயத்துச் சட்டப்படி சரியானபடி நடபடிக்கைகள் ஒன்றும் நடந்தேறாததினால் ஷை சட்டத்தை ரத்துச்செய்து விடுவதாக உத்தேசிக்கப்படுகிறது.

கிரிமினல் கேசு விஷயமாகவும் மாறுபாடுகள் செய்யப்படுகின்றன (1) கிராம மாஜிஸ்ட்டிரேட் களினால் விதிக்கப்படும் குட்டையில் அல்லது தொழுவில் மாட்டும் தண்டனையை ரத்துச்செய்து விடப்படும். கோபமூட்டுவது (Insult) இ. பி. கோடு 504-வது பிரிவுப்படிக் குள்ள குற்றம்—தாக்குதல் (Assault) குற்றம் இ. பு. கோடு 352-வது பிரிவு. தெருவில் போக்கு வரத்து ஜனங்களுக்கு இடைஞ்சலாகச் செய்து கொள்ளும் சச்சரவு (Affray) இ. பி. கோடு 169-வது பிரிவு. இந்தக்குற்றங்களும் இதைப்போன்ற குற்றங்களும் கிராமபஞ்சாயத்துக் கோர்ட்டார் முன் விசாரணைக்கு வரப்போகிறது.

இதல்லாமல் கி. பு. கோடினால் ஏற்படுத்தப் பட்டிருக்கிற ஸப்மாஜிஸ்ட்டிரேட்டுக் கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்படும் கிரிமினல் கேசுகள், கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளினால் விசாரிக்கப்பட்டு பைசல் செய்யப்படவேண்டிய கேசுகளென்று ஷை ஸப் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு அபிப்பிராயப்படும் கேசுகளை ஷை ஸப் மாஜிஸ்ட்டிரேட்டுகள், ஷை கேசுகள் எந்தக்கிராமத்தின் எல்லைக்குள் செய்யப் பட்டதோ அந்தக் கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு ஷைகேசுகளை அனுப்பிவிடும் அதிகாரமும், ஸப் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குக் கொடுக்கப்படுகிறது.

இது இப்படியிருக்க ஸிவில் கேசுகளிலோவென்றால் ஒருவிசாரணையின் முடிவில் அந்த ஸிவில் கேசானது கிராமப்பஞ்சாயத்துக்கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கவேண்டிய கேசென்று, டிஸ்டிரிக்கட்டு முனிஸீப் அபிப்பிராயப்படும் விஷயத்தில் ஷை கேசு அனுகூலமாக பைசல் செய்யப்படும் விஷயத்திலும் ஷைவாதிக்கு கோர்ட்டுச்சிலவு துகை கிடையாதென்றும் பிரதிவாதிக்கு அனுகூலமாகப்பைசல் செய்யப்பட்டிருக்கும் விஷயத்தில் பிரதிவாதியின் சிலவை வாதியேகொடுக்கும் படிக்கும் பைசல் செய்யும் அதிகாரமும் டிஸ்டிரிக்ட்டு முனிசீப்புக்குக் கொடுக்கப்படுகிறது.

இந்தப் பஞ்சாயத்து சட்டம் ஊர்ஜிதத்துக்கு வருவது ஜனங்களுக்கு மிகவும் ஸௌகரியமாக இருக்குமென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட அபிப்பிராயம்.

The Indian Law Gazette.

PART I.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ௗ ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் I.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ௗ செப்டம்பர்மீ [நெ. 9.

EDITORIAL.

பத்திராதிபர் வியாசம்.

கிரிமினல் சட்டதிட்டங்கள் யேற்பட்டதின் வரலாறு.

(தொடர்ச்சி)

2-வாரங்களுக்கு முன் எந்த நிறுக்கிற யந்திரத்தில் நிறுக்கப்பட்டதோ அதேயந்திரத்தில் தான் நிறுக்கவேண்டும். நிறுக்கிற யந்திரம் சரியான நிலமையிலிருக்கிறதாவென்று தெரிந்து கொள்ளும் பொருட்டு, துல்லியமான 56—ருத்தில் படியைப்போட்டு நிறுத்துமுதலாவது நிறுக்கிற யந்திரத்தைச் சரிபார்த்து கொள்ளவேண்டும். 15 நாளைக்கு முன் நிறுவை கைதிசாப்பிட்டு எத்தனை மணிக்குப் பின்பு நிறுக்கப்பட்டதோ அத்தனை மணிக்குப் பிறகு தான் நிறுக்கவேண்டும். கைதிஉடுப்பு முதலியதுகள் போடாமலே வெற்றுடம்பில் தான் நிறுக்கவேண்டும். ஒவ்வொரு தடவல் நிறுக்கும் காலத்திலும் ஒவ்வொரு கைதியுமிருக்கும் இடையை அதற்கென்று வைத்திருக்கும் நிறுவை ரிஜிஸ்தரிலும் கைதிகளின் சரித்திர டிக்கட்டிலும் எழுதிவைக்கவேண்டும். நிறுவைக்கு அடுத்த மறுநாள் கைதிகளை நிறுத்திச்சரிபார்க்கும்பொழுது 15 நாளைக்கு முன் நிறுத்த இடையை விட 3 ராத்தல் குறைந்திருக்கிறவர்களையும் ஜெயிலுக்கு வந்த உடன் நிறுக்கப்பட்ட இடையிலிருந்து 7 ருத்தில் இடை குறைந்திருக்கிறவர்களையும் அடுத்துமூன்று நிறுவைகளில் கொஞ்சம் கொஞ்சமாய் இடையில்குறைந்து கொண்டு வருபவர்களையும் சூப்பிரண்டாண்டினுடையவும், மெடிகல் ஆபீசருடையவும் பரிசோதனைக்காக பிரத்தியேகமாக நிறுத்த வேண்டும். 100 ருத்தலுக்குக் கீழ்ப்பட்ட இடையுள்ளவர்களாக இருக்கிற கைதிகளின் இடை குறைந்து வந்தால் அதை மிகவும் முக்கியமான விஷயமாக நினைத்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

ஜெயிலில் கைதிகளுடைய தேகசுக விஷயமாகவும் அவர்கள் விடுதலையாகிப் போனபிறகு மிகவும் ஏழையான நிலைமையிலிருப்பவர்களும் தங்கள் காலக்ஷேபத்திற்கு யாதொரு குறைவுமின்றி சம்பாத்தியம் செய்து கொள்ளக்கூடிய கைத்தொழில்களைக் கற்றுக்கொடுக்கும் விஷயமாகவும் மாட்சிமை தங்கிய கவர்ன்மெண்டாரவர்

கள் செய்திருக்கும் மிகவும் தயாளமானவும், புத்திசாதுர்யமானவுமான ஏற்பாடுகளைப்பற்றிக் கூடிய வரை விவரமாக மேற்கண்ட பாராக்களில் எழுதியாய்விட்டது. மேலே ஜெயிலைப் பூலோக நரகமென்றும் ஜெயிலிலிருப்பவர்களை நரகானுபவஞ் செய்கிறவர்களென்றும் சொல்லப்பட்டிருப்பதின் உண்மையை ருஜுச்செய்ய வேண்டிய தவசியம். ஏனென்றால், ஜெயிலில் கைதிகளுடைய தேகசுக விஷயமாயும் கைதிகளுக்கு ஜெயிலை விட்டு விடுதலை செய்யப்பட்டபின் எண்ணிறந்த பிரயோஜனத்தைக் கொடுக்க கூடிய கைத்தொழில்களை கற்பித்துக் கொடுக்கும் விஷயமாகவுஞ் செய்திருக்கப்பட்ட நேர்த்தியான ஏற்பாடுகளைப்படித்து அல்லது படிக்கக்கேட்டுத் தெரிந்து கொள்ளுகிற ஏழைஜனங்கள் ஜெயிலுக்குப் போவது பொதுவாக அவமான சங்கதியாக யிருந்தாலும், சர்க்கார் செலவிலேயே காலக்ஷேபத்தையுங் கழித்துக்கொண்டு நல்ல கைத்தொழில்களையுங் கற்றுக்கொண்டு வந்துவிடலாமே யென்ற யெண்ணத்தின் பேரில் ஜெயிலுக்குப் போனாலுங் குற்றமில்லை யென்று யெண்ணக்கூடியதாக இருந்தாலுமிருக்கும். உலகத்தில் கெடுதலே அன்னியில் பூராவும் நன்மையாகவேயுள்ளவும், நன்மையேயல்லாமல் பூராவாக கெடுதலாகவே யுள்ளவும், கஷ்டமாகவே யில்லாமல்சுகமாகவே யுள்ளவும், சுகமேயில்லாமல் பூராவும் கஷ்டமாகவே யுள்ளவுமான சங்கதி யாதொன்றுமேகிடையாது. இதை யுத்தேசித்து புத்திமான்கள் ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பிக்குமுன் அந்தகாரியத்தை செய்வதினால் நேரிடக் கூடிய கஷ்டநஷ்டங்களையும் சுகலாபங்களையுங் கணக்கிட்டுப் பார்த்து, கஷ்டநஷ்டங்கள் ஜாஸ்தியாகவும் சுகலாபங்கள் கம்மியாகவுமிருக்கிற காரியங்களைச் செய்யாமல் விலக்கிவிட்டு, கஷ்டநஷ்டகள் குறைவாகவும்சுகலாபங்கள் ஜாஸ்தியாகவும் ஏற்படுகிறகாரியங்களைச் செய்யவும் வேண்டும். இப்படிக் கணக்கிட்டுப்பார்ப்பதில் கைதிகளுக்கு ஜெயிலிலிருக்கும் சுகலாபங்களை விட பின்னால் விவரித்துச் சொல்லியிருக்கிறபடி ஏற்படுகிற கஷ்டநஷ்டங்கள் ஆயிரம் பங்கென்றால் சொன்னால் போதாது, பதினாயிரம் பங்கு அல்ல, அதுவும் போதாது, கோடிப்பங்கு ஜாஸ்த்தியாக யேற்படுகிறபடியால் ஜெயிலில்கைதிகள் படும்பாடுகளை மிகவும் விவரமாகச்சொல்ல வேண்டியது அத்தியாவசமாகவேயேற்படுகிறது. மேலும் இது விஷயங்களைப்பற்றி இதற்குமுன் பொது ஜனங்களுக்கு வெளியிட ஒருவரும் முன் வரவில்லை ஜெயிலில் கைதிகள் படும்பாட்டை நன்றாய் கேட்டறிந்த பரம்பறைக்கள்ளன் மகன் பக்காக்கள்ளனும் களவுதொழிலை விலக்கி விடுவானென்பதும், கடுங்கோபக்காரனும் தனது கோபத்தை அடக்கிக்கொண்டு குற்றச் செய்கைகளை செய்ய யோசிப்பானென்பதும் உறுதியான விஷயம். ஆகையால் ஜெயிலில் கைதிகள் விஷயமாகச் செய்திருக்கப்பட்ட சகல ரூல்களையும், அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளையும் மற்ற விஷயங்களையும் பற்றி பின்னால் விவறிக்கப்படும்.

இவ்வுலகத்தில் எளியவர்களாயிருக்கிறமானிடரும் தன்னுடைய தென்றும், தனக்கு இஷ்டமானபடி செய்யவும் சிலவிடவுங் கூடியவிதமாகத் தனக்குச் சொந்தமென்றும் சொல்லிக் கொள்ளவுங்கூடிய பொருள்கள் தன்னுடைய தேகத்திலுள்ள அவயவங்களும் மனதுமே யல்லது வேறில்லை. ஜெயிலுக்குப் போய்விட்டால் இந்த அவயவங்களும் மனதும் ஜெயிலிலிருக்கும் கைதிக்குச் சொந்த மில்லாமல் போய்விடுகிறது. ஜெயிலில் கைதியாயிருக்கிற ஒருவனால் செய்யப்படுகிற ஒவ்வொரு கை தவறுதலான அல்லது தற்செயலான சங்கதியையும், ஜெயிலுத்தியோகஸ்தர்களுக்கு அப்படிச் செய்ய இஷ்டமுண்டானால் ஜெயிலில் குற்றமாக யெடுத்துக்கொண்டு கைதிக்கு ஜெயில் ரூல்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிற தண்டனை விதிக்கலாம்.

நமது நண்பர்களின் உபயோகத்திற்காக கிரிமினல் கேசுகளில் பிராது எழுதும் விஷயத்தில் பொது ஜனங்கள் தெரிந்து கொள்ளவேண்டிய சில முக்கியமான குறிப்புகளை இதனடியில் வரைந்திருக்கிறோம்.

ஒவ்வொரு கிரிமினல் கேசின்பிராதும் சட்டத்துக்குப் பொருத்தமாக எழுதப்படவேண்டிய விஷயத்தில் வாதி கவனமாயிருக்கவேண்டும். ஏனென்றால் பிராது என்பது கேசுக்கு அஸ்திவாரமாக யிருக்கிறது. ஒருகட்டடம் கட்டுவதற்குத் தோண்டப்படுகிற அஸ்திவாரம் எவ்விதமாக யிருக்கிறதோ அதேவிதமாகத்தான்கட்டடமிருக்கும். அதுபோல பிராதை ஜாக்கிரதையாகசரியானபடி சட்டத்துக்கு ஒத்துமையாக எழுதப்பட்ட கேசுகளில் சாக்ஷிகள் மாத்திரம் சரியானபடி சாக்ஷியங் கொடுக்கும்பக்ஷத்தில் எதிரிக்குத் தண்டனை கிடைப்பது நிச்சயம். பிராது சரியானபடிஎழுதப்படாமலிருப்பதானது எதிரிக்கு மிகவும் அனுகூலமான விஷயமாகவேயேற்படுகிறது. இப்படிக்கிருக்கப் பிராது எழுதுவதைத்தான் ஜனங்கள் பொதுவாக அசட்டை செய்கிறார்கள். சாதாரணமாகப் பிராதுகளை கிரிமினல் கேசுகளில் மிகவும் அனுபோகமுள்ள வக்கீல்கள் மூலமாக எழுதுவது நலம். அப்பேர்ப் பட்டவர்களிடம் போனால் பீஸ் கேழ்ப்பார்களென்று எண்ணி 2-அணு முதல் 1-ரூபா வரை எழுத்துக்கூலி கொடுத்து சட்ட நடவடிக்கைகள் அதிகமாகத் தெரியாதவர்களிடம் பிராதுகளை யெழுதிக்கொண்டு கோர்ட்டுகளில் தாக்கல் செய்து விடுகிறார்கள். பின்னிட்டு கேசுவிசாரணை காலத்தில் வக்கீல்களைக் கொண்டு கேசு நடத்தும் பொழுது பிராது சட்டத்துக்கொத்துமையாக சரியானபடி எழுதப்படவில்லை என்பது வெளியாகிறது. பின்னிட்டு தெரிந்து என்ன செய்யக்கூடும். ஆகையால் எல்லா ஜனங்களுடைய சௌகரியத்தையும் நன்மையையும் உத்தேசித்து அடியில் கண்டபடிக்குள்ள பிராது மனு முதலியதுகளுக்கெல்லாம் மசு மதாக்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்த்துக்கொண்டு எந்தக் கேசு-

களுக்கும் எளிதில், யாரும், தன் கேசுக்குத் தகுந்தாப்போல் பிராது மனு முதலியவைகள் எதுவும் தயார் செய்துவிடலாம்.

குறிப்புகள்.

(1.) பிராதுகள் சுலபமான நடையில் சங்கதிகள் எவ்விதமாக நடந்திருக்கிறதோ அந்தப்படி வாதியாக யிருப்பவனுக்கு ஓர் கைதியைச் சேர்ந்த சாக்ஷிகளுக்கும் எளிதில் அர்த்தமாகக் கூடிய விதமாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(2.) பிராதில் முக்கியமாக யிருக்கவேண்டிய விஷயங்கள்:—குற்றம் நடந்த இடம், நேரம், சாக்ஷிகளின் பெயர், சங்கதியின் சுருக்கம், அடியினாலுண்டாகிற காயம், வீக்கம் முதலியதுகளையும் கிராம முன்சீபினும், போலீசிலும் உடனே தெரியப்படுத்தி யிருந்தால் அதுவிபரத்தையும் எழுதவேண்டும்.

(3) பிராது சுருக்கமாக எழுதப்படவேண்டும். இப்படி எழுதினால் சங்கதிகளை சமயத்துச்கு தக்கபடி சாக்ஷிகள் வாக்குமூலத்தின் மூலமாக விவரித்துக் கொள்ளலாம்.

(4.) நடந்த சங்கதியை மட்டும் எழுதவேண்டும் நடக்காத சங்கதிகளை கூட்டி எழுதிக்கொண்டால், குற்றச் செய்கையை வாஸ்தவமாகப் பார்த்துச் சாக்ஷி சொல்லவருகிற சாக்ஷிகள் நடக்காத சங்கதிகளை கோர்ட்டில் தெரிவிக்க மாட்டார்கள். சில சாக்ஷிகள் கட்டுப்பாடாகச் சொன்னாலும் சாக்ஷிகளுடைய வாக்குமூலங்கள் பேதப்பட்டுபோகும். ஆகையால் நடந்தபடி வாஸ்தவத்தை மட்டும் பிராதில் எழுதவேண்டும்.

(5.) சாக்ஷிகள் போடுவதில் வாதிக்குப் பந்துக்களில்லாதவும், பற்பல ஜாதிக் காரர்களாக யிருப்பவர்களையும் சாக்ஷி போடவேண்டும்.

(6.) குற்றம் நடந்த இடத்திற்குச் சமீபத்தில் வசிக்கிற அல்லது வேலைப்பார்த்துக் கொண்டிருப்பவர்களைச் சாக்ஷி போடவேண்டும்.

(7.) வழக்கமாக சாஷி சொல்வதையே ஜீவனமாக வைத்துக் கொண்டிருப்பவர்களை சாக்ஷி போடாமல் விலக்கவேண்டும்.

(8.) விவாக சம்பந்தமான விஷயங்களில் செய்யப்படுகிற குற்றங்களுக்கு பந்துக்களா யிருப்பவர்களையும் சாக்ஷி போடவேண்டும்.

(9.) ஸிவில் சம்பந்தமான கேசுகளை கிரிமினல் கோர்ட்டுகளுக்கு முன் அவைகளை கிரிமினல் பிராது சொரூபமாக்கி தாக்கல் செய்யக் கூடாது.

(10.) பந்துக்களுக்குள் நடக்கிற அற்ப அடிபிடி முதலியதுகளைப் பற்றி கிரிமினல் கோர்ட்டுகளுக்கு முன் பிராது கொடுக்காமலேயே கக்ஷிக்காரர்களுக்குள் ராஜிசெய்து கொள்வது நலம்.

(11.) எந்தக் குற்றச் செய்கைகளைமறைப்பது சட்டப்படி குற்றமாகுமோ அப்பேர்ப்பட்ட கேசுகளைத் தவிர மற்றக் கேசுகளில் கிரிமினல் கோர்ட்டுகளுக்கு முன் பிராது கொடுக்காமலேயே கக்ஷிக்காரர்களுக்குள் ராஜிசெய்து கொள்வது நலம்.

(12.) ராஜியாகிப் போகக்கூடிய கேசுகளிலெல்லாம் கேசு பைசல் செய்யப்படு முன்னடி கூடிய சீக்கிரத்தில் கக்ஷிக்காரர்கள் ராஜியாய்ப்போய்விடுவது நலம்.

(13.) ஒரு ரூபாய்க்கு உட்பட்டகளவு கேசுகளையும் சாதாரணமான தாக்குதல் கேசுகளையும் அனாவசியமாய் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் தாக்கல் செய்து அவர்களுடைய அதிக உபயோகமுள்ள நேரத்தைவீண் போக்காமல் கிராம மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டுகளிலே தாக்கல் செய்தால் கக்ஷிக்காரர்களுக்குப் பணச்சிலவு விஷயமாகவும் மற்றச்சங்கதிகள் விஷயமாகவும் அனேகம் சௌகரியங்கள் உண்டு.

DILOGUE.

சம்பாஷணை.

(சாக்ஷியம் சோல்லுவதைப் பற்றி.)

இடம் :—திண்டுக்கல் புஷ்ப பங்களா.

(முன்மாதத் தொடர்ச்சி)

வ :—அபராதம் கொடுக்கத்தவறினால் காவலிலிருக்கும்படி தீர்ப்புச் செய்யப்பட்டிருந்தாலும், அந்தக் கோர்ட்டாருக்கு அப்படிச் செய்வது யுக்தமென்று தோன்றினால், அபராதம்போடப்பட்டவனுக்குச் சொந்தமான ஜங்கம சொத்துக்களை தீர்ப்பு தேதி முதல் 15 நாளைக்குள் ஜப்தி செய்து ஏலம் போட்டு அபராதத் தொகையை வசூல் செய்யும்படி ஜப்தி வாறண்டு பிறப்பிவிக்கலாம். (கி. பு. கோடு, பிரிவு 386.)

ஸோ :—அபராதம் போடப்பட்டவுடன் அபராதத் தொகை செலுத்தப்படாத கேசுகளில் அபராதம் செலுத்தாததற்காக உடனே ஜெயிலுக்கு அனுப்பிவிடுவார்களா, அல்லது ஜெயிலுக்கு அனுப்புவதை நிறுத்தி வைக்கலாமா?

வ :—காவல் தண்டனையில்லாமல் அபராதம் மாத்திரம் விதிக்கப்பட்டு அபராதம் வசூலாகாத கேசுகளில் அபராதத் தொகையை வசூல் செய்யும்படி கி. பு. கோடு 386-வது பிரிவுப்படி ஜப்தி வாறண்டு பிறப்பித்துவிட்டு தண்டனை விதித்த கோர்ட்டாருக்கு அப்படிச் செய்வது உசிதமென்று தோன்றினால், அபராதம் செலுத்தத் தவறினால் விதிக்கப்பட்டிருகிற காவல் தண்டனையை நிறை வேற்றாமல் நிறுத்தி

வைத்து, ஜப்திவாறண்டை நிறைவேற்றி தனக்கு வாபஸ் செய்யும்படிக்காகப் போடப்பட்டிருக்கிற 15-வது நாள் வாயிதாவன்று ஆஜராகும்படி அபராதம் விதிக்கப்பட்டவனை தன் செருந்த முச்சலிக்காவின் பேரிலாவது ஜாமீன் பேரிலாவது விடுதலை செய்யலாம். அந்த வாயிதாவுக்குள் அபராதம் செலுத்தப் படாவிட்டாலும் அல்லது ஜப்தி வாறண்டின் மூலமாக வசூலாகாவிட்டாலும், அபராதம் விதிக்கப்பட்டவனை தீர்ப்பில் கண்ட காலத்திற்கு காவலில் வைக்கலாம் (கி. பு. கோடு பிரிவு 388.)

ஸோ.—ஜப்தி வாறண்டும் பிறப்பிவித்து விட்டு ஜெயிலிலும் வைக்கலாமா?

வ:—அபராதம் போடப்பட்ட வுடன், அபராதத்தைத் செலுத்தப்படாத கேசுகளில் கோர்ட்டாருக்கு அப்படிச் செய்வது யுக்தமென்று தோன்றினால் அபராதம் போடப்பட்டவனை உடனே காவலில் வைத்து விட்டு, கி. பு. கோடு 386-வது பிரிவுப்படி ஜப்திவாறண்டும் பிறப்பிவித்து விடலாம். (பெங்கால் லா. ரி. அனுபந்தம். 49-வது பக்கம்.)

குறிப்பு:—அபராதம்போடப்பட்டவன் தக்க ஐவேஜுள்ளவனென்றுவது, அல்லது அபராதத்தை செலுத்திவிடக் கூடியவன் யென்றுவது, அபராதம் விதித்த கோர்ட்டாருக்கு அபிப்பிராயமிருக்கும் கேசுகளில் உடனே ஜப்தி வாறண்டைப்பிறப்பிவிக்காமல் ஒரு சமீபமான தினத்துக்குள் அபராதத்தைகையைச் செலுத்தி விடுவதாக அவனிடம் வாயிதா குறிப்பிட்டு முச்சலிக்கா வாங்கிக்கொண்டு அவனை விட்டு விடுவது வழக்கமாக யிருந்து கொண்டிருக்கிறது. முச்சலிக்காவில் குறிப்பிட்ட வாயிதாவில் அவன் அபராதத்தைச் செலுத்தாவிட்டால், மேலே கண்ட ஜப்தி வாறண்டு பிறப்பிவிக்கலாம். ஜப்தி வாறண்டை நிறைவேற்றி வாப்ஸ் செய்வதற்குக் குறிப்பிடப்பட்டிருக்கிற 15-ம் நாள் வாயிதாவில் ஆஜராகும்படி முச்சலிக்காவோ ஜாமீனோ அவனிடம் வாங்கிக்கொண்டு அவனை விடவாவது அல்லது காவலில் வைக்கவாவது செய்யலாம். இவ்விதம் செய்வதும் சட்ட விரோதமானதில்லை. வனென்றுல் இ. பி. கோடு70-வது பிரிவில் வசூலாகாத அபராதத்தை அபராதம் போட்ட தேதி முதல் 6 வருஷங்களுக்குள் எப்பேதாவது வசூல் செய்யலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸோ:—அபராத தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிற கேசுகளில் அப்பீல் செய்யப்பட்டிருந்தால் அப்பீல் முடிவாகும்வரை ஜப்திவாறண்டுபிறப்பிவிப்பதை நிறுத்தி வைக்கலாமா?

வ:—அபராத தண்டனை விதிக்கப்பட்டவுடன், அபராதம் செலுத்தப்படாத கேசுகளில், தொகையை வசூல் செய்யும் பொருட்டு உடனே ஜப்தி வாறண்டு பிறப்பிவியாமல் ஷை கேசில் எதிரி அப்பீல் செய்கிறதாயிருந்தால், அப்பீல் முடிவு கூறுகிறவரை ஜப்தி வாறண்டு பிறப்பிவிப்பதை நிறுத்தி வைக்கக்கூடாது. ஜப்திவாறண்டுபிறப்பிவிப்பதை நிறுத்தி வைக்கும்படி உத்தரவு செய்ய அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரமுமில்லை. (ஸதர் லெண்ட்ஸ் வீக்லி ரிபோர்ட்டர் 2-வது வாலம் 13-வது பக்கம்.)

(1917ஹு ஜூன்மீ 1-ம்பாகம் 92-ம் பக்கத்தொடர்ச்சி.)

பே.-மி:—இந்தக் குற்றத்திற்கு விதிக்கக்கூடிய தண்டனை என்ன?

வ:—ஒரு மாதக் காலம் வரை இருவகைக்காவலில்எதிலாவது வைக்கவாவது அல்லது 200 ரூ. வரை அபராதம் விதிக்கவாவது அல்லது இரண்டு தண்டனையும் விதிக்கவாவது செய்யலாம்

மு-ரா.-ஜ:—இ. பி. கோடு 186-வது பிரிவு எதைப் பற்றிச் சொல்லுகிறது?

வ:—ஒரு ஸர்க்கார் உத்தியோகஸ்தன் சட்டப்படி தனக்கு ஏற்பட்ட வேலையைச் செய்யும் பொழுது, அதைச் செய்யவொட்டாமல் தடுக்கும்குற்றம்.

மு.-ரா-ஜ:—இந்தக் குற்றத்திற்கு என்ன தண்டனை விதிக்கலாம்.

வ:—மூன்று மாதக் காலம் வரை இருவகைக் காவலில் எதிலாவது வைக்கும்படிக்காவது அல்லது 500 ரூ. வரை அபராதம்போடவாவது அல்லது இந்த இரண்டு தண்டனைகளையும் விதிக்கவாவது செய்யலாம்.

பே. மி:—இ. பி. கோடு 187-வது பிரிவு எதைப்பற்றி சொல்லுகிறது?

வ:—ஒரு ஸர்க்கார் உத்தியோகஸ்தனுக்கு அவன் சட்டப்படி செய்யவேண்டிய வேலையைச் செய்வதற்கு உதவி செய்யக் கடமைப்பட்டவன் அப்படி உதவி செய்யாமலிருப்பதென்னும் குற்றம்.

அல்லாமலும், சட்டப்படி உதவியைக் கேட்பதற்கு அதிகாரமுள்ள ஒரு ஸர்க்கார் உத்தியோகஸ்தன், ஒரு ஸம்மன் வாறண்டு இன்னும் ஏதும் கட்டளைகள் இவைகளை நிறைவேற்றும் விஷயத்திலாவது, ஒரு குற்றச் செய்கை நடக்கவொட்டாமல் தடுக்கும் விஷயத்திலாவது அல்லது ஒரு கூட்டக் கலகம், அல்லது சண்டை முதலியதை அடக்கும் விஷயத்திலாவது, அல்லது ஒரு குற்றம் சாட்டப்பட்டுகுற்றவாளியாகயிருக்கும் அல்லது காவலிலிருந்த ஓடிப்போன ஒருவனை பிடிக்கும் விஷயத்திலாவது, உதவி செய்யக் கடமைப்பட்ட ஒருவனை உதவிசெய்யும்படி கேட்டு அவன் வேணுமென்று உதவி செய்யாமலிருக்கும் குற்றம்.

பே.-மி:—இந்தக் குற்றங்கள் ஒவ்வொன்றுக்கும் விதிக்கப் படக்கூடிய தண்டனைகள் என்ன?

வ:—இவைகளில் முதலாவது சொன்ன குற்றத்திற்கு ஒருமாதம் வரை வெறுங்காவலும், 200 ரூ அபராதமும், அல்லது இருவகைத் தண்டனையும் விதிக்கலாம்.

இரண்டாவது சொல்லப்பட்ட குற்றத்திற்கு ஆறுமாதம்வரை வெறுங்காவலும், 500-ரூ வரை அபராதமும், அல்லது இரண்டு தண்டனையும் விதிக்கலாம்.

மு. ரா. ஜ:—இ. பி. கோடு 188-வது பிரிவு எதைப் பற்றிச் சொல்லுகிறது?

வ:—ஒரு உத்தரவைப் பிறப்பிவிப்பதற்கு அதிகாரமுள்ள ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தனுல், ஒரு செய்கையைச்செய்யாமலிருக்கும்படிக்காவது அல்லது தன் வசத்திலிருக்கப்பட்ட ஒரு சொத்தை இன்னவிதமாக அனுபவிக்க வேண்டுமென்ற விஷயமாகவாவது, பிறப்பிவிக்கப்பட்ட ஒரு உத்தரவை வேணுமென்று கீழ்ப்படியாமலிருக்கும் குற்றம்.

மு. ரா. ஜ:—இதற்குத் தண்டனை என்ன?

வ:—ஒருமாதம் வரை வெறுங்காவலில் வைக்கவாவது ரூ. 200-வரை அபராதம் போடவாவது செய்யலாம்.

அப்படிக் கீழ்ப்படியாமலிருந்ததனுல் மனுஷருடைய உயிருக்காவது, சுகத்துக்காவது அல்லது பந்தோபஸ்துக்காவது அபாயம் நேரிட்டாலுமே, கூட்டக்கலகம் அல்லது சண்டை நேரிட்டாலுமே ஆறுமாதம் வரை இருவகைக்காவலில் எதிலாவது வைக்கவாவது, அல்லது 1000 ரூ. வரை அபராதம் விதிக்கவாவது அல்லது இந்த இரண்டுதண்டனைகளும் விதிக்கவாவது செய்யலாம்.

மு. ரா. ஜ:—காலாவதிகளை எல்லாம் சொல்லி விடுங்கள்.

6-மாதக் காலாவதிக்குள்.

வ:—சென்னப்பட்டணம் 1889-ம் ஹுத்து 4-வது ஆக்ட்டாகிய ஸால்ட் ஆக்ட் (Salt Act) 97-வது பிரிவுப்படி பிறுது செய்யவேண்டியது.

சென்னப் பட்டணம் 1886-ம் வருஷத்து முதலாவது ஆக்ட்டாகிய எக்ஸைஸ் ஆக்ட்டு (Excise Act) 72-வது பிரிவுப்படி பிறுது செய்ய வேணும்.

ஒரு வருஷக்காலாவதிக்குள்.

1847-ம் வருஷத்து 20-வது ஆக்ட்டாகிய காபிரைட் ஆக்ட் (Copiright Act) 16-வது பிரிவுப்படி பிறுது செய்யவேண்டியது.

2-வருஷக் காலாவதிக்குள்.

1872-ம் வருஷத்து 15-வது ஆக்ட்டாகிய கிறிஸ்தவர்கள் கல்யாண விஷயமான ஆக்ட் (Christian marriage Act)76-வது பிரிவுப்படி பிறுது செய்து கொள்ளவேண்டியது.

3-வருஷக் காலாவதிக்குள்.

1889-ம் வருஷத்து 4-வது ஆக்ட்டாகிய மெர்ச்சண்டைஸ் மார்க்ஸ் ஆக்ட் (Merchandise Marks Act) 15-வது பிரிவுப்படி பிறுது செய்ய வேண்டியது.

பே.-மி:—அப்பீல்கள் சம்பந்தமான காலாவதியைக் குறித்து அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

வ.—அப்பீல் சம்பந்தமான காலாவதிகளைப்பற்றி அடியில் விவரிக்கிறேன் கவனமாய்க் கேளுங்கள்.

7-நாள் காலாவதிக்குள்.

மரண தண்டனை தீர்ப்பின்பேரில் ஹைக் கோர்ட்டில் அப்பீல் செய்ய வேண்டியது. கால நிர்ணய ஆக்ட் (Limitation Act) 2-வது ஷெடியூல் 150-வது விஷயம்.

30-நாள் காலாவதிக்குள்.

1, 2, 3-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளினுடைய தண்டனைத் தீர்ப்பின் பேரில் அப்பீல் செய்யவேணும். கால நிர்ணய ஆக்ட்டு (Limitation Act) 2-வது ஷெடியூல் 154-வது விஷயம்.

60-நாள் காலாவதிக்குள்.

மரண தண்டனையின் பேரிலும், விடுதலையின் பேரிலும், செய்யப்படுகிற அப்பீல்களைத் தவிற ஹைக்கோர்ட்டில்செய்யப்படவேண்டிய மற்ற அப்பீல்கள் செய்யப் படவேண்டியது. கால நிர்ணய ஆக்ட்டு (Limitation Act)2-வது ஷெடியூல் 155-வது விஷயம்.

3-மாதக் காலாவதிக்குள்.

ஜீவனும்சக் கேசுகளில் எதிரி ஆஜராகாமலிருக்கும் பொழுது கோர்ட்டார் ஜீவனும்சம் கொடுக்கும்படி செய்துவிட்ட உத்தரவை ரத்துச்செய்யமனுக் கொடுக்க வேண்டியது. (கி. பு. கோடு 438.) (6-வது பிரிவு)

6-மாதக் காலாவதிக்குள்.

விடுதலை செய்த பைசலின் பேரில் கவர்ன்மெண்டாரால் செய்யப்படும் அப்பீல்கள் செய்யப் படவேண்டியது.

ஒருவன்பேரில் பிராஸிகூஷன் செய்ய வாங்கின ஸாங்ஷன் பேரில் நடவடிக்கை நடத்த வேண்டியது.

2-வருஷக் காலாவதிக்குள்.

ஸம்மன் அல்லது வாறண்டுப்படி ஆஜராகாதவர்களுடைய சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டவைகளை ஷை யார்கள் ஆஜராய்ப்பெற்றுக்கொள்ள வேண்டியது.

குறிப்புகள்.

1. அப்பீல் செய்யவேண்டிய காலாவதி நாளை கணக்கிடுவதில் கேஸில் பைசல் சொன்ன தினத்தையும், கோர்ட்டில் நகல் கொடுப்பதற்கு தாமதம்செய்கிற தினங்களையும் கழித்துக்கொண்டு கணக்கிடவேண்டும்.

2. அப்பீல் வாயிதாக் கழிகிற தினம் ரஜா நாளாக யேற்பட்டுவிட்டால் கோர்ட்டு திறக்கிற தினத்தில் தாக்கல் செய்யவேண்டியது (கால நிர்ணய ஆக்ட்டு 5-வது பிரிவு.)

3. போதுமான காரணங்களால் அப்பீலைக் காலாவதிக்குள் தாக்கல் செய்யாமல் போய்விட்டால், அப்பீல் அதிகாரி ஷை காரணங்களை திருப்திகரமானவைகளென்று ஒப்புக்கொண்டால் ஷை அப்பீலை காலாவதியாய்விட்டாலும் வாங்கி பைசல் செய்யலாம். (கால நிர்ணய ஆக்ட்டு 5-வது பிரிவு.)

மூ. ரா. ஜ:—கிரிமினல் கோர்ட்டு ரிக்கார்டுகளுக்கு நகல்கள் வேண்டுமானால் வாங்க வேண்டியதற்கும் ஷை கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்பட்ட தஸ்தாவேஜு முதலியவைகளை வாப்சு வாங்கவேண்டியதற்கும் காலாவதியைப்பற்றித் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

6-மாதக் காலாவதிக்குள்.

வ:—போலீசாரால் யெடுத்துக் கொள்ளப்பட்ட சொத்தை வாப்ஸு கேட்க வேண்டியது.

1-வருஷக் காலாவதிக்குள்.

கிராம மாஜிஸ்ட்ரேட்டுகளால் விசாரிக்கப்பட்ட கேசுகளின் ரெஜிஸ்டருக்கு நகல் கேட்க வேண்டியது.

3-வருஷக் காலாவதிக்குள்.

ஸெஷன்ஸ் கேசுகள் வாரண்டுகேசுகள் ஸம்மன்ஸ் கேசுகள் ஜீவனாம்சக்கேசுகள், நல் நடத்தைக்காவது அல்லது சீமை சமாதானத்துக்கு விரோதமான கலகம் செய்யாமல்படி யிருக்கும்படிக்காவது ஜாமீன் வாங்குவதற்காக விசாரணை செய்யப்பட்ட கேசுகள்; மற்ற சில்லரை நடவடிக்கைகள் ஸம்பந்தமான கேசுகள் இவைகளில் சம்பந்தப்பட்ட வாக்கு மூலங்கள் வகையறா ரிக்கார்டுகளுக்கு நகல் வாங்கிக் கொள்ள வேண்டியது.

நகல்கள் ஸம்பந்தமான ரெஜிஸ்டர்கள், ஸம்மன் வாரண்டு முலிதய நடவடிக்கைகள் பிறப்பிவித்ததைக்காட்டக்கூடிய ரெஜிஸ்டர்கள், கோர்ட்டுகளில் தாக்கல் செய்த தஸ்தாவேஜுகள், கக்ஷிக்காரர்கள் வாப்சு கேட்ட மனுக்களின் பதிவு ரெஜிஸ்டர், அந்த மனுக்களில் கேட்டுக் கொண்டபடி தஸ்தாவேஜுகளை வாப்சு கொடுத்து அவர்களிடம் கையெழுத்து வாங்கின ரெஜிஸ்டர், அபாதம் விதிக்கப்பட்டதுகளையும் சொத்து பரிமுதல் செய்யப்பட்ட கேசுகளையும் தாக்கல்செய்யப்பட்ட ரெஜிஸ்டர், ஸ்தாவர சங்கம சொத்துக்களை ஜப்தி செய்த கேசுகளை பதிவுசெய்த ரெஜிஸ்டர், மாஜிஸ்ட்டிரேட்டு கோர்ட்டுகளின் கிரிமினல் டைரிகள், போலீஸ் அரெஸ்டுகார்டுகள் முதலியரிக்கார்டுகள், போலீஸ் மிமோக்கள், சுபாவத்துக்குவிரோதமானவும் திடீரென்றும் நேரிடும் மரணங்களைக் குறித்து போலீசார் அனுப்புகிற ரிப்போர்ட்டுகள் இவைகளுக்கெல்லாம் நகல் வேண்டுமானால் வாங்கிக் கொள்ளவேண்டும்.

தாக்கல் செய்யப்பட்ட தஸ்தாவேஜுகளையும் இந்தக்காலத்துக்குள் தான் வாப்சு வாங்கிக் கொள்ள வேண்டியது. தவறினால் ஷை தஸ்தாவேஜுகள் பரிகரித்து விடப்படும்.

5-வருஷக் காலாவதிக்குள்.

கிரிமினல் கோர்ட்டுகளில் போக்கு வரவு காரஸ்பான்டென்ஸுகளுக்கு நகல் வாங்கிக்கொள்ள வேண்டியது.

ஸம்மன் கேசுகளில் பைசலுக்கு நகல் வாங்கிக் கொள்ளவேண்டியது.

10-வருஷக் காலாவதிக்குள்.

கி. பு. கோடு 264-வது பிரிவில் கண்டபடி சுருக்கமாக விசாரிக்கப்படுகிறகேசுகளின் பைசல், நல் நடத்தைக்காகவும் கலகம் செய்யாமல் இருப்பதற்காகவும் ஜாமீன் வாங்கும்படி விசாரிக்கப்படுகிற கேசுகளின் பைசல் இவைகளுக்கு நகல் வாங்கிக் கொள்ளவேண்டியது.

12-வருஷக் காலாவதிக்குள்.

சம்பள பாராபாத்து, பெடிஷன் ரெஜிஸ்டர் இவைகளுக்கு நகல்கள் வாங்கிக்கொள்ள வேண்டியது.

20-வருஷக் காலாவதிக்குள்.

ஸெஷன்ஸ் கேசுகளிலும் மற்ற வாரண்டு கேசுகளிலும் பைசலுக்கு நகல் வாங்கிக்கொள்ள வேண்டியது. ஜீவனாம்சக் கேசுகளில் பைசலுக்கு நகல் வாங்கிக் கொள்ள வேண்டியது.

குறிப்பு:—மேற்கண்ட ரிக்கார்டுகளில் பைசல்கள், வாக்குமூலங்கள் இவைகளுக்கு மட்டும் நகல் ஷை கேஸில் சம்பந்தப்பட்ட கக்ஷிக்காரர்கள் கேட்டால் தான் நகல்கள் கொடுக்கப்படும். மற்ற ரிக்கார்டுகளுக்கு நகல் கேழ்க்கும் காரணம் ஸரியானதென்று மாஜிஸ்டிரேட்டுக்குத் தோன்றினால்தான் நகல் கொடுப்பார்கள். இல்லாவிட்டால் நகல் கொடுக்க மறுதளித்து விடலாம்.

(இன்னும் வரும்.)

OUR LAW COLLEGE.

எங்களுடைய சட்ட கலாசாலை.

எங்களுடைய சட்ட கலாசாலையின் புரொபசர் உலகறிந்த திருநெல்வேலி வக்கீல் K. R. கிருஷ்ணமாச்சாரியார் அவருடைய மாணாக்கர்களுடைய பெயர்கள் :—

1 அனந்தாச்சாரி, 2 சக்ரவர்த்தி ஐயங்கார், 3 துரைசாமி முதலியார், 4 சட்டராசாரியார், 5 தணிகாசல முதலியார் வகையராக்கள்.

HINDU LAW—ஹிந்து லா.

(ADOPTION—ஸ்வீகாரம்.)

பு:—மேல் சொல்லப்பட்ட வழக்கம் பம்பாய் இராஜதானியிலும், சென்னப்பட்டணம் ராஜதானியிலும் வழங்கிவரும்வழக்கம். மற்றதேசங்களில் வழங்கிவரும் வழக்கங்கள் வேறு.

மாணு:—மற்று எந்தெந்த தேசங்களில் எப்படி எப்படி வழங்கி வருகிறது.

பு:—வங்காள இராஜதானியில் ஔரஸபுத்திரனுக்கு ஸ்விகாரப் புத்திரனைவிட இரண்டுமடங்கும், காசி இராச்சியத்தில் 3-மடங்கும் பாகம் கொடுக்கும் வழக்கமிருந்து வருகிறது.

மாணு:—துவியாமுஷியணனை ஸ்வீகாரம் செய்து கொண்டபிறகு, ஸ்வீகாரத்தகப்பனுக்கு ஔரஸ புத்திரன் பிறந்துவிட்டால் துவியா முஷியணனுக்கு கிடைக்கக்கூடிய பாகம் எப்படி?

பு:—துவியாமுஷியணனுடைய ஸ்வீகார தகப்பனுக்கு ஒரு ஔரஸப்புத்திரன் பிறந்தால், துவியா முஷியணனுக்கு, சென்னப்பட்டணம், பம்பாய் இராஜதானிகளில் 10-ல் ஒரு பாகமும், வங்காள இராஜதானியில் 6-ல் ஒரு பாகமும், காசி ராச்சியத்தில் 8-ல் ஒரு பாகமுந் தான் கிடைக்கும்.

மாணு:—துவியா முஷியணனுடைய உபய குடும்பங்களிலும் ஔரஸ புத்திரர்கள் பிறந்து விட்டால் துவியா முஷியணனுடைய பாத்தியதை எப்படி?

பு:—துவியா முஷியணனுடைய உபயகுடும்பங்களிலும் ஔரஸ புத்திரர்கள் பிறந்துவிடும் விஷயத்தில் துவியா முஷியணனுக்குப் பிறந்த குடும்பத்தில் பாகமே கிடையாது என்றும் ஸ்வீகாரக் குடும்பத்தில் ஸ்வீகாரப் புத்திரனுக்கு அந்தந்தப் பிரதேசத்தில் கிடைத்து வரும் பாகம் கிடைக்குமென்றும் கிரந்தங்களினால் தெரியவருகிறது.

மாணு:—ஸ்வீகாரப் புத்திரனுக்கு ஸ்வீகாரம் செய்து கொள்ளப்பட்ட நாள்முதல் ஸ்வீகாரம் செய்து கொள்ளப்பட்ட குடும்பத்தில் பாத்தியதை ஏற்பட்டு விடுகிறது. ஆனால் ஸ்வீகாரம் செய்து கொள்ளுமுன் ஷை சொத்து விஷயமாய் செய்யப்பட்டபாராதீன முதலியவற்றைப்பற்றி ஆக்ஷேபிக்க ஸ்வீகாரப் பிள்ளைக்குப் பாத்தியதை உண்டா?

பு:—ஸ்வீகாரத்துக்கு முன் சொத்தை வைத்துப் பரிபாலனம்செய்தவர்கள், ஷை சொத்தை கிரமமான வழியில் நடத்திவந்திருந்தால் அந்த நடவடிக்கைகளைப்பற்றி ஆக்ஷேபிக்க ஸ்வீகாரப் பிள்ளைக்கு அதிகாரமில்லை ஆனால், அக்கிரமமான வழிகளிலும் அவருக்குள்ள பாத்தியதைகளை மீறியும் நடபடிக்கைகளை நடத்தி யிருந்தால் அவைகளை ஸ்வீகாரப்பிள்ளை ரத்துச் செய்துவிடலாம். (இ. லா. ரி. 4. ம. 160; இ. லா. ரி. 3. பம். ஹை. கோ. ரி. 367; இ. லா. ரி. 5. பம். 630; இ. லா. ரி. 11. பம். 609, 614; 24 ஸதர் லாண்ட்ஸ் வீக்லி ரிப்போர்ட்டர் 183; இ. லா. ரி. 2. கல். 307; இ. லா. ரி. 16. கல். 140; இ. லா. ரி. 5. கல். 251; 7 மூ. இ. அ. 169, 178; 8. மூ. இ. அ. 443.)

மாணு:—விதவை ஸ்வீகாரம் செய்து கொள்ளப்பட்ட காலம் முதல் ஸ்வீகாரம் செய்துகொண்ட குடும்ப சொத்துக்கள் பூராவும் ஸ்வீகாரப் புத்திரனுக்குச் சேர்ந்துவிடும் என்பது விதியல்லவா? இந்த விதிக்கு விலக்கு யேதும் உண்டா?

பு:—ஸ்வீகாரம் செய்து கொள்ளும்படி பெண்சாதிக்கு ஒருவன் அதிகாரம் கொடுக்கையில், குடும்ப சொத்து முழுவதையுமாவது, அல்லது, சில பாகத்தை மட்டுமாவது அவள் ஜீவதசை மட்டும் அனுபவித்து, அவள் ஜீவதசைக்குப் பிறகு தான் ஸ்வீகாரப் புத்திரன் ஷை சொத்தை அடையவேண்டுமென்று, இறந்தவன் எழுதி வைத்திருந்தால், ஷை சொத்துக்கள் ஸ்வீகார புத்திரனுக்கு அவள் இறந்தபிறகு தான் கிடைக்கும் (இ. லா. ரி. 5. கல் 357)

மாணு:—ஒருவன் ஸ்வீகாரம் செய்து கொள்ளுமுன் தன் சொத்துக்களை எல்லாம், மற்றவர்களுக்குச் சேரும்படி உயில் எழுதிவைத்துவிட்டு ஸ்வீகாரம் செய்து கொள்ளுகிறான். அப்பேர்ப்பட்ட கேஸில் ஸ்வீகாரப் பிள்ளைக்கு சொத்து ஏதும் கிடைக்குமா?

பு:—ஸ்வீகார புத்திரன் இந்த உயிலை ரத்துச் செய்யும்படி வியாச்சியம் செய்தால் ஷை உயில் ரத்துச் செய்து விடப்படும். ஸ்வீகாரப் புத்திரனுக்கே சொத்துக்களெல்லாம் சேர்ந்து விடும் (இ. லா. ரி. 6. பம். ஹை. கோ. ரி. 230; 6. மூ. இ. அ. 320.)

மாணு:—ஒரு விதவையானவள், ஸ்வீகாரம் செய்து கொள்ளுமுன், ஸ்வீகாரப் பையனுடைய ஜனன பிதா முதலியவர்கள், தன் சொத்துகள் முதலியவற்றைப்பற்றி ஒரு உடன்படிக்கை செய்து கொண்டு, ஸ்வீகாரம் செய்துகொள்ளுகிறுள் அந்த உடன்படிக்கை செல்லுமா?

பு:—அந்த உடன்படிக்கை செல்லமாட்டாது ரத்தாய் விடும்.

மாணு:—ஒரு விதவையானவள், ஸ்வீகாரம் செய்து கொண்ட, மைனர் பிள்ளையுடன் சொத்துகள் விஷயமாய் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளுகிறுள். அந்த உடன்படிக்கை செல்லுமா?

பு:—அந்த உடன்படிக்கையும் செல்லாது ரத்தாய் விடும்.

மாணு:—மேல்கண்ட நடவடிக்கைகள் ரத்தாய் விடுமென்று சொல்வதற்கு ஆதாரமுண்டா?

பு:—இ. லா. ரி. 2. ம. 91; இ. லா. ரி. 16. ம. 400; இ. லா. ரி. 3. பம். 387; 15. ஸதர்லண்ட்ஸ் வீக்லி ரிப்போர்ட்டர். 63.)

மாணு:—ஒரு குடும்பத்தில் இருக்கும் ஸபிண்டர்களாகிய தாயாதர்கள், தங்களில் யாருக்கும் புத்திர ஸந்தானமில்லை யாகிலும் ஸ்வீகாரம் செய்து கொள்ளுகிறதில்லை யென்று யேர்ப்பாடு செய்து கொள்ளுகிறுர்கள் அந்தஏற்பாடு சட்டப்படி செல்லக் கூடியதா? அந்த ஏற்பாட்டிற்கு விரோதமாக ஸ்வீகாரம் செய்து கொண்டால் அந்த ஸ்வீகாரம் செல்லுமா?

பு:—அந்த உடன்படிக்கை சட்டப்படி செல்லத்தக்கதில்லை. அந்த உடன்படிக்கைக்கு விரோதமாக செய்து கொள்ளும் ஸ்வீகாரமும் சட்டப்படி செல்லத்தக்கதே யாகும் (இ. லா. ரி. 9. ம. 499.)

மாணு:—ஒருவன் இறக்குமுன், ஸ்வீகாரம் செய்து கொள்ளும்படி தன் பெண்சாதிக்குக் கொடுக்கும் அனுமதியில் ஒரு பையனைக் குறிப்பிட்டு, அவனை ஸ்வீகாரம் செய்து கொள்ளும்படிக்கும் அவனுக்கே தன் சொத்துகளை யெல்லாம் கொடுத்து விடும்படிக்கும் யெழுதி வைத்துவிடுகிறுன் ஆனல் அந்த விதவை ஷை பையனை ஸ்வீகாரம் செய்து கொள்ளவுமில்லை. சொத்தைக் கொடுக்கவுமில்லை அந்தப்பையன் அந்த சொத்துக்களை அடையும் பொருட்டு நடபடிக்கை நடத்தலாமா? அவனுக்கு சொத்துக் கிடைக்குமா?

பு:—மேலே புருஷன் ஸ்வீகாரம் செய்துகொள்ளும்படி அனுமதி கொடுத்திருந்தாலும் பெண்ஜாதி ஸ்வீகாரம் செய்து கொள்ளாமலேயே யிருந்து விடலாமென்றும், அவளை ஸ்வீகாரம் செய்து கொள்ளும்படி கட்டாயப்படுத்த முடியாதென்றும் சொல்லியிருக்கிறோம். அதுபோலவேயே இந்தக்கேசிலும் இந்தவிதவையை கட்டாயப் படுத்தமுடியாது. தன் சொத்துக்களை இந்தப் பய்யனுக்கு கொடுக்கும்படி புருஷன் யெழுதி வைத்துவிட்டுப் போனதினுல் யாதொரு பிரயோசனமும் இல்லை. ஸ்வீகாரம் செய்து கொண்டபிறகு தான் ஸ்வீகாரம் செய்து கொண்டவருடைய சொத்துக்கள் ஸ்வீகார புத்திரனைச் சேருமாதலால், அந்தப் பையன் சொத்துக்களை அடைய யாதொரு நடபடிக்கையும் நடத்த முடியாது. (இ. லா. ரி. 16. ம. 355; இ. லா. ரி. 12. பம். 202; இ. லா. ரி. 11. கல். 463; இ. லா. ரி. 12. கல். 688.)

மாணு:—ஸ்வீகாரம் செய்து கொண்டபிறகு அந்த ஸ்வீகார விஷயமாய் வியாச்சியம் நேரிட்டு ஸ்வீகாரம் ரத்தாய்விட்டால் ஸ்வீகாரப் பையன் ஜனன குடும்பத்தில் சேர்ந்துகொள்ளலாமா?

பு:—செய்யப்பட்ட வியாச்சியத்தில் ஸ்வீகாரமானது தர்ம சாஸ்திரப்படி செய்யப்படவில்லை யென்று தீர்மானிக்கப்பட்டு, ஸ்வீகாரம் ரத்துச் செய்யப்பட்டால் அந்தப்பிள்ளை ஜனன குடும்பத்தில் போய் சேர்ந்து கொள்ளலாம். ஸ்வீகாரத்திற்கு முக்கியமான கிரியைகளாகிய தான பரிக்கிரஹங்கள் சரியாகநடந்திருந்தும் மற்றும் காரணங்களால் ஸ்வீகாரம் ரத்தாய் விட்டால் அந்தப்பையன் ஜனன குடும்பத்தில் போய் சேர்ந்துகொள்ள முடியாது. தான பரிக்கிரகங்கள், வாஸ்தவத்திலேயே சரியானபடி நடக்காதிருந்திருந்தால் முதல் மூன்று வகுப்போர்களும் அதாவது பிரம்ம, க்ஷத்திரிய, வைசியர்கள் உபநயன மாகிறதற்கு முன்னும், நான்காவது வகுப்பார்களாகிய சூத்திரர்கள் விவாகத்துக்கு முன்னும் ஜனன குடும்பத்தில் போய் சேர்ந்து கொள்ளலாமென்றும் கோர்ட்டுகளில் பைசல் செய்யப் பட்டிருக்கிறது (12. பம். ஹை. கோ. ரி. 397.)

மாணு:—ஸ்வீகாரத் தகப்பனர் ஸ்வீகாரப் பிள்ளைக்கு தானமாக சில சொத்துகளைக் கொடுத்திருந்தார் என்று வைத்துக் கொள்வோம் மேல் கண்டபடி ஷை ஸ்வீகாரம் ரத்தாய் விட்டால் ஷை தானம் செல்லுமா? தானம் செய்யப்பட்ட சொத்துக்களை ஸ்வீகார புத்திரன் அடைவானு?

பு:—தான சாஸனத்தில் குறிக்கப்பட்டிருந்த பிள்ளை ஸ்வீகாரப் பிள்ளையாக அவன்பெயர் விபரமாகச் சொல்லப்பட்டிருந்தால் ஸ்வீகாரம் ரத்தாய் விட்டாலும் கொடுக்கப்பட்ட தானம்செல்லும் ஆனல்

அப்படிச்செய்யப்பட்ட தானமானது ஸ்வீகாரப் பிள்ளையென்கிற எண்ணத்தால்தான் செய்யப்பட்டதென்கிற முழுநம்பிக்கையோடு செய்ததாக யிருக்க வேண்டும்.

மாணு:—தாங்கள் சொல்வது நன்றுக விளங்கவில்லை. தெளிவாகச் சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

பு:—சிவராமகிருஷ்ண அய்யருடைய தத்தப்புத்திரன் சாம்ப மூர்த்திக்கு இந்த தானசாஸனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற 100-ஏகர் நிலத்தையும் இந்த தானசாஸனத்தின் மூலமாக தானம் செய்துவிட்டேன் என்று ஒருவன் எழுதிவைத்திருந்தால் ஸ்வீகாரம் ரத்துச்செய்துவிடப்பட்டாலும் தானம் செல்லும்,

பின்னும் சிலநிருபணங்களும்சொல்லுகிறேன் கேளுங்கள்.

நாருயணனை நான் ஸ்வீகாரம் செய்துகொண்டேன். என் ஸ்திரீ ஷை நாருயணன் உயிரோடிருக்கும்வரை வேறு ஒருவரையும் ஸ்வீகாரம் செய்துகொள்ளக் கூடாது. ஷை நாருயணனுக்கே என் சொத்துக்கள் யாவத்தும் சேரவேண்டியது அவனை ஸ்வீகாரம் செய்து கொள்ளுவதற்குறிய காரியாதிகளை யெல்லாம் என் ஸ்திரியே செய்ய வேண்டியது என்ற நிபந்தனைகளுடன் ஒருவன் உயில் எழுதிவைத்துவிட்டு இறந்துபோய் விடுகிறுன். அப்பால் அவனுடையபார்யை ஷை பையனைஸ்வீகாரம் செய்துகொள்ள வேண்டியதற்குறிய சங்கதிகள் ஒன்றும் செய்யவில்லை. அப்படி யிருந்தாலும் அந்தப்பிள்ளைக்குக் கொடுத்த தானம் செல்லும் (26. ஸதர்லாண்ட்ஸ் வீக்லி ரிப்போர்டர் 91.)

சந்திரசேகரஐயர் என்பவர் ராதாகிருஷ்ணன் என்ற ஒருபையனை குழந்தைமுதல் தன் அபிமானப் புத்திரனுக வளர்த்து, பின்னிட்டு தனக்குள்ள சொத்துக்கள் பூராவையும் அவன்பேருக்கே (அந்த அபிமானப் புத்திரன் பேருக்கே) உயிலெழுதி வைத்துவிட்டு இறந்துபோகிறுன். அப்போது இந்தப்பிள்ளை ஸ்வீகாரப் பிள்ளை யில்லாமலிருந்தாலும் தானம் செல்லும். (1. ம. ஹை. கோ. ரி. 393.)

பின்னொரு கேசும் சொல்லுகிறேன் கேளுங்கள்:—ஒருவன் எனக்கும் ஜீவந்தர்களாகயிருக்கிற என் முன்னேர்களுக்கும் உத்திரகிரியை முதலானதுகளைச் செய்துவிட்டு நீ என் சொத்துக்களை அடைந்துகொள்ள வேண்டியது என்கிற ஏற்பாட்டின்பேரில் நான் உன்னை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டேன் என்று பத்திரம் எழுதிக்கொடுக்கிறுன்; பிறகு ஸ்வீகாரம் செல்லாதென்று போய் விட்டது. இந்தக்கேசில் ஸ்வீகாரத்தை உத்தேசித்து மட்டும் தானம் செய்யப்பட்டதால், ஸ்வீகாரம் ஊர்ஜிதப் படாவிட்டால் தானம் செல்ல மாட்டாது, ஆகையால் ஷை சொத்துக்களும் அவனுக்குக் கிடைக்க மாட்டாது. (இ லா. ரி. 12. பம். 185, 202; இ. லா. ரி. 15. பம். 573; இ லா. ரி. 11 கல். 463; இ. லா. ரி. 12. கல் 686.)

மாணு:—பெண்களை தத்து செய்து கொள்ளலாமா அது விஷயமான சங்கதிகளை எல்லாம் அறிய விரும்புகிறோம்.

பு:—பெண் ஸ்வீகாரம் தாசிகளைத்தவிர மற்றஜாதியார்களில் செய்து கொள்ளுகிறதில்லை பெண் ஸ்வீகாரத்திற்கு தான பரிக்கிரகமுதலான கிரியைகள் யாதொன்றும் கிடையாது. இன்ன ஜாதி பெண்ணைத்தான் தத்து எடுத்துக் கொள்ள வேண்டுமென்கிற ஏற்பாடுமில்லை. எவ்விதமாகவாவது வதும் ஒரு பெண்ணைவாங்கி வளர்ப்பதே போதுமானது (இ. லா. ரி. 11. ம. 393; இ. லா. ரி. 13. ம. 133; இ லா ரி. 4. பம். 545; இ. லா. ரி. 13. பம். 690; இ. லா. ரி. 14. பம். 90.)

மாணு:—அப்படி பெண் ஸ்வீகாரம் செய்து கொள்வதில் புத்திர ஸ்வீகாரம் போல ஒரே பெண்ணைத்தான் ஸ்வீகாரம் செய்து கொள்ள வேண்டுமா? அநேக பெண்களை ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

பு:—ஸாதாரணமாக ஏக கன்னியைத்தான் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமென்ற யேர்ப்பாடுதான் அனுஷ்டானத்திலிருந்துவருகிறது. ஆனல் ஒரு கன்னிகைக்குமேல் எடுத்துக் கொள்ளலாமென்ற தேசாசாரமிருந்தால் இரண்டு அல்லது அதற்கு மேல்பட்ட கன்னிகைகளை ஸ்வீகாரம் செய்து கொள்வதில் ஆக்ஷேபனை யில்லை. (இ. லா. ரி. 11 ம. 393; இ. லா. ரி. 12. ம. 214.)

மாணு:—தாசிகள் கோவில்களுக்கு தாலிகட்டினுலுமே அது பினல் கோடுப்படி தண்டிக்கப்படுகிற குற்றமாய் விடுகிறது. அப்படிக்கிருக்க விபசாரத் தொழில் செய்வதற்கென்றே ஸ்வீகாரம் செய்து கொள்ளலாமா?

பு:—தாசிகள் விபசாரத்தொழில் செய்வதற்காக ஸ்வீகாரம் செய்துக் கொள்ளக் கூடாது அவர்களுடைய சொத்துக்களுக்கு வார்ஸாக இருக்க வேண்டுமென்கிற உத்தேசத்தோடுமட்டும் ஸ்வீகாரம் செய்துகொண்டால் மட்டுந்தான் ஷை ஸ்வீகா

ரம் ஊர்ஜிதத்துக்கு வரும். ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட பெண்களை மைனாரிட்டிநீங்குவதற்குள் அதாவது 16-வயதுக்குள் விபசாரத் தொழிலுக்குறிய காரியங்களைச் செய்கிறவர்களும் அதற்கு உடந்தையாக யிருப்பவர்களும் தண்டனைக்குள்ளாவார்கள். தாசிகள் ஸ்வீகாரம் செய்து கொள்வது தென் இந்தியாவிலும் மேல் இந்தியாவிலும் மட்டும் அநுஷ்டானத்திலிருந்து வருகிறது.

மாணு:—பாகிக்கத்தகாத ஜமீன்களுக்கு ஸ்வாநுகயிருக்கிற ஜமீன்தார்கள் ஸ்வீகாரம் செய்து கொண்ட பிறகு ஔரஸபுத்திரன் பிறந்துவிட்டால், ஸ்வீகாரப்புத்திரனுக்கு பாகம் கிடைக்குமா? அது விஷயம் எப்படி?

பு:—பாகம் செய்யத்தகாத ஜமீன் முதலான சொத்துக்கள் பின்னீடுபிறந்த ஔரஸபுத்திரனுக்கே சேரும், ஸ்வீகார புத்திரனுக்கு ஜீவனாம்சம் மட்டும் தான் கிடைக்கும் (இ. லா. ரி. 17. ம. 435.)

ஒரு குடும்பத்தில் தத்துப் புத்திரனும் பின் பிறந்த ஔரஸபுத்திரனும் ஸௌஜன்யமாக பாகம் செய்துகொள்ளாமல் ஒரே குடும்பமாக யிருந்து காலக்ஷேபம் செய்துவருகிறார்கள். அப்படி யிருக்கையில் அவர்களில் எவனாவது ஒருவன் ஆண் ஸந்ததியில்லாமல் இறந்துபோய் விடுவானேயாகில் மற்றவன் அவிபக்தகுடும்பஸ்தர்களுக்குள் ஏற்பட்டிருக்கிற (Right of Survivorship) என்னும் பாத்திய முறமைப்படி இறந்து போனவனுடைய பாகசொத்துக்களையும் சேர்த்து அடைய பாத்தியமுள்ளவன் ஆய்விடுகிறான். (1. ம. ஹை. கோ. ரி. 49.)

மாணு:—ஸ்வீகாரவிஷயமாகச் செய்யப்பட வேண்டிய வியாச்சியங்களுக்குக் காலாவதி எப்படி?

பு:—ஸ்வீகாரத்தைப்பற்றி ஆக்ஷேபனை ஏற்படுகிறதென்று வைத்துக்கொள்ளுவோம். இந்தக்கேஸில் ஸ்வீகாரம் நடந்தது வாஸ்தவம் ஷை ஸ்வீகாரம் சட்டப்படி செல்லக் கூடியதுதான் என்று ஸ்தாபித்துக் கொள்ள விரும்புகிறவன் ஸ்வீகாரம் செல்லத் தக்கதில்லையென்று ஆக்ஷேபித்த கால முதல் 6-வருஷங்களுக்குள் வியாச்சியம் செய்துக் கொள்ளவேண்டும். அதே மாதிரியாகவேயே செய்துகொள்ளப்பட்ட ஸ்வீகாரம் செல்லத் தக்கதில்லை யென்று ஆக்ஷேபிக்க விரும்புகிறவன் ஸ்வீகாரம் செய்துகொண்டது தெரிந்தது முதல் 6-வருஷங்களுக்குள் வியாச்சியம் தொடர வேண்டும்.

மாணு:—அதிகாரம் பொாமலேயே ஒருவிதவை ஸ்வீகாரம் செய்துகொள்ளுகிறாள் என்று வைத்துக் கொள்வோம், அந்த ஸ்வீகாரப் பையனும் விதவை வசத்திலிருக்கும் சொத்துக்களை அடைந்து விடுகிறான். பின்னீடு அந்த விதவையின் அனந்தர வார்சுகள் ஷைசொத்தை அடையமுடியுமா?

பு:—அதிகாரமில்லாத ஒரு விதவைக்கு ஸ்வீகாரம் செய்துகொள்ள பாத்தியம் இல்லாமலிருந்தாலும், அந்த ஸ்வீகாரப் புத்திரனானவன் விதவை வசத்திலிருக்கும் சொத்துக்களை அடைந்து 12-வருஷங்களுக்கு மேற்பட்ட காலமாய் அந்தச் சொத்துக்களைத்தான் சொந்தமாயும் விதவைக்கு விரோதமாயும் அனுபவித்துவிட்டால், விதவைக்குப் பின்னுள்ள அனந்தர வார்சுகள் அந்த சொத்துக்களை அடையத் தடைப்பட்டு விடுகிறார்கள். விதவை இறந்ததுமுதல் 12-வருஷங்களுக்குள்ளாக அனந்தர வார்ஸானவன் சொத்தை அடைய தாவாக் கொண்டுவறலாம் என்ற சாதாரண விதியானது இப்பேர்ப்பட்ட கேசுகளில் அனுசரிக்கப்படமாட்டாது. ஏனென்றால் விதவையினுடைய பாத்தியமும் அனுபோகமும் முன்னமேயே விலகிப் போயிருப்பதுடன் அவளுக்கு விரோதமாயும் தன் சொந்தமாயும் 12-வருஷங்களுக்கு மேல்பட்ட காலம் அந்த சொத்தானது ஸ்வீகார புத்திரனால் அனுபவிக்கப் பட்டிருக்கிறது. இதே மாதிரியாகவேயே எந்த சொத்தையும் ஒருவன் 12- வருஷங்களுக்கு மேல்பட்டு தான் சொந்தமாய் அனுபவித்து விட்டால் பின்னீடு அந்த சொத்திலிருந்து அவனை நீக்கமுடியாது. ஆகையால் இப்பேர்ப்பட்டகேசுகளில் அனந்தர பாத்தியஸ்தனானவன் ஸ்வீகார புத்திரனுக்கு பாத்தியம் ஏற்பட்டது தனக்குத் தெரியவந்த உடனேயே வழக்கிட்டு ஸ்வீகாரத்தை ரத்துச்செய்து கொள்ளவேண்டும். (13. இ. அ. 84. 84.)

குறிப்பு:—செல்லக்கூடாத ஸ்வீகாரமும் எதிராளியால் ஆக்ஷேபிக்கப படாமலிருந்துவிடும் காரணத்தால் அது காலக்கிரமத்தில் செல்லுபடி உள்ளதாகி ஊர்ஜிதத்தை அடைந்துவிடுகிறது. ஸ்வீகார ஸங்கதியை எதிரி தெரிந்திருந்தும் ஆக்ஷேபிக்காமல்விட்டுவிட்டு ஸ்வீகாரப் புத்திரனால் செய்யப்பட்டு வரப்படும் நடவடிக்கைகளை ஆக்ஷேபிக்காமல் இருந்துவிடும் விஷயத்தில் அப்பால் ஸ்வீகாரத்தைஆக்ஷேபிக்க எதிரி தடைப்பட்டவன் ஆய்விடுகிறான். இப்படியே ஸ்வீகாரம் ஊர்ஜிதத்தை அடைந்து விடுகிறது. (இ. லா. ரி. 18 ம. 394.)

(இன்னும் வரும்.)

MISCELLANEOUS SUITS.

நானாவிதமான வியாஜ்ஜியங்கள்.

நெ. 19

Madras High Court.

மதராஸ் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் / மிஸ்டர் ஜஸ்டிஸ் கிருஷ்ணன் }

குளம்பாசி பாத்தியதை.

ஒரு ஜமீன் கிராமத்திலுள்ள குடிகளுக்கு ஷை கிராமத்து குளத்திலுள்ள மீன் பிடிக்கும் பாத்தியதையை அவர்கள் வெகு காலமாய் ஜமீன் தாருக்குச் சொல்ப தொகை செலுத்தி கட்டுக் குத்தகையாய் அனுபவித்து வந்த காரணத்தால் ஷை பாத்தியதையானது அவர்களுக்குச் சட்டப்படி நிலைத்துப்போமா என்ற விஷயத்தைப் பற்றி கனம் ஜட்ஜிகள் தீர்மானம் செய்தார்கள்.

குடிகள் ஷை குளத்தில் மீன் பிடிக்கும் பாத்தியதையை குத்தகைக்கு வாங்கினவர்களென்றும் நிலஸ்வாநுகிய ஜமீன்தாருக்கு குத்தகையை ரத்துச்செய்ய அதிகாரம் உண்டென்று அப்பீல் வாதி பக்கம் வாதிக்கப்பட்டது. குடிகள் அந்தக்குளத்தில் மீன் பிடிக்கும் பாத்தியை தொன்று தொட்டும் சொந்தக்காரருடைய பாத்தியதையைக் கெடுத்து விடக்கூடிய விதமாய் கால நிர்ணயச்சட்டத்தின் நிபந்தனைகளின் படிக்கும் அனுபவித்து வந்திருப்பதாயும் நிலஸ்வாநுகிய ஜமீன் தாருக்குக் கிடைக்கக் கூடியதெல்லாம் வழக்கமாச் செலுத்தி வரும் கட்டுக் குத்தகைத்தொகைதானென்றும் அப்பீல் பிரதிவாதிபக்கத்தில் வாதிக்கப்பட்டது. கனம் ஜட்ஜிகள் இந்த வாதத்தை ஒப்புக்கொண்டு சிலவுடன் இந்த அப்பீலை தள்ளுபடி செய்து விட்டார்கள்.

அப்பீல் வாதிபக்கம் மிஸ்டர் T. M. கிருஷ்ணஸாமி அய்யரும், அப்பீல் பிரதிவாதிகள் பக்கத்தில் மிஸ்டர் K. V. கிருஷ்ணஸாமி அய்யரும், மிஸ்டர் K. V. சேஷய்யங்காரும் ஆஜரானார்கள்.

நெ. 20

நியாய விரோதமாய் தள்ளி வைத்தல்.

கும்பகோணத்தில் தனவந்தரும் செல்வாக்குமுள்ள மிராசுதாரர் Mr. A. T. வெங்கட நாராயணப்பிள்ளையென்பவர் கும்பகோணத்து சபார்டினேட் ஜட்ஜால் சாரங்கபாணி கோயிலின் தர்மகர்த்தா வேலையினின்றும் ஸஸ்பெண்டு செய்யப்பட்டார். அதன்பேரில் அவர் ஹைக்கோர்ட்டுக்கு கொண்டுவந்த அப்பீலில் பிரதமஜட்ஜும் (Chief Justice) ஜட்ஜி குமாரசாமி சாஸ்திரியாரும் அந்தஸபார்டினேட் ஜட்ஜின் தீர்மானத்தைமாற்றி, ஸர்க்குலேஷன் செய்து கூடிய கமிட்டி மெம்பர்களின் பெரும்பான்மையோர் அபிப்பிராயத்தின் மேலும், முக்கியமாய் கமிட்டி மெம்பர்களிலொருவர் அந்த நடவடிக்கையை கமிட்டி மெம்பர்கள் கூட்டத்துக்கு முன்னே வைக்கும்படி கேட்டும் அப்படிச் செய்யாததாலும் அப்பீல் வாதியை ஸஸ்பெண்டு செய்தது நியாய விரோதமென்றும் அவருக்கு நஷ்டங் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள் அப்பீல் வாதிக்காக கனம் அட்வோகேட் ஜெனரலும் Mr. A. கிருஷ்ணசாமி அய்யரும், Mr. N. முத்தியா முதலியாரும் ஆஜரானார்கள், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெஸர்ஸ். T. நரசிம்ம ஐயங்காரும், T. V. கோபாலசாமி முதலியாரும் ஆஜரானார்கள்.

நெ. 21

அனியாயமாய் கொலைசெய்ய எத்தனித்தது.

Mr. ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் முன்பாக.

திருட்டுக்காகவும் நம்பிக்கை மோசத்துக்காகவும் மருந்திட்டதற்காகவும் கொலைசெய்ய யத்தனித்ததற்காகவும் குற்றம் சுமர்த்தப்பட்டு தென் ஆர்க்காடு ஸெஷன் ஜட்ஜியால் ஆயுசுபரியந்தம் தீபாந்தர தண்டனை விதிக்கப்பட்ட பட்டுக்குருக்களும் பொன்னுசாமிப் பிள்ளையும் கொண்டுவந்த கிரிமினல் அப்பீல் விசாரணை செய்யப்பட்டது.

மாயவரத்தில் காவேரிக் கரையில் கார்த்திகை கடாசி சோமவாரத்தன்று ராமச்சந்திர ஐயரென்றும் ஓர் பிராமணன் பூஜை பண்ணிக் கொண்டிருக்கையில் மேற்சொன்ன குற்றவாளிகளில் இருவரில் முன்னவன் மாந்திரீகனென்றும் பின்னவன் சிஷ்யனென்றும்சொல்லி கொண்டு அந்த பிராமணனுக்கு அந்த ரஹஸ்ய வித்தையைக்கற்றுக்கொடுப்பதாயுஞ்சொன்னார்கள். அதைக் கேட்டு அப்பிராமணன் அவர்களைச் சிதம்பரத்துக்குபின் தொடர்ந்து, அம்மூவரும் சிதம்பரம் நடராஜர் கோயிலுக்குள் பிரவேசித்தார்கள். அங்கிருக்கையில் அவர்களுக்குப் பசித்தபடியால், இரண்டாம் குற்றவாளியை பிரஸாதமும் பாலும் கொண்டுவரும்படி அனுப்பினார்கள் அவனப்படியே கொண்டுவந்தான். முதல் குற்றவாளி அந்த பிராமணனுக்குக் கொடுத்த பாலில் மறைவிடமாய்க்கொஞ்சம ஊமத்தையைக் கலந்தான். அவன் அதை குடித்தவுடனே ஸ்மரணைதப்பி கீழேவிழுந்தான். விழவே அக்குற்றவாளி அந்தப் பிராமணனிடமிருந்த 270-ரூபாய் பெறுமான சொத்துகளை திருடிக்கொண்டு அவன் கைகளைக்கட்டி கோயிலிலிருந்த ஓர் கிணற்றில் தள்ளிவிட்டான். அதிர்ஷ்டாநுகூலமாய் அந்த கிணற்றிலிருந்த ஓர் மூங்கில் ஸ்தம்பம் அவன் விழும்போது அவன் கைகளுக்கு இடையே கட்டிய கயிற்றில் மாட்டி அவர் உயிர் தப்பினர். அவர் அவ்விரவு முழுதும் அக்கம்பத்திலேயே தொங்கிக் கொண்டிருந்தார்.

மறுநாள் காலையில் வழிப்போக்கர்கள் அவரழுகைக்குரலைக்கேழ்க்கவே அவர்களவரைக்கிணற்றிலிருந்து வெளியேகொண்டுவந்தார்கள். ஆகவே அவ்விரு குற்றவாளிகளையும், நம்பிக்கை மோசத்துக்காகவும் கொலை செய்ய எத்தனித்ததற்காகவும் ஆயுசுபரியந்தம் தீவாந்தர தண்டனை யடையும்படி ஸெஷன் ஜட்ஜி தீர்மானித்தார்.

அப்பீலில் Mr ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் இரண்டாம் குற்றவாளிமேல் திருட்டுக்குற்றமாத்திரமே சாட்டப்படுமென்று அபிப்பிராயங்கொண்டு 3 வருஷம் கடுங்காவலிலிருக்கும்படி தண்டனையைக்குறைத்தார். முதல் குற்றவாளிமேல் நம்பிக்கைமோச மென்னும் குற்றம் சுமத்தத்தகாதென்று அவனுக்கு விதித்த தண்டனையை 10-வருஷக் கடுஞ்சிறையாகக் குறைத்தார். Mr. ஜஸ்டிஸ் பிலிப்ஸ் குற்றத்தை ஸ்திரப்படுத்தி முதல் குற்றவாளிக்கு 10-வருஷமும் இரண்டாம் குற்றவாளிக்கு 5-வருஷமும் கடுஞ்சிறையாகவும் தீர்ப்பைக் குறைத்தார். ஆதலால் இக்கேசு 3-வது ஜட்ஜியின் தீர்மானத்துக்கனுப்பப்பட்டது.

நெ. 22

A Question of Hindu Law.

ஹிந்து லாவைப்பற்றிய ஓர் விஷயம்.

(ஜட்ஜிகள் :—ஸ்பென்ஸர் & கிருஷ்ணன் முன்பாக)

ஒருவிதவையானவள் தன் பெண்களின் சம்மதியுடனே, தன் பெண்களில் ஒருத்தியினுடைய புத்திரருக்கு தன் சொத்துக்களைக்கொடுத்து விடலாமா! அது இந்துலாவின்படி செல்லுமா! என்னும் விஷயத்தைப் பற்றி கிருஷ்ணு டிஸ்டிரிக்ட்டிலிருந்து தீர்மானத்துக்காக வந்த 2-வது அப்பீலில் மேற்கண்ட ஜட்ஜிகள் தீர்ப்பு கொடுத்தார்கள்.

ஒரு சொத்துக்குச் சொந்தக்காரியாகிய ஒருஸ்திரீ ஹிந்து லாவின்படி தனக்கு மிகவும் நெருங்கிய அனந்தர பாத்தியஸ்தனுக்கு (Reversioner) தன் சொத்துகளைக் கொடுத்துவிடலாம். ஆனால் இடையிலுள்ள அனந்தர பாத்தியஸ்தர்களுடைய சம்மதிபெற்று தூரமாயுள்ள அனந்தர பாத்தியஸ்தனுக்கு சொத்துக்களை கொடுத்துவிட இந்து லா இடங்கொடுக்க வில்லையென்று அப்பீல் வாதி பக்ஷம் வாதிக்கப்பட்டது.

அவ்விதவையால் அவள் பெண்கள் சம்மதியின் பேரில் கொடுத்து விடப்பட்ட சொத்து அவ்விதவையாலும் அவள் பெண்களாலும், இரட்டிப்பாய் செய்யப்பட்டதெனச் செல்லுமென்றும், பாரம்பரியச் சட்டப்படி (Law of Succession)பெண்களின் புத்திரர்கள் அச் சொத்துக்களுக்கு உரிமை யுடையவர்களென்றும் அப்பீல் பிரதிவாதி பக்ஷம் வாதிக்கப்பட்டது.

மேற்சொன்ன ஜட்ஜிகள் இவ்வாதத்தை ஒப்புக்கொண்டு செலவுடன் இந்த 2-வது அப்பீலைத் தள்ளி விட்டார்கள். அப்பீல்வாதி பக்கம் Mr. K. V. L. நரசிம்மலும் அப்பீல் பிரதிவாதி பக்கம் Mr. K. வெங்கட சுப்பிரமணிய ஐயரும் ஆஜரானார்கள்.

நெ. 23

ஓர் கொலை கேசு.

(ஜஸ்டிஸ் பேக்வெல் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் முன்பாக).

உமையன் அல்லது பொன்னுசாமி என்பவன் செய்த கொலைக்குற்றத்துக்காக அவனுக்கு திருச்சினப்பள்ளி ஸெஷன் ஜட்ஜ் ஆயுசுபரியந்தம் ஜீவதீவாந்தர தண்டனை (transportation for life) விதித்தார். அதன் பேரில் அவன் செய்த அப்பீல் தீர்மானிக்கப்பட்டது. கேசின் விபரம்:—குற்றவாளி 8-வயசுள்ள தன்பிள்ளையையும், 7-வயசுள்ள தன் சகோதரன் பிள்ளையையும் கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டான். ஒரு கோயிலில் மண்டையை உடைத்து கொலை நடத்தப்பட்டது. குற்றவாளி சில வருஷங்கள் மலாய தீவுகளிலிருந்தான். அவன் 2-வருஷத்துக்கு முன் திரும்பி வந்தபோது தன் மனைவி தன் சகோதரனுக்கு ஒரு பெண் பெற்று வைத்திருக்கக் கண்டான். அவன் திரும்பிவந்தபோது தான் சேகரம் பண்ணி வந்த பொருளை தன் சகோதரனிடம் தந்தான். அவன்குற்றவாளியின் மனைவியையும் குழந்தைகளையும் அவனில்லாத காலத்தில் ஆதரித்தாக ஞாயஞ்சொல்லி அப்பொருளை திரும்பக் கொடுக்கமாட்டேனென்று சொன்னான். அதனால் துவேஷம் கொண்டு அவன் (உமயன்) அப்பிள்ளைகளைக் கொன்றதாக ப்ராஸிகுயூஷன் செய்யப்பட்டான். குற்றவாளி தான் புத்தி ஸ்வாதீனமற்றிருந்ததாயும், கொலை செய்யவேயில்லை யென்றும் சொன்னான் ஆனால் அவனைப் பார்வையிட்டு வந்த (D. M. S. O.) டிஸ்டிரிக்ட் மெடிகல் சானிடரி ஆபீஸர் அவனுக்குப் பயித்தியக்குறி யாதொன்று மில்லையென்று கூறினார். மேற்சொன்ன ஜட்ஜிகள் குற்றத்தை ஸ்தாப்த்ததுடன் கொலை வேணுமென்றே செய்யப் பட்டதென்றும், ஸெஷன் ஜட்ஜ் தீர்மானம் போதுமான தல்லவென்றும் கருத்து கொண்டு அவனைத் தூக்கு போடும்படி தீர்மானித்தார்கள்.

NEWS & NOTES.

மதராஸ் ஸ்மால் காஸ் கோர்ட்.

இந்தக் கோர்ட்டின் 3-வது ஜட்ஜாக யிருந்த Mr. A. சாம்பமூர்த்தி அய்யர் நாளது செப்டம்பர்ீ 4-ந்உ முதல் பென்ஷன் வாங்கிக்கொண்டு பழயபடி மதராஸ் ஹைக்கோர்ட்டு வக்கீலாக பிராக்டிஸ் செய்வாரென்று அறிகிறோம்.

இந்தக் கோர்ட்டில் Mr. சாம்பமூர்த்தி அய்யர் ஸ்தானத்தில் 3-வது ஜட்ஜாக நியமிக்கப்பட்ட Mr. கோதண்ட ராமானுஜுலு நாயுடு நாளது செப்டம்பர்ீ 4உ வேலையை ஒப்புக்கொண்டார்.

VILLAGE SHEET.

கிராம ஜனங்களுடைய பக்கம்.

VILLAGE COURTS IN THE MADRAS PRESIDENCY.

சென்னை ராஜதானியின் கிராமக் கோர்ட்டுகள்.

இந்த ராஜதானியிலுள்ள கிராமக் கோர்ட்டுகளில் 1916-ம் ஹுத்தில் எவ்விதம் நியாய-விசாரணை ஸம்மந்தமான அலுவல் நடந்தேறியது என்ற விஷயமாய் தெரிவிக்கப்பட்ட அர்ஜிகளைப்பார்வை யிடுவதனால், பற்பல ஜில்லாக்களிலும் பெஞ்சு கோர்ட்டுகளினுடைய கியாதி நாளுக்கு நாள் மிகவும் விருத்திபடைந்து வருவதாகத்தெரியவருகிறது. 1914-15-16-ம், வருஷங்களில் முறையே 5337, 5932, 5392 சாதாரணக்கோர்ட்டுகளும், 387, 423, 506 பெஞ்சு கோர்ட்டுகளும் யிருந்திருக்கின்றன. சென்ற வருஷத்திலிருந்த 7112 சாதாரணக் கோர்ட்டுகளில் 5392-லும், 656 பெஞ்சு கோர்ட்டுகளில் 506-லும் தான் அலுவல் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. ஆனாலும் 1916-ம் ஹுத்தை 1915-ம் ஹுத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் 1916-ம்ஹுத்தில் சாதாரண சிவில் கோர்ட்டுகளிலும், கிராம முனிசீபு தனிமையாக யிருந்து பைசல் செய்த கோர்ட்டுகளிலும் பைசல் செய்யப்பட்ட கேசுகளின் எண்ணம் மிகவும் குறைந்து போய்விட்டது யென்று தெரிகிறது. குறைந்த சிலவுக்குள்ளும் காலதாமதமில்லாமலும், பிரஜைகளுக்கு நியாயம் கிடைக்கும்பொருட்டாக கிராம பெஞ்சு கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தும், அவைகளின் பிரயோசனத்தை ஜனங்கள் சரியானபடி அடையவில்லை ஏனென்றால் திருச்சினபள்ளி ஜில்லாவில் மாத்திரம் கிராமக் கோர்ட்டுகளால் பைசல் செய்திருக்கக்கூடிய 2984 கேசுகள் 600 கிராமங்களிலிருந்து டிஸ்டிரிக்ட்டு முனிசீபுக் கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கு (1) கிராம முனிசீபுகளுடைய தாழ்ந்த உத்தியோக நிலமையும், பொதுவாக் கிராம முனிசீபுகளில் பெரும்பான்மையோர் வேலை பார்க்கத் திறமையில்லாமலிருப்பதும் (2) கிராமாந்தர ஜனங்களின்மீது வக்கீல்களுக்கும் லா ஏஜண்டுகளுக்கும் இருக்கும் செல்வாக்கு (3) அற்பக் கேசுகளை பைசல் செய்வதில் கிராம முனிசீபுக்கும், டிஸ்டிரிக்கட்டு முனிசீபுகளுக்கும் இருக்கும் ஸம அதிகாரங்கள், ஆகிய இவைகள்தான் முக்கிய காரணங்கள் என்று கலெக்டரால் சொல்லப்பட்டிருக்கிறது. அசையாப்பொருள் சம்பந்தப்பட்ட கேசுகளில் நிறைவேறுதல் உத்தரவு செய்ய கிராம முனிசீபுகளுக்கு அதிகார மில்லாமலிருப்பது தான் அதற்குக் காரணமென்றும் சில கலெக்டர்கள் சொல்லுகிறார்கள் இதே முகாந்தரங்களையே அநேகம் கலெக்டர்கள் சொல்லுவதில் கிராமாந்தரங்களில் கக்ஷிகள் ஏற்படுவதும் ஒரு காரணமென்றும் சில கலெக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள் தென் ஆர்க்காடு ஜில்லாவில் கிராமக்கோர்ட்டுகளின் மதிப்பு ஜாஸ்திப்பட்டு வருவதாகவும் அதற்கு உதாரணமாக பழய கூடலூரில் (Cuddalore O. T.) ஒரு கிராம பெஞ்சுகோர்ட்டும், திண்டிவனத்தில் ஒரு கிராம பெஞ்சுகோர்ட்டு மிருப்பதாகவும் அந்த இரண்டு பெஞ்சு கோர்ட்டுகளும் நாளைக்குநாள் கியாதி அடைந்து வருவதாயும் அந்த கிராம முனிசீபுகளுக்கு எழுத்து வேலை ஜாஸ்திப்பட்டுப் போனதால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு உதவிக் கர்ணம் நியமுகம் செய்து கொடுத்ததாகவும் சொன்னார். அல்லாமலும் குறைந்த சிலவில் சௌகரியமாய் கிராமக் கோர்ட்டுகளில் வியாச்சியம் தாக்கல் செய்யாமல் டிஸ்டிரிக்கட்டு முனிசீபு கோர்ட்டுகளில் ஜனங்கள் வியாச்சியம் துடரப்போவதின் காரணத்தை தாமே நேரில் விசாரிக்கும்படி ரிவினியூ ஆபீஸர்களுக்கு சொன்னதின் மூலமாக அநேக நன்மைகள் நேர்ந்திருப்பதாகவும் தெரிவித்தார். செங்கல்பட்டுத்தாலுக்காவில் பிரஸ்தாப வருஷத்தில் வழக்கத்தைவிட கிராம முனிசீபுக் கோர்ட்டுகளில் 3-மடங்கு அதிகமான கேசுகள் தாக்கல் செய்யப்பட்டு பைசல் செய்யப்பட்டிருப்பதாயும், அதற்குக் காரணம்; கிராமக் கோர்ட்டுகளில் வியாக்கியங்களை தாக்கல் செய்வதின் மூலமாக ஏற்படும் ஸாதகங்களை ஜனங்களே அறிந்து கொண்டிருப்பது தானென்றும் செங்கல்பட்டு கலெக்டர் தெரிவிக்கிறார். ஜனங்களுக்கு கிராம முனிசீப் கோர்ட்டுகளில் நாளுக்குநாள் அதிக நம்பிக்கைமேல் பட்டுக்கொண்டு வருவதற்குக்காரணம் பொதுவாக கிராமமுனிசீபுகளுடைய கல்வித்திரமையே யென்று கோதாவரி கலெக்டர் ரிப்போர்ட்டுச் செய்கிறார். சிலது நீங்கலாக அநேகமாக கலெக்டர்களுடைய ரிப்போர்ட்டுகளெல்லாம் திருப்திகாமாகவேயே யிருக்கிறது. இருந்தாலும் கிராமக் கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்படவேண்டிய அநேக கேசுகளை டிஸ்டிரிக்கட்டு முனிசீபுக் கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்பட்டு பைசல் செய்யப்பட்டிருக்கின்றன. இப்படிச் செய்வது நிற்கவேண்டுமானால் வெகு காலமாக கோரப்படுகிறபடி கிராமப் பஞ்சாயத்துக்களை நியமிக்கவேண்டும். அநேக சில்லரைச் சீர்திருத்தங்களை அநேக கலெக்டர்கள் சிபார்சை செய்கிறார்கள் அவைகளில் சிலதை எடுத்துச் சொல்லுவோம் மிகவும் ஸரியானவர்களை கி. மு. உத்தியோகத்துக்குத் தெரிந்தெடுத்து நியமுகம் செய்யும்படியான விதமாக நியமுக விதிகளை மாற்றவேண்டும். கிராமமுனிசீபுகள் டிஸ்டிரிக்கட்டு முனிசீபுக்கோர்ட்டிகளில் சில காலமிருந்து அலுவல் கற்றுக் கொள்ளும்படி யேர்ப்பாடு செய்யவேண்டுமென்று விசாகப்பட்டணம் கலெக்டரும், டிஸ்டிரிக்கட்டு முனிஸீப்கோர்ட்டுகளில் ஸ்மால் காஸ் வியாச்சியங்கள் சில குறிப்பிட்ட தினங்களிலேயே விசாரிக்கப்பட்டு பைசல் செய்யப்பட்டு வரப்படுகிறபடியால் ஷை தினங்களில் கிராம முனிசீபுகள் ஷை கோர்ட்டுகளில் போயிருந்து கேசுகள் விசாரணை செய்யப்பட்டு பைசல் செய்யப்படும் மாதிரியைத் தெரிந்துகொள்ளும்படிக்கான ஏற்பாட்டை செய்யவேண்டுமென்று டிஸ்டிரிக்கட்டு ஜட்ஜும் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தப்படி அனுஸரிக்கிறதாக இருந்தால் இந்தவிஷயத்தில் அபிவிருத்தி யேர்ப்படத்தான் செய்யும். ஸரியானபடி அபிவிருத்தி செய்கிறதாக யிருந்தால் கிராமாந்தரங்களிலுள்ள மிகவும் ஸரியான மனிதர்களெல்லாரும் கிராமப் பஞ்சாயத்தில் மெம்பராக யிருக்க விரும்புவார்கள் அப்பொழுது கிராமப் பஞ்சாயத்துக்கு கௌரவம் அதிகப்பட்டுக்கொண்டு வரும் அப்பால் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுள்ள விஷயங்களை பைசல் செய்யும் பூரா அதிகாரத்தையும் அவர்களுக்குக் கொடுத்துவிடலாம்.

ரெவினியூ விளம்பரம்.

விளை நிலவிர்த்திக்காய் கடன் கொடுக்கும் (Land Improvement Loans Act) (1883-ம் வருஷத்து 19-வது) ஆக்ட் 10-வது செக்ஷன் கீழும் பயிரிடுவோர்க்கு கடன் கொடுக்கும் (Agriculturists' Loan Act) (1884-ம் வருஷத்து 12-வது) ஆக்ட் 4-வது செக்ஷன் கீழும் சீர்திருத்தப்பட்ட சட்டங்கள்.

கடன் தரக்கூடிய முகாந்தரங்கள்.	இதன் கீழ் குறித்த கடன் மொத்தத் தொகைகள் பூமி சொந்தக்காரருக்கும் அநுபவிப்பவர்க்கும் கொடுக்கலாம்:— கொடுக்கக்கூடிய மொத்தம் — மிகுந்த தொகை,	குறைந்த தொகை,
(A) 1883 ம் வருஷத்து விளைநில விர்த்திக்காய் கடன் தரும் ஆக்டின் கீழ்:— பயிரிடும் நிமித்தம் விடப்பட்ட நிலத்தின் கிரயம் (கிணறு குளம் கட்டுவது அல்லது மராமத்து செய்வது பாழ் நிலம் சீர்ப்படுத்துவது அல்லது மற்றெவ்வித வேலையாலாவது) ஸ்திரமா யதிகப்படுமோ அதற்கு:— ...	தேவையான வரையில்.	ரூ. 50
(B) 1884-ம் வருஷத்து பயிரிடுவோர்க்கு கடன் தரும் ஆக்டின் கீழ்:—		
(I) தான்ய விதை வாங்கவும், ஈனுவதற்காக அல்லது பயிரிடு நிமித்தங்களுக்காக வாங்கும் ஆடு மாடுகள் விரையடியாக் குதிரைகள் அல்லது நெருப்பினாலாவது வெள்ளத்தினாலாவது நாசமான வீடுகளை திரும்பக்கட்டவும்.	ரூ. 1000	குறைந்த தொகையில்லை
(II) குடும்பத்துக்கும் விவ சாயத்துக்கும் ஆன ஆடு மாடுகளிரை வாங்குவது முதலியது போன்ற வேறு விவசாய விஷயங்களுக்காகவும்; கரும்பு யந்திரம் நீலக்தொட்டி கட்டல் முதலானதுக்கும், நீர்வளம் செய்யுமுபாயங்களுக்கும் குடியிருக்கவும் பயிரிடவும் புதிதாய் உண்டாக்கப்பட்ட பூமிகளில் பயிரிடுவோர் வீடு கட்டிக்கொள்ளவும். ...	ரூ. 200.	,, ,,
(III) பிரதேச (Local) கவர்மெண்டார் அறிந்த க்ஷாம நிவர்த்திக்காகவும் நிலச் சொந்தக்காரரும் நில மநுபவிப் போரும் அவர்களைச் சார்ந்தவரும் அடுத்த மாசூல் உண்டாகும் வரையில் ஜீவிக்கவும். ...	ரூ. 200	,, ,,

கடன் தர அதிகாரமுடையவரும் ஒப்புக்கொள்ளத் தக்க மிகுந்த தொகையும்.	கலெக்டர்களும், டிவிஷன் அதிகாரிகளும், டிப்டி தாசில்தார்களும், கீழ் குறித்த தொகைகளுக்கு மேற்படாமல் கடன் உத்தரவு கொடுக்க அதிகாரமுள்ளவர்கள்.
க்லெக்டர்கள்	ஒவ்வொரு கேசிலும் ரூ. 2500 வரையில்
டிவிஷன் அதிகாரிகள்	,, 1000 ,,
தாசில்தாரர்கள்	,, 500 ,,
இன்டிபென்டென்ட் சார்ஜுள்ள டிப்டி தாசில்தாரர்கள்	,, 250 வரையிலும் பிரத்தியேகமாய் கலெக்டருடைய அதிகாரம் பெற்றிருந்தால் 500 ரூ. வரையில்.
இதர டிப்டி தாசில்தாரர்கள்	பிரத்தியேகமாய் கலெக்டர் உத்தரவு பண்ணினால் 250 ரூ. வரையில்.

2500 ரூபாய்க்கு மேற்பட்ட கடன்களுக்கு ரெவினியூ போர்டாராலும் ரூபாய் 10,000 க்கு மேற்பட்ட தொகைகளுக்கு பிரதேச (Local) கவர்ன்மெண்டாராலும் சாங்ஷன் கொடுக்கப்படும்.

[மற்ற விவரங்களுக்கு டிஸ்டிரிக்ட் கெஜட் அநுபந்தம் பார்க்க]

1904௵ மார்ச்சு௴ 1௳யுள்ள 1904௵த்திய ஆர். டிஸ். கெம்பர். 223-ரிவினியூ.

1904௵ ஜனவரி௴ 16௳யுள்ள கெம்பர் 43-பப்ளிக்கவர்மெண்டு உத்திரவை யனுசரித்து சிலாசாசனங்களிருக்கிற புராதமான கட்டடங்கள், ஞாபகஸ்தம்பங்கள், கோரிகள் முதலியவைகளை இடிக்கவாவது, நாசம் செய்யவாவது, ரிபேர் செய்யவாவது உத்தேசித்திருந்தால் அப்படிப்பட்ட உத்தேசத்தை அந்த ஊர் கிராம உத்தியோகஸ்தர்கள் தாசில் தார்களுக்கு உடனே அறிவிக்க வேண்டியது.

D. DIS. NO. 2955/REV. OF. 1916, DATED SEPTEMBER 12, 1916.

சர்வே கற்கள்.

குடிகளுக்கு:—

ஒவ்வொரு குடியானவரும் தன்னிட பூமிக்கு சம்பந்தப்பட்ட கற்களை சரிவர பாதுகாத்துவர சட்டப்படி கட்டுப்பட்டிருக்கிறார் அப்படி பாது காப்பதற்கு வழியாவது:—

வருஷத்திற்கு இருமுறையாவது கற்களின் சுற்றிலும் மூடியிருக்கிற புதர்களையும் மண்ணையும் நீக்கி சுத்தப்படுத்துவது தணிக்கைக்கு வரும் உத்தியோகஸ்தருக்கு கற்கள் பயிங்கரமாய் தெரியும்படி சுண்ணாம்பு அடித்து வைப்பது. இப்படி செய்யாதிருந்தால் கணக்கர்கள், ரிவினியூ இனிஸ்பெக்டர் முதலிய அதிகாரிகள் காணமல் போன கற்களையும் மராமத்து ஆகவேண்டிய கற்களையும் கணக்கில் தாக்கல்செய்து 15-நாள் வாயிதாவில் அவைகளை குடிகள் சீர்திருத்தவேண்டுமென்று கிருமத்தில் தண்டோரா மூலமாய் பிரசாம் செய்யப்படும். அப்பவும் குடிகள் கவனிக்காதிருந்தால் சர்க்கார் மாரிபத்தில் அமல்கள் நடந்தப்பட்டு அடியில் கண்டபடி செலவுகள் உடனுக்குடனே வசூலிக்கப்படும்.

கல் காணுமல்போய் புதுக்கல் நட்டால்:—

ஒவ்வொரு கல்லிற்கும்.
(1) கல்லின் கிறயம் இது இவ்வளவு என்று ஒவ்வொரு தாலுகாவுககும் முன்னமே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
(2) சர்க்காரில் கல்பாதுகாப்புக்கு ஏற்பட்டிருக்கும் சிப்பந்தி சிலவு 8-அணா.
(3) இது விஷயமாய் வேறே கூலியாள்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டி நேரிட்டால் அந்தக் கூலித்தொகை பூருவும்

கல் ஆஜரிலிருந்து மராமத்துசெய்யப்பட்டால் மேலேகண்ட (2), (3) லக்கமிட்ட தொகைகள்மட்டும் வசூலிக்கப்படும் ஆகையால் எல்லா குடிகளும் அவரவருக்கு சம்பந்தப்பட்ட கற்களை வெகு ஜாக்கிரதையாய் பாதுகாத்து வரவேண்டியதென்று இதனால் தெரிவித்திருக்கிறோம்.

ரெவினியூ கோர்ட்டுகள்.

1. நேராய் ஆஜராகவேண்டியதற்காகவும் தஸ்தா வேஜுகளை ஆஜர்படுத்துவதற்காகவும் பிறப்பிவிக்கப்படும் சம்மன்கள் நமூனு.

..................விருக்கும்.......... என்பவனுக்கு இப்போது நம்முடைய முன்பாக நடந்து கொண்டுவரும் ரிவினியூ விசாரணையில் (இந்த இடத்தில் இன்னவிஷயமாய்) சாக்ஷியம் சொல்லவும் அடியிற்கண்ட தஸ்தாவேஜுகளை (இன்ன இடத்து தஸ்தாவேஜுகளை) ஆஜர்படுத்தவும் நீர் ஆஜராக வேண்டிய அவசிய மிருக்கிறபடியால் ....தேதியில்..........மணிக்கு நம்முடைய முன்பாக நேராய் ஆஜராகும்படிக்கும், இதனால் உமக்கு கட்டளை யிடப்படுகிறது, நம்முடைய உத்தரவில்லாமல் அந்த இடத்தை விட்டு நீர் போகக்கூடாது.

..................இன்றைய்தினமாகிய...........தேதியில் நம்முடைய கையொப்பமும் முத்திரையும் செய்யப்பட்டன.

முத்திரை

கையெழுத்து.

2. தஸ்தாவேஜுகளை ஆஜர்படுத்தும்படி பிறப்பிவிக்கப்பட்ட சம்மன்கள் நமூனு.

......................விருக்கும்...................க்கு.............................இப்போது நம்முன்பாக நடந்துகொண்டிருக்கிற ரிவினியூ விசாரணையில் (இன்ன விஷயமாக..............) அடியிற்கண்ட தஸ்தாவேஜுகள் (இன்ன தஸ்தாவேஜு) தேவையாயிருக்கிறபடியால்...................தேதியில்...................மணிக்கு நம்முன்பாக மேல்படி தஸ்தாவேஜுகளை ஆஜர்செய்யவேண்டியதென்றும் அல்லது ஆஜர்செய்விக்க வேண்டியதென்றும் இதனால் உமக்கு கட்டளை இடப்படுகிறது..............................இன்றைய தினமாகிய................தேதியில் நம்முடைய கையொப்பமும் முத்திரையும் செய்யப்பட்டன.

முத்திரை

கையெழுத்து.

கட்டளைகள் ஸார்வுசெய்ய கோர்ட்டுகளில் விதிக்கப்படவேண்டிய பீசுகளின் வீதம்.

கட்டளையின் சுபாவம்.	எந்த ரிவினியூ கோர்ட்டிலும் விதிக்கப்பட வேண்டிய. ரூ.	அ.	பை.
1. ஒவ்வொரு சம்மன் அல்லது நோடீசுக்கு:—			
(a) ஒரு பிரதிவாதி அல்லது சாக்ஷிக்கு	0	8	0
(b) அதே காலத்தில் அதே விஷயமாய் அதே கிராமத்தில் வாசஞ் செய்கிற ஒவ்வொரு அதிக பிரதிவாதி அல்லது சாக்ஷிகளுக்கு	0	4	0
2. ஒவ்வொரு வாரண்டுக்கும் (a) பிடிக்கப்படவேண்டிய ஒவ்வொரு நபருக்கு பிறப்பிக்கப்பட்ட பிடிவாறண்டாயிருந்தால் (b) அவ்வித ஒவ்வொருவாரண்டு விஷயமாய் பிறப்பிக்கப்பட்ட ஜப்தி வாரண்டாயிருந்தால் (c) அவ்வித ஒவ்வொரு வாரண்டு விஷயமாய் பிறப்பிக்கப்பட்ட ஏலவாண்டாயிருந்தால் (d) அவ்வித வாரண்டு விஷயமாய் பிறப்பிக்கப்பட்டசொத்து ஒப்புக்கொடுக்கும் வாரண்டாயிருந்தால்வாரண்டு பிறப்பிக்கப்பட்ட தேதி முதல் மூன்று நாளைக்குப்பின்னிட்டு ஒவ்வொரு நாளைக்கு வாரண்டு ஒப்புவிக்கப்பட்ட ஒவ்வொரு உத்தியோகஸ்தர் செய்த வேலைக் காகவும் அதிக பீஸ் விதிக்கப்படுவதும் தவிர.	1	0	0
(c) (d)—யில் சொல்லப்பட்ட நபர் அமீனுவாகயிருந்தால்	0	6	0
(f) சேவகனுகயிருந்தால்	0	4	0
3. கிராமமுனிசீபினுடைய தீர்ப்பை நிறைவேற்ற பிறப்பிக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றுக்கு	0	4	0
விளம்பரம் எச்சரிப்பு அல்லது உத்திரவு இவைகளுக்கும் மற்ற இடங்களில பிரஸ்தாபிக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றுக்கும்	1	0	0
4. மேலே 2 (d)யில் கண்டவிதமாய் கணக்கிட்ட மூன்று நாளைக்குப் பிறகு அதிக பீஸ் வசூல் செய்யப்படும்.			
5. ஏலம் போடும் விஷயமாய் ஏலதாரன் கூலிக்காக ஏல பணத்தில் முதல் 350-ரூபாய்க்கு ரூபா 1-க்கு 1-அணாவீதமும், 350 முதல் 1000 வரையில் ரூபா 1-க்கு $\frac{1}{2}$-அணா வீதமும், 1000-முதல் எந்த தொகைக்கும் ரூபா 1-க்கு $\frac{1}{4}$அணா வீதமும் வசூல் செய்யப்படும்.			

குறிப்பு 1:—ரெயில்வே அல்லது சர்க்கார் வண்டி மூலமாய்ப் போவதற்குப் பிடிக்கும் செலவை யாதொரு கக்ஷிக்காரன் முன்னடி செலுத்தலாம். இவ்விஷயமாய் மேற்படி மார்க்கமாய்ப்போக கட்டளை சார்வு செய்கிறவன் கடமைப்பட்டிருக்கிறான். அவ்விதமாய் முன்னமே செலுத்தப்பட்ட தொகையானது வியாச்சியத்தின் செலவின் ஒரு பாகமாகும்.

குறிப்பு 2:—கட்டளைகளை சீக்கிரத்தில் பிறப்பிக்க வேண்டுமென்று கோரிக்கொண்டு சீக்கிரத்தில்நிறைவேற்ற உத்திரவு செய்யப்பட்டால், அவ்வித கட்டளைகளுக்கு சாதாரணமாய் என்ன பீஸ் உண்டோ அதுவும் அதைப்போல் அதற்குமேல் $\frac{1}{2}$-பங்கும் விதிக்கப்படும்.

IMPORTANT NOTICE TO VILLAGE OFFICERS.

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஓர் முக்கியமான அறிக்கை.

பிரியமுள்ள ஐயா,

தற்போது ஊர்ஜிதத்திலிருந்து வருகிற கிராம கோர்ட்டுகள் ஆக்டை (Village Courts' Act) சீர்திருத்துவதற்கான மசோதா ஒன்று இந்திய கவர்ன்மெண்டு ஆலோசனை ஸபையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதில் கிராம அதிகாரிகளுக்கு இப்போது இருப்பதைவிட விசேஷமான அதிகாரங்கள் கொடுப்பதற்காக ஏற்பாடு செய்வதற்கு ஜில்லா கலெக்ட்டர்களும் சம்மதித்து சிபார்சையும் செய்திருக்கிறார்கள். இப்படி அதிகாரம் கொடுப்பதற்கு லாயக்கானவர்களையே தெரிந்து எடுக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஆகையால் இந்த மிகவும் முக்கியமான தருணத்திலாவது நமது இராஜதானியிலுள்ள கிராம அதிகாரிகள் தாங்கள் உத்தியோக ஹோதாவில் செய்யவேண்டிய கடமைகள் இன்னின்னதென்பதையும், தங்களுக்குள்ள பொறுப்புகள் இன்னின்னதென்பதையும் நன்றாகத் தெரிந்துகொண்டு தங்கள் முன்வரும் ரிவினியூ, கிரிமினல், ஸிவில் நடபடிக்கைகளை சட்டப்படி ஒழுங்காகவும் நியாயம் தவறாமலும் நடத்துவதின் மூலமாக தங்கள் சரகத்திலுள்ள ஜனங்களையும் மேலான அதிகாரிகளையும் திருப்தி செய்ய இதுவே தக்க சமயம்.

இப்படி தம் (கல்வித்)திறமையை அபிவிருத்தி செய்துகொள்ளும் கிராம அதிகாரிகளுக்கு, இப்போது இருப்பதைவிட விசேஷ அதிகாரம் கொடுத்து இப்போது ஸப்மாஜிஸ்ட்ரேட்டுகளால் விசாரிக்கப்பட்டு வருகிற அநேக கிரிமினல் கேசுகளையும், டிஸ்டிரிக்ட்டு முனிசீபுகளால் விசாரணை செய்து வருகிற அநேக ஸிவில் கேசுகளையும் கிராம முன்சீப்புகளே விசாரித்து பைசல் செய்ய அதிகாரம் கொடுக்கப்போகிறார்கள். இப்படி அதிகாரமும் அந்தஸ்தும் ஜாஸ்திப்படுத்தப்படுங்கால், அவர்களுடைய சம்பளமும் ஜாஸ்திப்படுத்தப்படுவது ஸம்பாவிதமான விஷயமல்லவா? கிராம அதிகாரிகளே பைசல் செய்யக்கூடிய கிரிமினல், ஸிவில் கேசுகளை, அதிகச் சம்பளம் வாங்குகிறவர்களும், வீண்போக்க நேரமில்லாதவர்களுமான ஸப் மாஜிஸ்ட்ரேட்டுகள், டிஸ்டிரிக்ட்டு முனிசீபுகள் விசாரித்து பைசல் செய்வதினால் கேசுகள் நாளுக்குநாள் பெருகி பாக்கி விழும்காரணத்தால் ஜாஸ்தி எண்ணிக்கையுள்ள மாஜிஸ்ட்ரேட்டுகளும், டிஸ்டிரிக்ட்டு முனிசீபுகளும், ஸப்ஜட்ஜிகளும் நியமுகம் செய்ய அவசியம் யேற்பட்டு கவர்ன்மெண்டாருக்கு மிக்க பொருளும், காலமும் நஷ்டப்படுகின்றன. இவைகள் இப்போதய புதிய ஏற்பாட்டினால் நிவிர்த்திக்கப்படும். புதிய ஏற்பாடுபடி கிராம அதிகாரிகளுக்கே விசேஷ அதிகாரம் கொடுத்து நடபடிக்கை நடத்தப்படும் விஷயத்தில் கேசுகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து கவர்ன்மெண்டாருக்கு அதனால் தக்கபொருளும் மீரக்கூடியதாக ஏற்படும். அப்படி மீறப்படும் பெருந்தொகையில் சொற்ப பாகத்தைக் கொண்டு கிராம அதிகாரிகளின் சம்பளத்தை உயர்த்துவது சிரமமான காரியமல்ல.

இந்த நல்ல சந்தர்ப்பத்தில் கிராம அதிகாரிகள் தங்கள் உத்தியோகத்திறமையை அபிவிருத்தி செய்துகொள்வதற்கு ஒரே வழிதானிருக்கிறது. அதாவது இந்திய சட்ட கெஜெட்டை வழக்கமாகத் தருவித்துப்படிப்பது தான். ஏனென்றால் (1) நமது இந்திய சட்ட கெஜட்டில் சர்வ சட்ட விஷயங்களின் சாராம்ஸங்களையும் பொருக்கி யெடுத்து யெளிய தமிழ் நடையில் அழகாக வரயப்பட்டிருக்கிறது. (2) கிராம அதிகாரிகள் சட்ட கலாசாலையின் மாணாக்கர்கள்போல் அவர்களுக்குள்ள பல தொல்லைகளை விட்டு சதா சட்டங்களையே வாசித்துக் கொண்டிருப்பது கூடாத காரியமென்றுணர்ந்து உபயோகமுள்ள சட்ட விஷயங்களை மட்டில் தெரிந்தெடுத்து வாசிப்பவர் மனதைக் கவரும்படியும், தெவிட்டாத இனிப்புடன் மேலும் மேலும் வாசிக்க ஆவலுண்டாக்குமாறு "ஸம்பாஷணை" யென்றும், "சட்ட கலாசாலை" யென்றும், தலை பெயரிட்டு ஸ்ரீகள், பாலகரும் கூட அறிந்து கொள்ளுமாறு அச்சிடப்பட்டிருக்கிறதினால் இதை வாசிக்கும் ஒவ்வொரு கிராம அதிகாரிகளின் கல்வித்திறமையும், சட்ட ஞானமும் அதிகப்படுவது நிச்சயமென்பதற் கையமில்லை. இவ்வாறு நாம் கூறுவதுமன்றி கனம்தங்கிய பல ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகளும், சட்ட ஞானமேதாவிகளும், பத்திராதிபர்களும் இந்த சட்ட கெஜெட்டுவிஷயமாய் நன்கு மதித்து கொடுத்திருக்கும் அபிப்பிராயங்களின் மூலமாகவும் வெளியாகும். அவைகள் இதன்முன்புறம் அச்சிடப்பட்டிருக்கிறது.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
மானேஜர்.

1/149-A, பிராட்வே,
மதராஸ், 29-9-1917.

The Indian Law Gazette.

PART I.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் I.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ஞு அக்டோபர்மீ [நெ. 10.

EDITORIAL.

பத்திராதிபர் வியாசம்.

LEGAL KNOWLEDGE & THE PANCHAYAT SYSTEM TO BE INTRODUCED.

சட்டஞானமும், ஊர்ஜிதத்துக்கு வரப்போகிற கிராமப்பஞ்சாயத்து ஏற்பாடும்

இவ்வுலக வாழ்க்கைக்குறியது அரோக த்ருட்காத்திரத்துடன் சுகஜீவியாயிருப்பதே—இதுவே எல்லா மனிடர்களுடைய விருப்பமாகயிருந்து கொண்டிருக்கிறது. இப்படி யிருப்பதற்குக்காரணம் பொருள் அல்லது தனம் தான். பொருள் சம்பாதிப்பதற்குக் காரணம் கல்வியே அல்லது வேறில்லை. இக்கல்வியின் பெருமையைப்பற்றியும் அதனால் உண்டாகும் பயன்களைப் பற்றியும், அந்தக்கல்வியை ஒருவாறு ஒரு குறிப்பிட்ட அளவுக்காவது கற்றுக் கொள்வதினால் மேனாட்டார் எத்தொழிலைப் பின்பற்றிய போதிலும் அதில் வெற்றியுடன் மேன்மேல் தழைத்து வருவதையும், நமது நாட்டோர் அக்கல்வியை அசட்டை செய்வதினால் ஏற்பட்டிருக்கும் கெடுதி இன்னதென்பதையும், எல்லா ஜனங்களுக்கும் சட்டம் தெரிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமானதென்பதையும் பற்றிய அநேக விஷயங்களைப்பற்றி நமது இந்திய சட்ட கெஜெட்டின் சென்ற ஏப்பிரல், மே, ஜூன்மாதங்களில் பிரசுரம் செய்யப்பட்ட ஸஞ்சிகைகளின் 1-வது பாகத்தில் விபரமாக வரைந்துளோம். அதில் ஸகல ஜனங்களுக்கும் சட்டம் தெரிந்திருக்க வேண்டுமாகையாலும், எல்லா ஜனங்களும் சட்ட திட்டங்களின் அஸல் பிரதிகளையே படித்துத் தெரிந்து கொள்வது அஸாத்தியமான காரியமாகையினாலும், ஜனங்களுக்கு கூடியவரை உதவிபுரிய வெண்ணி கரும்பைச் செக்கிலிட்டு ஆட்டி கருப்பஞ்சாற்றை எடுத்து ஜனங்கள் வாயில் ஊட்டியவாறு கஷ்டமான சட்டங்களிலிருந்து ஜனங்களுக்கு அவசியமாகத் தெரிந்திருக்கவேண்டிய விஷயங்களைத் தெரிந்தெடுத்து அவைகளை எல்லாம் ஒன்றாய் திரட்டி அவைகளையும் கலெக்ட்டர்களுடைய உத்தரவுகள், ரிவினியூ போர்டார் அவர்களுடைய ஸ்டாண்டிங் ஆர்டர்கள், பற்பல ஹைக்கோர்ட்டுகளிலும் பைசல் செய்யப்பட்டதும், ப்ரிவிகௌன்ஸில் என்னும் சீர்மையிலுள்ள

நியாய ஸ்தலத்தில் பைசல் செய்யப்பட்டதுமான கேசுகளிலும் ஜனங்களுக்கு மிகவும் பிரயோசனமாக யிருக்கக்கூடிய கேசுகள் இன்னதென்று பொருக்கி அவைகளையும், நமது இந்திய சட்ட கெஜெட்டில் பிரசுரம் செய்து வருகிறோம். நமது பத்திரிகையைப்பற்றி நாமே புகழ்ந்து பேசுவது பொருத்தமாக யிராதென்று நன்குணர்ந்து ஷை பத்திரிகையைப்பற்றி மிகவும் பிரக்யாதி பெற்ற கனம் ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகள் முதலாயினோர் அளித்திருக்கும் நற்சாக்ஷி பத்திரங்களையே நமது நண்பர்களின் ஆலோசனைக்குக்கொண்டு வருவது உசிதமென்று நம்புகிறோம். நமது ராஜதானியிலுள்ள தமிழ் ஜில்லாக்களிலாகட்டும், தெலுங்கு ஜில்லாக்களிலாகட்டும் மற்றுமுள்ள எந்த இடத்திலாகட்டும், திருவாங்கூர், மைசூர், ஹைதராபாத்து முதலிய இடங்களில் ஆகட்டும் சிலர்களுடையபெயர் ஒவ்வொரு வீட்டிலும் தெரிந்திருக்கிறதாக யேற்பட்டிருக்கிறது. அவர்களில் கனம் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் (முன் சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு ஜட்ஜி) கனம். ஸர். C. சங்கரன் நாயர் (முன் சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு ஜட்ஜாக யிருந்து இப்போது ராஜப்பிரதிநிதியவர்கள் சட்ட நிர்மாண நிர்வாக ஸபையில் மெம்பராக யிருப்பவர்) இவர்களும் சேர்ந்தவர்கள். இந்த உலகறிந்த கனவான்களும் பின்னும் நமது சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டில் இப்போதும் ஜட்ஜாக யிருந்துவருகிற, கனம். மிஸ்டர். C. V. குமாரஸ்வாமி சாஸ்திரியார், கனம். மிஸ்டர். T. V. சேஷகிரி ஐயர், கனம். மிஸ்டர் C. கிருஷ்ணன், கனம் மிஸ்டர் C. G. ஸ்பென்ஸர், கனம். மிஸ்டர். J. H. பேக்வெல் முதலியவர்களும் பின்னும் பலரும் நமது சட்ட கெஜெட் தமிழ் நாட்டிலுள்ள ஜனங்களுக்கு மிகவும் உபயோக முள்ளதென்று அபிப்பிராயப்பட்டு நற்சாக்ஷிப் பத்திரங்கள் அளித்திருக்கிறார்கள். இதன்றி ஷை இந்திய சட்ட கெஜெட்டில் சில ஸஞ்சிகைகளை மட்டுமாவது தருவித்துப் படிக்க தயவு செய்பவர்களும் இந்த ஸஞ்சிகை விஷயமாக நல்ல அபிப்பிராயமல்லது வேறுவித அபிப்பிராயத்தை வெளியிடுவது ஸாத்தியமான காரியமல்ல.

இதல்லாமலும் மாட்சிமை தங்கிய கவர்ன்மெண்டார் அவர்கள், நமது தேசத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் கிராம பஞ்சாயத்து என்ற ஒரு புதிய ஏற்பாட்டை ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவருவதற்காக, உள்ள காரியாதிகளைச் செய்து வருகிறார்கள். ஷை யேற்பாடு ஊர்ஜிதத்துக்கு வருங்காலத்தில் ஒவ்வொரு கிராமச்சரகத்திலுமுள்ள பெரிய குடித்தனக்காரர்களில் சிலரைத் தெரிந்தெடுத்து அவர்களையும் ஷை கிராமப் பஞ்சாயத்துக்கு மெம்பர்களாக நியமிக்கப் போகிறார்கள். கிராமப் பஞ்சாயத்தாரின் அலுவல்கள் ஷை கிராம எல்லைக்குள் நேரிடுகிற ஸிவில், கிரிமினல் கேசுகளை விசாரித்து நியாயமானபடி திருப்திகரமாக பைசல் செய்ய வேண்டுவதுதான். அந்தக் கிராமப் பஞ்சாயத்துக்கு கிராம முனிசீபே ப்ரெஸிடெண்டாக யிருப்பார். இப்போது டிஸ்டிரிக்டு முனிசீப் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு பைசல் செய்யப்பட்டு வரப்படுகிற சில குறிப்பிட்ட வகுப்புக் கேசுகளையும், இப்போது தாலுக்காக்களில் ஸ்டேஷனெரி 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுகளால் விசாரிக்கப்பட்டு பைசல் செய்யப்பட்டு வரப்படுகிற சில குறிப்பிட்ட வகுப்பு கேசுகளையும் ஷை கிராமப்பஞ்சாயத்தாரால் பைசல் செய்யு மாறு ஏற்பாடு நடக்கப்போகிறது. அப்படி நடக்கும்போது அந்தப் பஞ்சாயத்தில் ப்ரெஸிடெண்டாக யிருக்கும் நிலைமையும் அதில் மெம்பராக யேர்ப்படுத்தப்படும் அந்தஸ்துள்ள குடித்தனக்காரர்களுடைய நிலைமையும், மேம்பாடுள்ளதாக விருக்குமென்பதை நாம் தெரிவிக்க வரவேண்டும்? அவர்களுடைய நிலைமை ஜட்ஜிகளுடைய நிலைமை யல்லவா? அவர்களுடைய ஸ்தானம் ஜட்ஜிகள் ஸ்தான மென்பதற்கு ஸந்தேகமே இல்லை. அப்படியாகில் ஜட்ஜி ஸ்தானம் வகிப்போருடைய கல்வித் திறமை, அதிலும் முக்கியமாய் சட்ட ஞானம் எப்படி யிருக்க வேண்டுமென்பதை இந்த சட்ட சஞ்சிகையைப் படிக்கும் நமது நண்பர்களே தெரிந்துகொண்டு கிராமந்தர ஜனங்களுக்கும் அறிவிப்பார்கள் என்பது திண்ணம். இது சங்கதிகளை மனதில் வைத்துக்கொண்டு கிராமாந்தரங்களில் உள்ள ஜனஸமூகத்தவர்கள் இந்த சட்ட ஸஞ்சிகையை ஒவ்வொரு கிராமத்திலும், தருவித்துக்கொள்ளும் ஏற்பாட்டைச் செய்து ஸஞ்சிகையை நன்றாகப்படித்து விஷயங்களைத் தெரிந்துகொள்ளும்படி எதிர் பார்க்கிறோம். அப்படிப் படித்து விஷயங்களை அறிந்துகொண்டவர்கள் கிராமப் பஞ்சாயத்தில் மெம்பர்களாக ஏற்படுத்தப்படும்பொழுது அவர்களுடைய சட்ட அறிவையும் நியாயமான பைசல்களையும் கவர்ன்மெண்டார் அவர்களே நன்குமதித்து ஆமோதிப்பார்கள்.

REVIEW OF BOOKS.

புஸ்தக ஆராய்ச்சி.

தேவாரம் வேதசாரம்:—இப்பெயர்வாய்ந்த புத்தகம் ஒன்றை சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் வனிதை வகுப்புக் காரியதரிசியாகிய ஸ்ரீமதி ஏ. ஆண்டாளம்மாளெனப் பெயரிய மங்கையர்க்கரசியார் அவர்களால் நம் பார்வைக்கு அனுப்பியதற்கு மிகவும் சந்தோஷமுறுகிறோம்.

இது தமிழ் வேதமாகிய தேவாரமுதற் பெரிய புராணம் இறுதியாகப் பன்னிரு திருமுறைகளும் அருட்பா எனப் பெயர் பெற்றுச் சைவத்திற்கும், சிவபூசைக்கும், சிவாலய நித்திய நைமித்தியங்களுக்கும், சிவதரிசனத்திற்கும், அடியார் பூசைக்கும், நியம மந்திரங்களாயுள்ளன. வடமொழியிலும், தென்மொழியிலும் வல்லுநராகிய சாம்பவ ஸ்ரீ காசிவாசி - செந்திநாதையரவர்கள் உபய வேதங்களிலும் ஆங்காங்குக் காணப்படும் பிரணவம், விபூதி, உருத்திராக்ஷம், பஞ்சாக்ஷரம், அன்புநெறி, சரியா, கிரியா, யோகஞான பாதங்களிவற்றின் உண்மைகளையும் இன்னோரன்ன பிறவற்றையும் பொருளொற்றுமை கண்டுதோன்ற எடுத்துத் தொகுத்து 112-விஷயங்களாகத் "தேவாரம் வேதசாரம்" என்னும் மகுடத்தோடு இந்நூலை இயற்றினர். இதில் இரண்டு திருவுருவப் படங்களு மிருக்கின்றன. இப்புத்தகம் சிவநேசச் செல்வர்களுக்கும், சைவ பிரசங்கம் செய்வோர்களுக்கும், புதிதாக நூல்கள் எழுதுவோர்க்கும் மிக பிரயோஜனகரமாக யிருக்கக் கூடும். சூரியனார்கோயில் மகா சந்நிதானம் கொடுத்த முகவுரையானே இந்நூலுக்குப் பெருமையேயாகும் இதன் விலை (தபாற் சார்ஜ் நீங்கலாக) ரூபாய் 3.

DIALOGUE.

சம்பாஷணை.

இடம்:—சதுரங்கப்பட்டணம் ஜமீன்தார் பங்களா.

சது.-ஜமீன்தார்:—நமஸ்காரம் க்ஷேமமா?

வக்கீல்:— ஆசீர்வாதம் எல்லோரும் சவுக்கியந்தானே?

ஜ:—இப்போது நமது நாட்டில் எல்லாம் மேல் கீழாகப் புறண்டு கொண்டிருக்கிறது. எதுபேசினாலும் குற்றமாக வந்து சேருகிறது. பிழைக்க வழியில்லை.

வ:—என்ன ஸங்கதி?

ஜ:—நமது ஏஜெண்டை சில மாதங்களுக்குமுன் விஜாகப் பட்டணத்துக்கு சில விஷயங்களுக்காக அனுப்பியிருந்தோம். அங்கே அவர் போனஇடத்தில் ஏதோ ராஜாங்கத்துக்கு விரோதமாக பிரசங்கம் செய்ததாகச் சார்ஜ் செய்யப்பட்டு அவ்விடம் ஸெஷன் கோர்ட்டாரால் ஆயுசுபரியந்தம் தீவாந்தர தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார். ஆகையால் தீவாந்தர தண்டனை சம்பந்தமான விஷயங்களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

வ:—வேண்டிய சங்கதிகளைக் கேட்டால் தெரியும்படி சொல்லத் தயாராக விருக்கிறேன்.

ஜ:—தீவாந்தர தண்டனை யேர்ப்படுத்தி யிருப்பதின் நோக்கமென்ன? தீவாந்தர தண்டனை விதித்திருப்பதாக கோர்ட்டில் தீர்ப்புச்செய்த உடன் ஜனங்கள் மிகவும் பயப்படுவதின் காரணமென்ன?

வ:—தீவாந்தர தண்டனை யேர்ப்படுத்தியதின் காரணத்தை பொதுப்படையாகத் தெரிவித்தால் போதுமா? அல்லது பினல் கோடு எழுதியவர்கள் சொல்லியபூரா விஷயத்தையும் தெரிவிக்க வேண்டுமா?

ஜ:—தீவாந்தர தண்டனை விதிப்பது விஷயமாக பினல் கோடு எழுதியவர்கள் (கிரந்த கர்த்தாக்கள்) எழுதியிருப்பதையே தெரிவிக்க விரும்புகிறேன்.

வ:—பினல்கோடு எழுதியவர்கள் தீவாந்தர தண்டனையை யேற்படுத்தியதற்குக் காரணம் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்கள்.

"இப்பேர்ப்பட்ட தண்டனையை வைத்துக் கொண்டிருப்பதின் காரணம், இந்தத் தண்டனையைப்பற்றி இந்து தேசத்து சுதேசிகள், அதிலும் சமுத்திரத்திலிருந்து கொஞ்ச தூரமுள்ள இடங்களில் வாசஞ் செய்கிறவர்கள், விசேஷமாய்ப் பயப்படுவதுதான். இந்தத் தண்டனையானது அவர்களுக்குப் பூராவும் துக்கத்தையே விளைவிக்கிறது. இந்த பயத்தினால் தான் நன்மை சம்பவிக்கிறது; அதாவது தண்ணீர் மேலேற்றும் தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களைச் செய்யபயப்படுகிறார்கள் என்றகருத்து. தண்ணீர்மேலேற்றப்படுகிறவனுக்கு யேர்ப்படும் கஷ்டத்துக்கு மேற்பட்டு, அந்தத்தண்டனை விஷயமாக ஜனங்கள் பயப்படுகிறார்கள். நீடித்தநாள் ஒருவனை காவலில் வைப்பது, இன்னும் அதிகக் கஷ்டமாயுள்ளது. ஆனால் அப்படி காவல் தண்டனை விதிக்கப்படக்கூடிய கேசுகளில் தீர்ப்புச் சொல்லுவதற்கு முன் கூடியே ஜனங்கள் பயப்படுகிறதில்லை. காவல் தண்டனை விதித்த உடன் தண்டனை விதிக்கப்பட்டவனுக்கும் தண்டனை விதிக்குங் காலத்தில் அங்கே யிருக்கிறவர்களுக்கும் அவ்வளவு பயம் உண்டாகிறதில்லை. ஆனால் கருங்கடலென்று சொல்லப்படுகிறதற் கப்பாலுள்ள தீவாந்தரத்துக்கு அனுப்புவதற்காகச் சொல்லப்பட்ட தண்ணீர் மேலேற்றும் தண்டனை விதக்கப்பட்டவுடன் தண்டனை விதிக்கப்பெற்றவனும் அப்போது அங்கேஉள்ளவர்களும், நடுக்கமடைந்து விடுகிறார்கள். இப்படிப் பயப்படுவதற்குக் காரண மெல்லாங்கூடி, தண்டனையடைந்தவன், தண்டனையை அனுபவித்து விட்டு திரும்ப வருவதும், தீவாந்தரத்திலேயே யிறந்து போவதும் நிச்சயமில்லாமலிருப்பதை யிட்டுத்தான். ஒருவன் இறந்து போகிறகாலத்தில் எவ்வளவு துக்கம் உண்டாகுமோ அவ்வளவு துக்கம் ஒருவனை தீவாந்தரத்துக்கு அனுப்புங்காலத்தில் உண்டாகிறது. தண்டனை யடைகிறவனை பந்துக்களுடையவும் சினேகிதர்களுடையவும் மத்தியிலிருந்து அவனை ஒருபோதும் திரும்பப் பார்க்கக்கூடாத விதமாக முகமறியாதவும், அந்த இடத்தின் தன்மை இன்னதென்று தெரியாதவுமான தூரதேசத்திற்குக் கொண்டுபோவதனாலும், அவன் திரும்பவரப்போகிறதில்லை என்ற பயத்தினாலும் இவ்வளவு பயமும் உண்டாகிறது. அவனுக்கு நேர்ந்த விபத்தினால் ஜனங்களுக்கெல்லாம் நடுக்கமுண்டாவது மனிதரின் இயற்கையான குணந்தான். இந்தப் பயத்தினால்தான் அவ்விதத் தண்டனை யேற்படுத்தியிருப்பதில் பிரயோசனம் இருக்கிறது. தீவாந்தரத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் 7-அல்லது 14-வருஷகாலம் தீவாந்தரத் தண்டனையை அனுப

வித்துவிட்டு அவர்கள் குற்றஞ் செய்த இடத்திற்கே அவர்களுடைய சிநேகிதர்களுடையவும் பந்துக்களுடையவும் மத்தியிலிருக்கும்படி அடிக்கடி திரும்பிவிடுகிறதாயிருந்தால் இந்தத் தண்டனையில்ஜனங்களுக்குள்ள பயம் போய்விடும்."

ஜ:—ஆண்டமன் தீவு என்னும் தண்டனைக்குடியேற்ற நாட்டின் வரலாற்றை அறிய விரும்புகிறேன்.

வ:—இந்தியா கவர்ன்மெண்டாருக்குள்ளிருந்த, சுமத்ராத் தீவிலுள்ள பெங்கூலன் என்னுமிடத்தை அபிவிருத்தி செய்யும்பொருட்டு, 1787-ம் ஹுத்தில் இந்து தேசத்துக் கைதிகளை முதல் முதல் கப்பலேற்றி அனுப்பப்பட்டது. பெங்கூலன் என்னுமிடத்தில் லெப்டி னெண்டு கவர்னராகயிருந்த ஸர். ஸ்டாம்போர்ட் ராபிள்ஸ் (Sir Stamford Raffles) என்பவர் கைதிகளை ஸரியானபடி நடத்தி மேல்பார்த்து வரும் விஷயமாகத்தான் செய்திருக்கும் ஏற்பாடுகளைப்பற்றி 1818-ம் ஹுத்தில் கவர்ன் மெண்டார் அவர்களுக்கு எழுதினர். 1823-ம் ஹுத்தில் அது விஷயமாய் தான் உண்டாக்கியிருக்கும் சட்ட திட்டங்களுக்கு கவர்ன்மெண்டார் அவர்களுக்கு ஒரு நகல் அனுப்பினர். 1825-ம் ஹுத்தில் பெங்கூலன் என்னுமிடத்தை டச்சுக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. ஆகையால் அங்கேயிருந்த கைதிகளை பினங்கு, சிங்கப்பூர், இவைகளுக்கு, அனுப்பப்பட்டது. பினங்கில் இங்கிலீஷ்காரர் போனது 1785-ம் ஹுத்தில். கைதிகளை அவ்விடத்துக்கு அனுப்பியது 1796-ம் ஹுத்தில். பெங்கூலனிலிருந்த கைதிகளை அங்கே அனுப்பும்பொழுது அவர்கள் கூடவேயே ஸர். ஸ்டாம்போர்டு ராபிள்ஸினுடைய சட்ட திட்டங்களையும் அனுப்பப்பட்டது. அதை வைத்துக்கொண்டே 1827-ம் ஹுத்தில் பினங்கு ரூல்கள் ஏற்படுத்தப்பட்டது. மலாகாத்தீவில் 1824-ம் ஹு குடியேறின உடனே, பினங்கிலிருந்து கைதிகள் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் ஷை விஷயமாகவும் பினங்கு விதியையே தான் ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரப்பட்டது. 1819-ம் ஹுத்தில் சிங்கப்பூர் என்னுமிடத்தை ஸர். ஸ்டாம்போர்ட் ராபிள்ஸ் என்பவர் தானே நேரில் கண்டுபிடித்தார். 1825-ம் ஹுத்தில் அந்த இடத்துக்கு பெங்கூலன் என்னும் இடத்திலிருந்தும் இந்தியாவிலிருந்தும் கைதிகள் அனுப்பப் பட்டார்கள். 1826-ம் ஹுத்தில் பினங்கிலிருந்து கைதிகள் அனுப்பப்பட்டார். சிங்கப்பூரில், முதலாவது பெங்கூலன் ரூல்களும் ஊர்ஜிதத்திற்கு கொண்டுவரப்பட்டது. 1845-ம் ஹுத்தில் சிங்கப்பூர் கவர்னர், கர்னல் பட்டர்வர்த் (Colonel Butterworth) என்பவரால், இந்துதேசத்துக் கைதிகளுக்காகச் செய்யப்பட்ட விதிகள் ஊர்ஜிதத்துக்கு வரும்வரை மேற்கண்ட விதிகளே ஊர்ஜிதத்திலிருந்து வந்தன. இந்தவிதிகள் 1858-ம் ஹுத்தில் சூப்ரிண்டெண்டாகயிருந்த மேஜர்மக்னீர் துரையால் சீர்திருத்தப்பட்டன. 1858-ம் ஹுத்தில் ஆண்டமன் தீவில் இந்த தண்டனைக் குடியேற்றஇடத்திற்கு கைதிகளை அனுப்ப ஆரம்பிக்கப்பட்டது. 1890-ம் ஹுத்தில் ப்ளேர் (Blair) என்னும் துரை போயிருந்து ஒரு துறைமுகத்தைக் கட்டினர். அதை அவர் பெயரால் ப்ளேர் துறைமுகம் (Port Blair) என்று அழைக்கப்படுகிறது.

ஜ:—ஸெஷன் கோர்ட்டில் கைதிகளைத் தண்டித்த உடனும், தீவாந்தரத்துக்கு அனுப்பு முன்னும் நடத்தப்படும் நடபடிக்கைகளை அறிய விரும்புகிறேன்.

வ:—கி. பு. கோடு 383-வது பிரிவின்படி தண்ணீர் மேலேற்றும் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதியை அவனிருக்கிற அல்லது அவன் வைக்கப்பட வேண்டிய ஜெயிலுக்கு ஒரு வாறண்டுடன் அனுப்பப்படும். இ. பி. கோடு. 58-வது பிரிவின்படி கைதியை தீவாந்தரத்துக்கு அனுப்பும்வரை கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டவனை நடத்துவது போல நடத்தவேண்டியது. அப்படி நடத்தப்படும் காலத்தை தண்ணீர் மேலேற்றிய தீர்ப்பை அவன் அனுபவிப்பதாகவேயே எண்ணப்படும் (ஜெயில் ரூல், 995.)

ஜ:—ஷை கைதியை தீவாந்தரம் அனுப்பும்வரை எந்த ஜெயிலில் வைத்திருப்பார்கள்.

வ:—23-12-99. போட்ட, 2102-ம் நெ. ஜுடிஷியல், கவர்ன்மெண்டு உத்தரவில் ரிக்கார்டு செய்யப்பட்ட 1899-ம் ஹு டிசம்பர் மீ 1உ போட்ட 537-ம் நெ. (ஹோம் டிபார்டுமெண்டு) நோட்டீசினுல் எல்லா ஸெண்ட்ரல் ஜெயில்களும், தண்ணீர் மேலேற்றுகிற தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை அனுப்பக்கூடிய இடங்களாக இந்தியா கவர்ன்மெண்டார் அவர்கள் நியமித்திருக்கிறார்கள். தண்ணீர் மேலேற்றுகிற தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தண்டனை விதிக்கப்பட்ட உடன் கூடிய சீக்கிரத்தில் இந்த ஜெயில்களில் எதுவாவது ஒன்றுக்கு அனுப்பப்பட்டு, அவ்விடத்தில் வைக்கப்படுவார்கள். (ஜெயில் ரூல், 996.)

ஜ:—ஆண்டமன் தீவுக்கு எத்தனை வருஷம் தீர்ப்புக் குறையாதவர்களை அனுப்பப்படும்?

வ:—ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது அல்லது ஆயுசுபரியந்தமாவது தண்ணீர்மேலேற்றும் தண்டனை விதிக்கப்பட்டு அனுபவிக்க வேண்டிய மீத தண்டனையானது 6-வருஷங்களுக்குக் குறையாமலிருக்கிற ஆண் பிள்ளைக் கைதிகளையும் ஆயுசுபரியந்தம் தண்ணீர்மேலேற்றுந் தண்டனை விதிக்கப்பட்ட பெண்பிள்ளைகளையும் அடியில்கண்ட நிபந்தனைகளின்படிக் குள்ளவர்களைத் தண்ணீர் மேலேற்றி அனுப்பப்படும். 18-வயதுக்குக் குறையாதவும் அல்லது 40-வயதுக்குமேல் போகாதவும், அல்லது சரியான தேகசுகத்துடனிருப்பவர்கள் ஜெயிலில் சாதாரணமாகச் செய்து வருகிறவேலைகளைச் செய்யும்படியான பல முடையவர்களாகயிருந்துத் தீபாந்தர தண்டனை விதிக்கப்படுகிற எல்லாசுதேச ஆண் பெண்பிள்ளைக் கைதிகளையும் ஆண்டமான் தீவுக்கு தண்ணீர்மேலேற்றி அனுப்பப்படும். அடியிற்கண்ட வியாதிகளில் எதுவாவதுள்ளவர்களை எந்தக் காரணத்தினுலும் அங்கே அனுப்பப்பட மாட்டாது.

1. சாதாரணமாக ஏற்பட்ட வேலையைச் செய்யக்கூடாத விதமாக இரண்டு கண்ணும் குருடாயிருக்கிறவர்கள் (2) பயித்தியம் பிடித்தவர்கள் அல்லது பயித்தியம் பிடிக்குமென்று நினைக்கக்கூடிய விதமாக புத்தி சுவாதீனமில்லாதிருப்பவர்கள்; (3) சித்தப் பிரமை பிடித்தவர்கள் (4) குஷ்டரோகிகள் (5) க்ஷயரோகிகள் (6) காக்காவலிப்புடையவர்கள் (7) ஒருகாலிலாவது அல்லது இரண்டு காலிலுமாவது பார்சவாயுவு உபத்திரமுள்ளவர்கள் (8) இரண்டுகால்களும் யானைக்காலாயிருப்பவர்கள், (9) இருதய வியாதியுள்ளவர்கள் இவர்களைத் தண்ணீர்மேலேற்றிவிடக்கூடாது. ஒரு கைதிக்குக் சித்தப் பிரமை வருமென்ற ஸந்தேகம்ஏற்பட்டாலுமே அப்பேர்ப்பட்ட கைதியைத் தண்ணீர் மேலேற்றி விடக்கூடாது. சுரம் வயிற்றளைச்சல் அல்லது நீடித்த வியாதி இவைகளால் மெலிந்து அசக்தியாய்ப் போயிருக்கிற கைதிகளை அவர்களுடைய வியாதிகளுக்குப் பிறகு அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட வேலைகளைச் சரியானபடி 3-மாதகாலமாவது செய்து கொண்டு நல்ல தேக சுகத்துடனிருக்கும் வரை ப்ளேர் துறைமுகத்துக்கு தண்ணீர் மேலேற்றி அனுப்பக்கூடாது.

OUR LAW COLLEGE.

எங்களுடைய சட்ட கலாசாலை.

எங்களுடைய சட்ட கலாசாலையின் புரொபஸர் உலகறிந்த திருநெல்வேலி வக்கீல் K. R. கிருஷ்ணமாச்சாரியார் அவருடைய மாணுக்கர்களுடைய பெயர்கள்:—

1 அனந்தாச்சாரி, 2 சக்ரவர்த்தி ஐயங்கார், 3 துரைசாமி முதலியார், 4 சட்டாசாரியார், 5 தணிகாசல முதலியார் வகையராக்கள்.

HINDU LAW—ஹிந்து லா.

(MINORITY—மைனரிட்டி.)

(முன்மாதத் தொடர்ச்சி)

மாணு:—மைனரிட்டி எத்தனை வருஷம் வரை உண்டு, அது எப்போது நீங்குகிறது?

பு:—நமது தர்ம சாஸ்திரங்களின்படி ஸ்திரீ புருஷர்களுக்கு 16 வயது முடிந்துவிட்டால் மைனரிட்டி நீங்கி தக்க வயது வந்து விட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனுல், தற்காலசட்டமாகிய (Indian Majority Act.) இந்தியன் மெஜாரிட்டி ஆக்ட்டுப்படி 18வயது முடிந்த பிறகு தான் தக்க வயது வந்தவர்களாக எண்ணப்படுகிறார்கள். கவர்ன்மெண்டார் மேல் பார்வையிலிருந்து வருகிற அதாவது (கோர்ட் ஆப்வார்டஸ்) மேல் பார்வையிலிருந்து வருகிறவர்களுக்குமட்டும், 21 வயது கழிந்த பிறகுதான் தக்க வயது வந்ததாக எண்ணப்படுகிறது.

மாணு:—குழந்தைகளை ஸம்ரக்ஷணை செய்யும்கடமை யாரைப் பொறுத்ததாகயிருக்கிறது?

பு:—இந்து தர்மசாஸ்திரங்களின் பிரகாரம் குழந்தைகளை இரக்ஷிப்பது-முதலில் தகப்பனையும், பிறகு தாயையும், தாயுமில்லாவிட்டாலும், அல்லது தாய்குழந்தையை இரக்ஷிப்பதற்கு அசக்தையாகயிருந்தாலும் (அதாவது ஐவேசு இல்லாதவளாகயிருந்தாலும்) தமையன், பெரிய தகப்பன், சிறிய தகப்பன் முதலிய பிதா வம்சஸ்தர்களையும், அவர்களில்லாவிட்டால் தாய் வம்சஸ்தர்களையும் சேர்ந்த கடமையாகயிருக்கிறது.

மாணு:—ஒரு அவிபக்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் சில குழந்தைகளை விட்டுவிட்டு இறந்துபோய் விடுகிறார், அப்பொழுது அவர் இறந்து போன காலமுதலே, ஷை மைனர் குழந்தைகளின் ஸம்ரக்ஷணம் தாயாரைச் சேர்ந்து விடுமா?

பு:—குழந்தைகளை (தகப்பனுக்குப் பிறகு) வைத்து ஸம்ரக்ஷணை செய்யும் பாத்தியதை தாயாருக்கு இருந்தாலுமே குடும்பமானது அவிபக்தமாக

யிருக்கும் பொழுது மைனர்களுடைய பாகங்கள் உள்பட பூராக் குடும்ப சொத்தின் விசாரணை யானது குடும்பத்தை மேல்பார்த்து வரும் குடும்பத் தலைவனையே பொறுத்ததாக யேர்ப்படுமே யல்லது தாயாரைச் சேரமாட்டாது. ஆனால் குடும்பத்தில் பிரிவினையாகி மைனர்களுடைய பங்குகளும் பிரிவினை செய்யப்பட்டுப் போய்விட்டால், அப்போது மைனர்களுடைய பாகத்துக்கு வந்த சொத்தை தன்வசத்தில் வைத்துப் பரிபாலனம் செய்யும் சுதந்தரமும் தாயாரைச் சேர்ந்ததாய் விடும்.

மாணு:—ஒருவன் வைப்பாக ஒரு பெண்பிள்ளையை வைத்துக்கொண்டு அவளுக்குக் குழந்தைகள் பிறந்து விடுகிறது. அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றும் கடமை யாரைச்சேர்ந்தது ஆகும்? அந்தக் குழந்தைகளுக்கு கார்டியன் யார்?

பு:—அந்த குழந்தைகளுக்கு தாயாரே கார்டியனாக யிருக்கிறாள். அந்தக் குழந்தைகளை தக்க வயது வரும் வரை காப்பாற்றும் கடமை அவளைச் சேர்ந்ததாகவேயே ஏற்படும்.

மாணு:—ஒருவனுக்கு மைனரான குழந்தைகளிருக்கிறார்கள். அவன் அன்னியமதத்தில் சேர்ந்து விடுகிறான் (கிரிஸ்தவ அல்லது மகம்மதிய மதத்தில் என்று வைத்துக் கொள்வோம்) அந்தக் குழந்தைகள் அனுசரிக்க வேண்டிய மதம் எது?

பு:—தகப்பன் எந்தமதத்தை அனுசரிக்கிறானோ அந்த மதத்தைத்தான் குழந்தைகளும் அனுசரிக்க வேண்டியது. ஆனால் அப்படி விரும்பாமல் அந்தக் குழந்தைகளை வேறுமதத்தை அனுசரிக்கும்படி சகித்து விட்டுவிட்டாலும் விடலாம். அவன் தன்னுடைய மைனர் மக்களும் தான் பின்பற்றி யிருக்கிற மதத்தையே அனுசரிக்க வேண்டுமென்று விரும்புவானேயாகில் அவர்கள் தகப்பனுடைய இஷ்டப்படியே நடக்க வேண்டியர்களாக யிருக்கிறார்கள். அவன் அன்னிய மதத்தில் சேர்ந்து விட்டானென்பதினால் அவனுடைய மைனர் மக்கள் பேரில் அவனுக்குள்ள கார்டியன் பாத்தியதை போய் விட மாட்டாது. தான் நூதனமாய்ச் சேர்ந்துகொண்ட அன்னிய மதத்தில் தன்னுடைய மைனர் மக்களையும் சேர்த்துக்கொள்ளும் பாத்தியதை அவனுக்குண்டு. (14. மூ. இ. அ. 309.)

மாணு:—தகப்பனைத்தவிர மற்றும் கார்டியன்கள் பலர், இருப்பதாக மேலே சொல்லப்பட்டதே. அவர்களுக்கும் இவ்வித சுதந்தரம் உண்டல்லவா?

பு:—மேற் கூறிய சுதந்தரங்கள் தகப்பனைத் தவிர தாய் முதலான வேறு எந்தக் கார்டியன்களுக்கும் கிடைக்க மாட்டாது. (14. மூ. இ. அ. 309;

மாணு:—ஒருவன் தான் அன்னிய மதத்தில் சேரும் போது தன் மக்களை பழய மதத்திலே யிருந்து வளர்ந்து வரும்படி யேர்ப்பாடு செய்து விட்டுவிட்டு கொஞ்ச காலத்துக்குப் பிறகு அவர்களை தன்வசம் விடும்படி கேழ்க்க அவனுக்கு பாத்தியதை உண்டா?

பு:—அப்படிக் கேழ்க்கும் பாத்தியதை அவனுக்குக் கிடையாது. (இ. லா. ரி. 25. கல். 881.)

மாணு:—ஒரு மைனர் குழந்தையை அன்னிய மதஸ்தன் கொண்டுபோய் வளர்த்து வருகிறான். இது சங்கதி ஷை குழந்தையின் தாய் தகப்பனுக்கு தெரிந்திருந்தும் அந்த மைனரை மீட்டுக்கொள்ளும் விஷயமாய் யாதொரு முயற்சியும் செய்யாமல் இருந்து விடுகிறார்கள். பின்னிட்டு அந்தக் குழந்தையை அந்த அன்னிய மதஸ்தனிடத்திலிருந்து தாய் தகப்பன் முதலானோர் மீட்டுக்கொள்ள முடியுமா?

பு:—மீட்டுக்கொள்ள முடிய மாட்டாது. (இ. லா. ரி. 16. பம். 307; இ. லா. ரி. 23. கல். 290.)

மாணு:—தகப்பன் தாய் இல்லாத குழந்தைகளுக்கு கார்டியன்களை நியமிக்கும் அதிகாரம் யாரைப் பொறுத்தது.

பு:—சகல ஜனங்களையும் அவர்களுடைய சொத்து முதலியதுகளையும் பாதுகாத்து தேசபரிபாலனம் செய்து வருவது ராஜாங்கத்தாரையே பொறுத்ததாக யிருக்கிறபடியால், தாய் தகப்பன் அற்ற மைனர்களுக்கும் கவர்ன்மெண்டாரே கார்டியனாக யேர்ப்பட்டு விடுகிறார்கள். ஆகையால் கார்டியன் இல்லாத மைனர்களுக்கு சரியான கார்டியனை நியமிக்கும் அதிகாரம் கவர்ன் மெண்டாரைச் சேர்ந்ததாகவேயே யிருக்கிறது.

மாணு:—ஒரு குழந்தைக்கு சுபாவமாய் யேர்ப்பட்டிருக்கும் ஒரு கார்டியனானவன் மைனருடைய க்ஷேமலாபங்களுக்கு விரோதமாக நடந்து கொண்டால் அவனை கார்டியனாக யிருப்பதை எடுத்து விட கவர்ன்மெண்டாருக்கு அதிகார முண்டா?

பு:—அந்த கார்டியனை நீக்கிவிட்டு வேறு சரியான கார்டியனை நியமிக்கும் அதிகாரம் கவர்ன் மெண்டாருக்கு உண்டு

மாணு:—தக்க வயது வந்தவர்களுக்கு கார்டியன் நியமிக்கப்படும் கேசுகள் உண்டா?

பு:—தக்கவயது வந்தும் புத்தி ஸ்வாதீன மில்லாமலிருக்கிறவர்கள் முதலியவர்களுடைய தேகஸம்ரக்ஷணையின் பொருட்டும் சொத்துக்களைக் காப்பாற்றி அபிவிருத்தி செய்யும் பொருட்டும் அவர்களுக்கும் தக்க கார்டியனை நியமிக்கும் அதிகாரமும் கவர்ன்மெண்டாருக்கு உண்டு.

மாணு:—கவர்ன்மெண்டாருக்கு இந்த அதிகாரம் இருப்பது சரியே, அந்த அதிகாரத்தைச் செலுத்தும் அதிகாரி யார்?

பு:—இதைப்பற்றி 1890-ம் ளுத்திய 8–வது ஆக்டாகிய கார்டியன் அண்டு வார்ட்ஸ் ஆக்டு (Guardian & Wards Act) பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆக்டுப்படி ஒவ்வொரு ஜில்லாக் கோர்ட்டுக்கும், கார்டியன்கள் நியமிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாணு:—ஒரு மைனர் பிள்ளையினுடைய பெற்ற தாய் தகப்பன் இவர்களையே ஷை குழந்தைக்கு கார்டியனாக யிருக்க வொட்டாமல் நீக்கமுடியுமா?

பு:—நீக்க முடியும்.

மாணு:—என்ன காரணத்துக்காக நீக்க முடியும்?

பு:—தாய் தகப்பன் முதலியவர்களுடைய நடத்தையானது மைனருடைய க்ஷேமலாபங்களுக்கு கெடுதியை உண்டுபண்ணக் கூடியவிதமாக அவ்வளவு விபரீதமாயும் துர்மார்க்கமுள்ளதாயும் இருக்கும் பக்ஷத்தில் அவர்களை ஷை குழந்தைக்கு கார்டியனாக யிருக்க வொட்டாமல் நீக்கிவிடலாம்.

மாணு:—தகப்பனையும் கூட கார்டியன் ஸ்தானத்திலிருந்து நீக்கிவிடவேண்டுமானால் சாதாரணமாக அவன் கெட்ட நடவடிக்கையுள்ளவன் என்றிருந்தால் மட்டும் போதுமா?

பு:—தகப்பனை கார்டியன் ஸ்தானத்திலிருந்து நீக்குவதற்கு தக்க விசேஷமான காரணங்கள் இருக்க வேண்டும் (இ. லா. ரி. 25. கல். 885; இ. லா. ரி. 1. அல. 549)

மாணு:—மைனர்கள், கார்டியன்களுடைய ஸம்ரக்ஷணையிலிருப்பவர்களுக்கு ஸ்வாதந்திரியம் உண்டா?

பு:—அவர்களுக்கு ஸ்வதந்திரமே கிடையாது. அவர்கள் ஸம்ரக்ஷணகர்த்தர்கள் (கார்டியன்களுடைய) கட்டுக்கு அடங்கியே நடந்து தீரவேண்டும்.

மாணு:—மைனர் அன்னிய மதத்தில் சேருவதற்கு சம்மதித்துச் சேர்ந்துவிட்டான், அவனுடைய சம்மதம் பிரயோசனப்படுமா?

பு:—அவனுடைய சம்மதமானது பிரயோசனப்படமாட்டாது. (இ. லா. ரி. 9 ம. 391; 14. மூ. இ. அ. 309.)

மாணு:—ஒரு மைனருக்குத் தகப்பனே முதல் கார்டியனென்று சொல்லப்பட்டதே. அப்பேர்ப்பட்ட தகப்பனுடைய அனுமதியில்லாமலும், அவனுடைய மனதுக்கு விரோதமாகவும், அவனுடைய தாயே ஷை மைனரைத் தகப்பனுடைய வசத்திலிருந்து கூட்டிப் போய்விடுகிறாள், அப்படி கூட்டிப்போவது குற்றமா?

பு:—14-வயதுக்குட்பட்ட ஆண் மக்களையும் 16-வயதுக்குட்பட்ட பெண்மக்களையும், அவர்களுடைய கார்டியன்களுடைய வசத்திலிருந்து ஷையார் தகவலே யில்லாமலும் அவர்களுடைய மனசுக்கு விரோதமாகவும், யாராவது கூட்டிக்கொண்டு போனால், அது இ. பி. கோடு 363, 368-வது பிரிவுகளின்படி தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகிறது. அது போலவேயே தகப்பனுடைய சம்மதமின்றி, மைனரை, தாய்–தகப்பனுடைய வசத்திலிருந்து மோசடியாய் கொண்டுபோய் விடுவாளேயாகில் அவளும் இ. பி. கோடு. 363-வது பிரிவின்படிக்குள்ள குற்றத்தைச் செய்தவளாகவே ஆகிவிடுகிறாள். (இ. லா. ரி. 8. கல். 969)

மாணு:—மைனராக யிருப்பவன் மேஜராக யிருப்பவனுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளுகிறான் ஷை உடன் படிக்கை ஷை மைனரைக் கட்டுப் படுத்துமா?

பு:—அந்த உடன்படிக்கை மைனரைக் கட்டுப்படுத்த மாட்டாது.

மாணு:—ஷை மைனருடன் உடன்படிக்கை செய்த மேஜரை ஷை உடன்படிக்கை கட்டுப்படுத்துமா?

பு:—மேஜரை ஷை உடன் படிக்கை கட்டுப்படுத்தும். (இ. லா. ரி. 18. கல். 259; இ. லா. ரி. 18. ம. 415; இ. லா. ரி. 23. பம். 146.)

மாணு:—மைனர் செய்த உடன்படிக்கை அவனை எப்போதாவது கட்டுப்படுத்துமா?

பு:—சில சமயங்களில் கட்டுப்படுத்தும்.

மாணு:—எந்தெந்த சமயங்களில் கட்டுப்படுத்தும்?

பு:—மைனர் மேஜரானபிறகு ஷை உடன் படிக்கையைத்தான் மைனராக யிருந்தபோது செய்தது வாஸ்தவமென்று ஒப்புக்கொள்ளும்போதும் அல்லது ஷை ஒப்பந்தத்தின் மூலமாக லாபம் கிடைத்துவிட்டாலுமே அந்த உடன் படிக்கைக்கு ஊர்ஜிதம் யேர்ப்பட்டு அது மைனரைக் கட்டுப்படுத்தும் (8. மூ. இ. அ. 119)

மாணு:—இன்னும் வேறு எந்தக் கேசிலாவது மைனர் செய்த உடன்படிக்கை அவனைக்கட்டுப்படுத்துமா?

பு:—தன்னுடைய அவசியமான சிலவுகளின் பொருட்டு மைனர் ஒரு உடன்படிக்கையைச் செய்திருந்தால் ஷை உடன்படிக்கையானது மைனர் மேஜரான பிறகு அவனைக் கட்டுப்படுத்தும்.

மாணு:—மைனர் கார்டியனுடைய நடபடிக்கைகளெல்லாம் மைனரைக் கட்டுப்படுத்துமா?

பு:—மைனருடைய சொத்துக்களைப் பரிபாலனம் செய்கிற கார்டியனானவன் மைனருடைய க்ஷேமலாபங்களுக்கு விரோதமாக ஏற்படக்கூடிய செய்கைகள் எதையும் செய்யக்கூடாது. அவசியமான காரணமின்றி கார்டியனனவன் மைனருடைய சொத்துக்களை அக்கிரமமாகச் சிலவழித்தாலும் துர்வினியோகம் செய்தாலும் அவைகள் மைனரைக் கட்டுப்படுத்த மாட்டாது.

மாணு:—அப்படியானல் ஷை நஷ்டங்களுக்கு ஜவாப்தாரியாக யிருக்கவேண்டியது யார்?

பு:—தன்னுடைய செய்கைகளால் நேரிடும் நஷ்டங்களுக்கு கார்டியனே ஜவாப்தாரியாக யிருக்கவேண்டியது. (இ. லா. ரி, 29. பம். 4.)

மாணு:—விபசாரியாயிருக்கும் ஒரு ஸ்திரீ தன் குழந்தைகளை தன்னிடம் ஒப்புவித்து விட வேண்டுமென்று செய்கிற தாவாச் செல்லுமா?

பு:—செல்லமாட்டாது (இ. லா. ரி. 4. கல் 374; இ. லா. ரி. 12. ம. 67.)

மாணு:—ஒருவன் மைனராகயிருந்தபொழுது அவனுக்கு கடன் கொடுத்து அவன் மேஜரான பிறகு துகையை வசூல் செய்யும் பொருட்டு வியாச்சியம் செய்யப்படுகிறது. அந்த வியாச்சியம் செல்லுமா?

பு:—ஒருவன் மைனராக யிருக்கும் பொழுது, கொடுத்த கடனை அவன் மேஜரான பிறகு, வசூல் செய்வதின் பொருட்டு செய்யப்படும் வியாச்சியம் சாதாரணமாகச்செல்லமாட்டாது. (இ. லா. ரி. 12. பம். 55; இ, லா. ரி. 18. கல், 259)

மாணு:—ஒருவன் மைனராக யிருந்த பொழுது அவனுக்குக் கொடுத்த கடன், செல்லக்கூடிய கேசு ஏதும் இல்லையா?

பு:—மைனருடைய, அவசியமான ஆகாரம் வாங்க வேண்டியதற்காக துகை ஏதும் கடன் கொடுக்கப்பட்டிருந்தால், அந்தத் துகையை வசூல் செய்யும் பொருட்டு செய்யப்படும் வியாச்சியம் செல்லக்கூடியது தான் (இந்தியன் காண்டிராக்ட்டு ஆக்ட்டு 68-வது பிரிவைப் பார்க்க.)

மாணு:—மைனர்களாக யிருப்பவர்கள் மற்றவர்களுக்கு கடன் கொடுக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தக் கடன்கள் செல்லுமா?

பு:—அந்தக் கடன்கள் செல்லுபடியுள்ளதுதான்.

மாணு:—மைனராக யிருப்பவர்களின் கார்டியன்கள், மைனர்கள் சொத்துக்கள் விஷயமாய்ச் செய்யும் பராதீனங்கள் எப்பேர்ப்பட்ட கேசுகளில் செல்லும்?

பு:—ஒரு மைனருக்கு கார்டியனாகஏற்பட்டவன் மைனருடைய சொத்துக்கள் விஷயமாய் செய்யும் காரியாதிகள் மைனருக்குலாபத்தைக்கொடுக்கக்கூடியதாக யிருக்கவேண்டும். அல்லாமலும் ஷை காரியாதிகள், ஷை மைனருக்குத் தக்க வயதுவந்திருந்தால் அவ்னே செய்திருக்கக்கூடியதான காரியாதிகளாக யிருக்கவேண்டும், அப்படியானல்செல்லும்.

மாணு:—மைனர் வாதியாகயிருந்து ஏதும் வியாச்சியம் செய்யலாமா?

பு:—மைனரானவன் பகுத்தறிவை யடைந்த வயதுவராமலிருக்கும் காரணத்தால் வாதியாகயிருந்து வியாச்சியம் செய்யக்கூடாது.

மாணு:—மைனராக யிருப்பவன்பேரில் அவனையே நேரில் பிரதிவாதியாகவைத்து வியாச்சியம் துடரலாமா?

பு:—மேற்சொன்ன காரணத்தால் மைனர் பேரில் வியாச்சியம் துடரக் கூடாது.

மாணு:—சொத்து யாது மில்லாமலிருக்கும் ஒருமைனரின் காரியாதிகளின் பொருட்டு வியாச்சியம் செய்யவேண்டியதிருந்தால் அப்பொழுது எப்படி நடபடிக்கை நடத்துகிறது?

பு:—மைனரின் பொருட்டு அவசியமாக வியாச்சியம் தொடர வேண்டியதாக யிருந்து மைனரும் யாதும் சொத்தில்லாத பாபராகயிருக்கும் விஷயத்தில் அந்த மைனருக்கு அடுத்த சிநேகிதன் சிலவு செய்து மைனருக்காக பாபர் வியாச்சியம் செய்யலாம்.

மாணு:—மைனர் சொத்தைப் பிரித்து விடும்படி வியாச்சியம் துடரலாமா?

பு:—அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவனாக யிருக்கும் மைனருடைய பங்குக்குள்ள சொத்தைப் பிரித்து விடவேண்டுமென்று, சாதாரணமாக, வியாச்சியம் துடரக்கூடாது.

மாணு:—அப்படிப் பாகம் செய்துவிட வேண்டுமென்று வியாச்சியம் துடரக்கூடிய கேசுகள் எப்படியிருக்க வேண்டும்?

பு:—குடும்பத்துக்குத் தலைவனாக யிருப்பவனுடையவும் அந்தக் குடும்பத்திலுள்ள மற்றவர்களுடையவும் நடபடிக்கையானது, மைனருடைய பாகச் சொத்துக்களுக்கு கெடுதியை உண்டாக்கக் கூடியதாக யிருக்கும் விஷயத்திலும், மைனருடைய பாகபாத்தியதையை ஆக்ஷேபனை செய்யும் விஷயத்திலும் மைனருக்காக மைனருடைய அடுத்த சிநேகிதர் வாதியாகயிருந்து வியாச்சியம் செய்யலாம் (இ. லா ரி. 8. கல். 537.)

(இன்னும் வரும்.)

MISCELLANEOUS SUITS.

நானுவிதமான வியாஜ்ஜியங்கள்.

நெ. 24

Madras High Court.

மதராஸ் ஹைகோர்ட்டு.

INSOLVENCY LAW.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் / மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர் / மிஸ்டர் ஜஸ்டிஸ் பேச்வெல் }

கனம் ஜட்ஜிகள், கடனை இறுக்கச்சக்தியற்றவனாய் போனகாலம் முதல் கொண்டு, ப்ரொவின்ஷியல் இன்ஸால்வென்ஸி ஆக்டில் (Provincial Insolvency Act) இதுவிஷயமான மனுக்கள் தாக்கல் செய்வதிற்கு குறிப்பிடப்பட்டிருக்கும் காலத்திற்குப்பிறகு தாக்கல் செய்யப்பட்ட மனுவானது காலாவதி தோஷத்துக்கு உள்பட்டுப்போய்விட்டதா, அப்பேர்ப்பட்ட மனு விஷயமாக காலாவதிச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் காலவரை யறைக்குப்பிறகு தாக்கல் செய்யப்பட்ட அப்பீல் காலாவதிதோஷத்தினுல் பாதிக்கப்படமாட்டாதா, இந்தக்கேசில் தீர்ப்புநகல் வாங்குவதற்காக பிடிக்கும் காலத்தை காலாவதி நாளிலிருந்து கழித்துக் கொள்ளவேண்டுமா வென்ற விஷயங்களைப்பற்றி பைசல் செய்தார்கள்.

அப்பீலானது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாகவும், நகல் வாங்குவதற்காக பிடிக்கும் காலத்தை காலாவதிநாளிலிருந்து கழித்துக் கொள்ள அப்பீல் வாதிக்குப் பாத்தியதை கிடையாதென்றும் தீர்மானித்தார்கள். சென்னப்பட்டணம் காட்டிலாகா ஆக்ட்டு (Madras Forest Act)ப்படிக்குள்ள கேசின் விஷயமாய் இ. லா. ரி. 34. ம. 505-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிற புல் பெஞ்சு (Full Bench) தீர்ப்புப்படி நடக்கக் கடமைப்பட்டிருப்பதாக அபிப்பிராயங்கொண்டார்கள். ப்ரொவின்ஷியல் இன்ஸால்வென்ஸி ஆக்டிலேயே (Provincial Insolvency Act) வேண்டும் விஷயங்களெல்லாம் அடங்கி யிருப்பதாகவும் 1908-ம் ௵த்து இண்டியன் காலாவதி ஆக்ட் (Indian Limitation Act) 29-வது பிரிவில் உபயோகப்பட்டிருக்கும் 'பாதிப்பது' (affect) என்ற வார்த்தையின் விஷயமாக இ. லா. ரி. 34. ம-வில் கனம் ஜட்ஜிகள் சொல்லியிருக்கும் அர்த்தத்தையே அனுஸரிக்க வேண்டுமென்று ஜஸ்டிஸ் எய்லிங் அபிப்பிராயப்பட்டார். அப்பீல் செய்வதற்கு காலாவதி 30 நாள்களென்று குறிப்பிடப்பட்டிருக்கிற கேசுகளில் அப்பீல் செய்யும்பொருட்டு தீர்ப்புகளுக்கு நகல் வாங்குவதில் கக்ஷிக்காரர்களுக்கு ஏற்படக்கூடிய சிரமத்தைப்பற்றி யோசிக்கவேண்டியது அனுவசியமென்று அவர் அபிப்பிராயப்பட்டார். இப்படியிருக்க மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர், மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்குடைய தீர்மானத்தில் அநேக விஷயங்களில் இணங்கியிருந்தும் ப்ரொவின்ஷியல் இன்ஸால்வென்ஸி ஆக்டில் வேண்டும் விஷயங்களெல்லாம் பூர்ணமாக அடங்கியிருக்கவில்லை யென்றும், அப்பீல் வாதிபக்கம் வக்கீல், இ. லா. ரி. 34. ம-வில்கண்ட புல்பெஞ்சு தீர்மானத்தினுல் இந்த விஷயம் பூராவும் பைசலாகி விடவில்லை யென்பதாகப் பலமாக செய்த வாதத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார். ஏனென்றால் அந்த புல்பெஞ்சு தீர்மானத்தில் இந்த சங்கதி விஷயமாக அதற்குமுன் பெயர் போன ஜட்ஜி ஸர். டி. முத்துஸாமி அய்யரால் செய்யப்பட்ட தீர்மானத்தைப்பற்றிச் சொல்லப்படவேயில்லை. ஆனுல் இ. லா. ரி. 34. ம-வில் கண்ட தீர்ப்பை விட்டு விலகிப் போகவும் அவருக்கு இஷ்டமில்லை.

அப்பீல் வாதிபக்கம் மிஸ்டர். A. கிருஷ்ணசாமி அய்யரும், மிஸ்டர். சேஷகிரி சாஸ்திரியும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர். V. C. சேஷாச்சாரியாரும் ஆஜானார்கள்.

நெ. 25

Madras High Court.

மதராஸ் ஹைகோர்ட்டு.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீம் / மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியார் }

A GIFT DEED.

ஓர் நன்கொடை தஸ்தாவேஜு விஷயமாய்.

ஒருவன் தன் மகள் பேருக்கு எழுதிக்கொடுத்த நன்கொடை தஸ்தாவேஜில் "ஷை நன்கொடை சொத்துக்களை அவளும் அவளுடைய புத்திரர் பௌத்திரர் முதலியவர்களும் அனுபவித்துக் கொள்ளுகிறதென்ற விவரங்களாயும் ஆனுல் ஷை சொத்துக்களை அவள் பராதீனம் செய்யக்கூடாது" என்றும் கண்டிருந்தது. இந்தக்கேசில் அவள் இறந்துபோன பிறகு ஷை சொத்துக்கள் ஸ்திரீதனசொத்துக்களாக யிருக்கும் நிலைமையில் அவளுடையவார்ஸாக அவளுடைய மகளுக்கு கிடைக்குமா அல்லது அவள் ஜீவதசைமட்டும் ஷை சொத்துக்கள் அனுபவிக்கப்பட்டு அப்பால் நன்கொடை கொடுத்தவருடைய வார்சுதார்களுக்கே திரும்பப் போய்விடுமாவென்ற விஷயம் தீர்மானிக்கப்படவேண்டியதாக யிருந்தது.

அவளுடைய மகள் ஷை சொத்துக்களை அவளுடைய வார்சு ஸ்தானத்தில் ஸ்திரீதனமாக அடைவாளென்றும் அவளுடைய வார்சுகள் அற்றுப்போகிறபோது நன்கொடை விட்டவருடைய வார்சுகளுக்கு ஷை சொத்தைத் திரும்ப அடையும் பாத்தியதை மட்டும் உண்டென்றும் கனம் ஜட்ஜிகள் தீர்மானித்தார்கள்.

அப்பீல் வாதிகள் பக்கம் மிஸ்டர். C. V. அனந்த கிருஷ்ண அய்யரும், அப்பீல் பிரதிவாதிகள் பக்கம் மெஸ்ஸர்ஸ். T. R. வெங்கட்ராம சாஸ்திரியும், S. ராமஸ்வாமி சாஸ்திரியும், ஆஜரானார்கள்.

நெ. 26

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்

1914-ம் ளுத்து 248, 1915-ம் ளுத்து 115, 116-ம் நெ. அப்பீல் வியாச்சியங்கள்.

A. S. N. நைனுபிள்ளை மரைக்கயார் 1914-ம் ளுத்திய அப்பீல் வியாச்சிய நெ. 248-ல் அப்பீல்வாதி (1—வது பிரதிவாதி)

v.

T. A. R. A. R. M. ராமநாதம் செட்டியாரும் பின்னும் சிலரும் 1914-ம் ளுத்திய அப்பீல் வியாச்சிய நெ. 248-ல் அப்பீல் பிரதிவாதிகள் (1, 2, 4, 5.வது பிரதிவாதிகளும் 2-வது பிரதிவாதியும்.)

லாயூாயிண்ட் :—நிலஸ்வானும், குடியான்வனும், கோவிலுக்காக விடப்பட்ட இனும், பயிரிடுங் குடிகள், நிலத்தை அனுபவிக்கும் ஸ்வாதீனம், ருஜூப்படுத்துவதற்குப் போதுமான சாக்ஷியம், நிலஸ்வானுடைய நடபடிக்கைகளினுல் குடியானவனுக்கு சாசுவதமாக விடப்பட்டிருப்பதாக ஊஹிக்கக்கூடியது, முச்சலிக்காவில் குடியானவன் நிலத்தை அனுபவிக்கும் விஷயமான சங்கதிகளைப் பற்றி யெழுதியிருப்பதின் பிரயோசனம், "ரொக்கத்துகை," "தாம்பைசல்," "குடிவாரம்," "மிராசு," "குடிமிராசு," "உள்ளூர் புறக்குடிகள்," "பண்ணை," "ஒளவடை மிராசு," "ஒளவடைகுடிமிராசு," "கசவர்க்கம்," என்பவைகள் இன்னதென்பது—சாக்ஷியச்சட்டத்தின் 90,114-வது பிரிவுகள்—பூர்வீக தஸ்தாவேஜு—கையொப்பம் செய்யப்படாத ஓலைக் கணக்குகள்—அவைகள் சம்பந்தமான ஊகம்—ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட்டு 51-வது பிரிவு—குடியானவனிடமிருந்து பயிரிடும் பாத்தியதையை ஜாரிபெற்றவன் அனுபோக பாத்தியதை கொண்டாடுதல்—நிலத்தில் செய்த அபிவிருத்திகளுக்காக துகைபெற்றுக் கொள்ள பாத்தியதை இல்லை.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள M. என்னும் கிராமமானது, தஞ்சாவூர் ராஜாவினுல் வாதிகள் தர்மகர்த்தர்களாக யிருந்த ஒரு கோயிலுக்கு இனுமாக விடப்பட்டது. 200 வருஷக்காலத்துக்குமுன், ஷை கிராமத்திலுள்ள நிலங்களில், சாகுபடி செய்யப்படாதவைகள் அநேகத்தை ரொக்கக்குத்தகைபாத்தியதையின்பேரில் கோவிலுக்காகவேயே வைத்துக்கொள்ளப்பட்டன. ஷை கோயிலுடையவும் அதைச் சேர்ந்த நிலங்களினுடையவும் மேல்விசாரணையானது 1806-ம்ளுத்தில் ஈஸ்டிண்டியா கம்பெனியாருடைய பிரதிநிதி ஸ்தானத்தில் ஷை ஜில்லா கலெக்டரிடம் ஒப்புவிக்கப்பட்டது. 1809-ம் ளுத்தில் கலெக்ட்டரால் தயாரிக்கப்பட்ட கணக்கில் அந்த கிராமத்திலிருக்கப்பட்ட சாகுபடிக்கு லாயக்காயுள்ள நஞ்சை புஞ்சை நிலங்களின் விஸ்தீரணத்தை சுமாராக 80½ வேலிகள் என்றும் இந்த நிலங்களுக்கும், தருசாகக்கிடக்கிற நிலங்களுக்கும், கோவிலே ஸ்வான்தாரென்றும் கண்டிருக்கிறது. பைமாஷ் கணக்குகளினுல் 1820-ம் வருஷ வாக்கில், அந்தக்கிராமத்தில், சாகுபடி செய்யப்பட்டுவருகிற நிலத்தின் விஸ்தீரணம் 93-வேலி யென்றும், அவைகளில் குறைந்த பக்ஷம் 21-வேலி நஞ்சைநிலமாவது குடிவாரம் மேல்வாரம் இந்த பாத்தியதைகளுடன் கோவிலால் அனுபவிக்கப்பட்டு, கோவிலைச்சேர்ந்த பண்ணைப் புறக்குடிகளாலேயே அனுபவிக்கப்பட்டுவந்ததாக துலங்கிற்று. கோயில் பண்ணை சாகுபடி யில்லாமல் மற்றவர்களால் அனுபவிக்கப்பட்ட நிலங்களுக்கு கோவிலுக்கு கிடைக்கவேண்டிய துகையை, விளைகிற மாசூலில் ஒரு பாகத்தை வாங்குவதின் மூலமாக வசூல்செய்யப்பட்டு வந்தது. 1820-ம் ளுமுதல் 1830-ம் ளுவரை கலெக்ட்டர் ஷை கோவிலின் மானேஜர் ஸ்தானத்தில், உயர்ந்த துகைக்குக் கேழ்ப்பவர்களுக்கு 3-வருஷமுதல் 5-வருஷவரையுள்ள சுருக்கமான காலத்துக்கு கோவில் நிலங்களை குத்தகைக்கு விட்டுவந்தார். 1831-ம் ளுத்தில் அப்போதிருந்த கலெக்ட்டர், "தாம் பைசல் முகச்சலிக்கா" யேர்ப்பாட்டை ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவந்தார். அந்த யேர்ப்பாட்டினுல், பிரதிவாதிகளுக்குமுன் ஷை நிலங்களை அனுபவித்து வந்தவர்களுக்கு, கோவில் நிலங்களை காலம் குறிப்பிடாமலேயே விட்டு, அப்போது சாகுபடிக்கு லாயக்காக யிருந்த நிலத்தின் விஸ்தீரணத்தின்பேரில் வருஷத்துக்கு இவ்வளவு நெல் கொடுத்துவிடவேண்டியதென்றும், அப்படிக்கில்லாவிட்டால் ஷை நெல்லின் கிரயத்தைச் செலுத்திவிடுகிறதென்றும் குறிப்பிட்டவிஸ்தீரணத்துக்கு மேல் சாகுபடிசெய்தாலுமே அல்லது தருசாக உள்ள நிலங்களை சாகுபடிசெய்தாலுமே அதற்குள்ள தீர்வையைச் செலுத்திவிட வேண்டுமென்றும் நிபந்தனைகள் ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரப்பட்டது. M. கிராமத்தைச் சேர்ந்த 9-முக்கியமான கரைக்காரக்குடியானவர்கள் உள்ளூர் கரையோடுகுடியானவர்களுக்குப் பிரதிநிதி ஸ்தானத்தில் கலெக்ட்டருக்கு முச்சலிக்கா எழுதிக் கொடுத்தார்கள். 1847-ம் ளுத்தில், வாதிகளுக்கு முன் தர்மகர்த்தாவாக யிருந்தவர்கள், கோவிலினுடையவும் அதைச் சேர்ந்த சொத்துக்களுடையவும் மேல்பார்வையை ஒப்புக்கொண்டு, அந்த ஸர்வமானியம் கிராமத்திலுள்ள குடிகள் வழக்கமாக அனுபவித்து வந்த பாத்தியதைகளுக்கு விரோதமாக யேதும் செய்கிறதில்லை யென்று ஒப்புக்கொண்டும், மற்ற நிபந்தனைகளும் அடங்கிய முச்சலிக்கா ஒன்றை கலெக்ட்டருக்கு எழுதிக் கொடுத்தார்கள்.

1867-ம் ளுமுதல் பிரதிவாதிகளாவது அல்லது அவர்களுக்கு முன் அனுபவதாரர்களாவது தங்களுடைய அனுபவத்திலுள்ள நிலங்களை கோவில் தர்மகர்த்தாக்கள் அறிய ஒத்தியும், கிரயமும், செய்திருக்கிறுர்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தீர்வை ரசீதுகளிலும், பின்னும் சில பைமாஷ் கணக்குகளிலும், பிரதிவாதிகளை குடிமிராசுதார்களென்று காணப்பட்டிருக்கிறது. 1913-ம் ளுத்தில், பிரதிவாதிகள், ஷை நிலத்தை விட்டுவிட்டுப் போகும்படியாக அவர்களுக்குச் சரியான நோட்டீசு கொடுத்து விட்டு அப்பால் பிரதிவாதிகளை அப்புறப்படுத்தும் படியாக தர்மகர்த்தர்கள் வியாச்சியம் செய்தார்கள்.

இந்தக் கேசின் சங்கதிகளையும் சந்தர்ப்பங்களையும் உத்தேசித்தும் 1831-ம் ளுத்தில் அவர்களுடைய முன் அனுபவதாரர்களால் எழுதிக் கொடுக்கப்பட்ட முச்சலிக்காவின் நிபந்தனைகளை உத்தேசித்தும், அவர்களுடைய வசத்திலிருந்த நிலங்களில் அவர்களுக்கு அனுபோக பாத்தியதை கிடையாதென்றும், அவர்கள் ஷை நிலங்களை வருஷாந்தரக் குத்தகைக்கு அனுபவித்து வந்ததாகவும, அவர்களை அப்புறப்படுத்திவிடக்கூடுமென்றும் தீர்ப்பு செய்யப்பட்டது.

சொக்கலிங்கம் பிள்ளைக்கும், வைத்தியலிங்கப் பண்டார ஸன்னிதிக்கும் நடந்து 1871-ம் ளுத்து 6. ம. ஹை. கோ. ரி. 164-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்

பட்டதும், தியாகராஜாவுக்கும், ஞானசம்பந்தப் பண்டார ஸன்னிதிக்கும் நடந்து 1887-ம்ளுத்து இ. லா. ரி. 11. ம. 77-ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதும், சிதம்பரபிள்ளைக்கும், திருவேங்கடத்தய்யங்காருக்கும் நடந்து 1887-ம் ளுத்து 7. ம. லா. ஜ. 1-ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதும், மாயாண்டி செட்டியாருக்கும் சொக்கலிங்கம் பிள்ளைக்கும் நடந்த 1904-ம் ளுத்து இ. லா. ரி. 27. ம. 291-ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதுமான கேசுகளின் தீர்ப்புகளின்படி செய்யப்பட்டது.

நிலஸ்வானுடைய ஸம்மதிப்பு, மற்றும் நடபடிக்கைகள் இவைகளினுல் இந்தக்கேசில் சாசுவத அனுபவ பாத்தியதை யேர்ப்பட்டுவிட்டதாக ஊஹிக்க முடியாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஏனென்றுல், முதலாவது, தாவா சொத்துக்கள் தர்மசொத்துக்களாகையால் கோவிலினுடைய அத்தியாவசியகமான காரியங்களுக்காகவாவது, அல்லது கோவிலினுடைய தெளிவான லாபத்தைக் கருதியாவது, இருந்தாலொழிய தர்மகர்த்தாக்களுக்கு ஷை நிலங்களை சாசுவதக் குத்தகைக்கு விட்டுவிடுவதற்கு சட்டப்படிக்கு அதிகாரம் கிடையாது. 2-வது, அந்தக் கக்ஷிக்காரர்களுக்குள்ளாகவேயே இன்னவிதம் நடந்துகொள்ளவேண்டு மென்பதைப் பற்றி முன்னமேயே ஒரு தஸ்தாவேஜு இருந்து வருகிறது.

ஸத்திய ஸ்ரீக்கும், கண்டிக்குக்கும் நடந்து 1912-ம் ளுத்து 15. கல். லா. ஜ. 227-ல், பிரசுரம் செய்யப்பட்டிருப்பதும், செவத்தமுத்து ஆசாரிக்கும், மெஸ்கியூடா சாமியாருக்கும் நடந்து 1913-ம்ளுத்து 24. ம. லா. ஜ. 642-ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதுமான கேசின் தீர்மானங்களைப் பார்வை யிடப்பட்டது.

"ரொக்கக் குத்தகை," "தாம்பைசல்," "குடிவாரம்," மிராசு," "குடிமிராசு," "உள்ளூர் புறகுடிகள்," பண்ணை," "ஒளவடை," "ஒளைவடகுடைமிராசு," "கசவர்க்கம்," இவைகளின் அர்த்தம் இன்னதென்பது.

சாக்ஷியச் சட்டத்தின் 90—வது பிரிவினுலாவது, அல்லது 114-வது பிரிவினுலாவது, யாதாமொரு ஒரு குறிப்பிட்ட மனுஷன் அல்லது மனுஷர்களால் எழுதப்பட்டதென்று துலங்காமலும் கையெழுத்துச் செய்யப்படாமலு மிருக்கப்பட்ட 100-வருஷங்களுக்கு மேற்பட்ட கணக்குகளை, அப்படிப்பட்ட கணக்குகளை எழுதுவதற்கு அதிகாரம் உள்ளவர்கள் தான் யெழுதியிருக்கவேண்டுமென்று ஊஹிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதாக யேர்ப்படவில்லை.

ஷியோநந்தன் அஹீருக்கும் ராம்லோகன் ஸிங்குக்கும் நடந்து 1915-ம்ளுத்து 13. அல. லா. ஜ. 921-ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதும், கிருஷ்ண பாலுக்கும் ஜோகட்கிஷோர் ஆச்சர்யச் சௌதாரிக்கும் நடந்து 1915-ம் ளுத்து 20 கல். வீ. நோ. 643—ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதும், உக்ரோகண்ட்ச் சௌட்ரிக்கும், ஹர்ரோச் சண்டர்ஷியோக்டாருக்கும் நடந்து 1880—ம் ளுத்து இ. லா. ரி. 6. கல். 209-ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதுமான கேசுகளின் தீர்மானங்களையும் யெடுத்துக்காட்டப்பட்டன.

ஒரு குடியானவனிடத்திலிருந்து நிலத்தின் அனுபவப் பாத்தியதையைப் பெற்றுக்கொண்ட ஒருவன், ஷை நிலத்தில் தனக்கு அனுபவப் பாத்தியதை ஏற்பட்டு விட்டதென்ற நம்பிக்கையுடன் ஷை நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காக செலவழித்த துகை நிலஸ்வான் ஷை நிலத்திலிருந்து அவனை அப்புறப்படுத்திவிட்ட காலத்தில் அவனுக்கு சட்டப்படி கிடைக்கமாட்டாது.

நரசய்யாவுக்கும் வெங்கடகிரி ராஜாவுக்கும் நடந்து 1910-ம் ளுத்து இ. லா. ரி. 87. ம. 1-ல் பிரசுரம்செய்யப்பட்டிருப்பதுமான கேசின் தீர்மானங்களையும் எடுத்துக் காட்டப்பட்டது.

கேசின் சுருக்கம் :—தஞ்சாவூர் டெம்பொரிஸப் கோர்ட்டு 1613-ம் ளுத்து 40, 42, 61—ம் நெ. அஸல் வியாச்சியங்களின் தீர்மானங்களின் பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்கள்.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள முத்துப்பேட்டைக்கு ஸமீபத்திலுள்ள மந்திரபுரீசுவரஸ்வாமி அல்லது புத்திபிரதேசுரஸ்வாமி கோயிலின் தர்மகர்த்தர்கள் 6-பேர்களில் 5—பேர்களால் குடியானவர்களை நிலத்தைவிட்டு அப்புறப்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட வியாச்சியங்களின் பேரில் இந்த அப்பீல் தாவாக்களைக்கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்தக் கேசுக்கு வேண்டிய முக்கியமான விஷயங்களை எல்லாம் ஜஸ்டிஸ் ஸதாசிவஐயருடைய தீர்ப்பில் அடியில் கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது:—

"வாதிகள் கொண்டாடும் பாத்தியதைக்கு அனுஸரணையாக கவர்ன்மெண்டு ரிக்கார்டுகளாகிய C. C 1. அடையாளமிட்ட தஸ்தாவேஜுகள் அல்லாமல் A. அடையாளமிட்ட தஸ்தாவேஜும் இருப்பதாகவும் வாதம்செய்தார்கள். உள்ளூர் கரையேடு குடியானவர்களுடைய பிரதிவாதிகளாக பிராதில்கண்ட மங்கால் கிராமத்திலுள்ள முக்கியமாயுள்ள 9 கரைக்கார குடித்தனக்காரர்களால் 1831—ம் ளு ஆகஸ்டுமாதத்தில் யெழுதிக் கொடுக்கப்பட்ட முச்சலிக்காதான் பின்சொன்ன தஸ்தாவேஜு. இந்தக்கேசின் 5-வது அம்சமானது (Issue) இதைப் பற்றித்தான் ஏற்படுத்தப்பட்டது. 1913-ம் ளுத்து அஸல் வியாச்சிய நெ. 40-ல் ஏற்படுத்தப்பட்ட அந்த அம்சமானது அடியில் குறிக்கப்பட்டிருக்கிறபடிதான்:—"1831-ம் ளுத்தில் பிறப்பிவிக்கப்பட்ட முச்சலிக்காவானது உண்மையானதுதானு? அது 1-வது பிரதிவாதியையும் அவருடைய முன் அனுபோகதார்களையும் கட்டுப் படுத்துமா? அப்படியானுல், அந்த முச்சலிக்காவின் நிபந்தனைகளின் பிரகாரம் வாதிகளுக்கு 1-வது பிரதிவாதியை ஷை சொத்துகளிலிருந்து அப்புறப்படுத்தும் பாத்தியதை உண்டா?" இந்த முச்சலிக்காவின் உண்மை சம்பந்தப்பட்ட மட்டில் ஷை கேசுகளின் விசாரணைக்காலத்தில் யாதொரு ஆக்ஷேபனையும் செய்யப்படவில்லை. (1-வது பிரதிவாதியின் எழுத்துமூலமான ஸ்டேட்டுமெண்டின் 6—வது பாராவை பார்வையிடுவதினுல் ஆதிமுதல் கொண்டே ஷை முச்சலிக்காவின் உண்மையைப்பற்றி ஆக்ஷேபிக்கப்போவதாக கருதப்படவில்லை என்பது வெளியாகும்) அந்த முச்சலிக்காவின் உண்மையைப்பற்றி நம்முடைய முன்புக்கும் ஆக்ஷேபனை செய்யப்படவில்லை. அது 30—வருஷங்களுக்கு மேல்பட்ட தஸ்தாவேஜு. அது அப்போது ஈஸ்டிண்டியாகம்பெனியார் அவர்களுடைய ஏஜண்டாகவும், 1806-1847-இந்த வருஷங்களுக்கு இடையில் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள பிராதில்கண்ட கோவிலுக்கும் மற்றக்கோவில்களுக்கும் மானேஜராகவுமிருந்த கலெக்ட்டார்பேருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1817-ம் ளுத்திய 7-வது ரெகுலேஷன் பிரகாரம், அவர் 1817-ம் ளுத்தில் ரிவினியூ போர்ட்டாரவர்களுடைய ஏஜெண்டாய் விட்டார். அந்த

ரெகுலேஷன்படி கோவில்களின் மேல்பார்வையானது போர்டாரைப்பொறுத்ததாகயிருந்தது. 1847-ம் ௵த்தில் கலெக்டரானவர் இந்தகோவிலுக்குறிய சகல காரியாதிகளையும் ஷை கோவிலின் இரண்டு தர்மகர்த்தாக்களிடமும் ஒப்புவித்து விட்டபடியால், ஷை தஸ்தாவேஜானது ஸரியான இடத்திலிருந்துதான் கொண்டுவந்து ஆஜர்செய்யப்பட்டிருப்பதாக ஏற்படுகிறது. (A2. அடையாள தஸ்தாவேஜைப் பார்க்க) இந்த A. அடையாளமிட்ட தஸ்தாவேஜானது அதை எழுதிக்கொடுத்த 9-பேர்களிடமிருந்தும் தாசில்தாரால் எழுதி வாங்கப்பட்டு P. அடையாளமிடப் பட்டிருக்கிற தாசில்தாருடைய அர்ஜியுடன் கலெக்டருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தாசில்தாருடைய அர்ஜியில் A. அடையாள தஸ்தாவேஜைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது.

1831-ம் ௵ ஆகஸ்டு௴த்தில் பிறப்பிவிக்கப்பட்டதும் A. அடையாள தஸ்தாவேஜுமாகிய இந்த முச்சலிக்காவுக்கு முந்தி 1831-ம்௵ ஜூலை௴ பிறப்பிவிக்கப்பட்டதும், L. அடையாளமிட்டதுமான தஸ்தாவேஜு பிறப்பிவிக்கப்பட்டிருக்கிறது. அது ஷை கிராமத்திய எல்லாக்கரைகாரக் குடியானவர்களுக்குள்ளும் பிறப்பிவிக்கப்பட்டதாக யிருக்கிறது. இந்த L. அடையாளமிடப் பட்டிருக்கும் பழமையான தஸ்தாவேஜின் உண்மையைக்குறித்தும் யாதொரு ஆக்ஷேபனையும் சொல்லக்கூடிய தில்லை. (அது ஸரியான இடத்திலிருந்து ஆஜர் செய்யப்படுத்தப் பட்டிருப்பதின் விஷயமாக வாதிபக்கம் 7-வது சாக்ஷியின் வாக்குமூலத்தைப் பார்க்க) L. அடையாளமிட்ட தஸ்தாவேஜானது ஷை கிராமத்திலுள்ள சாகுபடிக்கு லாயக்காக யிருக்கிற எல்லா நிலங்களையும் கலெக்டரிடமிருந்து கரைக்காரர்கள், தரம்பைசல் ஒத்திக்கு வாங்கி விடுவார்கள் என்பதை எதிர்பார்த்து எழுதிக்கொடுக்கப்பட்டதென்று வியக்தமாகத் தெரிகிறது. L. அடையாள தஸ்தாவேஜில் அடியில் கண்ட சங்கதிகளுக்கு எல்லாம் நிபந்தனைகள் யேர்ப்படுத்தப்பட்டிருக்கிறது, (1) கலெக்டரிடமிருந்து பெற்றுக்கொள்ளப் போகிற நிலங்களை கரையீடுக்குடிகள் வியவசாயம் செய்யும் விஷயத்தில் எப்படி பாகம் செய்து கொள்ளுகிறது, (2) சர்க்காருக்குச்சேரவேண்டிய தீர்வையும் கோவிலுக்குச்சேரவேண்டிய ஸ்வாமி போகத்தையும் எவ்விதம் செலுத்துவது, (3) கரைகாரர்களைச் சேராதவர்களாயுள்ளவர்களும் கரைகாரர்களிடம் உள் குத்தகைக்கு வாங்கி அனுபவிப்பவர்களுமாகிய புறக்குடிகளிடம் தீர்வை வசூல் செய்வதை பற்றியும், (4) நிலத்தில் வரும் எல்லா வரும்படியையும் சிலவிடுவதும் மறச்சிலவுகள் செய்வதுமான விஷயங்களைப்பற்றியும், (5) 1241, 1242-ம் பசலிகளில் (அதாவது 1831-ம் ௵ ஜூலை௴ முதல் 1832-ம் ௵ ஜூன்௴ வரையிலும், 1832-ம் ௵ ஜூலை௴ முதல் கொண்டு 1833-ம்௵ ஜூன்௴ வரையிலும்) ஷை நிலங்கள் சம்பந்தமாக வசூல் செய்யப்பட்ட தொகைகளை பிரிவினை செய்யவேண்டிய விஷயமாகவும்.

“தஞ்சாவூர் ஜில்லாவில் அப்போது கலெக்டராகயிருந்த மிஸ்டர் கின்டெர்ஸிலி துரை 1831-ம்௵ முதல் 1840-ம் வருஷவரை யுள்ள காலங்களில், தன் ஆளுகைக்குட்பட்டிருந்த கோவில் நிலங்களை தரம்பைசல் முச்சலிக்கா என்ற ஏற்பாட்டுக்கு உட்படுத்தினார் என்பது யாவரும் அறிந்தவிஷயம். அந்த ஏற்பாட்டின் பிரகாரம் அப்பொழுது சாகுபடிக்கு லாயக்காக யிருந்த நிலங்களின் விஸ்தீரணத்தின் பேரில் தீர்வை யேர்ப்படுத்தி அதன்பேரில் வருஷத்துக்கு இவ்வளவு நெல் கொடுத்துவிடுகிறதென்றும், அப்படிக்கில்லாத விஷயத்தில் நெல்லைக் கிரயம் போட்டு ரூபாயாகச் செலுத்திவிடலாமென்றும் இன்னும் மற்றும் நிபந்தனைகளும் செய்யப்பட்டிருந்தது.

பிராதில்கண்ட கிராமத்தில், 1831-ம் ௵த்தில் இந்த A அடையாளமிட்ட தரம்பைசல் முச்சலிக்கா வாங்கப்படுமுன், “ப்ரபோஸல்” என்று பெயர்வழங்கிய இஜாராகுத்தகை விடும் வழக்கமானது 1820-ம் ௵ முதல் 1830-ம் ௵ வரையுள்ள 11-வருஷகாலமும் வழங்கிவந்தது. அதற்கும் முந்தியகாலத்தில், அதாவது 1820-ம் ௵த்துக்குமுன், நிலங்களிலிருந்து கோவிலுக்குக் கிடைக்க வேண்டிய தீர்வைகள் அடியில் கண்டபடி யேர்ப்பாடு செய்யப்பட்டிருந்தது. கோவில் பண்ணைநிலமாக வைத்துக்கொண்டு கோவில் பண்ணைக்காரர்களைக்கொண்டே சாகுபடி செய்யப்படாமல், மற்றக்குடியானவர்களால் சாகுபடி செய்யப்படும் நிலங்களில் விளையும் மாசூலுக்கு நஞ்சை விளைவில் 100-க்கு 50-வீதமும், புஞ்சை விளைவில் 100-க்கு 40-வீதமும், கோவிலுக்குச் செலுத்தவேண்டும். “ப்ரபோஸல்” ஏற்பாட்டின் பிரகாரம்” (1820-ம்௵ முதல் 1830-ம்௵ வரை) ஜாஸ்தியான தீர்வை யார் கொடுப்பதாகச்சொல்லுகிறார்களோ அவர்களுக்கு நிலத்தைக் குத்தகைக்கு விடும்படிக்கும், அப்படி குத்தகைக்கு விடும் காலமானது 3-௵ முதல் 5-௵ வரை தான் இருக்கவேண்டுமென்றும், அதற்குமேல் போய்விடக்கூடாதென்றும் என்ற நிபந்தனைகளின்பேரில் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டது. (A1. A3. A4. A5. அடையாளமிட்ட தஸ்தாவேஜுகளைப்பார்க்க. இந்த தஸ்தாவேஜுகள், 1820-ம் ௵த்துக்கும் 1830-ம் ௵த்துக்கும் மத்தியில் இந்த “ப்ரபோஸல்” குத்தகை சம்பந்தமாக குடிகளால் கவர்ன்மெண்டாருக்கு எழுதிக்கொடுக்கப் பட்டவைகள்.) 1831-ம் ௵த்தில் ஏற்படுத்தப்பட்ட தரம்பைசல் முச்சலிக்கா ஏற்பாட்டின் பிரகாரம் நிலங்களின் விஸ்தீரணத்தின் பேரில் ஏற்படுத்தப் பட்டிருந்த நெல் தீர்வையின் கிரயத்தொகை இன்னதென்று தீர்மானித்து ரூபாயாகவேயே தீர்வைசெலுத்துகிறதென்ற நிபந்தனையின் பேரில் குத்தகை வாங்கினவர்கள் சங்கையற்ற காலத்துக்கு நிலங்களை அனுபவித்து வரவேண்டியதுதான். ஒரு குறிப்பிட்ட வருஷத்தில் யேர்ப்பட்ட வஸ்தீரணத்துக்கு மேல்பட்டு சாகுபடி செய்ததற்கும், தருசு நிலங்களை சாகுபடி செய்ததற்கும், தோட்டப்பயிர் செய்வது போலொத்தவைகளுக்கும், ஜாஸ்தி தீர்வை செலுத்தும்படியாயுள்ள நிபந்தனைகள் யேர்ப்படுத்தப்பட்டிருக்கின்றன. அல்லாமலும், கோவிலில் உத்ஸவகாலங்களிலும், கோவிலைச்சேர்ந்த நிலங்களிலும் கால்வாய் முதலியதுகளிலும் பழுதுபார்க்குங்காலங்களிலும், குத்தகைதார்கள் வேலையாள்கள் சுவுதரித்துக் கொடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். A. அடையாளமிட்ட தஸ்தாவேஜாகிய முச்சலிக்காவில், 67 வேலி நஞ்சைநிலமும் 16 வேலி புஞ்சைநிலமும், 6½ ஏகர் கொண்ட ஒருவேலியில் 83 வேலி நிலத்தை அந்த முச்சலிக்கா எழுதிக்கொடுத்தவர்களுக்கு விடப்பட்டதாகக்காட்டப்பட்டிருக்கிறது. பழய தஸ்தாவேஜுகளாகிய C. C 1. அடயாளமிட்ட தஸ்தாவேஜுகளினால், 1723-ம் ௵ வாக்கில் சாகுபடிக்கு லாயக்காகயிருந்த நிலங்களின் விஸ்தீரணம் நஞ்சையில் 10-வேலியும், புஞ்சையில் 15-வேலியும், ஆக 25-வேலி நிலம்மட்டும்தானிருந்ததாக வியக்தமாக யேர்ப்பட்டிருக்கிறது. 200-௵ங்களுக்கு முன், மகாராஷ்டிர ராஜாங்கத்தில், கிராமம் பூராவும், “ரொக்கக் குத்தகை” த்தீர்வை யேர்ப்பாட்டின் பேரிலேயே யிருந்ததாகவும், யேதோ காரணத்தின் பேரில் மகாராஷ்

டிர அரசர் லாபகரமாயிருந்த ரொக்கக் குத்தகை யேர்பாட்டை எடுத்துவிட்டு, சாதாரணமாயுள்ள “ஸஞ்சாயித”த்தீர்வை யேர்ப்பாட்டுக்கு மாற்றிவிட்டதாகவும், (ஸஞ்சாயிதத் தீர்வை ஏற்பாடென்பது, நிலத்தில் விளைகிற மாசூலை, தீர்வைக்காக பகுந்து எடுத்துக் கொள்வதென்பதுதான்) 1723-ம் ௵வாக்கில் “ரொக்கக்குத்தகைத்” தீர்வை யேர்ப்பாட்டை “ஸஞ்சாயித” த்தீர்வையாக் மாற்றியதின் மூலமாக,கோவில்சிலவுகளுக்குப் போதாமல் போய்விடும்படியான விதமாக, வரும்படி குறைந்துபோய் விட்டதாகவும்,ஆகையால் பழய ரொக்கக் குத்தகை தீர்வை யேர்ப்பாட்டையே மறுபடி ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் பிரார்த்தித்து கோவில் தர்மகர்த்தா கேட்டுக் கொண்டார். கிரிஸ்து பிறந்தபிறகு அதாவது 1723-வது வருஷத்துக்கு சரியான சூரியன் 1124-ம் ௵ சூரியகிரகண புண்ணிய காலத்தில், ஸமுத்திரக்கரையிலுள்ள புண்ணிய க்ஷேத்திரமாகிய வேதாரணியம் கோவில் வைத்து பழய ரொக்கக் குத்தகை யேர்ப்பாட்டையே திரும்ப ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால்ரொக்கக் குத்தகைப் பணத்தீர்வையை 100-சக்கரத்திலிருந்து 125-சக்கரமாக உயர்த்தப்பட்டது. (ஒரு சக்கரமென்பது ரூ 1—9—0 க்குச் சமானம்) தேவதாபக்தியின் பேரில் கோவில்களுக்குத்தானமாக,மோகினிஎன்னும் படித்தனம் வருஷாவருஷம் கொடுக்கும்படி யேர்ப்பாடு செய்வது பூர்வீக ராஜாக்களின் வழக்கமாக யிருந்து வந்தது. இந்தக் கோவிலுக்கு யேர்ப்படுத்தப் பட்டிருந்த மோகினிப்படித்தனம் 72 சக்கரம். இந்த 72 சக்கரத்தை ரொக்கக் குத்தகை அல்லது ரொக்கத் தீர்வை யாகிய 125 சக்கரத்திலிருந்து கோவிலார் கழித்துக்கொள்ளுவார்கள்.

“நான் முன் சொல்லியபடி முன் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீர்ணம் 25-வேலி யென்றே தோன்றுகிறது. ஆனால் ஷை கிராமத்திலுள்ள, தருசுகள் புறம்போக்குகள், வீட்டுநிலங்கள் முதலிய, எல்லா நிலங்களுமே ஷை கோவில் ஆளுகையிலேயே யிருந்து வந்திருக்கிறது. 1809-ம் ௵த்தில், C. அடையாளமிட்ட தஸ்தா வேஜாகிய ரிஜிஸ்டரை (கணக்கை)த் தயார் செய்தபொழுது, வாஸ்தவத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீர்ணமானது பழய உத்தேச அளவின் பிரகாரம் (Rough measurement) 31-சொச்சம் வேலி நஞ்சையும், 43. சொச்சம் வேலி புஞ்சையும், ஆகமொத்தம் 80½ வேலிநிலமிருப்பதாகவும், இந்த 80½ வேலி நிலத்துக்கும் ஸ்வான் ஷை கோவில் தானென்று பதிவாகியிருப்பதாகவும், இது நீங்கலாக, ஷை கிராமத்திலிருக்கிறதும் உத்தேச மதிப்பில் சுமார் 16½ வேலிகாணுமான தென்று நினைக்கிற தருசுநிலங்களும் கோவிலையே சேர்ந்ததாகயிருக்கிறது. (C. அடையாள மிட்ட தஸ்தாவேஜின் 8-வது கலத்தின் கடைசி உட்பிரிவைப் பார்க்க). 1816-17-ம் ௵த்துக்குறிய F அடையாளமிட்ட தஸ்தாவேஜு 1828-29-ம் ௵த்துக்குறிய F1. அடையாளமிட்ட தஸ்தாவேஜு ஆகிய பைமாஷ் அளவு கணக்குகளில், சாகுபடி செய்யப்பட்ட நிலங்களின் விஸ்தீரணம் தோப்பு உட்பட 93 அல்லது 94 வேலி யென்று சொல்லப்பட்டிருக்கிறது. F. F1. அடையாளமிட்ட தஸ்தாவேஜுகளிலும், மற்ற தஸ்தாவேஜுகளிலும், “ரொக்கக்குத்தகை” என்பதற்கு அர்த்தம் “பணத்துக்குக்குத்தகை” யென்று புஸ்தகங்களில் அச்சிட்டிருப்பது, அதே அர்த்தத்தையே கொடுக்கிறது. நான் முன்னமே சொல்லியபிரகாரம் அது, தீர்வை யேர்ப்படுத்தப்பட்ட சில நிலங்களின் விஷயமாக தஞ்சாவூர் ராஜ்ஜியத்தில் யேர்ப்படுத்திய ஒரு விதமான தீர்வையைக்குறிப்பிடும் பதமாக யிருக்கிறது. தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு மானியூல் 487-ம் பக்கத்தில் “ரொக்கக்குத்தகை” என்னும் பதத்துக்கு சுரோத்திரியம் போலொத்த தீர்வை யென்று அர்த்தம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தக்குறைந்த தீர்வையானது தயவின்பேரிலோ அல்லது தருசு நிலங்களையும் சாகுபடி செய்யும்படியானநோக்கத்தை உண்டாக்கும்படியாகவோ யேர்ப்படுத்தப்பட்டிருக்கிறது.

“1820 - ௵த்துக்கும் 1831 - ௵த்துக்கும் இடையில் உண்டாக்கப்பட்டிருக்கிற “ப்ரபோஸல்” இஜாரா தீர்வைக்குறிய தஸ்தாவேஜுகளும், A அடையாளமிட்ட தரம்பைசல் முச்சலிக்காவும், அந்த வருஷங்களில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களின் விஸ்தீரணம் 80 வேலி முதல் 90 வேலி வரை யிருக்கலாமென்று காட்டுகிறது. உள்ளரங்கமாக யேர்ப்பட்டுயிருக்கும் இராஜாங்க அல்லல்களினால், தஞ்சாவூர், செங்கல்பட்டு முதலிய மிராசு ஜில்லாக்களில் மிராசுதார்களுக்கும், கவர்ன்மெண்டாருக்கும் லாபகரமாக யிருக்கக்கூடிய விதமாக சாகுபடி செய்யப்படவேண்டியநிலங்கள் பழயகாலத்தில் சாகுபடி செய்யப்படவில்லை. தருசு நிலங்களை சாகுபடி செய்யும்படிக்காக மிராசுதார்களுடைய கிராமங்களிலேயே பயிரிடுங்குடிகளை சாசுவதமாக குடியேறும்படி செய்யும்படியாயும் மற்றக் கிராமங்களில் குடியிருப்பவர்களை பயிரிடும் காலங்களில் தாத்காலியமாக பயிரிடும் குடிகளாக வந்திருக்கும் படியாய் யேர்ப்பாடு செய்யும்படியாயும் கவர்ன்மென்டார் எதிர் பார்க்கிறார்கள். இவைகளில் முன்சொல்லப்பட்டவர்கள் உள்ளூர் புறக்குடிகளாகவும் பின் சொல்லப்பட்டவர்கள் அசலூர் புறக்குடிகளாகவும் ஆய்விடுகிறார்கள். “ப்ரபோஸல்” ஒத்தி வாங்கினவர்கள் கலெக்டர் மேல்பார்த்து வருகிற கோவிலுக்கு லாபகரமாக யிருக்கும்படியான விதமாக, தருசாகக் கிடக்கிற நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர அசக்தர்களாக யிருந்து வந்திருக்கிறார்கள். அப்பீல் தரம்பைசல் முச்சலிக்கா ஏற்பாட்டை ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் சாகுபடி நிலத்தின் விஸ்தீரணம் 140-வேலிக்கு வந்துவிட்டது. இப்போது சாகுபடிக்குக் கொண்டுவருவதற்கான தருசுநிலமே கிடையாது.

1820-ம் ௵த்துக்கு முன் சாகுபடி செய்யப்பட்ட 64 வேலி நஞ்சை நிலங்களில் 21 வேலி நிலங்கள் சம்பந்தப்பட்ட வரையிலுமாவது பிராதில்கண்ட கோவிலுக்கு மேல் வாரப் பாத்தியதை குடிவாரப் பாத்தியதை இவைகள் இரண்டும் இருந்து வந்ததாகவும் அந்த நிலங்களை கோவிலாரே தங்கள் சொந்த ஆள்களையும் ஏர்களையும் கொண்டு சாகுபடி செய்து வந்ததாகவும் அப்பீல் வாதிகள் பக்ஷத்திலேயே ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த விஷயத்தை அவர்கள் ஆதாரமாகக் கொண்டிருக்கிற F. அடையாள தஸ்தாவேஜுல் வெளியிடுகிறபடியால் மறுக்கவும் முடியாது. (பைமாஸ் நம்பர்கள் 387, 383, 521, 524, 535, 537 538, 527, இவைகளின் விவரணங்கள் F- அடையாள தஸ்தாவேஜில் சொல்லியிருப்பதை பார்க்க) இருந்தாலும் இந்த 21 வேலி நிலங்களையும்கூட தரம்பைசல் முச்சலிக்கா கட்டுக்குத்தகைதார்களுக்கே சாகுபடிக்குவிட்டு விட்டு நேரில் பண்ணை சாகுபடி செய்வதை நிறுத்திவிடுவது சௌகரியமென்று கலெக்டருக்கு அபிப்பிராயம் உண்டாயிற்று. இந்த 21 வேலி நிலங்க

ளுக்கும் அல்லது இந்த 21 வேலி நிலங்களுக்கு, மட்டும் கோவிலுக்கு எப்படி குடிவார பாத்தியதை ஏற்பட்டது என்பதற்குள்ள காரணத்தைத் தெரிவிக்க அப்பீல் வாதிகள் அசக்தர்களாக யிருக்கிறார்கள். 1883-ம் ௵த்தில் இந்தக் கிராமத்திலுள்ள தருசு நிலத்தில் கொஞ்சம் பாகத்தை கவர்ன்மெண்டார் லாண்டு அக்விஸிஷன் ஆக்டுப்படி எடுத்துக் கொண்டபொழுது, இந்தக் கோவிலாரைத் தவிர வேறு யாரும் ஆஜராய் ஷை நிலம் தன்னுடையதென்று பாத்தியம் கொண்டாடவாவது செய்யவில்லை. ஷை நிலத்துக்குள்ள காம்பன்ஸேஷன் தொகையும் கோவிலாருக்கே செலுத்தப்பட்டது.

(E. அடையாளத் தஸ்தாவேஜைப் பார்க்க)

1847-ம் ௵த்தில் 2-கௌரவமுள்ள ஹிந்துக்களால் கலெக்டரிடம் கொடுக்கப்பட்டிருக்கிற ரிக்கார்ட்டுகளாகிய A 2 தஸ்தாவேஜில், கோவில் நிலத்தைக் குத்தகைக்கு வாங்கினவர்களுக்கெல்லாம் ஷை நிலங்களை சாசுவதமாக அனுபவிக்கும் பாத்தியதை ஏற்பட்டிருப்பது விளங்குவதாய் அப்பீல் வாதிகளுடைய கற்றறிந்த வக்கீல் வாதிக்கிறார்கள். 1840-ம் ௵ வாக்கில் ஈஸ்டிண்டியா கம்பெனியார் ரிவினியூ போர்டாரையும், கலெக்டர்களையும் தங்களுடைய ஆளுகையிலிருந்த கோவில்களின் மேல் பார்வையை விட்டு விடும்படிக்கு உத்தரவு செய்தது பிரசித்தமான விஷயம். அந்த உத்தரவின்படியே தஞ்சாவூர் கலெக்டர் 1847-ம் ௵ முதல் 1857-௵ வரையுள்ள காலத்துக்குள் தனக்குள்ளிருந்த கோவில்களை ஹிந்து தர்மகர்த்தர்களுடைய வசத்தில் விட்டு அவர்களிடமிருந்து A 2 அடையாளமிட்ட ரிக்கார்டையும் பெற்றிருக்கிறார். அப்பீல் வாதியின் வக்கீலால் ஆதாரமாகக் கொண்டாடப்படுகிற A 2 அடையாள மிட்ட தஸ்தாவேஜின் 7-வது பாராவில் அடியில் கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது :—"மேல்கண்ட ஸர்வமானிய கிராமங்களின் புறக்குடி விஷயமாக ஒவ்வொரு கிராமத்திலும் அனுஷ்டானத்திலிருந்து வருகிற வழக்கத்தையும், ஸமஸ்தானத்தில் யேர்ப்பட்டிருக்கிற வழக்கத்தையும், அனுஸரித்து, இதற்குமுன் வழக்கத்தையும் அனுஷ்டானத்தையும் அனுஸரித்து நடந்து வந்தது போலவேயே இனிமேலும் சரியாய் நடந்து வருவோமென்றும் தங்களுடைய பாத்தியதையை மீறியாவது அல்லது அவர்களுடைய பாத்தியதைகளில் பிரவேசிக்கவாவது செய்கிறதில்லை." இந்தப் புறக்குடிகளுக்கு அநுபோக பாத்தியதையே கிடையாது. புறக்குடிகள் கக்ஷிக்காரர்களாக யில்லாமலிருக்கும் ஒருதஸ்தாவேஜில் சொல்லப்பட்டிருக்கிற ஒரு சங்கதியினால் அவர்களுக்கு ஒரு விதமான பாத்தியதையும் ஏற்பட்டுவிட மாட்டாது. வாதிகள் 1-வது பிரதிவாதியை அப்புறப்படுத்தும் பாத்தியதையானது 1847-ம் ௵த்தில் கவர்ன்மெண்டாருக்கு எழுதிக்கொடுத்த முச்சலிக்காவினால் போய்விடுமா வென்பதைத் தீர்மானிக்கும் பொருட்டே ஏற்படுத்தப்பட்ட 11.வது அம்சமானது (11 Issue) கீழ்கோர்ட்டாரால் அப்பீல் வாதிகளுக்கு விரோதமாக சரியானபடி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

லாயர்கள் :—அப்பீல் வாதிகள் பக்கம் T. R. ராமச்சந்திர அய்யரும், S. முத்தைய முதலியாரும் அப்பீல் பிரதிவாதிகள் பக்கம் T. ரங்காச்சாரியாரும், S. வரதாச்சாரியாரும், ஆஜரானார்கள்.

கோர்ட்டார் அடியில் கண்ட தீர்ப்பைச் சொன்னார்கள்.

ஹைகோர்ட்டுத் தீர்ப்புகள் :—ஜஸ்டிஸ் ஸதாசிவ அய்யர், அதே வாதிகளால் கொண்டுவரப்பட்ட மூன்று வியாச்சியங்களின் பேரில் இந்த மூன்று அப்பீல்களும் செய்யப்பட்டிருக்கின்றன: இந்த வியாச்சியங்கள் எல்லாம் தஞ்சாவூர் டெம்பெரரி ஸபார்டிநேட் கோர்ட்டாரால் சேர்த்து விசாரிக்கப்பட்டு ஒரே ஜட்ஜிமெண்டின் மூலமாகவேயே வாதிகளுக்கு அனுகூலமாக பைசல் செய்யப்பட்டன. 1914-ம் ௵த்து அப்பீல் வியாச்சிய நெ. 248 ஹைகோர்ட்டிலேயே நேரில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மற்ற 2 அப்பீல்களும், தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு 1914-ம் ௵த்து 258-ம் நெ. அப்பீலுடன் சேர்ந்து வாதிக்கப்படும்படியாக இந்தக் கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

[மேலே எடுத்தெழுதிய பிரகாரம் கேசுக்கு முக்கியமான உள்ள சங்கதிகளைச் சொல்லிவிட்டு, தீர்ப்பு சொல்லப்படுகிறது]

ஷை நிலங்களை பராதீனம் பெற்றவர்கள் ஸ்தானத்திலும், ஷை கோவில் காரியாதிகள் கலெக்டரால் மேல் பார்த்து வரப்பட்ட காலத்திலிருந்த பூர்வீக குடிகளுடைய பிரதிவாதிகளின் ஸ்தானத்திலுமிருந்து பாத்தியதை கொண்டாடுகிற பிரதிவாதிகள் ஷை நிலங்களுக்கு முன்பாத்தியஸ்தர்களால் எழுதிக்கொடுக்கப்பட்ட A. அடையாள தஸ்தாவேஜில் கண்ட நிபந்தனைகளின்படி நடக்க நிச்சயமாய் கடமைப்பட்டிருப்பதாயும், A. அடையாளமிட்ட தஸ்தாவேஜையும் இந்தக் கேசின் மற்ற சாக்ஷியங்களையும் கற்றறிந்த ஸபார்டிநெட் ஜட்ஜ் மிகவும் ஜாக்கிரதையாயும் நன்றாய் ஆலோசித்தும், விசாலமாகவும் எழுதப்பட்ட தீர்ப்பில் விவரித்துச் சொல்லியிருப்பதாயும் நான் நினைக்கிறேன். அப்பீல் வாதிகள் பக்கம் உள்ள சங்கதிகளை ஷை யார்கள்பக்கம் வக்கீல்கள் விஸ்தாரமாக எங்கள் முன்புக்கு வியவகரித்ததிலும் ஸபார்டிநேட் ஜட்ஜின் பைசலில், ஷை கேசில் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜு விஷயமாயும் வாய் மொழிச்சாட்சியங்கள் விஷயமாயும் சொல்லியிருக்கும் எந்த சங்கதியும் தவறுதலாக யிருப்பதாக காட்டத் தவறி விட்டார்கள். முக்கியமான விஷயத்தில் பிசகென்று அவர்கள் காட்டியிருப்பதெல்லாங்கூடி சட்டப்படி சாக்ஷியமாக ஒப்புக்கொள்ளக்கூடாத M. அடையாளத் தொகுதி (M. Series) ஓலைக்கணக்குகளை கீழ்கோர்ட்டார் ஒப்புக்கொண்டதாகச் சொல்வதுதான். இந்தக் கணக்குகள், பிராதில்கண்ட கிராமத்திலுள்ள நிலங்களிலிருந்து 1712-ம் ௵ முதல் 1823-ம் ௵வரை கிடைந்திருக்கும் வருமானங்களையும் ஷை தொகையிலிருந்து சிலவாயிருக்கும் தொகைகளையும் வெளியிடக்கூடியவைகள். இந்த தஸ்தாவேஜுகள் சாக்ஷியத்தில் சட்டப்படி ஒப்புக்கொள்ளக்கூடியதாக ஏற்படும் விஷயத்தில், 1-வது அம்சம் (Issue)சம்பந்தப்பட்ட மட்டில் வாதியின் கக்ஷி பூராவும் ருஜுவாய் விடுகிறது. இருந்தாலும் ஷை தஸ்தாவேஜிகள் எவராலும் கையெழுத்துச் செய்யப்படவில்லை. அவைகள் இன்னாரால் எழுதப்பட்டவைகளென்றும் தெரியவில்லை. சாக்ஷியச் சட்டத்தின் 90-வது பிரிவில் அடியில் கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது:—"கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தில் சரியானவர்களுடைய வசத்திலிருந்து ஆஜர்செய்யப்பட்டதாக நினைக்கப்படுகிற ஒரு தஸ்தாவேஜானது 30-வருஷத்துக்குமுன் பிறந்ததென்று தெரியவந்தாலும் ருஜுச்செய்யப்பட்டாலும், அதில் போடப்பட்டிருக்கும் கையெழுத்து (Signature) அதுயாரால் எழுதப்பட்டதாகத் தெரியவருகிறதோ அந்த

நெட்டெழுத்துப் பூராவும் யெவரால் யெழுதப்பட்டதாகத்துலங்குகிறதோ அவராலேயே யெழுதப்பட்டதென்றும் கோர்ட்டார் வைத்துக்கொள்ளலாம். அந்த தஸ்தா வேஜானது சாக்ஷிகள் மேபாட்டப்பட்டு பிறப்பிவிக்கப் பட்டிருந்தால், அவைகள் அவ்விதமே பிறப்பிவிக்கப்பட்டதாயும் வைத்துக்கொள்ளலாம்". இதனால், கையெழுத்துச்செய்யப்படாமலும், இன்னாரால் எழுதப்பட்டதென்று தெரியாமலு மிருக்கிற கணக்குகளை அவைகள் எந்தக்கோவிலுக்குச் சம்பந்தப்பட்டவைகளோ அந்தக் கோவிலைச் சேர்ந்தவும், அந்தக் கணக்குகளை எழுதுவதற்கு அதிகாரமுள்ளவுமான கணக்கப்பிள்ளைகளால் எழுதப்பட்டவைகள்தா னென்று கோர்ட்டார் அபிப்பிராயப் படுவதற்கு இந்தப்பிரிவு இடங்கொடுக்குமென்று நான் நினைக்கவில்லை. இந்த விஸ்தாரமாயுள்ள கணக்குகளை காலதேச வர்த்தமானங்களை உத்தேசித்து இந்தக்கோவிலின் தர்மகர்த்தாக்களால் நியமிக்கப்பட்ட கணக்கப்பிள்ளைகளால் எழுதப்பட்டவைகள் என்று கோர்ட்டார் எண்ணுவதற்கு சாட்சியச் சட்டத்தின் 114-வது பிரிவு இடங்கொடுக்குமென்று நான் முதலில் அபிப்பிராயப்பட்டேன். ஆனால் ஆழ்ந்து யோசிக்கையிலும், ஷியோநந்தன் அஹீருக்கும், ராம்லோகன் சிங்குக்கும் நடந்து 1915-ம் ௵த்து 18. அல. லா. ஜ. 921 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறவும் காஷீ நாத்பாலுக்கும் ஜகத்கிஷோர் ஆச்சாரியச் சௌட்ரிக்கும் நடந்து 1915-ம் ௵த்து 20. கல். வீ. நோ. 643-ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதும், உபிலக்குராய்க்கும், தல்லால்ராய்க்கும் நடந்து 1878-ம் ௵த்து இ. லா. ரி. 3. கல். 567-ல் பிரசுரிக்கப்பட்டிருப்பதும், உக்கிரகண்ட்ச் சௌட்ரிக்கும் ஹர்ரோசச்சண்டர் ஷியோக்டாருக்கும் நடந்து 1880-ம் ௵த்து இ. லா. ரி 6. கல் 209-ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதும், எய்ரிக்கும் ஸ்டாபின்டனுக்கும் நடந்து 1897-ம்௵த்து 1-ச் சான்ஸரி 164-ல் பிரசுரிக்கப்பட் டிருப்பதுமான கேசுகளின் தீர்ப்புகளை யோசிக்கையிலும் சாட்சியச்சட்டத்தின் 114-வது பிரிவுப்படி அபிப்பிராயப்படுவது நியாயமில்லை யென்று தோன்றுகிறது. 30-வருஷங்களுச்கு முன் யெழுதப்பட்ட தென்றும் சரியான பந்தோபஸ்திலிருந்து வந்ததாயும், தெரிகிற தஸ்தாவேஜுகளை வாஸ்தவமானதென்று கோர்ட்டார் அபிப்பிராயம் கொள்ளலாமென்பதாய் குறிப்பிடாத (Vague) சொற்றொடர்கள் தீர்ப்புகளில் உபயோகிக்கப்படுகின்றன. அப்படி அப்பேர்ப்பட்ட பாஷையை உபயோகிப்பதனால் ஒரு தஸ்தாவேஜில் செய்யப்பட்டிருக்கும் கையொப்ப விஷயமாயும், ஒருவனுடைய கையெழுத்து (Hand Writing) விஷயமாயும், ஒரு தஸ்தாவேஜு பிறப்பிவிக்கப்பட்டது விஷயமாயும் அதில் அறிவு சாக்ஷிக் கையெழுத்துப் போட்டது விஷயமாயும், யெழுதப்பட்டிருக்கும் பிரிவில் கண்ட பதங்களை அனுஸரித்து நடப்பதைவிட்டு குழப்பத்தையும், சாட்சியச் சட்டத்தின் 90-வது பிரிவுக்கு சம்பந்தமே யில்லாத விஷயங்களையும் யோசிக்கும்படி நேரிட்டுவிடுகிறது. ஆகையால் M. அடையாளத் தொகுதி (M. Series) யை இந்தக் கேசில் சாக்ஷியமாக யோசிக்காமலேயே தள்ளிவிடுகிறேன்.

கற்றறிந்த ஸபார்டிநேட் ஜட்ஜி அவருடைய தீர்ப்பின் 46-வது பாராவில் இந்தக்கேசின் முக்கியமான அம்சங்கள் ஸம்பந்தமாய் (Principal Issues) தன்னுடைய அபிப்பிராயங்களைச் சேர்த்து எழுதியிருக்கிறார். B. M. தொகுதி G. இந்த தஸ்தா வேஜுகளுக்குறிய விஷயங்களை நீக்கிவிட்டு, அந்தப் பாராவில் ஜாஸ்தியான பாகத்தை இதில் எடுத்துச்சொல்லுகிறேன். கடைசியில் மாத்திரம் சில மாறுபாடுகள் செய்வேன். இந்த 46-வது பாராவை குறிப்பிட்டு எடுத்துச்சொல்லுவதற்குக் காரணம், இந்தக்கேசின் சாக்ஷிய விஷயமாக நான் என்னென்ன அபிப்பிராயத்துக்கும் முடிவுக்கும் வந்திருக்கிறேனோ அதே அபிப்பிராயத்தையும் முடிவையும் அந்தப் பாராவில் எழுதப்பட்டிருக்கிறது. "பிர்கிருத கேசில், C. அடையாளத் தஸ்தாவேஜில், ஷை கிராமம் பூராவுமே கோவிலுக்கு விடப்பட்டதாகக் காட்டியிருக்கும் விஷயம், C. அடையாளத் தஸ்தாவேஜின் 8-வது கலத்தில் புறம் போக்குகள் உள்பட ஷை கிராமத்திலுள்ள எல்லா நிலங்களையும் கோவிலாரே அனுபவித்து வந்ததாகக்கண்டிருக்கும் விஷயம், F. அடையாளத் தஸ்தாவேஜில் சர்க்காரில் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்துக்கு கோவிலுக்கு தொகை செலுத்திய தாகக் கண்டிருக்கும் விஷயம், B. அடையாளத் தஸ்தா வேஜில் கண்டிருக்கிற பிரகாரம், கோவிலிலிருந்து ஒரு குருக்களுக்கு நிலம் விடப்பட்டிருக்கும் விஷயம், கலெக்டரால் தயாரிக்கப்பட்ட கணக்காகிய D. அடையாள தஸ்தாவேஜில் மந்திரபுரீஸ்வரஸ்வாமியே மிராசுதாரென்று காட்டியிருக்கும் விஷயம், தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு மானியூலில் ஷை கிராமத்துக்கு ஷை சுவாமியே முதலாளி யென்று சொல்லியிருக்கும் விஷயம், F. அடையாளமிட்ட தஸ்தாவேஜில் அந்தக் கிராமத்திலுள்ள சொத்துக்களை யேக போகமாய் அனுபவிக்க மந்திரபுரீசுர ஸ்வாமியே மிராசு பாத்தியதை உள்ளவரென்று கண்டிருக்கும் விஷயம், 1815-ம் ௵த்தில் பிறந்த தஸ்தாவேஜாகிய J, 10-ல் இந்தக்கிராமமானது ஏகபோகம் கிராமமென்று சொல்லப்பட்டிருக்கும் விஷயம், A. 5 அடையாள மிட்ட தஸ்தாவேஜில் மங்கல் கிராமம் கோவிலைச் சேர்ந்தது என்று சொல்லப்பட்டிருக்கும் விஷயம், 1831-ம் ௵த்துக்கு முன் கலெக்டர் பேருக்குப் பிறப்பிவிக்கப்பட்ட குத்தகை தஸ்தாவேஜுகளில் குத்தகை பெற்றவர்களே சாகுபடிசெய்து கொள்ளுகிறதென்று காணப்பட்டிருக்கும் விஷயம், F, அடையாளத் தஸ்தாவேஜில் கோவிலாரையே கிராமத்துக்குச் சொந்தக்காரராகவும் ஏகபோகம் மந்திரபுரீசுர ஸ்வாமிக்கு ஷை கிராமத்தை மிராசாகவும் காட்டியிருக்கும் விஷயம், II அடையாள மிட்ட தஸ்தாவேஜுத் தொகுதியில் 1891-ம் ௵ முதல் 1899-ம் வருஷம் வரை-மந்திரபுரீசுர ஸ்வாமியை, மிராஸ் மந்திரபுரீசுரஸ்வாமி யென்று காட்டியிருக்கும்விஷயம், குளம் பாசிக் குத்தகைத் தொகை, தோப்புக் குத்தகைத்தொகை, வீட்டு நிலத்தீர்வை இவைகளை யெல்லாம் கோவிலாரே வசூலித்திருக்கும் விஷயம், F.1 L. அடையாள மிட்ட தஸ்தாவேஜுகளினால் ருஜுச் செய்யப்பட்டிருக்கிறபடிக்கும், ஒருவாராக எதிரி பக்கமே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறபடிக்கும் சில பண்ணை நிலங்கள் கோவிலாருக்கே பாத்தியப்பட்டிருக்கிற விஷயம், அதே குடியானவனையே ஔவடைக்குடி மிராசென்றும், உள்ளூர் அல்லது அசலூர் புறக்குடியென்றும் பைமாஷ் கணக்குகளில் சொல்லப்பட்டிருக்கிற விஷயம், P. அடையாளமிடப்பட்ட தாசில்தாருடைய ரிப்போர்ட்டில் இவர்களை புறக்குடிகளென்று கண்டிருக்கும் விஷயம், மங்கல் கிராமத்திலுள்ள நிலங்கள்பூராவையும்,1230-ம் பசலிமுதல் 1240-ம் பசலிவரை சாகுபடி செய்யும் பொருட்டு சிலருக்கு கலெக்டர் குத்தகை தஸ்தாவேஜு யெழுதிக் கொடுத்திருக்கும் விஷயம்.

(இன்னும் வரும்.)

VILLAGE SHEET.

கிராம ஜனங்களுடைய பக்கம்.

THE CONDITION OF THE TENANTS IN SHROTRIUM VILLAGES.

சுரோத்திரியம் கிராமங்களில் குடியானவர்களுடைய நிலைமை.

சுரோத்திரியம் இனாம் அல்லது அக்கிரகாரம் கிராமத்தின் குடியானவர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபப்படக்கூடியதாக யிருக்கிறது. சுரோத்திரியம்தார்கள் தங்களுடைய வயல்களை குடியானவர்களுக்கு குத்தகைக்கு அடைத்து விடுகிறார்கள். சுரோத்திரியம்தார்கள் சுரோத்திரியத்தின் பேரில் யேர்ப்படுத்தப்பட்டிருக்கிற ஜோடி அல்லது கிஸ்துத் தொகையை கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தத் தவறி விடும் பக்ஷத்தில் ஷை சுரோத்திரியம் கிராமத்தில் எந்த நிலத்திலாவது இருக்கும் மகசூலை ஜப்தி செய்து ஏலம் போடக்கூடியதாக யிருக்கிறது. இந்தச் சட்டத்தினால், குடியானவனுக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலத்திலிருக்கும் மாசூலை சுரோத்திரியம்தாரிடமிருந்து வசூலாக வேண்டிய ஜோடி பாக்கிக்காக ஜப்தி செய்து ஏலம் போட்டு விடுகிறார்கள், சுரோத்திரியம்தாரிடமிருந்து குத்தகைக்கு வாங்கிப்பயிரிட்ட குடியானவன் நிரபராதியாகயிருந்தும் அவன் தன் மாசூலை இழக்கவேண்டியதாய் நேரிடுகிறது. எளியகுடியானவன் விஷயத்தில் இந்தச் சட்டத்தின் மூலமாய் மிக அநீதியேர்ப்பட்டிருக்கிறது. அஸாத்தியமானீ கஷ்ட நிஷ்டூரங்களும் ஏற்பட்டிருக்கிறது அவைகளை நிவர்த்தி செய்துகொடுப்பது கவர்ன்மெண்டாரவர்களின் கடமையாக யிருக்கிறது. நிலத்திலுள்ள மகசூல் அல்லது அறுவடை செய்யப்பட்ட மகசூலை அடைவதற்காக குடியானவன் வருஷத்தில் அநேக மாதம் மிகவும் சிரமப்பட்டு உழைத்து ஷை மகசூல் எப்போது கைக்குக் கிட்டுமோ வென்ற ஆவலுடன் தன் குடும்ப காலக்ஷேபத்துக்கு ஷை மகசூலையே நம்பிக்கொண்டிருக்கிறான். தீர்வை வசூல் ஆக்டுப்படி (Revenue Recovery Act) சுரோத்திரியம்தார் கவர்ன்மெண்டுக்குச் செலுத்த வேண்டிய தீர்வை பாக்கிக்காக இப்படி அவன் மிகவும் பாடுபட்டு பயிர் செய்த மகசூலை பிடிங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். நியாயமாக குடியானவனுடைய பாகத்தை ஜப்தி செய்யாமல் விலக்கி சுரோத்திரியம் தாரால் செலுத்தப்பட வேண்டிய தீர்வை பாக்கிக்கு ஷை சுரோத்திரியம்தாருக்கு ஷை மாசூலிலுள்ள மேல்வாரப்பாகத்தை மாத்திரம் ஜப்தி செய்துகொண்டு போகவேண்டும். இவ்விதமாக மகசூலை எளிய குடியானவனுக்கு யாதொரு அறிக்கையும் செய்யாமலேயே ரிவினியூ உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி ஜப்தி செய்து விடுகிறார்கள். தனக்கு யாதொரு அறிக்கையும் (Notice) கொடுக்கப்படாததால் ஜப்தி செய்திருக்கும் விஷயமே தெரியாத குடியானவன் நிலத்திலுள்ள மகசூலை அறுவடை செய்தோ அல்லது களத்திலுள்ள தானியத்தைக் கொண்டுபோய்விடவே செய்கிறான். இதற்காக ஜப்தி செய்யப்பட்டிருக்கிற மகசூலைக் கொண்டு போய் விட்டானென்று களவு கேசுக்காக குற்றஞ் சாட்டப்படுகிறான். ஜப்தி செய்யப்பட்டிருந்தது தனக்குத் தெரியாதென்று குடியானவன் கக்ஷி சொல்லி அதை ருஜுச் செய்துவிட்டாலும், ஸப்மாஜிஸ்ட்ரேட்டுகள் நம்பாமல், வழக்கமாக தண்டித்து விடுகிறார்கள். சட்டத்தை சீர்திருத்த வேண்டியது அவசியம். 1864-ம் ஹுத்திய தீர்வை வசூல் விஷயமான II-வது ஆக்ட்டு (Revenue Recovery Act II-of 1864) 8-வது பிரிவில், தீர்வையைச் செலுத்தாமல் பாக்கி வைத்திருக்கிற பாக்கிதாரனுக்கு மட்டும், நோட்டீஸ் கொடுக்க வேணுமென்றும் ஜப்திசெய்யப்பட்ட சொத்துக்களின் ஜாப்தாவுக்கு நகல் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக தீர்வை பாக்கிதாரன் – வாஸ்தவத்தில் நிலமாவது, அல்லது மாசூலாவது அல்லது அறுவிடை செய்து வைக்கப்பட்டிருக்கிற தானியமாவது பாக்கிதாரன் வசத்திலில்லை. பாக்கிதாரன் ஸ்தலத்திலேயே ஆஜரில்லாத சுரோத்திரியம்தாராக யிருக்கிறான். ஜப்தி செய்யப்பட்டசொத்து பாக்கியைப்பற்றி டிமாண்டு நோட்டீசாவது அல்லது ஜப்தி செய்யப்பட்ட சொத்துகளுக்கு ஜாப்தாவாவது கொடுக்கப்படாத குடியானவனுடைய வசத்திலிருக்கிறது. குடியானவனுக்கு விரோதிகளாகயிருக்கிற கிராம நவுக்கர்கள் ஜப்தி செய்திருப்பதை குடியானவனுடைய தகவலுக்கே கொண்டுவராமலிருந்து விட்டு, குடியானவனுக்கு ஜப்தி செய்திருப்பது தெரியுமென்று தாசில்தாருக்கு தப்பான ரிப்போர்ட்டுச் செய்துவிடுகிறார்கள். குடியானவன் பேரில் களவுகேசு விசாரணை செய்யப்படும்பொழுது ஜப்தியைப்பற்றி குடியானவனுக்குத் தெரிவித்திருப்பதாகவும் பொய் சாக்ஷியமும் சொல்லி விடுகிறார்கள். இப்பேர்ப்பட்ட கேசுகளில் எல்லாம் மாஜிஸ்ட்ரேட்டுகள், கிராம நவுக்கர்களின் சாக்ஷியத்தை நம்பி யாதொரு குற்றமும் செய்யாதவனாகிய குடியானவனைத் தண்டித்து விடுகிறார்கள். இவ்விதமாக எளிய குடியானவனுக்குச் செய்யப்படும் அநீதிக்கு இப்போதியச்சட்டமே ஜவாப்தாரியாகயிருக்கிறது. ஆகையால் ஜப்தி செய்யப்படுகிற நிலமும் அதன்பேரிலிருக்கிற மகசூலோ, அல்லது களத்தில் அறுவிடை செய்து வைக்கப்பட்டிருக்கிற மகசூலோ இவைகள் யார்வசத்திலிருக்கிறதோ குடியானவனுக்கு ஜப்தி செய்திருக்கும் விஷயத்தை பற்றி அறிக்கைசெய்யவேண்டியது அவசியமென்று கண்டிதமான நிபந்தனைகள் அடங்கினவிதமாக ஷை ஆக்டின் 8-வது பிரிவை சீர்திருத்த வேண்டியது அத்தியாவசியமான சங்கதியாக யிருக்கிறது. இந்த சட்டத்திலுள்ள இந்தப்பெரியகுறைவைப் பற்றி இ. லா. ரி. 16 ம. 364-ல் ம. ஹைக்கோர்ட்டாரால் எடுத்துக் கூறப்பட்டு மிருக்கிறது. சக்கிரவர்த்தினி அவர்களுக்கும், ராமசாமிக்கும் நடந்த கேசில்—சில காலத்துக்குமுன் ஓங்கோல் தாலூகாவில் ஒரு அக்கிரகாரம் கிராமத்திலுள்ள குடியானவன் இந்த சீர்கேடான சட்டத்தினால் சிரமத்துக்குள்ளாக்கப்பட்டான் மாசூலில் குடியானவனுடைய பாகத்தை ஜப்திசெய்யக்கூடாதென்று விலக்கிவிட வேண்டும்.

இத்தியாதிகாரணங்களால் குடியானவனது சொல்லமுடியாத கஷ்ட நஷ்ட நிஷ்டூரங்கள் யிருக்கின்றன, இந்த விஷயத்தில் சென்னப்பட்டணம் சட்ட நிருபண ஸபையில் மெம்பராக யிருக்கும் சர்க்கார் உத்தியோகத்திலில்லாதமெம்பர்கள் வேண்டும் சிரத்தை எடுத்து வேண்டுவதைச் செய்வார்களா? சென்னப்பட்டணம் கவர்ன்மெண்டார் அவர்கள் இந்தச் சட்டத்தை சீர்திருத்துவதன் மூலமாக இந்த விஷயத்தில் சுரோத்திரியக் கிராமக் குடிகள் படும் சொல்லமுடியாத அவஸ்தையிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவார்களா?

The Indian Law Gazette.

PART I.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் I.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ஹு நவம்பர்மீ [நெ. 11.

EDITORIAL.

பத்திராதிபர் வியாசம்.

THE MASSES & THE LAW.

கிராமாந்தர ஜனங்களும்–சட்டமும்.

இவ்வுலகத்தில் மானிட வாழ்க்கையை சிறக்கச் செய்வது கல்வியும், அதனால் அடையக்கூடிய விபவங்களாகிய தன-தானிய ஸம்பத்துக்களுமேயாம். தன தானிய ஸம்பத்துக்களை கல்வியினாலன்றி அடைவது அஸாத்தியமான விஷயமா? கல்வியென்பது கிஞ்சிற்றேனுமில்லாமலும் நிரக்ஷர குக்ஷிகளாக அதாவது வயிற்றைக்கிழித்து உள்ளெல்லாம் தேடிப்பார்த்தாலும் ஒரு அக்ஷரத்தினது கந்தத்தின் மாசுகூட படிந்திருக்க உடைத்தாயிருக்காதவர்களாகவும் தன் கையொப்பமே யிடத் தெரியாது கையொப்பத்துக்குப் பதில் கீரல்கையெழுத்தென்னும் பெரிய தடி சாற்றுகிரவர்களாக யிருக்கும் கிராமாந்தரவாசிகளாகிய குடித்தனக்காரர்களில் அனேகர்களுக்கு பெரும் செல்வமும் புத்திர பாக்கியாதிகளும் எருளமாயிருக்கின்றனவே யென்று சிலர் கேழ்க்கக் கூடும். இதற்கு ஒரே ஜவாப்புத்தான் உண்டு. அதாவது கல்வியின்றி (அதாவது) ஸரஸ்வதி கடாக்ஷமின்றி லக்ஷிமிகடாக்ஷம் ஏற்படவே முடியாது என்பதுதான். சில கிராமங்களில் படிக்க எழுதத்தெரியாமலிருப்பவர்கள் முன்னோர்களுடைய ஸம்பாத்தியப் பெருக்கை வைத்து டம்பமாய் ஜீவனம் செய்து கனவான்கள் போல பாவித்து வருகிறார்கள். அப்பேர்க்கொற்றவர்களைப்பார்த்து இவர்களுக்கு ஒருவகையான வித்தையும் கிடையாதே இவர்களுக்கு சொத்தில்லையாவென்ற கேழ்வியை முன்பின் ஆலோசியாமல் கேட்டுவிடக் கூடாது. அப்பேர்ப் பட்டவர்களுடைய வம்ச சரித்திரத்தை விசாரித்து பார்க்குமளவில் அவர்களுடைய முன்னோர்கள் கற்றறிந்த வித்தையின் பயனே இப்போது இவர்கள் அனுபவிக்கும் செல்வமென்பது நன்கு வெளிவரும். அவர்களுடைய முன்னோர்களின் வம்ச வரலாற்றை விசாரிக்கும் விஷயத்தில் அவர்கள்தற்கால ஆங்கிலேயபாஷையில் நிபுணர்களாக யிருந்திராவிட்டாலும் மற்றும் பாஷைகளில் தேர்ச்சி யடைந்து கவிஞர்களாக யிருந்திராவிட்டாலும் வேறுவிஷயமான துறைகளுக்குறிய ஞான ஸம்பத்தை அடைந்து அதனால் ஐசுவரியத்தை சம்பாதித்திருப்பார்கள் என்றே ஏற்படும். நாம் முன்னொரு ஸஞ்சிகையில் கல்வியென்பது அநேக

ரூபங்களாக யிருக்கின்றன வென்று கூறியிருக்கிறோமாயினும் இங்கும் அக்கல்வி இன்னின்ன ஸ்வரூபமாக யிருக்கக்கூடுமென்பதைப்பற்றி எடுத்துரைக்க வேண்டியதிருக்கிறது. எந்தத் தொழிலுக்குறிய சாஸ்திரமாகட்டும் மற்ற எந்த விஷயத்தைக்குறித்த ஆதாரங்களாகட்டும் எழுத்து மூலமான கிரந்தங்கள் ஸ்வரூபமாகவேயே யிருக்கின்றன வென்பது யாவரும் அறிந்த விஷயம் அவைகளில் சிலவற்றை இங்கு உதாரணமாக எடுத்துச்சொல்வோம். தொழில்களுக்குறிய சாஸ்திரங்கள் எவை? அவற்றில் அதிஸாதாரணமாகஉள்ள சமையல் தொழில் என்பது மிகவும் கேவலமாக எண்ணத்தக்கது. சமையல் செய்யும் தொழிலை யுடையவனை "மடையன்" என்று நிக்ருஷ்டமாகஎண்ணுவது ஸகஜம். இதற்காதாரமாக நமது ஹிந்துக்கள் யாவரும் அறிந்த நளமஹாராஜனுடைய சரித்திரமே சாக்ஷியம். நளமஹாராஜன் கலிதொடர் காண்டத்தில் மடைத்தொழில்புரிந்து வந்துகொண்டிருக்குங் கால் தன்மைந்தர்களை கண்டவிடத்து தன் மக்களைக் கண்ணுற்று "என் மக்கள் போல்கின்றீர் யார்மக்கள்" என்றான். அப்போது அப்புதல்வர்களில் மூத்தோன் கலியின் கொடுமையால் உறுவம் முற்றிலும் மாறுபாடடைந்திருந்த தன்தந்தையை அறிய முடியாக் காரணத்தால் பின்வருமாறு பிரதியுத்தரம் கூறலாயினன்:—

"நெஞ்சாலிம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லா
தஞ்சாரோ மன்னர் அடு மடையா—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய் என் கோமான்
வாய்மையே கண்டாய் வலி."

இதில் ஓரிடத்தில் அடுமடையா வென்றும் மற்றோரிடத்தில் சிறுதொழிலாய் என்றும் கேட்டிருக்கிறான் நளமஹாராஜனின்புதல்வன். அப்பேர்ப்பட்ட தொழிலை புரிந்தனனாயினும் சமயல் செய்வதில் நளனுக்கு ஸமானமானவர் யாவருமே கிடையாது என்பது திண்ணம். இப்போதும் சமயல் எங்கும் நன்றாய் வாய்த்திருக்குமிடத்து "சமயலாவது என்ன நளபாகமாயிருந்தது" என்றே சொல்வது வழக்கமாகயிருந்து கொண்டிருக்கிறது. அதல்லாமலும் மனிதவாழ்க்கைக்குறிய சுகானுபவங்களில் சுகபோஜனமே முதன்மையானது. போஜனமில்லாவிடில் வேறு ஜீவிப்பது எங்ஙனம். இதைக் கொண்டே.—

"ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளைக்கே லென்றால் ஏலாய்—ஒருநாளும்
என்னோவறியாய் இடும்பைகூர் என் வயிறே
உன்னோடு வாழ்த லரிது."

என்று கூறப்பட்டிருக்கிறது. ஸமஸ்த ஜீவகோடிகளுக்கும் ஆகாரத்தைக்குறித்த விசாரத்திக்கு மேல்பட்ட விசாரம் வேறு எதுவுமே கிடையாது. இதுகாரணம் பற்றி அறுசுவை போஜனம் தயார் செய்வதற்குறிய பாக சாஸ்திரம் யேர்ப்பட்டிருக்கிறது, படிக்க எழுதத் தெரியாத வர்களும் படிக்க எழுதத் தெரிந்தவர்களைக்கொண்டு பாக சாஸ்திரத்தைப்படிக்கச்செய்து அதை கவனமாய்க் கேட்டு அறிந்து ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பொதுவாய் சமையல் செய்வதிலும் பண்டு பலகாராதிகள் மிட்டாய்கள் முதலிய பலவகை சிற்றுண்டி செய்வதிலும் வெகுநிபுணர்களாகி விடுகிறார்கள். நிபுணர்களாகி விடுகிறார்களென்ற திருக்கட்டும். அதனால் அடையும் பயனென்னவென்று விசாரிப்போம். பெரிய விருந்துகளிலும் விவாஹாதிசுபகாரியாதி விசேஷங்களிலும் நிபுணர்களான சமையற்காரருக்கு அபேக்ஷை அத்தியாவசியமாக ஏற்படுகிறது. இதல்லாமலும் அரசர் முதலாயினோர் அறண்மனைகளிலும் பெரிய உத்தியோகங்களை வகிப்போரது க்ரகங்களிலும் ஸமர்த்தர்களான சுயம்பாகிகளை நியமிக்க அவசியம் யேர்ப்படுகிறது. இன்னும் மேதாவிகளான பரிசாரகர்களுக்கு அநேக விதங்களில் அவசியம் யேர்ப்பட்டுக் கொண்டே யிருக்கிறது. அப்படி அவசியம் நேரிடுங்கால் சமையற்காரர்களின் யோக்கியதா பக்ஷத்துக்குத் தக்கவாறு பிரதிப் பிரயோஜனமும் ஏற்கனவே ஏற்படுகிறது. இந்த விருத்தியை அனுஸரித்தோர்க்கு முதலில் உணவுக்குக் குறைவில்லை. அப்பால் பணத்துக்கும் குறைவில்லை. இத்தொழிலைப் பின்பற்றிய அநேகர் இச்சென்னைமாநகரில் லக்ஷக்கணக்கான ஐவேஜு சேர்த்தும் இன்னும் சேர்த்துக் கொண்டு மிருக்கிறார்கள். ஆகையால் சமையல் தொழிலுக்கும் பாக சாஸ்திரம் தெரிந்திருக்கவேண்டுவது அவசியம் என்றே விசிதமாக தெரிகிறது. அதானது ஷை தொழிலுக்குறிய சாஸ்திரமாகிய பாகசாஸ்திரத்தை; எழுதப்படிக்கத்தெரிந்திருப்பதனால், சாஸ்திர புஸ்தகங்களை நேரில்படித்து அறிந்து கொண்டாலுமே, அல்லது எழுதப்படிக்கத் தெரியாதவர்கள், எழுதப்படிக்கத் தெரிந்தவர்களைக் கொண்டு படிக்கச் சொல்லி கேட்டுத்தெரிந்துக் கொண்டாலுமே, அப்படி கிரகித்துக் கொள்ளும் அறிவுக்குத்தான் 'கல்வி' யென்று பெயர் இதுபோலவேயே "கிருஷி" சாஸ்திரம் இருக்கிறது. கிருஷி சாஸ்திரம் என்பது நிலங்களைப் பயிர் செய்வது சம்பந்தமான சாஸ்திரம்தான். ஷை சாஸ்திரத்தைப் படிப்பதனால். இன்னின்ன நிறமுள்ள மண்ணில் இன்னின்ன விதமாயுள்ள ஸத்துக்கள் அடங்கியிருக்கிறதென்பதும், இன்னின்ன விதமான மண்ணில் இன்னின்ன பயிர்கள் உண்டாகு மென்பதும், இன்னின்ன விதமாயுள்ள பயிர்களுக்கு இன்னின்ன விதமாக உழவு செய்யவேண்டு மென்பதும், இன்னின்ன பயிர்களுக்கு இன்னின்ன உரங்கள் போடவேண்டுமென்றும், இன்னின்ன பயிர்களுக்கு இன்னின்னநோய்கள் உண்டாகக்கூடிய தென்றும், ஷை நோய் வராமல் தடுப்பதற்குச் செய்யவேண்டியவேலைகளும், ஷை நோய்கள் வந்துவிட்டால் அவைகளை நிவர்த்தி செய்வதற்கு செய்யவேண்டிய காரியங்களும், இதுபோலொத்த சகல விஷயமும் தெரியவரும். இந்த கிருஷி சாஸ்தி

ரத்தை நன்றாய் படித்தோ அல்லது வேறு எவ்விதத்திலும் தெரிந்துகொண்டோ பயிர் செய்பவர்களுக்கு பூமாதேவி தக்கப் பிரதிப் பிரயோசனத்தை அளிக்கிறாளென்பதை நம்மில் யாவரும் நன்கறிவோம். ஆகையால் தொன்றுதொட்டு அனுஸரித்து வரும் பயிரிடும் முயற்சிகளை பின்பற்றி வரும் கிராம வாசிகள் பயிரிடும் தொழிலையே பின்பற்றி வரும் காரணத்தால் சுகவாசிகளாகயிருப்பதையும் நாம் நன்றாக அறிவோம். இப்பேர்ப்பட்ட கிராம வாசிகளில் 100-க்கு 90-பேர்களுக்கு மேற்பட்டு எழுதப்படிக்கத் தெரியாத மகான்கள் தான். எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக யிருந்தாலும், இவர்களை கல்வியே யில்லாதவர்களென்று சொல்லலாமா? கூடாது. பயிரிடும் தொழிலில் நிபுணர்களாக யிருப்பதால், பயிரிடும் சாஸ்திரத்தை நன்கறிந்தவர்களென்றே அவர்களைச் சொல்ல வேண்டும். இதுபோலவேயே, ஸங்கீத, சாகித்திய, பரத சாஸ்திரங்களும், சித்திரமெழுதும் சிற்ப சாஸ்திரமும், இன்னும் இவை போலொத்த அநேக சாஸ்திரங்களும் இருக்கின்றன. இந்த எல்லா சாஸ்திரங்களிலும் ஒவ்வொன்றையும் படிக்க எழுதத் தெரியாதவர்கள் எவ்விதத்திலோ தெரிந்து கொண்டு நிபுணர்களாக கியாதிபெற்று சுகஜீவிகளாகயிருக்கிறார்கள். இத்தியாதி காரணங்களால் கிராம வாசிகளில் சிலர் தக்க ஐவேசுள்ளவர்களாக யிருப்பவர்கள், மேல் சொல்லப்பட்ட விதமாயுள்ள அறிவாகிய கல்வியினால் பயனடைந்தவர்களாக யிருக்கவேண்டும். அல்லது அவர்களது முன்னோர்கள் அவ்விதமான அறிவினால் பயனடைந்தவர்களாக யிருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆகையால் கல்வியின் பெருமையே பெருமையென்பது எவ்விதம் பார்த்தாலும் வெளியர்கிறது.

பற்பலவகைகளில் பொருள் சம்பாதிக்கும் சமர்த்துப்போல, சம்பாதித்த பொருளைக் காப்பாற்றும் சமர்த்து மிகவும் பெரிதானது. அதை வைத்தே "அர்த்தானும் ஆர்ஜனே துக்கம், ஆர்ஜிதானாந்து ரக்ஷணே" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பொருள் சம்பாதிப்பது கஷ்டமானது. அதிலும் சம்பாதித்த பொருளைக் காப்பாற்றுவது அதிகக் கஷ்டமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பொருள் சம்பாதிப்பதற்கும் ஸம்பாதித்த பொருளைக் காப்பாற்றுவதற்கும் உரிய கல்வி இக்காலத்தில் வேறொன்றுமுளது. அது தான் நமது நாட்டில் வழங்கிவரும் சட்டங்களின் ஞானம். சட்டதிட்டங்களின் ஞானம் சம்பாதிப்பதனால் சாதாரண ஜனங்கள் எப்படி பணம் சம்பாதிப்பது? வக்கீல் உத்தியோகம் பார்ப்பதனாலா? அல்லது லா ஏஜெண்டாக யிருப்பதனாலா? வென்று கேழ்க்கக்கூடும். இது இரெண்டினாலுமில்லை. நமது நாட்டில் வழங்கிவரும் சட்டதிட்டங்களில் இன்னாருக்குத்தான் ஞான மிருக்கவேண்டியது என்றுண்டா? இதற்கு ஜவாப்பு பால விருத்தர்களுக்கும், ஆண்களுக்கும், பெண்களுக்கும் எளியோருக்கும், வலியோருக்கும் ஆகிய சகலருக்கும் நமது நாட்டில் வழங்கிவரும் சட்டதிட்டங்கள் தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.

எந்த தேசத்திலும் இராஜாங்கத்திலும் வழங்கிவரும் பற்பல சட்ட திட்டங்களுக்குள்ளும் பற்பல மதஸ்தர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் ஷையார்களின் குடும்ப விருத்திக்காக செய்யப்படும் விவாஹத்தைப் பற்றியும், அப்பால் ஷை விவாஹத்தின் மூலமாய் உண்டாகக்கூடிய குழந்தைகள், குழந்தை பிறவாத கேசுகளிலும், குழந்தை பிறந்திருந்தாலுமே மற்றும் சில கேசுகளிலும் செய்து கொள்ளக்கூடிய ஸ்வீகாரம், (தத்து) அப்பால் குடும்பஸ்தர்களுக்குள் குடும்பத்திலிருக்கும் சொத்துக்கள் விஷயமாய் செய்து கொள்ளும் பாகம், புருஷன் இறந்துபோன கேசுகளிலும் மற்றக்கேசுகளிலும், பெண்பிள்ளைகளுக்கும் இதர கேசுகளில் மற்றவர்களுக்கும் கிடைக்கக்கூடிய ஜீவனாம்சம் குடும்பத்தில் யேர்ப்பட்ட கடன்களைத் தீர்ப்பது சம்பந்தமான விதிகள், சொத்துக்களுக்கு ஸ்திரீகளுக்கு உள்ள பாத்தியதை, சொத்துக்களை விநியோகம், பராதீனம் முதலியது செய்வதில் அவரவருக்குள்ள பாத்தியதை, யார் யார் சொத்துக்கு யார் யார் வார்ஸ் பாத்தியதையை அடைகிறார்கள், என்றவிஷயங்களைக்குறித்து நிர்ணயம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டு அனுஷ்டானத்திலிருந்து வரும் சட்டம் மிகவும் பிரதானமானதல்லவா? இது எல்லோருக்கும் கட்டாயம் தெரிந்திருக்கவேண்டியதில்லையா? ஜலத்தை உடைய நதியையோ அல்லது சமுத்திரத்தையோ தானே நேரில் அதாவது தோணிமுதலிய கருவிகளில்லாமல் கடந்து போகவேண்டுமானால் நன்றாக நீந்தத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம் அல்லவா? அதுபோல உலக வாழ்க்கையாகிய சமுத்திரத்தை சுலபமாகவும் சுகமாகவும் கடந்து செல்ல விரும்பினால் உலக வாழ்க்கையில் நமது சரீர சம்பந்தமாகவும் பொருள் சம்பந்தமாகவும் இயற்கையில் நேரிடக்கூடிய ஸம்பவங்களின் ஸாதகபாதகங்களை தானே தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அப்படி நேரில் தெரிந்துகொள்ளாத விஷயத்தில் ஒரு சிறிய ஆற்றைக் கடந்து மறுகரை சேறுவதற்கும் கூட தனக்கு நீந்தத்தெரியாம லிருப்பவன் ஒரு ஓடத்தின் உதவியைத் தேடவும், அந்த ஓடத்தின் உதவியைச் சம்பாதிப்பதில் யேர்ப்படும் கஷ்ட நஷ்டங்களை அடையவும், வேண்டியிருப்பது போல, கிரகக் கிருத்தியங்களை நடத்திவருவதில் அப்போதைக்கப்போது நேரிடக்கூடிய அதிஸாதாரணமான விஷயங்கள் சம்பந்தமான சங்கதிகளிலும் தானாகவேயே இன்னது செய்ய வேண்டுமென்று அறிந்து செய்ய முடியாமல் சட்டமறிந்தவர்களைத் தேடிப்போவதினாலுண்டாகும் ஸாதகபாதகங்களையும் கஷ்ட நஷ்டங்களையும் அடையவேண்டியதாக யிருக்கும்.

சட்டத்தின் ஸாரம்சம் பால விருத்தர்களுக்கும், ஆண் பெண்களுக்கும், எளியோருக்கும் வலியோருக்கும் ஒன்றுபோல எப்படித் தெரிய வேண்டியது அவசியம் என்பதைப்பற்றி பற்பல உதாரணங்களால் சொன்னாலன்றி வியக்தமாகத் தெரிவது வருத்தம். ஆகையால் அது விஷயத்தைப் பற்றி இதன் கீழ் ஒன்றின் பின் ஒன்றாய் விவரித்துச் சொல்லியிருக்கிறோம்.

(இன்னும் வரும்.)

MISCELLANEOUS SUITS.

நானாவிதமான வியாஜ்ஜியங்கள்.

(முன்மாதம் முதல் பாகம் 159-ம் பக்க தொடர்ச்சி.)

சிலர்கள், நிலங்களைப் பயிர்செய்யும்பொருட்டு யெழுதிக் கொடுத்த தஸ்தாவேஜாகிய A. அடையாளமிடப்பட்ட தஸ்தாவேஜில் ஷை நிலங்களில் தங்களுக்கு குடிக்காணி பாத்தியமிருப்பதாகச் சொல்லாமலிருப்பதோடு கோவிலுக்கு ஸ்வாமிபோகமும், கவர்ன்மெண்டுக்கு ரொக்க குத்தகைத்தொகையும் தாங்கள் அந்த நிலங்களை அனுபவித்து வரும்வரை கொடுத்துவருவதாக எழுதியிருக்கும் விஷயம், கோவில் தர்மகர்த்தர்கள் கலெக்டருக்கு யெழுதிக்கொடுத்த முக்சலிக்காவில் குடிக்காணிப் பாத்தியதையைப் பற்றி குறிப்பிடப் படாமலேயே யிருப்பதும் A. அடையாளமிட்ட தஸ்தாவேஜில் கோவில் உத்ஸவ காலங்களில் வேலை ஆட்கள் சவுதரித்துக் கொடுப்பதாக எழுதியிருப்பதும், விசேஷப் பயிர்களிட்டாலுமே புறம்போக்கு தரிசு இத்தநிலங்களை பயிரிட்டாலுமே கவர்ன்மெண்டார் யேர்ப்படுத்தும் தீர்வையைக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டிருப்பதுமாகிய விஷயங்கள்—இவைகளை யெல்லாம் யோசிக்கும்பொழுது குடியானவர்களுக்கு குடிக்காணிப் பாத்தியதை யிருந்ததென்று தீர்மானிப்பதைப் பார்க்கிலும் கோவிலாருக்கே குடிவாரப்பாத்தியதையும் மேல்வாரப் பாத்தியதையமிருந்ததென்று தீர்மானிப்பதே நியாயமாக யிருக்குமென்று யேற்படுகிறது. ஷை கிராமத்தில் கோவிலாருக்கு குடிவாரப் பாத்தியதையும் மேல்வாரப்பாத்தியதையும் கிடையாதென்பதை ருஜூச் செய்யக்கூடிய அல்லது அப்பேர்ப்பட்ட பாத்தியதைகள் கோவிலாருக்குக் கிடையாதென்று அனுமானிக்கக் கூடிய ரிக்கார்டுகள் ஒன்றுமே பிரதிவாதிகளால் ஆஜர் செய்யப்படவில்லை. எனது அபிப்பிராயத்தில் வாதிகள் தஸ்தாவேஜூகள் மூலமாக ருஜூச் செய்திருக்கிறார்கள். தஸ்தாவேஜூகள் மூலமாய் நடத்தப்பட்டிருக்கும் நடபடிக்கைகளும் கோவிலாரே பூராக் கிராமத்துக்கும் பாத்தியஸ்தர்களென்றும் மேல் வாரத்துக்கு மாத்திரம் பாத்தியஸ்தர்களாக இல்லாமல் குடிவாரத்துக்கும் மேல்வாரத்துக்கும் பாத்தியஸ்தர்களாக யிருக்கிறார்களென்றுமே காட்டுகிறது" இதல்லாமல் 1806-ம்௵ முதல் 1840௵ வரையுள்ள J. அடையாளத் தொகுதிக் கணக்குகளே வாதிகளின் கக்ஷியை ருஜூச்செய்யப் போதுமானவைகளாக யிருக்கின்றனவென்றும் நான் சொல்லுகிறேன். உதாரணமாக J. 74 அடையாளமிட்ட தஸ்தாவேஜினால், "ப்ரபோஸல்" கட்டுக்குத்தகைக்குப் பெற்றவன் தானே மாகுல்களை எல்லாம் வசூல்செய்து அதிலிருந்து பயிரிட்ட குடியானவர்களுக்கு புறக்குடிவாரத்தைக் கொடுத்திருப்பதாக காட்டுகிறது.

இந்த சங்கதிகளுக்கு எதிரிடையாக அறைகுறையானதும்; ஒரு கக்ஷி நடபடிக்கைகளாகவும், துர்ப்பலமான அனுமானங்களைச் சார்ந்ததுமான கக்ஷியை அப்பீல்வாதிகள் வாதிப்பதாக நான் நினைக்கிறேன். ரொக்க குத்தகை ஏற்பாடானது தீர்வை சௌகரியமான ஏற்பாடாகையால், கோவிலார் இனும்தாராக மட்டும் ஆகிறார்களென்றும் இனும் கொடுப்பதானது ஸர்க்கார் தீர்வையில் ஒரு பாகத்தையாவது அல்லது பூராவையுமாவது கொடுத்ததாகமட்டும் நினைக்கப்பட வேண்டுமென்றும் குடிவாரத்தையும் சேர்த்துக் கொடுத்ததாக ஆகமாட்டாதென்றும் குடிவாரப் பாத்தியதையும் கோவிலுக்கு யிருப்பதாக ருஜூச் செய்யவேண்டிய பாரம் வாதிகளைப் பொறுத்ததென்றும் ஒரு கக்ஷி சொல்லப்பட்டது. அப்பேர்ப்பட்ட கேசுகளில் ருஜூச்செய்யும் பாரத்தைப் பற்றி அடியில் கண்டபடி சொல்லுகிறேன். 1912-ம்௵ முதல் நானும் சேர்ந்து சில தீர்ப்புகள் செய்திருக்கிறேன். அவைகளில் இனும் விடப்பட்ட காலத்தில் இனும் விடப் பெற்றுக்கொண்டவருக்கு குடிவாரப் பாத்தியமும் இருந்ததென்று ருஜூச்செய்யும் பாரம் இனும் தாரைப் பொறுத்ததென்று தீர்ப்புச் செய்யப்பட்டன. ஆனால் 1910-ம் ௵த்திய முன் தீர்ப்பின் அபிப்பிராயத்திலிருந்து வித்தியாஸப்பட்டிருந்த மேல்கண்ட என் அபிப்பிராயத்தை இந்தக் கோர்ட்டிலேயே பின்னீடுசெய்யப்பட்ட சிலகேசுகளில் ஒப்புக்கொள்ளவில்லை. ஷை பின் தீர்ப்புகளில் குடிவாரப் பாத்தியதையும் இனும் தாருக்கு இல்லாமலிருந்தாலுமே, அந்தக் கிராமமானது எஸ்டேட்டு லாண்ட் ஆக்ட்டு 3-வது பிரிவு 2 (d) உள்பிரிவுப் படிக்குள்ள சொத்தாகி விட்டாலுமே சிவில் கோர்ட்டு அதிகார வரம்புக்குள்ளில்லாமல் இந்த வியாச்சியங்கள் போய்விடும் என்றும் இனும் விடப்பட்ட காலத்தில் குடிவாரப் பாத்தியதையும் இனும்தாருக்கு விடப்படவில்லையென்றும் கக்ஷி சொல்லி இப்பேர்ப்பட்ட கேசுகள் சிவில் கோர்ட்டு அதிகார வரம்புக்குள் வரமாட்டாதென்ற கக்ஷியைச்சொல்லுகிறவர்கள் தான் அந்தச் சங்கதியை ருஜூச்செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். ராமலைப்பட்டி பாப்பய்யரெட்டிக்கும் நந்தூருபேத வெங்கடாச்சார்யுலுக்கும் நடந்து 1914-ம் ௵த்து ம. வீ. நோ. 794-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தைப் பார்க்க. கற்றறிந்த ஸபார்டினேட் ஜட்ஜ் (என் அபிப்பிராயத்தை அனுசரித்திருக்கலாம்) ஆரம்பமுதல் கொண்டே கோவிலாருக்கே குடிவாரப் பாத்தியதையுமிருந்து வருவதாக வாதிகளையே ருஜூச்செய்யும்படி செய்து வாதிகள் ருஜூச் செய்துவிட்டதாகவும் தீர்மானித்தார். ருஜூச் செய்யவேண்டிய பாரம் இன்னாரைப் பொறுத்தது என்ற சங்கதியைக் கவனியாமலேயே, இந்தக்கேசின் சாக்ஷியங்களினால் வாதிகள் சொல்லும் கக்ஷி திருப்திகாமாக ருஜூவாயிருப்பதாகவேயே நான் திருப்தி அடைகிறேன். குடிகளுக்கு அனுபோக பாத்தியதையில்லாதவும், இனும்தாரே மிராசு பாத்தியதையையும் உடையவராக யேர்ப்பட்டிருக்கும் ஒரு இனும் கிராமத்தில், ஷை கிராமத்துக்குப் பூராசுதந்திர பாத்தியதையும் இனும்தாரையே தான் சேர்ந்தது. மேல்வாரப் பாத்தியதையைப்பற்றியும், குடிவாரப் பாத்தியதையைப்பற்றியும் உள்ள வித்தியாசங்களைப்பற்றி வியவகரிப்பதில் யாதொரு பிரயோசனமுமில்லை. (குடிவாரம் என்ற வார்த்தைக்கு அநேக அர்த்தங்கள் உண்டு. அது வார்த்தையின்பேரில் யேர்ப்பட்டிருக்கிற அர்த்தம்; கிடைக்கும் மாசூலில் பயிரிட்டவனுக்குள்ள பாகம் மென்று அர்த்தம். அந்தஅர்த்தத்தில் பயிரிடும்நிலத்தில் குடியானவனுக்கு அனுபோக சாசுவதபாத்தியதை யிருந்தாலுமே, அல்லது ஒரு வருஷத்துக்குமட்டும் குத்தகைக்கு வாங்கினவனாக யிருந்தாலுமே, அல்லது வருஷத்துக்கு வருஷம் குத்தகைக்கு வாங்குகிறவனாக யிருந்தாலுமே, அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு குத்தகைக்கு வாங்கினவனாக யிருந்தாலுமே, அல்லது, இஷ்டப்படி அப்புறப்படுத்திவிடக்கூடிய குடியானவனாக யிருந்தாலுமே, குடிவாரமானது குடியானவனைச் சேர்ந்ததாக யிருக்கிறது. மேலே கண்ட அநேக விதக் குடியானவர்களில் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக யிருந்தாலுமே, ஷை நிலத்தை அனுபவித்து வரும்வரை குடிவாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பாத்தியதைதான் குடிவாரமென்று சொல்லப்படும். கடாசியாக தன் அனுபவத்திலிருந்து வருகிற நிலத்தைசாசுவதமாக அனுபவிக்கும்பாத்தியதையையுடைய குடியானவனுக்குள்ள பாத்தியதை யென்றும் அர்த்தமாகும். இப்போது கடாசியாகச் சொல்லப்பட்ட அர்த்தத்தில், அதற்கு மிராசுதாரி பாத்தியதை யென்றும், சில வேளைகளில் குடிமிராசு பாத்தியதை யென்றும் சொல்லப்படும். சென்னனுக்கும், கொண்டம நாயுடுவுக்கும் நடந்து 1913-ம் ௵த்து 26-ம. லா. ஜ. 169-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில் குடிமிராசு என்பதைப்பற்றி ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் வியவஹரித்திருப்பதைப் பார்க்கவும். அந்தத் தீர்ப்பினாலும், கவர்ன்மெண்டாரிடமிருந்து சுரோத்திரியம் இனும் பெற்றுக்கொள்ளும் ஒரு மிராசுதாருக்கு ஷை நிலங்களிலிருக்கும் முன் குடிவாரப்பாத்தியதை போய்விடாதென்றும், அவ்வரை மிராசுதாரென்றும். இனும்தாரென்றும் அழைக்கலாமென்றும் ஏற்படுகிறது.)

அல்லாமலும், சுமார் 1867-ம் ௵ முதற்கொண்டு அவர்களும், அதற்குமுன் அனுபோகபாத்தியதையைஉடைய அவர்களுடைய முன்னோர்களும், அவரவர்கள் அனுபோகத்திலிருந்த நிலங்களை, கோவில் தர்மகர்த்தர்களும் கோவில் உத்தியோகஸ்தர்களும் அறிய அடமானம், ஒத்தி, கிரையம் முதலியது செய்து வந்திருப்பதாகவும் அவர்களை குடிமிராசுதார்களென்றும் ஒப்புக்கொண்டு அவர்களுக்கு எழுத்துமூலமான தீர்வை ரசீதுகள் கொடுத்திருப்பதாகவும் அப்பீல் வாதிகள் வாதம் செய்கிறார்கள். பிரதிவாதிகள் பக்கம் தாக்கல்

செய்யப்பட்டிருக்கிற; 75, 76, 77 III A. III B. அடையாளமிட்ட தஸ்தாவேஜூகள் 1867-ம்௵த்துக்கு முற்பட்டவைகளாகயிருந்த போதிலும், அவைகள் எளிதில் உண்டுபண்ணப்படக்கூடிய ஓலை ஏடுகளாகயிருப்பதையிட்டு அவைகள் உண்மையானவைகளென்று நம்பிவிடக்கூடாதென்பதாய் ஸபார்டினேட் ஜட்ஜ் பட்டிருக்கும் அபிப்பிராயத்துடன் நானும் கலந்துகொள்ளுகிறேன். கோவில் தர்மகர்த்தர்களும், கணக்கப்பிள்ளைகளும் பயிரிடும் குடிகள் ஸ்தானத்திலாவது அல்லது பயிரிடுகிறவர்களிடம் குத்தகைக்குவாங்கினவர்கள் ஸ்தானத்திலாவது, ஷை கிராமநிலங்களின் விஷயத்தில் சிரத்தையுள்ளவர்களாக யிருந்திருக்கிறபடியால், கோவிலுக்கு விரோதமாக அவர்கள் செய்திருக்கும் நடபடிக்கைகளினால் யாதொரு பிரயோசனமுமில்லை. ஒரு நிலஸ்வான், தன்னுடைய பாத்தியதைக்கு விரோதமாக தன் குடியானவனுக்கு சில பாத்தியதைகளைக் கொடுக்க அர்ஹனாகயிருக்கும் விஷயத்தில், அவன்குடியானவனுடைய செய்கைகளை தன் சம்மதத்தின் மூலமாகவாவது அல்லது பின்னீடு தன்னையே தடைப்படுத்தக்கூடியவிதமானநடபடிக்கைகளின் மூலமாகவாவது சகித்துக்கொண்டிருந்தால் அப்பேர்ப்பட்ட பாத்தியதையை அவன் கொடுத்துவிட்டதாகவேயே ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால், ஷை கோவில்நிலத்தை அனுபவித்து வருகிற குடியானவர்களுக்கு, கோவிலினுடைய அத்தியாவசியத்தையோ அல்லது லாபத்தையோ கருதியல்லாது, வேறுவிதத்தில், ஷை நிலத்தில் ஷை குடியானவர்களுக்கு முன் யேர்ப்பட்டிருந்த பாத்தியதைகளைவிட அதிகமான பாத்தியதைகளைக் கொடுத்துவிட கோவில் தர்மகர்த்தர்களுக்கு சட்டப்படி அதிகாரமே கிடையாது. ஆகையால் தர்மகர்த்தர்கள் சம்மதித்துக் கொண்டிருந்ததும், அவர்களுடைய நடபடிக்கையும், கோவிலினுடைய பாத்தியதைகளை அடியோடு கெடுத்துவிடமாட்டாது. ஸத்தியஸ்ரீக்கும், கார்திக்குக்கும் நடந்து 1912-ம் வருஷத்து 15-கல். லா. ஜ. 227 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில் ஜெங்கின்ஸ் சீப் ஜஸ்டிஸ் பின்வருமாறு சொல்லுகிறார் :—"சாசுவத அனுபோகமிருப்பதாக நினைப்பதற்கு, அந்த அனுபோகமானது எப்போதுமே சாசுவதமாகவும் பாரம்பரையாகவும் இருக்கவேண்டுமென்று எண்ணப்பட்டதாகவும், அல்லது பின்னீடு அப்பேர்ப்பட்ட நிபந்தனையுடன் கொடுத்து விடப்பட்டதாகவாவது இருக்கவேண்டும். ஆனால் ஒரு சங்கதி நடந்ததாக வைத்துக் கொள்ளவேண்டுமானால் அது கிரமமாகவும் ஒழுங்காகவும் நடந்திருக்க வேண்டுமென்பது அனுமானம். சட்டத்தினுடைய கொள்கைக்கு விரோதமாக ஒரு சங்கதி செய்யப்பட்டிருப்பதாக அனுமானப்படக்கூடாது. இதனால் தான் கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தை உறுதியானதாக ஒப்புக்கொள்ளமுடியவில்லை. ஏனென்றால் எந்த சொத்தின் விஷயமாக இந்த அனுமானம் உபயோகிக்கப்பட்டதோ அந்த சொத்தானது தர்ம சொத்தாக யிருக்கிறது".

குத்தகை யேர்ப்படும் காலத்தில் அது தர்ம சொத்தாகவே யிருந்திருந்தால், அந்த ஊஹத்தை உபயோகப்படுத்துவதை அது தடை செய்யும். ஏனென்றால் சாசுவதமாக இருக்கும்படியாக யேர்ப்படுத்தப்படும் தீர்வையானது ஷை தீர்வை யேர்ப்படுத்தப்படுங்காலத்தில் போதுமானதாக யிருந்த போதிலும் தீர்வையை அப்போதைக்கப்போது லாபகரமான விதமாக உயர்த்திக்கொள்ள மார்க்கமில்லாமல் சாசுவதத் தீர்வை யேர்ப்படுத்துவது தர்மகர்த்தருடைய வேலைக்கு அடுக்காததாகையால் அவ்விதம்நடந்திருக்கு மென்ற அனுமானப்படுவது ஸாத்தியமில்லை. மஹாராணி ஷிபெஸ்ஸோரிடெபியாவுக்கும் மொதுராநாத் ஆச்சார் ஜோவுக்கும் நடந்து 1869-ம் ௵த்து மூ. இ. அ 270, 275 ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தைப் பார்க்க. ஒரு கோவில் குடியானவனுடைய பாத்தியதைகள் முதலிலேயே, ஒரு தஸ்தாவேஜில் கண்ட நிபந்தனைகளின் மூலமாக, திட்டமாக இன்னது தான் என்று ஏற்பட்டுப் போனபிறகு, அந்தக் கோவிலினுடைய தர்மகர்த்தர்களுடைய நடபடிக்கையினால் அந்தக் குடியானவனுக்கு மேற்பட்ட பாத்தியதைகளை யேர்ப்படுத்தக்கூடியதாக காலாவதிச் சட்டத்தின் நிபந்தனைகளிலும் யாதொன்றும் காண்பிக்கப்படவில்லை. பிரதிவாதிகள் பக்கம் தாக்கல் செய்யப்பட்ட பரிவர்த்தனை மனுக்கள் அநேகத்தில் கண்டிருக்கிற விஷயங்கள்—அதாவது ஒத்திவைத்தவர்களுக்கு அனுபோகபாத்தியதை உண்டென்று சொல்லியிருக்கும் விஷயமானது உண்மையில்லை யென்ற விஷயமானது—பின்னீடு சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற தரிசு நிலங்கள் நீங்கலாக முன் கோவில் பண்ணை சாகுபடியிலேயே யிருந்ததாக ஒப்புக்கொள்ளப்படுகிற நிலங்களையும், பொய்யான வக்கணைகளுடன் பராதீனம் செய்யப்பட்டிருக்கிற சங்கதியினால் தெரியவருகிறது.

F. அடையாளமிட்ட தஸ்தாவேஜாகிய பைமாஷ் கணக்கில் 9 குடிமிராசுக்கரைக்காரர்கள் கண்டிருப்பதாகவும், இந்தக் கோவிலையும் அவர்களோடுகூட ஒரு குடிமிராசுதார் கரைக்காரர் என்று கண்டிருப்பதாகவும் அப்பீல் வாதிகள் மற்றும் ஓர் வாதம் செய்கிறார்கள். இந்த பைமாஷ் கணக்குகள் முதலில் தணிந்த ரிவினியூ உத்தியோகஸ்தனாலும் ஸர்வேயர்களினாலும் தயாரிக்கப்பட்டு, (அதாவது வட்டம் உதவிக் கணக்கப்பிள்ளைகள், முஜூம்தார் வகையறாக்கள்) அப்பால் ப்ரைசேடியர் என்ற மேல்உத்தியோகஸ்தரால் அந்தக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு சீர்திருத்தப் படுகின்றன. 1816-17-ம் ௵த்துக்குறிய பைமாஷ் கணக்காகிய F. அடையாளத் தஸ்தாவேஜில் வீடு கட்டுவதற்குறிய நிலங்களுக்கும் அவைகளோடு சேர்ந்த "மனைக்கொல்லை" என்று பெயர் விளங்கிய கொல்லை நிலங்களுக்கும் மாத்திரம் "மிராசு" என்ற பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இந்த மனைக்கொல்லைகளிலும் கூட 21-ல் 16-மனைக் கொல்லைகள் 16 குடியானவர்களுக்கு மிராசு பாத்தியதையுடன் சேர்ந்து சொந்தப்பட்டதென்று சொல்லப்படுகிறது. பாக்கி 5- மனைக் கொல்லைகளும் கசவர்க்கம் குடியானவர்களுக்கு (அதாவது கோவில் நிலங்களை சாகுபடி செய்வதற்காகவேயே கிராமத்துக்கு கோவில் மிராசுதாரால் புதிதாகக் கூட்டிக்கொண்டு வந்து வைக்கப்பட்டு சாகுபடி செய்வதை நிறுத்திவிடுங் காலத்தில் ஷை குடியிருப்பு இடத்தை திரும்ப விட்டுவிடுகிறதென்கிற ஒப்பந்தத்தின் பேரில் மிராசுதாரால் மனை நிலம் கொடுக்கப் பெற்றவன்)ச்சேர்ந்ததாக யிருக்கிறது. உள்ளூர் புறக்குடிகளுக்கு (அதாவது அசலூர் புறக்குடிகளும் கசவர்க்கம் குடிகளும் அல்லாதவர்கள்) வழக்கமாக கிராமத்தில் குடியிருப்பு இடத்தை உடைத்தாயிருக்கும் பாத்தியதை உண்டு. மிராசு என்ற வார்த்தைக்கு விசாலமான அர்த்தம் ஒருவருக்கே உறிய பாத்தியம் என்பது தான். அது கோவில்கள் சம்பந்தமான வேலைகளின் பாம்பரை பாத்தியம் என்பதையும் குறிக்கும். மிராசு என்ற வார்த்தையை உள்ளூர் புறக்குடிகளுக்கு கிராமத்தில் குடியிருப்புப் பாத்தியதையைக் காட்டவும், தவறுதல் இல்லாமல் உபயோகிக்கக் கூடும் அவர்களை அப்பேர்ப்பட்ட இடங்களை அனுபவிக்கும் குடி மிராசுதார்களென்றும் சொல்லலாம். F. அடையாளமிட்ட தஸ்தாவேஜில் கோவிலை குடிமிராசுதார்களில் ஒருவர் என்று சொல்லியிருப்பதானது பொருள் அற்றதாக யிருக்கிறது. ஆனால் அதற்கு சாசுவதக் குடியென்று அர்த்தம் வைத்துக் கொள்ளலாம். கோவில் நிலஸ்வான் ஆகவும் (Landlord) நிலத்துக்கு சொந்தக்காரனாகவும் (Landowner) இருப்பதுடன் பூர்வகாலத்துத் தஸ்தாவேஜூகளில் கோவிலை கிராமத்துக்கு பூரா ஏகபோகம் ரொக்கக்குத்தகை மிராசுதார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. F. அடையாள தஸ்வா வேஜிலும் கோவிலை அநேக இடங்களில் அப்படியே சொல்லப்பட்டிருக்கிறது. கோவிலானது அநேக குடிமிராசுதார்களில்-ஒன்றாக யிருக்கும் விஷயத்தில், அதை ஏகபோகம் மிராசுதாரென்று சொல்லக்கூடாது. ஆனால் அநேகம் பலபோகம் மிராசுதார்களில் ஒன்றாகத்தானிருக்கும். அல்லாமலும் F. அடையாளமிட்ட தஸ்தாவேஜின் ஆரம்பத்தில் குடிமிராசுதார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிற 9-பேர்களில் ஒரே ஒருவனுடைய அடையாளக் கையெழுத்து மட்டும்தான், குடிமிராசு அம்மையப்பத் தேவன் என்ற பெயருக்கு எதிரில்போடப்பட்டிருக்கிறது. மற்றவர்களுடைய அடயாளக் கையெழுத்து அல்லது கையெழுத்து நேரில் அவர்களை ஒளவடை அல்லது உளவடைமிராசு என்று காணப்பட்டிருக்கிறது. இன்னும் F. அடையாள தஸ்தாவேஜில் மற்றொரு இடத்தில் கிராமத்திலுள்ள பேர்களையெல்லாம் கணக்கெடுத்திருப்பதில், இவர்கள் எல்லாரையும் உள்ளூர் புறக்குடிகள் என்று சொல்லிவிட்டு, கோவிலைமட்டும் ரொக்கக்குத்தகை மிராசுதாரென்ற சொல்லப்பட்டிருக்கிறது. கடாசியாக, இந்த பைமாஷ் கணக்குகளை ப்ரைசேடியர் ஜமாஷ் செய்து அல்லது அளவுகளை சோதித்துப் பார்த்தபொழுது அவர் 44 பதிவுகளைச் சோதித்துப் பார்த்ததாகத் தெரியவருகிறது. அப்படிச் சோதித்துப் பார்க்கப்பட்ட பதிவுகளில் சில பேர்களை குடிமிராசுக் குடியானவர்களென்று முதல் தயாரிக்

கப்பட்ட பைமாஷ் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்ததை உசூர் உத்தரவின் பிரகாரம் உளவடை மிராசு யென்று சீர் திருத்தப்பட்டிருக்கிறது. உளவடை மிராசு என்பதற்கு அனுபோக பாத்தியதையே கிடைக்கமாட்டாது. கீழ்க் கோர்ட்டாரால் அவருடைய தீர்ப்பின் 97–99 பாராக்களில் எடுத்துக் காட்டப்பட்ட பிரகாரம் ஷை கிராமத்தின் ஏகபோகம் மிராசுதாராகிய கோவிலாரின்கீழ் பயிரிடுங் குடியானவர்கள் பைமாஷ் கணக்குகளில் கையெழுத்துச் செய்திருக்கிறார்கள் அல்லது தற்குறி போட்டிருக்கிறார்கள். அவர்களில் அனேகர்களுக்குக் கையெழுத்தே போடத் தெரியாதாகையால் அவர்களுக்காக அவர்களை முன் அறியாதவர்கள் அவர்கள் பெயரை யெழுதவோ அல்லது அடையாளக் கையெழுத்துப் போடவோ செய்திருக்கிறார்கள். அதே பைமாஷ் கணக்கிலேயே பற்பல இடங்களில் பற்பல வி.மாக அவர்களை ஒளவடை, ஒளவடை மிராசு, ஒளவடை குடிமிராசு, உள்ளூர் ஒளவடை, உள்ளூர் புறக்குடி என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆகையால் இப்படி பற்பலவகையாய் வித்தியாசமாய்ச் சொல்லப்படும் விஷயத்தில் யாதொரு பிரயோசனமும் யேற்படமாட்டாது. இவர்கள் பசலிக்குப்பசலி குத்தகைக்கு வாங்கிப் பயிரிடுகிற குடித்தனக்காரர்களாக யிருந்தாலும், இவர்களை அடிக்கடி விலக்குவது முன்காலத்தில் கோவில்காரியாதிகளுக்கு நன்மையாக யேர்ப்படமாட்டாது. அப்பேர்ப்பட்ட குடியானவர்கள் வெகுகாலமாக நிலங்களை தங்களைவிட்டு எடுத்துவிடாமலிருப்பதை வைத்து தங்கள் நிலமைகளை உயர்த்திக்கொள்ளும்பொருட்டு இப்பேர்ப்பட்ட கக்ஷிசொல்லுவது பிரகிருதி சுபாவத்துக்கு ஒத்துமையாகவேயே யிருக்கிறது. பண்ணைப் பயிரிடும் வேலைக்காரர் அல்லது அசலூர் புறக்குடிகளாக யிருந்து அப்பால் உள்ளூர் புறக்குடியாகி, அப்பால் ஒளவடை குடித்தனக்காரர்களாகி, ஒளவடை மிராசுதார்களாகி, ஒளவடை குடிமிராசாகி, சில வேளைகளில் குடிமிராசுதார்களாகக்கூட ஆய்விடுகிறார்கள்:

A. அடையாளமிட்ட தஸ்தாவேஜை அநேகம் குடித்தனக்காரர்கள் சேர்ந்து எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். இந்த தஸ்தாவேஜு உண்டானகாலத்தில், கலெக்டர் ஆபீசில் கவனத்தப்பாக யிருந்துவிட்டதனால், அவர்கள் தாங்கள்குடிமிராசு என்று சொல்லிக்கொண்டாலும் அவர்களில் ஒருவர்தான் குடிமிராசு யென்று கையெழுத்துச் செய்யத் துணிந்தனர். இந்தக் கேசினுடைய எல்லாவிஷயங்களையும் உத்தேசித்து, இந்த சங்கதியை அவ்வளவு முக்கியமானதென்று நினைத்துவிடக்கூடாது. ஏனென்றால், தாசில்தார் கலெக்டருக்கு அனுப்புவித்த அர்ஜியாகிய P. அடையாள தஸ்தாவேஜுடன் A. அடையாள தஸ்தாவேஜையும் அனுப்பினார். அந்த அர்ஜியில் இவர்களை குடிகள்அல்லது பயிரிடுகிறவர்களென்று மாத்திரம் யெழுதி யிருக்கிறார். குடிமிராசு என்று கையெழுத்துச் செய்திருக்கிற அய்யாப்பிள்ளையையும்கூட P. அடையாள தஸ்தாவேஜுல் புறக்குடி மிராசு என்றுதான் காணப்பட்டிருக்கிறது. அல்லாமலும் A. அடையாள தஸ்தாவேஜில் கண்ட நிபந்தனைகள் ஷை தஸ்தாவேஜை எழுதிக் கொடுத்தவர்களுக்கு சாசுவத அனுபோகபாத்தியதை யேர்ப்பட்டிருக்குமென்பது முற்றிலும் விருத்தமானதாகயிருக்கிறது. A F. F1. அடையாளமிட்ட தஸ்தாவேஜுகளிலும் மற்றதஸ்தாவேஜுகளிலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் "சுவாமிபோகம்" என்ற வார்த்தைக்கு தஞ்சாவூர் செங்கற்பட்டு ஜில்லாக்களில் ஒரே அர்த்தம்தான்உண்டு. வில்ஸன் என்பவர் அவருடையஅகராதியில் சுவாமிபோகமென்பது தமிழ் நாட்டில் விளைந்தமாகுவில் மிராசுதார் அல்லது பாம்பரை ஹக்குதாருக்கு நிலத்தை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பயிரிட்டுவரும் குடியானவன் அல்லதுபயிரிடுகிறவன் கொடுக்கும் பாகம் யென்று சொல்லியிருக்கிறார். A. அடையாள தஸ்தாவேஜில் சுவாமிபோகம் என்று சொல்லியிருப்பதினால் கோவிலுக்கே குடிவாரப் பாத்தியமும் மேல்வாரப்பாத்தியமும் இருப்பதாக வியக்தமாக யேர்ப்பட்டுவிட்டது.

கடாசியாக இந்தக் கேசில் யேர்ப்பட்டிருக்கும் முக்கியமான விவாதாம்சங்கள் தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்தே வந்த இதே மாதிரியான கேசுகளில் இந்தக் கோர்ட்டிலும் ப்ரிவி கௌன்ஸிலிலும் செய்த தீர்மானங்களால் ஒருவிதமாக வாதிக்கு அனுகூலமாக பைசல்செய்யப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. இவைகளில் 4. தீர்மானங்களை மட்டும் எடுத்துச் சொல்லுவேன். சொக்கலிங்கம் வகையறுவுக்கும் வைத்தியலிங்கபண்டாரஸந்நிதிக்கும் நடந்த 1871-ம்௵த்து 6. ம. ஹை. கோ. ரி. 164-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில் வாதி பிரும்புஹூா ஸ்ரீயக்னேசுவரஸ்வாமி மடம்தர்மகர்த்தாஸ்தானத்தில், 1837-ம்௵ ஆகஸ்டு௴ 14௳ போட்ட A. அடையாளமிட்ட உடன்படிக்கையின்பேரில் கோவில் நிலங்களை மீட்டுக் கொள்ளும்படியாக பிரதிவாதிபேரில் வியாச்சியம் செய்தார். மேற்சொன்ன உடன்படிக்கையானது பிரதிவாதிகளால் அப்போது கோவில் மேல்பார்த்துக் கொண்டிருந்த கவர்ன்மெண்டாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது. 1868-ம் ௵த்தில் ஷை வியாச்சியம் கொண்டுவரப்பட்டது. பிரதிவாதிகள் தங்களுக்கு சாசுவத அனுபோக பாத்தியதை யிருப்பதாகக் கக்ஷிசொன்னார்கள். ௵ 1-க்கு இன்னதுகை செலுத்துகிறதென்று ஏற்பாடு செய்துகொண்டு அந்தப்படியே 30 ௵த்துக்கு சுவாமிபோகப் பணம் செலுத்தியிருப்பதாகவும் ஒரு காரணம் சொன்னார். அந்தக் கேசில் A அடையாள தஸ்தாவேஜாகிய தாம்பைசல் முச்சலிக்காவின் முக்கியமான நிபந்தனைகள் எல்லாம் இந்தக்கேசில் A. அடையாள தஸ்தாவஜாகிய தாம்பைசல் முச்சலிக்காவின் நிபந்தனைகளைப் போலவேயே யிருந்தன. குத்தகையானது A. அடையாளமிட்ட உடன்படிக்கையின் நிபந்தனையின்படி நடந்துவருவதாயும் அந்த உடன்படிக்கையினால் வருஷத்துக்குவருஷம் குத்தகை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று யேர்ப்படுவதாயும் நெடுநாளை அனுபோகமானது குத்தகையின் தன்மையை மாற்றிவிடாதென்றும் தீர்ப்புச் செய்யப்பட்டது. தியாகராஜனுக்கும் ஞானசம்பந்தப்பண்டார ஸந்நிதிக்கும் நடந்த 1887-ம்௵த்து இ. லா. ரி. 11. ம. 77-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில் குடியானவர்கள் ஒரு ஹிந்து கோவிலைச் சேர்ந்த சந்தப்புத்தூர் கிராமத்திலுள்ள நிலங்களின் விஷயமாக முச்சலிக்கா எழுதிக்கொடுத்தார்கள். அந்த முச்சலிக்காவானது 1830-ம் ௵த்தில் கலெக்டர் மூலமாக ஷை கோவிலின் நிலங்களை மேல்பார்த்துவந்த கவர்ன்மெண்டார்பேருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது. 1857-ம் ௵த்தில் கலெக்டர் ஷை கோவிலின் மேல்பார்வையை ஒரு ஹிந்து தருமகர்த்தர் வசம் ஒப்புவித்தார். குடிகள் தீர்வை செலுத்திவரும் வரை அவர்களை அப்புறப் படுத்துகிறதில்லை யென்று கலெக்டருக்கு தர்மகர்த்தர் ஒருவாக்குத்தத்தச் சீட்டு எழுதிக்கொடுத்தார். இந்த வாக்குத்தத்தச் சீட்டுக்கு குடியானவர்கள் கக்ஷிக்காரர்கள் இல்லை. இந்த வியாச்சியத்தில் எதிர்வாதம் செய்வதில் குடியானவர்கள் ஷை நிலங்களில் தங்களுக்கு அனுபோகபாத்தியதை உண்டென்றும், இது விஷயத்தில், 1857-ம் ௵த்தில் தர்மகர்த்தா வாக்குத்தத்தச் சீட்டு எழுதிக் கொடுத்திருப்பதாயும் கக்ஷிசொன்னார்கள். கற்றறிந்த ஜட்ஜிகள் 6. ம. ஹை. கோ. ரி. 164-ல் கண்ட தீர்ப்பை அனுஸரித்து 1830-ம் ௵த்தில் குத்தகை யெடுத்த ஆதி குடியானவன் மூலமாக பாத்திதை கொண்டாடினவர்கள் 1830-ம் ௵த்து முச்சலிக்காப்படி மொத்தத்தீர்வையும் செலுத்தியாய்விட்டாலும், அவரவர்கள் அனுபோகத்திலிருந்த நிலங்களை பாதீனம் செய்திருந்தாலும், குடியானவர்களுக்கு அனுபோக பாத்தியதை ஏற்பட்டு விடவில்லை யென்று பைசல் செய்தார்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ்-ப்ராண்ட் தீர்ப்பில் அடியில் கண்டபடி சொல்லியிருக்கிறார்:—"பிரதிவாதிகள் ஷை நிலங்களை தாங்கள் நேரிலும் அதற்கு முன்னில்லாவிட்டாலும் 1830-ம்௵ ஜனவரி௴ 1௳ முதல் குத்தகை எடுத்தவர்களும் அனுபவித்து வந்ததையே பலமாக வாதிக்கிறார்கள். வருஷத்துக்குவருஷம் குத்தகை கொடுக்கப்பட்ட ஒருவன் ஷை நிலத்தை எத்தனை வருஷகாலமாக அனுபவித்து வந்தாலுமே அவனுக்கு அனுபோக பாத்தியதை எற்பட்டுவிடமாட்டாது. கிருஷ்ண சுவாமிக்கும் வரதாராஜனுக்கும் நடந்த 1882-ம் ௵த்து இ. லா. ரி. 5. ம. 345, 357, இவைகளில் பிரசுரம் செய்யப்பட்ட கேசின் தீர்மானத்தில் இத்தனை வருஷம் அனுபவித்து வந்தால் சாசுவத அனுபோக பாத்தியதை ஏற்படுமென்பது சட்டத்தினால்தான் தீர்மானிக்கப்பட வேண்டுமென்று சீப் ஜஸ்டிஸ் டர்னர் ஒப்புக்கொண்டிருக்கிறார்." "1830-ம் ௵ ஜனவரி௴ 1௳ எழுதிக்கொடுக்கப்பட்ட முச்சலிக்காவினால் அவைகளை எழுதிக் [கொடுத்தவர்களுக்கு சாசுவதமான பாத்தியதை யேர்ப்பட்டுப் போய்விட்டதாய் துலங்கவில்லை. அந்த முச்சலிக்காவில் இதற்கு எதிரிடையாய் நினைப்பதற்கு அனுகூலமான சில விஷயங்கள் இருக்கின்றன. ஒரு பசலிக்கு மேல்பட்டு அனுபோகம் நீடிக்கவேண்டுமென்ற அபிப்பிராயத்தைக் கொடுக்கக்கூடிய வார்த்தைகள் முச்சலிக்காவில் இருந்தால், அவைகள் சொக்கலிங்கம் பிள்ளை கேசில்

காணப்பட்டிருக்கிற இதேவிதமானவார்த்தைகள்சம்பந்தமாய் ஸர் சாலி ஸ்காட்லாண்டு சொல்லியிருக்கிறபடி அந்த பசலி சம்பந்தப்பட்ட மட்டில் அல்லது வேறுகாலத்தை அது குறிப்பிட்டுச் சொல்லவேயில்லை. ஆகையால் குத்தகையின் காலம் நிர்ணயிக்காமலிருக்கும் வரை அந்தந்த பசலிக்கு மேல்பட்டு குத்தகைக்கு விடும் விஷயமும் வாங்கிக்கொள்ளும் விஷமும் இருதிறத்தாரில் ஒருவரின் மனதைப் பொறுத்ததேயன்றி அவர்களில் ஒருவரைக்கட்டுப்படுத்த முடியாது. பிரதிவாதிகள் அவர்களுடைய குத்தகையானது இந்த முச்சலிக்காவின் மூலமாக ஏற்படவில்லை யென்றும் அதற்குமுன் முதல்கொண்டே சாசுவத குத்தகை பாத்தியதையாய் யேர்ப்பட்டிருப்பதாயும் சொல்லுகிறார்கள். பிரதிவாதிகளுக்குமுன் ஷை நிலத்தை அனுபவித்தவர்கள் 1830-ம் ௵த்துக்குமுன்முதலே ஷை நிலத்தை அனுபவித்திருக்கலாம்.

ஆனால் அவர்களுக்கு சாசுவத அனுபோக பாத்தியதை யேர்ப்பட்டிருந்திருக்கும் விஷயத்தில் அவர்கள் அந்தப் பாத்தியதையை 1830-ம் ௵த்தில் பிறந்த முச்சலிக்காக்களில் விவரமாகத் துலக்கி யெழுதும்படி செய்திருப்பார்கள். இப்போது 1830-ம் ௵த்துக்கு முந்திய சாசுவத அனுபோகம் ருஜுப்படுத்தப்படவில்லை.

"1857-ம் ௵ டிசம்பர்௴ 7௳ யன்று வாதியினுடைய முன்னோர்கள் கவர்ன்மெண்டாருக்கு யெழுதிக்கொடுத்த முச்சலிக்காவில் அந்தக் கிராமங்களிலும் நாட்டிலும் வழங்கி வரும் வழக்கங்களை அனுசரித்து புறக்குடிகளுடைய பாத்தியதைகளையும் சுதந்தரங்களையும் காப்பாற்றி வருவதாகவும் அவர்கள் தீர்வையை சரியானபடி செலுத்திவரும்வரை அவர்களை அப்புறப்படுத்துகிறதில்லை யென்றும் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அப்படிச் சொன்னதினால் ஷை நிலங்களில் குடிகளுக்கு சாசுவத அனுபோக பாத்தியதை யிருப்பதாகவாவது அல்லது எக்காலத்திலும் ஸ்வாமிபோகம் அப்படியே உயர்த்தப்படாமலிருக்குமென்றாவது ஒப்புக்கொண்டு விடவில்லை. பிரஸ்தாபத்திலிருக்கிற வாசகத்தினால் குடிகளுடைய பாத்தியதைகள் இன்னது என்று குறிப்பிட்டுச் சொல்லாமலேயே அந்த பாத்தியதைகள் எதுவாக யிருந்தாலுமே அந்த பாத்தியதைகளை கௌரவப்படுத்துவதற்கான ஒரு ஏற்பாட்டுக்கு மேல்பட்டிருக்கலாம்."

"முடிவில் ஷை நிலத்தை வருஷத்துக்கு வருஷம் சாகுபடி செய்யும் குடியானவனுடைய பாத்தியதை என்ன உண்டோ அதற்கு மேற்பட்டு தங்களுக்கு அதிகப்பாத்தியதைகள் யேதும் இருப்பதாகப் பிரதிவாதிகள் ருஜுச்செய்யவில்லை." மேலே சொன்ன குறிப்புகள் அல்லது ஷராக்கள் எல்லாம் இந்தக்கேசின் சங்கதிகளை உத்தேசித்து சம்பந்தப்படுமென்று நினைக்கிறேன். இதற்கு அடுத்த கேசு சிதம்பரம் பிள்ளைக்கும் திருவேங்கடத்தையங்காருக்கும் நடந்த 1887-ம் ௵த்து 7. ம. லா. ஜ. 1-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற தீர்ப்புத்தான். அந்தத் தீர்ப்பு தஞ்சாவூர் ஜில்லாக்காரரான மிஸ்டர் ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யரும் சேர்ந்து யெழுதிய தீர்ப்பு. அந்தக் கேசில் தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோவிலின் தர்மகர்த்தாக்கள் வாதிகளாக யிருந்தார்கள். அந்தக்கேசில் குடிகள் கவர்ன்மெண்டுத் தீர்வையை கவர்ன்மெண்டுக்கும் சுவாமிபோகம் அல்லது மிராசு போகத்தை ஷை கோவில் தர்மகர்த்தாக்களிடத்திலும் செலுத்தினார்கள். கோவிலுக்குச் சேரவேண்டிய மோஹனித்துகைக்காக கவர்ன்மெண்டாருக்கு ஷை கிராமத்தின் பேரில் செல்லாகவேண்டிய தீர்வையை ஷை வியாச்சியம் தாக்கல் செய்யப்படுமுன் கோவிலுக்கு ஜாரி செய்யப்பட்டு விட்டது. ஆகையால் கோவிலார் ஒருவாறாக இனாம் தாராகவும் ஆய்விட்டார்கள். அதன் பேரில் குடியானவர்கள் தங்களுக்கு குடிக்காணிப் பாத்தியதை-அதாவது ஷை நிலங்களை சாசுவதமாக அனுபவித்துக் கொள்ளும் பாத்தியதை-உண்டென்று கக்ஷி சொன்னார்கள். இப்படிச் சொல்லுவதற்கு ஆதாரமாக 1839-ம் ௵த்து பைமாஷ் கணக்கையும் அவரவர்கள் அனுபவித்து வந்த நிலங்களை 1848-ம் ௵ முதல் கொண்டே தங்களிஷ்டப்படி பாதீனம்கூடச் செய்து வந்திருப்பதையும் ஆதாரமாகக் காட்டினார்கள். பைமாஷ் கணக்கில் செய்யப்பட்ட பதிவுகள் முடிவான ஆதாரமில்லையென்றும் அவரவர்களுடைய குடிக்காணிகள் விஷயமாகச் செய்யப்பட்டதாகச் சொல்லுகிற கிரயமானது கோவிலைக் கட்டுப்படுத்த மாட்டாதென்றும் அந்தக் கிராமத்தில் வழங்கிவரும் கரையீடு ஏற்பாடானது (அதாவது கிராமத்துக் குடிகள் ஒருவருடைய நிலங்களை மற்றொருவருக்குக் கொடுத்து அதற்குப் பதிலாக அந்த மற்றொருவருடைய நிலத்தை பரிவர்த்தனை செய்து கொள்ளும் யேர்ப்பாடு) கிராமத்து நிலங்களுக்கு அவர்களுக்கு சாசுவத அனுபோகப் பாத்தியதையைக் கொடுத்துவிட மாட்டாதென்றும் தர்மகர்த்தாக்கள் கலெக்டருக்கு யெழுதிக்கொடுத்த ரிக்கார்டில் கிராம நிலங்களில் குடிகளுக்கு குடிக்காணிப் பாத்தியதை யிருப்பதாகச் சொல்லாமல்படிக்கே குடிகள் தீர்வையை ஒழுங்காகச் செலுத்தி வரும்வரை அவர்களை நிலங்களை விட்டு அப்புறப் படுத்துகிறதில்லை யென்று எழுதிக் கொடுத்திருப்பதனால் குடிகளுக்கு யாதொரு பிரயோசனமுமில்லை யென்றும் தர்மகர்த்தாக்களுக்கு குடிகளை அப்புறப் படுத்தும் பாத்தியதை உண்டென்றும் கற்றறிந்த ஜட்ஜிகள் தீர்மானஞ் செய்தார்கள். 10-வது பக்கத்தில் அடியில்கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது:—"1857-ம் ௵த்துக்கு முந்தி அநேக வருஷக்காலமாக கோவில் கிராமங்களை ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களே மேல்பார்த்து வந்தார்கள் என்பதை கவனிக்கும்போது புறக்குடிகளை அவர்கள் கௌரவமாயும் பக்ஷமாயும் நடத்திவந்ததாலும் ஷை நிலங்களை புறக்குடிகள் வெகுகாலமாக அனுபவித்து வந்ததாலும், நிலங்களின் தீர்வையை ஒழுங்காகச் செலுத்திவரும் வரை தங்களை நிலத்தை விட்டு அப்புறப் படுத்துவதற்கு காரணம் யேர்ப்படாதென்ற நம்பிக்கை அவர்களுக் குண்டானதும் ஸகஜமானது தான். இதுதான் அப்பீல் வாதிகளாலும் அவர்களுடைய முன்னோர்களாலும் தங்களுக்கு ஷை நிலங்களில் ஒருவிதமான சாசுவத அனுபோக பாத்தியதையிருக்கிறதென்ற அகாரணமான எண்ணத்துடன் குடிக்காணிப்பாத்தியதை தங்களுக்கு இருப்பதாகச்சொல்லிக்கொண்டு ஷை நிலங்கள் விஷயமாகச் செய்யப்பட்ட கிரயம் அடமானங்களுக்குக் காரணமாக யிருக்கலாம்." "குத்தகை தஸ்தாவேஜுகளில் நிலங்களை விவரித்துச் சொல்லாமலிருப்பது, குடியானவன் ஒவ்வொருவனும் தனித்தனியாக பயிரிட்டு வந்தது, புறக்குடிகள் அனுபவித்து வந்த நிலங்களை வேளாவேளைகளில் பரிவர்த்தனை செய்து கொள்வது இவைகளெல்லாம் தங்களுடன் கூட பயிர்செய்வதற்கு தங்களுக்கு இஷ்டமானவர்களைச் சேர்த்துக்கொண்டு இன்னின்னார் இன்னின்ன நிலத்தைப்பயிர் செய்து கொள்ளுகிறதென்ற யேர்ப்பாட்டை அவர்களே செய்துகொள்ளும் படிக்காய் புறக்குடிகளில் முக்கியமாயுள்ளவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்குக்

குத்தகைக்கு விட்டுவிடும் வழக்கத்தை அனுஸரித்துச் செய்யப்பட்டிருக்கிறது." (சிவத்தமுத்து ஆசாரிக்கும் ரூமெஸ்க்விடாவுக்கும் நடந்து 1913-ம் ஹுத்து 24. ம. லா. ஜ. 642-ல் கண்ட கேசு விஷமாய் 651-ம் பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கும் புல்பெஞ்சுத் தீர்ப்பில், குத்தகை விஷயமான நிபந்தனைக் கண்டெழுதப்பட்ட தஸ்தாவேஜு யிருக்கும் காலத்தில் அதில் சாசுவத அனுபோக பாத்தியதையைக் குறித்து யாதொன்றும் சொல்லப்படாமலிருந்தால், அந்தக் குத்தகை நிலங்களை பாராதீனம் செய்ததும் குடிகள் கீழ் குத்தகைக்கு விட்டதும் ஆதி குத்தகையானது ஒரு கட்டட விஷயமாக யிருந்தாலுமே ஸரி இவைகளால் குடியானவர்களுக்கு சாசுவத அனுபோகம் குத்தகை தஸ்தாவேஜினுல் யேர்ப்பட்டு விடமாட்டாதென்று வியக்தமாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.)

நான் எடுத்துச் சொல்லிய கேசுகளில் 4-வதும் கடாசியானதுமான கேசானது மாயாண்டி செட்டியாருக்கும், சொக்கலிங்கம் பிள்ளைக்கும் நடந்து 1904-ம் ஹுத்து இ. லா. ரி. 27 ம. 291-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில் இந்தக்கோர்ட்டில் சொக்கலிங்கம் பிள்ளைக்கும் மாயாண்டி செட்டியாருக்கும் நடந்து 1896-ம் ஹுத்து இ. லா. ரி. 19 ம. 486-ல் ரிப்போர்ட்டு செய்யப்பட்டிருக்கிற தீர்மானத்தை மாற்றி பிரிவிகௌன்ஸிலில் செய்யப்பட்ட முக்கியமான தீர்மானந்தான். அந்தக் கேசிலும் 1831-ம் ஹு டிசம்பர் மீ த்தில் பிறப்பிவிக்கப்பட்டு 1832-ம் ஹு ஜனவரி மீ த்தோடு முடிகிற ஒரு தாம்பைசல் முச்சலிக்காவின் பேரில் குடிகள் நிலத்தை அனுபவிக்க ஆரம்பித்தார்கள். இந்தக் கேசில் சொல்லப்பட்ட இதே கக்ஷியின் பெரிலேயே அந்தக் கேசிலும் தங்களுக்கு ஷை நிலங்களை சாசுவதமாக அனுபவிக்கும் பாத்தியதை உண்டென்று தாவா செய்யப்பட்டது. முச்சலிக்கா எழுதிக்கொடுத்தவர்கள் தங்களை உளவடை மிராசுதார்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். மாறுபாடில்லாத அதே தீர்வை செலுத்திக் கொண்டே ஷை நிலங்களை வெகுகாலமாக அனுபவித்து வந்ததையே ஆதாரமாகச் சொன்னார்கள். உளவடை மிராசுதார்கள் என்ற விபரம் கலெக்ட்டர் ஆபீசிலிருந்து பிறப்பிவிக்கப்பட்ட எந்த ரிக்கார்டுகளிலும் துலங்கவில்லையென்றும் மனுதார்களால் ஆஜர் செய்யப்பட்ட தஸ்தாவேஜிகளில் மட்டும் துலங்குவதாகவும் கனம் ஜட்ஜிகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அல்லாமலும் சொக்கலிங்கம் பிள்ளைக்கும் வைத்தியலிங்கப்பண்டார ஸந்நதிக்கும் நடந்து 1871-ம் ஹுத்து 6 ம. ஹை. கோ. ரி. 164-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசின் சங்கதிகளெல்லாம் இந்த அப்பீலின் சங்கதிகளைப்போலவேயே யிருப்பதாகவும், அந்தக் கேசிலும் இதே விதமான நிபந்தனைகள் அடங்கிய ஒரு முச்சலிக்கா இருப்பதாகவும், சொல்லி கனம் ஜட்ஜிகள் சாசுவத அனுபோசப் பாத்தியதை உண்டாய் விடவில்லை யென்று தீர்மானித்துவிட்டார்கள். 168-ம் பக்கத்தில் ஸ்காட்லாண்ட் சீப் ஜஸ்டிஸ் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். உடன்படிக்கையில் கண்டிருக்கும் வாசக நடையினல் யேர்ப்படும் பிரயோஜனமானது பட்டாவைப் பெற்றுக்கொண்டு கொடுக்கப்படும் முச்சலிக்காவில் கண்டிருக்கும் நிபந்தனைகளால் யேர்ப்படும் பிரயோஜனத்தைப்பார்க்கிலும் அதிகமாய் விடமாட்டாது என்று சொல்லியிருக்கிறார். ஆனால் உடன்படிக்கைப்படி இரு கக்ஷிக்காரும் பசலிக்கடாசியில் உடன்படிக்கையை ரத்து செய்யாமல் குத்தகை நடந்தேறிவரும் வரை பசலிதோறும் நடந்து வரவேண்டுமென்பதை மட்டும் குறிப்பிடக்கூடும். இந்தத் தீர்ப்பை இதே விதமான சங்கதிகள் விஷயமாய் தியாகராஜனுக்கும் ஞானஸம்பந்தப்பண்டார ஸந்நதிக்கும் நடந்து 1887-ம் ஹுத்து இ. லா. ரி. 11 ம. 77-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில் சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் அனுஸரித்திருக்கிறார்கள். அந்தக் கேசின் சங்கதிகளுக்கும் இந்தக் கேசின் சங்கதிகளுக்கும் பகுத்தறியக்கூடிய வித்தியாசங்கள் யாதொன்றுமில்லையென்று அந்தக் கேசின் தீர்ப்பிலிருந்து வேறுவிதமாக அபிப்பிராயப் படுவதற்கு கனம் ஜட்ஜிகளுக்கு யாதொரு முகாந்தரமு மிருப்பதாகத் தெரியவில்லை. இவ்விதமாக பிரவி கௌன்ஸில் கனம் ஜட்ஜிகள் சென்ற நூற்றுண்டின் 30 முதல் 40 வருஷத்துக்குள்பட்ட காலத்தில் தஞ்சாவூர் கலெக்ட்டருக்கு தாம்பைசல் முச்சலிக்கா எழுதிக் கொடுத்த குத்தகைதார்களுக்கு நிலங்களை நீடித்த காலமாக அனுபவித்துவிட்ட காரணத்தால் சாசுவத அனுபோக பாத்தியதை ஏற்பட்டு விடமாட்டாதென்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிற கேசுகளாகிய சொக்கலிங்கம் பிள்ளைக்கும் வைத்தியலிங்க பண்டார ஸந்நதிக்கும் நடந்த கேசிலும், தியாகராஜனுக்கும் ஞானசம்பந்தப் பண்டாரஸந்நதிக்கும் நடந்த கேசிலும் செய்யப்பட்ட தீர்மானங்களை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

வர்த்தகத்தொழிலை அனுஸரித்து வரும் 1-வது பிரதிவாதி தனக்கு விற்றவர்களுக்கு ஷை நிலத்தில் சாசுவத அனுபோக பாத்தியதை யிருப்பதாக நினைப்பதற்கு இடமில்லை யென்று கீழ்க் கோர்ட்டார் செய்திருக்கும் தீர்மானத்தை மேல்கண்ட காரணங்களால் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நிலத்துக்கு தான் பூராவும் சொந்தக்காரனென்று ஒரு குடியானவன் நினைப்பதற்கு யாதொரு காரணமும் இல்லையாகையால், ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட் 51-வது பிரிவு அவனுக்குச்சம்பந்தப்படமாட்டாதென்று நரஸய்யாவுக்கும் வெங்கடகிரி ராஜாவுக்கும் நடந்து 1887-ம் ஹுத்து இ. லா. ரி. 11. ம. 77-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் 1-வது பிரதிவாதி தனக்கு விற்றவனுக்கு சாசுவத அனுபோக பாத்தியதை யிருப்பதாக வாஸ்தவத்தில் நினைத்துக் கொண்டிருந்திருந்தாலுமே ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட் 51-வது பிரிவுப்படி நஷ்டஸமாதானம் கேழ்க்கும்பாத்தியதை அவனுக்கு ஏற்படமாட்டாது. முடிவில் அப்பீல் பிரதிவாதிகளுடைய (வாதிகளுடைய) சிலவுசகிதம் அப்பீலைத் தள்ளுபடிசெய்திருக்கிறது.

ஜஸ்டிஸ் நேபியர் :—நானும் இந்தத் தீர்ப்பை ஒப்புக்கொள்ளுகிறேன்.

33. M. L. J. 84. 33. ம. லா. ஜ. 84.

DIALOGUE.

சம்பாஷணை.

இடம் :—சதுரங்கப்பட்டணம் ஜமீன்தார் பங்களா.

(முன்மாதத் தொடர்ச்சி.)

சது.-ஜமீன்தார்:—ஆரடா அங்கே.

குமாஸ்தா:—சேவிக்கிறேன்.

ஜ:—இன்று வக்கீல் அய்யர் அவர்கள் இவிடம் வருவார்கள். அவர்களுக்கு வேண்டும் சௌகரியங்கள் செய்து வையுங்கள்.

குமா:—நேற்றே வேண்டும் ஏற்பாடுகளைச் செய்து வைத்துவிட்டோம். வக்கில் அய்யரவர்கள் முன்னமேயே இவிடம் வந்துவிட்டார்கள், நமது தோட்டத்தில் காபி சாப்பிட்டு விட்டு உலாத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஜ:—அப்படியானுல் நாமும் அங்கே போய் அய்யர் அவர்களை ஸந்திக்க வேண்டும். பல் தேய்க்க பொடி, ஜலம், முதலியன கொண்டுவா.

தவசுபிள்ளை:—எல்லாம் கொண்டுபோய் முன்னமேயே வைத்திருக்கிறேன் காபியும் தயாராகவிருக்கிறது.

குமா:—வக்கீல் அய்யர் அவர்கள் இவிடம் வந்து விட்டார்கள்.

ஜ:—அப்படியானுல் அவர்களை ஹாலில் உட்காரச் சொல்லு.

குமா:—ஹாலில் உட்காரவேணும்! மகாராஜா காபி சாப்பிடுகிறார்கள். 5 நிமிஷத்தில் வந்து விடுவார்கள்.

ஜ:—நமஸ்காரம்! எப்போது இவ்விடம் விஜயம் செய்தது?

வ:—நான் இவிடம் காலை 5½மணிக்கே வந்துவிட்டேன். க்ஷேமமா.

ஜ:—அவிடத்துக் கிருபையால் க்ஷேமந்தான். ஒரு குறைவுமில்லை.

வ:—தண்ணீர்மேலேற்றிய தீர்ப்படைந்தவர்கள் விஷயமாய் இன்னும் கேட்டுக்கொள்ள வேண்டிய விஷயங்களைஎல்லாம் கேட்டுக்கொள்ளுங்கள். சொல்லுகிறேன்.

ஜ:—மேலேகண்ட நிபந்தனைகளின்பிரகாரம் தண்ணீர் மேலேற்றி அனுப்பக் கூடாத ஆண்பிள்ளைக்கைதிகளை என்ன செய்கிறது.

வ:—கி. பு. கோடு 383-வது பிரிவின்படி தண்ணீர்மேலேற்றும் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதியை அவனிருக்கிற அல்லது அவன் வைக்கப்பட வேண்டிய ஜெயிலுக்கு ஒரு வாறண்டுடன் அனுப்பப்படும். இ. பி. கோடு. 53-வது பிரிவின்படி இந்தக் கைதியை தீவாந்தரத்துக்கு அனுப்ப முடியாதபடியால் இவனுக்கு கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டதாகவேயே நினைத்து கடினகாவல் சிக்ஷை விதித்தவனை எப்படி நடத்த வேண்டுமோ அவ்விதம் நடத்த வெண்டும். (ஜெயில் ரூல் 997.)

ஜ:—பெண்பிள்ளைக் கைதிகளை தண்ணீர் மேல் ஏற்றி அனுப்புகிற விஷயமான சங்கதிகளைக் கேழ்க்க விரும்புகிறேன்.

வ:—ஏழு வருஷங்களுக்கும் அதற்கு மேல்பட்ட காலத்துக்கும் தண்டிக்கப்பட்ட அடியில் கண்ட நிபந்தனைக் குள்ளடங்கிய பெண்பிள்ளைக் கைதிகளை தண்ணீர்மேலேற்றி விடவேண்டும்

ஜ:—அது என்ன நிபந்தனைகள்.

வ:—(1) கல்லியாண மாகாதவர்களாக அல்லது விதவைகளாக அல்லது புருஷனுல் விலக்கி வைத்து விடப் பட்டவர்களாக யிருக்கும் காரணங்களால் கலியாணஞ்செய்து கொள்ளத் தடையில்லாதவர்களாக யிருக்க வேண்டும்,

(2) வயது விஷயத்திலும தேகபல விஷயத்திலும் மேலேபோன ஸம்பாஷணைக் கடாசியில் சொன்ன நிபந்தனைகளின் படி யிருக்க வேண்டும்.

ஜ:—தீவாந்தரத்துக்கு அனுப்பும் கைதிகளை எந்தக் காலமும் அனுப்பி விடுகிறதா அல்லது அப்படி அனுப்புவதற்கு யேதும் குறிப்பிட்ட காலம் உண்டா?

வ:—வருஷத்தில் எக்காலமும் தீவாந்தரத்துக்கு (ஆண்டமன் தீவுக்கு) அனுப்புகிறவர்களை 6-வாரத்துக்கு ஒருதரம் அனுப்பப்படும். இராஜதானிப்பட்டணத்துக்கு வெளியூரிலுள்ள ஜெயில்களிலிருந்து (Madras Penitentiary) க்கு அப்பேர்ப்பட்ட கைதிகளைக்கொண்டு வருவது மேற்கண்ட 6 வார வாயிதாவுக்குத் தக்கபடி யேர்ப்பாடு செய்யப்படும். ஜெயில்களின் ஸுப்பரிண்டெண்டன்டு மற்ற ஒவ்வொரு ஜெயில் ஸுப்பரிண்டெண்டன்டுக்கும் அந்தந்த வருஷத்தில் பட்டணத்தைவிட்டு ஆண்ட

மன் தீவுக்கு மெயில் ஸ்டீமர்கள் புறப்படுகிற தெய்திகளைக் குறிப்பிட்டு வருஷாந்தர ஸ்டேட்டுமெண்டு அனுப்புவார். அந்த வாயிதாக்களின்படி தீவாந்தரத்துக்கு அனுப்ப வேண்டிய கைதிகளிருந்தால் அவர்களை மெயில் ஸ்டீமர்கள் பட்டணத்தை விட்டுப் புறப்படுகிற வாயிதாத்தினத்துக்கு சிலநாளைக்கு முன்னதாகவேயே பட்டணம் போய்ச் சேரும்படி ஒழுங்காக அனுப்பி விடவேண்டும் (ஜெயில் ரூல். 1000)

ஜ:—கைதிகளைத் தீவாந்தரத்துக்கு அனுப்பும் விஷயமாய் செய்யும் நடபடிக்கைகள் என்ன?

வ:—6-வருஷங்களுக்குக் குறையாமல் தீவாந்தர தண்டனையை அனுபவிக்க வேண்டிய எல்லா ஆண் கைதிகளையும் 7-வருஷங்களுக்கும் அதற்கு மேல்பட்ட காலத்துக்கும் ஷை தண்டனை விதிக்கப்பட்ட எல்லா பெண்பிள்ளைக் கைதிகளையும் மாதத்திற்கு ஒருதரம் சூப்பிரண்டெண்டன்டு வரிசையாக நிறுத்துவார்கள். தீவாந்தரத்துக்கு அனுப்ப சாசுவதமாக லாயக்கில்லை என்று தீர்மானிக்கப்பட்டு இவ்விடத்து ஜெயிலிலேயே வைக்கும்படி கவர்ன்மெண்டார் அவர்கள் உத்தரவு செய்திருக்கிறவர்களை அப்படி நிறுத்தவேண்டியதில்லை. அப்பீல் செய்யக் காலாவதி ஆய்விடாத அல்லது அப்பீல் செய்து அப்பீல் பைசல் ஆகாத கைதிகளையும் இவ்விதம் நிறுத்த வேண்டியதில்லை. தீவாந்தரத்துக்கு சாசுவதமாக அனுப்ப லாயக்கில்லாதவர்களென்று தப்பிதமாக அபிப்பிராயம் கொடுக்கப்பட்டு விட்டதாக இன்ஸ்பெக்டர் ஜெனரலால் நினைக்கப்படுகிற கேசுகளில் அப்பேர்ப்பட்ட கைதிகளை அந்த அபிப்பிராயம் கொடுக்கப்பட்ட 6-மாதங்களுக்குள் பட்டணம் பெனிடன்ஷியரியில் வைத்து கைதிகளை தீவாந்தரத்துக்கு அனுப்புவதற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் கம்மிட்டியாரைக் கொண்டு பரிசோதனை செய்யச் சொல்லப்படும். (ஜெயில் ரூல். 1001.)

ஜ:—அப்பால் மெடிகல் ஆபீஸர் பரிக்ஷிப்பதின் பேரில் நடக்கும் நடபடிக்கைகள் என்ன?

வ:—இப்படி நிறுத்தப்பட்டவர்களை மெடிகல் ஆபீஸர் பரிக்ஷித்துப் பார்த்து ஒவ்வொரு கைதியும் தீவாந்தரத்துக்கு அனுப்ப மேலே கண்டபடி லாயக்கான நிலைமையிலிருக்கிறனு அல்லவா வென்ற விபரத்துக்கு ஸர்டிபிகெட்டுக் கொடுக்க வேண்டும். லாயக்கில்லை யென்று தாத்பரியப் பட்டால் சாசுவதமாக லாயக்கில்லையா? அல்லது தத்காலமட்டும்தானுவென்ற விபரத்துக்கு ஸர்டிபிகெட்டுக் கொடுக்கவேண்டும். மேலே 999-வது ரூலில் சொல்லப்பட்டபடி தீவாந்தரத்துக்கு அனுப்ப லாயக்கென்று சொல்லப்பட்டவனை லாயக்கில்லை யென்று அபிராயப் படுவதாக யிருந்தால் விசேஷ முகாந்தரங்கள் கொடுக்கவேண்டும். இப்படி பரிக்ஷிக்கப்படாத கைதிகளை தீவாந்தரத்துக்கு அனுப்புவதற்காக சென்னைக்கு அனுப்பவே கூடாது. (ஜெயில் ரூல் 1002)

ஜ:—இதற்குமேல் என்ன நடக்கும்?

வ:—அப்பால் கைதிகளை மெடிகல் ஆபீஸர் பரிக்ஷித்துப் பார்த்த விபரத்தைப் பற்றியும், அடுத்தவாயிதாவில் தீவாந்தரத்துக்கு அனுப்பத் தயாராகயிருக்கிற ஆண் பெண் கைதிகளின் எண்ணத்தையும் கண்டு சூப்பிரண்டெண்டன்டு இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு ரிப்போர்ட்டு செய்ய வேண்டும். தீவாந்தரத்துக்கு அனுப்ப லாயக்கென்று தீர்மானிக்கப்பட்ட கைதிகளை உடனே பட்டணம் அனுப்பும் படிக்கும், தற்காலத்துக்கு அல்லது சாசுவதமாக தீவாந்தரம் அனுப்ப லாயக்கில்லை யென்று தீர்மானிக்கப்பட்ட கைதிகளை அந்தந்த ஜெயிலில் வைத்து வைக்கும்படிக்கோ அல்லது வேறு விதமாகச் செய்யும்படிக்கோ சூப்பிரண்டெண்டன்டுக்கு இனிஸ்பெக்டர் ஜெனரல்உத்தரவு அனுப்புவார் (ஜெயில் ரூல். 1003.)

ஜ:—தீவாந்தரத்துக்கு அனுப்பப்படும் கைதிகளை அவர்களுடைய இஷ்டர்களும் பந்துக்களும் கண்டு பேசிக் கொள்ளலாமா?

வ:—தீவாந்தரத்துக்கு அனுப்பப்படும் கைதிகள் தண்டிக்கப்பட்ட ஜில்லா ஜெயிலிலிருந்து அனுப்பப்படுமுன் தங்கள் சிநேகிதர்களையும் பந்துக்களையும் ஒருதடவை பார்த்துப் பேசிக்கொள்ள அனுமதி கொடுக்கப்பட வேண்டும். (ஜெயில் ரூல். 1004.)

ஜ:—தீவாந்தரத்துக்கு அனுப்பப்பட வேண்டிய கைதிகள் பட்டணம் பெனிடன்ஷியரியில் வந்த உடன் நடக்கும் நடபடிக்கைகள் என்ன?

வ:—பட்டணம் பெனிடன்ஷியரியில் ஷை கைதிகள் வந்த உடன் அவர்களை வரிசையாய் நிறுத்தி மெடிகல் ஆபீஸர் அவர்களை பரிக்ஷித்துப்பார்த்து மேலே 1002-வது ரூலில் கண்டபடி நடபடிக்கை நடத்துவார். (ஜெயில் ரூல். 1009.)

ஜ:—தீவாந்தரத்துக்கு அனுப்ப லாயக்கென்று தீர்மானிக்கப்படும் கைதிகளை ஆண்டமன் தீவுக்கு எப்போது அனுப்பப்படும்?

வ:—தீவாந்தரத்துக்கு அனுப்ப லாயக்காயிருக்கிற கைதிகளை அடுத்த மெயில் ஸ்டீமரில் அனுப்பி விடப்படும். (ஜெயில் ரூல் 1010)

ஜ:—தீவாந்தரத்துக்கு அனுப்பப்படும் கைதிகளுக்குக் கொடுக்கப்படும் உடை முதலியதுகளைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

வ:—தீவாந்தரத்துக்கு அனுப்பப்படும் கைதிகளில் ஒவ்வொருவருக்கும் அடியில் கண்டபடி போர்ட் ப்ளேர் ஜெயிலில் தரித்துக் கொள்ளும் உடைகள் கொடுக்கப்படும். அதாவது 2. அரை வேஷ்டிகள், 2. கோட்டுகள், 2. தலைக்குட்டைகள், 1-நாட்டுக் கம்பளிக்கோட்டு, 2. நாட்டுக்கம்பளிகள், 1. கயிற்றினுலாவது புல்லினுலாவது செய்யப்பட்ட பாய், அல்லது ஜமக்காளம், 1. பித்தளைத் தகட்டுப் பில்லை, 1. தண்ணீர்குடிக்கிறபாத்திரம் (கோப்பை). வெளிப்புறத்து ஜெயிலிலிருந்து வந்த கைதிகளின் உடுப்புகள் வகையறுக்களை ஷை கைதிகளைக் கொண்டு வந்த உத்தியோகஸ்தர்கள் வசம்திரும்ப அனுப்பிவிடப்படும் (ஜெயில் ரூல். 1013.)

ஜ:—தீபாந்தரத் தண்டனையோடு அபராதத் தண்டனையும் விதிக்கப்பட்ட கேசின் நடபடிக்கை என்ன?

வ:—தீவாந்தரத் தீர்ப்போடு அபராதமும் போடப்பட்டிருந்து அபராதத்தில் ஒரு பாகம் அல்லது பூராவும் பின்னீடு வசூலானுல் அது விபரத்தைப் பற்றி போர்ட் ப்ளேர் அதிகாரிகளுக்குக்குத் தெரிவிக்கப்படும். (ஜெயில் ரூல். 1014.)

ஜ:—தண்ணீர்மேலேற்றும் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் தீர்ப்பு எவ்விதம் நிறைவேற்றப்படுகிறது?

வ:—ஆயுசுபரியந்தம் தீர்ப்புச் செய்யப்பட்ட கைதி தீவாந்தரம்போனவுடன், முதல் 6-மாதங்களுக்கு தனிக் கொட்டடியில் வைக்கப்படுவான். இந்தக் காலத்தில் அவன் செய்யவேண்டிய வேலை கடினமானதல்ல. ஆனுல், அந்தக் காலத்தில் செய்யப்படும் கண்டிப்புத்தான் மிகவும் கொடூரமாயுள்ளது. அந்த 6-மாதங்களும் கழிந்தவுடன், கைதிகளைச் சேர்த்து ஒன்ருக வைக்கப்படும் கொட்டடியில் 18-மாதங்களுக்கு வைக்கப்படுவான். இங்கே வேலை கடினமானதாகவும், கண்டிப்பு இலேசாகவுமிருக்கும். அப்பால் மூன்று வருஷங்களுக்கு பாரக்ஸ் (Barracks) என்னும் ஜெயிலில் வைக்கப்படுவான். இந்தக் காலத்தில் பகல் காலங்களில் வெளியே கொண்டுபோய் வேலைவாங்கப்படுவான். இராக்காலங்களில்மட்டும் அடைத்து வைக்கப்படுவான். இந்த வேலைக்கு கைதிக்கு இனும் ஒன்றும் கொடுக்கப்படுகிறதில்லை. ஆனுல், கைதியின் வேலைத்திறமை இன்ன தென்பதைத் தெரிந்து கொள்ளப்படுகிறது. அடுத்த 5-வருஷங்களுக்கு அவன் வேலை செய்கிற கைதியாகவேயே யிருக்க வேண்டும். அந்தக் காலத்தில் மற்றக் கைதிகள் செய்கிற வேலைகளை மேல்பார்க்கும் உத்தியோகங்களில் நியமிக்கப் படுவதற்கு லாயக்காய் விடுகிருன். அல்லாமலும், அவன் இலேசாகவுள்ள வேலைகளை மட்டுந்தான் செய்யவேண்டியது. அப்போது அவனுக்கு வேண்டியதை வாங்கிக் கொள்ளவாவது அல்லது கைதிகளுக்கு என்றே வைக்கப்பட்டிருக்கிற ஸேவிங்க்ஸ் பாங்கில் போட்டு மீதம் வைத்துக் கொள்ளவாவது செய்யும் பொருட்டு அப்போதைக்கப்போது கொஞ்சப் பணம் கொடுக்கப்படுகிறது. தண்டனையில் 10-வருஷங் கழிந்துவிட்டால் தானே வேலை செய்து பிழைத்துக் கொள்ளும்படி அவனுக்கு அனுமதி கிடைக்கக்கூடும். இப்பேர்ப்பட்ட நிலைமையில் அவன் ஒரு கிராமத்தில் போய் தன் காலக்ஷேபத்திற்கு சம்பாதித்துக்கொள்கிருன். அவன் பயிரிடலாம். ஆடுமாடு வைத்துக் கொள்ளலாம். கலியாணம் செய்து கொள்ளவாவது அல்லது தன் ஸம்ஸாரத்தைத் தருவித்துக் கொள்ளவாவது செய்யலாம். ஆனுல் அவனுக்கு சுயாதீனம் கிடையாது. அந்தக் குடியேற்ற நாட்டை விட்டுப் போகவாவது சோம்பேறித் தனமாக இருக்கவாவது கூடாது.

ஜ:—தீவாந்தரத்துக்கு அனுப்பப்பட்டு 10-வருஷங்களுக்குப்பின் கைதியின் நிலைமை எப்படி இருக்குமென்று அறிய விரும்புகிறேன்.

வ:—10-வருஷங்களுக்குப் பின் தானுக சம்பாதித்து காலக்ஷேபம் செய்ய ஆரம்பித்த உடன் அவனுக்கு வீடு, சாப்பாடு, வேலைசெய்வதற்கு வேண்டிய கருவிகள் முதலியவை கொடுத்து உதவிசெய்யப்படும். அவன் சர்க்காருக்கு தீர்வை முதலியது யாதொன்றும் செலுத்தவேண்டியதில்லை. அப்பால் மூன்று வருஷங்களுக்கு மேல் நாலு வருஷங்களுக்குள் அவனுக்குச் செய்து வந்த உதவிகளை நிறுத்தி விடப்படும். அவன் சுயாதீனத்துடனிருந்தால் எப்படித் தீர்வை செலுத்துவானே அப்படித் தீர்வைகளை எல்லாம் செலுத்த வேண்டும்.

ஜ:—ஆயுசு பரியந்தம் தண்டிக்கப்பட்ட பெண்பிள்ளைக் கைதிகளின் தண்டனையை எவ்விதம் நிறைவேற்றப்படும்?

வ:—ஆயுசுபரியந்தம் தண்டிக்கப்பட்ட பெண்பிள்ளைக் கைதிகள் விஷயத்தில் ஆண்பிள்ளைக் கைதிகளுக்கு எப்படியோ, அப்படியேயுள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும், அவர்கள் மிகவும் இலேசான விதமாக நடத்தப்படுகிறூர்கள் அவர்கள் ஜெயிலுக்குள் இருக்கிறவர்களென்றும், ஜெயிலுக்கு வெளியிலிருக்கிறவர்களென்றும், 2-வகுப்புகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறூர்கள். அவர்கள் அனுமதியின்பேரில் ஒரு வீட்டில் வேலைக்கு அமர்ந்துகொள்ளலாம். அல்லது கலியா

ணம் செய்துகொண்டு புருஷனுடனிருக்கலாம். இவ்விதம் செய்யப்படாத ஒவ்வொரு பெண்பிள்ளைக் கைதியும் பெண்பிள்ளை ஜெயிலுக்குள் வைக்கப்படுவாள். இந்தக் குடியேற்ற நாட்டுக்குக் கொண்டு போகப்பட்டு 5-வருஷங்கள் இருந்த பின்பு, ஒவ்வொரு பெண் கைதியும் கலியாணம் செய்து கொள்ளலாம். கலியாணம் செய்து கொண்டுவிட்டால் 15-வருஷங்களுக்குப் பிற்பாடு தன் புருஷனோடு அந்த நாட்டை விட்டுப் போய்விடலாம். கலியாணம் செய்து கொண்ட புருஷன் பெண்ஜாதி இவர்களில் யாருடைய தண்டனைக்காலம் கடாசியில் முடிகிறதோ அது வரை ஒருவர் மற்றொருவருக்காகக் காத்திருந்து இரண்டுபேர்களும் ஒன்றாகத்தான் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுப் போகவேண்டும். அவ்விடத்தில் கலியாணஞ் செய்து கொள்ளாத பெண்பிள்ளைகள் அங்கே 20-வருஷங்கள் இருக்கவேண்டும். ஆண்பிள்ளைக் கைதிகள் எப்படியோ அப்படியே பெண்பிள்ளைக் கைதிகளும் ஜெயிலில் கைதி வகுப்பில் படிப்படியாய் மேல்போய் கைதி உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப்படலாம்.

ஜ:—ஆயுசுபரியந்தம் தண்டிக்கப்படாத ஆண்பிள்ளைக் கைதிகள் விஷயமான நடபடிக்கைகள் என்ன?

வ:—ஆயுசுபரியந்தம் தண்டிக்கப் படாமல் அதற்குக் குறைந்த சில வருஷங்களுக்கு மாத்திரம் தண்டிக்கப்பட்ட கைதிக்கும் மேற்சொன்ன எல்லா விதிகளும் சம்பந்தப்படும். ஆனால் அவன் தானே சம்பாத்தியம் செய்து காலக்ஷேபஞ்செய்து கொள்ளும்படி கிராமாந்தரங்களில் போய் குடியிருக்க அனுமதி கொடுக்கப்படமாட்டான். அவன் தண்டனைக் காலம் முடிந்த உடன் விடுதலை செய்து விடப்படுவான்.

OUR LAW COLLEGE.

எங்களுடைய சட்ட கலாசாலை.

எங்களுடைய சட்ட கலாசாலையின் புரொபஸர் உலகறிந்த திருநெல்வேலி வக்கீல் K. R. கிருஷ்ணமாச்சாரியார் அவருடைய மாணுக்கர்களுடைய பெயர்கள் :—

1 அனந்தாச்சாரி, 2 சக்ரவர்த்தி ஐயங்கார், 3 துரைசாமி முதலியார், 4 சட்டராசாரியார், 5 தணிகாசல முதலியார் வகையராக்கள்.

HINDU LAW—ஹிந்து லா.

(MINORITY—மைனரிட்டி.)

(முன்மாதத் தொடர்ச்சி.)

மாணு:—மைனர்கள் சம்பந்தப்பட்ட கேசுகளில் வியாச்சியம் செய்ய காலாவதி கண்டு பிடிப்பது எப்படி?

பு:—யாதொரு தாவாவின் வியாச்சியமூலமானது வாதி மைனராக யிருந்த காலத்திலேயே துடங்கி அப்பொழுதே முடிவும் பெற்றிருந்தால், அப்போது மைனரிட்டி நீங்கின தினம் முதல் 3-வருஷங்களுக்குள்ளாக அந்த வியாச்சியம் அந்த வாதியால் கொண்டுவரப்படவேண்டும். அப்படிக் கில்லாமல் ஒரு வியாச்சியத்துக்குள்ள காலாவதியானது வாதியின் மைனரிட்டி நீங்கினது முதல் மூன்று வருஷங்களுக்கு மேற்பட்டகாலத்தில் முடிவு பெறுகிறதா யிருந்தால், அப்படிப்பட்ட அதிகக் காலாவதிக்குள்ளாகவும் அந்த வியாச்சியம் கொண்டுவரப்படலாம். (காலநிர்ணய ஆக்ட்டு 7-வது பிரிவைப்பார்க்க, இ. லா. ரி. 9. கல். 663.)

மாணு:—கார்டியனால் செய்யப்பட்ட துர்விநியோகங்களை ரத்துச் செய்வதற்காகச் செய்யப்படும் வியாச்சியங்களுக்குக் காலாவதி எப்படி?

பு:—கார்டியனால் செய்யப்பட்ட துர்விநியோகங்களை ரத்துச் செய்வதற்காகச் செய்யப்படும் வியாச்சியங்கள் மைனரிட்டி நீங்கினது முதல் 3-வருஷங்களுக்குள் தொடரப்படவேண்டும்.

மாணு:—கார்டியனால் செய்யப்பட்ட மோசடியானவும் அக்கிரமமானவுமான நடபடிக்கைகளால் நேரிட்ட நஷ்டங்கள் சம்பந்தமாய்ச் செய்யப்படும் வியாச்சியங்களுக்குக் காலாவதி எப்படி?

பு:—கார்டியனால் செய்யப்பட்ட மோசடியானவும் அக்கிரமமானவுமான நடவடிக்கைகளால் யேர்ப்பட்ட நஷ்டங்கள் சம்மந்தமாய்ச் செய்யப்படும் வியாச்சியங்கள் மைனரிட்டி நீங்கினதினம் முதல் மூன்று வருஷங்களுக்குள்ளேயே தாக்கல் செய்யப்படவேண்டும்.

மாணு:—மைனர் பாத்தியப்படவேண்டிய கடன்களில் ஏதாவது காலாவதியாகப் போயிருந்தால் அதைத் தீர்த்துவிட கார்டியனுக்கு அதிகாரம் உண்டா?

பு:—அப்படிச்செய்ய கார்டியனுக்கு அதிகாரம் இல்லை

மாணு:—மைனர் பாத்தியப்படவேண்டிய கடன்களில் ஏதாவது காலாவதியாய்ப் போயிருந்தால் அப்படிப்பட்டதை வட்டிமுதலியது செலுத்தி, அந்தக் கடனுக்கு மறுபடியும் உயிர் உண்டாக்கக் கார்டியனுக்கு அதிகாரமுண்டா?

பு:—அப்படிச் செய்யவும் கார்டியனுக்கு அதிகாரமில்லை.

மாணு:—ஹிந்து பொது குடும்பத்துக்கு எஜமானன் யார்?

பு:—பொது குடும்பத்திலுள்ள ஸ்திரீகள் ஜீவனாம்சத்துக்கு மட்டும் பாத்தியஸ்தர்கள். புருஷர்களில் கூட எல்லாரும் பொது சொத்துக்கு பாத்தியஸ்தர்கள் அல்ல. சாதாரணமாய் அந்த குடும்பத்தில் தகப்பன் எஜமானனாக யிருந்து எல்லாக் காரியத்தையும் நடத்த வேண்டியது. தகபபன் விருத்தாப்பியம் வியாதி முதலிய காரணங்களால் அசக்தனாகி விட்டாலும், அல்லது இறந்துபோய் விட்டாலும், பிள்ளைகளில் ஜேஷ்டனும், அவனும் மேற்சொல்லப்பட்ட காரணம் போலொத்தவைகளால் அசக்தனாக யேர்ப்பட்டுப் போய்விட்டால், அந்தக் குடும்பத்தில் யிருக்கும் பிள்ளைகளில் மேஜராயிருக்கும் கனிஷ்ட புத்திரர்களில் ஒருவன் குடும்ப காரியாதிகளை மேல் பார்த்து நடத்திவரவேண்டும்.

மாணு:—எந்தெந்தச் சிலவுகளை குடும்பப்பொதுச் சிலவென்று சொல்லலாம்?

பு:—குடும்பத்திலுள்ள குழந்தைகள் ஸ்திரீ புருஷர் இவர்களுடைய காலக்ஷேபாதிகளுக்காகவும் வஸ்திரம் முதலிய உடைகளுக்காகவும், வித்யாப்பியாசம், உபநயனம் விவாஹம் முதலிய சுபகாரியங்களுக்காகவும், இன்னும் மற்ற வைதிக லௌகீக கர்மங்களுக்காகவும், குடும்பச் சொத்திலிருந்து எஜமானன் தன்னிஷ்டப்படி செலவு செய்யலாம். செலவைச்சுருக்கவும், இவ்வளவுதான் செலவு செய்ய வெண்டுமென்று நிபந்தனை செய்யவும், அந்த குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கு அதிகாரமில்லை. வெகு லோபித்தனமாகவாவது அல்லது உதாரமாகவாவது எஜமானன் சொத்தை செலவழிப்பது மற்றவர்களுக்கு சம்மதமில்லாமலிருந்தால், அவரவர்களுக்குச் சேரவேண்டிய பாகத்தைமட்டில் கேழ்க்கலாமேயொழிய அவனைக் கண்டிக்க அதிகாரங்கிடையாது (3. ம. ஹை, கோ. ரி 177; இ. லா. ரி. 10. பம். 528).

மாணு:—குடும்பச் சொத்தை எஜமானன் துர்விநியோகம் செய்தால், அந்த குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கு ஒருவிதமான பரிகாரமுமில்லையா?

பு:—குடும்பச் சொத்தை எஜமானன் துர்விநியோகம் செய்தால், பாககாலத்தில் அதை அவன் பங்கில் குறைத்துவிடலாம். ஆனால், குடும்ப லாபத்துக்காக வர்த்தகம் செய்து நஷ்டம் அடைந்திருந்தால் அந்த நஷ்டத்தை எல்லாரும் பொறுத்துக்கொள்ளவேண்டும்.

மாணு:—ஒரு பொதுக் குடும்பத்தில் ஒருவருக்கு அதிகக் குழந்தைகளிருந்து, அவர்களுடைய சுபசோபனாதிகளுக்காகவாவது வேறு காரணங்களுக்காகவாவது அதிக சிலவுபிடித்தால் அந்த சிலவை மற்றவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமா?

பு:—பொதுக் குடும்பத்தில் ஒருவருக்கு அதிகக் குழந்தைகளிருந்து, அவர்களுடைய சுபசோபனாதிகளுக்காவது, வேறுகாரணங்களுக்காவது அதிகச் செலவு பிடித்தால், அதை எல்லாரும் ஒத்துக் கொடுக்கவேண்டும். (5. கல். ஹை. கோ. ரி. 347, 349) சில குடும்பத்தில் அதிகச் சிலவு யாரால் நேர்ந்ததோ அவர்பாகத்தில் குறைப்பதும் வழக்கமுண்டு (5. மூ. இ. அ. 540).

மாணு:—பொதுக்குடும்பச் சிலவுக்காக குடும்பத்தின் எஜமானன் கடன்வாங்கினால் அதை மற்ற பாகஸ்தர்கள் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறார்களா?

பு:—குடும்பப் பொதுச்செலவுக்காக அந்த குடும்ப எஜமானனால் வாங்கப்பட்ட கடனை எல்லா பாகஸ்தர்களும் கொடுக்கவேண்டும்

குடும்ப எஜமானன் காலாவதியாய்ப் போன யாதொரு பத்திரத்தை மற்ற பாகஸ்தர்களுடைய அனுமதியின்றி புதுப்பித்தால் அவன் மட்டும் அதற்குக் கட்டுப்படவேண்டும். (இ. லா. ரி. 5. ம. 169; இ. லா. ரி. 17 பம். 512.)

மாணு:—பொதுக்குடும்பத்திலுள்ள எவராவது குடும்ப வரவு செலவு கணக்குகளைப் பார்க்க விரும்பினால் எஜமானன் அந்த கணக்கைக் காட்ட கடமைப் பட்டிருக்கிறானா?

பு:—யாதொரு பொதுக் குடும்பத்திலுள்ள எவராவது குடும்ப வரவு செலவு கணக்குகளைக் காட்டும்படி சாதாரண காலத்திலாவது அல்லது பாக காலத்திலாவது குடும்ப எஜமானனைக் கேட்டால் அந்தக் கணக்குகளை அவன் தடையின்றிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறான். (5. கல். ஹை. கோ. ரி. 354.)

மாணு:—குடும்பத்துக்கு வரவேண்டியபொதுக்கடனைக் குறித்து தாவா செய்வது எப்படி?

பு:—ஏக குடும்பத்தாருக்கு வரவேண்டியகடனைப்பற்றி தாவா செய்தால், அந்தக் குடும்பத்திலுள்ள எல்லோரும் சேர்ந்து வாதியாக யிருந்து வியாச்சியம் செய்யவேண்டும்.

மாஞ:—பொதுக் குடும்பச் சொத்தைப்பற்றியாவது அல்லது ஷை குடும்பஸ்தர்களால் கொடுக்கப்பட வேண்டிய கடனைப்பற்றியாவது எவரும் வழக்குக் கொண்டு வருகிறதாக யிருந்தால், வழக்குத் தொடரும் விதம் எப்படி ?

பு—பொதுக் குடும்பச் சொத்தைப்பற்றியாவது அல்லது ஷை குடும்பஸ்தர்களால் கொடுக்கப்பட வேண்டிய கடனைப்பற்றியாவது எவரும் வியாச்சியம் தொடருகிறதாக யிருந்தால் அந்தக் குடும்பத்தார் எல்லாரையும்பிரதிவாதிகளாகச் சேர்த்து பிராது செய்யவேண்டும். இல்லாவிட்டால் ஷை தாவா செல்லமாட்டாது. (இ. லா. ரி. 6. ம. 264; இ. லா. ரி. 11 கல். 338, 615; இ. லா. ரி. 17 கல். 160; இ. லா. ரி. 1. கல். 226; 11. பம். ஹை. கோ. ரி. 69; இ. லா. ரி. 6. ம. 90; 12 பம். ஹை. கோ. ரி. 85; இ. லா. ரி. 3 பம். 23; இ. லா. ரி. 7 கல். 470; 7. அல. ஹை. கோ. ரி. 58; இ. லா. ரி. 8 கல். 353; 12. கல். ஹை கோ. ரி. 291; இ. லா. ரி. 4 கல். 93; இ. லா. ரி. 5 கல். 941; இ. லா. ரி. 7 பம். 217)

மாஞ:—அவிபக்த குடும்ப பாகஸ்தர்கள் என்றால் அது யார்யாருக்குச் சொல்லுகிறது?

பு:—ஹிந்து தர்மசாஸ்திரங்களின் பிரகாரம் ஸ்திரீகள் பாகத்துக்குரியவர்களல்ல. மிதாக்ஷர கிரந்தத்தின் பிரகாரமும் ஸ்திரீகளுக்கு குடும்ப சொத்தில் பாக பாத்தியம் கிடையாது. ஆகையால் புருஷர்களே அவிபக்த குடும்பத்தைச் சேர்த்த பங்காளிகளாக யிருக்கிறார்கள்.

மாஞ:—ஸபிண்டர்களென்றால் என்ன ?

பு:—ஒரு ஹிந்துவானவன், தர்மசாஸ்திரங்களின்படிக்கு தன்னுடைய தகப்பன், பாட்டன், கொள்பாட்டன் (பூட்டன்) ஆகிய முதல் மூன்று முன்னோர்களுக்கும் உத்தர கிரியைகள் செய்யவும், அந்தக்கிரியைகளிலும், சிரார்த்தாதிகளிலும் அவர்களின் பொருட்டு பூரணமான பிண்டங்களைப் போடவும், பாத்தியஸ்தனாகவும், கடமைப்பட்டவனாகவும் இருக்கிறான். அதுபற்றி உத்தர கிரியை முதலியவற்றைச் செய்து பிண்டம் போடப் பாத்தியஸ்தர்களாக யிருக்கிற ஒருவனுடைய பிள்ளை, பேரன், கொள்பேரன், ஆகிய மூவரும் ஒருவருக்கு ஸபிண்டர்களெனப்படுவார்கள். மேலும் பிண்டம் போடுகிறவர்களன்றி பிண்டத்தைப் பெறத்தக்கவர்களான தகப்பன், பாட்டன், பூட்டன் ஆகிய மூவரும் ஒருவனுக்கு ஸபிண்டர்களாக யிருக்கிறார்கள். அல்லாமலும் ஒரே முன்னோர், அல்லது முன்னோர்களைக்குறித்து மேற்சொன்ன பிண்டங்களை எவர்கள் போடத் தகுந்தவர்களாக யிருக்கிறார்களோ அவர்களும் ஒருவருக்கொருவர் ஸபிண்டர்களாகிறார்கள். அதாவது தகப்பனுடைய ஸந்ததியாரான சகோதரன், சகோதரனுடைய பிள்ளை, சகோதரனுடைய பேரன், ஆகிய இவர்களும் பாட்டன், பூட்டன்களுடைய முதல் மூன்று ஸந்ததியார்களும் ஒருவனுக்கு ஸபிண்டர்களாக யிருக்கிறார்கள். இவ்வாறு கீழாகவும், மேலாகவும், சுற்றுப்பக்கத்திலும் உள்ள முதல் மூன்று ஆண்தலை முறையார்கள் ஒருவனுக்கு ஸபிண்டர்களென்று சொல்லப்படுவார்கள். (6 ம. ஹை. கோ. ரி. 94.)

மாஞ:—பலர்கள் ஒருவனுக்கு ஸபிண்டர்களாக யிருந்தால் அந்த ஸபிண்டர்களெல்லாரும் ஒருவருக்கொருவர் ஸபிண்டர்களாக யிருப்பார்களா ?

பு:—பலர்கள் ஒருவனுக்கு ஸபிண்டர்களாக யிருந்தாலும் அந்த பலர்களில் அனேகர் ஒருவருக்கொருவர் ஸபிண்டர்களாக யிருக்கவு மாட்டார்கள்.

மாஞ:—அவிபக்த குடும்பஸ்தர்கள் எப்படி யிருப்பார்கள் ?

பு:—எவர்கள் ஒருவருக்கொருவர் ஸபிண்டர்களாக யிருக்கிறார்களோ அப்படிப் பட்டவர்களே அவிபக்த குடும்ப பாகஸ்தர்களாக யிருக்கத் தகுந்தவர்களாகிறார்கள். அதாவது அவிபக்த குடும்பத்திலிருக்கப்பட்ட ஒவ்வொருபாகஸ்தனும் மற்றொரு பாகஸ்தனுக்கு ஸபிண்டமுறையில் இருக்கவேண்டும். அவ்விதமில்லாமலிருப்பவன் அந்த அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த பாகஸ்தனாகமாட்டான்.

மாஞ:—மேற்சொல்லிய விஷயங்களை உதாரணமூலமாக விளங்கச் சொல்லவேண்டும்.

பு:—நாராயணன் என்பவனுக்கு கோவிந்தன் என்ற பிள்ளையும், கோபாலன் என்ற பேரனும், வாசுதேவன் என்ற கொள்பேரனும், கிருஷ்ணன் என்ற கொள்பேரனுடைய பிள்ளையும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். கிருஷ்ணன் என்பவன் கோவிந்தன், கோபாலன், வாசுதேவன் என்ற மூன்று பேர்களுக்கும் ஸபிண்டனாகயிருந்தாலும், நாராயணனுக்கு ஸபிண்டனாகவில்லை. ஆகையால் நாராயணன், கோவிந்தன், கோபாலன், வாசுதேவன் ஆகிய இவர்களடங்கிய குடும்பத்தில் கிருஷ்ணன் பாகஸ்தன் ஆகமாட்டான். நாராயணன் இறந்த பிறகே கிருஷ்ணன் பாகஸ்தன் ஆகிறான். ஏனென்றால் நாராயணன் என்பவன் உயிரோடிருக்க கோவிந்தன், கோபாலன், வாசுதேவன் இந்த மூன்று பேர்களும் ஒருவேளை இறந்துபோய் விட்டால் அந்தக் குடும்ப சொத்து பூராவும் நாராயணனையே சேர்ந்து அவனுக்குப்பின் அவனுடைய விபக்த சகோதரர் முதலான சமீப தாயாதிகளை வார்சு பாத்தியதைப்படி சேர்ந்து விடுமேயன்றி கிருஷ்ணன் என்பவனுக்குச் சேரமாட்டாது. ஆகையால் அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோருமே ஒருவருக்கொருவர் ஸபிண்டமுறைமையில் இருக்கவேண்டும்.

மாஞ:—ஒரு அவிபக்த குடும்பமானது விபக்த குடும்பம் ஆனபிறகு அது எப்போதும் விபக்த குடும்பமாகவேயே யிருக்குமா? அல்லது எந்தக் காரணத்தினாலும் அது மறுபடி அவிபக்த குடும்பம் ஆய்விடுமா ?

பு:—பாட்டன், தகப்பன், ஸகோதரர் முதலானவர்களோடு அவிபக்த குடும்பமாக யிருந்து, பிறகு அவர்களிடமிருந்து பாகம் பிரித்துக்கொண்டு விலகுகிற ஒவ்வொருவனும், மகன், பேரன் முதலான ஆண் ஸந்ததியார்களோடு மறுபடியும் அவிபக்த நிலமையை அடையக் கூடியவனாக யிருக்கிறான். ஆனது பற்றி அவிபக்த நிலமையும் விபக்த நிலமையும் ஒவ்வொரு குடும்பத்திலும் மாறி, மாறி வந்துகொண்டே யிருக்கிறது.

மாஞ:—அவிபக்தக் குடும்பப் போது சொத்துக்கள் என்பது என்ன?

பு:—அவிபக்தக் குடும்பஸ்தர்கள் தங்கள் தகப்பன், பாட்டன், பூட்டன் ஆகிய முதல் மூன்று முன்னோர்களிடமிருந்து அடைந்திருக்கும் சொத்துக்களும், அந்தச்சொத்துக்களுடைய விருத்தியம்சங்களும், அந்தச் சொத்துக்களின்சகாயம் அல்லது உபயோகத்தைக் கொண்டு சம்பாதிக்கப்பட்டிருக்கிற சொத்துக்களும் குடும்பச் சொத்துக்களாகும். அதாவது பிதுரார்ஜித சம்பந்தமான சொத்துக்கள் யாவும் குடும்பப்பொதுவானதாக இருக்கின்றன (இ. லா. ரி. 3. கல். 508)

மாஞ:—மேற்கண்ட விதமான சொத்துக்களைத் தவிர வேறுவகையான சொத்துக்கள் குடும்பப் பொதுச் சொத்தாகுமா ?

பு:—ஒரு அவிபக்தக் குடும்பத்திலுள்ள எல்லா பாகஸ்தர்களும் சேர்ந்து பிரயாசைப்பட்டு சம்பாதித்திருக்கிற சொத்துக்களும் அவர்களுடைய குடும்பப் பொதுவானதாகும். (இ. லா. ரி. 3 பம். 151; 10. மூ. இ. அ. 490; இ. லா. ரி. 3. கல். 508.)

மாஞ:—ஒரு சொத்தானது ஒரு பாகஸ்தனால் குடும்ப திரவிய ஸகாயமன்னியில் தனியாய் சம்பாதிக்கப் பட்டிருந்தால் அது குடும்பப் பொதுச் சொத்தாகுமா ?

பு:—ஒரு சொத்தானது ஒரு பாகஸ்தனால் குடும்ப திரவிய ஸகாயமன்னியில் தனியாய் ஸம்பாதிக்கப் பட்டிருந்தபோதிலும், அதை அவன் தன் தனியான சொத்தாக பாராட்டாமல் குடும்பப் பொதுவான சொத்துக்களோடு கலந்து குடும்பப் பொதுவானதாகவே பாவித்து வந்திருந்தால் அதுவும் குடும்பப் பொதுவான தாய் விடுகிறது. (3. இ. அ. 259; 16. இ. அ. 71; இ. லா. ரி. 16. கல். 397; 26. இ. அ. 229; இ. லா. ரி. 15. பம். 519; இ. லா. ரி. 10. கல். 392; இ. லா. ரி. 27. ம. 228.)

(இன்னும் வரும்.)

அறிக்கை.

இந்திய சட்ட கேஜெட்டாபீஸ்.

இதனடியில் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு சட்ட ஸம்மந்தமான விஷயங்களைப்பற்றி எழுத விரும்புவோர், தமிழ் பாஷையில் எழுதி அனுப்பும் வியாஸங்களை அங்கீகரித்து இந்திய சட்ட கெஜெட்டில் பிரசுரம் செய்யப்படும். ஷை வியாஸங்கள் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களினுடைய அருமையையும், எழுதப்பட்ட வியாஸங்களினுடைய தன்மையையும் நிதானித்து பூல்ஸ்காப் பேப்பர் அளவில் அச்சிடப்பட்ட 4 பக்கங்கள் கொண்ட ஒரு பாரத்திற்கு ரூ. 3 முதல் ரூ. 6 வரையில் பிரதிப்பிரயோஜனம் கொடுக்கப்படும்.

இந்திய சட்ட கெஜெட் ஆபீசுக்கு அனுப்பப்படுகிற வியாசங்களை காரணம் தெரிவிக்காமலே பூராவும் அங்கீகாரம் செய்யாமல் நிராகரிக்கவாவது அல்லதுசில பாகத்தை ஒப்புக்கொண்டு, சிலபாகத்தை நிராகரிக்கவாவது மானேஜருக்கு சுதந்திரம் உண்டு.

ஒப்புக்கொள்ளாமல் நிராகரிக்கப்படும் வியாஸங்களை, திரும்ப அனுப்பப்பட மாட்டாது.

VILLAGE SHEET.

கிராம ஜனங்களுடைய பக்கம்.

ACT No. XV OF 1917.

1917-ம்ஹுத்து 15-வது ஆக்ட்.

AN ACT FURTHER TO AMEND THE INDIAN REGISTRATION ACT, 1908.

1908-ம் ஹுத்திய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டைப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1908-ம் ஹுத்திய இந்து தேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 23-வது பிரிவுக்குப் பிறகு அடியிற் கண்ட பிரிவை அமைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது:—

"23-A. இந்த ஆக்டில் இதற்கு விரோதமாக என்ன சொல்லி யிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, எந்த விஷயத்திலாகிலும் ரெஜிஸ்டர் செய்ய வேண்டிய தாயிருக்கிற யாதொரு தஸ்தவேஜைக் கொண்டுவந்து கொடுக்க கிரமமாய் அதிகாரம் கொடுக்கப் பெற்றிராத யாதொரு நபரிடத்திலிருந்து அந்த தஸ்தவேஜானது ஒரு ரெஜிஸ்டிராராலாகிலும் ஸப் ரெஜிஸ்டிராராலாகிலும் ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்து ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தால், அந்த தஸ்தவேஜின்படி தாவா செய்கிற யாதொரு நபர் - அந்த தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பது சட்டப்படி செலாவணி யாகாதென்று தமக்கு முதல் முதல் தெரியவந்ததிலிருந்து நான்கு மாதத்துக்குள்ளாக, எதில் ஷை தஸ்தவேஜு முதலில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டதோ அந்த ஜில்லா ரெஜிஸ்ட்ராரின் ஆபீஸில் மறுபடியும் ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக 6-ம் பாகத்திற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்து அந்த தஸ்தவேஜைக் கொண்டுவந்து கொடுக்கலாம், அல்லது அதைக் கொண்டுவந்து கொடுக்கும்படிச் செய்யலாம்; அந்த தஸ்தவேஜைக் கொண்டுவந்து கொடுக்க கிரமப்படி அதிகாரம் கொடுக்கப் பெற்றிராத யாதொரு நபரிடத்திலிருந்து அது ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக அந்தப்படி ஏற்றுக் கொள்ளப் பட்டதென்று ரெஜிஸ்ட்ரார் தெரிந்து திருப்தியடைவதன்மேல், அவர் - அந்த தஸ்தவேஜு முன்னமே ரெஜிஸ்டர் செய்யப் படாமலிருந்தால் எப்படியோ அப்படியும், அதை மறுபடியும் ரெஜிஸ்டர் செய்வதற்காக மேலேகண்டபடி கொடுத்துக் கொண்டது 4 ம் பாகத்தின்படி ரெஜிஸ்டர் செய்வதற்காகக் கொடுக்கப்படும் காலத்துக்குள்ளே அந்தப்படி ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காகக் கொடுத்துக் கொள்ளப் பட்டதாயிருந்தால் எப்படியோ அப்படியும், அந்த தஸ்தவேஜை மறுபடியும் ரெஜிஸ்டர் செய்ய தொடங்கவேண்டும்; அதன்மேல், தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதை குறித்து இந்த ஆக்டிற்கண்ட சகல நிபந்தனைகளும் - அந்தப்படி மறுபடியும் ரெஜிஸ்டர் செய்வதற்குப பிரயோகப்படும்; மேலும், அந்த தஸ்தவேஜானது - இந்த பிரிவிற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்து கிரமப்படி மறுபடியும் ரெஜிஸ்டர் செய்யப்படுகிற பட்சத்திலே, அது முதலில் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட தேதிமுதல் சகல காரியங்களுக்காகவும் கிரமமாய் ரெஜிஸ்டர் செய்யப் பட்டிருப்பதாகவே எண்ணப்படும்.

"ஆனால் 1917-ம்ஹு செப்டம்பர்மீ 12உ முதல் மூன்று மாதத்துக் குள்ளாக இந்தப் பிரிவு எந்த தஸ்தவேஜுக்குப் பிரயோகப்படுகிறதோ அப்படிப் பட்ட யாதொரு தஸ்தவேஜின்படி தாவா செய்கிற யாதொரு நபர் - அந்த தஸ்தவேஜு ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பது சட்டப்படி செலாவணியாகமாட்டாதென்று தமக்கு முதல் முதல் தெரியவந்த காலம் எதுவாயிருந்த போதிலும், இந்தப் பிரிவை அனுசரித்து மறுபடியும் ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக அந்த தஸ்தவேஜைக் கொண்டுவந்து கொடுக்கலாம், அல்லது அதைக் கொண்டுவந்து கொடுக்கும்படிச் செய்யலாம்."

கலெக்டர் துரையவர்கள் விளம்பரம்.

சேனையில் சேர்ந்த ரிகுரூட்டுகள், இந்திய சோல்ஜர்கள் - இவர்களுக்குறித்தான தர்காஸ்து விளம்பரம்.

1. தர்காஸ்து அடமானம் செய்வதில் சண்டை ஆரம்பித்த பிறகு வாஸ்தவமாய் சேர்ந்த ரிகுரூட்டுகள், அல்லது அவர்களுடைய பெற்றோர்கள், சகோதரர்கள், கமான்டிங் ஆபீசரால் சிபார்சு செய்யப் பட்ட ஆக்டிவ் சர்வீசில் சேவகம் செய்யும் இந்திய சோல்ஜர்கள்-இவர்களுடைய மனுக்களுக்கு முதன்மை கொடுக்கப்படும்.

2. தர்காஸ்து கோரும் நிலம் சாதாரணமாய் அடமானம் செய்யப்படும் தீர்வை ஏற்பட்ட தருசு நிலமாகவிருக்கவேண்டும். கிராமப்பொது நன்மைக்கு வேண்டிய மேய்கால், ஏரி நீர்பிடிப்பு முதலிய நிலங்கள் தர்காஸ்து கொடுக்கப்படமாட்டாது.

3. ரிகுரூட்டு அல்லது இந்திய சோல்ஜருக்கு சொந்தமான கிராமத்தில் தர்காஸ்து செய்யவேண்டும். அவருடைய சொந்த கிராமம் தரவாரி கிராமமாயிருந்தால், அந்த கிராமத்தில் தர்காஸ்து நிலம் இருக்கும் பக்ஷத்தில் அந்த கிராமத்திலேயே தர்காஸ்து கேட்கவேண்டும். அவருடைய சொந்த கிராமம் ஜமீன் அல்லது இனம் கிராமமாயிருந்தாலும் அல்லது அவருக்கு சொந்தமான தரவாரி கிராமத்தில் தர்காஸ்து நிலம் இல்லாவிட்டாலும் அவருடைய சொந்த கிராமத்திய அண்டை கிராமங்களிலிருக்கும் நிலத்தை கேட்கலாம்.

4. ஜாகீர், ஜமீன், இனம் முதலிய கிராமங்களிலும், இந்திய சோல்ஜர்களுக்காக ரிசர்வு செய்திருக்கும் நிலங்களையும் தர்காஸ்து கொடுக்கப்படமாட்டாது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
30 NOV 1917
MADRAS

The Indian Law Gazette.

PART II.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னபட்டணம், 1917ஹு நவம்பர்மீ [நெ. 11.

Reports of Cases.

கேஸ்களின் ரிப்போர்ட்டுகள்.

Madras High Court.

மதராஸ் ஹைகோர்ட்டு.

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

(1917 ஹு அக்டோபர் மீ 2-ம் பாகம் 148-ம் பக்கத் தொடர்ச்சி.)

மகம்மது வஹீப்புக்கும் மகம்மது ஹமீருக்கும் நடந்து1905-ம் ஹுத்து இ. லா. ரி. 32. கல். 527-ன் தீர்மான ஸம்பந்தமாக 531-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற அபிப்பிராயத்தில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹாரிங்டன் ப்ளாக்ஸ்டோன் என்பவரால் செய்யப்பட்ட வியாக்கியானங்களிலிருந்து எடுத்தெழுதிய சுருக்கமான விஷயங்களை இந்த இடத்தில் எடுத்துச் சொல்லுவோம். "பணம் பெற்றுக்கொள்பவன் மற்றொருவனுடைய பணத்தை அவனுக்கு தக்க பிரதிப்பிரயோசனம் செய்யாமல், ஒருவனிடமிருந்து பெற்றுக்கொண்டு வைத்துக் கொண்டிருந்தால் இந்த விதமான நடபடிக்கை சம்பந்தப்படும். இப்பேர்ப்பட்ட கேசுகளில் பணம் யாருக்கு சம்பந்தப்பட்டதோ அவருக்காகவே வாங்கப்பட்டு வைத்திருக்கப் படுவதாகத்தான்சட்டத்தின் கருத்து". இந்த சொற்கள் இந்த கேசுக்கும் முற்றிலும் பொருந்தி யிருக்கிறதாகவே நாம் அபிப்பிராயப்படுகிறோம்.

குருதாஸ் பைருக்கும், ராம்நாராயன் ஸாஹுவுக்கும் நடந்து 1884-ம் ஹுத்து இ. லா. ரி. 10-கல் 860-ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதும் ப்ரிவிகௌன்ஸில் வரை போய் வந்ததுமான கேசின் தீர்மானம், ராமசாமி செட்டிக்கும் ஹரிகிருஷ்ண செட்டியாருக்கும் நடந்து 1911-ம் ஹுத்து 21. ம. லா. ஜ. 705-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசின் தீர்ப்புகளை அப்பீல் வாதி ஆதாரமாகக் காட்டுகிறார். முன் கேசு விஷயமாக மகம்மது வஹீப்புக்கும், மகம்மது ஹமீருக்

கும் நடந்த 1905-ம் ஹுத்து இ. லா. ரி. 32. கல். 527-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசு விஷயமாக 531-ல் சொல்லப்பட்டிருக்கிற அபிப்பிராயத்திலும், பகவான்தாசுக்கும், காம் ஹுஸ்ஸேனுக்கும் நடந்த 1911-ம் ஹுத்து இ. லா. ரி. 33. அல. 708-ல் பிரசுரம் செய்திருக்கிற கேசு சம்மந்தமாக 726-ல் கொடுக்கப்பட்டிருக்கிற அபிப்பிராயத்திலும், அந்தக் கேசில் பிரதிவாதியால் பெற்றுக்கொள்ளப்பட்ட துகை வாதிக்குப் பாத்தியப்பட்டதில்லை யென்றும், ஆனால் ஒரு மூன்ருவது கக்ஷிக்காரனுக்குப் பாத்தியப்பட்டதென்றும், ஆனால் வாதி தன் கணக்குக்கு வரவு வைத்துக் கொள்ளக்கூடிய துகை பிரதிவாதியிடத்திலிருந்து வருவதாயும், ஷை கேசுகளில் காட்டப்பட்டிருக்கிறது. இத்தியாதி காரணங்களால்தான் அந்தக் கேசுக்கு 62-வது விஷயம் (article) பொருந்தினதில்லை யென்று ப்ரிவி கௌன்ஸிலில் தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் அந்தக் கேசின் சங்கதிகள் இந்தக் கேசின் சங்கதிகளிலிருந்து பூராவும் வித்தியாசப் பட்டதாகவேயேயிருக்கிறது. 2-வது கேசில் அதாவது ராமசாமி செட்டிக்கும், ஹரி கிருஷ்ண செட்டியாருக்கும் நடந்த 1911-ம் ஹுத்து 21. ம. லா. ஜ. 705-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசில் வாதி டிக்கிரி மேடோவர் வாங்கிக் கொண்டவனுடைய ஸ்தானத்திலிருந்து வழக்காடினன். ஆனால் வாதி துகைக்கு வழக்காடினதும், பிரதிவாதிக்குத் துகை கிடைத்ததுமான காலத்தில் வாதி டிக்கிரி வாங்கினவன் ஸ்தானத்தை உறுதி செய்துகொள்ளுகிறதற்காகச் செய்த வியாச்சியமானது தள்ளுபடி செய்துவிடப்பட்டது. இத்தியாதி காரணங்களால், பிரதிவாதி துகையை வசூல் செய்த காலத்தில் டிக்கிரியை மேடோவர் வாங்கிக்கொண்ட ஸ்தானத்தை உறுதி செய்துகொள்ளுவதற்காக வாதி செய்த வியாச்சியமானது தள்ளுபடி செய்யப்பட்டுப் போய் விட்டதையிட்டு ஷை துகையை வாதி தானகவே வசூல் செய்திருக்க முடியாதாகையால்—வாதியின் பிரயோசனத்துக்காக ஷை துகையை பிரதிவாதி வசூல் செய்ததாகச் சொல்லமுடியா தென்று கோர்ட்டில் தீர்ப்புச் செய்துவிட்டார்கள். அப்படி தீர்ப்புச் செய்த ஜட்ஜிகளுக்கு மரியாதையைச் செலுத்துவதோடு—அந்தத்தீர்ப்பை அனுசரிப்பதற்கு நாங்கள் அசக்தர்களாக யிருக்கிறோம். இந்தக் கேசின் வாதிக்கு பிரதிவாதி வசூல் செய்கிற துகைகளில் பாகம் பெற்றுக்கொள்ள பாத்தியதை உண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கையில்—பிரதிவாதி துகையை வசூல் செய்யும் காலத்தில், வாதி தான் மேடோவர் வாங்கின ஸ்தானத்தை உறுதிபடுத்திக் கொள்ளுவதற்காகச் செய்யப்பட்ட வியாச்சியம் தள்ளுபடி செய்யப்பட்டுப் போய்விட்ட காரணமானது ஷை கேசு 62-வது விஷயத்தின் நிபந்தனைகளுக்குள் வராமல் எடுபட்டுப்போய் விடுவதற்குப் போதுமானதாய் விடுமென்று எங்களுக்குத் தெரியவில்லை.

இத்தியாதி காரணங்களால் இந்தக் கேசின் சங்கதிகளை உத்தேசித்து 62-வது விஷயம் இந்தக் கேசுக்குப் பொருந்து மென்று கீழ் கோர்ட்டார் பைசல் செய்தது சரியானதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

கால நிர்ணயச்சட்டத்தின் 14-வது பிரிவின் நிபந்தனைகளின் பிரகாரம் ஈவுப்படி துகை தனக்குக் கிடைக்கவேண்டுமென்று வாதி டிஸ்டிரிக்ட்டுக் கோர்ட்டில் செய்துகொண்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டதற்கும், அதன் பேரில் ஹைக்கோர்ட்டில் செய்யப்பட்ட ரிவிஷன் மனு பைசலானதற்கும் மத்தியிலுள்ள காலத்தை (அதாவது 1905-ம் ஹு அக்டோபர் மீ 19 உ முதல் 1906-ம் ஹு டிஸம்பர் மீ 12 உ வரை) கழித்துக் கணக்கிட்டுக் கொள்ளவோ அல்லது ரிவிஷன் மனுதாக்கல் செய்தது முதல் அது பைசல் செய்யப்பட்ட வரை (அதாவது 1905-ம் ஹு டிஸம்பர் மீ 21 உ முதல் 1906-ம் ஹு டிஸம்பர் மீ 26 உ வரை) யுள்ள காலத்தைக் கழித்துக் கணக்கிட்டுக் கொள்ளவோ இதில் எப்படிச் செய்ய வாதிக்கு பாத்திய முண்டென்று யேர்ப்படுகிறதோ அதைப் பொறுத்துத் தான் 2-வது பாயிண்டு பைசல் செய்யப்பட வேண்டியதாக யிருக்கிறது. இதில் முதல் சொல்லப்பட்ட காலத்தைக் கழித்துக்கொண்டு கணக்கிட தனக்கு பாத்தியதை உண்டென்று சொல்வதற்கு ஆதாரமாக, வாதி, ராஜகிருஷ்டோ ராய்க்கும் பிர்ச்சண்டர்ஜு ப்ராஜுக்கும் நடந்த கேசின் தீர்மானத்தை ஆதாரமாகக்காட்டுகிருர். அது இந்தக்கேசுக்கு ஒத்துமையான கேசில்லை யென்று நாங்கள் நினைக்கிறோம். அந்தக் கேசானது கோர்ட்டுக்கு அதிகார வரம்பில்லை யென்ற காரணத்தால் வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்பட்டுப் போய்விட்டது. அதற்குப் பின்னிட்டு வாதி அப்பீல் செய்து அப்பீலிலும் ஜெயிக்கவில்லை. இத்தியாதி காரணங்களால், ஒரு கேசில் அபஜயம் அடைந்த கக்ஷிக்காரன் அப்பீல் செய்கிறதா வேண்டாமா வென்று யோசிப்பதற்கு அவகாசம் கொடுக்கும் பொருட்டு சட்டத்தில் ஒரு குறிப்பிட்ட காலம் கொடுக்கப்பட்டிருப்பதால் அப்படி குறிப்பிடப் பட்டிருக்கிற காலத்துக்குள் ஒரு கக்ஷிக்காரன் அப்பீல் செய்து கொள்ளுகிறதாகயிருந்தால் கேசு பைசல் செய்யப்பட்ட காலம் முதல் அப்பீல் தாக்கல் செய்யப்படும் காலம் வரையுள்ள மத்தியில் சரியானபடி நடபடிக்கை நடத்தினதாக எண்ணப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கேசில் அப்பீல் விஷயமான சங்கதிகள் ஒன்றுமில்லை. ஸிவில் புரோஸீஜர் கோடு, 13-வது பிரிவுப்படி வியாச்சியம் தாக்கல் செய்வதற்கு வாதிக்குப் பாத்தியதை யிருந்தாலும் ஹைக்கோர்ட்டில் ரிவிஷன் மனு தாக்கல் செய்வது உசிதமான தென்று வாதி நினைத்தான். ரிவிஷன் மனுக்கள் தாக்கல் செய்வதற்கு கால நிர்ணயச் சட்டத்தில் யாதொரு கா

லாவதியும் குறிப்பிடப்பட வில்லை. இத்தியாதிகாரணங்களால், அதாரமாகக் காட்டப்பட்ட கேசானது இந்தக் கேசுக்குப் பொருத்தமான கேசில்லை யென்று எங்களுக்குத் தோன்றுகிறது. அவர் ரிவிஷன் மனு நடபடிக்கை நடத்திக்கொண்டிருந்த காலத்தில் இந்தக் கேசுக்கு சம்பந்தமான உபயோகமுள்ள நடபடிக்கைகள் யேதும் நடத்திக் கொண்டிருந்ததாகச் சொல்லமுடியாது. இந்த அபிப்பிராயப்படி பார்த்தால் டிஸ்டிரிக்ட் கோர்ட்டு உத்தரவுக்கும் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுதாக்கல் செய்ததற்கும் (அதாவது 1905-ம் ஹு அக்டோபர் மீ 19உ முதல் 1905-ம் ஹு டிஸம்பர் மீ 21உ வரைக்கும்) மத்தியிலுள்ள காலத்தை வாதி காலநிர்ணயச் சட்டம் 14—வது பிரிவுப்படி கழித்துக் கணக்கிடத் தனக்கு பாத்தியதை யிருக்கிறதென்று சொல்லுகிறபடி தள்ள முடியாது. இந்தக் காலத்தைத் தள்ளிக் கணக்கிடாவிட்டாலுமே பிராது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்படுவதாக வாதிக்கப்படுகிறது. அல்லாமலும் இந்த ஹைக்கோர்ட்டாராலும், மற்றுமுள்ள ஹைக்கோர்ட்டார்களாலும், ஒரு கேசில் வேறு விதமான நடபடிக்கை நடத்த இடமிருந்தால் ஹைக்கோர்ட்டார் ரிவிஷன் அதிகாரத்தைச் செலுத்தமாட்டார்களென்று அடிக்கடி தீர்மானிக்கப்பட்டிருப்பதால், காலநிர்ணய ஆக்ட்டு 14—வது பிரிவின்படிக்குள்ள ரிவிஷன் நடபடிக்கையை நல்ல எண்ணத்துடன் இந்த வாதி நடத்தவில்லை யென்ற வாதத்தையும் அப்பீல் பிரதிவாதி சொல்லக்கூடும். இந்தக் கேசில் வாதி வியாச்சியம் செய்து பரிகாரம் பெற்றுக் கொள்ளும் அவகாசம் அவனுக்கு இருந்தது.

இத்தியாதிகாரணங்களால், பிராதைச்சீர்திருத்துவதைப்பற்றிய 3-வது பாயிண்டைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய அவகாசமே யில்லை.

இந்த 2-வது அப்பீல் சிலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

I. L. R. 39. M. 62. இ. லா. ரி. 39. ம. 62.

செ. 56

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். / மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர் }

1915-ஹுத்து 354-ம் செ. உத்தரவின்பேரில் அப்பீல்.

ஸோமசுந்தரம் பிள்ளை (மைனர்)யும் மற்றொருவனும் (மனுதார்கள்—3, 4, பிரதிவாதிகள்)—அப்பீல் வாதிகள்.

v.

சொக்கலிங்கம் பிள்ளை (அப்பீல் பிரதிவாதி டிக்ரியை மற்றொருவரிடமிருந்து வாங்கினவர்) அப்பீல் பிரதிவாதி.

லாபாயிண்ட் :—1908-ம் ஹுத்து 5-வது ஆக்டாகிய ஸிவில் புரோஸீஜர்கோடு. 144-11-வது பிரிவுகள் 4-வது விவரணம்-பிரிவு 47, ஆர்டர் 11, ரூல் 2-துகை திரும்பக் கிடைக்கும்படி மனு—நிறை வேறுதல் மனுக்கள்—அது விஷயமாய் மறுபடி போடப்படும் மனுக்கள்—ரெஸ்ஜுடிகேடா—முதல் கிடைக்க வேண்டுமென்று முதலில் போடப்பட்ட மனு—வட்டிக்காக பின் போடப்பட்ட மனு—காலாவதி தோஷத்தால் தடைப்படுமா.

ஒரு தீர்ப்புக் கடன்காரன் ஷை டிக்கிரி நிறைவேறுதலில் தன்னிட மிருந்து வசூல் செய்யப்பட்டதுகை ஷை டிக்கிரி அப்பீலில் மாறிப்போனதையிட்டு, தனக்குத்திரும்பக் கிடைக்க வேண்டுமென்று மனுச்செய்து அவ்விதமே திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி உத்தரவு பெற்றுக் கொண்டு, அப்பால் ஷை துகையானது தீர்ப்புப் பெற்றவனுடைய உபயோகத்திலிருந்த காலத்துக்கு ஷை துகைக்கு வட்டி கிடைக்க வேணுமென்று மனுச் செய்து கொண்டான்,

பின்னீடு செய்துகொண்ட மனுவானது ஸிவில் புரோஸீஜர் கோடு, 11-வது பிரிவு 4வது விவரணம் அல்லது II-வது ஆர்டர் 2-வது ரூல்படிக்குள்ள ரெஸ்ஜுடிகேடா வென்னும் தோஷத்தால் பாதிக்கப்படவில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது.

பின்னீடு கொண்டுவரப்படும் விஷயமானது முன் தீர்ப்பில் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருந்தாலுமே அல்லது முன் தீர்ப்பில் அந்தரங்கமாகச் சொல்லப்பட்டிருந்தாலுமேயன்றி நிறைவேறுதல் நடவடிக்கைகளுக்கு ரெஸ்ஜுடிகேடா வென்னும் தோஷமே கிடையாது.

லெக்ஷ்மி நாருயணுவுக்கும், பள்ளமாராஜுவுக்கும் நடந்த 1916-ம் ஹுத்து ம. லா. வீக்லி 101-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசை எடுத்துக் காட்டப்பட்டது. பாலசுப்பிரமணிய செட்டிக்கும், சுவர்ணம்மாளுக்கும் நடந்த 1915-ம் ஹுத்து இ. லா. ரி. 38, ம. 199-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தை அனுஸரிக்கப்பட்டது.

தான் செலுத்திய துகை தனக்குத் திரும்பக் கிடைக்க வேண்டுமென்று தாக்கல் செய்யப்படும் மனுவானது 1882-ம் ஹுத்து 14-வது ஆக்ட்டிலிருந்தது போலவேயே 1908-ம் ஹுத்து 5—வது ஆக்ட்டாகிய புது ஸிவில் புரோஸீஜர் கோடுப்படிக்கும் நிறைவேறுதலைச் சேர்ந்த மனுவேயாகும்.

ப்ரயாக் நாருயணனுக்கும், காமக்கய்யாவலிங்குக்கும் நடந்த 1909-ம் ஹுத்து இ. லா. ரி. 31. அல. 551-ல் பிரசுரிக்கப்பட்டிருப்பதும் பிரிவி கௌன்ஸிலுக்கு போய் பைஸல் செய்யப்பட்டதுமான கேசையும் எடுத்துக் கூறப்பட்டது.

கேசின் சுருக்கம் :—கும்பகோணம் ஸப் கோர்ட்டில் ராவ்பகதூர் C. கிருஷ்ணஸ்மிராவ் முன் வாதி 1905-ம் ஹுத்து அஸல் வியாச்சிய நெ. 66. ஸம்பந்தமாய் 1915-ம் ஹுத்திய நிறைவேறுதல் மனு நெ. 98ல் மாயவரம் ஸப் ஜட்ஜி, P. S. சேஷய்யர் பிறப்பிவித்த உத்தரவின்பேரில் கொண்டு வரப்பட்ட அப்பீல்.

இந்தக் கேஸில் டிக்கிரி பெற்றவன் ஷை டிக்கிரி மூலமாய் வியாச்சியச் சிலவுக்காக தீர்ப்புச் செய்யப்பட்டிருந்த துகைக்கு நிறைவேறுதல் நடபடிக்கையில், மற்றவர்களுடன் தீர்ப்புக் கடனாளிகளில் ஒருவராகயிருந்த, இப்போதய அப்பீல் வாதியின் தகப்பனார் பேரில்—சரீர ஜவாப்தாரியின் பேரில் வசூல் செய்து கொடுக்கும்படியாக மனுச் செய்து கொண்டார். இந்த மனுப்படி உத்தரவு செய்யப்பட்டது. டிக்கிரி பெற்றவனால் துகை வசூல் செய்யப்பட்டது. அதற்கு அப்பால் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்ததில் அப்பீல் வாதியின் தகப்பன் பேரில் நிறை வேற்றும்படி செய்யப்பட்ட உத்தரவானது மாற்றிவிடப்பட்டது. ஷை யானிடத்திலிருந்து வசூல் செய்யப்பட்ட துகை தங்களுக்குத் திரும்பக் கிடைக்கவேணுமென்று அப்பீல் வாதிகள் மனுச்செய்து கொண்டார்கள். ஆனால் அந்தமனுவில் அவனிடமிருந்து முன் வசூலிக்கப்பட்ட துகைக்கு வட்டி அல்லது நஷ்ட ஸமாதானம் இவைகள் யாதொன்றும் கிடைக்க வேணுமென்று கேழ்கவில்லை. ஷை மனுவின் பிரார்த்தனைப்படி உத்தரவு செய்யப்பட்டு மனுவில் கண்ட துகையை அப்பீல் வாதிகள் வசூல் செய்து கொண்டார்கள். இதற்கு பின்னிட்டு அப்பீல் வாதிகள் தங்களிடமிருந்து டிக்கிரி பெற்றவன் வசூல் செய்து ஷை துகையை தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக் கொண்டிருந்த காலத்திற்கு வட்டி வேணுமென்று கேட்டு மனுச் செய்து கொண்டார்கள். அதன்பேரில் இந்த மனுவானது ரெஸ்ஜூடிகேடா வென்னும் தோஷத்துக்கு உள்பட்டிருப்பதாகவும், 1908-ம் ஹுத்து 5-வது ஆக்ட்டாகிய ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் 2—வது ஆர்டரின் மூலமாய் செல்லத் தகாததென்றும் டிக்கிரி பெற்றவர் தாவாசெய்தார். டிக்கிரி பெற்றவர் செய்த தாவாவை ஒப்புக்கொண்டு இந்த மனுவை கீழ் கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டார். அதன்பேரில் அப்பீல் வாதி ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக K. ராமச்சந்திர அய்யரும், S. பஞ்சாபகேச சாஸ்திரியாரும்—அப்பீல் பிரதிவாதிக்காக S. முத்தய்யா முதலியாரும் ஆஜரானார்கள்,

அடியில் கண்ட தீர்ப்பு ஹைக்கோர்ட்டில் செய்யப்பட்டது.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் :—இந்த மனுவானது ரெஸ்ஜூடி கேடா வென்ற தோஷத்துக்கு உள்பட்டிருப்பதாக ஸபார்டிநேட் ஜட்ஜி பட்டிருக்கிற அபிப்பிராயத்துடன் நாங்கள் கலந்துகொள்ளவில்லை: நிறைவேறுதல் நடபடிக்கையில் வசூல் செய்யப்பட்ட பணத்தை அப்பீலில் மாற்றிவிடப்பட்ட காரணத்தால் திரும்பக் கேட்டு முதல் மனுதாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவானது ஷை துகையை எதிர் மனுதார் உபயோகித்துக் கொண்டிருந்த காலத்துக்கு வட்டி கேட்டு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

ஸி. பு. கோ. 11-வது பிரிவு 4-வது விவரணப்படிக்கானாலுமே அல்லது 2-வது ஆர்டர் 2-வது ரூல் படிக் கானாலுமே நிறைவேறுதல் நடபடிக்கையில் ஸாதாரணமாக ரெஸ்ஜூடிகேடா வென்னும் தோஷத்தை உபயோகிக்கப் படுகிறதில்லை. சுந்தரம் செட்டிக்கும் வரதய்யருக்கும் நடந்த 1916-ம் ஹுத்து 57-ம் நெ. அப்பீல் ஆர்டரின் பேரில் செய்யப்பட்ட அப்பீலில் பின்னீடு கொண்டுவரப்பட்ட விஷயமானது முன் தீர்ப்பில் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருந்தாலுமே அல்லது முன் தீர்ப்பில் அந்தரங்கமாகச்சொல்லப்பட்டிருந்தாலுமே யல்லது நிறைவேறுதல் நடபடிக்கைகளுக்கு ரெஸ்ஜூடி கேட்டாவென்னும் தோஷமே கிடையாதென்று ஸமீபத்தில் பைஸல் செய்திருக்கிறோம். லக்ஷிமி நாராயணாவுக்கும் பள்ளம் ராஜுவுக்கும் நடந்து 1916-ம் ஹுத்து 4. ம. லா. வீக்லி 101-ம் பக்கத்தில்கண்ட தீர்ப்பையும் பார்க்க.

தான் கொடுத்ததுகை தனக்குத் திரும்பக் கிடைக்கவேணுமென்று தாக்கல் செய்யப்பட்ட மனுவானது நிறைவேறுதல் நடபடிக்கையைச் சேர்ந்த தல்லவென்று மிஸ்டர் முதலியார் வாதிக்கிறார். பழய ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் 583-வது பிரிவுக்கும் இப்போதிய கோடின் 144-வது பிரிவுக்கும் உள்ள பாஷையின் வித்தியாஸத்தை எடுத்துக் காட்டுகிறார். ஆனால் ஏதும் வித்தியாஸம் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. இப்போதய ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் 144-வது பிரிவானது அப்பீல் கோர்ட்டில் ஜயம் அடைகிற கக்ஷிக்காரனை முன்னிருந்த நிலமையிலேயே யிருக்கும்படியான விதமாக உண்டாக்கப் பட்டிருக்கிறது. பழய கோடின் 583-வது பிரிவின் பாஷையானது ஒரு டிக்கிரி மாற்றப்படுவதினால் யேற்படும் ஸாதகங்களை எல்லாம் ஜயம் அடைந்தகக்ஷிக்காரர் அனுபவிக்கக்கூடிய விதமாக எழுதப்படவில்லை. இந்த வித்தியாஸம் நீங்கலாக-கொடுக்கப்பட்ட துகையை திரும்பப் பெற்றுக்கொள்ளும் நடபடிக்கை விஷயத்தில் சட்டத்தில் யாதொரு மாறுபாடையும் காணவில்லை. பழய கோடின் படிக்கு செலுத்திய பணத்தை திரும்பப் பெற்றுக்கொள்வது நிறைவேறுதல் நடபடிக்கையில் தான் ப்ரயாக் நாராயணனுக்கும், காமக்கய்யா சிங்குக்கும் நடந்து 1909-ம் ஹுத்து இ. லா. ரி. 31. அல. 551-ல் பிரசுரிக்கப்பட்டிருப்பதும், ப்ரிவிகௌன்ஸிலுக்குப்போனதுமான கேசையும் பார்க்க. புதுக்கோடின்படிக்குள்ள இப்பேர்ப்பட்ட மனுக்களுக்கெல்லாம் இதேவிதிதான் பொருந்தும். ஷை

கோடின் 47-வது பிரிவின் பாஷையானது செலுத்திய துகையைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்களுக்கெல்லாம் பொருந்தும்படியான விதமாக எழுதப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில கோர்ட்டாருடைய உதவியைக் கோருகிறவன் எதிர் கக்ஷிக்காரன் தன்னுடைய சொத்தைப் பிடுங்கிக் கொள்வதற்கு காரணமாக யேர்ப்பட்ட டிக்கிரி நிறைவேறுதல் நடபடிக்கையைப்பற்றி யோசிக்கும்படி மனுச் செய்து கொள்ளுகிறான்.

பால சுப்பிரமணிய செட்டிக்கும் சுவர்ணம்மாளுக்கும் நடந்து 1915-ம் ஹுத்து இ. லா. ரி. 38. ம. 199-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசின் தீர்ப்பில் இப்போதிய ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் 2-வது ஆர்டர் 2-வது ரூலானது கொடுத்த துகையை திரும்பப் பெற்றுக் கொள்வதற்காகச் செய்யப்படும் மனுக்களுக்கு (Restitution application) சம்பந்தப்பட மாட்டாதென்று சொல்லப்பட்டிருக்கும் அபிப்பிராயத்தில் நாங்களும் கலந்து கொள்ளுகிறோம். இந்த மனுவானது, ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத் தான் துகை தனக்கு உபயோகமில்லாமல் செய்துவிடப்பட்டதினால் தனக்கு யேர்ப்பட்ட நஷ்டத்துக்காகக் கொண்டுவரப்பட்ட வியாச்சியமாக விருக்கிறது. ஆகையால் ஸபார்டிநேட் ஜட்ஜியினுடைய தீர்மானத்தை நாங்கள் மாற்ற வேண்டியதாக யேர்படுகிறது. அப்பீல் வாதிக்கு ரூ. 1881—1—3-க்கு 1911-ம் ஹு செப்டம்பர்மீ 8உ முதல் 1914-ம் ஹு அக்டோபர்மீ 28உ வரை நூற்றுக்கு 6-வட்டி வீதம் கிடைக்கவேண்டு மென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்தக்கோர்ட்டிலும் கீழ்க்கோர்ட்டிலும் யேர்ப்பட்ட சிலவுகளுக்காக துகைக்குள்ள வீதப்படி சிலவு செலுத்தவும் பெற்றுக்கொள்ளவும் வேண்டும்.

I. L. R. 40. M. 780. இ. லா. ரி. 40. ம. 780.

நெ. 57

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { சீப் ஜஸ்டிஸ் ஸர் ஜான் வாலிஸ் Kt.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்ரீனிவாசய்யங்கார்

அப்பீல் நெ. 376 of 1914

அமஞ்சி சேஷம்மா....பிரதிவாதி....அப்பீல்வாதி.

v.

அமஞ்சிபத்மனாபராவ்...வாதி...ரெஸ்பாண்டெண்ட்

லாபாயிண்ட் :—ஒருவனை பயித்தியக்காரனென்று பயித்தியக்காரர்களைப்பற்றிய ஆக்டின் கீழ் (Act XXXV of 1858) தீர்மானிக்கப்பட்டிருந்தால் அவனால் செய்யப்பட்ட ஸ்ரீகாரம் சட்டப்படி செலாவணியுள்ளதாயென்பது,

வியாஜ்ஜிய சங்கிரகம் :—ஒருவனை டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டார் 35-வது ஆக்டாகிய பயித்தியக்காரரைப் பற்றிய ஆக்டின் கீழ் பயித்தியக்காரனென்று தீர்மானித்த பின்பு அவன் பயித்தியக் காரனல்லவென்று ருஜு செய்யும் வரையில் அவன் பயித்தியக்காரனென்று தான் சொல்லப்படுவானென்றும்; அவ்விதமாய் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டார் தீர்மானித்து அவனுடைய சொத்துக்களை பரிபாலனம் செய்வதற்காக ஷை ஆக்டின் கீழ் மானேஜர் ஒருவரை நேமித்திருந்து டிஸ்டிரிக்ட் கோர்ட்டாருடைய உத்தரவு ரத்தாகும் வரையில் அவன் ஸ்ரீகாரம் எடுத்துக் கொள்ளத் தகுந்தவனல்லவென்று சொல்வதற்கிடமில்லாமலிருந்தபோதிலும் அந்த பயித்தியக்காரன் ஸ்ரீகார மெடுத்துக்கொள்ளுங் காலையில் அவன் நல்லறிவுடன் தானிருந்தானென்று தெளிவாய் ருஜு செய்தாலொழிய மற்றப்படி அவன் ஸ்ரீகாரமெடுத்துக்கொள்வது சட்டப்படி செலாவணியுள்ள தல்லவென்று Van Gratten v. Foxwell (1897) A. C. 658-ம் Snook v. Watts (1848) 11 Beaven 105-ல் செய்யப்பட்ட தீர்மானங்களை ஆதாரமாய்க் கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

நெல்லூர் ஜில்லா கோர்ட் அசல் நெ.18 of 1913-ல் செய்யப்பட்ட டிக்ரியின் பேரில் கொண்டு வரப்பட்ட அப்பீல்.

கேசின் விபரம் :—கிருஷ்ணராவ் என்ற ஒருவரை 1903-வது ஹு டிசம்பர் மாதத்தில் பயித்தியக்காரரென்று 1858 ஹுத்திய 35-வது ஆக்ட்டாகிய பயித்தியக்கார்களைப்பற்றிய ஆக்டின் கீழ் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டது. பிரஸ்தாப கேசின் வாதியினுடைய சொந்த தகப்பனாராகிய A பீமராவ் என்பவரை ஷை கிருஷ்ணராவ் என்பவரின் திரேகத்திற்கு கார்டியனாகவும் மேற்படி பயித்தியக்காரராகிய கிருஷ்ணராவின் சொத்துக்கு அவருடைய தாயாரையும் இன்னொருவரையும் கார்டியன்களாக நேமிக்கப்பட்டார்கள். பயித்தியக்காரரா யிருந்த கிருஷ்ணராவ் என்பவர் 1912-ம் ஹு ஜூலை மாதத்தில் மரணமடைந்தார். காலம் சென்றவரின் இரண்டாவது பெண்சாதியின் சகோதரனாகிய மைனர்வாதி, காலம் சென்றவரினாலும் அவருடைய இரண்டாவது மனைவியினாலும் 1907ஹுத்தில் தத்தெடுத்துக் கொள்ளப்பட்டாரென்று சொல்லி அவன் காலம் சென்றவருக்குச் சொந்தமாயிருந்த சொத்துகளுக்கு சுதந்தரவாளி யென்று தீர்மானித்து டிக்ரி செய்யும்படிக்கு தாவா செய்தார். காலம் சென்றவரின் முதல் மனைவியாகிய பிரதிவாதி காலம் சென்றவர் தாவாவில் சொல்லியிருப்பவை வாஸ்தவ மல்லவென்றும் தாவாஸ்ரீகாரத்தை அவருக்கு பைத்தியம் பிடித்திருந்த காலத்தில் செய்தாரென்றும் அவர் செய்துக்கொண்ட ஸ்ரீகாரம் வாஸ்தவமா யிருந்திடினும் வாதியின் சொந்த தகப்பனும் காலம் சென்றவரின் மாம

னுருமாகிய பீமராவினுடைய மோசக் கருத்தினால் ஜில்லா கோர்ட்டாருடைய அனுமதியும் உத்தரவு மில்லாமலேயே அந்த ஸ்ரீகாரம் செய்துக் கொள்ளப்பட்டதென்று தற்கித்து வாதித்தார். ஜில்லா ஜட்ஜி அவர்கள் அந்த ஸ்ரீகாரம் வாஸ்தவமாய் செய்யப்பட்டது தானென்றும், ஸ்ரீகாரம் செய்யும் காலத்தில் காலம் சென்றவர் நல்லறிவுடனிருந்தாரென்றும், ஆகையால் அந்த ஸ்ரீகாரம் சட்டப்படி செலாவணியுள்ளதுதானென்றும் கண்டு, தீர்மானித்தார். முடிவில் ஜில்லர் ஜட்ஜி அவர்கள் தாவாவை வாதிக்கு அனுகூலமாய் டிக்ரிசெய்தார். அதன் பேரில் பிரதிவாதியால் இந்த அப்பீல் கொண்டு வரப்பட்டது.

லாயர்கள் —Mr. T. V. வெங்கடராமையரும் Mr. A. வெங்கடாயலையா அப்பீல் வாதியின் வக்கீல்கள்.

Mr. B. சோமையா, ரெஸ்பாண்டெண்டின் வக்கீல்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு :—இந்த வியாஜ்ஜியத்தில் காலம்சென்ற கிருஷ்ணராவென்பவர் ஸ்ரீகாரம் எடுத்துக்கொள்ள யோக்கியதையுள்ளவராயிருந்தாரா இல்லையா என்பதுதான் கேள்வி. அவர் பயித்தியம் பிடித்தவரென்று 1903-ம் ஸூத்தில் பயித்தியக்காரர்களைப் பற்றிய 1858-ம் ஸூத்திய 35-வது ஆக்டின் கீழ் தீர்மானிக்கப்பட்டார். அத்தீர்மானத்தின்படி அவர் பயித்தியம்பிடித்தவரல்லவென்று ருஜுவாகும் வரையில் அவரை பயித்தியம் பிடித்தவராகவேதான் எண்ணவேண்டும் என்பது கருத்து. அப்பீல் வாதியின் வக்கீல் Mr. வெங்கடராமையரென்பவர் பயித்தியக்காரரின் ஆக்டின் கீழ் பயித்தியக்காரருடைய சொத்துக்களுக்கு ஒரு மானேஜரை நியமித்து உத்திரவு செய்யப்பட்டிருந்தால், அந்த உத்திரவு றத்துசெய்யப்படும் வரையில், அந்த பயித்தியக்காரர் தத்து எடுத்துக்கொள்ள யோக்கியதையுள்ளவரல்லவென்று தற்கித்து செய்த வாதத்தை நாங்கள் ஒப்புக்கொள்வதற்கு எங்களுக்கு யாதொருமுகாந்தரமும் தோன்றவில்லை. அவரெங்களெதிரில்கூறிய வாதத்திற்காதாரமாய் யாதொன்று மெடுத்துக் காண்பிக்கவில்லை. அது அப்படிக்கிருக்க ஜில்லா ஜட்ஜு அவர்களெடுத்துக் காண்பித்தப் பிரகாரம் இந்த ராஜதானியில் வழங்கி வரும் கோர்ட் ஆப் வார்ட்ஸ் ஆக்ட் 1 of 1902-ல் தத்தெடுத்துக்கொள்ள யோக்கியதையில்லாத நபர் தத்தெடுத்துக் கொள்வதைப்பற்றி சில நிபந்தனைகள் வெளிப்படையாய் சொல்லியிருக்கின்றது. அந்த நிபந்தனைகளை வாசித்து பார்க்குமளவில் இவ்விஷமாயுள்ள அதிகாரத்தை கோர்ட் ஆப் வார்ட்ஸார் பரிசோதித்து திருப்தியடையவேண்டுமென்பதை நோக்குமளவில் சட்ட நிரூபணசபையார் எவ்வளவு ஜாக்கிரதையுடன் நிபந்தனைகள் ஏற்படுத்தியிருக்கிறார்களென்பது விசதமாய்த்தெரியவருகின்றது. தத்தெடுத்துக்கொள்வது ஒரு சொத்தை குத்தகை அல்லது கொதுவை மூலமாய் பராதீனம் செய்வதைப்போல் பாவிக்கவேண்டுமென்று செய்யும் வாதத்தை நாங்கள் ஒப்புக்கொள்வதற்கு நியாயமில்லை. தத்தெடுத்துக் கொள்வதென்பது ஹிந்துக்களுக்குள் மதாசாரத்தையொத்த விஷயமாக கருதப்படுகிறதாகையால் அவ்விதமாய் ஒரு ஹிந்து தத்துஎடுத்துக்கொள்ளும் அதிகாரம் அவனுக்கு கிடையாதென்று அவ்விதமாய் வெளிப்படையான வார்த்தைகளினால் தெளிவாய் சொல்லியிருந்தாலொழிய மற்றபடி யாதொரு சட்டமிருப்பதாய் கோர்ட்டார் தீர்மானிப்பது சரியல்லவென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆகையால் நாங்கள் இந்த வாதத்தை ஒப்புக் கொள்ளவில்லை. தத்தெடுத்துக் கொள்ளும் காலத்தில் தத்தெடுத்துக்கொண்ட தகப்பன் நல்லறிவுடனிருந்தானென்பது திருப்திகரமாய் சாக்ஷியத்தில் ருஜுச்செய்யப்பட்டதா இல்லையா என்பதைத்தான் நாங்கள் இப்பொழுது யோசிக்கவேண்டியதாயிருக்கிறது.

இவ்விஷயத்தைப் பற்றி Snook v. Watts (1848) 11 Beaven 105-ல் சட்ட மின்னதென்று சொல்லியிருக்கிறது. அது யாதெனில் ஒருவன் பயித்தியக்காரனா இல்லையா என்பதைப்பற்றி விசாரணை செய்யும்படி ஏற்படுத்தப்பட்ட ஜூரிகள் அவன் பயித்தியம் பிடித்தவனல்லவென்று சொல்பவர்கள் தான் அதை ருஜுசெய்ய வேண்டியதென்று கண்டு தீர்மானித் திருக்கிறார்கள்.

இவ்விஷயத்தைப் பற்றி Hill v. Clifford (1907)2 ch. App 236—245-லும் Cozens Hardy M. R. என்பவர் கூறிய Van Gratten v. Foxwell (1897) A. C. 658-லும் தீர்மானிக்கப் பட்டிருக்கின்றதென்பதாய் Lopes L. J. சொல்லி யிருக்கிறார். இவ்வாதாரங்களை நோக்குமளவில் ஒவ்வொரு கேஸிலும் திருப்திகரமான சாக்ஷிய மிருக்க வேண்டியதென்று ஏற்படுகிறது. பிரஸ்தாப கேஸிலுள்ள [illegible]யத்தினால் கிருஷ்ணராவென்பவர் நல்லறிவில்லாமல் பயித்தியம் பிடித்தவரா யிருந்தாரென்றுதான் ஏற்படுகிறது. பிரதிவாதியின் சாக்ஷியத்தின் பிரகாரம் அவர் (கிருஷ்ணராவ்) நல்லறிவுள்ளவராய் நடக்கவில்லையென்று வாதியின் முதல் சாக்ஷியாகிய வாதியினுடைய தகப்பனார் தாக்கல் செய்த மனுவினால் ஏற்படுகின்றது. வாதியின் சொந்த தகப்பனார் தான் இவ்விதமான ஸ்ரீகாரத்தை ஏற்படுத்தினவர். இப்பொழுது வாதியினுடைய கேசை நடத்துகிறவரும் அவர்தான். இந்த வியாஜ்ஜியத்தில் தாக்கல் செய்யப்பட்ட III குறிப்பிட்டுள்ள தஸ்தாவேஜியில் இதற்கு ஒவ்வினதாகவே அவர் பின்வருமாறு சொல்லுகின்றார்.

“கிருஷ்ணரா வென்பவர் இப்பொழுது பயித்தியம் பிடித்தவரல்ல, அவர் தன்னுடைய தேகத்தையும் சொத்தையும் காப்பாற்றிக்கொள்ள நல்லறிவுடன் தானிருக்கிறாரென்று சொல்வது வாஸ்தவமல்ல. அவர் இன்னும் புத்தி மாராட்டங்களுக்கு உட்பட்டவராகவேயிருக்கிறாரென்றும் நல்லறிவுள்ளவன் செய்யாத செய்கைகளெல்லாம் அவர் செய்கிறாரென்றும் அந்த செய்கைகளில் சில செய்கைகள் யாதெனில் துணிகளை கிழிப்பதும் ஸ்ரீகளெதிரில் நிர்வாணமாய் ஸ்நானம் செய்வதும்இன்னுமிதர விஷயங்களும் அதில் சொல்லியிருக்கின்றது. அவ்விதமான சாக்ஷியம்தான் இப்போது எங்களெதிரி லிருக்கின்றது. அதன்படி நான் முன்னமே சொல்லியது போல அவன் நல்லறிவில்லாத பயித்தியக் காரனென்று தான் வாஸ்தவமாய் ஏற்படுகின்றது. ஆயினும் அவர் தெலுங்கு பாஷையை நன்றாய் எழுதக் கூடியவர்தான். அவருடைய தெலுங்கு கையெழுத்தும் நன்றாகவும் வாசிக்கக்கூடியதாகவும் இருக்கின்றதென்பது தான் என் கருத்து. அதனால் அவர் பயித்தியக்காரரல்லவென்று சொல்லுவதற்கு அது முடிவான ருஜுஎன்று சொல்ல நியாயமில்லை. அவர் A. குறிப்பிட்டுள்ள கடிதத்தை இலக்கணமாய் எழுதியிருக்கிறாரென்பதினாலேயே அவர் நல்லறிவுடனிருந்தவரென்று சொல்வதற்கு நியாயம் கிடையாது. அந்த கடிதத்தில் அவர் தன்னுடைய விருத்தாப்பியமான தாயாரை நல்நடவடிக்கையுள்ளவளல்லவென்று குற்றம் சாட்டி மிக்க கோபத்துடன் கடினமான வார்த்தைகளில் எழுதி யிருக்கின்றார். இந்த சாக்ஷியங்களெல்லாவற்றிலும் அவர் நல்லறிவில்லாதவராய் இருந்தாரென்று தான் ஏற்படுகின்றது. அது அப்படிக்கல்லவென்று வியக்தமாகவும் ருஜு செய்யப்படவில்லை. இந்த வியாஜ்ஜியத்தில் முக்கியமான விஷயம் யாதெனில் இந்த ஸ்ரீகார விஷயமாய் என்ன நேரிட்டதென்பதுதான். அவர் பிரதிவாதியாகிய அவருடைய இரண்டாம் மனைவிக்கு தத்து எடுத்துக்கொள்ள அதிகாரம் கொடுத்து உயிலெழுதி வைத்தார். அவர் உயிலெழுதி வைக்கும் காலத்தில் காயலாவாயிருந்தார். ஆனால் தத்தெடுத்துக்கொள்வதற்கு முன் காயலா நீங்கி சௌக்கியமாயிருந்ததாக தோன்றுகிறது. ஆகையால் அவர் தத்தெடுத்துக்கொள்ள சந்தர்ப்பம் கிடையாது அவருடைய வயதோ27-அவருடன் வசித்திருந்த மனைவி16-வயதுள்ளவளாய் தானிருந்தாள். இந்த கேஸில் தாக்கலா யிருக்கும் F. H. குறிப்புள்ள தஸ்தாவேஜுகளினால் கிருஷ்ணராவ் என்பவர் ஜீவித்திருந்த காலத்தில் அவருடைய இரண்டாம் மனைவிக்கு கொடுத்த அதிகாரத்தின் பேரில் அவள் ஸ்ரீகாரம்செய்துகொண்டதாக தெரியவருகிறது. தத்தெடுத்துக் கொண்டது சந்தேகத்திற் கிடமாயிருக்கிறது. பிரதிவாதியின் தகப்பனார் கிருஷ்ணராவின் தாயாருக் கெழுதிய H. குறிப்பிட்டுள்ள தஸ்தாவேஜியை பார்க்குமளவில் கிருஷ்ணராவ் என்பவரே கொடுத்த அதிகாரத்தின் கீழ் இரண்டாவது பிரதிவாதியினால் செய்துகொள்ளப்பட்ட ஸ்ரீகாரத்திற்கு அதனால் அழைத்ததாக விளங்குகிறது. வாதியின் தகப்பனார் கோர்ட்டாருக் கெழுதிய F. குறிப்பிட்டுள்ள தஸ்தாவேஜியினால் வாதி கிருஷ்ணராவ் என்பவர் அவருடைய இரண்டாவது மனைவிக்கு கொடுத்த அதிகாரத்தின் கீழ் வாதிதத்தெடுத்துக் கொள்ளப்பட்டதாக ஏற்படுகிறது. இவைகளெல்லாம் மானேஜராயிருந்த வாதியின் தகப்பனாகிய பீமராவ் மரண மடைந்தவருடைய சொத்துகளை பிரதிவாதியாகிய இரண்டாம் மனைவியின் சகோதரனும் அவருடைய குமாரனுமாகிய வாதி அடையவேண்டுமென்கிற அபேட்சை கொண்டு இந்த ஸ்ரீகாரா முதலியதை வாதிக்கு காரியனாயிருந்த பீமராவ் நடத்தியதாகத் தோன்றுகிறது.

இத்தியாதிகாரணங்களை யனுசரித்து கிருஷ்ணராவென்பவர் நல்லறிவின்றி பயித்தியம் பிடித்தவராக இருந்தாரென்று கண்டிருக்கும் விஷயத்தை எதிர்த்து திருப்திகரமாய் ருஜு செய்யப்படவில்லை யென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். தத்து சரியானதென்று சொல்வது நியாயமல்ல. ஆகையால் தத்து சட்டப்படி செலாவணியுள்ளதென்று கண்டு ஜில்லா ஜட்ஜ் அவர்கள் தீர்மானித்திருப்பதை மாற்றி அப்பீலை அப்பீல் வாதிக்குஅனுகூலமாய் செலவுகளுடன் தீர்ப்புசெய்கிறோம்.

I. L. R. 40. M. 660. இ. லா. ரி. 40 ம. 660.

நெ. 58.

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்: —{ சீப் ஜஸ்டிஸ் சர் ஜான்வாலிஸ் Kt.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

அப்பீல் நெ. 98 of 1913.

கருடேரி கோபாலம் (மைனர்—அடுத்த சிநேகிதன் அப்பூர் வெங்கடராயுடு) முதல் பிரதிவாதி—அப்பீல்வாதி

V

கருடேரி வெங்கடராகவுலு (வாதி)....ரெஸ்பாண்டெண்ட்

லா பாயிண்ட் :—ஹிந்துக்களில் சூத்திரர்களுக்குள் ஸ்ரீகாரம் செய்துக்கொண்ட பிள்ளையும் பிறகு ஸ்ரீகாரம் செய்துக் கொண்டவருக்குப் பிறந்த ஔரச புத்திரனும் பாகித்துக் கொள்ளும் காலத்தில் அவர்கள் ஒவ்வொருவரும் சட்டப்படி ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய பாகம் யாது என்பது.

வியாஜ்ஜிய சங்கிரஹம் :—ஹிந்துக்களில் சூத்திரர்களுக்குள் ஒருவனை தத்து எடுத்துக் கொண்டபிறகு ஸ்ரீகாரம் எடுத்துக்கொண்ட தகப்பனுக்கு சொந்தமாய் ஒரு ஔரச புத்திரன் பிறப்பானாகில் தகப்பன் காலமான பிறகு பிள்ளைகளிருவரும் குடும்ப சொத்துக்களை பாகித்துக் கொள்ளும் காலத்தில் தத்து புத்திரன் ஐந்தில் ஒரு பாகத்திற்கு (1/5) மாத்திரம் ஹக்குள்ளவனாகிறான் என்றும், ஔரச புத்திரன் மிகுதிநான்கு பாகங்

களுக்கு ஹக்குள்ளவனாவது மல்லாமல் முன்னமேயே தனக்கு விவாஹமாயில்லாவிடில் அவனுடையவிவாஹ சிலவுகளைப்பற்றி அந்த பாக டிக்ரியில் நிபந்தனை செய்யப்பட வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

ராஜமஹேந்திரம் சப்கோர்ட் அசல் நெ. 41 of 1911-ல் செய்யப்பட்ட டிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

கேசின் விபரம்:—ஹிந்துக்களில் வெங்கண்ணு என்னும் சூத்திரர் ஒருவர் 1898-ம் ௵த்தில் வாதியை தத்து எடுத்துக்கொண்டார். பிறகு அவருடைய மனைவியாகிய இரண்டாம் பிரதிவாதிக்கு 1901-ம் ௵த்தில் ஓர் ஔரச புத்திரன் பிறந்தான். மேற்படி வெங்கண்ணு 1902-ம் ௵த்தில் இறந்துபோகும் காலத்தில் முதல் பிரதிவாதியாகிய ஔரச புத்திரனும் விதவை இரண்டாம் பிரதிவாதியும் வார்சுகளாக ஜீவித்திருந்தார்கள். வாதியும் முதல் பிரதிவாதியும் மைனர்களாகயிருந்த காலத்தில் மரணம் அடைந்தவருடைய சொத்தை இரண்டாம் பிரதிவாதி பரிபாலனம் செய்துவந்தாள். வாதி 1907-ம் ௵த்தில் யுக்த வயது அடைந்து 1910-ம் ௵த்தில் குடும்ப சொத்தில் தனக்கு அரைபாகம் பங்கிட்டுக் கொடுக்கும்படியாக வியாஜ்ஜியம் செய்தான். இரண்டாம் பிரதிவாதி குடும்ப சொத்தை பரிபாலனம் செய்யும் காலத்தில் தன்னுடைய சொந்த ஔரசபுத்திரனுக்கு அனுகூலமாய் சில சொத்துக்களை துர்விநியோகம் செய்ததாக அவ்வியாஜ்ஜியத்தில் வாதி செப்பியிருந்தான். அதுவுமன்றி குடும்ப சொத்தை இரண்டாம் பிரதிவாதி பரிபாலனம் செய்தகாலத்தில் ஏற்பட்டுள்ள கணக்கையும் தாக்கல் செய்யும்படி தாவா செய்திருந்தான். முதல் பிரதிவாதியின் வாதம்:—தாவாவாதி தத்துபுத்திரனாகையால் குடும்ப சொத்தில் ஐந்தில் ஒருபங்கு (1/5)க்குத் தான் அவனுக்கு ஹக்குண்டென்றும் முதல் பிரதிவாதி ஔரச புத்திரனாகையால் குடும்ப சொத்தில் மிகுதி நான்கு பங்குக்கும் அவனுக்கு ஹக்குண்டென்றும் வாதி குடும்ப சொத்தின் சிலவினால் முன்னமேயே விவாகம் செய்துக் கொண்டவராகையால் பாகித்துக் கொள்ளும் காலத்தில் ஏற்படும் டிக்ரியில் தான் இனி விவாகம் செய்துக் கொள்ள வேண்டியதற்காக நேரிடும் சிலவைப் பற்றி நிபந்தனை செய்ய வேண்டுமென்றும் வாதித்து தகரார் செய்தான். இரண்டாம் பிரதிவாதி குடும்ப சொத்தை தான் பரிபாலனம் செய்யவில்லையென்றும் அதைத்தான் துர்விநியோகம் செய்யவில்லையென்றும், தகரார் செய்து வாதித்தாள். கீழ்கோர்ட்டார் வாதிக்கு குடும்பசொத்து முழுவதில் அரைபாகம் உண்டென்றும், இரண்டாம் பிரதிவாதி குடும்ப சொத்தை துர்விநியோகம் செய்தவள் தான் என்றும் கண்டு இரண்டாம் பிரதிவாதியின் ஔரச புத்திரனாகிய முதல் பிரதிவாதிக்கு செலுத்தப்படவேண்டிய பாகத்திலிருந்து இரண்டாம் பிரதிவாதியினால் துர்விநியோகம் செய்யப்பட்ட மொத்தத்தின் அரைபாகம் வாதிக்கு செலுத்தப்படவேண்டியதென்றும் டிக்ரி செய்தார்கள். இதன்னியில் முதல் பிரதிவாதி இனி தனக்கு விவாகம் செய்துக்கொள்ள வேண்டியதற்காக நேரிடும் செலவைப்பற்றி டிக்ரியில் நிபந்தனை செய்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டதை ஆமோதிக்காமல் தள்ளிவிட்டார்கள். முதல் பிரதிவாதி ஐகோர்ட்டில் அப்பீல் செய்துக் கொண்டார்.

அப்பீல் வாதியின் வக்கீல் Mr. V. ராமதாஸ்:—இந்த கேசில் நான் வாதிக்க வேண்டிய அம்சம் என்னவென்றால் ஸ்ரீகாரம் எடுத்துக்கொண்ட ஹிந்து சூத்திரன் ஒருவனுக்கு ஔரச புத்திரன் ஒருவன் பிறந்து இருந்தால் தத்து புத்திரனுக்கு அவனுடைய சொத்தில் எவ்வளவு பாகத்திற்கு ஹக்கு உண்டு என்பது தான் கேள்வி. அவனுக்கு (தத்து புத்திரனுக்கு) அந்த சொத்தில் ஐந்தில் ஒரு பாகத்திற்குத்தான் ஹக்குண்டென்று நான் அதி விநயத்துடன் சொல்லுகிறேன். இராஜா—v.—சுப்புராயன் (1884) இ. லா. ரி. 7. ம. 253-ல் இந்த அம்சத்தைப்பற்றி யோசிக்கப்படவே இல்லை. பிரஸ்தாப கேஸ் சூத்திரர்களுடைய கேசானபடியால் இது விஷயத்தைப்பற்றி ஐயாவு மூப்பனார் v. நெலயதாக்ஷியம்மாள் (1862) 1. ம. ஹை. கோ. ரி. 45-ல் இவ்விஷயத்தைப்பற்றி மிக்க தெளிவாய் யோசிக்கப்பட்டிருக்கின்றது. நான் வாதிக்கும்படியான வாதத்திற்கு பின்செப்பிய கேசில் எனக்கு அனுகூலமாய் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரமாய் கிரியப்ப v. நிங்கப்ப (1893) இ. லா. ரி. 17. பம். 100, 105; ரகுபனந்தாஸ் v. சாது சர்ன்தாஸ் (1899) இ. லா. ரி. 4. கல். 425; பாச்சு v. நகின் தாஸ் (1914) 16. பம். லா. ரி. 263 லும்; செட்லூர் மித்தாக்ஷர, பக்கம் 32லும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (பார்க்கவும்.) டட்டகமீமாம்ஸா ஐந்தாவது பிரிவு 40-வது சுலோகத்தில் க[illegible] ($\frac{1}{4}$) பாகம் தான் உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரமாய் 10-வது பிரிவு 1-வது சுலோகத்தையும் ஸ்ரீகாரத்தைப் பற்றி சர்க்கார் என்பவர் எழுதியிருக்கும் சாஸ்திரத்தின் 402-வது பக்கத்தையும்; மெக்னட்டன் ஹிந்துலா 120-233-ம்பக்கங்களிலும்; கோஸ் ஹிந்துலா 2-வது எடிஷன் 612-வது பக்கத்திலும்; மெயின் ஹிந்துலா 223—224-வது பக்கங்களிலும்; பட்டாசாரியார் சாஸ்திரத்தின் 458-459-ம் பக்கங்களிலும் தெளிவாய்கூறப்பட்டிருக்கின்றது. நான் கூறும் வாதத்திற்கு விரோதமாய் டட்டக சந்திரிகா ஐந்தாவது பிரிவு 24, 25, 29, 32 பாராக்களில் கூறப்பட்டிருக்கின்றது. (செட்லூர் 445-ம் பக்கமும் பார்க்கவும்) அந்த புத்தகத்தில் நல் நடவடிக்கையுள்ள சன்மார்க்கனான தத்து புத்திரனுக்கு அரைபாகம் உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரமாய் டட்டக சந்திரிகா

வில் விவாகமாகாத பெண்ஜாதிக்குப் பிறந்த பிள்ளையை ஒரு தத்துப்புத்திரனுக்குச் சமானமாக்கி அரைபாகம் உண்டென்னும் காரணத்தை கூறப்பட்டிருக்கிறது. இவ்விதமான முகாந்தரம் செல்லம்மாள் v. இரங்கநாதம் பிள்ளை (1911) இ. லா. ரி. 34. ம. 277-ல் விவாகம் செய்துக்கொண்ட மனைவிக்குப்பிறந்த பிள்ளையின் பாகத்தில் அரைபாகம் விவாகமாகாத மனைவியின்பிள்ளை அடையவேண்டியதென்று தீர்மானித்திருப்பதற்கு ஒவ்வாதென்று தான் சொல்லவேண்டும்.

இரண்டாவது:—சூத்திரர்களுக்குள் விவாகமாக வேண்டியதைப்பற்றி நிபந்தனை செய்யவேண்டியதென்றுதான் காமேஸ்வர சாஸ்திரி v. வீராசாருலு (1911) இ. லா. ரி. 34. ம. 422-லும்; கோபால கிருஷ்ணம் ராஜு v. வெங்கடநரச ராஜு (1912) ம. வீ. நோ. 903-லும் தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது. பிராமணர்களுக்குக் கூட விவாகசிலவைப்பற்றி நிபந்தனை செய்ய வேண்டுமென்று ஸ்ரீனிவாஸய்யங்கார் v. திருவேங்கடத்தய்யங்கார் (1915) இ லா. ரி. 38. ம. 556-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

ரேஸ்பாண்டேண்டின் வக்கீல் Mr. P. நாராயணமூர்த்தி:—சூத்திரர்களுக்குள் தத்துப்புத்திரன், ஔரச புத்திரனைப்போல சமபாகமாக அரைபாகம் அடைய வேண்டியதுதான்.

ஸ்ரீகாரத்தைப் பற்றிய டட்டக சந்திரிகா சாஸ்திரத்தில் இது விஷயத்தைப்பற்றி தெளிவாய் கூறப்பட்டிருக்கின்றது. இந்த சாஸ்திரத்தையே தென்னிந்தியாவில் இதைப்பற்றிய முக்கியமான ஆதாரமாய் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. மதுரை கலெக்டர் v. முத்து இராமலிங்க சேதுபதி (1868) 12. மூ. இ. அ. 436 பார்க்கவும்.

[இது விஷயத்தைப்பற்றிய கிரந்தங்கள் எல்லாவற்றிலும் டட்டகசந்திரிகாவில் சொல்லப்பட்டிருப்பதற்கு விரோதமாகவே இருக்கிறது என்று கோர்ட்டார் சொன்னார்கள்.]

டட்டக சந்திரிகா ஐந்தாவது அத்தியாயம் 13, 42, சுலோகங்களில் விவாகமாகாத மனைவியின் பிள்ளை விவாகமான மனைவியின் பிள்ளையுடன் சமபாகம் அடையலாமென்று சொல்லியிருக்கையில், தத்துப்புத்திரன் ஏன் அடையலாகாது. இதற்கு ஆதாரமாய் டட்டகமீமாம்ஸா 5-வது அத்தியாயம் 43-வது சுலோகத்தையும், மெயின் ஹிந்துலா 223, 224 பக்கங்களையும், ஸ்ட்ரேஞ்சு ஹிந்துலா 1-வது வாலியம் 99-வது பக்கத்தையும் பார்க்கவும். ஐயாவு மூப்பனார் v. நெலயதாக்ஷியம்மாள் (1862) 1. ம. ஹை. கோ. ரி. 45-ல், தத்துப்புத்திரனுக்கு அரைபாகம் உண்டா அல்லது கால்பாகம் தானா என்பது தகராரேயல்லாமல் வேறல்ல. ஆனால், தத்துப் புத்திரனே அந்த கேசில் வாதியாய் கால் பாகத்திற்கு ஹக்குண்டென்று தாவா செய்தான் ஆயினும் அந்த கேசில் டட்டக சந்திரிகாவைப்பற்றி சொல்லப்படவில்லை. கிரியப்ப v. நிங்கப்ப (1893) இ. லா. ரி. 17. பம். 100-105-ல் கக்ஷிதாரர்கள் சூத்திரர்கள் என்று ருஜுச் செய்யப்படவில்லை. மேலும் கொடுக்கவேண்டிய பாகம் அரையா அல்லது காலா என்பதைப்பற்றி வாதம்கிடையாது. இராஜா v. சுப்புராயா (1884) இ. லா. ரி. 7. ம. 253-ல் செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தை ஒரு ஆதாரமாய் கூறப்பட்டிருக்கின்றது. விவாக சிலவுகளுக்கு பாகித்துக்கொள்ளும் காலத்தில் நிபந்தனை செய்யப்பட வேண்டுமென்பது அவசியமல்ல. இதற்கு ஆதாரமாய் நாராயண v. இராமலிங்கா (1916) இ. லா. ரி. 39. ம 587 பார்க்கவும்.

மிஸ்டர் வி. இராமதாஸ் கூறிய மறுமொழி:—பிரஸ்தாப தாவா பாகப்பிரிவினையைப் பற்றியதேயல்லாமல் ஸ்ரீகாரத்தைப் பற்றியதல்ல. ஆகையால் டட்டக சந்திரிகா இதற்காக ஒரு ஆதாரமாகாது. ஸ்ரீபானுசு குருலிங்க சுவாமி v. ஸ்ரீபானுசு இராமலக்ஷ்மம்மா (1899) இ. லா. ரி. 22. ம. 398, 412, (P. C.) பார்க்கவும். அந்த கேசில் மந்திராலோசனை சபையார் (Privy Council) ஹிந்து சாஸ்திரங்களிலுள்ள ஸ்மிருதிகளில் சொல்லியிருப்பவைகளுக்கு யாதேனும் ஒன்றை சேர்த்து சொல்லுவதற்காவது அல்லது அவைகளில் சொல்லியிருப்பவைகளை மாற்றிச் சொல்லுவதற்காவது டட்டக சந்திரிகாவை ஒரு அதிகாரமாக எடுத்துக்கொள்ளலாகாதென்று கண்டு தீர்மானித்திருக்கிறார்கள். இம்மாதிரியாகவே டட்டகமீமாம்ஸாவிலும் கண்டு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு ஆதாரமாய் பட்டுலால் v. பெர்பாடிகுன்வார் (1915) இ. லா. ரி. 37. அ. 359, 367, பார்க்கவும். இதுவுமன்றி செட்லூர் எழுதிய புத்தகத்தில் பலம் பட்டி என்பவர் 711-ம் பக்கத்திலும்; காத்தியாயன என்பவர் 700-ம் பக்கத்திலும் கூறியிருக்கும் அபிப்பிராயத்தையும் பார்க்கவும்.

ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரிஐயர்:—1898-ம் ௵த்தில் வெங்கண்ணு என்பவர் ஒருவர் வாதியை தத்து எடுத்துக்கொண்டார். முதல் பிரதிவாதி அதற்குப்பின் பிறந்தவன். வெங்கண்ணு 1902-ம் ௵த்தில் மரணமடைந்தார். முதல் பிரதிவாதியின் சொந்த தாயாரும் வாதியை தத்து எடுத்துக் கொண்ட தாயாருமாகிய இரண்டாம் பிரதிவாதி இந்த இரண்டு குமாரர்களும் மைனர்களாகயிருந்த காலத்தில் காலம் சென்றவருடைய சொத்தை பரிபாலனம் செய்து வந்தாள். குடும்ப சொத்துகளில் அரைபாகம் பாகித்துக் கொள்வதற்காக இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டது. முதல்பிரதிவாதி வாதிக்கு குடும்பசொத்தில் ஐந்தில் ஒரு பாகத்திற்குத்தான் ஹக்குண்டென்று முக்கியமாய் வாதித்தான். சப் ஜட்ஜி இராஜா v. சுப்புராயா (1884) இ. லா. ரி. 7. ம. 253-ல் செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தை ஆதாரமாகக் கொண்டு இரண்டு பிள்ளைகளுக்கும் சமபாகத்திற்கு ஹக்கு உண்டென்று தீர்மானித்தார். இது விஷயத்தைப்பற்றி எங்கள் எதிரில் மிக்க வற்புறுத்தி வாதிக்கப்பட்டது. கீழ்கோர்ட்டார் செய்த தீர்மானத்தை ஒப்புக்கொள்ள எனக்கு முகாந்தரம் தோன்றவில்லை. பிரஸ்தாப தாவாவின் கக்ஷிதாரர்களோ சூத்திரர்கள். ராஜா. v. சுப்புராயா (1884) இ. லா. ரி. 7. ம. 253-ல் ஓர் குடும்பத்திலுள்ள சகோதரனுடைய சொந்த புத்திரனுக்கும் இன்னொரு சகோதரனுடைய தத்து புத்திரனுக்கும் தகரார் நேரிட்டது. இரகுபனதாஸ் v. சாதுசர்ன்தாஸ் (1879) இ. லா. ரி. 4. கல். 425-லும் கிரியப்ப v. நிங்கப்ப (1893) இ. லா. ரி. 17 பம் 100-லும் விரோதமாய் தீர்மானிக்கப்பட்டு இருந்த போதிலும் மதராஸில் ஏக குடும்பத்திலுள்ள தத்துப்புத்திரன் குடும்பத்தைச் சேர்ந்த இன்னொருவனுடைய சொந்த புத்திரனைவிட தத்துப் புத்திரனே தகப்பனுக்குள்ள சொத்துக்கு வார்சு பாத்தியதை யுள்ளவனாகிறான் என்று சட்டம் ஏற்பட்டிருக்கின்றது. மதராஸ் கேசில் அது ஒரு அம்சத்தைப்பற்றி தான் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அந்த தீர்மானத்தின் கடைசியில் கற்றுணர்ந்த ஜட்ஜிகளும் பின் வருமாறு சொல்லியிருக்கின்றார்கள். "மேற் கூறியபடி அவ்விதமான பிரத்தியேகமான விதி யிருந்திடினும் அது சூத்திரர்களுக்குச்சற்றேனும் சம்பந்தப்பட மாட்டாது.

சூத்திரர்களுக்குள் தத்துப்புத்திரன் பிறகு பிறந்த சொந்த புத்திரனுடன் சமபாகமாய் பாகித்துக் கொள்வானென்று சொல்லப்பட்டிருக்கிறது.”

டட்டக சந்திரிகாவின்மீது வியாக்கியானமாய் எழுதப்பட்டிருக்கும் விருதகௌதம சந்திரிகா கிரந்தத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் (அதைப்பற்றி நான் இதில் உதகரித்து சொல்லுகின்றேன்.) இவ்விதமாய் சொல்லியிருப்பதற்கு தகுந்த ஆதாரம் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. அது அப்படிக்கிருக்க அய்யாவு v. நெலயதாக்ஷியம்மாள் (1862) 1. ம. வை. கோ. ரி. 45-ல் தத்து புத்திரனுக்கு குடும்ப சொத்துகளில் ஐந்தில் ஒரு பாகம் தான் உண்டென்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்த தீர்மானத்தைப்பற்றி கற்றுணர்ந்த ஜட்ஜுகளுக்கு தெரியப்படுத்தவே இல்லை என்பது தெளிவாய் ஏற்படுகிறது. பம்பாயிலும் கல்கத்தாவிலும் ஏக குடும்பத்தைச் சேர்ந்த தத்துபுத்திரனுக்கு வார்ஸு பாத்தியதை கிடையாதென்னும் பிரத்தியேகமான கோட்பாட்டுக்குட்பட்டே சூத்திரர்களுக்குள் தத்துபுத்திரனுக்கு சொந்த புத்திரனுக்குள்ள பாகத்தில் நாலில் ஒரு பங்கு தான் உண்டென்று தீர்மானித்திருக்கிறார்கள். இதற்கு ஆதாரமாய் ரகுபனந்தாஸ் v. சாதுசர்ந்தாஸ் (1879) இ. லா. ரி. 4. கல். 425 லும்; கிரியப்ப v. நிங்கப்ப (1893) இ. லா. ரி. 17. பம். 100 லும்; பாச்சு v. நரகின்தாஸ் (1914) 16 பம். இ. லா. ரி. 263-லும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ரிஷிகளும் ஸ்மிருதி கிரந்த கர்த்தர்களும் சொல்லியிருக்கும் சாஸ்திரங்களை ஆதாரமாகக் கொண்டு தத்து புத்திரன் சொந்த புத்திரனாகிய ஔரசப் புத்திரனுடன் சமமாக பாகித்துக் கொள்ள ஹக்குள்ளவனல்லவென்று சந்தேகமின்றி நான் தீர்மானிப்பேன்.

(1) வசிஷ்டா என்பவர் 15-வது அத்தியாயம் 9-வது சுலோகத்தில் எல்லோரும் நன்றாய் அறிந்திருக்கும் கிரந்தத்தைப் பார்க்கவும். அதில் சொல்லியிருப்பது என்னவென்றால்.—“ஒருவனை ஸ்ரீகாரம் எடுத்துக் கொண்ட பிறகு சொந்தமாய் ஓர் ஔரச புத்திரன் பிறப்பானாகில் தத்துபுத்திரன் நாலில் ஒரு பாகம் தான் பாகித்துக் கொள்ளவேண்டியது”

(2) தயாபாகாவிலும், கோல்புருக் டைஜெஸ்ட் 3-வது வாலியூம் 348 பக்கத்திலும், காத்யாயனுவைப் பற்றி கூறியிருக்கின்றது. அதில் சொல்லியிருப்பது யாதெனில்:— “ஒருவனுக்கு சொந்தமாய் பிறந்த பிள்ளை ஒருவனிருப்பானாகில் அதே குடும்பத்திலுள்ள தத்து புத்திரர்கள் மூன்றில் ஒரு பாகம் தான் எடுத்துக்கொள்ள வேண்டியது.”

ஆனால் மதன பாரிஜாதாவிலும், வீரமித்ரோதயாவிலும் மஹாரிஷி நாலில் ஒரு பாகமே உண்டென்று கூறியிருக்கிறார்.

(3) பௌதயானுவும், வசிஷ்ட மஹாரிஷி கூறியிருப்பதைப் போலவே அபிப்பிராயப்படுகிறார். இதற்கு ஆதாரமாய் டட்டகமீமாம்ஸா 5—வது பிரிவு 42-வது சுலோகத்தைப் பார்க்கவும்.

(4) மனு என்பவர் 9-வது அத்தியாயம் 163வது சுலோகத்தில் பின் வருமாறு கூறியிருக்கிறார்:— “ஒரு ஹிந்து குடும்பத்தில் ஔரச புத்திரன் ஒருவனே அவனுடைய தகப்பனுடைய ஆஸ்திக்கு தனி வார்ஸ் என்று கூறியிருக்கிறார். ஆனால் ஏதோ தயா விஷயமாக அவன் குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கும் ஜீவனும்சம் கொடுக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்.” மனு என்பவர் இப்படி சொல்லியிருப்பதைமித்தாக்ஷரத்தில் மற்றபிள்ளைகள் என்பதை நல்நடவடிக்கையுள்ள பிள்ளை என்பதாகத் தான் அர்த்தம் செய்து சொல்லியிருக்கின்றது. மேலும் அதில் மற்றவர்களுக்கு நாலில் ஒரு பாகம் உண்டென்னும் பொதுவிதியைப்பற்றி யாதொன்றும் பாதிக்கப்படவில்லை. மேற்சொல்லிய ஸ்மிருதி கிருந்தகர்த்தர்கள் இவ்விதமாய் சொல்லியிருப்பதற்கு விரோதமாய் விருத கௌதம தத்துபுத்திரனுக்கு ஔரசபுத்திரனுடன் சமபாக முண்டென்று சொல்லி யிருப்பதையும் இந்தக்கேசில் ஒரு ஆதாரமாய் கூறியிருக்கின்றது. அந்த ரிஷி சொல்லியிருப்பது Messrs கொலாப்சண்டர் சர்க்கார், கோஸ்இவர்கள் சொல்லியிருப்பதைப் போல். அதைப் பற்றி கவனிக்கவேண்டியதவசியமில்லை. விருத கௌதமாவில் சொல்லி யிருப்பதை கவனிக்க வேண்டியதவசியமல்ல என்று சொல்லியிருப்பதை Mr. ஷியாமா சர்ன்சர்க்கார் என்பவர் வியவஸ்தசந்திரிகாவில் அம்மாதிரியாகவே அபிப்பிராயம் கூறியிருக்கிறார். ஆகையால் மேல் கூறியிருக்கும் ஆதாரங்களை யோசிக்குமளவில் தத்துபுத்திரனுக்கு நாலில் ஒரு பாகத்திற்கு ஹக்குண்டென்னும் அபிப்பிராயத்திற்கு அனுகூலமாயிருக்கிறது.

பிறகு இவ்விஷயத்தைப்பற்றி வியாக்கியானம் கூறியிருப்பவர்களுடைய அபிப்பிராயத்தை நோக்குமளவில் அதில் பெரும்பாலோரும் இம்மாதிரியான விதியையே அனுசரவாய்கூறியிருக்கின்றார்கள். விக்னேஸ்வரரும் விருத கௌதமாவை ஓர் ஆதரவாய்கூறியிராதவிஷயம் ஆச்சரியப்படத் தக்கவையாகவேயிருக்கின்றது. இம்மாதிரியாக அவரும் அதை விட்டுவிட்டது கவனிக்கத்தக்கதாகவே யிருக்கின்றது. விக்னேஸ்வரர் சொல்லும் ஆதாரங்களாகிய ஸ்மிருதிகள் ஔரச புத்திரனுடைய பாகத்தில் கால்பாகம் தான் தத்து புத்திரனுக்குண்டென்று ஏற்படுகின்றது. (இதற்கு ஆதாரமாய் மிதாக்ஷர 1-வது அத்தியாயம் 11-வது பிரிவு 24-வது சுலோக வகையராக்களைப் பார்க்கவும்) தயாபாகாவின் கிரந்த கர்த்தாவாகிய ஜிமுதவாஹனர் என்பவர் அவருடைய கிரந்தத்தின் 10-வது அத்தியாயத்தில் தத்துப்புத்திரனுக்குள்ள பாகத்தைப் பற்றி விவரித்துச் சொல்லுகையில் விருதகௌதமாவை ஓர் ஆதாரமாய் கூறவேயில்லை மதனமாரிஜாதாவும், வீரமித்ரோதயாவும் மிதாக்ஷரத்தில் சொல்லியிருக்கும் விதியையே ஆதாரமாய் கூறுகின்றார்கள். சரஸ்வதிவிலாசாவிலும் பூர்த்தியாய் [illegible] கித்து தீர்க்க யோசனையுடன் இம்மாதிரியாகவே அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கின்றது. சரஸ்வதி விலாசத்தின் கிரந்தகர்த்தா விருத கௌதமாவை ஓர் அதிகாரமாய் கூறவேயில்லை. இதற்கு விரோதமாயிருக்கும் முதல் குறிப்பை டட்டகசந்திரிகா 5-வது பிரிவு 24-32 பாராக்களில் காணலாம். அந்த கிரந்த கர்த்தா விருதகௌதமாவின் கிரந்தம் சூத்திரர்களுக்குத்தான் சம்பந்தப்படுமென்னும் கோட்பாடுடன் ஒப்பிட்டுச்சொல்லுகின்றார். ஆனால் கிரந்தத்தை நோக்குமளவில் பொதுவாயிருக்கின்றது. ஆனால் விடாக்கியானம் எழுதியவர் சூத்திரர்களுக்குள் சொந்தமனைவியல்லாதவளுடைய பிள்ளைகள் சொந்த மனைவியின் பிள்ளைகளுடன் அதமபட்க்ஷம் மூன்றில் ஒருபாகம் அடையலாமென்று சொல்லியிருக்க—தத்துப்புத்திரர்கள் அதைவிட தாழ்மையாய் விடவில்லையென்று தர்க்கித்து கூறுகின்றார். அவ்விதமாய் தத்துப்புத்திரர்கள் தாழ்மையான ஸ்திதியில் பாகிக்க வேண்டுமென்பதற்கு காரண மென்னவென்றால் சொந்தமனைவி யல்லாதவளுடைய பிள்ளை யாருடைய சொத்தில் பாகம்

கேட்கின்றானோ அவன் அவனுடைய மாம்சத்திலும், உதிரத்திலும் பிறந்தவனாகையால், தத்துப்புத்திரனை விட அவனை விசேஷமாய் சொல்லவேண்டு மென்பது ஏற்படுகின்றது. ஆனால் தத்துபுத்திரன் விஷயமாய் இவ்விதமாய் அபிப்பிராயம் கொள்ள வேண்டுமென்பது எப்பொழுதும் ஓர் விதியாய் அனுசரிக்கலாகாது. ஒருவனுக்கு 100 புத்திரர்கள் இருந்தால் அப்பொழுது சாஸ்திரம் இன்னதென்று மனு சொல்லி யிருப்பது சரியான அபிப்பிராயமென்று தோன்றவில்லை. விருத கௌதமா கிரந்தத்தில்சொல்லியிருக்கும் “யாதஜாதி” (Yatha Jathi) என்பதற்கு விவர்ணம் டட்டகசந்திரிகாவில் விவரமாய் கூறியிராதது ஆச்சரியிக்கத்தக்க தாகவே யிருக்கின்றது. டட்டக மீமாம்சாவின் கிரந்தகர்த்தா மேற்சொன்ன “யாதஜாதி” என்னும் பதங்களுக்கு “நல் நடவடிக்கையுள்ள” என்று அர்த்தமென்பதாக தர்ஜமா செய்திருக்கிறார்.

ஷியாமா சரன்சர்க்காரும் அவருடைய வியவஸ்தாசந்திரிகா கிரந்தத்தில் அவ்விதமாகவே அர்த்தம் கூறி யிருக்கின்றார். கோஸ் ஹிந்துலாவில் விருதகௌதமாவில் சொல்லியிருக்கும் பதங்கள் “தாதஜாதி” என்று இருக்கின்றது. அப்பதங்கள் என்னமா யிருந்திடினும் அவைகளுடைய சரியான அர்த்தம் யாதெனில் “மேலுள்ளபடி” என்று அர்த்தம் சொல்ல வேண்டும். இது எதைப்பற்றி சொல்லியதென்று யோசிக்குமளவில் தத்தெடுத்துக் கொண்ட புத்திரன் என்ன நடவடிக்கை யுள்ளவனாயிருக்கவேண்டு மென்பதுதான் என்று கருத வேண்டும். மனு என்பவர் 9-வது அத்தியாயம் 169-ம் சுலோகத்தில் தத்தப்புத்திரன் என்பதற்கு விவரமாய் பின்வருமாறு அர்த்தம் கூறி யிருக்கிறார். “ஒரு குடும்பத்தில் ஒருவன் தன்னுடைய வம்சத்திலேயே சற்குண முள்ளவனாகவும் தனக்கு கர்மாதி காரியங்கள் செய்ய அருகனாகிறான் என்பதை உணர்ந்தவனாகவும், அப்படி செய்யாவிடில் பாவத்திற் குள்ளாவோமென்று பூராய் அறிந்திருக்கும் ஒரு பிள்ளையை தன்னுடைய சொந்த பிள்ளையாக செய்து கொள்ள வேண்டுமென்று கருதி தத்து எடுத்துக் கொள்ளுகிறான்” மிக்க கற்றுணர்ந்த நந்த பண்டிதா என்னும் பண்டிதரும் விருதகௌதமாவின் கிரந்தத்தை நான் சொல்லியபடியே தர்ஜமா செய்திருக்கிறாரென்பதற்கு அதுவே காரணம். இம்மாதிரியான பொது சட்டத்திற்கு கௌதமாவின் விதி ஒரு விலக்கா யிருக்கிறதென்று நான் அபிப்பிராயப் படுகிறேன். ஒருவனுக்கு நற்குணங்கள் உண்டா இல்லையா என்பதைப்பற்றி வெவ்வேறு விதமாய் அபிப்பிராயம் கொள்ளப்படும் காரணத்தினால் அவ்விதமான விதியை கோர்ட்டார்கள் ஓர் சட்டமாக பரிபாலிப்பதற்கு கூடாமையா யிருக்கின்றது. விருதகௌதமாவின் கிரந்தத்தை மிக்க ஜாக்கிரதையாக பரிசோதித்த பிறகு தான் டட்டகமீமாம்சாவின் கிரந்த கர்த்தா விக்னேஸ்வராவும் இன்னும் இதர வியாக்கியானஸ்தர்களும் கொண்ட அபிப்பிராயத்தையே சரியென்று ஒப்புக் கொள்ளுகிறார். இத்தியாதி காரணங்களினால் டட்டக சந்திரிகாவைத் தவிர மற்ற எல்லா கிரந்த கர்த்தர்களும் தத்து புத்திரனுக்கு ஔரச புத்திரனுடன் சமபாகம் கொடுக்கலாகாதென்று ஒப்புக் கொள்ளுகிறார்கள். மிஸ்டர் நாராயணமூர்த்தி என்பவர் டட்டக சந்திரிகா சாஸ்திரம் தத்து விஷயத்தைப்பற்றிய ஒரு பிரத்தியேகமான கிரந்தமென்றும் மற்ற கிரந்த கர்த்தர்கள் சொல்லி யிருப்பதை பார்க்கிலும், அதில் சொல்லியிருக்கும் முடிவான அபிப்பிராயங்களை மிக்க விசேஷமானதாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வாதிக்கின்றார். அவருடைய வாதத்திற்கு அனுகூலமாய் மதுரை கலெக்டர் v. முத்துராமலிங்க சேதுபதி (1868)12 மூ. இ. அ. 436-வதில் உள்ள கேசை தன்னுடைய வாதத்திற்கு ஆதாரமாய் கூறுகின்றார். இதைப்பற்றி பிரதமத்தில் யோசிக்குமளவில் பிரஸ்தாப தாவாவில் தத்துபுத்திரன் என்ன யோக்கியதை யுள்ளவனாயிருக்க வேண்டு மென்பதையும் ஸ்ரீகாரம் எடுத்துக்கொள்ளும் பொழுது என்ன சடங்குகள் செய்யவேண்டு மென்பதைப்பற்றியும் கவனிக்க வேண்டியது ஒரு அம்சமல்லவென்றுதான் சொல்லவேண்டும் அது ஒருவன் இறந்த பிறகு அவனுடைய சொத்திற்கு யார் சுதந்தரவாளி யாகிறான் என்பதைப்பற்றிய கேள்வியை அனுசரித்ததாயிருக்கின்றது. அவ்விதமான விஷயங்களைப் பற்றி மிதாக்ஷரா வென்னும் சட்டம் மிக்க விசேஷமானதென்று பூர்த்தியாய் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அது அப்படிக் கிருந்திடினும் மிஸ்டர் ராமதாஸ் என்பவர் எடுத்துக் காட்டியபடி டட்டக சந்திரிகாவில் சொல்லியிருக்கும் ஓர் ஆதாரம் ரிஷிகள் சொல்லி யிருக்கும் வியாக்கியானங்களைப் பார்க்கிலும் விசேஷமானதாக கொள்ளலாகாது; இதற்கு ஆதாரமாய் ஸ்ரீபானுசு குருலிங்க சுவாமி v. ஸ்ரீபானுசு இராமலக்ஷிமிஅம்மா (1899) இ. லா. ரி. 22. ம. 398, 411, (P. C.) யும், பட்டுலால் v. பர்பட்டி குன்வார் (1915) இ. லா. ரி. 37. அ. 359, 367-யும் பார்க்கவும். ஸ்ரீகாரத்தைப் பற்றிக் கூறிய இன்னொரு பிரத்தியேகமான ஆதாரமான டட்டகமீமாம்சாவிலும் வேறே விதமாய் தான் அபிப்பிராயம் கொள்ளப் பட்டிருக்கின்றது. ஆகையால் டட்டக சந்திரிகாவில் கூறியிருக்கும் அபிப்பிராயத்தினால் நாம் பந்தப்பட்டவர்களல்லவென்றும், இராஜா v. சுப்புராயா (1884) இ. லா. ரி. 7. ம. 253 ஆதாரத்தில் செய்யப்பட்டிருக்கும் தீர்மானப்படி நாம் நடக்க வேண்டுமென்பது அவசியமல்லவென்றும் நான் அபிப்பிராயப் படுகிறேன்.

ஹிந்து லாவை எழுதிய கிரந்தகர்த்தர்கள் எல்லோரும் மிதாக்ஷரத்தில் கூறியிருக்கும் அபிப்பிராயத்தையே சரியானதென்று ஏகமாய் ஒப்புக்கொள்ளுகிறார்கள் Messrs கொலாப் சந்திர சர்க்கார், கோஸ் இன்னும் சிரோமணி பட்டாசாரி முதலானவர்களும் ஐந்தில் ஒரு பாகம் தானுண்டென்று யாதொரு ஐயமின்றி அபிப்பிராயம்கூறியிருக்கின்றார்கள். Messrs. West-ம், Pakler ம், இவ்விதமாகவே அபிப்பிராயம் கொண்டிருக்கின்றார்கள். Mr. மெயின் என்பவர் இவ்விஷயத்தைப்பற்றி யாதொரு முடிவான அபிப்பிராயம் வெளிப்படையாகச் சொல்லவில்லை, அவர் சிலோனில் தத்துப்புத்திரன் ஔரச புத்திரனுடன் சமபாகம் அடைகிறானென்று சொல்லுகிறார் அது அப்படிக்கிருந்திடினும், மெக்னுனென்பவரெழுதிய புத்தகத்தின் 184-வது பக்கத்தில் கூறியிருக்கும் முன்பழக்கப்படி இந்தியாவில் இவ்விஷயத்தைப்பற்றிய பழக்கம் பேதப்படுகிறதென்று தெரியவருகின்றது. இத்தியாதி காரணங்களை யனுசரித்து வாதிக்கு குடும்ப சொத்துகளில் ஐந்தில் ஒரு பாகத்திற்குத்தான் ஹக்குண்டென்று நான் தீர்மானிக்கிறேன்.

இந்த அப்பீலில் வாதிக்கப்பட்ட இன்னொரு அம்சமானது யாதெனில் இரண்டாம்பிரதிவாதியால் கணக்கை ஆஜர்படுத்த முடியாத பணத்தின் விஷயமாய் முதல் பிரதிவாதியின் பாகத்தை பந்தப்படுத்தி டிக்ரி செய்ய வேண்டுமென்பது தான். அதுபிசகான விஷயமென்று தெளிவாய் தெரியவருகின்றது. முதல் பிரதிவாதி அவனுடைய தாயாரின் துர் நடவடிக்கை

வினல் யாதொரு லாபமும் அடையக் கூடியவனல்ல இதற்கு ஆதாரமாய் சோணு v. டாண்டு (1904) இ. ல்ா. ரி. 28. பம். 330, பார்க்கவும்.

இந்த அப்பீலில் கடைசியாய் யோசிக்க வேண்டிய அம்சம் யாதெனில் விவாக செலவுகளுக்காக டிக்ரியில் நிபந்தனை செய்ய வேண்டியதா இல்லையா என்பதுதான். ஸ்ரீனிவாசையங்கார் v. திருவேங்கடத்தய்யங்கார் (1915) இ. லா. ரி. 38. ம. 556-ல் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் என்பவர், மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்திர ஐயர் தீர்மானத்தை ஒப்புக் கொண்டு குடும்பத்திலுள்ள விவாஹ மாஹாத அவிபக்த நபர்களினுடைய விவாஹ செலவுகளைபற்றி பாக வியாஜ்ஜியத்தில் செய்யப்படும் டிக்ரிகளில் நிபந்தனைசெய்ய வேண்டுமென்று தான் தீர்மானித்திருக்கிருர்.

அது அப்படிக்கிருக்க மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரனையரும், ஒல்ட் பீல்டும், நாராயண v. இராமலிங்கா (1916) இ. ல்ா. ரி. 39. ம. 587-ல் இதற்கு விரோதமாய் அபிப்பிராயம் கொண்டிருக்கின்ருர்கள். மதராஸில் ஸ்ரீனிவாசய்யங்கார் v. திருவேங்கடத்தய்யங்கார் (1915) இ. லா ரி. 38. ம. 556-ல் செய்திருக்கப்பட்ட தீர்மானத்தையே அனுசரவான பழக்கமாய் பாராட்டி வருகிருர்களென்று தோன்றுகின்றது. இதற்காதாரமாய் ஸ்ட்ரேஞ்சு ஹிந்துலா 190; 191, பக்கங்களை பார்க்கவும். சர் தாமஸ் ஸ்ட்ரேஞ்சு (Sir Thomas Strange) என்பவர் அவருடைய புத்தகத்தின் 8-வது அத்தியாயத்தில் பண்டிதர்களும் அவ்விதமாக அபிப்பிராயம் கொண்டிருக்கிருர்களென்று உதாகரித்திருக்கிருர். ஜெயராம் v. நாது (1907) இ. லா. ரி. 31. பம். 54-ல் அப்பீல் வாதியின் தாவாவிற்கு அனுகூலமாய் கூறி யிருக்கின்றது. குடும்பத்தில் ஒரே சந்ததியிலுள்ள இனத்தார்களாகிய விவாஹம் செய்துகொண்ட நபர்களுடனிருக்கும் பந்துக்களுக்கு மாத்திரம் அவ்விதமான நிபந்தனை செய்யவேண்டியதவசியம்.

ஆகையால் நாங்கள் சப்ஜட்ஜ் அவர்களுடைய டிக்ரியை ரத்துசெய்து குடும்பத்திற்கு சொந்தமென்று கண்டு தீர்மானித்திருக்கும் சொத்துகளில் ஐந்தில் ஒருபாகம் வாதிக்கு பாகித்துக் கொடுக்க வேண்டுமென்றும், முடிவான டிக்ரி செய்கையில் முதல் பிரதிவாதியின் விவாஹசெலவுகளுக்கு நிபந்தனை செய்ய வேண்டுமென்றும், டிக்ரி செய்வது மல்லாமல் கீழ்கோர்ட்டார் டிக்ரியில் இரண்டாம் பிரதிவாதி செய்த துர்வினியோகத்திற்கு முதல் பிரதிவாதியின் பாகத்தை பந்தப்படுத்தியதை ரத்துசெய்து விடும்படிக்கும் டிக்ரி செய்கின்ருேம். இந்த அப்பீலில் அப்பீல்வாதி தனக்கு நேரிட்ட செலவுகளை முதல் பிரதிவாதியினிடத்திலிருந்து வசூல் செய்துக்கொள்ள ஹக்குள்ளவனென்றும் டிக்ரிசெய்கிருேம்.

மிஸ்டர் சீப் ஜஸ்டிஸ் வாலீஸ்:—நான் இந்த தீர்மானத்தை ஒப்புக்கொள்ளுகிறேன்.

I. L. R. 40. M. 632. இ. லா. ரி. 40. ம. 632.

நெ. 59

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்ரீனிவாஸய்யங்கார்

இரண்டாவது அப்பீல் நெ. 435 of 1915.

யமுலபாடி வெங்கட கிருஷ்ணைய—மைனர்—அடுத்த கிநேகிதி மங்கம்மா வகையரா.......வாதிகள்
அப்பீல் வாதிகள்.

v.

கொண்டமூடி சுப்புராயுடு வகையரா...பிரதிவாதிகள்
ரெஸ்பான்டெண்டுகள்.

லாபாயிண்ட்:—ஒரு கடன் பத்திரத்தின் பேரில் கடன் கொடுத்தவரோ அல்லது அவருடைய குமாஸ்தாவோ அந்த பத்திரத்தின் கீழ் கொடுக்கவேண்டிய பாக்கிக்காக செலுத்தின சொற்ப மொத்தத்தை செலுத்தினதாக எழுதி அதன் கீழ் கடன் வாங்கினவர் கையெழுத்துச் செய்திருந்தால் அது லிமிடேஷன் ஆக்ட் (Act IX of 1908) 19-வது பிரிவின் கீழுள்ள நிபந்தனையின்படி கடனை ஒப்புக்கொண்டு கடன் பத்திரத்தின் பேரில் எழுதினதாக பாவித்து சட்டப்படி செலாவணியுள்ள தென்று எண்ணலாகுமா வென்பது?

வியாஜ்ஜியசங்கிரஹம்:—எழுதுவதற்குத் தெரிந்த (கொதுவை வைத்து) கடன் வாங்கினவர் ஒருவர் கடனுக்காக செலுத்தின மொத்தத்தை கொதுவைப்பத்திரத்திற்குப்பின்னுல் கடன் கொடுத்தவரின் வேலைக்காரன் ஒருவன் எழுதி கடன் வாங்கினவரால் கையெழுத்துச் செய்யப்பட்டது அந்த பத்திரத்தின்பேரில் பின்வருமாறு எழுதியிருந்தது:—"இந்த பத்திரத்திற்காக ரூபாய் 378 செலுத்தப்பட்டது K. V. சுப்பாராயுடு" செல்லுவைத்த தேதியில் சற்றேறக்குறைய ரூ. 1500 பாக்கியாயிருந்தது. செல்லுவைத்த மொத்தம் அசலுக்காக செலுத்தப்பட்ட தென்ருவது அல்லது வட்டிக்காக செல்லுவைக்கப்பட்டதென்ருவது புலப்படவில்லை. லிமிடேஷன் ஆக்ட் 20-வது பிரிவின் கீழுள்ள நிபந்தனையின் தாத்பரியப்படி செல்லுவைத்தது செலாவணியுள்ளதென்று சொல்வதற்கு நியாயமில்லா திருந்திடினும் ஷை லிமிட்டேஷன் ஆக்ட் 19-வது பிரிவின் தாத்பரியப்படி கடனை ஒப்புக்கொண்டு செல்லுவைத்து எழுதினதாகவே எண்ணப்படுமென்று தீர்மானிக்கப்பட்டது.

தெனுலி டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட் அசல் நெ. 1031 of 1913-ல் பிறப்பிக்கப்பட்ட டிக்கிரியின்பேரில் செய்யப்பட்ட குண்டூர் ஜில்லா கோர்ட் அப்பீல் நெ. 2 of 1914-ல் செய்யப்பட்ட டிக்ரியின்பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

கேசின் விபரம்:—வாதியின் காலஞ்சென்ற தகப்பனுர் பேருக்கு பிரதிவாதி K. V. சுப்பாராயுடு என்பவர் 8-1-1906-ல் ரூ. 1590-க்கு கொதுவைக்கடன் பத்திரம் எழுதி கையெழுத்து செய்து கொடுத்திருந்தார். அந்த பத்திரத்திற்காக 1906-ம் ௵ ஜுலை 13௳ இரண்டு செல்லுகள் செய்தார். அந்த செல்லுகள் இரண்டும் அந்த பத்திரத்தின் பேரில் வாதியின் குமாஸ்தாவால் எழுதப்பட்டு கடன் வாங்கினவரால் கையெழுத்துச் செய்யப்பட்டன. அந்த பத்திரத்தின் பேரில் எழுதினவைகள் பின்வருமாறு எழுதியிருந்தன:—

"ரூபாய் 378—1906-ம் ௵ ஜுலை 13௳ ரூபாய் முன்னூற்றி எழுபத்திஎட்டு சுப்பாராயுடு என்பவரால் எழுதி கொடுக்கப்பட்ட பத்திரத்திற்காக செலுத்தப்பட்டது."

(கையொப்பம்) K. V. சுப்பாராயுடு.

ரூ. 22. மறுபடியும் அதே தினத்தில், ரூபாய் இருபத்திரண்டு செல்லுவைக்கப்பட்டது.

(கையொப்பம்) K. V. சுப்பாராயுடு.

கொதுவை வைத்துக்கொண்டவர் 1913-ம் ௵ அந்த பத்திரத்தின் பேரில் பாக்கியாய் நின்றிருந்த மொத்தம் ரூ. 1528-ம் வசூல் செய்வதற்கு இந்ததாவா கொண்டுவந்தார்.

சிலாசிலாவாய் வைத்த செல்லுகள் இரண்டும் பிரதிவாதியால் செலுத்தப்பட்டன வென்றும் பிரதிவாதி எழுதக்கூடியவரா யிருந்திடினும் அந்த செல்லுகள் வாதியின் குமாஸ்தாவால் எழுதப்பட்டன

வென்றும் அவைகள் பிரதிவாதியால் கையெழுத்துசெய்யப்பட்டனவென்றும் பிரதிவாதி எழுதத்திறமையுள்ளவர் தானென்றும் கீழ்கோர்ட்டார்கள் கண்டு தீர்மானித்திருக்கிருர்கள். அவ்விதமாய் செலுத்தின மொத்தங்கள் வட்டிக்காக செலுத்தியதாக எண்ணி செலுத்தப்பட்டதென்பதற்கு யிடமில்லையென்றும் அப்படி எழுதிவைத்த செல்லுகள் கடனைச் செலுத்த பந்தப்பட்டவரென்று ஒப்புக்கொண்டு எழுதினவைகளாக பாவித்து சட்டப்படி செலாவணியுள்ளதென்று சொல்வதற்கிடமில்லையென்றும் தீர்மானித்து தாவாவை தள்ளுபடி செய்து விட்டார்கள்.

அதன்பேரில் வாதியினுல் இந்த இரண்டாவது அப்பீல் கொண்டுவரப்பட்டது.

லாயர்கள்:—Mr. V. விஸ்வநாத சாஸ்திரியார் அப்பீல் வாதிகளின் வக்கீல். Mr. T. V. வெங்கட்ராம ஐயர் ..ரெஸ்பாண்டென்டுகளின் வக்கீல்.

ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு.

மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்:—இந்தகேசின் பத்திரத்தில் செப்பியிருக்கும் பதங்களைப் போலவே யிருந்த பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்த கேசாகிய ஜெகன்னுத சாஹு v. ராமாசாஹு (1914) 17. ம. லா. டை. 80-ல் நான் கூறியிருந்த அபிப்பிராயமே இந்தக் கேசுக்கும் சம்பந்தப்படுமென்று நான் நினைக்கிறேன். இந்த பத்திரத்தின் பேரில் எழுதியிருப்பதில் கடனை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதென்பதைப் பற்றி எனக்கு யாதொரு சந்தேகமும் கிடையாது. லிமிடேஷன் ஆக்ட் (Act IX of 1908) 20-வது பிரிவினுல் ஷை ஆக்ட் 19-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனைகளை அமுலுக்கு கொண்டுவரவொட்டாமல் தடுக்கப்படுகின்றதென்று வாதிக்கும் வாதத்தை நான் ஒப்புக்கொள்வதற்குக் கூடாமையாயிருக்கிறது. இந்த நிபந்தனை (20-வது பிரிவு) 19-வது பிரிவில் சொல்லியிருப்பதை எவ்விதமாய் அர்த்தம் செய்து சம்பந்தப்படுத்த வேண்டுமென்பதைப்பற்றியும் செல்லாக செலுத்தப்பட்டவைகள் எந்தெந்த விஷயத்தில் 19-வது பிரிவின்கீழ் அர்த்தம் செய்யப்படாதென்பதைப்பற்றியும் செய்யப்பட்ட பிரத்தியேகமான ஒரு நிபந்தனையென்றும் தர்க்கித்து வாதிக்கப்பட்டது. இந்த இரண்டு பிரிவுகளில் ஒன்று பொதுவாய் செய்யப்பட்ட ஒரு சாதாரணமான நிபந்தனையென்றும் மற்றொன்று பிரத்தியேகமாய் செய்யப்பட்டதென்றும் நான் எண்ணுவதற்கு கூடாமையா யிருக்கிறது. 19-வது பிரிவில் கடனை ஒப்புக்கொள்பவன் விஷயமாய் மாத்திரம் சட்டத்தை எவ்விதமாய் அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென்பதும், 20-வது பிரிவில் அவ்விதமாய், சிலாவாய் ஒப்புக்கொண்டு செலுத்தப்படும் செல்லு ஒரு வியாஜ்ஜியத்திற்கு அனுகூலமாய் எப்பொழுது சட்டப்படி செலாவணியுள்ளதென்றும் நிபந்தனை செய்யப்பட்டிருக்கின்றது. இதுவுமன்றி இரண்டாவதுபேதம் யாதெனில் அந்த மொத்தம் யாருக்கு செலுத்தப்படவேண்டுமோ அது செலுத்தப்பட்டதென்று ஒப்புக்கொண்டு அவருக்கு எழுதவேண்டுமென்பதும் அவசியமல்ல. இது இப்படிக்கிருக்க கடனுக்காக செலுத்தப்படும் செல்லு யாருக்கு செலுத்தவேண்டியதோ அவருக்குச் செலுத்தப்பட்டாலொழிய மற்றப்படி அந்த செல்லு 20-வது பிரிவின்கீழ் செலுத்தப்பட்ட செல்லாகாது. ஆகையால் 20-வது பிரிவின்கீழ் சட்டத்தை அமுலுக்கு கொண்டுவர நியாயமுண்டென்பதாக மிக்க விரிவாய் நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறதென்று தெளிவாய் ஏற்படுகிறது. அந்த காரணத்தைக் கொண்டுதான் சட்ட நிரூபணசபையாரும் ஷை பிரிவின் நிபந்தனையிலுள்ள தாத்பரியத்தை அங்கிகரிப்பதற்குமுன் சொந்த விகிதத்தில் எழுதியிருக்கவேண்டுமென்பதாய் சட்டம் செய்திருக்கிருர்கள். ஆனுல் சொந்த விகிதத்தில் எழுதி யிராமல் கையெழுத்து மாத்திரம் செய்யப்பட்டிருந்தால் சட்ட நிபந்தனை செலாவணி யுண்டென்பதாய்தான் ஏற்படுகிறது.

இந்த அப்பீலை அப்பீல் வாதிக்கு அனுகூலமாய் தீர்மானித்து கேசை மறுவிசாரணை செய்து பைசல் செய்யும்படிக்கு உத்தரவு செய்யப்பட்டது.

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்ரீனிவாஸய்யங்கார்:—வாதியின் தாவாவிற்கு காலாவதி தோஷம் வந்துவிட்டதா இல்லையா என்பதுதான் இந்த அப்பீலில் சுருக்கமான கேள்வி. இது சாதாரண கொதுவைப் பத்திரத்தில் ஈடாக காட்டியிருக்கும் பொருப்பை விக்கிரயம்செய்து கொதுவைக் கடன்மொத்தத்தை வசூல்செய்வதற்காக கொண்டுவரப்பட்ட தாவா. கொதுவை தஸ்தாவேஜியின்பேரில் 1905-ம்௵த்தில் ரூபாய் 400 செலுத்தியதாக எழுதப்பட்டிருப்பதனுல் தாவாவிற்கு காலாவதி தோஷம் வரவில்லையென்று தீர்மானிக்கப்பட்டாலொழிய மற்றப்படி தாவாவிற்கு தோஷம் வந்து விட்டதென்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. செலுத்தப்பட்டிருக்கும் மொத்தம் அசலுக்காக செலுத்தப்பட்ட தென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. பத்திரத்தின்பேரில் எழுதியிருப்பது கடன்தாரரால் கையெழுத்துசெய்யப்பட்டிருந்த போதிலும் அதை எழுதியது கடன்தாரருடைய கையெழுத்தல்ல. ஆனுல் அது கடன்கொடுத்தவரின் கையெழுத்து. ஆகையால் லிமிடேஷன் ஆக்ட் 20-வது பிரிவின் கீழ் அப்படி வைக்கப்பட்ட செல்லினுல் பத்திரத்திற்கு காலம் புதிதாய் தொடங்குமென்று சொல்ல நியாயம் கிடையாதென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. ஆனுல் 20-வதுபிரிவின்கீழ் அப்படி வைக்கப்பட்ட செல்லினுல் காலாவதி தோஷம் நேரிடவில்லையென்று சொல்லுவதற்கு நியாயமில்லாவிடினும் கடன்பத்திரத்தின் பேரில் எழுதியிருப்பது கடன்தாரரால் கையெழு செய்யப்பட்டிருப்பதனுல் அது கடன்தாரர் 19-வது பிரிவின்கீழ் கடனை ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்யப்பட்டிருப்பதாக பாவிக்கப்படுமென்று அப்பீல் வாதியின் தரப்பில் வாதிக்கப்பட்டது. இந்த கேசைப் போலவே சரியாய் ஒத்திருக்கும் ஜெகன்னுத ஸாஹு v. ராமாஸாஹு (1914) 17 ம. லா. டை 80-ல் கற்றுணர்ந்த ஜட்ஜுகளாகிய மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியரும், மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயரும் அப்படி எழுதியிருப்பது 19-வது பிரிவின் நிபந்தனையின்படி செய்யப்பட்டிருப்பதாயிருந்தால் அது கடன்தாரர் கடனை ஒப்புக்கொண்டு எழுதியதாகத்தான் பாவிக்கப்படுமென்று தீர்மானித்திருக்கிருர்கள். அந்த தீர்மானத்தை நான் அதிவிணயத்துடன் ஒப்புக்கொள்ளுகிறேன். இந்தக்கேசில் எழுதியிருக்கும் வார்த்தைகளினுல் கடன்தாரர் தான் அந்தக்கடனைக் கொடுக்க பந்தப்பட்டவரென்று ஒப்புக்கொண்டு எழுதியிருக்கிருரென்பதற்கு எனக்குயாதொரு சந்தேகமும் கிடையாது. கடன்தாரர் கடன் பத்திரத்தின் பேரில் பாக்கியாயிருக்கும் மொத்தத்திற்காக ரூபாய் 378 செலுத்துவதாகவும் அதே தினத்தில்இன்னொரு மொத்தம் ரூ. 22 செலுத்துவதாகவும் சொல்லி அந்த வார்த்தைகளை அந்தப்பத்திரத்தின் பேரில் இரண்டுதடவை கண்டு எழுதியிருக்கிருர். அவ்விதமாய் எழுதின தேதியில் அந்தப்பத்திரத்தில் கண்டிருக்கிறபிரகாரம் அந்த கடன் பத்திரத்திற்காக ரூபாய் 1500-பாக்கியிருந்தது. அந்த பாக்கிக்காக கடன்தாரர்சிலாவாய்செலுத்தின மொத்தமென்றும் இன்னும் அந்தபத்திரத்தின் பேரில் பாக்கியிருக்கிறதென்றும் எழுதியிருக்கும் வார்த்தைகளினுல் வாஸ்தவமாய் கடனை ஒப்புக்கொண்டு எழுதினதாக ஏற்படுகிறதென்று நான் அர்த்தம் செய்கிறேன்.

19, 20-வது பிரிவுகள் ஒன்றுக்கொன்று ஒவ்வின நிபந்தனைகளாகாதென்றும், கடனுக்காக சிலாவாய்வைக்கப்பட்ட செல்லினுல் பிரத்தியேகமாய் கடனை ஒப்புக்கொண்டு எழுதியவைகளென்பதற்கு 20-வது பிரிவுதான் ஒரு பிரத்தியேகமான நிபந்தனை யென்பதாகவும் அப்படிப்பட்ட விஷயங்களில் வியாஜ்ஜியம் 20-வது பிரிவின் கீழ் வந்தாலொழிய மற்றப்படி கடனை ஒப்புக்கொண்டு எழுதியதென்றுசொல்லுவதற்கு நியாயமில்லை யென்றும் கற்றுணர்ந்த ரெஸ்பாண்டெண்டுகளின் வக்கீல் தர்க்கித்து வாதிக்கின்றார். இந்த வாதத்தை நான் ஒப்புக்கொள்ளக் கூடாமையாயிருக்கிறது.

19-வது பிரிவின்கீழ் கடனை ஒப்புக்கொண்டு எழுதும் விஷயங்களை சட்டப்படி அமுலுக்கு கொண்டுவருவதற்கும் 20-வது பிரிவின்கீழ் கடனுக்காக சிலாசிலாவாய் வைக்கப்படும் செல்லுகளை அமுலுக்கு கொண்டு வருவதற்கும் பேதமிருக்கின்றது. இவ்விதமாய் கடனை ஒப்புக்கொண்டு எழுதியவைகளுக்கும் கடனுக்காக சிலாசிலாவாய் செலுத்தப்படும் செல்லுகளுக்கும் சட்டப்படியுள்ள பேதத்தை இங்கிலாந்தில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள் :—

Bolding-v.-Lane (1863) De G. J. Sm 122; S. C. 46 E. R. 47; Lewis-v.-Wilson(1886)11 A. C. 639; பார்க்கவும். 19, 20-வது பிரிவுகளை சட்ட நிரூபண சபையார் சட்டங்களாக நிபந்தனை செய்யுங் காலத்தில் இம்மாதிரியான பேதத்தை யனுசரித்து செய்ததாகவே தோன்றுகிறது. எது எப்படிக்கிருந்திடினும், அப்படி கடனை ஒப்புக்கொள்ளுவது 20-வது பிரிவின்கீழ் வைக்கப்பட்ட செல்லென்று சொல்லுவதற்கு நியாயமில்லை யென்பதை ரூபிக்கிறதாயிருந்த போதிலும் 19-வது பிரிவின் நிபந்தனைகளுக்கிணங்கி ஒரு கடனை ஒப்புக்கொண்டு எழுதியிருப்பது சட்டப்படி செலாவணியுள்ளதல்ல வென்று சொல்வதற்கு கூடாமையாயிருக்கிறது. இந்த இரண்டு பிரிவுகளிலும் வெவ்வேறு விஷயங்களைப்பற்றி நிபந்தனை செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளை ஒன்ருய்ச்சேர்த்து வாசித்தபோதிலும் ஒன்றுக்கொன்று ஒவ்வாமலிருப்பதாக யேற்படவில்லை.

ஆகையால் இந்த அப்பீலை வாதிக்கு அனுகூலமாய் தீர்மானித்து கேசை முதல் கோர்ட்டாருக்கு அனுப்பிவைத்து மற்ற இஷ்ஷுக்களையும் விசாரணை செய்து பைசல் செய்யும்படிதான் உத்தரவு செய்ய வேண்டியதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

I. L. R. 40. M. 698. இ. லா. ரி. 40 ம. 698.

நெ. 60

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவஐயர் / மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் }

லெட்டர்ஸ் பேடெண்ட் அப்பீல் நெ. 217 of 1914.

செஷப்பையர்...மனுதாரன்—மூன்ருவது பிரதிவாதி—அப்பீல் வாதி.

V.

சுப்பிரமணிய செட்டியார் வகையரா—
ரெஸ்பாண்டெண்டுகள்....வாதிகளும்—
1. 2, பிரதிவாதிகளும்...ரெஸ்பாண்டெண்டுகள்.

லாபாயிண்ட்:—அக்கிரமமாய் சொந்த பிரயோஜனம் செய்துக்கொண்ட சொத்தை மறுபடியும் பெறுவதற்காக கொண்டுவரப்பட்ட தாவாவிற்கு கால நிர்ணய சட்டத்தின் (Limitation Act, IX of 1908) 48, 49-வது ஆர்டிகல்களில் எந்த ஆர்ட்டிகல் சம்பந்தப்படுமென்பது? அவ்விதமான சொத்தை அடமானம் செய்திருந்தால் அந்த அடமான மொத்தத் தொகையை செலுத்தி அதை மீட்டுக்கொள்ள வேண்டியதென்பது அவசியமா? என்பது.

வியாஜ்ஜிய சங்கிரகம் :—வாதிக்குச் சொந்தமான நகையை விற்பனை செய்வதற்காக நேமிக்கப்பட்ட ஒரு ஏஜெண்ட் அந்த நகையை பிரதிவாதியினிடத்தில் 1907-ம் ஹுத்தில் அக்கிரமமாய் அடமானம் வைத்து ரூ. 175 கடன் வாங்கினர். அடமானம் வைத்துக்கொண்ட பிரதிவாதி அந்த நகை வாதிக்குச் சொந்தமானதென்று அறியாமலே நல்லெண்ணத்துடன் வாஸ்தவமென்று கருதி மேற்கண்ட தொகையை கடன் கொடுத்தார். வாதி அவருடைய நகையை அடமானம் வைத்திருப்பதாக 1909-வது ஹுத்தில் தெரிந்துக்கொண்டு தன்னுடைய நகையையாவது அல்லது அதனுடைய பொருமானத்தையாவது மறுபடியும் பெறுவதற்காக தாவா கொண்டுவந்தார். (1) அவ்விதமான தாவாவிற்கு லிமிடேஷன் ஆக்ட் 48-வது ஆர்டிகல் தான் சம்பந்தப்படுமென்றும் 49-வது ஆர்டிகல் அதற்கு சம்பந்தப்பட்டதல்லவென்றும்; அந்த நகை யாருடைய சுவாதீனத்தி லிருக்கிறதென்று வாதி தெரிந்துக்கொண்ட காலமாகிய 1909-ம் ஹுத்திலிருந்து தான் காலநிர்ணயம் தொடங்கினதென்றும் (2) பிரதிவாதி அந்த நகையை நியாயமாய் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தவரிடமிருந்து நல்லெண்ணத்துடன் அடமானம் வைத்துக் கொண்டவராகையால் வாதி அடமானத்தின்பேரில் பிரதிவாதிக்கு பாக்கியாய்ச் சேர வேண்டிய மொத்தத்தைச் செலுத்தாமல் அந்த நகையை மறுபடியும் பெறுவதற்கு ஹக்குள்ளவரல்ல வென்றும், காண்ட்ராக்ட் ஆக்ட் (Contract Act IX of 1872) 178-வது பிரிவில் சொல்லியிருக்கும் "சுவாதீனம் (Possession)" என்பதற்கு அர்த்தம் நியாயமான சுவாதீனமென்றும் (Juridical Possession) பாதுகாத்தலுக்காக வைத்திருப்பதல்ல (Not custody) வென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்காதாரமாய் ராமேஷர்சான்பே v. மாடாபிக் (1883) இ. லா. ரி. 5. அ. 341; ராம்லால் v. குலாம்ஹுஸேன் (1907) இ. லா. ரி. 29. அ. 579-லும்; நந்தலால் தாக்கெர்ஸி v. பம்பாய் பாங்க் (1910) 12. பம். லா. ரி. 316. 335-ல் மிஸ்டர் ஜஸ்டிஸ் பாட்சிலர் (Batchelor. J) கூறியிருக்கும் அபிப்பிராயங்களையும் அனுசரிக்கப்பட்டது.

சேஷப்பையர் v. சுப்பிரமணிய செட்டியார் (1915) இ. லா. ரி. 38. ம. 783-ல், மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர் செய்த தீர்மானத்தின்பேரில் லெட்டெர்ஸ் பேடெண்ட் சட்டம் 15-வது பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

கேசின் விபரம் தீர்மானத்தில் சொல்லியிருக்கின்றது.

லாயர்கள் —Mr. R. குப்புசாமி ஐயருக்காக Mr. K. S. ஜெயராம ஐயர் அப்பீல் வாதியின் வக்கீல்–Mr. T. V. கோபாலசாமி முதலியார், ரெஸ்பாண்டெண்டுகளின் வக்கீல்.

பின்வரும் ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் என்பவரால் சொல்லப்பட்டது:—

இந்த லெட்டர்ஸ் பேடெண்ட் அப்பீல் சேஷப்பையர் v. சுப்பிரமணிய செட்டியார் (1915) இ. லா. ரி. 38 ம. 783, மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயரின் தீர்மானத்தின்பேரில் கொண்டுவரப்பட்டது.

கேசின் முக்கியமான விஷயங்கள் யாதெனில்.— 1907-ம் ஹு மேமீ 19உ முதல் ரெஸ்பாண்டெண்ட் இரண்டாவது ரெஸ்பாண்டெண்டின் புருஷனும் மூன்றுவது ரெஸ்பான்டெண்டின் தகப்பனுமாகிய கொழுந்தைசாமி பத்தர் என்பவரிடத்தில் ஒரு நகையை கொடுத்தார். அவர் (கொழுந்தைசாமிபத்தர், அதை விற்பனை செய்து கொடுத்து கமிஷன் (தாகு) பெற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டார். கொழுந்தைசாமி என்பவர் அந்த நகையை 1907-ம் ஹு மேமீ 20உ வட்டிக்குக் கடன் கொடுப்பவராகிய அப்பீல்வாதியினிடம் அடமானம் வைத்து ரூ. 175 கடன் வாங்கினர். கொழுந்தைசாமி என்பவர் அதற்குப்பின் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் அடமானத்திலிருந்த நகையை மீட்டுக் கொள்ளாமலேயே இறந்துபோய்விட்டார்.

1909-ம் ஹு டிஸம்பர்மீ 15உ அப்பீல்வாதி அந்த நகையை ரெஸ்பாண்டெண்டின் ஷாப்பிற்கு எடுத்துக்கொண்டுபோய் அதை அவருக்காக விற்றுக்கொடுக்கும்படி அவரைக்கேட்டார். அப்பொழுது முதல்ரெஸ்பாண்டெண்ட் அந்த நகை அக்கிரமமாய் அடமானமாய் வைக்கப்பட்டதென்று அறிந்துகொண்டு அந்த நகையை தனக்கு வாபஸ் செய்யும்படி கேட்டார். அப்பீல்வாதி அதை வாபஸ் செய்யமாட்டேனென்று மறுதளித்து சொன்னதின் பேரில் முதல்ரெஸ்பாண்டெண்ட் 1911-ம் ஹு ஜூன்மீ 29உ அந்தநகையையாவது அதனுடைய பொருமானம் ரூ, 400–வது மறுபடியும் பெறுவதற்கு ஸ்மால்காஸ் வியாஜ்ஜியம் செய்தார். அந்த வியாஜ்ஜியத்திற்கு மறுஉத்தரமாய் அப்பீல்வாதி அந்த நகையை அவர் அடமானம் வைத்துக்கொண்டு அதன் பேரில் நல்லெண்ணத்துடன் கடனுய் கொடுத்திருக்கும் மொத்தம் ரூ. 175-ம் அதன் பேரில் ஏறியிருக்கும் வட்டியும் அவர் வாதியினிடத்திலிருந்து வசூல்செய்ய அவருக்கு ஹக்குண்டென்று வாதித்தார். அதுவுமன்றி தாவாவிற்கு காலாவதி தோஷம் வந்துவிட்டதென்றும் வாதித்தார். ஸப் ஜட்ஜ் அவர்கள் அந்த நகையையாவது அல்லது அதனுடைய பொருமானத்தையாவது வாபஸ் செய்யும்படிக்கு அப்பீல் வாதிக்கு விரோதமாய் முதல் ரெஸ்பாண்டெண்டிற்கு அனுகூலமாய் டிக்ரி செய்தார்.

அப்பீல் வாதி ஸப் ஜட்ஜின் டிக்ரியின் பேரில் சிவில் ரிவிஷன் மனு தாக்கல் செய்தார். அது தள்ளுபடியாய்விட்டது.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர் எதிரில் இரண்டு கேள்விகள் தர்க்கித்து வாதிக்கப்பட்டன:—

(1) வியாஜ்ஜியத்திற்கு காலாவதி தோஷம் வந்துவிட்டதா இல்லையா?

(2) அப்பீல் வாதியை அந்த நகையை வாபஸ் செய்யும்படி உத்தரவு செய்வதற்கு முன் அவர் (அப்பீல்வாதி) அந்த நகையின் அடமானத்தின்பேரில் கடனுய் கொடுத்திருந்த மொத்தம் ரூ. 175-ம் அவருக்கு செலுத்தப்பட வேண்டுமென்று அவர் (அப்பீல்வாதி) கேட்பதற்கு அவருக்கு ஹக்குண்டா இல்லையா?

ஸப் ஜட்ஜ் அவர்கள் இந்த வியாஜ்ஜியத்திற்கு லிமிடேஷன் ஆக்ட் (Limitation Act) 1-வது ஷெடூல் 48-வது ஆர்ட்டிகல் தான் சம்பந்தப்படுமென்றும் 49–வது ஆர்ட்டிகல் சம்பந்தப்படாதென்றும் அந்த நகை அப்பீல் வாதியின் ஸ்வாதீனத்திலிருந்ததென்று முதல் ரெஸ்பாண்டெண்ட் தெரிந்துக்கொண்ட காலமாகிய 1909-ம் ஹு டிஸம்பர் மீ 15 உ முதற்கொண்டு மூன்று வருஷங்களுக்குள் வியாஜ்ஜியம் செய்யப்பட்டமையால் தாவாவிற்கு காலாவதி தோஷம் நேரிடவில்லை யென்றும் தீர்மானித்திருப்பதை கற்றுணர்ந்த ஹைகோர்ட் ஜட்ஜ் அவர்கள் ஒப்புக்கொண்டு வியாஜ்ஜியத்திற்கு காலாவதி தோஷம் நேரிடவில்லை யென்று தீர்மானித்தார். கற்றுணர்ந்த ஜட்ஜ் அவர்கள் காலாவதி தோஷத்தைப்பற்றிய (Limitation) கேள்வியின் விஷயமாய் செய்த தீர்மானம் சரியானதென்றுதான் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

பிரஸ்தாப கேசில் நடந்தது 'மாற்றுதலென்ற' தெளிவாய் ஏற்படுகிறது. கொழுந்தைசாமி அந்த நகையை கமிஷனுக்கு (தாகுக்கு) விற்பனை செய்வதாய் ஒப்புக்கொண்டது சட்டத்திற்கு விரோதமானதல்ல. அந்த சொத்தை சொந்தக்காரரிடத்திலிருந்து அக்கிரமமாகவும் எடுத்துக்கொண்டு போகவில்லை. கொழுந்தைசாமி என்பவர் அந்த நகையை தன்னுடைய சொந்த சொத்தைப்போல் மாறுதலாக பாவித்து அப்பீல் வாதியினிடத்தில் அடமானமாய் வைத்தபோது (20-5-1907) தான் அவர் (கொழுந்தைசாமி) அதை அக்கிரமமாய் தன்னுடைய சொந்த பிரயோஜனத்திற்கு மாற்றிக்கொண்டார். ராமேஷர்சான்பே v. மாடாபிக் (1883) இ. லா. ரி. 5. அ. 341. லும்; ராம்லால் v. குலாம்ஹுஸேன் (1907) இ. லா. ரி. 29 அ. 579–லும் குறித்த யாதேனும் ஒரு ஜங்கம (அசையும்) சொத்தை நியாயமாய் வாங்கிக்கொண்டு போய் அதை அக்கிரமமாய் நிறுத்திக்கொண்டால் அப்பொழுது அவ்விதமான கேசுக்குத் தகுந்த ஆர்ட்டிகல் 48-தானென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நந்த்லால் தாக்கெர்ஸி-v. பம்பாய் பாங்க் (1909) 11-பம். லா. ரி. 926-ம்; நந்த்லால் தாக்கெர்ஸி v. பம்பாய் பாங்க் (1909) 12 பம். லா. ரி. 316-ம் பார்க்கவும்.

அப்பீல் வாதியை அந்த நகையை சொந்தக்காரருக்குத் திரும்ப கொடுத்து விடும்படி உத்தரவுசெய்வதற்குமுன் அந்த நகையை அவரிடத்தில் (அப்பீல் வாதியினிடத்தில்) அடமானம் வைத்து கடனுய் வாங்கியிருக்கும் தொகை அவருக்கு மறுபடியும் செலுத்தப்படவேண்டுமென்று தாவா செய்ய நியாயமுண்டா யென்பது ஒன்றுதான் இந்த கேசில் முன் தீர்மானிக்கப்பட்ட கேள்வியைவிட மிக்க கஷ்டமான கேழ்வியாயிருக்கிறது.

அப்பீல் வாதியின் வக்கீல் தன்னுடைய வாதத்திற்காதாரமாய் இந்தியன்காண்ட்ராக்ட் ஆக்ட் (Indian Contract Act) 178-வது பிரிவை எடுத்துக்கூறுகின்றார். அந்தப்பிரிவின்படி மூன்று அம்சங்கள் அவசியமாய் ருஜுவாக வேண்டியிருக்கின்றன. அவைகளாவன; (1) அடமானம் வைத்தவரிடத்திலிருந்த சுவாதீனம்; (2) அடமானம் வைத்துக்கொண்டவர் நல்லெண்ணத்துடன் வாஸ்தவமானதென்று கருதி அடமானம் வைத்துக் கொண்டாரென்பதும்; (3) அடமானம் வைத்தவர் அந்த சொத்தை நியாயமாய் சுவாதீனம் பெற்றுர் என்பதும் தான். அப்பீல் வாதி அந்த நகையின் அடமானத்தின் பேரில் ரூ. 175 நல்லெண்ணத்துடன் வாஸ்தவமென்று கருதி கடன் கொடுத்தாரென்பதாய் தெளிவாய் ருஜு செய்யப்பட்டிருக்கின்றதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அடமானம் வைத்தவர் நகையை அடமானம் வைத்தபொழுது நியாயத்திற்கு விரோதமாக அக்கிரமமாய் நடந்தாரென்பதாய் சந்தேகிக்க யாதொரு முகாந்தரமும் கிடையாது. அவர் அந்த நகையை முதல்ரெஸ்பாண்டெண்டினிடத்திற்கு கொண்டு போய் அதை விற்பனை செய்யும்படிக்கு அவரைக் கேட்ட நடவடிக்கையினுல் அவர் நல்லெண்ணத்துடன் தான் வாஸ்தவமென்றெண்ணி அந்த நகையை அடமானம் வைத்துக்கொண்டாரென்று தெளிவாய் தெரிகிறது. அடமானம் வைக்கப்பட்ட சொத்து அதன் நியாயமான சொந்தக் காரரிடத்திலிருந்து "ஒரு குற்றமாவது அல்லது மோசமாவது" செய்து அபகரிக்கப்படவில்லையாகையால் ஷை பிரிவின் இரண்டாவது விலக்கு இந்த கேசுக்கு சம்பந்தப்படாது. அடமானம் வைக்கப்பட்ட ஒரு சொத்து இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் 178-வது பிரிவின் நிபந்தனைகளின்படி செலாவணியுள்ள தென்பதற்கு அடமானம் வைத்தவர் அடமான சொத்தை நியாயமாய் அவருடைய சுவாதீனத்தில் வைத்திருந்தவரா யிருக்கவேண்டுமென்றும் அவர் அதை பந்தோபஸ்திற்காக மாத்திரம் அவருடைய ஆதீனத்தில் வைத்திருந்தவரல்ல வென்றும் ருஜுவாக வேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஒரு எஜமானன் அவரில்லாத காலத்தில் அவருடைய

சொத்துகளை தன் வேலைக்காரனிடத்தில் பந்தோபஸ்தாக காப்பாற்றும்படி ஒப்புவித்திருந்தாலும் அல்லது அவருடைய பெண்ஜாதி தன் புருஷனுடைய நகைகளை அவருக்காக (புருஷனுக்காக) பத்திரமாய் காப்பாற்றி வைக்கும்படி அவளிடத்தில் வைத்திருந்தாலும் அவ்விதமாய் ஒரு சொத்தை வைத்திருப்பது ஷை பிரிவின் கீழ் சட்டப்படி செலாவணியுள்ள அடமானமென்று சொல்லலாகாது. Greenwood v. Holquette (1873) 12. B. L. R. 42; பிட்டோமோயிடாயி v. சீத்தாராய் (1878) இ. லா. ரி. 4. கல். 497 ; ஸீகெர் v. ஹக்மாக்கெஸா (1900) இ. லா. ரி. 24. பம். 458 பார்க்கவும். "தாவாவில் சொல்லியிருப்பதைப்போல் அந்த நகையை வாங்குவதற்கு உத்தேசித்திருப்பவர்களுக்கு அதை காண்பிக்கும் பொருட்டு மாத்திரம் அந்த நகை கொழந்தைசாமியினிடத்தில் கொடுக்கப்பட்டதென்பதாக ருஜுவாயிருப்பதாகவும் அதன் கிரய மொத்தத்தை வாதியின் எதிரில் முடிவு செய்து தீர்மானித்துக் கொள்ளவேண்டியதென்பதாகவும் கற்றுணர்ந்த ஜட்ஜி அவர்கள் திருப்தி யடைந்ததாக அவருடைய தீர்மானத்தில் கண்டிருக்கிறார்."

கற்றுணர்ந்த ஜட்ஜி அவர்கள் இவ்விதமாய் கண்டிருப்பதற்கு யாதேனும் நியாயமான சாக்ஷியமிருப்பதாக நாங்கள் அபிப்பிராயப்படவில்லை யென்று அதிவினயத்துடன் சொல்லுகிறோம்.

"கொழந்தைசாமி என்பவர் அந்த நகையை காண்பித்துவிட்டு மறுபடியும் கொண்டுவருவதாகவும்; அதை வாங்குபவர் அதை கிரயத்துக்குப் பெற்றுக்கொள்ள இஷ்டப்பட்டால் அதனுடைய விலையை வாதியின் எதிரில் முடிவு செய்து கொள்வதாகவும்" அவர் சொல்லி அந்த நகையை வாங்கிக்கொண்டு போனாரென்பதாய் தாவாவின் முதல் பாராவில் சந்தேகமின்றி சொல்லியிருக்கிறது.

ஆயினும் முதல் ரெஸ்பாண்டென்டினுடைய சாக்ஷியத்தினால் இவ்விதமாய் சொல்லியிருப்பது ருஜுவாக வில்லை. அவருடைய சாட்சியத்தில் அவர் என்ன சொல்லுகிறாரென்றால்:— "கொழந்தைசாமி என்பவர் நகைகள் விற்கிறது வழக்கம். நான் தாவா நகையை விற்பனை செய்யும்படிக்கு கொடுத்தேன். அவர் அந்த நகையை யாரிடத்தில் கொடுத்துவைத்தாரென்பதைப்பற்றி அவர் சொல்லவில்லை. அவருடைய கமிஷன் (தாகு) நூற்றுக்கு 6¼" அந்த நகையை வாங்குவதற்கு உத்தேசித்திருப்பவர்களுக்கு அதை காண்பிப்பதற்காக வாங்கிக்கொண்டு போவதைப் பற்றியாவது அல்லது அதன் விலை அவருடைய எதிரில் முடிவு செய்துகொள்ள வேண்டியதென்பதைப்பற்றியாவது முதல் ரெஸ்பாண்டென்ட் அவருடைய சாக்ஷியத்தில் யாதொன்றும் சொல்லவில்லை. முதல் ரெஸ்பாண்டென்டின் கணக்கு புத்தகத்தில் 1907-ம் ௵ மேமீ 19உயின் கீழ் தெளிவாய் பின் வருமாறு எழுதிய பதிவிருக்கின்றது:—"கொழந்தைசாமி தேவர் பத்து அவருக்கு இங்கிலீஷ் ரவைகள் இழைத்ததோடு ஜதை ஒன்று ரூ. 400". இந்த சாட்சியத்தினால் கொழந்தைசாமி என்பவர் அந்த நகையை விற்பனை செய்வதற்காக ஒரு ஏஜெண்டாயிருந்தாரென்றும் அந்த நகையின் சொந்தக்காரரால் ரூ. 400 மதிப்பிடப்பட்ட அதை (அந்த நகையை) அவர் விற்பனை செய்துவிட்டு அவருடைய கமிஷனை (தாகை) பெற்றுக்கொள்ளவேண்டியதென்று வுடன்படிக்கை செய்து கொண்டதாகவும் ஏற்படுகிறதாக நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

Greenwood v. Holquette (1873) 12. பெ. லா. ரி. 42-ல் இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் (Indian Contract Act) 178-வது பிரிவில் சொல்லியிருக்கும் சுவாதீனம் "ஒரு குமாஸ்தா அல்லது ஏஜெண்டினிடத்திலுள்ள சுவாதீனம்" என்று அர்த்தமாகுமென்பதாய் தீர்மானித்திருக்கிறார்கள். Legeyt v. Harvey (1884) இ. லா. ரி. 8. பம். 501-லும் இம்மாதிரியானஅபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நந்த்லால் தாக்கெர்ஸி v. பம்பாய் பாங்க் (1910) 12. பம். லா.ரி. 316, 335-ல் Batchelor. J என்பவர் காண்ட்ராக்ட் ஆக்ட் (Contract Act) 178-வது பிரிவும் 108-வது பிரிவின் கீழுள்ள விலக்கும் அடமானம்-வைப்பவருக்கு இன்ன ஹக்குண்டென்பதாயிராமல் அதற்குள்ள யாதொரு பாத்தியதையின் விஷயமாய் சம்பந்தப்படாமல் வேறே விதமாயிருந்தால் அப்படிப்பட்ட சுவாதீனம் நியாயமான சுவாதீனமென்று சொல்லப்படுமென்பதாக—அதாவது—ஒரு ஏஜெண்டினிடத்தில் ஒப்புவித்தால் அவருக்குள்ள சுவாதீனமும் அப்படிப்பட்ட ஏஜெண்டிற்கு சாதாரணமாய் விற்பனை செய்ய அல்லது அடமானம் வைக்க அதிகாரமுண்டென்பதாகவும் கண்டு தீர்மானித்திருப்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். நாகஜோதேவே v. பாப்புசெட்டியார் (1904) 27. ம. 424, 426-ல் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய ஐயர் என்பவர் காண்ட்ராக்ட் ஆக்ட் 178-வது பிரிவுக்கும் 179-வது பிரிவுக்குமுள்ள பேதத்தைப்பற்றி எடுத்துக்காண்பித்து தீர்மானித்திருப்பதை பற்றியும் இந்த கேசில் உதாகரித்துக் கூறலாம். பிரஸ்தாப கேசில் விற்பனைக்காக அந்த நகையை ஏஜெண்டாக யாரிடத்தில் ஒப்புவிக்கப் பட்டதோ அந்த கொழந்தைசாமி யென்பவருக்கு காண்ட்ராக்ட் ஆக்ட் (Contract Act) 178-வது பிரிவில் உத்தேசிக்கப்பட்டிருக்கும் "சுவாதீனம்" உண்டென்றும் அப்பீல்வாதி நல்லெண்ணத்துடன் வாஸ்தவமென்றெண்ணி அடமானம் வைத்துக் கொண்டவராகையால் அந்த பிரிவில் சொல்லியிருக்கும் பரிகாரத்தை அவர் அடைய ஹக்குள்ளவர் தானென்றும் நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம்.

இந்த காரணங்களைக்கொண்டு அப்பீல் வாதி அந்த நகையை வாபஸ் செய்ய வேண்டியதென்று நாங்கள் உத்தரவு செய்வதற்குமுன் ரூபாய் 175-ம் தாவா தேதிவரையில் அதன் பேரில் பாக்கியிருக்கும் வட்டியும் அவரால் தாவா செய்யப்பட்டபடி அவருக்கு செலுத்தப்படவேண்டுமென்று அவர் கேட்பதற்கு அவருக்கு ஹக்குண்டென்றுதான் நாங்கள் தீர்மானிக்கின்றோம். ஆகையால் இந்த அப்பீலை அப்பீல் வாதிக்கு அனுக்கூலமாய் தீர்மானிக்கிறோம். இதில் கண்ட பிரகாரம் ஸப் ஜட்ஜ் அவர்களுடைய டிக்கிரியை மாற்றி எழுதவும் முதல் ரெஸ்பாண்டென்ட் அப்பீல் வாதிக்கு எல்லா கோர்ட்டிலும் கேரிட்ட சிலவுகளைச் செலுத்தவும் வாதி தாவா நகையை மீட்டுக்கொள்வதற்காக அப்பீல் வாதிக்கு பாக்கியாயிருக்கும் தொகையை செலுத்துவதற்கு ஸப் கோர்ட்டாரிடத்தில் இந்த கேசின் ரிக்கார்டுகள் போய் சேர்ந்த தேதிமுதல் இரண்டுமாதகாலம் வாயிதா கொடுக்கிறோம்.

I. L. R. 40. M. 678. இ. லா. ரி. 40. ம. 678.

The Indian Law Gazette.

PART II.

இந்திய சட்ட கெஜெட்.

1906-௵ ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917௵ டிசம்பர்௴ [நெ. 12.

Reports of Cases.

கேஸ்களின் ரிப்போர்ட்டுகள்.

Madras High Court
மதராஸ் ஹைகோர்ட்டு.

நெ. 61

APPELLATE CIVIL.
ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவஐயர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் }

1914-ம் ௵த்து அப்பீல் உத்தரவு 52-ன் பேரில் அப்பீல்.

பய்யனராமய்யா (மனுதாரும்-மாற்றுதலை பெற்றவனும் (Transferee) டிக்கிரி பெற்றவனும்) அப்பீல் வாதி.

v.

நிடமாத்தி கிருஷ்ணமூர்த்தியும் பின்னும் 2-பேர்களும் (எதிர்மனுதாரர்கள் 3-1-2-வது பிரதிவாதிகள்) அப்பீல் பிரதிவாதிகள்.

லா பாயிண்ட்:—1908-ம் ௵த்து 5-வது ஆக்ட்டாகிய ஸிவில் புரோஸீஜர் கோடு 21-வது ஆர்டர் 2 (3) வது ரூல்-டிக்கிரிபெற்றவனிடமிருந்து ட்ரான்ஸ்பர் பெற்றவன்—டிக்கிரியை நிறைவேற்ற மனு—ஜட்ஜிமெண்டு கடன்காரர்களில் ஒருவனுக்காக மலாரணையுடன் ட்ரான்ஸ்பர் (மாற்றுதல்)—மற்றொரு டிக்கிரிக் கடன்காரனால் ஆக்ஷேபனை—அப்படி மாற்றிக் கொடுப்பவர்களுக்கு இருக்கும் பாத்தியதைகளைக் குறித்து டிக்கிரியை நிறைவேற்றும் கோர்ட்டுகளுக்கு இருக்கும் அதிகாரம்.

1908-ம் ௵த்து 5-வது ஆக்ட்டாகிய ஸிவில் புரோஸீஜர் கோடின் 21-வது ஆர்டர் 2 (3) வது ரூலானது, ஒரு தீர்ப்புக் கடன்காரனுக்கு டிக்கிரியை நிறைவேற்றவேண்டுமென்று மனுச் செய்துகொள்ளும் டிக்கிரியை மேடோவர் பெற்றவன் மற்றொரு தீர்ப்புக் கடன்காரனுக்காக மலாரணையாக மேடோவர் பெற்றவனென்று ருஜுச்செய்யும் பாத்தியதையை எடுத்துவிட மாட்டாது. அவன் விடுகிற ருஜுவினாலேயே செலுத்தப்பட்ட பணத்துக்கு ரசீது கொடுக்கவா

வது அல்லது வரவு வைக்கப்படவாவது இல்லாமலிருந்தாலுமே சரிதான்—மேடோவர் பெற்றவன் அப்படிப்பட்ட மலராணை பெற்றவன் தானென்று வெளியானால் அவனுக்கு அனுகூலமாக 21-வது ஆர்டர் 16-வது ரூல்படி டிக்கிரியை நிறைவேற்றிக் கொடுக்கமாட்டோமென்று உத்தரவு செய்ய கோர்ட்டார் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

கேசின்சுருக்கம்:—1910-௵த்து அசல் வியாச்சிய நெ. 295-ன் ஸம்மந்தமாய் தாக்கல் செய்யப்பட்ட 1912-௵த்து நிறைவேறுதல் மனு நெ. 506-ல் எல்லோர் டிஸ்டிரிக்ட்டு முனிசீப் W. ராகவ அய்யங்கார் செய்த உத்தரவின் பேரில் 1913-௵ 23-ம் நெ. அப்பீல் செய்யப்பட்டு அதில் மசூலிபட்டணம் டெம்பொரெரி ஸபார்டி நேட் ஜட்ஜி T. S. தியாகராஜ அய்யர் செய்த டிக்கிரியின்பேரில் கொண்டு வரப்பட்ட அப்பீல்.

இந்தக் கேசின் சங்கதிகள் தீர்ப்பினால் வெளியாகும்.

லாயர்கள்:—P. ஸோமசுந்தரம் அப்பீல் வாதிகளுக்காகவும், T. பிரகாசம் அப்பீல் பிரதிவாதிகளுக்காகவும் ஆஜரானார்கள்.

ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஜஸ்டிஸ் சதாசிவ ஐயரும், ஜஸ்டிஸ் மூரும்:—முதலாவது அப்பீல் பிரதிவாதி பேரிலும் பின்னும் சிலர்பேரிலும் செய்யப்பட்ட ஒரு டிக்கிரியை மேடோவர் வாங்கின அப்பீல் வாதி ஷை டிக்கிரியை நிறைவேற்றுவதற்காகவும், தன்னை மேடோவர் வாங்கினவனென்று ஸ்தாபித்துக் கொள்ளுவதற்காகவும் ஸீவில் புரொஸீஜர் கோடு 21-வது ஆர்டர் 16-வது ரூல்படி மனுச் செய்து கொண்டிருக்கிறார். இந்த மேடோவரானது மலராணையென்றும் முன் வாதியாக யிருந்தவரிடம் 1-வது பிரதிவாதி டிக்கிரித் தொகையைச் செலுத்தியதின் மூலமாக டிக்கிரிக் கடன் தீர்ந்துபோய் விட்டதாகவும் சொல்லி 1-வது அப்பீல் பிரதிவாதியாகிய 3-வது பிரதிவாதி இந்த மனுவை ஆக்ஷேபித்தார்.

அப்பீல் வாதியானவன் மேடோவர் வாங்கியதற்காக தொகை ஒன்றும் செலுத்தவில்லையென்றும் டிக்கிரிக்கடன் தொகையைச் செலுத்திய 1-வது பிரதிவாதிக்காக இந்த அப்பீல் வாதி மலராணை மேடோவர் வாங்கியவராக யிருக்கிறபடியால் டிக்கிரியை மேடோவர்பெற்றவராக அப்பீல் வாதியை அங்கீகரிக்க முடியாதென்றும் கீழ் அப்பீல் கோர்ட்டார் பைசல் செய்திருக்கிறார்.

செலுத்தப்பட்ட தொகைக்கு ரசீதாவது அல்லது வரவு வைக்கவாவது இல்லாமலிருக்கிறபடியால் ஸீவில் புரொஸீஜர் கோடின் 21-வது ஆர்டர் 2 (3) ரூல்படி அப்பீல் வாதிக்கு இந்த டிக்கிரியில் யாதொரு சம்மந்தமுமில்லையென்று கக்ஷி சொல்ல தடையேர்ப்பட்டிருப்பதாயும் ரசீது கொடுக்கப்படாத அல்லது வரவு வைக்கப்படாததாயுள்ள செல்லைப்பற்றி 1-வது அப்பீல் பிரதிவாதி ருஜுச்செய்யக் கூடாதென்றும்—ஆகிய இந்த ஒரே விஷயந்தான் இந்த அப்பீலில் வாதிக்கப் பட்டது.

பொன்னுசாமி நாடாருக்கும் லெக்ஷ்மண செட்டியாருக்கும் நடந்த 1912-௵த்து இ. லா. ரி. 35. ம. 659-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசை எடுத்துக் காட்டப்பட்டது. (அந்தக்கேசானது சில விஷயங்களில் பிரகிருத கேசைப் போலொத்தது. அந்தக்கேசில் கற்றறிந்த ஜட்ஜிகள் அப்துர் ரஹீம், சுந்தர அய்யர் இவர்கள் 21-வது ஆர்டர் 2-வது ரூலின் கருத்தைப்பற்றி வேறுவிதமாக அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள்.)

மேல் சொல்லப்பட்ட ஏற்பாடுகளின் மூலமாக டிக்கிரிக்கடன் தீர்ந்துபோனதாகவும் அப்படித் தீர்ந்து போனதைப்பற்றி கோர்ட்டுக்குத் தெரிவிக்கப் படாமலுமிருந்தால் அது டிக்கிரியை நிறை வேற்றுவதற்கு ஒருதடையாக யிருக்கமாட்டாதென்றும், அதை மற்றொருவர் பேருக்கு மேடோவர் செய்து விட்டாலும், அதுவும் டிக்கிரிக்கடனைத் தீர்த்ததே ஆகுமென்றும் மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீம் தீர்மானித்தார். ஏனென்றால் தீர்ப்புக் கடன்காரனுக்காக மலராணைக்காரனாகிய மற்றொருவன் பேருக்கு அது பெறப்பட்டிருக்கிறது

இப்படிக்கிருக்க ஸீவில் புரொஸீஜர் கோடின் 21-வது ஆர்டர் 2-வது ரூலானது, அவன் விடுகிற ருஜுவினாலேயே டிக்கிரிக்கடன் தீர்ந்து போய்விட்டதாக ஏற்பட்டாலுமே, நிறைவேறுதல் மனு தாக்கல் செய்தவர் வாஸ்தவமான மேடோவர் பெற்றவரல்லவென்று ருஜுச்செய்ய தீர்ப்புக் கடன்காரருக்குள்ள பாத்தியதையை எடுத்துவிட மாட்டாதென்று மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தர அய்யர் அபிப்பிராயப்பட்டார்.

ஷை ஜட்ஜிகளுக்கு மிகவும் மரியாதை செலுத்துவதுடன், ஸீவில் புரொஸீஜர் கோடின் 21-வது ஆர்டர் 2-வது ரூலை இப்பேர்ப்பட்ட கேசுகளுக்கு உபயோகிப்பதின் விஷயமாய் ஜஸ்டிஸ் சுந்தரய்யருடைய அபிப்பிராயந்தான் ஸரியானதென்றும், டிக்கிரி நிறைவேறுதலுக்காக தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு எதிரிடையாகக் கக்ஷிசொல்லும் பொழுது, ரசீது கொடுக்கப்படாத அல்லது வரவு வைக்கப்படாத அல்லது பணம் செல்லானதைப் பற்றி கோர்ட்டாருடைய தகவலுக்கே கொண்டு வரப்படாத தொகைகளை வரவுவந்ததாக வைத்துக்கொள்ளுவதை இந்தப் பிரிவு தடுப்பதாகவும், அதிலும் அப்பேர்ப்பட்ட மனுவானது டிக்கிரிக்கடன் தொகைகளுக்கு சட்டப்படி பாத்தியஸ்தனாக யிருப்பவனாலே தாக்கல் செய்யப்படப்பட்ட

பொழுது, டிக்கிரியை நிறைவேற்றுவதற்கு மனுதாருக்குப்பாத்தியதை யுண்டாவென்று தீர்மானிப்பதில், டிக்கிரிகடனைத் தீர்ப்பதற்காகச் செலுத்தப்பட்ட தொகையை அப்போதைக்கு நினைக்கக்கூடாதென்றும் எங்களுக்கு தோன்றுகிறது. அதாவது மேடோவர் வாங்கினதாகச் சொல்லுகிறவன் வாங்கினதாகச் சொல்லப்படுகிற மேடோவரினால் தனக்குக் கிடைத்த பாத்தியதை இன்னதென்பதை முதல்வது ருஜுச் செய்யவேண்டும். அவன் அப்படிச் செய்த பிறகுதான் டிக்கிரிக்கடனைத் தீர்த்த சங்கதியைப்பற்றி யோசிக்கப்படும்.

மேல்கண்டபடி ஜஸ்டிஸ் சுந்தரய்யருடைய அபிப்பிராயத்துடன் கலந்துகொள்வதில், ஆக்ராபாங்குக்கும், க்ரிப்ஸ்க்கும் நடந்த 1885-௵த்து இ. லா. ரி. 8 ம. 455-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசு, மன்மோகன் கார்மோகருக்கும், துவார்க்நாத் கார்மோகருக்கும் நடந்த 1910-௵த்து 12 கல். லா. ஜ 312 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசு (ஜஸ்டிஸ் சுந்தர அய்யரால் அவருடைய தீர்ப்பில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிற கேசுகளில் 2) இவைகளில் பின்னீடு டிக்கிரியை மேடோவர் வாங்கினவன் தொகை செலுத்தி மேடோவர் வாங்கியிருந்தாலுமே, வரவு வைக்கப்படாத வரவு தொகைகளை டிக்கிரித் தொகையைச்செலுத்தினதாகவே பாவிக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிற விசாலமான அபிப்பிராயங்களோடு நாங்கள் கலந்து கொள்ளவில்லை. கண்டிப்பாய் பேசுங்கால் 1-வது அப்பீல் பிரதிவாதி, அப்பீல்வாதி டிக்கிரியை நிறைவேற்றும் பாத்தியதையைக்கெடுப்பதற்கு இந்த அப்பீல் வாதியானவன் உண்மையாக டிக்கிரியை மேடோவர் வாங்கினவனே இல்லையென்று சொல்வதே போதுமானது. இதற்கு மேல் டிக்கிரிக்கடன்கொடுத்துத் தீர்ந்துபோய்விட்டதென்று சொல்வது வீணானது என்றும் சொல்லிவிடலாம், டிக்கிரியைநிறைவேற்றுகிற கோர்ட்டார், வரவுவைக்கப்படாத தொகைகளை, செலுத்தியதாகக் கணக்கிடக்கூடாது என்பதுதான் விதி. டிக்கிரித்தொகை செலுத்தப்பட்டு, டிக்கிரி தீர்ந்து போய்விட்டபடியால் டிக்கிரி நிறைவேற்றப்படக் கூடியதில்லையென்று கக்ஷி சொல்லுகிற கேசுகளுக்கு இந்த விதி சம்பந்தப்படுமென்று தோன்றுகிறது. டிக்கிரி நிறைவேறுதல் மனுக்கொடுத்தவர் டிக்கிரி பெற்றவரா இல்லையாவென்றவிஷயமே விசாரிக்கப்படுகிறதில்லை. இந்தக் கேசில் மனுதார்தான் மேடோவர் பெற்றவரென்று சொல்லியதை 1-வது அப்பீல் பிரதிவாதியால் மறுதளிக்கப்பட்டது. தீர்ப்புக் கடன்காரர்களில் ஒருவருக்காக மனுதார் மேடோவர் வாங்கியதன் மூலமாக மலராணைதராகயிருக்கும் காரணத்தையிட்டு டிக்கிரியை நிறைவேற்றும்படி மனுச்செய்வதற்கு மனுதாருக்குப் பாத்தியதை யில்லையென்று ஸபார்டிநேட் ஜட்ஜ் பைசல் செய்தது சரியென்று நாங்கள் நினைக்கிறோம். அண்ணுபட்டு வேங்கடரத்னத்துக்கும், அண்ணுப்பட்டு லநாயடுவுக்கும் நடந்த 1915-௵த்து இந்தி. கே. 908-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில், டிக்கிரியை மேடோவர் பெற்றவரென்று சொல்லப்படுகிறவர், தீர்ப்பு கடன்காரருடைய மலராணைதாரென்று வெளியானால், 21-வது ஆர்டர் 16-வது ரூல்2-வது உடன்படிக்கையின்படி, மேடோவர் பெற்றவனுக்கு அனுகூலமாக டிக்கிரியை நிறைவேற்றமாட்டோமென்று சொல்லிவிட கோர்ட்டார் கடமைப்பட்டிருப்பதாக ஜஸ்டிஸ் சங்கரன்நாயரும், ஜஸ்டிஸ் ஸ்பென்ஸரும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இந்தத்தீர்ப்பானது மேலேகண்ட மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யர் தீர்ப்பை உறுதிப்படுத்துகிறது. சிலவுடன் அப்பீலைத் தள்ளுபடி செய்திருக்கிறது.

I. L. R. 40, M. 296. இ. லா. ரி. 40. ம. 296.

நெ. 62

APPELLATE CRIMINAL

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள்:—{ மிடர் ஜஸ்டிஸ் ஐய்லிங். / மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

1916-௵த்து கிரிமினல் அப்பீல் நெ. 21.

செல்லமணி சம்பந்தப்பட்ட கேசுவிஷயத்தில் (கைதி) அப்பீல் வாதி.

லாபாயிண்ட்:—1911-௵த்து 3-வது ஆக்ட்டாகிய குற்றஞ்செய்யும் ஜாதியார்களைக் குறித்த ஆக்ட்டு (Criminal Tribes Act) 23-வது பிரிவின் (1); (a) (b) உள்பிரிவுகள்—அந்த ஆக்ட்டு பிறப்பிக்கப்பட்டதின் பின், ஜாப்தாவில் கண்டகுற்றங்களில் எதற்காகவாகிலும் கொடுக்கப்படும் முதலாவது தண்டனை—அப்பேர்ப்பட்ட குற்றங்களுக்காக ஷை ஆக்ட்டு ஊர்ஜிதத்துக்கு வருமுன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுதல்—தண்டனை.

1911-௵த்து 3-வது ஆக்ட்டாகிய குற்றஞ்செய்யும் ஜாதியார்களைக் குறித்த ஆக்ட்டு (Criminal Tribes Act)ப்படி வரக்கூடிய ஜாதியைச் சேர்ந்தவர்களில் ஒருவனும் அந்த ஆக்ட்டு ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரப்பட்டதின்பிறகு அந்த ஆக்ட்டின் ஷெடியூலில் கண்ட குற்றத்திற்காக முதல் முதல் தண்டிக்கப்பட்டவனுமான எதிரி அந்த ஆக்ட்டு உண்டு பண்ணப் படுமுன் அப்பேர்ப்பட்ட குற்றங்களுக்காக ஒரு தபாவோ, அல்லது பலதபாக்களோ தண்டிக்கப்பட்டிருந்த போதிலும் ஷை ஆக்ட்டின் 23 (1) வது பிரிவு (a) உள்பிரிவின்படி தண்டிக்கப் படுவானே அல்லது ஷை பிரிவின் 23 (1)-வது பிரிவு (b) உள்பிரிவின்படி தண்டிக்கப்படமாட்டான்.

கேசின்சுருக்கம்:—1915-௵த்திய 52-ம் நெ. காலெண்டர் கேசு விஷயமாய் தென் ஆர்க்காடு ஜில்லா ஸெஷன்ஸ் ஜட்ஜ் S. G. ராபர்ட்ஸ் செய்த உத்தரவின் பேரில் செய்யப்பட்ட அப்பீல்.

1915-ம் ஹு ஜூன்மாதத்தில், இ. பி. கோடு 457, 394-வது பிரிவுகளின்படி தண்டிக்கப்படக்கூடிய் குற்றமாகிய ராக்காலத்தில் வீடு நுழைந்து பறிமுதல் செய்கையில் துன்பம் செய்த குற்றத்திற்காக 1915-ம் ஹுத்தில் எதிரி குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப் படப்பட்டான். இந்தக் கேசு விசாரணையில், தனக்கு 1894, 1897-ம் ஹுங்களில் இ. பி. கோடு. 457-வது பிரிவுப்படிக்கு 3 தண்டனைகள் விதிக்கப்பட்டதாகவும், 1907-ம் ஹுத்தில் இ. பி. கோடு. 380-வது பிரிவுப் படி 3 தண்டனைகள் விதிக்கப்பட்டதாகவும் ஒப்புக் கொண்டான். எதிரி எந்த ஜாதியானோ அந்த ஜாதிக்காரனும் குற்றம் செய்கிற ஜாதியார்களோடு சேர்ந்த ஜாதிதானென்று 1911-ம் ஹுத்திய 3-வது ஆக்டாகிய கிரிமினல் ட்ரைப்ஸ் ஆக்ட்டின் 3-வது பிரிவின் படி, 1911-ம் ஹுத்து கவர்ன்மெண்டார் (அறிக்கை) பிரசுரம் செய்தார்கள். ஸெஷன்ஸ் ஜட்ஜ் கிரிமினல் ட்ரைப்ஸ் ஆக்ட்டு 23 (1) உள்பிரிவின்படி எதிரிக்கு ஆயுசுபரியந்தம் தீவாந்திர தண்டனை விதித்தார். அந்த ஆக்ட்டின் 23 (1) வது பிரிவில் அடியில் கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது :—

"(I) குற்றம் செய்யக்கூடியவர்களென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிற ஜாதியைச் சேர்ந்த யாதாமொருவன் ஷை ஆக்ட்டின் ஷெடியூலில்காணப்பட்டதும், இந்தியன் பினல்கோடின் எந்தப் பிரிவின் படிக்குமுள்ளதுமான குற்றத்திற்காகவாவது தண்டிக்கப்பட்டிருந்து, இந்த ஆக்ட்டு ஊர்ஜிதத்துக்கு வந்த பிறகும் அதே குற்றங்களுக்காகவாவது அல்லது ஷை ஷெடியூலில் காணப்பட்ட வேறு எந்த குற்றத்திற்காகவாவது தண்டிக்கப்பட்டால், தீர்ப்பில் சொல்லியிருக்கும் விசேஷ முகாந்தரங்களுக்காக யிருந்தாலொழிய,

(a) 2-வது தண்டனைக்கு 7-வருஷத்துக்குக் குறையாமலும்,

(b) 3-வது தண்டனைக்கு ஆயுசுபரியந்தம் தீவாந்தர தண்டனையும் விதிக்கப்படவேண்டும்."

லாயர்கள் :—எதிரி பக்கம் வக்கீல் யாரும் ஆஜராகவில்லை. கவர்ன்மெண்டார்பக்கம் ஆக்டிங் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் E. R. ஆஸ்பர்ன் ஆஜரானர்.

ஹைகோர்ட்டு அடியில் கண்ட தீர்ப்பை ஜஸ்டிஸ் எய்லிங் வெளியிட்டார்.

ஜூரிகளினுல் தண்டிக்கப் பட்டிருக்கிறது. ஜட்ஜி ஜூரிகளுக்கு சங்கதிகளை ஸரியாகவே தெரிவித்திருக்கிறார்.

தீர்ப்பின் விஷயமாகவோவென்றால் இந்தக் குற்றமானது 1911-ம்ஹுத்திய கிரிமினல் ட்ரைப்ஸ் ஆக்டு 23 (1) (a) ப்படிக்கு ஆகுமேயல்லது 23 (1) (b)ப் படி ஆகமாட்டாது. எதிரி கடாசியாகதண்டனை அடைந்தது 1907-ம் ஹுத்தில். ஆகையால் இப்போதய தண்டனையானது இநத ஆக்ட்டு ஊர்ஜிதத்துக்கு வந்த பிறகும், எதிரியின் ஜாதியும் குற்றம் செய்யக்கூடிய ஜாதியைச் சேர்ந்ததுதானென்று கவர்ன்மெண்டாருல்(அறிக்கை) பிரசுரம் செய்யப்பட்ட பின்பும், முதலாவது தண்டனையே ஆகிறது. 23(1)வது பிரிவுக்கு அர்த்தம் சொல்வது அவ்வளவு எளிதானதல்ல. "2-வது தண்டனை" என்ற தொடர்மொழியை அதே வாக்கியத்தில் "இனிமேல் தண்டிக்கப்பட்டால்" என்ற பதங்களோடு சேர்த்துப்படிக்கவேண்டும். ஸெஷன்ஸ் ஜட்ஜ் செய்திருக்கிற பிரகாரம் அதற்குமுன்னுல் உபயோகிக்கப்பட்டிருக்கிற "தண்டிக்கப்பட்டு" என்ற பதங்களோடு சேர்த்துப் படிக்கக்கூடாது. ஷை பிரிவில் 2-வது தரம் தண்டனைப்பட்டால் 7-ஹுத்துக்குக் குறையாமல் தண்டிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. "2-வது தண்டனை" என்ற வார்த்தைகளை இந்த ஆக்ட்டு ஊர்ஜிதத்துக்கு வருமுன் இதே ஷெடியூலில் கண்ட குற்றங்களுக்காக தண்டனை அடைந்திருந்தாலுமே, இந்த ஆக்ட்டு ஊர்ஜிதத்துக்கு வந்தபிறகு, அவைகளை 1-வது தண்டனை என்றும், (b) உள்பிரிவில் கண்ட 3-வது தண்டனையை 2-வது தண்டனை யென்றும் வைத்துக்கொள்ளவேண்டும். ஷை வார்த்தைகளுக்கு ஸெஷன்ஸ் ஜட்ஜ் அர்த்தம் செய்திருக்கிறபடி பார்த்தால், இந்த ஆக்ட்டு ஊர்ஜிதத்துக்கு வருமுன் 2 தபா தண்டனை அடைந்த ஒருவனுக்கு இந்த ஆக்ட்டு ஊர்ஜிதத்துக்கு வந்தபிறகு செய்த முதல் குற்றத்திற்கே ஆயுசு பரியந்தம் தீவாந்தர தண்டனை விதிக்க வேண்டியதாக நேரிடும். சட்டத்தில் இப்பேர்ப்பட்ட குரூரமான நிபந்தனைகளை யேர்ப்படுத்தி யிருப்பார்களென்று நாம் அபிப்பிராயப்படவில்லை. "2-வது தண்டனையின் பேரில்" என்பதற்கு கவர்ன்மெண்டாருடைய அறிக்கை (Notification)க்குப் பிறகு 2-வது தண்டனை யென்ற மூன்றுவது விதமாகவும் அர்த்தம் செய்யக்கூடியதாகவும் இருக்கிறது. இப்படிக்கெல்லாம் அர்த்தம் செய்யக்கூடாதென்று அபிப்பிராயப் படுகிறோம். அறிக்கைக்கு (Notification) ப்பிறகு செய்யப்பட்ட முதல் தண்டனையைக்குறிப்பிடக்கூடாதென்று சட்டம் கருதியிருக்கமாட்டாது. அப்பேர்ப்பட்ட தண்டனைக்கு விசேஷமான சிக்ஷை யேர்ப்படுத்தக் கூடாதென்று அபிப்பிராயப்பட்டிருக்கும் விஷயத்தில் "அப்படி தண்டிக்கும் பொழுது பினல்கோடில் யேர்ப்படுத்தியிருக்கும் தண்டனை விதிக்கலாமென்றும் மறுபடி தண்டிக்கும்போது" என்ற விஷயங்களானவார்த்தைகளை உபயோகிக்கப்பட்டிருக்கும். இந்த ஆக்ட்டினுல் சம்பவிக்கக்கூடிய கெடுதல்களிலிருந்து இப்பேர்பட்ட புதியதண்டனைகளை விலக்குவது சட்டத்தின்கருத்தாக யிருப்பது மிகவும் அஸம்பாவிதமான காரியம்.

நாங்கள் அபிப்பிராயப்படுகிற பிரகாரம் தீர்ப்புச் செய்யும் விஷயத்தில் (b) உள்பிரிவில் சொல்லியிருக்கும் நிபந்தனைகளினுல் கட்டுப்பட்டுப் போகவில்லை. (a) உள்பிரிவின் நிபந்தனைகளின் பிரகாரம் நடத்தி யிருக்கவேண்டும். கேசின் ஸாராம்சங்களை உத்தேசித்து தண்டனையை உறுதி செய்து 10 வருஷ கடின காவல் தண்டனை விதிப்பதே போதுமானதென்று அவ்விதம் தண்டனையை மாற்றி யிருக்கிறோம்.

I. L. R. 40. M. 923. இ. லா. ரி. 40. ம. 923.

நெ. 63

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீம் / மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்ரீனிவாசய்யங்கார் }

1915-ம் ஹுத்து அப்பீல் நெ. 148.

J. சுப்பராவ் (பிரதிவாதி) அப்பீல் வாதி.

J. ராமராவ் (வாதி) அப்பீல் பிரதிவாதி.

லாபாயிண்ட:—1908-ம் ஹுத்திய 9-வது ஆக்டாகிய காலநிர்ணய ஆக்ட்டு 62, 120-வது விஷயங்கள் (articles) ஒரு ஜாகிரின் ஒருபாகஸ்தன் ஷை ஜாகிரை மேல்பார்த்து வந்த மற்றொரு பாகஸ்தன் பேரில் செய்யும் வழக்கு—கணக்கு ஒப்புவிக்கும்படிக்கும் வரும்படியை வசூல் செய்யும் பொருட்டும் வியாச்சியம் வியாச்சியத்தின் தன்மை—ஒரு வருஷ வரும்படிக்காக டிஸ்டிரிக்ட்டு முனிசிப் கோர்ட்டில் செய்யும் வியாச்சியம் சரியான கோர்ட்டில் பிராதை தாக்கல் செய்து கொள்ளும்படி பிராதை வாபசு செய்வது—பிராதை மறுபடி தாக்கல் செய்யாமலிருந்து விடுவது—சென்ற வருஷங்களுடைய வரும்படிக்காக பின்னிடு ஜில்லாக் கோட்டில் தாக்கல் செய்யப்படும்வியாச்சியம்—1908-ம்ஹுத்து 5-வது ஆக்ட்டாகிய ஸிவில் புரோஸீஜர் கோடு ஆர்டர் II ரூல் 2ப்படி வியாச்சியம் காலாவதி ஆகி விட்டதா?

வாதியும் பிரதிவாதியும் ஒரு ஜமீந்தாரியினுடைய பங்காளிகள். அதில் பிரதிவாதியை ஷை ஜமீனுக்கு மானேஜராக கவர்ன்மெண்டில் நியமித்தார்கள். 1912-ம் ஹுத்துக்கு சிலவு போக தன்னுடைய் பாகத்துக்குள்ள வரும்படி தனக்குக் கிடைக்க வேணுமென்று வாதி பிரதிவாதி பேரில் டிஸ்டிரிக்ட்டு முனிசீப் கோர்ட்டில் வியாச்சியம் தாக்கல் செய்தார்.

ஆனுல் பிராதின் தொகையானது முனிசிப் கோர்ட்டினுடைய அதிகார வரம்புக்கு மேல் பட்டிருந்த படியால், அதை ஸரியான கோர்ட்டில் தாக்கல் செய்யும் படியாக வாபசு செய்யப்பட்டது. வாதி ஷை பிராதை எந்தக் கோர்ட்டிலும் மறுபடி தாக்கல் செய்யவில்லை. ஆனுல் அதற்குப் பிறகு 1913-ம் ஹுத்தில் இந்த வியாச்சியத்தை பிரதிவாதி தனக்குக் கணக்குக்கொடுக்கவேணுமென்றும் 1905-ம் ஹு முதல் 1907-ம் ஹு வரையிலுள்ள வருஷங்களுக்கு தன் பாகத்துக்குள்ள தொகையை வசூல் செய்து கொடுக்கும்படியாயும் வாதி செய்தார். பிரதிவாதி இந்த வியாச்சியமானது ஸிவில் புரொஸீஜர் கோடு ஆர்டர் II ரூல் 2-ப்படி காலாவதியாய்ப் போய்விட்டதாக கக்ஷி சொன்னர்.

கணக்குக் கொடுப்பதற்காகச் செய்யப்பட்ட வியாச்சியமென்றும், அது 120-வது விஷயம் (Article) படி வருமே யல்லது லிமிட்டேஷன் ஆக்ட்டு 62-வது பிரிவுப்படி ஆகமாட்டா தென்றும், இந்த வியாச்சியமானது காலாவதியால் பீடிக்கப்படவில்லை யென்றும் தீர்மானிக்கப்பட்டது.

முஹம்மது ஹபிபுல்லா சாயப்புவுக்கும் ஸப்டர் ஹுஸேன் கானுக்கும் நடந்து 1885-ம் ஹுத்து இ. லா. ரி. 7. அல. 25-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தை அனுஸரிக்கப்பட்டது.

இந்த வியாச்சியமானது ஸிவில் புரோஸீஜர் கோடு ஆர்டர் II ரூல் 2-ன்படிக்கும் தடுக்கப்படவில்லை யென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கேசின் சுருக்கம்:—1913-ம் ஹுத்து அஸல் வியாச்சிய நெ. 45-ல் பெல்லாரி டிஸ்டிரிக்கட்டு ஜட்ஜி B. C. ஸ்மித் துரை செய்த பிரதம டிக்கிரி (Preliminary Decree)யின் பேரில் செய்யப்பட்ட அப்பீல்.

ஆதியில், 1809-ம் ஹுத்தில் தங்களுடைய முன்னேர்களுக்கு விடப்பட்ட ஜாகிரில் வாதியும் பிரதிவாதியும் கூட்டுப்பங்காளிகள். 1886-ம் ஹுத்தில் கவர்மெண்டில் பிரதிவாதியை ஷை ஜாகிருக்கு மானேஜராக நியமித்தார்கள். ஒவ்வொரு வருஷத்திலும் வாதியின் பங்குக்கு இவ்வளவு வருமானம் கிடைத்திருக்கிறது என்பதைப்பற்றி வாதிக்கு பிரதிவாதி கணக்குக்கொடுக்கவேண்டியவர் 1912-ம்ஹுத்துக்கு தன் பாகத்துக்கு கிடைக்கவேண்டிய தொகைக்காக பெனுகொண்டா டிஸ்டிரிக்கட்டு முனிசிபுக் கோர்ட்டில் 1913-ம் ஹுத்திய அஸல் வியாச்சிய நெ. 1175 யை, முன் வாதி செய்திருந்தார். பிராதில் கண்ட தொகையானது டிஸ்டிரிக் கட்டு முனிசிப்பு கோர்ட்டின் அதிகாரவரம்புக்கு மேல் பட்டதாகயிருந்தபடியால் ஷை பிராதை சரியானகோர்ட்டில் தாக்கல்செய்துக் கொள்ளும்படியாக வாப்ஸ் செய்யப்பட்டது. அப்பால் அந்தப் பிராதை எந்தக் கோர்ட்டிலும் மறுபடிதாக்கல்செய்யவில்லை. அதற்கப்பால்,வாதி, மேற்சொன்னபடி தனக்கு 1905-ம் ஹு முதல் 1907 ஹுவரை சேரவேண்டிய பாக்கிக்காக1913-ம்ஹுத்தில் சேலம் டிஸ்டிரிக்கட்டுக் கோர்ட்டில் இந்த வியாச்சியத்தை தாக்கல் செய்தார். இந்த வியாச்சியம காலாவதி தோஷத்தால் பீடிக்கப்பட்டுப் போய்விட்டதாக பிரதிவாதி கக்ஷிசொன்னர். டிஸ்டிரிக்கட்டு முனிசீபுக் கோர்ட்டில் முன் வியாச்சியம் செய்து விட்டபடியால் 1908-ம் ஹுத்து 5-வது ஆக்டாகிய ஸிவில் புரோஸீஜர் கோடு ஆர்டர் II ரூல் 2-ன் படிக்கும் தடைப்பட்

டிருப்பதாகவும் கக்ஷிசொன்னர். டிஸ்டிரிக்கட்டு ஜட்ஜ் மேற்கண்ட 2 கக்ஷிகளேயும் நிராகரித்துவிட்டு வாதிக்கு அனுகூலமாக டிக்கிரி செய்துவிட்டார். அதன் பேரில் பிரதிவாதி ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்தார்.

லாயர்கள் :—C. ராமச்சந்திராவும், E. V. R. சர்மாவும் அப்பீல் வாதிபக்கமும், கனம் மிஸ்டர் L. A. கோவிந்த ராகவய்யரும் L. வெங்கட்டராகவய்யரும் அப்பீல் பிரதிவாதி பக்கமும் ஆஜரானர்கள்.

ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பு.

மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீம் :—இந்த அப்பீலில் நம்முடைய முன்பாக இரெண்டு விஷயங்கள் வாதிக்கப்பட்டன. முதலாவது விஷயம் காலாவதியைப் பற்றினது. பைசல் செய்யவேண்டிய விஷயமானது இந்த வியாச்சியத்துக்கு காலநிர்ணய ஆக்ட்டு 62-வது விஷயம் (Article) சம்பந்தப்படுமா வென்பது தான். அது சம்பந்தப்படாத விஷயத்தில், ஷை ஆக்டின் 120-வது விஷயத்தைப் பார்க்க வேண்டியதாக யிருக்கிறது. வாதியின் உபயோகத்துக்காக வசூல் செய்யப்பட்டுவைத்திருக்கப்பட்டபணத்தை வசூல்செய்வதற்கு 62-வது விஷயத்தினுல் 3-வருஷக்காலவதி யேர்ப்படுகிறது. எப்பொழுது பணம் வசூல் செய்யப்பட்டதோ அதுதான் கால வரை துடங்கும் காலம். அது தான் யல்லாருக்கும் தெரிந்த மாதிரியான காலவரையறை. அது, பிரதிவாதியால் ஒரு குறிப்பிட்ட துகை வசூல் செய்யப்பட்டு, சட்டப்படி, அவன் அதை வாதியின் உபயோகத்திற்காக வைத்திருக்க வேண்டியதிருந்தால் பொருந்தும். பிரகிருத கேசு ஒரு ஜாகீருக்கு மானேஜராக கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கிற பிரதிவாதி பேரில் கொண்டு வரப்பட்டிருக்கிறதாக யிருக்கிறது. ஒரு பங்காளியாக யிருக்கிற வாதிக்காக பிரதிவாதி மானேஜர் ஸ்தானத்தில் வசூல் செய்த துகைக்குக் கணக்குக் கொடுக்கும்படி பிரதிவாதியை கேழ்க்கப்படுகிறது. அது ஸந்தேகமில்லாமலேயே கணக்குக் கொடுக்கும்படியாகச் செய்யப்பட்ட வியாச்சியமாக யிருக்கிறது. பிரதிவாதிக்குத் துகையை வசூல் செய்ப அதிகாரமுண்டு. அப்படி வசூல் செய்யப்பட்ட துகையில் நியாயமான சிலவுகள் போக பாக்கித்துகையில் வாதிக்குள்ள பங்கை வாதிக்கு பிரதிவாதி செலுத்தக் கடமைப்பட்டிருககிறார். 62-வது விஷயத்தில் காலாவதி ஆரம்பமாகிறதாக சொல்லப்படுகிற காலம் இன்னதென்று தீர்மானிப்பதற்கு வாதிக்குப் பிரதிவாதியால் செலுத்தப்படவேண்டிய துகை, இன்ன காலத்தில் பிரதிவாதியால் வசூல் செய்யப்பட்டதென்று சொல்லமுடியாதென்பது ஒருவிஷயம். பிரகு தான் வசூல் செய்த துகைகளைச் செலுத்தக் கடமைப்பட்டிருப்பது மல்லாமல், வசூல் செல்யாமல் தவறிப் போன துகையையும் சேலுத்த பிரதிவாதி கடமைப் பட்டிருப்பதாக அப்பீல் பிரதிவாதியினுடைய கற்றறிந்த வக்கீலினுல் வாதிக்கப்படுகிறது. அந்த சங்கதியானது 62-வது விஷயத்திற்குள் அடங்கியதல்ல. நமக்கு அநேகம் ஆதாரங்கள் காண்பிவிக்கப்படுகின்றன. முகம்மது ஹபிபுல்லாவுகானுக்கும், ஸப்டர்ஹுஸேன் கானுக்கும் நடந்து 1885-ம் ஹுத்து இ. லா. ரி. 7, அல. 25 ல், பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசைத் தவிர மற்றக் கேசுகள் இந்தக் கேசுக்குப் பொருத்தமானவைகளல்ல. உதாரணமாக அடியில்கண்ட கேசுகளைப்பற்றி சொல்லுகிறேன். துலாப்வாஜிக்கும், பான்சிதர் பாய்க்கும் நடந்து 1885-ம் ஹுத்து இ. லா. ரி. 9, பம். 11-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசிலும், ச்சாமன் லாலுக்கும், பாபுபாய்க்கும், நடந்து 1898-ம் ஹுத்து இ. லா. ரி. 22 பம் 669-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிற தீர்மானத்திலும், 62-வது விஷபத்தைப்பற்றிய அனுவாதமே கிடையாது. அந்தக் கேசுகளுக்கு அந்த விஷயம் பொருந்துகிறதாகத் தெரியவரவில்லை. வைத்தியநாதய்யருக்கும், அய்யாஸாமி அய்யருக்கும் நடந்து 1909-ம்ஹுத்து இ. லா. ரி. 32 ம. 191ல், பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேசு. மகம்மது வாஹைப்புக்கும், மகம்மது ஹமீருக்கும் நடந்து 1905-ம் ஹுத்து இ. லா. ரி. 32-கல். 527-ல், பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேசு, இவைகள் பாம்பேகேசுகளேயே போலெத்தகேசுகளாகயிருக்கின்றன. ஆனல் அந்தக்கேசுகள்என்று கணக்குக் கொடுக்கும்படி செய்யப்பட்ட வியாச்சிய மில்லை. வைத்திய நாதய்யருக்கும், அய்யாசாமி அய்யருக்கும் நடந்த கேசானது ஒரு விபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வரால் கொண்டு வரப்பட்ட வியாச்சியம். இதில் ஷை குடும்பத்தைச்சேர்ந்த ஒருவர் வசூல் செய்த துகையில் தனக்குக் கிடைக்கவேண்டிய பாகத் துகைக்காக அந்தக்கேசின் வாதி பிராது செய்தார். அந்தக்கேசில் கணக்குக் கொடுக்கவேண்டிய சங்கதியே கிடையாது. பிரதிவாதி கைவசமிருந்த பணமானது வாதிக்குச் சேரவேண்டியதாக யிருந்தது. பிரதிவாதியிடமிருந்த பணத்தை இந்தக்கேசில் அவன் பெற்றுக் கொள்வதற்குப் பாத்தியதையில்லை. பிரதிவாதீ ஷை துகையைப் பெற்றுக்கொள்ளுங் காலத்தில் ஷை துகையானது சட்டப்படி வாதியுடையதாகவேயே யிருந்தது. ஆகையால் வாதியினுடைய உபயோகத்துக் காகவேயே பிரதிவாதி ஷை துகையைப் பெறறுக்கொண்டதாகத் தீர்மானிக்கப் பட்டது. சேரு சிதம்பர மாணுவுக்கும், சேருபாலய்யாவுக்கும் நடந்து 1191-ம் ஹுத்து 2 ம. வீ. நே. 467-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேசும் மேல்கண்ட கேசுகளைப்போலொற்றதுதான். முகம்மது ஹபி புல்லாகானுக்கும், ஸபடர் ஹுஸ்ஸேன் கானுக்கும் நடந்து 1885-ம் ஹுத்து இ. லா. ரி. 7. அல 25-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசுக்கு 120-வது விஷயம் (Article) உபயோகிக்கப் பட்டது. அந்தக் கேசில் பிரதிவாதியோடு கூட்டு சுதந்திரக் காரனுக யிருந்தவ்ன், பிரதிவாதி வசூல் செய்த துகைக்கும் அதில் சிலவான துகைக்கும் கணக்கு வாங்கிக்கொண்டு அதில் தனக்கு வரவேண்டிய பாகத்துக்கு மட்டில் பிரதிவாதி பேரில் வியாச்சியம் செய்தான். அந்தக் கேசு அநேகமாய் இந்தக்கேசைப் போலொத்தது தான். அந்தக் கேசுக்கு 62-வது விஷயம் சம்பந்தப்படாதென்றும் 120-வது விஷயம் தான் சம்பந்தப்படுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. என்னுடைய அபிப்பிராயத்தில் பிரகிருத கேசுக்கு 120-வது விஷயம் சம்பந்தப்படுமேயல்லது 62-வது விஷயம் சம்பந்தப்பட மாட்டாதென்பது தான்.

பழைய ஸிவில் புரொஸீஜர் கோடின் 43-வது பிரிவுக்குச் சரியானதாகிய புது ஸிவில் புரொஸீஜர் கோடின் ஆர்டர் II-ரூல் 2-ன் பிரகாரம் வாதியின் வியாச்சியமானது காலாவதி தோஷத்தால் பீடிக்கப்பட்டுப் போய்விட்டதாகவும் அப்பீல் வாதிபக்கம் கற்றறிந்த வக்கீல் வாதிக்கிறார். நடந்த சங்கதி யென்னவென்றால் 1912-ம் ஹுத்தில் தனக்குச் சேரவேண்டிய துகைக்காக வாதி டிஸ்டிரிக்ட்டு முனிசிபு கோர்ட்டில் வியாச்சியம் செய்தார். ஷை டிஸ்டிரிக்ட்டு முனிசிபு கோர்ட்டின் அதிகார வரம்புக்கு மேற்பட்டு பிராதுத் துகை யிருந்தபடியால் ஷை பிராதை சரியான கோர்ட்டில் தாக்கல் செய்துகொள்ளும்படியாக வாய்சு கொடுக்கப்பட்டது. ஆனல் வாதி அதை அதற்குப் பிறகு திரும்ப தாக்கல் செய்யவேயில்லை. 1912-ம்ஹுத்துத் துகைக்காக வாதி பிராது தாக்கல் செய்துவிட்டபடியால், அதற்கு ஆர்டர் II ரூல் 2-சம்பந்தப்படுமென்றும், ஆகையால் இந்த வியாச்சியமானது காலாவதியாகப் போய்விட்டதாக தீர்மானிக்கவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. பிராது போட்டு அதை நிறுத்திக் கொண்டு விட்டபடியால் அந்தப் பிராது தாக்கல் செய்யாததற்குச் சமானமாகவேயே எண்ணப்படவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. வாதி பிரா்தை தாக்கல் செய்து அதை நிறுத்திக் கொண்டு விட்டதினுல், இந்தப் பிராதுக்கு அது எப்படி தடையாகுமென்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. அந்தக் கேசின் பேரில் யாதொரு பைசலும் செய்யப்படவில்லை. முன் தாக்கல் செய்த பிராது இப்போது ஊர்ஜிதத்திலிருக்கவில்லை.

இந்த அப்பீலில் இந்த விஷயங்களைத்தான் தீர்மானிக்க வேண்டியதாக யிருந்தது. என் அபிப்பிராயத்தில் கற்றறிந்த டிஸ்டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜியினுடைய அபிப்பிராயமானது எல்லா விஷபத்திலும் சரியானதாகவேயே யிருக்கிறது. இந்த அப்பீலை சிலவுடன் தள்ளுபடி செய்திருக்கிறது.

ஜஸ்டிஸ் ஸ்ரீனிவாஸய்யங்கார்:—வாதிக்கும் பிரதிவாதிக்கு யிருக்கப்பட்ட சம்பந்தத்தைப்பற்றி தாவாயில்லை. அவர்கள் இருவரும் ஒருஜாகீருக்குக் கூட்டுப் பங்காளிகளாக யிருந்து அதன் லாபங்களுக்கும் பாகஸ்தர்களாக யிருக்கிறார்கள். ஆனல் பிரதிவாதி ஷை ஜாகீருக்கு மானேஜர் ஸ்தானத்தில் அவர் ஷை ஜாகீரில் வசூலாகவேண்டிய வரி, தீர்வை முதலியதுகளை வசூல் செய்யவும் வரவு சிலவுகளுக்குக் கணக்குக் கொடுக்கவும் கடமைப் பட்டவராக யிருக்கிறார். வசூலிக்கப்படுகிற ஒவ்வொரு துகையிலும் வாதி பாகம் கேழ்க்கவாவது வசூல் காலத்தில் பிரதிவாதியை ஒரு குறிப்பிட்ட துகையை தனக்குக் கொடுத்து விடும்படி கேழ்க்கவாவது வாதிக்குப் பாத்தியதை கிடையாது. அவருக்குச் செய்ய பாத்திய யிருப்பதெல்லாம் கூடி பண வசூலின் பேரில் கணக்குக் கேழ்ப்பது தான். அந்தக் கணக்கு வருஷத்துக்கு ஒரு தரம் கொடுக்க வேண்டியதாக யிருந்தாலுமே, கேழ்க்கும்போது கொடுக்கவேண்டியதிருந்தாலுமே அதனுல் யாதொரு வித்தியாசமுமில்லை. கணக்குக் கொடுக்கப்பட்டதின்பேரில் வாதிக்குப் பிரதிவாதி யாதொரு துகையும் கொடுக்கவேண்டியதில்லையென்றுஏற்பட்டாலும் ஏற்படும். அல்லது பணம்கொடுக்கும்படி யேர்ப்பட்டாலும் யேர்ப்படும். கணக்கைப் பெற்றுக் கொண்ட உடனேயே வாதிக்குப் பிரதிவாதியிடமிருந்து ஒரு குறிப்பிட்ட துகை கிடைக்க வேண்டுமென்றே யேர்ப்படவில்லை. ஆகையால் இந்தப் பிராதுக்குக் காலாவதியைக் குறிப்பிடக் கூடிய விஷயம் (Article) 62-வது விஷயமல்ல. 62-வது விஷயத்தைத் தவிர வேறு எதுவும் சம்பந்தப்படுமென்று தெரிவிக்கப் படவுமில்லை. ஆகையால் இந்தக் கேசுக்கு 120-வது விஷயமே சம்பந்தப்பட்டதாக யிருக்கிறது. மகம்மது ஹபிபுல்லாகானுக்கும், ஸப்டர்ஹுஸ்ஸேன் கானுக்கும் நடந்து 1885-ம் வருஷத்து இ. லா. ரி. 7 அல 25-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசு இந்தக் கேசுக்கு முற்றிலும் ஒத்து இருக்கிறது. ஆகையால் அந்த கேசை நான் முற்றிலும் அனுஸரிக்கிறேன். காண்பிவிக்கப் பட்ட மற்றக்கேசுகள் என்னுடைய கற்றறிந்த ஸகோதரரால் சொல்லப்பட்டபடி இந்தக் கேசுக்கு சம்பந்தமில்லாத கேசுகளாக யிருக்கின்றன இந்தக் கேசுகளிளெல்லாம், பணம் வசூல் செய்யப்பட்ட நிமிஷமுதலேயேவாதி ஒரு குறிப்பிட்ட பாகத் துகைக்குப்பாத்தியஸ்தனுகயிருக்கிறன். மற்ற விஷயங்களில் எனக்கு ஜாஸ்தியாய்ச் சொல்லிக்கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை.

I. L R. 40. M. 291; இ. லா ரி. 40. ம. 291.

நெ. 64

APPELLATE CRIMINAL.

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸதாசிவஐயர் / மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர் }

1916-ம் ஹுத்து கிரிமினல் சில்லரை மனு நெ. 392.

மஹம்மது கௌஸ் ரஹிமான் சாகிபு (மெஸ்ஸர்ஸ் T. A ரஹிமான் சாஹிப் அண்ட் ஸன்ஸ் வகையரா) (எதிரிகள்) மனுதார்கள்.

v.

நாத்து வெல்லாப்ஜி—(வாதி) எதிர் மனுதார்

லாபாயிண்ட்:—1898-ம் ஹுத்து 5-வது ஆக்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடு 185-வது பிரிவு—கேசை மாற்றுதல்—ஹைக்கோர்ட்டாருடைய அதிகார எல்லைக்கு வெளியியிருக்கும் கோர்ட்டில் நடந்து கொண்டிருக்கும் கேசு—தங்களுடைய அதிகார எல்லைக் குட்பட்ட கோர்ட்டுக்கு ஷை கேசை மாற்றிக்கொள்வதற்காவது அல்லது எந்தக் கோர்ட்டில் ஷை கேசு விசாரிக்கப்படவேண்டு மென்று பைசல் செய்வதிலாவது ஹைக்கோர்ட்டாருக்கு இருக்கும் அதிகாரம்.

1898-ம் ௵த்திய 5-வது ஆக்ட்டாகிய கிரிமினல் புரொஸிஜர் கோடின் 185-வது பிரிவில் மற்றொரு ஹைக்கோர்ட்டாருடைய அதிகார வரம்புக் குட்பட்ட கோர்ட்டில் நடந்துகொண்டிருக்கும் ஒரு கேஸை தங்களுடைய அதிகார எல்லைக்குட்பட்ட ஒருகோர்ட்டுக்கு மாற்றும்படி ஹைக்கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இன்ன கோர்ட்டில் ஷை கேஸ்விசாரிக்கப்பட வேண்டுமென்று பைசல்செய்யவும்அதிகாரம் கொடுக்கப்படவில்லை.

கேசின் சுருக்கம்:—பம்பாய் பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டில் நடந்து கொண்டிருக்கும் 1916-ம் ௵த்திய 571-ம் நெ. கேஸை சென்னப்பட்டணம் பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டுக்கு மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்தித்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மனுதார் சென்னப் பட்டணத்திலும், எதிர் மனுதார் பம்பாயிலும், சென்னப்பட்டணத்தில் ஒரு காரியஸ்தர் மூலமாகவும் வியாபாரம் நடத்தி வருகிறார்கள். கள்ள வியாபார அடையாளங்களை உபயோகித்தும் அவைகளைப்போட்டு சாமான்களை கிரயம் செய்ததாகவும் மனுதார் பேரில் குற்றஞ்சாட்டி இ. பி. கோடு. 482 486-வது பிரிவுகளின்படி எதிர்மனுதார் பம்பாய் பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக்கோர்ட்டில் பிராது கொடுத்தார். மேல்கண்ட பிராதுக்கு ஜவாப் சொல்லும்பொருட்டும் சில தஸ்தாவேஜுகளை ஆஜர் செய்யும் பொருட்டும் பம்பாய் பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டில் ஆஜராகும் படி தனக்கு 2 சம்மன்கள் வந்திருப்பதாகச் சொல்லி ஷை கேஸை பம்பாய் பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டிலிருந்து சென்னப்பட்டணம் பிரதான மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்று சென்னப்பட்டணம் ஹைக் கோர்ட்டில் மனு தாக்கல்செய்யப்பட்டிருக்கிறது. ஏதாவது குற்றச் செய்கை செய்யப்பட்டிருந்தால் அது சென்னப்பட்டணத்தில் நடந்திருப்பதாகவும் மனுதாரும் அவருடைய சாக்ஷிக்காரர்களும் சென்னப்பட்டணத்திலிருந்து பம்பாய்க்குப் போவது மிகவும் அசௌகரியமாயும் செலவுள்ளதாகவும் யிருப்பதாகவும் வாதியின் காரியாதிகளைத் தெரிவிப்பதற்கு அவருடைய காரியஸ்தர் பட்டணத்திலிருப்பதாகவும் இந்தவிஷயங்களையெல்லாம் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண பத்திரிகையில் (Affidavit) கண்டு ஷை கேஸை சென்னப்பட்டணம் பிரதான இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்று மனுதார் பிரார்த்திக்கிறார்.

லாயர்கள்:—மனுதார் பக்கம் C. ராஜகோபால ஐயங்காரும், எதிர்மனுதார் பக்கம் R. N. அய்யங்காரும், கவர்ன்மெண்டார் பக்கம் ஆக்டிங் பப்ளிக்ப்ராஸிகியூடர் E. R. ஆஸ்பர்னும் ஆஜரானார்கள்.

ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பு.

ஜஸ்டிஸ் சதாசிவஐயர்:—இந்த மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று என் கற்றறிந்த ஸகோதரர் படும் அபிப்பிராயத்துடன் நானும் கலந்து கொள்கிறேன்.

கிரிமினல் புரொஸீஜர் கோடு 185-வது பிரிவினால் தங்களுடைய அதிகாரவரம்புக்குட்பட்ட இடங்களிலாவது அல்லது அதற்கு வெளியிலுள்ள இடங்களிலாவது உள்ள ஒரு கிரிமினல் கோர்ட்டில் விசாரணையாகிக் கொண்டிருக்கும் ஒரு கிரிமினல் கேஸை தங்களுடைய அதிகார வரம்புக் குள்பட்ட இடத்திலோ அல்லது அதற்கு வெளியிலுள்ள இடத்திலோ இருக்கும் மற்றொரு கிரிமினல் கோர்ட்டுக்கு மாற்றும் அதிகாரம் யேர்ப்படவில்லை யென்பது எனக்கு வியக்தமாகத் தெரிகிறது. என் அபிப்பிராயத்தில் கேசுகளை ஒருகோர்ட்டிலிருந்து மற்றொரு கோர்ட்டுக்கு மாற்றும் விஷயத்திலாவது அல்லது அப்படி மாற்றும் விஷயமாய் ஹைக்கோர்ட்டாருக்கு இருக்கும் அதிகார விஷயத்திலாவது 185-வது பிரிவின் ஸம்பந்தமே கிடையாதென்பது எனது அபிப்பிராயம். கிரிமினல் புரொஸீஜர் கோடு ஸம்பந்தப்பட்டமட்டிலும் கேசுகளை ஒரு கிரிமினல்கோர்ட்டிலிருந்து மற்றொரு கிரிமினல் கோர்ட்டுக்கு மாற்றும் விஷயத்திலிருக்கும் அதிகாரத்தைப் பற்றி கிரிமினல் புரொஸீஜர் கோடின் 526-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. தங்களுடைய அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்கோர்ட்டுகளில் நடந்து கொண்டிருக்கும் கேசுகளை தங்களுக்குக் கீழ்ப்பட்ட அதேமாதிரியான எந்தக் கோர்ட்டுக்காவது மாற்றவோ அல்லது தங்கள்கோர்ட்டுக்கே தருவித்துக் கொள்ளவோ இந்த விஷயங்களில் 526-வது பிரிவானது ஹைக்கோர்ட்டாருக்கு பூரா அதிகாரத்தையும் கொடுக்கிறது. அடியில் கண்ட தீர்ப்புகளுக்கு மிகவும்மரியாதை கொடுத்தும் அதாவது ஹைரான்குமார்ச் சௌதாரிக்கும் மங்கள் ஸென்னுக்கும் நடந்து1912-ம்௵த்து 17. கல்-வீ. நோ. 761-ல் பிரசுரிக்கப்பட்டிருப்பதும் சக்கிரவர்த்தி அவர்களுக்கும், ச்செய்ச்சல் ஸிங்குக்கும் நடந்து 1909-ம் ௵த்து 21. கல். 361-ல் பிரசுரிக்கப் பட்டிருப்பதுமான கேசுகளின் தீர்மானங்களை அனுஸரிக்க அசக்தனாக யிருப்பதினால் கி. பு. கோடு 185–வது பிரிவில் "மாற்றுதல்" என்ற பதமாவது அல்லது மாற்றுதல் என்ற அபிப்பிராயத்தையாவது ஸ்தூலமாகவாகவது வெளியிடக் கூடியபதத்தையே 185-வது பிரிவில் உபயோகப்படுத்தப் படாமலிருக்க ஒருகேஸை அதிலும் விசேஷமாக தங்கள் அதிகார எல்லைக்கு வெளிப்பட்ட இடத்திலிருக்கும் ஒரு கோர்ட்டில் நடந்து கொண்டிருக்கும் ஒரு கேஸை ஒரு கோர்ட்டிலிருந்து மற்றொரு கோர்ட்டுக்கு மாற்றுவதற்கு ஹைக்கோர்ட்டாருக்கு அதிகாரமிருப்பதாக அபிப்பிராயப் படுவதானது ஸாதாரணமாக விஷயங்களுக்கு வியாக்கியானம் செய்யும் ஒழுங்குக்கே நேர்

விரோதமாக ஏற்படுமென்று எனக்குத் தோன்றுகிறது. என்னுடைய கற்றறிந்த ஸகோதரர் சொல்லுகிறபடி தங்களுடைய அதிகார எல்லைக்கு வெளியிலுள்ளகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணையிலிருக்கும் ஒரு கேஸை வேறு கோர்ட்டுக்கு மாற்ற செய்யும் உத்தரவை எப்படி ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவருவதற்கு ஹைக் கோர்ட்டாருக்கு என்னஅதிகாரம் இருக்கிறது? அவர் இன்னும் சொல்லுகிறபடி ஒரு ஹைக்கோர்ட்டாரின் அதிகார எல்லைக் குள்ளிருக்கும் இடத்திலுள்ள ஒரு கோர்ட்டில் நடந்துகொண்டிருக்கும் ஒரு கேஸை மற்றொரு ஹைக்கோர்ட்டாரின் அதிகார எல்லைக்குட்பட்ட இடத்திலிருக்கும் வேறு கோர்ட்டுக்கு மாற்றும் அதிகாரம் 527 (1) பிரிவின் பிரகாரம் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரலுக்கு மாத்திரம் இருப்பதாகத் தெரிகிறது. இந்த சுருக்கமான முகாந்தரத்தின் பேரிலே இந்த ரிவிஷன் மனுவைத் தள்ளுபடி செய்து விடவேண்டும்.

இருந்தாலும், எந்தக் கோர்ட்டில் இந்தக் கேசு விசாரிக்கப்பட வேண்டியது என்கிற விஷயத்தைப் பற்றியாவது தீர்மானிக்க கிரிமினல் புரொஸிஜர் கோடு 185-வது பிரிவுப்படி எங்களுக்கு அதிகாரம் இருப்பதாகவும், இந்த அதிகாரத்தின் மூலமாக ஊர்ஜிதத்துக்குக்கொண்டுவர முடியாததாக யிருந்தாலுமே இந்தக் கேஸை எங்களுடைய அதிகார எல்லைக் குள்ளிருக்கப்பட்ட இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டே விசாரிக்கவேண்டுமென்று அபிப்பிராயம் கொடுக்க எங்களுக்கு அதிகார மிருப்பதாக ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறபடியால் 185–வது பிரிவின் சங்கதி பூராவின் விஷயமாய் எனது அபிப்பிராயம் இன்னதென்பதை வெளியிடுகிறேன்.

இராணி சக்கிரவர்த்தினி அவர்களுக்கும், ஓபரீனுக்கும் நடந்து 1897-ம் ௵த்து இ. லா. ரி. 19. அல 111-ல் பிரசுரிக்கப் பட்டிருப்பதும்; பாபுலாலுக்கும், கான்ஷாம் தாஸுக்கும் நடந்து 1908-ம் ௵த்து 5. அல. ஜ. 333-ல் பிரசுரிக்கப்பட்டிருப்பதுமான கேசுகளின் தீர்மானங்களை மனுதார் பக்கம் ஆதாரவுகளாக எடுத்துக் காட்டப்படுகிறது. இருந்தாலும், ஹைக்கோர்ட்டாருக்குக் கீழ்ப்பட்ட கோர்ட்டாருக்கு ஒரு கேஸை விசாரிக்க அதிகார மில்லாமலிருப்பதையும் அப்படியிருந்தும் அந்தக் கீழ்க்கோர்ட்டார் ஒரு கிரிமினல் கேஸை தன் பரிசீலனைக்குள் எடுத்திருப்பதாகவும் ஆனால் அது தங்களுக்குக்கீழ்ப்பட்டிராத கோர்ட்டின் அதிகார எல்லைக்குட்பட்டிராதது இல்லையென்றும் வாதிக்கப்பட்ட கேசுகளில் ஹைக்கோர்ட்டாருடைய அபிப்பிராயம் வெளியிடப்பட்டன. தங்களுடைய அதிகாரத்துக்குட்பட்ட கோர்ட்டுகள் தங்கள் அதிகார வரம்புக்கு மேல்பட்ட சங்கதிகளைச் செய்யாமலும் வேறொரு கோர்ட்டில் விசாரணை செய்யப்படவேண்டிய கேஸை தானே விசாரிக்காமலும் தடுப்பதற்கு ஒவ்வொரு ஹைக்கோர்ட்டாருக்கும் அதிகாரம் இருக்கிறது. தங்களுடைய அதிகார எல்லைக்குள் ஒரு குற்றவாளி கண்டு பிடிக்கப்பட்டு, அவன் பேரில் தங்களுடைய கிரிமினல் அப்பீல் அதிகார எல்லைக்குள்ளிருக்கிற எந்தக் கோர்ட்டிலும் ஒரு கேசு விசாரணையி லிருப்பதாகத் தெரியவந்தால் அடியில்கண்ட சங்கதிகளில் எதைச்செய்வது உசிதமென்று தீர்மானிக்கவும் ஹைக்கோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டு:—(1)அந்தக் கீழ்க்கோர்ட்டாராலேயே அந்தக் கேசு விசாரிக்கப்படவேண்டுமா அல்லது (2) வேறு ஹைக்கோர்ட்டாருடைய அதிகாரத்துக் குட்பட்டவும் அந்தக்கேஸை விசாரிப்பதற்கு 177-முதல் 184-வரையுள்ள பிரிவுகளில் எதன்படிக்காவது அதிகார முள்ளதுமான வேறு கோர்ட்டாரால் விசாரிக்கப்பட வேண்டுமாவென்ற சங்கதிகள் தான். அதாவது 185-வது பிரிவானது அடியில்கண்ட தொகுப்பான காரியாதிகளைச் செய்யும் விஷயத்தில் உபயோகிக்கும் படியாகத்தான் உண்டாக்கப் பட்டிருக்கிறதென்பது எனக்குத் தெளிவாகத்தெரிகிறது. (1) ஒரே நபர் பேரில் அதே விதமான சங்கதிகளைப் பொறுத்து வெவ்வேறாக யிருக்கும் இரண்டு ஹைக்கோர்ட்டார்களுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட இரண்டு கோர்ட்டுகளில் கேசுகளிருந்தால், எந்த ஹைக்கோர்ட்டாருடைய அதிகார எல்லைக்குள் எதிரி (குற்றவாளி) கண்டுபிடிக்கப்படுகிறானோ அந்த ஹைக்கோர்ட்டாருக்கு தங்களுடைய அதிகாரத்துக்குட்பட்ட கோர்ட்டில் அந்தக்கேஸை விசாரிக்கிறதா அல்லது விசாரிக்க வேண்டியதில்லையாவென்ற விஷயத்தைத் தீர்மானிக்க அதிகாரம் உண்டு. அப்படி செய்யப்படும் தீர்மானமானது உபய கக்ஷிக்காரர்களுடையசௌகரியத்தையும் அவர்களிருவர்களுக்கும் நியாயம் கிடைக்கவேண்டியதையும் உத்தேசித்துத்தான். ஷை குற்றவாளியை தங்களுடைய அதிகாரத்துக்குட்பட்ட கோர்ட்டிலேயே விசாரிக்க வேண்டுமென்று பைசல் செய்யப்பட்டால், மற்றொரு ஹைக்கோர்ட்டுக்குட்பட்ட கோர்ட்டார் இந்த எதிரி பேரில் கேஸை விசாரிக்க முடியாது. ஏனென்றால் இந்த எதிரிபேரிலிருக்கிற கேசு விசாரணையாய்முடியும் வரை ஷை எதிரியைக் கொண்டுபோகக் கூடாதென்று தடுக்க இந்தஹைக்கோர்ட்டாருக்கும் அதிகாரமும்உண்டு. (2) எந்த ஹைக்கோர்ட்டாருடைய அதிகார எல்லைக்குள் அந்த எதிரி கண்டு பிடிக்கப் படுகிறானோ அவன்பேரில் ஒரே கேசுயிருந்தால் அந்த எதிரியை தங்களுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட கோர்ட்டாரே விசாரிக்கிறதா அல்லது வேறொரு ஹைக்கோர்ட்டாருடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட ஒரு கோர்ட்டார் விசாரிக்கிறதாவென்று பைசல் செய்யும் அதிகாரம் அந்த எதிரி கண்டுபிடிக்கப்படுகிற இடம் எந்த ஹைக்கோர்ட்டாருடைய அதிகார எல்லைக் குட்பட்டதோ அந்த ஹைக்கோர்ட்டாருக்கு உண்டு.

ஆகையால் ஒருவன்பேரில் தங்களுடைய அதிகார எல்லைக் குட்பட்ட ஒரு சோர்ட்டில் ஒரு கேசுமே இல்லாவிட்டால், தங்களுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படாத ஒரு கோர்ட்டிலுள்ள ஒரு கேசு, தங்களுடைய அதிகாரத்துக்குள்பட்ட ஒரு கோர்ட்டில்விசாரிக்கப்பட வேண்டு மென்ருவது அல்லது கூடாது என்ருவது பைசல் செய்யும் அதிகாரத்தை 185-வது பிரிவின் மூலமாக ஒரு ஹைக்கோர்ட்டாரும் செலுத்தமுடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். மேலே (1) லக்கமிட்ட என்னுடைய அபிப்பிராயமானது, ஹீரான்குமாரச்சௌத்ரிக்கும், மங்கள ஸென்னுக்கும் நடந்து 1912-ம் ஹுத்து 17. கல். வீ. நோ. 761-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசின் தீர்மானததில் கண்ட அபிப்பிராயத்துக்கு ஒத்துமை யில்லாம லிருக்கிறபடியால் அந்தக்கேசின் தீர்மானத்திலிருந்து நான் அபிப்பிராயப்பேதட்படுகிறேன். (அந்தக் கேசில் சொல்லப்பட்டிருக்கிற அபிப்பிராயமானது, 185-வது பிரிவுப்படி பைசல் செய்யப்படுகிற கேசுகளில் கக்ஷிக்காரர்களுடைய சௌகரியத்தைப் பற்றி யோகிக்கப்படக் கூடாதென்றும், அதிகார எல்லையைக் குறித்து ஸந்தேகம் இல்லாதபக்ஷத்தில் 185-வது பிரிவு சம்பந்தமே படாது என்பதும் தான்).

ஜஸ்டிஸ் நேபியர்:—பம்பாயில் வியாபாரம்செய்து வருகிற எதிர் மனுதாரால் இந்த மனுதார் பேரில் இ. பி. கோடு 482, 486-வது பிரிவுகளின்படிக் குள்ள குற்றம் செய்ததாக பம்பாய் பிரதான ராஜதானி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கொடுக்கப் பட்டிருக்கிற 1916-ம் ஹுத்து கேசு நெ. 571 ஐ, சென்னப்பட்டணம் பிரதான ராஜதானி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்று சென்னப்பட்டணத்தில் வியாபாரம் செய்துவரும் இந்த மனுதாரால் இந்த மனு தாக்கல் செய்யப் பட்டிருக்கிறது. இந்த மனுவானது அந்த பிரதான ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டுக்கு இந்தக் கேசை விசாரிப்பதற்கு அதிகாரமில்லை யென்ற காரணத்தையிட்டு 185-வது பிரிவுப்படி இந்த மனு தாக்கல் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. கேசுகளை பரிசிலனைக்கு எடுத்துக்கொண்டு விசாரணை செய்ய ஆரம்பம் செய்துவிட்ட கோர்ட்டுக்கு ஷை கேசுகளை விசாரிக்க அதிகாரம் உண்டா இல்லையா வென்ற சந்தேகம் ஏற்படுகிற கேசுகளுக்கும் கிரிமினல் புரொஸிஜர் கோடு 179, 180-வது பிரிவுகளின்படி 2 கோர்ட்டார்களுக்கும் ஷை கேசுகளை விசாரிக்க அதிகாரமிருக்கிற கேசுகளுக்கும் 185-வது பிரிவானது சம்பந்தப்படுமோ இல்லையோ வென்ற விஷயத்தைப்பற்றி நான் யாதொரு அபிப்பிராயமும் கொடுக்கவில்லை. ஷை கோர்ட்டுகளுக்கு, அதிகாரம் இருந்தாலுமே, இல்லாவிட்டாலுமே, இந்தக் கோர்ட்டுக்கு இந்த மனுவைப் பைசல் செய்யும் அதிகாரமே கிடையாதென்பது என்னுடைய தெளிவான அபிப்பிராயம். 185-வது பிரிவின் நிபந்தனைகளைப் பார்க்கும்போதே கேசுகளை மாற்றுவதற்கு அந்தப் பிரிவினுல் யாதொரு அதிகாரமும் யேர்ப்படவில்லை. ஆனுல் செய்யும் தீர்மானத்தை ஊர்ஜிதப்படுத்தும் பொருட்டு கேசை மாற்றும் அதிகார மிருப்பதாக வைத்துக் கொள்ள வேணுமென்று வாதிக்கப்படுகிறது. இது அப்படி இல்லை. எங்களுக்குட்பட்ட கொர்ட்டுகள் ஸம்மந்தமான நடபடிக்கைகள் விஷயமாய் கிரிமினல்புரோஸீஜர் கோடில் குறிப்பிட்ட அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. எங்களுடைய அதிகாரத்துக் குட்படாத கோர்ட்டுகளுக்கு இருக்கும் அதிகாரத்தை இல்லையென்று ரத்துசெய்துவிடும் அதிகாரமும் எங்களுக்கு இருப்பதாக வைத்துக் கொள்ள முடியாது. ஹிரான் குமார்ச் சௌத்ரிக்கும், மங்கள் ஸென்னுக்கும் நடந்து 1912-ம் ஹுத்து 17. கல். வீ. நோ. 761-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தை ஆதாரமாகக் காண்பிவிக்கப் படுகிறது. அந்தத் தீர்ப்பினுல் கல்கத்தா ஹைக்கோர்ட்டார் பஞ்சாப் சீப்கோர்ட்டின் அதிகார எல்லைக்குட்பட்ட ஒரு கேசை தங்களுக்குட்பட்ட ஒரு கோர்ட்டுக்கு மாத்தியிருக்கிருர்கள். இந்தக்கேசின் தீர்மானத்தை அனுஸரிக்க நான் அசக்தனுக யிருக்கிறேன். அப்பேர்ப்பட்ட உத்தரவை ஹைக்கோர்ட்டார் ஊர்ஜிதத்துக்குக்கொண்டுவரக்கூடாது. அந்தபிரிவை ஸரியாகப் படித்துப்பார்க்கையில் அப்பேர்ப் பட்ட அதிகாரமே கிடையாது. இந்தக்கேசை எந்தக் கோர்ட்டில் விசாரிக்க வேண்டுமென்ற சந்தேகமும், 181, 184-வது பிரிவுகளின்படி அதே கேசை விசாரிக்க இரண்டு கோர்ட்டுகளுக்கும் அதிகாரம் யேர்ப்படும் விஷயமும் குற்றச்செய்கைகள் ஒரு அதிகார எல்லைக்குள் செய்யப்பட்டு அந்தக் குற்றச் செய்கைகளினுல் யேர்ப்படும் பலன்கள் வேறு அதிகார எல்லைக்குள்ளும் சம்பவிக்குங் கேசுகளில் தான் யேர்ப்படுகிறதென்றும் குற்றஞ் சாட்டப்பட்டவன் எங்கே யிருக்கிருன் என்பதினுல் யேர்ப்படுகிறதில்லை யென்றும் வியவஹரிக்கப்பட்டது. கிரிமினல் புரோஸீஜர் கோடின் 185-வது பிரிவுக்கு கேட்டுக்கொள்ளுகிறபடிக் கெல்லாம் விசாலமான தாத்பரியங்களிருப்பதாக வைத்துக்கொள்ளும் விஷயத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவன் எந்த இடத்திலிருக்கிருனே அந்த இடம்எந்த ஹைக்கோர்ட்டாருடைய அதிகார எல்லைக்குள்ளிருக்கிறதோ அந்த ஐகோர்ட்டாருக்கு மற்ருெரு ஹைக்கோர்ட்டு அதிகார எல்லைக் குட்பட்டிருக்கிற 2 கோர்ட்டுகளில் எந்தக் கோர்ட்டில் இந்தக்கேசை விசாரிக்கவேண்டிய தென்கிற சந்தேகம் உண்டாகும். கேசுகளிலும் உத்தரவு பிறப்பிவிக்க அதிகாரம்உண்டென்று ஏற்படும். அதாவது அடியில் கண்ட கேசை உதாரணமாகச் சொல்வோம். ஒருவன் குற்றச் செய்கை செய்ததாக சென்னப்பட்டணம் கோர்ட்டில் பிராது சாட்டப்பட்ட காலத்தில் அப்படிப் பட்டவன் பெங்களூர் ரெஸிடெண்டினுடைய அதிகார எல்லைக்குட்பட்ட

ஒரு இடத்தில் வசித்திருப்பானே யாகில் சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு அதிகார எல்லைக்குட்பட்ட இரண்டு கோர்ட்டுகளில் எந்தக் கோர்ட்டார் கி. பு. கோடு 181 (2) (3) (4) உட்பிவுகளின் படிக்கும்182-வது பிரிவின் படிக்கும் இந்த குற்றவாளியை விசாரிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்யும் அதிகாரம் பெங்களூர் ரெஸிடெண்டுக்கு ஏற்பட்டுவிடும். என் அபிப்பிராயத்தில் இந்தப் பிரிவின்படிக்கு கேசைமாற்றும் அதிகாரம் ஹைக்கோர்ட்டாருக்குக் கிடையாது. ஹைக்கோர்ட்டார் செய்யக் கூடியதெல்லாம் கூடி எந்தக் கோர்ட்டில் குற்றவாளி விசாரிக்கப் படவேண்டு மென்பதையும், குற்றத்திற்காகப் பிராது செய்யப்பட்டு அந்தக் காலத்தில் குற்றஞ் சாட்டப் பட்டவனும் தங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட இடத்தில்இருந்திருந்தால் மற்ருெரு ஹைக்கோர்ட்டாருடைய அதிகார எல்லைக் குட்பட்ட ஒரு கோர்ட்டினுல் இந்தக்கேசு விசாரிக்கப்பட வேண்டுமா என்ற சந்தேகமும் யேர்ப்படும் விஷயத்தில் அந்தக் குற்றவாளி எந்த ஹைக்கோர்ட்டா ருடைய சரகத்திலிருக்கிருனே அந்த ஹைக்கோர்ட்டார் தங்களுடைய அதிகாரத்துக்குட்பட்ட கோர்ட்டார் அந்த கேசை விசாரிக்கப்படாது என்று தீர்மானித்து ஷை கேசின்விசாரணை நடபடிக்கைகளையும் நிறுத்திவைக்கும் படிக்கு உத்தரவும் செய்யலாம். அப்பால் வாதி தன் பிராதை அந்த மற்ருெரு கோர்ட்டில் தாக்கல் செய்து கொள்ளலாம். அந்தக் கோர்ட்டில் ஷை கேசு விசாரணை செய்யப்படும் விஷயமாய் ஏதும் தாவா ஏற்பட்டால் அந்த தாவாவை அந்த ஹைக்கோர்ட்டார் விசாரித்துப் பைசல்செய்வார்கள். இப்பேர்ப்பட்ட நடபடிக்கை அநேக தபா நடத்தப்பட்டிருக்கிறது. (சக்ரவர்த்தி அவர்களுக்கும், ச்செய்ச்சால் விங்குக்கும் நடந்த கேசிலும்; பாபுலூலுக்கும் ,கன்ஷாம் தாஸுக்கும் நடந்து 1908-ம்ஹுத்து 5. அல. லா. ஜ 333-ல் பிரசுரம் செய்திருக்கிறகேசிலும் இந்த நடபடிக்கை நடத்தப்பட்டிருப்பதைப்பார்க்க.) அந்தக் கேசுகளில் அன்னிய கோர்ட்டார் ஷை கேசுகளை விசாரிக்கவேண்டுமென்று பைசல் செய்தது வாஸ்தவம் தான். ஆனுல் மேல்கண்ட பிரிவைப்படிப்பதினுல் இந்தமனுவை பைசல்செய்யும் அதிகாரம் எங்களுக்கு யேர்ப்பட்டாலும்கூட செய்யப்படும் உத்தரவை நிறைவேற்றிக் கொடுக்க எங்களுக்கு அதிகாரம் யில்லாமலிருப்பதை யிட்டு அப்பேர்ப்பட்ட உத்திரவைச் செய்வது சரியானதில்லை யென்றே நினைக்க வேண்டியதாக யிருக்கிறது யென்பதையும் சொல்ல விரும்புகிறேன். எங்களால் செய்யப்படும் உத்தரவை அன்னிய இலாகாவிலுள்ள கோர்ட்டார் கீழ்ப்படிந்து கேசை விசாரிக்கக் கூடுமென்றும் தெரிவிக்கப் படுகிறது. அப்படி அந்தக் கோர்ட்டார் கீழ்ப்படிந்து நடந்தாலுமே அந்தகோர்ட்டார் எந்த ஹைக்கோர்ட்டுக்குக் கீழ்ப்பட்டவரோ அந்த ஹைக்கோர்ட்டில் ஷை கேசின் எதிரி மனுதாக்கல் செய்யக்கூடும். எங்களால் செய்யப்பட்ட உத்தரவு அந்த ஹைக்கோர்ட்டாரைக் கட்டுப்படுத்துமென்று சொல்ல முடியாது. பற்பல ஹைக்கோர்ட்டாரையும் கட்டுப் படுத்தக்கூடிய உத்தரவைப் பிறப்பிவிக்கக் கூடிய அதிகாரத்தை கிரிமினல் புரொஸீஜர் கோடு 527 வது பிரிவுப்படிக்கு உள்ளவர் கவர்னர் ஜெனரல் ஒருவர் தான். பார்க்கும் போதே பிரயோஜனமற்றதாக யிருக்கிறவும் மற்ருெரு ஹைக்கோர்ட்டாருக்குள்ள அதிகாரத்தை நாமே செலுத்தும்படி யேர்ப்படக்கூடியவுமான அதிகாரத்தை ஹைக்கோர்ட்டாருக்கு கிரிமினல் புரொஸீஜர் கோடு கொடுக்கவில்லை யென்றவிஷயம் எனக்குத் திருப்தியாகத் தெரிகிறது.

ஆகையால் மனுவைத் தள்ளுபடி செய்திருக்கிறது.

மனுதார் பக்கம் அட்டர்ணிகள் :—மெஸ்ஸர்ஸ் க்ராண்டும் க்ரிடோரிக்ஸும் ஆஜரானுர்கள்.

I. L. R. 40. M. 835., இ. லா. ரி 40. ம 835.

நெ. 65

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவஐயர் / மிஸ்டர் ஜஸ்டிஸ் மூர் }

1915-ம் ஹுத்து ஸிவில் ரிவிஷன் மனு நெ. 984.

பொன்னியாத்தா காத்தூட் பரமேசுவரன் முன்பீயும் யின்னும் 4-பேர்களும் (எதிர் மனுதார்கள்) மனுதார்கள்.

v.

முத்திடத் மல்லிஸ்ஸேரி இல்லத் நாருயணன் நம்பூரியும் மற்ருெருவனும் (மனுதார்) எதிர் மனுதார்கள்.

லாபாயிண்ட்:—ஸிவில் புரோஸீஜர் கோடு (1908-ம் ஹுத்து 5-வது ஆக்ட்டு) 92-வது பிரிவுப்படிக்குள்ள வியாச்சியத்தின் தன்மை—வாதிகளின் மரணம்—பின்னும் கக்ஷிக்காரர்களைச் சேர்க்கக் கோர்ட்டாருக்குள்ள அதிகாரம்.

ஸிவில் புரோஸீஜர் கோடின் 92-வது பிரிவுப்படி செய்யப்பட்ட வியாச்சியமானது பிரதிநிதி வியாச்சியம் (Representative Suit) ஆகையால் ஷை கோடின் I வது ஆர்டர் 10-வது ரூல் (2)வது உட்பிரிவின்படி ஷை வியாச்சியத்தில் சம்பந்தப்பட்ட விஷயங்களை எல்லாம் சரியான படி பூராவும் பைசல் செய்வதற்கு அவசியமாக ஏற்படக் கூடியவர்களை எல்லாம் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கும் அதிகாரம் கோர்ட்டாருக்கு உண்டு.

வரதய்ய செட்டிக்கும் முனுசாமி செட்டிக்கும் நடந்து 1911-ம் ஹுத்து 10. ம. லா. டை. 514-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தை அனுஸரிக்கப்பட்டது.

ச்சாபைல் ராமுக்கும், துர்க்கப்பிரஸாதுக்கும் நடந்து 1915-ம் ஹுத்து இ. லா. ரி. 37. அல. 296-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசின் தீர்மானித்திலிருந்து அபிப்பிராயப் பேதப்படப்பட்டது.

கேசின் சுருக்கம் :—1914-ம் ஹுத்து அஸல் வியாச்சிய நெ. 21-ன் விஷயமாய் தாக்கல் செய்யப் படப்பட்ட 1915-ம் ஹுத்து ஸிவில் சில்லரை மனு நெ 646-ல் ஆக்டிங் டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜ் A. நாருய நம்பியார் செய்த உத்தரவை புனராலோசனை செய்யும்படியாய் ஹைக்கோர்ட்டாரைப் பிரார்த்தித்து 1908-ம் ஹுத்திய 5-வது ஆக்ட்டாகிய ஸிவில் புரோஸிஜர் கோடின் 115-வது பிரிவின்படி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு கோவில் சுவாமியை வணங்குகிறவர்களுடைய பிரதிநிதி ஸ்தானத்தில் ஸிவில் புரோஸீஜர் கோடு 92-வது பிரிவின்படி அனுமதி பெற்றுக்கொண்டதின் பேரில் பிரதிவாதிகளை கோவில் தர்மகர்த்தா வேலையிலிருந்து நீக்கும் பொருட்டு ஒரு வியாச்சியம் செய்தார்கள். அந்த வாதிகளில் ஒருவர் இறந்து போய் விட்டபடியால் அதற்கு 6மீங்களுக்குப் பின்னிட்டு இப்போதைய எதிர்மனுதார் தன்னையும் ஸப்ளிமெண்ட் வாதியாகச் சேர்த்துக்கொள்ள வேணுமென்று மனுச் செய்துகொண்டதின் பேரில் அவரை அவ்விதமே ஸப்ளிமெண்டல் வாதியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. பிரதிவாதிகளால் (மனுதார்கள்) ஸப்ளிமெண்டல் வாதியாகச் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் செய்து கொள்ளப்பட்ட மனுவானது 6மீங்களுக்குள் செய்து கொள்ளப் படாததினால் வியாச்சியம் செய்யும் பாத்தியதை போய்விட்டதாக இந்த ரிவிஷனில் வாதிக்கப்பட்டது.

லாயர்கள்:—A. சுந்தரம் மனுதார் பக்கமும், P.R. கணபதி அய்யரும் T. R. ராமச்சந்திர அய்யரும் எதிர் மனுதார் பக்கமும் ஆஜரானார்கள்.

ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பு:—வரதப்ப செட்டிக்கும் முனுசாமி செட்டிக்கும் நடந்து 1911-ம் ஹுத்து 10. ம. லா. டை. 514-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேசில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வேல் செய்திருக்கிற தீர்மானத்தில் நாங்கள் கலந்து கொள்கிறோம். (a) ஸிவில் புரோஸீஜர் கோடு 92-வது பிரிவுப்படி செய்யப்பட்ட வியாச்சியமானது பிரதிநிதி ஸ்தானத்தில் செய்யப்பட்ட வியாச்சியம் என்றும் (b) அட்வோகேட் ஜனரலுடைய அனுமதியின் பேரில் ஷை வியாச்சியத்தை தாக்கல் செய்த 2 பேர்களுக்கும் சட்டப்படி பிரதிநிதிகளாக யிருக்கும் காரணத்தை பற்றி அல்லாமல் மற்றெல்லா பக்தர்களுக்காகவும் ஷை வியாச்சியத்தைத் தாக்கல் செய்த உடனேயே ஷை பிரதிநிதி வியாச்சியத்துக்குக் கக்ஷிக்காரர்களாகி விட்ட மற்றவர்களையும் ஷை வியாச்சியத்தில் சம்பந்தப்பட்ட விஷயங்களையெல்லாம் சரியானபடி பூராவும் பைசல் செய்வதற்கு அவசியமாக ஏற்படக் கூடியவர்களை எல்லாம் கக்ஷிக்காரர்களாகச் சேர்த்துக் கொள்ளும் அதிகாரம் ஸிவில் புரோஸீஜர்கோடின் I-வது ஆர்டர் 10-வது ரூல் 2-வது உட்பிரிவுப்படி உண்டென்றும் நாங்கள் நினைக்கிறோம்.

(ஸமீபத்தில் ச்சர்டைல் ராமுக்கும், தூர்கப்ரசாதுக்கும் நடந்து 1915-ம் ஹுத்து இ. லா. ரி. 37., அல. 296-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில்) அலகாபாத் ஹைக்கோர்ட்டார் அவர்களுடைய தீர்மானத்துடன் நாங்கள் கலந்துகொள்ளவில்லை. அந்தக் கேசில் ஸிவில் புரோஸீஜர் கோடு 92-வது பிரிவுப்படி செய்யப்பட்ட வியாச்சியமானது முதலாவது வியாச்சியம் தொடர்ந்த வாதிகள் இருவர்களில் ஒருவர் இறந்துபோன உடனேயே, ஷை வியாச்சியம் ஒழிந்து போய்விட்டதாகவும், ஷை வியாச்சியத்தை மறுபடி மேல் நடத்துவதற்காக வேறு பக்தர்கள் வாதியாகச் சேர்ந்து கொள்வதற்கு அட்வோகேட் ஜனரலினுடைய அனுமதி வேண்டுமென்றும் பைசல் செய்யப்பட்டிருக்கிறது. அப்பீல் வாதிகள் பக்கம் மிஸ்டர் சுந்தரத்தினால் எடுத்துச்சொல்லப்பட்ட காலாவதி கக்ஷியானது 3-வது வாதி தன்னையும் கக்ஷிக்காரனாகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கொடுத்துக் கொண்ட மனுவானது வியாச்சியம் ஒழிந்துபோனதை ரத்துசெய்து இறந்துபோன 2-வது வாதியினுடைய பிரதிநிதியாக தன்னைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதாய் மனுக்கொடுத்ததாய் வைத்துக் கொண்டு சொல்லப்பட்டது. நாங்கள் மேலே சொல்லிய அபிப்பிராயப்படி அந்த விஷயம் ஏற்படவே மாட்டாது. கற்றறிந்த டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜியினிடைய உத்தரவு சரியானதுதான்.

ஆகையால் இந்த மனுவை சிலவுடன் தள்ளுபடி செய்திருக்கிறோம்.

I. L. R. 40, M. 110. இ. லா. ரி. 40. ம. 110.

நெ. 66

APPELLATE CRIMINAL
கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். / மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர். }

1916-ம் ஹுத்து கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 847
(1916-ம் ஹுத்து கிரிமினல் ரிவிஷன் மனு நெ. 690)

சாந்தப்பசேதுராமனும் பின்னும் 11-பேர்களும் (எதிரிகள்) மனுதார்கள்.

v.

கோவிந்தஸாமி கண்டியார் (வாதி) எதிர் மனுதார்

லாபாயிண்ட்:—கிரிமினல் புரோஸீஜர் கோடு (1898-ம் ஹுத்து 5-வது ஆக்ட்டு) 528-வது பிரிவு—கேசை மாற்றுவது—அதே கக்ஷிக்காரனால் செய்யப்பட்ட மனுவின் பேரில், ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கேசை மாற்ற முடியாதென்று ஒரு தபா உத்தரவு செய்ததின் பிறகு ஷை கேசை மாற்றுவதின் விஷயமாக டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்ட்ரேட்டுக்கு உள்ள அதிகாரம்.

தாமன் செட்டிக்கும் அழகிரி செட்டிக்கும் நடந்து 1891-ம் ஹுத்து இ. லா. ரி 14. ம. 399-ம் பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற தீர்ப்பை அனுஸரிக்கப்பட்டது.

ரெகுநாதபண்டாரத்துக்கும், சக்ரவர்த்தி அவர்களுக்கும் நடந்து 1903-ம ஹுத்து இ. லா. ரி, 26 ம. 140-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் தீர்ப்பின் அபிப்பிராயத்துடன் இணங்கவில்லை.

கேசின் சுருக்கம்:—1916-ம் ஹுத்து 206, 208, 210 இந்த நெ. காலெண்டர் கேசுகளை வலங்கிமான் ஸப் மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டிலிருந்து பாபநாசம் ஸப் மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டுக்கு மாற்றி தஞ்சாவூர் அடிஷனல் டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்ட்ரேட்டு R. நாராயண அய்யர் 1916-ம் ஹு அக்டோபர் மீ 21உ பிறப்பித்த 1916-ம் ஹுத்திய டி. டிஸ். 862 M உத்தரவை புனராலோசனை செய்யும்படி ஹைக்கோர்ட்டார் அவர்களை பிரார்த்தித்து கிரிமினல் புரோஸீஜர் கோடு (1898-ம் ஹுத்து 5-வது ஆக்ட்டு) 435, 439-வது பிரிவுகளின் பிரகாரம் செய்யப்பட்ட மனு.

இந்தக் கேசின் சங்கதிகளின்னதென்பது தீர்ப்பினால் தெரியவரும்.

லாயர்கள்:—மனுதார் பக்கம் V. விஸ்வநாத சாஸ்திரியாரும், எதிர் மனுதார் பக்கம் டாக்டர் S. சுவாமிநாதனும், கவர்ன்மெண்டார் பக்கத்தில் ஆக்டிங் பப்ளிக் ப்ராஸிகியூடர் E. R. ஆஸ்பாரனுக்குப் பதில் பி. ஆர். நாராயணஸாமி அய்யரும் ஆஜரானார்கள்.

ஹைக்கோர்ட்டு உத்தரவு:—தஞ்சாவூர் அடிஷனல் டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்ட்ரேட்டு ஒரு கக்ஷிக்காரனுடைய மனுவின் பேரில் கி. பு. கோடு 528-வது பிரிவுப்படி 3 கிரிமினல் கேசுகளை வலங்கிமான் 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டிலிருந்து பாபநாசம்

ஸ்டேஷனெரி 2-வது கிளாஸ் மாஜிஸ்ரேட்டு கோர்ட்டுக்கு மாற்றிப் பிறப்பித்திருக்கிற உத்தரவை புனராலோசனை செய்யும்படி நம்மை இந்த மனுவினால் பிரார்த்திக்கப்படுகிறது

அதே கக்ஷிக்காரன் ஷை கேசுகளை வேறு கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்று கொடுத்துக் கொண்ட மனுவின்பேரில் ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டு மாற்ற முடியாதென்று உத்தரவு செய்துவிட்டபிறகு கேசுகளை ஒரு கோர்ட்டிலிருந்து மற்றொரு கோர்ட்டுக்கு மாற்றும் விஷயமாய் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் யூகத்தை இந்தக் கேசுகளை மாற்றும் விஷயத்தில் செலுத்த தடுக்கப்பட்டிருக்கிறார் என்பது தான் முக்கியமான தாவாவாக யிருக்கிறது. ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டு முன் செய்திருக்கும் உத்தரவுக்கு சம்பந்தமில்லாமலேயே தானாகவேயே இந்தக் கேசுகளை ஒரு கோர்ட்டிலிருந்து இன்னொரு கோர்ட்டுக்கு மாற்றுவதற்கு டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகார மிருப்பதாக மனுதாருடைய வக்கீலே ஒப்புக்கொள்ளுகிறார்.

மனுதாருடைய ஆக்ஷேபனைக்கு அனுஸரணையாக கிரிமினல் புரோஸீஜர் கோடு 528-வது பிரிவில் யாதொரு நிபந்தனையும் காணப்படவில்லை. தாமன் செட்டிக்கும் அழகிரி செட்டிக்கும் நடந்து 1891-ம் ஹுத்து இ. லா. ரி. 14. ம. 399-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசின் தீர்மானமானது மனுதாருக்கு நேர் விரோதமானதாகயிருக்கிறது. ரெகுநாதபண்டாரத்துக்கும், சக்ரவர்த்தி அவர்களுக்கும் நடந்து 1903-ம் ஹுத்து இ லா. ரி. 26 ம. 140-ல் பிரசுரிக்கப்படிருக்கிற பாஷியம் அய்யங்காருடைய தீர்ப்பை மனுதார் பக்கம் ஆதாரமாக எடுத்துக்காட்டப் படுகிறது. அந்தத் தீர்மானத்தை ஸமீப காலத்துக்குள் நாராயணஸாமி அய்யருக்கும் குப்புஸாமி அய்யருக்கும் நடந்த 1916-ஹுத்திய கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 487-ன் தீர்மானத்திலும் அனுஸரிக்கப்பட்டிருக்கிறது. பின் சொன்ன கேசானது லா ரிப்போர்ட்டுகளில் பிரசுரம் செய்யப்படவில்லை. தெரிகிறமட்டில் தாமன் செட்டிக்கும் அழகிரி செட்டிக்கும் நடந்த கேசின் தீர்மானத்தை ரெகுநாத பண்டாரத்துக்கும் சக்ரவர்த்தி அவர்களுக்கும் நடந்த கேசைப் பைசல் செய்த கற்றறிந்த ஜட்ஜ் அவர்களுக்கு எடுத்துக் காட்டப்படவில்லை. அந்த ஜட்ஜ் அவர்களுக்கு மிகவும் மரியாதை அளிப்பதுடன் அவர்களுடைய அபிப்பிராயத்தில் நாங்கள் கலந்துகொள்ள முடியவில்லை. ஆகையால் டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்ட்ரேட்டு தானாகவேயே தன் இச்சைப் பிரகாரம் செய்யும் உத்தரவுகளுக்கும் கக்ஷிக்காரர்களுடைய மனுவின் பேரில் செய்யும் உத்தரவுகளுக்கும் வித்தியாசம் எடுத்துக் காட்டுவது முடியாத காரியம்.

நாம் பிரவேசிப்பதற்குரிய தக்க வேறு யாதொரு முகாந்தரங்களும் காண்பிக்கப்படவில்லை. ஆகையால் இந்த மனுவைத் தள்ளுபடி செய்திருக்கிறோம்.

I. L. R. 40. M. 791. இ. லா. ரி. 40. ம 791.

நெ. 67

APPELLATE CIVIL.
ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியார் / மிஸ்டர் ஜஸ்டிஸ் பில்லிப்ஸ். }

1914-ம் ஹுத்து 2-வது அப்பீல் நெ. 2203.

ராஜராஜேஸ்வரி அம்மாள் (வாதி) அப்பீல் வாதி.

v.

சுப்பிரமணிய அர்ச்சகரும் பின்னும் 2 பேர்களும் (பிரதிவாதிகள்) அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாயிண்ட்:—ஹிந்துலா—மத ஸம்பந்தமான உத்தியோகம்—வார்ஸ் கிரமப்படி பாத்தியதையை அடைந்து பதில் ஆள் வைத்து வேலைபார்க்கும் பாத்தியதை.

ஒரு கோவில்அர்ச்சகர் உத்தியோகம் போலுள்ள பாம்பரையானதும் மதஸம்பந்த மானதுமான உத்தியோகத்தை வார்ஸ் கிரமப்படி ஒரு பெண்பிள்ளை அடைவதை ஹிந்துலாவாவது, வழக்கமாவது, தடுக்கமாட்டாது. ஸ்திரீ ஜாதியாகயிருக்கும் காரணத்தால் அவள் செய்வதற்குத் தகுதியற்றவளாக யிருக்கக் கூடிய அலுவலை அவள் பதில் ஆள் நியமித்துச் செய்து கொடுக்கலாம்.

ராமசுந்தரம் பிள்ளைக்கும்—சவுந்தரத்தம்மாளுக்கும் நடந்து 1914-ம் ஹுத்து 18. ம. லா. டை. 423-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசினுடையவும், தங்கிரள் சிரஞ்சீவிக்கும், ராஜமாணிக்க ராவுக்கும் நடந்து 1914-ம் ஹுத்து 27. ம. லா. ஜ. 179-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசினுடையவும் தீர்மானங்களை அனுஸரிக்கப் பட்டது.

சுந்தராம்பாள் அம்மாளுக்கும், யோகவன குருக்களுக்கும் நடந்து 1915-ம் ஹுத்து இ. லா. ரி. 38. ம. 850-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசின் தீர்மனத்தை அனுஸரிக்கவில்லை.

கேசின் சுருக்கம்:—1912-ம் ஹுத்து அஸல் வியாச்சிய நெ. 499 ல் திருவாடி டிஸ்டிரிக்ட்டு முன்ஸீப் C. கோவிந்தன் நாயர் செய்த டிக்கிரியின் பேரில் 1914-ம் ஹுத்திய 90-ம் நெ. அப்பீல் செய்யப்பட்டு ஷை அப்பீலில் தஞ்சாவூர் ஸபார்டிநேட் ஜட்ஜி P. C. திருவேங்கடாச் சாரியார் செய்த தீர்ப்பின் பேரில் கொண்டுவரப்பட்டிருக்கிற 2-வது அப்பீல் இது.

இந்தக் கேசின் சங்கதிகள் ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பின் 2-வது பாராவினால் வெளியாகும்.

லாயர்கள்:—G. S. வெங்கட்டராம ஐயரும், G. S. ராமச்சந்திர ஐயரும் அப்பீல் வாதிகளுக்காகவும், S. சுப்பிரமணிய அய்யர், அப்பீல் பிரதிவாதிகளுக்காகவும் ஆஜரானார்கள்.

ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பு:—குடும்பத்தில் பரம்பரையாக உள்ள ஒரு அர்ச்சகர் உத்தியோகத்தை ஷை உத்தியோகத்துக்குரிய கடமைகளைத் தானே நேரில் செய்வதற்குத் தகுதியற்றவளாக யிருக்கும் ஒரு பெண் வார்சு அடைந்து அதற்கு யேர்ப்பட்ட மானிய முதலியதைப் பெற்றுவர அர்ஹையானவளா வென்று தீர்மானிக்க வேண்டிய விஷயம் ஒன்றுதான் இந்த 2-வது அப்பீலில் பைசல் செய்யப்பட வேண்டியதாக யிருக்கிறது. டிஸ்டிரிக்ட்டு முனிஸீப் வாதிக்கு அனுகூலமான டிக்கிரியைப் பிறப்பித்தார். இந்தக் கேஸில் சம்பந்தப்பட்ட சங்கதிகள் சம்பந்தமான விஷயங்களில் எல்லாம் டிஸ்டிரிக்ட்டு முனிஸீபினுடைய அபிப்பிராயத்துடன் ஸபார்டிநேட் ஜட்ஜி இணங்கியும் சுந்தராம்பாள் அம்மாளுக்கும் யோகவன குருக்களுக்கும் நடந்து 1915-ம் ௵த்து இ. லா. ரி. 38. ம. 850-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேஸின் தீர்ப்பானது ஷை வேலைக்கு பெண்பிள்ளைகள் வார்சு கிரமப்படி வருகிறதற்கு தகுதியற்றவர்களாக யிருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாக யேர்ப்பட்டிருக்கிறது என்ற காரணத்தின் பேரில் வாதி வியாச்சியத்தை தள்ளி விட்டார்.

பரம்பரையாக யேர்ப்பட்டிருக்கிற மத ஸம்பந்தமான உத்தியோகங்களை பெண்பிள்ளைகள் வார்சு கிரமப்படி அடைந்து அந்த உத்தியோகங்களுக்குரிய கடமைகளை பதில் ஆள் வைத்து பார்க்கும் பாத்தியதையை ஸ்தாபித்து அநேக தீர்மானங்களிருக்கின்றன. ராமச்சந்திரம் பிள்ளைக்கும் சவுந்தரத் தம்மாளுக்கும் நடந்து 1914-ம் ௵த்து ம. லா. டை. 432-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேஸின் தீர்மானத்தில் இந்த விஷயமான முக்கியமாயுள்ள கேசுகளை யெல்லாம் திரட்டி வியவஹரிக்கப் பட்டிருக்கின்றன வென்றும், சுந்தராம்பாள் அம்மாளுக்கும் யோகவன குருக்களுக்கும் நடந்து 1915-ம் ௵த்து இ. லா. ரி. 38 ம. 850-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேஸின் தீர்மானத்தில் ஜஸ்டிஸ் ஸதாசிவ அய்யர் வியவஹரித்து பைசல் செய்திருக்கும் விஷயங்கள் சம்பந்தப்பட்ட கக்ஷிக்காரர்கள் பொதுவாய் ஒப்புக் கொள்ளததாகவும் வெகுகாலமாக கோர்ட்டுகளில் ஒப்புக்கொள்ளப்படாததுமான மாதிரியாக யிருப்பதாகவும், ஜஸ்டிஸ் எய்லிங்கும் ஹானேயும் சொல்லியிருக்கிறார்கள். இந்தக்கேஸிலும் முன் சங்கதிகள் எப்படி நடக்க வேண்டுமென்று பைசல் செய்யப்பட்டிருக்கிறதோ அந்தப்படியே நடந்து வர வேண்டியதே யல்லாமல் பழக்கமாய் நடந்து வருகிற சங்கதியைக் கெடுத்து வேறவிதமாக் அனுஷ்டிப்பதற்குரிய யேர்ப்பாடுகளை செய்யவேண்டுமென்ற விதியை அனுஷ்டிக்கக் கூடாதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். நமக்குத் தெரிந்தமட்டிலும் அநேக வருஷகாலமாக யாதொரு கெடுதலு மில்லாமல் அனுஷ்டிக்கப்பட்டும் அதன் மூலமாக அநேக பாத்தியங்கள் யேர்ப்படுத்தப்பட்டும் வந்திருக்கிற சங்கதிகளை சட்ட விரோதமானதென்று தீர்மானிப்பது சரியல்ல.

மத ஸம்பந்தமான உத்தியோகத்தை வார்ஸ் கிரமப்படி அடைவது தொன்று தொட்டு வழங்கிவரும் வழக்கத்தினுல் யேர்ப்பட்ட சங்கதியாக யிருக்கிறது. அந்த உத்தியோகங்களுக்கு யேர்ப்பட்ட மானியபிரா போகங்களைப் பெற்றுக்கொண்டு ஷை உத்தியோகத்துக்குரிய அலுவல்களை பதில் ஆள் மூலமாய் நடத்தி வருவதும், அப்படி செய்யும் பாத்தியதையைக் கோர்ட்டுகளிலும் ஒப்புக்கொண்டிருப்பதும் மதஸம்பந்தமான உத்தியோகங்களுக்குப் பெண்களும் வார்ஸ்கள்தானென்று தீர்மானிப்பதற்குரிய நியாயமாகும். பதில் ஆளைவைத்து மதஸம்பந்தமான சடங்குகளைச் செய்விப்பதற்கு பெண்பிள்ளைகளுக்கு யிருக்கும் பாத்தியதையானது ஹிந்து லாவாலும் ஹிந்துக்களுடைய அனுஷ்டானத்தினுலும் ஆதரிக்கப்படுகிறது. இதற்கு ஸர்வ ஸதாரணமான உதாரணங்கள் பெண்பிள்ளைகள் பதில் ஆள்களைக் கொண்டு சிராத்தாதிகளும் உத்தரக்கிரியைகளும் செய்வதிலும், ஒரு விதவை தத்து எடுத்துக் கொள்வதிலும் செய்யப்படுகிற கிரியைகள் தான்.

தங்கிரள் சிரஞ்சிவிக்கும் ராஜமாணிக்க ராவுக்கும் நடந்த 1914-ம் ௵த்து ம. லா. ஜ. 179-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேஸின் தீர்மானத்தில் கோவில் உத்தியோகங்களுக்கு பெண்பிள்ளைகள் வார்சுகளாக வருவதற்கு தகுதியற்றவர்களென்று நினைக்க யாதொரு ஆதாரமுமில்லை யென்றும், அநேகக் கோவில்களில் பதில் ஆள்களே கோவில் காரியாதிகளைப் பார்த்து வரும் வழக்க மிருந்துவருவதால், பெண்கள் வார்ஸ்களாவதற்குத் தகுதியற்றவர்களென்று ருஜூச் செய்யும் பாரமானது தர்மகர்த்தர்களைச் சேர்ந்த தென்றும் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸனும், மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தர அய்யரும் பைசல் செய்திருக்கிறார்கள். அவர்கள் பைசல் செய்த கேஸில் கோவிலில் வேதமந்திரங்கள் சொல்லும் உத்தியோகத்தைப் பதில் ஆள்களைக் கொண்டு செய்வித்ததைப் பற்றி தீர்மானித்திருக்கிறார்கள். அந்தப்படி வேத மந்திரங்களை பதிலிகளைக் கொண்டு சொல்லும்படி செய்வதற்கும், அர்ச்சக உத்தியோகத்தை பதிலிகளைக் கொணடு நடத்துவதற்கும் யாதொரு வித்தியாசமு மிருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. பெண்பிள்ளைகள் வார்சு பாத்தியதையை அடைவதற்கு விசேஷ வழக்க மிருப்பதாக கக்ஷிசொல்லி ருஜூச் செய்திருக்க வேண்டுமென்று ஸபார்டிநேட் ஜட்ஜ் அபிப்பிராயப்பட்டது பிசகு. அப்படிப் பெண்களுக்கு பாத்தியமில்லையென்று கக்ஷி சொல்லியார் ஆக்ஷேபிக்கிறார்களோ அவர்கள்தான் பெண்களுக்கு வார்ஸ் பாத்தியம் கிடைக்கிற வழக்கமில்லை யென்பதை ருஜூச் செய்யவேண்டும்.

மஹாமாயடெபிக்கும், ஹரிதாஸ் ஹால்டாருக்கும் நடந்து 1915-ம் ௵த்து இ. லா. ரி. 42 கல் 455-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசானது காளி கட்டக் கோவிலில் இந்த இராஜதானியில் அர்ச்சகர்கள் உத்தியோகம் எப்படியோ அதைப்போலொத்த ஒரு உத்தியோக விஷயமாக நடந்தகேசு. அந்தக் கேஸில் இப்பேர்ப்பட்ட கேசுகள் சம்பந்தமான அநேக ஆதாரங்களை ஆராய்ந்து பார்த்துவிட்டு, மதஸம்பந்தமான் உத்தியோகங்களுக்கு பெண்பிள்ளைகள் வார்ஸ் பாத்தியதையை அடைவது மன்னியில் அவைகளை பாராதீனம் செய்வதும் வழக்கமென்றும் அப்படிச்செய்வதானது செல்லக் கூடாத தில்லையென்றும் ஜஸ்டிஸ் மூகர்ஜி தீர்மானித்திருக்கிறார். காக்கராமய்யாவுக்கும், படப்பியாவுக்கும், நடந்து 1906-ம் ௵த்து 8. ம லா. டை. யில் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேஸில் அப்படி பாராதீனம் செய்ததையும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. பெண் வார்ஸ் மத ஸம்பந்தமான உத்தியோகத்தை வார்ஸ் கிரமத்தில் தனக்கு அடுத்த வார்ஸ்தாரனுக்கு பாராதீனம்செய்யலாம் என்பதற்கும் ஆதாரமிருந்தாலும், மற்றப்படி அப்படி பாராதீனம் செய்வதற்கும் பாத்தியதை உண்டென்பதை இந்தக் கேஸில் தீர்மானிப்பது அனுவசியம். ஆதாரங்க ளிருக்கிறமட்டில், அப்பேர்ப்பட்ட வழக்கமானது ஹிந்து லாவில் விபக்தமாகச்சொல்லப்பட்டிருக்கிற விஷயத்துக்கும் ஜன ஸமூகத்தவர்களுடைய சம்மதத்துக்கும் எதிரிடையா யிருப்பதாகச் சொல்லி மத ஸம்பந்தமான பரம்பரை உத்தியோகங்களுக்கு பெண்பிள்ளைகள் வார்சு பாத்தியதை உடையவர்களல்ல வென்று தீர்மானிப்பதற்கு யாதொரு காரணமுமில்லை யென்று நினைக்கிறோம்.

ராமசுந்தரம் பிள்ளைக்கும், சவுந்தரத்தம்மாளுக்கும் நடந்து 1914-ம் ௵த்து 16. ம. லா. டை. 423ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறதும், தங்கிருள சிரஞ்சிவிக்கும், ராஜமாணிக்கியராவுக்கும் நடந்து 1914-ம் ௵த்து 27 ம. லா. ஜ. 179-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதுமான கேசுகளின் தீர்மானங்களை அனுஸரித்து மத ஸம்பந்தமான பரம்பரை உத்தியோகங்களுக்கு பெண்பிள்ளைகள் வார்சு பாத்தியதையின் பேரில் அடைவதற்குத் தகுதியற்றவர்களில்லை யென்றும், அப்படி ஷை வேலைகளைப் பெற்று அவைகளை தாங்கள் பெண்பாலராக யிருப்பதையிட்டு தாங்களே நேரில் செய்யக் கூடாதாகையால் பதிலி வைத்துப் பார்க்கலாமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

ஆகையால் ஸபார்டிநேட் ஜட்ஜினுடைய தீர்ப்பை ரத்து செய்து அவரால் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிற 2-வது விஷயத்தைப்பற்றித் தீர்மானிப்பதற்காக ஸப் ஜட்ஜிக்கே இந்தக் கேசைத்திரும்ப அனுப்பும்படி உத்தரவு செய்திருக்கிறோம். இந்த அப்பீல் செலவை அப்பீல் வாதிக்கு அப்பீல் பிரதிவாதி கொடுக்கவேணும். ஸப் கோர்ட்டில் கேசு முடிவு செய்யப்படுவதின் பேரில் செலவைப்பற்றி முடிவு தெரியும்.

I. L R. 40. M. 105. இ. லா. ரி. 40. ம. 105.

—

நெ. 68

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீம்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் }

1914-ம் ௵த்து ஸிவில்ரிவிஷன் மனுக்கள நெ. 925, 926.

கல்லூரு ராமலிங்கமும் பின்னும் மூன்று பேர்களும் ஸம்பந்தப்பட்ட விஷயமாக—(மனுதார்கள்.)

ஸாராயிண்ட:—1898-ம் ௵த்திய 5-வது ஆக்ட்டாகிய கிரிமினல் புரோஸீஜர் கோடின் 476-வது பிரிவின் தாத்பரியம்—நடபடிக்கையின், கக்ஷிக்காரனுல் செய்யப்படாத குற்றச் செய்கை.

1898-ம் ௵த்திய 5-வது ஆக்ட்டாகிய கிரிமினல் புரொஸீஜா கோடின் 476-வது பிரிவானது ஒரு நடபடிக்கையில் ஆஜர் செய்யப்பட்ட அல்லது சாக்ஷியமாகத் தாக்கல் செய்யப்பட்ட தஸ்தாவேஜு விஷயமாய் ஷை நடபடிக்கையில் கக்ஷிக்காரனுக யில்லாத ஒருவனுல் செய்யப்பட்ட குற்றச் செய்கை விஷயத்துக்கு பொருந்த மாட்டாது:

அப்துல் காதருக்கும் மீராஸாயப்புவுக்கும் நடந்து 1892-ம் ௵த்து இ. லா. ரி. 15. ம. 224-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேஸின் தீர்மானத்தை அனுஸரிக்கப்பட்டது.

கேஸின் சுருக்கம்:—1902-ம் ௵த்து ஸ்மால்காஸ் வியாச்சிய நெ. 74-ன் விஷயமாக தாக்கல் செய்யப்பட்ட 1914-ம் ௵த்து 1281-ம் நெ. நிறை வேறுதல் மனு ஸம்பந்தமாக மனுதாரை 1860-ம் ௵த்து 45-வது ஆக்ட்டாகிய இந்தியன் பினல் கோடு 476-வது பிரிவுப்படிக்குள்ள குற்றத்திற்காக ஸமீபத்திலுள்ள 1-வது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டிடம் அனுப்பிவித் திருப்பதாக நெல்லூர் பிரதான டிஸ்டிரிக்ட்டு முனிஸீப் S. ராமஸாமி அய்யங்கார் செய்த உத்தரவின் பேரில் 1908-ம் ௵த்து 5-வது ஆக்ட்டாகிய ஸிவில் புரோஸீஜர் கோடு 115-வது பிரிவுப்படிக்கும் லெட்டர்ஸ் பேடெண்டு 15-வது பிரிவின் படிக்கும் மேல்கண்ட நடபடிக்கையை புனராலோசனை செய்யும்படிக்கும் பிரார்த்தித்து தாக்கல் செய்யப்பட்ட மனு.

இந்தக் கேஸின் சங்கதிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர், ரஹீம் தீர்ப்பினுல் வெளியாகும்.

லாயர்கள்:—மனுதார்கள் பக்கம் T. V. வெங்கட்டராம அய்யரும், எதிர்மனுதார் பக்கம் மாதவன் நாயரும் ஆஜரானார்கள்.

மனுதார்கள் பக்கம் வக்கீல்:—195-வது பிரிவில் கண்ட விசேஷணங்களைக் கவனியாமலே யிருந்துவிடக்கூடுமாகில் சட்டத்தில் அவ்விதம் சொல்லப்பட்டிருக்கும். அகில்ச்சந்திராவுக்கும், சக்ரவர்த்தினி அவர்களுக்கும் நடந்த 1895-ம் ௵த்து 22. கல். 1004-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேஸில் மிகவும் ஸாதாரணமான அபிப்பிராயப் பட்டார்கள். அதற்குப் பின்னால் பைசல் செய்யப்பட்டதாகிய தர்ம தாஸ்காவாருக்கும் சக்ரவர்த்தி அவர்களுக்கும் நடந்த 1908-ம் ௵த்து 7. கல். லா. ஜ. 373-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேஸில் "தகவலுக்குக் கொண்டுவரப்பட்ட" என்ற சொல் தொகுதிக்கு வேறுவிதமாக அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ஜாடுநந்தன் ஸிங்குக்கும் சக்ரவர்த்தி அவர்களுக்கும் நடந்த 1910-ம் ௵த்து இ. லா. ரி. 37. கல். 250-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேஸின் தீர்மானத்தையும் பார்க்க. கி. பு. கோடு 195, 476-வது பிரிவுகள் ஒன்றுக்கொன்று அநுஸாரணையான பிரிவுகளாக யிருக்கின்றன. அய்யாக் கண்ணுப் பிள்ளைக்கும், சக்ரவர்த்தி அவர்களுக்கும் நடந்த 1909-ம் ௵த்து இ. லா. ரி. 32. ம. 49-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற புல்பெஞ்சு (Full Bench) தீர்மானத்தில் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயங்கள் அந்தக் கேஸின் பைசலுக்கு அவசியமில்லாத தன் சொந்த அபிப்பிராயமே (Obiter) யல்லது வேறில்லை.

எதிர் மனுதார்கள் பக்கம் வக்கீல்:—அப்துல் சாதருக்கும், மீராஸாகிப்புக்கும் நடந்த 1892-ம் ௵த்து இ. லா. ரி. 15. ம. 224-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேஸில், இப்போது தாவாவிலிருக்கும் விஷயமானது அந்தக் கேசைப் பைசல் செய்த ஜட்ஜிகளின் ஆலோசனைக்கு வரவில்லை. அல்லாமலும் அந்த விஷயத்தைப்பற்றி வாதிக்கவும் இல்லை. இந்தச் சங்கதிக்கு நேரில் சம்பந்தப்பட்டவைகளான கேசுகளாவன:—அகில்ச்சந்திராவுக்கும், சக்கிரவர்த்தினி அவர்களுக்கும் நடந்த 1895-ம் ௵த்து இ. லா. ரி. 22-கல். 1004-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசு-தேவ்ஜீ வால்ட்பாவனி ஸம்பந்தப்பட்டு 1894-ம் ௵த்து இ. லா. ரி. 18. பம். 581-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசு இவைகள் தான். கர்வார்பிரஸாதுக்கும் சக்கிரவர்த்தி அவர்களுக்கும் நடந்த 1909-ம் ௵த்து அல. லா. ஜ 392-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேஸையும் பார்க்க

மனுதார்கள் பக்கம் வக்கீல் மறுமொழி:—கர்வார் ப்ரஸாதுக்கும் சக்கிரவர்த்தினி அவர்களுக்கும் நடந்த 1895-ம் ௵த்து இ. லா. ரி. 22-கல், 1004-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேஸில் இந்த விஷயத்தைப் பற்றி யோசிக்கப்படவில்லை. அந்தக் கேஸில் யோசிக்கப்பட்ட விஷயமெல்லாம் உடனே அமுல் நடத்த வேண்டுமா வென்பதுதான்.

ஜஸ்டிஸ் அப்துர்ரஹீம்:—கிரிமினல் புரொஸீஜர் கோடு 476 வது பிரிவின்படி செய்யப்பட்ட ஒரு உத்தரவை ரத்து செய்யும் பொருட்டு இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. தன் கோர்ட்டில் நடந்த ஒரு நிறைவேறுதல் நடபடிக்கை ஸம்பந்தமாய் டிஸ்டிரிக்ட்டு முனிஸீப் இந்த உத்தரவைச் செய்தார். டிக்கிரி நிறைவேற்றுவதற்காக ஜப்திசெய்யப்பட்ட சொத்தை டிக்கிரிக்கடன்காரன் ஒரு மூன்றுவது மனுஷனுக்குக் கிரயம் செய்ததாகச்சொல்லி, கிரயத்துகைக்கு வாங்கினவன் தன் பாத்தியதை விஷயமாய் மனு தாக்கல் செய்தான். அந்த கிரய தஸ்தாவேஜுக்கு பிரதிப்பிரயோஜனமாக 2 பிராமிஸரி நோட்டுகள் எழுதிக் கொடுக்கப்பட்டன. அந்த 2 நோட்டுகளும் சிருஷ்டனையென்று கற்றறிந்த டிஸ்டிரிக்டு முனிசீப் ஸந்தேகிப்பதற்குள்ள காரணங்களிருந்தன. தன் பாத்தியதையை ஊர்ஜிதப்படுத்த வேண்டுமென்று மனுச் செய்தவன் தன் மனுவைமேல்நடத்த ஆஜராகவில்லை. ஆனால் டிஸ்டிரிக்ட்டு முனிஸீப் தஸ்தாவேஜு எழுதிக் கொடுத்தவனையும், பிராமிஸரி நோட்டுகளில் இரெண்டில் ஒன்றில் அறிவு சாக்ஷி போட்டிருந்த ஒருவனையும்விசாரணை செய்து, மனுதார்கள், அதாவது ஷை நோட்டுகளை எழுதிக் கொடுத்தவனும் அறிவு சாட்சி போட்டவர்களும் சேர்ந்து ஷை நோட்டுகளை சிருஷ்டனைசெய்திருப்பதாகவும், அவர்களை பிராஸிகியூஷன் செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்தார். இந்த விஷயத்தில் கிரிமினல் புரொஸீஜர் கோடு 476-வது பிரிவு பொருந்துமா வென்ற விஷயம்தான் தீர்மானிக்கப் படவேண்டியதாயிருக்கிறது. கி. பு. கோடு 195 வது பிரிவில் காணப்பட்டதும், ஒரு நியாய விசாரணையில் தன் முன்பாகச் செய்யப்பட்டு அல்லது தன்னுடைய தகவலுக்குக் கொண்டுவரப் பட்டதாயுமுள்ள குற்றம் ஸம்பந்தமாய் யாதாமொரு ஸிவில் கிரிமினல் அல்லது ரிவினியூ கோர்ட்டார் பிராஸிகியூஷன் செய்யும் படியாக உத்தரவு செய்யலாமென்று ஷை பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் இப்போது தீர்மானிக்க வேண்டிய விஷயமெல்லாம் 195-வது பிரிவில் காணப்பட்ட குற்றங்களில் ஒன்று செய்யப்பட்டும் ஆனால் அந்தக் குற்றச் செய்கையை கோர்ட்டு முன் நடக்கும் கேஸில் சம்பந்தப் படாத ஒருவன் செய்தால் இந்தப்பிரிவின் நிபந்தனைகள் பொருந்துமா வென்பது தான். சாட்டப்பட்டிருக்கிற குற்றங்கள் 195-வது பிரிவின் C. உள்பிரிவுப் பிரகாரமாகின்றன. அந்தப் பிரிவில் "463-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற அதே கோடின் 471, 475, அல்லது 476-வது பிரிவின்படி தண்டிக்கப் படக்கூடிய எந்தக் குற்றமும் ஒரு கோர்ட்டில் நடந்து கொண்டிருக்கிற நடபடிக்கையின் கக்ஷிக்காரர் எவராலாவது ஷை கேஸில் ஆஜர் செய்யப்பட்ட அல்லது சாக்ஷியமாக தாக்கல் செய்யப்பட்ட ஒரு தஸ்தாவேஜு விஷய அந்தக் குற்றம் செய்யப்பட்டால் அந்தக் கோர்ட்டாருடைய முன் அநுமதி யன்னியில் வகையறு..." என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக்கேஸில் சிருஷ்டனைக் குற்றம் யேதும் செய்யப்பட்டிருந்தால் டிக்கிரியை நிறைவேற்றுகிற கோர்ட்டுமுன் நடந்த நடபடிக்கையில் சம்பந்தப்பட்ட ஒரு கக்ஷிக்காரனால் செய்யப்படவில்லை. அந்த விசேஷணத்தை 476-வது பிரிவின் நிபந்தனைகளுடன் சேர்ப்பதாக யிருந்தால் பிரஸ்தாப உத்திரவைச் செய்ய டிஸ்டிரிக்ட்டு முனிசீப்புக்கு அதிகாரமே கிடையாது. இவ்[illegible]பற்றிய தீர்மானங்கள் பரஸ்பர விருத்தமாகயிருக்கின்றன. கல்கத்தாவில் இதைப்பற்றிய அபிப்பிராயம் பற்பல வகையாக யிருக்கிறது.

(இன்னும் வரும்.)

DIEU ET MON DROIT

The Indian Law Gazette.

PART I.

இந்திய சட்ட கெஜெட்.

1906-௵ ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் I.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917௵ டிசம்பர்௴ [நெ. 12.

EDITORIAL.

பத்திராதிபர் வியாசம்.

THE MASSES & THE LAW.

கிராமாந்தர ஜனங்களும் சட்டமும்.

(முன் மாதத் தொடர்ச்சி.)

சென்ற மாதப் பத்திரிகையின் வியாஸத்தில் சட்டத்தின் ஸாராம்சம் பாலவிருத்தர்களுக்கும், ஆண்களுக்கும், பெண்களுக்கும், எளியோருக்கும், வலியோருக்கும் ஒன்று போல தெரிந்திருக்கவேண்டியது எப்படி அவசியம் என்பதைப் பற்றி பற்பல உதாரணங்களால் சொன்னலின்றி வியக்தமாகத் தெரிவது வருத்தம் என்றும் ஆகையால் இது விஷயங்களைப் பற்றி ஒன்றின்பின் ஒன்றாய் விவரித்துச் சொல்லப்படுமென்றும் சொல்லியிருக்கிறோம்.

பாலர்கள் என்பதனல் சாதாரணமாக கேவலம் குழந்தைகள் என்று மாத்திரமல்லாது 12-வயதுக்கு மேல் 16-வயதுக்குட்பட்டவர்கள் என்றே வைத்துக் கொள்ளவேண்டும். 12-வயதுக்கு மேல்பட்டு 16-வயதுக்குட்பட்டவர்களா யிருக்கும் பருவத்திலுள்ளவர்களுக்குத் தாங்கள் செய்யும் செய்கைகளின் முடிவில் ஏற்படக்கூடிய ஸாதக பாதகங்கள் இன்னதென்பது தெரியக்கூடியதே ஸம்பாவிதமாகும். அதாவது ஒரு கல்லை ஒருவர்பேரில் எறியும் விஷயத்தில், அந்தக் கல் எறியப்படுபவருடைய தேகத்தில் எந்த பாகத்தில் படுகிறதோ அந்த பாகத்தின் மர்மத்துக்குத் தக்கபடி ஜாஸ்தி கம்மியான அபாயகரமான காயங்கள் ஏற்படுமென்றும், ஒரு வைக்கோல் படப்பு அல்லது தீப்பற்றிக் கொள்ளக்கூடிய வஸ்துவில் தீயை வைக்கும் விஷயத்தில் அதனல் யேற்படக் கூடிய பொருள் சேதம் உயிர்ச்சேத முதலியவைகள் ஷை வஸ்துக்களில் தீவைக்கும்போது இருந்த நிலைமைக்குத் தக்கபடி ஏற்படக் கூடியதென்பது மேல் கண்ட பாலப்பருவத்தவர்க்குத் தெரியவருமென்பதில் ஸந்தேகமில்லை. ஆகையால் இப்பேர்ப்பட்ட பருவத்திலுள்ளவர்களால் செய்யப்படும் குற்றச் செய்கைகள் பாலியப் பருவத்திலுள்ளவர்களால் செய்யப்பட்டசெய்கைகளென்று மன்னிக்கப்படமாட்டா. மேலும் 7-வயதுக்கு மேல்பட்டவர்கள் தாங்கள் செய்யும் செய்கைகளின் முடிவு இன்னதாகுமென்று அறிந்துக் கொள்ளக் கூடிய நுட்பமான புத்தியை யுடையவர்களாக யிருக்கும் விஷயத்தில் அவர்களால் செய்யப்படும் குற்றச் செய்கைகளும் மன்னிக்கப்படமாட்டா வென்பதே சட்டமாகவிருக்கிறது. ஆகையால் பாலப்பருவத்திலேயே ஒருவனல் செய்யப்படும் குற்றச் செய்கைகளும் தண்டிக்கப்படக்கூடியதே யாகுமென்றல், பாலர்களும் குற்றச் செய்கைகளைச் செய்யாது ஒழிக்குமாறு, சட்டத்தின் ஸாராம்ச மின்னதென்பதை பாலர்களும் தெரிந்து கொள்ள வேண்டுவது அவசியமாக யிருக்கிறது. பாலர்

கள் தெரிந்து கொள்ள வேண்டிய சட்டம் கிரிமினல் சட்டதிட்டங்களேயாகும். பாலப்பருவம் கடந்த பிறகு ஸிவில், ரிவினியூ சட்டங்கள் தெரிந்திருக்கவேண்டிய அவசியம் எல்லோருக்கும் யேர்ப்படுகிறது.

தக்க ஐவேஜுள்ளவர்கள் ஸ்தாவரம் என்னும் அசையாப் பொருள்களை கிரயத்துக்கு மற்றொருவனிடமிருந்து வாங்கும்போது, ஷை சொத்தை கிரயத்துக்கு விற்பவனுக்கு ஷை சொத்து எவ்விதம் கிடைத்தது ஷை சொத்தை அவனுக்கு சட்டப்படி அடையவும் பராதீனம் செய்யவும் பாத்தியதை யுண்டாவென்ற விஷயமும், ஒருவனுக்குக் கடன் கொடுக்கும்போது அவன் கடன் வாங்கினுல், ஷை கடனுக்கு ஷையானுடைய குடும்பச் சொத்தைக் கட்டுப்படுத்தக்கூடுமா, கொடுத்த கடன் வசூலாகுமா வென்ற பற்பல சங்கதிகளையும் தெரிந்து கொள்ளவேண்டியதிருக்கிறது. மேல்கண்ட விஷயங்கள் சம்பந்தமாய் ஹிந்து குடும்பங்களுக்காக விதிக்கப்பட்டிருக்கும் சட்டத்துக்கு 'ஹிந்து லா' வென்றும், கிறிஸ்தவர்கள் சம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சட்டத்துக்கு "இந்தியன் ஸக்ஸெஷன் ஆக்ட்" (Indian Succession Act) என்றும், மகம்மதியர்கள் ஸம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சட்டத்துக்கு "மஹமடன் லா" வென்றும் இவ்விதமே பற்பல ஜாதியார்களுக்குரிய பற்பல ஆக்ட்டுகள் யேர்ப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஏதும் ஐவேஜு மில்லாதவர்கள் ஸமீபமான வாரஸுகளில்லாமல் இறந்து போனவும் தங்களுக்கு அநேக தலைமுறை விட்ட தாயாதிக்காரனுகவும் யிருக்கும் ஒருவனுடைய சொத்துக்களை தாங்கள் அடையவேண்டியதாக நேரிடும் பொழுது அது விஷயமாகவும், அந்தந்த ஜாதியாருக்கு யெந்த லா சம்பந்தமோ அந்த லாவின் ஸாராம்சம் தெரிந்திருக்கவேண்டியதிருக்கிறது. விதவைகளாகப் போன பெண்பிள்ளைகளுக்கு ஸ்திரீதனம் விஷயமாகவும், ஸ்வீகாரம் விஷயமாகவும், ஜீவனும்சம் விஷயமாகவும், கடன்கள் விஷயமாகவும், சொத்தைப் பராதீனம் செய்வது விஷயமாகவும் அநேக சங்கதிகள் தெரிந்திருக்க வேண்டியதிருக்கிறது. யாருக்கு எந்த சொத்தில் எவ்வித பாத்தியதை யிருந்தாலுமே அந்தப் பாத்தியதையை ஸ்தாபித்துக் கொள்ளும் பொருட்டு வியாச்சியம் செய்வது தனக்கு இஷ்டப்பட்ட பொழுதும், சவுகரியப்பட்ட பொழுதும் செய்யக்கூடியதில்லை. அந்தந்த விஷயங்களுக்குத் தக்கபடி காலாவதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருவனுக்குள்ள பாத்தியதையை மறுக்கவாவது ரத்து செய்யவாவது வியாச்சியம் செய்வதற்கும் காலாவதி யேர்ப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கேஸின் பைசலின் பேரில் அப்பீல் தாக்கல் செய்யவும் காலாவதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த விஷயங்கள் அடங்கிய ஆக்ட்டுக்கு "காலநிர்ணய ஆக்ட்" (Limitation Act) என்று பெயர். ஏற்பட்ட காலாவதி தவறிச் செய்யப்படும் வியாச்சியங்கள் அங்கீகரிக்கப்பட மாட்டா. இம்வுலக வாழ்க்கைக்குரிய விஷயங்கள் ஸமஸ்தமும் ஓர் உடலாகவும் அவ்வுடலுக்கு சட்ட திட்டங்களின் ஸாராம்சங்களினுடைய ஞானமானது உயிராகவும் யேர்ப்படுகிறது. ஆகையால் சட்ட திட்டங்களின் ஸாராம்சம் இன்னதென்று தெரிந்திருக்க வேண்டுவது அத்தியாவசியமாகையால் அதன் பிரயோசனங்கள் இவ்வித வகைப்பட்டதென்பதை இதன்கீழ் ஒன்றன் பின் ஒன்றாக விவஹரிக்கப்பட்டிருக்கிறது உலகத்தில் எவரும் ஒரு ஸ்தாவர சொத்தை அதாவது ஒரு அசையாப் பொருளை கிரயத்துக்கு வாங்கும் பொழுது சட்ட சம்பந்தமான விஷயங்களை ஆலோசித்து சட்ட திட்டங்களுக்கிணங்க தஸ்தாவேஜுகளை பிறப்பிவித்துக் கொண்டாலின்றி கிரயத்துக்கு வாங்கும் சொத்தானது கிரயத்துக்கு வாங்குவோனுக்கு நிராக்ஷேபணையாக பாத்தியப்பட்டுப் போகமாட்டாது. கிரயத்துக்கு விற்றவனே தான் செய்த கிரயமானது சட்டத்தின் கோட்பாடுகளை அனுஸரித்துச் செய்யப்படவில்லை யென்பதை உத்தேசித்து ஒரு காலத்தில் ஏதும் ஆக்ஷேபணையைச் செய்வது இக்கலியுக தர்மத்துக்கு அடுத்ததாகவேயே யிருக்கிறது. மானிடர்கள் பொதுவாகக் கோரக்கூடிய விஷயங்கள் இஹ-பர ஸாதானங்களன்றி வேறில்லை. இஹத்தில் எது சங்கதியை ஆலோசித்துக் கூர்ந்து பார்த்தாலும், அதைச் செய்யவேண்டியதற்குரிய வழிகள் வெவ்வேறாக யேர்ப்பட்டிருக்கிறது. அந்தந்த சங்கதியை செய்ய வேண்டிய விதத்தை விட்டு வேறுவிதமாய்ச் செய்யும் விஷயத்தில் கோரிச்செய்ய ஆரம்பித்த விஷயம் ஸரிவர முடியமாட்டாது. பாமரர்களுக்கும் தெரியக்கூடிய விதமாக விஷயத்தை அறிவிப்பது நமது கொள்கையாக யிருப்பதனுல், இவ்வுலகத்திலுள்ள எத்தேசத்தவர்க்கும் எச்சாதியாருக்கும் பொதுவாயுள்ள ஆகாரத்தைப்பற்றிப் பேசுவோம். ஏற்படுத்தப் பட்டிருக்கிற ஒரு விதியை அனுஷ்டிப்பதானது கொஞ்சமும் அந்த விதியில் கண்ட நிபந்தனைகளை விட்டு பிசகாது நிறைவேற்றுவதாகும். அப்படி நிறைவேற்றுவதில் பிசகு நேரிடும் விஷயத்தில் செய்யும் காரியாதிகள் நிறைவேற மாட்டா. ஏனென்றால் விதிகளை யேர்ப்படுத்திய பெரியோர்கள் சங்கதிகளை நேரில் செய்து பார்த்து அவைகளைச் செய்வதினுல் யேர்ப்படும் ஸாதக பாதகங்களை நீடித்த அனுபோகத்தினுல் அறிந்து அதற்குத் தக்கபடி விதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால் ஷை விதிகளை விட்டு பிரளுகிறவர்களுக்கு காரியசித்தி ஆகமாட்டாது. மேலும் யேர்ப்படுத்தப் பட்டிருக்கும் விதிகள் எளியோருக்கும் வலியோருக்கும் ஒரேவிதமாகவேயே யேர்ப்படுத்தப் பட்டிருக்கிறது. பாக சாஸ்திரத்தில் பற்பல வகையான தின்பண்டங்களையும், உணவுகளையும் தயார் செய்வதற்குரிய விதிகள் யேர்ப்படுத்தப் பட்டிருக்கிறது.

(இன்னும் வரும்.)

MADRAS LEGISLATIVE COUNCIL.
சென்னை சட்ட நிரூபண ஸபை.

இது சென்ற நவம்பர்மீ 19, 20, 21உகளில், சென்னை ஸெயிண்டு ஜார்ஜ் கோட்டையின் ஸபாமண்டபத்தில் கூடினதில் அடியிற் கண்ட கனம் மெம்பர்கள் ஆஜராயிருந்தனர்.

கனம் ஸர். அலெக்ஸாண்டர் கார்டியூ, கனம் மிஸ்டர் H. F. W. கில்மன், கனம் திவான் பகதூர் P. ராஜகோபாலாச்சாரியார், கனம் மிஸ்டர். R. A. க்ரேஹம், கனம் அட்வோகேட் ஜனரல் மிஸ்டர். S. ஸ்ரீனிவாஸய்யங்கார், கனம் மிஸ்டர் W. T. J. ஹௌலி, கனம் மிஸ்டர் S. B. மர்ரே, கனம் மிஸ்டர் T. H. ஸ்டோன், கனம் ஸர். ப்ரான்ஸிஸ் ஸ்பிரிங், கனம் மிஸ்டர் B. V. நரஸிம்மய்யர், கனம் மிஸ்டர் A. S. கிருஷ்ணராவ் பந்துலு, கனம் மிஸ்டர் சூரியநாராயணராவ் பந்துலு, கனம் ஆர்காட் ப்ரின்ஸ், கனம் ரெவரண்ட் J. ஏலன், கனம் மிஸ்டர் C. H. ஹிக்கின் பாதம், கனம் மிஸ்டர் கார்டன்ப்ரேஸர், கனம் மிஸ்டர் E. F. பார்பர், கனம் மிஸ்டர் T. ரங்காச்சாரியார், கனம் K. குமாரன் ராமன்காவப்பா மூப்பில் நாயர், கனம் திவான் பகதூர். A. சுப்பராயுலு ரெட்டியார், கனம் மிஸ்டர் சிதம்பரநாத முதலியார், கனம் மிஸ்டர் யாகூப் ஹஸன் ஸாகிப் பகதூர், கனம் ராமநாதபுரம் ராஜா, கனம் போலாவரம் ஜமீன்தார், கனம் செருகாடா ஜமீன்தார், கனம் ரெவெரெண்டு G. பிட்டெண்ட்ரிக், கனம் மிஸ்டர் B. வெங்கிடபதி ராஜு, கனம் ராவ்பஹதூர் S. R. M. அண்ணாமலை செட்டியார், கனம் ராவ்பஹதூர் K. சூரியநாராயண மூர்த்தி நாயுடு காரு, கனம் மிஸ்டர் K. ஸதாசிவ பட், கனம் மிஸ்டர் T. ரிச்மாண்ட், கனம் மிஸ்டர் K. ராமய்யங்கார், கனம் மிஸ்டர் P. சிவராவ், கனம் ராவ் பஹதூர் M. ராமச்சந்திரராவ் பந்துலு, கனம் மிஸ்டர் V. K. ராமானுஜாச்சாரியார், கனம் ஸர் ராபர்ட் க்ளைக், கனம் மகம்மது ஆலீஸுடின் ஸாகிப் பஹதூர், கனம் மிஸ்டர் G. C. டாடண்டர், கனம் மிஸ்டர் M. E. கௌச்மேன், கனம் மிஸ்டர் L. E. பக்லி, கனம் மிஸ்டர் A. பட்டர்வர்த், திவான் பஹதூர் R. ராமச்சந்திரராவ், கனம் மிஸ்டர் A. R. காப், கனம் மிஸ்டர் Z. டேவிட்ஸன்.

சென்ற 6-மாதக் காலமாக சட்ட ஸபை கூடாததினுல் இந்தத் தடவை ஸட்டஸபையில் 120-கேழ்விகளுக்கு மேல் ஸபை முன் கொண்டுவரப் பட்டன. ஷை கேழ்விகளையும் அவைகளின் மறுமொழிகளையும் எல்லாம் நமது பத்திரிகையில் எடுத்துக் கூற நமது பத்திரிகை இடந்தராதாகையால் ஜனங்களுக்கு அத்தியாவசியமாகத் தெரியவேண்டிய விஷயங்களை மட்டிலும் இதில் எடுத்துக் கூறப் பட்டிருக்கிறது.

VILLAGE COURTS.
கிராமக் கோர்ட்டுகள்.

கனம் மிஸ்டர். H. F. W. கில்மன் C. I. E. சென்னை இராஜதானியிலுள்ள கிராமக் கோர்ட்டுகள் ஸம்பந்தமான சட்டத்தை சீர் திருத்துவதற்கான மசோதாவை ஆஜர் செய்து அதை ஸபையில் வாசிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டார்.

அப்படிச் செய்வதில், கிராமக் கோர்ட்டுகளை அதிக உபயோக முள்ளதாகச் செய்யவேண்டும், கிராமக் கோர்ட்டுகளுக்கு ஜாஸ்தியான அதிகாரத்தைக் கொடுக்கவேண்டுமென்ற இரண்டு நோக்கங்களுடன் ஷை மசோதா தயாரிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். 1915-16-ம் வருஷங்களில் கிராம முனிசீப் கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்பட்டு பைசல் செய்யப்பட்ட வியாச்சியங்களின் எண்ணிக்கை 125,000 என்றும் கிராமக் கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்பட்டு பைசல் செய்யப்பட்ட வியாச்சியங்களின் எண்ணிக்கை 8,000 என்றும் கணக்குகளினுல் துலங்குகிறது. கிராமக் கோர்ட்டுகளுக்கு யேர்ப்பட்டிருந்த மதிப்புக் குறைந்துகொண்டு வருவதாகத் தெரியவந்தது. அப்படி மதிப்புக் குறைவதற்குக் காரணம் அவைகளை ஏற்படுத்தி யிருப்பதின் மாதிரி (விதம்) தான். கிராமக் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு கேஸில் ஒரு மெம்பரை வாதியும் மற்றொரு மெம்பரை பிரதிவாதியும் தெரிந்தெடுத்துக் கொண்டார்கள். கிராமக்கோர்ட்டில் அந்தக் கேஸில் கிராம முனிஸீப் அக்கிராசனம் வகித்தார். ஷை கோர்ட்டின் மெம்பர்கள் பொதுவாக நிஷ்பக்ஷபாதமாக யிருப்பவர்களல்ல. தங்களை மெம்பராக தெரிந்தெடுத்துக்கொண்ட கக்ஷிக்காரனுக்கு அனுகூலமாகவே அந்தந்த மெம்பர் இருப்பதற்குரிய காரணங்களிலிருக்கின்றன. கடாசியில் கிராம முனிசீபினுடைய பைஸலே ஊர்ஜிதத்துக்கு வருகிறது. இந்தப் படிக்குள்ள கேசுகள் முக்கால்வாசி யிருக்கலாம். இந்த பாதகமான ஸங்கதிக்குப் பரிகாரம் செய்யும் பொருட்டாகத்தான் 5-மெம்பர்களுக்குக் குறையாமலும் 12-மெம்பர்களுக்கு மேல் போகாமலு முள்ள எண்ணிக்கையான மெம்பர்களை பஞ்சாயத்துக் கோர்ட்டுகளில் நியமித்தது. இந்த யேர்ப்பாட்டுக்கு அனுஸரணை யாகத்தான் மிஸ்டர் பிலிப்ஸும் சிபார்சு செய்தார். அதிக நாகரீகமடைந்த ஜில்லாக்களில் ஜனங்களுக்கு கிராமப் பெரிய தனக்காரர்பேரில் நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அவர்களுடைய அதிகாரவரம்பை ரூ. 20-லிருந்து ரூ 50-க்கு உயர்த்த வேண்டுமென்று அவர்களுக்கு நோக்க மிருந்தது. அவர்களால் விசாரிக்கக் கூடுமென்று எதிர் பார்க்கக்கூடியதாயுள்ள கிரிமினல் கேசுகளை விசாரிக்க கிராமப் பஞ்சாயத்தார்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படும். அவர்களுடைய பைசலுக்குமேல் அப்பீலில்லை. சம்பளமில்லாத அதிகாரிகளாக செய்வதற்கும், தொழுக்கட்டையி லடிக்கும் தண்டனையை ரத்து செய்வதற்கும் உள்ள யேர்ப்பாடுகள் அடங்கிய நிபந்தனைகள் செய்யப்படும்.

குறைந்த சடங்கொழுக்கத்தில் ஜாஸ்தியான நம்பிக்கை உண்டாக வேண்டுமென்ற கோட்பாட்டின் படி விதிகள் ஏற்படுத்தப்படும்.

கனம் அட்வோகேட் ஜெனரல் இந்த மசோதாவுக்குச சார்ந்து பேசினர்

மிஸ்டர் A. S. கிருஷ்ணராவ் —இந்த மசோதா என்ன நோக்கத்துடன் உண்டு பண்ணப் பட்டிருக்கிறதோ அந்த நோக்கம் நிறைவேறுமா என்று தனக்கு சந்தேக மிருப்பதாக கனம் மிஸ்டர் A. S. கிருஷ்ணராவ் தெரிவித்தார். பொதுவாயுள்ள பஞ்சாயத்து ஏற்பாட்டுக்கு அனுகூலமாகவேயே ஜனங்கள் அபிப்பிராய மிருப்பதாகத் தெரிவித்தார். ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள நிலைமைகள் வெவ்வேறுவிதமாக யிருக்கின்றன. வங்காளத்திலுள்ள ஏற்பாட்டை அனுஸரிக்கலாம். இப்போதிருக்கிற பஞ்சாயத்து ஏற்பாடானது மெம்பர்களை கிராமத்

தாரே தெரிந்தெடுத்துக் கொள்ளும்படியான ஏற்பாடாயில்லை. மெம்பர்களை கவர்ன்மெண்டாரவர்களே நியமிப்பார்கள். இந்த மசோதாவில் பஞ்சாயத்தார் விசாரிக்கும் கேசுகளை கிராம முனிசீபுகளும் விசாரிக்கலாமென்று அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இந்த விஷயங்களை யெல்லாம் ஒரு கம்மிட்டியாரால் நன்ருக யோசிக்கப்பட வேண்டும்.

மிஸ்டர் P. சிவராவ்:—இப்போதைய மசோதாவினுல் இப்போதிருந்துவரும் ஏற்பாட்டை விட அனுகூலம் எற்படுமா வென்பது தனக்கு ஸந்தேகமாக யிருப்பதாக கனம் மிஸ்டர் சிவராவ் தெரிவித்தார். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரே கோர்ட்டு இருக்கவேண்டுமே யல்லது இரண்டு கோர்ட்டுகள் இருக்கக்கூடாது. கிராம முனிசீபுகோர்ட்டுகளை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டுகளை ஏற்படுத்துவது அதிக நலமாக யிருக்கும். கலெக்டரால் நியமிக்கப்படும் பஞ்சாயத்துகளில் ஜனங்களுக்கு விசுவாசம் யேர்ப்படுகிறதில்லை. இப்பேர்ப்பட்ட சங்கதிகளில், ஜனங்களே மெம்பர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும்படியான ஏற்பாடு இருக்கவேண்டு மென்ற டிஸெண்டரலிஸேஷன் (Decentralisation) கம்மிட்டியாரவர்கள் சிபாரசுசெய்திருக்கிருர்கள். இந்த மசோதா என்ன நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கம் நிறைவேறுமா வென்ற சந்தேகம் தனக்கு அதிகமாகயிருப்பதாகத் தெரிவித்தார்.

மிஸ்டர் T. ரங்காச்சாரியார்:—கிராமாந்தரங்களில் முன் நடந்துவந்த ஏற்பாடுகளை அனுஸரித்தே அவைகளை சீர் திருத்துவதற்காக கவர்ன்மெண்டார் அவர்கள் செய்துவரும் முயற்சியை தான் மிகவும் மெச்சிக் கொள்ளுவதாக கனம் மிஸ்டர் T. ரங்காச்சாரியார் தெரிவித்தார். நாங்கள் எதிர்பார்த்திருந்தபடிக்குள்ள நிபந்தனைகளடங்கிய யேர்ப்பாடுகளுடன் இந்த மசோதா கொண்டுவரப்படவில்லை. முன் காலத்தில் பஞ்சாயத்து மெம்பர்கள் ஜனங்களுடைய அபிப்பிராயத்தின் பேரில் அந்தக் கிராமத்தில் உள்ள வயதில் பெரியோர்களை நியமித்துக் கொள்வது வழக்கமே யல்லது அதிகாரிகளால் தெரிந்தெடுக்கப்படுகிறதில்லை. கிராம பஞ்சாயத்து மெம்பர்களை கிராம ஜனங்களே தெரிந்தெடுத்துக் கொள்ளும்படியான நிபந்தனைகள் இந்த மசோதாவில் இருக்கவேண்டும். பஞ்சாயத்து மெம்பர் லஞ்சகம் வாங்கினதாக ஏற்பட்டாலொழிய மற்றக் கேசுகளில் அவரை உத்தியோகத்திலிருந்து நீக்கும் அதிகாரம் கலெக்டருக்கு இருக்கப்படாது. இந்தப் பஞ்சாயத்து மெம்பர்கள் உத்தியோகத்திலிருக்க வேண்டியகாலம் இவ்வளவென்று தீர்மானிக்கும் அதிகாரம் டிவிஷனல் ஆபீஸர்களுக்கு இருக்கப்படாது. அவர்களை உத்தியோகத்திலிருந்து நீக்கும் அதிகாரம் ஜில்லா ஜட்ஜுக்கு இருக்க வேண்டுமேயல்லது கலெக்டருக்கு இருக்கப்படாது.

மிஸ்டர் V. K. ராமாநுஜாச்சாரியார்:—இந்த மசோதாவுக்கு நல்வரவு கூறுவதாக மற்ற மெம்பர்கள் கூறியதுபோல வேயே கனம் மிஸ்டர் V. K. ராமானுஜாச்சாரியாரும் தெரிவித்தார். கிராம முனிசீப் என்ற பதத்தின் வியாக்கியானமானது திருப்திகரமாகயில்லை. கிராம முனிசீபை அவருடைய ரிவினியூ ஹோதாவில் ஒரு அற்பவேலைக்காரனுக்கு ஒப்பந்தம் நடத்தி வருவது தனக்கு நேரில் தெரியுமென்றும், அவர்களில் அநேகர் தாசில்தார்களுடைய வண்டியைத் தொடர்ந்து ஓடுவதைத் தான் நேரில் பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். இந்த ஆக்ட்டுப்படி முனிசீப் என்பது நியாய விசாரணை சம்பந்தப்பட்ட மட்டில் தான். ஒரு குறிப்பிட்ட தொகைக்குக்கீழ்ப்பட்ட தொகையுள்ள டிக்கிரிகளை பஞ்சாயத்துக் கோர்ட்டிலேயே நிறைவேற்றும்படியான நிபந்தனைகள் இந்த மசோதாவில் அடங்கியிருக்க வேண்டும். சிறு தொகைகளுக்காக பிறப்பிவிக்கப்படுகிற டிக்கிரிகளை அவர்கள் நிறைவேற்றலாம். அதற்காக நியமிக்கப்பட்ட கம்மிட்டியாரால் இந்த மசோதாவை திருப்திகரமாக சீர் திருத்தவேண்டுமென்றும் அப்படிச் செய்யப்படாத விஷயத்தில் இந்த மசோதாவுக்கு விரோதமாகவேயே தான் அபிப்பிராயம் கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

மிஸ்டர் M. ராமச்சந்திரராவ்:—அதற்கென்று நியமிக்கப்பட்ட கம்மிட்டியாரால் சரியான பஞ்சாயத்தாரை நியமிப்பதற்குள்ள யேர்ப்பாட்டைச் செய்யும் விஷயங்கள் யோசிக்கப்படுமென்று தான் நம்புவதாக கனம் மிஸ்டர் M. ராமச்சந்திர ராவ் தெரிவித்தார். இப்போதிருக்கும் சேர்க்கை பஞ்சாயத்துகளை சரியான யேர்ப்பாட்டின்பேரில் ஸ்தாபிக்கப்படுமென்று தான் நம்புவதாகவும் தெரிவித்தார். பஞ்சாயத்தார்களுக்கு தனிமையான அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். முனிசீபுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விசேஷ அதிகாரங்களை எடுத்துவிடவேண்டும். கிராமக் கோர்ட்டுகளில் கிராம முனிசீபு தனிமையாக யிருந்து கேசை விசாரிக்கும்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தையே எடுத்துவிடவேண்டும். பழைய ஆக்ட்டுப்படி யுக்தானுஸாரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தைமட்டும் வைத்துக்கொள்ளவேண்டும். தன் அபிப்பிராயத்தில் இந்த மசோதாவை பலவகையிலும் சீர்திருத்தவேண்டுமென்பதாகவும் தெரிவித்தார்.

கனம் மிஸ்டர் K. ராமய்யங்கார்:—இந்த மசோதாவைப்பற்றிப் பேசியதில் கிராம முனிசீபுகளுக்கு யுக்தானுஸாரமாகச் செலுத்தும்படி கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களை எடுத்து விடக்கூடாதென்று பேசினர்.

இந்த மசோதாவை ஸபையில் கொண்டுவரும்படிக்குக் கேட்டுக்கொண்டது நிறைவேறியது.

அப்பால் இந்த மசோதாவை ஒரு தெரிந்தெடுக்கப்பட்ட கம்மிட்டியார் முன் வைக்கப்பட வேண்டுமென்றும் அதன்பேரில் அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும் கோரப்பட்டு அதை ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனல் அந்த மசோதாவையும் கம்மிட்டியாருடைய ரிப்போர்ட்டையும் ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவருமுன் அவைகளின் விஷயமான பொது ஜன அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவைகளை பிரசுரம் செய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்கு அபிப்பிராய மிருப்பதாக கனம் மிஸ்டர் கில்மன் தெரிவித்தார். பொதுஜனங்களுடைய அபிப்பிராயம் தெரியும்வரை ஸப் கம்மிட்டி நியமிக்கப்படமாட்டாது.

இந்த மசோதாவை அதற்கென்று தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு கம்மிட்டியாருக்கு அனுப்ப வேண்டுமென்று ஸபையாரால் ஒப்புக்கொள்ளப்பட்டது,

தெரிந்தெடுக்கப்பட்ட கம்மிட்டியில் அடியில் கண்டவர்கள் மெம்பர்களாக யிருக்கிருர்கள்:—

கனம் அட்வோகேட் ஜனரல், மிஸ்டர் அலிஸாடின் ஸாகிப், மிஸ்டர் A. R. நாப், மிஸ்டர் R. ராமச்சந்திரராவ், மிஸ்டர் M. ராமச்சந்திர ராவ், மிஸ்டர் A. சுப்பராய ரெட்டியார், மிஸ்டர் ஸதாசிவ பட், மிஸ்டர் A. S. கிருஷ்ணராவ், மிஸ்டர் கில்மன்.

இதை ஒப்புக்கொள்ளப்பட்டது.

REVIEW OF BOOKS.

புஸ்தக ஆராய்ச்சி.

சிவஞானபோத வசனலங்காரதீபம்:—இது ஓர் அருமை நூல். சித்தாந்த ஞானபானு ஸ்ரீ காசி வாசி சாம்பவ ஸ்ரீ-ல-ஸ்ரீ செந்திநாதையரவர்களால் இயற்றப்பட்டு சைவ சித்தாந்த மகா சமாஜத்து வனிதையர் வகுப்புக் காரியதரிசியாகிய ஸ்ரீமது ஏ. ஆண்டாளம்மை யெனப் பெயரிய மங்கையர்க் கரசியாரால் வெளியிடப்பட்டது. இந்நூலை வாசிப்பதினல் மும்மல விருள்கள் விலகி சகல மாயா பாசங்களும் நீங்கி அருள் ஞானத்தை உண்டாக்கி சிவானந்த பிராப்தாகி பிறவித் துன்பங்களுக்குள்ளாகாது நிலையான ஆனந்த வீடடைந்து சுகமாக வாழ்விப்பதற்கு ஓர் நல்லகருவியாக யேற்படுமென நம்புகின்றனம். இப்புத்தகம் ஒவ்வொரு சிவநேசச் செல்வர்களுக்கும் இன்றி அமையாதது. இதன் விலை ரூ. 2/8. தபால் கூலி வேறு. இவை நமது ஆபீசில் விலைக்குக் கிடைக்கும்.

DIALOGUE.

சம்பாஷணை.

இடம்:—வக்கீலுடைய பங்களா.

சது-ஜமீன்தார்:—குமாஸ்தாப்பிள்ளை அவர்களே வக்கீல் அய்யர் அவர்கள் இருக்கிருர்களா?

வ-கு:—உள்ளே யிருக்கிருர்கள்.

ஜ:—நான் வந்திருப்பதாகத் தெரியப் படுத்துங்கள்.

வ-கு:—அப்படியே தெரிவிக்கிறேன்.

(வக்கீலிடம் போய் தெரிவித்து விட்டு வருகிருர்.)

ஜ:—நமஸ்காரம் க்ஷேமமா?

வ:—க்ஷேமந்தான்! அரண்மனையில் எல்லாரும் க்ஷேமம் தானே! நான் இந்த ஞாயிற்றுக் கிழமையும் சதுரங்கப் பட்டணமே வரலாமென்றிருந்தேன் வேறுசில அவஸர வேலைகளினுல் வர முடியவில்லை.

ஜ:—எங்கே யாவது அவஸரமாக வெளியில் போக வேண்டுமா?

வ:—வெளியில் போகவேண்டிய அவசர மிருக்கிறது ஆனல் தாங்கள் வந்திருப்பதால் பகல் மூன்று மணி வரை தங்கள் காரியத்தைப் பார்த்துவிட்டு அப்பால் வெளியே போய்க் கொள்கிறேன்.

ஜ:—அப்படியானல் மிகவும் ஸந்தோஷம். தீவாந்தர தண்டனை விஷயமான மற்றும் சங்கதிகளைப் பற்றிக் கேட்டுக்கொள்ளட்டுமா?

வ:—அப்படியே செய்யுங்கள்.

ஜ:—ஆண்டமன் தீவில் ஆயுசுப்ரியந்தம் தண்டிக்கப்பட்ட ஆண்பிள்ளைக் கைதிகளும் பெண்பிள்ளைக் கைதிகளு மிருக்கிருர்களே அவர்களுக்குறிய தேகபாதைகளை தீர்த்துக்கொள்ளுவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது?

வ:—கைதிகள் வைப்பாட்டிகளை வைத்துக்கொள்வதையும் ஜாதி விட்டு ஜாதியில் கல்லியாணஞ் செய்து கொள்வதையும் தடுக்கும் பொருட்டு கைதிகளுக்குள் கல்லியாணம் செய்து வைப்பதையும் அது ஸம்மந்தமான விஷயங்களுக் கெல்லாம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

ஜ:—கைதிகளுக்குள் கலியாணம் செய்து கொள்ளும் விதம் எப்படி. அது ஸம்பந்தமான விபரங்கள் பூராவையும் தெரிநதுகொள்ள விரும்புகிறேன்.

வ:—தானுக சம்பாதித்து காலக்ஷேபம்செய்து கொள்ளும் படிக்கு அனுமதி கொடுக்கப்பட்ட கைதியானவன் தன் தேசத்திலிருந்து தன் சொந்தப் பெண்சாதியை தருவித்துக் கொள்ளலாம். அப்படி யிருந்தாலும் ஒரு கைதியும் அவ்விதம் செய்கிற தில்லை அப்படிச் செய்ய அவனுக்கு இஷ்டமிருந்தாலும் அவன்ஸம்ஸாரத்துக்கு அவனுடன் சேர்ந்திருக்க சம்மதமில்லாமல் போய் விடுகிறது ஆகையால் கைதிகள் அந்த நாட்டிலேயே கல்லியாணம் செய்து கொண்டு சந்ததிகளை விருத்தி செய்கிருர்கள்—கைதிகளுக்குள் நடக்கும் கலியாணம் அடியில் கண்டபடி நடந்தேருகிறது. தானுகச் சம்பாதித்துப் பிழைத்துக் கொள்ளும் படிக்கு அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிற ஒருவன் ஜெயிலிலுள்ள பெண்பிள்ளைக் கைதிகளில் யாரையும் கல்லியாணம் செய்து கொள்ளலாம். ஸர்க்கார் அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுக்கொண்டு கல்லியாணம் செய்து கொள்ள வேண்டும். தங்கள் ஜாதி வழக்கப்படி கல்லியாணத்தை நடத்திக் கொள்ள வேண்டும். கைதி கலியாண விஷயமாக மனுச்செய்து கொண்டஉடன் அவன் கலியாணம் செய்து கொண்டால், தன் ஸம்சாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள சக்தி உள்ளவனுக யிருக்கிருனு வென்பதை முதலில் கவனிக்கப்படும். காப்பாற்றச் சக்தி யுள்ளவனென்று நினைக்கப் பட்டால் பெண்பிள்ளை ஜெயிலிலிருக்கிற கைதிகளுக்குள் இவன் ஜாதிக்கும் நிலமைக்கும் தகுதியாயிருக்கிற ஒரு பெண்பிள்ளையை கல்லியாணம் செய்து கொள்ளும்படி சூப்பிரின் டெண்டாண்டு உத்தரவு கொடுப்பார்கள். ஜாதி வழக்கப்படி கல்லியாணத்தை முடித்துக் கொண்டு அது விபரத்தை சூப்பிரிண்டெண்டுக்குத் தெரிவிக்கவேண்டும். சூப்பிரிண் டெண்டாண்டு கல்லியாணத்தைப் பற்றி பதிவு செய்து கொள்வார் அது சட்டப்படி செல்லக்கூடிய கல்லியாணமாய் விடுகிறது கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற விருப்பம் ஆண் பெண் இருவர்களுக்குள்ளு மிருக்கிறது வாஸ்தவமாகையால் அவர்கள் தங்கள் ஜாதி வழக்கப்படி செய்ய வேண்டிய சடங்குகளை யெல்லாம் செய்துவிடுகிருர்கள். சரியானபடி கல்லியாணச்-சடங்குகளை யெல்லாம் நடத்திவிட்டதாக அவர்கள்சொல்வதை சூப்பிரண்டெண்டாண்டு ஒப்பபுக்கொள்ள வேண்டியதைத்தவிர வேறு மார்க்கமில்லை. ஹிந்துவாகவிருக்கிற ஒருவனுக்கு ஒரு துலுக்கப்பெண் பிள்ளையைவிவாஹம் செய்யப்படமாட்டாது. கைதிகள் அவர்களுடைய தேசங்களிலிருக்கும்பொழுதுஎன்ன விதமாக ஜாதிவழக்கம் அனுசரித்து வரப்பட்டதோ அதற்கு விரோதமாக யாதொன்றும் செய்யப்பட மாட்டாது. தன் தேசத்தில், தன்னைத் தீர்த்து விடாத புருஷனை யுடைய ஒரு துலுக்கப் பெண்பிள்ளைக் கைதிக்காவது, மற்றப்படி புருஷனிருக்கும் பொழுது இரண்டாவது தரம் கலியாணம் செய்து கொள்ளக் கூடாத மற்ற ஜாதிப் பெண்பிள்ளைக் கைதிகளுக் காவது கல்லியாணம் செய்து கொள்கிறதற்கு இடங் கொடுக்கப்பட மாட்டாது.

ஜ:—இப்படிச் செய்து கொள்ளும் கல்லியாணத்தின் மூலமாகப் பிறக்கும் சந்ததிகள் விஷயமான சங்கதிகளைப்பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

வ:—மேலே கண்டபடி கைதிகளுக்குள் நடந்த கல்லியாணங்களின் மூலமாக விருத்தியான ஸந்ததிகள் ஆண்டமன் குடியேற்ற நாட்டில் ஏருளமாக யிருக்கிருர்கள். இவர்கள் மேல்ஜாதி கீழ்ஜாதி யென்ற விஷயங்களைப் பற்றிக் கவனிக்கிருர்கள். பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ரென்றும், 4-ஜாதிகளிருப்பதில் முதல் மூன்று ஜாதியில் பிறந்தவர்க

ளும் மேல் ஜாதிக் காரர்களென்றும் கடைசி ஜாதியில் பிறந்தவர்கள் கீழ்ஜாதியென்றும் மாத்திரம் தீர்மானித்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் தன் ஜாதியைப்பற்றி தீர்மானித்துக் கொள்ளுதற்கு தங்களுடைய தகப்பன் எந்த ஜாதியோ அந்த ஜாதி தான் தானுமென்றே சொல்லுகிறார்களே யல்லது தங்களுடையதாய் எந்த ஜாதியாக யிருந்தாலும் அதைப் பற்றி அவர்களுக்கு கவலையில்லை.

ஜ:—இந்தக் கைதிகளுடைய ஸந்ததியார்கள் கல்யாணம் செய்து கொள்வது எப்படி?

வ:—இந்தக் கைதியின் ஸந்ததியார்கள் அடியில் கண்டபடி கலியாணத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறார்கள். தங்கள் ஜாதிக்குள்ளேயே கல்யாணம் செய்து கொள்ள வேண்டியதற்கு தங்களால் ஆன மட்டும் முயற்சிக்கிறார்கள். தன் ஜாதியில் கலியாணம் செய்வது என்பது தன் தகப்பனார் எந்த ஜாதியோ அதே ஜாதிக்காரனுடைய பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளுவது தான். தன் ஜாதியைப் பார்க்கிலும் கீழ் ஜாதியிலுள்ள பெண்ணைக் கலியாணம் செய்வதும், தன் ஜாதியைப் பார்க்கிலும் கீழ் ஜாதியிலுள்ளவனுக்குப் பெண்ணைக் கலியாணஞ் செய்து கொடுப்பதும் வழக்கத்திலிருந்து கொண்டு தானிருக்கிறது. கீழ் ஜாதியில் பிறந்த பெண்பிள்ளை, மேல் ஜாதிக்காரனுக்கு வாழ்க்கைப்பட்டு அவர்களுக்குப் பிறக்கிற குழந்தைகளெல்லாம் மேல் ஜாதிக் காரருடைய குழந்தைகளாகவும், மேல் ஜாதியில் பிறந்த ஒரு பெண்பிள்ளை கீழ் ஜாதியில் பிறந்தவனுக்கு வாழ்க்கைப்பட்டு அவர்களுக்குப் பிறக்கிற குழந்தைகளெல்லாம் கீழ் ஜாதிக்காரருடைய குழந்தைகளாகவேயே எண்ணப்படுகிறது. ஏனென்றால், தகப்பன் எந்த ஜாதியோ அந்த ஜாதிதான் குழந்தைகளும் என்பதே அவர்களுடைய கொள்கையாக யிருந்து கொண்டிருக்கிறது.

ஜ:—குடியேற்ற நாட்டில் சுயாதீனத்துடன் இருந்து கொண்டிருக்கும் குடிகளின் தன்மை என்ன?

வ:—தண்டனைக் குடியேற்ற நாட்டிலுள்ள சுயாதீனத்துடனிருக்கிற குடிகளெல்லாம் வெளியூர்களிலிருந்து அவ்விடத்துக்குப் போயிருப்பவர்களேயல்லது வேறில்லை. உத்தரவில்லாமல் யைது வந்த யாரும் அந்த நாட்டிற்குள் பிரவேசிக்கக் கூடாது. லைஸென்ஸ் வருஷந்தோறும் பெறுமல் அங்கே குடியிருக்கவும் கூடாது. அவ்விடத்திலிருக்கும் தண்டனைப் பட்ட குடிகளுடன் ஸஹவாஸம் செய்வது, கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்வது முதலிய விஷயமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிற அநேக நிபந்தனைகளுக்குட் பட்டுத்தான் அவ்விடத்தில் குடியிருக்க வேண்டும். அந்த நிபந்தனைகளை மீறி நடந்து விட்டால் அந்த நாட்டை விட்டுத் துறத்திவிடப் படுவார்கள். அல்லது அதற்கென்றே உண்டு பண்ணப் பட்டிருக்கும் சட்டங்களின் படி தண்டிக்கப் படுவார்கள். இவ்விதமாகவேயே குழந்தை முதல் சாகு மட்டும் இப்படி நிபந்தனைகளுக் குட்பட்டே காலக்ஷேபம் செய்து வருகிற சுயாதீனத்துடனிருக்கிற குடிகளின் பிழைப்பும் கைதிகளுடைய பிழைப்பைப் போல வேயிருக்கிறது. (1) இந்தியாவிலிருந்து அவிடம் போயிருக்கிற கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும், (2) இந்தியாவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் போயிருக்கிற வியாபாரிகளும் (3) இப்பேர்ப்பட்ட தங்களுடைய எஜமான் களுடன் போயிருக்கும் வேலைக்காரர்களும் (4) அபூர்வமாக மற்ற ஊர்களிலிருந்து போயிருக்கும் மற்றவர்களும் (5) கைதிகள் விடுதலையான பிறகு அவ்விடத்திலேயே யிருந்து விடுகிறவர்களின் ஸந்ததியாரும் தான் அவ்விடத்திலிருக்கும் குடிகள்.

ஜ:—தண்டனைக் குடியேற்ற நாட்டில் புழங்கிவரும் பாஷை என்ன?

வ:—இந்தியாவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் அநேக விதமான பற்பல பாஷைகளைப் பேசும் ஜனங்கள் அவ்விடத்தில் போய் குடியேறி யிருக்கிற படியால் அவ்விடத்திலுள்ள ஜனங்களுடைய சுய பாஷையும் பற்பல வகுப்பாகத் தானிருக்கின்றன. ஆனால் அந்தக் குடியேற்ற நாட்டின் சுய பாஷையானது உர்டு யென்னும் பாஷையாக யிருக்கிறது இந்தப்பாஷையைத் தோன்றினபடி மிகவும் கொச்சையாகவும் அவரவர்களுக்குத் தோன்றின உச்சரிப்புடனும் பேசுகிறார்கள். அங்கே அனுப்பப்பட்ட கைதிகள் எல்லோரும் இந்த பாஷையைத்தான் கற்றுக் கொள்ளுகிறார்கள் எந்த ஜாதியில் பிறந்தவர்களாக யிருந்தாலுமே, அவ்விடத்தில் பிறந்தவர்களுக்கு அதே சுய பாஷையாக யிருக்கிறது அது மஹம்மதியர்கள் பேசும் ஹிந்துஸ்தானி போலுள்ள ஓர் பாஷை.

ஜ:—அங்கே படிப்பு விஷயமாக என்ன என்ன ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கிறது.

வ:—இந்தக் குடியேற்ற நாட்டிலே பிறந்தவர்கள் படிப்பு விஷயத்தில் ஸதாரணமாக இந்தியாவிலுள்ள ஜனங்களைப் பார்க்கிலும் நல்ல ஸ்திதியிலிருக்கிறார்கள் ஏனென்றால் தானே சம்பாதித்து காலக்ஷேபம் செய்யும்படிக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக் கிறவர்களுடைய குழந்தைகளுக்கெல்லாம், படிப்பு கட்டாயமானதாக யேற்படுத்தப் பட்டிருக்கிறது. பெண்குழந்தைகள் 10-வயதாகும்வரையிலும் ஆண் குழந்தைகள் 14-வயதாகும் வரையிலும் படித்துத்தான் தீரவேண்டும். அங்கேயிருக்கும் மற்ற சுயாதீனக் குடிகளுடைய குழந்தைகளையும் அவ்விடத்திலேயே பிறந்த கைதிகளின் குழந்தைகளையும், தாராளமாய்ப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறார்கள். சுயதேசப் பாஷையைப் படிக்கவும் எழுதவும் தெரியாத குழந்தைகளே கிடையாது. அவர்களில் அநேகர் ஸர்க்காரில் குமாஸ்தாவேலை கொடுப்பதற்கு லாயக்காக இங்கிலீஷிலும் தேர்ச்சி யடைந்திருக்கிறார்கள்.

ஜ:—மணி 10 ஆய்விட்டது. குடியேற்ற நாடு விஷயமான மற்றவிபரங்களை அடுத்த ஞாயிற்றுக் கிழமை தெரிந்துகொள்ளுகிறேன். நமது இஷ்டர் நாகலாபுரம் ஜமீன்தார் அவர்கள் தங்களிடம் கலந்து பேசுவதற்காக வந்திருக்கிறார்கள். அவர்களை 12-மணிக்கு இவடம் வரும்படி சொல்லியிருக்கிறேன். போஜனத்துக்கு நேரமாய் விட்டது எனக்கு உத்தரவு கொடுக்கவேணும்.

வ:—தாங்கள் போய்வரலாம் நாகலாபுரம் ஜமீன்தார் அவர்களை 11-மணிக்கே இவடம் வரச்சொல்லுங்கள். அவர்களிடம் பேசிவிட்டு எனக்கு வெளியே போக வேண்டிய காரிய மிருக்கிறது.

ஜ:—நமஸ்காரம் போய் வருகிறேன்.

நாகலாபுரம் ஜமீன்தார் சதுரங்கப்பட்டணம் ஜமீன்தாரைச் சந்திக்கிறார்.

(வக்கீல் அய்யர் அவர்கள் என்ன செய்கிறார்கள்.)

ஜ.—சாப்பாட்டுக்குப் போய்விட்டார்கள் தங்களை 11-மணிக்கு வரும்படி சொன்னார்கள்.

நாகலாபுரம் ஜமீன்தார் வக்கீலிடம் வருகிறார்.

நா.-ஜ:—நமஸ்காரம்!

வ:—நமஸ்காரம் உட்காருங்கள். வந்த விசேஷமென்ன.

ஜ:—நமது ஸமஸ்தானத்தில் ஒரு குற்றச் செய்கை செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு யாரை வாதியாக யிருக்கச் சொல்லுவோமென்று யோசனை செய்துகொண்டு போகும்படி வந்தேன்.

வ:—இவ்விதமான விஷயங்களுக்கு நீங்களும் சிரமப்பட்டு என்போலொத்தவர்களுடைய விலைபுரிந்த நேரத்தையும் யேன் வீண்போக்கவேணும் சென்னப்பட்டணத்திலிருந்து வெளியாகும் இந்திய சட்ட கெஜெட்டு ,என்னும் சட்ட சஞ்சிகையை ஏன் தருவித்துப் படிக்கக்கூடாது?

ஜ:—அதில் இந்த விஷயங்கள் அடங்கி யிருக்கிறதோ?

வ:—அதில் இந்த விஷயம் மாத்திரம் அல்ல ஸிவில், கிரிமினல், ரிவினியூ, விஷயங்களும், போர்டு உத்தரவுகள், கவர்ன்மெண்டு உத்தரவுகள், ஜில்லா கலெக்டர்களுடைய முக்கியமான உத்தரவுகள், ஹைக்கோர்ட்டுகளின் தீர்ப்புகள், ப்ரிவிகௌன்ஸில் தீர்ப்புகள், இவைகள் எல்லாம்அடங்கியிருக்கும்.

ஜ:—அது பட்டணத்தில் எங்கே கிடைக்கும்.

வ:—சென்னப்பட்டணம் ப்ராட்வேயில் இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ், மானேஜருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குச் சார்ஜும் மிக சொற்பம் தான்.

ஜ:—என்ன சார்ஜு அனுப்பவேண்டும்.

வ:—வருஷம் ஒன்றுக்கு தபால் சார்ஜு உள்பட ஆறு ரூபாய் தான்.

ஜ:—அப்படியானால் இனி அதற்கு வேண்டும் ஏற்பாடு செய்து தருவித்துக் கொள்ளுகிறேன். இப்போது வந்த மட்டுக்கும் விபரம்சொல்லி அனுப்பத்தயவு செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன்

வ:—வந்து விட்டீர்கள்! வந்த வேலையைத் தெரிவியுங்கள்.

ஜ:—கிரிமினல் கேசுகளில் பொதுவாக வாதியாக யிருக்கவேண்டியது யார் என்ற விஷயத்தைப் பற்றித் தெரிவிக்க வேண்டும்.

வ:—கேசுகளைச் சொல்லிக் கேளுங்கள் சொல்லுகிறேன்.

ஜ:—முதலாவது இது விஷயத்தில் பொது விதியைச் சொல்லுங்கள்.

வ:—பொதுவாக அடியில் குறிப்பிட்டுச் சொல்லப் போகிற கேசுகளைத் தவிர மற்ற கேசுகளைக் குறித்த தன் செய்கையால் கஷ்டநஷ்டம் அடைந்தவர்தான் வாதியாக யிருந்து நடபடிக்கை நடத்த வேண்டு மென்பதில்லை. ஒரு குற்றச் செய்கை நடந்ததை பார்த்துக்கொண்டிருந்த எவரும், ஷடி குற்றச்செய்கை செய்யப்பட்டதினால் கஷ்ட நஷ்டம் அடைந்திரா விட்டாலும் தானே வாதியாக யிருந்து பிராது கொடுத்து நடபடிக்கைகள் நடத்தலாம். (இ. லா. ரி.. 16. பம் 600.)

குறிப்பு:—ஆனால் அடிபிடி போலொத்த சொற்பமாயும் பொதுவாய் அசேஷ ஜனங்களுக்கும் சிரத்தையில்லாம லிருக்கக் கூடியதுமான கேசுகளில் குற்றச் செய்கை யினால் கஷ்ட நஷ்டம் அடைந்தவர்களாவது அல்லது அவர்களுடைய ஸமீப பந்துக்களாவது வாதியாக யிருந்து பிராது செய்வது நலம்.

ஜ:—மேலே ஏதோ சிலகேசுகளை குறிப்பிட்டுச் சொல்லுகிறேன் அந்தக் கேசுகளுக்கு கஷ்ட நஷ்டம் அடைந்தவர்களே நேரில் வாதியாக யிருக்கவேண்டுமென்று தெரிவித்தீர்களே அந்தக் கேசுகளைப் பற்றிச் சொல்லுங்கள்.

வ:—இந்தியன் பினல் கோடு 19-வது அத்தியாயத்தில் "ஊழியம் செய்வதற்காக உடன் பட்டிருக்கிறபடி அப்படி உடன் பட்டவர்கள் நடந்து கொள்ளாமல் அனியாயமாய்த் தவறுவது" விஷயமாகச் சொல்லப்பட்டிருக்கிற 490, 491, 492, வது பிரிவுகளின் படிக்குள்ள குற்றங்களுக்கு, அந்தக் குற்றச் செய்கையினால் கஷ்ட நஷ்டம் அடைந்தவர்தான் வாதியாக யிருந்து பிராது நடத்தவேணும். அவர்களுக்காக மற்றவர்கள் நடத்தக் கூடாது.

ஜ:—இ. பி. கோடு 490-வது பிரிவு எதைப்பற்றிச் சொல்லுகிறது.

வ:—இ. பி கோடு. 490-வது பிரிவு கப்பலிலாவது, கரை வழியாகவாவது பிரயாணம் போகையில் ஊழியம் செய்வதாக ஒப்புக் கொண்டவன் அந்த ஒப்பந்தப்படி நடக்க மாட்டேனென்று சொல்வதாகிய குற்றம் தான்.

ஜ:—இ. பி. கோடு. 491-வது பிரிவு எதைப் பற்றிச் சொல்லுகிறது.

வ:—இ. பி கோடு. 491-வது பிரிவு என்பது இளமையினாலாவது புத்தி மாறுட்டத்தினாலாவது வியாதியினாலாவது துர்ப்பலத்தினாலாவது தன்னுடைய க்ஷேமத்துக்கு வேண்டும் சங்கதிகளைச் செய்து கொள்ளவாவது தனக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்துக் கொள்ளவாவது சக்தி யில்லாமலும் ஆதரவு அற்றுமிருக்கிற ஒருவனுக்கு ஏவல் செய்கிறதாகவாகிலும் வேண்டியதை எல்லாம் சவுகரித்துக் கொடுக்கிறதாக வாகிலும் ஒப்புக் கொண்டு அப்பால் அப்படி ஒப்புக் கொண்டவன் ஷடி ஒப்பந்தப்படி நடக்க மாட்டேனென்று சொல்வது.

ஜ:—இ. பி. கோடு. 492-வது பிரிவு என்பது என்ன? அதில் எதைப்பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது.

வ:—இ. பி. கோடு 492-வது பிரிவில் வேறொருவனிடம பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் எந்த இடத்திலாவது மூன்று வருஷத்துக்கு மேற்படாத காலத்துக்கு வேலை செய்வதாக எழுத்து மூலமாக ஒப்பந்தம் செய்து கொண்டு அவன் சிலவின் பேரில் தூர தேசத்தில் போயிருந்து கொண்டு அந்த இடத்தில் ஒப்பந்தப்படி வேலை செய்ய மாட்டேனென்பது என்னும் குற்றம் இந்தக்குற்றங்களுக்கு ஒப்பந்தப்படி வேலைக்காரர்கள் நடவாமை யினால் கஷ்ட நஷ்டம் அடைந்தவர்கள் தான் நேரில் பிராது கொடுத்துக் கொள்ளவேணும்.

ஜ:—இந்தக் கேசுகளைத்தவிர இன்னும் கஷ்ட நஷ்டம் அடைந்தவர்களே நேரில் பிராது செய்துகொள்ள வேண்டிய கேசுகள் இருந்தால் அவைகளையும் சொல்லுங்கள்.

வ:—கி. பு. கோடு. 500-வது பிரிவின் படிக்கு தன்னை அவதூறு செய்து விட்ட குற்றத்துக்காக பிராது கொடுப்பது மேற்படி அவதூறினால் கஷ்டம் நஷ்டம் மன வருத்தம் இவைகளை யடைகிறவரே நேரில் வாதியாக யிருந்து பிராது செய்துகொள்ள வேண்டும்.

ஜ:—இன்னும் வேறு எந்தெந்தக் கேசுகளுக்கு கஷ்ட நஷ்டம் அடைந்தவரே நேரில் வாதியாக யிருக்க வேணும்.

வ:—இ. பி. கோடு. 501-வது பிரிவு அவதூறென்று தெரிந்திருக்கிற சங்கதியை அச்சுப் போடுவது அல்லது செதுக்குவதின் மூலமாய் அவதூறு செய்தால் அதன் மூலமாக யார் அவதூர் செய்யப் பட்டார்களோ அவர்களே நேரில் வாதியாக யிருந்து பிராது செய்து கொள்ள வேண்டும்.

ஜ:—இன்னும் உள்ள கேசுகளைச் சொல்லுங்கள்.

வ:—இ. பி. கோடு. 502-வது பிரிவு அவதூறான சங்கதியை எதில் அச்சுப்போட்டிருக்கிறதோ அல்லது செதுக்கி யிருக்கிறதோ அதை விற்பதின் மூலமாய் செய்யும் அவதூருக்கு அந்த அவதூரு யார் விஷயமாய்ச் செய்யப்படுகிறதோ அவரே நேரில் வாதியாகயிருந்து பிராது செய்து கொள்ள வேண்டும்.

ஜ:—இறந்து போனவர்கள் விஷயமாக அவதூரான நடபடிக்கைகள் செய்யப்பட்டால் அதற்கு யார் வாதியாக யிருந்து நடபடிக்கை நடத்துகிறது.

வ:—இறந்துபோனவர்களை அவதூறுசெய்தால் அவர்களுக்கு வார்ஸாக உள்ளவர்கள் வாதியாகயிருந்து நடபடிக்கை நடத்தவேண்டும்.

ஜ:—மற்றுமுள்ள கேசுகளையும் சொல்லுங்கள்.

வ:—இ. பி கோடு. 493, 494, 495, 496, இந்தப் பிரிவுகளுக்குட்பட்ட விவாக சம்பந்தமான குற்றங்களுக்காக அந்தக் குற்றச் செய்கைகளினால் கஷ்ட நஷ்டம் அடைந்தவனே நேரில் பிராது செய்து கொள்ளவேண்டும்.

ஜ:—மேற்படி பிரிவுகளின் விபரங்கள் என்ன, தெளிவாகச் சொல்லுங்கள்.

வ:—இ. பி. கோடு 493-வது பிரிவென்பது. எவனாவது தன்னை நியாயமாய் விவாவகம் செய்துகொண்டவளல்லாத யாதொரு ஸ்திரீயை அப்படி விவாகம் செய்து கொண்டதாக நம்பும்படி செய்து, அந்த நம்பிக்கையினாலே தன்னோடே கூட வாழும்படிக்காவது, அல்லது தன்னைப்புணரும்படிக்காவது மோசம் பண்ணினால்; அந்த ஸ்திரீயை விவாகம் செய்துகொண்ட புருஷனே நேரில் வாதியாக யிருந்து பிராது செய்துகொள்ளவேண்டும்.

இ. பி. கோடு 494-வது பிரிவு:—ஒரு ஸ்திரீயின் புருஷன் உயிரோடிருப்பதினாலும், ஒரு புருஷனுடைய பெண்சாதி உயிரோடிருப்பதினாலும் கலியாணம் ஊர்ஜிதத்திலிருந்து கொண்டிருக்கையில், ஜாதி வழக்கத்துக்குவிரோதமாக, வேறொரு விவாகம் செய்துகொண்டால், அந்த ஸ்திரீயாவது, புருஷனாவது நேரில் வாதியாகயிருந்தே ஒருவர் மேலொருவர் கேசு நடத்தவேண்டும்.

இ. பி. கோடு 495-வது பிரிவு:—முன்னமேயே விவாகம் ஆயிருக்கும் ஸ்திரீயாவது புருஷனாவது தனக்கு முன்னமேயே விவாகம் நடந்திருக்கிற சங்கதியை, தான் பின்பு விவாகம் செய்து கொள்ளுகிற நபரோடு சொல்லாமல் மறைத்து மேலே 494-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற குற்றச் செய்கையைச் செய்தால், அதனால் சங்கடம் அடைந்த ஸ்திரீயாவது, புருஷனாவது வாதியாக யிருந்து கேஸ் நடத்தவேண்டும்.

இ. பி. கோடின் 496-வது பிரிவு:—இன்னவிதமாய்ச் செய்கிற விவாகமானது நியாயமானதாக மாட்டாதென்று தெரிந்திருந்து எவனாகிலும் அயோக்கியமாகவாவது, மோசமான எண்ணத்தோடாவது விவாகச் சடங்கு நடத்தினால் இப்பேர்ப்பட்ட கேசுகளில் எந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளும்படியாக இப்படி விவாகச் சடங்கு மோசமான எண்ணத்தோடு நடத்தப்படுகிறதோ அந்தப் பெண்ணாவது, அந்தப் பெண்ணை மோசமாக விவாகம் செய்து கொண்டதினால் கஷ்ட நஷ்டம் அடையக்கூடியவர்களாவது வாதியாகயிருந்து கேஸ் நடத்த வேண்டும்.

ஜ:—ஒரு விவாகமான ஸ்திரீ விபசாரம் செய்ததாகச் சொல்லி அவளை அவதூரு செய்தால் இதற்கு யார் வாதியாக யிருக்கவேண்டும்?

வ:—அவளுடைய புருஷன் வாதியாக யிருக்கவேண்டும்.

ஜ:—ஒரு விவாகமான ஸ்திரீ, விபசாரித்தனம் செய்ததாக உள்ள அவதூரு தவிரவேறுவிதமாக அவளை அவதூறு செய்தால் வாதியாக யிருக்கவேண்டியது யார்?

வ:—அந்த ஸ்திரீயே வாதியாக யிருந்து நடபடிக்கை நடத்த வேண்டும்.

ஜ:—இன்னும் இதைப் போலொற்ற வேறு கேசுகளையும் சொல்லுங்கள்

வ:—இ. பி. கோடு 497-வது பிரிவு வேறொருவனுடைய பெண்சாதி யென்று தனக்குத் தெரிந்திருக்கையில், அவளுடைய புருஷன் ஸம்மதமின்றி அந்தப் பெண்பிள்ளையைப் புணர்ந்து விபசாரம் செய்தால் அந்தப் பெண்பிள்ளையின் புருஷனே வாதியாக வரவேண்டும். அவன் மேற்படி குற்றச் செய்கை நடக்கும்போது ஸ்தலத்தில் ஆஜரில்லாமலிருந்தால் அந்த ஸ்திரீ யாருடைய பாதுகாப்பிலிருக்கிறானோ அவர்கள் வாதியாக வரலாம். (கி. பு. கோடு பிரிவு 190.)

ஜ:—இன்னும் வேறு கேசிருந்தால் சொல்லுங்கள்.

வ:—இ. பி. கோடு 498-வது பிரிவு வேறொருவனுடைய பெண்சாதி யென்று தெரிந்திருந்து அப்படிப்பட்டவளை அவள் புருஷனிடத்திலிருந்தாவது அந்தப் புருஷனுக்காக அவளை யார் தன் வசத்தில் வைத்திருக்கிறார்களோ அப்படிப்பட்டவர்களிடத்திலிருந்தாவது, அவள் யாவனொருவனோடு கள்ளப் புணர்ச்சி செய்யும்படிக்கு கூட்டிப்போனாலும், ஆசைகாட்டி வசியப்படுத்தினாலும், அந்த எண்ணத்தோடு அவளை ஒளித்து வைத்தாலும் போக வொட்டாமல் தடுத்து வைத்தாலும். அவளுடைய புருஷனாவது, அவனில்லாவிட்டால் அவனுக்காக அவள் யாருடைய பாதுகாப்பிலிருக்கிறானோ அவராவது வாதியாக வரவேண்டும். (கி. பு. கோடு 199-வது பிரிவு)

இந்தக் கேசுகள் தவிர மற்றக் கேசுகளில் குற்றச் செய்கையினால் கஷ்ட நஷ்டம் அடைந்தவர்களைச் சேர்ந்தவர்களும், மற்ற எவரும் பிராது கொடுத்து நடபடிக்கை நடத்தலாம்.

OUR LAW COLLEGE.

எங்களுடைய சட்ட கலாசாலை.

எங்களுடைய சட்ட கலாசாலையின் புரொபஸர் உலகறிந்த திருநெல்வேலி வக்கீல் K. R. கிருஷ்ணமாச்சாரியார்

அவருடைய மாணுக்கர்களுடைய பெயர்கள்:—

1 அனந்தாச்சாரி, 2 சக்ரவர்த்தி ஐயங்கார், 3 துரைசாமி முதலியார், 4 சட்டராசாரியார், 5 தணிகாசல முதலியார் வகையராக்கள்.

HINDU LAW—ஹிந்து லா.

(WILL—உயில்.)

மாணுக்கர்கள்:—நமஸ்காரம் ஐயா!

புரோபஸர்:—நீங்கள் யெல்லோரும் சுகமாயிருக்கும்படி நான் ஜெகதீசனை பிரார்த்திக்கிறேன்.

மைனாரிட்டி (Minority) யைப்பற்றிப் பூராவும் சொல்லியாகிவிட்ட தென்று நினைக்கிறேன். இனி உயில் (Will) விஷயமாக வியாக்கியானத்துடன் கூறுகிறேன் கவனித்துக் கேளுங்கள்.

மாணு:—உயில் என்பது என்ன?

பு:—ஒருவன் தான் இறந்தபிறகு தன்னுடைய சொத்துக்களை இன்னின்னார் இன்னவிதமாய் அனுபவிக்க வேணுமென்று தன்னிஷ்டப்படி. தன்சொத்துக்களை வினியோகம் செய்து எழுதிவைக்கும் தஸ்தாவேஜுக்குத் தான் உயிலென்று சொல்லுகிறது.

மாணு:—உயில் என்று இதற்கு எப்படி பெயர்வந்தது.

பு:—உயில் என்பது Will என்ற ஆங்கிலேய பதமேயாகும் "Will" என்ற ஆங்கிலேய பதத்திற்கு "இஷ்டம்" அல்லது "மனது" என்று அர்த்தம். ஒருவன் தன் சொத்துக்களை இன்னவிதம் செலவு செய்ய வேண்டுமென்ற விஷயத்தில் தன் இஷ்டம் இன்னதென்று வெளியிடுவதனால் அதற்கு "Will" என்று பெயர் வந்தது.

மாணு:—அதற்குத் தமிழில் சாதாரணமாக என்ன சொல்லுகிறது.

பு:—மரணசாஸனம் என்றும் சொல்லுவார்கள்.

மாணு.—எப்பேர்ப்பட்ட சொத்துக்கள் விஷயமாக ஒருவன் உயில் எழுதி வைக்கலாம்?

பு:—உயில் தஸ்தாவேஜு மூலமாக செலவிடப்படும் சொத்தானது உயில் செய்துகொடுக்கிறவனுக்கு தனிமையாகவும் ஸர்வ சுதந்தரமாகவும் பாத்தியப்பட்டதாக யிருக்கவேண்டும். மேற்படி சொத்தில் பூராபாத்தியதையும் உயில் செய்து கொடுக்கிறவனுக்கு இல்லாதவிஷயத்தில், மேற்படி யானால் செய்து கொடுக்கப்படும் உயில் செல்லமாட்டாது. (இ. லா. ரி. 12 ம. 126; 12. மூ. இ. அ. 88; இ. லா. ரி. 22. ம. 9.)

மாணு:—உயில் எழுத்து மூலமாகவேயே யிருக்கவேண்டுமா? அல்லது வாய்மொழியாகவும் செய்யப்படலாமா?

பு:—உயில் செய்வது தஸ்தாவேஜு மூலமாகத்தான் இருக்கவேண்டும் என்றதில்லை. அது எழுத்து மூலமாகவாவது வாய் மொழியாகவாவது செய்யப்படலாம். (2. ம. ஹை. கோ. ரி. 3.)

மாணு:—வாய் மொழியாயும் உயில் செய்யக்கூடுமாகில் பொதுவாக ஜனங்கள் உயில் எழுத்து மூலமாகவேயே செய்யும் காரணம் என்ன?

பு:—உயில் தஸ்தாவேஜு மூலமாக ஏற்பட்டிருந்தால் உயில் பிறந்ததைப் பற்றி ஏதேனும் ஆக்ஷேபனை நேரிடும் பொழுது அது தக்க சாக்ஷியமாக ஏற்படும். உயிலை ருஜுச் செய்வது மிகவும் லேசாகயிருக்கும். எழுத்து மூலமாக உயில் ஏற்பட்டிருந்தால் வீணான வியவஹாரங்களே ஏற்படமாட்டாது என்பது திண்ணம்.

மாணு:—எழுத்து மூலமாக எழுதப்படும் உயில்கள் எத்தனை ரூபாய் ஸ்டாம்பில் எழுதப்படவேண்டும்.

பு:—உயில் தஸ்தாவேஜு ஸ்டாம்புக் காயிதத்தில் எழுதப்பட வேண்டியதில்லை. வெற்றுக் காயிதத்திலேயே எழுதப்படலாம்.

மாணு:—உயில் தஸ்தாவேஜு ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டுமா?

பு:—உயில் தஸ்தாவேஜை ரிஜிஸ்டர் செய்ய வேண்டியதும் இல்லை.

மாணு:—பொதுவாக ஜனங்கள் உயில் தஸ்தாவேஜை ரிஜிஸ்டர் செய்கிறார்களே அதின்காரணம் என்ன?

பு:—உயில் பிறந்ததைப்பற்றி ஆக்ஷேபனை ஏற்படுங்காலத்தில் உயிலை ரிஜிஸ்டர் செய்த உத்தியோகஸ்தரே தக்க சாக்ஷியாக ஏற்படுவார். உயிலில் கண்டமற்ற சாக்ஷிகள் தன் முன்னிலையில் ஆஜராய் சாக்ஷி சொன்னதையும் ருஜுச் செய்வார். இவ்விதமாக உயிலுக்குப் பலம் ஏற்படும். இதல்லாமல் இந்த உயில் ரிஜிஸ்டர் ஆபீசு புஸ்தகங்களிலும் பதிவு செய்யப்பட்டுவிடும். உயிலின் அசல் தவறிவிட்டாலும் நகல் எடுத்துக் கொள்ளலாம். ரிஜிஸ்டர் செய்யப்படாத உயில்கள் தவறிவிட்டாலுமே விரோதிகள் கையில் அகப்பட்டுப் போய்விட்டாலுமே—உயில் எழுதிவைத்தவர்கள் இறந்துபோய்விட்ட கேசுகளில், உயிலில் கண்ட விஷயங்கள் நிறைவேறுவதற்கு மார்க்கம் இல்லாமல் போய்விடும். இப்பேர்ப்பட்ட விஷயங்களை உத்தேசித்துத் தான் உயிலை ரிஜிஸ்டர் செய்துகொள்ளுவது.

மாணு:—உயிலை எழுதிக் கொடுத்தவர் ஷை உயிலில் கையெழுத்து செய்யாமல் இறந்துபோய்விடுகிறார். அந்த உயில் செல்லுமா செல்லமாட்டாதா?

பு:—உயில் எழுதிவைப்பதின் நோக்கமானது உயில் செய்கிறவனுக்கு தன் சொத்தை விநியோகம் செய்யும் விஷயத்தில் இருக்கும் நோக்கம் இன்னதென்பது சந்தேகமில்லாமல் தெரிய வேண்டியதற்கு மட்டுமே உயிலை எழுத்து மூலமாகப் பிறப்பிக்கிறதே யல்லது வேறில்லை. ஆகையால் உயில் செய்து கொடுக்கிறவனுடைய கையெழுத்து வேண்டு மென்பது அவசியமில்லை. (இ. லா. ரி. 3 பம். 7; 2. மூ. இ. அ. 7; 17 இ. அ. 82; 26. இ. அ. 194; இ. லா. ரி. 18. கல். 1.)

மாணு:—ஒருவன் தன்னிஷ்டப்படி ஒரு உயிலை எழுதி ரிஜிஸ்டர் செய்துவிடுகிறான். அப்பால் ஷை உயிலை பூராவும் ரத்துச் செய்துவிடவாவது அல்லது சீர்திருத்தவாவது உயில் எழுதி வைத்தவனுக்கு அதிகாரம் உண்டா?

பு.—ஒருவன் எழுதிவைத்த உயில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தாலுமே அந்த உயிலை பூராவும் ரத்து செய்யவாவது அல்லது சீர்திருத்திக் கொள்ளவாவது உயில் எழுதி வைத்தவனுக்கு அதிகாரம் உண்டு. ஏனென்றால் உயிலில் கண்ட நிபந்தனைகள் அவனுடைய மரணத்துக்குப் பிறகே ஊர்ஜிதத்துக்கு வரவேண்டியதாக யிருக்கின்றன.

மாணு.—ஒருவன் எழுத்து மூலமாக ஒரு உயிலைப் பிறப்பிவித்து அதை ரிஜிஸ்டரும் செய்து விடுகிறான். அப்பால் ஷை உயிலை ரத்து செய்யவேண்டுமானால், மறுபடி வேறு எழுத்துமூலமான தஸ்தாவேஜின் மூலமாகத்தான் ரத்து செய்யவேண்டுமா, அல்லது வாய்மொழியாகவே ரத்து செய்து விடலாமா?

பு:—எழுத்துமூலமான உயிலை, எழுத்துமூலமான மற்றொரு தஸ்தாவேஜின் மூலமாகத்தான் ரத்துசெய்யவேண்டுமென்கிற கட்டாயம் இல்லை. வாய்மொழியாகவும் ரத்து செய்துவிடலாம். (இ. லா. ரி. 3. கல் 426; 4. இ. அ. 228.)

மாணு:—ஒருவன் தன் சொத்துக்கள் விஷயமாய் ஒன்றின் பின் ஒன்றாக 4-உயில்கள் பிறப்பிவித்து விடுகிறான். அப்படியானால் அவைகளில் எந்த உயில் ஊர்ஜிதத்துக்கு வரும்?

பு:—கடைசியாகச் செய்யப்பட்ட உயில் ஏதோ அதில் கண்ட நிபந்தனைகளே ஊர்ஜிதத்துக்கு வரும். மற்றதுகள் ரத்தாகிவிடும்

மாணு:—ஒரு அவிபக்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஸந்தான மில்லாம லிருக்கிறது. தனக்கு மேல்படி குடும்பசொத்தில் கிடைககக்கூடிய பாகத்தை மூன்றும் மனுஷநுக்குக் கொடுத்து உயில் செய்து விடுகிறார். இந்த உயில் செல்லுமா?

பு:—அந்த உயில் செல்லமாட்டாது. ஏனென்றால் மேற்கண்டபடி உயில் செய்து கொடுத்தவனுக்கு குடும்ப சொத்தில் இன்ன குறிப்பிட்ட பாகம் கிடைக்கிறதென்கிற உறுதியில்லாமலிருக்கிற காரணத்தால் அது அவனுக்கு தனிமையாக பாத்தியப்பட்ட சொத்தாக மாட்டாது. அல்லாமலும் அவனுக்கு ஸந்தான மில்லாத காரணத்தால் ஷை சொத்தானது அவனுக்குப் பிறகு ஷை குடும்பத்தில் உயிருடன் இருப்பவர்களுக்கே சேரவேண்டியதென்கிற விதி ஏற்பட்டிருக்கிறது. (Right of Survivorship) உயிலினால் யேர்ப்படும் பாத்தியதையை விட ஸர்வைவர்ஷிப் பாத்தியதையே முன் யேர்ப்பட்டதாகையால் உயில் பிரயோசனமற்றதாய் விடுகிறது. ஆகையினால் அவிபக்தகுடும்பத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு ஷை குடும்ப சொத்தில் தன் பங்குக்குக் யேர்ப்படக் கூடிய சொத்து விஷயமாக உயில் பிறப்பிவிக்க அதிகார மில்லை. (8. ம. ஹை. கோ. ரி 6; இ. லா. ரி. 5. பம் 48; இ. லா. ரி. 12. பம். 105; இ. லா. ரி. 7. ம. 357; இ. லா. ரி. 14. ம. 499; இ. லா. ரி. 16. ம. 353; இ. லா. ரி. 19. பம். 803; 7. இ. அ. 181.)

மாணு:—தன் பொதுக் குடும்பத்தை விட்டு விலகிய ஒருவன் தனக்கு பெண்சாதிபிள்ளைகளிருக்க, தன் சொத்துக்களை வேறொருவருக்கு உயில் எழுதி வைத்தால் அது செல்லுமா?

பு:—அப்படி எழுதிவைக்க அவனுக்கு அதிகாரமில்லை (இ. லா. ரி. 5. பம். 48; 7. இ. அ. 181; இ. லா. ரி. 8. ம. 89; இ. லா. ரி. 16. ம. 84, 353.)

மாணு:—யூரால் செய்யப்படும் உயில்தான் உறுதியாகயேற்படும்.

பு:—அவிபக்த குடும்பத்திலிருந்து பாகம் செய்து கொண்டு தனித்து வாஸம் செய்பவரும், சுயார்ஜிதச் சொத்தை யுடையவருமாகிய இவர்களால் செய்து கொடுக்கப்படும் உயில் தான் நிராக்ஷேபனையாகச் செல்லக்கூடியது. (இ. லா. ரி. 10. ம. 251; இ. லா. ரி. 24 ம. 429; 2. மூ. இ. அ. 54 6. மூ. இ. அ. 309.)

மாணு:—மேல் கண்டவர்கள் தாங்கள் காப்பாற்றக் கடமைப் பட்ட பெண்சாதி, பிள்ளை முதலியவர்களுக்கு சொத்து யாதொன்றும் கொடுக்காமலேயே தன் சொத்துக்கள் பூராவையும் பிறருக்கு உயில் செய்து கொடுத்துவிட்டால், உயில் எழுதி வாங்கினவர்களுக்கு உயிலில் கண்ட சொத்துக்கள் எல்லாம் பாத்தியப் பட்டுப் போய்விடுமா?

பு:—ஜீவனும்சமாவது கொடுக்காமலேயே தன் சொத்துக்கள் பூராவையும் உயில் செய்து விட்டால் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய ஜீவனும்சம் சம்பந்தப்பட்ட மட்டில் ஷை உயில் செல்ல மாட்டாது. அந்த உயில் மூலமாகச் சொத்தை யடைந்தவன் ஜீவனும்சத்திற் குரியவர்களுக்கு ஜீவனும் சத்துக்கு வேண்டிய சொத்தை விட்டு விடக் கடமைப் பட்டிருக்கிறான். (3. ம. ஹை. கோ. ரி. 8; 2. மூ இ. அ. 54; இ லா. ரி. 10. கல். 638; இ. லா. ரி. 12. ம. 267.)

மாணு:—உயில் செய்யும் ஒருவன், தான் உயில் யெழுதி வைத்த சங்கதி யாருக்கும் தெரியாமல் ரகசியமாக யிருக்கும் படிக்கும், ஆனால் அதை ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய வசத்தில் வைத்திருக்க வேண்டும் என்றும் அபிப்பிராயப் படுகிறான். இப்படிச் செய்வதற்கு வழி என்ன செய்யவேணடும்?

பு:—ஒருவனுக்கு தான் பிறப்பிவித்திருக்கிற உயிலின் சங்கதி ஒருவருக்கும் தெரிந்து விடக் கூடாதென்றும் ஆனால் அந்த உயிலானது பலப்பட்டு விட வேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டால், அவன் அந்த உயிலை ஒருகவர் (காகித உறை)க்குள் போட்டு, கவரில் முத்திரை போட்டு ரெஜிஸ்ட்டிரார் ஆபீசில் கொடுத்தால், அவர் அந்த உறையை, ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டு 40-வது பிரிவுப்படி பெற்றுக் கொண்டு பந்தோபஸ்தாகக் காப்பாற்றி வைத்துக்கொள்வார். அப்பால் உயில் செய்து கொடுத்தவர் இறந்த பிறகு அதை தன் ஆபீஸ் புஸ்தகத்தில்பதிந்து கொண்டு கேழ்க்கிறவர்களுக்கு நகல் கொடுப்பார். உயில் எழுதிக் கொடுத்தவனே அந்தக்கவரை திரும்பக் கேட்டால் அவனிடம் கொடுத்து விடுவார்கள். (ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டு 44-வது பிரிவு.)

மாணு:—பாகிக்கத்தகாத ஜமீன் சொத்துக்களிலுள்ள நிலம் வகையராக்களை, ஜமீன்தார்கள் தங்கள் இஷ்டப்படி உயில் செய்யலாமா?

பு:—செய்யலாம். செய்தால் சட்டப்படி செல்லும். (15. இ. அ. 51; இ. லா. ரி. 22. ம. 383; 26. இ. அ. 83.)

மாணு:—ஸ்திரீகளுக்கு உயில் செய்யும் அதிகாரம் உண்டா?

பு:—தங்களுக்கு ஸர்வ சுதந்திர மாகப் பாத்தியப் பட்டுப் போயிருக்கும் ஸ்திரீதனச் சொத்துக்களை ஸ்திரீகள், உயில் மூலமாகக் கொடுத்து விடலாம். (இ. லா. ரி. 1. ம 166; இ. லா. ரி. 2. ம. 333.)

(இன்னும் வரும்.)

அறிக்கை.

இந்திய சட்ட கெஜெட்டாபீஸ்.

இதனடியில் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு சட்ட ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றி எழுத விரும்புவோர், தமிழ் பாஷையில் எழுதி அனுப்பும் வியாஸங்களை அங்கீகரித்து இந்திய சட்ட கெஜெட்டில் பிரசுரம் செய்யப்படும். ஷை வியாஸங்கள் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களினுடைய அருமையையும், எழுதப்பட்ட வியாஸங்களினுடைய தன்மையையும் நிதானித்து பூல்ஸ்காப் பேப்பர் அளவில் அச்சிடப்பட்ட 4 பக்கங்கள் கொண்ட ஒரு பாரத்திற்கு ரூ. 3 முதல் ரூ. 6 வரையில் பிரதிப்பிரயோஜனம் கொடுக்கப்படும்.

இந்திய சட்ட கெஜெட் ஆபீசுக்கு அனுப்பப்படுகிற வியாசங்களை காரணம் தெரிவிக்காமலே பூராவும் அங்கீகாரம் செய்யாமல் நிராகரிக்கவாவது அல்லதுசில பாகத்தை ஒப்புக்கொண்டு, சிலபாகத்தை நிராகரிக்கவாவது மானேஜருக்கு சுதந்திரம் உண்டு.

ஒப்புக்கொள்ளாமல் நிராகரிக்கப்படும் வியாஸங்களை, திரும்ப அனுப்பப்பட மாட்டாது.

VILLAGE SHEET.

கிராம ஜனங்களுடைய பக்கம்.

KUDIMARAMAT SYSTEM.

குடி மராமத்து விஷயம்.

சட்ட நிர்மாண ஸபையில் 1916-ம் ௵ எப்ரில்௴ 6௳ யன்று கனம் மிஸ்டர் A. S. கிருஷ்ணராவால் இந்த ராஜதானியில் குடி மராமத்து விஷயமாய் நடந்து வரும் யேர்ப்பாடுகளைப் பற்றித் தெரிவிக்கப்பட்டு கவர்ன்மெண்டார் அவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதியைப்பற்றி போர்ட்டார் அவர்கள் செய்த ரிப்போர்ட்டின் பேரில் கவர்ன்மெண்டார் அவர்கள் இப்பொழுது தான் உத்தரவுப் பிறப்பித்திருக்கிறார்கள். போர்ட்டாருடைய 86 ம் நெ. ஸ்டாண்டிங் ஆர்டரில் குறிப்பிட்டுச் சொல்லப் பட்டிருக்கிறதும் வாய்க்கால்களை தூர்வை யெடுப்பது உடைப்புகளை அடைப்பது போலொத்ததுமான வேலைகளை அநேகமாய் குடி மராமத்து ஏற்பாட்டின் பேரிலேயே 15 ஜில்லாக்களில் குடிகளே திருப்திகரமாகச் செய்து வருவதாயும் சில ஜில்லாக்களில், போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டரில் காணப்படாத சில வேலைகளையும், குடிகளே நடத்திவருவதாயும் போர்ட்டாருடைய ரிப்போர்ட்டினால் தெரிய வருகிறது. சில ஜில்லாக்களில் இப்பேர்ப்பட்ட வேலைகளைச் செய்து முடிப்பதற்காகவே, பஞ்சாயத்துகள் ஏற்பட்டிருப்பதாகவும், அதுகளை அநேகமாக கிராமப் பெரிய தனக்காரரே மேல்பார்த்து வருவதாகவும் போர்ட்டாருடைய ரிப்போர்ட்டினால் தெரிய வருகிறது. இந்த ஏற்பாடானது 9 ஜில்லாக்களில் திருப்திகரமாக நடந்து வருவதாகவும் தங்களுடைய பாசன ஆதாரங்களுக்கு அத்தியாவசியமாக உடனே செய்ய வேண்டிய மராமத்துகளை குடிகளே குடி மராமத்து ஏற்பாட்டின் படி செய்ய மனதில்லாம லிருக்க வில்லையென்றும் விசாரணையில் தெரிய வருவதாக போர்ட்டாருடைய ரிப்போர்ட்டினால் தெரிய வருகிறது. ஆனால் சப்பாத்து கள்ளியை அப்புறப்படுத்துவது தூர்வையெடுப்பது போலுள்ளதும் அவஸரமாகச் செய்யப்பட வேண்டியதென்றும் அவர்களால் நினைக்கப் படாத வேலைகளைச் செய்வதற்கு குடிகள் மனதில்லாம லிருப்பதாகவும், செய்தால் கட்டாயத்தின் பேரில் செய்வதாகவும், அநேகமாக வெடி வேலைகளின் செலவை குடிகளிடமிருந்து வசூலித்துக்கொண்டு கவர்ன்மெண்டார் அவர்களே செய்து வருவதாகவும் தெரியவருகிறது. குடி மராமத்து ஏற்பாடானது நன்றாக நடந்துவராம லிருப்பதற்கு காரணங்கள் அநேகமிருப்பதில் அடியில்கண்டவைகளே முக்கியமானவைகளென்று தெரியவருகிறது:— (1) ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் குடிகளுக்கும் ஒத்துமையில்லாமலிருப்பதும், அதிலும் குடிகளுக் குள்ளேயே ஒத்துமையில்லாம லிருந்துவருவது (2) கிராமங்களில் கக்ஷியிருப்பது (3) நிலஸ்வான்கள் கிராமத்தில் குடியில்லாமல் வேறு இடங்களில் யிருப்பது (4) கிராமங்களில் ஒவ்வொருவரும் தானே பெரியவனென்று நினைத்திருப்பது (5) 1858-ம் ௵த்து I-வது ஆக்ட்டாகிய சென்னப்பட்டணம் கட்டாயப் படுத்தி வேலை வாங்கும் ஆக்ட் (Compulsory Labour Act) டின் படிக்குள்ள ஊழலான நடபடிக்கைகள் (6) பாசன வேலைகளைப்பற்றிய தகவல் களைப் பற்றி சமாசாரம் தெரிந்து கொள்ளும் விஷயத்தில் சரியான யேர்ப்பாடு களில்லாமலிருப்பது இவைகள்தான். இந்தக் காரணங்களிலெல்லாம் கடாசியாக சொல்லப்பட்ட காரணமே குடிமராமத்து ஏற்பாடு சீராக நடந்து வராம லிருப்பதற்குக் காரணமென்று போர்ட்டார் அபிப்ராயப் படுவதாக நமக்குத் தெரியவருகிறது. இந்தக் குறையை நீக்குவதற்கு சில்லரை பாசன மராமத்து வேலைகளை அடிக்கடி சுற்றிப்பார்த்து மராமத்துச் செய்யும் விஷயமாய் ஸமீப காலத்துக்குள் பிறப்பிக்கப் பட்டிருக்கிற உத்திரவுகளே போதுமானவைகளென்று எண்ணப்பட்டிருக்கிறது. கிராமாந்திர ஜனங்களுக்குள் அதிக ஒத்துமையும், பாசன வேலைகளுக்காக யேர்ப் படுத்தப்படும் பஞ்சாயத்துக்களுடைய அபிவிருத்தியுமே நாளாவர்த்தியில் மற்றக் குறைகளை நீக்குவதற்கு காரணமாகயேர்ப்படும். 1858-ம் ௵த்து I-வது ஆக்ட்டை சீர்திருத்துவது உசிதமென்று கவர்ன்மெண்டார் அவர்கள் நினைக்கிறார்கள். கவர்மெண்டாரவர்களுடைய நோக்கத்துக்கு விரோதமாக ஸபையில் கொண்டுவரப்பட்டு 1914-ம் ௵ நவம்பர் மாதத்தில் ஸபை மெம்பர்களினுடைய ஓட்டின் பேரில் தள்ளிவைக்கப் பட்டிருக்கிற நீர்ப்பாய்ச்சல் விஷயமான மசோதாவை (Irrigation Bill) ஆக்ட்டாக ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவருமுன் 1858-ம் ௵த்து I-வது ஆக்ட்டைச் சீர் திருத்தக் கூடாதென்பது போர்ட்டாருடைய அபிப்பிராயமாக யிருக்கிறது. ஆகையால் தற்காலத்துக்கு இப்போதிருக்கும் சட்டத்தினால் யேர்ப்பட்டிருக்கும் ஸாதகங்களை உபயோகித்துக் கொள்ளுவதற் குள்ள யேர்ப்பாடுகளை எல்லா உத்தியோகஸ்தர்களும் செய்து கொள்ள வேண்டுமென்றும் பாசன வேலைகளை பந்தோபஸ்துச் செய்வதற்கும் மராமத்துச் செய்து கொள்ளுவதற்கும் ஜனங்கள் தங்களுக்கு யேர்ப்பட்டிருக்கும் கடமைகளை நிறைவேற்றும் படி கட்டாயப் படுத்த வேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் தீர்மானிக்கிறார்கள்.

STAMPING OF WEIGTH AND MEASURES.

அளக்கிற படி, நிறுக்கும்படிக்கட்டு முதலியவைகளுக்கும் முகர்வைக்கும் விஷயத்தைப்பற்றி.

ஸ்டாண்டிங் ஆர்டர் நெ 204 (3)

முகர்வைப்பதற்காகச் செலுத்த வேண்டிய கட்டணங்கள் விஷயம்:—கடை வியாபாரம் செய்பவர்களுடையவும், கடைக்காரர்களுடையவும் நிறுக்கும் படிக்கட்டுகள், அளக்கும் படிகள் இவைகள் எல்லாம் அதற்கென்றே ஏற்படுத்தப்பட்டிருக்கும் வேலைக்காரர்களால் முகர்வைக்கப்படும். நிறுக்கும்படிக் கட்டுகளையும் அளக்கும்படிகளையும் முகர்வைப்பதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டணதாரணைகளைப்பற்றி 9-வது அனுபந்தத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கலெக்ட்டர்கள் போர்டாருடைய முன் அனுமதி பெற்றுக் கொண்டு, முகர்வைப்பதற்காகச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களின் தாரணைகளை அப்போதைக்கப்போது மாற்றவும்செய்யலாம். முகர்வைப்பதற்காகச் செலுத்தவேண்டிய கட்டணத்தின்தாரணையானது முகர்வைப்பதற்கு வேண்டிய சிப்பந்திச் செலவுக்குப் போதுமான தொகைக்கு சரியாக இருக்கும்படி ஏற்படுத்த வேண்டியது. அப்படி ஏற்படுத்திய தாரணையின் பிரகாரம் வசூல் செய்யப்பட்ட தொகையானது முகர்வைக்கும் சிப்பந்தி செலவுக்கு வேண்டிய தொகை போக ஜாஸ்தியாக மீதமிருக்கும்பக்ஷத்தில் அந்த ஜாஸ்தித் தொகையை கவர்ன்மெண்டார் பாபத்துக்கு வரவு வைத்துவிடவேண்டுமே அல்லது, அந்தத் தொகையை படிகட்டுச் சிப்பந்தியின் அடுத்த வருஷச் செலவுக்கு வைத்துக் கொள்ளக்கூடாது. ஒவ்வொரு வருஷத்துக்கும் முகர்வைப்பதற்காக ஏற்படுத்தும் சிப்பந்திகளும் மற்றச் செலவுகளும், அந்த வருஷத்தில், படிக்கட்டு சிப்பந்தியினால் சம்பாதிக்கக் கூடிய தொகைக்கு மேல் போய்விடாதவிதமாக ஏற்படுத்தப்படவேண்டும். இப்படி முன் ஜாக்கிரதையுடன் செய்யப்பட்ட ஏற்பாட்டின் பேரிலும், வருஷக்கடாசியில் செலவுக்குத் தொகைபோதாமல் போய்விடுமேயாகில், செலவுக்கு அவசியமாய் வேண்டிய பாக்கித்தொகைக்கு போர்ட்டாருக்கு எழுதி உத்தரவு பெற்றுக்கொள்ளவேண்டும்.

இதின் விஷயமான ஆதரவுகள்.

(1) 1857-ம் ௵ அக்டோபர் ௴ 20௳ போட்ட போர்ட்டார் அவர்களுடைய உத்தரவு

(2) 1863-ம் ௵ ஜூன் ௴ 1௳ போட்ட போர்டார் அவர்களுடைய 3242-ம் நெ. உத்தரவு.

(3) 1866-ம் ௵ நவம்பர் ௴ 11௳ போட்ட போர்டார் அவர்களுடைய 3453-ம் நெ. உத்தரவு.

(4) 1885-ம் ௵ மார்ச்சு ௴ 23௳ போட்ட போர்டார் அவர்களுடைய 967-ம் நெ. உத்தரவு.

(5) 1880-ம் ௵ செப்டம்பர் ௴ 29௳ போட்ட போர்டார் அவர்களுடை 1429-ம் நெ. உத்தரவு

(6) 1906-ம் ௵ அக்டோபர் ௴ 12௳ போட்ட 375-ம் நெ. போர்டு உத்தரவு.

குறிப்பு:—முகர்வைப்பதற்காக ஆஜர் செய்யப்படும் அளவு, நிறை, முதலிய படிகள், நிர்ணயிக்கப்பட்ட அளவு அல்லது நிறை (Standard measure of Weight) யுடன் சரியாக யிருக்கிறதா வென்று முகர் வைக்கும் சிப்பந்திகள் சோதித்துப் பார்ப்பதற்கும், நிர்ணயிக்கப்பட்ட அளவு அல்லது நிறையோடு ஆஜர் செய்யப்படும் அளவு நிறைகளி லிருக்கும் அற்ப வித்தியாசங்களைச் சீர்திருத்தி சரிசெய்து கொள்ளுவதற்கும் படிக்கட்டு சிப்பந்திகள், யாதொரு பிரதிபிரயோசனமும் எதிர்பாராமல் இனமாகச் செய்ய வேண்டும்.

ஆதாரங்கள்.

(1) 1884-ம் ௵ அக்டோபர் ௴ 21௳ போட்ட கவர்ன்மெண்டு உத்தரவு. 1164.

(2) 1887-ம் ௵ மே௴ 12௳ போட்ட போர்டார் அவர்களுடைய புரொஸீடிங்ஸ் நெ. 69.

(3) 1887-ம் ஜூன் ௴ 16௳ போட்ட போர்டார் அவர்களுடைய புரோஸீடிங்ஸ் நெ. 147.

அனுபந்தம் 9

ஸ்டாண்டிங் ஆர்டர் நெ. 204-ன் 3 வது-பாரா.

அளக்கிற படிகள் (முகத்தலளவைகள்) நிறுக்கிற படி குண்டுகள் (நிறுத்தலளவைகள்) இவைகளை முகர் வைத்துக் கொடுப்பதற்கு ஏற்படுத்தப் பட்டிருக்கும் கட்டண விபர ஜாப்தா.

ஜில்லாக்கள்			கட்டணத்தாரணை.		
கஞ்சம்		...	0	1	0
விசாகப்பட்டணம்	...	....	0	1	0
கோதாவரி	...	...	0	0	9
கிருஷ்ணா	...	...	0	0	9
கர்னூல்	...	...	0	0	9
பல்லாரி	...	....	0	1	0
அனந்தபுரம்	...	....	0	1	0
கடப்பை	....	....	0	1	3
நெல்லூர்	...	...	0	0	6
சென்னப்பட்டணம்	...	...	0	0	6
செங்கல்பட்டு	...	...	0	0	4
தென் ஆர்க்காடு	....	...	0	0	4
வட ஆர்க்காடு	....	...	0	0	9
சேலம்	...	....	0	1	0
கோயம்புத்தூர்	...	...	0	0	8
திருச்சினாப்பள்ளி	....	...	0	0	9
தஞ்சாவூர்	...	...	0	0	4
மதுரை	....	....	0	0	8
திருநெல்வேலி	....	....	0	0	9
தென்கன்னடம்	...	...	0	1	6

ACT No XXIII OF 1917.

1917-ம் ஹுத்து 23-வது ஆக்ட்.

1882-ம் ஹுத்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டுகளாக்டைப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1882-ம் ஹுத்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டுகளாக்டின் 7-வது பிரிவைச்சேர்ந்த விலக்கு நிபந்தனைகளுக்கு பர்த்தியாக அடியிற் கண்டதை அமைத்துக்கொள்ள வேண்டும்; அதாவது:—

"ஆனால்—

(1) யாதொரு நபர்—

(a) 1861-ம் ஹுத்திய இந்து தேசத்து ஹைகோர்ட்டுகளாக்டின்படியாவது இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தமான 1915-ம் ஹுத்து ஆக்டின் படியாவது ஸ்தாபிக்கப்பட்ட நீதி விவகார விசாரணை நடத்துகிற ஒரு ஹைகோர்ட்டைச் சேர்ந்த அட்வொகேட்டாகவாகிலும்,

(b) ஷை ஹைகோர்ட்டுகளில் ஒன்றைச் சேர்ந்த வக்கில் அல்லது அட்டர்னியாகவாகிலும்

இருந்தாலன்றி மற்றப்படி, அவரை யாதொரு ஸ்மால்காஸ் கோர்ட்டின் (சீப்) தலைமை ஜட்ஜாக நியமிக்கக்கூடாது;

(2) யாதொரு நபர்.—

(a) ஷை ஹைகோர்ட்டுகளில் ஒன்றைச் சேர்ந்த அட்வோகேட், வக்கீல் அல்லது அட்டர்னியாகவாகிலும்,

(b) ஸிவில் விவகார விசாரணை நடத்தும் யாதொரு கோர்ட்டில் ஐந்து வருஷ காலத்துக் குறையாமல் ஜட்ஜாகவாகிலும்

இருந்தாலன்றி மற்றப்படி, அவரை யாதொரு ஸ்மால்காஸ் கோர்ட்டின் ஜட்ஜாக நியமிக்கக்கூடாது; மேலும்,

(3) தலைமை ஜட்ஜ் உட்பட அப்படி ஜட்ஜுகளாக நியமிக்கப்பட்ட நபர்களில் மூன்றிலொரு பங்குக்குக் குறையாமல் ஷை ஹைகோர்ட்டுகளில் ஒன்றைச்சேர்ந்த அட்வோகேட்டுகளாய் இருக்கவேண்டும்"

ACT No XXVI OF 1917.

1917-ம் ஹுத்து 26-வது ஆக்ட்.

1915-ம் ஹு ஜனவரிமீ 1உக்கு முன் செய்யப்பட்ட சில சொத்து ட்ரான்ஸ்பர்களை சட்ட சம்மதமாக்குவதற்கான ஆக்ட்.

இது முதலில் ஆக்ராவும் அயோத்தியும் சேர்ந்த ஐக்கிய மகாணங்களுக்கு வியாபிக்கும்; ஆனால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - இந்தியா கேஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக இதை, அந்த விளம்பரத்தில் குறிப்பிடப் படும் ப்ரிடிஷ் இந்தியாவின் வேறே எந்த பாகத்துக்கும் வியாபிக்கும் படி செய்யலாம்

யாதொரு கொதுவை அல்லது தானமானது 1915-ம் ஹு ஜனவரிமீ 1உக்கு முன் எழுதிக்கொடுக்கப்பட்ட ஒரு ஆதரவினால் ஏற்பட்டதாகப் பொருள் பட்டு அப்படிப்பட்ட ஆதரவுக்கு 1882-ம் ஹுத்து சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான ஆக்டின்படி சாட்சிக் கையெழுத்து பண்ண வேண்டியிருந்தால், அப்படிப்பட்ட ஆதரவுக்கு சாட்சியாய் கையெழுத்து பண்ணினதாக பொருள்படுகிற யாதொரு நபர் அதை எழுதிக் கொடுத்தவர் அதில் கையெழுத்து போடும் போது பார்க்கவில்லையென்னும் காரணத்தினாலேயே அந்த கொதுவை அல்லது தானமானது சட்டசம்மத மற்றதாய் எண்ணப்பட மாட்டாது; ஆனால், அப்படிப் பட்ட நபர் அந்த ஆதரவில் தம்முடைய கையெழுத்தைப் போடுவதற்கு முன், அந்த நபரிடத்தில் அதை எழுதிக் கொடுத் திருப்பவர் அதில் தாம் கையெழுத்து போட்டிருப்பதாக நேரில் ஒப்புக் கொண்டிருக்க வேண்டும்.

1915-ம் ஹு ஜனவரிமீ 1உக்கு முன் எழுதிக் கொடுக்கப்பட்ட அப்படிப்பட்ட யாதொரு ஆதரவின் படிசெய்யும் தாவாவானது - எவர் அப்படிப்பட்ட ஆதரவில் சாட்சிக் கையெழுத்தைப் போடுவதற்கு முன் அதை எழுதிக் கொடுத் திருப்பவர் அதில் கையெழுத்துப் பண்ணி யிருப்பதாக அவரே தம்மிடத்தில் நேரில் ஒப்புக் கொள்வதைக் கேட்டு பிறகு அதில் அப்படி சாட்சியாய் கையெழுத்து பண்ணினதாகப் பொருள் படுகிறதோ அந்த நபர் அதை எழுதிக் கொடுத்திருப்பவர் அதில் கையெழுத்து செய்ததைப் பார்க்க வில்லை என்னும் காரணத்தினாலேயே யாதொரு அசல் விசாரணைக் கோர்ட்டிலாகிலும் ரிவிஷன் கோர்ட் என்னும் புனர் விசாரணை பண்ணும் யாதொரு கோர்ட்டிலாகிலும் யாதொரு அபபீல் கோர்ட்டிலாகிலும் 1912-ம் ஹு ஜுலைமீ 30உக்குப் பிறகும் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்கு முன்பும் முழுவதுமோ அல்லது சிறிது மட்டிலோ தள்ளிவிடப் பட்டிருந்தாலும் நிராகரிக்கப் பட்டிருந்தாலும் வாபஸ் வாங்கிக்கொள்ளப் பட்டிருந்தாலும், அதன்படி தாவா செய்கிற நபர்களுக்குச் சம்மந்தப் பட்ட மட்டில், மேலே கண்டபடி தள்ளி விடப் பட்டதினாலாகிலும் நிராகரிக்கப் பட்டதனாலாகிலும் வாபஸ் வாங்கிக் கொள்ளப் பட்டதனாலாகிலும் அந்த ஆதரவு முழுவதுமோ அலலது சிறிதுமட்டிலோ சட்ட சம்மத மற்றதாய்ப் போயிருக்கிற பட்சத்திலே, இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதி யிலிருந்து ஆறுமாத காலத்துக் குள்ளாக எழுத்து மூலமாய் விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதன் மேல், தீர்ப்புகளை புனராலோசனை செய்வதற்காக 1908-ம் ஹுத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோடில் நிபந்தனை கண்டிருக்கிற

நடவடிக்கை முறையை அனுசரித்து அந்த வியாஜ்ஜியத்தைப் புனராலோசனைக்காக மறுபடியும் எடுத்துக் கொள்ளலாம்; அந்தப்படி மறுபடியும் எடுத்துக் கொள்வதன்மேல், 2-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகள் அப்படிப் பட்ட ஆதரவுக்குப் பிரயோகப்படும்.

ஆயினும்,—

(1) எந்த கோர்ட்டாருக்கு அப்படி விண்ணப்பம் செய்து கொள்ளப்படுகிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு கோர்ட்டாரும் அப்படி புனராலோசனைக்கு எடுத்துக் கொள்வதனால் ஷை 1912-ம் ஹு ஜுலைமீ 30உக்குப்பின் செய்யப்பட்ட யாதொரு ட்ரான்ஸ்பரின் படி நல்ல எண்ணத்துடன் தொகை செலுத்தி (சொத்து முதலியவற்றை) ட்ரான்ஸ்பர் செய்யப் பெற்றிருக்கும் யாதொரு நபரின் பாத்தியதைகளுக்குப் - பிரதிகூலமான பாதகம ஏற்படுமென்று அபிப்பிராயப் பட்டால், அவர்கள் - யுக்தானுசாரமாய் அந்த விண்ணப்பத்தை நிராகரிக்கலாகும்;

(2) அப்படி விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதன்மேல் விண்ணப்பதாரருக்காவது அவருடைய சட்டப்படிக்கான பிரதிநிதிக்காவது அனுகூலமாக டிக்ரி கொடுக்கப்படும் பட்சத்தில், அப்படிப்பட்ட தாவா முதலில் தள்ளிவிடப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட அல்லது வாபஸ் வாங்கிக் கொள்ளப்பட்ட தேதிவரையிலும் அதிலிருந்து ஆறுமாத காலத்துக்கும் ஒப்பந்தத்தின் படிக்கான விதப்படியும் அதற்குப் பிறகு தொகை வசூலாகிற வரையில் நூற்றுக்கு 6 விதப்படியும் மாத்திரம் அப்படிப்பட்ட ஆதரவு விஷயமாய் வட்டி பெறுவதற்கு அனுமதி கொடுக்கப்படும்;

(3) ஷை வியாஜ்ஜியமானது அந்தப்படி புனராலோசனைக்காக எடுத்துக் கொள்ளப்படும் விஷயத்தில், அந்த கோர்ட்டார் - எந்த கோர்ட்டாரால் அல்லது எந்த கோர்ட்டாருக்கு முன்பாக இந்த வியாஜ்ஜியம் தள்ளிவிடப் பட்டதோ, நிராகரிக்கப் பட்டதோ அல்லது வாபஸ் வாங்கிக்கொள்ளப் பட்டதோ அப்படிப் பட்ட முந்திய கோர்ட்டாரால் விசாரணை செய்து முடிவாய்த் தீர்மானிக்கப்பட்ட விஷயத்தைப் பற்றிய யாதொரு அம்சத்தைக் குறித்து அந்த கோர்ட்டார் செய்த தீர்ப்பினால் கட்டுப் பட்டவர்களாவார்கள்.

ACT No XIX OF 1917.

1917-ம் ஹுத்து 19-வது ஆக்ட்.

1910-ம்ஹுத்திய இந்து தேசத்து நோட் செலவாணி ஆக்டையும், 1917-ம் ஹுத்திய இந்துதேசத்து நோட் செலாவணி (சிறிதுகாலத்துக்குத்திருத்துவதற்கான) ஆக்டையும் திருத்துவதற்கான ஆக்ட்.

இந்த ஆக்டை, 1917-ம் ஹுத்திய இந்து தேசத்து நோட் செலாவணி(திருத்துவதற்கான)ஆக்ட் என்று சொல்லலாம்.

6-வது 7-வது பிரிவுகள்-இப்போதைய யுத்தம் நடந்துகொண்டிருக்கிற வரையிலும் அதற்குப் பிறகு ஆறுமாத காலத்துக்கும் மாத்திரமே செலாவணியாகும்.

1917-ம் ஹுத்திய இந்துதேசத்து நோட் செலாவணி (சிறிதுகாலத்துக்குத் திருத்துவதற்கான) ஆக்டின் 3-வது பிரிவில் "முப்பதுகோடி" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "நாற்பத்திரண்டு கோடி" என்னும் வார்த்தைகள் அமைக்கப்பட்டிருந்தாற்போல, அந்தப் பிரிவுக்கு அர்த்தம் பண்ணவேண்டும்

(இதில் பின்னால் 'மேற்படி ஆக்ட் என்று சொல்லப்படும்) 1910-ம் ஹுத்திய இந்து தேசத்து நோட் செலாவணி ஆக்டின் 2-வது பிரிவைச்சேர்ந்த (a) குறிப்பிட்ட பகுதியில் "ஐந்து ரூபாய்" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "ஒரு ரூபாய், இரண்டரை ரூபாய், ஐந்து ரூபாய்" என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

மேற்படி ஆக்ட் 3-வது பிரிவில் "ஐந்து ரூபாய்க்குக்குறையாமல்" என்னும் வார்த்தைகளை விட்டுவிட வேண்டும்.

மேற்படி ஆக்ட் 15-வது பிரிவில், "ஐந்துரூபாய்" என்னும் வார்த்தைகள் வருகிற இடங்களிலெல்லாம் அவைகளுக்கு பர்த்தியாக "ஒரு ரூபாய்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

மேற்படி ஆக்ட் 19-வது பிரிவில், "ஈடாயிருக்கும் பொருட்டு" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜெனரலவர்களுக்காக மஹாராஜா சக்கரவர்த்தியவர்களின் ராஜ்ஜியங்களைச் சேர்ந்த யாதொரு பாகத்தின் கவர்ன்மெண்டாராலாவது அவர்களின் அதிகாரத்தின்படியாவது காசடிப்பதற்காகவாகிலும் அப்படிப்பட்ட வேறே அங்காமியான காரியத்துக்காகவாகிலும் வைத்துக் கொள்ளப் பட்டிருக்கும் யாதொரு பொன் நாணயம் அல்லது பொன்கட்டி உட்பட" என்னும் வார்த்தைகளை அமைத்துக் கொள்ளவேண்டும்.

மேற்படி ஆக்ட் 21-வது பிரிவில் "ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்கு" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்காவது மஹாராஜ சக்கரவர்த்தி அவர்களின் ராஜியங்களைச் சேர்ந்த யாதொரு பாகத்தின் கவர்ன்மெண்டாருக்காவது அனுப்பினாலும் அப்படிப்பட்ட யாதொரு கவர்ன்மெண்டாரிட மிருந்து அது ஆலோசனைசபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கு அனுப்பப்பட்டாலும்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

மேற்படி ஆக்ட் 29-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a) அடையாளமிட்ட பகுதியில் "(ஐந்து ரூபாய்க்குக் குறையாமல்)" என்னும் வார்த்தைகளையும் குறிகளையும் விட்டுவிடவேண்டும்.

1917-ம் ஹுத்திய இந்து தேசத்து நோட்செலாவணி (திருத்துவதற்கான) சாஸனம் இதனுல் ரத்து செய்யப்படுகிறது.

ACT No. XXII OF 1917.

1917-ம் ஹுத்து 22-வது ஆக்ட்.

ப்ரிடிஷ் இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யப்படும் பொன்னை அடைவதற்காக நிபந்தனை ஏற்படுத்துவதற்கான ஆக்ட்.

இந்த ஆக்டை, 1917-ம் ஹுத்திய பொன் (இறக்குமதி) ஆக்ட் என்று சொல்லலாம்;

இது-ப்ரிடிஷ் பலுசிஸ்தான், ஸந்தால் பர்க்கணுக்கள் இவைகள் உட்பட ப்ரிடிஷ் இந்தியா முழுவதுக்கும் வியாபிக்கிறது; மேலும்,

இது-இப்போதைய யுத்தம் நடந்து கொண்டிருக்கிற வரையிலும் அதற்குப்பிறகு ஆறுமாத காலத்துக்கும் செலாவணியாய்க் கொண்டிருக்கும்.

இந்த ஆக்டில் சங்கதியினுலாவது முன்பின் தொடர்ச்சியினுலாவது விரோதம் ஏதேனும் இருந்தாலொழிய,—

'நாணயம்' என்பது - பணமாக உபயோகிக்கப்படும் பொருட்டு யாதொரு சமஸ்தானத்தின் அல்லது சுயச்சாதிபதியின் அதிகாரத்தைக் கொண்டு முத்திரையிட்டு வெளியிடப்பட்டு அந்தந்த காலத்தில் அப்படி உபயோகிக்கப்படுகிற உலோகம் என்று அர்த்தமாகும்;

'பொன்' என்பது - பொன் நாணயம் அல்லது பொன்கட்டி என்று அர்த்த மாகும்;

'இறக்குமதி' என்பது - கடல் மார்க்கமாகவாவது தரைமார்க்கமாகவாவது ப்ரிடிஷ் இந்தியாவுக்குள் கொண்டு வருவது என்று அர்த்தமாகும்.

(1) இந்த ஆக்டின் நிபந்தனைகளுக்குட்பட்டு ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாவது இது விஷயமாய் அவரால் நியமிக்கப்படும் யாதொரு நபராவது-ப்ரிடிஷ் இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யப்படும் யாதொருபொன்னை, அப்படி இறக்குமதி செய்த தேதியிலிருந்து பத்து தினங்களுக்குள் எழுத்து மூலமான உத்தரவைக்கொண்டு ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளலாம்; அதன்மேல் அப்படிப்பட்ட பொன்னுனது மஹாராஜ சக்கரவர்த்தி அவர்களிடத்தில் அறுதியாய்ச் சங்கிரமிக்கும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவினுல் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக்கொண்டு யாதொரு பொன்னை ஸ்வாதீனப்படுத்திக்கொள்கிற விஷயத்தில், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி உத்தரவு செய்யும் அதிகாரி கேட்க்கக்கூடிய தஸ்தாவேஜுகள் கொண்டு வந்து காட்டப்படுவதன்மேல், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் நிர்ணயிக்கப்படக்கூடிய வீதப்படி கணக்கிடப்படும் ஒரு தொகையை அந்தப் பொன் விஷயமாய் அதன் சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டும்.

(3) அப்படிப்பட்ட யாதொரு பொன்னின் சுத்தத்தைப்பற்றி விவாதம் எதுவாகிலும் ஏற்பட்டால், 1906-ம் ஹுத்திய இந்துதேசத்து காசடிப்பு ஆக்டின்படி ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு தங்கசாலையின் அஸ்ஸே மாஸ்டரால் பரிக்ஷித்துக்கொடுக்கப்பட்ட ஸெர்டிபிகேட்டானது முடிவானதாகும்.

4. 1917-ம் ஹுத்திய பொன் (இறக்குமதி) சாஸனம் இதனுல் ரத்து செய்யப்படுகிறது.

ACT No. XVII OF 1917.

1917-ம் ஹுத்து 17-வது ஆக்ட்.

1873-ம் ஹுத்திய கவர்மேண்ட் சேவிங்ஸ் பாங்கி ஆக்டைத் திருத்துவதற்கான ஆக்ட்.

1. இந்த ஆக்டை, 1917-ம் ஹுத்திய கவர்ன்மென்ட் ஸேவிங்ஸ் பாங்கி (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

2. 1873-ம் ஹுத்திய கவர்ன்மென்ட் ஸேவிங்ஸ் பாங்கி ஆக்டின் 4-வது பிரிவிலும் 8-வது பிரிவிலும் "ஆயிரம் ரூபாய்க்கு" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "மூவாயிரம் ரூபாய்க்கு" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

161195
சென்னை-600 008.

DIEU ET MON DROIT
HONI SOIT QUI MAL Y PENSE

The Indian Law Gazette.

PART II.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னைப்பட்டணம், 1917ஹு ஜனவரிமீ [நெ. 1.

Reports of Cases.

கேஸ்களின் ரிப்போர்ட்டுகள்.

நெ. 1.

மதராஸ் ஹைக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர். மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ.

இரண்டாவது அப்பீல் நெ. 1495 of 1912.

S. சிதம்பரம்மா—(வாதி)—அப்பீல்வாதி

v.

S. ஹுசேனம்மா வகையராக்கள் 1, 2; 4,

பிரதிவாதிகள்—ரெஸ்பான்டெண்டுகள்.

லாபாயின்ட்:—இந்துலாவின்கீழ் ஏற்படும் அனந்தரவார்சு பாத்தியதையை ஜப்திசெய்யக் கூடுமோ என்பது.

ஹிந்துலா:—புருஷன் பட்ட கடனுக்காக விதவையின்பேரில் செய்யப்பட்ட டிக்ரி சொத்தை ஜப்திசெய்தல், யாதொரு நியாயமான அவசியமில்லாமல் விதவை முன்னமேயே சொத்தை பராதீனஞ்செய்தல், அதன்பேரில் அனந்தரவார்சு பாத்தியதையை ஜப்திசெய்து விற்பனைக்கு கொண்டுவருவது நியாயந்தான்.

ஒரு ஹிந்து விதவையின்பேரில் அவளுடைய காலஞ்சென்ற புருஷன்பட்ட கடனுக்காக ஒரு வாதி டிக்ரிபெற்று அந்த டிக்கிரியின்கீழ் மேற்படி விதவை ஜப்திக்குமுன் அநேக வருஷங்களுக்கு முன்னமேயே அனந்தரவார்சை கட்டுபடுத்தாதபடி விற்பனை செய்துவிட்ட சொத்தை ஜப்திசெய்தான்.

தீர்மானம்:—டிக்ரிபெற்றவன் அந்த சொத்தில் அனந்தரவார்சுக்குள்ள ஹக்கு பாத்தியத்தை கிரயம்பெற்றவன் அந்த விதவை ஜீவித்திருக்குங்காலையில் அனுபவித்து வரலாமென்னும் பாத்தியத்திற்குட்படுத்தி ஜப்திசெய்து விற்பனைக்குக் கொண்டுவரலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

நந்தியால் டி-மு-1910-ம் வருஷத்திய அசல் நெம்பர் 173-ல் செய்த டிக்ரியின்பேரில் கர்னூல்

Z2/m1N06
N06:10

ஜில்லா ஜட்ஜ் 1911-ம் வருஷத்திய அப்பீல் நெம்பர் 27-ல் பிறப்பித்த டிக்கிரியின்பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

இந்த கேசின் விவரம்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் தீர்மானத்தில் நன்கு விளங்கும்.

லாயர்கள்:—மிஸ்டர் V. C. சேஷாச்சாரியார், (அப்பீல்)—வாதிகளின் வக்கீல். மெஸெர்ஸ், T. M. கிருஷ்ணசாமி ஐயர், R. வெங்கடரமணராவ் இரண்டாவது ரெஸ்பான்டென்ட் வக்கீல்கள்.

பின்வருமாறு மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி அவர்கள் இந்த கேசில் ஒரு உத்தரவு பிறப்பித்தார். முதல் பிரதிவாதியாகிய விதவை 3-ம் பிரதிவாதிக்கு செய்த கிரயம் பேருக்குமாத்திரம் (பினாமியாய்) செய்யப்பட்டதென்றும் அந்த கிரயத்திற்கு யாதொரு ஐவேஜும் கொடுக்கப்படவில்லையென்றும் ருஜுசெய்யவேண்டிய பொருப்பு, காலம் சென்ற புருஷன் பட்ட கடனுக்காக அவளுடைய விதவையின்பேரில் டிக்ரிபெற்று அந்த டிக்ரி கடனை வசூல்செய்வதற்காக தாவாசொத்தை ஜப்திசெய்த வாதியினுடைய பொருப்புதானென்று கண்டு ஜில்லா ஜட்ஜ் அபிப்பிராயம் கொண்டது நியாயமானதுதான். வாதி அந்த பொருப்பின்படி ருஜுசெய்யவில்லையென்று கண்டிருப்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இந்த கேசில் இதன்றி இன்னொரு அம்சமிருக்கிறது. அதாவது அந்த விதவை செய்த பராதீனம் அவளுடைய ஜீவதிசைக்குப்பின் அந்த சொத்தை கட்டுப்படுத்துவதற்கு யோக்கியதையான காரியங்களுக்காக செய்யப்பட்டதா அல்லவா என்பதும். வாதிதான் விதவையின்பேரில் பெற்ற டிக்ரியின்கீழ் அனந்தரவார்சுக்குச் சொந்தமானசொத்தை ஜப்திசெய்து விற்பனைக்குக் கொண்டுவர நியாயமுண்டா இல்லையா என்பதுவே. புருஷனுடைய கடன்தாரன் அல்லது அனந்தரவார்சுக்கு விரோதமாய் ருஜு செய்யவேண்டிய விஷயம் அதாவது விதவையினால் செய்யப்பட்ட பராதீனம் தாவாசொத்தில் அனந்தரவார்சுக்குள்ள பாத்தியதையை கட்டுப்படுத்துமா என்பதை அப்படி கிரயம்பெற்றவன்தான் ருஜுசெய்யவேண்டியதென்று தெளிவாய் ஏற்படுகிறது.

“பிரதிவாதிகள் கிரயம் செய்வதற்குத் தகுந்த அவசியமிருந்ததாக திருப்திகரமாய் ருஜுசெய்யவில்லையென்று” ஜில்லாஜட்ஜ் அவர்கள்சந்தேகமின்றி சொல்லுகிருர். ஆனால் டிஸ்ட்ரிக்ட் முனிசீப்பு வேறே அபிப்பிராயம் கூறியிருப்பதால் ஜில்லா ஜட்ஜ் கூறியிருப்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளாமல்:—முதல் பிரதிவாதி 1899-ம் வருஷத்தில் 3-ம் பிரதிவாதிக்கு செய்த பராதீனம் தாவா சொத்தில் அனந்தரவார்சுக்குள்ள பாத்தியத்தைக் கட்டுப்படுத்துமா என்பதைப்பற்றி ஜில்லா ஜட்ஜ் அவர்கள் ரெக்கார்டிலுள்ள சாட்சியத்தின்பேரில் புதிதாய் கண்டு தன்னுடைய அபிப்பிராயத்தை ஆறுவாரத்திற்குள் ரிப்போர்ட்டு செய்யவேண்டுமென்று இந்த கேசு ரெக்கார்டுகளை மருபடியும் ஜில்லா ஜட்ஜுக்கு அனுப்பப்பட்டது.

ஜில்லா ஜட்ஜ் அவர்கள் இந்த அம்சத்தை ருஜு செய்யவேண்டிய பொருப்பு பிரதிவாதிகளுடையதென்றும் ரெக்கார்டிலுள்ள சாட்சியத்தின்படி. அவர்கள் அந்த பொருப்பின்படி ருஜு செய்யவில்லையாகையால் தாவா சொத்து அனந்தரவார்சின் ஹக்கு பாத்தியதையைக் கட்டுப்படுத்த செய்யப்பட்டதல்லவென்றுதான் சொல்லவேண்டுமென்று ரிப்போர்ட்டு செய்தார்.

இரண்டாவது அப்பீல் மறுபடியும் விசாரணைக்கு வந்தபோது ஹைகோர்ட்டார் செய்த தீர்மானம்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவஐயர்:—இந்த கேசின் விபரத்தை இதனடியில்காண்க. வாதிநந்தியால் டி. மு. கோர்ட்டு 1901ஹு அசல் நெ. 311-ல் டிக்ரிபெற்றவர் தீர்ப்பு கடனாளி - முதல் பிரதிவாதி. அவள் தன்னுடைய புருஷன் சொத்தை அனுபவித்துவரும் ஒரு ஹிந்து விதவை. இந்தநெம்பரில் செய்யப்பட்ட டிக்ரி ஒரு விதவையின் புருஷன் பட்ட கடனுக்காக செய்யப்பட்டது. தாவா சொத்தை வாதி (டிக்ரிதாரன்) புருஷனுக்குச் சொந்தமான சொத்தென்று ஜப்திசெய்தான். ஜப்திசெய்தது 1908ஹு நவம்பர்மீ 11உ. ஆனால் முதல் பிரதிவாதியாகிய விதவை 1899-ம் வருஷத்தில் தாவா சொத்தை மூன்றும் பிரதிவாதிக்கு விற்கிரயம் செய்துவிட்டாள். மூன்றும் பிரதிவாதி அந்தே சொத்தை 1905ஹு இரண்டாம் பிரதிவாதிக்கு விற்றுவிட்டான். மேற்படி கிரயம் அவசியமாய் நியாயப்படி செய்யவேண்டிய காரியத்திற்காக செய்யப்பட்டதல்ல வாகையால் அவளுடைய ஜீவதிசைக்குப் பின் அந்த கிரயம் செல்லத்தக்கதல்ல.

இந்த இரண்டாவது அப்பீலில் இப்பொழுது எங்கள் முன்னிருக்கும் சாட்சியத்தினால் என்ன கேள்வி ஏற்படுகிறதென்றால்:—விதவை எழுதிக்கொடுத்த கிரயதஸ்தாவேஜினால் நாங்கள் முன் சொல்லியது போல் அவள் ஜீவதிசைக்குப்பின் பாதிக்கப்படாமலிருக்கும் காலஞ்சென்ற அவளுடைய புருஷனுடைய சொத்தை எங்கள் முன்னிருக்கும் அப்பீல் வாதியாகிய (வாதி) 1901-ம் ஹுத்திய அசல்நெம்பர் 311-ல் பெற்ற டிக்கிரியின் கீழ் ஜப்தி செய்து ஏலவிற்பனைக்கு கொண்டுவரலாகியுண்டா இல்லையா என்பதுதான். ஓர் விதவையினிடமிருக்கும் சொத்து அவளுடைய ஜீவதிசை வரைக்கும் அவளுடைய ஜீவனாம்சத்திற்காக மாத்திரம் அவளிடத்தில் சர்வசுதந்

தரத்துடனிருக்கவேண்டியதேயல்லாமல் மற்றப்படிக்கல்லவென்று அநேக கேசுகளில் சந்தேகமின்றி சொல்லியிருக்கிருர்கள் (இதற்காதாரமாய் மெயின்ஸ் ஹிந்துலா 624, 625-வது பாராக்களைப்பார்க்கவும்,) ஆனால் என்னுடைய அபிப்பிராயமென்னவென்றால் அவள் தன் புருஷனுடைய சொத்திற்கு சுதந்தரவாளியென்பதனால் அவள் அந்த சொத்தை அவசியமான காரியங்களுக்கன்றி மற்றப்படி பராதீனம் செய்யலாகாதென்பது நிதர்சனமாக சில ஹிந்து கிரந்தங்களில் செப்பியிருக்கின்றன. இந்த நீதி வாக்கியங்களுக்கு விரோதமாய் அவள் செய்யும்விற்பனையினால் கிரயதாரனுக்கு அந்த சொத்தின் சர்வசுதந்தரமும், கிரயம் செய்து விடப்பட்டதென்றுதான் சொல்லவேண்டும். ஆனால் அவசியமான காரியத்திற்கன்றி மற்றப்படி வேறெவ் விஷயத்திற்காகவாவது கிரயம் செய்யப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட கிரயம் அவளுடைய ஜீவதிசை வரையிலுந்தான் செலாவணியுள்ளதென்று, அதாவது அந்த விதவை ஜீவித்திருக்கும் வரையில் மாத்திரம் கிரயதாரன் அந்த சொத்தை அனுபவிக்கலாமேயல்லாமல் மற்றப்படிக்கல்ல வென்று அநேக தீர்மானங்களாகியிருக்கின்றன (இதற்காதாரமாய் சொற்பகாலத்திற்கு முன் தீர்ப்பாகிய சிங்காரம் செட்டியார் v. கல்லியாணசுந்தரம் பிள்ளை 1914-ம-வீ-நெ 735 பார்க்கவும்) நீதி வாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கும் நீதி மொழிகள் நியாய (சட்ட) வாக்கியங்களாய் விட்டமையால் அவள் அவசியமான காரியத்திற்கன்றி செய்த விற்பனை அவளுடைய ஜீவதிசை வரையில் தான் செல்லும். ஆகையால் அவள் செய்திருக்கும் விற்பனையை இரண்டு விதமாய்பாவிக்கலாமென்பதாக எனக்கு தோன்றுகிறது. அதாவது, (1) அவள் செய்த கிரயதஸ்தாவேஜினால் கிரயம் பெற்றவன் அவளுடைய ஜீவதிசை வரையில் அவளுக்கு அந்த சொத்திலுள்ள ஜீவனாம்ச ஹக்கைமாத்திரம் அனுபவிக்கலாமென்பதும், (2) அவளுடைய ஜீவதிசைக்குப்பின் அனந்தரவார்சுகள்தான் அந்த சொத்தைக் கைப்பற்றி அனுபவிக்க சுதந்தரமுள்ளவர்களாகையால் இந்த இரண்டு பாத்தியதைகளும் சேர்ந்து காலம் சென்ற புருஷன் இறந்த காலத்தில் அவனுடைய சொத்தாயிருந்தது. ஆனால் அவளுடைய ஜீவதிசைவரையில் அவளுக்கு அந்த சொத்திலிருந்த ஜீவனாம்சஹக்கு மாத்திரம் அவள் செய்த பராதீனத்தினால் காலம் சென்ற புருஷனுடைய கடன் தாரனுக்கு கிடைக்கமாட்டாது. அந்த சொத்திலுள்ள அனந்தரவார்சு பாத்தியதைமாத்திரம் அவளுடைய ஜீவதிசைவரையில் அவளிடமேயிருந்து அவளுக்குப்பின் அந்த அனந்தரவார்சு பாத்தியதை புருஷனுடைய கடன்தாரர்களுக்கு கிடைக்குமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். மிஸ்டர் T. M. கிருஷ்ணசாமி ஐயர் என்பவர் இனி அனந்தரவார்சு பாத்தியதை கிடைக்கும் என்பவனுக்கு விதவை ஜீவித்திருக்கிறவரையில் யாதொருபாத்தியதையும் கிடையாதென்பதற்கு ஆதாரமாய் ஸ்ரீ ஜெகன்னுதராஜு v. ஸ்ரீ ராஜ பிரசாதராவ் (1916ஹு இ-லா-ரி-30 ம 554) எடுத்துக் கூறினர். விதவை அந்த சொத்தை கிரயம் செய்து விட்டபின் அந்த சொத்திலுள்ள அனந்தரவார்சுபாத்தியதைக்கு அவள் ஜீவித்திருக்கும்பொழுது யாரும் சுதந்தரவாளியாகவில்லை, ஆனால் அவள் தன்னுடைய ஜீவனாம்சஹக்கை கிரயம் செய்து விட்டபின் அனந்தரவார்சு பாத்தியதை தனியாய் நின்றுவிடவில்லையென்று சொல்ல முடியாதல்லவா? காலம் சென்ற புருஷனுக்குசொந்தமான யாதோ ஒருபாத்தியதைநின்றுபோய்விட்டால் அந்த பாத்தியதைக்கு யாரோ ஒரு சுதந்தரவாளி ஏற்படவேண்டும். அந்த விதவை புருஷன் இறந்த காலத்தில் தன்னுடைய ஜீவனாம்சத்திற்கும், புருஷனுடைய அனந்தரவார்சு பாத்தியதைக்கும் வார்சாகயிருந்தாள். டிக்ரிதாரன் அவளை அவளுடைய புருஷனுடைய முழு சொத்துக்கும் வார்சாக யேற்படுத்தி டிக்ரி பெற்றவனாகையால் அவளிடமிருக்கும் அவளுடைய புருஷனுடைய அனந்தரவார்சு பாத்தியதையை அவன் ஜப்திசெய்ய ஹக்குள்ளவனாகிறான். இதுவுமன்றி மிஸ்டர் கிருஷ்ணசாமி அய்யர் சிவில் புரோசிஜர்கோடு 60, (M) பிரிவையும் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் 6-வது பிரிவு(a) உட்பிரிவையும் ஆதாரமாய் எடுத்துக் காண்பித்தார். சி-பு-கோ 60 (m) பிரிவில் தீர்ப்பு கடனாளி இனிவார்சாக கிடைக்குமென்று கோரும் சொத்தை ஜப்தி செய்யலாகாதென்று சொல்லியிருக்கிறது என்றும் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 6 (a) பிரிவில் இனி அதிர்ஷ்டானுகூலமாய் கிடைக்குமென்று கோரும் சொத்தை இனிவார்சாகி சுதந்தரவாளியாய் வருபவன் கிரயம் முதலான பராதீனங்கள் செய்யலாகாதென்று செப்பியிருக்கிறதென்றும் வாதித்தார். இந்த பிரிவுகள் பிரஸ்தாப கேசிலுள்ள பாயிண்டுக்கு ஏற்றதல்லவென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ஏனென்றால் இந்தகேசில் தீர்ப்பு கடனாளி இனி அனந்தரவார்சாக தனக்கு கிடைக்கும் சொத்தென்று நினைக்கப்படும் சொத்தல்ல. புருஷனுடைய சொத்து. அவன் இறந்து போனபோதே விதவையினிடம் சொந்தமாய்வந்துவிட்டது. அவளை தீர்ப்புகடனாளியாக தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால் வாதி 1901-ம் ஹுத்திய-311-வது அசல்நெம்பரில் பெற்ற டிக்ரியின் கீழ் நிறைவேற்றுதலில் தாவாசொத்திலுள்ள அனந்தரவார்சுபாத்தியதையை விதவையின் ஜீவனாம்ச பாத்தியதைக் குட்படுத்தி ஜப்தி செய்தது சட்டப்படி செலாவணியுள்ளதென்று டெக்லேர் செய்து (வெளிப்படையாய்சொல்லி) டிக்ரி செய்கிறேன். இதன் செலவுகள் முழுதும் இருகட்சியாரும் பொறுத்துக் கொள்ளவேண்டியது.

மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி:—நான் மேல்கூறிய தீர்மானத்தை ஒப்புக் கொள்ளுகிறேன். ஏனென்றால் அந்த விதவை தன்னுடைய ஜீவனும்ச ஹக்கிற்கும் புருஷனுடைய அனந்தரவார்சு பாத்தியதைக்கும் வார்சாகயிருந்தாளாகையால் அவள் கிரயம் செய்தவுடன் புருஷனுடைய அனந்தரவார்சு பாத்தியதை அவள் காலமாகும்வரையில் தீர்ப்பு கடனாளிக்குச் சொந்தமாயிருந்தது. அந்த பாத்தியத்தை வாதி ஜப்திசெய்தது சரியே.

கே. 2.

ஜட்ஜிகள்.—{ மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர். மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியார்.

1914-ம் வருஷத்திய அப்பீல் உத்தரவின்பேரில் அப்பீல் நெம்பர் 75.

மகம்மத் ஹுசேன் சாயபு வகையரா—

பிரதிவாதிகள், ரெஸ்பான்டென்டுகள்—அப்பீல் வாதிகள்.

v.

அப்துல்ரகீம் சாயபு—2-வது வாதி, மனுதாரன்—ரெஸ்பான்டென்ட்.

லாப்பாயின்ட்:—லிமிட்டேஷன்.

கொதுவை டிக்ரி—சர்வ அதிகாரத்துடன் சுதந்தரம் செய்யும்படிக்கான உத்தரவிற்காக செய்துகொண்ட மனு சொத்துகள் மாறுதலுக்குறிய 1882-ம் வருஷத்திய ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 88, 89, பிரிவுகள் மூன்று வருஷத்திற்கு ஒருமுறை இடைவிடாது செய்துகொண்ட மனுக்கள் கடைசிமனு டிக்ரி ஆன 12-வருஷங்களுக்குள் [காலங்கடந்ததாயினும்] செய்துகொள்ளப்பட்டது. 1908-ம் வருஷத்திய 9-வது கால நிர்ணய சட்டமென்று சொல்லப்படும். 'இந்தியன் லிமிடேஷன் ஆக்ட்' 181, 182, 183-வது ஆர்ட்டிகல்கள், பிரதமத்தில் செய்யப்பட்ட (Preliminary Decree) டிக்ரியை நிறைவேற்றுதல், 1908-ம் வருஷத்திய 5-வது ஆக்ட் 'சிவில் புரொசிஜர் கோடு' 48-வது பிரிவு.

வியாஜ்ய சங்கிரகம்:—ரற்றிப் பத்திரத்தின்பேரில் கொண்டுவரப்பட்ட கொதுவை வியாஜ்ஜியத்தில் 1901ளு அக்டோபர்மீ 7உ சொத்து விற்பனைக்காக ஒரு டிக்ரி செய்யப்பட்டது; 1904ளு எப்ரல்மீ 6உ மேற்படி டிக்ரியை சர்வ அதிகாரத்துடன் சுவதந்தரம் (order absolute] செய்யும்படிக்கு மனு செய்துகொள்ளப்பட்டது. அதற்குப் பின் 1907, 1910, 1912-ம் வருஷங்களிலும் மனுக்கள் செய்துகொள்ளப்பட்டன. ஒவ்வொரு மனுவும் அதற்கு முன் செய்யப்பட்ட மனுவின்பின்னர் அடுத்தடுத்து மூன்று வருஷங்களுக்குள்ளாகவே செய்துகொள்ளப்பட்டன. அப்படி செய்துகொண்ட மனுக்களில் வெகுசாய் எல்லா மனுக்களின்மீதிலும் தீர்ப்புக்கடனாளிக்கு 'பிரதிவாதிக்கு' (Judgment debtor) நோட்டீசுகள் பிறப்பித்து அனுப்பப்பட்டன. ஆனால் அந்த மனுக்களெல்லாம் அவைகளில் கேட்கப்பட்டிருந்த பரிகாரத்திற்கு உத்தரவு செய்யாமலேயே தள்ளிவிடப்பட்டன; கடைசியாய் 1912ளு ஏப்ரல்மீ 15உ ஒரு மனு செய்யப்பட்டது. தீர்ப்புக்கடனாளி 'பிரதிவாதி' (Judgment debtor) அப்படி கடைசியாய் செய்துகொள்ளப்பட்ட மனு, டிக்ரி தேதியிலிருந்து மூன்று வருஷங்கள் கடந்தபின் செய்யப்பட்டபடியால் அதற்கு காலாவதி தோஷம் வந்துவிட்டதென்று ஆட்சேபித்தான்.

அப்படிப்பட்ட மனுவிற்கு காலாவதிதோஷம் நேரிடவில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

இதுவுமன்றி:—மந்திராலோசனை சபையாரால் (Privy Council) செய்யப்பட்டுள்ள தீர்ப்புகளின்படி அடியிற்கூறியிருக்கும் பிரதிஞ்ஞைகளை யூகித்துக்கொள்ளத் தக்கதாயிருக்கின்றனவென்றும் தீர்மானிக்கப்பட்டது:—அதாவது,

[1] டிரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 88-வது பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரதம டிக்ரி (Preliminary Decree) நிறைவேற்றிக்கொள்ளத் தக்கதுதானென்றும்,

[2] மேற்படி ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 89-வது பிரிவின்கீழ் சர்வ அதிகாரத்துடன் சுதந்தரம் தரும்படிக்கு உத்தரவு செய்யும்படி (an order absolute) கேட்பதற்கு டிக்ரியை நிறைவேற்றுவதற்கான மனுக்கள்செய்து கிருஷைகள் செய்திருக்கவேண்டுமென்பதும், இன்னும்,

[3] அப்படிப்பட்ட மனுக்கள் முபசில் அதாவது வெளிகோர்ட்டினுலோ அல்லது ஹைகோர்ட்டு அசல் விசாரணைசைடிலோ செய்யப்பட்ட டிக்ரிகளின்மீது செய்துகொள்ளப்படும் இவ்விதமான மனுக்களுக்கு கால நிர்ணய சட்டத்தின் (Limitation Act) 182, 183-வது ஆர்ட்டிகல்கள் (Articles) தான் சம்பந்தப்படுமென்பதும்,

[4] பிரதமத்தில் செய்யப்பட்ட டிக்ரி (Preliminary Decree) முடிவான டிக்ரியாய்விடுமாயின் (Final Decree) அப்படிப்பட்ட முடிவான டிக்ரி செய்யப்பட்ட தேதி முதல் டிக்ரிதாரனுக்கு 'வாதி' [Decree-holder] புதிதாய் கால நிர்ணய சட்டப்படி காலம் தொடங்குமென்பதும்,

[5] ஒரு டிக்ரிதாரன் 'வாதி' (Decree-holder) தன்பேரால்செய்யப்பட்ட பிரதம டிக்ரியை (Preliminary Decree) சர்வ அதிகாரத்துடன் சுதந்தரம் கொடுக்கும்படிக்கு உத்தரவு செய்ய கேட்டுக்கொண்டு பூர்த்தியான டிக்ரியாய் செய்துகொள்வதற்கு சிவில் புரொசிஜர் கோடு 48-வது பிரிவின்படிக்கு 12-வருஷங்கள் டயம் உண்டென்பதும், மேலும் அவனுக்கு அப்படி சர்வ அதிகாரத்துடன் சுதந்தரம் உத்தரவுசெய்த தேதிமுதல் மேற்கண்ட 12-வருஷங்களில்லாமல் அதே பிரிவின்கீழ் இன்னொரு 12-வருஷகாலம் அவனுக்கு டயம் உண்டென்றும் ஏற்படுகின்றன.

இதனடியில் கூறியிருக்கும் தீர்ப்புகளை அனுசரிக்கப்பட்டும், விவரிக்கப்பட்டும், உதகரிக்கப்பட்டும், இந்த தீர்ப்பு சொல்லப்பட்டது.

அப்துல்மஜீத் v. ஜவாஹீர் லால் 1914ளு இ-லா-ரி 36 அ 350—பிரிவி கவுன்சல் தீர்மானம்.

மன்னுலால் v. ரூரத்சந்தர் 1915ளு 21 க-லா-ஜ 118—பிரிவி கவுன்சல் தீர்மானம், அனுசரிக்கப்பட்டன.

ஆஷ்பக்ஹுசேன் v. கௌரிசாஹெப் 1911ளு இ-லா-ரி 33 அ 264 பிரிவிகவுன்சல் தீர்மானம், விவரிக்கப்பட்டது.

மல்லிகார்ஜுனுடு v. லிங்கமூர்த்தி பந்துலு 1902ளு இ-லா-ரி 25 ம 244—புல்பெஞ்ச் கேஸ்.

ரங்கைய கவுண்டன் அன்ட் கம்பெனி v. நஞ்சப்ப ராவ் 1903ளு இ-லா-ரி 26 ம 780 உதஹரிக்கப்பட்டது.

இந்த அப்பீல் கிருஷ்ணகிரி டி-மு-கோர்ட்டு 1910-ம் வருஷத்திய 452-வது அசல் நெம்பரில் செய்துகொள்ளப்பட்ட 1912-ம் வருஷத்திய 435-வது அசல் மனுவின்பேரில் தர்மபுரி டி-மு மிஸ்டர் G. R. சுப்பராய ஐயர் செய்த உத்தரவின்பேரில் சேலம் ஜில்லா கோர்ட்டில் கொண்டுவரப்பட்ட 1912-ம் வருஷத்திய 118-வது அப்பீல் நெம்பரில் சேலம் ஜில்லா ஜட்ஜ் மிஸ்டர் J. T. ஜிலெஸ்பிதுரை செய்த உத்தரவின்பேரில் கொண்டுவரப்பட்டது.

இந்த கேசின் விவரங்களை பின்வரும் தீர்ப்பில் காணலாம்.

லாயர்கள்:—மிஸ்டர் S. தொரைசாமி ஐயர்—(அப்பீல்)—வாதிகளின் வக்கீல். மிஸ்டர் M. O. பார்த்தசாரதி ஐயங்கார்—ரெஸ்பான்டென்டின் வக்கீல்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு:—இந்த அப்பீலில் கால நிர்ணய சட்டப்படிக்கு ஒரு முக்கியமான லிமிடேஷன் பாயின்ட் ஏற்படுகிறது. 1901ளு அக்டோபர்மீ 7உ ஒரு கொதுவை வியாஜ்ஜியத்தில் பிரதம டிக்ரி (Preliminary Decree) ஒன்று செய்யப்பட்டது. 1904ளு எப்ரல்மீ 6உ மேற்படி டிக்ரியின்கீழ் சர்வ அதிகாரத்துடன் சுதந்தர உத்தரவு செய்யும்படிக்கு ஒரு மனு கொடுக்கப்பட்டது. இந்த மனுவை ஏற்கனவே பிரதம டிக்ரியை (Preliminary Decree) நிறைவேற்றுவதற்காக செய்துகொள்ளப்பட்ட மனுவாக தாக்கல் செய்துகொள்ளப்பட்டது. அதற்குப்பின் முன் செய்துகொள்ளப்பட்ட மனுவுக்குப்பின் மூன்று வருஷங்களுக்குள்ளாகவே 1907, 1910, 1912-ம் வருஷங்களில் அடுத்தடுத்து மனுக்கள் செய்துகொள்ளப்பட்டன. ஏறக்குறைய எல்லா மனுக்கள்பேரிலும் ஏற்கனவே நோட்டீசுகள் பிறப்பித்து அனுப்பப்பட்டன. அந்த மனுக்களில் என்ன பரிகாரம் கேட்கப்பட்டிருந்ததோ அதை கொடாமலேயே அம்மனுக்கள் தள்ளுபடியாய்விட்டன. இப்பொழுது கொண்டுவரப்பட்ட மனு 1912ளு எப்ரல்மீ 15உ செய்யப்பட்டது. முதல் கோர்ட்டில் அதாவது டிஸ்ட்ரிக்ட் முனிசிப்பு கோர்ட்டில் பிரதம டிக்ரி (Preliminary Decree) செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருஷங்கள் கடந்தபின் இந்த மனு கொண்டுவரப் பட்டமையால் இதற்கு காலாவதிதோஷம் வந்துவிட்டதென்று ஆட்சேபிக்கப்பட்டது. டிஸ்ட்ரிக்ட் முனிசிப்பு அவர்கள் அப்படிப்பட்ட மனுக்களுக்கு காலாவதிதோஷம் நேரிடவில்லையென்று தீர்மானித்தார். அந்த தீர்மானத்தின் பேரில் அப்பீல் செய்துகொண்டதில் ஜில்லா ஜட்ஜ் அவர்கள் இவ்விதமான மனுவை டிக்ரியை நிறைவேற்றுவதற்காக செய்துகொள்ளப்பட்ட மனுவாய்பாவித்து அதற்கு லிமிட்டேஷன் ஆக்ட் 181-வது ஆர்ட்டிகல் சம்பந்தப்படுமென்று தீர்மானித்தார். பிரதமத்தில் செய்யப்பட்ட டிக்ரி (Preliminary Decree) நிறைவேற்றத்தக்கதல்லவென்றும், அப்படிப்பட்ட மனுவிற்கு லிமிடேஷன் ஆக்ட் 180-வது ஆர்ட்டிகல் சம்பந்தப்படுமென்றும் வாதித்து அதற்கு ஆதாரமாய் அநேக ஆதாரங்களை எங்கள்முன் எடுத்துக்கூறினர். அவைகளில் பிரதமத்தில் செய்யப்பட்ட டிக்ரி (Preliminary Decree) நிறைவேற்றுதலுக்கு யோக்கியமானதா அல்லவா என்பதைப்பற்றி ஒன்றுக்கொன்று ஒவ்வாத விரோதமான தீர்மானங்கள் இருக்கின்றன. இந்த இந்தியா தேசத்திலுள்ள பல ஹைகோர்ட்டாரும் வெவ்வேறு அபிப்பிராயங்கள் கொண்டனர். ஆனால் நாங்கள் இந்த மதராஸ் ஹைகோர்ட்டிலும், மந்திராலோசனை சபையாராகிய (Privy Council) ஜுடிஷல் கமிட்டியாராலும் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களை மாத்திரம் தீர்க்கயோசித்தோம்.

மல்லிகார்ஜுனடு v. லிங்கமூர்த்தி பந்துலு, இ-லா-ரி 25ம 244 (புல்பெஞ்சு கேஸ்)ல் ஒரு கொதுவை வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட பிரதம டிக்ரி (Preliminary Decree) நிறைவேற்றத்தக்கது தானென்றும் அதில் சர்வ அதிகாரத்துடன் சுதந்தர உத்திரவுசெய்யும்படிக்கு (order absolute) கேட்டுக்கொள்ளவதற்காக பிறப்பிக்கப்படும் நோட்டீசு டிக்ரியை நிறைவேற்றுதலுக்காக பிறப்பித்து அனுப்பப்பட்ட நோட்டீசென்றுதான் அந்த புல்பெஞ்சிலிருந்தஜட்ஜிகளில் பெரும்பான்மையோரும் அபிப்பிராயங் கொண்டு தீர்மானித்திருக்கிறார்கள். இப்படி அவர்கள் தீர்மானித்தபிறகு கற்றுணர்ந்த ஜட்ஜிகள் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 88, 89-வது பிரிவுகளில் சொல்லியிருக்கும் பொருளை மிக்க கவனித்து செய்திருக்கிறார்கள். மேற்கண்ட ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் முதல் பிரிவாகிய 88 பிரதம டிக்ரியைப்பற்றியும் (Preliminary Decree) பின் செப்பிய 89-வது பிரிவு சர்வ அதிகாரத்துடன் சுதந்தரம் தருவதற்கு உத்திரவு செய்வதைப்பற்றியும் முறையிடுகின்றன. இப்படி புல்பெஞ்சார் தீர்ப்பு கூறிய பிறகு கூட 1877-ம் வருஷத்திய 15-வது ஆக்டாகிய லிமிட்டேஷன் ஆக்ட் 179-வது ஆர்ட்டிகல் இதற்கு சம்மந்தப்படுமென்று சந்தேகித்தார்கள். ரெஸ்பான்டென்ட் தரப்பில் ஆஜரான கற்றுணர்ந்த அட்வோகேட் மிஸ்டர் M. O. பார்த்தசாரதி ஐயங்

கார் புல்பெஞ்சார் செய்த தீர்மானத்தின் பொருள் இ-லா-ரி 1903ஹ 26 ம 780-ல் ரங்கையகவுண்டன் கம்பெனி v. நஞ்சப்பராவ் கேஸில் நன்றாய் விவரித்துச் சொல்லப்பட்டிருக்கிறதென்று எடுத்துக்காட்டினார். அந்த கேஸில் சாதாரணமாய் சர்வ அதிகாரத்துடன் சுதந்தரம் தருவதற்கு உத்தரவு செய்யும்படிக்கு (order absolute) கேட்டுக்கொள்ளும் மனு விஷயமாய் மேற்சொன்ன லிமிட்டேஷன் ஆக்ட் 179-வது ஆர்ட்டிகல் சம்மந்தப்படுமென்று கூறப்பட்டது. சில கேசுகளில் 178-வது ஆர்ட்டிகலும் சம்பந்தப்படுமென்றும் உத்தேசிக்கப்பட்டது. ஆஷ்பெக் ஹூசேன் v. கௌரி சாஹெப் இ-லா-ரி 33 அ 264 (1911)-ல் பிரிவு கவுன்சல் ஜூடிஷியல் கமிட்டியார் செய்த தீர்மானம் வெளியாய்வரும் வரையில் இந்த ராஜதானியில் வெகுகாலம் இம்மாதிரியாகவே அபிப்பிராயங் கொண்டார்கள். அந்த கேஸில் சொல்லிய தீர்மானம் ரங்கைய கவுண்டன் கம்பெனி v. நஞ்சப்பராவ் இ-லா-ரி 26 ம 780 (1903)-ல் சொல்லிய தீர்மானத்தை பாதிக்கவில்லையென்று இதன் கீழ் எடுத்துக் காண்பித்திருக்கின்றோம். மேற்செப்பிய பிரிவி கவுன்ஸல் கேஸில் சொல்லியிருப்பதெல்லாம் கடைசி டிக்ரி (final decree) செய்யப்பட்டபின், அதாவது, சர்வ அதிகாரத்துடன் சுதந்தரம் தரும்படிக்கு உத்தரவுசெய்த (Order absolute) தேதியிலிருந்து கால நிர்ணய சட்டப்படி டயம் ஆரம்பிக்குமென்று சொல்லியிருக்கிறதேயல்லாமல் மற்றப்படிக்கு பிரதம டிக்ரி (Preliminary Decree) நிறைவேற்றத்தக்க தல்லவென்று செப்பியில்லை. ஆனால் மதராசில் தீர்மானிக்கப்பட்ட சில கேசுகளில் அம்மாதிரியாக அர்த்தம் செய்தார்கள். எல்லா தீர்மானங்களையும் உதகரிக்க வேண்டுமென்பது அவசியமல்ல. அவைகளெல்லாம் ராமசாமி செட்டி v. ரங்கமன்னார் ஐயங்கார் இ-லா-ரி 26 ம லா-ஜ 255 (1915)-ல் சொல்லப்பட்டிருக்கின்ற அந்த கேசைத் தீர்மானித்த ஜட்ஜிகளாகிய மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர், மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் அவர்கள் அந்த தீர்மானத்தில் எடுத்துக்கூறிய தீர்மானங்கள் சரியா அல்லவா என்று அவர்கள் கொண்ட அபிப்பிராயத்தை வெளியிட்டுச் சொல்லாமலேயே பிரதம டிக்ரியைப்பற்றி (Preliminary Decree) முன் ஒரு தடவை யோசித்து தீர்ப்பு சொல்லப்பட்டதென்னும் காரணத்தினால் (res Judicata) தீர்ப்பு கடனாளி 'பிரதிவாதி' அப்படிப்பட்ட பிரதம டிக்ரி (Preliminary Decree) நிறைவேற்றத்தக்க தல்லவென்று ஆட்சேபிக்க நியாயம் கிடையாதென்று சொன்னார்கள். இந்த தீர்மானங்கள் எல்லாம் அப்துல் மாஜிட் v. ஜவாஹர்லால் இ-லா-ரி 36 அ 350 (பிரிவி கவுன்சல் கேஸில்) ஜூடிஷல் கமிட்டியாருடைய தீர்மானம் பிரசுரமாவதற்குமுன் எடுத்துக் கூறப்பட்டன. அந்த கேஸில் சர்வ அதிகாரத்துடன் சுதந்தரம் தரும்படிக்கு உத்தரவுசெய்ய (Order absolute) கொண்டுவரப்படும் மனுவிற்கு லிமிட்டேஷன் ஆக்ட் 179-வது பிரிவுதான் சம்பந்தப்படுமென்று ஸ்பஷ்டமாய் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த மதராஸ் ஹைகோர்ட்டார் பிரதம டிக்ரி (Preliminary Decree) நிறைவேற்றத்தக்க தல்லவென்று செய்திருக்கும் தீர்மானங்களெல்லாம் இந்த தீர்மானத்தின்படி ரத்தாய்விட்டனவென்றுதான் ஆமோதிக்கவேண்டும். இம்மாதிரி அபிப்பிராயம் கொள்வதற்கு ஆதாரமாய் இன்னொரு பிரிவி கவுன்சல் ஜூடிஷல் கமிட்டியாருடைய தீர்மான மிருக்கிறது. அதன்படி இதற்கு மிக்க வலிவுண்டாகின்றது. (மன்னுலால் v. சூரத்சந்தர் 21 க-லா-ஜ 118 (1915)-ம் பிரிவு கவுன்சல் கேஸில்) ஜூடிஷல் கமிட்டி பிரபுக்கள் சென்னை ஹைக்கோர்ட்டு அசல் விசாரணை சைடில் செய்யப்பட்ட பிரதம டிக்ரி (Preliminary Decree) யின் விஷயமாய் சர்வ அதிகாரத்துடன் சுதந்தரம் தரும்படிக்கு உத்தரவு செய்யும்படிக்கு (Order absolute) செய்துக்கொள்ளும் மனுவிற்கு லிமிட்டேஷன் ஆக்ட் 183-வது பிரிவுதான் சம்பந்தப்படுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். அந்த ஆர்ட்டிகலின் மூன்றாவதுபத்தியில் (Column) ஒரு தீர்ப்பு டிக்ரி அல்லது உத்தரவை நிறைவேற்றுதலைப்பற்றிச் சொல்லியிருந்தபோதிலும் வெளி கோர்ட்டுகளாகிய மொபசில் கோர்ட்டுகளில் செய்யப்பட்ட டிக்ரிகளை நிறைவேற்றுதலுக்குச் சம்பந்தப்படும் 182-வது ஆர்ட்டிகலுக்குச் சரியாய் ஹைகோர்ட்டு அசல் விசாரணை சைடில் (Original Side) செய்யப்பட்ட டிக்ரிகளை நிறைவேற்றுவதற்கு மேற்செப்பிய 183-வது ஆர்ட்டிகலிலுள்ள நிபந்தனை சம்மந்தப்படுமென்பதற்கு யாதொரு ஐயமே கிடையாது. இவ்விதமாய்க் கொள்ளும் அபிப்பிராயத்தினால் ஒரு பிரதம டிக்ரியை (Preliminary Decree) கடசி (final) டிக்ரியாக்குவதற்காக கொடுக்கப்படும் நோட்டீசு அந்த டிக்ரியை நிறைவேற்றுதலுக்காக பிறப்பிக்கப்படும் நோட்டீசென்றுதான் கொள்ளும் அபிப்பிராயம் தெளிவாய் சரியென்று ஏற்படுகிறது.

மேற்கூறிய பிரிவிகவுன்சல் ஜூடிஷல் கமிட்டியாரால் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களின்படி ஏற்படும் முடிவான தீர்மானத்தை இதனடியில் சங்கிரகமாய்ச் சொல்லுகிறோம்:—

[1] ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் 88-வது பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரதம டிக்ரி (Preliminary Decree) நிறைவேற்றிக் கொள்ளத்தக்கது.

[2] அதன்பேரில் சர்வ அதிகாரத்துடன் சுதந்தரம் தரும்படி உத்தரவு செய்யும்படி கேட்பதற்காக ஷை ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 89-வது

பிரிவின்கீழ் செய்யப்படும் மனு ஷை டிக்ரியை நிறைவேற்றுதலுக்காக மனுக்கள் செய்து கிருஷைகள் செய்துவரவேண்டுமென்னும் மனுதான்.

[3] அப்படிப்பட்ட மனுக்கள் மொபசில் கோர்ட்டிலோ அல்லது ஹைக்கோர்ட்டு அசல் விசாரணை சைடிலோ செய்யப்பட்ட டிக்ரிகளின்மீது செய்துக் கொள்ளப்படும் இவ்விதமான மனுக்களுக்கு கால நிர்ணய சட்டத்தின் (Limitation Act) 182, 183-வது ஆர்ட்டிகல்தான் சம்பந்தப்படும்.

[4] பிரதமத்தில் செய்யப்பட்ட டிக்ரி (Preliminary Decree) முடிவான டிக்ரியாய் விடுமாயின் (Final Decree) அப்படிப்பட்ட முடிவான டிக்ரி செய்யப்பட்ட தேதிமுதல் டிக்ரி தாரனுக்கு 'வாதிக்கு' (Decree-holder) புதிதாய் (கால நிர்ணய சட்டப்படி) காலம் தொடங்கும்.

[5] ஒரு டிக்ரிதாரன் 'வாதி' (Decree-holder) தன்பேரால் செய்யப்பட்ட பிரதம டிக்ரியை (Preliminary Decree) சர்வ அதிகாரத்துடன் சுதந்தரம் கொடுக்கும்படிக்கு உத்தரவுசெய்ய கேட்டுக்கொண்டு பூர்த்தியான டிக்ரியாய் செய்துக்கொள்வதற்கு சிவில் புரோசீஜர் கோடு 48-வது பிரிவின்படிக்கு 12-வருஷங்கள் டயம் உண்டென்பதும் மேலும் அவனுக்கு அப்படி சர்வ அதிகாரத்துடன் சுதந்தரம் உத்தரவு செய்த தேதிமுதல் மேற்கண்ட 12-வருஷங்களில்லாமல் அதே பிரிவின்கீழ் இன்னொரு 12-வருஷ காலம் அவனுக்கு டயம் உண்டென்றும் மேற்கண்டவைகளினால் ஏற்படுகிறது.

இவ்விதமாய் அபிப்பிராயங்கொள்ளுவது முன் மதராஸ் ஹைகோர்ட்டார் மல்லிகார்ஜுனுடு v. லிங்கமூர்த்திபந்துலு இ-லா-ரி 25 ம 244 (1902 புல்பெஞ்சு கேஸி)லும் ரங்கையகௌண்டன் கம்பெனி v. நஞ்சப்பராவ் இ-லா-ரி 26 ம 780 (1903)லும் ரிப்போர்ட்டு செய்திருக்கும் கேசுகளுக்கு எல்லாவிதத்திலும் ஒற்றுமையுள்ளதாயிருக்கின்றது. இத்தியாதி கஷ்டங்களெல்லாம் இப்பொழுது செய்யப்பட்டுள்ள சட்டமாகிய சிவில் புரோசீஜர் கோடு 34-வது ஆர்டரில் செப்பியிருக்கும் நிபந்தனையின்படி நிவர்த்தியாகின்றன.

இத்தியாதி காரணங்களைக்கொண்டு இந்தகேசில் பிரதம டிக்ரி (Preliminary Decree) செய்யப்பட்ட தேதிமுதல் 12-வருஷத்திற்குள்ளாக சர்வ அதிகாரத்துடன் சுதந்தரம் தரும்படிக்கு உத்தரவு செய்ய மனு செய்துக்கொண்டபடியாலும் லிமிடேஷன் ஆக்ட் 179-வது ஆர்ட்டிகலின்படி மனுக்கள் கொடுத்து கிருஷைகள் செய்து டிக்ரியை ஜீவித்திருக்க செய்துவந்தமையாலும் இந்த கேஸில் கொடுக்கப்பட்ட நிறைவேற்றுதல் மனுவிற்கு காலாவதி தோஷம் நேரிடவில்லையென்றும் நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்.

இந்த அப்பீலை சிலவுகளுடன் தள்ளுபடிசெய்கிறோம். இ-லா-ரி-39 சென்544 I-L-R-39 Mad 544.

நெ. 3.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர். மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர். }

குற்றவாளிகளாகிய ஆதூர் தேசிகாசாரி வகையரா—அப்பீல் வாதிகள்

1914-வது வருஷத்திய லெட்டர்ஸ்பேடெண்ட் அப்பீல் நெ. 336.

லெட்டர்ஸ் பேடெண்ட் (24, 25 விக்டோரியா104-வது அத்தியாயம்) 15-வது பிரிவின்கீழ் செய்யப்பட்டஅப்பீல்-கலகமின்றி அமரிக்கையாயிருப்பதற்காக ஜாமீன் வாங்குவதற்குள்ள பிரிவின்கீழ் செய்த உத்திரவின்பேரில் கொண்டுவரப்பட்ட ரிவிஷன்மனுவில் சென்னை ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவர் செய்த உத்தரவின்பேரில் அப்பீல் கிடையாதென்பது:—இது கிரிமினல் விசாரணையைச் சேர்ந்ததா அல்லவா என்பது:—.

கிரிமினல் புரோசீஜர் கோடு 8-வது அத்தியாயத்தின் கீழ் சில நபர்களை கலகம் சச்சரவு செய்யாமல் அமரிக்கையாயிருப்பதற்காக அவர்களிடமிருந்து ஜாமின் வாங்குவதற்குள்ள நிபந்தனைகளின்படி செய்யப்படும் நடவடிக்கைகள் லெட்டர்ஸ் பேடெண்ட் 15-வது பிரிவின்படி கிரிமினல் விசாரணைகள்' என்று பொருள்படும். ஆகையால் கிரிமினல் புரோசீஜர் கோடு 118-வது பிரிவின்கீழ் ஒரு மாஜிஸ்ட்ரேட் செய்த உத்தரவின்பேரில் கொண்டுவரப்பட்ட புனர் விசாரணை மனு (ரிவிஷன் மனு)வை ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவர் விசாரித்து பைசல் செய்திருந்தால் அப்படிப்பட்ட தீர்மானத்தின் பேரில் அப்பீல் செய்ய நியாயம் கிடையாதென்று இ. லா. ரி. 27ம 510-ல் ராமசாமிசெட்டி கேசில் செய்யப்படிருக்கும் தீர்மானத்தை அனுசரித்து இந்த கேசிலும் அம்மாதிரியாகவே தீர்மானிக்கப்பட்டது.

1913 ம்ஹு 32-வது நெம்பர் மிஸிலேனியஸ் கேசில் கடலூர் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் S. V. நற்குணம் என்பவர் செய்த உத்திரவை மாற்றும்படி செய்துக்கொண்ட 1914-ம் வருஷத்திய 4-வது நெம்பர் ரிவிஷன் கேசில் தென்னார்க்காடு ஜில்லாமாஜிஸ்ட்ரேட் செய்த உத்திரவை ரத்து செய்யும்படிக்கு சென்னை ஹைகோர்ட்டில் கொண்டுவரப்பட்ட 1914-ம் ஹுத்திய கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 502 (கிரிமினல் ரிவிஷன் மனு 1914-ம் வருஷத்திய 426-வது) நெம்பரில் மதராஸ் ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவராகிய மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் செய்த உத்தரவின் பேரில் லெட்டர்ஸ் பேடெண்ட் 15-வது பிரிவின்கீழ் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

சென்னை ஹைகோர்ட்டில் செய்யப்பட்டபிரதம உத்தரவை வாசிக்கப்பட்டது.

லாயர்கள்:—மெஸர்ஸ் டி. வி. வெங்கடராமஐயர், டி. நரசிம்ம ஐயங்கார், கெ. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார்......அப்பீல் வாதிகளின் வக்கீல்கள்.

பப்ளிக் பிராசிகூட்டருக்காக மிஸ்டர் வீட்னிஸ்மித்........சர்க்கார் தரப்பில் ஆஜரானர்.

ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு:— இப்படிப்பட்ட கேசில் அப்பீல் கொண்டுவர நியாயம் கிடையாதென்று பிரதமத்தில் ஆட்சேபிக்கப்பட்டது. கலகம் சச்சரவின்றி அமரிக்கையாயிருப்பதற்காக ஜாமீன் பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டுமென்று கிரிமினல் புரோசிஜர் கோடு 8-வது அத்தியாயத்தின்படிக்கு சில நபர்களை கட்டாயப்படுத்தினல் அது லெட்டர்ஸ் பேடெண்ட் 15-வது பிரிவின் தாத்பரியப்படி கிரிமினல் விசாரணை (Crminal trials) யைச் சேர்ந்ததென்றுதான் நாங்களும் அபிப்பிராயப்படுகிறோம்,

ஆகையால் கிரிமினல் புரோசிஜர் கோடு 118-வது பிரிவின்கீழ் ஒரு மாஜிஸ்ட்ரேட் செய்த உத்திரவின்பேரில் ஹைகோர்ட்டில் கொண்டுவரப்பட்ட ரிவிஷன் மனுவில் ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜி செய்த உத்திரவின் பேரில் அப்பீல் கொண்டுவர நியாயம் கிடையாதென்று மேற்கண்ட 15 வது பிரிவில் நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. இம்மாதிரியாகவே இ-லா-ரி 27 ம 510-ல் ராமசாமிசெட்டி கேசில் சீப ஜஸ்டிஸ் அவர்கள் அநேக முகாந்தரங்களைச் சொல்லி அபிப்பிராயம் கொண்டிருக்கிறார். ஆனல்சீப் ஜஸ்டிஸ் அவர்கள் கலகம் சச்சரவின்றி அமரிக்கையாயிருப்பதற்காக ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று செய்யப்பட்ட உத்திரவின்பேரில் அப்பீல்செய்ய நியாயமுண்டென்று சொல்லியிருப்பது பிசகு. ஏனென்றால் கிரிமினல் புரோசிஜர் கோடு 406-வது பிரிவின்படிக்கு நல்நடவடிக்கையாகயிருப்பதற்கு ஜாமீன் கொடுக்கும்படி செய்யப்படும் உத்திரவின்மீது மாத்திரம் அப்பீல் செய்துக்கொள்ள நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கிறதே யன்றி மற்றப்படிக்கல்ல.

ஆனல் கிரிமினல் புரோசிஜர் கோடு 117-வது பிரிவின் 8-வது அத்தியாயத்தின்படி செய்யப்படும் விசாரணைகளுக்காக வேண்டிய நடவடிக்கைகள் என்னமோ அதைப்பற்றி விதிகள் செய்யப்பட்டிருக்கிறது, மேலும் ஷை கிரிமினல் புரோசிஜர் கோடு 123-வது பிரிவின்படிக்கு ஜாமீன் கொடுக்கும்படிக்கு உத்தரவு செய்யப்பட்ட நபர்களை ஜெயிலுக்கு அனுப்பலாமென்று சொல்லியிருக்கிறது.

ஜாமீன் கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்ட நபர்கள் அப்படி ஜாமீன் கொடுக்க தவறிப்போகும் பட்சத்தில் அவர்களை சாதாரணமான காவலில்தான் வைக்கலாம். ஆனல் நல் நடவடிக்கைக்காக ஜாமீன் கொடுக்கும்படி உத்திரவு செய்யப்பட்ட நபர்கள் அவ்விதமாய் ஜாமீன் கொடுக்கத் தவறிப்போகும்பட்சத்தில் அவர்களை கடின காவலில் வைக்கலாமென்பது நிபந்தனை. காவலில் அடைத்து வைக்கப்படுமென்பது ஒரு விதமான தண்டனை என்பதைப்பற்றி இந்தியன் பீனல் கோடு 23-வது பிரிவின்கீழ் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.

அமரிக்கையின்றி கலகம் செய்தார்களென்று தண்டிக்கப்பட்ட நபர்கள் கலகம் சச்சரவின்றி அமரிக்கையாயிருப்பதற்காக ஜாமீன் பத்திரங்கள் எழுதிக்கொடுக்கவேண்டுமென்று அப்பீல் கோர்ட்டார் 106-வது பிரிவு 3-வது உட்பிரிவின்படிக்கு உத்தரவு செய்திருந்தால் அப்படிப்பட்ட விஷயங்களில் தண்டனையை அதிகப்படுத்துவதற்காக வேண்டிய நிபந்தனைகளை 423-வது பிரிவு I-b உட்பிரிவிலும் 3-வது உட்பிரிவிலும் செய்யப்பட்டிருக்கின்றது.

விசாரணை செய்து முடிந்தபின் யாதேனும் ஓர் நபரை ஜாமீன் கொடுக்கும்படி நிர்பந்திப்பதற்கு நியாயமில்லையென்று கண்டால் அவன் அப்பொழுது காவலில் இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் அவனை விட்டுவிடலாம். ஆகையால் இந்த அத்தியாயத்தின்கீழ் செய்யப்படும் நடவடிக்கைகள் கிரிமினல் விசாரமென்றுதான் நாங்கள் சந்தேகமின்றி அபிப்பிராயப்படுகிறோம்.

இந்தகேசில் இன்னும் நாங்கள் யோசித்து செய்வதற்கு இன்னொரு பாயின்ட் இருக்கின்றது. அதாவது இது கிரிமினல் விசாரணையா அல்லவா என்பது. கிரிமினல் புரோசிஜர் கோடு 4-வது பிரிவு 4-வது உட்பிரிவில் 'விசாரணை' என்பதற்கு விவரித்திருக்கும் பொருளை நோக்கினல் இவ்விதமான நடவடிக்கைகளை அந்த பிரிவின் தாத்பரியப்படிக்குத்தான் அர்த்தங்கொள்ள வேண்டும். ஆனல் 1865-வது ளுத்தில் லெட்டர்ஸ்பேடெண்ட் சட்டத்தை ஏற்படுத்தியபோது, பிறகு 1882ளுத்தில் செய்த கிரிமினல் புரோசிஜர் கோடில் ஏற்பட்டிருக்கும் Enquiry என்பதற்கு ஏற்படுத்தியது அவர்களுக்குத் தெரிந்திராதல்லவா; 1861-வது வருஷத்தில் உண்டான கிரிமினல் புரோசிஜர் கோடிலும் Enquiry என்னும் பதத்திற்கு ஒரு கிரிமினல் கேசின் கிரம விசாரணைக்கு முன் செய்யப்படும் விசாரணை அல்லது பரிசீலனையென்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

8-வது அத்தியாயத்தின் கீழ் செய்யப்படும் நடவடிக்கைகள் 'கிரிமினல் கேசுகள்' தான். அவைகளை ஒரு மாஜிஸ்ட்ரேட் பைலிலிருந்து இன்னொரு மாஜிஸ்ட்ரேட் பைலுக்கு மாற்றத்தகுமென்று சொல்வதற்கு கிஞ்சிற்றேனும் சந்தேகமில்லை (வாஜெட் அலிகான் v. சக்கிரவர்த்தி, இ-லா-ரி-41 கல் 719-வது பக்கத்தைப் பார்க்கவும்.)

மேற்கூறிய காரணங்களை அனுசரித்து ராமசாமிசெட்டி கேசில் சொல்லப்பட்டிருக்கும் தீர்மானம் சரியானதென்று தான் நாங்கள் நினைக்கிறோம்.

மிஸ்டர் வீட்னிஸ்மித் பப்ளிக் பிராசிக்கூட்டருக்காக ஆஜராகி அப்பீல் கிடையாதென்பதற்கு இன்னொரு முகாந்தரம் கூறினர். அதாவது, லெட்டர்ஸ் பேடெண்ட் 15-வது பிரிவு 11-வது பிரிவின் பிரதமத்தில் சொல்லியிருப்பதைப்போல் ஸிவில் அதிகார வரம்பிற்கும் உட்படுமென்று கூறினர். ஆனல் அப்படி ஆபோதிப்பதற்கு நியாயமில்லை. அப்பீல் செய்வதற்கு வெளிப்படையான சட்ட நிருபணமில்லாவிடில் அப்பீல்செய்ய யாதொரு நியாயமும் கிடையாது.' இந்த லெட்டெர்ஸ் பேடென்ட் ஆக்டின் 22-வது பிரிவு முதற்கொண்டு சொல்லப்படும் கிரிமினல் அதிகார வரம்பிற்குறிய விதிகளில் இவ்விதமாய் அப்பீல் செய்ய நிபந்தனைகிடையாதாகையால் ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவர் ரிவிஷன் மனுவின் பேரில் செய்த உத்திரவின் பேரில் அப்பீல் கொண்டுவர ஹுக்குகிடையாது.

இம்மாதிரியாகவே இ-லா-ரி-17 ம 105 (1894) வருஷத்தில் சீனிவாச ஐயங்கார் v. சக்கரவர்த்தினியாகிய ராணி கேசிலும் அபிப்பிராயம் சொண்டிருக்கிறார்கள். அதை நாங்களும் ஒப்புக்கொள்ளுகிறோம்.

ஆகையால் இந்த ரிவிஷன்மனுவைத் தள்ளிவிடுகிறோம். இ-லா ரி 39 ம 539 Adur Desikachary and others the Public Prosecutor.

நெ. 4.

ஜட்ஜிகள்:— { சீப் ஜஸ்டிஸ் ஸர் ஜான் வாலிஸ், Kt. / மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ. }

1913-ம் வருஷத்திய 184 நெ. அப்பீல்

ஸ்ரீ K. L. ஜெகன்னுதராஜு காரு வகையரா —(வாதிகள்)—அப்பீல் வாதிகள்

v.

ஸ்ரீ ராஜா K. V. S. V. L. N V. J. B. பிரசாதராவ் காரு வகையரா—(பிரதிவாதிகள்) ரெஸ்பான்டெண்ட்ஸ்.

லாப்பாயின்ட்:—இனி கிடைக்குமென்று கோரும் ஓர் சொத்தை கிரயம் செய்வதாக ஒப்பந்தம் செய்யலாமா என்பது.

இனி கிடைக்குமென்று கோரும் சொத்துகள்—அப்படிப்பட்ட சொத்துகளை விற்பனை செய்வதற்கு ஒப்பந்தம் செய்துக்கொள்ளுதல் செலாவணியுள்ளதா-1882 வருஷத்திய 4-வது ஆக்ட்டாகிய ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 6-வது பிரிவு-1872 வருஷத்திய 9-வது ஆக்ட்டாகிய இந்தியன் கான்ட்ராக்ட் ஆக்ட் 23-வது-பிரிவு-ஸ்திதிகள் ஸ்வாதீனமாகுதல்-பிரத்தியேகமாய் ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படிக்கு கொண்டுவரும் வியாஜ்ஜியம்-அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தை ஒரு கோர்ட்டில் நடத்தி நிலை நிறுத்தக்கூடியதா-இதைப்பற்றியுள்ள இங்கிலீஷ்சட்டம்-ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் அமுலுக்கு வருமுன் இந்தியாவில் என்ன விதி அனுசரிக்கப்பட்டு வந்தது-இதற்காக உண்டாகும் இடையூறை விசேஷப்படுத்துதல்.

இனிகிடைக்குமென்று கோரும் சொத்துகள் விஷயமாய் ஒப்பந்தம் செய்துக் கொள்ளல் இந்தியா தேசத்தில் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 6-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளின்படிக்கும், இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் 23-வது பிரிவின் நிபந்தனைகளின்படிக்கும் செலாவணியுள்ளதல்ல-அப்படிப்பட்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படிக்கு ஒரு கோர்ட்டில் கொண்டுவரும்படியான வியாஜ்ஜியம், அப்படி இனிவருமென்று கோரும் சொத்து ஸ்வாதீனமானபிறகு கொண்டுவரப்பட்டால் அவ்விதமான வியாஜ்ஜியத்தை கோர்ட்டில் நடத்தி நிலை நிறுத்தக்கூடியதல்ல.

இந்தயாவிலுள்ள சட்டப்படி இனிவருமென்று கோரும்படியான சொத்துகளை பராதீன மூலமாய் மாற்றக்கூடியதல்ல வென்று தடுக்கப்பட்டிருக்கிறது-ஆகையால் அப்படி இனிவருமென்று கோரும்படியான சொத்துகளின் விஷயமாய் பராதீன மூலமாய் மாற்றுவதற்கு ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருந்து அப்படிப்பட்ட உடன்படிக்கைகளை அவ்விதமான சொத்துகள் ஸ்வாதீனமானபிறகு கோர்ட்டு பைலில் தாக்கல் செய்துக்கொண்டு அவைகளின்படி நிர்ப்பந்தித்து அவைகளை அமுலுக்கு கொண்டுவருவதாயிருந்தால் சட்டப்படி அவ்விதமான ஒப்பந்தங்களை தடுத்திருப்பது நிஷ்பலமான பிரயோஜனமற்ற காரியமாகும்.

ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் அமுலுக்கு வருமுன் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் இனிவருமென்று கோரும் சொத்து ஸ்வாதீனத்திற்கு வருவதே அநிச்சயமான அதிர்ஷ்டத்தையொத்த காரியமானதால் அதை பராதீன மூலமாய் மாற்றுவதற்கு யோக்கியதை கிடையாது-ஆனல் இங்கிலாந்தில் இக்விட்டி (Equity) என்னும் நியாய விசாரணை சபையாரால் அப்படிப்பட்ட சொத்தின் விஷயமாய் செய்துக்கொள்ளப்படும் உடன்படிக்கையை அமுலுக்கு கொண்டுவந்து நிர்ப்பந்திக்கலாமென்று சட்டமுண்டாகியிருக்கிறது-இந்தியாவிலும் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்டின் கீழ் வராத வியாஜ்ஜியங்கள் விஷயமாய் இவ்விதமான சட்டம் அனுசரிக்கப்பட்டு வந்தது.

இங்கிலாந்தில் அநேக வருஷகாலங்களாக வழங்கிவரும் மாமூலின் பேரில் இங்கிலாந்து கோர்ட்டுகளில் இது விஷயமாயுள்ள தீர்மானங்களை அனுசரிக்காமல் இந்தியாவில் இது விஷயமாய் ஏற்பட்டிருக்கும் சட்டத்தில் என்ன நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றனவோ அவைகளின்படி யாதொரு தவறுதலின்றி அந்த சட்டத்தை இந்தியா தேசத்திலுள்ள கோர்ட்டார் அமுலுக்கு கொண்டுவந்து அவைகளின்படி தீர்மானம செய்து வரவேண்டுமென்பது அவசியம்.

இடையூறை விசேஷித்து வருவதைப்பற்றி விவரித்து சொல்லப்பட்டிருக்கிறது

NOTE.

குறிப்பு

ராஜாசாஹிப் பிரலாத்ஸென் V. பாபுசுதர்சிங் (1869) 2 பெ-லா-ரி- 111, 117.

முசமத் உடிகூவர் V. முசமத் (1870) 13 மூ-இ-அ585.

ராம்கிரஞ்ஜன்சிங் V. பிரயாக்சிங் (1882) இ-லா-ரி 8 கல் 138.

கிடாபாய் V. பாலாஜி கேஷவ் (1893) இ-லா-ரி 17 பம். 232.

சம்சுடீன் V. அப்டுல் ஹுசேன் (1907) இ-லா-ரி-31 பம் 165.

தூர்ஜெட்டி சுப்பய்யா V. தூர்ஜெட்டி வெங்கையா (1907) இ-லா-ரி-33 ம 201.

ஷாம்சுந்தர்லால் V. ஆச்சன்குன்வார் (1899) இ-லா-ரி 21 அ 71 (பிரிவிகவுன்சல் கேசு.)

கஞ்சம் பெரம்பூர் ஜில்லா கோர்ட்டு 19.2-ம் வருஷத்திய 19-வது அசல் கெம்பரில் மிஸ்டர். C. V. குமாரசாமி சாஸ்திரியார் செய்த டிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

கேசின் விவரம்:—ஒரு (V) வி. என்பவனுக்கு சொந்தமாயிருந்த உர்லம் என்னும் பூஸ்திதியின் பாதியை வாதிகளுக்கு விற்பனை செய்வதாக அவன் ஜீவித்திருக்கும்பொழுதே ஓர் ஒப்பந்தம் (உடன்படிக்கை) செய்திருந்தான். அந்த உடன்படிக்கையை நிறைவேற்றும்படிக்கு நிர்ப்பந்தித்து சொத்தின் விஷயமாய் கிரய தஸ்தாவேஜு எழுதிக்கொடுக்கும்படிக்கு வாதிகள் பிரதிவாதிகளின்மீது தாவா கொண்டு வந்தார்கள். பிறகு அவனுடைய விதவை (m) எம். என்னும் பெண்சாதியைமாத்திரம் அவனுக்குப் பின் விட்டுவிட்டு யாதொரு புத்திரசந்தானமில்லாமல் இறந்துவிட்டான். ஷை ஒப்பந்தம் 1904௵ மேமீ 11ௗ வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் அவர்களுடைய காலஞ்சென்ற தகப்பன் சன்யாசி ராஜுக்கும் ஏற்பட்டது. சன்யாசி ராஜு என்பவன் ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியில் ஷை உர்லம் என்னும் பூஸ்திதிக்கு நெருங்கிய அனந்தரவார்சாயிருந்தான். ஆனால், அந்த சொத்துக்கு, 2-பிரதிவாதிகளும் ஒப்பந்த தேதியில் அவர்களுடைய தகப்பனைப் பார்க்கிலும் அவ்வளவு நெருங்கினவர்களாயில்லாமல் தூர அனந்தரவார்சுகளாகவே யிருந்தார்கள். மேற்படி சொத்து ஸ்வாதீனமானவுடன் அதன் விஷயமாய் ஒரு கிரைய சாசனம் எழுதி கையெழுத்துபோட்டு அந்த சொத்தை ஸ்வாதீனப்படுத்திவிட வேண்டுமென்று அந்த ஒப்பந்தத்தில் நிபந்தனை கண்டிருந்தது. ஷை (m) எம். என்பவள் 1908-ம் வருஷம் காலமாய்விட்டாள். அவள் இறந்துபோனபிறகு ஷை சொத்து ஷை பிரதிவாதிகளுக்குச் சொந்தமாயிற்று. வாதிகள் ஷை ஒப்பந்தத்தின்படி உடன்படிக்கையின் ஷரத்தின்பிரகாரம் பிரதிவாதிகளை நிர்ப்பந்தித்து அந்த சொத்தின் விஷயமாய் கிரய தஸ்தாவேஜு எழுதிக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்த தாவா கொண்டு வந்தார்கள். பிரதிவாதிகள் அப்படிப்பட்ட ஒப்பந்தம் சட்டப்படி செல்லாவணி யுள்ளதல்லவென்றும், அவ்விதமான உடன்படிக்கையின்பேரில் கோர்ட்டில் தாவாசெய்து நிர்ப்பந்திக்கவாவது அதன்படி நஷ்டங்கள் கேட்பதற்காவது நியாயம் கிடையாதென்றும் வாதித்தார்கள். இந்த வியாஜ்ஜியத்தை விசாரணைசெய்த ஜில்லா ஜட்ஜ் அவர்கள் பிரதிவாதிகள் வாதிப்பது சட்டப்படி சரிதானென்று கண்டு வியாஜ்ஜியத்தை தள்ளுபடி செய்தார். அதன்பேரில் வாதிகள் ஹைக்கோர்ட்டில் இந்த அப்பீல் செய்தார்கள்.

லாயர்கள்:—மிஸ்டர் P. சோமசுந்தரம்—அப்பீல்—வாதிகளின் வக்கீல்,

மெஸர்ஸ்:—S ஸ்ரீனிவாச ஐயங்கார், P. நாராயணமூர்த்திக்காகவும்,

,, B. நரசிம்ம ஐயங்கார—ரெஸ்பான்டென்ட்ஸ் வக்கீல்கள்,

,, N. சுப்பாராவ், S. கோபாலசாமி ஐயங்கார்—இரண்டாவது ரெஸ்பான்டென்ட் வக்கீல்கள்.

ஹைக்கோர்ட்டார் தீர்மானம் :—

சீப் ஜஸ்டிஸ் வாலிஸ்:—பிரதிவாதிகளும் அவர்களுடைய காலஞ்சென்ற தகப்பனும் உர்லம் பூஸ்திதிக்கு அனந்தரவார்சுகளாயிருந்தபோது 1894௵ மேமீ 11ௗ வாதிகள்பேருக்கு ஓர் உடன்படிக்கை எழுதிக்கொடுத்து அதன்கீழ் ஷை உர்லம் பூஸ்திதி அவர்களுக்குச் சொந்தமாய் அவர்களுடைய ஸ்வாதீனத்திற்கு வந்தபோது அதை வாதிகளுக்கு விற்பனைசெய்து கிரயசாஸனம் எழுதிக்கொடுப்பதாய் ஒப்பந்தம் செய்திருந்தார்கள். அந்த ஒப்பந்தப்படி ஷை சொத்து பிரதிவாதிகளுடைய ஸ்வாதீனமானபோது அவர்களை நிர்ப்பந்தித்து வாதிகளுக்கு கிரயசாசனம் எழுதிக்கொடுத்து பூர்த்திசெய்யும்படிக்கு கட்டாயப்படுத்த வாதிகள் கொண்டுவந்த தாவாவை கஞ்சம் ஜில்லா ஜட்ஜ் தள்ளுபடிசெய்த டிக்ரியின் பேரில் இந்த அப்பீல் கொண்டுவரப்பட்டது. இப்பொழுது ஹைக்கோர்ட்டு ஜட்ஜாயிருக்கும் கற்றுணர்ந்த மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியார் ஜில்லா ஜட்ஜாயிருந்தபோது இப்படிப்பட்ட ஒப்பந்தம் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 6-வது பிரிவின் நிபந்தனைகளின்படி செய்யலாகாதென்று நிராகரிக்கப்பட்டிருக்கிறதென்றும், மேலும் அவ்விதமான உடன்படிக்கை இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட்

23-வது பிரிவின்படி செலாவணியுள்ள தல்லவென்றும் அப்படிப்பட்ட ஒப்பந்தம் செய்வது ஷை ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்டினுள்ள நிபந்தனைகளுக்கு நேர் விரோதமாயிருக்கிறதென்னும் காரணத்தினால் வாதிகளுடைய தாவாவை தள்ளுபடிசெய்தார். இதில் ஓர் முக்கியமான லாப் பாயின்ட்—மிஸ்டர் S. சீனிவாச ஐயங்கார் என்பவர் இவ்விதமான ஒப்பந்தங்கள் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் அமுலுக்கு வராததற்குமுன் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் செலாவணி யுள்ளதுதானென்றும் ஷை ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்டின் 6-வது பிரிவின் நிபந்தனை இவ்விதமான உடன்படிக்கையை பாதிக்காதென்றும் மிக்க வற்புறுத்தி வாதித்தார் ஷை ஆக்டு களுக்குமுன் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் இனி கிடைக்குமென்று கோரும்படியான சொத்து ஸ்வாதீனத்திற்கு வருவதே அநிச்சயமான அதிர்ஷ்டத்தையொத்த காரியமானதால் அதை பராதீன மூலமாய் கிரயம் செய்தல் செல்லத்தக்கதல்ல.

ஜோன்ஸ் v. ரோ (1789) R. 88, 93.

பார்ஸன்ஸ் (1890) 45, சான்ஸெரி டிவிஷன் 51.

ராமசந்த்ர டான்ட்ரடாஸ் v. தர்மோ நாராயண் சக்கர்பட்டி (1871) 7 பெ-ல-ரி 311.

மேற்கண்ட கேசுகளில் ஹிந்து லா பிரகாரம் ஓர் சொத்துக்கு வார்சாய் அதை அனுபவித்துவரும் விதவை இறந்துபோனபிறகு ஒருவனுக்கு அந்த சொத்திற்கு ஹக்கு பாத்தியதை யுண்டாகுமென்று அவ்விதமான பாத்தியதையை நிறைவேற்றுதல் மனுவில் ஜப்திசெய்து விற்பனை செய்யும்படி கேட்க நியாயம் கிடையாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் இது இப்படியிருந்திடினும் இங்கிலாந்தில் இவ்விதமான ஒப்பந்தம் சொத்து ஸ்வாதீனமானபோது (Equity) நியாய விசாரணை கோர்ட்டின் தீர்மானப்படி நிர்ப்பந்தித்து பூர்த்திசெய்யத் தக்கினதுதானென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த தீர்மானம் முதல் சார்ல்ஸ் (Charles I) என்பவர் இங்கிலாந்தில் அரசாளும் காலத்தில், 'Wiseman v. Con Roper' (1645) (Ch. Ref. 158) கேசில் தீர்மானிக்கப்பட்டது. இதுவுமன்றி Carleton v. Leighton (1805 3 Mer 667) கேசில் எல்டென் என்னும் பிரபு (Lord Elden) இதைப்பற்றி சில சந்தர்ப்பங்களை சொல்லியிருந்தபோதிலும் இவ்விதமான ஒப்பந்தம் செல்லத் தக்கினதுதானென்று Harwood v. Tooke (1829-2 Sim 192) கேசின்படிக்காரயபி Welhered v. Welhered (1828 2 Sim 183) Lyde v. Myun (1833-1 My & K. 683) ஊர்ஜ்ஜிதப்பட்டிருக்கின்றது. இது விஷயமாய் ஓர் முடிவான சட்டமாய் இங்கிலாந்தில் இதை அனுசரித்து வருகிறார்கள். மிஸ்டர் S. சீனிவாச ஐயங்கார் என்பவர் இந்தியாவிலும் இது விஷயமாய் இதுதான் சட்டமென்றும் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்டினால் சட்டம் பேதப்படவில்லையென்றும் வாதிக்கிறார். இதற்கு ஆதாரமாய் அவர் ராஜா சாஹிப் பிரலாத்ஸென் v. பாபு சுதர்சிங் (1869-2 பெ-லா-ரி. 111, 117) எடுத்துக் கூறினார். இந்த கேசில் ஜுடிஷல் கமிட்டி பிரபுக்கள் இவ்விதமான ஒப்பந்தம் இனி யாதோ ஒரு சந்தர்ப்பம் நேரிடும் விஷயத்தில் நிறைவேற்றத்தக்கினதானபடியால் அப்படிப்பட்ட சொத்தை கிரயத்தில் பெற்றவன் அவன் செய்ய கட்டுப்பட்டுள்ள கிருஷைகளெல்லாம் செய்வதாக ருஜுசெய்து அவ்விதமான உடன்படிக்கையை நிர்ப்பந்தித்து பூர்த்திசெய்ய வேண்டுமென்று கோர்ட்டில் தாவாசெய்ய நியாயமுண்டென்று சொல்லியிருக்கிறார்கள். எதிர்தரப்பு வக்கீல் முஸமத் உடிகூவர் v. முஸமத் (1870-13 மூ-இ-அ 585, 598) கேசை தன்னுடைய வாதத்திற்கு ஆதாரமாய் எடுத்துக்காட்டினார். பின் செப்பிய இந்த கேசில் ஜுடிஷல் கமிட்டி பிரபுக்கள் சொல்லியதென்னவென்றால் யாதோ ஒரு மனுவில் மனுதாரிகளுடைய பந்து ஒருவன் இறந்துவிட்டால் ஒரு ஸ்திதி தனக்கு கிடைக்குமாதலால்தான் சுதந்தரவாளி யாவானென்னும் ஹக்கை விடுதலை செய்துகொண்டதாகவும் அவள் அவ்விதமாய் விடுதலை செய்தகாலத்தில் அவளுக்கு அந்த சொத்தில் யாதொரு பாத்தியதையில்லை யாதலாலும் அவள் அந்தகாலத்தில் அந்த சொத்தை கிரயம் செய்வதாக ஒப்பந்தம்செய்ததாக பாவிக்கப்படாதென்றும் சொல்லியிருப்பதால் இவைகளை இனி சொத்து கிடைத்தால் அதை கிரயம் செய்கிறேனென்று சொல்லும் ஓர் ஒப்பந்தத்திற்கு ஒவ்வின கேசுகளாகவும் அவைகளை இந்த கேசுக்குத் தகுந்த ஆதாரமாகவும் எடுக்க நியாயமில்லை. இந்த கேஸை அனுசரித்த ஜுடிஷல் கமிட்டி பிரபுக்கள் லா ரிப்போர்ட்டில் வெளியாகாத ஓர் தீர்மானத்தில் (அதாவது ராம்கிரஞ்ஜன்சிங் v. பிரயாக்சிங் 1882 இ-லா-ரி 8 கல் 138-ல் சொல்லியிருக்கும்) கேசில் இவ்விதமான ஒப்பந்தம் இங்கிலாந்தில் செலாவணியுள்ளதென்று சொல்லியிருக்கும் இடையூறு ஹிந்துக்களின் பராதீனங்களாகிய கிரயம முதலானதற்குச் சம்பந்தப்படாதென்று ஸ்பஷ்டமாய் சொல்லியிருக்கிறது. மேல்கண்ட கல்கத்தா கேசில் ஹைக்கோர்ட்டார் இங்கிலாந்து தீர்மானங்களை அனுசரித்து இனி கிடைக்குமென்று கோரும் ஓர் ஸ்திதியை எவ்விதமாய் பாத்துக்கொள்ளவேண்டுமோ அதைப்பற்றி இனி யேற்படப்போகும் வார்சுகள் ஓர் உடன்படிக்கைசெய்துகொண்டால் அதன்படி நிர்ப்பந்தித்து ஒப்பந்தத்தை பூர்த்திசெய்யும்படி கேட்க நியாய முண்டென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த கேஸை அனுசரித்து ஸர். சார்ல்ஸ் ஸார்ஜென்ட் என்னும் ஜட்ஜ் கிடாபாய் v. பாலாஜி கேஷவ் (1893 இ-லா-ரி. 17 பம் 232-ல்) ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி

ஆக்ட் பம்பாயில் அமுலுக்கு வராததற்கு முன் ஒரு முடிவான சட்டமாய் தீர்ப்பு சொல்லியிருக்கிறார். கடைசியாய் நாஜர்-உல்-ஹக் v. பெயாஜ்-உல்-ராமன் (1911 இ-ல-ரி 33 அ 457) கேசில் கற்றுணர்ந்த ஜட்ஜுகள் இவ்விதமான ஒப்பந்தங்களை ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்டின் 6-வது பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகள் பாதிக்காதென்று தீர்ப்பு சொல்லி அதற் காதாரமாய் ராம் நிரஞ்ஜன்சிங் v. பிரயாக்சிங் (18 2 இ-லா-ரி 8 கல் 138) கேசை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த தீர்மானம் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் அமுலுக்கு வராததற்குமுன் செய்யப்பட்டதாகையால் அதைப் பற்றி இந்த கேசில் யோசிப்பது அனாவசியம்.

ஆனால் எதிர் தரப்பிற்கும் வேறே விதமாய்ச் சொல்ல இந்தியாவில் தக்க ஆதாரமிருக்கிறதென்றும் சொல்லமுடியாது ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்டின் 6-வது பிரிவில் செய்யப்பட்டிருக்கும் நிபந்தனைகளின் நோக்கமும் கருத்தும் இன்னதென்று எடுத்துக்காட்டுவதற்கு ஆதாரமாய் ரெஸ்பான்டென்டுகள் ஸம்சுதீன் v. அப்துல் ஹுசேன் (1907-இ-லா-ரி 31 பம் 365) தார்ஜெட்டி சுப்பய்யர் v. தார்ஜெட்டி வெங்கையா (1907-இ-லா-ரி-3) ம 201) இந்த கேசுகளை எடுத்துக் கூறினார்கள்,

மேற்கண்ட 6-வது பிரிவில் சொல்லியிருக்கிறதென்னவெனில் இந்த ஆக்டினாலும் அல்லது இன்னும் வேறெவ்விதமான சட்டத்தினாலும் தற்காலம் நிபந்தனை செய்யப்பட்டிராத எவ்விதமான சொத்தையும் பராதீன மூலமாய் கைம்மாறுதல் செய்யத் தகுமென்று சொல்லியிருக்கிறது. "ஆனால் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்டில் ஒருவன் தன்னுடையபந்து ஒருவன் இறந்துவிட்டால் மேலுக்கு ஒரு ஆஸ்தி அல்லது ஸ்திதி தனக்கு கிடைக்குமென்று கோறும் சொத்து அல்லது அதைப்போன்ற அதிர்ஷ்டத்தையொத்த சொத்தை கிரயம் செய்வதாய் ஒப்பந்தம்செய்ய நியாயம் கிடையாதென்று ஸ்பஷ்டமாய் நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கிறது.

முன்செப்பிய கேசில் மிஸ்டர் சீப்ஜஸ்டிஸ் ஜெங்கின்ஸூம், மிஸ்டர் ஜஸ்டிஸ் பீமனும் ஒரு மகம்மதிய ஸ்திரீ தன்னுடைய தகப்பன் காலமாய்விட்டால் அவனுடைய சொத்தில் தனக்கு ஓர் பாகம் கிடைக்குமென்று கோறும்படியான ஒரு ஸ்திதியில் தனக்குள்ள ஹக்கு பாத்தியதையை விடுதலை செய்வாளானால் அப்படிப்பட்ட விடுதலை ஷை ஆக்டின் (Act IV of 1882) நிபந்தனைகளுக்கு விரோதமாயிருப்பதால் இனி கிடைக்குமென்று கோறும்படியான சொத்தின் விஷயமாய் செய்யப்படும் ஒப்பந்தம் இங்கிலாந்து Equity நியாய விசாரணை கோர்ட்டின் தீர்மானப்படி செலாவணியுள்ளதான போதிலும் அவ்விதமான உடன்படிக்கை இந்தியாவில் செல்லத்தக்கினதல்ல வென்று தீர்மானித்திருக்கிறார்கள். சொற்ப காலத்திற்கு முன்நான் தீர்ப்பு செய்த ஒருகேசில் ஒருவன் இனிதனக்கு ஓர் சொத்துகிடைக்குமென்று கோறி அவன் அந்த சொத்திற்கு வார்சாய் சுதந்தரவாளியாவானென்று அந்த சொத்தை கொதுவை வைக்க ட்ரான்ஸ் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 6-வது பிரிவின்படி நியாயமில்லையென்று கண்டு அப்படிப்பட்ட கொதுவையை 43-வது பிரிவின்படி நிர்பந்தித்துஊர்ஜிதப்படுத்த சட்டமில்லையென்று தீர்மானித்திருக்கிறேன். நான் செய்த இந்த தீர்ப்புக்கு ஆதாரமாய் ஷாம் சந்தர்லால் v. ஆச்சான்குன்வார் (1899-இ-லா-ரி-21 அ 71, 80-பிரிவி கவுன்சல்) இதில் ஜுடிஷல்கமிட்டி பிரபுக்கள் முக்கியமாய் டேவி (Mr. Davey) என்னும் பிரபு சொல்லிய சந்தர்ப்பங்களையும் ராம்நிரஞ்ஜன்சிங் v. பிரயாக்சிங் (1882-இ-லா-ரி 8 கல் 138)ல் செப்பியிருக்கும் கருத்துகளையும் அனுசரித்து தீர்மானித்தேன். மிஸ்டர் சீனிவாச ஐயங்கார். இந்த தீர்மானங்கள் பிரஸ்தாப கேசிலுள்ள பாயின்டுக்கு ஒவ்வினதல்ல வென்றும் அப்படிப்பட்ட ஒப்பந்தத்தை நிர்பந்தித்து ஊர்ஜிதப்படுத்துவதில் கோர்ட்டாருக்கு யாதொரு இடையூறு கிடையாதென்றும் இனி கிடைக்குமென்று கோறும் ஓர் சொத்து ஸ்வாதீனமான பிறகு அதை கிரயம் செய்வதாக செய்யப்படும் ஒப்பந்தம் (உடன்படிக்கை) யேற்பட்ட காலத்தில் சட்டத்திற்கு விரோதமானதல்லவென்றும் வாதிக்கின்றார். எதிர் தரப்பு வக்கீல் சீப் ஜஸ்டிஸ் ஜெங்கின்ஸ் இனி அதிர்ஷ்டானு கூலமாய் கிடைக்குமென்று கோறும் சொத்து 6-வது பிரிவின்படியும் நியாயப்படி Equity பிரகாரமும் செல்லத்தக்கினதல்லவென்று செய்திருக்கும் தீர்மானத்தை ஆதாரமாய் எடுத்துக் கூறுகிறார். இது இப்படியிருப்பதால் கற்றுணர்ந்த ஜில்லா ஜட்ஜ் அவர்கள் இது இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் 23-வது பிரிவுக்கு விரோதமென்று தீர்மானம் செய்திருப்பது சரிதானென்றும் இவ்விதமான ஒப்பந்தம் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 6 வது பிரிவு a உட்பிரிவில் செய்திருக்கும் நிபந்தனைகளை நிஷ்பிரயோஜனமாக்கிவிடுமென்றும் வாதிக்கிறார்கள்.

இந்த பாயின்ட்டிற்கு அனுகூலமாய் கூறின ஆதாரங்களை கவனியாமலேயே இதை நோக்கும் விஷயத்தில் இவ்விதமாய் இனி கிடைக்குமென்று கோறும் சொத்துகளின் விஷயமாய் செய்யப்படும் ஒப்பந்தம் சொத்து ஸ்வாதீனத்திற்கு வந்தபோது செலாவணி யுள்ளதென்று ஊர்ஜிதப்படுத்தி நிர்பந்தித்தால் அவ்விதமான கிரயங்கள் செலாவணி யுள்ளதல்லவென்று நிராகரிப்பது பிரயோஜன மற்ற விஷயமாகும். இத்தியாதி காரணங்களை அனுசரித்து

இங்கிலாந்தில் அநேககாலமாய்வழங்கிவரும் மாமூலை ஆதாரமாய்க் கொண்டு இவ்விதமான ஓர் ஒப்பந்தம் செல்லத்தக்கினதென்று (Elden) எல்டன் என்னும் பிரபு இங்கிலீஷ் தீர்மானங்களை அனுசரித்துச் சொல்லிய தீர்மானத்தை ஆதாரவாய்க்கொண்டு தீர்ப்பு செய்ய நியாயமில்லை. இந்தியா தேசத்தில் ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் சட்டத்தின் நிபந்தனைகளை அனுசரித்துதான் இந்த கேசில் தீர்ப்பு சொல்லவேண்டியது நம்முடைய கடமையென்று எனக்குத் தோன்றுகிறது. இந்த முகாந்தரங்களை ஆதாரமாய்க் கொண்டு நான் ஜில்லா ஜட்ஜ் செய்த தீர்மானம் சரிதானென்று அபிப்பிராயப் படுகிறேனாகையால் இந்த அப்பீலை சிலவுகளுடன் தள்ளுபடி செய்கிறேன் இந்த அப்பீலில் செய்துகொள்ளப்பட்ட ஆட்சேபனை மியோஜனையும் சிலவுகளுடன் தள்ளுபடி செய்கிறேன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி:—இந்த வியாஜ்ஜியத்தில் ஒருவன் ஒரு ஸ்திதிக்கு அனந்தரவார்சாக இனி தனக்கு கிடைக்குமென்று கோறும் சொத்து தனக்குச் சொந்தமாய் தன்னுடைய ஸ்வாதீனத்தில் வந்தபோது அதை தான் ஒருவனுக்கு கிரயம் செய்வதாக செய்யும் ஒப்பந்தத்தின்படி நிர்பந்தித்து பூர்த்திசெய்யும்படி கேட்க சட்டப்படி நியாயமுண்டா என்பதுதான் கேள்வி. ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 6-வது பிரிவு a உட்பிரிவின் நிபந்தனைகளை நிராகரித்துச் சொல்ல ஹிந்து லாவில் யாதேனும் ஓர் பிரத்தியேகமான விதி யிருப்பதாக கட்சிதாரர்கள் எடுத்து காண்பிக்கவில்லை. அப்பீல் வாதிகள் அவர்களுடைய வாதத்திற்கு அனுகூலமாய் எடுத்துக் கூறிய சில கேசுகள் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் அமுலுக்கு வாராததற்குமுன் செய்யப்பட்ட தீர்மானங்கள், ஆகையால் இவ்விதமான உடன்படிக்கைகளை ஊர்ஜிதப்படுத்தி நிர்பந்திக்சலாமென்று இங்கிலாந்தில் 'Equity' நியாய விசாரணை கோர்ட்டார் சொல்லியதை அனுசரித்தபோதிலும் அந்த தீர்மானங்களினால் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்டின் நிபந்தனைகளின்படி பாதிக்கப்படாமல் ஹிந்து லாவில் ஓர் பிரத்தியேகமான விதி யிருப்பதாய் அவைகளில் விவரித்துச் சொல்லப்படயில்லை. இது இப்படி யிருந்திடினும் ஷாம் சுந்தர்லால் v. ஆச்சான் குன்வார் (1898 இ-லா-ரி 21 அ 71, 80 பிரிவி கவுன்சல் கேஸில்) செய்யப்படும் தீர்மானத்தின் விதிப்படிக்கு இது ஓர் விரோதமான காரியமாகுமென்று நந்தகிஷோர் லால் கான்ராம்டெவாரி (1902 இ-லா-ரி 29 கல் 355) ஆம், மாணிக்கம்பிள்ளை v. ராமலிங்கம்பிள்ளை (1906 இ-லா-ரி 29 ம 120) ஆம்; சம்சுடீன் v. அப்துல் ஹுசேன் (1904 இ-லா-ரி 31 பம் 165, 174) ஆம், இந்த கோட்பாட்டை ஊர்ஜிதப்படுத்தி தீர்ப்புசெய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த அப்பீலை ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்டின்படிக்குத்தான் தீர்மானிக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. அந்த ஆக்டின் 5-வது, 6-வது a உட்பிரிவுகளின்படிக்கு ஒருவன் தனக்கு அதிர்ஷ்டானுகூலமாய் இனி கிடைத்து அவன் அந்த சொத்திற்கு சுதந்தரவாளியான வார்சாவான் என்னும் காரணத்தினால் அவன் அவ்விதமான சொத்தை கிரயமூலமாய் பராதீனம்செய்ய நியாயமில்லை. அப்பீல் வாதியின் வாதம் இருவகைப்பட்டதாயிருக்கிறது:—

(1) பிரஸ்தாப கேசில் அவ்விதமாய் இனி அதிர்ஷ்டானுகூலமாய் கிடைக்கும்சொத்தை பராதீனம் செய்ய ஒப்புக்கொள்ள எத்தனிக்கவில்லையென்றும் இந்த கேசில் இனி ஓர் பொருளை கிரயம் செய்யப்படுமென்றுதான் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதென்றும்.

(2) அந்த ஒப்பந்தத்தின்படி ஏற்பட்டதென்னவென்றால் சில சொத்துக்கள் இனி தனக்கு அதிர்ஷ்டானுகூலமான வார்சாய் மாத்திரமல்லாமல் கிரமமாகவே தனக்குச் சொந்தமாய் ஹக்கு பாத்தியதை யுண்டாகு மென்பதுதான், இந்த உடன்படிக்கையின் பொருளென்றும் வாதிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட வாதம் சரியானதென்று எனக்குத் தோன்றவில்லை. ஓர் சொத்தின் விஷயமாய் இனிமேல் கிரயம் செய்யப்படுமென்று செய்யும் ஒப்பந்தம் இப்பொழுது கிரயம்செய்த சொத்துதானென்று ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 5-வது பிரிவின்படி சொல்லவேண்டியதாயிருக்கிறது. சட்ட நிரூபண சபையார் இனி அதிர்ஷ்டானுகூலமாய் ஓர் சொத்துக்கு ஒருவன் சுதந்தரவாளியாகி வார்சாவானென்று ஓர் ஸ்திதியை ஒருவன் இனி கிரயம் செய்வேனென்றாவது, அல்லது இப்பொழுதே கிரயம் செய்கிறேனென்பதற்காவது நியாயம் கிடையாதென்று நிபந்தனை செய்திருக்கிறார்கள். ஆகையால், இனிமேல் அப்படி அதிர்ஷ்டானுகூலமாய் கிடைக்குமென்று கோறும் ஓர் சொத்தை கிரயம் செய்வதாக ஒப்புக்கொள்ளும் உடன்படிக்கை செலாவணியுள்ளதென்று சொல்ல நியாயமில்லை. ஏனென்றால், எவ்விதமான சொத்தை கிரயம்செய்வதாக உடன்படிக்கை செய்ய நியாயமில்லையென்று சட்டத்தில் சொல்லியிருக்கிறதோ அவ்விதமான சொத்தை கிரயம் செய்வதாக இந்த கேசில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது: அப்படிப்பட்ட உடன்படிக்கையின் 'கருத்து' ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 6-வது a உட்பிரிவின் நிபந்தனைகளையும் இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் 23-பிரிவையும் நிஷ்பிரயோஜனமாக்கிவிடும்.

இந்த கேசில் கிரயம் செய்யப்படுமென்று உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட சொத்து அதிர்ஷ்டானுகூலத்தை அனுசரித்ததுதானென்று சொல்லாமல் வேறென்ன வென்றுதான் சொல்லவேண்டும்!

ட்ரான்ஸ்பர் ஆக்டின்படி ஒருவன் தனக்கு இனி ஓர் சொத்து சொந்தமாய்தான், சுதந்தரவாளியான வார்சாவானென்று எண்ணி அப்படி தனக்கு இனி கிடைக்குமென்று கோறும் சொத்துகளை கிரயம் செய்ய நியாயமில்லையென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. இவ்விதமாய் இருவர்செய்துகொள்ளும் ஒரு ஒப்பந்தம் எப்படியிருக்கிறதென்றால் ஒருவன் இன்னொருவனுக்கு சட்டத்தில் நிராகரிக்கப்பட்டுள்ள சுதந்தரத்தை தர எத்தனிப்பதாயிருக்கிறதேயல்லாமல் இனிமைம்மாறத்தக்கதல்லாத ஓர் அதிர்ஷ்டானுகூலமான காரியத்தை காண்பிப்பதாக ஏற்படுகிறது. ஆகையால் இப்படிப்பட்ட சொத்துகளை கிரயம் செய்யாவிடினும் இனி கிரயம் செய்வதாய் ஒப்புக் கொள்ளும்படியான ஒப்பந்தம் சட்டநிரூபண நிபந்தனையை நிஷ்பிரயோஜனமாக்குவதற்காக செய்துகொள்ளும் உடன்படிக்கையென்று தான் சொல்லவேண்டும். இத்தியாதிகாரணங்களை நோக்குமிடத்து இனிகிடைக்குமென்று கோறும் ஓர் சொத்து அதிர்ஷ்டானுகூலத்தையொத்ததாமென்று சொல்லவேண்டும். நாம் நம்முடைய சட்டநிரூபணசபையார் என்ன நிபந்தனைகள் செய்திருக்கிறார்களோ அதைத்தான அனுசரித்து நடக்கவேண்டுமாகையால் இந்த கேசில் எடுத்துக் கூறிய இங்கிலீஷ் கேசுகளைப்பற்றி யோசிக்க வேண்டியது அனாவசியமென்று எனக்குத்தோன்றுகிறது. மற்றப்படி பம்பாய், அலகாபாத் கேசுகளில் விடுதலையைப்பற்றி தீர்மானித்திருப்பதால் அவைகளைப்பற்றியும் இந்த கேசில் யோசிப்பது அனாவசியமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் பிரஸ்தாப கேசில் செய்துக் கொண்ட ஒப்பந்தத்தை நிர்பந்தித்து ஊர்ஜிதப்படுத்த நியாயமில்லையென்று நானும் ஒப்புக்கொள்ளுகிறேன் இந்த அப்பீலும் ஆட்சேபனை மெமோவும் சிலவுகளுடன் தள்ளும்படி செய்ய,வேண்டியதுதான்.

Sri K.L Jaganada Raju Garu & another v. Sri Rajah K. V. S. V. L. N. V. J. B. Prasada Rao Garu I. L. R. 39 Mad 554.

நெ. 5.

ஜட்ஜிகள்.— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியார்.

அப்பீல் உத்தரவின்பேரில் அப்பீல் நெ. 286 to 290 of 1913.

வெங்கடபெருமாள் ராஜா பகதூர் வாரு கார்வேட் நகர் ராஜா-(மைனர்)-W. A. வரதாசாரியார் கார்டியன்—மனுதாரர்—அப்பீல் வாதி.

v.

வெங்கடரெட்டி வகையராக்கள்—எதிர் மனுதாரர்கள்—ரெஸ்பான்டென்டுகள்:

லாப்பாயின்ட்:—சிவில் புரோசீஜர்கோடு73-வது பிரிவின்கீழ் செய்த உத்தரவின்மீது அப்பீலுண்டா என்பது.

சி-பு-கோ-(1908-ம் ஷத்திய 5-வது ஆக்ட்) 47, 73, 104-வது பிரிவுகள்-தாமாஷாப்படி பாகித்துக்கொடுக்க செய்யும்படியான உத்தரவு-அப்பீல் செய்யக்கூடுமா-கொதுவை டிக்ரி-கொதுவை வைத்தவன்மீது செய்யப்பட்ட டிக்ரி (Personal Decree)-கொதுவை வைக்கப்பட்ட சொத்தை விற்பனை செய்வதற்காக செய்யப்பட்ட நிறைவேற்றுதல்மனு-ஏலவிற்பனை செய்யப்பட்டது-நிறைவேற்றுதல் மனு-பூர்த்தியாய் பைசல் செய்யப்படவில்லை-ஏல விற்பனையினால் வசூலாகிய மொத்தத்தை கோர்ட்டில் கட்டப்பட்டது - கொதுவை டிக்ரிபெற்றவனால் தாமாஷாப்படி பாகித்துக்கொடுக்கும்படி செய்துக்கொள்ளப்பட்ட மனுவை தாக்கல் செய்துக்கொண்டு நடவடிக்கை நடத்தக்கூடியதா - நிறைவேற்றுதல் மனு இன்னும் நடந்துக்கொண்டிருப்பதாக யிருந்தால் அந்த மனு பூர்த்தியாய் பைசல் செய்யப்பட்டதாக எண்ணப்படுமா.

சி-பு-கோ-73-வது பிரிவின்கீழ் செய்யப்பட்ட உத்தரவு எந்த வியாச்சியத்தில் டிக்ரி செய்யப்பட்டதோ அந்த வியாச்சியத்தின் கட்சிதாரருக்குள் டிக்ரியை நிறைவேற்றுதலுக்காக செய்யப்பட்ட மனுவில் தாமாஷாப்படிக்கு பாகித்துக்கொடுக்கும்படி செய்யப்பட்ட உத்தரவு ஷை சி-பு-கோ-47-வது பிரிவின்கீழ் உத்தரவாக பாவிக்கப்படுமாகையால் அதன்பேரில் அப்பீல் கொண்டுவர நியாயமுண்டு.

ஷை 73-வது பிரிவில் அந்த பிரிவின்கீழ் செய்யப்பட்ட உத்தரவுகளின்பேரில் அப்பீல் கிடையாதென்று சொல்லப்படயில்லை. அப்பீல் செய்வதற்காக செய்யப்பட்டிருக்கும் 104-வது பிரிவில் ஷை 73-வது பிரிவைக்கண்டிருக்கவில்லையென்னும் காரணத்தினால் ஷை கோடின் இதர நிபந்தனைகளால் கொடுக்கப்பட்டிருக்கும் அப்பீல் சுதந்தரம் நிவர்த்தியாய்விட்டதாக சொல்லவும் நியாயம் கிடையாது.

ஓர் நிறைவேற்றுதல் மனுவில் கேட்கப்பட்டிருக்கும் எல்லா பரிகாரங்களும் கோர்ட்டாரால் கொடுக்கப்பட்டு டிக்ரிதாரன் அப்பரிகாரங்களின் பலனை அடைந்துவிட்டவனானபோதிலும் அந்த மனுவை பூர்த்தியாய் பைசல் செய்துவிட்டதாக கோர்ட்டார் அந்த மனுவின்பேரில் ஒரு உத்தரவு செய்யாவிடில் அந்த மனுவை 73-வது பிரிவின் கீழ் இன்னும் பைசலாகாமல் நடந்துக்கொண்டிருக்கும் மனுவென்றுதான் பாவிக்கவேண்டும்.

நார்த் ஆர்காட் ஜில்லா ஜட்ஜி மிஸ்டர் L. C. மூர் அவர்கள் அசல் நெ. 5 of 1897, 22 of 1889, 11 of 1889, 24 of 1889, 11 of 1886-ல் செய்துக்கொள்ளப்பட்ட நிறைவேற்றுதல் மனுக்கள் நெ. 124, 88, 133, 135, 82 of 1905-ல் கொடுக்கப்பட்ட சிவில் சில்லரை மனுக்கள் நெ. 898, 899, 900, 901, 904 of 1912-ல் செய்த உத்தரவுகளின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்கள்.

வியாஜ்ய சங்கிரகம்:—அப்பீல் வாதியினால் எழுதிக்கொடுக்கப்பட்ட கொதுவைப் பத்திரத்தின்மீது ரெஸ்பான்டென்ட் கொதுவை சொத்தை விற்பனை செய்வதற்காக டிக்ரிபெற்றான். அந்த டிக்ரியில் டிக்ரியிகீழ் பாக்கியாய் நிற்கும் டிக்ரி மொத்தத்தை டிக்ரிதாரனுடைய திரேகத்தைப் பொருத்தியும் அவனுடைய இதர சொத்துக்களைக்கொண்டும் வசூல்செய்துக்கொள்ளலாமென்று நிபந்தனை செய்யப்பட்டிருந்தது. டிக்ரிதாரன் கொதுவை சொத்தை விற்பனை செய்யும்படியாய் டிக்ரியை நிறைவேற்றும்படிக்கு மனு செய்துக்கொண்டான். அந்த மனுவின்பேரில் அவன் கேட்டுக்கொண்டபடி உத்தரவுபெற்று கொதுவை சொத்துகளை விற்பனைசெய்து விற்பனையில் வசூலாகிய தொகையை டிக்ரி மொத்தத்திற்காக வஜா செய்துக்கொள்ளப்பட்டது. ஆனால் அதனால் டிக்ரியின்கீழ் செல்லாகவேண்டிய பூராய் மொத்தமும் செல்லாகவில்லை: நிறைவேற்றுதல் மனுவில் கேட்டுக்கொள்ளப்பட்ட எல்லா பரிகாரங்களும் பிரார்த்தித்தவண்ணம் கொடுக்கப்பட்டிருக்கும் அந்த மனு பூராய் பைசலாகிவிட்டதாக கோர்ட்டார் அந்த மனுவின்பேரில் யாதொரு உத்தரவும் செய்யவில்லை. அதே தீர்ப்புகடனாளியின்மீது இன்னும் இரண்டு டிக்ரிதாரர்கள் டிக்ரி பெற்று அந்த டிக்ரிகளின்மீது அதே கோர்ட்டில் ஷை தீர்ப்புகடனாளியினுடைய வேறு சில சொத்துகளை ஜப்திசெய்து அவைகளை விற்பனை செய்ததில் வசூலாகிய மொத்தத்தை கோர்ட்டில் கட்டப்பட்டது. ரெஸ்பான்டென்ட் கோர்ட்டில் கட்டியிருக்கும் அந்த மொத்தத்தில் தனக்கும் தாமாஷாப்படிக்கு பாகித்துக் கொடுக்கும்படி மனு செய்துக்கொண்டான். தீர்ப்புக்கடனாளி சி-பு-கோ 73-வது பிரிவின்படி ரெஸ்பான்டென்டினுடைய நிறைவேற்றுதல் மனு இன்னும் நடந்துகொண்டிருக்கவில்லையாகையால் அப்படி தாமாஷாப்படி பாகித்துக்கொடுக்கும்படிகேட்க ரெஸ்பான்டென்டுக்கு ஹக்கு கிடையாதென்று வாதித்தான். கீழ் கோர்ட்டார் அந்த வாதம் செல்லாதென்று கண்டு ரெஸ்பான்டென்டுக்கும் தாமாஷாப்படி பாகித்துக் கொடுக்கும்படி உத்தரவு செய்தார்கள். கீழ் கோர்ட்டார் செய்த அந்த உத்தரவின்பேரில் தீர்ப்பு கடனாளி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டான்.

டிக்ரிதாரனாகிய ரெஸ்பான்டென்ட் அப்படிப்பட்ட உத்திரவு சி-பு-கோ 73-வது பிரிவின்கீழ் செய்யப்பட்டதானதால் அதன்பேரில் அப்பீல்செய்த சிவில் புரோசிஜர் கோடில் நிபந்தனை செய்யப்படவில்லையென்றும் ஷை கோடு 104-வது பிரிவின்கீழ் அப்பீல் செய்துக்கொள்ளுவதற்காக நிபந்தனை யில்லையென்றும் பிரதமத்தில் வாதித்தான்.

லாயர்கள்.—கனம்பொருந்திய மிஸ்டர் L. A. கோவிந்தராகவையர் அப்பீல் வாதிக்கும், மிஸ்டர் V. பார்த்தசாரதி ஐயங்காருக்காக, மிஸ்டர் கிருஷ்ணமாச்சாரியும்; மிஸ்டர் R. V. வெங்கடரமணாரவும் ரெஸ்பான்டென்டுகளுக்கும் ஆஜரானார்கள்.

ஹைக்கோர்ட்டார் தீர்மானம்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர்,—இந்த அப்பீல்களில் ரெஸ்பான்டென்டுகளாயிருப்பவர்கள் அப்பீல் வாதியின்பேரில் கொதுவை டிக்ரிகள் பெற்றவர்கள். டிக்ரியின்கீழ் செல்லாகாமல் நிற்கும் பாக்கியை தீர்ப்புக்கடனாளியின் திரேகத்தைப் பொருத்தும் இன்னும் அவனுடைய இதர சொத்துகளைக் கொண்டும் வசூல் செய்துக்கொள்ளலாமென்று இந்த டிக்ரிகளில் நிபந்தனை கண்டிருந்தது. மேற்கண்ட கொதுவைப்பத்திரத்தில் கண்டிராத சில சொத்துகளை இதே தீர்ப்பு கடனாளியின் பேரில் தீர்ப்பாயிருந்த வேறிரண்டு டிக்ரிகளின் கீழ் நிறைவேற்றுதலில் ஜப்தி செய்தார்கள். அதன் பேரில் வசூலாகிய மொத்தங்களை கோர்ட்டில் கட்டப்பட்டன இப்பொழுது இதில் கண்டிருக்கும் ரெஸ்பான்டென்ட்கள் அந்த மொத்தங்களில் தங்களுக்கும் தாமாஷாப்படி பங்கிட்டு கொடுக்கும்படி மனு செய்தார்கள். அதன் பேரில் தீர்ப்புக்கடனாளி ஆட்சேபனைசெய்தும் அந்த மனுக்களில் கேட்டுக்கொண்டபடி உத்திரவு செய்யப்பட்டது. தீர்ப்புகடனாளி அதன்பேரில் இந்த அப்பீல் செய்தான். பிரதமத்தில் இதில் செய்யப்பட்ட உத்திரவு சி. பு. கோ. 73-வது பிரிவின்கீழ் செய்யப்பட்டதென்றும் அதன்பேரில் அப்பீல் கொண்டுவருவதற்கு 104-வது பிரிவில் நிபந்தனை செய்யப்பட்டில்லையென்றும் சொல்லி இந்த அப்பீலை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவென்று வாதிக்கப்பட்டது. இந்த மனுக்களில் சொல்லப்படும் விவகாரம் டிக்ரிசெய்யப்பட்ட வியாஜ்ஜியத்திலுள்ள நபர்களுக்குள்தான் நிறைவேற்றுதலில் உண்டானதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆகையால் இந்த உத்திரவுகளின்பேரில் சி. பு. கோ. 17-வது பிரிவின்கீழ் அப்பீல் கொண்டுவர நியாயமுண்டென்பது பிரத்தியக்ஷமாய் தெரிகிறது. அப்படி அப்பீல் செய்யலாமென்று சொல்லப்படும் ஹக்கு 73-வது பிரிவின்படி நிவர்த்தியாய்விடுமா? அவ்விதமான உத்தரவுகளின் பேரில் அப்பீல் செய்யலாகாதென்று அந்த பிரிவில் சொல்லப்படயில்லை. அப்படிப்பட்ட உத்திரவின் பேரில் அப்பீல் செய்ய 104-வது பிரிவில் நிபந்தனை கிடையாதென்று சொல்லி வாதிக்கப்பட்டது. இப்படிப்பட்ட விஷயத்தில் வியாஜ்ஜியத்தின் கட்சிதாரருக்குள் கொண்டுவரப்படும் Claim மனுவில் தீர்ப்பாய் உத்தரவு செய்யப்பட்டிருந்தாலும் அந்த உத்தரவின் பேரில் 47-வது பிரிவின்கீழ் அப்பீல்கொண்டுவரலாமென்று 21-வது ஆர்டர் 63-வது விதியை அனுசரித்து தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கின்றது. இதே கோட்பாட்டை பழய கோடிலும் புது கோடிலும் மஞ்சூர் செய்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

இதற்காதாரமாய் சுந்தர்சிங் v காசி (1896) இ. லா. ரி. 18 அ 410;

கிருஷ்ணபூபதிதேவு v. விக்ரமதேவு (1895) இ. லா. ரி. 18 ம 13, 17;

வெங்கப்பய்யன் v. கரிம்பாவட்கால் பார்வதி (1903) இ. லா. ரி. 26 ம 501;

காளி பிரசன்ன கோஷ் v. ஷேக்குலாம்ராமான் (1913) க. வீ. நோ. 910 இந்த கேசுகளைப்பார்க்கவும்.

இந்த தீர்மானங்களுக்கிணங்க சி. பு. கோ. 73-வது பிரிவின்கீழ் செய்யப்படும் உத்தரவுகள் வியாஜ்ஜியத்தின் சட்ஸிதாரர்களுக்குள் செய்யப்பட்டதானால் அவைகளின் பேரில் அப்பீல் செய்யநியாயமுண்டென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

ஜோதீஷ் சந்தரஷாஹா v. க்ரிவானந்த்ஷாஹா (1909) இ. லா. ரி. 36 கல் 130உம்; காஷிராம் v. பணிராம் (1892) இ. லா. ரீ. 14 அ 210உம்; நேர் விரோதமாய் டிக்ரி பெற்றவர்கள் வாதமாடினார்கள். சி. பு. கோ. 47 வது பிரிவு அவர்கள் விஷயமாய் சம்பந்தப்படமாட்டாது.

பால்மெர்லாரீ அண்ட்கோ v. ஜாடுனாத்பானெர்ஜீ (1915) இ. லா. ரி. 42 கல் 1 என்னும் கேசில் இந்த பேதத்தை விவரமாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது.

ஆனால் சென்னம்மா v. கார்வேட்நகர் ராஜா (1914) இ-லா-ரி 1 ம-லா-வீ-நோ. 234-ல் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரும், மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்கும் செய்திருக்கும் தீர்மானம் இந்த கேசில் ரெஸ்பான்டென்ட்களுக்கு அனுகூலமான ஆதாரமென்று எங்களுடைய யோசனைக்கு எடுத்துக் காட்டப்பட்டது. அந்த கேசில் மனுதாரன் டிக்ரிபெற்றவர்களில் ஒருவன். அவன் விஷயத்தில் சி-பு-கோ 73-வது பிரிவின் 2-வது உட்பிரிவை அனுசரித்து உத்தரவு செய்திருக்கலாம். அப்படிப்பட்ட உத்தரவு அவனுக்கு விரோதமானதாயிருந்தால் அவன் அதன்மேல் கிரம வியாஜ்ஜியம் செய்து பரிகாரம்பெற்றிருக்கலாம். தீர்ப்புக் கடனாளியால் அந்த உட்பிரிவில் நிபந்தனை செய்யப்பட்டிருக்கும் கிரம வியாஜ்ஜியத்தின் சுதந்தரத்தை நீக்கலாகாது. இந்த ஆதாரத்தின்பேரில் பிரஸ்தாப கேசுக்கும் மேற்கூறிய சின்னம்மா v. கார்வேட்நகர் ராஜாவின் கேசுக்கும் பேதமுண்டென்பதைக் காணலாம். ஒருவன் தனக்கு சி-பு-கோ. 47-வது பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் ஹக்கை ஆதாரமாய்க்கொண்டு அப்பீல் செய்வானாகில் அந்த ஹக்கு அவனுக்கு கிடையாதென்பதற்கு சி-பு-கோடில் நிபந்தனை கிடையாதென்று சொல்லப்படவில்லையாகையால் அவன் ஹக்கை இழந்தவனாகானென்றுதான் நாங்கள் நினைக்கிறோம். சி-பு-கோ 73-வது பிரிவில் அப்படி நிராகரிக்கப்படவில்லையென்று நாங்கள் காண்பதினால் இந்த கேசில் அப்பீல்செய்ய நியாய முண்டென்றுதான் நாங்கள் தீர்மானிக்கவேண்டும். ஆகையால் நாங்கள் பிரதமத்தில் செய்த ஆட்சேபனையை ஆமோதிக்காமல் தள்ளிவிடுகிறோம்.

இந்த அப்பீல்களிலுள்ள மற்ற விஷயங்களைப் பைசல் செய்வதற்காக அவைகள் மறுபடியும் விசாரணைக்கு வந்தபோது பின்வருமாறு தீர்மானம் சொல்லப்பட்டது.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர்:—என்னுடனிருக்கும் கற்றுணர்ந்த ஜட்ஜின் தீர்மானத்தை நான் பூராவாகவும் வாசித்து ஒப்புக்கொள்ளுகிறேன். ரெஸ்பான்டென்டுகளின் டிக்ரிகள் கொதுவை டிக்ரிகளாயிருந்திடினும் அவர்கள் தாமாஷாப்படி பங்கிட்டு தங்களுக்கும் தரும்படி கேட்பதற்கு அவர்களுக்கும் ஹக்குண்டு. தீர்ப்புக்கடனாளியின் தேகத்தைப்பொருத்தும் அவனுடைய இதர சொத்துகளினாலும் டிக்ரி மொத்தத்தை வசூல்செய்துக்கொள்ளலாமென்று அந்த டிக்ரிகளில் கண்டிருக்கிறது. இதற்காதாரமாய் அப்துல்லா சாஹிப் v. டாக்டர் உஸ்மான்சாஹிப் (1905) இ-லா-ரி 28 ம 224-யும்; கட்டிலால் v. பிர்பஹாதூர்சிங் (1905) இ-லா-ரி 27 அ 158-யும் பார்க்கவும். அவர்கள் செய்த நிறைவேற்றுதல் மனுக்களின்பேரில் கடைசியான உத்தரவு செய்யப்படவில்லையென்பதை தகரார் செய்யவில்லை. பழய சிவில் புரோசிஜர் கோடின்கீழ் செய்யப்பட்ட ஒரு நிறைவேற்றுதல் மனுவின்பேரில் தள்ளிவிடப்பட்டது (struck off) என்று எழுதியிருந்தாலும் அந்தமனு இன்னும் பைலில் நடந்துக்கொண்டிருப்பதாய்தான் பாவிக்கப்படுமென்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால் அப்படிப்பட்ட கிருத்யை செய்வதற்காக சட்டத்தில் நிபந்தனை கிடையாது. இதற்காதாரமாய் சசிவர்ணதேவர் v. அருலாநந்தம் பிள்ளை (1898) இ. லா. ரி. 21 ம 261 பார்க்கவும். இப்பொழுது புதிதாய் செய்யப்பட்டிருக்கும் கோடில் டிக்ரிதாரன் ஒரு நிறைவேற்றுதல் மனுவில் பின்னிட்டுகிருத்யைகள் செய்யத் தவறிப்போகும் விஷயத்தில் அந்த நிறைவேற்றுதல் மனுவை தள்ளுபடி செய்து விடவேண்டுமென்று ஸ்பஷ்டமாய் நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் அப்படிப்பட்ட பின்னிட்ட கிருத்யை செய்கிறவரையில் புது கோடின் நிபந்தனையின்படி அந்த மனு கோர்ட்டுபைலில் இன்னும் நடந்துக் கொண்டிருப்பதாய்தான் பாவிக்கப்படுமென்று தெளிவாய் ஏற்படுறது. டிக்ரிதாரன் குறிப்பிட்ட ஒரு பரிகாரத்தைத்தான் நிறைவேற்றுதல் மனுவில் சேட்டானென்னும் காரணத்தினால் அவன் வேறே பரிகாரங்களைக் கேட்டு டிக்ரிமொத்தத்தை வசூல் செய்ய ஹக்கு கிடையாதென்று சொல்வதற்கு நியாயமில்லை. ஏனென்றால் சட்டத்தில் வேறே பரிகாரத்தினாலும் வசூல்செய்யலாமென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. ரெஸ்பான்டென்டுகள் கோர்ட்டில் கட்டியிருக்கும் மொத்தத்தில் தங்களுக்கும் தாமாஷாப்படி பங்கிட்டு கொடுக்கும்படி கேட்க ஹக்குண்டென்று கண்டு நிறைவேற்றுதல் மனுக்கள் இன்னும் கோர்ட்டுபைலில் நடந்துக் கொண்டிருப்பதாகவே ஜில்லாஜட்ஜ்பாவித்தது சரிதானென்று சொல்லவேண்டும். ஆகையால் இந்த அப்பீல்களை சிலவுகளுடன் தள்ளுபடி செய்யப்பட்டது. அப்பீல் நெ. 289-ல் சிலவுகள் கிடையாது.— [இன்னும் வரும்.]

The Indian Law Gazette.

PART II.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னைப்பட்டணம், 1917ஹு பிப்ரவரிஃ [நெ. 2.

Reports of Cases.

கேஸ்களின் ரிப்போர்ட்டுகள்.

Madras High Court.

மதராஸ் ஹைகோர்ட்டு.

(ஜனவரிஃ இரண்டாம்பாகம் 16-ம்பக்கத் தொடர்ச்சி.)

மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியார்:—வட ஆர்க்காட் ஜில்லா ஜட்ஜ் அவர்கள் 78 of 1905, 108 of 1906 நிறைவேற்றுதல் மனுக்களில் தாமாஷாப்படிக்கு பாகித்துக்கொடுக்கும்படி கேட்பதற்கு ரெஸ்பான்டென்டுகளுக்கு ஹக்குண்டென்று சொல்லிய உத்தரவின்பேரில் இந்த அப்பீல்கள் கொண்டுவரப்பட்டன. ரெஸ்பான்டென்டுகள் அப்பீல் வாதியின்பேரில் பெற்ற டிக்ரிகளின்கீழ் கொதுவை சொத்துகளை விற்பனைசெய்து வசூலாகிய மொத்தத்தை டிக்ரிதொகையில் வஜா செய்துக்கொண்டது போக அவைகளின்கீழ் பாக்கியாய் நிற்கும் தொகைகளை தீர்ப்புகடனாளியின் தேகத்தைப்பொருத்தும் அவனுடைய இதர சொத்துக்களைக்கொண்டும் வசூல்செய்துகொள்ளலாமென்று நிபந்தனை கண்டிருந்தது. அந்த டிக்ரிகள் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்டின் நிபந்தனைகளின்படி செய்யப்பட்டிராவிடினும் அவ்விதமான ஒழுங்கீனத்தைப்பற்றி நிறைவேற்றுதல் நடவடிக்கைகளில் வாதிக்கலாகாதென்று காளாஸ்திரி ராஜா v. வெங்கடபெருமாள் ராஜா (1911) 21 ம-லா-ஜ 1036-பார்க்கவும். ஆகையால் ரெஸ்பான்டென்டுகள் ரொக்கதொகைக்கும் டிக்ரி பெற்றவர்களானதால் கோர்ட்டில் கட்டியிருக்கும் மொத்தத்தில் தங்களுக்கும் தாமாஷாப்படி பாகித்துக்கொடுக்கும்படி கேட்பதற்கு ஹக்குண்டு. 78 of 1905, 108 of 1906ன் டிக்ரிகளை நிறைவேற்றுதல் மனுக்களில் வசூலாகியமொத்தம் எப்பொழுது வசூல்செய்யப்பட்டதோ அந்த தேதியில் ரெஸ்பான்டென்டுகளுடைய நிறைவேற்றுதல் மனுக்கள் கோர்ட்டு பயிலிலேயே கடைசியாய் பைசல்செய்யப்படாமல் நடந்துக்கொண்டிருந்தன.

ரெஸ்பான்டென்டுகள் 1905-ம் வருஷத்தில் அவர்கள் பெற்ற டிக்ரிகளின்பேரில் செய்த நிறைவேற்றுதல்

மனுக்களில் (1) சி-பு-கோ 248-வது பிரிவின்கீழ் தீர்ப்புகடனாளிக்கு நோட்டீசுகள் பிறப்பித்து அனுப்பும்படிக்கும் (2) கொதுவை சொத்துக்களை விற்பனை செய்யும்படிக்கும் அந்த விற்பனையில் அந்த சொத்துக்களை தாங்களே விலைகூறி வாங்குவதற்கு உத்தரவளிக்கும்படிக்கும் பரிகாரம் கேட்டிருந்தார்கள். அவ்விதமான பரிகாரங்கள் ரெஸ்பான்டென்டுகளுக்கு அனுகூலமாய் உத்தரவுசெய்யபட்டு அவர்கள் அந்த பரிகாரங்களின்பலனையும் அடைந்தார்கள். அந்த நிறைவேற்றுதல் மனுக்கள் கோர்ட்டு பைலிலிருந்து கடைசியாய் பைசல்செய்யப்பட்டதாக என்ன காரணத்தினால் உத்தரவுகள் செய்யப்படவில்லையோ அது வெளிப்படையாய் தெரியவில்லை." ஆயினும் ஜில்லா ஜட்ஜ் அவர்கள் அந்த மனுக்கள் பையிலில் இருப்பதாகவே பாவித்து டிக்ரிதாரர்களுடைய மனுக்களின்மீது தாமாஷாப்படி பங்கிட்டுகொடுக்கும்படி உத்தரவு செய்தார். ஆகையால் பணம் வசூலாவதற்கு அநேக வருஷங்களுக்குமுன் நிறைவேற்றுதல் மனுக்கள் செய்யப்பட்டு அவைகளில் கேட்டிருந்த பரிகாரங்களையும் அடைந்து இன்னும் பரிகாரம் கேட்பதற்கு இடமில்லாத அந்த மனுக்கள் கோர்ட்டு பயிலில் இன்னும் நடந்துகொண்டிருப்பதாக பாவிப்பதற்கு நியாயமுண்டா என்பதுதான் முக்கியமான கேள்வி.

ஜில்லா ஜட்ஜ் அவர்கள் அந்த மனுக்களின்மீது கடைசியாய் உத்தரவு செய்யவில்லை யென்பது கோர்ட்டாருடைய பிசகாகுமே யல்லாமல் கட்சிக்காரர்களின் தவறுதலல்ல. ஆகையால் ஜில்லாஜட்ஜ் நிறைவேற்றுதல் மனுக்கள் இன்னும் நடந்துகொண்டிருப்பதாக பாவித்தது சரிதானென்று சொல்லவேண்டும்.

Venkataperumal Raja Bahadur Varu Raja of Karvet Nagar v. Venkata Reddi & ors. I. L. R. 39 Mad. 570 to 575.

நெ 6.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். / மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி

கிரிமினல்ரிவிஷன் கேஸ் நெ. 3, 28 of 1915.

(கிரிமினல் ரிவிஷன்மனு நெ. 1, 24 of 1915)

S. ரங்கய்யா வகையராக்கள் —மனுதாரர்கள்.

லாப்பாயின்ட்:—ஹைக்கோர்ட் கிரிமினல்ரிவிஷன் மனுவில் ராஜி செய்துக்கொள்ளலாமா என்பது.

கிரிமினல் புரோசீஜர் கோட் (1898-ம௵த்திய 5-வது ஆக்ட்) 439-வது பிரிவின்கீழ் கொண்டுவந்த ரிவிஷன் மனு-குற்றங்களை ராஜி செய்துகொள்ளல்-ஹைக்கோர்ட்டார் ரிவிஷனில் ராஜிசெய்துகொள்ள அனுமதிகொடுக்க அதிகாரம் கிடையாது-கிரிமினல் புரோசீஜர் கோட் (1 of 1898) 345-வது பிரிவு இதைப்பற்றி விரிவாய்ச்சொல்லுகின்றது.

கிரிமினல் புரோசிஜர் கோட் 345-வது பிரிவில் எந்தெந்த கோர்ட்டார் எந்தெந்த தருணத்தில் ராஜி செய்துகொள்ள அனுமதி கொடுக்கலாமென்று விரிவாய் சொல்லியிருக்கிறபடி ஹைகோர்ட்டார் ரிவிஷன் மனுவில் குற்றங்களை ராஜி செய்துகொள்ள அனுமதி கொடுக்க அதிகாரம் கிடையாது.

NOTE.

குறிப்பு.

சக்கிரவர்த்தியார் v. ராம்பியாரி (1909-இ-லா-ரி 32-அ 153) ஒப்புக்கொள்ளப்படவில்லை.

பெஜ்வாடாஜாயின்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் காலெண்டர் கேசுகள் நெ. 77, 84லும் 118, 119 of 1914-லும் ஜாயின்ட் மாஜிஸ்ட்ரேட் குற்றவாளிகளென்று தீர்மானித்து விதிக்கப்பட்ட தண்டனைகளின்மீது மனுதாரர்களால் கொண்டுவரப்பட்ட கிரிமினல்ரிவிஷன் மனுக்களில் கட்சிதாரர்கள் செய்துக் கொண்ட ராஜியை ஆமோதித்து அனுமதி கொடுக்கும்படி கொண்டு வந்த மனுக்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி:—அவர்களுடைய தீர்மானத்தில் கேசின் விபரம் விளங்கும்.

லாயர்கள்:—மெஸர்ஸ் E. R. ஆஸ்போர்ன், T. ராமசந்திரராவ், G. வெங்கடராமையர்—மனுதாரர்களின் வக்கீல்கள். பப்ளிக்ப்ராசிக்யூடருக்காக மிஸ்டர் நூஜென்ட்கிரான்ட்—ஆஜரானூர்.

ஹைக்கோர்ட்டார் தீர்மானம் - மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி:—இந்தியன் பினல்கோட் 325-வது பிரிவின்கீழ் துன்பகரமான உபத்திரவம் செய்யப்பட்டதென்னும் குற்றத்திற்காக தண்டனை விதிக்கப்பட்டிருந்த கேசில் சட்சிதாரர்கள் ராஜி செய்துகொண்டால் அது ஹைகோர்ட்டார் தீர்மானத்தை பாதிக்குமா என்பது இந்தகேசில் பாயின்ட். ஒரு குடும்பத்தைச்சேர்ந்த இரண்டு சகோதரர்கள் கலகம் சச்சரவு செய்து ஒருவருக்கொருவர் துன்பகரமான உபத்திரவம் செய்துகொண்டதாக பிரியாதும், எதிர் பிரியாதும் கொண்டுவந்தார்கள். அதில் ஒருவொரு மாதத்திற்கு கடினகாவலிலிருக்கும்படி சிட்சைசெய்யப்பட்டது. அந்த தீர்மானத்தின்பேரில் அப்பீல் செய்துகொள்ள நியாயமில்லாததால் அவர்கள் ரிவிஷன்மனுக்கள் கொண்டுவந்து இப்பொழுது ராஜி செய்துகொள்ள விரும்புகிறார்கள்.

குற்றங்களை ராஜிசெய்துகொள்ளும் விஷயங்களைப்பற்றி கிரிமினல் புரோசீஜர் கோட் 345 வது பிரிவில் இதனடியில் கூறியிருக்கும்வண்ணமாய் விவரிக்கப்பட்டிருக்கின்றது:—

(1) துன்பப்பட்டவன் கோர்ட்டார் அனுமதியில்லாமலேயே ராஜிசெய்துகொள்ளக்கூடிய கேசுகள் இன்னின்னதென விவரித்துச் சொல்லியிருக்கிறதே யல்லாமல் அவர்கள் எந்தெந்தகாலத்தில் ராஜிசெய்துகொள்ளலா மென்பதைப்பற்றி சொல்லப்பட்டில்லை.

(2) இரண்டாவது உட்பிரிவில் எவனுக்குத் துன்பம் செய்யப்பட்டதோ அவன் துன்பகரமான உபத்திரவம் செய்ப்பட்டதென்று சொல்லப்படும் கேசில் அந்தகேசு எந்த கோர்ட்டில் கொண்டுவரப்பட்டதோ அந்த கோர்ட்டாருடைய அனுமதியின்பேரில் அந்த கேசு நடந்துகொண்டிருக்கையிலேயே, ராஜிசெய்துக் கொள்ளலாமென்று சொல்லியிருக்கிறது.

(3) மூன்றுவது நான்காவது உட்பிரிவுகளில் (a) எந்தெந்த கேசுகளில் ராஜி செய்துகொள்ளலாமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தந்த குற்றங்களுக்கு உடந்தையா யிருப்பதைப்பற்றியும், அவைகளைச் செய்ய எத்தனிப்பதைப்பற்றியும் கண்டு அவ்விதமான குற்றங்களை ராஜி செய்துகொள்ள உத்தரவளிக்கலாமென்பதைக் குறித்தும் (b) மைனர்களுக்கு சார்டியன்களாயிருப்பவர்கள்கூட ராஜி செய்துகொள்ள உத்தரவளிக்கலாமென்றும் சொல்லியிருக்கிறது

(4) ஐந்தாவது உட்பிரிவில் குற்றம் செய்ததாக குற்றம்சாட்டப்பட்டு விசாரணைக்கு அனுப்பப்பட்டவர்கள் விஷயமாயும் அல்லது குற்றம் செய்தவனாக தீர்மானிக்கப்பட்டு சிட்சை விதிக்கப்பட்டு அப்படிப்பட்ட தீர்மானத்தின்பேரில் அப்பீல் செய்திருந்தால் அவ்விஷயமாயும் கோர்ட்டாருடைய அனுமதிபெறாமல் குற்றத்தை ராஜிசெய்துகொள்ள லாகாதென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது.

(5) ஆறுவது உட்பிரிவில் ராஜிசெய்துகொள்வதினால் குற்றவாளியை விடுதலை செய்துவிடலாமென்பதைப்பற்றி சொல்லியிருக்கிறது.

(6) ஏழாவது உட்பிரிவின்படி இந்த பிரிவில் நிபந்தனை செய்யப்பட்டிருக்கும் விஷயங்களில் தவிர மற்றெவ்விதமான விஷயங்களிலும் ராஜிசெய்துகொள்ள நியாயமில்லையென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால் இந்த பிரிவில் (a) யார் யார் ராஜிசெய்துகொள்ளலாமென்றும் (b) எவ்விதமான கேசுகளில் ராஜிசெய்துகொள்ள நியாயமுண்டென்றும் (c) ஓர் கிரிமினல் விசாரணை நடந்துகொண்டிருக்கையில் எந்தெந்த தருணத்தில் ராஜி செய்துகொள்ள இடமுண்டென்றும் (d) சில குற்றங்களில் துன்பமடைந்தவன் ராஜி செய்துகொள்ள சம்மதிக்கிறானென்பது மாத்திரம் போதாமல் அப்படி ராஜிசெய்துகொள்ள கோர்ட்டாருடைய அனுமதி பெறவேண்டுமென்றும், எந்தெந்த கோர்ட்டாருடைய அனுமதி பெறவேண்டுமோ அப்படிப்பட்ட கோர்ட்டுகள் இன்னின்னதென்றும் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏழாவது உட்பிரிவில் இந்த 345-வது பிரிவில் விவரித்திருக்கும் நிபந்தனைகளின்படிக்கல்லாமல் மற்றெந்த விஷயத்திலும் யாதேனும் ஒரு குற்றத்தை ராஜி செய்துகொள்ளலாகாதென்றும் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த பிரிவில் ஒருவன் குற்றம்செய்ததாக எந்தகோர்ட்டில் விசாரணை நடத்தப்படுகின்றதோ அந்த கோர்ட்டார் எதிரிலும்; குற்றம் செய்ததாக ஒரு குற்றவாளியை விசாரணை செய்யும்படிக்கு எந்த கோர்ட்டாருக்கு அனுப்பப்படுகின்றனோ அந்த கோர்ட்டாரெதிலும்; ஒரு கிரிமினல் கேசில் எந்த கோர்ட்டில் அப்பீல்செய்யப்பட்டு அப்பீல் நடந்துகொண்டிருக்கிறதோ அந்த கோர்ட்டாரெதிரிலும்; ராஜிசெய்துகொள்ள அனுமதிபெறலாமென்று சொல்லியிருக்கிறது. ஹைகோர்ட்டாரெதிரில் ரிவிஷன் நடக்கையில் ராஜிசெய்துகொள்ளலாமென்று இந்தப் பிரிவில் சொல்லப்படவில்லை. இது இப்படிக்கிருக்க இதற்கு விரோதமாய் ஹைகோர்ட்டாருக்கு ரிவிஷனில் என்னென்ன அதிகாரங்களுண்டென்பதைப்பற்றியும் அவர்கள் ரிவிஷனில் என்னென்ன செய்வதற்கு நியாயமுண்டென்பதைக் குறித்தும் விவரிக்கப்பட்டிருக்கும் 439-வது பிரிவில் 345-வது பிரிவைப்பற்றி யாதொன்றும் சொல்லப்பட்டிருக்கவில்லை யென்பதை கவனிக்கவேண்டியவிஷயமாக விருக்கிறது.

ஆகையால் ஹைகோர்ட்டாரெதிரில் ரிவிஷன் நடந்துகொண்டிருக்கையில் ஒரு குற்றத்தை ராஜி செய்துகொள்ள அனுமதிகொடுத்தால், அப்படி மஞ்சூரளிப்பது 345-வது பிரிவில் சொல்லியிருக்கிற இரண்டு நிபந்தனைகளின்படி (1) எந்தெந்த தருணத்தில் (2) எந்தெந்த கோர்ட்டார் அனுமதி கொடுக்கலாமென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறதோ அதன்படி அனுமதி கொடுக்கப்பட்டதென்று சொல்ல நியாயம் கிடையாது. ஆகையால் இத்தருணத்தில் ஒரு குற்றத்தை ராஜிசெய்துகொள்ள நியாயமில்லையென்றுதான் சொல்லவேண்டும்.

ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனு நடக்குங் காலையில் குற்றங்களை ராஜிசெய்துகொள்ள 423-வது (1) (d) உட்பிரிவை 439-வது பிரிவுடன் வாசித்து அனுமதி கொடுக்க அதிகாரமுண்டென்று எங்களெதிரில் வாதிக்கப்பட்டது. இதற்கு ஆதாரமாய் சக்கரவர்த்தி v. ராம்பியாரி (1909) இ-லா-ரி 32 அ 153 கேசில்

ஒப்புக்கொள்ளப்பட்டதென்றும், ஆனால் (1911) இ-லா-ரி 37 அ 127-ல் ஒப்புக்கொள்ளப்படவில்லையென்றும் எடுத்துக் காண்பிக்கப்பட்டது. பின்செப்பிய கேசில் மிஸ்டர் ஜஸ்டிஸ் நாக்ஸ் (Knox) என்னும் ஜட்ஜ் முன்செப்பிய கேசை தீர்மானித்தவர்களில் ஒருவராயிருந்திடினும் பின்செப்பிய கேசில் அவர் ஒருவராயிருந்தபோது அவருக்கு இதைப்பற்றி எடுத்துக் காண்பிக்கவில்லையாகையால் அவர் இவ்விஷயத்தை கவனிக்கவேயில்லை.

ஆகையால் ஏழாவது உட்பிரிவில் சொல்லியிருக்கிறபடி ஹைகோர்ட்டாரெதிரில் ரிவிஷன்மனு நடக்கும்போது குற்றத்தை ராஜிசெய்துகொள்ள அனுமதிகொடுக்க நியாயம் கிடையாதாகையால் இத்தருணத்தில் ராஜி செய்துகொள்ளலாகாதென்று சொல்லவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்:—நானும் அவ்விதமாகவே அபிப்பிராயப்படுகிறேன். 345, 7-வது உட்பிரிவில் சொல்லியிருக்கிறபடி அனுமதிகொடுக்க நியாயம் கிடையாது கிரிமினல் புரோசீஜர் கோட் 423-வதின் (d) உட்பிரிவில் 345-வது பிரிவை கவனியாமலேயே அப்பீல் கோர்ட்டார் ராஜிசெய்துகொள்ள அனுமதிகொடுக்க அதிகாரமுண்டென்பதற்கு நியாயமில்லை. நாங்களிருவரும் கேசிலுள்ள மற்ற விஷயங்களை யோசித்து கீழ்க்கோர்ட்டார் தீர்மானம் சரிதானென்றுசொல்லுகிறோம். ஆனால் குற்றவாளிகள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பந்துக்களானதினால் அவர்கள் இதுவரையில் அனுபவித்த தண்டனையேபோதுமென்று சிட்சையைக் குறைவாக தீர்மானித்து அவர்களுடைய ஜாமீன் பத்திரங்களை நிவர்த்திசெய்து அவர்களை விடுதலைசெய்யும்படிக்கு உத்தரவளிக்கிறோம்.

Re:—S. Rangayya & ors. M.L.R. 39 Mad 604 to 607.

நெ. 7.

ஜட்ஜிகள்.— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்.
{ மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

இரண்டாவது அப்பீல் நெ. 2056 of 1913,

சத்தியபாமா—வாதி—அப்பீல் வாதி.

V.

கேசவாசாரியா—பிரதிவாதி—ரெஸ்பான்டென்ட்.

லாப்பாயின்ட்:—விபசாரியான ஹிந்து விதவை ஜீவனாம்ச காரின்படி பாத்தியமுடையவளா?

வியாஜ்ஜியசங்கிரகம்:—ஒரு ஹிந்துவிதவை விபசாரத்துவமான நடவடிக்கையுள்ளவளாயிருந்தபடியால் அவளுக்கு குடும்பத்தில் எழுதிக்கொடுத்திருந்த ஜீவனாம்ச உடன்படிக்கையில் கண்டிருந்த மொத்தத்தை கேட்பதற்கு அவள் ஹிந்துலாவின்படி ஹக்குள்ளவளாகமாட்டாளென்பது.

புத்தூர் டிஸ்டிரிக்ட் முன்சீபுகோர்ட் அசல் நெ. 334 of 1912-ல் பிறப்பிக்கப்பட்ட டிக்ரிக்கு விரோதமாய் தென்கனடம் ஜில்லாஜட்ஜ் கோர்ட் அப்பீல் நெ. 460 of 1913-ல் செய்யப்பட்ட டிக்ரியின்பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

தீர்ப்பில் கேசின் விபரத்தைக் காணலாம்.

லாயர்கள்:—H. பாலகிருஷ்ணராவ்—அப்பீல்வாதியின் வக்கீல். B. சீத்தாராமராவ்—ரெஸ்பான்டென்டின் வக்கீல்.

ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு - மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர்:—ஒரு ஹிந்துவிதவை அவளுடைய காலம்சென்ற புருஷனுடைய சகோதரன்பேரில் ஜீவனாம்சத்திற்காக இந்த தாவா செய்தாள். ஜீவனாம்ச மொத்தம் இவ்வளவென்று அவள்பேருக்கு 1906௵ ஏப்ரல்மீ 30உ எழுதிக்கொடுத்திருந்த ஜீவனாம்ச உடன்படிக்கையில் கண்டிருந்தது. அந்த உடன்படிக்கைக்குப்பின் அவள் நல்நடவடிக்கையாயில்லாமல் விபசாரத்துவமான நடத்தையுள்ளவளாயிருந்தபடியால் அவள் மேற்கண்ட உடன்படிக்கையின்படி ஜீவனாம்சம்கேட்க ஹக்குள்ளவளாகமாட்டாளென்று பிரதிவாதி வாதித்துத் தகரார் செய்தார். கீழ்க்கோர்ட்டார்கள் அவள் துர்நடவடிக்கையுள்ளவளாயிருந்தது உண்மைதானென்றும் பிறகு தாவாசெய்யுங்காலத்தில் அவள் விபசாரத்வமான நடவடிக்கையைவிட்டு அவளுடைய இனத்தாரோடு சேர்ந்து அவள் வாசம் செய்துகொண்டிருந்தாளென்றும் கண்டு தீர்மானித்தார்கள் அவள் ஒரு சூத்திரனோடு கலந்து துர்நடவடிக்கையுள்ளவளாயிருந்து அவளுடைய குலத்திற்கே ஒரு பங்கம் தேடிக்கொண்டு ஜாதி பிரதிஷ்டையாய் விட்டபடியால் யாதொரு ஜீவனாம்சமும் கேட்பதற்கு அவளுக்கு ஹக்கு கிடையாதென்று ௸டி வக்கீல் Mr. B. சீதாராமராவ் வாதித்தார்.

ஆனால் அவள் ஒரு சூத்திரனோடு கூடி சுகித்து இப்பொழுது கர்ப்பிணியாயிருக்கிறாளென்பதாக கீழ்கோர்ட்டார் காணவில்லை. அவ்விஷயத்தைப்பற்றி இரண்டாவது அப்பீலில் வாதிப்பதற்கு நாங்கள் அனுமதி கொடுக்க நியாயம் கிடையாது.

கீழ்க்கோர்ட்டார் கண்டு தீர்மானித்திருக்கும் சந்தர்ப்பங்களை யனுசரித்து அவள் பசித்திராமல் ஜீவிப்பதற்காக யாதோர் ஒரு ஜீவனாம்ச மொத்தம் பிரதிவாதியினிடம் கேட்பதற்கு அவளுக்கு ஹக்குண்டா என்பது தான இப்பொழுது நாங்கள் யோசிக்கவேண்டிய அம்சம். அவளுக்கு கொடுத்துவருவதாக சொல்லிய ஜீவனாம்ச மொத்தம் இவ்வளவென்று ஒரு உடன்படிக்கையில் குறிப்பிட்டிருந்தபடியால் இந்த கேசுக்கும் நாகம்மா v. வீரபத்ரா இ-லா-ரி (1894) 17 ம 392-க்கும் பேதமுண்டென்று வாதிக்கப்பட்டது. அப்படிப்பட்ட வாதத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அந்த உடன்

படிக்கை ஜீவனாம்ச மொத்தம் இவ்வளவென்று ரூபிப்பதற்குமாத்திரம் சாட்சியமாகுமே யல்லாமல் மற்றப்படி அவளுக்கு ஜீவனாம்சம்கொடுத்து அவளைக் காப்பாற்ற வேண்டுமென்கிற கடமை (அவள் பிறகு விபசாரத்வமான நடவடிக்கை யுள்ளவளாயிருந்திடினும்) உண்டென்று சொல்லுவதற்கு நியாயமே கிடையாது. பூப்சிங்க் v. லட்ச்மண்குன்வார் இ-லா-ரி (1904) 26 அ 321 கேசு ஒரு ஹிந்து விதவை குடும்பசொத்திற்கு சுதந்தரவாளியானவர்சென்று கண்டு குடும்பசொத்தை அவள் வசம் ஒப்புவிக்கும்படிக்கு கொண்டுவந்த தாவாவை ராஜி செய்துகொண்டதைப்பற்றியது. அந்த கேசில் அவள் பிறகு துர்நடவடிக்கையாய் விபசாரத்துவமான நடத்தையுள்ள வளாயிருந்திடினும் அவளுக்கு குடும்ப சொத்திலுள்ள வார்சு சுதந்தரபாத்தியதை போய்விடாதென்று தீர்மானிக்கப்பட்டது. அந்த தீர்மானம் பிரஸ்தாப கேசுக்கு சம்மந்தப்படமாட்டாது. ஜீவனாம்சம் கேட்பதற்குள்ள ஹிந்து சாஸ்திர கிரந்தங்கள் ஒரு சொத்தை அடைவதற்கு வார்சாக ஏற்படுவதற்கான விஷயத்திற்கு சம்மந்தப்பட மாட்டாது. பிரஸ்தாப கேசிலுள்ள பாயின்டிற்கு நேர் ஆதாரமாய் யாதொரு கேசும்கிடையாது. மனுசாஸ்திரம் 11-வது அத்தியாயம் 189-வது பிரிவு எப்படிப்பட்ட ஸ்திரீகள் ஜீவனாம்சம் கேட்கலாமென்பதற்குச் சம்பந்தப்பட்டது. மேற்செப்பியகிரந்தத்தின்படி ஒரு ஸ்திரீ விபசாரத்துவமான நடவடிக்கையுள்ள வளாயிருந்தால் அவள் பசித்திராமல் ஜீவிப்பதற்குப் போதுமானஒரு ஜீவனாம்சமொத்தம் தனக்கு குடும்பத்திலிருந்து கொடுத்துவரும்படி கேட்கலாமென்று ஏற்படுகிறது. யாக்னவால்கியர் ஸ்மிருதியின் (Yagnavalkiya Smrithi) பிராயச்சித்தகாண்டத்தின் 297, 298-வது சுலோகங்களில் நல்நடவடிக்கையாயில்லாமல் துர் நடவடிக்கையுள்ள ஸ்திரீகள் விஷயமாய் என்ன நிபந்தனைகள் செய்யவேண்டுமோ அதைப்பற்றி விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. கற்றுணர்ந்த ரெஸ்பான்டென்டின் வக்கீல் இந்த சுலோகங்கள் விபசாரத்துவமான நடவடிக்கையுள்ள ஸ்திரீகளுக்குச் சம்பந்தப்படாதென்றும் அவைகள் விபசாரத்துவ மல்லாமல் வேறுவிதமான பாபங்கள் செய்யப்பட்ட ஸ்திரீகளுக்குச் சம்பந்தப்படுமென்றும் கூறினர். ஆனால் அந்த ஸ்மிருதியின்பேரில் விஜ்ஞாநேயேஸ்வரர் (Vijnaeswara) என்பவர் கூறியிருக்கும் வியாக்கியானங்களின் முடிவில் மேற்கண்ட இரண்டு சுலோகங்கள் நல்நடவடிக்கையில்லாமல் துர்நடவடிக்கையாய், விபசாரத்துவமான நடத்தையுள்ள ஸ்திரீகளைப்பற்றி சொல்லியிருக்கிறது. அந்த வியாக்கியானத்தை இதனடியிற்காணலாம். "துர் நடவடிக்கையுள்ளவர்களாய் அவர்களுடைய குலத்திற்கே ஒரு பங்கம் தேடிக்கொண்டு ஜாதி பிரதிஷ்டையாய்விட்ட ஸ்திரீகள்விஷயமாய் அவர்களை ஜாதியிலிருந்துவிலக்கி தண்ணீர்வார்த்து தந்தம்செய்யும் சடங்குகளை செய்துவிட்டபின் அப்படிப்பட்ட ஸ்திரீகள் வசிப்பதற்கு குடும்ப வீட்டிற் கருகாமையில் வைக்கோலினாலும், ஓலைகளினாலும் ஒரு சிறிய குடிசைகட்டி அவர்களுக்குக் கொடுக்கவேண்டியது. அம்மாதிரியாகவே அப்படிப்பட்ட ஸ்திரீகளை மறுபடியும் இன்னொருவன் சுகித்து கலந்திராதபடி தடுப்பதற்காக அவர்களுக்குப் பசித்திராமல் ஜீவித்திருக்கப் போதுமான ஆகாரமும், உடுத்துவதற்கு கேவலமான வஸ்திரமும் கொடுக்கவேண்டியது." இம்மாதிரியாய் பிரஷ்டையாய்விட்ட ஸ்திரீகள்விஷயமாய் ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று எண்ணி வியாக்கியானம்செய்தவர் மேற்கண்ட வியாக்கியானத்தின் கடைசி வாக்கியத்தை கூறியிருக்கிறாரென்பதற்கு ஐயமே கிடையாது. மேற்படி கிரந்தமும் அதன்பேரில் கூறியிருக்கும் வியாக்கியானமும் ஒரு குடும்பத்திலுள்ள எவ்விதமான ஸ்திரீகளுக்கும், அதாவது, பெண்சாதிகள், அல்லது தாயாதிகளின் விதவைகள் அல்லது தாய்மார்கள் அனைவருக்கும் சம்மந்தப்படுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆகையால், மனுவும், (Manu) யாக்ஞவால்கியரும் (Yagnavalkiya) சொல்லியபடி துர்நடவடிக்கையாய் விபசாரத்துவமான நடத்தையுள்ள ஸ்திரீகளுக்கும் யாதேனும் சொற்பதுகை ஜீவனாம்சமாக கொடுத்துவரவேண்டுமென்று ஏற்படுகிறது. ஆனால் அவர்கள் அவ்விதமாய் விபசாரத்துவமான நடவடிக்கையுள்ளவர்களாயிருப்பதற்குத் தண்டனையாக அவர்களுக்குச் சாதாரணமாய் கொடுக்கவேண்டிய ஜீவனாம்சம் கொடாமலிருப்பதேதான் சிட்சையென்று சொல்லலாம். ஒரு தாயாதியின் துர்நடத்தையுள்ள விபசாரத்துவமான விதவை அவளுக்குக் குடும்பத்திலிருந்து கொடுத்துவரவேண்டிய ஜீவனாம்ச மொத்தத்தை இழந்துவிடுவாளென்று நாரதர் (Narada) என்பவர் கூறியிருக்கும் (யாவருக்கும் நன்றாய்த்தெரிந்துள்ள) கிரந்தத்தை மேற்கண்ட இரண்டு கிரந்தங்களுக்கு விரோதமாய் எடுத்துக் கூறப்பட்டது. எல்லா ஸ்மிருதி கர்த்தர்களும் (Smrithi Writers) இந்த கிரந்தத்தை யெடுத்துக் கூறி அதன்பேரில் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். (மயூகா - Mayuka 8-வது பிரிவு 6-வது உட்பிரிவு; ஸ்மிருதி சந்திரிகா - Smrithi Chandrika, 11-வது அத்தியாயம், 34-வது பிரிவு; வீரமித்ரோதயா Viramitrodaya 3-வது அத்தியாயம் 1 வது பாகம் 10-வது பிரிவு பார்க்கவும்.)

ஆனால் ஒரு ஸ்திரீ தான் துர்நடவடிக்கையுள்ளவளாய் விபசாரத்துவமாக இருந்தது பிசகென்று கண்டு துக்கித்து பிறகு துர்நடத்தையைவிட்டு யோக்கியதையான நல்நடவடிக்கையாயிருப்பவள் விஷயமாய் மேற்கூறிய எந்த கிரந்தத்திலும் நிபந்தனை செய்யப்பட்டிருக்கவில்லை. அதைப்பற்றி எந்த கிரந்தத்திலும் நிபந்தனை செய்யாமலிருப்பதினாலேயே அவள் ஒருகாலத்தில் இழந்துவிட்ட ஹக்கு பிறகு அவள் நல்நடத்தையுள்ளவளாயிருப்பாளாகில் மறுபடியும் அடையக்கூடியவ

ளாகமாட்டாளென்றும் அப்படி பிரஷ்டையாய்விட்ட ஸ்ரீதான் பசித்திராமல் ஜீவிப்பதற்கு குடும்பத்திலிருந்து ஜீவனும்சமாக யாதேனும் சொற்ப தொகை பெறுவதற்கு ஹக்குள்ளவளாகமாட்டாளென்றும் யூகிப்பதற்கு நியாயமில்லை. இதைப்பற்றி விசாலாட்சியம்மாள் v. அண்ணசாமிசாஸ்திரி (1870) ம-ஹை-கோ-ரி. 150-வது கேசிலும் வாதிக்கப்பட்டது. ஆனால் அந்தகேசில் இதைப்பற்றி தீர்மானம் சொல்லாமலேயே விட்டுவிட்டார்கள். நாகம்மா v. வீரபத்ரா (1894) இ-லா-ரி 17 ம 392-ல் கற்றுணர்ந்த ஜட்ஜிகள் சில பம்பாய் தீர்மானங்களை யனுசரித்து துர்நடக்கையாய் விபசாரத்துவமான நடவடிக்கையுள்ள விதவை குடும்பத்திலிருந்து தனக்கு ஜீவனும்சம் கொடுத்துவரும்படி கேட்க ஹக்கு கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது. சொற்பகாலத்திற்குமுன் நடந்த பம்பாய் கேசில் இதுவிஷயத்தைப் பற்றியுள்ள பிரதம கேசுகளை ஒப்புக்கொள்ளவில்லை. மதராஸ் கேசில் துர்நடவடிக்கையுள்ள ஒரு ஸ்ரீ பிறகு தன்னுடைய நடத்தையை சீர்திருத்திக்கொண்டு நல் நடவடிக்கையாயிருப்பாளாகில் அப்போது யாதேனும் பேதமுண்டா வென்பதைப்பற்றி யோசிக்கப்படவில்லை. கந்தசாமிபிள்ளை v. முருகம்மாள் (1896) இ-லா-ரி 19 ம 6-ல் ஜாதியிலிருந்து விலக்கப்பட்ட விபசாரத்துவமான ஒரு ஸ்ரீ அற்பசுகத்தி லிச்சித்து பெற்றுக்கொண்ட ஒரு பிள்ளையை அவளுடைய சொந்த புருஷனுக்குப் பிறந்ததுதானென்று திருட்டுத்தனமாய் ஸ்தாபிக்க எத்தனித்தாளென்று கண்டு அப்படிப்பட்ட ஸ்ரீ பசித்திராமல் ஜீவித்திருக்க யாதோ சொற்பதொகை தனக்கு ஜீவனும்சமாக கொடுத்துவரும்படி கேட்கவும்கூட அவளுக்கு ஹக்கு கிடையாதென்று கற்றுணர்ந்த ஜட்ஜிகள் தீர்மானித்தார்கள். இந்த தீர்மானத்தை கந்தசாமிபிள்ளை v. முருகம்மாள் (1896) இ-லா-ரி 19 ம 6-ல் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லரும், மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரும், சுப்பண்ணையா v. பவானி இரண்டாவது அப்பீல் நெ. 725 of 1912-ல் தீர்க்க யோசித்து சதா துர்நடத்தையுடன் விபசாரத்துவமாயிருந்துகொண்டு பிறகு தன்னுடைய நடவடிக்கையை சீர்திருத்திக்கொள்ளாமலிருக்கும் ஸ்ரீயின் விஷயமாய் இந்த தீர்மானம் சம்மந்தப்படுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். நாகலட்சுமம்மா v. விஸ்வநாத சாஸ்திருலு (1912) 23 ம-லா-ஜ 289-வது கேசில் துர்நடக்கையுள்ளவளாயிருந்த ஒருவனுடைய பெண்சாதி தன்னுடைய பிசகிற்கு துக்கித்து பிறகு அவளுடைய துர் நடவடிக்கையை விட்டு நல்நடவடிக்கையாய் சீர்திருத்திக் கொண்டவளென்று ருஜுப்படுத்தவில்லை. மிஸ்டர் R. சீத்தாராமராவ்—சுப்பண்ணையா v. பவானி (S.A. No. 725 of 1912) கேஸ்-தாயாதிகளின் விதவைகளுக்குச், சம்மந்தப்பட்டதென்று வாதித்தார். முன்: செப்பியவண்ணம் மனுவும் (Manu,) யாக்ஞவால்கியரும் (Yagnavalkiya) குடும்பத்திலுள்ள பெண்சாதிகளுக்கும், மற்ற ஸ்ரீகளுக்கும் யாதொரு பேதமும் கிடையாதென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் ஒருவனுடைய சொந்த பெண்சாதியைவிட ஒரு தாயாதியின் விதவை பசித்திராமல் ஜீவித்திருப்பதற்கு சொற்பதொகை ஜீவனும்சமாககேட்க ஹக்குஉள்ளவளாகமாட்டாளென்று சொல்வதற்கு நியாயமில்லை. ராமனாத் என்னும் ராமநாதபொட்டார் v. ராஜோனிமனிதாசி. (1890) இ-லா-ரி. 17 கல் 674, 678-ல் துர் நடவடிக்கையுடன் விபசாரத்துவமாயிருந்த விதவைகள் பிறகு அவர்கள் அப்படி நடப்பது பிசகென்று துக்கித்து அவர்களுடைய துர் நடத்தையை சீர்திருத்திக்கொண்டு நல் நடவடிக்கையாயிருப்பார்களாகில் அவர்கள் ஜீவித்திருப்பதற்கு யாதோ சொற்பதொகை ஜீவனும்சமாக அவர்களுக்கு குடும்பத்திலிருந்து கொடுத்து வரவேண்டுமென்று கேட்க அவர்களுக்கு ஹக்குண்டென்று கண்டிருக்கிறார்கள். சொற்பகாலத்திற்கு முன் தீர்மானிக்கப்பட்ட பாமி v. மஹாதேவி (1910) இ-லா-ரி 34 பம் 278-வது கேசிலும் ஒருவனுடைய சொந்த பெண்சாதியினால் கொண்டுவரப்பட்ட தாவாவாயிருந்திடினும் குடும்பத்திலுள்ள மற்ற ஸ்ரீகளும் தயா விஷயமாய் மனமிரங்கி யாதோ சொற்பதோகை ஜீவனும்சமாக கொடுத்துவரும்படிகேட்க ஹக்குண்டென்று கண்டிருக்கிறார்கள். அந்த கேசில் விவரிக்கப்பட்டிருக்கும் கோட்பாட்டை எங்கள் முன்னிருக்கும் இந்த கேசிலும் சம்மந்தப்படுத்தலாகாதென்பதற்கு எங்களுக்குத் தகுந்தகாரணம் தோன்றவில்லை. ஆகையால், இந்த கேசில் அந்த விதவை அவள் பேருக்கு எழுதிக் கொடுத்திருக்கும் ஜீவனும்சஉடன்படிக்கையில் கண்டிருக்கும் ஜீவனும்ச தொகை வீதம் தனக்கு கொடுத்துவரும்படி கேட்க ஹக்கில்லாவிடினும் யாதோசொற்பதொகை ஜீவனும்சமாக கொடுக்கும்படி கேட்க அவளுக்கு ஹக்குண்டென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். கீழ்க்கோர்ட்டார்கள் அவளுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 24 ஜீவனும்சமாக கொடுக்கலாமென்று கண்டிருக்கிறார்கள்; அதை நாங்களும் ஒப்புக்கொண்டு கீழ்கோர்ட்டார்களுடைய டிக்ரிகளை ரத்துசெய்து 1911-ம௵ ஜனவரி௴ முதல் கொண்டு தாவா தேதி வரையில் வருஷம் ஒன்றுக்கு ரூ. 24 அவளுக்கு ஜீவனும்சமாக கொடுக்கும்படி தீர்ப்பு செய்து டிக்ரி பிறப்பிக்கிறோம். இந்த வியாஜ்ஜியத்தின் செலவுகளையெல்லாம் கட்சிக்காரர்கள் அவரவர்களே பொறுத்துக்கொள்ளவேண்டியது.

Sathyabhama v. Kesavacharya I. L. R. 39 Mad. 658.

நெ. 8.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட். மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர்.

K. நாராயணமூதட் வகையரா—வாதிகள்

மனுதாரர்கள்—அப்பீல்வாதிகள்

v.

கொச்சி சர்க்கார் by கொச்சி திவான்

Mr. W. போர்—1-ம் பிரதிவாதி—ரெஸ்பான்டென்ட்.

நாராயணமூதட் v. கொச்சின் மஹாராஜா இ-லா-ரி. (1915) 38 ம 635-ல் மிஸ்டர் ஜஸ்டிஸ் டயாப்ஜி செய்த தீர்மானத்தின்பேரில் கொண்டுவரப்பட்ட லெட்டர்ஸ் பேடென்ட் அப்பீல் (Letters Patent Appeal) நெ. 133 to 135 of 1913.

லாப்பாயின்ட்:—ஒரு இந்தியராஜாவை மாகாண கவர்ன்மெண்டாரின் அனுமதியில்லாமல் ஒருவியாஜ்ஜியதில் பிரதிவாதியாக சேர்க்கலாமா ?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—கனம்பொருந்திய கொச்சி மஹாராஜாவை ஒரு வியாஜ்ஜியத்தில் (அவர் ஒப்புக்கொண்டாலும்) மாகாண கவர்ன்மெண்டாருடைய அனுமதியில்லாமல் பிரதிவாதியாய்ச் சேர்க்கலாகாதென்பது.

கேசின் விபரம் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் தீர்மானத்தில் நன்குவிளங்கும்.

லாயர்கள்:—மிஸ்டர் T. R. ராமச்சந்திரய்யர், Mr. N. R. கிருஷ்ணய்யர்—அப்பீல்வாதியின் வக்கீல்கள். Mr. C. V. அனந்தகிருஷ்ணையர்—ரெஸ்பான்டென்ட்டின் வக்கீல்.

ஹைக்கோர்ட்டார் தீர்மானம் - மிஸ்டர் ஜஸ்டிஸ் பீல்ட்:—சிவில் புரோசீஜர் கோட் 86-வது பிரிவின்படி மாகாண கவர்ன்மெண்டார் (Local Government) அனுமதியில்லாமல் கொச்சி மஹாராஜாவை இந்த வியாஜ்ஜியங்களில் பிரதிவாதியாய் சேர்த்தது கிரமம்தானாவென்பது இந்த கேசுகளில் முக்கியமான பாயின்ட். பிரதிவாதியாகிய மஹாராஜா அவருடைய வாதங்களை கேசில் தாக்கல்செய்து கேசை நடத்துவதற்கு ஆரம்பித்துவிட்டாராகையால் லோகல் கவர்ன்மெண்டார் அனுமதி பெறவேண்டுமென்பது அவசியமல்லவென்று எதிர்தரப்பார் கூறுகின்றார்கள். மஹாராஜா அவருடைய வாதத்தை தாக்கல்செய்து கேசை நடத்த ஆரம்பித்துவிட்டாராயினும் அவர் அப்படி செய்ததினாலேயே லோகல் கவர்ன்மெண்டார் அனுமதி வேண்டியதில்லையென்பதற்கு நியாயமில்லை; ஏனென்றால், இது விஷயத்தைப்பற்றி இங்கிலாந்தில் செலாவணியுள்ள சட்டம் இந்தியா சட்டத்திற்கு சம்பந்தப்படுமென்று நான் நினைக்கவில்லை. சந்துலால் v. அவாட்பின் உமார்சுல்தான் (1897) இ-லா-ரி 21 பம் 351-ல் இதற்கு விரோதமாய் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. பிரஸ்தாபகேசில் மகாராஜாவை நேராய் பிரதிவாதியாக தாவா செய்யப்படவில்லையென்றும் அவர் எந்த தேவாலயத்திற்கு அதிபதியாக விருக்கிறாரோ அந்த தேவாலயத்திலிருக்கும் தெய்வந்தான் பிரதிவாதியாக தாவா செய்யப்பட்டதென்னும் காரணத்தினால் ஷை சி-பு-கோ 86-வது பிரிவு இந்த கேசுக்கு சம்பந்தப்படாதென்றும் வாதிக்கப்பட்டது. ஆனால் இந்த கேசில் மஹாராஜாவின்பேரில் பரிகாரம் கேட்டிருப்பதால் இந்த வாதம் செல்லத்தக்க தல்லவென்று கண்டு அப்பீல்கள் செலவுடன் தள்ளுபடிசெய்யப்பட்டன.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர்:—மேலேசொல்லிய தீர்மானத்தை நான் பூராவாய் ஒப்புக்கொள்ளுகிறேன். இதுவிஷயமாய் இங்கிலாந்து கோர்ட்டுகளில் தீர்ப்பாயிருக்கும் கேசுகள் இந்த கேசுக்கு சம்பந்தப்படாது.

இதற்காதாரமாய் எடுத்துக்கூறிய கேசுகள்:—

1. (1916) இ-லா-ரி. 39 ம 24; சந்துலால் v. அவாட்பின் உமார்சுல்தான்.

2. (1881) இ-லா-ரி. 2 ம 407; பாரி அண்ட் கம்பெனி v. அப்பாசாமிபிள்ளை.

3. (1889) 6 I. L. R. 85; Boissieri v. Brockner.

4. (1913) 30 I. L. R. 511; Guiard v. De Clermont and Donner.

இ-லா-ரி 39 ம 661, 663. Narayana Moothad v. The Cochin Sirkar I.L.R. 39 Mad. 661, 663.

நெ. 9.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி.

கிரிமினல் ரிவிஷன் மனு நெ. 18 of 1915.

Re:—K. பரமேஸ்வரன் நம்பூதிரி—2-வது எதிரி

2-வது குற்றவாளி—மனுதாரன்.

லாப்பாயின்ட்:—கிரிமினல் தாப்பில் பிராதுகொடுக்கப்பட்டு அது வேறொருகோர்ட்டுக்கு மாற்றப்படுவதற்குமுன் சிவில் கோர்ட்டில் தாவா செய்யப்பட்டால் கிரிமினல் கோர்ட்டில் விசாரணை நடக்க சிவில் கோர்ட்டின் அனுமதி தேவையா ?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—ஒரு கடன் பத்திரத்தின்பேரில் ரூபா 1510 செல்லாய்விட்டதாக மோசமாக பொய்செல்லு வைக்கப்பட்டதென்று இரண்

டாவதுகிளாஸ் மாஜிஸ்ட்ரேட் எதிரில் கொண்டுவரப்பட்ட பிரியாதை அவர் முதல்கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் பயிலுக்கு மாற்றிவிட்டார். அந்த பிரியாது கொண்டுவரப்பட்ட தேதிக்கும், அது மாற்றிவிடப்பட்ட தேதிக்கும் மத்தியில் அந்த கடன்பத்திரத்தின்பேரில் சிவில் கோர்ட்டில் தாவாசெய்யப்பட்டது. கிரிமினல் புரோசிஜர் கோடின் (Act V of 1898) 195 வது பிரிவின்கீழ் சிவில் கோர்ட்டில் அனுமதி பெற்றுக்கொண்டுதான் கிரிமினல் பிரியாதை விசாரணை செய்ய வேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது.

மல்லாபுரம் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் காலெண்டர் கேஸ் நெ. 25 of 1914 (ஷை 1914ௌ நெ. 106-ல்) கிரிமினல் புரோசிஜர் கோடு (Act V of 1898) 435-வது 439-வது பிரிவுகளின்கீழ் ஹைகோர்ட்டில் கொண்டுவரப்பட்ட ரிவிஷன் மனு.

கேசின்விபரம் தீர்மானத்தில் காணலாம்.

லாயர்கள் :—மிஸ்டர் A. சிவராமமேனன்—மனுதாரின் வக்கீல். மிஸ்டர் N. கிரான்ட்—பப்ளிக் ப்ராசிக்யூடருக்காக ராஜாதரப்பில் ஆஜரானர்.

ஹைக்கோர்ட்டார் தீர்மானம் :—இந்த கேசில் மனுதாரர்களாகிய குற்றவாளிகள் எதிர்மனுதாரன் பேருக்கு எழுதிக்கொடுத்திருந்த கடன்பத்திரத்தின்கீழ் கொடுக்கவேண்டிய கடன் தொகைக்காக ரூபாய் 1500 செலுத்தினதாக 1912ௌ ஆகஸ்டுமீ த்தில் ஷை கடன்பத்திரத்தின்மேல் பொய்ச்செல்லு எழுதினதாக பிரியாது செய்யப்பட்டது. வாதியின் வாக்குமூலப்படி அப்படி யாதொரு தொகையும் செலுத்தப்படவில்லையென்றும் பிரியாதி (Complainant) ஷை பத்திரத்தின்கீழ் தனக்குச் சேரவேண்டிய தொகையை வசூல்செய்வதற்கு கோர்ட்டில் தாவாசெய்தால் ஷை பத்திரத்தின்மேலெழுதியிருக்கும் மேல்கண்ட பொய்ச்செல்லை ருஜுபடுத்தலாமென்கிற எண்ணத்துடன் மோசடியாய் அது எழுதப்பட்டதென்று பிரியாதில் சொல்லியிருந்தது.

பிரியாதி (Complainant):—(1) எதிரிகள் (குற்றவாளிகள்) பத்திரத்தின்மேல் பொய்ச்செல்லெழுதினதாகவும் (2) பத்திரத்திற்காக யாதொரு தொகையும் செல்லாக கொடுக்கப்படவில்லையென்றும் (3) குற்றவாளி ஷை பத்திரத்தின்கீழ் தாவாசெய்யப்பட்டால் அப்படி மோசடியாக எழுதப்பட்டிருக்கும் பொய்ச்செல்லை கோர்ட்டு நடவடிக்கையில் ருஜு செய்யலாமென்கிற எண்ணத்துடன் செய்யப்பட்டதென்று பிரியாதி (Complainant) ருஜு செய்யக்கூடியவனு யிருக்கும்பட்சத்தில் எதிரிகள் (குற்றவாளிகள்) இந்தியன் பினல்கோட் 192-வது பிரிவில் விவரிக்கப்பட்டிருக்கும் பொய்சாட்சியம்சிருஷ்டித்த குற்றத்தை செய்தவர்களாக ஷை இந்தியன் பினல்கோட் 193-வது பிரிவின்கீழ் தண்டனைக் குட்படவர்களாவார்கள். ஷை பத்திரத்தின்கீழ் பொய்ச்செல்லு எழுதுங்காலத்தில் எதிரி அந்த பத்திரத்தின்பேரில் சிவில் கோர்ட்டில் தாவாசெய்தால் அப்படி மோசடியாக எழுதிவைத்த பொய்ச்செல்லை ருஜுபடுத்தலாமென்கிற எண்ணத்துடன்தான் செய்திருக்கவேண்டுமென்று யூகிக்கும்பட்சத்தில் சிவில்கோர்ட்டில் தாவா செய்யாவிடினும் அவன் குற்றம்செய்தவனுகத்தான் ஏற்படும். இந்த கேசை பிரதமத்தில் 1914ௌ பிப்ரவரிமீ 20உ ஜாயின்ட் மாஜிஸ்ட்ரேட் எதிரில் தாக்கல் செய்தபோது அவர்கிரிமினல் புரோசிஜர் கோட் 195-வது (I-b) பிரிவின்படி ஷை கேசை தன்னுடைய பயிலிலெடுத்துக்கொண்டு விசாரணை நடத்தக்கூடுமா, கூடாதா வென்பதுதான் இந்த கேசில் முக்கியமாய் தீர்மானிக்கவேண்டிய அம்சமாயிருக்கிறது. அப்படி பிரதமத்தில் செய்யப்பட்ட பிரியாதை ஷை மாஜிஸ்ட்ரேட் தன்னுடைய பயிலில் தாக்கல்செய்துக்கொள்ள அதிகாரவரம்பு கிடையாதென்று என்னுடனிருக்கும் கற்றுணர்ந்த ஜட்ஜ் அபிப்பிராயப்படுவதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஆனல் 1914ௌ பிப்ரவரிமீ 20உக்கு முன்னமேயே ஷை கடன் பத்திரத்தின்பேரில் வலவனுடிஸ்ட்ரிக்ட் முனிசிபு கோர்ட்டில் 1912-ம் வருஷத்திய அசல் நெ. 257-ல் தாவாசெய்யப்பட்டு வாதி டிக்ரியும்பெற்று மேற்கண்ட 1914ௌ பிப்ரவரிமீ 20உ ஷை டிக்ரியின்பேரில் செய்யப்பட்ட அப்பீல் நெ. 40 of 1913 நடந்துக்கொண்டிருப்பதாய் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஷை அப்பீல் 1913ௌ அக்டோபர்மீ 13உ பைசல் செய்யப்பட்டது. ஷை கடன் பத்திரம் ஷை சிவில்கேசில் சாட்சியமாய் தாக்கல்செய்யப்பட்டது. அப்படிக்கிருக்க கிரிமினல் புரோசிஜர் கோட் 195 (I-b) பிரிவின்படி சிவில் கோர்ட்டாருடைய அனுமதி (Sanction) பெற்றுக்கொண்டுதான் ஷை கிரிமினல் பிரியாது செய்திருக்கவேண்டுமா, அல்லவா வென்பதுதான் இப்பொழுது நாங்கள் தீர்மானிக்கவேண்டிய முக்கிய அம்சமாயிருக்கிறது.

ஷை கடன் பத்திரத்தின்பேரில் மேற்கண்ட பொய்ச்செல்லெழுதுங்காலத்திலாவது அல்லது குற்றம் செய்ததாக சொல்லப்படும் காலத்திலாவது ஷை சிவில் தாவா செய்யப்படவில்லையென்பதை ஆதாரமாய்க்கொண்டு அப்படிப்பட்ட அனுமதி (Sanction) அவசியமல்ல வென்று எங்களெதிரில் வாதிக்கப்பட்டது. இவ்விதமான வாதத்தை நான் ஒப்புக்கொள்ள நியாயம்கிடையாது. ஏனென்றல் குற்றவாளிகளை அனுவசியமாய் ஆதாரமின்றி குற்றம் சாட்டி அநேக காலமாய் கிரிமினல் கோர்ட்டாருடைய காலத்தைக் கழிக்கலாகாதென்பதையும் குற்றவாளிகளை முறட்டுத்தனமாய் நடத்தலாகாதென்பதையும் கவனித்துதான் ஷை பிரிவில் சொல்லியிருக்கும் நிபந்தனைசெய்யப்பட்டிருக்கின்றது. அந்த பிரிவின் (கி-பு-கோ 195

(I-b) கருத்தை நோக்குமளவில் ஒரு கிரிமினல் பிரியாது செய்யப்படுவதற்குமுன் குற்றம் செய்யப்பட்டதா இல்லையாவென்று ஒரு நியாயமாய் ஏற்பட்டிருக்கும் சிவில் நியாய விசாரணை கோர்ட்டார் கண்டு அப்படிப்பட்ட குற்றத்தை ஒரு கிரிமினல் மாஜிஸ்ட்ரேட் தீர விசாரணை செய்ய வேண்டியதுதானென்று அவர்களுக்குத் தோன்றி அவர்கள் சர்ட்டிபிகேட் கொடுத்தாலொழிய கிரிமினல் கோர்ட்டார் அப்படிப்பட்ட கிரிமினல் பிரியாதை தாக்கல் செய்துகொண்டு விசாரணை நடத்தலாகாதென்று ஏற்படுகிறது.

ஆகையால் சிவில் கோர்ட்டில் விசாரணை நடந்து கொண்டிருக்கையிலேயே முன்னதாகவே இப்படிப்பட்ட பொய் சாட்சியத்தை சிருஷ்டித்து கொண்டுவரப்பட்ட கிரிமினல் பிரியாதின் விஷயமாய் ஏன் இந்த நிபந்தனையை சம்பந்தப்படுத்தலாகாதென்பதற்கு எனக்கு யாதொரு காரணமும் தோன்றவில்லை; அனுமதி பெற்றுதான் பிரியாது செய்யவேண்டுமென்று சந்தேகமின்றி சொல்லலாம். மேற்படி பிரிவில் சொல்லியிருக்கும் நடவடிக்கையை அனுமதி பெற்றுதான் செய்யவேண்டுமே யல்லாமல் மற்றபடிக்கல்லவென்று வாஸ்தவமாய்க் கூறவேண்டியதாயிருக்கிறது; இல்லாவிடில் 195-வது பிரிவில்செய்யப்பட்டிருக்கும் நிபந்தனை நிஷ்ப்பிரயோஜனமாய் விடுமாகையால் இந்த கேசில் சிவில் கோர்ட்டாருடைய அனுமதி (Sanction) பெற்றுதான் பிரியாது செய்திருக்க வேண்டு மென்பது அவசிய மென்று நான் அபிப்பிராயங்கொண்டு மேற்படி பிரியாதைஜாயின்ட் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் தள்ளுபடி செய்திருக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறேன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி:— இந்த கேசில் மல்லாபுரம் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் அவர்கள் 1914-மௌ எப்ரல்மீ 23-தேதி கிரிமினல் புரோசிஜர் கோட் 195-வது பிரிவின்படி அனுமதி (Sanctoin) பெருமலேயே பிரியாதை தாக்கல்செய்துகொண்டு விசாரணை நடத்தலாமென்று தீர்மானித்துசெய்திருக்கும் உத்தரவை புனர்விசாரணை செய்யும்படிக்கு (Revise) எங்களெதிரில் இநத ரிவிஷன்மனு கொண்டுவரப்பட்டது. இந்தகேசில் சிவில் கோர்ட்டார் அனுமதி யில்லாமலேயே கிரிமினல் கோர்ட்டில் விசாரணை நடத்தலாமென்பதற்கு ஆதாரமாய் நூர்மகமத் v. கெய்கோஸ்ரு (1902) 4 ப-லா-கி 268; லால்டாபிரசாத் v. ராஜா—சக்கிரவர்த்தி (1912) 10 அ-லா-ஜ 294; கிரிதாரிமார்வாரி v. ராஜா—சக்கரவர்த்தி (1908) 12 க-வீ-நோ. 822; தெனிஷா v. போலாஹிஷா (1902) 14 க-வீ-நோ 479 இந்த கேசுகள் எடுத்துக்கூறப்பட்டன. ஆனல் மேற்கூறிய கேசுகளெல்லாம் கிரிமினல் புரோசிஜர் கோட் 195 (1-c) பிரிவின்கீழ் கொண்டுவரப்பட்ட கேசுகளுக்குத்தான் சம்பந்தப்படுமே யல்லாமல் 195 (1-b) பிரிவின்கீழ் செய்யப்படும் பிரியாதுகளுக்கு சம்பந்தப்படமாட்டாதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆகையால் சிவில் கோர்ட்டாருடைய அனும்தி (Sanction) யில்லாமல் இந்த கேசை கிரிமினல்கோர்ட்டார் விசாரணைசெய்ய நியாயமில்லையென்று நான் தீர்மானிக்கிறேன்.

இ-லா-ரி 39 ம 677. Parameswara Numbudri v. King Emperor I. L. R. 39 Mad. 677.

நெ. 10.

ஜட்ஜிகள்:— { சீப் ஜஸ்டிஸ் சர் ஜான் வாலிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சீனிவாசய்யங்கார். }

அப்பீல் நெ. 75 of 1914.

G. நாராயணசாமி நாயுடு கிட்டவோல் மெதூர் எஸ்டேட்டுகளின் ரிஸீவர்—வாதி—அப்பீல்வாதி.

v.

N. சுப்பிரமணியம்—பிரதிவாதி—ரெஸ்பான்டென்ட்

லாப்பாயின்ட்:—எஸ்டேட் லாண்ட் ஆக்டின்படி ஒரு இனம் கிராமம் எஸ்டேட்டா (பூஸ்திதியா)? தெய்வத்திற்காக விடப்பட்ட சர்வ அக்ரஹாரம் இனமாக பாவிக்கப்படுமா? பூஸ்திதியுடையவன் என்பதில் ஒரு ரிஸீவரும் அடங்கியுள்ளதா?

வியாஜ்ஜிய சங்கிரகம் :—அநேக சிறிய இனங்கள் சேர்ந்த ஒரு இனம் கிராமமுழுதும் மதாராஸ் எஸ்டேட்ஸ் லான்ட் ஆக்டின் (Madras Estates Land Act-I of 1908) 3-வதுபிரிவின் (d) உட்பிரிவின் தாத்பரியத்தின்படி ஒரு எஸ்டேட்தானென்றும்; ஒரு கிராமம் தெய்வத்திற்காக தீர்வையில்லாமலேயே சர்வ அக்ரஹாரமென்று சொல்லப்படுமானல் அப்படிப்பட்ட கிராமம்முழுவதும் தெய்வத்திற்காக முழு இனம் கிராமமாய் கொடுத்து விடப்பட்டதாக பாவிக்கப்படவேண்டு மென்றும்; ஷை ஆக்டின் 6-வது பிரிவில் சொல்லியிருக்கும் "பூஸ்திதியுடையவன் (Land-holder)" என்பதனல் ஒரு எஸ்டேட்டை பரிபாலனம் (Manage) செய்வதற்காக நியமிக்கப்படும் "ரிஸீவர்" (Receiver) அந்தபூஸ்தியுடையவன் என்பதில்தான் சேர்ந்து அர்த்தம் செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

எல்லூர் டெம்பொரெரி சப் ஜட்ஜ் கோர்ட் அசல் நெ. 33 of 1913-ல் செய்யப்பட்ட டிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல் கேசின் விபரம் தீர்மானத்தில் காணலாம்.

லாயர்கள்:—P. நாகபூஷணம்பந்துலு, அப்பீல் வாதியின் வக்கீல். P. நாராயண மூர்த்தி, ரெஸ்பான்டென்டின் வக்கீல்.

ஹைக்கோர்ட்டார் தீர்மானம் - மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்ரீனிவாசய்யங்கார்:—கிட்டவோல் எஸ்டேட்டின் ரிசீவராகிய வாதி, பிரதிவாதிக்கு 1320-ம் பசலியில் குத்தகையாய் விட்டிருந்த சில நிலங்களை தனக்கு சுவாதீனப்படுத்தும்படிக்கும் மாசூலுக்கும் தாவா செய்தார். வாதி ஷை நிலங்களை பிரதிவாதிக்கு ஒரு வருஷத்திற்கு மாத்திரம் குத்தகையாய் விட்டதாகவும் அவர் (பிரதிவாதி) அந்த நிலங்களை ஒரு வருஷத்திற்கு அதிகமாகவே அனுபவித்து வருவதாகவும் தாவாவில் சொல்லியிருக்கிறார். பிரதிவாதி எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின் 6-வது பிரிவின்படி அந்நிலங்களை தானே அனுபவித்து வரும்படியான சுதந்தரம் தனக்குண்டாயிருக்கிறதென்று வாதித்தார். கீழ்கோர்ட்டார் ஷை நம்பரை தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி இந்த அப்பீல் செய்தார். எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 3-வது பிரிவு 2-வது உட்பிரிவு (d) கிளாஸின் (Clause) தாத்பரியப்படி தாவா நிலங்களிருக்கும் வெங்கடாபுரம் அக்கிரஹாரம் ஒரு எஸ்டேட் (பூஸ்திதி) என்று சொல்லப்படுமா வென்பதுதான் முக்கியமாய் இந்தகேசில் தீர்மானிக்கவேண்டிய அம்சம். வெங்கடாபுரம் அக்ரஹாரமென்பது பால வெங்கடேஸ்வரசுவாமி அவர்களுக்கு முன்னிருந்த நூஜ்விட் ஜெமீந்தாரால் இனம் கிராமமாக கொடுக்கப்பட்டதாகத் தோன்றுகிறது.

வெங்கடாபுர அக்ரஹார ஸ்ரீ பால வெங்கடேஸ்வரசுவாமி அவர்களுக்கு தீர்வையில்லாமல் கொடுக்கப்பட்ட சர்வ அக்ரஹாரமென்று பூர்வகாலத்திலிருந்து அநேககாலமாய் இந்தகேசில் தாக்கலாயிருக்கும் தஸ்தாவெஜுகளில் செப்பியிருக்கின்றன. (1268-ம் பசலி ஜமாபந்திகணக்கு H குறிப்பிட்டிருக்கும் தஸ்தாவெஜைப்பார்க்கவும்.) இதனால் வெங்கடாபுரம் கிராமம்முழுவதும் ஷை தேவாலயத்திற்கு இனமாய் கொடுத்துவிடப்பட்ட கிராமமென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகிறது. ஆயினும் இந்தக்கிராமத்தில் இன்னும் சில சிறிய இனம்களு மிருக்கின்றன. அவைகள் மூன்றுவிதமான இனம்களாகத் தோன்றுகின்றன. (1) அர்ச்சகத்தொழில் இனம்கள் (2) கிராமத்தொழில் இனம்கள் (3) தர்ம தயா இனம்கள். மேற்கண்ட தேவாலய இனம் முந்தியதா அல்லது மேற்கூறிய சிறிய (Minor) இனம்கள் முந்திக் கொடுக்கப்பட்டனவா வென்பது புலப்படவில்லை. இதே கிராமத்தில் சில சிறிய (Minor) இனம்களு மிருப்பதனால் ஷை எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின் 3-வது பிரிவு 2 (d) உட்பிரிவின் தாத்பரியப்படி வெங்கடாபுரம் கிராமம் தீர்வையில்லாமல் இனமாகக் கொடுக்கப்பட்ட கிராமமாக சொல்லப்படாதென்று வாதிக்கின்றார். அவருடைய வாதத்திற்கு ஆதாரமாய் அவர் சொல்வதென்னவென்றால், மேற்படி கிராமத்தில் சில நிலங்களை வேறு சில நபர்களுக்கு தீர்வையில்லாமல் இனமாய் கொடுக்கப்பட்டிருப்பதால் அந்த கிராமத்தின் தீர்வையை மேற்படி தேவாலயத்திற்குதான் செலுத்திவரவேண்டுமென்று சொல்லுவதற்கு நியாயம் கிடையாதென்று சொல்லுகிறார். இந்த வாதத்தை ஒப்புக்கொள்ள எங்களுக்கு ஹேது ஒன்றும் தோன்றவில்லை. எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 2-வது பிரிவு (d) உட்பிரிவில் சொல்லியிருக்கும் விவரணப்படி மைனர் இனம்களென்று சொல்லப்படும் சில இனம் நிலங்களின் ஜக்பந்திகளைக்குறித்துக்காட்டி முழுகிராமத்திலிருந்து அவைகளைத் தனியாய் விவரிக்கப்பட்டிருப்பதால் அப்படிப்பட்ட மைனர் இனம்களைப்பற்றி ஷை பிரிவில் சொல்லப்படவில்லை. முழு இனம் கிராமத்தில் இவ்விதமான இனம் நிலங்களிருப்பது சகஜம்தான். இப்படிப்பட்ட சிறிய மைனர் இனம்கள் எஸ்டேட்டுகளென்று சொல்வதற்கிடமில்லாவிடில் அக்ரஹாரம், சுரோத்தியம், மொகாசா கிராமங்களும் எஸ்டேட்டுகளல்லவென்றுதான் சொல்லவேண்டும். சட்டநிரூபணசபையார் சட்ட மேற்படுத்திய காலத்தில் இவ்விதமாக எண்ணிதான் செய்திருப்பார்களென்று சொல்வதற்கு கிஞ்சித்தேனும் நியாயம்கிடையாது. சாதாரணமாய் இந்த சிறிய (மைனர்) இனம்களெல்லாம் கிராமத்தில் செய்யும் தொழில்களுக்காவது அல்லது பூஸ்திதிக்காரருக்காவது கொடுக்கப்படும் இனம்கள். இந்த கேசில் கொடுக்கப்பட்ட சிறிய இனம்களும் அதைப்போலிருப்பதாகவே தோன்றுகின்றன. இந்த கேசில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் தஸ்தாவேஜுகளிலெல்லாம் ஷை தேவாலயத்தை முழுகிராமத்திற்கும் சுதந்தரமுள்ளதாக செப்பியிருக்கின்றது. ஆகையால் சில நிலங்களின் தீர்வை மாத்திரம் தேவாலயத்திற்குச் சேரவேண்டியதென்னும் அம்சத்தை ருஜு செய்யவேண்டியது வாதியினுடைய பொறுப்பாயிருப்பதால் அவன் இனம் ரிஜிஸ்தரை அத்தாக்ஷியாய் தாக்கல் செய்துதான் சொல்லும் வாதம் வாஸ்தவம்தானென்று ருஜு செய்யவுமில்லை. ஆகையால் இந்த வாதத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

இந்த கேசில் இனம்தாராகிய தேவாலயம் ஷை கிராமம் இனமாய்க் கொடுக்கப்பட்டகாலத்தில் குடிவாரத்திற்கு சுதந்தரமுள்ளதல்லவென்றும் ருஜு செய்யப்படவில்லையாதலால் இந்த கேசு எஸ்டேட் (Estate) டின் விவரணத்திற்குள்ளடங்காதென்றுதான் சொல்லவேண்டும். இந்தக்கேசில் ருஜுசெய்யப்பட்டிருக்கும் சாக்ஷியத்தினால் ஷை கிராமம் இனமாய்க் கொடுக்கப்பட்டகாலத்தில் ஷை இனம்தாராகிய தேவாலயத்திற்கு குடிவார சுதந்தரம்கிடையாதென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. ஆகையால் ஷை இனம் அல்லது அக்ரஹாரம் தாராகிய ஸ்ரீ பால வெங்கடேஸ்வரசுவாமியின் வெங்கடாபுர அக்ரஹாரம் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின் (Estates

Land Act-1 of 1908) 3-வது பிரிவு 2-வது உட்பிரிவு (d) கிளாசின் தாத்பரியத்திற் குள்ளானதுதானென்று சொல்லவேண்டும். அப்பீல் வாதியின் வக்கீல் Mr. P. நாகபூஷணம் என்பவர் தாவா நிலங்கள் குடியானவர்கள் பயிரிடும்படியான "ரயத்தி-Ryoti" நிலங்களல்லவென்றும், ஆனால் அவைகள் பயிரிடப்படாத "பழயகரம்பு, அல்லது தரிசு Old-waste" நிலங்களென்றும் வாதிக்கின்றார். பிரதிவாதி இந்த தாவா நிலங்கள் விஷயமாய் எழுதிக் கொடுத்திருந்த B. குறிப்புள்ள 'முசசிலிக்காவில்' இந்நிலங்களை "ஜியோரயத்தி Jeyorayati" நிலங்களென்று செப்பியிருக்கிறார். இந்த முச்சிலிக்கைக்கு முன்னெழுதிக் கொடுக்கப்பட்ட IX குறிப்புள்ள தஸ்தாவேஜில் இதே நிலங்களை "மாமூல் நஞ்சை - Mamool-wet" நிலங்களென்று சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்நிலங்கள் "பழயகரம்பு அல்லது தரிசு-Old waste" நிலங்களல்லவென்றும் அவைகள் "ரயத்தி - Ryoti" நிலங்கள் தானென்றும் தீர்மானிக்கிறோம். லாண்ட் எஸ்டேட்ஸ் ஆக்டின் 6-வது பிரிவின்படி இந்தகேசில் நியமிக்கப்பட்டிருக்கும் "ரீஸீவர்-Receiver" "பூமிக்குடையவன்-Land-holder" என்று சொல்ல நியாயமில்லையென்று வாதித்தார். ஷை ஆக்டின்கீழ் 3-வது பிரிவின் தாத்பரியப்படி வாதி ஒரு 'பூமிக்குடையவன்-Landholder' என்றுதான் பாவிக்கப்படுவானென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் ஒரு எஸ்டேட்டின் லாபத்தைச் சொந்தமாயடைவதற்கு ஒருவனுக்கு சுதந்தரமில்லாவிடில் அவனை ஷை ஆக்டின் 6-வது பிரிவின்படி "பூமிக்குடையவன Land-holder" என்று சொல்வதற்கு நியாயமில்லையென்று வாதிக்கப்பட்டது. அந்த பிரிவில் சொல்லியிருக்கிறபடி "பூமிக்குடையவன்" விஷயமாய் அப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள சொல்வதற்கு யாதொருகாரணமு மிருப்பதாக எங்களுக்குத் தோன்றவில்லை. நிலங்களை பரிபாலனம் செய்யும் விஷயமாய் பூமிக்குடையவனுக்கு என்ன அதிகாரங்களுண்டோ அந்த அதிகாரங்களெல்லாம் ரிஸீவருக்கு முண்டென்றும், பயிரிடும் நிலங்களை குத்தகைக்குவிடும் அதிகாரமும் அந்த நிலங்களை பரிபாலனம் செய்வதி லடங்கியதுதானென்றும், நாங்கள் சொல்லவேண்டும். ஆகையால் கீழ்க்கோர்ட்டாருடைய தீர்மானத்தை நாங்கள் சரிதானென்று மஞ்சூர் செய்துகொண்டு இந்த அப்பீலை சிலவுகளுடன் தள்ளுபடி செய்கின்றோம்.

இ-லா-ரி. 39 ம 683. G. Narayanasawmy Naidu v. N. Subramanyam I. L. R. 39 Mad. 683.

நெ. 11.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். / மிஸ்டர் ஜஸ்டிஸ் டயாப்ஜி. }

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 356 of 1915.

(Referred Case. No 39 of 1915.)

லாப்பாயின்ட்:—இந்தியன் எலெக்ட்ரிஸிடி ஆக்டின் 33-வது பிரிவில் கண்டிருக்கும் "ஒவ்வொரு நபரும்" என்பது அதன் 2,3-வது பாகங்களின்கீழ் லைசென்ஸ் பெற்றிருப்பவர்களுக்கும் சம்பந்தப்படுமா ?

வியாஜ்ஜிய சங்கிரகம்:—இந்தியன் மின்சாரத்தைப்பற்றிய (இலெக்டிரிஸிடி) ஆக்டின் (Indian Electri-city Act) 33-வது பிரிவில் "ஒவ்வொரு நபரும்-Every Person" என்று சொல்லப்பட்டிருக்கும் மொழி மேற்படி இலெக்ட்ரிஸிடி ஆக்டின் 2, 3-வது பாகங்களின் (Parts II. & III.) கீழ் லைசென்ஸ் பெற்றிருப்பவர்களுக்குமாத்திரம் சம்பந்தப்படாதென்பது.

தற்செயலாய் ஒரு அபாயம் நேரிடுவதினால் யாதோ சில ஜனங்களுக்கு உபத்திரவம் அல்லது மரணம் நேரிட்டால்தான் மேற்படி ஆக்டின் 33-வது பிரிவின் நிபந்தனை சம்பந்தப்படுமென்று சொல்வது சரியல்லவென்றும், அந்தபிரிவின் நிபந்தனை அப்படி தற்செயலாய் அபாயம் நேரிடுவதினால் மரணம் அல்லது உபத்திரவ முண்டாக்கக்கூடிய தென்பதற்கும் சம்பந்தப்படுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கிரிமினல் புரோசீஜர் கோட் (Act V of 1898) 432-வது பிரிவின்கீழ் மதராஸ் நான்காவது பிரெசிடென்சி மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் எல். ஏ. காம்மயட் (Mr. L. A. Cammiade) என்பவர் ஹைக்கோர்ட்டார் உத்தரவிற்குத் தெரிவிக்கப்பட்ட கேஸ் விஷயமாய் (Referred Case.) அவர் ஹைக்கோர்ட்டாருக்கு எழுதியகடிதத்தில் அவர் தெரிவித்த விஷயங்களை இதனடியில் காணலாம்:—

"கிரிமினல் புரோசீஜர்கோட் 432-வது பிரிவின் நிபந்தனைகளின்படி இந்தகேசில் ஏற்படும் லாபாயின்டுகளை ஹைக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அதி வினயத்துடன் தெரிவிக்கின்றேன்.

"சென்ற 1916ஹு மார்ச்சுமீ 17உ இந்தியன் அலுமினியம் கம்பெனி லிமிடெட்டில் (Indian Aluminium Company, Limited) வேலை நடந்துக்கொண்டிருக்கும்போது ஒரு அபாயகரமான விபத்து நேரிட்டதாக ஷை கம்பெனியின் ஜெனெரல் மானேஜர் (General Manager) மிஸ்டர் ஹாகின்ஸ் (Mr. Hawkins) என்பவர் மதராஸ் கவர்ன்மென்ட் இலெக்டிரிக் இன்ஸ்பெக்டருக்கு வெளிப்படையாய் எழுதித்

தெரிவிக்கவில்லையென்று ஷை இந்தியன் இலெக்ட்ரிசிடி ஆக்ட் 33 (1) வதுபிரிவின்கீழ் குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்கு கொண்டுவரப்பட்டார்.

"அவர் எழுதி அனுப்பின பிரியாதில் (Written Complaint) இலெக்டரிக் இன்ஸ்பெக்டர் அப்படி நேரிட்ட அபாயகரமான சம்பவத்தைப்பற்றி அவர் ஏப்ரல்மீ 9உ-தான் கேள்விப்பட்டு அவர் ஷை ஜெனெரல் மானேஜரை கேட்டதில், அவர் (General Manager) மின்சாரமுண்டாக்கும் யந்திரத்திலுள்ள B. H. P. 66-வது நெம்பருள்ள இஞ்ஜினோடு சேர்க்கும் கம்பியின் பெரிய முனையிலுள்ள இரண்டு தாள்களில் ஒன்று, உடைந்து இஞ்ஜினோடு சேர்க்கும் பெரியகம்பியையும், பிஸ்டனையும் (Piston) வேறுபடுத்தி ஷிமொக்கி தளர்த்திவிட்டபடியால் முழுயந்திரத்தின் (Engine) பெரும்பாகமும் பூராவாய் உடைந்து கிராங்க்கார்ட் (Crank guard) இரண்டுதுண்டாய் உடைந்து, பறந்துபோன துண்டு அருகாமையில் வேலை செய்துக்கொண்டிருந்த ஒரு மனிதன்பேரில் பட்டு காயப்படுத்தி உபத்திரவமுண்டாக்குவதற்கு கிஞ்சித்து தவறிற்றென்று சொன்னாராம்.

"எதிர்தரப்பார் ஷை இலெக்ட்ரிக் இன்ஸ்பெக்டர் விவரித்து எழுதினபிரகாரம் அபாயகரமான விபத்து நேரிட்டது வாஸ்தவம்தானென்றும் அதை இன்ஸ்பெக்டருக்கு எழுதித் தெரிவிக்கவில்லையென்பதும் உண்மைதானென்றும் ஒப்புக்கொண்டு, ஆனால் இஞ்ஜின் உடைந்துப் பறந்தோடின ஒரு துண்டு அருகாமையில் வேலை செய்துக்கொண்டிருந்த ஒரு மனிதன்பேரில் பட்டு காயப்படுத்தி உபத்திரவ முண்டாக்குவதற்கு கிஞ்சித்து தவறிற்றென்று எழுதியிருப்பது வாஸ்தவமல்லவென்று எதிர்வாதம் கூறினார்கள்.

"ஆயினும் இதுமாத்திரம் அவர்களுடைய முக்கியமான எதிர்வாதங்களல்ல. அவர்களுடைய எதிர்வாதத்தில் அவர்கள் முக்கியமாய் கூறினதென்னவென்றால் (1) ஷை அபாயகரமான விபத்தை மேல் அதிகாரிக்கு தெரிவிப்பதில் (Report) தனக்கு யாதொரு ஆட்சேபனை கிடையாதென்பதும் (2) அப்படி நேரிட்ட ஒரு அபாயகரமான விபத்து ஷை இலெக்ட்ரிசிடி ஆக்ட் 33-வது பிரிவின்கீழ் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனையின் தாத்பரியத்திற் குட்பட்டதல்லவென்பதும்தான்.

"இந்த கேஸில் கூறப்பட்டிருக்கும் முதல்பாயிண்ட் மின்சாரத்திற்காக இலெக்ட்ரிக்தொழில்செய்யும் யந்திரத்தை (Engine) உபயோகிக்கும் எல்லா நபர்களுக்கும் ஷை இலெக்ட்ரிக் ஆக்ட் சம்பந்தப்படாதென்றும் ஷை ஆக்டின் 1, 2-பாகங்களின் (Parts I & II) கீழ் லைசென்ஸ் பெற்றிருப்பவர்களுக்குமாத்திரம்தான் சம்பந்தப்படுமென்பதுதான் அவர்களுடைய வாதங்களுக்கு முக்கியமான ஆதாரமாயெடுத்துக் கூறப்பட்டது. மேற்படி இந்தியன் அலுமினியம் கம்பெனியார் மேற்படி ஆக்டின் இரண்டாவது (Part II) பாகத்தின்கீழ் செப்பியிருக்கும் லைசென்ஸ்தாரர்களல்ல; மேற்படி ஆக்டின் 30-வது பிரிவின்கீழ் சொல்லியிருக்கும் லைசென்ஸும் அவர்களிடத்தில் கிடையாது. ஆனால் ஷை ஆக்டின் 33-வது பிரிவில் செப்பியிருக்கும் நிபந்தனையைமீறி நடந்ததாக கொண்டுவரப்பட்ட இந்த குற்றத்தை (prosecution) ஏன் இவ்விதமாய் அவர்கள் சொல்லும் பேச்சுக் குட்பட்டதென்று அர்த்தம் செய்யவேண்டுமென்பதற்கு எனக்குயாதொரு முகாந்தரமும் தோன்றவில்லை. அந்தப் பிரிவில் சொல்லியிருப்பதென்னவென்றால்:—ஒருதொழிற்சாலையில் உபயோகப்படுத்தும் யந்திரத் (Engine) தில் மின்சாரத்திற்காக வேலைசெய்யும்போது நேரிட்ட அபாயகரமான விபத்தினால் ஒருவனுக்கு பிராணச்சேதம் நேரிடுமென்பதைப்பற்றியாவது அல்லது அந்தநபர் செய்யும்வேலைகளில் யாதோ ஒரு தொழிலினால் தேக உபத்திரவ முண்டாக்கக்கூடியதென்பதைப்பற்றியாவது "ஒவ்வொரு நபரும்-Every person" முன்னமேயே அறிக்கைசெய்து நோட்டீசனுப்பவேண்டியது. மின்சாரத்திற்காக (Electricty) வேலைசெய்பவர்கள் உபயோகிக்கும் கருவியினால் அபாயகரமான விபத்து நேரிட்டால் ரிப்போர்ட் செய்யவேண்டுமென்பதற்கு அவர்கள் எவ்வளவு வலுவுள்ள கருவியை உபயோகித்தார்களென்பது அனாவசியமென்று எனக்கு ஸ்பஷ்டமாய் தோன்றுகின்றது. அப்படி நேரிடும் அபாயகரமான விபத்தினால் பிராணச்சேதம் நேரிட்டாலும் அல்லது உபத்திரவ முண்டாக்குவதற்கு ஹேதுவாயிருந்தாலும் அந்த விபத்தை இலெக்ட்ரிக் இன்ஸ்பெக்டருக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டிய கடமையிருக்கின்றது. இந்தியன் பாக்டரீஸ் ஆக்டின்படிக்கும் (Indian Factories Act) அதை பாக்டரி இன்ஸ்பெக்டருக்கு ரிபோர்ட்டுசெய்யவேண்டியது அவசியம்தான். இவ் விஷயங்களைப்பற்றி சந்தேகமின்றி தீர்ப்புசொல்வதற் கிடமில்லை.

"இரண்டாவதுவாதம் தேக உபத்திரவ முண்டாக்கக்கூடிய 'அபாயகரமான விபத்தென்பதை-Accident' எவ்விதமாய் அர்த்தம்செய்யவேண்டுமென்பதுதான். எதிர்தரப்பார் பாக்டரியில் வேலைசெய்யும் யாருக்காவது உபத்திரவ முண்டாக்கக்கூடியதுதானென்றும் அல்லது ஒருவனுக்கு மரண முண்டாக்கத்தக்கதுதானென்றும் அர்த்தம் கொள்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால் யாருக்காவது துன்பம் நேரிட்டாலொழிய ஒரு அபாயகாரமான விபத்தினால் ஒருவனுக்குத் தேக உபத்திரவ முண்டாக்கக்கூடியதென்று சொல்ல முடியாதென்று வாதிக்கப்பட்டது. ஷை இலெக்ட்ரிஸிடி ஆக்டிற்கு ஒரு வருஷத்திற்குப்பின் ஜாரி செய்யப்பட்ட பாக்டரீஸ் ஆக்டில் (Factories Act) யாருக்காவது தேக உபத்திரவம் நேரிட்டால்தான் ரிபோர்ட்டு செய்யவேண்டுமென் றிருக்கிறதென்றும் எதிர்வாதம் கூறினர். யந்திரத்தினால் தற்செயலாய் நேரிடும் விபத்து மிக்க அற்பமானதாயிருந்தாலும் அது சுற்றிலுமிருக்கும் நபர்களுக்கு யாதோ ஒரு தேக உபத்திரவத்தை உண்டாக்கக்கூடியதாய்த்தானிருக்கும். அப்படிப்பட்ட விபத்தான விஷயங்களுக்கு ஷை பிரிவு சம்பந்தப்படாதென்று வாஸ்தவமாய்ச் சொல்லவேண்டும். ஆகையால் அந்தப் பிரிவில் சொல்லியிருக்கும் விபத்தென்பது (Accident) ஒருவனுக்கு தேக உபத்திரவம் அல்லது பிராணச்சேதம் நேரிட்டால்தான் 'அபாயகரமான விபத்தென்று' சொல்லப்படுமேயல்லாமல் மற்றபடி யெல்லா விபத்துகளுக்கும் ஷை பிரிவு சம்பந்தப்படாதென்று வாதித்தார். இவ்விதமான எதிர் வாதங்களை ஒப்புக்கொண்டால் உபத்திரவம் "நேரிட்டிருக்கக் கூடியதென்று-Likely to have resulted" என்று 33-வது பிரிவில் சொல்லியிருக்கும் பதங்களை நிவர்த்திசெய்துவிடவேண்டியதாய்விடும். இதுவுமன்றி தற்செயலாய் நேரிடும் "விபத்து-Accident" என்று சொல்லியிருக்கும் பதம் அந்த பிரிவின் முன்பின் தொடர்ச்சியின் தாத்பரியத்திற்கும் விரோதமாயிருக்கும். ஆனால் "உண்டாக்கக் கூடியதாயிருக்கும்" என்னும் பதத்தைச் சரியாய் அர்த்தம்செய்வது மிக்க கஷ்டமாய்த்தானிருக்கிறது. சந்தர்ப்பங்களின்பேரில் ஒரு விபத்து நேரிடுமென்பது நிச்சயமாய் தெரிந்தால்தான் "விபத்து நேரிடக் கூடியதென்று" சொல்லவேண்டியதாகும். ஒரு பாக்டரியில் யந்திரத்தினால் நேரிடும் விபத்தென்பதனால் அருகாமையில் வேலைசெய்யும் நபர்களுக்கு தேக உபத்திரவ முண்டாக்குமா அல்லது உண்டாக்கக்கூடியதா என்பதைத் தீர்மானிக்கவேண்டியதற்கு யோசிக்கவேண்டிய விஷயங்கள்மிக்க சந்தேகத்தையும் கலவரத்தையும் விளைவிக்கக் கூடியதாயிருப்பதால் அதைத் தீர்மானிப்பதில் பாக்டரி தொழில்களில் தேர்ந்தவர்கள்கூட ஒருவருக்கொருவர் பேதிக்கும்படியான தாத்பரியம் கொள்வார்கள். பிரஸ்தாப கேஸில் கூட தற்செயலாய் ஒரு விபத்து நேரிடக்கூடிய சந்தர்ப்பங்களிருந்ததாக இலெக்ட்ரிஸிடி ஆக்ட் இன்ஸ்பெக்டர் சொல்லமுடியாது. கேஸில் சொல்லியிருக்கும் சந்தர்ப்பங்களினால் தேக உபத்திரவங்களுண்டாக்கக்கூடிய தற்செயலான விபத்தென்று சொல்வதற்கிடமிருந்தால் அந்த விபத்தினால் தேக உபத்திரவ முண்டாக்கக் கூடியதுதானென்று சொல்ல முடியாதென்பதாய் நான் அபிப்பிராயப்படுகிறேன்.

ஆனால் அப்படி அர்த்தம் செய்வதினால் ப்ராசிக்யூஷன் தரப்பார் மிக்க கலவரத்துடன் பேதித்து அர்த்தம் சொல்லக்கூடியதொழிலில் தேர்ந்தவர்களுடைய சாக்ஷியத்தை ருஜு செய்யவேண்டியதாயிருக்கும்.

லாயர்கள்:—Mr. பாட்ரிட்ஜ்—எதிரியின் (குற்றவாளியின்) வக்கீல். Mr. J. C. ஆடெம்—க்ரவுன் ப்ராசிக்யூடர்—ராஜா தரப்பில் ஆஜரானார்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் எப்லிங்:—என்பவர் பின்வருமாறு உத்திரவு பிறப்பித்தார்.

இந்த கேசை எங்களுடைய அபிப்பிராயத்திற்குத் தெரிவித்ததில் ப்ரெசிடென்சி மாஜிஸ்ட்ரேட் (Presidency Magistrate) கேஸில் என்ன லாபாயின்டின் விஷயமாய் தனக்குத் தெரிவிக்கும்படி கோறுகிறாரோ அவர் அதை எங்களுக்கு தெளிவாய் விவரித்துத் தெரிவித்திருக்கவேண்டும். அவருடைய கடிதத்தில் அவர் சொல்லியிருக்கும் விஷயங்களை நாங்கள் யோசிக்குமளவில் இரண்டு லாபாயிண்டுகள் ஏற்படுவதாக அபிப்பிராயப்படுகிறோம். அவைகளாவன:—

(1) ஷை இலெக்ட்ரிஸிடி ஆக்டின் (Act IX of 1910) 33-வது பிரிவில் "ஒவ்வொரு நபரும் - Every Person" என்று சொல்லப்பட்டிருக்கும் மொழி மேற்படி ஆக்டின் 2, 3-வது பாகங்களின் (Parts II & III கீழ் லைசென்ஸ் பெற்றிருப்பவர்களுக்கு மாத்திரம் சம்பந்தப்படுமா அல்லவாயென்பதும்.

(2) தற்செயலாய் நேரிடும் அபாயகரமான விபத்தினால் யாதோ சில ஜனங்களுக்கு தேக உபத்திரவம் அல்லது மரணம் நேரிட்டால்தான் மேற்படி ஆக்டின் 33-வது பிரிவு சம்பந்தப்படும்; மற்றபடிக்கல்லவென்பது சரியா அல்லவாவென்பதும்தான். மேற்சொல்லிய இரண்டு கேள்விகளுக்கும் நாங்கள் "No - அப்படிக்கல்லவென்று" மறுமொழி கூறுகின்றோம். அந்தப் பிரிவில் செப்பியிருக்கும் பதங்களினால் தேக உபத்திரவ முண்டாக்கக்கூடிய விஷயங்களுக்கும், மரணம் அல்லது உபத்திரவமுண்டாகும் விஷயங்களுக்கும் யாதொரு ஐயமின்றி அந்த பிரிவு சம்பந்தப்படுமென்றுதான் சொல்லவேண்டும். உபத்திரவ முண்டாக்கக்கூடியதா அல்லவாவென்பது சாட்சியத்தைப் பொறுத்தியதாயிருப்பதால் அதைப்பற்றி நாங்கள் யோசிக்கவேண்டியது அனாவசியமென்றுதான் சொல்லவேண்டும்.

இ-லா-ரி 39 ம 686. Hawkins, General Manager, the Indian Aluminium Co., Ld , v. King-Emperor I. L. R. 39 Mad. 686.

நெ. 12.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

அப்பீல் உத்தரவின் பேரில் அப்பீல்

நெ. 128 of 1914.

(சிவில் ரிவிஷன் மனு நெ. 269 of 1914.)

T. ராமன் நாயர் (முல்லபள்ளி தார்வாட் மானேஜர்)—முதல் பிரதிவாதி—மனுதாரன்—அப்பீல் வாதி

v.

கோபாலமேனென் வகையரா—எதிர் மனுதாரர்கள்—ரெஸ்பான்டென்டுகள்.

லாப்பாயின்ட்:— ஒரு எஸ்டேட்டிற்கு ரிஸீவராய் ஏற்படுத்தப்பட்டவரின் வார்சுகளுடைய கையிலிருக்கும் ரிஸீவருடைய சொந்த சொத்துகளை ஜப்திசெய்து எஸ்டேட்டில் நேரிட்ட நஷ்டங்களை ஈடுசெய்யலாமென்பது.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—ஒரு சொத்திற்கு ரிஸீவராய் நியமிக்கப்பட்டவர் அவாவசத்தில் ஒப்புவிக்கப்பட்டசொத்துக்களை தன்னுடைய சொந்த பிரயோஜனத்திற்கு அபகரித்துக் கொண்டாரென்னும் காரணத்தினால் அப்படி தானெடுத்துக்கொண்ட தொகையை அந்த ரிஸீவரின் வார்சுகள்கையிலுள்ள ரிஸீவரின் சொந்த சொத்துக்களின்பேரில் சிவில் புரோசீஜர்கோட் (Act v. of 1908) 40-வது ஆர்டர் 4-வது ரூலின்படி நிறைவேற்றுதல்மனு செய்து வசூல் செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

பாலக்காடு சப்ஜட்ஜ் 1907-ம் ௵த்திய அசல் நெ. 28-ல் எக்ஸிகியூஷன்மனு நெ. 1319 of 1913-ல் செய்யப்பட்ட 1910-ம் ௵த்திய அப்பீல் நெ. 20 (C. M. P. No. 293 of 1910-ல்) செய்யப்பட்ட உத்திரவின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

கேசின் முக்கியமான விஷயங்கள் தீர்ப்பில் விளங்கும்.

லாயர்கள்:—மெஸ்ஸர்ஸ் T. R. சீனிவாசய்யங்கார், G. S. ராமச்சந்திரய்யர், அப்பீல்வாதியின் வக்கீல்கள். Mr. J. L. ரொஜேரியோ — ரெஸ்பான்டென்டின் வக்கீல்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்:—ராமன் நாயர் என்பவன் இந்த கேசின் அப்பீல் வாதியை கார்னவன் அந்தஸ்திலிருந்து நீக்கிவிடும்படிக்கு அவன்பேரில் தாவாசெய்தான். முதல்கோர்ட்டார் அப்பீல்வாதியை கார்னவன் அந்தஸ்திலிருந்து நீக்கிவிடும்படிக்கு டிக்ரி செய்தார்கள். அந்த டிக்ரியின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல் நடந்துக்கொண்டிருக்கையில் ஷை ராமன் நாயர் என்பவர் ஷை சொத்துகளை கிரமமாய் பரிபாலனம்செய்துவருவதாய் ஜாமீன் கொடுத்ததின்பேரில் அவரை ஷை சொத்துகளுக்கு ரிஸீவராக நியமிக்கப்பட்டது. அந்த அப்பீல் 1913௵ பிப்ரவரி௴ கார்னவனுக்கு அனுகூலமாய் தீர்மானிக்கப்பட்டது. ரிஸீவராகிய ஷை ராமன் நாயர் 1913௵ ஏப்ரல்௴ இறந்துவிட்டார். அவருக்குப்பின் அந்த சொத்துகளை பரிபாலனம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட கார்னவன் காலம்சென்ற ரிஸீவர் அவர் வசத்திலிருந்த சொத்துகளை அவருடைய சொந்த பிரயோஜனத்திற்கு அபகரித்துக்கொண்ட தொகைகளை மரணமடைந்தரிஸீவரின் வார்சுகளாகிய ரெஸ்பான்டென்டுகளின் வசத்திலிருந்த (காலம்சென்ற ரிஸீவரின்) சொந்த சொத்துகளிலிருந்து வசூல்செய்ய அவைகள் பந்தப்பட்டவைதானென்று தீர்மானித்து உத்தரவு செய்யும்படிக்கு பிரஸ்தாப மனு செய்தார். ஷை ரிஸீவர் ஜீவித்திருந்தால் அவர்பேரில் இப்படிப்பட்ட மனு செய்தால் அதை தாக்கல் செய்துகொண்டு பைசல் செய்வது நியாயமான காரியமாயிருந்தாலும் அவர் காலமாய்விட்டபிறகு அவருடைய வார்சுகளின்பேரில் இவ்விதமான மனுவை தாக்கல்செய்துகொண்டு அதன்பேரில் உத்தரவுசெய்வது நியாயமானதல்லவென்றும் அப்படி அபகரித்துக்கொண்ட தொகைகளை ஷை வார்சுகளின்பேரில் கிரமதாவாசெய்து வசூல்செய்வதுதான் கிரமமான நடவடிக்கையென்றும் சப்ஜட்ஜ் தீர்மானித்தார். இந்த உத்தரவு பிசகென்று நாங்கள் நினைக்கிறோம்.

சிவில் புரோசீஜர் கோட் 40-வது ஆர்டர் 4-வது ரூலில் ஒரு ரிஸீவர் அவனுடைய வசத்திலிருந்த சொத்துக்களை வேணுமென்றே அல்லது அஜாக்கிரதையினாலோ சரியாய் பரிபாலனம்செய்யாமல் அந்த சொத்துக்களுக்கு நஷ்டம் நேரிடும்படிச் செய்வானாகில் அவனுடைய (ரிஸீவரினுடைய) சொந்த சொத்துக்களை ஜப்திசெய்யலாமென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கின்றது. பிரஸ்தாபகேசுக்கு இந்த ரூல் சம்பந்தப்படாதென்பதற்கு Mr. J. L. ரொஜேரியோ என்பவர் இரண்டு ஆட்சேபனைகள் கூறுகின்றார். முதலாவது "Property-சொத்து" என்னும் பதத்தினால் (1) ரிஸீவர்வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட சொத்தென்று அர்த்தம் செய்யவேண்டுமே யல்லாமல் மற்றபடி (2) அந்த சொத்திலிருந்து வசூலாகும் "மாசூல் வருமானம்" என்று அர்த்தம் செய்யலாகாதென்று வாதிக்கின்றார். அவர் சொல்லும் வாதத்தை சரியென்று ஒப்புக்கொள்ள எங்களுக்கு நியாயம் தோன்றவில்லை. இந்தப் பிரிவிலும், அதன் உட்பிரிவுகளிலும் சொல்லியிருக்கும் சொத்தென்பது "Property-ஒரு ஸ்திதி" "Estate-எஸ்டேட்" என்று அர்த்தமாகும். பெரும்பாலும் ஒரு

ஸ்திதியின் மாசூல் அல்லது வருமானத்தை வசூல்செய்வதற்காகத்தான் ஒரு ரிஸீவரை நியமிக்கப்படுகின்றது. ஒரு ரிஸீவரிடத்தில் ஒப்புவிக்கப்படும் சொத்திலிருந்து வசூலாகும் மாசூலும் (வருமானமும்) "சொத்து-Property" என்று வழங்கும் பதத்தில் அடங்கியதுதானென்று அர்த்தம் செய்யவேண்டுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

இதுவுமன்றி, ரிஸீவர் அவனிடம் ஒப்புவிக்கப்பட்ட ஒரு எஸ்டேட்டின் சொத்தை அவனுடைய சொந்த பிரயோஜனத்திற்கு அபகரித்துக்கொண்டானென்பதினால் அவன் வேணுமென்றேயாவது அல்லது அவனுடைய பாராமரிக்கையினாலாவது அவ்விதமாய் நேரிடும்படி செய்தானென்று சொல்லலாகாதென்று கற்றுணர்ந்த வக்கீல் எங்களெதிரில் வாதிக்கின்றார். அந்த உட்பிரிவில் சொல்லியிருப்பதும் தெளிவாய் விவரணத்துடன் சொல்லப்படவில்லையென்றும் கூறுகின்றார். ஷை உட்பிரிவு ஷை பிரிவுக்கு ஒரு சேஷமாயிருப்பதால் அது ஒரு எஸ்டேட்டில் பிரத்தியேகமாய் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளின்படிக்கல்லாமல் மற்றபடி வேறெவ்விதமாயாவாது நஷ்டம் நேரிட்டால் மிகுதியாயிருக்கும் அந்த உட்பிரிவில் செப்பியிருக்கும் நிபந்தனையின் படிக்குதான் அவ்விஷயங்களை பைசல்செய்யவேண்டுமென நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஒருவனிடத்தில் சொற்பதொகை கொடுத்து வைக்கப்பட்டிருந்து அவன் அந்த பணத்தை தன்னுடைய சொந்த பிரயோஜனப்படுத்திக்கொள்வானாகில் அப்படி நேரிடும் நஷ்டத்தை அவன் வேணுமென்றே பாராமரிக்கையாய் அதைக் கவனியாமலிருந்ததினாலேயே அந்த நஷ்டம் நேரிட்டதென்று ஒவ்வொருவரும் சொல்வார்களல்லவா! ஆகையால் இந்த ஆட்சேபனைகூட சரியானதல்லவென்று அபிப்பிராயம்கொண்டு நாங்கள் அதையும் தள்ளிவிடுகிறோம்.

மேல்கண்ட ஆட்சேபனைகளில் மிக்க முக்கியமான ஆட்சேபனை யென்னவென்றால் சுருக்கமாய் நடத்தப்படும் இவ்விதமான நடவடிக்கையில் (in a summary proceeding) ரிஸீவரின் வார்சுகளின்பேரில் தொடரலாகுமா யென்பதுதான். ரெஸ்பான்டேன்ட்டுகள் காலம்சென்ற ரிஸீவர் எழுதிவைத்த உயில் சாசனத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட எக்ஸிக்யூடர்களா (Executors) அதாவது மரணமடைந்தவரின் சொத்துக்களைப் பரிபாலம் செய்வதற்காக அதிகாரம்பெற்றவர்களா அல்லவாவென்பது இந்த வியாஜ்ஜியத்தில் ஒரு கேள்வியல்ல. ரெஸ்பான்டேன்ட்டுகள் காலம்சென்ற ரிஸீவரின் (சாதாரணமாய் சட்டப்படி யேற்படும்) வார்சுகளென்றுதான் சொல்லவேண்டும். சி-பு-கோ 40-வது ஆர்டர் 4-வது ரூலில் ரிஸீவரின்சொத்தை ஜப்திசெய்து விற்பனைசெய்யவேண்டுமென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. அதில் ரிஸீவர் ஜீவித்திருந்தால்தான் அப்படி செய்யலாமென்றும் அவசியம் அதி லடங்கியதென்று சொல்ல யிடமில்லை, ஷை சி-பு-கோ 50-வது பிரிவு (2) உட்பிரிவில் வார்சுகளின்பேரில் டிக்ரியை நிறைவேற்றுதலுக்காக செய்யப்பட்டுள்ள நிபந்தனையை நோக்குமளவில், அதில் "வார்சுகள் வசத்திலுள்ள மரணமடைந்தவனுடைய சொத்துகளையும்" ஜப்திசெய்து விற்பனைசெய்ய பந்தப் பட்டதுதானென்று சொல்லப்பட்டிருக்கிறது. சி-பு-கோ 40-வது பிரிவில் ஜப்திக் குட்பட்டதென்று சொல்லப்பட்டிருக்கும் "சொத்து-Property" என்பது காலம்சென்ற வார்சுகளின் வசத்திலுள்ள சொத்துக்களின்பேரிலும் டிக்ரியை நிறைவேற்றலாமென்பதுதான் சட்ட நிரூபண சபையாருடைய கோட்பாடென்று பரிஷ்காரமாய் ஐயமின்றி சொல்லலாம். பிரத்தியேகமாய் தாவாசெய்தால் அப்படி செய்யப்பட்ட வியாஜ்ஜியத்திலும் காலம்சென்றவருடைய சொத்துக்களை வைத்துக்கொண்டிருக்கும் மேலே சொல்லிய வார்சுகளை தான் பிரதிவாதிகளாக்கி தாவா செய்யவேண்டியிருப்பதால், அதே வார்சுகளின் வசத்திலுள்ள சொத்துக்களின்பேரில் செய்யப்பட்ட நிறைவேற்றுதல் மனுவில் ஏன் அப்படிப்பட்ட சொத்துக்களை ஜப்திசெய்து விற்பனை செய்ய அவைகள் பந்தப்பட்டவைகளாகாதென்று சொல்வதற்கு ஹேது ஒன்றும் எங்களுக்குத் தோன்றவில்லை. Mr. J. L. ரொஜேரியோ யென்பவர் ஜெங்கின்ஸ்-Jenkins v. ப்ரையான்ட்-Briant (1834) 7 Sim 171ம்; லட்கேடர்-Ludgater v சானெல்-Channel (1847) 15 Sim 479-ம் ரிஸீவர் வேணுமென்றே பாராமரிக்கையாயிருந்ததினாலே ஒரு எஸ்டேட்டிற்கு நஷ்டம் நேரிட்டபடியால் அப்படிப்பட்ட நஷ்டத்தை வசூல்செய்ய சுருக்கமாய் நடத்தும் நடவடிக்கைகளில் (in Summmary proceedings) ரிஸீவரின் சொந்த சொத்துக்களைப் பந்தப்படுத்தி நடவடிக்கைநடத்த நியாயம் கிடையாதென்று தீர்மானித்திருப்பதாக தன்னுடைய வாதத்திற்கு ஆதாரமாய் ஷை கேசுகளை யெடுத்துக் கூறினார். சுப்ரீம் கோர்ட்டாரால் (Supreme Court) செய்யப்பட்டிருக்கும் ரூல்களில் 50-வது ஆர்டர் 15 (a) முதற்கொண்டு 24-வரையிலுள்ள ரூல்களில் இந்தியா தேசத்திலுள்ள சி-பு-கோ 40-வது ஆர்டரில் செய்யப்பட்டுள்ள நிபந்தனையைப்போல் ரிஸீவரின் சொந்த சொத்தின்பேரில் வசூல் செய்யலாமென்கிற நிபந்தனை செய்யப்படவில்லை. Mr. J. L. ரொஜேரியோ யென்பவர் அவருடைய வாதத்திற் காதாரமா யெடுத்துக் கூறின ஷை இரண்டு கேசுகளும் இந்தியாவில் செலாவணியாகும் சிவில் புரோசீஜர் கோடில் இது விஷயமாய் பிரத்தியேகமாய்ச் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குச் சம்பந்தப்படாதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். 145-வது பிரிவு இந்த கேசுக்குச் சம்பந்தப்படாதென்று கற்றுணர்ந்த வக்கில் சொல்வதை

நாங்களும் ஒப்புக்கொள்ளுகிறோம். அந்த 145-வது பிரிவில் ஒரு வியாஜ்ஜியத்தின் கட்சிதாரான் பந்தப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஜாமீன்கொடுத்திருக்கும் மூன்றுவது நபரின்பேரில் நடத்தவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றிச் சொல்லியிருக்கின்றன. ஆனால் ஒரு ரிஸீவர் அப்படிப்பட்ட நிலைமையி லிருப்பவனல்ல. காலம்சென்ற ரிஸீவரினுடைய வார்சுகள் பேரில் நிறைவேற்றுதலில் நடவடிக்கைகள் நடத்தி நஷ்டத்தொகையை வசூல்செய்யலாமென்று சி-பு-கோ 40-வது ஆர்டர் 4-வது ரூரில் நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கிறதென்று உறுதியாய்ச் சொல்லலாம். ரிஸீவர் என்பவன் ஒரு கோர்ட்டு உத்தியோகஸ்தனுகையால் ரெஸ்பான்டென்டுகளை அவனுடைய வார்சுகளென்று சொல்வதற்கு நியாயமில்லையென்று சொல்லும் வாதத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு ரிஸீவரின்வசத்தில் ஒப்புவிக்கப்படும் சொத்துக்களை தான் சரியாய் பரிபாலனம் செய்துவருவதாய் அவன் நபர் ஜாமீன் கொடுக்கவேண்டியதற்கு பந்தப்பட்டிருப்பதால் அதைப்போலவே ரெஸ்பான்டென்டுகளும் அவ்விஷயத்தில் அவனுக்கு வார்சுகளாவார்கள்.

இத்தியாதி காரணங்களை யனுசரித்து நாங்கள் சப்கோர்ட்டாருடைய உத்தரவை ரத்துசெய்துவிட்டு இந்த கேசில் செய்யப்பட்டுள்ள மனுவை அவரை மறுபடியும் பயிலில் தாக்கல்செய்துகொண்டு அதன்பேரில் விசாரணைநடத்தி பைசல்செய்யும்படிக்கு உத்தரவுசெய்கிறோம். செலவுகளைப்பற்றி மனுவை கடைசியாய்ப் பைசல்செய்யும்போது உத்தரவுசெய்யவேண்டும்.

இ-லா-ரி 39 மதராஸ் 584. T, Raman Nair (Mullapalli Tarwad Manager) v. Gopala Menon, & ors. I. L. R. 39 Mad. 584.

"இந்திய சட்ட கெஜெட்" டைப்பற்றிய அபிப்பிராயங்கள்.

"மதராஸ் மெயில்" 10-9-1906:—"இந்திய சட்ட கெஜெட்" இன் னூதனமுயற்சியின் கருத்தாவது தேன் இந்தியா ஜனங்கள் அவர்களுடைய தேகத்திற்கும், சொத்திற்கும் யாதொருதீங்கு கேரிடாதபடி அவைகளை பந்தோபஸ்தாய் காப்பற்றிக்கொள்வதற்காக வேண்டிய சட்ட திட்டங்களை அவர்கள் அறிந்து சட்டஞானம் பெறுவதற்ககா ஏற்பட்டுள்ளது.......இந்த "இந்திய சட்ட கெஜெட்"டில் நானாவித சட்டசம்பந்தமான கேசுகளைப் பிரசுரித்துவருவதுமல்லாமல், முக்கியமான கோர்ட்டு தீர்மானங்களும், கவர்ன்மென்ட் உத்தரவுகளும் இன்னும் அதன்சம்பந்தமான இதரவிஷயங்களும் பிரசுரித்துவரப்படுகின்றன.......துரைத்தனத்தால் பிறப்பிக்கப்படும் கவர்ன்மெண்ட் உத்தரவுகளையும், ரெவ்னியூ போர்டிலும் இன்னும் விவசாய சம்பந்தமாயுள்ள இதர இலாக்காக்களிலும் (Departments) அப்போதைக்கப்போது நடந்துவரும் எல்லா நடவடிக்கைகளையும், உத்தரவுகளையும் பொதுவாய் ரெவ்னியூ விஷயங்கள் எல்லாவற்றையும் வழுவின்றி கிரமமாய் தர்ஜமாசெய்து பிரசுரித்துவந்தால் முக்கியமாய் கிராமவாசிகளுக்கு இது மிக்க பிரயோஜனகரமாக இருக்கும்.

"ஹிந்து" 11-9-1906:—"இந்திய சட்ட கெஜெட்" இவ் விந்தியதேசத்தில் வழங்கிவரும் நம்முடைய பல சுதேச பாஷைகளில் ஒன்றில் பிரசுரிக்கப்பட்டு முதல் முதல் வெளிவரும் "சட்ட சஞ்சிகை" இதொன்றுதான். சட்ட பிரசுரமாகிய இன்னூதன முயர்ச்சி பொதுஜனங்களுக்கு உண்மையில் தேவையுள்ளதைக் கொடுக்குமென்று நம்புகிறோம். இந்த சஞ்சிகை விருத்தியடையுமென்று கோருகின்றோம்.

"மதராஸ் டைம்ஸ்" 11-9-1906:—"......... நானாவித சட்டசம்பந்தமான கேசுகளையும் கவர்ண்மெண்ட் உத்திரவுகளையும் இன்னும் சட்டஞானம் பெறுவதற்கான இதர விஷயங்களையும் பிரசுரித்துவருவதுமன்றி..........இந்த சென்னை ராஜதானியிலுள்ள கிராமவாசிகளுக்கு "இந்திய சட்ட கெஜெட்"டென்னும் சஞ்சிகை மிக்க பிரயோஜனகரமானதென்பதில் சந்தேகமில்லை. இப் புதுமுயற்சி ஜெயமடைந்து விருத்தியாகுமென்று கோருகின்றோம்.

"இந்தியன் பேட்ரியட்" 6-6-1916:—இதை ஜாக்கிரதையுடன் கவனித்துப்பார்த்ததில், இதில் சட்ட சம்பந்தமாக பல அறிய, பெரிய, விஷயங்களிருப்பதை பார்த்து மிகவும் சந்தோஷமடைகிறோம். இன்னும் இந்த சஞ்சிகையில் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டிய மிகவும் உபயோகமுள்ள விஷயங்களும் அடங்கியிருக்கிறது. மெஸர்ஸ் "கிருஷ்ண அண்டு பிரதர்ஸ்" அவர்கள் இந்த ஜர்னலை பிரசுரிப்பதில் நமது தேசத்தின் நன்மைக்காகவும், தமிழ் வாசிக்கும் பொது மஹா ஜனங்களுடைய நன்மைக்காகவுமே, பாடுபட்டுவருகிறதாக விளங்குகிறது. ஆகையால் அவர்களுக்கு எல்லாவித வெற்றியும் வுண்டாகவேண்டும் என்று மனப்பூர்வமாக கோருகிறோம்.

[இன்னும் பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன.]

The Indian Law Gazette.

PART II.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஆம் ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ஆம் மார்ச்சுமீ [நெ. 3.

Reports of Cases.

கேஸ்களின் ரிப்போர்ட்டுகள்.

Madras High Court.

மதராஸ் ஹைக்கோர்ட்டு.

நெ. 13.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர். / மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர். } முன்பாக

Referred Case No. 3 of 1914.

C. A. ஈஸ்வர ஐயர்—வாதி—அப்பீல்வாதி.

v.

K. கோவிந்தராஜுலு நாயுடு—பிரதிவாதி—ரெஸ்பான்டென்ட்.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—மதராஸ் ப்ரெசிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டில் ஒருவன்பேரில் டிக்ரி பிறப்பித்தபிறகு அந்த தீர்ப்புக்கடனாளி மதராஸ் ஹைக்கோர்ட்டின் அதிகாரவரம்பிற் குட்பட்ட இன்சால்வென்ஸி கோர்ட்டில் அவன் பட்டிருக்கும் கடன்களைச் செலுத்த அவன் (Insolvent) சக்தியற்றவனா யிருக்கிறானென்று தீர்மானிக்கப்பட்டபிறகு இன்சால்வென்ஸி ஆக்ட் (Insolvency Act III of 1909) 17-வது பிரிவின்படி ஹைக்கோர்ட்டாருடைய உத்திரவு (அனுமதி) யில்லாமல் அவன் (தீர்ப்புக்கடனாளி) பேரில் ஷை டிக்ரியை நிறைவேற்றுவதற்கு ஸ்மால்காஸ் கோர்ட்டார் மனு தாக்கல்செய்துக்கொள்ள அதிகாரவரம்பு கிடையாது. ஆகையால் ஹைக்கோர்ட்டாருடைய உத்தரவு (அனுமதி) யில்லாமல் ஷை டிக்ரியை நிறைவேற்றுதலின் நடவடிக்கைகளில் ஷை தீர்ப்பு கடனாளி கோர்ட்டில் குறித்ததேதியில் ஆஜராவதற்காக ஷை ஸ்மால்காஸ் கோர்ட்டாருக்கு மூன்றுவது நபரிடமிருந்து ஜாமீன்பத்திரம் எழுதி கையெழுத்து செய்துகொடுத்திருந்தால் அது ஸ்மால்காஸ் கோர்ட்டாருக்கு அதிகாரவரம்பில்லாமல் எழுதி வாங்கப்பட்டதானதால் அது சட்டப்படி செலாவணியுள்ள தல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

ப்ரெசிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்ஸ் ஆக்ட் 69-வது பிரிவின்கீழ் ஹைக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்குத் தெரிவிக்கப்படும் கேசில் ஸ்மால்காஸ்

கோர்ட் ஜட்ஜுகள் வெவ்வேறு அபிப்பிராயம் கொண்டார்களானல் அவர்கள் எந்தெந்த பாயின்டுகளைப்பற்றி அப்படி வெவ்வேறு அபிப்பிராயங்கள் கொண்டார்களோ அவைகளை அவர்கள் தெளிவாய்விவரித்து ஹைக்கோர்ட்டாருக்குத் தெரிவிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

பிரெசிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்ஸ் ஆக்ட் (Presidency Small Cause Courts Act XV of 1882) 69-வது பிரிவின்கீழ் மதராஸ் பிரெசிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜுகளாகிய Mr. C. கிருஷ்ணன் (Chief Judge), Mr. V. C. தேசிகாசாரியார், Mr. C. ராமசாமி ஐயங்கார் ஸ்மால்காஸ் நெ. 6809 of 1913-ல் புல்பெஞ்சு நெ. 589 of 1913-ல் ஹைக்கோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு தெரிவித்துக்கொண்ட கேஸ்.

கேசின் விபரம் மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியரின் தீர்மானத்தில் நன்கு விளங்கும்.

லாயர்கள் :—Messrs. வெங்கடசுப்பராவ் and ராதாகிருஷ்ணய்யர் — அப்பீல்வாதியின் வக்கீல்கள். Mr. W. V. ரங்கசாமி ஐயங்கார்—ரெஸ்பான்டென்டின் வக்கீல்.

ஹைக்கோர்ட்டார் தீர்மானம்—மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர் :—இது பிரெசிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்ஸ் ஆக்டின் (Presidency Small Cause Courts Act XV of 1882) 69-வது பிரிவின்கீழ் ஹைக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்குத் தெரிவிக்கப்பட்ட கேஸ். ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜுகள் ஷை பிரிவில் சொல்லியிருக்கும் ஆக்ஞைகளைச் சரியாய் கவனித்து இந்த கேசை எங்களுக்குத் தெரிவிக்காதவிஷயத்தைப் பற்றி நாங்கள் மிக்க விசனப்படுகிறோம். அவர்கள் எந்த லாபாயின்டுகளைப்பற்றி வெவ்வேறு அபிப்பிராயப்படுகிறார்களோ அவைகளை அவர்கள் எங்களுக்குத் தெளிவாய் எடுத்துக் கூறவில்லை. கேசின் சந்தர்ப்பங்களை யனுசரித்து இந்த கேசில் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் ஜாமீன பத்திரத்தை (Bail Bond) பிரதிவாதியாகிய ஜாமீன்தார்பேரில் அமுலுக்கு கொண்டுவரக்கூடுமா யென்பதைப்பற்றி அவர்கள் ஒருவருக்கொருவர் வெவ்வேறு அபிப்பிராயங்கொண்டு பேதிப்பதாக சொல்லி இந்த கேஸ் முழுதும் எங்களுடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இது கிரமப்படி எங்களுடைய அபிப்பிராயத்திற் கனுப்பப்பட்ட கேசல்லவென்று நான் உபதேசிக்கிறேன். ஆனல் இப்பொழுது ஷை ஜட்ஜுகளில் ஒருவர் பென்ஷன் பெற்றுக்கொண்டிராவிட்டால் இந்தகேசை சட்டத்தில் கண்டிருக்கும் நிபந்தனைகளை கண்டிப்பாய் நிறைவேற்றி அதன்படி தெளிவாய்க் கண்டெழுதி இந்த கேசை மறுபடியும் எழுதித் தெரிவிக்கும்படி நான் திருப்பிவிடுவேன். ஆனல் இப்பொழுது அப்படி செய்வதற்கு கூடாமையாயிருப்பதால் அடியிற்கண்டிருக்கும் மூன்று பாயின்டுகளை எங்களுடைய அபிப்பிராயத்திற்குத் தெரிவித்திருப்பதாய் கேசைபைசல்செய்கின்றோம் :—

(1) அப்படிப்பட்ட ஜாமீன்பத்திரத்தை எழுதி வாங்குவதற்கு ஸ்மால்காஸ் கோர்ட்டாருக்கு அதிகாரவரம்புண்டா ?

(2) ஹைக்கோர்ட்டார் தீர்ப்புக்கடனளி (Judgment-debtor) கடன்களைச் செலுத்த சக்தியற்றவனென்று தீர்மானித்து அவனை வாரன்டில் பிடிக்காதிருக்கும்படிக்கு (Arrest) அவனுக்கு இன்சால்வென்ட் கோர்ட்டாரால் கொடுக்கப்பட்டிருக்கும் ப்ரொடெக்ஷன் உத்தரவினல் (Protection Order) ஷை ஜாமீன் பத்திரம் சட்டப்படி செலாவணி யுள்ளதல்லவென்று சொல்வதற்கு நியாயமுண்டா ?

(3) அந்த ஜாமீன் பத்திரத்தில் செப்பியிருக்கும் தொகையை ஒரு அபராத தண்டனையாக (Penal) பாவிக்கப்படுமா ?

இந்த பாயின்டுகளைப்பற்றி எங்களெதிரில் அதிஜாக்கிரதையாய் மிக்க சிரமத்துடன் பூர்த்தியாய் வாதிக்கப்பட்டது. இரண்டாவது பாயின்டின் விஷயமாய் நாங்கள் முக்கியமாய் யோசிக்கவேண்டிய அம்சங்களென்னவென்றல் :—

ப்ரொடெக்ஷன் ஆர்டர் (Protection Order) அமுலி லிருந்துக்கொண்டிருக்கவேண்டுமென்று செய்த உத்தரவு அதற்குப் பின்னிட்ட ஷை ஜாமீன் பாத்திரம் வாங்கின தேதிக்கும் சம்பந்தப்பட்டுக் குறிக்குமாவென்பதும் தீர்ப்புக்கடனளி தாவா கடனை அவனுடைய இன்சால்வென்ட் ஷெடியூலில் கண்டு பதிவுசெய்வித்தபிறகு ஷை ப்ரொடெக்ஷன் ஆர்டர் அமுலிலிருந்துக்கொண்டிருந்ததினல் இந்தக்கடனைப்பற்றி அந்த ப்ரொடெக்ஷன ஆர்டரில் ஸ்பஷ்டமாய் செப்பியிராவிடினும் அந்த ப்ரொடெக்ஷன் ஆர்டர் தாவாகடனுக்கும் சம்மதப்பட்டதாக சொல்லப்படுமா யென்பதும் தான். ரிஜிஸ்த்ரார் எங்களுக்கு எழுதித்தெரிவிப்பதினல் ப்ரொடெக்ஷன் ஆர்டர் அமுலிலிருப்பதாக அப்போதைக்கப்போது ஆபீசில் சகஜமாய் செய்யப்படும் உத்தரவுகளென்று தெரியவருகிறது. யாதேனும் ஒரு கடனுக்குமாத்திரம் ப்ரொடெக்ஷன் ஆர்டர் அமுலிலிருப்பதாக பாவிக்கப்படமாட்டாதென்று பிரத்தியேகமாய்உத்தரவு செய்யபபட்டிருந்தா லொழிய ப்ரொடெக்ஷன் ஆர்டர் ஷெடியூலில்கண்டிருக்கும் கடன்கள் எல்லாவற்றிற்கும் அதை அமுலிலிருப்பதாக ப்ரொடெக்ஷன் ஆர்டர் கொடுக்கப்படும் தேதிகளிளெல்லாம் பாவிக்கவேண்டியதுதானென்று நான் நினைக்கிறேன். அது

எப்படியிருந்திடினும் தற்காலம் கோர்ட்டில் நடந்துவரும் நடவடிக்கையை யனுசரித்து அதைப்பற்றி யோசிக்கவேண்டியது அவ்வளவு முக்கியமானதல்லவென்று தோன்றுகிறது. ஏனென்றல் மேற்கண்ட முதல் கேள்வியைப்பற்றி ஸ்மால்காஸ் கோர்ட்டாருக்கு ஜாமீன் பத்திரம் எழுதி வாங்குவதற்கு அதிகாரவறம்பு கிடையாதென்றுதான் மறுஉத்தரம் சொல்லவேண்டும். தீர்ப்புகடனளி அவன் பட்டிருக்கும் கடன்களைக் கொடுக்கச் சக்தியற்றவனென்று (Insolvent) டிசம்பர்மீ 2உ தீர்மானிக்கப்பட்டபிறகு ஸ்மால்காஸ் கோர்ட்டார் ஹைக்கோர்ட்டாருடைய அனுமதியில்லாமல் தீர்ப்புகடனளியின்பேரில் அவனுக்கு விரோதமாய் எவ்விதமான உத்தரவு செய்வதற்கும் அதிகாரவறம்பு கிடையாதென்று நான் தீர்மானிக்கிறேன். தற்காலம் ப்ரொடெக்ஷன் ஆர்டர் பிறப்பித்துவருவதற் காதாரமாயுள்ள 1848ஹுத்திய பழய இன்சால்வென்ட் ஆக்டில் செய்யப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக் கிணங்க 1909-ம் ஹுத்திய 3-வது ஆக்டில் செய்யப்பட்டிருக்கும் 17-வது பிரிவின் நிபந்தனைகளின் அர்த்தம் மிக்க விரிவாயிருக்கின்றன. பழய ஆக்டிலுள்ள 7, 49-வது பிரிவுகளில் கண்டிருக்கும் நிபந்தனைகளை ஆதாரமாய்க் கொண்டுதான் புது ஆக்டின் 17-வது பிரிவில் நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனல் புது ஆக்டில் பழய ஆக்டைவிட பூராய் வேறேவிதமான நடவடிக்கைகளுக்கு நிபந்தனைகள்செய்யப்பட்டிருக்கின்றன. 49-வதுபிரிவின்கீழ் இன்சால்வென்ட் ஷெடியூல் தாக்கல் செய்தகாலத்தில் ஒரு கோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கை அல்லது நிறைவேற்றுதல் நடந்துக்கொண்டிருந்தால் அந்த கோர்ட்டார் அதை நிருத்திவைப்பதற்காவது ரத்துசெய்வதற்காவது அல்லது சொற்பகாலம் நிறுத்திவைப்பதற்காவது நிபந்தனைகள் செய்யப்பட்டிருப்பது மல்லாமல் இன்சால்வென்டை ஒரு கடனுக்காவது அல்லது எல்லா கடன்களுக்கும் வாரன்டில் பிடிக்கலாகாதென்று (Arrest) காப்பதற்கு இன்சால்வென்ட் கோர்ட்டாருக்கு அதிகாரமளித்து நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

புது ஆக்டின் 17-வது பிரிவில் இதற்கும் அதிகமாய் நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றன அதாவது, இன்சால்வென்ட்யாருக்காவது கடன் கொடுக்கவேண்டியிருந்தால் கடன் கொடுத்தவன் இன்சால்வென்ட் நடவடிக்கைகள்நடந்துக் கொண்டிருக்கையில் அவன் இன்சால்வென்ட் கோர்ட்டார் என்ன விதமாய் உத்தரவு செய்கிறர்களோ அதன் படிக்கின்றி அவர்களுடைய அனுமதிபெறமல் இன்சால்வென்டின் சொத்தின் பேரில் யாதொருபரிகாரமும் கேட்கலாகாதென்றும் அல்லது அவன் பேரில் யாதொரு வியாஜ்ஜியமும் ஆரம்பிக்கலாகாதென்றும் நிபந்தனை செய்யப்பட்டிருக்கின்றது. ஒரு இன்சால்வென்டின்பேரில் நிறைவேற்றுதலில் அவனை அரெஸ்ட் செய்யும்படிக்கு செய்யப்பட்ட மனு அவன் பேரில் கோர்ட்டில் மற்ற நியாய நடவடிக்கைகள் ஆரம்பித்தலென்று அர்த்தம் செய்யலாகாதென்று எங்களெதிரில் வாதிக்சப்பட்டது. அந்த வாதத்திற்காதாரமாய் சக்கிரவர்த்தி vs. முல்ஷங்கர்பட் (1911) இ-லா-ரி 35 பம் 63 கேசை எடுத்து கூறப்பட்டது.

அந்த கேசைதீர்மானம்செய்த கற்றுணர்ந்த ஜட்ஜுகளில் ஒருவர் “மற்ற நியாய நடவடிக்கைகள்” என்பதற்கு முக்கியமாய் இன்சால்வென்டின் கடன்களுக்குச்சம்பந்தமான இதர சிவில் நடவடிக்கைகளென்று அர்த்தம் செய்யவேண்டுமென்பதாக சொல்லியிருக்கிறர். அந்த கேசில் கிரிமினல் கோர்ட்டில் நடக்கும் நடவடிக்கைகள் இந்த பிரிவின்படி அதிகார வறம்பிற்கு மீறி நடத்தப்பட்டவைகளா யென்பதுதான் அந்த கேசில் பாயின்ட். ஆகையால் அந்த கேசு இந்த கேசுக்கு ஒரு ஆதாரமாகாது. ப்ரொவின்ஷியல் இன்சால்வென்ஸி ஆக்டில் சொல்லியிருக்கும் நிபந்தனைகளை இதற் காதாரமாய் எடுத்துக் காண்பிக்சப்பட்டன. ஆனல் இந்த கேசிற்கு அவைகள் சம்பந்தப்படுமென்று நான் நினைக்கவில்லை. நிறைவேற்றுதல் நடவடிக்கைகளைப்பற்றி பழய ஆக்டின் 49-வது பிரிவில் நிபந்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதில் ஒருவனை வாரன்டில் பிடிப்பதைப்பற்றி (Arrest) செப்பியிருக்கின்றது ; அந்த நிபந்தனையிலுள்ள விலக்கில் (Proviso) ஒருவனை வாரண்டில் பிடித்து (Arrest) அவன் காவலிலிருக்கும்போது 13-வது பிரிவின்கீழ் ப்ரொடெக்ஷன் ஆர்டர் பிறப்பிக்கப்பட்டாலொழிய அவனை காவலிலிருந்து விடுதலை செய்யப்படமாட்டாதென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் யோசிக்குமளவில் ஹைக்கோர்ட்டார் உத்தரவன்னியில் யாதொன்றும் செய்யலாகாதென்று ஏற்படுகிறது ; ஆகையால் ஒருவனை இன்சால்வென்டென்று தீர்மானிக்கப்பட்டபிறகு கடன்கொடுத்தவர்கள் ஹைக்கோர்ட் இன்சால்வென்ஸி கோர்ட்டின் உத்தரவு (அனுமதி) பெறமல் இன்சால்வென்டின்பேரில் யாதொரு பரிகாரமும் கேட்கலாகாதென்றுதான் சொல்லவேண்டும். இந்த விதியை பிரஸ்தாப கேசில் சம்பந்தப்படுத்தினல் இன்சால்வென்டை கடன்கொடுக்க சக்தியற்றவனென்று தீர்மானிக்கப்பட்டபிறகு ஸ்மால்காஸ் கோர்ட்டார் ஹைக்கோர்ட்டார் அனுமதி (உத்தரவு) யில்லாமல் இன்சால்வென்டின் பேரில் நிறைவேற்றுதலில் செய்யப்பட்ட எவ்விதமான மனுவையும் தாக்சல் செய்துக்கொள்ளலாகாதென்றுதான் நான் அபிப்பிராயப்படுகிறேன். இந்த கேசில்அப்படிஅனுமதி பெறததினல் தீர்ப்புகடனளியிடமிருந்து ஜாமீன்பத்திரம் வாங்கினது கோர்ட்டாருக்கு அதிகாரமில்லாத நடவடிக்கையை நடத்தினதாகத்தான்சொல்லவேண்டும். இது அதிகாரமுண்டா? இல்லையா? யென்பதைப்பற்றிய கேசானதால் இன்சால்வென்ட் இந்த பிரிவின்படி பரிகாரம் கேட்டானு இல்லையா யென்பது அனுவசியம்.

இந்த கேசில் ஸ்மால்காஸ் கோர்ட்டார் நிறைவேற்றுதல் மனு தாக்கல்செய்துக்கொள்ளும்பொழுது தீர்ப்புகடனாளி கடன்கொடுக்க சக்தியற்றவனென்று தீர்மானிக்கப்பட்டானென்னும் விஷயம் அந்த கோர்ட்டாருக்கு நன்றாய்த் தெரிந்தவிஷயமே. மேலே கண்டிருக்கும் சந்தர்ப்பங்களினால் மற்ற கேள்விகளுக்கு மறு உத்தரம் சொல்லவேண்டுமென்பது அவசியமாக எனக்குத் தோன்றவில்லை. இதுவுமன்றி ஸ்மால்காஸ் கோர்ட்டார் எந்த சட்ட நிபந்தனையின் ஆதாரத்தின்பேரில் தீர்ப்புகடனாளியிடமிருந்து ஜாமீன் பத்திரம் எழுதி வாங்கினார்களோ அது எனக்குப்புலப்படவில்லை. சிவில் புரோசீஜர் கோட் 55 (4) வது பிரிவின்படி ஒரு தீர்ப்பு கடனாளியை வாரன்டில் பிடித்தால் அவன்தான் இன்சால்வென்டென்று தீர்மானிக்கும்படி மனுசெய்யப் போகிறதாக அவனுடைய தாத்பரியத்தை வெளியிடுவானால் அவனை ஜாமீன்பேரில் விடுதலைசெய்யலாமென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கின்றது; ஆனால் ப்ரெசிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்ஸ் ஆக்ட் 9-வது பிரிவின்கீழ் ஹைக்கோர்ட்டார் ஸ்மால்காஸ் கோர்ட்டிற்காக விதிகள் செய்ததில் இதைச்சேர்க்கவில்லை. ஸ்மால்காஸ்கோர்ட் ஆக்ட் 30-வது பிரிவின்கீழாவது அல்லது சிவில் பிரோசீஜர் கோட் 21-வது ஆர்டர் 27-வது ரூலின்படிக்காவது ஸ்மால்காஸ் கோர்ட்டாருக்கு ஜாமீன்பத்திரம் எழுதிவாங்க அதிகார மிருக்கிறதென்பதை நான் மிக்க சந்தேகிக்கிறேன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர் :—ஸ்மால்காஸ் கோர்ட்டார் கேட்ட கேள்வியை அப்படி செய்யலாகாதென்று சொல்லவேண்டுமென்னும் தீர்மானத்தை நாமனு ஒப்புக்கொள்ளுகிறேன். வாதி அவன் பெற்றடிக்ரியின்கீழ் வசூலாகவேண்டிய தொகையை அவன் இன்சால்வென்டின்பேரில் வசூலாகவேண்டுமென்று இன்சால்வென்ட் நடவடிக்கையில் ருஜுசெய்து பெறலாம். ஆகையால் தீர்ப்பு கடனாளி கடன்கொடுக்க சக்தியற்றவனென்று (Insolvent) தீர்மானிக்கப்பட்டபிறகு ஸ்மால்காஸ் கோர்ட்டார் ஹைக்கோர்ட்டாருடைய அனுமதியில்லாமல் 1909-ம் ஞூத்திய III-வது ஆக்டின் 17-வது பிரிவின்படி தீர்ப்புகடனாளியின்பேரில் நிறைவேற்றுதலில் உத்தரவுசெய்ய அதிகாரம் கிடையாது. மேலேசொல்லிய காரணங்களினால் தீர்ப்புகடனாளியிடமிருந்து இந்த கேசில் கோர்ட்டார் வாங்கினதாவா ஜாமீன்பத்திரம் அதிகாரவரம்பில்லாமல் பெற்ற விஷயமானதால் அது சட்டப்படி செலாவணியுள்ளதல்ல. இந்த வியாஜ்ஜியத்தில் தீர்ப்பு சொல்வதற்கு முதல் கேள்விக்குச் சொன்ன மறு உத்தரமே போதுமானதாயிருப்பதால் மற்ற கேள்விகளுக்கு மறு உத்தரம் சொல்லவேண்டியது அவசியமென்று நான் நினைக்கவில்லை.

இ-லா-ரி. 39 ம. 689. C. A. Eswara Iyer v. K. Govindarajulu Naidu, I. L. R. 39 Mad. 689.

நெ. 14.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட். மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

கிரிமினெல் ரிவிஷன் கேஸ் நெ. 168 of 1915

(C. Referred Case No. 15 of 1915.)

கிருஷ்ணமாச்சாரி—எதிரி—(குற்றவாளி).

v.

மெஸெர்ஸ் ஷாவாலேஸ் அன்ட்கம்பெனி—பிரியாதிகள்

லாப்பாயின்ட்:—இ-பி-கோ. 406,409-வது பிரிவுகளின்கீழ் தண்டனைக்குள்பட்ட குற்றங்களை மதராஸ் கோர்ட்டார் விசாரணை செய்ய அதிகாரவறம்பு கிடையாதென்பது.

வியாஜ்ஜியசங்கிரஹம்:—மதராசிலுள்ள ஒருவியாபார கம்பெனியார் அவர்கள் வெளியூருக்கு அனுப்பும் கிரோசயின் எண்ணையை விற்பதற்கு வெளியூரில் ஒரு ஏஜென்டிற்கு அதிகாரமளித்து நேமித்திருந்தார்கள். அந்த ஏஜென்ட் டை கம்பெனியாருடைய கிரோசயின் எண்ணையைவித்து கிரயமொத்தத்தில் தன்னுடைய கமிஷனை கழித்துக்கொண்டு மிகுதி மொத்தத்தை அப்போதைக்கப்போது மதராசிலுள்ள கம்பெனியாருக்கு அனுப்பிவிட வேண்டியதாய் ஏற்பாடுசெய்யப் பட்டிருந்தது. அந்தஏஜென்ட் கம்பெனியாருடைய எண்ணையை வித்து கிரய மொத்தத்தை மதராஸ் கம்பெனியாருக்கு அனுப்பிவைக்காமல் தன்னுடைய சொந்த பிரயோஜனம் செய்துக்கொண்டு பணத்தை அபகரித்துக்கொண்டான். அதன்பேரில் (a) வித்த கிரயமொத்தம் மதராஸ் கம்பெனியாருடைய சொத்தென்றும் (b) அப்படிப்பட்டகேசின் விஷயமாய் கிரிமினல் புரோசீஜர் கோட் 179-வது பிரிவுசம்மந்தப் படாதென்றும், 181-வது பிரிவுதான்சம்மந்தப் படுமென்றும் (c) கிரய மொத்தத்தை ஏஜென்ட் தன்னுடைய சொந்த பிரயோஜனப் படுத்திக்கொண்டு அபகரித்ததினால் மதராஸ் வியாபாரகம்பெனியாருக்கு நேரிட்ட நஷ்டம் முதலில் வெளியூரில் மாத்திரம் நேரிட்டதால் இ-பி-கோ. 406, 409-வது பிரிவுகளின்கீழ் தண்டனைக் குள்பட்ட குற்றங்களை விசாரணைசெய்வதற்கு மதராஸ் கோர்ட்டாருக்கு அதிகாரவறம்பு கிடையாதென்றும், வெளியூர் (Mofussil) கோர்ட்டாருக்குதான் அதிகாரவறம்புண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த கேசிற்கு ஆதாரமாய் அநேக கேசுகள் உதகரிக்கப்பட்டன

மதராஸ்ஜியார்ஜ்டவுன்மூன்றாவதுப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் Mr. P. நாராயண மெனென் என்பவர் கிரிமினல் புரோசீஜர் கோட் 438-வது பிரிவின்கீழ் மதராஸ் ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கும் உத்தரவிற்கும் தெரிவித்துக் கொள்ளப்பட்ட கேசு.

கேசின் விபரம் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் தீர்மானத்தில் நன்குவிளங்கும்.

லாயர்கள் :—Mr. J. C. ஆடெம்-க்ரௌன்ப்ராசிக்யூடர். சர்க்கார்தரப்பில் ஆஜரானர்.

The Hon'ble Mr. T. ரிச்மாண்ட் என்பவர் பிரியாதிகளின் தரப்பில் ஆஜரானர்.

ஹைக்கோர்ட்டாரின் தீர்மானம் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் இந்தகேசில் தெரிவித்துக் கொண்டபாயின்டென்ன வென்றால் இந்தியன் பீனல்கோட் 406, 409-வது பிரிவுகளின்கீழ் தண்டனைக் குள்பட்ட குற்றங்களை மதராஸ் மூன்றாவது ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் விசாரணை செய்வதற்கு அதிகாரவறம்புண்டா இல்லையா வென்பதும் அல்லது இந்த கேசை கர்னூல்ஜில்லா நந்தியால் கோர்ட்டார்தான் விசாரணை செய்வதற்குத்தகுந்த கோர்ட்டாரென்றம்கண்டு அந்த கோர்ட்டில் பிரியாதைக் கொடுக்கும்படிக்கு பிரியாதை வாபஸ் செய்துவிடவேண்டுமா வென்பதும்தான்.

கேசின் சந்தர்ப்பங்களை பிரியாதில் பொதுப்படையாய் கண்டிருக்கின்றன. கேசில் விசாரணை செய்யப்பட்ட சாட்சியத்தினாலும், பிரியாதியின் பாரிஸ்டர் சொல்லியதினாலும் கேசின் முக்கியமான அம்சங்கள் விளங்குகின்றன; அதாவது, எதிரி (குற்றவாளி) பிரியாதியின் எண்ணையை நந்தியாலில் விற்பனை செய்யும்படிக்கு ஏஜென்டாய் நேமிக்கப்பட்டு அந்த ஏஜென்டு அப்போதைக்கப்போது அனுப்பின ரிப்போர்ட்டுகளினால் யாதோ கொஞ்சம் எண்ணை விற்பனை செய்யப்பட்டு, யாதோ சொற்ப தொகை கிரயமொத்தமாய் வசூலானதென்றும் அந்த கிரயமொத்தத்தில் டை ஏஜென்டினுடைய கமிஷன் செல்லாணது போக மிகுதிதொகைக்கு கணக்கு சொல்லாமலிருந்து விட்டதாகவும் அவரை கணக்கு சொல்லும்படி கேட்டபோது எதிரி (குற்றவாளி) அதற்குகணக்குசொல்லாமல் அவர் நந்தியாலில் வியாபாரம்செய்துக்கொண்டிருந்த தன்னுடைய கடையை மூடிவிட்டு பூட்டு போட்டுக்கொண்டு கணக்கு புத்தகங்களை யெல்லாம் மறைத்து ஒளித்து வைத்து விட்டு தன்வசத்திலிருந்த தொகையை யெடுத்துக்கொண்டு நந்தியாலை விட்டு ஓடிப்போய் விட்டதாக தெரியவருகிறது. எதிரியின்வசத்தில் ஒப்புவித்தஎண்ணையை கம்பெனியாரின் ஏற்பாட்டின்படி வர்த்தகர்களுக்கு வித்துவிட்டதாக தெரியவருகிறதே யல்லாமல் மற்றப்படி எண்ணையை தன்சொந்த பிரயோஜனப் படுத்திக்கொண்டதாகவாவது அல்லது வேறேவிதமாய் பிரயோஜனப்படுத்தினதாக வாவது ருஜுவில்லை. எதிரிஅவருடைய சொந்தபிரயோஜனப் படுத்திக் கொண்டு அபகரித்ததாக சொல்வது பணமேயல்லாமல் எண்ணையல்லஆகையால் மாஜிஸ்ட்ரேட் சொல்வதைப்போல் எண்ணை மதராசிலிருந்து வந்ததா அல்லது காக்கினடாவிலிருந்துவந்ததா என்பதைப்பற்றி யோசிக்கவேண்டிய நிமித்தமில்லை. அந்த ஏஜென்டை நேமித்த உத்தரவு மதராசிலிருந்து அனுப்பப்பட்டதென்பதைப் பற்றியும் ஒருகிரிமினல் கேசில் யோசிக்க வேண்டியது அனவசியம். நாங்கள் இப்பொழுது கவனிக்கவேண்டிய விஷயம் என்னவேன்றால் எதிரியின் நடவடிக்கையினால் பிரியாதிகளாகிய கம்பெனியாருக்கு நேரிட்டநஷ்டம் நந்தியாலில் சம்பவித்தமையால் மதராஸ்கோர்ட்டாருக்கு இந்தகுற்றங்களை விசாரணைவதற்கு அதிகாரவறம் புண்டாயென்பதுதான். ஆகை செய்பால்இ-பி-கோ. 406,409-வது பிரிவுகளின்கீழ்தண்டனைக்குட்பட்ட குற்றங்களைப்பற்றி கிரிமினல் புரோசீஜர் கோட் 181-வது பிரிவில் சொல்லியிருப்பதால் இந்த கேசுக்கு கி-பு-கோ. 181-வது பிரிவு சம்மந்தப்படுமேயல்லாமல் 179-வது பிரிவுசம்மந்தப்படமாட்டாது. பிரியாதியின் வாதத்தை ஒப்புக்கொள்வதற்கு தகுந்த காரணம் 179-வது பிரிவில்ஸ்பஷ்டமாய் சொல்லப்படவில்லை. பிரியாதியின் வாதத்திற்காதாரமாய் ராஜானிபிடை சக்ரவர்த்தி v. ஆல்இந்தியா பாங்கிங் அன்ட் இன்ஷூரென்ஸ் கம்பெனிலிமிடெட் (1914) 22. I. C. 192 கேசை எடுத்துக் காண்பிக்கப்பட்டது. அந்தகேஸ் பணத்தை அபகரித்ததைப் பற்றிச் சொல்லுகிறது. லாங்கிரிட்ஜ் v. அட்கின்ஸ் இ-லா-ரி. (1913) 35 அ 29 கேசில் சொத்தை (எண்ணையை) அபகரித்ததைப் பற்றி சொல்லி யிருக்கின்றது. இந்த ராஜதானியில் நேரிட்ட ராமசாமி ஆசாரி கேஸ்; அதாவது, (1914) ம-வீ-நோ. 324; S. C. 26 ம-லா-ஜ. 235. ப்ராசிகியூஷன்தரப்பார் ருஜுசெய்ய வேண்டிய அம்சங்களுக்குத்தகுந்த ஆதாரமா யிருக்கின்றது. இந்த கேசில் ப்ராசிகியூஷன் தரப்பார் ருஜுசெய்ய வேண்டிய அம்சங்களென்னவென்றால் (1) எதிரி அயோக்கியதையாய் பொருளை தன்சொந்த பிரயோஜனப் படுத்திக்கொண்டு அபகரித்ததினால் கம்பெனியாருக்கு நஷ்டம் நேரிட்டதென்பதும் (2) எதிரி அவ்விதமாய் அபகரித்தது எந்த இடத்தில் எப்பொழுது செய்யப்பட்டதோ அந்த இடத்திலும் அதன் கணக்குகளை எந்த இடத்திற்கு எப்பொழுது அனுப்பவேண்டியதோ அந்த இடத்திலும் பணம் எந்த இடத்தில் செல்லாகவேண்டியதோ அந்தஇடத்திலும்என்றுஅதையும் ருஜுசெய்ய வேண்டியது. ராம்பிலாஸ் v. சக்கரவர்த்தி (1914) ம-வீ-நோ. 894ல் கற்றுணர்ந்த இரண்டுஜட்ஜுகள் சொல்வதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். வியாபார கம்பெனியாரின் பணத்தை மதராசுக்கனுப்ப வேண்டி யிருப்பதால் கம்பெனியாருக்கு மதராசில்நஷ்டம் நேரிட்டதென்னும் காரணத்தினல்மதராஸ் மூன்றாவது ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் டை கேசை விசாரணை செய்வதற்கு அதிகாரவறம்புண்டென்று பிரியாதிகள் வாதித்தார்கள். இந்த கேசுக்காதாரமாய் கனேஷிலால் v. நன்ட்கிஷோர் இ-லா-ரி. (1912) 34 அ 487; விர்தார் மேரு v. ஜெட்ஞபாய் (1906) 8 பம்-லா-ரி. 513 கேசுகளையும் எடுத்துக்கூறப்

பட்டன நாங்கள் மேற்கூறிய கேசுகளை இதற்கு ஆதாரமாய் எடுத்துக்கொண்டு கம்பெனியாருக்கு பின்னிட்டு மதராஸில் நஷ்டம் நேரிட்டதென்று ஒப்புக்கொண்டு மதராஸ் மூன்றாவது ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் இந்தகேசை விசாரணை செய்வதற்கு அதிகார வறம்புண்டென்று சொல்வதற்கு நியாயமில்லை யாகையால் நந்தியால் மாஜிஸ்ட்ரேட்டுதான் விசாரணைசெய்வதற்குஅதிகார வறம்புண்டென்று தீர்மானித்து பிரியாதை நந்தியால் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கொடுக்கும்படி உத்தரவுசெய்து பிரியாதை வாபஸ்செய்யும்படிக்கு தீர்மானிக்கின்றோம்.

இ-லா-ரி 39 ம 576. Krishnamachari v. Messrs. Shaw Wallace and Company I. L. R. 39 Madras 576.

நெ. 15.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் கூட்ஸ்ட்ராட்டர்.
{ மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியார்.

ஐயாகுட்டி மார்கோண்டான்—வாதி—அப்பீல்வாதி.

v.

பெரியசாமி கவுண்டன் வகையரா—பிரதிவாதிகள்—

ரெஸ்பான்டென்டுகள்.

இரண்டாவது அப்பீல் நெ. 1284 of 1912.

லாப்பாயின்ட்:—ஸ்வாதீனம் அல்லது பெந்தக கொதுவைகளுக்குட்பட்ட நிலங்களை இரண்டு கொதுவை மொத்தங்களையும் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 83-வது பிரிவின்படி கோர்ட்டில் கட்டிதான் நிலங்களின் ஸ்வாதீனம் பெறவேண்டும்; தண்டனை வட்டி (Penal rate) கட்டவேண்டிய அவசியமில்லை. நியாயமான வட்டிகட்டினால் போதுமென்பது.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்திருந்த ஸ்வாதீனக் கொதுவைக்கும் பெந்தக ஒத்திக்கும் உட்பட்டிருந்த சில நிலங்களை வாதி ஸ்வாதீனக் கொதுவை மொத்தத்தை ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் 83-வது பிரிவின்படி கோர்ட்டில் டேவுணியாக (Deposit) கட்டிவிட்டு அந்த நிலங்களை ஸ்வாதீனம்பெறுவதற்கு தாவாசெய்தான். பிரதிவாதி தன்பேருக்கு எழுதிக்கொடுத்திருந்த பெந்தக ஒத்தி பத்திரத்தின் மொத்தத்தையும் வாதி கட்டவேண்டுமென்று கேட்டான். அதற்குப்பின் வாதி மேற்சொன்ன ஒத்திப்பத்திரத்தின்கீழ் செல்லாகவேண்டிய அசல்வட்டி மொத்தத்தையும் கோர்ட்டில் கட்டிவிட்டார்; ஆனால் அந்த ஒத்திப் பத்திரத்தின்கீழ் அப்போதைக்கப்போது செலுத்திவரவேண்டிய வட்டியை வாய்தாப்படி செலுத்தத் தவறினால் அதிக வட்டிவீதம் எதிர்வட்டி கட்டிக் கொடுக்கவேண்டுமென்றிருந்த ஷரத்தின்படி வட்டி போட்டு கட்டாமல் ஆதியில் ஏற்பட்டிருந்த வட்டிவீதமாய் மாத்திரம் வட்டி கணக்கிட்டு கட்டினார். வட்டி கட்டவேண்டியதை கிரமப்படி கட்டத்தவறினால் அதிக வட்டிவீதம் எதிர்வட்டி கட்டவேண்டுமென்னும் ஷரத்து ஒரு தண்டனையான நிபந்தனையென்று வாதி தகரார்செய்தார். கோர்ட்டார் அப்படி அதிகமான எதிர்வட்டி கட்டவேண்டுமென்பது ஒரு தண்டனையான நிபந்தனைதானென்று தீர்மானித்து வாதி கட்டின வட்டி நியாயமான பிரதிபலன்தானென்று அவர் செலுத்தின மொத்தத்தை ஒப்புக்கொண்டார்கள். வாதி தான் முதலில் பணத்தை செலுத்தின தேதிமுதல் தனக்கு தாவா நிலங்களின் மாசூல் சேரவேண்டுமென்று தாவா செய்தார். ஆனால் கொதுவைப் பத்திரத்தின்கீழ் செலுத்தப்படவேண்டிய மொத்தம் முழுவதும் வாதி கோர்ட்டில் கட்டாததினால் வாதிக்கு யாதொரு மாசூல் கேட்பதற்கும் ஹக்கு கிடையாதென்று பிரதிவாதி தகரார் செய்தார்.

ஸ்வாதீனக் கொதுவைக்கும் பெந்தக ஒத்திக்கும் உட்பட்டிருந்த சில நிலங்களை கிரயத்துக்குப் பெற்றவன் மேற்கண்ட இரண்டு கொதுவைப் பத்திரங்களின்கீழ் செலுத்தப்படவேண்டிய மொத்தங்களை ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 83-வது பிரிவின்படி கோர்ட்டில் டேவுணியாய் (Deposit) கட்டிவிட்டுதான் அந்த நிலங்களின் ஸ்வாதீனம் பெறலாமென்றும் (2) மேற்கண்ட கொதுவை பத்திரத்தில் வட்டி கட்டத் தவறும்பட்சத்தில் தண்டனையாக அதிகமான எதிர்வட்டி கட்டவேண்டுமென்னும் ஷரத்திருந்தால் அவ்விதமான தண்டனையாய் கட்டவேண்டிய அதிக வட்டியை வாதி கோர்ட்டில் கட்ட பந்தப்பட்டவனல்லவென்றும் அவர் கட்டினது நியாயமானதென்று கோர்ட்டாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டி மொத்தமே போதுமான பிரதிபலனாகையால் வாதி இரண்டாவதுதடவை டிபாசிட் செய்த தேதிமுதல் தாவா நிலங்களின் மாசூல்களைக் கேட்க வாதிக்கு ஹக்குண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது.

திண்டிகல் டிஸ்ட்ரிக்ட் முனிசிப் கோர்ட்டு அசல் நெ. 104 of 1909-ல் பிறப்பிக்கப்பட்ட டிக்ரியின்பேரில் மதுரை ஜில்லா கோர்ட்டு அப்பீல் நெ. 376 of 1910-ல் செய்யப்பட்ட டிக்ரிக்கு விரோதமாய் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

கேசின் விபரம் மிஸ்டர் ஜஸ்டிஸ் கூட்ஸ்டிராட்டரின் தீர்மானத்தில் நன்கு விளங்கும்.

லாயர்கள்:—Mr. T. R. வெங்கடராம சாஸ்திரியார்—அப்பீல்வாதியின் வக்கீல், Mr. T. V. முத்துகிருஷ்ண ஐயர்—ரெஸ்பான்டென்டின் வக்கீல்.

ஹைக்கோர்ட்டார் தீர்மானம் - மிஸ்டர் ஜஸ்டிஸ் கூட்ஸ்ட்ராட்டர்:—இந்த வியாஜ்ஜியத்தில் வாதி தன்னுடைய நிலத்தின்பேரில் இரண்டு கடன் பத்திரங்கள் எழுதிக்கொடுத்திருந்தார். ஒன்று ஸ்வாதீன கொதுவை கடன்பத்திரமும் இன்னொன்று பெந்தக ஒத்திக் கடன்பத்திரம்.

வாதி கொதுவைமொத்தத்தை செலுத்திவிட்டு ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 83-து பிரிவில் சொல்லியிருக்கும் நடவடிக்கைப்படி நடத்தி தன்னுடைய சொத்தை மீட்டுக்கொள்ள இஷ்டமுள்ளவராய் கொதுவை பத்திரத்தின்கீழ் பாக்கியாயிருந்த மொத்தம் ரூபாய் 800-ம் 1908-வதுளு அக்டோபர்மீ 8உ கோர்ட்டில் கட்டிவிட்டார். பிரதிவாதி அந்த மொத்தத்தை பெற்றுக்கொள்ளமாட்டேனென்று நிராகரித்து பெந்தக ஒத்திப் பத்திரத்தின்கீழ் பாக்கியாயிருந்த மொத்தத்தைக்கூட செலுத்த (டிப்பாஸிட்செய்ய) வாதி பந்தப்பட்டவராயிருக்கிறாரென்று தாவா செய்தார். அப்படியே ஷை பெந்தகப் பத்திரத்திற்காக சேரவேண்டிய மொத்தம் ரூபாய் 676–7–6யும் வாதிகோர்ட்டில்டிப்பாஸிட்செய்துதான் கட்டியிருக்கும் இரண்டுமொத்தங்களையும்முதல் பிரதிவாதியை பெற்றுக்கொள்ளும்படி ஆஜர்செய்தார். முதல் பிரதிவாதிக்கு ஒரு நோட்டீசு அனுப்பப்பட்டது அவர் கோர்ட்டில் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்யாமல் பணத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை. அதன்பேரில் நேரிடும் பாயின்ட் டென்னவென்றால்:—வாதி கடனைப் வாங்கிக்கொண்ட மொத்தம் ரூபா 300-க்கு ஷை பெந்தக ஒத்திப் பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது. அந்த பத்திரத்தில் ஷை ரூபா 300-க்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 100-க்கு ரூபா 1–6–0 வட்டி கட்டி வரவேண்டுமென்றும் அந்தப் பத்திரத்தில் கண்டிருந்த ஒரு வருஷ வாய்தாவிற்குள்ள அந்த வட்டி கட்டிவரத் தவறினால் தவறின தேதிமுதல் ரூபா 100-க்கு 2-விகிதம் சாதாரண வட்டியும் எதிர்வட்டியும் ஏறிவருமென்று நிபந்தனை கண்டிருந்தது. ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 83-வது பிரிவின்கீழ் வாதி அந்த தொகையை கோர்ட்டில் கட்டினபோது தண்டனையாக கண்டிருந்த வட்டிவீதம் கட்டவில்லை; ஆனால் கொதுவை மொத்தத்தை வாய்தா டபத்திற்குள் கட்டத் தவறின தேதிமுதல் ரூபா 100-க்கு ரூபா 1–6–0 வட்டி வீதம் எதிர்வட்டி மாத்திரம் கணககிட்டு வாதி கட்டினார். கொதுவைக்காக பாக்கியாயிருக்கும் மொத்தம் யாதென்று கோர்ட்டார் தீர்மானிக்கையில் கோர்ட்டில் கட்டியிருந்த மொத்தம் போதுமானதுதானென்று கண்டு முதல் பிரதிவாதியின் தாவாவிற்குச் செல்லாகவேண்டிய மொத்தத்தை வாதி கிரமமாய் பூர்த்தியாக செலுத்திவிட்டதாக தீர்மானித்தார்கள்.

கோர்ட்டில்கட்டின மொத்தம் பாக்கியாயிருந்ததாக கணக்கிட்டுக் கண்ட மொத்தமென்பது வாஸ்தவமான சமாச்சாரமாயிருந்திடினும் கடன் பத்திரத்தில் கண்டிருக்கிறபடி வட்டி பெற்றுக்கொள்ளாமல் கடன் கொடுத்தவராகிய (Creditor) பிரதிவாதி அல்லது கோர்ட்டார் எவ்வளவு தள்ளுபடி செய்வார்களோ அதைப்பற்றி கடன்தாரராகிய வாதி தனக்குத்தானே யூகித்துக்கொள்வது அவருடைய காரியமல்லவென்றும் ஆனால் வாதி கடன்பத்திரத்தில் கண்டிருக்கும் ஷரத்துபடிக்கு என்ன பாக்கி யேற்படுகிறதோ அந்த மொத்தத்தை அவர் (வாதி) கோர்ட்டில் கட்டிவிட்டு பிறகு எவ்வளவு வட்டி தள்ளுபடி செய்துக்கொள்ள தன்னால் கூடுமோ அவ்வளவு மொத்தத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டுமென்னும் காரணங்களினால் வாதி கோர்ட்டில் கட்டினதும் அதைப்பெற்றுக்கொள்ளும்படி ஆஜர் (Tender) செய்ததும் சட்டப்படி செல்லத்தக்கின தல்லவென்று எங்களெதிரில் வாதிக்கப்பட்டது. வாதி அந்தவட்டி மொத்தத்தை வாபஸ்பெற்றுக்கொள்ள முடியாதென்பதற்கு சட்டத்தில் யாதேனும் ஆதாரமிருப்பதாக ரெஸ்பான்டென்டும் எங்களுக்கு எடுத்துக்காட்டவில்லை. அவ்விதமான வாதத்திற்கு ஆதாரமிருப்பதாக எங்களுக்கும் விசிதமாய் புலப்படவில்லை. கொதுவை பணத்தை ஆஜர் செய்யவேண்டுமென்பதைப்பற்றி சில இங்கிலீஷ் கேசுகள் எடுத்துக் காட்டப்பட்டன. அவைகளில் ஸீர்லெஸ் v ஸாட்க்ரேவ் (Searles v. Sadgrave) (1855) 5 E. I. & B. L. 639 ஒன்று அந்த கேசில் கடனாய் கொடுக்கவேண்டியிருந்த முழு மொத்தத் தொகை £82-ல் (82 பவுனில்) கட்சிக்காரர்களுக்குள் ஒருவருக்கொருவர் பாக்கியாயிருந்த கடன் மொத்தத்தை (Cross Claim) கழித்துவிட்டு மிகுதி பாக்கி நின்ற தொகை £ 55–6–0 (55-பவுன் 6-ஷில்லிங்) கோர்ட்டில் ஆஜர்செய்யப்பட்டது. கோர்ட்டார் ஆஜர்செய்யவேண்டிய மொத்தம் முழுகடன் மொத்தமே யல்லாமல்மற்றப்படி கட்சிதாரர்களுக்குள் ஒருவருக்கொருவர் பாக்கியாயிருந்த கடன் மொத்தத்தை முழுகடன் தொகையிலிருந்து கழித்துக்கொள்ள ஹக்கு கிடையாதாகையால் முழுகடன் பணத்தை ஆஜர்செய்தால்தான் டென்டர் (Tender) சட்டப்படி செல்லத்தக்கினதென்று சொல்லப்படுமே யல்லாமல் மற்றப்படிக்கல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. இது வுமன்றி வெங்கடராமய்யர் v. ரங்கசாமி ஐயங்கார் (1912) 23 ம-லா-ஜ. 588 கேசையும் ஆதாரமாய் எடுத்துக் கூறப்பட்டது; அந்த கேசில் ஒரு பாகப் பிரிவினை தாவாவில் பாக்கியாயிருந்த மொத்தக் கொதுவைகடன் 5-ல் 4-பாகம் அதாவது $\frac{4}{5}$ கடன் தொகையை ஆஜர்செய்யப்பட்டது அப்படிப்பட்ட டென்டர் சட்டப்படி செல்லத்தக்கினதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது ஏனென்றால் அந்த கேசில் கட்சிதாரர்கள் பாகப்பிறிவினை செய்துக்கொண்டால் அவர்கள் என்ன தாமாஷாப்படி பாகித்துக்கொள்வார்களோ அந்த பாகாச்சாரம் இன்னதென்று கட்சிதாரர்களுக்குள் யாதொரு ஏற்பாடும் செய்துக்கொள்ளவில்லை. இந்த கேசுகளெல்லாம் பிரஸ்தாப தாவாவின் சந்தர்ப்பத்திற்கு ஒவ்வாமல் பேதப்படுகின்றன வாகையால் அவைகள் இந்த கேசிற்கு எவ்விதத்திலும் சம்பந்தப்படாது. ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்டின் 83-வது பிரிவில் செப்பியிருக்கும் பதங்கள் மிக்கத் தெளிவாயிருக்கின்றன அந்தப்பிரிவில் செய்யப்பட்டிருக்கும் சட்டம் யாதெனில் "அப்படிப்பட்ட தாவா (அதாவது, கொதுவை பணத்தை கட்டிவிட்டு கொதுவை வைத்திருந்த நிலங்களை மீட்டுக்கொள்ள கொண்டுவரும் தாவா) செய்ய ஹக்குள்ள கொதுவை வைத்தவரோ அல்லது அவர்தரப்பில் யாரோ அவர் எந்த கோர்ட்டில தாவாசெய்தாரோ அந்த கோர்ட்டில் கொதுவைப் பத்திரத்தின்கீழ் கொதுவைக்கடன் கொடுத்தவருக்கு எவ்வளவு மொத்தம் கடனாய் கொடுக்கவேண்டியதாக கணக்கில் ஏற்படுகிறதோ அந்த மொத்தத்தை கட்டலாம்." பிரஸ்தாப தாவாவில் சட்டப்படி பாக்கியாயிருந்த கடன் மொத்த மென்னமோ அது இவ்வளவென்று கோர்ட்டாரால் கண்டு தீர்மானிக்கப்பட்டது. வாதி கோர்ட்டில் கட்டியதும் அந்தமொத்தம்தான் கட்சிதாரர்களுக்குள் ஒருவருக்

கொருவர் பாக்கியாயிருந்த கடன் மொத்தத்தை (Cross Claim or set off) கழித்துக்கொள்ளப்பட்டதென்றாவது அல்லது பாக்கியாய் நிற்கும் மொத்தத்தில் சொற்ப மொத்தம் நிறுத்திக்கொள்ளப்பட்டதென்றாவது இந்தகேசில் யாதொரு தகரார் அல்லது கேள்வி கிடையாது. வாதி கோர்ட்டில் ஆஜர்செய்தது அவர் கிரமமாய் செலுத்தவேண்டிய கடன் மொத்தம்தான்; அது முழுகடன் மொத்தம்தானென்று கோர்ட்டாரும் கண்டு தீர்மானித்திருக்கிறார்கள். ஸ்வாதீனக் சொதுவைப் பத்திரத்திற்காக வாதி கோர்ட்டில் பணம்கட்டின தேதிமுதல் அதாவது 1908-ம் ஸ்ரீ அக்டோபர்மீ 9௳ முதல் மாசூல் கட்டிக்கொடுக்கும்படி கேட்கிறார்; ஆனால் கொதுவை,வைக்கப்பட்ட சொத்துகளை சிலர் சில்லாவாய் மீட்கலாகாதென்று புல்பெஞ்சார் இ-லா-ரி. (1915) 38 ம 927-ல் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால் வாதி பேற்கண்ட 1908ஸ்ரீ அக்டோபர்மீ 9௳ முதல் மாசூல் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று வாதிப்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

ஆகையால் இந்த அப்பீல் வாதிக்கு அனுகூலமாய் 1909ஸ்ரீ ஜனவரிமீ 29௳ முதல் நிலங்களை அவர்வசம் செய்யும்வரையில் வாதிக்கு மாசூல் சட்டிக்கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கின்றோம். சிலவுகளை தமாஷாப்படி கொடுக்கவும்.

இ-லா-ரி. 39 ம 579. Ayyakutti Markondan v. Periasawmi Gowndan 39 Mad. 579.

நெ. 16.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர். மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்.

அப்பீல் நெ. 89 of 1913.

நாராயண அண்ணாவிவகையரா—வாதிகள்—

அப்பீல் வாதிகள்

v.

K. ராமலிங்க அண்ணாவி மைனர்.

தர்மி அம்மாள் மைனரின் கார்டியன்—வகைரா—

(பிரதிவாதிகள்)—ரெஸ்பான்டென்டுகள்.

லாப்பாயின்ட்:—ஒருஹிந்து குடும்பத்தில் பாகப்பிறிவினை யாவதற்குமுன் விவாக மாகாத தாயாதி ஒருவன் பிறிவினைக்குப்பின் தன்னுடைய விவாகசிலவிற்காக குடும்பசொத்தில் ஒருபாகம் பிரித்து கொடுக்கும்படி கேட்க ஹக்குகிடையாதென்பது.

வியாஜியசங்கிரஹம்:—ஒருஹிந்து குடும்பசொத்தை பாகாச்சாரம் பிறிவினை செய்யும்படிக்கு ஒருகோர்ட்டில்வியாஜ்ஜியம் தாக்கல்செய்தபிறகும் டிக்ரிக்குமுன்பும் அந்த குடும்பத்திலுள் தாயாதி ஒருவனுக்கு விவாகமாகி சொற்பதொகை சிலவழிக்கப்பட்டது. அந்த ஏக குடும்பத்தின்பிறிவினை கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட டிக்ரியினால் செய்யப்பட்டதாகையால் அப்படி சிலவாயின மொத்தம் இவ்வளவென்று தாவாவில்யேற்படவேண்டிய கணக்கில அந்ததாயாதியின் பேரில பத்தெழுதி காண்பிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீனிவாசா v. திருவேங்கடத்தய்யங்கார் இ-லா-ரி. (1915) 38 ம 556 ஒப்புக்கொள்ளப்படவில்லை.

ஒருஹிந்து ஏககுடும்பத்தைச் சேர்ந்த ஒருவன்தன்னுடைய பாகத்திற்குச் சொந்தமாய் அந்தஏககுடும்பத்திலுள்ள சொத்துகளில் சில ஸ்தாவர சொத்துகளை (அசையாப்பொருள்களை) அக்கிரமமாயல்லாமல் நியாயமாகவே ஒருவருக்கு தானமாய் கொடுத்து விட்டால் அப்படி தானமாய்கொடுத்த தகப்பன் ஜீவதிசையாயிருக்கும்போது அவன்செய்த தானத்தைப்பற்றி யாதொருதகராரும் செய்யாத அவனுடைய அவிபக்தகுமாரன் தகப்பன் காலமாய்விட்டபின்பு அந்ததானம் செல்லத்தக்கினதல்ல வென்று ஆட்சேபணை செய்யாமலிருந்து விடுவானாகில் அவ்விதமாய் தானம் செய்தவன் இறந்து போனபின்பு அவனுடைய புத்திரனாவது அல்லது பேரனாவது அந்த தானம் சட்டப்படி செல்லத்தக்கினதல்லவென்று தகரார் செய்ய நியாயம் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது.

திருநெல்வேலி சப்கோர்ட்டு அசல் நெ. 10 of 1910-ல் செய்யப்பட்ட டிக்ரியின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

ஒருஹிந்து ஏககுடும்ப சொத்தைப்பாகப்பிறிவினை செய்யும்படிக்கு முதல் வாதியும் அவனுடைய இரண்டுமைனர் குமாரர்களும் (2, 3 வாதிகளும்) பிரதிவாதிகளாகிய அந்த ஏககுடும்பத்திலுள்ள இதர பாகஸ்தர்களின் பேரில் செய்யப்பட்ட வியாஜ்ஜியத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் இந்தஅப்பீல் செய்துக்கொள்ளப்பட்டது. முதல்வாதிக்கும் நான்காவது பிரதிவாதிக்கும் தகப்பன் 1908-ம் வருஷத்தில் நான்காவது பிரதிவாதிக்குத்தானமாய் கொடுத்துவிட்ட சிலஸ்தாவர சொத்துகளை வாதியின் சகோதரியினிடத்திலிருந்து சுவாதீன மடைவதற்காக நான்காவது பிரதிவாதியை இந்த தாவாவில் ஒருகட்சிதாரியாக சேர்க்கப்பட்டது. அந்தஹிந்து ஏககுடும்பத்தின் மற்றசந்ததியார்களாகிய ஒன்று முதல் மூன்றாவது பிரதிவாதிகள் அந்தகுடும்பத்திற்குச் சொந்தமான ஸ்தாவர சொத்துகளையும் குடும்பத்திற்கு வெளியிலிருந்து வசூலாகவேண்டிய உக்ராணிக்கடன்களையும் 1895-1896ல் பாகப்பிறிவினைச்செய்துவிடப்பட்டதென்றும் அப்படிபாகம் பிறிவினையானபிறகு வாங்கினசொத்துகள் அவர்களுக்குச் சொந்தமானசுயார்ஜிதமானதால் அவைகள்குடும்ப சொத்தைச்சேர்ந்தவைகளல்லவென்றும் இந்த வியாஜ்ஜியத்தை தாக்கல் செய்தபிறகு மைனராயிருந்த இரண்டாவது வாதிக்கு விவாகம்செய்ததில் சிலவான மொத்தம்முதல் கோர்ட்டாரால் டிக்ரி பிறப்பிக்கப்பட்டதற்குமுன் சிலவான மொத்தமென்றும் வாதம் செய்தார்கள். வாதிகள் அப்படி சிலவான தொகையை குடும்பசொத்திலிருந்து குடுக்கவேண்டு மென்றும் தாவா தேதியில் மைனராயிருந்த விவாகமாகாத மூன்றாவது வாதியின் விவாகச்சிலவிற்குடிக்ரியில் ஒருநிபந்தனை செய்யவேண்டுமென்றும் தாவாசெய்தார்கள் தாவாவை விசாரணைசெய்த திருநெல்வேலி சப்ஜட்ஜ் அவர்கள் குடும்பத்திற்கு வெளியிலிருந்து வசூலாகவேண்டிய உக்ராணிகடன்கள் மாத்திரம் 1895ம் வருஷத்தில் பாகப்பிறிவனை செய்யப்பட்டதென்றும் மற்ற விஷயங்களால் அந்தகுடும்பம் அவிபக்தகுடும்ப மாகவே தானிருந்ததாக கண்டு குடும்ப சொத்துகளைப் பாகப்பிறிவினை செய்யும்படிக்கு டிக்ரி

செய்தார்-வியாஜ்ஜியம் நடந்துகொண்டிருக்கையில் இரண்டாவது வாதிக்கு விவாகமானதில் செலவழிக்கப்பட்ட மொத்தம் கொடுக்கப்பட மாட்டாதென்றும், மூன்றாவது வாதிக்கு இனி நடக்கப்போகும் விவாக சிலவிற்கு டிக்ரியில் நிபந்தனை செய்யப்படமாட்டாதென்றும் தாவாவை தள்ளுபடி செய்துவிட்டார். நான்காம் பிரதிவாதிக்குச் செய்த தானம் செல்லத்தக்கினதென்றும் தீர்மானித்தார். வாதிகள் அவர்களுக்கு விரோதமாய் தீர்மானிக்கப்பட்ட விஷயங்களெல்லாவற்றைப்பற்றியும் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள். ஹைகோர்ட்டார் 1895-ம் ஸ்ரீத்தில் குடும்பத்திற்கு வெளியிலிருந்து வசூலாகவேண்டிய உக்ராணிதொகைகளில் சிலதுகள்மாத்திரம் பாகப்பிறிவினைசெய்யப்பட்டதென்றும் மற்ற உக்ராணிக் கடன்களும் அசையாப்பொருளும் பாகப் பிறிவினையாக வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். இந்தப்பிறிவினையைப்பற்றி ஹைகோர்ட்டார் சொல்லிய சாட்சியத்தை அவசியமல்லவென்று இந்த ரிப்போர்ட்டில் சொல்லாமலேயே நான்காவது பிரதிவாதிக்குச் செய்த தானம் சட்டப்படி செல்லத்தக்கினதா அல்லவாயென்பதைப்பற்றியும் இரண்டு மூன்றாவது வாதிகளின் விவாகச்சிலவுகளைப்பற்றி ஹைகோர்ட்டார் செய்த தீர்மானத்தையும் இந்த ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கின்றோம்.

Mr. K. ஸ்ரீனிவாசய்யங்காரும் Mr. S. ராமசாமி ஐயரும் அப்பீல் வாதிகளின் வக்கீல்.

Mr. A. ரங்கசாமி—முதல் ரெஸ்பான்டென்டின் வக்கீல்.

Mr K. ஜெகனாத ஐயர்—1 முதல் 6 ரெஸ்பான்டென்டுகளின் வக்கீல்.

Messrs. S. ஸ்ரீனிவாசய்யங்காரும், T. M. மீனாக்ஷிசுந்தரமய்யரும் 2, 3-வது ரெஸ்பான்டென்டுகளின் வக்கீல்கள்.

Mr. D. தேவதாஸ்—நான்காவது ரெஸ்பான்டென்டின் வக்கீல்.

ஹைகோர்ட்டாரின் தீர்மானம்:—Mr ஜஸ்டிஸ் சங்கரன் நாயர்:—இந்த கேசு பாகப்பிரிவினை செய்யும்படி கொண்டுவரப்பட்ட தாவா-அடியிற்கண்டிருக்கும் வம்சாவழியினால் கட்சிதாரர்களுடைய பந்துத்வத்தைத் தெரிந்துக்கொள்ளலாம்.



முதல்வாதி நாராயண அண்ணாவி காலமாய்விட்ட லக்ஷ்மி வராஹஅண்ணாவியின் குமாரன். இரண்டு மூன்று வாதிகள் முதல்வாதியின் மைனர் குமாரர்கள். 1, 2, 3 பிரதிவாதிகள் லக்ஷ்மி வராஹஅண்ணாவியின் சகோதரன் ராமலிங்க அண்ணாவியின் சந்ததியார்கள். முதல் வாதியின் சகோதரி நான்காவது பிரதிவாதி. அவளுடைய தகப்பன் அவளுக்கு சில சொத்துகளை கொடுத்ததாக சொல்லி அந்த சொத்துகளை தன்வசப்படுத்தும்படிக்கு தாவா செய்கின்றாள். தகப்பன் செய்த அவ்விதமான பராதீனங்கள் சட்டப்படி செல்லத்தக்கின தல்லவென்றும் அந்த சொத்துகளெல்லாம் இன்னும் ஏககுடும்பசொத்துகளாகவே குடும்பத்தில் அனுபவித்து வரப்படுகின்றனவென்றும் வாதிகள் சொல்லுகிறார்கள். 5, 6 பிரதிவாதிகள் (காலமாய்விட்ட தாயாதிகளின் இரண்டு விதவைகள்.) அவர்களுடைய ஜீவனாம்சத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று அவர்களை இந்த தாவாவில் கட்சிதாரர்களாய் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முத்துசாமி அண்ணாவி, ராமலிங்க அண்ணாவி லக்ஷிமிவாராஹ அண்ணாவி இம்மூன்று சகோதரர்கள் ஜீவித்திருக்கும் காலத்தில், அதாவது, 1895–1896 வருஷத்தில் குடும்பத்தில் பாகப்பிறிவினையாய்விட்டதென்றும் ராமலிங்க அண்ணாவி அவருடைய பாகத்திற்கு வந்தசொத்துகளை அவர் அனுபவித்து வந்ததாகவும் அவர் காலமாய்விட்டபின்பு முதல்பிரதிவாதியின்குமாரன் கிருஷ்ண அண்ணாவி அந்த சொத்துகளை பரிபாலனம்செய்துவந்ததாகவும், ராமலிங்க அண்ணாவியின்பரம்பரையார் அவர்களுடைய தனிசொத்துகளாய் அனுபவித்துவந்த சொத்துகளில் வாதிகள் பாகம் கேட்பதற்கு ஹக்குகிடையாதென்றும் முதல்பிரதிவாதி வாதிக்கின்றான். நான்காவது பிரதிவாதி அவளுக்கு அவளுடைய தகப்பன் கொடுத்த சொத்துகள் சட்டபடி செல்லதக்கினதுதானென்று வாதிக்கிறாள். குடும்பத்திற்கு வெளியிலிருந்து வசூலாகவேண்டிய உக்ராணிகடன்கள் மாத்திரம் 1895-1896-ம் வருஷத்தில் பாகப்பிறிவினை செய்யப்பட்டதென்றும், குடும்பநிலங்களையும், வீடுகளையும் பாகப்பிறிவினை செய்யாமல் அவிபக்தமாகவே நிருத்திவைத்துக் கொண்டார்களென்றும் உக்ராணிகடன்களை பாகித்ததில் இரண்டாவது பிரதிவாதிக்கு எட்டில் இரண்டுபாகம் கிடைத்ததாகவும், உக்ராணிகடன்களில் மிகுதியில் ரூ. 5000 முத்துசாமி அண்ணாவியின் பாகத்திற்கு வைத்ததாகவும் அதை ராமலிங்காவும், லக்ஷ்மிவராஹாவும் சமபாகமாய் பாகித்துக்கொண்டதாகவும் சப்ஜட்ஜ் கண்டு தீர்மானித்தார். இதுவுமன்றி III-வது குறிப்பிட்ட கிரயபத்திரத்தில் கண்டிருக்கும் நிலங்கள் இரண்டாவது பிரதிவாதியின் சுயார்ஜிதமான தனிசொத்துகளென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பாகப்பிறிவினைக்குப்பின் குடும்பத்தாரால் கிரயத்திற்கு வாங்கப்பட்ட சொத்துகளை 1895-1896 வருஷத்தில் குடும்பத்திற்கு வசூலாகவேண்டிய கடன்களை எவ்விதமாய் பங்கிட்டுக்கொண்டார்களோ அந்த தாமாஷாப்படி குடும்பத்தைச்சேர்ந்தவர்கள் பாகித்துக்கொள்ள வேண்டியதென்று உத்தரவு செய்யப்பட்டது. 1895-1896 வருஷத்தில் பாகப்பிறிவினை செய்யாமல் விட்டுவிடப்பட்டநிலங்களை பங்கிட்டுக்கொள்ள குடும்பத்தைச்ந்தவர்கள் ஹிந்துலாவின்படி என்னென்ன பாகங்களுக்கு உறித்தானவர்களாவார்களோ அவ்விதமாய் பாகித்துக்கொள்ளும்படி தீர்மானிக்கப்பட்டது. நான்காவது பிரதிவாதிக்குச்செய்த பராதீனங்கள் சட்டப்படி செல்லத்தக்கினவைகள்தானென்று சப்ஜட்ஜ் தீர்மானித்தார். கீழ்கோர்ட்டாரால் கண்டு தீர்மானிக்கப்பட்ட இவ்விஷயங்களெல்லாம் சரியானவை யல்லவென்று அப்பீலில் வாதிக்கப்பட்டது.

கனம்பொருந்திய ஹைகோர்ட்டு ஜட்ஜுகள் குடும்பத்தின் நிலமையும் பாகப்பிறிவினையைப்பற்றியும் தீரணைசெய்தபின்பு அடியில் விவரித்திருக்கும்வண்ணம் யோசிக்கலானார்கள் :—

XV (c) ஷெடியூலில் விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளின் விஷயமாய் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் தானபத்திரம் 1908வது ஞு நவம்பர் மீ 4ௗ தான் கையெழுத்து செய்துகொடுக்கப்பட்டது. அது நான்காவது பிரதிவாதியின் தகப்பனால் அவளுக்கு ஸ்ரீதனமாய் கொடுக்கப்பட்டது இந்த தானப்பத்திரம் சட்டப்படி செல்லத் தக்கினதல்லவென்று தகப்பன் ஜீவித்திருக்கும் காலத்திலேயே தகரார் செய்யப்பட்டிருந்தால் இப்பொழுது ஏக குடும்பத்திற்குச் சொந்தமாயுள்ள சொத்துகளில் அவனுக்குறிய பாகத்தை அவன் (தகப்பன்) அப்பொழுதே தாவாசெய்து அவைகளை யடைந்து அவள் கோரிக்கையின்படி அவளுக்கு சிலசொத்துகளை கொடுத்திருப்பான். அவனுக்குள்ள பாகத்தை யோசித்து அவன் செய்த தானம் நியாயமானதல்லவென்று நாங்கள் சொல்லத்துணியோம். சுந்தர ராமய்ய v. சீதம்மா. இ-லா-ரி. (1912) 35 ம 628 பார்க்கவும். அதுவுமல்லாமல் அந்த தகப்பனுடைய விருத்தாப்பிய காலத்தில் அவன் அவளிடத்தில்தான் வாசம்செய்துக்கொண்டிருந்தான் அவளும் அவனை (தகப்பனை) நன்றாய் பாதுகாத்துவந்தாள். அவள் தன்னுடைய தகப்பனை ஜாக்கிரதையாய் பாதுகார்த்துவந்ததை யோசித்தே இந்த சொத்துகளெல்லாம் அவளுக்குத் தானமாய்கொடுக்கப்பட்டன. ஆகையால் இவ்விதமாய் செய்யப்பட்ட விலகாரங்களெல்லாம் தானமாக பாவிக்கப்பட மாட்டாது. இத்தியாதிகாரணங்களை யோசித்து டை தானம் சட்டப்படி செல்லத்தக்கினதல்லவென்று சொல்லலாகாதென்பதாய் நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம். 2, 3, வாதிகளின் விவாகங்களுக்காக நேரிடும் சிலவுகளில் யாதோ சிலதொகையை கொடுக்கும்படி கேட்க வாதிகளுக்கு ஹக்குண்டா இல்லையா யென்பதைப்பற்றிய 9-வது இஷ்யூவின் விஷயமாய் கீழ்கோர்ட்டார் கண்டு தீர்மானித்ததைப்பற்றி அப்பீலில் பிறகு வாதிக்கப்பட்டது. இரண்டு மூன்று வாதிகள் முதல் வாதியின் குமாரர்கள் ; தாவாகோர்ட்டில் நடந்துக்கொண்டிருக்கையில் இரண்டாவது வாதியின்விவாகம் நடந்து சில சிலவுகள் நேரிட்டன. மூன்றும் வாதிக்கு இன்னும் விவாகமாகவில்லை. ஒரு ஹிந்து குடும்பத்திலுள்ளவனுக்கு விவாகம் செய்யவேண்டியது ஹிந்துக்களின் வழக்கப்படி சகஜமாய் செய்துதான் தீரவேண்டிய காரியமானதால் அவனுடைய விவாகச்சிலவுகளை அவன் எந்தகுடும்பத்தைச் சேர்ந்தவனாயிருக்கிறானோ அந்த குடும்பத்தின் ஏககுடும்பசொத்திலிருந்துதான் செய்யவேண்டியது. காமேஸ்வரசாஸ்திரி v. வீராசார்லு இ-லா-ரி. (1911) 34 ம 422 பார்க்கவும். பிரஸ்தாப தாவாவில் ஏககுடும்ப சொத்தை பாகப்பிறிவினை செய்யும்படிக்கு கீழ்கோர்ட்டார் பிறப்பித்த அப்பீல்செய்துக்கொள்ளப்பட்ட டிக்ரியினால்தான் தீர்மானிக்கப்பட்டது. தண்டாயுதபாணி v. ரகுநாதா இ-லா-ரி. (1912) 35 ம 239 பார்க்கவும். இரண்டாவது வாதியின் விவாக சிலவுகளைப்பற்றி கீழ்கோர்ட்டார் செய்த தீர்மானம் சரியானதென்று சொல்வதற்கு நியாயமில்லை. தாவாவில் எடுக்கவேண்டிய கணக்கில் அந்த சிலவுகளை வாதிகளின்பேரில் பத்தெழுதவேண்டியதுதான். மூன்றுவது வாதியின் விவாக சிலவுகளைப்பற்றி சீனிவாசா v. திருவேங்கடத்தையங்கார் இ-லா-ரி. (1915) 38 ம 556 ஆதாரமாய் எடுத்துக் கூறப்பட்டது. அதில் இரண்டு ஜட்ஜுகள் வேறே அபிப்பிராயப்பட்டு மூன்றுவது ஜட்ஜ் மாத்திரம் விவாகமாகாத தாயாதியின் விவாகச் சிலவுகள் பாகப்பிறிவினைகாலத்தில் அவனுக்கு அல்லது அவனுடைய கார்டியனுக்கு கொடுக்கப்படவேண்டியதுதானென்று தீர்மானித்திருக்கிறார். இந்த தீர்மானத்தை சரிதானென்று ஒப்புக்கொண்டு அதன்படி தீர்மானிக்க எங்களுக்கு இஷ்டமில்லை. இன்னும் அந்த கேசிற்கு ஆதாரமாய் வாதிக்கப்பட்ட ஹிந்து கிரந்தங்களின் சில அம்சங்களும் இந்த கேசுக்கு முக்கியமானதாக எங்களுக்குத் தோன்றவில்லையாகையால் 9-வது இஷ்யூவில் மூன்றுவது வாதியின் விவாக சிலவுகளைப்பற்றி விவாதத்திலிருக்கிற அம்சத்தை நாங்கள் வாதிகளுக்கு விரோதமாய் தீர்மானிக்கின்றோம்.

இந்த தாவாவில் விவாதத்திலிருந்த சகல அம்சங்களின் விஷயமாய் நாங்கள் கண்டு தீர்மானித்தபடி 1895—1896-வது வருஷத்தில் குடும்பத்திற்குச் சொந்தமாயிருந்த வீடுகளையும், மனை கட்டுகளையும், ஏக குடும்ப சொத்துகளாகவே பாகிக்கப்படவேண்டுமென்று டிக்ரி செய்கிறோம். சிலவுகளை கட்சிதாரர்கள் பொறுத்துக்கொள்ளவேண்டியது. இதற்காதாரமாய் கருதூரி கோபாலம் v. கருதூரி வெங்கடாாமன் (1915) 29 ம-லா-ஜ 710 சீப் ஜஸ்டிஸ் வாலிஸ், மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர், தீர்மானம். இந்தகேசில் ஸ்ரீ ஜெகன்னாதராஜு v. ஸ்ரீ ராஜபிரசாதராவ் இ-லா-ரி. 38 ம 556 ஒப்புக்கொள்ளப்பட்டது

இ-லா-ரி. 39 ம 587. Narayana v. Ramalinga I. L. R. 39 Mad. 587.

நெ. 17.

ஜட்ஜிகள்:— { சீப் ஜஸ்டிஸ் சர் ஜான் வாலிஸ், Kt. / மிஸ்டர் ஜஸ்டிஸ் கூட்ஸ் ட்ராட்டர்.

ராஜா தர்மகுமார வெங்கடப்பநாயினிம் பஹதூர் வாரு-அப்பீல்வாதி.

தமராங்கராவ்-ரெஸ்பான்டென்ட்.

அப்பீல் நெ. 225 and 136 of 1912.

லாப்பாயின்ட் :—காலம்சென்ற ஒரு ஹிந்துவின் இளைய விதவை குடும்பத்தைச்சேர்ந்த சபிந்தர்களுடைய (பந்துக்களுடைய) அனுமதியுடன் மூத்த விதவை யோசியாமலேயே அவளுக்குத் தெரியாமல ஒருவனை தத்தெடுத்துக்கொண்டால் அந்த ஸ்வீகாரம் ஹிந்துலாவின்படி செல்லத்தக்கினதுதானா ?

வியாஜ்ஜிய சங்கிரகம் :—ஒரு ஹிந்துவுக்கு இரண்டு மனைவிகளிருந்து அவன் காலமாய்விட்டால் இறந்துபோன புருஷன் தத்தெடுத்துக்கொள்ள உத்தரவளிக்காமல் மரணமாய்விடுவானாகில், சபிந்தர்களுடைய அனுமதியுடன் மூத்தமனைவிதான் ஒருவனை தத்தெடுத்துக்கொள்ள நியாயமுண்டென்று ஸர்ஜான் வாலிஸ் சீப் ஜஸ்டிஸ் தீர்மானித்தார்.

ஒரு குடும்பத்தில் ஒருவனுக்கு இரண்டு மனைவிகளிருந்தால் அவர்களில் மூத்தமனைவி இனத்தார்களில் ஒருத்தியானதால் இளையமனைவி மூத்தமனைவியுடன் ஆலோசனைசெய்து அவளுடைய அனுமதி பெற்றுத் தான் தத்தெடுத்துக்கொள்ளவேண்டுமென்று ராமனாத் கேஸ் 12 மூ-இ-அ. 397 (12 M. I. A.)ல் தீர்மானித்திருக்கிறது.

வட ஆற்காடு ஜில்லா கோர்ட்டு 1910ஞு அசல் நெ. 23-ல் செய்யப்பட்ட டிக்ரியின்பேரில் கொண்டு வரப்பட்ட அப்பீல்.

கேசின் விபரம் சீப் ஜஸ்டிஸ் வாலிஸ் தீர்மானத்தில் நன்கு விளங்கும்.

லாயர்கள் :—Messrs. A. கிருஷ்ணசாமி ஐயர், T. M. கிருஷ்ணசாமி ஐயர்—அப்பீல் வாதியின் வக்கில்கள்.

Messrs. T. V. வெங்கடராமய்யர், V. ராமேசன்—ரெஸ்பான்டென்டின் வக்கீல்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம் :—கெங்காதர ராம நாயினிம் என்பவர் காலமாய்விட்டபிறகு அவருடைய சொத்துக்கு ஹக்குதாரனாய் யாராவது ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ளமாட்டேனென்று அவருடைய மூத்தமனைவி நிராகரித்து விட்ட பிறகு இளைய மனைவி சம்பந்தர்களுடைய அனுமதியுடன் வாதியை தத்தெடுத்துக் கொண்டாளென்னும் காரணத்தால் அப்பீல்வாதியாகிய வாதி காலமாய்விட்ட கெங்காதரநாயினிம் என்பவருடைய ஆஸ்திக்குத்தான் சுதந்தரவாளி (வார்சு) யென்று கண்டு தாவாசெய்தான். மூத்தமனைவி யாராவது ஒரு பிள்ளையை தத்தெடுத்துக் கொள்ளமாட்டேனென்று நிராகரித்துவிட்டதாக சொல்வது உண்மையல்லவென்று ஜில்லா ஜட்ஜு கண்டு தீர்மானித்திருப்பதை நாங்களும் ஒப்புக்கொள்ளுகிறோம். இது இப்படிக்கிருக்க மூத்தமனைவி அவளுடைய புருஷன் காலமாய்விட்ட சொற்பகாலத்திற்கெல்லாம் குடும்பத்தைவிட்டுப் போய்விட்டதாகவும் அவள் (மூத்தமனைவி) அவளுடைய புருஷன் ஜீவித்திருந்தகாலத்தில் அவன் மரணமடைந்தவுடனே ஒரு பிள்ளையை தத்தெடுத்துக் கொள்ளும்படி அவளுக்கு அதிகாரமளித்ததாக ஸ்தாபித்தாள். இளையமனைவி வாதியை தத்தெடுத்துக் கொண்ட இரண்டு தினங்களுக்குள்ளாகவும், மூத்த மனைவி இளையவள் தத்தெடுத்துக்கொண்ட சமாச்சாரத்தைக் கேட்டவுடனே மூத்தமனைவி அவளுடைய காலமாய்விட்ட புருஷன் ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ளும்படி அவளுக்கு உத்தரவளித்தபடி அவ்ள் பிரதிவாதியை தத்தெடுத்துக்கொள்வதற்கான சடங்குகள் செய்ததாகவும் தெரியவருகிறது. இவ்விதமாய் காலமாய்விட்ட புருஷன் தத்தெடுத்துக் கொள்ள உத்தரவளித்திருப்பதாக சொல்வதை ருஜு செய்யவில்லையென்று ஜில்லா ஜட்ஜு கண்டு தீர்மானித்திருக்கிறார். இளையமனைவி மூத்த மனைவியின் அனுமதியில்லாமல் ஒரு பிள்ளையை தத்தெடுத்துக் கொண்டாளென்னும் காரணத்தால் அவள் (இளைய மனைவி,) ஒரு பிள்ளையை ஸ்வீகாரமாய் எடுத்துக்கொண்டது சட்டப்படி செல்லத்தக்கின தல்லவென்று ஜில்லா ஜட்ஜ் கண்டு தீர்மானித்திருப்பதால் நாம் மேலேசொல்லியது இந்தக்கேசை பாதிக்காது. அவள் நெருங்கிய அனந்தரவார்சுகளில் ஒருவளாகிய மூத்த மனைவியின் சம்மதமின்றி இளைய மனைவி தத்தெடுத்துக்கொண்டது சட்டப்படி செல்லத்தக்கின தல்லவாகையால் வாதி இந்த தாவா செய்வதற்கு ஹக்கு கிடையாது. மூத்தமனைவியின் சம்மதமின்றி ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்துக்கொள்ள நியாயமில்லையென்று ஜில்லாஜட்ஜ் கண்டு தீர்மானித்திருப்பது காக்கர்ல சுக்கம்மா v. காக்கர்ல புன்னம்மா (1914) 28 ம-லா-ஜ. 72-ல் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர், மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர் தீர்மானித்திருப்பதின்படி கண்டு தீர்மானித்திருப்பதாக தெரியவருகிறது. அந்த

கேசில் மூத்தமனைவிதான் ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ள ஹக்குண்டென்றும் இளைய மனைவி ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்வதற்கு ஹக்கு கிடையாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஷை கேசில் தீர்மானம்செய்த ஜட்ஜுகளில் ஒருவர் மிக்க அநுபோகமுள்ள ஒரு ஹிந்து; அவர் பம்பாய் கல்கத்தா ஹைக்கோர்ட்டுகளின் தீர்மானங்களை ஆதாரமாய்க்கொண்டு தீர்மானம் செய்திருக்கிறார்.

இந்த கேசில் வாதிக்கப்பட்ட லாப்பாயின்ட் மிக்க முக்கியமானது. இப்படிப்பட்ட பாயின்ட் இதற்குமுன் ஹைக்கோர்ட்டாருடைய ஆலோசனைக்குவந்ததகிடையாது. இப்பொழுதும் இந்த பாயின்டைப்பற்றி அப்பீல்வாதியின் வக்கீல் Mr. A. கிருஷ்ணசாமி ஐயரும் ரெஸ்பான்டென்டின் வக்கீல் Mr. T. V. வெங்கடராமய்யரும் மிக்க வற்புறுத்தி வாதாடினார்கள். அவர்களுடைய வாதங்களை மிக்க கவனத்துடன் யோசனைசெய்ததில் மேலேசொல்லிய ஜட்ஜுகளுடைய தீர்மானத்தையாவது அல்லது அவர்கள் சொல்லிய ஆதாரங்களையாவது பேதித்துச்சொல்வதற்கு எனக்கு யாதொரு காரணமும் தோன்றவில்லை.

மூத்தமனைவி மதாச்சாரசடங்குகளை செய்வதற்குள்ளமேலானஹக்குகளென்றும்என்னுடையமனதிற்குதிடமாய் தெரியவந்ததாக நான் அபிப்பிராயப்படுகிறேன். மித்தாக்ஷரத்தின் 1-வது புத்தகம் III-வது அத்தியாயம் 88-வது சுலோகம் தர்ஜமாசெய்யப்பட்டு எங்களெதிரில் கொண்டுவரப்பட்டது. அதில் யாக்ஞ வல்கியாவின் - Yagnavalkya, கிரந்தம் முதலில் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது "ஒரே குடும்பத்தைச்சேர்ந்த பெண்சாதி ஒருவளிருக்கையில் மற்றவர்களோடு மதாச்சார சடங்குகள் செய்யலாகாது. ஒரு குடும்பத்தில் ஒருவனுக்கு ஒரு பெண்சாதிக்கு அதிகமாயிருந்தால் மதாச்சார சடங்குகள் செய்வதற்கு மூத்தமனைவியே உரித்தானவள்." இந்த சுலோகத்தின்பேரில் யாக்ஞவல்கியர் எழுதியிருக்கும் வியாக்கியானத்தை இதனடியில் காணலாம்:—"ஒரு குடும்பத்தைச்சேர்ந்த பெண்ஜாதி யிருக்கையில் வேறே ஜாதியிலிருக்கும் பெண்ஜாதிகளுடன் மதாச்சார சடங்குகள் செய்யலாகாது. ஒரே இனத்தைச்சேர்ந்த பெண்சாதிகள் அனேகரிருந்தால் மூத்த மனைவியை நீக்கி இரண்டாவது அல்லது மூன்றாவது அல்லது நடு அல்லது எல்லாரிலும் கடசி மனைவியை மதாச்சார சடங்குகள் செய்வதற்கு விடலாகாது." இதற் காதாரமாய் கோல் புரூக் டைஜெஸ்ட் (Cole brooke Digest) இரண்டாவது வால்யம் 124 to 126 பக்கங்கள் பார்க்கவும். தக்ஷண இந்தியாவின் ஜனங்களின் நடவடிக்கைகளைப்பற்றியும், பழக்கங்களைப்பற்றியும் 1831௵த்தில் செய்த விசாரணையில் கூட மூத்தமனைவி தான் ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ள ஹக்குள்ளவளென்று கண்டிருக்கிறது. (ஹிந்து மதத்தைச்சேர்ந்த பலவிதமான ஜாதியாருடைய பழக்கத்தைப்பற்றியுள்ள ஸ்டீல் லா (Steele's Law) 48-வது பக்கம் பார்க்கவும். படாஜிராவ் v. ராமராவ் இ-லா-ரி. (1888) 13 பம் 160-ல் சீப்ஜஸ்டிஸ் ஸார்ஜென்ட் என்பவர் ஒரு ஹிந்துவின் மூத்த மனைவி அவனுக்கு பத்னி "Patni" என்று சொல்லப்படுவாளாகையால் அவள்தான் அவனுடைய புருஷனுக்குச் செய்யவேண்டிய மதாச்சார சடங்குகளை செய்ய உரித்தானவளென்று சொல்லவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார். தக்ஷண தேசத்தில் வழங்கிவரும் பழக்கத்தை கற்றுணர்ந்த ஜட்ஜ் இங்கே விவரித்துச் சொல்லியிருக்கிறார். அப்பீல் வாதியின் வக்கீல் அந்த ஜட்ஜ் சொல்லியபடி மூத்தமனைவியை மாத்திரம் "பத்னி" யென்று சொல்லலாகாது மற்ற மனைவிகளையும் "பத்னி" யென்று சொல்லலாமென்று வாதித்தார். அந்த வாதம் மூத்தமனைவிதான் மதாச்சார சடங்குகளை செய்வதற் குரித்தானவளென்பதை பாதிக்கமாட்டாது. "பத்னி - Patni" என்னும் பதத்திற்கு அர்த்தம் ஜனேகினாத் முகோபதியா v. மதுரநாத் முகோபதியா v. மதுரனாத் முகோபதியா இ-லா-ரி. (1883) 9 கல் 580, 583-ல் செப்பியிருக்கும் மித்தாக்ஷரம், வீரமித்ரோதயம் சுலோகங்களினால் நன்றாய் விளங்கும், "Ni - னி" என்னும் எழுத்தை "பதி" என்னும் பதத்திற்குச் சேர்த்து "பத்னி" என்னும் பதம் உண்டாயிற்றென்றும் "பதி" என்னும் பதத்திற்கு "புருஷன்" அதாவது மதாச்சாரமான பரிசுத்தமுள்ள கிரியைகளைச் செய்வதற்கு ஹக்குள்ளவனென்று அர்த்தமாகுமென்று மிக்க பெயர்போன கற்றுணர்ந்த இலக்கண வித்வானாகிய "பனினி - Panini" என்பவர் சொல்லியிருக்கிறார். இந்த பனினி என்னும் இலக்கண வித்வான் சொல்லியதைக்கொண்டே எல்லா வியாக்கியானிகளும், விக்னேஸ்வரரும், ஒரு ஹிந்துவினுடைய பெண்சாதிகளெல்லோரும் "பத்னிகள்" தானென்றும் அவர்களெல்லோரும் காலமான புருஷனுடைய சொத்தை பாகித்துக்கொள்ள ஹக்குள்ளவர்களென்றும் சொல்லியிருக்கிறார்கள். மித்தாக்ஷரத்தை (Mitakshara,) கோல்புரூக் (Cole brooke) தர்ஜமா செய்திருப்பதில் இந்த வாக்கியத்தை விட்டுவிட்டிருப்பதை நோக்குமளவில் காலமாய்விட்ட புருஷனுடைய சொத்துகளை மூத்தமனைவிதான் அவனுக்கு வார்சாக அடைய சுதந்தரமுள்ளவளாவாளென்று ஸ்ட்ரேஞ்ஜ் (Strange) என்பவர் கொண்ட அபிப்பிராயத்திற்கு ஒவ்வினதாயிருக்கிறது. ஸ்ட்ரேஞ்ஜ் என்பவர் இவ்விதமாய் கொண்ட அபிப்பிராயம் சரியானதல்லவென்று கிஸன்லாலா v. ஜவட்டபிரசாத் லாலா (1867) 3 மதாஸ் ஹைக் கோர்ட் ரிப்போர்ட் 346, 351-ல் தீர்மானித்திருக்கிறார்கள்.

மந்திராலோசனை சபையாரும் (Privy Council) அம்மாதிரியாகவே கெஜபதி நீலமணி v. கெஜபதி ராஜாமணி (1876) இ-லா-ரி. 1 ம 290, 293 P. C.-ல் மூத்தமனைவி பாகப்பிறிவினை யாகிறவரையில் காலமாய்விட்ட புருஷனுடைய சொத்துகளை பரிபாலனம் செய்ய ஹக்குள்ளவளாவாளே யல்லாமல் மற்றப்படி அவனுடைய சொத்துகளை மூத்தமனைவி அவனுக்கு வார்சாக அடைவாளென்பது சரியானதல்லவென்று தீர்மானித்திருக்கிறார்கள். காலமாய்விட்ட புருஷனுக்கு மதாச்சார சடங்குகள் செய்வதற்கு மூத்தமனைவியுடன் இளையமனைவிகளுக்கும் ஹக்குண்டென்னும் காரணத்தால் இளைய மனைவிகளும் "பத்னி" மார்கள்தானென்று ஒப்புக்கொண்டாலும் மேலேசொல்லிய மிதாக்ஷரத்தில் சொல்லியிருப்பதை ஆதாரமாகக்கொண்டே மூத்தமனைவிதான் காலமாய்விட்ட புருஷனுக்கு மதாச்சார சடங்குகள்செய்ய சிரேஷ்டமானவளென்று சொல்லியிருப்பதைப்போலவே ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்வதற்கும் மூத்தமனைவிக்குத் தான் விசேஷ ஹக்குண்டென்பதற்கு ஷை மித்தாக்ஷரத்தில் சொல்லியிருப்பதே போதுமான ஆதாரமாய் எனக்குத் தோன்றுகிறது.

ரக்மாபாய் v. ராதாபாய் (1868) 5 பம். ஹைக்கோர்ட் ரிப்போர்ட் 192. (A. C. J.); படாஜிராவ் v. ராமாராவ் (1888) இ-லா-ரி. 13 பம். 160, 166- ஆகிய இந்த பம்பாய் தீர்மானங்கள் இந்த ராஜதானியின் விஷயமாய் ராமனாத் கேசில் (1886) 12 மூ-இ-அ. 397-முதற்கொண்டு இன்னும் அனேக கேசுகளில் மந்திராலோசனை சபையா (Privy Council) ரால் செய்யப்பட்டிருக்கும் தீர்மானங்களுக்கு நேர்விரோதமாயிருப்பதால் கற்றுணர்ந்த ஜட்ஜுகள் ஷை பம்பாய் கேசுகளை இந்த ராஜதானியில் தத்தெடுத்துக்கொள்வதின் விஷயமாய் சம்பந்தப்படுமென்று தீர்மானித்திருப்பது பிசகென்று வாதிக்கப்பட்டது. ஆனால் அந்தகேசில் கற்றுணர்ந்த ஜட்ஜுகள் எடுத்துக்காட்டியிருப்பதைப்போல் இந்தியாதேசத்தின் ராஜதானிகளில் தத்தெடுத்துக்கொள்வதின் விஷயமாய் "வசிஷ்டா" என்னும் கிரந்தம்தான் தகுந்த ஆதாரமாய் அனுசரிக்கப்பட்டுவருகிறது. அந்த கிரந்தத்தில் சொல்லியிருப்பதென்னவென்றால் "(ஒரு ஹிந்து குடும்பத்தைச்சேர்ந்த) ஒரு ஸ்திரீயை அவளுடைய குடும்பத்திலுள்ள மூத்தவரின் (பெரியோரின்) அனுமதியின்றி ஒரு பிள்ளையை தத்தாக கொடுக்கவும் அல்லது தத்தாக ஒப்புக்கொண்டு ஸ்வீகாரம் செய்துக்கொள்ளவும் விடலாகாது."

ஆனால் அப்படி தத்தெடுத்துக்கொள்வதில் முக்கியமாயுள்ள பேதமென்னவென்றால் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ள அனுமதி கொடுக்கப்பட்ட சந்தர்ப்பம் எவ்விதமாய் கொடுக்கப்பட்டதென்பதை யோசிக்கவேண்டியதுதான். பங்காளத்தில் தத்தெடுத்துக்கொள்ள வெளிப்படையாய் அதிகாரம் கொடுக்கப்பட்டதென்று ருஜுசெய்யவேண்டியது அவசியம்; பம்பாயில் காலமாய்விட்ட புருஷன் பாகமாகாத ஒரு அவிபக்த ஏககுடும்பத்தைச் சேர்ந்தவனாயிருந்தானாகில் அப்படிப்பட்ட ஏககுடும்பத்தை பரிபாலனம்செய்துவரும் தலைவனாகிய மானேஜிங் மெம்பரின் அனுமதியை அவசியமாய்ப் பெறவேண்டியது. இல்லாவிடில் காலமாய்விட்ட புருஷன் அவ்விதமாய் தத்தெடுத்துக்கொள்ள அதிகாரம் கொடுத்திருப்பானென்று யூகித்துக்கொள்ளுவது வழக்கம்; இது இப்படியிருக்க மதராசில் கற்றுணர்ந்தஜட்ஜுகள் ராமனாத்கேஸ் முதல் அனேகவிதமான கேசுகளில் பலவிதமாய் யோசனைசெய்து காலமாய்விட்ட புருஷனுடைய அனுமதிக்குப் பதிலாய் அவனுடைய நெருங்கிய பந்துவின் அனுமதிபெற்றால் போதுமானதென்று தீர்மானித்திருக்கிறார்கள். பம்பாய் ஹைக்கோர்ட்டாருடைய தீர்மானங்களை அனுசரித்து காலமாய்விட்டபுருஷன் அவனுடைய இரண்டு மனைவிகளுக்கும் தத்தெடுத்துக்கொள்ள அதிகாரம்கொடுத்திருந்தால் அவன் அவ்விதமாய் கொடுத்த அதிகாரம் மூத்தமனைவிக்குதான் தத்தெடுத்துக்கொள்ள அதிகாரமுண்டென்று உத்தேசித்திருப்பானென்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் சொற்பகாலத்திற்குமுன் தீர்மானித்திருக்கிறார்கள். பம்பாய் ஹைக்கோர்ட்டாருடைய தீர்மானங்களில் சீப்ஜஸ்டிஸ் ஜெங்கின்ஸ் என்பவர் (Jenkins C. J.) ஹிந்து குடும்பத்தின் வழக்கங்களையும் செட்டையு மனுசரித்து ஹிந்து தர்மசாஸ்திரங்களின் கோட்பாடுகளையும் யோசித்து செய்திருக்கும் தீர்மானங்களாதலால் அதே கோட்பாட்டை இந்தக் கேசிலும் சம்பந்தப்படுத்தி தீர்மானிக்கலாமென்று எனக்குத் தோன்றுகிறது. இப்படிக்கில்லாமல் வேறேவிதமாய் அபிப்பிராயங்கொண்டால் சாஸ்திரப்பிரகாரம் செய்யவேண்டிய நடவடிக்கையை சாஸ்திரப்படி செய்யப்படாத ஒரு அயுக்தமான காரியமாய் விடுமென்று நான் நினைக்கிறேன்.

ரஞ்ஜீட்லால் v பிஜாய்கிருஷ்ணா (1912) இ-லா-ரி. 39 கல் 582, 586 பார்க்கவும். இவ்விதமாய் நான் சொல்லும் அபிப்பிராயங்களெல்லாம் சென்னை ராஜதானிக்குச் சம்பந்தப் பட்டவைகள்தானென்று சொல்லவேண்டும். அந்தக் கேசில் மதராஸ் ஹைக்கோர்ட்டார் ஸ்ரீ விராத பிரதாப ரகுனாதடியோ v. ஸ்ரீ ப்ரோஜோ கிஷோரோபட்டாடியோ (1876) இ-லா-ரி. 1 ம 81-ல் இவ்விஷயமாய் பங்காளத்திலுள்ள மிக்க கடினமான சட்டத்திற்கும் பம்பாயிலுள்ள விரிவான சட்டத்திற்கும் நடுத்தரமாக மதராசில் ஒரு சட்டமிருப்பதாக தீர்மானித்திருக்கிறார்கள். இதுவுமல்லாமல் தத்தெடுத்துக்கொள்வதின் விஷயமாயுள்ள ஹக்கு சுதந்தரங்களைப்பற்றி ஏககாலத்தில் நேரிடும் கஷ்டங்களை யோசித்தும், இன்னும் இந்த இரண்டு கேசுகளில் தவிர இவைகளுக்குமுன் நேரிட்ட மற்ற கேசுகளில் இளைய மனைவிகள் ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ள ஹக்குண்டென்று யாதேனும் ஒரு கோர்ட்டில் தாவா நேரிட்டதாக பிரத்தியேகமான ருஜுவில்லாமையினாலும் இதுவிஷயமாய் நம்மை யடுத்துள்ள மற்ற ராஜதானிகளில் தற்காலத்தில் நடந்தேறிவரும் சட்டத்திற்கும் மதராஸ் ராஜதானியிலுள்ள சட்டத்திற்கும் வித்தியாசமுண்டென்று யார் சொல்லுகிறாரோ அதை ருஜுசெய்யவேண்டிய பொறுப்பு அவருடைய பொறுப்புதானென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். பாகிக்கக்கூடாத ஸ்திதிகளின் விஷயமாய் சொத்துகள் கட்டாயமாய் மூத்த மனைவிக்குத்தான் சேரவேண்டுமென்ற சட்டமிருக்க இளையமனைவி சபிந்தர்களின் (பந்துக்களின்) அனுமதியின்பேரில் சொத்துக்களை சுதந்தரப்படுத்திக்கொள்ள ஹக்குண்டென்று தீர்மானித்தால் அவள் அப்படி அந்த சொத்துகளை கைப்பற்றி அனுபவிப்பது மிக்க அனிச்சயமான காரியமாய்விடுமல்லவா. இதுவரையில் இளைய மனைவியாவது பந்துக்களாவது அவ்விதமாய் செய்யாமலிருப்பதினாலேயே இந்த ராஜதானியிலும்

பம்பாய் ராஜதானியிலுள்ள விதியை அனுசரித்துவருகிறார்களென்று மிக்கத்தெளிவாய் ஏற்படுவதினால் அதைவிட்டு வேறேவிதமாய் தீர்மானிப்பது ஒரு நூதனமாயிருக்கும். இளையமனைவிக்கும் அதே ஹக்குண்டென்பதாய் மந்திராலோசனை சபையாரின்தீர்மானத்தினால் ஏற்படுகிறதென்று வாதிக்கப்பட்டது. ஆனால் அந்த கேசில் இளையமனைவியின் ஹக்கைப்பற்றி யாதேனும்வாதம் நேரிட்டு யோசிக்கப்படவில்லை. அவர்களெதிரில் எதைப்பற்றி வாதிக்கப்பட்டதோ அதைப்பற்றி மாத்திரம் அவர்கள் தீர்மானம் செய்திருக்கிறார்களாகையால் இவ்விதமான வாதங்களை மிக்கஜாக்கிரதையாய் யோசிக்கவேண்டியதாயிருக்கிறது. ராமநாத் கேசில் (1868) 12 மூ-இ-அ. 397-ல் ஸ்மிருதிசந்திரிகா (Smrithi Chandrika) தத்தகமிமாம்ஸா (Dattaka Mimamsa) என்று சொல்லப்படும் சாஸ்திரங்களின் ஆதாரத்தின்பேரில்மாத்திரம் தீர்மானிக்காமல் இன்னும் ஒரு ஹிந்து விதவைக்கு அவளுடைய சுய இச்சையாய் தத்தெடுத்துக்கொள்ள அதிகாரமில்லையென்னும் காரணத்தினால் அவள் தன்னுடைய சப்பிந்தர்களாகிய பந்துக்களின் அனுமதிபெற்றுத்தான் தத்தெடுத்துக்கொள்ள வேண்டுமென்னும் பழக்கம் மதராசில் அநேககாலமாய் நடந்தேறிவருகிறதென்று ருஜு செய்யப்பட்ட சாட்சியத்தின்பேரிலும் தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. காலமாய்விட்ட புருஷனுடைய அநேக மனைவிகளில் எவள் முதலில் ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ளுகிறாளோ அந்த ஸ்வீகாரந்தான் சட்டப்படி செலாவணியுள்ளது என்னும் பாயின்ட்டும் அந்தக் கேசில் வாதிக்கப்பட்டு யோசிக்கப்படவில்லை. அந்தக் கேசின் தீர்மானத்தைப்பற்றி கனம்பொருந்திய மதராஸ் ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகள் (1876) இ-லா-ரி. 1 ம 81-ல் பந்துக்களுடைய அனுமதி பெறுவது போதுமானதுதானா என்பதைப்பற்றி விவரித்துச் சொல்லியிருப்பதும் இந்த கேசிலுள்ள பிரஸ்தாப பாயின்ட்டை பாதிக்கமாட்டாது. இந்தக் கேசுக்கு ஆதாரமாய் எடுத்துக் கூறிய இன்னொரு கேசில் வெல்லங்கி வெங்கடகிருஷ்ணராவ் v. வெங்கடராம லக்ஷ்மி (1876) இ-லா-ரி- 1 ம 174-ல் ஒரு ஹிந்து விதவைக்குப் பிறந்த சொந்த பிள்ளை காலமாய்விட்டபின் அவள் சப்பிந்தர்களாகிய பந்துக்களின் அனுமதியுடன் ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொண்டால் அந்த ஸ்வீகாரம் சட்டப்படி செல்லத்தக்கினதுதானா என்னும் பாயின்ட்டிற்கு பிரதியுத்தரமாய் கனம்பொருந்திய மதராஸ் ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகள் அந்த கேசில் காலமாய்விட்ட புருஷன் ஜீவித்திருந்தகாலத்தில் அவனுக்குப் பிறந்த சொந்த பிள்ளை காலமாய்விட்டால் இன்னொருபிள்ளையை தத்தெடுத்துக்கொள்ள அவனுடைய விதவையாகிய பெண்ஜாதிக்கு அதிகாரம் கொடுத்திருப்பான். அவள் அப்படி தன்னுடைய புருஷனுடைய அனுமதியின்பேரில் ஒரு பிள்ளையை ஸ்வீகாரம்செய்துக்கொள்ள அவளுக்கு ஹக்குண்டாயிருக்கும்பட்சத்தில் பிறகு அவள் அவளுடைய சப்பிந்தர்களாகிய பந்துக்களின் அனுமதிபெற்று தத்தெடுத்துக்கொள்ள நியாயமுண்டென்று தீர்மானித்தார்கள். அந்தக் கேசில் கற்றுணர்ந்த ஜட்ஜுகள் அவர்களெதிரில், சாட்சியமாயிருந்த சந்தர்ப்பங்களை அனுசரித்து ஒரு விதவை அவளுடைய புருஷனுடைய அனுமதியில்லாமல் பந்துக்களுடைய அனுமதியுடன் தத்தெடுத்துக்கொள்ளலாமென்று பொதுவான விதி ஏற்படுத்தியிருந்தாலும் ஒவ்வொரு கேசிலும் காலமாய்விட்ட புருஷனிடத்திலிருந்து லிகிதமூலமாய் அதிகாரம்பெற்று ஸ்வீகாரம் செய்திருந்தாலொழிய மற்றப்படி அவ்விதமான தத்து சட்டப்படி செல்லத்தக்கினதல்லவென்பதுதான் பெரும்பாலும் அந்தத் தீர்மானத்தின் நியாயமான கருத்து. அன்னபூர்ணி நாச்சியார் v. போர்ப்ஸ் (Forbes) 1900 இ-லா-ரி. 23 ம 1, 9-ல் மேற்சொல்லியகருத்துக்கு சற்று குறைவாகவே தீர்மானித்திருக்கிறது. அதில் "ஒரு ஹிந்து ஒருவன் காலமாய்விட்டபின் ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ள தன்னுடைய அநேக மனைவிகளில் ஒருவருக்கு அதிகாரம் கொடுக்கலாமென்பதற்கும் அல்லது அப்படி தத்தெடுத்துக்கொள்பவள் அந்த தத்தெடுத்துக்கொள்ளப்பட்ட பிள்ளைக்கு ஸ்வீகாரத்திற்குப்பின் அவனைப்பெற்ற சொந்த தாயாக பாவிக்கப்படவேண்டுமென்பதற்கும் சந்தேகமில்லையென்று மேற்சொல்லிய கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது." ஆகையால் காலமாய்விட்ட ஒரு ஹிந்துவினுடைய இளைய மனைவி மூத்தமனைவியை யோசியாமலேயே பந்துக்களுடைய அனுமதியுடன் தத்தெடுத்துக்கொள்ளலாமென்று தீர்மானிக்கும்படி எங்களெதிரில் மனு செய்துக்கொள்ளப்பட்டது. வெல்லங்கி வெங்கடகிருஷ்ணராவ் v. வெங்கடராமலக்ஷ்மி (1876) இ-லா-ரி. 1 ம 174-ன் தீர்மானத்தை தத்தெடுத்துக்கொள்ள கொடுக்கவேண்டிய அதிகாரம், ஹிந்துக்களின் பழக்கம், அனுகூலம் இவைகளெல்லாவற்றையும் ஆலோசித்து தீர்மானிக்கப்பட்ட ஷை ராமனுத் கேசுக்கு ஒவ்வினதென்று சொல்வது சுத்த அநீதியான சமாச்சாரம். ஏனென்றால் ஷை கேசில் பழக்கம் அதிகாரம், அனுகூலம் இவைகளைப்பற்றி யாதொரு கேள்வியும் சாட்சியமும் கிடையாதென்று நான் முன்னமேயே எடுத்துக் காட்டியிருக்கிறேன். பம்பாய் ஹைக்கோர்ட்டார் ரக்மாபாய் v. ராதாபாய் (1868) 5 பம். ஹைக்கோர்ட் ரிப்போர்ட் 192 (A. C. J.) ல் காலமாய்விட்ட ஒரு ஹிந்துவின் மூத்தமனைவி (விதவை) இளையமனைவியின் (விதவையின்) அனுமதியில்லாமலேயே ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ள அதிகாரமுண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மதராஸ் ஹைக்கோர்ட்டார் நாராயணசாமி v. மங்கம்மாள் (1905) இ-லா-ரி 28 ம 315-ல் இந்தியா தேசத்தின் இந்த பாகத்தில் ஒரு ஹிந்துவினுடைய

மூத்த விதவை (மனைவி) பந்துக்களுடைய அனுமதியுடன் இளையவிதவை (மனைவி)யின் சம்மந்தம் பெறுமலேயே தத்தெடுத்துக்கொள்ளலாமென்று தீர்மானித்திருப்பது ஒரு பிள்ளையை ஸ்வீகாரம்செய்துக்கொள்ள மூத்தமனைவி (விதவை)க்குத்தான் விசேஷ அதிகாரமுண்டென்று தீர்மானிப்பதற்கு ஆதாரமாயிருக்கிறதேயல்லாமல் மற்றப்படி இளையமனைவி (விதவை) மூத்தமனைவி (விதவை)யின் அனுமதிபெறுமல் தத்தெடுத்துக்கொள்ள ஹக்கு கிடையாதென்று தீர்மானிக்க ஒரு ஆதாரமாகாது. எது எப்படிக்கிருந்திடினும் ஒரு ஹிந்துவின் மூத்தமனைவி பந்துக்களில் ஒருத்தியாக அவளுடன் ஆலோசித்து தான் தத்தெடுத்துக்கொள்ளலாமென்று அவள் (மூத்தமனைவி) சொல்வதற்கு அவளுக்கு ஹக்குண்டென்று ரெஸ்பான்டெண்டின் வக்கீல் Mr. வெங்கடராமய்யர் வாதித்தார்; ஆனால் மூத்தமனைவி ஒரு சப்பிந்தர்யென்று சொல்லப்படும் ஒரு பந்துவல்லவென்றும் அவள் காலமாய்விட்ட புருஷனுடைய சொத்துகளுக்கு சுதந்தரவாளிகளாக கணக்கிடப்படும் வார்சுகளில் ஒருத்தியென்றும் எதிர்தரப்பு வக்கீலினால் வாதிக்கப்பட்டது. அந்தக் கேள்வியைப்பற்றி யோசிக்கவேண்டியது அவசியமென்று நான் நினைக்கவில்லை. ஆனால் ராமனுத் கேசை அனுசரிக்கும்பட்சத்தில் அந்தக்கேசில் ஜட்ஜுகள் தீர்மானித்தபடி தத்தெடுத்துக்கொள்ள மாமியார் முத்துவீராயியின் அனுமதி செல்லத்தக்கினதுதானென்று சொல்லவேண்டும். மூத்தமனைவி பந்துக்களில் ஒருத்திதானென்று நான் தீர்மானித்து இளைய மனைவி அவளை ஆலோசனைசெய்துதான் ஸ்வீகாரம் செய்துக்கொள்ள வேண்டுமென்றும் இளைய மனைவி அவளுடைய அனுமதிபெறுமலேயே தத்தெடுத்துக்கொண்டதினால் அந்த ஸ்வீகாரம் சட்டப்படி செல்லத்தக்கினதல்லவென்றும் தீர்மானிக்கிறேன். நான் முன்னமே சொல்லிய காரணங்களினால் அனந்தரவார்சுகளில் ஒருவனை ஆலோசனை செய்யவில்லையென்று ஜில்லா ஜட்ஜு கண்டு தீர்மானித்திருப்பதைப்பற்றிய சாட்சியத்தை ஆலோசிக்கவேண்டியது அவசியமாக எனக்குத் தோன்றவில்லை. அப்பீல் நெ. 225 சட்டப்படி டிக்ரிசெய்யத்தக்கின தல்லவாகையால் அதை சிலவுகளுடன் தள்ளுபடி செய்யவேண்டியதென்று நான் நினைக்கிறேன். முதல் பிரதிவாதியை மூத்தமனைவி தத்தெடுத்துக் கொண்டாளென்று கண்டு தீர்மானித்திருப்பதைப்பற்றி இந்த அப்பீலில் யோசிக்கவேண்டியது அனவசியம். ஆகையால் முதல் பிரதிவாதியை மூத்தமனைவி ஸ்வீகாரம் செய்துக்கொண்டது சட்டப்படி செல்லத்தக்கின தல்லவென்று கண்டு தீர்மானித்திருப்பதைப்பற்றி செய்யப்பட்ட எதிர் அப்பீலையும் (Cross Appeal) விசாரணை செய்யவேண்டியது அனவசியம். ஏனென்றால் அந்தக் கேள்வியைப்பற்றியதீர்மானம் இந்தக் கேசுக்கு சம்பந்தப்பட்டதல்ல. 136-வது நெம்பர் அப்பீல் கட்சிதாரர்களுடைய சம்மதத்தின்பேரில் வாபஸ் செய்துக்கொள்ளப்பட்டது. அந்த அப்பீலின் சிலவுகளைப்பற்றி உத்தரவுசெய்யப்படவில்லை.

கூட்ஸ்ட்ராட்டர்:—இந்த கேசில் மிக்க சமத்காரமாகவும், தெளிவாகவும் கூறின வாதங்களினால் நான் அநேக விஷயங்களைத் தெரிந்துக்கொண்டதற்கும் நான் இந்த கேசை தீர்மானிப்பதற்கு அவைகள் எனக்கு மிக்க சகாயமாயிருந்ததற்கும் நான் நன்றியறிவுள்ளவனு யிருக்கிறேனென்று வெளிப்படையாய்ச் சொல்ல நானும் இஷ்டப்படுகிறேன். இந்த கேசிலுள்ள பாயின்டைப்பற்றி இதுவரையில் ஏற்பட்டிருக்கும் சட்டம் யாதெனில்:—

வங்காளத்தில் (In Bengal) காலமாய்விட்ட புருஷன் அவனுடைய மனைவிக்கு (விதவைக்கு) அவன் மாணமடைவதற்கு முன்னமேயே தத்தெடுத்துக்கொள்ள அதிகாரம் கொடுத்திருந்தால்தான் அவள் அப்படி (ஸ்வீகாரம்) செய்யலாம்.

பம்பாயில் (In Bombay) ஒரு ஹிந்து விதவை அவளுடைய புருஷன் காலமாய்விட்டபின்பு ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொண்டால் அவளுடைய காலமாய்விட்ட புருஷன் அவளுக்கு கொடுத்திருந்த அதிகாரத்தினால்தான் அவ்விதமாய்ச் செய்தாளென்று யூகித்துக்கொள்வது வழக்கமாகையால் அவள் ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ள அவளுடைய புருஷன் அவளுக்கு அதிகாரம் கொடுத்தாரென்பதை ருஜு செய்யாமலேயே அவளுடைய சுய இச்சையாய் ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ளலாம்.

தென் இந்தியாவில் (In Southern India) ஒரு ஹிந்து விதவை அவளுடைய புருஷனால் கொடுக்கப்பட்ட அதிகாரமில்லாமலேயே புருஷனுடைய நெருங்கிய பந்துக்களின் அனுமதியுடன் ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ளலாம். ஒரு ஹிந்துவுக்கு ஒன்றுக்கதிகமாய் பெண்சாதிகளிருந்தால் அவன் தான் மாணமடைந்தபின்பு ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ள அவனுடைய பெண்சாதிகளில் யாருக்காவது ஒருத்திக்கு அதிகாரம் கொடுக்கலாம். அவனுடைய இஷ்டப்படி செய்வதற்கு யாதொரு ஆட்சேபனையும் கிடையாது அவன் தன்னுடைய மூத்தமனைவியை நீக்கி இளையமனைவிக்குகூட ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ள அதிகாரம் கொடுக்கலாம். புருஷன் கொடுத்திருந்த அதிகாரத்தைக்கொண்டு இளையமனைவிகூட ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்துக்கொள்ள சட்டமிருப்பதால் அவன் காலமாய்விட்டபின்பு அவனுடைய அதிகாரமில்லாமலேயே காலமாய்விட்ட புருஷனுக்கு சப்பிந்தர்களாகிய (நெருங்கிய பந்துக்களுடைய) அனுமதியுடன் அவள் ஒரு பிள்ளையை தத்தெடுத்துக்கொள்ள நியாயமுண்டென்று அப்பீல்வாதியின் வக்கீல் எங்களெதிரில் வாதித்தார். ஏனென்றால் சப்பிந்தர்களாகிய நெருங்கிய பந்துக்களின் அனுமதி பெறவேண்டுமென்னும் சட்டத்தின் கருத்து யாதெனில் அவ்விதமான சம்மதம் புருஷன் கொடுக்கும் அதிகாரத்துக்குச் சமானமாகப் பாவிக்கப்படுமென்று அவர் கூறினர். "சப்பிந்தர்களுடைய அதிகாரம்" பெறுவது என்பதற்கு பொருள் இன்னதென்பதற்கு ஆதாரமாய் வெல்லங்கி வெங்கடகிருஷ்ணராவ் v. வெங்கடராமலக்ஷ்மி (1876) இ-லா-ரி. 1 ம 174-ல்

கனம்பொருந்திய ஜட்ஜ் ஸர் ஜேம்ஸ் கால்வில் (Colvile) லின் தீர்மானத்தை எடுத்துக் காட்டப்பட்டது.

மதராஸைப்பார்க்கிலும் வங்காளத்தில் இதுவிஷயமாயுள்ள சட்டம் மிக்க கடினமான தென்றும் பம்பாயில் மிக்க லகுவான தென்றும் மேற் செப்பிய இரண்டு இடங்களிலும் (Bengal and Bombay) மூத்த மனைவி (விதவை)யின் அனுமதி பெறமல் அவளை நீக்கி இளைய மனைவி தத்தெடுத்துக்கொள்ள நியாயமில்லை யென்னும் விஷயத்தை மிக்க வற்புறுத்திப் பேசினர். இந்த வாதத்திற்காதாரமாய் பாடாஜி ராவ் v. ராமாராவ் (1888) இ-லா-ரி. 13 பம். 160; ரஞ்ஜீட்லால் v பிஜாய் கிருஷ்ண (1912) இ-லா-ரி. 39 கல் 582 பார்க்கவும். கோர்ட்டார் இரண்டு கேசுகளையும் தனித்தனியாய் வாசித்து :—வங்காளத்து கேஸில் காலமாய் விட்ட புருஷன் தத்தெடுத்துக்கொள்ள அதிகாரம் கொடுத்திருந்தான், அதிலும் மூத்த மனைவிக்குதான் ஹக்குண்டென்று கண்டிருக்கிறது, பம்பாய் கேசில் ஸ்வீகாரம் செய்துக்கொள்ள அதிகாரம் கொடுக்கப்பட்டதா இல்லையா யென்பது கேள்வியல்ல அப்படிக்கிருந்திடினும் அந்த கேஸில்கூட மூத்தமனைவியின் (விதவையின்) அனுமதி யில்லாமல் இளையமனைவி (விதவை) தத்தெடுத்துக் கொள்ளும் அதிகாரத்தை செலுத்தலாகாதென்று தீர்மானிக்கப்பட்டதென்று கண்டார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி ஐயர் இந்த இரண்டு கேசுகளும் மதராசுக்கு சம்பந்தப்படாதென்று சொன்னர். பிரஸ்தாப கேசுக்கும் மேற்கண்ட இரண்டு கேசுகளுக்கும் உள்ள பேதா பேதங்களை எடுத்துக் காட்டினர். கல்கத்தா கேஸு தத்தெடுத்துக் கொள்ள இருவருக்கு கொடுத்திருந்த அதிகாரத்தை எவ்விதமாய் அர்த்தம் செய்ய வேண்டுமென்பதைப் பற்றிய விதியேற்படுத்தப்பட்ட தென்றும்; பம்பாய் கேஸு அதிகாரம் கொடுத்திருந்ததாக யூகித்துக் கொள்ள வேண்டுமென்பதற்கு ஷை கல்கத்தா கேசில் சொல்லியிருப்பதை எவ்விதமாய் சம்பந்தப்படுத்தலா மென்பதைப் பற்றிய தென்றும் மேற்கண்ட இரண்டு கேஸுகளுக்கும் மதராஸ் கேஸுக்குமுள்ள பேதா பேதங்களை எடுத்துக்காட்டினர். இந்த கேசில் சப்பிந்தாக்கள் குறித்த ஓர் நபருக்கு தத்தெடுத்துக்கொள்ள அதிகாரம் கொடுத்திருப்பது சரிதானென்று நாங்கள் ஊர்ஜிதப் படுத்துவதைத் தடுப்பதற்கு மேற்கண்ட தீர்மானத்தில் யாதொன்றும் கிடையாதென்றும் ரெஸ்பான்டென்டின் வக்கீல் வாதித்தார்.

இங்கிலீஷ் தேசத்தில் இது விஷயமாய் அநேக காலம் தொன்றுதொட்டு என்ன பழக்கம் நடந்தேறி வருகிறதென்று வெளிப்படையாய் சொல்வதற்காக அந்த தேசத்திலுள்ள சாதாரணமான சட்டம் யாதென்று ஒரு இங்கிலீஷ் ஜட்ஜ் தீர்மானித்திருக்கிறர். (ஸ்டீபென்ஸ் ப்லாக்ஸ்டோன் வால்யூம் 1. முகவுரை, 1-வது பிரிவு. Stephen's Blackstone, Vol. I, introduction, Section I.) அவருடைய தீர்மானத்திற்காதாரமாய் எடுத்துக்கூறி யிருக்கிறர்.

ஹிந்து லாவில் யேற்படும் தகரார்களைத் தீர்மானிப்பதற்காதாரமாயுள்ள சாஸ்திர சம்மதமான தேவவாக்கியங்களின் சரியான அர்த்த மென்னவென்றும் பூர்வகாலத்தில் அந்த தேவ வாக்கியங்களின்மேல் செய்யப்பட்ட வியாக்கியானங்கள் இன்னதென்றும், இது விஷயமாயுள்ள கிரந்தங்கள் யாதென்றும், இந்தியாவிலுள்ள கோர்ட்டுகளிலும் மந்திராலோசனை சபையிலும் (Privy Council) இது விஷயமாய் என்ன தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றனவோ அவைகளையும் இந்தியாவிலுள்ள ஜட்ஜ் ஒருவர் வெளிப்படையாய் எடுத்துக் காண்பித்திருக்கிறர். தற்காலத்தில் சாஸ்திர சம்மதமான கல்பனை ஒன்றும் கிடையாது. மேற்கூறிய இங்கிலாந்து, இந்தியா இந்த இரண்டு தேசங்களிலும் சில முக்கியமான விஷயங்களைப் பற்றி முன்னமேயே செய்யப்பட்டுள்ள தீர்மானங்களின் கோட்பாட்டுகளையே ஆதாரமாய்க் கொண்டுதான் இப்பொழுது ஒரு ஜட்ஜ் தீர்மானிக்கவேண்டியதாயிருக்கிறது. இப்பொழுது நடந்தேறிவரும் பழக்கம் இன்னதென்று வேறே விதமாய் வாதித்தால் அப்படிப்பட்ட வாதம் முன் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களினுல் யேற்பட்டதென்று நியாயானுசாரமாய் எடுத்துக் காட்டவேண்டியது அவசியம். இது இப்படியிருக்க சப்பிந்தாக்களுடைய அனுமதி புருஷனுடைய அதிகாரத்தின் பேரிலிருந்தால் அவனுடைய (புருஷனுடைய) அனுமதிக்குச் சமானமாகுமென்று வெல்லங்கி வெங்கட கிருஷ்ண ராவ் v. வெங்கடாரம லக்ஷ்மி (1876) இ-லா-ரி. 1 ம 174-ல் தீர்மானித்திருப்பதை விட்டு வேறே விதமாய் தீர்மானிக்க எனக்கு இஷ்டமில்லை. அது கிரந்தங்களை யோசித்து தீர்மானிக்கப்பட்ட விஷயமாதலால் அதை விட்டு நீங்குவது ஒரு நூதனமான யேற்பாடாய் விடும். அப்படி செய்வதனுல் மிக்க கஷ்டமும் நேரிடும். இத்தியாதி சந்தர்ப்பங்களை யோசித்துத்தான் மதராஸ் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் இரண்டுபேர் காக்கார்ல சுக்கம்மா v. காக்கார்ல புன்னம்மா (1914) 28 மூ-லா-ஜ. 72-ல் தீர்மானித்திருக்கிறர்கள். அவர்களில் ஒருவராகிய மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் என்பவர் அவருக்குள்ள அநேக நாள் அனுபோகத்தை அனுசரித்து தீர்மானித்திருக்கிறரென்பது மிக்க விசேஷமான காரியம். இதுவுமன்றி கனம்பொருந்திய சீப் ஜஸ்டிஸ் வாலிஸ் அவர்களும் அம்மாதிரியாகவே அபிப்பிராயங் கொண்டு தீர்மானித்திருக்கிறர். அது அப்படிக்கிருக்க முன் செய்யப்பட்டுள்ள தீர்மானத்தைவிட்டு நான் வேறேவிதமாய் தீர்மானிக்க எத்தனித்தால் முன்னமே செய்யப்பட்டிருக்கும் தீர்மானம் சரியானதல்லவென்று சொல்லத் துணிந்தவனுவேனென்னும் காரணத்தால் நான் முன் தீர்மானத்தை மாற்றும்விஷயத்தில் நான் செய்வது பிசகென்று நினைக்கிறேன். வெல்லங்கி வெங்கடகிருஷ்ண ராவ் v. வெங்கடாராம லக்ஷ்மி (1876) 1-ம 174-ல் பிரிவிகவுன்சலர் சொல்லி யிருப்பவைகள் இந்த கேசுக்கு வாஸ்தவமாய் அனுவசியம்தானென்று சொல்லவேண்டும். காக்கார்ல சுக்கம்மா v. காக்கார்ல புன்னம்மா கேசில் அதாவது (1914) 28 ம-லா-ஜ 72-ல் செய்யப்பட்ட தீர்மானம் பிசகென்று வாதிக்க வேண்டுமானுல் இந்த கோர்ட்டிலில்லாமல் வேறே கோர்ட்டில் தான் அதை பிசகென்று வாதித்துப் போருட வேண்டும் ஆகையால் இந்த அப்பீல் செய்ய நியாயமில்லை யென்று கண்டு நான் அதை செலவுகளுடன் தள்ளுபடி செய்கிறேன். கனம் பொருந்திய சீப் ஜஸ்டிஸ் உத்தரவை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

இ-லா-ரி. 39-ம 772. Rajah Venkatappa Nayanim Bahadur v. Dhamara Ranga Rao. I. L. R. 39 Mad. 772.

The Indian Law Gazette.

PART II.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ளு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ளு ஏப்ரல்மீ [நெ. 4.

Reports of Cases.

கேஸ்களின் ரிப்போர்ட்டுகள்.

நெ. 18.

Madras High Court.

மதராஸ் ஹைக்கோர்ட்டு.

APPELLATE CRIMINAL.

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { சீப் ஜஸ்டிஸ் ஸர் ஜான் வாலிஸ், Kt. / மிஸ்டர் ஜஸ்டிஸ் கூட்ஸ் ட்ராட்டர்.

அபிபுல்லா ராவுத்தன் என்ற கபீப்ராவுத்தனும் இன்னும் 3 பேர்களும் ஸம்மந்தப்பட்ட 1915-ம் ளுத்து கிரிமினல் அப்பீல் நெ. 90.

லாபாய்ண்ட் :—எதிரிபேரில் சாட்டப்பட்ட குற்றத்தை ருஜு-ச் செய்யும் பொருட்டு வாதி தாப்பில் யாதொரு சாக்ஷியமும் விடப்படாமலிருக்கையில் எதிரிக்குக் கேழ்வி போட அல்லது எதிரியிடம் வாக்கு மூலம் வாங்க 1898-ம் ளுத்திய 5-வது ஆக்ட்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடின் 342-வது பிரிவுப்படி மாஜிஸ்ட்ரேட் அல்லது ஸெஷன்ஸ் ஜட்ஜுக்கு இருக்கும் பாத்தியதையை (அதிகாரத்தை) பற்றியும்—342-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாக எதிரியைக் கேழ்வி கேட்டு அந்த கேழ்விகளுக்கு அவன் கொடுக்கும் ஜவாப்புகளை எதிரிக்கு விரோதமாய் சாக்ஷியமாக எடுத்துக் கொள்ளக் கூடாதென்றதைப் பற்றியும்.

ஒரு கிரிமினல் கேசில் எதிரிபேரில் சாட்டப்பட்டிருக்கிற குற்றத்தை எதிரிகள் அல்லது எதிரிகளில் சிலர் செய்ததாக வாதி தரப்பில் எவ்விதமான சாக்ஷியமும் விடாமலிருக்கும்பொழுது அப்பேர்ப்பட்ட எதிரிகளைக் கேழ்வி கேழ்ப்பதற்காவது, அவர்களை வாக்கு மூலம் கொடுக்கும்படி சொல்லுவதர்க்காவது, கிரிமினல் புரொஸீஜர் கோடு 342-வது பிரிவுப்படிக்கு மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரமில்லை. ஸெஷன்ஸ் கோர்ட்டுகளில் விசாரணையாகும் கேசுகளுக்கும் இதே விதிதான் சம்மந்தப்படுகிறது. ஒரு கிரிமினல் கேசை ஸெஷன்ஸ் கோர்டாருடைய பரிசீலனைக்கு அனுப்பும் மாஜிஸ்ட்ரேட் (The Committing Magistrate) கிரிமினல் புரொஸீஜர் கோடு 342-வது பிரிவின் நிபந்தனைகளுக்கு

விரோதமாய் எதிரியை சில கேழ்விகள் கேட்டு அந்தக் கேழ்விகளுக்கு பிரதி உத்தரமாய் எதிரி சொன்ன வாக்கு மூலங்களையே ஸெஷன்ஸ் கோர்ட்டில் பின்னிட்டு நடக்கும் விசாரணையில், எதிரிக்கு விரோதமாக சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளக் கூடாது.

1904-ம் ஹுத்தில் மொஹிதீன் அப்துல்காதர் என்பவர், சக்கிரவர்த்தி அவர்கள்—இவர்களுக்குள் நடந்து இ-லா-ரி. 27 ம. 238-ம் பக்கத்திலும், 1854-ம் ஹுத்தில் சக்கிரவர்த்தினி அவர்களுக்கும்—பெர்ரிமான் என்பவருக்கும் நடந்து, காக்ஸ் கிரிமினல் கேசுகள் 6-வது வாலியம் 388-வது (6 Cox Cr. C. 388) பக்கத்திலும் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசுகளில் கண்ட நியாயங்களை அனுஸரித்து இந்தக் கேசு பைசல் செய்யப்பட்டிருக்கிறது.

கேசின் சுருக்கம்.—அரவக் குருச்சி 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் T. பழனியாண்டியா பிள்ளை, 1914-ம் ஹுத்திய போலீஸ் ரிப்போர்ட்டு நெ. 13-ன் மூலமாய் தெரிவிக்கப்பட்ட குற்றத்தை திருச்சினாப்பள்ளி ஸெஷன்ஸ் கோர்ட்டுக்கு கமிட்டு பண்ணி (விசாரணைக்கு அனுப்பி) அந்தக் கேசை ஷை கோர்ட்டில் 1915-ம் ஹுத்திய 7-ம் நெ. ஸெஷன்ஸ் கேசாக எடுத்துக் கொண்டு ஷை கேசின் எதிரிகளை டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் H. O. D. ஹார்டிங் துரை அவர்கள் தண்டனை செய்து விதித்த தீர்ப்பின் பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தக் கேசில் 2, 4-வது எதிரிகள், ஒரு ப்ராமிசரி நோட்டை (Promisory Note) சிருஷ்டனை செய்ததற்காகவும் 6, 7 எதிரிகள் ஷை சிருஷ்டனை செய்த குற்றத்திற்கு உடந்தையாக யிருந்ததாகவும் தண்டிக்கப்பட்டார்கள்.

இந்தத் தீர்ப்பின்பேரில் 2, 4, 6, 7 எதிரிகள் இந்த அப்பீலைச் செய்திருக்கிறார்கள்.

லாயர்கள் :—அப்பீல் வாதிகளுக்காக டாக்டர் S. சுவாமிநாதனும், கவர்ன்மெண்டு தரப்பில பப்ளிக் பிராஸிக்யூட்டருக்காக மிஸ்டர் C. விட்னி ஸ்மித்தும் ஆஜரானார்கள்.

டாக்டர் S. சுவாமிநாதன் பேசிய விஷயங்கள்—இந்தக் கேஸை ஸெஷன்ஸ் கோர்ட்டுக்கு கமிட்டுப் பண்ணின் மாஜிஸ்ட்ரேட்டு முன்பாக வாதி தரப்பில், 2, 6, 7 எதிரிகள்பேரில் யாதொரு சாக்ஷியமும் விடப்படவேயில்லை. ஆகையால், அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு எதிரிகளை ஏதும் கேழ்வி கேழ்க்கவாவது, அல்லது அவர்களிடம் வாக்குமூலம் வாங்கவாவது, அதிகாரமில்லை. வாதி தரப்பில் எதிரிகள் பேரில் குற்றஞ் சாட்டி சாக்ஷியம் விடப்பட்டிருந்தால் மட்டிலும் அப்பேர்ப்பட்ட சாக்ஷியங்களுக்கு எதிரி ஸமாதானம் சொல்லிக்கொள்ளும் பொருட்டாக, எதிரியைக் கேழ்க்கும்படி கி. பு. கோடு 342-வது பிரிவு மாஜிஸ்ட்ரேட்டுக்கு இடம் கொடுக்கும்-இந்தக் கேசை கமிட் செய்த அரவக் குருச்சி மாஜிஸ்ட்ரேட்டினாலும், தன்னாலும் கேழ்க்கப்பட்ட கேழ்விகளுக்கு எதிரிகள் சொன்ன ஜவாப்புகளினால் வெளியான அம்சங்களைக் கொண்டு ஸெஷன்ஸ் ஜட்ஜு இந்த எதிரிகளை தண்டனை செய்திருக்கிறார். அப்பேர்ப்பட்ட ஜவாப்புக்களையே எதிரிகளின்பேரில் சாக்ஷியமாய் எடுத்துக்கொள்ளக் கூடாது. எதிரிகள் குற்றம் செய்ததாக வாதி தரப்பில் சாக்ஷியம்விடத் தவறிப்போன காரணத்தால் எதிரிகள்பேரில் சாக்ஷியமில்லாமலிருக்கையில், ஒழுங்கீனமாக எதிரிகளிடமிருந்து வாங்கிய வாக்கு மூலத்தில்கண்ட சங்கதிகளை எதிரிக்கு விரோதமான சாக்ஷியமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. தான் சொன்ன வாதங்களுக்கு அனுஸரணையாக அடியில் கண்ட தீர்மானங்களை திருஷ்டாந்தமாய் எடுத்துக் காட்டினார்.

1. (1904) இ-லா-ரி. 27 ம. 238-ம் பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற மொய்தீன் அப்துல் காதர் ராவுத்தனுக்கும்—சக்கிரவர்த்தி அவர்களுக்கும் நடந்த கேசு. 2. (1898) இ-லா-ரி. 26 கல். 49-ல், சொல்லப்பட்டிருக்கிற, பசந்த குமார் சிட்டாக்—என்பவருக்கும்—சக்கிரவர்த்தினி அவர்களுக்கும் நடந்தகேசு 3. (1891) இ-லா-ரி. 13 அல. 345-ல் சொல்லப்பட்டிருக்கிற சக்கிரவர்த்தினி அவர்களுக்கும்—ஹாதார் வகையறுக்களுக்கும் நடந்த கேசு. 4. (1886) இ-லா-ரி. 9 ம. 224-ல் சொல்லப்பட்டிருக்கிற சக்கிரவர்த்தினி—விரன் இவர்களுக்குள் நடந்த கேசு. 5. லா ரிப்போர்ட்டுகளில் பிரசுரம் செய்யப்படாத கேசுகளை எல்லாம் எடுத்து ரடன்லால் என்பவர் பிரசுரம் செய்திருக்கிற புஸ்தகம் 679 ம் பக்கத்தில் காணப்பட்டதும். (1854) 6 காக்ஸ்—கிரிமினல் கேசுகள் 368-ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறதுமான சக்கிரவர்த்தினி—பெர்ரிமான் என்பவர்களுக்குள் நடந்த கேசு.

பப்ளிக் ப்ராஸிக்கியூட்டருக்காக C. விட்னி ஸ்மித் துரை பேசிய விஷயங்கள்.—ப்ராமிஸரி நோட்டைப் பார்க்கும் பொழுதே ஸந்தேகம் உண்டாவதாகவும், ஆகையால் கீழ்கோர்ட்டாருடைய நடவடிக்கையானது ஸரியானது தானென்றும், 4-வது எதிரியின்பேரில் வாதி தரப்பு 1, 2 சாக்ஷிகள் சொல்லி யிருப்பதாகவும் அந்த ஸாக்ஷியத்தை கீழ் கோர்ட்டார் நம்பினதாகவும் பேசினார்.

அடியில் கண்ட தீர்ப்பு ஜஸ்டிஸ்-கூட்ஸ்ட்ராட்டரால் சொல்லப்பட்டது.

ஜஸ்டிஸ் கூட்ஸ்ட்ராட்டர்—ஸெஷன்ஸ் கோர்ட்டில் 2, 6, 7-வது எதிரிகள் பேரில், அவர்கள், கீழ்கோர்ட்டிலும், ஸெஷன்ஸ் கோர்ட்டிலும் ஒப்புக்கொண்டு கொடுத்தவாக்கு மூலங்களைத் தவிர வேறு சாக்ஷியம் கிடையாது. கீழ்க் கோர்ட்டில் ஒப்புக்கொண்டு கொடுத்த வாக்குமூலங்களும், அவர்கள் சொல்லிக்கொள்ள வேண்டியதைச் சொல்லிக்கொள்ளலாமென்று மாஜிஸ்ட்ரேட் சொன்னதின்பேரில் சொன்ன ஜவாப்பாக யிருக்கின்றன. கமிட்டு செய்த மாஜிஸ்ட்ரேட்டு முன்புக்குக் கொடுக்கப்பட்ட வாக்குமூலங்களைப் பார்வையிடுவதனால், அந்தக் கோர்ட்டில் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டு வாக்கு மூலங்கள் கொடுத்த காலத்தில், அவர்கள் குற்றச் செய்கையைச் செய்ததாக வாதி தரப்பில் சாக்ஷியமே விடப்படவில்லை என்பது வெளியாகும். எதிரி அல்லது எதிரிகளுக்கு விரோதமாய் வாதிதரப்பு சாக்ஷியத்தால் ஏற்பட்டிருக்கிற சங்கதிகளுக்கு எதிரி ஏதும் சமாதானம் உண்டானால் சொல்லிக்கொள்ளும் அவகாசத்தை எதிரி அல்லது எதிரிகளுக்குக் கொடுக்கும் பொருட்டாக கி. பு. கோடு 342-வது பிரிவில் எதிரியைக் கேழ்வி கேழ்க்கும் அதிகாரம் மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே யல்லது வேறில்லை. எதிரிகள் குற்றம் செய்ததாக அவர்கள்பேரில் சாக்ஷியமே கொடுக்கப்படாமலிருக்கையில் எதிரிகளைக் கேழ்வி கேழ்க்கவாவது அல்லது எதிரிகளை வாக்குமூலங் கொடுக்கும்படி சொல்லவாவது சட்டப்படி மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரமில்லை யென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். மேல் கண்ட விதமாக எதிரியால் கொடுக்கப்படுகிற வாக்குமூலத்தை பின்னிட்டு அவன் பேரில் ஏற்படுகிற விசாரணையில் அவனுக்கு விரோதமான சாக்ஷியமாக உபயோகப்படுத்தக் கூடாது என்றும் அபிப்பிராயப்படுகிறோம். இந்த அபிப்பிராயங்கள் (1) (1904) இ-லா-ரி. 27 ம. 238-ல் சொல்லப்பட்டிருக்கிற மொஹிதீன் அப்துல்காதருக்கும்—சக்கிரவர்த்தி அவர்களுக்கும் நடந்த கேசு விஷயமாய் சீப் ஜஸ்டிஸ் ஒய்ட் துரையவர்கள் செய்த தீர்ப்புக்கும், இங்கிலாந்தில் ஒரு கேசை விசாரித்த மாஜிஸ்ட்ரேட் ஒரு கைதியிடமிருந்து ஒழுங்கீனமாய் கேட்ட கேழ்விகளுக்குப் பதிலாக கைதி சொன்ன ஜவாப்புகள் சம்பந்தமாய் (2) (1854) 6 காக்ஸ் – கிரிமினல் கேசுகளின் 338-ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிற இராஜாங்கத்தார்—பெர்ரிமென் இவர்களுக்குள் நடந்த கேசில் ஜஸ்டிஸ் எர்ல் துரை செய்த தீர்ப்புக்கும் ஒத்துமையாயிருக்கின்றன

இந்த கேசு விசாரணை காலத்தில் கற்றறிந்த ஜட்ஜு எதிரிகளிடமிருந்து வாங்கிய ஜவாப்புகளுக்கும் இதே ஆக்ஷேபனை பொருத்தமாக யிருக்கிறது. கற்றறிந்த ஜட்ஜு எதிரிகளை குறுக்கு வினைச் செய்திருப்பதானது கி. பு. கோடு 342-வது பிரிவின் நிபந்தனைகளை அதிக்கிரமித்துச் செய்ததாகவே ஆகிறதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோமென்று சொல்லியே தீரவேண்டியிருக்கிறது. 2, 6, 7-வது எதிரிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிற தெண்டனையை ரத்து செய்கிறோம்.

4-வது எதிரிபேரில் கொஞ்சம் ஸாக்ஷியமிருக்கிறது. ஆனால் அந்த சாக்ஷியமானது அவனுக்கு விரோதமாய் வாதி தரப்பு 1, 2 சாக்ஷிகள் சொல்லிய வாக்கு மூலங்கள்—ஹேஷியங்கள், இவைகளைப்பார்க்கும்போது இந்தக் குற்றச் செய்கையானது நடந்திருப்பது ஸம்பாவிதமென்று தெரியவில்லை. இந்த எதிரியை தண்டிப்பதில் சிரத்தையுள்ள 2 சாக்ஷிகளுடைய சாக்ஷியத்தை வைத்து அவனைத் தண்டிப்பது ஸாவதானக் குறைவென்று நினைத்து அவனுக்கு விதிக்கப்பட்ட தண்டனையையும் ரத்துச் செய்கிறோம். *

I. L. R. 39 Mad. 770; இ. லா. ரி. 39 மது 770.

நெ. 19.

ஜட்ஜிகள்.— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர். மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர்.

1914-ம் ஹுத்து இரண்டாவது அப்பீல் நெம்பர்கள் :—1127-1147.

பார்வதி அம்மாள் (1127-ல் அப்பீல் வாதி 1147-ல் அப்பீல் பிரதி வாதி).

கோவிந்தசாமி பிள்ளை (1127-ல் அப்பீல் பிரதி வாதி, 1147-ல் அப்பீல் வாதி).

லாபாயின்ட் :—வியாச்சியத்தில் டிக்கிரி பெற்றவர், டிக்கிரியை நிறைவேற்றும் நடவடிக்கையில் செய்த ஒழுங்கீனமான நடவடிக்கைகளால் ஏலவிற்பனையை ரத்து செய்து விடப்பட்டது. சொத்தை கோர்ட்டு ஏலத்தில் எடுத்தவருக்குதான் செலுத்திய பவுண்டேஜ் தொகையை திரும்பி அடையவும், அவர் செலுத்தியிருக்கிற ஏலக்கிரையத் தொகைக்கு வட்டி கேழ்க்கவும், உள்ள பாத்தியதை—மேல் கண்ட விஷயங்களாய் வியாச்சியம் செய்வதற்கு 1908-ம் ஹுத்து 5வது ஆக்டாகிய ஸிவில் புரொஸீஜர் கோடு ஆர்டர் 21-ரூல் 93 படி யாதொரு தடையுமில்லை என்றும்.

---

* குறிப்பு:—கிரிமினல் புரொஸீஜர் கோடு 342-வது பிரிவில் கிரிமினல் கோர்ட்டு அதிகாரிகளான—ஸெஷன்ஸ் ஜட்ஜ், இராஜதானி மாஜிஸ்ட்ரேட்டு, 1-வது 2-வது 3-வது வகுப்பு மாஜிஸ்ரேட்டுகள் ஆகிய இவர்கள் தங்கள் முன் விசாரணைக்கு வரும் கிரிமினல் கேசுகளில் சம்மந்தப்பட்ட எதிரிகளை வாக்குமூலம் கேட்பது சம்மந்தமான நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேல் கண்ட ஹைகோர்ட்டுத் தீர்ப்பில் ஷை கி. பு. கோடு 342-வது பிரிவைப் பற்றிய விஷயங்களையே பிரியவஹாரிக்கப்பட்டிருக்கிற படியால், இந்த இந்தியன் சட்ட கெஜட்டைப் படிப்பவர்களுடைய சௌகரியத்தை உத்தேசித்து கி. பு கோடின் 342-வது பிரிவை இதன் அடியில் எடுத்து அச்சிடப்பட்டிருக்கிறது.

எதிரியை விசாரணை செய்ய அதிகாரம்.

342 (1) ஸாக்ஷியத்தில் தனக்கு விரோதமாய் ஏதும் சொல்லப்பட்டிருந்தால், அப்பேர்ப்பட்ட விஷயங்களுக்கு ஸமாதானம் சொல்லும் அவகாசத்தை எதிரிக்குக் கொடுக்கும் பொருட்டு கேசின் விசாரணை என்ன ஸ்திதியிலிருந்தாலுமே சரி முன் எச்சரிப்புக் கொடுக்காமலேயே தனக்கு அவசியம் என்று தோணுகிற கேழ்விகளை கோர்ட்டார் எதிரியிடம் கேழ்கலாம். அப்படிச் செய்வதில் வாதி பக்கம் சாக்ஷிகளை விசாரணை செய்த பிறகும் எதிரியை எதிர் வாதம் செய்யும்படி, சேட்கு முன்னாடியும் பொதுவாக அந்த கேசைப் பற்றியும் கேழ்கவேண்டும்.

(2) ... ...
(3) ... ...
(4) ... ...

ஒரு வியாஜ்ஜிபத்தில் டிக்ரி பெற்றவர் டிக்ரியை நிறை வேற்றுவதில் சில சொத்துகளை கோர்ட்டார் மூலமாய் ஏலம் போடும்படி செய்ததில் சட்டப்படி நடத்தவேண்டிய நடவடிக்கைகளில் ஒழுங்கீனங்களிலிருந்ததென்னும் காரணத்தினால் கோர்ட் ஏலத்தில் செய்யப்பட்ட ஒரு ஏல விற்பனையைகோர்ட்டார் ரத்துச்செய்து விட்டார்கள். அதன் பேரில் கோர்ட்டு ஏலத்தில் கிரயத்திற்கு வாங்கினவர் தான் ஏல விஷயமாய் கோர்ட்டில் கட்டின பௌண்டேஜ் மொத்தம் தனக்கு வாபஸ் செய்யப்பட வில்லையென்று அதை வசூல் செய்வதற்கும் இன்னும் அவர் கட்டின கிரய மொத்தத்திற்கு தனக்கு வட்டிகட்டி கொடுக்கவேண்டுமென்றும் வியாச்சியம்செய்தார். கோர்ட்டில் கட்டின பௌண்டேஜ்பீசும் கிரய மொத்தத்தைச்சேர்ந்த ஓர் பாகந்தானென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(பௌண்டேஜ் தொகையை திரும்பி அடைவதற்கு நிறைவேறுதல் நடவடிக்கையில் தான் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்ட ஆக்ஷேபணையை ரத்துசெய்து) ஷை தொகையை வசூல் செய்யும் பொருட்டு பிரத்தியேகமான வியாச்சியம் செய்யலாம் என்றும், கோர்ட்டில் கட்டின பௌண்டேஜ்பீஸும் கிரையத் தொகையில் ஒரு பாகம் என்றும் ஏலத்தில் எடுத்தவருக்கு தான் செலுத்தியிருக்கிற ஏலக்கிரையத் தொகைக்கு வட்டி கேழ்க்க பாத்தியதை உண்டென்றும் இதற்காதாரமாய் Powell v. Powell (1875) 19 Eq. 4426 ராகுபீர்டயால் v. அப்பெர் (மேல்) இந்தியா பாங்க் லிமிட்டெட் (1882) 5 அ 364-ம் ஒப்புக் கொள்ளப்பட்டன.

தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் முனிசீபு P. C. திருவேங்கிடாச்சாரியார் சோர்ட் 1911௵த்து அஸல் நெ. 271-ல் பிறப்பிக்கப்பட்ட டிக்ரியின்பேரில் கொடுக்கப்பட்ட தஞ்சாவூர் ஸப்ஜட்ஜி G. ராமானுஜுலு நாயுடு கோர்ட்டில் 1912௵த்து அப்பீல் நெம்பர்கள் 690, 718-ன் பேரில் செய்யப்பட்ட டிக்ரிகளின்பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்கள்.

கேசின் விபரம் ஹைக்கோர்ட் ஜட்ஜ்மெண்டில் நன்குவிளங்கும்.

1914-ம் ௵த்து இரண்டாவது அப்பீல் நெ. 1127.

லாயர்கள் :—Mr. K. S. கணபதி ஐயர், அப்பீல் வாதியின் வக்கீல்; Mr. G. S. ராமச்சந்திர ஐயர், அப்பீல் பிரதி வாதியின் வக்கீல்.

1914-ம் ௵த்து இரண்டாவது அப்பீல் நெ 1147.

லாயர்கள்:—Mr. G. S. ராமச்சந்திர ஐயர், அப்பீல் வாதியின் வக்கீல்; Mr. K. S. கணபதி ஐயர், அப்பீல் பிரதி வாதியின் வக்கீல்.

ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு :—மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர் – இந்தக் கேசின் சங்கதிகளைப்பற்றி உபய கக்ஷிக்காரரும் ஆட்சேபிக்கவில்லை. பிரதிவாதி சிலர் மீது ஒரு டிக்ரிபெற்றார். அந்த டிக்ரியின்படி சில ஸ்தாவர (அசையா) சொத்துகள் விற்பனை செய்யப்பட்டன. வாதி அந்த சொத்துகளைக் கிரயத்திற்கு வாங்கினார். தீர்ப்புகடனாளியின் மனுவின்பேரில் ஏல விக்ரய நடவடிக்கையில் சில ஒழுங்கீனங்களிருந்ததென்னும் காரணத்தினால் ஷை விற்பனை றத்து செய்யப்பட்டது. கிரயத்திற்கு வாங்கினவராகிய வாதி, தான் செலுத்தின கிரய மொத்தத்திலிருந்து கழித்துக்கொள்ளப்பட்ட பௌண்டேஜ்பீஸை (சட்டணத்தை) வசூல் செய்வதற்கும் அவர் செலுத்தின கிரயமொத்தத்தின் பேரில் தனக்கு வட்டி கட்டி கொடுக்க வேண்டுமென்றும் வியாச்சியம் செய்தார். வக்கீல்களுக்கு கொடுத்த பீசு முதலிய சிலவுகளைப்பற்றி தாவா செய்யப்பட்டிருந்தும் அவைகளைப்பற்றி எங்களெதிரில் வற்புறுத்திப் பேசப்படவில்லை. வாதி செலுத்தின கிரய மொத்தத்தின்பேரில் அவருக்கு 100-க்கு 6-வீதம் வட்டிகட்டி கொடுக்கும்படி கேட்க வாதிக்கு பாத்தியதை உண்டென்றும்; பௌண்டேஜ்பீசை வசூல்செய்வதற்கு பிரத்தியேகமாய் வியாஜ்ஜியம் கொண்டுவர நியாயம் கிடையாதென்றும் டிஸ்ட்ரிக்ட் முனிசீபு தீர்மானம்செய்தார். உபய தரப்பு கக்ஷிகாரர்களும் அப்பீல்செய்தார்கள். பௌண்டேஜ்பீசை வசூல்செய்வதற்கு கொண்டுவரப்பட்ட தாவா சட்டப்படி செல்லத்தக்கினதுதானென்றும், கிரயமொத்தத்தின்பேரில் வட்டி கட்டிக் கொடுக்கவேண்டுமென்று டிக்ரிசெய்ய நியாயமில்லையென்றும் ஸப்கோர்ட்டார் தீர்மானித்தார்கள். பௌண்டேஜ் விஷயமாய் செய்யப்பட்ட டிக்ரியின்பேரில் பிரதிவாதியால் இரண்டாவது அப்பீல் 1914-ம் ௵த்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. செலுத்தப்பட்ட ஏலத்தொகைக்கு வட்டி கிடையாதென்ற டிக்ரியின் பேரில் வாதி 1914-ம் ௵த்திய 2வது அப்பீல் நெ. 1147 செய்திருக்கிறார். லாபாயிண்டைப்பற்றி யோசிப்பதற்குமுன் பிரதிவாதி அவருடைய டிக்ரியை நிறைவேற்றுதலில் நடத்திய கோர்ட்டு ஏலவிற்பனையில் நேர்ந்த ஒழுங்கீனமான நடவடிக்கைகளுக்கு பிரதிவாதிதான் ஜவாப்தாரியா யிருக்கவேண்டுமென்று நாங்கள் சொல்ல வேண்டியதாயிருக்கிறதென்று எங்களுக்குத் தோன்றுகிறது.

ஏலவிற்பனையை பிரசுரம்செய்வதிலாவது அல்லது அந்த விற்பனையை நடத்துவதிலாவது யாதேனும் ஒழுங்கீனம் நேரிட்டால் அதற்கு டிக்ரிபெற்றவர் (decree-holder) தான் ஜவாப்தாரியாவாரென்று ஸப்ஜட்ஜ் தீர்ப்புகடனாளியின் (Judgment debtor) மனுவின்பேரில் தீர்மானித்திருக்கிறார். (டிஸ்ட்ரிக்ட் முனிசீபு தீர்மானத்தின் 9-வது பாராவை பார்க்கவும்) இந்த தாவாவில் டிஸ்ட்ரிக்ட் முனிசீபும் அவ்விதமாகவே தீர்மானித்திருக்கிறார். பிரதிவாதி இவ்விஷயமாய் பந்தப்பட்டிருப்பதைப்பற்றி அப்பீலில் ஆட்சேபிக்கப்படவில்லை.

கோர்ட்டார் அந்த சொத்தை ஏலவிற்பனைசெய்யும்படி செய்த உத்தரவில் அதை வெவ்வேறு பங்குகளாகப்பிரித்து விற்பனைசெய்யும்படி உத்தரவு செய்திருக்கவேண்டுமென்பது வாஸ்தவமே. ஆனால் கோர்ட்டார் இப்படி செய்யாத காரணத்தால் பிரதிவாதியின் பொறுப்பு நீங்கிவிடமாட்டாது. வெளி ஊர்களில் ஏல விற்பனை செய்யும் உத்தியோகஸ்தரின் பொறுப்பு இங்கிலாந்திலுள்ள ஷெரிப்புக்குள்ள (Sheriff) பொறுப்பைப்போலல்ல. ஏல விற்பனை நோட்டீசை பிரசுரஞ்செய்வதற்கும் ஏலத்தை நடத்துவதற்கும் அவசியமான சமாச்சாரங்களைக் கோர்ட்டாருக்குத் தெரிவிக்க வேண்டியதும் இன்னும் அதன் விஷயமாய் செய்யவேண்டிய கிருஷிகளெல்லாவற்றையும் கவனித்து நடத்தவேண்டியதும் டிக்கிரிதாரருடைய கடமை யாகத்தானிருக்கிறது. நிறைவேற்றுதலில் கோர்ட்டார் யாதொரு துர் எண்ணமுமின்றி அவர்களுக்கு தெரிந்த தகவல்களைக்கொண்டு நடவடிக்கைகள் நடத்தியிருந்தால் அவ்விதமாய் நடத்திய நிறைவேற்றுதலில் ஒழுங்கீனமிருந்ததென்று கோர்ட்டார்பேரில் நடவடிக்கைகள் நடத்தி தாவா செய்ய நியாயம் கிடையாது. ஏல விற்பனை செய்யும்படிக்கு கோர்ட்டில் யார் மனு செய்துக்கொள்ளுகிறாரோ அவர்தான் நஷ்டமடைந்து துன்பப்பட்ட ஏலமெடுத்தவருக்கு பந்தப்பட்டவராவார். ஷெரிப் ஏல விற்பனை செய்திருந்தால்கூட கிரயம் பெற்றவர் டிக்கிரிதார் மேல் தாவா செய்ய ஹக்குண்டு. டொராப் அல்லிகான் v. அப்துல் அஜீஸ் (1878) இ-லா-ரி. 3 கல் 806 (P. C.)-ல் கல்கத்தா ஹைகோர்ட் அசல் விசாரணை தரப்பில் செய்யப்பட்ட டிக்கிரி ஒன்றில் ஷெரீப் டிக்கிரியை நிறைவேற்றினதில், ஷெரீப் எவ்வளவு பந்தப்பட்டவரென்பதைப் பற்றி ஜுடிஷல் கமிட்டியார் தீர்ப்பு சொல்லி யிருக்கிறார்கள். அதில் முக்கியமாய் என்ன சொல்லியிருக்கிறார்களென்றால் :— ஷெரீப் அவருடைய அதிகார வரம்பிலில்லாத சொத்தை ஜப்தி செய்தாலாவது அல்லது சட்டப்படி அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை அவர் மீறி நடந்தாலாவது ஷெரீப் பந்தப்பட்டவராவாரென்பதாய் சொல்லி யிருக்கிறார்கள். இதுவுமன்றி ஷெரீப் நிறைவேற்றுதல் நடவடிக்கைகள் நடத்துவதில் டிக்கிரிதாரர் சொல்லியபடி நடத்தினதாக யிருந்தால், டிக்கிரிதாரரே கிரயதாருக்கு ஜவாப்தாரி யாவாரென்று ஜுடிஷல் கமிட்டியிலுள்ள பிரபுக்கள் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தக் கேசின் சங்கதிகளும் அதற் கொவ்வினதாகவே யிருக்கின்றன.

சட்டப்படி இந்த முக்கியமான விஷயம் வியாச்சியத்தில் செல்லத்தக்கதா யென்னும் பாயிண்டுதான் இந்த கேசில் மிக்க வற்புறுத்திவாதிக்கப்பட்டது. வாதி நிறைவேற்றுதலில் பரிகாரமடையவேண்டியதே யல்லாமல் பிரத்தியேகமாய் தாவா கொண்டுவர நியாயமில்லை யென்று Mr. கணபதி ஐயர் வாதித்தார். 1882-ம் ௵த்திய 14-வது ஆக்டாகிய பழய சிவில் புரோஸீஜர் கோடின் 315-வது பிரிவில் இது விஷயமாய் இரண்டுவிதமான நிபந்தனைகள் செய்யப்பட்டிருந்தன; அதாவது (1) அந்த கோடில் செய்யப்பட்டிருந்த நிபந்தனையின்படி ஏல விற்பனையை றத்து செய்துவிட்டால் என்ன பரிகாரமோ அதையும் (2) தீர்ப்பு கடனாளிக்கு கிரயம் செய்யப்பட்ட சொத்தை விற்பனை செய்வதற்கு பாத்தியதை யில்லாமலிருந்தால் என்ன பரிகாரமோ அதையும் ஷை கோடில் காணலாம். ஏல விற்பனையில் கிரயம் செய்யப்பட்ட சொத்தில் தீர்ப்பு கடனாளிக்கு விக்கிரயம் செய்யக்கூடிய பாத்தியதை கிடையாதென்பதாய் ஏலத்திற்குப் பிறகு தெரிய வந்தால் கிரயதாரன் அந்த கிரயத்தை றத்து செய்யும்படிக்கு கோர்ட்டில் மனு செய்துக் கொள்ளாமல், கிரயதாரர் செலுத்தின கிரய மொத்தத்தை அவருக்கு வாபஸ் செய்யும்படி கேட்க அவருக்கு ஹக்குண்டென்பதைப்பற்றி இப்பொழுது அமுலிலிருக்கும் புது கோடில் யாதொரு நிபந்தனையும் செய்யப்பட்டில்லை. கிரயம் பெற்றவர் ஏலத்தை றத்து செய்துவிடும்படி கோர்ட்டாருடைய சகாயத்தைக் கோறினாலொழிய மற்றப்படி வேறே விதமாய் அவர் (கிரயம்பெற்றவர்) டிக்கிரி பெற்றவர்பேரில் யாதொரு பரிகாரமும் பெருவதற்கு நியாயமில்லை யென்பதாய் அப்பீல் பிரதிவாதி பக்கம் வக்கீல் Mr. ராமசந்திர ஐயர் எடுத்துக் காட்டியபடியுமிருக்கலாம். கோர்ட்டு ஏலங்களில் நடத்தும் நடவடிக்கைகளைப் பற்றி உத்தரவாதம் சொல்வதற்கு நிபந்தனை கிடையாதென்பதாய் டொராப் அல்லிகான் v. அப்துல் அஜீஸ் (1878) இ-லா-ரி. 3 கல் 806 (பிரிவிகவுன்ஸல் கேசில்) தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்காதாரமாய் சுந்தர கோபாலன் v. வெங்கட வரதய்யங்கார் (1894) இ-லா-ரி. 17 ம 228 லுள்ள தீர்மானத்தையும் பார்க்கவும். ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட சொத்தை கிரயம் செய்வதற்கு தீர்ப்பு கடனாளிக்கு பாத்தியதை கிடையாதென்னும் காரணத்தால் கிரயதாரர் அவர் செலுத்தின கிரய மொத்தத்தை வாபஸ் செய்யும்படி கேட்பதற்குண்டான ஹக்கு கிரயதாரருக்கு ஏற்கனவே கிடையாதென்றுதான் சொல்லவேண்டும். ஆனால் அவ்விஷயமாய் சட்டத்தில் என்ன நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறதோ அதை தான் பெறலாமென்று சட்டமிருப்பதால் அதில் சொல்லியிருக்கும் ஷரத்துகளுக்குட்பட்டுதான் பரிகாரம் பெறலாமென்று அபிப்பிராயப்படுகிறோம். ஆகையால் கிரயதாரர் கோர்ட்டு மூலமாய் கிரயத்தை றத்து செய்துக் கொள்ளாமல் அவருக்கு (கிரயம் பெற்றவர்க்கு) வியாஜ்ஜியம் செய்ய பாத்தியதை உண்டாகமாட்டாது. அவர் (கிரயம் பெற்றவர்) சட்டத்திலிருக்கும் நிபந்தனையின்படிதான் பரிகாரமடையவேண்டியதே யல்லாமல் வேறே விதமாய் பரிகாரம் பெறுவதற்கு நியாயமில்லை ஆனால் ஒரு

வருடைய மோசக்கருத்தினால் அல்லது அஜாக்கிரதையான நடத்தையினால் ஒரு விக்கிரயம் செல்லத்தக்கினதல்லவென்று சொல்வதற்கிடமிருந்தால் அப்படிப்பட்டவரிடமிருந்து தொகையை வசூல் செய்யும் பாத்தியதை இதைப் போன்றதல்ல. அது வேறே விதமாய்தான் பாவிக்கப்படும். அப்படிப்பட்ட விஷயங்களில் யாருடைய அலட்சியமான நடத்தையினால் அவ்விதமான நஷ்டம் நேரிட்டதோ அப்படிப்பட்ட நபர் துன்பமடைந்தவருக்கு நேரிட்ட நஷ்டங்களைக் கட்டிக்கொடுக்கப் பந்தப்பட்டவராவாரென்று தான் சொல்லவேண்டும். இந்த சுதந்தரம் பிரதமத்தில் சட்டத்தில் புதிதாய் உண்டானதல்ல. தொன்று தொட்டு இவ்விஷயத்தில் எவ்விதமாக நடந்தேறி வந்ததோ அந்த பழக்கத்தை அனுசரித்துதான் புது கோடில் நிபந்தனை செய்யப்பட்டிருக்கின்றது. Powell v. Powell (1875) 19 Eq 422-ல் Vice-Chancellor ஸர் ஜேம்ஸ் பேக்கன் என்பவரால் சொல்லியிருக்கிறபடி ஏல விற்பனையில் ஒழுங்கீனமான நடவடிக்கைகள் நடந்த காரணத்தால் ஏல விக்கிரயம் சட்டப்படி செல்லத்தக்கினதல்லவென்று சொல்வதற்கிடமிருந்தால் கிரயம் பெற்றவர் விக்கிரய உடன்படிக்கையின்படி நடப்பதற்கு பந்தப்பட்டவரல்லவென்றும் அவர் ஏல விற்பனைக்கு முன் என்ன நிலமையிலிருந்தாரோ அந்த நிலைமையின் படியே அவர் செலுத்தின கிரய மொத்தத்தை வாபஸ் செய்யும்படி கேட்க ஹக்குள்ளவராகிறாரென்பதாயும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 24 Cyclopaedia of Law and Procedure 70-லும் இம்மாதிரியான தீர்மானத்தையே அடியில் கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது

“ஏலநடவடிக்கையில் ஒழுங்கீனமில்லாமலிருந்தால் ஏலதாரர் உரிமையை அல்லது ஸ்வதந்திரத்தை அடைந்திருக்க வேண்டிய நிலமானது ஏலநடவடிக்கையில் ஒழுங்கீனங்களிலிருந்ததையிட்டு ஏலதாருக்குக் கிடையாமல் போய்விட்டால், அவர் (ஏலதார்) செலுத்தியிருக்கிற கிரயத் தொகையையும், ஷை நிலத்துக்குச் செலுத்திய தீர்வைப் பணத்தையும், ஷை நிலத்தின் கிரயத்தையே ஜாஸ்தியாக்கும் விதமாக ஷை நிலத்தில் செய்யப்பட்டிருக்கிற மராமத்து, அபிவிருத்திகள் இவைகள் விஷயமாய் செலவு செய்யப்பட்டிருக்கிற தொகைகளையும் ஏலதார் திரும்பப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்தியதையிருக்கிறது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது”. மொஹிடீன் இப்ராஹிம் v. மஹமத் மீராலெவ்வை (1912) 23 ம-லா-ஜ. 487-ல் செய்யப்பட்டிருக்கும் தீர்மானம் அப்பீல் வாதியின் வாதத்திற்கு மிக்க வலிவான ஆதாரமென்று கூறப்பட்டது. ஆனால் அந்த தீர்மானம், பிரஸ்தாப கேஸிலுள்ள பாயின்டிற்கு ஒவ்வினதல்ல. ஷை கேஸில், மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர் என்பவர், ஏல விக்கிரயத்திற்குப் பின் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டசொத்தின் விஷயமாய் கொண்டுவரப்பட்ட ஒரு தாவாவில் செய்யப்பட்ட தீர்ப்பினால் ஏலத்தில் கிரயம் பெற்றவர் அந்த நிலத்தையிழந்து விடும்படி நேரிட்டால், அவர் (கிரயத்திற்கு வாங்கினவர்) செலுத்தின கிரய மொத்தத்தை வாபஸ் செய்யும்படி கேட்க அவருக்கு ஹக்கு கிடையாதென்று தீர்மானித்தார்.

ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட நிலத்தை கிரயம் செய்வதற்கு தீர்ப்பு கடனாளிக்கு பாத்தியதை (Saleable interest) கிடையாதென்னும் விஷயமான உட்பிரிவை 1908 ௵த்திய புது கோடில் நீக்கியிருக்கும் விஷயத்தை அந்த கற்றுணர்ந்த ஜட்ஜ் மிக்க வற்புறுத்திச் சொல்லி அதையே அவருடைய தீர்மானத்திற்கு வலிவான ஆதாரமாய் எடுத்துக் கூறினார். பிரஸ்தாப கேஸில் சொத்தை கிரயம் செய்வதற்கு தீர்ப்பு கடனாளிக்கு பாத்தியதையில்லையென்னும் காரணத்தால் ஏலம் பூர்த்தியாகாமலிருக்கவில்லை.

“(ஏல விக்கிரயத்தில் ஒரு சொத்தை) கிரயத்திற்கு வாங்கினவர் அவர் செலுத்தின கிரய மொத்தத்தை மறுபடியும் வாபஸ் பெறுவதற்கு ஹக்குள்ளவராவாரென்று” 1882-ம் ௵த்திய 14-வது ஆக்ட் 315-வது பிரிவில் நிபந்தனையாக சொல்லப்பட்டிருக்கும் பதங்களினால் கிரயம் பெற்றவர் செலுத்தின கிரய மொத்தத்தை பெறுவதற்கு தாவா செய்ய ஹக்குண்டென்பது பரிஷ்காரமாய் வெளியானதாக அநேக கேசுகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்றும் ஆனால் புது கோடின் 93-வது ரூலில் “செலுத்தின மொத்தத்தை மறுபடியும் வாபஸ் பெறுவதற்கு ஹக்குண்டு” என்றிருக்கும் பதங்களினால் ஏலம் ரத்தாய்ப்போகிற எல்லாக்கேசுகளிலும் நிறைவேற்றுதல் நடவடிக்கையில் தான் பரிகாரம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று மிக்க ஆலோசனையுடன் செய்யப்பட்ட நிபந்தனையென்றும் Mr. கணபதி ஐயர் வாதித்தார். புது கோடிலுள்ள நிபந்தனைக்கும் பழய கோடிலிருந்த நிபந்தனைக்கும் யாதேனும் பேதமிருப்பதாக எங்களுக்கு புலப்படவில்லை. கிரயத்திற்கு பெற்றவர் நிறைவேற்றுதலில் தன்னுடைய பணத்தை வசூல் செய்துக் கொள்ளலாமென்று 1882 ௵த்திய கோடில் நிபந்தனை செய்யப்பட்டிருந்ததைப் போல் இப்பொழுதுள்ள புது கோடில் யாதொன்றும் சொல்லப்படவில்லை. அல்லாமலும் அவர் வியாச்சியத்திற்காவது டிக்ரிக்காவது கக்ஷிக்காரருமில்லை. ஆகையால் கிரயத்திற்கு பெற்றவருக்கு வியாஜ்ஜியம் செய்ய ஹக்கு கிடையாதென்று சட்டத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டிருந்தாலொழிய கிரயத்திற்கு பெற்றவர் தனக்குச் சாதாரணமாய் கிடைக்கவேண்டிய பரிகாரத்தை ஒரு தாவா கொண்டுவந்து பெறுவதற்கு ஹக்குண்டென்று நாங்கள் தீர்மானிக்கிறோம்.

பௌண்டேஜ் பீஸை கோர்ட்டில் எடுத்துக்கொள்ளுகிறபடியால் அதை டிக்கிரி பெற்றவர் கிரயம் பெற்றவருக்குச் செலுத்துவதற்கு பந்தப்பட்டவரல்லவென்

றும் வாதிக்கப்பட்டது. இன்னவிதமாயுள்ள பௌண்டேஜ் கட்டணங்கள் (Poundage fees) என்பதைச் சரியாய் தெரிந்து சொல்லாததினால் இவ்விதமாய் வாதிக்கப்படுகிறது. Mr. ராமசந்திர ஐயர் மிக்க சாமர்த்தியமாய் வாதித்ததில் அவர் கூறியபடி, கிரயதாரர் தாவா செய்யும் பௌண்டேஜ் பீஸ் வாஸ்தவமாகவே கிரய மொத்தத்தைச் சேர்ந்த ஓர் பாகமென்று தான் சொல்லவேண்டும். கிரயத்திற்குப் பெற்றவர் செலுத்தின மொத்தத்திலிருந்துதான் கோர்ட்டார் பௌண்டேஜ் பீஸை கழித்துக்கொண்டு மிகுதி நிற்கும் தொகையை டிக்கிரி பெற்றவருக்குச் செலுத்துகிறார்கள். இங்கிலாந்தில் ஷெரீப் (Sheriff) பினால் செய்யப்படும் வேலைக்குப் பிரதிப்பிரயோஜனத்திற்காக ஏற்படுத்தும் கட்டணந்தான் பௌண்டேஜ் (Poundage) என்று சொல்லப்படும். இந்த தேசத்தில் ஏல விற்பனையை நடத்தும் உத்தியோகஸ்தர்களுக்கு மாதாந்த சம்பளம் ஏற்பட்டிருப்பதால் கிரய மொத்தத்தில் ஸ்டாம்பு வாங்குவதற்காக 100-க்கு இவ்வளவென்று சொற்ப தொகை எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஏல விற்பனை செய்வதில் உள்ள காரியாதிகளை டிக்ரிதாரருக்காக கோர்ட்டார் செய்கிறபடியால் அவ்விதமாய்ச் செய்யப்படும் வேலைகளுக்கு பிரதிப்பிரயோஜனமாக இவ்வித கட்டணம் செலுத்தப்படுகிறது. இங்கிலாந்திலும், இந்த தேசத்திலும் இவ்விதமான கட்டணம் கிரய மொத்தத்திலிருந்துதான் எடுத்துக்கொள்ளப் படுகின்றது.

14 Halabury's Law of England paragraph 71-ம், Civil Rules of Practice. 154-வது ரூலையும் பார்க்கவும். ஆகையால் கிரயம் பெற்றவர் பௌண்டேஜ் பீஸைக் கேட்கும் பொழுது அவர் செலுத்தின கிரய மொத்தத்தையும் தனக்கு கொடுக்கும்படி அவர் தாவா செய்யவில்லை யென்பதற்கு நியாயமில்லை. அவ்விதமான பௌண்டேஜ் பீஸை நிறைவேற்றுதல் மனுவில்தான் கேட்கலாமே யல்லாமல் அதற்காக பிரத்தியேகமாய் தாவா கொண்டுவர நியாயமில்லை யென்று வாதிப்பதையும் நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. 157-வது ரூல் 2-வது உட்பிரிவில் “பௌண்டேஜ் *Poundage*” என்னும் பதம் காணப்படவில்லை யென்பதை மிக்க வற்புறுத்தி வாதித்து அது ஓர் ஆதாரமாய் கூறப்பட்டது. பௌண்டேஜ் என்னும் பதத்தைச் சொல்லவிட்டுப் போயிருப்பதானது வியாச்சியம் செய்ய கிரயதாரருக்கிருக்கும் பாத்தியதையை பாதிக்கமாட்டாது. ஒரு ஏல விக்கிரயத்தில் யாதோ குறைவுபாடுகளிருந்ததாக அந்த ஏல விக்கிரயம் ரத்தாய் விடும்பட்சத்திலும் ஷெரீப் பௌண்டேஜ் பீஸை வசூல் செய்வதற்கு தாவா கொண்டுவர வியாஜ்ஜிய மூலம் உண்டென்று Rawstorne v. Wilkinson (1815) 4 Male & Selwyn, 256-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்காதாரமாய் Tyson v. Paske (1705) 2 Lord Raym, 1412; S. C. 92 E. R. 300-ம் பார்க்கவும். ஏல விற்பனையில் கிரயத்திற்கு பெற்றவரால் செலுத்தப்பட்ட பணம் பௌண்டேஜ் பீஸாய் ஷெரிப்புக்கு கட்டப்பட்டதாகையால் அவர் (கிரயத்திற்கு பெற்றவர்) ஷெரிப்புக்குள்ள ஹக்கைப் போலவே நிறைவேற்றுதல் நடவடிக்கைகள் நடத்தின டிக்கிரிதாரர் பேரில் தாவா செய்து அவர் செலுத்தின கட்டணத்தை வசூல் செய்ய நியாயமுண்டென்று தான் சொல்ல வேண்டும். அது (பௌண்டேஜ் கட்டணம்,) கோர்ட்டாரால் பிடித்துக்கொள்ளப்பட்டதென்னும் விஷயத்தினால் யாதேனும் பேதமிருப்பதாக எங்களுக்குத் தோன்றவில்லை; ஆகையால் ஸப் கோர்ட்டார் இவ்விதமாய் செய்யப்பட்ட தாவா விவில் புரோஸீஜர் கோடில் நிறைவேற்றுதலுக்காக செய்யப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு விரோதமானதல்லவென்று தீர்மானித்திருப்பது சரியானதுதானென்று நாங்கள் முடிவான அபிப்பிராயம் கொண்டு, 1914 ௵த்து இரண்டாவது அப்பீல் நெ. 1127 ஐ செலவுகளுடன் தள்ளுபடி செய்கிறோம்.

ஆயினும் கிரயம் பெற்றவர் அசட்டையாயிருந்துவிட்டு தாமதித்து தாவா செய்திருப்பதினால் அவர் வட்டிக்கு வியாச்சியம் செய்யும் பாத்தியதையை இழந்துவிட்டாரென்று கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த தீர்மானத்தை நாங்கள் ஒப்புக்கொள்ள வில்லை. விக்கிரயம் செய்யப்பட்ட சொத்தை பிரத்தியேக, (Separate lots) பிரத்தியேகமாய் விற்பனை செய்திருக்க வேண்டுமென்பதைக் கவனிப்பது கிரயத்திற்குப் பெற்றவரின் கடமையல்ல. ஏல விற்பனையில் ஏலம் போடுவதற்கு முன் யாதேனும் ஒழுங்கீனம் நேரிட்டிருந்ததென்பதனால் அவர் பாதிக்கப்படமாட்டார். விக்கிரயம் செய்யப்பட்ட சொத்தை விற்பனை செய்வதாக எவ்விதமாய் பிரசுரிக்கப்பட்டு கிரயம் செய்யப்பட்டதோ அவ்விதமாகவே அவர் கிரயத்திற்குப் பெறவேண்டியவராவார். அவர் சட்டப்படி கிரயத் தொகையை செலுத்திவிட்டபடியால் அவருக்கு வட்டி கொடாமல் வட்டிப் பணத்தை அபகரிப்பதற்கு யாதொரு காரணமுமில்லை. இதற்காதாரமாய் ராகூபிர் டயால் v. அப்பர் இந்தியா பாங்க் லிமிடெட் (1883) இ லா-ரி 5 அ 364 பார்க்கவும். டிஸ்ட்ரிக்ட் முனிசீபு தீர்மானித்திருக்கும் வட்டி வீதம் சரியானதுதான். ஆகையால் 1914 ௵த்து இரண்டாவது அப்பீல் நெ. 1147-ல் கீழ் அப்பீல் கோர்ட்டில் செய்யப்பட்டிருக்கும் டிக்கிரியை நாங்கள் மாற்றி இந்த கோர்ட்டிலும் கீழ் அப்பீல் கோர்ட்டிலும் நேர்ந்த செலவுகளைக் கொடுக்கும்படிக்கும் ரூ. 306 செலுத்தும்படிக்கும் வாதி கோர்ட்டில் பணத்தைச் செலுத்தின தேதி முதல் 100-க்கு 6 வீதம் வட்டி கட்டி கொடுக்கும்படிக்கும் டிக்கிரி செய்கிறோம்.

Parvathi Ammal v. Govindasawmi Pillai I. L. R 39 Mad. 803.

நெ. 20.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் சீப் ஜஸ்டிஸ் ஸர்ஜான் வாலிஸ். மிஸ்டர் ஜஸ்டிஸ் சீனிவாஸய்யங்கார்.

அப்பீல் நெ. 93 of 1911.

ஸ்ரீ ராஜா V. V. S. ஜெகபதிராஜு பகதூர்காரும் (வியாச்சிய மத்தியில் இறந்துபோய் விட்டார்) மற்றொருவரும்—வாதிகள்–அப்பீல்வாதிகள்.

v.

ஸ்ரீ ராஜ T. P. R. S. L. R. ஸத்ரு ஸன்னம அரட்கொராஜு D. K. D. R. பஹதூர்காரும் மற்ற 5 பேர்களும், பிரதிவாதிகள்–அப்பீல் பிரதி வாதிகள்.

லாபாயிண்ட்:—கவர்ன்மெண்டுக்கு கட்டவேண்டிய கிஸ்தியை ரெஜிஸ்டரா யிருக்கும் பட்டாதாரரல்லாதவர்களிடத்திலிருந்து வசூல் செய்யலாமா?

வியாஜ்ஜிய சங்கிரஹம்:—கோர்ட்டு ஏலத்தில் சில ஜெமீன் நிலங்களை கிரயத்திற்கு வாங்கின வாதி ரெஜிஸ்டர் பட்டதாரராகிய முதல் பிரதிவாதியினிடத்திலிருந்தும் ரெஜிஸ்டராகாத மற்றப் பிரதிவாதிகளிடத்திலிருந்தும் தான் கவர்ன்மெண்டுக்கு கட்டின கிஸ்தி மொத்தத்தை வசூல் செய்ய கொண்டுவந்த தாவாவில் ஹைகோர்ட்டார் ரெஜிஸ்டராகிய பட்டாதார்தான் கவர்ன்மெண்டுக்கு கட்டவேண்டிய கிஸ்தியைச் செலுத்த பந்தப்பட்டவரென்றும் ரெஜிஸ்ட்டராகாதவர்கள் கிஸ்தியைக் கட்ட பந்தப்பட்டவர்களல்லவென்றும் எந்தக் கோர்ட்டில் தாவா செய்யப்பட்டதோ அந்தகோர்ட்டு அதிகாரவறம்பிற்குள் ஒரு பிரதிவாதி வாசம் செய்யாதவராயிருந்தால் அவர் பேரில் தாவா செய்ய நியாயம் கிடையாதென்றும், இந்தியன் கான்ட்ராக்ட் ஆக்ட் 69,70-வது பிரிவுகள் இந்த கேசுக்கு சம்பந்தப்பட்டதல்ல வென்றும் தீர்மானித்தார்கள்.

விசாகப்பட்டணம் டெம்பரெரி ஸபார்டிநேட்டு ஜட்ஜு Mr. D. இராகவேந்திர ராவால் 1908–ஹுத்து அசல் நெ-46-ல் செய்யப்பட்ட டிக்கிரியின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

கேசின் விபரம்:–முதல் பிரதிவாதி பாச்சிபெண்டா ஜெமீன்தாரா யிருந்தார். பீ (B) என்பவர் முதல் பிரதிவாதியின் பேரில் பெற்ற டிக்கிரி நிறைவேற்றுதலில் வாதி மேற்படி ஜெமீனைச் சேர்ந்த நான்கு கிராமங்களை கோர்ட்டு ஏலத்தில் 8-1-1906-ல் ஏலத்தில் வாங்கினர்; 6-ம் பிரதிவாதி ஏஜென்ஸி ட்ராக்டின் (Agency Tract) எல்லைகளுக்குள்ளிருந்த ஜெமீனைச் சேர்ந்த மற்றும் 69 கிராமங்களை 26-3-19-ல் கோர்ட்டு ஏலத்தில் வாங்கினர். போக மிகுதியாயிருந்த இதர ஜெமீன் நிலங்களையும் விற்பனை செய்து கிரய மொத்தத்தை தாலூகா கஜானவில் கட்டிவைக்கப்பட்டது. வாதி பிராதில் முதல் பிரதிவாதியும் அவருடைய அபிபக்த சகோதரராகிய 2-வது பிரதிவாதியும் முதல் பிரதிவாதியின் குமாரர்களாகிய 3, 4 பிரதிவாதிகளும், 1-ம் பிரதிவாதியின் சகோதரரின் மகனாகிய 5 வது பிரதிவாதியும் பாச்சிபெண்டா ஜெமீனிலிருந்து கவர்ன்மெண்டுக்கு 1907-ம் ஹு ஏப்பிரல் மீ முதல் 1908 நவம்பர் வரையில் கட்டவேண்டிய கிஸ்தியை கட்டத் தவறிப்போனதாயும் அதற்காக சாலூர் டிப்டி தாசில்தார் கிஸ்தி மொத்தத்தை வசூல் செய்வதற்காக மேற்படி ஜெமீனைச்சேர்ந்ததும் 1-வது பிரதிவாதியால் வாங்கப்பட்டதுமான ஒரு கிராமத்தை ஜப்தி செய்தாரென்றும் அந்த கிராமத்தை ரெவினியூ ஏலத்தில் விற்பனை செய்யாமலிருக்கும்படி வாதி கிஸ்தி முழுவதையும் தான் செலுத்தினதாக சொல்லியிருக்கிறார்! பிரதிவாதிகளுடைய திரேகத்தைப் பொருத்தும் முதல் பிரவாதிக்கு சேர வேண்டியதாக கஜானவில் கட்டியிருந்த ஜெமீனைச் சேர்ந்த இதர நிலங்களை விக்கிரயம் செய்த மொத்தத் தொகையிலிருந்தும் தான் கட்டிய பூராத் தொகையும் தனக்கு கிடைக்கவேணுமென்று வாதி விசாகப்பட்டணம் ஸப்கோர்ட்டில் இந்த தாவா செய்தார். இந்த கிஸ்தி மொத்தத்தில் சொற்பபாகம் வாதியும் 6 ம் பிரதிவாதியும் தனித்தனி கட்டவேண்டியதென்றும் அவர்கள் கிஸ்தி முழுவதையும் கட்டபந்தப்பட்டவர்கள் அல்ல வென்றும் ஆகையால் இந்த வியாச்சியம் செல்லாதென்றும் 1-முதல் 5-பிரதிவாதிகள் வாதித்தார்கள். தாவாவை தாக்கல் செய்தபின் கட்சிக்காரராய்ச் சேர்க்கப்பட்ட 6-ம் பிரதிவாதி அவர்பேரில் கொண்டு வந்த வியாஜ்ஜியத்தை தாக்கல் செய்து கொள்ள கோர்ட்டாருக்கு அதிகாரவறம்பு கிடையாதென்று வாதித்து அதற்கு காரணமாய் அவர் சொன்ன தென்னவென்றால்:—அவர் கிரயத்திற்கு வாங்கின கிராமங்களில் சிலவைகள் ஏஜென்ஸீட்ராக்டின் எல்லைகளுக்குள்ளிருக்கின்றனவென்றும் அவரும் (6-ம் பிரதிவாதியும்) அந்த ஏஜென்ஸி எல்லைகளுக்குள் வஸித்து வருகிறாரென்றும் அவர் கிரயத்திற்கு வாங்கினதற்கு முன் தான் வாங்கிய நிலங்களின்பேரில் கவர்ன்மெண்டாருக்குச் சேரவேண்டிய தீர்வை பாக்கி கிடையாதாகையால் அவர் (வாதி) கட்டின மொத்தத்தில் யாதொரு பாகமும் செலுத்த சட்டப்படி பந்தப்பட்டவரல்ல வென்றும் வாதம் கூறினர். ஸப்கோர்ட்டார் 6-ம் பிரதிவாதியின் மேல் தாவாவை தாக்கல் செய்துகொள்ள அந்த கோர்ட்டுக்கு அதிகாரவரம்பு கிடையாதென்ற அவர் பேரில் தாவாவைத் தள்ளுபடி செய்து 1-முதல் 5-வரை,பிரதிவாதிகள்பேரிலும், ஜமீனை விற்ற தாலூகா கஜானவில் வைக்கப்பட்டிருந்த தொகையில் வாதியும் 6-வது பிரதிவாதியும் வாங்கிய நிலங்கள் போக மீதி 1 முதல் 5 வரை பிரதிவாதிகளுடைய அனுபோகத்திலிருக்கப்பட்ட நிலங்களின் பேரில் செலுத்தப்படவேண்டிய தீர்வை மொத்தம் எவ்வளவு வருகிறதோ அவ்வளவு தொகையின் பேரிலும் வாதிக்கு அனுகூலமாக தீர்ப்பு செய்தார்.

லாயர்கள்:—The Hon'ble Mr. B. நரஸிம் மஹேஸ்வரஸர்மா-அப்பீல் வாதிகளின் வக்கீல். Mr. V. ராமேஸன்—1–முதல் 5 அப்பீல் பிரதிவாதிகளின் வக்கீல். Mr. S. ஸ்ரீனிவாஸய்யங்கார்—6 வது அப்பீல் பிரதிவாதியின் வக்கீல்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்ரீனிவாசய்யங்கார்:—இந்த கேசில் தீர்மானிக்கவேண்டிய பாயின்டுகள் இரண்டு:—(1) வாதி கேழ்க்கிறபடி தொகை செலுத்த ஆறுவது பிரதிவாதி பந்தப் பட்டவரா அல்லவா யென்பதும் (2) ரெஜிஸ்டரான பட்டாதாரராகிய முதல் பிரதிவாதியினிடத்திலிருந்து வசூல் செய்யத்தக்க மொத்தம் எவ்வளவென்பதும் தான்.

6-ம் பிரதிவாதி ஸம்பந்தப்பட்டவரையில் அவர் கவர்ன்மெண்டாருக்கு கட்டவேண்டிய கிஸ்தியையே அவரும் தாமாஷாப்படி கட்டவேண்டுமென்கிற பொறுப்பு அவருக்கில்லாததால், வாதி அவரிடத்திலிருந்து (6-ம் பிரதிவாதிபினிடத்திலிருந்த) யாதொன்றும் வசூல் செய்ய நியாய மில்லை யென்பது தெளிவாய் ஏற்படுகிறது. தீர்வை வசூல் செய்வதற்காக ஏற்பட்டிருக்கும் ஆக்டுப்படி (Revenue Recovery Act) ஒருவன் தீர்வைச்செலுத்தத்தவறிப் போனால் அப்படித் தவறிப்போனவன் ரெஜிஸ்டராகிய பட்டாதாரராய் தானிருக்கவேண்டுமென்றும் அப்படிரெஜிஸ்டராகாமல் அவருடனிருக்கும் சொந்தக்காரராவது பாகஸ்தர்களாவது கவர்ன்மெண்டுக்குச் சேரவேண்டிய கிஸ்தி பாக்கியை கட்டுவதற்கு பந்தப்பட்டவர்களல்லவென்றும் எந்த நிலங்களின் விஷயமாய் கிஸ்தி பாக்கியாயிருக்கின்றதோ (அவர்களுடைய அனுபோகத்திலிருக்கும் அந்த நிலங்கள் அந்த கிஸ்தி பாக்கிக்கு பொறுப்பான ஈடாக யிருக்கவேண்டுமென்கிறதாயிருந்தாலும் ரெஜிஸ்டராகிய பட்டாதாரர்தான் ரெவினியூ பாக்கியைகட்ட பந்தப்பட்டவரென்றும் தற்காலத்தில் பரிஷ்காரமாய் சட்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்காதாரமாய் சுப்பிரமண்ய செட்டி v. மஹாலிங்க சாமி சிவன் (1910) இ-லா-ரி-33-ம 41 பார்க்கவும். வாதி அந்த கிஸ்தி பாக்கியை கட்டி விட்டதனாலேயே அவருக்கு கவர்ன்மெண்டாருக்கிருந்த பாத்தியதையை விட அதிகமான பாத்தியதையுண்டாகாது. கொதுவைகளைப்பற்றி கோஸ் (Ghose) என்பவர் எழுதி யிருக்கும் சட்டம் 371 வது பக்கம், ஒருவருடன் சேர்ந்துபவர் ஒரு சொத்தை அனுபவிப்பதைப்பற்றி Co-tenancy ப்ரீமான் (Freeman) என்பவர் எழுதியிருக்கும் சட்டம் 254, 349-வது பக்கங்களைப்பார்க்கவும். இந்த கோட்பாட்டை யனுசரித்தே இந்த மதராஸ் ஹைகோர்ட்டார் பருப்தி v. பக்ரம்ஹாஜி 15 I. C. 262; நாராயணன் பை-v-அப்பு (1915) 28 I. C. 456-ல் ஒருவன் இந்த கேசிலுள்ள சந்தர்ப்பங்களை போலவே கவர்ன்மெண்டாருக்குச் சேரவேண்டிய கிஸ்தி பாக்கி முழுவதையும் கட்டிவிட்டால் அவர் தன்னுடனிருக்கும் சொந்தக்காரர்கள் அல்லது பாகஸ்தர்கள் பேரில் அவர்களுடைய திரேகத்தைப்பொறுத்த் டிக்ரி பெருவதற்கு அவனுக்கு ஹக்கு கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. விஜய நகரம் மகாராஜா v. ராஜா ஸேட்ரு செர்லுஸோமசேகர ராஜ் (1903) இ-லா-ரி 26-ம 798, 813 ல் மிஸ்டர் ஜஸ்டிஸ் பாஷியம் ஐயங்கார் அவர்கள் ஒரு நிலத்தின்உடன் சொந்தக்காரர்கள் அல்லது பாகஸ்தர்கள் கூட கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தவேண்டிய கிஸ்தி பாக்கியைக் கட்ட நேராய்பந்தப்பட்டவர்கள் தாமென்னும் கோட்பாட்டின் மேல் தீர்மானித்திருக்கிறார். இதுவும் இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் 70 வது பிரிவும் இந்த கேசுக்கு சம்பந்தப்படாதென்று நாங்கள் நினைக்கிறோம். Mr. மார்ச என்பவர் கெஜபதி கிஷ்ண சந்த்ரடியோ. v. ஸ்ரீனிவாசாசார்லு என்ற கேசை தன்வாதத்திற்காதாரமாய் எடுத்துக் கூறினர். ஆனால் அந்த கேஸின் தீர்மானம் பிட்டாபுரம் ராஜா v. ஸ்டேட் ஸக்ரிடேரி (1914) 16 ம-லா-ஜ 375-ல் ஒப்புக்கொள்ளப்படவில்லை. அந்த கேசில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் என்பவரால், இது விஷயமாய் தீர்மானிக்கப்பட்டிருக்கும் கேசுகளை யெல்லாம் தீர்க்கமாய் யோசிக்கப்பட்டது. மேல்சொன்ன கேசின் தீர்மானத்தை நாராயணன்பை v. அப்பு (1915) 28 I. C. 465 ல் கெஜபதி கிருஷ்ண சந்த்ரடியோ V. ஸ்ரீனிவாசாச்சார்லு கேசில் ஒரு ஜட்ஜாயிருந்த மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர் ஒப்புக்கொண்டிருக்கிறார். (1914) மலஜ 433 யோகாம்பாள் பாயி அம்மணி அம்மாள் v. நைனுபிள்ளை மரக்காயர் (1910)-இ-லா-ரி 33 ம 15 லும் இம்மாதிரியாகவே தீர்மானிக்கப் பட்டிருக்கிறது, இந்த கிஸ்திபாக்கியை கட்டுவதற்கு 6-ம் பிரதிவாதி நேரில் பந்தப்பட்டவராயிருந்தால் அவர் ஏஜென்ஸி நாடுகளில் வாசம் செய்பவராயிருந்தபோதிலும் விசாகப்பட்டணம் அதிகாரவறம்பிற்குள் வியாஜ்ஜிய மூலத்தின் ஓர் பாகம் நேரிட்டிருப்பதாய் ஸப்கோர்ட்டார் 6ம் பிரதிவாதி அந்த கிஸ்தி பாக்கியை கட்டவேண்டியதென்று டிக்ரி செய்திருப்பார். ஆனால் ஆறும் பிரதிவாதி வாங்கின சொத்துகளில் சிலது ஏஜென்ஸி எல்லைக்குள்ளிருப்பதினால் அந்த கோர்ட்டாருக்கு அவர் மீதில் டிக்ரி செய்ய அதிகாரம் கிடையாது. வாதி அந்த தீர்வை பாக்கிகளை ஏஜென்ஸி கோர்ட்டுகளின் வியாச்சியம் செய்து வசூல் செய்துகொள்ளவேண்டும்.

ஆகையால் கீழ்கோர்ட்டார் 6-ம் பிரதிவாதியின் பேரில் செய்த டிக்ரியை உறுதிசெய்கிறோம்.

இந்த கேசில் ரெஜிஸ்டரான பட்டாதாரராகிய முதல் பிரதிவாதியிடமிருந்து கிஸ்தி பாக்கிக்காக எவ்வளவு சட்டப்படி வசூல் செய்யக்கூடுமென்பது தான் சந்தேகத்திற் கிடமாயுள்ள இன்னொரு பாயின்ட். அந்த ஜெமீன் சொத்தில் வாதியும் முதல் பிரதிவாதியும்

6-ம் பிரதிவாதியும் ஒவ்வொருவரும் சொற்பபாகம் அனுபவிக்கின்றார்கள். கொதுவை டிக்ரியை நிறைவேற்றுதலில் எலவிக்கிரயம் செய்ததில் வாதியும், 6-ம் பிரதிவாதியும் சிலபாகங்களை கிரயத்திற்கு வாங்கினார்கள். வாதியால் செலுத்தப்பட்ட தீர்வையானது இதற்கப்பால் பாக்கி விழுந்த தீர்வை. அவ்விதமாய் செய்யப்பட்ட விக்கிரயமாயிருந்தால் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 56-வது பிரிவின்படி அது ஏகாந்தமான ஏலமாயிருந்தால் வாதியும், 6-ம் பிரதிவாதியும் ஒவ்வொருவரும் கவர்ன்மெண்டுக்குச் சேரவேண்டிய பாக்கியை தாமாஷாப்படி அவரவர்களுக்கு ஏற்படும் பாகத்தை கட்டுவதற்கு பந்தப்பட்டவர்களாவார்கள். ஆனால் அந்த விக்கிரயம் கோர்ட்டு ஏலத்தில் செய்யப்பட்டதென்பதனால் யாதொரு வித்தியாசமும் ஏற்படவில்லை. ஆகையால் இந்த கேசிலுள்ள நிலமை யாதெனில், ஜெமீன் ஸ்திதி முழுவதும் கவர்ன்மெண்டாருக்கு பொறுப்பான ஈடாயிருந்ததுமல்லாமல் ரெஜிஸ்டரான பட்டாதாரராகிய முதல் பிரதிவாதியும் கவர்ன்மெண்டுக்குச் சேரவேண்டிய கிஸ்தி மொத்தத்தைக் கட்டுவதற்கு நேராய் தன்னுடைய திரேகத்தை பொறுத்து பந்தப்பட்டவராயிருந்தார். முதல் பிரதிவாதி அவருடைய திரேகத்தை பொருந்தியே கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தவேண்டிய மொத்தத்தை கட்ட பந்தப்பட்டவரென்று சொல்வது சட்டப்படி யேற்பட்டிருக்கும் நிபந்தனை யென்று தான் நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம். கொதுவை வாங்கினவருக்குக் கொதுவை மொத்தத்தொகையைச் செலுத்துவதாய் ஒப்பந்தம் செய்திருந்த கொதுவை வைத்தவர் பின்பு கொதுவை வைத்திருந்த சொத்தில் சில பாகங்களைகொதுவைபடுத்தி அநேகர்களுக்கு விக்கிரயம் செய்து விடுகிற கேசுக்கு இந்த கேசின் சந்தர்ப்பங்கள் ஒவ்வினதாயிருக்கிறது. கொதுவை வைத்தவருக்கும் கொதுவை சொத்தைக் கிரயத்திற்குப்பெற்றவருக்கும் இவர்களுக்குள், கொதுவை வைத்தவர் அவர்கிரயம் செய்யாமல் எவ்வளவு சொத்தை நிறுத்திக்கொண்டு தன்னுடைய கைப்பற்றிலேயே வைத்துக்கொண்டிருக்கிறாரோ, அவ்வளவு நிலத்திற்கு தாமாஷாப்படி ஏற்படும் கவர்ன்மெண்டு கிஸ்திபாக்கியைச் செலுத்துவதற்கு அவர் பந்தப்பட்டவராவார். அவரிடத்திலிருந்து (கொதுவை வைத்தவரிடத்திலிருந்து) கிரயத்திற்குப் பெற்றவர்கள் அவர்களுடைய கைப்பற்றிலுள்ள சொத்தின் தாமாஷாப்படி அவர்கள் (கிரயம் வாங்கினவர்கள்) கவர்ன்மெண்டுக்குச் சேரவேண்டிய கிஸ்தி பாக்கியைச் செலுத்த பந்தப்பட்டவர்களாவார்கள். இவர்கள் விஷயத்தில் இவ்விதமாய் ஏற்படும் நிபந்தனையினால் கொதுவை வைத்தவரின் திரேகத்தைப்பொருத்தியாவது கொதுவை வைக்கப்பட்ட சொத்தில் எந்தபாகத்தையாவது ஜப்தி செய்து அமுல் நடத்தி கொதுவை மொத்தத்தை வசூல் செய்துக்கொள்ளலாமென்னும் பாத்தியதை பாதிக்கப்படமாட்டாது. அவ்விதமாய் கொதுவை வைத்தவரின் திரேசத்தைப் பொருத்தாவது அல்லது ஷை நிலஸ்வான்களில் யாரிடத்திலுமாவது யிருக்கும் சொத்தை கிரயம் செய்வதனாலாவது கொதுவை மொத்தம் முழுவதையும் வசூல் செய்துக் கொள்ளும் விஷயத்தில் அவ்விதமாய் கொதுவை மொத்தத்தைப் பூராசவும் செலுத்தினவர் அல்லது யாருடைய சொத்தை கிரயம் செய்ததின்பேரில் கொதுவை மொத்தம் பூராவாய் வசூல் செய்யப்பட்டதோ அவர், ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 82-வது பிரிவின்படி கிரயத்திற்குப் பெற்ற இதர சொத்துகளின் சொந்தக்காரர்களிடத்திலிருந்து தாமாஷப்படி அவர் செலுத்திய மொத்தத்தை வசூல் செய்துக் கொள்வதற்கு ஹக்குண்டென்று தான் சொல்ல வேண்டும். கொதுவைக் கடனைத் தீர்க்க கொதுவை வைத்த சொத்துதான் பிரதம பண்டு (ஈடு). இதைப்பற்றி (கொதுவைகளைப்பற்றி) ஜோன்ஸ் என்பவர் எழுதியிருக்கும் சட்டத்தின் 736, 740 வது பக்கங்களைப் பார்க்கவும். இதன் விஷயமாய் Palmer v. Hendrie (1859)27 Beaven 349-ல் செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தையும் ஆதாரமாய்க் கூறலாம். ஆகையால் வாதி ஷை சொத்துக்களின் மூலமாய் தான் கட்டின மொத்தம் வசூலாக வேண்டுமென்று தாவா செய்திருந்தால் அவர் முதல் பிரதிவாதி அவருடைய கைப்பற்றிலிருந்த சொத்துக்களின் தாமாஷாப்படி எவ்வளவு வசூல் செய்திருக்கக்கூடுமோ அவ்வளவு மொத்தம்தான் வசூல் செய்யலாமே யல்லாமல் மற்றப்படி அதற்கதிகமாய் வசூல் செய்திருக்கமுடியாது. அதற்கு திருஷ்டாந்தமாய், வாதி ஜெமீன் நிலங்களில் மூன்றில் ஒருபங்கும், 6-ம் பிரதிவாதி மூன்றில் ஒரு பங்கும், முதல் பிரதிவாதி மிகுதியாய் நிற்கும் தன்னுடைய கைப்பற்றிலுள்ள மற்ற மூன்றில் ஒரு பாகமும் வாங்கினவர்களாயிருந்தால் கவர்ன்மெண்டுக்குச் சேரவேண்டிய கிஸ்தி பாக்கி மொத்தத்தை யார் பூராவாய் கட்டினவராயிருந்தாலும் அதாவது வாதி அல்லது 6-ம் பிரதிவாதி அல்லது 1-ம், பிரதிவாதி சட்டியிருந்தாலும் அவர் தான் அனுபவிக்கும் மூன்றில் ஒரு பங்கு போக மிகுதியாய் நிற்கும் மூன்றில் இரண்டு பாகங்களுக்குச் சொந்தக்காரர்களாகிய ஒவ்வொருவரிடத்திலிருந்து மூன்றில் ஒரு பங்கு வீதம் வசூல் செய்துக் கொள்ள ஹக்குள்ளவராவார்.

வாதிதான் கட்டிய மொத்தத்தைரெஜிஸ்டர் பட்டாதாரராகிய முதல் பிரதிவாதியின் திரேகத்தைப் பொறுத்து அவரிடமிருந்து இந்தியன்காண்ட்ராக்ட் ஆக்ட்69-வது பிரிவின்படி நேராய் வசூல்செய்ய வேண்டுமென்கிற கருத்துடன் தாவா செய்கிறாரென்பதினால் யாதாவது பேதமுண்டா பென்பது ஒரு கேள்வி ஏற்படும். இந்த கேசில் 69-வது பிரிவிலுள்ள வார்த்தைகளை அதிலுள்ளபடி வாசிக்குமளவில் ரெஜிஸ்டர் பட்டாதா

ரராகிய முதல் பிரதிவாதி சட்டத்திலுள்ள நிபந்தனைகளின்படி கவர்ன்மெண்டுக்குச் சேரவேண்டிய கிஸ்தி பாக்கி முழுவதையும் கட்டவேண்டியவராகையால் மூன்றில் ஒரு பாகம் அல்லது மூன்றில் இரண்டு பாகம் வாங்காமல் அவரிடத்திலிருந்து அவருடைய திரேகத்தைப் பொறுத்து பூராத் தொகையையும் வசூல் செய்வதற்கு பாத்தியதை யுண்டென்று சட்ட நிபந்தனையின்படி வாதிப்பதற்கு இடமுண்டாகும். வாதிதான் கட்டினமொத்தம் தனக்கு வசூலாக வேண்டுமென்கிற அக்கரையிருப்பதால் அவர் வேண்டுமென்று கட்டினவராக பாவிப்பதற்கு நியாயமில்லை. இவ்விதமாய் வாதிப்பது நியாயத்திற்கு ஒவ்வினதல்லவென்று தான் சொல்ல வேண்டுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ஏனென்றால் வாதியின் கைப்பற்றிலுள்ள சொத்துகளே கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தவேண்டிய மூன்றில் ஒரு பாக கிஸ்திக்கு ஈடாயிருப்பதால் அவர் (வாதி) தான் அந்த பாக்கியின் மூன்றில் ஒரு பாகத்தைக் கவர்ன்மெண்டுக்கு கட்ட பந்தப்பட்டவரென்று பரிஷ்காரமாய் ஏற்படுகிறது. அவர் அதிகமாய் கட்டியிருக்கும் மொத்தத்தை தன்னுடனிருக்கும் மற்ற சொந்தக்காரர்கள் சட்டப்படி நேராய் அவர்களுடைய திரேகத்தைப் பொறுத்து செலுத்த பந்தப்பட்டவர்களாயிருப்பதினாலும் அவர்களுடைய கைப்பற்றிலுள்ள சொத்துகள் அந்த கிஸ்தி பாக்கிக்கு சட்டப்படி ஈடாயிருப்பதாலும் வாதி கட்டியிருக்கும் அதிக மொத்தத்தை அவர்களிடமிருந்து வசூல் செய்துக்கொள்ள ஹக்குண்டென்பதாய்தான் சொல்ல வேண்டும். இதனடியில் இதற்கு உதாரணமாக கூறியிருக்கும் விவரணத்தினால் இந்த பாயின்டின் விஷயமாய் சட்டம் யாதென்று தெளிவாய்த் தெரிந்துக் கொள்ளலாம். A (ஏ) என்பவர் B (பி) என்பவரிடத்தில் சில நிலங்களை கொதுவை வைக்கின்றார்; பிறகு அதே நிலங்களை A என்பவர் ஷை கொதுவைக்குட்படுத்தி C (ஸி) என்பவருக்கு விக்கிரயம் செய்கிறார். பி என்பவர் C என்பவர் பேரில் வியாச்சியம் செய்து அவருக்கு எழுதிக்கொடுத்திருக்கப்பட்ட கொதுவைப் பத்திரத்தின்மேல் C (ஸி) என்பவர் கிரயத்திற்கு வாங்கின நிலங்கள் ஏலவிற்பனையில் போகாமல் தடுப்பதற்கு கொதுவை வாங்கினவராகிய B (பி) என்பவருக்கு கொதுவைப் பத்திரத்தின் கீழ் சேரவேண்டிய மொத்தம் முழுவதையும் செலுத்தி விடுகிறார். காண்ட்ராக்ட் ஆக்டின் 66-வது பிரிவுப்படி A (ஏ) என்பவர் கொதுவை மொத்தத்தைச் செலுத்த பந்தப்பட்டவரென்று சட்டமிருப்பதனால் C (ஸி) என்பவர் கொதுவை வாங்கினவராகிய B என்பவருக்குச் செலுத்தின மொத்தத்தை A (ஏ) என்பவரிடத்திலிருந்து வசூல் செய்யக் கூடுமா என்னும் கேள்வி யேற்படுகிறது. அவர் அவ்விதமாய் வசூல் செய்ய நியாயமில்லை யென்றுதான் வாஸ்தவமாய்ச் சொல்லவேண்டும், ஏனென்றால் A (ஏ) என்பவருக்கும் C (ஸி) என்பவருக்கும் அதாவது இவர்களிருவருக்குள், கொதுவைக் கடன் மொத்தத்தைச் செலுத்த C (ஸி) என்பவர்தான் பந்தப்பட்டவராயிருக்கிறார். C (ஸி) என்பவர்தான் முக்கியமான கடன்காரராயிருப்பதால் A என்பவர் கொதுவை வைத்துக்கொண்டவராகிய B என்பவருக்கு ஒரு ஜாமீன்தாரராய் பாவிக்கப்படுவார். ஒரு கடனைச் செலுத்த ஆதியில் ஒருவர் பந்தப்பட்டவராயிருந்திடினும் கடசியாய் அந்தக் கடனைச் செலுத்தும் காலத்தில் யார் பந்தப்பட்டவராக யேற்படுகிறாரென்பதைதான் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது. மேற்கண்ட கேசில் C (ஸி) என்பவர் கொதுவை மொத்தம் முழுவதையும் A (ஏ) என்பவரிடத்திலிருந்து அவருடைய திரேகத்தைப் பொருத்தே வசூல் செய்ய நியாயமுண்டென்று வாதிப்பதற்கும் கூடும் ஆனால் A (ஏ) என்பவர் C (ஸி) என்பவருக்குச் செலுத்தின மொத்தத்திற்கு கொதுவை வைக்கப்பட்ட நிலங்கள் ஈடாயிருக்கின்றதாகையால் A என்பவர் அந்த கொதுவை சொத்திலிருந்து எவ்வளவு வசூல் செய்யக்கூடுமோ அவ்வளவுதான் வசூல் செய்யலாம்; அப்படி வசூல் செய்யும் மொத்தம் A (ஏ) என்பவர் C (ஸி) என்பவருக்குச் செலுத்தின மொத்தத்தைவிட குறைவாயிருந்தாலும் இருக்கலாமென்று எண்ணுவதற்கும் இடமுண்டு. இவ்விதமாய் அபிப்பிராயங்கொள்வது நிலைநிற்ககூடாததென்று தோன்றுகிறது. ஏனென்றால் அப்படி செய்வதனால் அந்த சொத்தை கொதுவைக் கடனை உட்படுத்திக் கிரயத்திற்குப் பெற்றவர்தான் ஒத்தியை மீட்கும் பாத்தியதையை கிரையத்திற்கு வாங்குவதற்காக செலுத்திய கிரய மொத்தத்தை மறுபடியும் வசூல் செய்துக்கொள்ள அவருக்கு ஹக்குண்டென்று சொல்லவேண்டியதாய் ஏற்படும். இதைவேறுவிதமாய் மாறி சொல்லுமிடத்து கொதுவை வாங்கினவரால் A (ஏ) என்பவர் வியாச்சியம்செய்யப்பட்டு அவர் (A-ஏ என்பவர்) அந்த கொதுவை மொத்தத்தைச் செலுத்தும்படி அவருடைய திரேகத்தைப் பொருந்தி நிர்ப்பந்திக்கப்பட்ட காரணத்தால் அவர் B என்பவருக்கு பணம் செலுத்தும்படி நேரிட்டால் அவர் (A-ஏ என்பவர்) C (ஸி) என்பவருக்குச் செலுத்தின மொத்தத்தை மறுபடியும் அவரிடத்திலிருந்து (C–ஸி என்பவரிடத்திலிருந்து) வசூல் செய்வதற்கு ஹக்குண்டென்றுதான் சொல்ல வேண்டியதாகும். இங்கிலாந்தில் ஒரு சொத்தை கொதுவைக்குட்படுத்திக் கிரயம் செய்தால் கிரயம் வாங்கினவர் அந்த சொத்தின்பேரில் செலுத்தவேண்டிய கொதுவை மொத்தத்தைச் செலுத்தத்தவறிப்போய் அதனால் கிரையத்துக்கு விற்றவருக்கு யாதேனும் நஷ்டங்கள் நேரிட்டால் அந்த நஷ்டங்களை கிரயம் பெற்றவர் செலுத்துவதாக கிரயம் செய்தவருக்குத் தான் ஜாமீன்தாராவதாக ஒப்புக்கொண்டதான உட்தார்ப்பரியமாக பாவிக்கப்படுமென்ற சட்டம் ஏற்பட்டிருக்கிறது.

கிரயம் பெற்றவர் அப்படி ஜாமீன்தாரராவாரென்பது ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆகட் 55-வது பிரிவில் செய்யப்பட்டிருக்கும் நிபந்தனைகளின் உட்தாத் பரியமாய் யில்லாவிடினும், கிரயம் செய்தவராகிய கொதுவை வைத்தவர் கொதுவை வாங்கிக்கொண்டவருக்கு கொதுவைக்கடனைச் செலுத்தக் கட்டுப்பட்டிருக்கும் பந்தம் போய்விடமாட்டாதென்றாலும் இங்கிலாந்தில் சட்டம் எப்படி வழங்கிவருகின்றதோ அவ்விதமாகவே இவ்விடத்திலும் கிரயம் செய்தவராகிய கொதுவை வைத்தவர் செலுத்த வேண்டிய கடனை கிரயம் பெற்றவர் செலுத்த பந்தப்பட்டவ ராகிறாரென்பது தான் சட்டமென்று ஏற்படுகிறது. ஆகையால்செலுத்த வேண்டிய மொத்தத்தைச் செலுத்துவதற்கு சிரத்தையுள்ளவரென்று காண்ட்ராக்ட் ஆக்ட் 69-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நபர் யாரென்று யோசிக்குமளவில் அவருக்கும் பிரதிவாதிக்கும் இவர்களுக்குள் பிரதிவாதி மூன்றாவது நபருக்கு பணம் செலுத்த பந்தப்பட்டவராயிருந்தாலும் அந்த பணத்தை தான் செலுத்த கட்டுப்பட்டவரல்லாத நபரென்றுதான் சொல்லவேண்டும். இதற்காதாரமாய் மங்களத்தம்மாள் V. நாராயணசாமி ஐயர் 1507 ம-லா-ஜ 250; மணீந்த்ர சந்தர நண்டி V. ஜசாஹிர் குமாரி (1905) இ-லா-ரி. 32 கல். 643 பார்க்கவும். பிரதிவாதியின் வேண்டுகோளின் படி பணம் செலுத்தியது விஷயமான காமன் லா (Common Law) வியாச்சியம் 69வது பிரிவுக்கு மூலகாரணமாயிருக்கிறதா அல்லது ஒருவனுடைய ஸ்தானத்தை மற்றொருவன் அடைதல் என்கிற நீதிக்கொள்கை அதற்கு மூலகாரணமாயிருக்கிறதா என்பது முக்கியமான அம்சமல்ல. ஏனென்றால் கடைசியாக எவன் கடமைப்பட்டவனோ அவனிடமிருந்து இரண்டு கேசில் எதாவது சரி, வாதி வசூல் செய்துகொள்ளக்கூடும். மாலி v. காரெட் (1872) L. R. 7 Ex. 101, 104-ல் சீப் ஜஸ்டிஸ் காக்பர்ன் என்பவர் Leake, page 45, Sixth Editon Sheldow Sub-rogation, page 15, Section 11, ஆதாரவாக எடுத்துக்கொண்டிருக்கிறார். இந்தக்கேசில் வாதி முதல் பிரதிவாதி ஆகிய இருவர்களுக்கு மாத்திரம் தான் தாவா சொத்தில் பாத்தியதையிருந்து கவர்ன்மெண்டாருக்குச் செலுத்த வேண்டிய கிஸ்திபாக்கியை வாதி செலுத்தியிருந்தால் பிரதிவாதியின் கைப்பற்றிலுள்ள நிலங்கள் விஷயமாய் தாமாஷாப்படி எவ்வளவு தொகை செலுத்தவேண்டியதிருக்குமோ அந்தத் தொகைக்கதிகமாய் வாதி வசூல் செய்திருக்க முடியாது. ஆறும் பிரதிவாதியின் கைப்பற்றிலுள்ள சொத்தின் விஷயமாய் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தவேண்டியதாக தாமாஷாப்படி யேற்படும் கிஸ்தி பாகத்தை செலுத்த வாதி பந்தப்பட்டவரல்ல. ஆகையால் வாதி அப்படி செலுத்தின மொத்தத்தை முதல் பிரதிவாதி யினிடமிருந்து வசூல் செய்ய நியாய முண்டாவென்றும் ஒரு கேள்வி யேற்படுகிறது. வாதி அவருடைய கைப்பற்றிலுள்ள சொத்தின் விஷயமாகவும் 6-வது பிரதிவாதியின் கைப்பற்றிலிருக்கிற நில விஷயமாகவும் தாமாஷாப்படி யேற்படும் கிஸ்தி பாக்கியின் பாகங்களை வாதி முதல் பிரதிவாதியினிடத்திலிருந்து வசூல் செய்துக்கொள்ளநியாயமுண்டென்று சொல்லும் விஷயத்தில், வாஸ்தவமாய் ஆறும் பிரதிவாதி செலுதத வேண்டிய மொத்தத்தைகூட முதல் பிரதிவாதியைச் செலுத்தும்படி கட்டாயப்படுத்தினதாக யேற்படும். அப்படி செய்வதுநியாயமல்லவென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். பிரஸ்தாபதாவா தொகையை செலுத்த பந்தப்பட்டிருப்பவர்கள் பேரிலெல்லாம்,கொண்டு வரவேண்டிய வியாஜ்ஜியமாயிருப்பதால் அந்த நபர்களெல்லோரும் அவர்களுடைய திரேகத்தைப் பொருத்தோ அல்லது அவர்களுடைய கைப்பற்றிலுள்ள சொத்துக்களைப் பொருத்தோ கிஸ்தி பாக்கியைச் செலுத்த வேண்டியவர்களாயிருப்பதால் அந்த நபர்கள் எல்லோரையும் இந்த வியாஜ்ஜியத்தில் கட்சிதாரர்களாய்ச் சேர்த்திருக்க வேண்டுமென்பது அவசியமென்று தான் சொல்லவேண்டும். அப்படி அவர்களைச் சேர்த்து வியாஜ்ஜியம் கொண்டு வந்தால்தான் அவர்கள் ஒவ்வொருவரும் கடசியாய் தாமாஷாப்படி எவ்வளவு மொத்தம்செலுத்த வேண்டியவராவார்களென்று நிச்சயிப்பதற்கு ஹேதுவாயிருக்கும். இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் 69-வது பிரிவு இந்தகேசுக்கு சம்பந்தப்பட்டதல்ல வென்றுதான் சொல்லவேண்டும். (இதற்காதாரமாய் பட்டடே அலி v. கங்கனுத்ராய் (1882) இ-லா-ரி கல் 113-ல் இவ்விதமான வியாஜ்ஜியம்கொண்டுவர இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்டின் 69வது பிரிவின் நிபந்தனை இடங்கொடுக்குமாவென்று சந்தேகிக்கப்பட்டது.

"பணத்தைச் செலுத்துவதில் சிரத்தையுள்ளவன்" என்பவன் தீர்வை பூராவையுமாவது, அல்லது தீர்வையில் ஒரு பாகத்தையாவது செலுத்தத் தானே கடமைப்படாதவனாகயிருக்கவேண்டும்.

(43 வது பிரிவின் 2-வது உட்பிரிவையும் 146, 147-வது பிரிவுகளைப் பார்க்கவும்). ஆகையால் இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்டின் 69-வது பிரிவு இந்த கேசுக்குச் சம்பந்தப்பட்டதல்லவென்று நாங்கள் தீர்மானித்து இந்த அப்பீலை சிலவுகளுடன் தள்ளுபடி செய்கிறோம்.

சீப் ஜஸ்டிஸ்—ஸர்ஜான் வாலிஸ் :—மேல் சொல்லிய தீர்மானத்தை நான் ஆமோதிக்கிறேன்.

Jagapati Raju v. Sadrusannama Arad I. L. R. 39 Mad. 795.

நெ. 21.

FULL BENCH.

புல் பெஞ்சு.

ஜட்ஜிகள் :— { ச்சீப் ஜஸ்டிஸ் ஸர்ஜான் வாலிஸ் Kt. / மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரஸ்வாமி சாஸ்திரியார் / மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ்.

ஆலோசனை ஸபையிலுள்ள இந்தியா மந்திரி அவர்களுக்காக தஞ்சாவூர் கலெக்டர். } பிரதிவாதி—அப்பீல்வாதி

V.

ரங்கஸாமி அய்யங்காரும் மற்றும் 2 பேர்களும்—வாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாயின்ட் :—1898-ம் ளுத்திய 5-வது ஆக்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடு 88-வது பிரிவுப்படி ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவன் தலை மறைவாகயிருக்கும்பொழுது குடும்ப சொத்தில் அவனுக்கென்றும் பிரிக்கப்படாமலிருக்கும் அவனுடைய பாகத்தையாவது அல்லது அதில் சிலதையாவது ஜப்தி செய்யக் கூடுமா.

ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன், தலை மறைவாக யிருக்கும் காலத்தில் பாகம் செய்யப்படாமலிருக்கும் குடும்ப சொத்தில் அவனுக்குள்ள பாகத்தையாவது அல்லது அதில் எவ்வளவையாவது கிரிமினல் புரொஸீஜர் கோடு 88-வது பிரிவுப்படி ஜப்தி செய்யக்கூடுமென்று பைஸல் செய்யப்பட்டது.

டை கேசுக்கு ஆதாரமாக முஸாமட் கொலாப்குன்வார்-க்கும், பெனாரிஸ் (காசி) கலெக்டர் ராஜா ஊடிட் நாராயணஸிங் இவர்களுக்கும் நடந்து 1847-ம் ளுத்தில் 4 மூர். இ. அ. 246-ல் பிரசுரிக்கப்பட்டவும், ஜுக்கோ மோஹன் பக்ஷிக்கும், ராய் மதுராநாத்ச் சௌட்ரி என்பவருக்கும் நடந்து, 1867 ம் ளுத்தில் 11 மூ. இ. அ 223-ல் அனுஸரிக்கப்பட்டதுமான கேசும்; ஊமயன் என்பவன் விஷயமாய் 1903-ம் ளு நடந்து 2. Weirs' Cr. Rulings 43-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிற தீர்மானம் ஒப்புக்கொள்ளப்பட்டது. சின்னபன் என்பவன் விஷயமாக 1903-ம் ளு நடந்து 2. Weirs' Cr. Ru. 43-ல் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தை உபேக்ஷித்து விடப்பட்டது.

G. J. குராஷி, திருத்துறைப் பூண்டி டிஸ்ட்ரிக்ட் முன்சீப், 1910-ம் ளுத்து அஸல் வியாச்சிய நெ. 47-ல் பிறப்பிவித்த டிக்கிரியின் பேரில், நாகப்பட்டணம் ஸப் ஜட்ஜ் J. S. ஞானியார் நாடார் அவர்கள் கோர்ட்டில் 1911-ம் ளுத்திய 260 நெ. அப்பீல் செய்து, அதில் பிறப்பிவிக்கப்பட்ட டிக்கிரியின்பேரில் இந்த இரண்டாவது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தக் கேசை புல்பெஞ்சுத் தீர்மானத்துக்கு அனுப்பும்படி பிரப்பிவிக்கப்பட்ட உத்தரவில் இந்தக் கேசின் முக்கிய சங்கதிகள் காணப்பட்டிருக்கின்றன.

லாயர்கள்:—கவர்ன்மெண்டு பிளீடர்-அப்பீல்வாதியாகிய கவர்ன்மெண்டார் பக்கத்துக்கும் S. T. ஸ்ரீனிவாஸகோபாலச்சாரியாரும், ஸ்ரீநிவாஸாச்சாரியாரும்—அப்பீல் பிரதிவாதிகள் பக்கத்துக்கும் ஆஜர் ஆனார்கள்.

இந்த 2-வது அப்பீல், மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர், மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் இவர்கள் முன்புக்கு விசாரணைக்கு வந்த போது, அவர்கள் பின்வருமாறு, இந்தக் கேசின் விஷயங்களைப் பற்றி புல் பெஞ்சுத் தீர்மானத்துக்கு அனுப்பும்படி அடியில் கண்ட உத்தரவைச் செய்தார்கள்.

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் :—இந்தக் கேசின் விஷயம் முக்கியமான தாகையாலும் இந்தக் கேசைப்போலொத்த சங்கதிகளடங்கிய (1) ஊமயன் (2) சின்னய்யன் என்பவர்களுடைய கேசின் தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று பரஸ்பர விரோதமாக யிருக்கிறபடியாலும் இந்தக் கேசில் சம்மந்தப்பட்ட அடியில் கண்ட விஷயத்தை புல் பெஞ்சாருடைய தீர்மானத்திற்காக அனுப்பியிருக்கிறோம்.

"ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் தலைமறைவாயிருக்கும் காலத்தில் பாகம் செய்யப்படாமலிருக்கும் குடும்ப சொத்தில் அவனுக்குள்ள பாகத்தையாவது அல்லது அவன் பாகத்தில் எவ்வளவையாவது கிரிமினல் புரொஸீஜர் கோடு 88-வது பிரிவுப்படி ஜப்தி செய்யக்கூடுமா ?

ஸர்க்கார் பக்கத்தில், கவர்ன்மெண்டு பிளீடருக்காக T. நரஸிம்ம அய்யங்கார் அடியில் கண்டபடி தெரிவித்துக்கொண்டார்.

இதைப்போலொத்த கேசுகளாகிய (1) சின்னயன்—(2) ஊமயன் இவர்கள் சம்பந்தமான கேசுகளின் தீர்ப்புகள் பரஸ்பர விருத்தமாக யிருப்பதைவிட்டு இந்தக் கேசு புல் பெஞ்சு தீர்மானத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. கிரிமினல் புரொஸீஜர் கோடின் 88-வது பிரிவானது, பெங்கால், 1796-ம் ளுத்து 11-வது ரெகுலேஷன் 4-வது பிரிவுக்கு ஒத்திருக்கிறது. அந்தப் பிரிவுப்படி ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு டை குடும்ப சொத்தில் கிடைக்கக்கூடிய பாகத்தை கவர்ன்மெண்டார் ஜப்தி செய்யவாவது ஏலம் போடவாவது செய்யலாம். (3) முஸாமத் கொலாப்கூன்வாருக்கும், பெனாரிஸ் கலெக்டர் ராஜா ஊடிட் நாராயண்ஸிங் இவர்களுக்குள்ளும் (4) ஜக்கு மோஹன் பக்ஷிக்கும், ராய் மதுரா நாத்ச்சௌட்ரிக்கும் நடந்த கேசுகளைப் பார்க்க. ஹிந்து லாப்படி யேர்ப்பட்ட எந்த விதிகளின்படிக்கு மில்லாமல் கிரிமினல் புரொஸீஜர் கோடு 88-வது பிரிவின்படி ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்கு கவர்ன்மெண்டாரே சொந்தக்காரர் ஆய்விடுகிறார்கள். எதிரியின் கைவசத்திலிருக்கிற ஸொத்துக்குத்தான் சொத்து என்று சொல்லவேண்டுமென்பதற்கு ஆதாரம் ஒன்றுமில்லை.

குலாம் ஆபெட்டுக்கும், துல்ஸீராம் பிராவுக்கும் 1883-ம் ஞூத்தில் நடந்து இ-லா-ரி. 9 கல். 861-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசையும் ஆதாரமாக எடுத்துக் கூறப்பட்டது.

அப்பீல் பிரதிவாதிகள் பக்கத்தில், S. T. ஸ்ரீநிவாஸ கோபாலாச்சாரியாரும், (N. ஸ்ரீநிவாஸாச்சாரியாரும்) 'சொத்து' என்பது எதிரிக்குப் பாத்தியப்பட்ட சொத்தாகத்தான் இருக்கவேண்டும். இந்தக் கேசில் சொத்து எதிரிக்குச் சொந்தமானதல்ல.

[ச்சீப் ஜஸ்டிஸ் வாலிஸ் துரை சொத்து என்றால் சொத்திலிருக்கும் பாத்தியதை என்று அர்த்தமாகமாட்டாது என்று ஏன் சொல்லுகிறீர்கள் ?] என்று கேட்டார்.

கிரிமினல் சட்டத்துக்கு திட்டமாக அர்த்தம் செய்யவேண்டும். இவ்வளவென்று தெரியாத பாகமானது இந்தப் பிரிவுப்படி சொத்தாக மாட்டாது. ஒரு உடன் பாகஸ்தன் விஷயமாகச் சொல்லும்போது, பூராவும் அவன் வசத்திலிருக்கும் பிரத்தியேகமான சொத்தைத்தான் சொத்தென்று சொல்லலாம்.

(ஜஸ்டிஸ் பிலிப்ஸ் —ஸ்பஷ்டமாகத் தெரிகிற சொத்தைத்தான் சொத்தென்று சொல்லலாமென்று சொல்லுகிறீர்கள் !) என்று கேட்டார்.

ஜப்தி செய்யும் விஷயத்தில் ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் நிபந்தனைகள் இந்தக் கேசுக்கு ஸம்மந்தப்பட மாட்டா. கிரிமினல் ப்ரொஸீஜர் கோடில் ஜப்தி செய்யும் விஷயமாய் சொல்லியிருக்கும் விஷயங்கள் ஸிவில் ப்ரொஸீஜரில் சொல்லி யிருக்கும் விஷயங்களுக்கு ஒத்துமையாயில்லை. ஜப்தி செய்யும் விஷயத்தில் ஸிவில் ப்ரொஸீஜர் கோடில் குறிப்பிட்ட நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சொத்து என்ற வார்த்தையை அர்த்தம் செய்ய வேண்டியதற்காக கிரிமினல் ப்ரொஸீஜர் கோடின் 386, 514-வது பிரிவுகளைப் பார்க்கலாம்.

கிரிமினல் ப்ரொஸீஜர் கோடு 386-வது பிரிவில் சொல்லியிருக்கும் சொத்து என்பது எதிரிக்குச் சொந்தமான சொத்தென்று அர்த்தம் செய்யவேண்டுமென்பதாய் 2. வேர்ஸ் (Weirs') கிரிமினல் ரிப்போர்ட்டு 442-ம் பக்கத்தில் பிரசுரம் செய்திருக்கும் 1876-ம் ஞூ பிப்ரவரிமீ 16உ போட்ட 521-ம் நெ. ப்ரொஸீடிங்ஸிலும், 1893-ம் ஞூத்தில் இ-லா-ரி. 20 கல். 478-ம் பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற சக்கிரவர்த்தினி அவர்களுக்கும்—ஸீதாநாத் மித்திரா என்பவருக்கும் நடந்த கேசிலும் சொல்லப்பட்டிருக்கிறது. கிரிமினல் ப்ரொஸீஜர் கோடின் 5-வது ஷெடியூல் 6-வது பாரத்தில் சொத்தென்பதை இன்ன விதமாக அர்த்தம் செய்யவேண்டுமென்பதைப் பற்றி கொஞ்சம் சொல்லப்பட்டிருக்கிறது. பூராவும் சொந்தமாக யிருக்கவேண்டுமென்பது தாத்பரியம்

எதிர் கக்ஷி தரப்பில் காட்டப்பட்ட தீர்மானங்கள் தாயபாகச் சட்டத்துக்கு சம்பந்தப்பட்டது.

இந்த 2-வது அப்பீல் விசாரணைக்கு வந்து கோர்ட்டாருடைய அபிப்பிராயம் ச்சீப் ஜஸ்டிஸால் வெளியிடப்பட்டது.

இந்தக்கேசில் கேழ்க்கப்பட்டிருக்கும் விஷயத்தில் ஜப்தி செய்ய அதிகாரம் உண்டென்று அபிப்பிராயப்படுகிறோம். 1796-ம் ஞூத்து, 11-வது பெங்கால் ரெகுலேஷன் விஷயமாய்ப் பிரிவிகௌன்ஸிலில் செய்த 2 தீர்மானங்களை மிஸ்டர் நரஸிம்மய்யங்கார் எங்களுக்கு காண்பிவித்தார். இந்தத் தீர்மானங்களை இந்தக்கேசை புல் பெஞ்சு அபிப்பிராயத்துக்கு அனுப்பி வைத்த 2 கற்றறிந்த ஜட்ஜிகளிடம் காட்டவில்லை போலிருக்கிறது. 1796-ம் ஞூத்திய 11-வது ரெகுலேஷன் 4-வது பிரிவுப்படி ஆஜரில்லாமலிருக்கிற நபருக்குப் பாத்தியப்பட்ட நிலம் அல்லது வாஸ்தவமான எந்தச் சொத்தையும் ஜப்தி செய்யும்படி மாஜிஸ்ட்ரேட்டு உத்தரவு செய்யவேண்டுமென்றும் 6-வது பிரிவுப்படி நிலங்களை ஜப்தி செய்த தேதி முதல் 6மீ காலத்துக்குள் காணாமல் போனவன் ஆஜராகா விட்டால் ஷை நிலத்தை கவர்னர் ஜெனரல் அவர்கள் இஷ்டப்படி செய்துகொள்ளலாமென்றும் ஏற்படுகிறது. மிதாக்ஷர சட்டம் பிரகாரமுள்ள பெனாரிஸிலிருந்து முஸ்ஸாமத் கொலாப் குமாருக்கும், பெனாரிஸ் கலெக்டர் ராஜா ஊடட் நாராயணஸிங் இவர்களுக்கும் இந்த ரெகுலேஷன்படிக்கு நடந்த கேசில், காணாமல் ஒளிந்து கொண்ட நபருக்கு அவிபக்த குடும்ப சொத்திலிருந்து பாகம் செய்து கொடுக்கப்படாமலிருக்கும் பாத்தியதையானது கவர்ன்மெண்டாரால் யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ அவனுக்கு சேருமென்று பிரிவிகௌன்ஸிலில் தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது. ஜுக்கு மோஹன் பக்ஷி என்பவருக்கும், ராய் மதுராநாத் சௌட்ரி என்பவருக்கும் நடந்த கேசில் பாகம் செய்து கொள்ளாமலிருக்கும் குடும்பத்தைச் சேர்ந்தவனும் தான் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்தாமலுமிருக்கிற நபருடைய சொத்தைப் பறி முதல் செய்யலாமென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

கிரிமினல் ப்ரொஸீஜர் 88-வது பிரிவில் ஸ்தாவர, சொத்துக்களையும் ஜங்கம சொத்துக்களையும் சேர்த்திருப்பதால் பெங்கால் ரெகுலேஷனைப் பார்க்கிலும் அதிக விசாலமான நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் நடவடிக்கை விஷயத்திலோ வென்றால்; இன்னின்ன விதமான சொத்துக்களை இன்னின்ன விதமாக ஜப்தி செய்யவேண்டுமென்ற விபரங்களெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தக் கேசில் அந்தப் பிரிவின்படி ஜப்தி செய்யவேண்டியது என்னவென்றால் பாகமில்லாத குடும்பத்தில் தலை மறைவாயிருக்கிறவனுக்குச் சேரவேண்டிய பாகச் சொத்துதான். இப்படி ஜப்தி செய்த சொத்தில் ஷை குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்குள்ள பாத்தியதை போய்விடாது. பின்னிடு அந்தக் குடும்ப சொத்துக்களின் மேல் பார்வைக்காக நியமிக்கப்படுகிறவனால் தாக்கல் செய்யப்படும் பாக வியாச்சியத்தின் மூலமாகவோ அல்லது வேறு வியாச்சியங்கள் மூலமாகவோ ஷை சொத்துக்களில் மற்ற பாகஸ்தர்களுக்கு யிருக்கும் பாத்தியதையை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். தலை மறைவாயிருக்கும் நபருக்கு குடும்ப சொத்திலுள்ள பாகத்தைப் பெற்றுக்கொள்ளும் விஷயமாக இந்தப் பிரிவுப்படி ஒரு ரிஸீவரை நியமிக்க நியாயம் கிடையாதென்றும் அப்படி ரீஸீவரை நியமித்தால் ஷை சொத்தை மேல் பார்த்துக்கொண்டிருக்கிறவரிடமிருந்து ஷை சொத்தை பிடுங்கி கொண்டதாய் விடுமென்று சின்னயன் கேசில் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் செய்திருக்கிற தீர்மானத்தில் நாங்கள் கலந்துகொள்ள முடியவில்லை. இதற்கு எதிரிடையாய் "சொத்து" என்பதற்கு இன்னதுதான் அர்த்தம் என்று கட்டுப்பட்டுச் சொல்லக்கூடிய விதமாக 88-வது பிரிவின் வாசகத்தால் ஏற்படவில்லை யென்றும், 'சொத்து' என்ற வார்த்தையில் குடும்ப சொத்தில், பாகஸ்தர்களுக்கு இருக்கும் பாத்தியமும் அடங்கினதுதானென்றும் ஊமயன் கேசில் ச்சீப் ஜஸ்டிஸ் காலின்ஸ் துரையும், ஜஸ்டிஸ் ஷெப்பர்டு துரையும் சொன்ன அபிப்பிராயத்துடன் நாங்கள் கலந்து கொள்ளுகிறோம்.

I. L. R. 39 Mad. 831. இ-லா-ரி. 39 ம. 831.

நெ. 22.

ஜட்ஜிகள்.— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர். மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ். }

1914-ஞூத்து லெட்டெர்ஸ் பேடென்ட் அப்பீல் நெ. 275 and 276.

நிடடவோல், மெதூர் எஸ்டேட்டுகளின் ரிஸீவர் G. நாராயணசாமி நாயுடு காரு—
வாதி, இரண்டு கேசுகளிலும் அப்பீல் வாதி.

v.

V. சேஷகிரி ராவும் மற்றொருவரும்—
பிரதிவாதிகள், அப்பீல் பிரதி வாதிகள்.

லாபாயின்ட் :—ரயத்துகளென்று சொல்லப்படும் குடிகளிடத்திலிருந்து குத்தகையாய் விடப்பட்டிருக்கும் ஸ்தாவர சொத்தை மறுபடியும் ஸ்வாதீனப்படுத்திக்கொள்வதற்கு கொண்டு வரப்படும் தாவாக்கள் விஷயமாய் (Suits valuation Act—VII of 1887) சம்மந்தப்படுமென்பது

குத்தகைக்கு விடப்பட்டிருந்த நிலங்களை குடிகளிடத்திலிருந்து மறுபடியும் ஸ்வாதீனப்படுத்திக்கொள்வதற்காக கொண்டுவரப்படும் தாவாக்கள் விஷயமாய் மதராஸ் சிவில் சோர்ட்டுகள் ஆக்டின் 14-வது பிரிவில் செய்யப்பட்டிருக்கும் நிபந்தனை சம்மந்தப்படாதென்று வெளிப்படையாய் சொல்லியிராவிட்டாலும் கோர்ட்டு பீஸ் ஆகட் (VII of 1870) 7-வது பிரிவை திருத்தியதில் XI-cc-உட்பிரிவை சேர்த்திருப்பதினால் அவ்விதமான வியாஜ்ஜியங்களுக்கு (Suits valuation Act VII) of 1887, 8-வது பிரிவின் நிபந்தனை சம்மந்தப்படுமேயல்லாமல் மதராஸ் ஸிவில் சோர்ட்டுகள் ஆக்டு 14-வது பிரிவு சம்பந்தப்படாதென்றும் ஆகையால் அவ்விதமான வியாஜ்ஜியங்களில் கோர்ட்டு பீசு கட்டணங்களுக்காக என்ன பெருமானம் (value) ஏற்படுகிறதோ அந்த பெருமானமே எந்த கோர்ட்டில் தாவா செய்யவேண்டுமென்பதாய் கோர்ட்டின் அதிகார வறம்பைத்தெரிந்துக்கொள்வதற்கும் வியாஜ்ஜியங்களின் பெருமானம் (value)-என்று சொல்ல வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

சேஷகிரி ராவுக்கும் நாராயணசாமி நாயுடுவுக்கும் நடந்து (1915) இ-லா-ரி 38 ம. 795-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேஸில் மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் என்பவர் செய்த தர்மானத்தின் பேரிலும் உத்தரவின் பேரிலும் 24 & 25 Victoria 101-வது அத்தியாயம் லெட்டெர்ஸ் பேடென்ட் சட்டத்தின் 15-வது பிரிவின்படி கொண்டுவரப்பட்ட லெட்டெர்ஸ் பேடென்ட் அப்பீல்.

கேசின் விபரம் மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் என்பவருடைய தீர்மானத்தில் நன்கு விளங்கும்.

லாயர்கள் :—Mr. P. நாகபூஷணம்......அப்பீல் வாதியின் வக்கீல். The Hon'ble Mr. B.N. ஸர்மா... அப்பீல் பிரதிவாதிகளின் வக்கீல்.

ஜஸ்டிஸ் பிலிப்ஸ்—குத்தகைக்கு விடப்பட்டிருந்த பிராதில்கண்ட நிலங்களை குடித்தனக்காரனிடத்திலிருந்து மறுபடியும் ஸ்வாதீனப்படுத்திக்கொள்வதற்காகவும், ஒரு குடியானவனிடத்திலிருந்து தீர்வை வசூல் செய்வதற்காகவும், அப்பீல் வாதி வியாச்சியம் கொண்டுவந்தார். ஷை வியாச்சியம் இன்ன கோர்ட்டின் அதிகாரவரம்புக்குட்பட்டதென்று தீர்மானிக்கும்பொருட்டு 1873 ம் ஞூத்திய 3-வது ஆக்டாகிய சென்னப்பட்டணம் ஸிவில் கோர்ட்டுகளின் ஆக்ட்டு 14-வது பிரிவினுடையவும், 1870 ம் ஞூத்திய' 7-வது ஆக்டாகிய கோர்ட்டு பீஸ் ஆக்ட்டின் 7-வது பிரிவின் (V) (d) உட்பிரிவின் நிபந்தனைகளின்படிக்கும் ஷை நிலத்தின் கிரயத்தொகையை ஏற்படுத்திக்கொண்டார். அப்படியே ஷை வியாச்சியத்தின் பிராதை ஸப் கோர்ட்டில் தாக்கல் செய்தார். ஆனால் அந்தப் பிராதின் பெறுமானத்தை, வியாச்சியங்களின் பெருமானத்தை மதிப்பு போடும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஆக்ட்டு (Suits Valuation Act) 8-வது பிரிவின்படி மதிப்பு போடுகிறதாகயிருந்தால், பிராதின் தொகை ரூ. 2500க்குக் குறைந்து விடுமென்ற காரணத்தால், பிராதை முனிசீப் கோர்ட்டில் தாக்கல் செய்து கொள்ளும்படி ஸப் ஜட்ஜ் வாதியிடம் பிராதை திருப்பிக்கொடுத்துவிட்டார். கோர்ட்டின் அதிகார வரம்பைத் தீர்மானிக்கும் விஷயத்தில், எந்தச் சட்டத்தின் நிபந்தனைகளை அனுஸரிக்க வேண்டும் என்ற விஷயமானது பைசல் செய்யப்படும்பொருட்டு இந்த லெட்டர்ஸ் பேடென்டு அப்பீல் நம்முடைய முன்புக்கு வந்திருக்கிறது.

1905-ம் ௵த்திய 6-வது ஆக்டினுல் கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு சீர்திருத்தப்பட்டது. ஒரு குடித்தனகாரனிடமிருக்கும் ஸ்தாவர சொத்தை மீட்டுக்கொள்ளும் பொருட்டாக கோர்ட்டு பீஸ் ஆக்ட்டின் 7-வது பிரிவின் (XI c. c.) உட்பிரிவுகளில் சில புது வியாச்சியங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்தக்கேசானது புதிதாகச்சேர்க்கப்பட்ட வியாச்சியங்களின் ஜாபிதாவில் நிஸ்ஸந்தேகமாகச்சேருகிறது. இப்பேர்ப்பட்ட வியாச்சியங்களை கோர்ட்டு பீசு ஆக்ட்டு 7-வது பிரிவின் V-வது உட்பிரிவிலிருந்து 7-வது பிரிவின் XI-வது உட்பிரிவுக்குக்கொண்டு போவதற்காகவே இந்தச்சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. கோர்ட்டு பீஸ் ஆக்ட்டு 7-வது பிரிவு V-வது உட்பிரிவின்படிக்குள்ள எல்லா வியாச்சியங்களும், கோர்ட்டு கட்டணத்தை நிதானிக்கும்பொருட்டு வியாச்சியத்தின் தொகையை எவ்வளவென்று ஏற்படுத்திக்கொள்ளப்படுகிறதோ அதே தொகைதான், கோர்ட்டு அதிகார வரம்பைத் தீர்மானிக்கும் விஷயத்திலும் ஏற்படுமென்ற நிபந்தனைகளை அடங்கிய 1887-ம் ௵த்து 7-வது ஆக்ட்டாகிய (Suit Valuation Act)ன் 8-வது பிரிவிலிருந்து, விலக்கப்பட்டிருக்கின்றன. 8-வது பிரிவின் நிபந்தனைகளிலிருந்து விலக்கப்பட்டிருக்கிற வியாச்சியங்கள் எவை என்றால் கோர்ட்டு பீஸ் ஆக்ட்டின் 7-வது பிரிவின் 5, 6, 9, 10 (d) உட்பிரிவுகளின்படி வரும் வியாச்சியங்கள்தான். 1905-ம் ௵த்து 6-வது ஆக்ட்டு ஊர்ஜிதத்துக்கு வருமட்டிலும் ஒரு குடியானவனிடமிருந்து ஸ்தாவர சொத்தை மீட்டுக்கொள்ளும்படி செய்யும் வியாச்சியத்தின் மதிப்புத்தொகையை ஸிவில் கோர்ட்டுகளின் ஆக்ட்டு 14-வது பிரிவுப்படி, ஏற்படுத்தப்பட்டதேயன்றி (Suits Valuation Act) 8-வது பிரிவின்படி அல்ல. 14-வது பிரிவு வெளியரங்கமாக ரத்துச்செய்யப்படவில்லை. 7-வது பிரிவின் (XI c, c.) உட்பிரிவில் கண்ட வியாச்சியங்களின் சம்பந்தமாய் ஷை பிரிவானது, உள்ளர்த்தமாய் ரத்துச்செய்யப்பட்டிருக்கிறதாவென்று ஒரு சங்கதியை மாத்திரம்தான் நாம் தீர்மானிக்கவேண்டியதிருக்கிறது.

இந்த பின் சொல்லப்பட்ட ஆக்டானது கோர்ட்டு பீஸ் ஆக்டைச் சீர்திருத்துவதற்காக உண்டுபண்ணப்பட்டது. அது (Suits Valuation Act) 8-வது பிரிவின் கீழ் வருகிற ஒரு புது வியாச்சிய ஜாப்தாவைச் சேர்ப்பதன் மூலமாக அந்த ஆக்டை அகஸ்மாத்தாய் பாதிப்பதோடு, அப்பேர்ப்பட்ட வியாச்சியங்களை மதுராஸ் ஸிவில்க்கோர்ட்டுகளின் ஆக்ட்டின் 14-வது பிரிவின் நிபந்தனைகளை விட்டும், உள்ளர்த்தமாய் எடுத்துவிடுகிறது. (Suits Valuation Act) 8-வது பிரிவுப்படி விதிகள் உண்டாக்கப்படும்போது ஸிவில் கோர்ட்டுகளின் ஆக்ட்டு 14-வது பிரிவு ரத்துச்செய்யப்படுமென்று, Suits Valuation ஆக்ட்டின் 6-வது பிரிவில் வெளியரங்கமாய் (குறிப்பிட்டு)ச்சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல். Suits Valuation Act ஊர்ஜிதத்துக்கு வந்தபோது, ஏதோ ஒரு சங்கதி நடக்கும்வரை அது (Suits Valuation Act) 14-வது பிரிவை ரத்துச்செய்யும் நோக்கம் இல்லையென்றும், அந்த ஒரு சங்கதி இன்னும் நடக்கவில்லையென்றும் பரிஷ்காரமாய் தெரிகிறது. ஆனுல் 1905-ம் ௵த்து 6-வது ஆக்ட்டை உண்டுபண்ணினதினுல், அந்தச்சட்டம், கோர்ட்டு பீஸ் ஆக்டைச்சீர்திருத்தினதுமல்லாமல், பிரஸ்தாபக்கேசின் வகுப்பைச்சேர்ந்த கேசுகளை எல்லாம், 14-வது பிரிவின் நிபந்தனைகளிலிருந்தும் அகஸ்மாத்தாய் எடுத்துவிட்டு, Suits Valuation Act 8-வது பிரிவுப்படி வரும் கேசுகளை அதோடு சேர்த்திருக்கிறது. 1905-ம் ௵த்து 6-வது ஆக்ட்டை மெல்கண்ட பலனை யடையவேண்டுமென்றுவது அல்லது வேண்டாமென்றுவது நோக்கத்துடன் உண்டுபண்ணி யிருந்தாலுமே சரி, மேல்கண்ட முடிவு உண்டாய்விட்டதென்றும் பின் சொல்லிய சட்டத்தை ஊர்ஜிதத்துக்குக்கொண்டு வந்ததின் மூலமாக சட்டம் மாறி விட்டதென்றும் வியக்தமாகத் தெரிகிறது.

ஸிவில் கோர்ட்டுகளின் ஆக்ட்டு சென்னப்பட்டணம் ராஜதானியில் மட்டும்தான் செலாவணியாகிறதென்பதும் ஆனுல், அதைச்சீர்திருத்தும்படி பிறப்பிவிக்கப்பட்ட ஆக்ட்டானது இந்தியா முழுவதிலும் செலாவணியாகிறதென்பதும் நம்முடைய முன்புக்கு இருக்கும் விஷயத்தை மாற்றவில்லை. பெரிய ஆக்ட்டில் கண்ட விஷயங்களில் சின்ன ஆக்ட்டில் கண்ட விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. சீர்திருத்த ஆக்ட்டினுல் ஏற்படுத்தின விதிகள் சென்னப்பட்டணம் இராஜதானியிலும் இந்தியாவின் மற்றப்பாகங்களிலும் ஒன்றுபோல வழங்கி வருகின்றன. (1912) 11-ம-லா-டை-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற, சாலா ராமய்யா—ச்சாலா ராமஸாமி இவர்களுக்குள் நடந்த கேசின் தீர்மானம் பிரகிருதக்கேசுக்கு, கொஞ்சமேனும் ஸம்மந்தப்படவில்லை. ஏனென்றல் அந்தக்கேசில் 7-வது பிரிவு (XI c. c.) உட்பிரிவுகளைப்பற்றி பிரஸ்தாபிக்கப்படவேயில்லை. ஆனுல் அந்த கேசின் தீர்ப்பில் சில யிடங்களில் வெளியிடப்பட்டிருக்கும் நோக்கங்கள், சில விஷயங்களில் அப்பீல் வாதியின் கக்ஷிக்கு ஒத்துமையாகயிருக்கிறதென்று மட்டும் சொல்லக்கூடும். 1914-ம் ௵ 12-அல-லா-ஜல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற நந்தன்லிங்குக்கும், டெபிடின்னுக்கும் நடந்த கேசின் தீர்மானத்தில் யேதும் விஷயமுண்டானுல் அது அப்பீல் வாதிக்கு விரோதமாயுள்ளது. ஆகையால் சிலவுடன் இந்த அப்பீலைத் தள்ளுபடி செய்கிறேன்.

லெட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் நெ. 276, இதற்குப்பின் வருகிறது.

ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர் :—இந்த அப்பீலை சிலவுடன் தள்ளுபடி செய்ததை நானும் ஒப்புக் கொள்கிறேன்.

Narayanasawmi Naidu-v-Seshagiri Row I. L. R. 39 Mad. 873. இ-லா-ரி-39, ம, 873.

The Indian Law Gazette.

PART II.

இந்திய சட்ட கெஜெட்.

1906-௵ ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917௵ மே௴ [நெ. 5.

Reports of Cases.

கேஸ்களின் ரிப்போர்ட்டுகள்.

நெ. 23.

Madras High Court.

மதராஸ் ஹைக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்.— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர். மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

தர்மராஜ அய்யரும், மற்றொருவரும்—அப்பீல் வாதிகள்

V.

K. G. ஸ்ரீநிவாஸ முதலியாரும் பின்னும் 4 பேர்களும் அப்பீல் பிரதிவாதிகள்.

1915-ம் ௵த்து ஸிவில் ரிவிஷன் மனு நெ. 711 ஆக தாக்கல் செய்யப்பட்டு, பின்னிட்டு 1913-ம் ௵த்து ஸிவில் சில்லரை அப்பீல் நெ. 213 ஆக மாற்றப்பட்டது.

லாபாயிண்ட் :—ஒரு டிக்கிரியின்படி செலுத்தப்படவேண்டிய ஒத்தித் தொகையை கட்டுவதற்கு டிக்கிரியில் குறிப்பிட்டிருக்கும் வாயிதாவை அதிக்கிரமித்து, மறுபடியும் கொஞ்சம் காலம் கொடுத்திருப்பதாகச் செய்யப்படும் உத்தரவின்பேரில், அப்பீல் கிடையாது. அப்படிச் செய்யப்படும் உத்தரவானது, ஸிவில் புரொஸீஜர் கோடின் 2-வது பிரிவின் 2-வது உட்பிரிவின்படி ஒரு டிக்கிரியாக மாட்டாது.

கேசின் சுருக்கம் :—ஒத்தித் தொகையை வசூல் செய்வதற்காகக் கொண்டுவரப்படும் வியாச்சியத்தில், பிரதம டிக்கிரியே அப்பீல் கோர்ட்டாரால் பிரப்பிவிக்கப்பட்டிருந்த போதிலும், 1908-ம் ௵த்திய 5-வது ஆக்டாகிய ஸிவில் புரொஸீஜர் கோடின் 34-வது ஆர்டர் 8-வது ரூலின் நிபந்தனையின்படி, டிக்கிரி தொகையைச் செலுத்துவதற்கு டிக்கிரியில் குறிப்பிடப்பட்டிருக்கிற காலத்தை அதிக்கிரமித்து மறுபடியும் வாயிதாக் கொடுக்க பிரதம கோர்ட்டாருக்குத்தான் அதிகாரமுண்டேயல்லது அப்பீல் கோர்ட்டாருக்குக் கிடையாது.

வெங்கடகிருஷ்ண அய்யருக்கும், தியாகராஜ செட்டிக்கும் நடந்து (1900) இ-லா-ரி. 23 ம. 521-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற தீர்ப்பையும், ஷியோநாராயணனுக்கும், சுன்னிலாலுக்கும் நடந்து (1901) இ-லா-ரி. 23 அல. 88-ல் பிரசுரம் செய்திருக்கிற தீர்ப்பையும், ராம்தானி ஸாஹுவுக்கும், லலித்லிங் என்பவனுக்கும் நடந்து (1909) இ-லா-ரி. 31 அல. 328-ல் பிரசுரம் செய்திருக்கிற தீர்ப்பையும் அங்கீகரித்து அவைகளின் பிரசாரம் பைசல் செய்யப்பட்டது.

ஒரு டிக்கிரியின்படி செய்யக்கூடிய வேலைகளைச் செய்யும் பொருட்டு, ஷை காரியத்தை நிறைவேற்றுவதற்காக டிக்கிரியில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலத்தை அதிக்கிரமித்து ஜாஸ்தியான காலம் கொடுப்பதற்கு 1908-ம் ளுத்து 5-வது ஆக்டாகிய ஸிவில் புரொஸீஜர் கோடின் 148-வது பிரிவுப்படி எந்தக் கோர்ட்டுக்கும் அதிகாரமில்லை.

ஹெட்விங்குக்கும் — டிக்காராமுக்கும் நடந்து (1912) 9. அல-லா-ஜ. 381-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற தீர்ப்பையும், ஸூரஞ்சன் விங்குக்கும்-ராமபஹால்லாலுக்கும் நடந்து (1912) 17 இ-கே. 912-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறதுமான தீர்ப்பையும் அனுஸரித்து பைசல் செய்யப்பட்டது.

மன்னார்குடி டிஸ்டிரிக்கட்டு முன்ஸீப் கோர்ட்டு 1908-ம் ளுத்திய அஸல் வியாச்சிய நெ. 136-ல் பிறப்பிவிக்கப்பட்ட டிக்கிரியின் பேரில் கும்பகோணம் ஸப் ஜட்ஜ் A. S. பாலசுப்பிரமணிய அய்யர் கோர்ட்டில் 1909-ம் ளுத்திய அப்பீல் நெ. 653 தாக்கல் செய்யப்பட்டு அது ஸம்மந்தமாய் தாக்கல் செய்யப்பட்ட 1912-ம் ளுத்திய அஸல் மனு நெ. 927-ல் ஷை ஸப் ஜட்ஜ் செய்த உத்தரவை புனராலோசனை செய்யும்படியாக ஹைக்கோர்ட்டாரை பிரார்த்தித்து ஸிவில் புரொஸீஜர் கோடின் 115-வது பிரிவின்படி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தக் கேசின் முக்கிய சங்கதிகள் தீர்ப்பின் 4-வது பாராவில் சொல்லப்பட்டிருக்கின்றன.

லாயர்கள் :—அப்பீல் வாதிகள் பக்சம் வக்கீல் T. R. வெங்கட்டராமசாஸ்திரியாருக்காக S. வரதாச்சாரியார்.

அப்பீல் பிரதிவாதி பக்கம் G. S. ராமச்சந்திர அய்யர்.

ஹைக்கோர்ட்டாரின் அடியில்கண்ட தீர்ப்பு ஜஸ்டிஸ் ஸதாசிவ அய்யரால் சொல்லப்பட்டது.

ஒத்தித் தொகையைச் செலுத்துவதற்காக ஸிவில் புரொஸீஜர் கோடின் 34-வது ஆர்டர் 8-வது ரூலின் நிபந்தனையின்படிக்கும் ஸிவில் புரொஸீஜர் கோடின் 148-வது பிரிவின்படிக்கும், டிக்கிரியில் குறிப்பிட்டிருக்கிற காலத்தை அதிக்கிரமித்து, ஜாஸ்தியான காலம் கொடுத்துப் பிறப்பிவித்திருக்கும் உத்தரவின் பேரில் அப்பீல் கிடையாதென்று முதலில் ஆக்ஷேபிக்கப்படுகிறது, அந்த உத்தரவில் 22-வது ஆர்டர் 10-11-வது ரூல்களின் பிரகாரம் சில கட்சிக்காரர்களை புதிதாய்ச் சேர்க்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிற பாகத்தைக்குறித்து இந்த அப்பீலில் தாவாச் செய்யப்படவில்லையென்று தெரிவிக்கப்பட்டது.

இந்த முதல் ஆக்ஷேபனையானது சரியானதென்று அபிப்பிராயப்படுகிறோம். வாயிதாவை ஜாஸ்தி செய்து கொடுத்த உத்தரவானது டிக்கிரி என்னும் விவரணத்தில் (definition) வரவில்லை. ஸிவில் புரொஸீஜர் கோடின் 2-வது பிரிவின் 2-வது உட்பிரிவைப் பார்க்க. அப்பீல் வாதி பக்கத்தில் ஆஜரான சற்றறிந்த வக்கீல் S. வரதாச்சாரியாரால் சாதுரியமாய் வியவஹரிக்கப்பட்டபடி 47-வது பிரிவின்படிக்குள்ள எந்த விஷயத்தையும் அது (ஷை உத்தரவு) தீர்மானிக்கவில்லை யென்பது எங்களுக்கு ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

இருந்தாலும் இந்த அப்பீலை, ஸிவில் புரொஸீஜர் கோடின் 115-வது பிரிவின் பிரகாரம் புனராலோசனை மனு (Revision Petition) வாக மாற்றிக் கொள்ளுவதற்கு அனுமதி கொடுக்கிறோம்.

புனராலோசனை மனுவை பைசல் செய்வதில் யோசிக்கவேண்டிய விஷயம் என்ன வென்றால் ஒரு ஒத்தி வியாச்சியத்தில், (அதாவது ஒத்தி வாங்கினவர் ஒத்தியை மீட்டுக்கொள்ளும்படிக்கும், ஒத்தி வைத்தவர் ஒத்திவைத்த சொத்தை விற்பனை செய்வதற்காகவும் கொண்டுவந்த வியாச்சியத்தில்) அப்பீல் கோர்ட்டார் பிரதம டிக்கிரி செய்யும்படி நேரிட்டிருக்கும் பக்ஷத்தில், 34-வது ஆர்டர் 8-வது ரூலின்படி ஒத்தித் தொகையைக் கட்டுவதற்கு டிக்கிரியில் குறிப்பிடப்பட்டிருக்கிற வாயிதாவை அதிக்கிரமித்து ஜாஸ்தி வாயிதாக் கேழ்க்கப்படுகிற பிரார்த்தனை அடங்கிய மனுவை வாங்கி பைசல் செய்யும் அதிகாரம் அந்தக் கோர்ட்டாருக்கு உண்டாவென்பதுதான்.

148 வது பிரிவு ஸம்மந்தப்பட்டமட்டில் டிக்கிரிகளின்படி செய்யக்கூடிய செய்கைகளைச் செய்வதற்காக அதிகவாயிதாக் கொடுப்பதற்கு அந்தப் பிரிவு சம்மந்தப்பட மாட்டாதென்று விபரமாக பைசல் செய்யப்பட்ட அடியில் கண்ட தீர்மானங்களை நாங்கள் அங்கீகரிக்கிறோம். ஹெட்விங்குக்கும் - டிகாராமுக்கும் நடந்து பைசல் செய்யப்பட்ட கேசினுடையவும், ஸூரஞ்சன் விங்குக்கும் - ராமபஹால்லாலுக்கும் நடந்து பைசல் செய்யப்பட்டவுமான கேசுகளின் தீர்மானங்கள்.

34-வது ஆர்டர் 8-வது ரூல் ஸம்மந்தப்பட்ட மட்டில், அப்பீல கோர்ட்டார் பிரதம டிக்கிரி செய்ததின் பேரில் எந்தக் கோர்ட்டாருக்கு ஷை கேசை அனுப்பினாலோ அந்த முதல் கோர்ட்டாருக்கே 34-வது ஆர்டர்

8-வது ரூல்படி வரும் மனுக்களை வாங்கி பைசல் செய்யும் பூரா அதிகாரமும் யிருக்கிறதென்று பைசல் செய்யப்பட்டிருக்கிற அடியில் கண்ட கேசுகளின் தீர்ப்புகளை ஒப்புக்கொள்ளுகிறோம். 34-வது ஆர்டர் 8-வது ரூலில் "டிக்கிரி செய்த கோர்ட்டார்" என்றுவது, "அந்த விபரத்தைக் காட்டக்கூடிய வார்த்தைகள்" என்ற பதங்கள் உபயோகிக்கப்படாமல், அந்த வாசகத்தில் "கோர்ட்டு" என்ற ஒரு பதம் மாத்திரம், உபயோகிக்கப்பட்டிருக்கிறபடியால், அப்பீல் பிரதிவாதிகள் பக்கம் ஆஜரான சற்றறிந்த வக்கீலால் எடுத்துச் சொல்லப்பட்ட 37-வது பிரிவு இந்தக் கேசுக்குப் பொருந்தினதல்ல. ஆனால் 8-வது ரூலின் முன் பாகங்களின் பூர்வோத்தர சந்தர்ப்பங்களை ஆலோசித்துப் பார்த்தால் "கோர்ட்டு" என்பது, நேரில் டிக்கிரி செய்த கோர்ட்டு அப்பீல் கோர்ட்டாக யிருந்தாலுமே சரி, அந்த "நேரில் டிக்கிரி செய்த கோர்ட்டையே குறிக்குமென்று வாதித்தார். "கோர்ட்டு" என்கிற வார்த்தைக்கு அந்தப் பிரிவின் முன் பாகங்களில் அந்தப்படி அர்த்த மிருந்தாலும் "கோர்ட்டு" என்கிற ஒத்தைப் பதத்துக்கு ஷை வார்த்தைக்குப் பின்னால் "டிக்கிரி செய்த கோர்ட்டார்" என்று அர்த்தம் கொடுக்கக்கூடிய எந்த வார்த்தையும் உபயோகிக்கப்படாமலிருக்கும்போது "டிக்கிரியைச் செய்த கோர்ட்டு" என்றுவது "அந்த விபரத்தைக் காட்டக்கூடிய வார்த்தைகள்" என்ற அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதென்றுவது அர்த்தமிருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. ஒத்தி வியாச்சியங்களில் கடைசியாய் டிக்கிரி செய்வது ஸம்மந்தமான அந்த 8-வது ரூலின் (1) (2) (3) உட்பிரிவுகளில் உபயோகித்திருக்கும் "கோர்ட்டு" என்னும் பதங்களுக்கு, சாதாரணமாக முதல் கோர்ட்டாரே டிக்கிரி செய்வது வழக்கமாயிருப்பதுபோல், அந்த முதலாவது கோர்ட்டாரே டிக்கிரி செய்திருந்தால் "டிக்கிரி செய்த கோர்ட்டு" என்றுதான் அர்த்தம். ஆனால் டிக்கிரி செய்த கோர்ட்டார், பிரதம கோர்ட்டாராக யில்லாமல் அப்பீல் கோர்ட்டாராக யிருந்தாலுமே கோர்ட்டு என்ற வார்த்தைக்கு எல்லாக் கேசுகளிலும், "டிக்கிரி செய்த கோர்ட்டு" என்றே அர்த்தம் செய்துதீரவேண்டுமென்றும், 37-வது பிரிவை ஸம்மந்தப்படுத்தினாலன்றி அது பிரதமக் கோர்ட்டைக் குறிக்காதென்றும் வாதிப்பது சரியானதல்ல! அல்லாமலும் சில நிச்சயமில்லாத விஷயங்களில் டிக்கிரி நிறைவேறுதல் விஷயமாய் தாக்கல் செய்யப்படும் மனுக்களில் நடபடிக்கை நடத்தப்படும்பொழுது மட்டும், 37-வது பிரிவு முதல் கோர்ட்டையும் குறிக்கும். இப்போது பிரஸ்தாபத்திலிருக்கிற இந்த மனு முதலாவது எந்த டிக்கிரி நிறைவேறுதல் நடபடிக்கைக்கும் ஸம்மந்தப்பட்டதல்ல.

2-வது 37-வது பிரிவின் உறுதிப் பாட்டின்பேரில் பிரதமகோர்ட்டைச் சேர்க்காமலிருக்கும்படிக்கும் அப்பீல் கோர்ட்டைமட்டும் சேர்த்துக் கொள்ளவாவது அல்லது அப்பீல் கோர்ட்டு என்று மட்டும் அர்த்தம் செய்து கொள்ளவாவது வேண்டுமென்று டிக்கிரி பெற்றவர் கோருகிறார்.

முடிவில், இந்த புனராலோசனை மனுவை அங்கீகரித்து, டிக்கிரி தொகையைச் செலுத்துவதற்கு வாயிதா வேண்டுமென்று கேழ்க்கப்படுகிற பிரார்த்தனை ஸம்மந்தப்பட்டமட்டில் ஷை மனுவை, பிரதமகோர்ட்டாரிடம் தாக்கல் செய்யும்படி உத்தரவு செய்து, வாபஸ் செய்துவிடும்படிக்காக ஸப் கோர்ட்டாருக்கு உத்தரவு செய்கிறோம். முன் செலவுகளைப் பற்றி மனுவைப் பைசல் செய்யும்பொழுது உத்தரவு செய்யப்படும். 2 பிரத்தியேக மனுக்களில் சொல்ல வேண்டிய விஷயங்களை எல்லாம் அடக்கிக்கொண்டிருக்கிற முதல் மனுவோடு அந்த மனுவின் சுத்தப் பிரதி ஒன்றும் வைத்து அனுப்பவேணும். இந்த அசல் மனுவைப்பற்றி பிரதமக் கோர்ட்டில் தெரிவிக்கும்பொழுது "3, 4, 5-வது வாதிகளாகச் சேர்த்துக் கொள்ளும்படி கிருபை செய்யவேணும்" என்றதை அப்படி சேர்க்கப்படுகிற சுத்தப் பிரதியில் எழுதாமலிருக்கவேணும்.

I. L. R 39 Mad. 876. இ-லா-ரி. 39 ம. 876.

நெ. 24.

APPELLATE CRIMINAL.

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். / மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ். }

1915-ம் ளுத்து கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 454

(1915-ம் ளுத்து கிரிமினல் ரிவிஷன் மனு 367.)

W. C. விட்டன்—மனுதார்.

v.

மம்மது மேஸ்திரி—எதிர் மனுதார்.

லாபாயிண்ட் :—சென்னப்பட்டணம் 1903-ம் ளுத்து 1-வது ஆக்டாகிய காப்பித் தோட்டம் தேயிலைத்தோட்டம் வகையரா பயிர் செய்பவர்கள் ஸம்மந்தமான சட்டத்தின் (Planters Labour Act I of 1903.) 24, 35-வது பிரிவுகள்—மேஸ்திரி அல்லது வேலை செய்பவன் ஒப்பந்த விரோதம் செய்வது—மேஸ்திரி பேரில் கேசு நடத்துவது—இந்த ஆக்ட்டுப்படி, தண்டனையின்பேரில் தண்டனையாக கேசு நடத்தி தண்டிக்கலாமா ?—செய்வதாக ஒப்புக்கொண்ட வேலையை முடித்துக் கொடுக்கும்படி மாஜிஸ்ட்ரேட் செய்யும் உத்திரவுகள்—ஆக்டுப்படி இப்படிப்பட்ட உத்தரவுகளை அடுத்தடுத்துச் செய்யலாமா—

சென்னப்பட்டணம் 1903-ம் ளுத்து 1-வது ஆக்டாகிய காப்பித் தோட்டம் வகையராப் பயிர் செய்பவர்கள் ஸம்மந்தமான ஆக்டின் 35-வது பிரிவின்படி அவர்கள் ஏற்றுக்கொண்ட வேலையை நிறைவேற்றிக் கொடுக்கும்படி மேஸ்திரிக்காவது அல்லது வேலைக்கார

னுக்காவது அடுத்தடுத்து உத்தரவு செய்ய மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரமுண்டு.

பங்கா மேஸ்திரி ஸம்மந்தப்பட்ட 1913-ம் ஞு இ-லா-ரி. 36 ம. 497-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தில் வெளியிடப்பட்டிருக்கிற அபிப்பிராயத்தில் நாங்கள் இணங்கவில்லை. ஒரு மேஸ்திரி தான் செய்வதாக ஒப்பந்தம் செய்துகொண்ட வேலையைச் செய்யாமல் அடுத்தடுத்து உபேக்ஷை செய்கிறவன் பேரில் அடுத்தடுத்துக் கேசு நடத்தி ஷை ஆக்ட்டு 24-வது பிரிவின் (a) (b) (c) உள்ப் பிரிவின்படி தண்டனைக்குக் கொண்டுவரலாம்.

அன்வின்னுக்கும்-கிளார்க்குக்கும் நடந்து (1866)-ல் I க்வீன்ஸ் பெஞ்சு, 417-லும், கட்லருக்கும்—டர்னருக்கும் நடந்து 9 க்வீன்ஸ் பெஞ்சு 502-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறதுமான கேசுகளின் தீர்மானங்களைப் பின்பற்றப்பட்டது.

கேசின் சுருக்கம் :—1903-ம் ஞுத்திய 1-வது ஆக்ட்டாகிய, காப்பித் தோட்டம் வகையரு சாகுபடி செய்கிறவர்கள் ஸம்மந்தமான சட்டத்தின் 35-வது பிரிவின் பிரகாரம் இந்தக் கேசின் எதிர் மனுதாரை தான் ஒப்பந்தம் செய்த வேலையை முடித்துக் கொடுக்கும்படி மறுபடியும் உத்தரவு செய்ய மாட்டோமென்று சொன்ன வையத்திரி 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவை, ஹைக்கோர்ட்டார் புனராலோசனை செய்யும்படியாகப் பிரார்த்தித்து 1898-ம் ஞுத்து 5-வது ஆக்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடின் 435, 439-வது பிரிவுகளின்படி இந்த மனுக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தக் கேசின் விஷயங்கள், டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினால் செய்யப்பட்ட அடியில் கண்ட உத்தரவின் மூலமாய் வெளியாகிறது :—"எதிரி மம்மது மேஸ்திரி, 1903-ம் ஞுத்து 1-வது ஆக்ட்டு 24-வது பிரிவுப்படிக்குள்ள குற்றத்திற்காக வையத்திரி 1-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டு M. நாராயணமேனனால் 1913-ம் ஞுத்து கியாலெண்டர் கேஸ் நெ. 131-ல் 1913-ம் ஞு மார்ச்சுமீ 28ல் ஒரு மாசக் கடுங்காவல் விதிக்கப்பட்டான். காவல் தண்டனையை அனுபவித்துத் தீர்ந்த பிறகு, ஷை ஆக்டின் 35-வது பிரிவுப்படி எதிரி முடிப்பதாக ஒப்புக்கொண்ட வேலையை முடித்துக் கொடுக்கும்படி அவனுக்கு உத்தரவு செய்யும்படியாக வாதி மனுக் கொடுத்தான். எதிரியை வாறண்டின் பேரில் பிடித்து கோர்ட்டார் முன் ஆஜர் படுத்தப்பட்டது. 1913ம் ஞு நவம்பர்மீ 18உ யன்று ஒப்பந்தப்படி வேலையை முடித்துக் கொடுக்கும்படி எதிரிக்கு உத்தரவு செய்யப்பட்டது. ஆனால் எதிரி அந்தப்படி நடந்து கொள்ளவில்லை. மறுபடியும் அவன்பேரில் கேசு நடத்தப்பட்டது".

அவனை மறுபடியும் குற்றவாளியென்று தீர்மானித்து 2 மாசம் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டு அதையும் அவன் அனுபவித்து விட்டான். ஒப்பந்தப்படி வேலையை முடித்துக் கொடுக்கவேண்டுமென்றும் அப்படிச் செய்யத் தவறினால் மறுபடியும் அவன்பேரில் கேஸ் நடத்தி தெண்டித்து விடுவதாயும் எதிரிக்கு மறுபடியும் உத்தரவு செய்யும்படிக்காக வாதி மனுச் செய்துகொண்டார்.

எதிரி முந்தியே இரண்டு தபா காவல் தண்டனையை அனுபவித்தாய் விட்டபடியால், ஒரே தரம் தான் உத்திரவு செய்யத் தனக்கு அதிகாரமிருப்பதாயும், அந்த ஒரு தபா உத்தரவு செய்தாய் விட்டதென்றும் பங்கா மேஸ்திரி கேஸ் விஷயமாக 1913-ம் ஞுத்தில் இ-லா-ரி. 36 ம. 497 உள்ள தீர்மானத்தை 498-ம் பக்கத்தில் சொல்லி யிருக்கிறார்கள். ஆகையால் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த உத்தரவின்பேரில், வேலை கொடுத்தவரான மனுதார் ஹைக்கோர்ட்டாருக்கு ஒரு கிரிமினல் ரிவிஷன் மனுவைச் செய்திருக்கிறார்.

லாயர்கள் :—மனுதார் பக்கம் E. R. ஆஸ்பர்னுக்காக W. பார்ட்டனும், C. நரஸிம்மாச்சாரியாரும் ஆஜர் ஆனார்கள்.

கவர்ன்மெண்டார் பக்கத்தில் ஆக்டிங் பப்ளிக் ப்ராஸிக்யூடராகிய N. கிராண்டு ஆஜர் ஆனார். அப்பீல் பிரதிவாதி நேரிலும் ஆஜராகவில்லை. அவனுக்காக வக்கீலும் ஆஜராக வில்லை.

ஜஸ்டிஸ் எய்லிங் :—எதிர் மனுதார் மனுதாருடன் செய்துகொண்ட ஒப்பந்தப் பிரகாரம் வேலையை முடித்துக் கொடுக்கும்படி 1903-ம் ஞுத்து 1-வது ஆக்ட்டு 35-வது பிரிவுப்படி எதிர் மனுதாருக்கு உத்தரவு செய்யமாட்டோமென்று 1915-ம் ஞு மார்ச்சுமீ 17உ வையத்திரி 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டு பிரப்பித்த உத்தரவை புனராலோசனை செய்யும்படி எங்களைக் கேட்டுக் கொள்ளுகிறார்கள். அவ்விதமான உத்தரவை மாஜிஸ்ட்ரேட்டுப் பிறப்பிக்காததின் காரணம் 1913-ம் ஞு நவம்பர்மீ 18உ மேற்கண்ட விதமான ஒரு உத்தரவை பிறப்பித்தும், அந்த உத்தரவுப்படி நடக்காதபடியால் எதிர் மனுதாருக்கு ஷை ஆக்ட்டு 24 (c) பிரிவுப்படிக்கு 2 மாசக் கடுங்காவல் தண்டனை விதித்து விட்டதும்தான். இதே ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தவறினதற்காக அதே பிரிவின் உள் பிரிவின்படிக்கு, 1913-ம் ஞு மார்ச்சுமீ 28உ விசாரணை செய்யப்பட்டு திரும்ப மறுபடியும் தண்டிக்கப்பட்டிருக்கிறான். பங்கா மேஸ்திரி என்பவனுடைய கேசு 1913-ம் ஞுத்தில் இ-லா-ரி. 36 ம. 497-ல் கண்ட தீர்ப்பு விஷயமாய் 498-ம் பக்கத்தில் சொல்லி யிருப்பதை அனுஸரித்து ஒரு தபாவுக்கு மேல்பட்டு அப்பேர்ப்பட்ட உத்தரவு செய்ய தனக்கு அதிகாரமில்லையென்று தீர்மானித்தார். இந்த அபிப்பிராயத்தின்பேரில் மனுதாருடைய மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார்.

மேலே சொல்லப்பட்ட தீர்ப்பு தப்பான தீர்ப்பென்றும் ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் ஸம்மந்தமாக எப்பேர்ப்பட்ட விசேஷ நிபந்தனைகள் இருந்தாலுமே, 35-வது பிரிவுப்படி பிறப்பிக்கக் கூடிய உத்தரவுகள் இத்தனை தபாதான் பிறப்பிக்கலா மென்பதைப் பற்றியாவது அந்த உத்தரவுப்படி கீழ்ப்படியாததற்காக இத்தனை தபாத்தான் கேஸ் நடத்தி தண்டிக்கலா மென்பதைப் பற்றியாவது யாதொரு வரையரைவுமில்லையென்றும் மனுதார் பக்சம் ஆஜரான மிஸ்டர் பார்டன் அநுவாதம் செய்கிறார்.

தன்னுடைய கக்ஷிக்காரன் இதை ஒரு பரிக்ஷார்த்தமான கேசாக வைத்து இந்த மனுவை மேல் நடத்துவதாகவும், இந்த விஷயத்தில் சட்டம் இன்னதுதானென்று நிர்த்தாரணம் செய்த ஒரு தீர்மானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் இந்த மனுவை நடத்துவதாகவும் எங்களுக்கு எடுத்துக் காட்டும் விஷயத்தில் சிரமமெடுத்துக் கொண்டார்.

எதிர் மனுதார் பக்கம் வக்கீல் யாரும் ஆஜராகவில்லை. இந்த மனுவில் கண்ட விஷயங்களை ஆக்ஷேபித்து எதிர்வாதம் செய்து மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவை சரியென்று உறுதி செய்யும் பொருட்டு கற்றறிந்த பப்ளிக் ப்ராஸிக்யூடர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அப்படியே அவர் எதிர் வாதம் செய்கிறார். மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவு ஸம்மந்தமாயுள்ள சட்ட ஸாராம்சத்தைப் பற்றிப் பேசாமலே, எதிர் மனுதாரை, முன் இரண்டு தரத் தண்டனை செய்ததும் ஒப்பந்தத்தை நிறைவேற்றச் சொல்லி உத்தரவு செய்ததும் சட்ட விரோதமானவைகளென்றும், இந்தக் காரணத்தினாலேயே, இப்பொழுது பிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிற உத்தரவைப் பிறப்பிக்கக் கூடாதென்றும் வாதிக்கிறார். புனராலோசனை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கையில் எதிர் மனுதாருக்குக் கெடுதலாக முடியக்கூடிய விஷயங்களைக் கவனியாமலே தள்ளிவிடுவது ஞாயமில்லை யென்று நினைக்கிறோம்.

ஆகையால் பிரஸ்தாபக் கேசின் சங்கதிகளையும், ஷை சங்கதிகளுக்கு இந்த ஆக்ட்டு எந்த மட்டில் சம்மந்தப்படுகிறதென்பதையும் யோசிக்கவேண்டியதிருக்கிறது. A அடையாளத் தஸ்தாவேஜுதான் ஒப்பந்தம் (Contract). அதில் அனுவசியமாயுள்ள சங்கதிகளைத் தள்ளிவிட்டால், ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் அடியில் கண்டபடிக்கிருக்கின்றன :—

கண்டிராக்டர் என்று பெயர் விளங்கும் எதிர் மனுதார் ரூ. 50 முன் பணம் வாங்கிக் கொண்டதற்காக 25 கூலிக்காரர்களை தானே திட்டம் செய்துகொண்டு வந்து அவர்களும் தானும், மனுதாருடைய தோட்டத்தில் 1912-ம் ஞு டிசம்பர்மீ 20உ முதல் 1913-ம் ஞு ஜூன்மீ 19உ வரை ஏற்பாடு செய்துகொண்ட சம்பளத்துக்கு மாதம் 6-க்கு வேலை செய்யவேண்டுமென்றும், அப்படிச் செய்ய பூர்ரவும், அல்லது கொஞ்சமேனும் தவறினால் அப்படிச் செய்யாமலிருக்கிற வேலையை 1915-ம் ஞு டிசம்பர்மீ 20உக்குள் எப்போதாவது செய்து கொடுக்கும்படி எதிர் மனுதாரைக் கட்டாயப்படுத்தலாமென்றும் ஏற்படுகிறது.

அவனுடைய பிந்திய நடப்படிக்கையைப் பற்றி யாதொரு தாவாவுமில்லை.

1913-ம் ஞு பிப்ரவரிமீ 13உ வரை அவன் ஆஜராகவேயில்லை. அப்பொழுதும் 25 கூலிகள் கொண்டுவர வேண்டியதற்குப் பதிலாக 8 கூலிக்காரர்கள் மட்டும் கொண்டு வந்தான். இவர்களும் 1913-ம் ஞு பிப்ரவரிமீ 2?உ வரைதான் வேலை செய்தார்கள் அப்பால் வேலைக்கு வராமல் நிற்க ஆரம்பித்து விட்டார்கள். 1913-ம் ஞு மார்ச்சுமீ 16-க்குள் எல்லோரும் வேலைக்கு வாராமலே நின்று விட்டார்கள். அதற்குப் பிறகு அங்கே ஒரு வேலையுமே நடக்கவில்லை. காவல் தண்டனை முதல் தபா விதிக்கப்பட்டவும், ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டவும் பிறகு எதிர் மனுதார் தோட்டத்திற்குத் திரும்பப் போய் தன்னால் செலுத்தப்படவேண்டிய பாக்கியைச் செலுத்தி விடுவதாகச் சொன்னான். அவன் அந்தப்படி செய்ய வில்லை

மேல் கண்ட சங்கதிகளினால் 1913-ம் ஞு மார்ச்சுமீ 28உயில் அவனை முதல் தபா தண்டித்ததானது சட்ட விரோதமேயில்லை. 24 (c) பிரிவின் அர்த்தத்தைப் பற்றி அனு வாதிக்கப்பட்டது.

"தன்னிடத்தில் முன்பணமாகக் கொடுக்கப்பட்ட துகைக்கு கணக்கு ஒப்புவிப்பது" என்பதற்கு தான் வாங்கிய துகைக்கு தக்க வேலையாள்களை சவுதரித்துக் கொடுப்பது அல்லது வேலையாள் சம்பாதித்துக் கொடுக்க முடியாவிட்டால் கொடுக்கவேண்டிய பாக்கித் துகையைத் திரும்பக் கொடுத்து விடுவது அல்லது தான் வாங்கிய துகை நியாயமான வழியில் சிலவாயிருப்பதாக ருஜுச் செய்வது என்றுதான் அர்த்தம் என்று நினைக்கிறேன்.

இந்த அர்த்தத்துடன் பார்த்தால், அவனைத் தண்டித்ததும், முதல் தபா ஜெயிலைவிட்டு விடுதலையான பிறகு எதிர் மனுதாரைப்பிடித்து 35-வது பிரிவுப்படி 1913-ம் ஞு நவம்பர்மீ 18உ யன்று ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி செய்யப்பட்ட உத்தரவும் நியாயமானதாகவே யிருக்கிறது.

இந்த உத்தரவுப்படி நடக்கவில்லை யென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. பாக்கிப்பணத்தைக் கொடுத்து விடுவதாக எதிர் மனுதார் வாக்குத்தத்தம் செய்தார். அப்படி பாக்கிப் பணத்தைத் திரும்பக் கட்டிவிடாவது அல்லது தோட்டத்தில் பின்னிட்டு வேலை செய்யவாவது இல்லை.

இப்படிச் செய்ததின் முடிவு என்னவென்ன? ஒப்பந்தத்தை நிறைவேற்றாததற்கு தண்டனை விதிக்கலாமென்று இந்த ஆக்டில் ஒரு இடத்திலும் சொல்லப்படவில்லை. ஒரு ஒப்பந்த ஸம்மந்தமாயுள்ள குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிற மூன்று சங்கதிகளைச் செய்யத் தவறினால்தான் தண்டனை செய்யலாமென்று 24-வது பிரிவினால் ஏற்படுகிறது. (a) ஒப்பந்தத்தில் கண்ட தேதியில் ஆஜராகாமலிருப்பதற்குப் போதுமான முகாந்தரமில்லாமல் தோட்டத்தில் ஆஜராகாமலிருந்தாலும் (b) ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத் தோட்டத்திலேயேயிருப்பதாக ஒப்பந்தம் செய்துவிட்டு போதுமான காரணமின்றி ஷை தோட்டத்தில் இல்லாமல் போய்விட்டாலும், தோட்டத்தில் வேலை செய்வதற்கு ஆள் சவுதரித்துக் கொடுக்கவேண்டுமென்ற ஒப்பந்தத்தின் பேரில் தோட்டம் பயிரிடுபவர் (Planter) கொடுத்த முன் பணத்துக்கு ஸரியான ஸமாதானம் சொல்லத் தவறினாலும் அப்படித் தவறுகிற மேஸ்திரியை 3 மாதம் வரை காவல் தண்டனைக்கோ அல்லது ரூ. 500 வரை அபராதத்துக்கோ அல்லது இரண்டுக்குமோ உள்ளாக்கலாமென்றும் அபராதத் தொகையிலிருந்து தோட்டம் பயிரிடுகிறவருக்கு (Planter) மாஜிஸ்ட்ரேட்டுக்கு யுக்தமாகத் தோணும் தொகையை, நஷ்ட பரிஹாரமாகக் கொடுக்கலாமென்றும், சொல்லுகிறது.

35-வது பிரிவு அடியில் கண்டபடி இருக்கிறது. "இந்த ஆக்டுப்படிக்குள்ள எந்தக் குற்றத்திற்காகவாவது ஒரு மேஸ்திரிக்கு அல்லது ஒரு வேலைக்காரனுக்கு விதிக்கப்பட்ட காவல் தண்டனை நிறைவேறி முடிந்தவுடன், பயிரிடுபவன் அல்லது வேலைக்கு வைத்தவன் அவ்விதம் செய்யவேண்டுமென்று விரும்பினால் அந்த மேஸ்திரி அல்லது வேலைக்காரனை மாஜிஸ்ட்ரேட்டு முன் ஆஜர் செய்யவேண்டும். அப்பொழுது ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும், அப்படிச் செய்யத் தவறினால் மறுபடியும் கேசு நடத்தி தண்டனை விதிக்கப்படுமென்றும் மேஸ்திரி அல்லது வேலைக்காரனுக்கு மாஜிஸ்ட்ரேட்டு சொல்லவேண்டும். இந்த ஆக்டுப்படி விதிக்கப்படும் எந்தத் தண்டனையாவது காவல் தண்டனையாவது நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்ட எந்த வேலையையும் நிறைவேற்றுவதிலிருந்தும் எந்த மேஸ்திரியையும் வேலைக்காரனையும் காப்பாற்ற மாட்டாது."

"ஆதியில் வேலைக்காக ஒப்பந்தம் செய்துகொண்ட தேதி முதல் 12 மாதங்களாகி விட்டால் வேலைக்காரனை ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்படி உத்தரவு பிறப்பிவிக்கக் கூடாது."

அதற்கு ஒரு தண்டனையும் ஏற்படுத்தப்படவில்லை என்ற காரணத்தினால் ஒப்பந்தத்தை நிறைவேற்றவில்லையென்பதை ஒரு பிரத்தியேகமான குற்றமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. "மறுபடியும் கேசு நடத்தப்படுமென்கிற சிக்ஷையின் "பேரில்" என்பது 24-வது பிரிவுப்படி புதிதாக நடத்தப்படுகிற கேசுகளைத் தான் குறிக்குமென்று மிஸ்டர் பார்டன் ஒப்புக்கொள்கிறார்.

கொடுக்கப்பட்ட முன்பணத்துக்கு ஸரியான கணக்குச் சொல்லாமலிருப்பதாகிய 24 (c) பிரிவுப்படிக்குள்ள குற்றத்திற்காக எதிர் மனுதாரை 1914-ம் ௵த்து காலெண்டர் கேஸ் நெ. 580-ல் தண்டனை செய்த மாஜிஸ்ட்ரேட்டும் இதே அபிப்பிராயம்தான் கொண்டார். இது சட்டப்படி செல்லுமா அல்லது எதிர் மனுதார் இதே விஷயத்தைப் பற்றி முன்னமே விசாரணை செய்து தண்டனை செய்தாச்சு என்ற கக்ஷியை ("Antre-fois Convict")ச் சொல்லக் கூடுமா?

அந்த ஒப்பந்தமானது இன்னும் ஊர்ஜிதத்திலிருந்ததென்ற விஷயம் ஆக்ஷேபிக்கக் கூடியதல்லவென்று நினைக்கிறேன். முன்னமேயே சொல்லியிருக்கிறபடி 1915-ம் ௵ டிசம்பர்௴ 20௳ வரை ஒப்பந்த காலத்தை நீடித்துக் கொள்ளுவதற்கு மனுதாருக்கு அதிகாரமுண்டு. முன் தண்டனையானது ஒப்பந்தத்தை நிறைவேற்றும் கடமையிலிருந்து நீக்கிவிட மாட்டாதென்று 35-வது பிரிவிலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

2-வது தடவையில் செய்த தண்டனையானது சட்டப்படி செல்லக்கூடியதுதானென்று வாதிப்பதற்கு அனுசரணையாக 2 இங்கிலீஷ் கேசுகளை உதாரணமாகக் காட்டுகிறார். அவைகள் (1) அன்வினுக்கும் கிளார்க்குக்கும் நடந்த 1866-ம் வருஷத்தில் 1 க்வீன்ஸ் பெஞ்சு 417-லும் (2) கட்லருக்கும்-டர்னருக்கும் நடந்த 1874-ம் வருஷத்தில் 9 க்வீன்ஸ் பெஞ்சு 502-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசுகள்தான்.

இந்த 2 கேசுகளும் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு விரோதமாக வேலைக்காரர்கள் வேலைக்குப் போகாமலிருந்த கேசுகளாக யிருக்கின்றன. முதல் தபா தண்டிக்கப்பட்டு காவல் தண்டனையை அனுபவித்த பிறகும் அந்த வேலைக்காரன் வேலைக்குத் திரும்பப் போகாவிட்டாலும் அந்த ஒப்பந்தமானது தொடர்ந்தே யிருந்து கொண்டிருக்கிறபடியால், மறுபடியும் ஒரு புதுக்குற்றம் செய்தவனாகவே ஆகிறான். அந்தக் குற்றத்திற்காக அவனை மறுபடியும் தண்டிக்கலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்புகளின் பத்ததிகள் வாங்கின முன் பணத்துக்கு ஸரியானபடி கணக்குச் சொல்லத் தவறுகிற கேசுகளுக்கு ஸம்மந்தப்படுமா வென்பது தான். தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம். ஜாக்கிறதையாக யோசித்துப் பார்த்ததில் அப்பேர்ப்பட்ட கேசுகளுக்கும் ஸம்மந்தப்படுமென்றே நான் நினைக்கிறேன். ஒப்பந்தமும் வாங்கின முன்பணத்துக்கு நியாயமான கணக்குக் கொடுக்கவேண்டிய பொறுப்பும் இன்னும் ஊர்ஜிதத்திலேயே யிருக்கிறது. ஷை தொகையைப்பற்றி எந்த விதத்தில் முதலில் கணக்குக் கொடுக்கக்கூடுமோ அவ்விதம் கணக்குச் சொல்லும்படி மனுதார் எதிர் மனுதாருக்கு அவகாசம் கொடுத்திருக்கிறார். அவன் அப்படிக் கணக்குச் சொல்லத் தவறுவது, மேலே சொல்லப்பட்ட இங்கிலீஷ் கேசுகளில் திரும்ப வேலைக்குப் போகாதது எப்படி புதுக் குற்றச் செய்கையாக யேற்படுகிறதோ அதுபோலவேயே இதுவும் ஒரு புதுக் குற்றச் செய்கையாகவே ஆய்விடுகிறது. இது இரண்டுக்கும் வித்தியாஸம் கண்டுபிடிக்க யாதொரு வழியுமில்லை. இதற்கு விரோதமாக யாதொரு எதிர் வாதமும் பேசப்படவில்லை. ஆகையால் 1914-ம் வருஷத்து காலெண்டர் கேஸ் நெ. 580-ல் விதிக்கப்பட்ட தண்டனையானது சரியானதுதான். ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி 2-வது தபா மாஜிஸ்ட்ரேட்டு உத்தரவு செய்ய மாட்டோமென்று சொல்லி விட்டது நியாயமாவென்ற விஷயம் மட்டும் தீர்மானிக்கப்பட வேண்டியதாக யிருக்கிறது. அந்தப் பிரிவில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைகளினால், அவரிஷ்டப்படி செய்ய இடங் கொடுப்பதாகத் தெரியவில்லை. ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி மேல் மேலும் உத்தரவு பிறப்பிவிப்பதைத் தடுக்கிறதாயுள்ள விஷயமே அந்தச் சட்டத்திலில்லை பங்க மேஸ்திரி கேசின் தீர்மானத்தைப் பற்றி ஜாக்கிரதையாக யோசனை செய்து பார்த்தேன். அந்தக் கேசில் கற்றறிந்த ஜட்ஜ் பட்ட அபிப்பிராயத்துடன் நான் கொஞ்சங்கூட சலந்து கொள்ளவில்லை என்பதல்ல. ஆனால் சட்டத்துக்கு இருக்கிறபடி அர்த்தம் சொல்லவேண்டியதிருக்கிறது. ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி ஒரு தடவைதான் மாஜிஸ்ட்ரேட்டு உத்தரவு செய்யலாமென்ற அபிப்பிராயத்துடன் கலந்துகொள்ள நான் அசக்தனாக யிருக்கிறேன். ஒப்பந்தத்தை நிறைவேற்றும் விஷயமாய் செய்யப்படும் உத்தரவுகள் ஸம்மந்தமாக மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு யுக்தம் கொடுக்கப்படாமலிருப்பது ஒரு அதிர்ஷ்டமற்ற சங்கதியாகவேயே எனக்குத் தோன்றுகிறது. இந்த விஷயத்திலும் இன்னும் மற்றும் விஷயங்களிலும் இந்த ஆக்ட்டு சீர்திருத்தப்படவேண்டுமென்று நினைக்கிறேன். குற்றவாளியென்று தீர்மானித்ததின்பேரில் தண்டனை கொடுக்கும் விஷயத்தில் மாஜிஸ்ட்ரேட்டுக்கு யுக்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஷை ஆக்டின் நிபந்தனைகளை மேஸ்திரி அல்லது வேலைக்காரர்களுக்கு விரோதமாய்க் க்ரூரமான விதமாய் உபயோகிக்கும் பொழுது கோர்ட்டார் தங்களுக்குள்ள யுக்தத்தை நிச்சயமாய்ச் செலுத்துவார்கள்.

இந்தப் பிரிவை ஜனங்களுக்கு மிகவும் இடைஞ்சலானமாதிரியில் உபயோகப்படுத்தாமல் காப்பாற்றுவதற்கு இது ஒரு வகையில் கொஞ்சம் ஸ தசமாக யிருக்கிறது. சட்டமிருக்கிறபடி பார்த்தால் இந்தக் கேசில் மறுபடியும் உத்தரவு பிறப்பிவித்திருக்கவேண்டும். மறுபடியும் உத்தரவு பிறப்பிவிக்கப்பட வேண்டுமென்று கி. பு. கோடு 423-வது பிரிவுப்படி உத்தரவு செய்கிறேன்.

ஜஸ்டிஸ் பிலிப்ஸ்:—இந்த ஆக்டின் 35-வது பிரிவின் அர்த்தத்தைப் பற்றி என்னுடைய கற்றறிந்த சகோதரர் கொடுத்திருக்கும் அபிப்பிராயத்தில் நான் கலந்து கொள்ளுகிறேன். செய்யப்படக்கூடிய ஒப்பந்தங்களை நிறைவேற்றும் விஷயமாய் இத்தனை தடவைகள் தான் உத்தரவு பிறப்பிவிக்கலாமென்று அந்தப்பிரிவில் கட்டுப்படுத்தப்படவில்லை. ஆனால் இந்த பிரிவுப்படி நடபடிக்கை நடத்தி விட்டால் ஒப்பந்தம் போய்விடாது என்று அந்தப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தமானது இன்னும் ஊர்ஜிதத்திலேயேயிருந்தால் அந்த ஒப்பந்தத்துக்கு புதிதாக யேர்ப்பட்ட விரோதங்களும் உண்டு. அப்படி 24-வது பிரிவுப்படி செய்கிற ஒவ்வொரு ஒப்பந்த விரோதத்துக்கும் 35-வது பிரிவுப்படி குற்றவாளி தண்டனைக்கு உள்ளாகக்கூடியவனாகிறான். இது இதைப்போலொற்ற சட்டங்களின் விஷயமாக இங்கிலாந்தில் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தத்துக்கு ஒத்துமையாக யிருக்கிறது.

ஆகையால் செய்திருக்கும் உத்தரவில் நானும் கலந்து கொள்ளுகிறேன்.

நெ. 25.

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—{ ஸர் ஜான் வாலிஸ், Kt. சீப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

1914-ம் ௵த்து ஹைகோர்ட்டு அஸல் இலாகா அப்பீல் நெ. 115.

T. எர்ரி குளப்ப செட்டி (எதிர் மனுதார்) அப்பீல்வாதி.

V.

சென்னப்பட்டணம் அபிஷியல் அஸைனி (The Official Assignee of Madras)—(மனுதார்)—அப்பீல் பிரதிவாதி.

லாபாயிண்ட்:—1908-ம் வருஷத்து 5-வது ஆக்டாகிய ஸிவில் புரொஸீஜர் கோடு 38-வது ஆர்டர் 5-வது ரூல் தீர்ப்புக்கு முந்தி சொத்தை ஜப்தி செய்ய மனு-ஜாமீன் கொடுக்கும்படி எதிரிக்கு ஸம்மன்—கோர்ட்டில் செலுத்தப்பட்ட தொகை—பின்னிட்டு பிரதிவாதி தான் பட்ட கடனைத் தீர்க்க சக்தியற்றவன் (Insolvent) ஆகப் போய்விடுவது—கோர்ட்டில் செலுத்தப்பட்ட தொகையில் வாதிக்கு இருக்கும் பாத்தியதை ஷை தொகையை, வாதி டிக்கிரிக் கடன்தொகை கட்டுப்படுத்த மாட்டாது. அபிஷியல் அஸைனியின் பாத்தியதைகள்.

பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட சில சொத்துக்களை ஷை கேசில் தீர்ப்புச் சொல்லப்படுமுன் ஜப்தி செய்யவேண்டுமென்று ஸிவில் புரொஸீஜர் கோடு 38-வது ஆர்டர் 5-வது ரூலின் பிரகாரம் வாதி மனுச்

செய்துகொண்டதின் பேரில் ஒரு குறிப்பிட்ட துகைக்கு ஜாமீன் கொடுக்கும்படிக்காவது, அல்லது அப்படியேன் ஜாமீன் கொடுக்கும்படிக்கு உத்தரவு செய்யக்கூடாதென்பதற்கு முகாந்திர முண்டானால் சொல்லும் பொருட்டாவது பிரதிவாதிக்கு ஸம்மன் பிறப்பிக்கப்பட்டது. பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட சில குறிப்பிட்ட சொத்துக்களை மறு உத்தரவு வரை ஜப்தி செய்து வைக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஸம்மனில் குறிப்பிடப்பட்ட துகையை பிரதிவாதி கோர்ட்டில் கட்டி விட்டான். அதற்குப் பிறகு பிரதிவாதிதான் பட்ட கடனைத் தீர்க்கச் சக்தியற்றவன் (Insolvent) ஆய்விடுகிறான்.

கடனைத் தீர்க்கச் சக்தியற்றவனாக யிருப்பவனுடைய அபிஷியல் அஸைனி (Official Assignee)யின் பாத்தியதைக்கு விரோதமாக கோர்ட்டில் கட்டப்பட்ட துகையில் வாதிக்கு யாதொரு பாத்தியதையும் கிடையாதென்று தீர்ப்புச் செய்யப்பட்டது.

கேசின் சுருக்கம்:—1913-ம் வருஷத்து இன்ஸால்வென்ஸி இலாகா இன்ஸால்வென்ஸி மனு (Insolvency Petition) நெ. 214-ல், ஜஸ்டிஸ் பேக்வெல் செய்த தீர்மானத்தின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

இந்தக் கேசின் முக்கியமான சங்கதிகளெல்லாம் சீப் ஜஸ்டிஸ் வாலிஸின் தீர்ப்பினால் வெளியாகிறது.

லாயர்கள்:—அப்பீல்வாதிபக்கம், T. R. வெங்கட்டராம சாஸ்திரியும், T. வெங்கட்டரமண ராவும்.

அப்பீல் பிரதிவாதி பக்சம் D. ஷேமியரும் P. கந்தஸ்வாமி அட்டர்ணியும்.

சீப் ஜஸ்டிஸ் வாலிஸ்—இந்தக் கேசில், அப்பீல்வாதி கேசின் தீர்ப்புக்கு முன்னமே சில சொத்துக்களை ஜப்தி செய்ய வேண்டுமென்று ஸிவில் புரொஸீஜர் கோடு 38-வது ரூல் 5-வது ஆர்டரின் பிரகாரம் A. அடையாளமிட்ட தஸ்தாவேஜாகிய ஸம்மனைப் பிறப்பிக்கும்படி உத்தரவைப் பெற்றுக்கொண்டார். ஷெரிப் (Sheriff) பேருக்குப் பிறப்பிக்கப்பட்ட வாரண்டாகிய (B) அடையாள தஸ்தாவேஜின் நிபந்தனைகளின் பிரகாரம் ரூ. 4150-க்காவது அல்லது அவருக்கு விரோதமாகப் பிறப்பிக்கப்படக் கூடிய டிக்கிரி துகைக்குப் போதுமான துகைக்காவது ஜாமீன் கொடுக்கும்படிக்காவது அல்லது தன்னையேன் ஜாமீன் கொடுக்கும்படி உத்தரவு செய்யக் கூடாது என்பதற்குள்ள முகாந்தரத்தையாவது தெரிவிக்கவாவது வேண்டியிருந்தது. பிரதிவாதியின் வீட்டிலுள்ள ஸாமான்களை எல்லாம் மறு உத்தரவு வரை ஜப்தி செய்து வைக்கும்படிக்கும் உத்தரவு செய்யப்பட்டது. அதன்பேரில் நியாயஸ்தலத்திலிருக்கும் கட்டளை நிறைவேற்றுவோன் (Bailiff) ரூ. 4150—5—0 எதிரியிடமிருந்து வசூலிக்கப்பட்டு ஷை துகையை ரிஜிஸ்டிராரிடம் செலுத்தி விட்டதாகவும் அறிவித்தார். அப்பால் பிரதிவாதிதான் பட்ட கடனைத் தீர்க்கச் சக்தியற்றவராகிவிட்டார்.

பிரதிவாதியின் சொத்துகளை ஆளுகை செய்து வரும் அபிஷியல் அஸைனியின் பாத்தியதைகளுக்கு விரோதமாக அப்பீல்வாதியின் பாத்தியதை செல்லமாட்டாதென்று ஜஸ்டிஸ் பேக்வெல் தீர்மானித்தார். ஸிவில் புரொஸீஜர் கோடு 38-வது ஆர்டர் 5-வது ரூலின் பிறகாரம் உத்தரவு செய்யும்படி மனு செய்யப்பட்டு அவ்விதமே உத்தரவும் செய்யப்பட்டது. பிரதிவாதியால் செலுத்தப்பட்ட துகையை ரூலில் கண்ட நிபந்தனைப் பிரகாரம் செய்வதற்கு ஜாமீனாக பிரதிவாதியை ஷை துகையைக் கோர்ட்டில் செலுத்தும்படி செய்யப்பட்டது. உத்தரவின் ஷரத்தில் பழய ஸிவில் புரொஸீஜர் கோடின் 484-வது பிரிவின் வார்த்தைகளையே பூராவும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. ஷை சொத்தையாவது அல்லது அதன் கிரயத் துகையையாவது அல்லது டிக்கிரி கடனைத் தீர்ப்பதற்குப் போதுமான துகையையாவது வேண்டும்போது கோர்ட்டில் ஆஜர் செய்யும்படியாகத்தான் ஷை உத்தரவில் காணப்பட்டிருக்கிறது. இந்த ரூலின் நிபந்தனைகளின்படி வேண்டும்போது ஷை சொத்தை கோர்ட்டில் ஆஜர் செய்து விடும்படிக்காக பிரதிவாதியிடம் வாங்கப்பட்ட ஜாமீன் யென்பது இந்த ரூலினால் வியக்தமாகத் தெரிகிறது. இந்த ரூலின் முன் பாகத்தைப் படிப்பதனால் ஷை சொத்தென்பது அந்தக்கோர்ட்டாருடைய அதிகார எல்லையிலிருக்கப்பட்ட சொத்து அல்லது அதன் கிரயத்துகை அல்லது டிக்கிரிக் கடனைத் தீர்ப்பதற்குப் போதுமான துகைதான் என்று ஏற்படுகிறது. இந்த விஷயத்திற்காக கோர்ட்டில் ஜாமீனாகக் கட்டப்பட்ட துகையில் வாதிக்கு யாதொரு பாத்தியதையும் யிருப்பதாக ஷை ரூலில் பிரயோகிக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளினால் தெரிய வரவில்லை. ஜாமீன் துகையைக் கட்டத்தவறினால் சொத்தை ஜப்தி செய்யும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. தீர்ப்புக்கு முந்தியோ அல்லது பிந்தியோ ஜப்தி செய்யப்படுகிற சொத்தில் ஜப்தி செய்யும் கடன்காரனுக்கு யாதொரு பாத்தியதையும் யேர்ப்பட்டு விடமாட்டாதென்பது தீர்ந்த விஷயமாக யிருக்கிறது. அந்த சொத்தைக் கோர்ட்டில் ஆஜர்ப்படுத்தும்படிக்காகவும் ஷை சொத்தை ஜப்தி செய்யாமலிருக்கும்படிக்காகவும், ஜாமீனாகக் கோர்ட்டில் செலுத்தப்பட்ட துகையில் பாத்தியம் யேர்ப்பட்டு போய்விட்டால், அது மிஸ்டர் ஷேமியர் சொல்லுகிறபடி ஒழுங்கு தவறின நடபடிக்கையாக ஆய்விடும். ஆகையால் இந்த விஷயம் ஸம்மந்தப்பட்ட கக்ஷியை நிராகரித்து விட்டது சரியானதென்று நினைக்கிறேன். தான் கோர்ட்டில் ஜாமீனாகச் செலுத்திய துகையை ஜாமீன் கொடுத்துப் பெற்றுக்கொள்ளும்படி அவருக்கு அநுமதி கொடுத்து C. அடையாளமிட்ட உத்தரவு 1912-ம் ஷு நவம்பர் மீ 25உ பிறப்பிக்கப்பட்டது. அப்படி ஜாமீன் கொடுக்கும்முன், கேசில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சங்களைத் தீர்மானிப்பதற்காக (For the Settlement of Issues) வாய்தாவும் யேர்ப்பட்டு விட்டது. பிரதிவாதி எழுத்து மூலமாகத் தாக்கல் செய்துகொண்ட ஸ்டேட்டுமெண்டின் 5-வது பாரர்வில் கண்ட ஒப்புக்கொள்ளுதலை உத்தேசித்து ஷை கேசின் பைசலை எதிர் பார்த்து ரூ. 2000-த்தை கோர்ட்டில் வைத்துக்கொள்ளும்படி உத்தரவு செய்யப்பட்டது. முன்னமேயே தீர்மானிக்கப்பட்டபடி கோர்ட்டில் செலுத்தப்பட்ட துகையின் பேரில் அப்பீல்வாதிக்கு யாதொரு பாத்தியதையும் யேர்ப்படாத விஷயத்தில் அப்பேர்ப்பட்ட பாத்தியதையை அவனுக்கு கொடுக்கும்படியான விஷயம் என்றும் இந்த உத்திரவில் அடங்கி யிருப்பதாக எனக்கு தோன்றவில்லை. ஆகையால் கற்றறிந்த ஜட்ஜ் செய்த தீர்ப்பு சரியானதென்று தீர்மானித்து அஸல் வியாச்சிய இலாகா விதிகளின்படி சிலவுடன் அப்பீலைத் தள்ளுபடி செய்கிறேன்.

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்—மேல் கண்ட தீர்ப்பில் நான் பூராவும் கலந்து கொள்ளுகிறேன். இந்தக் கேசில் மிஸ்டர் வெங்கட்டராம சாஸ்திரியாரின் முக்கியமான கக்ஷி எல்லாங்கூடி ஸிவில் புரொஸீஜர் கோடின் 38-வது ஆர்டர் 5-வது ரூலின் பிரகாரம் செய்யப்பட்ட உத்தரவுப்படி பிரதிவாதி ரொக்கத் துகையைக் கோர்ட்டில் செலுத்துவதின் மூலமாக ஜாமீன் கொடுத்திருந்தால் அந்தக் கேசுக்காகவேயே செலுத்தப்பட்ட துகையென்றே எண்ணவேண்டு மென்பதுதான். ஜாமீன் கொடுக்கத் தவறிவிட்டால் பிரதிவாதியினுடைய சொத்துக்கள் ஜப்தியாய் விடுமென்பதையும் அப்படி ஜப்தி செய்யப்பட்ட சொத்தில் வாதிக்கு யாதொரு பாத்தியதையும் ஏற்பட்டுவிட மாட்டாதென்பதையும் ஸரியென்று ஷை கற்றறிந்த வக்கீல் ஒப்புக்கொண்டார். இந்த 2 வகுப்புக் கேசுகளின் பத்ததியில், ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பகுத்தறியக்கூடிய விஷயம் ஏதுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்பீல் வாதி சொல்லும் கக்ஷியை ஏற்றுக் கொள்வதினால், தனக்கு வேண்டிய காரியத்தை துவக்கத்திலேயே முடித்து கொள்ளும் அதிர்ஷ்டத்தை உடைய வாதிக்கு, சட்டத்தினால் அதிகமான பாத்தியதைகள் யேர்ப்பட்டு விடுமென்பதாகவும் பின்னிட்டு சொத்தை ஜப்தி செய்து கொள்பவருக்கு பாத்தியதை குறைந்துபோய்விடு மென்பதாகவும் மிஸ்டர் ஷேமியர் சொல்லுகிறபடி ஏற்படும். இந்த இருவருடைய பாத்தியதைகளில் ஒன்றைப் பார்க்க ஒன்றை சிறந்ததாகச் செய்வதன் மூலமாக வித்தியாசப்படுத்துவதற்கு யாதொரு நியாயமும் கிடையாது. அந்த ரூலில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைகளினால், அப்படி வித்தியாஸப்படுத்துவதற்குள்ள நியாயங்களிருப்பதாக வாதிக்கப்பட்டது.

அந்தச் சொத்தையாவது அல்லது அதன் கிரயத்தையாவது வேண்டும்போது பிரதிவாதி கோர்ட்டாரிடம் ஆஜர் செய்யவேண்டும் மென்று அந்த உட்பிரிவின் முக்கிய பாகத்தில் சொல்லி யிருக்கிறது. இப்படிக் கோர்ட்டில் ஆஜர் செய்வதை நிச்சயப் படுத்திக் கொள்ளும் பொருட்டுதான் ஜாமீன் வாங்கவேண்டுமென்று முன் உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிரதிவாதியிடமிருந்து கடாசியாய் பிறப்பிக்கப்படக்கூடிய டிக்கிரி மூலமாய் ஏற்படக்கூடிய துகையைப் பார்க்கிலும் ஜாஸ்தியான துகையை அபகரித்துவிடாமலும், கோர்ட்டில் ஆஜர்ப்படுத்தப்படவேண்டிய சொத்தின் அளவு இவ்வளவென்பதை வரையறை செய்யும்படிக்குமாகத்தான "டிக்கிரித் துகைக்குப் போதுமானதாகயிருக்கக்கூடிய" என்ற உரிச்சொல் வாக்கியம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. டிக்கிரி பெறப்பட்டபொழுது கடன் கொடுத்தவனுக்கு யாதொரு சொத்தும் கிடைக்காமல் போய்விடும்படி பிரகு செய்துவிடாமலிருப்பதற்காகத்தான் இப்படி யேர்ப்பாடு செய்திருப்பதின் முக்கியக் கருத்து இந்த நிபந்தனையின் தன்மையானது, தண்டனை போலிருக்கிறது.

தான் கொடுக்கவேண்டிய கடன்காரர்களுக்கு யாதொன்றும் கிடைக்காமல் போய்விடக்கூடிய விதமாக பிரதிவாதி தன் சொத்துக்களை மறைத்து விடாமல் பிரதிவாதியை கட்டுப்படுத்தும் பொருட்டாகத்தான் இப்படி யேர்ப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஜப்தி செய்து கொள்ளும் வாதிக்கு இப்பேர்ப்பட்ட உத்தரவினால் பிரயோசனமுண்டு என்பதில் ஸந்தேகமில்லை. ஆனால் சட்டத்தின் கருத்து அவன் பாத்தியதையை மட்டிலுமே காப்பாற்றிக் கொடுப்பதல்ல. பிரதிவாதி யார்யாருக்கெல்லாம் கடன் கொடுக்க வேண்டியதிருக்கிறதோ அவர்கள் பாத்தியதைகளை எல்லாம் காப்பாற்றிக் கொடுக்கும் நோக்கத்துடனேயே ஷை பிரதிவாதியின் சொத்துக்களை கோர்ட்டாருடைய ஆதீனத்தில் வைத்துவிடும்படி யேர்ப்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் மற்றவர்களுக்கெல்லாம் முந்தி வாதி நடவடிக்கை நடத்தி விட்ட காரணத்தால் ஷை சொத்தில் அவருக்கு மற்றவர்களைப் பார்க்கிலும் சிறந்த பாத்தியதை யேர்ப்பட்டுவிட மாட்டாதென்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன்.

அப்பீல் வாதி பக்கம் ஆஜரான கற்றறிந்த வக்கீல் 1882-ம் ஷுத்திய ஆக்ட்டின் 483-வது பிரிவில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் பதங்களின் ஸாராம்சத்தைக் கவனிக்கும்படி தெரிவித்துக் கொண்டார். பழய கோடு பிரகாரம் பார்த்தாலுமே ஜாமீனுக்கு உத்தரவு வாங்கிவிட்ட காரணத்தால் மட்டும் ஜப்தி செய்த கடன்காரனுக்கு அதிகச்சிறந்த பாத்தியதை உண்டாய் விடமாட்டாதென்று நினைக்கிறேன். 484-வது பிரிவைப் படிப்பதனால் இது வியக்தமாகத் தெரிகிறது. பழய பிரிவின் பேரிலாவது அல்லது அந்தப் பிரிவுகளுக்குறிய புதிய ரூலின் பேரிலாவது, யாதொரு தீர்ப்புகளும் இல்லை. ஸொராட்ஜி கூவர்ஜிக்கும், காலா ரகுநாதக்கும் நடந்து 1912-ம் ஷுத்தில் இ-லா-ரி. 36 பம் 156ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற தீர்ப்பு அப்பீல் வாதிக்கு அநுகூலமாகயிருக்கிறது. அந்தக் கேசில், டிக்கிரிக்குப் பிறகு ஜப்தி செய்யப்பட்டு ஏலத்துக்கு உத்தரவு செய்யப்பட்டது. அந்தத் தேதியில் தீர்ப்புக் கடன்காரன் துகையைக் கோர்ட்டில் கட்டியதின் மூலமாக டிக்கிரித் துகையைச் செலுத்தி விட்டான்.

கோர்ட்டில் பணம் செலுத்தப்பட்டு விடப்பட்டதால் ஜப்தி விடுதலையாகிவிடுகிறது. ஆகையால் மற்ற டிக்கிரிக் கடன்காரர்கள் இருக்கும் துகையில் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய வீதாசாரப்படி கொடுக்கும்படி செய்த மனுக்கள் உபயோக மற்றவைகள் யென்று தீர்மானிக்கப்பட்டது. பம்பாய் கேசில் ஜட்ஜிகள் சொன்ன அபிப்பிராயமானது சரியானதென்று எனக்குத் தோன்றவில்லை. அது எப்படி யிருந்தாலுமே கோர்ட்டாருடைய ஆதீனத்துக்குள் ஜாமீனானது யிருக்கவேண்டுமென்று சட்டம் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களில், அந்தத் தீர்மானத்தை உபயோகிக்க நான் தயாராயிருக்கவில்லை. பாலர்டு சம்மந்தப்பட்ட கேசின் (1903) (2. கிங்க்ஸ் பெஞ்சு 41-ல் சொல்லி யிருப்பது) தீர்மானமானது இவ்விதமான கேசுகளில் உபயோகிக்க வேண்டிய சரியான நியாயத்தை ஸ்தாபிக்கிறது. அந்தக் கேசில் கோர்ட்டில் பணம் கொண்டு வரப்படுகிறதற்காகச் செய்யப்பட்ட ஜப்தி நம்முடைய சட்டத்தில் சொல்லப்பட்ட ஜப்தியைப் போன்றது. லார்ட் ஜஸ்டிஸ்

ரோமர் பின்வருமாறு சொல்லுகிறார் :—"சட்டளை (Writ) ப்படி ஜப்தி செய்யப்பட்ட சொத்தினுடைய ஏதோ ஒரு குறிப்பிட்ட பாகத்தின்பேரில், கடன்காரனுக்கு ஒரு விசேஷ பாத்தியதை கிடைக்கவேணுமானால், அந்த சொத்தின் குறிப்பிட்ட பாகத்துக்கு ஒரு விசேஷ பாத்தியதையை அவருக்குக் கொடுக்கும்படியான ஒரு உத்தரவை அவர் அடைய வேண்டியது. மேல் சொல்லப்பட்ட அபிப்பிராயங்கள் நிஸ்ஸந்தேகமானவைகள்தானென்று எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் இதைப்போன்ற ஒரு சாதாரணக் கேசில் ஒரு பங்குக்காரனால், கடன் பட்டவனுக்குச் செல்ல வேண்டிய பணத்தை ஜப்தி செய்கிறவர்கள் ஜப்தி செய்தார்கள் என்பதனால், கடன் கொடுத்தவர்களுக்கு அந்தப் பணம் தன்னுடைய சொத்தென்றாவது அல்லது அதன்பேரில் தனக்கு ஏதும் விசேஷ பாத்தியதை யிருக்கிறதென்றாவது சொல்ல, பாத்தியதையைக் கொடுக்காது" மேலே சொன்ன அபிப்பிராயத்தை இந்தக் கேசுக்கும் பூராவும் உபயோகித்து விடலாம் ஆகையால் முதல் வாதத்தை நிராகரிக்கிறேன்.

"எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட்ட ஸ்டேட்மெண்டின் 5-வது பாராவில் கண்ட ஒப்புக்கொள்ளுதலை உத்தேசித்து கேசின் முடிவை எதிர் பார்த்து ரூ. 2000த்தைக் கோர்ட்டில் பிடித்து வைத்துக்கொள்ளும்படியாய்" ஜனவரீமீ 29உ பிறப்பிக்கப்பட்ட உத்தாவினால் அப்பீல் வாதிக்கு முன் பாத்தியதை ஏற்பட்டுப் போய்விட்டதாக அனுவாதிக்கப்பட்டது. இந்த உத்தரவு அப்பீல் வாதிக்கு அனுகூலமான உத்தரவல்ல. அவருடைய வியாஜ்ஜியத் தொகைக்கு கொடுபடுவதற்காக ஷை தொகையைக கட்டுப் படுத்தி பிறப்பிவிக்கப்பட்ட உத்தரவுமல்ல. சில நிபந்தனைகளுக்குட்பட்டு கோர்ட்டில் கட்டப்பட்ட பணத்தில் சில பாகத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மட்டும் பிறப்பிவிக்கப்பட்ட உத்தரவு. அது மேல் சொல்லப்பட்ட கேசுகளில் இங்கிலாண்டு கனம் ஜட்ஜிகள் (Lords Justices) கொடுத்த அபிப்பிராயங்கள் இந்த உத்தரவுக்கு சம்மந்தப்படமாட்டாது. கற்றறிந்த சீப் ஜஸ்டிஸ் செய்த தீர்மானத்தில் நானும் கலந்து கொள்ளுகிறேன்.

39 I. L. R. Mad. 903 இ-லா-ரி. 39. ம 903.

நெ. 26.

APPELLATE CRIMINAL.

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். / மிஸ்டர் ஜஸ்டிஸ் பில்லிப்ஸ்.

1915-ம் ஹுத்து ரிவிஷன் கேஸ் நெ. 261.

(1915 ம் ஹுத்து கிரிமினல் ரிவிஷன் மனு 212.)

M. முத்தய்யா (எதிரி) மனுதார்.

லாபாயிண்ட் :—1886-ம் ஹுத்து சென்னப்பட்டணம் ஆக்ட்டு நெ. 1 ஆகிய ஆப்காரி ஆக்ட்டு (சாருயம் கள்ளு முதலியது இறக்கி விற்பதற்குறிய ஆக்ட்டு) 56, 64 வது பிரிவுகள் டை. ஆக்ட்டு 56-வது பிரிவுப்படிக்குள்ள குற்றத்தை லைஸென்ஸ்தார் செய்யாமல், சாருய கிடங்கு குமாஸ்தா செய்கிறான்—தெண்டனை சட்டப்படி செல்லத்தக்கதா ?

1886-ம் ஹுத்து சென்னப்பட்டணம் 1-வது ஆக்ட்டாகிய ஆப்காரி ஆக்ட்டு 64, 56-வது பிரிவுகளை ஒன்றுக்கொன்று ஸம்மந்தப்படுத்திப் படிப்பதனால் ஷை ஆக்ட்டு 56-வது பிரிவுப்படி செய்யப்பட்ட குற்றத்திற்கு லைஸென்ஸ்தார் ஜவாப்தாரியாயிருக்க வேண்டியதோடு வாஸ்தவத்தில் குற்றம் செய்தவன் யாரோ அவனும் ஜவாப்தாரியாக யிருக்கவேண்டியதென்று ஏற்படுகிறது.

1886-ம் ஹுத்தில் பைசல் செய்யப்பட்டு வெய்ர்ஸ் கிரிமினல் ரூலிங்ஸ் 1-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசின் தீர்ப்பை அனுசரித்து பைஸல் செய்யப்பட்டது.

கேசின் சுருக்கம் :—மங்களூர் தாலூகா ஸ்டேஷனெரி 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டு M. அனந்தன் நாயர் 1914-ம் ஹுத்து கியாலெண்டர் கேஸ் நெ. 301-ல் செய்த தீர்ப்பின் பேரில் மங்களூர் டிவிஷன் ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டு ராவ்பகதூர் C. கோபாலன் நாயர் கோர்ட்டில் 1914-ம் ஹுத்திய 100-ம் நெ. அப்பீல் செய்யப்பட்டு, ஷை அப்பீல் தீர்ப்பை ஹைக்கோர்ட்டார் புனராலோசனை செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்து கிரிமினல் புரொஸீஜர் கோடு 435, 439-வது பிரிவுகளின்படி இந்த மனுக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அடியில் கண்ட ஸங்கதிகளைக் கீழ்க் கோர்ட்டுத் தீர்ப்பிலிருந்து எடுத்து எழுதப்பட்டிருக்கிறது.

"அப்பீல்வாதி முல்கி என்னும் இடத்தில் சாருயக் கடைக்காரன். வாதி தரப்பு 3-வது சாக்ஷி காராடு என்னுமிடத்திலுள்ள 4-ம் நெ. சாருயக்கடைக்காரனுக்கு உதவி செய்யும்படி நியமிக்கப்பட்டிருக்கிற வேலைக்காரன். 2 காலன் சாராயத்துக்குள்ள கிரயத்தை 3-வது சாக்ஷி செலுத்தினன் சாருயக் கடைக்காரன் சாருயம் கொடுத்தான் ஷை சாருயத்தை வாதிபக்கம் 1-வது சாக்ஷியாகிய ஸப் இனிஸ்பெக்டர் கடையிலிருந்து 25 கெஜதூரத்திலிருக்கும் பாதையில் பிடித்துக் கொண்டார். வைக்கப்பட்ட முகர்கள் சேதப்பட்டுப் போகாமல் ஸரியாயிருந்தது. சாருயத்தை அளந்து சோதித்துப் பார்த்ததில் 32·1 டிக்கிரி பலமுள்ள 1 காலன் 45 டிராம் சாருயம் அதில் இருப்பதாகத் தெரியவந்தது. ஆனால் ஷை சாருயத்துடன் கொண்டுபோகப்பட்ட அனுமதிச் சீட்டினால் அப்பீல் வாதி 1 காலன் மட்டும்தான் விற்றதாகத் துலங்கிற்று. எந்த பீப்பாயிலிருந்து இந்தச் சாருயம் விற்கப்பட்டதோ அந்தப் பீப்பாயிலிருந்த சாருயத்தைச் சோதித்துப் பார்த்ததில், ஷை சாருயமானது 31·7 டிக்கிரி பலமுள்ளதாகத் தெரியவந்தது".

"சாருயம் கொண்டுபோவதற்கு ஒரு சரியான அனுமதி சீட்டுக் கொடுக்காத குற்றத்திற்காக டிபோதாரனை ஸப்மாஜிஸ்ட்ரேட்டு தண்டித்தார். கடைக்காரனுடைய வகை ஆளாகிய வாதி தரப்பு 3-வது சாக்ஷி 2 காலன் சாருயத்துக்குப் பணம் செலுத்தியும் 45 டிராம் சாருயம்மட்டும் அவனுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் அனுமதிச் சீட்டில் 1 காலன் மட்டும்தான் குறிக்கப்பட்டிருந்தது. ஜனங்களுக்கு விற்கும் பொருட்டு தண்ணீர் கலந்த சாருயத்தைக் கொடுக்கப்பட்டதாகவும், கணக்குகளைப் பார்வை யிடுவதனால் ஜாஸ்தி அளவுள்ள சாருயம் வெளிக்குத தெரிந்து விடாமலிருக்கும்பொருட்டு அனுமதிச் சீட்டில் கொஞ்சமான அளவைக் காட்டப்பட்டிருப்பதாகவும் தான் யூஹிக்கக்கூடும்."

அப்பீல் கோர்ட்டார் தண்டனையை உறுதி செய்துவிட்டார். அதன்பேரில் எதிரியால் இந்த புனராலோசனை மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

லாயர்கள் :—மனுதார் பக்கம் K. ராமநாத ஷேணய். ஸர்க்கார் பக்கத்தில் பப்ளிக் ப்ராஸிகியூட்டருக்காக Mr. P. R. க்ராண்டு ஆஜரானார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்கினால் ஹைக்கோர்ட்டாருடைய தீர்ப்புச் சொல்லப்பட்டது.

மனுதார் லைஸென்ஸ்தாராக யில்லாமல் சாருயக் கடை குமாஸ்தாவாக மட்டுமிருப்பதனால் ஆப்காரி ஆக்ட்டு 56-வது பிரிவுப்படி குற்றம் செய்ததாக அவன் பேரில் கேஸ் கொண்டுவர சட்டம் இடங் கொடுக்க மாட்டாதென்று வாதிக்கப்பட்டது.

சுடலைமுத்து என்பவன்பேரில் நடந்த கேசில் (லா ரிப்போர்ட்டில் ரிப்போர்ட்டுச் செய்யப்படாத கேஸ்) ஆப்காரி ஆக்ட்டு 64-வது 56-வது பிரிவுகளைச் சேர்த்துப் படிக்கவேண்டுமென்றும், லைஸென்ஸ்தார் 56-வது பிரிவுப்படி குற்றவாளியாக வேண்டியதோடு வாஸ்தவத்தில் குற்றம் செய்தவன் இந்தக் கேசில் இந்த மனுதார் 56-வது பிரிவுப்படி குற்றவாளியே ஆகிறான். இந்தக் கேஸின் தீர்மானத்தை அனுஸரித்து மனுதாரின் கக்ஷியை நாங்கள் ஒப்புக்கொள்ள வில்லை.

தெண்டனையில் பிரவேசித்து ஷை தண்டனையை மாற்றுவதற் குறிய முகாந்தரம் ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை. ஆகையால் மனுவைத் தள்ளுபடி செய்திருக்கிறோம்.

நெ. 27.

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர். / மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ்.

1914-ம் ஹுத்து 2-வது அப்பீல் நெ. 1617.

நரஸம்மாள் (வாதி) அப்பீல் வாதி.

v.

ஆலோசனை ஸபையிலுள்ள இந்திய மந்திரி அவர்களுக்காக திருச்சினாப்பள்ளி கலெக்டர் (பிரதிவாதி) அப்பீல் பிரதிவாதி.

லாபாயிண்ட் :—1886-ம் ஹுத்து 2-வது ஆக்டாகிய வருமான வரி ஆக்ட்-4-வது பாகம் 2-வது தபஸிலில் 3-வது பிரிவு 5-வது பிரகரணம் (Clause) மைசூர் மாகாணத்தில் வருஷ வரும்படி-வருஷ வரும்படி உடையவர்-பிரிட்டிஷ் இண்டியாவில் குடியிருப்பவர்—ஷையாளுக்கு வருஷ வரும்படியை, காரியஸ்தன் அனுப்புவது-வரும்படி என்ற பதத்தின் அர்த்தம்-இந்த வரும்படிக்கு பிரிடிஷ் இந்தியாவில் வரி யேர்ப்படுத்தலாமா?

மைசூர் இராச்சியத்தில் ஒருவருக்கு வருஷாந்த வரும்படி யேர்ப்பட்டிருந்து, அந்த வரும்படி நபர் பிரிடிஷ் இந்தியாவில் குடியிருக்கும் காலத்தில் அவளுடைய காரியஸ்தன் ஷை வரும்படித் தொகையின் பாகங்களை வாயிதாப் பிரகாரம் அவளுக்கு அனுப்பிக்கொண்டிருந்தால் அப்படி அனுப்பப்பட்ட தொகைகள் வருமான வரி ஆக்டின் (In-come Tax Act) 2-வது தபஸிலின் 4-வது பாகப் பிரகாரம், "வரும்படி" என்றே ஆகிறது. இந்தத் தொகைகள் பிரிட்டிஷ் இந்தியாவில் வரவு வந்திருக்கிறதாகவேயே ஷை ஆக்ட்டு 3-வது பிரிவு 5-வது உள்ப்பிரிவுப்படி ஏற்படுகிறது. ஆகையால் ஷை தொகைக்கு வருமான வரி ஏற்படுத்தக் கூடியதுதான்.

வியாஜ்ஜிய ஸங்கிரஹம் :—ஸ்ரீரங்கம் டிஸ்டிரிக்ட்டு முனிஸீப் T. ஜீவாஜி ராவ் கோர்ட்டு 1912-ம் ஹுத்து அசல் வியாஜ்ஜிய நெ. 86-ன் டிக்கிரியின் பேரில் திருச்சினாப்பள்ளி ஸபார்டினெட் ஜட்ஜ் C. கிருஷ்ணசாமி ராவ் கோர்ட்டு 1913-ம் ஹுத்து அப்பீல் நெ. 296-ன் டிக்கிரியின்பேரியில் செய்யப்பட்ட 2-வது அப்பீல்.

இந்தக் கேசின் சங்கதிகள் இந்தக் கேசின் தீர்ப்பினால் தெரியவரும்.

லாயர்கள் :—அப்பீல் வாதிபக்கம் C. S. வெங்கடாச்சாரியாரும்—N. C. விஜயராகவாச்சாரியாரும் கவர்ன்மெண்டார் பக்கத்தில் கவர்ன்மெண்டு ப்ளீடர் ஆஜரானார்கள்.

அடியில்கண்ட தீர்ப்பை மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் வெளியிட்டார் :—

இந்த அப்பீல் வாதிக்கு மைசூர் இராச்சியத்தில் வருஷாந்தர வரும்படி யேர்ப்பட்டு, அவள் பிரிட்டிஷ் இந்தியாவில் குடியிருந்த காலங்களில், ஷை வரும்படியின் பாகங்களை அவளுடைய காரியஸ்தன் அவளுக்கு வாயிதாக்களில் அனுப்பி வந்தான்.

1886-ம் ஹுத்து 2-வது ஆக்ட்டாகிய வருமான வரி ஆக்ட் (In-come Tax Act) 2-வது தபஸிலில் 4-வது பாகத்தின் பிரகாரம் இப்படி அனுப்பப்பட்ட தொகைகள் வரும்படிதானென்று ஸபார்டிநேட் ஜட்ஜ் செய்த தீர்மானத்தில் நாங்கள் கலந்து கொள்ளுகிறோம்.

காரிஸ்தனால் வசூல் செய்யப்பட்ட பிறகு அந்த தொகைக்கு வரும்படி யென்ற பெயரேயில்லை யென்றும், காரியஸ்தன் மைசூரில் பண வசூல் செய்த செய்கையானது தொகைக் குறிய முக்கியஸ்தனு (Principal) லேயே செய்யப்பட்டதாகுமென்றும், அந்தத் தொகை மைசூரில் பெற்றுக் கொள்ளப்பட்ட பிறகு, அதே தொகையை காரியஸ்தன் முக்கியஸ்தனுக்கு அனுப்பிய பொழுது பிரிட்டிஷ் இந்தியாவிலும் பெற்றுக்கொள்ள முடியாதென்றும் வாதிக்கப்பட்டது.

'வரும்படி' என்பது எது 'வருகிறதோ' (கிடைக்கிறதோ) அதுதான் இப்போர்ப்பட்ட விதமாக வரும் தொகைகள் எல்லாம் வரும்படி என்பதில் சேரும் வருமானவரி ஆக்ட்டு 3-வது பிரிவு 5-வது உள் பிரிவுப்படி "பிரிட்டிஷ் இந்தியாவில் கிடைத்தது" ஆக்ஷேபனைக் கிடமில்லாத சங்கதி ஆகையால் ஷை தொகைக்கு வருமான வரி ஏற்படுத்தக்கூடியததான்.

இந்த 2-வது அப்பீலை சிலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

I. L. R 39 Mad. 885. இ-லா-ரி. 39 ம. 885.

நெ. 28.

APPELLATE CRIMINAL.

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி. / மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ்.

1915-ம் ஹுத்து கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 440

(1915-ம் ஹுத்தில் அபிப்பிராயத்துக்காக அனுப்பப்பட்ட கேசின் நெ. 46.)

(பள்ளடம் ஸ்டேஷனெரி 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டு R. சாரங்கபாணி கோர்ட்டில் 1915-ம் ஹுத்து காலெண்டர் கேஸ் நெ. 242-ல் எதிரி) யாகிய—

சுப்பராய செட்டி ஸ்ம்மந்தமான கேஸ்.

லாபாயிண்ட்:—1898-ம்ஹுத்து 5-வது ஆக்ட்டு ஆகிய கிரிமினல் புரொஸீஜர் கோடின் 110-167-வது பிரிவுகள்-110-வது பிரிவின்படி நடவடிக்கையில்-167-வது பிரிவின்படி ஜெயிலுக்கு அனுப்ப அதிகாரம்.

1898-ம் ஹுத்து 5-வது ஆக்ட்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடின் 110—வது பிரிவுப்படிக்குள்ள நடவடிக்கையில் ஸம்மந்தப்பட்ட எதிரியை, ஜெயிலில் வைக்க மாஜிஸ்ட்ரேட்டாருக்கு அதிகாரமில்லை. ஷை-

கோடின் 167-வது பிரிவு 14-வது அத்தியாயப்படிக்குள்ள நடபடிக்கைகளுக்கு ஸம்மந்தப்படுமேயல்லது 110-வது பிரிவுபடிக்குள்ள நடபடிக்கைக்கு ஸம்மந்தப்படமாட்டாது.

சக்கிரவர்த்தி அவர்களுக்கும்—பாஸய்யாவுக்கும் நடந்து 1903-ம் ஸுத்தில் 5-பம் லா-ரிப்போர்ட்டார் 27-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேஸை உதாரணமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

கேசின் சுருக்கம்:—1898-ம் ஸுத்திய 5-வது ஆக்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடின் 438-வது பிரிவின்படி. கோயம்புத்தூர் டிஸ்ட்ரிக்ட்டு மாஜிஸ்ட்ரேட, A. R. சம்மிங் என்பவரால் ஹைக்கோர்ட்டாருடைய அபிப்பிராய உத்தரவுக்காக அனுப்பப்பட்ட கேசு.

இந்தக்கேஸைப்பற்றித் தெரிவித்த அடியில்கண்ட லெட்டரில் கேசின் சங்கதிகள் வெளியாகின்றன:—

"அடியில்கண்ட கேஸை ஹைக்கோர்ட்டாருடைய உத்தரவுக்காக கிரிமினல் புரொஸீஜர் கோடின் 438-வது பிரிவின்படி அனுப்பியிருக்கிறேன்.

"கிரிமினல் புரொஸீஜர் கோடு 110-வது பிரிவின்படி ஈரோடு ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நல் நடத்தை ஜாமீன் வாங்கப்படுவதற்காக, 20-வயதுள்ள சுப்பராய செட்டி என்ற ஒருவனை, ஸந்தேகத்தின் பேரில் தாராபுரம் போலீஸார் 1915-ம் ஸு மார்ச்சு மீ 30 உ பிடித்தார்கள். ஷை மீ 31-உ யன்று ஷை எதிரியை ஈரோடு ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டாரிடம் ஆஜர்ப்படுத்தவேண்டியதற்காக 4 நாளைக்கு அவனுக்கு ரிமாண்டு கொடுக்கவேண்டுமென்று கேட்டு எதிரியை தாராபுரம் ஸப் மாஜிஸ்ட்ரேட்டிடம் ஆஜர் செய்தார்கள் அவ்விதமே ஸ்டேஷனெரி ஸப்மாஜிஸ்ட்ரேட்டு ஷை எதிரியை 1915-ம் ஸு ஏப்பிரல்மீ 3உ வரை ரிமாண்டு செய்து விட்டார். (ஜெயிலில் வைக்க உத்தரவு கொடுத்து விட்டார்) அந்த நாள் பிற் பகலில் எதிரியை அடையாளங்காட்டும் பொருட்டு பற்பல இடங்களிலிருந்து சாக்ஷிகளை ஸம்மன் போட்டுத் தருவிக்கவேண்டியதிருப்பதாயும், ஆகையால் அந்த எதிரிக்கு 10 நாள்களுக்கு ரிமாண்டு கொடுக்கப்படவேண்டுமென்றும், ஷை காலத்துக்கு எதிரியை தாராபுரம் ஸப் ஜெயிலிலேயே வைத்திருக்க அனுமதி கொடுக்கும்படியாயும், ஈரோடு ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டுக்கு, தாராபுரம் ஸ்டேஷனெரி ஸப் மாஜிஸ்ட்ரேட் மூலமாக தாராபுரம் ஸப் இனிஸ்பெக்டர் ரிப்போர்ட்டு அனுப்பினர். இந்த ரிப்போர்ட்டு சாயந்திரம் 4-30 மணிக்கு ($4\frac{1}{2}$-மணிக்கு) கிடைத்து, ஸப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவை எதிர்பார்த்து அவ்விதமேயே எதிரிக்கு ரிமாண்டு கொடுத்துவிட்டு தன் உத்திரவை ஆமோதிப்புக்காக ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டுக்கு ரிப்போர்ட்டுச்செய்தார்.

"ஏப்ரல்மீ 10உ இந்த எதிரியையும், ஒரு களவுக் கேசில் ஸம்மந்தப்பட்டு, ரிமாண்டிலிருந்த அண்ணைப் பிள்ளை என்பவனையும், 12உ யன்று ஈரோடு ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேடார் முன் ஆஜர்ப்படுத்த வேண்டியதற்காக போலீசார் வசம் ஒப்புவிக்கப்பட்டது.

11உ காலை 2 கைதிகளும் அவர்களைக் கொண்டு போன 2 கான்ஸ்டேபிள்களும், ஈரோடுக்குப் போகும் பாதையில் திருப்பூரில் சாப்பாட்டு விடுதியில் சாப்பிட்டார்கள். சாபபாட்டு விடுதிக்காரனோடு சாப்பாட்டுக் கணக்குத் தீர்த்துக்கொண்டிருக்கும்பொழுது, எதிரி சுப்பராயசெட்டி ஓடி விட்டான். கான்ஸ்டேபிள்களில் ஒருவன் அவனை தயர்ந்து ஓடியும் அவனைப் பிடிக்க முடியவில்லை.

"ஏப்பிரல்மீ 11உ அர்த்த ராத்திரியில், சோர்ந்து போன திருப்பூர் ஸ்டேஷன் கான்ஸ்டேபிள்கள் இருவர் ரோட்டில் சில வண்டிகள் போய்க்கொண்டிருந்ததைக் கண்டு ஓடிப்போனதாக தாங்கள் முன்னமேயே கேழ்வைப்பட்டிருந்த எதிரி ஒருக்கால் அந்த வண்டிகள் எதிலாவது இருந்தாலும் இருக்கக் கூடுமென்று நினைத்து ஒவ்வொரு வண்டியையும் பரிசோதிக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது ஷை வண்டிகள் ஒன்றிலிருந்து ஒருவன் குதித்து ஓடினன். கான்ஸ்டேபிள்கள் அவன் பின்னால் ஓடி அவனைப் பிடித்தார்கள் அவன் ஓடி ஒளிந்துகொண்ட எதிரியாகவேயே யிருக்கக் கண்டு திருப்பூர் போலீஸ் ஸ்டேஷன் ஆபீஸர் முன் ஆஜர் செய்தார்கள் அவர் எதிரியை, இந்தியன் பினல் கோடு 225 B. பிரிவின்படி குற்றம் செய்ததாக பள்ளடம் ஸ்டேஷனெரி 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரோட்டு முன் சார்ஜு செய்தார் (குற்றம் சாட்டினர்) அவர் எதிரியை குற்றவாளியென்று தீர்மானித்து அவனுக்கு 1915-ம் ஸு மேமீ 21உ யன்று 6மீ கடுங்காவல் தண்டனை விதித்து அவனை கோயம்பத்தூர் ஸெண்ட்ரல் ஜெயிலுக்கு அனுப்பி விட்டார்.

"அப்பால் சுப்பராய செட்டி பேரிலும், கோவிந்த செட்டி என்ற ஒருவன் பேரிலும் கிரிமினல் புரொஸீஜர் கோடு (110 f) பிரிவின்படி நடபடிக்கை நடத்தப்பட்டு அவர்களை, ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டு நல் நடத்தையாக யிருப்பதற்காக, ஒரு வருஷத்துக்கு அவர்களில் ஒவ்வொருவரும் ரூ. 100-க்கு பத்திரம் எழுதிக் கொடுக்கும்படிக்கும் நபர் 1-க்கு ரூ 100-க்கு ஜாமீன் கொடுக்கும்படிக்கும் உத்தரவு செய்தார்.

"ஷை சுப்பராய செட்டியை பள்ளடம் 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் தண்டித்ததானது சட்டப்படி செல்லுமாவென்று அடியில்கண்ட முகாந்திரங்கள் எனக்கு சந்தேகமாக யிருக்கிறது:—

இந்த எதிரிபேரில் கி. பு. கோடு 110-வது பிரிவுப்படி நடடபடிக்கை நடத்தும் பொருட்டாக (1) தாராபுரம் ஸ்டேஷனெரி ஸப்மாஜிஸ்ட்ரேட்டுக்கு இந்த எதிரியை ரிமாண்டு கொடுத்து ஸப்ஜெயிலில் அடைக்க அதிகாரமில்லை.

(2) ரிமாண்டு ஆகையால் ஜெயிலில் வைத்தது சட்டவிரோதமானதாகையால், காவலிலிருந்து ஓடியது சட்டவிரோதமானதில்லை. ஆகையால் அப்படி ஓடியது இந்தியன் பினல் கோடு 225 B. பிரகாரம் குற்றமல்ல. ஆகையால் ஷை தண்டனையை ரத்துச்செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன்.

"ஹைக்கோர்ட்டாருடைய உத்தரவை எதிர் பார்த்து எதிரியை ஜாமீன்பேரில் விட்டிருக்கிறேன்.

கேசில் ஸம்மந்தப்பட்ட ரிக்கார்டுகளை எல்லாம், அட்டவணை ஸமேதம் அனுப்பியிருக்கிறது.

லாயர்கள்:—கவர்ன்மெண்டார் பக்கம் பப்ளிக் ப்ராஸிகியூட்டருக்காக M. H. ஹக்கிம், எதிரி தானுக ஆஜராகவுமில்லை அவனுக்காக வக்கீல் ஆஜராகவுமில்லை.

அடியில்கண்ட உத்தரவு மிஸ்டர் ஜஸ்டிஸ் டயாப்ஜியால் வெளியிடப்பட்டது:—

எதிரிக்கு ரிமாண்டு கொடுக்க மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. கிரிமினல் புரொஸீஜர் கோடின் 167-வது பிரிவு 14-வது அத்தியாயப்படிக்குள்ள நடபடிக்கைகளுக்கு ஸம்மந்தப்படுமேயல்லது 110-வது பிரிவுப்படிக்குள்ள நடபடிக்கைக்கு ஸம்மந்தப்படமாட்டாது. சக்கிரவர்த்திக்கும் பாஸயாவுக்கும் நடந்து 1903-ம் ஸுத்தில் 5 பம்பாய் லா ரிப்போர்ட்டில் 27-ம்பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கும் கேசைப் பார்க்க. ஆகையால் தண்டனையை ரத்து செய்திருக்கிறது ஜாமீன் பத்திரங்களை ரத்து செய்திருக்கிறது.

I. L. R. 39 Mad. 928. இ-லா-ரி, 39 ம. 928.

The Indian Law Gazette.

PART II.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஸு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ஸு ஜூன்மீ [நெ. 6.

Reports of Cases.

கேஸ்களின் ரிப்போர்ட்டுகள்.

நெ. 29.

Madras High Court.

மதராஸ் ஹைக்கோர்ட்டு.

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

FULL BENCH.

புல் பெஞ்சு.

ஜட்ஜிகள்:—
- ஸர். ஜான் வாலிஸ், Kt. ச்சீப் ஜஸ்டிஸ்.
- மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸதாசிவ அய்யர்.
- மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்ரீநிவாஸய்யங்கார்.

1913-ம் ஸுத்திய 2-வது அப்பீல் நெ. 19.

வையாபுரி என்பவரும், மற்றொருவரும் (1, 2 பிரதிவாதிகள்.) அப்பீல் வாதிகள்.

v.

சோணம்மாபாய் அம்மணி (வாதி) அப்பீல் பிரதிவாதி.

லாபாயிண்ட்:—வாஸ்தவமான சொந்தக்காரனுடைய பாத்தியதை அற்றுப்போகக்கூடிய ஸ்வாதீனம் (Adverse Possession) அனுபோகமில்லாத ஒத்தி (Simple mortgage) ஒத்தி வைத்ததற்குப் பிறகு ஒத்திவைத்தவனிடத்திலிருந்து ஷை நிலத்தை அபகரித்துக்கொள்வதானது ஒத்தி வாங்கினவனுடைய பாத்தியதையை அற்றுப்போகும்படி செய்துவிட மாட்டாது.

தன்னுடைய நிலத்தை மற்றொருவனுக்கு அனுபோகமில்லாத ஸாதா ஒத்திவைத்த ஒருவனுடைய நிலத்தில் ஒரு மூன்றுவது மனுஷன் அக்கிரமமாய் பிரவேசித்து ஷை நிலத்தை தான் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பதனுல், ஒத்தி வாங்கினவனுக்கு ஷை நிலத்திலுள்ள பாத்தியதை அற்றுப்போய்விட மாட்டாது.

இந்தக் கேசை பைசல் செய்வதில் 1912-ம் ஸுத்தில் பார்த்தஸாரதி நாயக்கருக்கும், லக்ஷ்மண நாயக்

கருக்கும் நடந்து இ-லா-ரி. 35. ம. 231-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தை ஒப்புக்கொண்டும் 1913-ம் ௵த்தில் ராமஸாமி செட்டிக்கும் பொன்னப் படையாச்சிக்கும் நடந்து இ-லா-ரி 36. ம. 97-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தை நிராகரித்தும்—தீர்மானிக்கப்பட்டது.

வியாஜ்ஜிய சங்கிரஹம் :—திருவாடி டிஸ்டிரிக்ட் முன்ஸீப் P. G. ராமய்யர், தன் கோர்ட்டு 1910-ம் ௵த்து அஸல் வியாஜ்ஜி நெ. 131-ல் செய்த டிக்கிரியின் பேரில் தஞ்சாவூர் ஸபார்டினெட் ஜட்ஜி D. வெங்கோப ராவ் கோர்ட்டு 1911-ம் ௵த்து அப்பீல் நெ. 223-ல் தாக்கல் செய்யப்பட்டு ஷை அப்பீல் டிக்கிரியின் பேரில் இந்த 2-வது அப்பீல் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ஸாலமன் தென்கொண்டான் என்பவன் ஸர்வே நெ. 379-க்கு பைமாஷ் நெ. 72/4-ல் 30 குழி நிலத்தை 1878-ம் ௵ ஆகஸ்ட்டு௴ 28௨ A அடையாள தஸ்தாவேஜின் அஸல் மூலமாக ஜாதோ ராவ் ஸாகிப் என்பவருக்கு அடமானம் செய்தான். 1900-ம் ௵த்தில் அடமானம் வாங்கினவரால் ஷை அடமான தஸ்தாவேஜின்பேரில் 1900-ம் ௵த்திய அஸல் வியாஜ்ஜிய நெ. 250 தாக்கல் செய்யப்பட்டு ஷை நிலத்தை ஏலம் போட்டு தொகையை வசூலிக்கும்படி 1900-ம் வருஷம் நவம்பர்௴ 27௨ யன்று B அடையாள தஸ்தாவேஜாகிய டிக்கிரி பெறப்பட்டது. அந்த டிக்கிரி நிறைவேறுதலில் அடமானச் சொத்துக்கள் ஏலம் போடப்பட்டு, ஷை நிலங்களை டிக்கிரி பெற்றவருடைய விதவை (Decree holder's widow) யான வாதி 1906-ம் வருஷம் அக்டோபர்௴ 31௨ ஏலத்தில் எடுத்து அதற்கு 1906-ம் வருஷம் டிசம்பர்௴ 1௨ ஏல ஸர்டிபிக்கேட் (Sale Certificate) டும் பெற்றுக்கொண்டாள். ஷை நிலங்களை சாகுபடி செய்து கொள்ள அவள் முயற்சி செய்தபொழுது மூன்றுவது மனுஷர்களாகிய 1, 2 பிரதிவாதிகள் அவளை சாகுபடி செய்துகொள்ள வொட்டாதபடி தடை செய்தார்கள். அவர்களுடைய, தடையை கோர்ட்டார் நிவிருத்தி செய்து கொடுக்கமாட்டோமென்று சொல்லி விட்டார்கள். அதன்பேரில் 1910-ம் ௵த்தில் அவள் இந்த வியாஜ்ஜியத்தை தாக்கல் செய்தாள்.

டிஸ்டிரிக்ட் முனிசிப் இந்தக் கேசில் ஸம்மந்தப்பட்ட பற்பல விஷயங்களையும் பைசல் செய்ததில் பிராதில் கண்ட தாவா சொத்தில் சொந்தக் காரனுக்கு இருக்கும் பாத்தியதை அற்றுப்போகக் கூடிய விதமான ஸ்வாதீனத்தை (Adverse Possession) 1, 2 பிரதிவாதிகள் வெகுகாலமாய் அடைந்து ஷை நிலத்தை கைவசப்படுத்திக் கொண்டதின் மூலமாக அவர்களுக்கு பாத்தியதை உண்டாய்விட்டதாகவும் வாதியின் பிராது காலாவதியாகிப் போய்விட்டதாகவும் தீர்மானம் செய்தார். அதன்பேரில் வாதி கீழ் அப்பீல் கோர்ட்டில் அப்பீல் செய்தாள். தாவாச் சொத்தானது ஒத்தி வைத்தவனுக்குச் சொந்தமானதென்றும், ஒத்தி தஸ்தாவேஜி முடிந்தபிறகு அதாவது சுமார் 25 வருஷங்களுக்கு முன் ஒத்திவைத்தவர் ஷை நிலத்தை 1-வது பிரதிவாதிக்கு புறக்குடி பாத்தியத்தின் பேரில் (அதாவது ஊழியம் செய்கிறதென்கிற நிபந்தனையின்பேரில் ஒரு நிலத்தை சாகுபடி செய்ய ஏற்றுக்கொள்ளும் குடியானவன் தான் புறக்குடி என்பது) விட்டதாக வாதி பக்கம் சாக்ஷியத்தினால் ருஜுவாயிருப்பதாகவும் அந்தப் புறக்குடி பாத்தியதையானது நம்பத் தகாததாகயிருந்தாலுமே, 1-வது பிரதிவாதி ஷை நிலத்தை, சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற காலத்திற்கு மேற்பட்டு ஷை நிலத்தில் சொந்தக்காரனுக்கு இருக்கும் பாத்தியதை அற்றுப்போகக்கூடிய விதமாக அனுபவித்ததானது அப்பேர்ப்பட்ட அனுபோகம் ஒத்தித் தேதிக்குப்பின்னிட்டு ஏற்பட்டிருப்பதால் ஷை நிலத்தை மீட்டுக்கொள்ளுவதில் வாதிக்கு உள்ள பாத்தியதையைத் தடுக்கமாட்டாதென்பதாகவும் தீர்மானம் செய்து கீழ் அப்பீல் கோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாக டிக்கிரி செய்தார். இந்த தீர்மானத்துக்கு ஐமாதா மாண்டாளுக்கும், மக்கன்லால் தெய்க்கும் 1901-ம் வருஷத்தில் நடந்து இ-லா-ரி. 33 கல். 1015-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசை ஆதாரமாக வைத்துக்கொண்டார்.

அதன்பேரில் 1, 2 பிரதிவாதிகள் அடியில் கண்ட காரணங்களின்பேரில் இந்த 2-வது அப்பீலைச் செய்தார்கள் :—

"1-வது பிரதிவாதி ஷை நிலத்தை தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தது ஒப்புக்கொள்ளக் கூடியதென்று தீர்மானித்தபடியால், கீழ்க் கோர்ட்டாருடைய டிக்கிரியை ஸபார்டினேட் ஜட்ஜி உறுதி செய்திருக்க வேண்டுமென்பதும்.

"ஒத்தி வைத்தவனுடைய பாத்தியதைக்குக் கெடுதலாக ஷை நிலத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்ததை ஒத்தி வாங்கினவனுடைய பாத்தியதைக்கும் கெடுதலாக ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்ததாகவேயே தீர்மானிக்க வேண்டுமென்பதுமான காரணங்கள்."

லாயர்கள் :—அப்பீல் வாதி பக்கம் G. S. ராமச்சந்திர அய்யர்.

அப்பீல் பிரதி வாதிபக்கம் A. R. மாதவராவ்

இந்த அப்பீல் முதலில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் இவர்கள் முன்புக்கு ஈயரிங்குக்கு வந்ததில் அடியில்கண்ட உத்தரவு செய்யப்பட்டது.

ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் :—இந்தக் கேசின் சங்கதிகளின்பேரில் நிதானிக்கக்கூடிய விதங்களை எல்லாம் ஆலோசித்து கற்றறிந்த ஸபார்டினேட் ஜட்ஜி இந்தக் கேசின் தீர்ப்பில் அனுவாதம் செய்திருக்கிறார். அப்பேர்ப்பட்ட விஷயங்களைப் பற்றி அவர் செய்த முடிவு இன்னதென்பதை அவர் வியக்தமாக வெளியிடும் பொருட்டு அடியில்கண்ட அம்சத்தைப்பற்றி அவரைக் கொண்டு தீர்மானிக்கச் செய்வது அவசியமென்று நினைக்கிறோம்.

"ஸாலமன் தென்கொண்டான் என்பவனால் 1-வது பிரதிவாதி புறக்குடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டானா! அப்படி ஏற்றுக்கொள்ளப் பட்டால் எப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டான்." ஷை தீர்மானம் இந்தத் தேதி முதல் 6 வாரங்களுக்குள் செய்யப்படவேண்டும், ஷை தீர்மானம் இந்தக் கோர்ட்டுக்குக்கிடைத்து விட்டதாக விளம்பர பலகையில் விளம்பரக் கடிதாசி ஒட்டப்பட்ட 7 நாள்களுக்குள் கக்ஷிக்காரர்களுக்குள்ள ஆக்ஷேபனைப் பத்திரிகைகளை தாக்கல் செய்து கொள்ளலாம்.

மேல்கண்ட உத்தரவுப்படி தஞ்சாவூர் ஸபார்டினேட் ஜட்ஜி அடியில் கண்ட தீர்மானத்தை அனுப்பினார். "* * * * * வாதியால் சொல்லப்பட்ட புறக்குடி அனுபவ விஷயமாய் விடப்பட்ட வாதிபக்கம் சாக்ஷிகளின் சாக்ஷியத்தை நம்ப மார்க்க மில்லை. இந்த அம்சத்தை எதிரிகளுக்கு அனுகூலமாகவும், வாதிக்கு விரோதமாகவும் தீர்மானம் செய்கிறேன்."

கீழ் அப்பீல் கோர்ட்டாரைக் கொண்டு விசாரணை செய்து தீர்மானம் செய்யும்படி இந்தக் கோர்ட்டாரால் அனுப்பப்பட்ட அம்சம் தீர்மானம் செய்யப்பட்டு, இந்தக் கோர்ட்டில் கிடைத்த பிறகு இந்த 2-வது அப்பீல் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட், ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர், இவர்கள் முன் ஈயரிங்குக்கு வந்ததில், இந்தக் கேசின் சங்கதிகளை புல்பெஞ்சுத் தீர்மானத்திற்காக அனுப்பும்படியாக அடியில் கண்ட உத்தரவு செய்யப்பட்டது.

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்:—சங்கதியைப் பொறுத்தான கீழ்க் கோர்ட்டாருடைய தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுகிறோம்.

ஒத்திச் சொத்தில், ஒத்திவைத்தவருக்குள்ள சுதந்தரங்களையும், ஹக்குபாத்தியதையையும், பலனையும் கோர்ட்டு ஏலத்தில் கிரயத்துக்கு வாங்கிய வாதிக்கு விரோதமாகக்கூடிய விதமாக 1, 2 பிரதிவாதிகள் ஷை நிலத்தில் சட்டப்படி பாத்தியதை ஏற்பட்டுப்போகக்கூடிய விதமான நீடித்த அனுபோகத்தினால் (By Prescription) அவர்களுக்குப் பூரா பாத்தியதை உண்டாய் விடுமா என்பது தான், இந்தக் கேசில் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம். அந்த நிலத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளும் பொருட்டாக இப்பொழுது வியாஜ்ஜியம் செய்திருக்கிறாள். தாங்கள் ஷை நிலத்தை, சட்டப்படி பாத்தியதை ஏற்படக்கூடிய காலமாக அனுபவித்துவிட்டபடியால் ஷை சொத்தை ஒத்தி வைத்தவருக்கும், ஒத்தி வாங்கினவருக்கும், ஷை சொத்திலுள்ள சகல பாத்தியதைகளும் தங்களுக்கே ஏற்பட்டுவிட்டதாக 1, 2, பிரதிவாதிகள் வாதிக்கிறார்கள். 1878-ம் ௵த்தில் ஷை நிலம் ஒத்திவைக்கப்பட்டதென்பதும், 1900ம் ௵த்தில் வியாச்சியம் கொண்டுவரப்பட்டதென்பதும், 1906-ம் ௵ அக்டோபர்௴ 31௨ வாங்கப்பட்ட ஏலக்கிரயத்தின் மூலமாக வாதிக்கு ஷை நிலத்தில் பாத்தியதை ஏற்பட்டதாகவும் இந்த பிரஸ்தாப வியாச்சியம் 1910-ம் ௵த்தில் கொண்டுவரப்பட்டதாகவும், இந்த வியாஜ்ஜியத்திற்கு 20, வருஷங்களுக்கு முன்னமேயே, அதாவது 1890-ம் ௵த்திலேயே ஒத்திவைத்தவனுக்கு ஷை நிலத்திலுள்ள பாத்தியதைகள் அற்றுப்போகக் கூடிய விதமாயுள்ள பாத்தியதை (Adverse Possession) 1, 2 பிரதிவாதிகளுக்கு ஏற்பட்டுப்போய்விட்டதாகவும், கக்ஷி சொல்லப்பட்டு அப்படியே தீர்மானிக்கப் பட்டுமிருக்கின்றன. ஒரு சாதா ஒத்தி (Simple Mortgage) வாங்கினவருக்கு ஷை ஒத்தி சொத்திலுள்ள பாத்தியதைகள், ஒருவருக்கு சட்டப்படி பாத்தியதை ஏற்படக்கூடிய அனுபோகத்தினால் (Prescription) எவ்விதமாகப் பாதிக்கப்படும் என்பதைப் பற்றி பார்த்தசாரதி நாய்க்கருக்கும், லக்ஷ்மண நாய்க்கருக்கும் நடந்து 1912-ம் ௵த்தில் இ-லா-ரி. 35 ம. 231-ல பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறதும், ராமஸாமி செட்டிக்கும், பொன்னபடையாச்சிக்கும் நடந்து 1913-ம் ௵த்தில் இ-லா-ரி. 36 ம. 97-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறதுமான தீர்ப்புகளில் ஒன்றுக்கொன்று நேர் விரோதமான முடிவுகளுக்கு வரப்பட்டிருக்கின்றன. இந்த விஷயம் பெரிய அய்யா அம்பலத்துக்கும், ஷண்முகசுந்தரத்துக்கும் நடந்து 1914-ம் ௵த்தில் 26, ம. லா-ஜ. 140-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறதுமான கேசு சம்மந்தமாய் புல்பெஞ்சுத் தீர்மானத்துக்காக அனுப்பப்பட்டது. ஆனால் இந்த விஷயத்தைப்பற்றித் தீர்மானிப்பது அனாவசியமானதென்று காணப்பட்டது. இந்த விஷயத்தைப்பற்றி இப்படி, பரஸ்பரவிருத்தமான தீர்மானங்களிருக்கிறபடியால் அடியில் கண்ட கேழ்வியை புல்பெஞ்சுத் தீர்மானத்துக்காக அனுப்புகிறோம். "ஒரு நிலத்தை சாதா ஒத்தி வைத்தவனுக்கு ஷை நிலத்திலிருக்கும் பாத்தியதைகளை வியாபித்துக்கொண்டு அக்கிரமமாக ஷை நிலத்தில் பிரவேசித்து அனுபவித்துக்கொண்டிருப்பவனுடைய அனுபோகமானது ஒத்தி வாங்கினவருக்கு ஷை நிலத்திலிருக்கும் பாத்தியதைகளை யில்லாமல் செய்துவிடுமா!"

பார்த்தஸாரதி நாய்க்கருக்கும், லக்ஷ்மண நாய்க்கருக்கும் நடந்த கேசிலும், ராமஸாமி செட்டிக்கும் பொன்னப்படையாச்சிக்கும் நடந்த கேசுகளின் தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று எதிரிடையாயிருப்பதை யிட்டு, இந்தக் கேசை புல்பெஞ்சு அபிப்பிராயத்திற்கு அனுப்பவேண்டியது அவசியமாக ஏற்பட்டது. பார்த்தஸாரதி நாய்க்கருக்கும், லக்ஷ்மண நாய்க்கருக்கும் நடந்த கேசின் தீர்மானத்தில் ராமஸாமி செட்டிக்கும் பொன்னப்படையாச்சிக்கும் நடந்த கேசைச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

ஒரு சொத்தில் அதன் சொந்தக்காரனுக்கிருக்கும் பாத்தியதைகளிலெல்லாம் மிகச் சிறந்தபாத்தியதையானது அதை அனுபவிக்கும் பாத்தியதைதான். இந்தப் பாத்தியதையை ஒரு மூன்றாவது மனுஷன் காலாவதிச் சட்டப்படி அடைந்து அதை வெகு காலமாக அனுபவித்து விட்டானேயாகில், ஒத்தி வைத்தவனுக்கு ஷை சொத்தை ஒத்தியிலிருந்து மீட்டுக்கொள்ளும் பாத்தியதையானது பூராவும் இல்லாமலேயே போய்விடுகிறது. ஆகையால் மீட்டுக்கொள்ளக்கூடிய பாத்தியதையே ஒன்றுமில்லை. ஒத்தி வாங்கினவனுக்கு இருக்கும் பாத்தியதை எல்லாம் கூடி, ஷை சொத்தில் ஒத்திவைத்தவனுக்கு இருக்கும் பாத்தியதையை ஏலம் போடுவதுதான். ஷை சொத்தை ஏலம் போடுவதற்காகப் பிறப்பிவிக்கப்படுகிற டிக்கிரியானது, ஒத்திவைத்தவனுக்கு ஷை சொத்திலிருக்கும் பாத்தியதை அற்றுப்போகும்படியான விதமாக, ஷை சொத்தை காலாவதி சட்டப்படிப் பலமான பாத்தியதையோடு அடைந்து வெகு காலமாக அனுபவித்துவருகிற ஒரு மூன்றாவது மனுஷனைக் கட்டுப்படுத்தமாட்டாது. ஒத்திவைத்தவனுடைய பாத்தியதை அற்றுப்போகும்படியான விதமாக ஷை சொத்தை அனுபவிக்கிற மூன்றாவது மனுஷனுடைய அனுபோகமானது ஒத்தி வாங்கினவனுடைய பாத்தியதையும் அற்றுப்போகும்படி செய்துவிடுகிறது ஆகையால் ஒத்தி வாங்கினவன் ஷை சொத்தை அனுபவிக்க அர்ஹனாகயிருக்கிறான் என்பதினால் யாதொரு பிரயோசனமுமில்லை. காரன்லிங் என்பவனுக்கும் பேகர் அலிகான் என்பவனுக்கும் நடந்து 1883-ம் ௵த்தில் இ-லா-ரி. 5, அல, 1-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசு விஷயமாய் சீமையிலுள்ள ப்ரிவி கௌன்ஸில் என்னும் நியாயஸ்பையார் கொடுத்திருக்கும் அபிப்பிராயங்களைப் பார்க்கவும். அந்தத் தீர்ப்பில் சொல்லியிருக்கப்பட்ட விஷயங்களை எல்லாம் மொத்தமாய் யோசிக்குங்கால் பிந்திய தீர்மானங்களால் யேர்ப்படும் விவரணங்கள் முன்னுக்கு வரமாட்டாது. அடியில் கண்ட தீர்மானங்களை எல்லாம் ஆதாரங்களாகச் சொல்லப்பட்டது. ராமஸாமி செட்டிக்கும், பொன்னப்படையாச்சிக்கும் நடந்த கேசு (1) நந்தன்லிங்குக்கும் ஜும்மானுக்கும் நடந்த கேசு (2) ராஜநாத்க்கும், நாராயன் தாஸ்க்கும் நடந்து 1912-ம் ௵த்தில் இ-லா-ரி. 34, அல, 610-ல் பிரசுரம் செய்யப்பட்ட கேஸ் (3) அம்முவுக்கும், ராமகிருஷ்ண சாஸ்திரிக்கும் நடந்து 1879-ம் ௵த்தில் இ-லா-ரி. 2 ம. 226-ல் பிரசுரிக்கப்பட்ட கேஸ் (4) பிரேஷ்வர் ஸமந்தா என்பவருக்கும் பிரிய சக்கிடேவிக்கும் நடந்து 1915-ம் ௵த்தில் 28 இ-கே., 917-ல் பிரசுரம் செய்யப்பட்ட கேஸ் (5) நண்ட்கொமார்டொபேய்க்கும் அஜோத்தியா ஸாஹுவுக்கும் நடந்து 1911-ம் ௵த்தில் 14. கல்-லா-ஜ, 292-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேஸ்; ப்ரண்ணுத்ராய்ச் சொட்ரிக்கும் ருக்கியாபீகத்துக்கும் நடந்து 1859-ம் ௵த்திய மூ-இ-அ 323-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேஸ்; நல்லமுத்துப்பிள்ளைக்கும் பெத்தா நாய்க்கனுக்கும் நடந்து 1900-ம் ௵த்தில் இ-லா-ரி. 23. ம. 37-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேஸ்; ஒத்தி வாங்கினவருடைய பாத்தியதையானது, ஒத்திக்கு வைத்தவருக்கு ஷை சொத்திலிருந்த சுதந்திரம், ஹக்கு பாத்தியதை பலன், இவைகளை ஏலம் எடுத்த காலத்தில் தான் உண்டாயிற்றென்றால், ஒத்தியை மீட்கும் பாத்தியதையானது காலாவதிக்கு உள்ளாய்விட்டபடியால் ஏலத்தின் மூலமாக ஏலமெடுத்தவருக்கு யாதொன்றும் கிடைக்கமாட்டாது. ஏலம் போடப்பட்ட சொத்தை வாங்கினவனுக்கு ஷை சொத்தில் ஒரு விதமான பாத்தியதையும் கிடைக்கிறதில்லை. இந்த அபிப்பிராயமானது ரோமன் லாவுக்கு ஒத்துமையாகயிருக்கிறது. ஒயிட் பீல்ட் என்பவரால் எழுதப்பட்ட சல்கௌஸ்கி ரோமன் லா 503-வது பக்கத்தைப்பார்க்க (Vide Salkowski's Roman Law by Whitefield, Page 503) 447 பக்கத்தையும் பார்க்கவும். இங்கிலாந்தில் 7 வில்லியம் 4-வது அத்தியாயம், 1 விக்டோரியா, 28-வது அத்தியாயம், ஆகிய விசேஷச் சட்டங்களினால் நிலம் யார் வசத்திலிருக்கிறதோ அவனுக்கு ஷை நில விஷயமாக எல்லாப் பாத்தியதைகளும் கிடைத்துவிடுகின்றன. பின்னால் சொல்லப்பட்ட சட்டத்தினால் காப்பாற்றப்பட்ட பாத்தியதை என்னவென்றால் நிலத்தில் பிரவேசிப்பதற்கும், நிலத்தை மீட்டுக்கொள்ளும் பொருட்டாக வியாச்சியம் செய்யவும் ஒத்தி வாங்கினவனுக்கு உள்ள பாத்தியதை எதுவோ அதுதான். டார்பியும் பொஸான்க்வெட் என்னும் புஸ்தகம் 470-ம் பக்கத்தைப் பார்க்க. (See Darby and Bosanquet, page 470) அமெரிக்கா தேசத்திலும் இதுதான் சட்டமென்று தெரியவருகிறது. மார்டினுக்கும் ஜாக்ஸனுக்கும் நடந்த கேசு 87 அமெரிக்கன் டைஜெஸ்டில் 489-வது பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேஸைப் பார்க்க.

நெ. 30.

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

1914-ம் ௵த்து ஸிவில் ரெவிஷன் பெடிஷன் நெ. 1076.

ஜட்ஜ்—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்ரீனிவாஸய்யங்கார்.

முருகேச முதலியும் பின்னும் இரண்டு பேர்களும் (2, 3, 5 வது அப்பீல் பிரதிவாதிகள்) மனுதார்கள்.

v.

ராமஸாமி செட்டி (மனுதார்) அப்பீல் எதிர் மனுதார்.

1908-ம் ௵த்து 8-வது ஆக்டாகிய ஸிவில் புரோஸீஜர் கோடு 34-வது ஆர்டர் 3, 8-வது ரூல்கள்.

ஒத்தித் துகையை செலுத்துவதற்கு வாயிதாவை நீடித்துக்கொடுக்க மிகவும் நல்ல காரணம் இருக்கவேண்டும்—ஒத்தித்தொகையை வாயிதாப்படி செலுத்தாத காரணத்தை யிட்டு ஒத்தியை மீட்டுக்கொள்ளும் பாத்தியதையை ஒத்தி வைத்தவன் இழந்து விட்டதாக டிக்ரி பிறப்பிவிக்கப்படாமலிருப்பதானது வாயிதாவை நீடித்துக் கொடுப்பதற்கு சரியான காரணமில்லை—1908-ம் வருஷத்திய ஸிவில் புரோஸீஜர் கோடு—நியாயத்தை யுத்தேசித்து அவசியமில்லாவிட்டால் அதிகாரமில்லாமல் செய்யப்பட்ட உத்திரவில்கூட பிரவேசித்து புனராலோசனை செய்யவேண்டியதில்லை.

லாபாயிண்ட் :—ஒரு சொத்தை ஒத்தி வைத்தவனாலாவது வாங்கினவனாலாவது ஒத்தித்தொகையை செலுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தின் பேரில் செய்யப்படும் டிக்ரித்தொகையை செலுத்துவதற்கு டிக்ரியில் குறிப்பிடப்பட்டிருக்கிற வாயிதாவுக்கு மேல்பட்டு வாயிதா கொடுப்பதற்கு மிகவும் சரியான முகாந்திரம் காட்டப்படவேண்டும். ஸிவில் புரோஸீஜர் கோடு 34-வது ஆர்டர் 3, 8-வது ரூல்களின் பிரகாரம் ஒரு கக்ஷிக்காரனுக்கு மேல்கண்ட வாயிதாவை நீடித்து பெற்றுக்கொள்ள பாத்தியதை யேற்பட்டுவிட மாட்டாது.

ஒத்தித்தொகையைக் கட்டும் பாத்தியதையை யிழந்துவிட்டதாக உறுதியான உத்திரவு பிறப்பிவிக்கபடவில்லை யென்ற ஒரே காரணத்தைக்கொண்டு வாயிதாவை நீடித்துக்கொடுக்கக்கூடாது.

தவறுதலாக வாயிதாவை நீடித்துக்கொடுத்த உத்திரவுகளில் ஐகோர்ட்டார் பிரவேசித்துப் பார்க்க கடமைபட்டவர்களல்ல.

இது சம்பந்தமான இங்கிலாந்தில் நடந்துவரும் அனுஷ்டானங்களையும் சொல்லப்பட்டிருக்கிறது.

கேசின் சுருக்கம் :—தர்மாபுரி டிஸ்டிரிக்ட் முன்ஸிப் G. R. சுப்பிரமணிய அய்யர் கோர்ட்டு 1911-ம் வருஷத்திய அசல் வியாஜ்ஜிய நெம்பர் 28-ல் 1914-ம் ௵ அசல் மனு நெம்பர் 563-ல் செய்யப்பட்ட உத்திரவை புனராலோசனை செய்யும்படி ஐக்கோர்டாரை பிரார்த்தித்து ஸிவில் புரொஸீஜர் கோடு 115-ம் பிரிவுப்படி கொண்டுவரப்பட்ட மனு.

இந்த கேசின் சங்கதிகள் தீர்ப்பின் மூலமாக வெளியாகின்றது.

லாயர்கள் :—மனுதார்கள் பக்கம் T. R. ராமச்சந்திரய்யர்.

எதிர் மனுதார்பக்கம் டாக்டர் S. ஸ்வாமிநாதன்.

தீர்ப்பு :—சிற்றொத்தி வாங்கினவனால் ஒத்தியை மீட்டுக்கொள்வதற்கு கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தின் விஷயமாக பிறப்பிவிக்கப்பட்ட டிக்ரியை ஏன் பிறப்பிவிக்கக்கூடாது என்பதற்கு போதுமான முகாந்திரத்தை ஒத்திவைத்தவன் காட்ட தவறியிருக்கும்பொழுது டிக்ரியில் குறிப்பிட்ட வாயிதாவை அதிக்கிரமித்து வாயிதாக் கொடுத்த தர்மாபுரி டிஸ்டிரிக்ட் முன்ஸிபினுடைய உத்திரவை புனராலோசனை செய்வதற்காக இந்த மனு செய்யப்பட்டிருக்கிறது. ஒத்தித்தொகையை குறிப்பிட்டகாலத்திற்குள் செலுத்தாமல் யிருந்ததற்கு வாதியால் பிராதில் சொல்லப்பட்ட காரணங்கள் போதாதென்றும் அதிருப்திகரமானவைகளென்றும் முன்ஸிபு நினைத்துங் கூட வாதி பிசகென்று தன்னால் ஆக்ஷேபிக்கப்படாத டிக்ரியில் கண்ட காலம் கடந்து போய் விட்டாலும் ஒத்தியை திருப்பும் பாத்தியதையை ரத்து செய்து பிறப்பிவிக்கப்பட்ட கடைசி டிக்ரி யில்லாதபடியினால் ஒத்தியைத் திருப்பும் பாத்தியதை வாதிக்கு இருக்கிறதென்று நினைத்து முனிஸீப் வாயிதா கொடுத்திருக்கிறார்.

ஒத்திக்கடன் துகையை செலுத்துவதற்கு விதிகள் 34-வது ஆர்டர் 3, 8 வது ரூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ரூல்களின்படி சரியான முகாந்தரம் காட்டப்பட்டால் தான் வாயிதாவை நீடித்துக் கொடுக்க கோர்டாருக்கு அதிகாரமுண்டு. இந்த விதியானது இங்கிலாந்தில் வழங்கிவரும் அனுஷ்டானத்துக்கு அனுசரணையாயிருக்கிறது. ஒத்திவாங்கினவர்கள் ஒத்தியை மீட்கும் பாத்தியதையை ரத்துசெய்யும்படிக்கு வியாச்சியம் கொண்டுவரப்பட்ட கேசுகளிலும் வாதிக்கு தொகையை செலுத்துவதற்கு வாயிதா கட்டாயமாய் கொடுத்துத்தான் தீரப்படுகிறதில்லை. ஒத்தியை மீட்கும் பாத்தியதையை ரத்து செய்த கடைசி உத்தரவு பிறப்பிவிக்கப்படாமலிருந்தாலும் ஒத்தித்தொகையை செலுத்துவதற்கு குறிப்பிடப்பட்டிருந்த காலத்திற்குப் பிற்பாடு ஒத்தியை பாத்தியதையின்பேரில் திருப்புவதற்கு ஒத்திவைத்தவன் அரகனல்ல. பால்கனருக்கும் போல்டனுக்கும் நடந்து 1835-ம் வருஷத்தில் 7 ஸிம் 319-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறதும் நன்னிக்கும் எட்வர்ட்ஸுக்கும் நடந்து 1827-ம் வருஷத்தில் 4 ரஸ்ஸல் 124-ல் பிரசுரிக்கப்பட்டிருப்பதுமான கேசுகளைப்பார்க்கவும். பிளாக்பர்னுக்கும் பார்போலாவுக்கும் நடந்து 1909-ம் வருஷத்தில் 2 சர்ச்சில் 437-ல் பிரசுரிக்கப்பட்ட கேசினாலும், தீர்ப்புகளைப் பற்றி ஸீட்டன் என்பவர் எழுதியிருக்கிற புஸ்தகத்தில் 1913-ம் பக்கத்தைப் பார்வை யிடுவதினாலும் ஒத்திகளைப்பற்றி பிஷர் என்பவர் யெழுதியிருக்கும் புஸ்தகத்தில் 1958-ம் பிரிவைப்பார்ப்பதினாலும் ஒத்திவைத்தவன் ஒத்தியை மீட்பதற்காக செய்யும் வியாஜ்ஜியங்களில் தற்செயலாய் நேர்ந்த சம்பவங்கள் அல்லது பிசகுகள், இவைகளுக்காய் இருந்தாலொழிய தொகை செலுத்துவதற்கு வாயிதா நீடித்துக் கொடுப்பதில்லை. நவோஸில்கிக்கும் வேக்பீல்டுக்கும் நடந்து 1811-ம் வருஷத்தில் 17 வெஸ்ஜா 417-ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதும் காலினுக்கும் ஜெப்பிரேக்கும் நடந்து 1896-ம் வருஷத்தில் 1 சர்ச்சில் 64-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்al Side) கேசுகளைப்பார்க்க. கீழ்க் கோர்ட்டுக்கு அப்பற்று அந்த

அதிகாரம் இல்லாமல் இருக்கும்பொழுது பணம் செலுத்துவதற்கு வாயிதாவை நீடித்துக் கொடுத்திருக்கிறபடியால் தனக்கு செய்ய அதிகாரமில்லாத உத்திரவைச்செய்ததாக நினைத்து அந்த உத்திரவை புனராலோசனை செய்வதில் பிரவேசித்து அந்த உத்திரவை ரத்து செய்வதற்கு இந்தக் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. ஆனால் நியாயத்தை உத்தேசித்து மேல்படி உத்திரவில் பிரவேசிக்கவேண்டியது அவசியமில்லை யென்று நினைக்கிறேன்.

ஒத்தியை மீட்கும் பாத்தியதையையும் சேர்த்து விலைக்கு வாங்கியிருக்கிற முதல் ஒத்தி வாங்கினவன்பேரில் சிற்றொத்தி வாங்கி யிருக்கிறவன் இந்த வியாஜ்ஜியம் கொண்டு வந்திருக்கிறான். முதல் ஒத்தியை உட்படுத்தி சொத்தை ஏலம் போடும்படிக்கு வியாச்சியம் கொண்டுவர சிற்றொத்திக்காரனுக்கு பாத்தியம் உண்டென்பது தீர்ந்த விஷயம். முல்லா விட்டலுக்கும் அச்சுதன் நாயருக்கும் நடந்து 1911ம் ஹூத்தில் ம-லா-ஜ. 218-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேஸைப்பார்க்க. ஆனால் இந்த வியாச்சியம் கொண்டுவரப்பட்ட காலத்தில் இந்த விஷயத்தைப்பற்றி கொஞ்சம் சந்தேகம் இருந்தது. முதலாவது ஒத்தியை மீட்பதற்காகவும், இரண்டு ஒத்திகளின் பேரிலும் வசூலாக வேண்டிய தொகைகளுக்காக ஒத்தி சொத்துகள் பூராவையும் ஏலம் போடும்படிக்கும் சிற்றொத்தி வாங்கினவன் இந்த வியாச்சியத்தைக் கொண்டு வந்ததாக தெரிகிறது. எப்படியாவது அவ்விதமாகத்தான் டிக்ரி செய்யப்பட்டது. முதலாவது ஒத்திக்காக வாதி செலுத்த வேண்டிய தொகை ரூ. 2000 வரையிருந்தது குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு ஒரு மாசத்துக்குள் செலுத்தி அந்தத் தொகையின்பேரில் நூற்றுக்கு 12 விதம் வட்டியும் செலுத்தி விட்டான். அவனுக்கு சேரவேண்டிய தொகை ரூ. 1161வரையிருந்தது. ஆகையால் ஒத்திச் சொத்தானது 1-வது ஒத்தித் தொகையைப்பார்க்கிலும், அதிக ஜாஸ்தித் தொகை பெறு மென்று நினைப்பது சரியான விஷயந்தான்- 1-வது ஒத்தி வாங்கினவனுக்கு கஷ்ட நஷ்டம் யாதொன்று மில்லை. இப்படிக்கிருக்க, இந்த உத்திரவில் நான் பிரவேசித்து அதை மாற்றுகிறதாயிருந்தால், சிற்றொத்திக்காரன் தனக்குச் சேரவேண்டிய தொகை பூராவையும் இழந்து விடுவான். ஆகையால் இந்த மனுவை செலவுடன் தள்ளுபடி செய்கிறேன்.

I. L. R. 39 Mad. 882 இ-லா-ரி. 39. ம 882

நெ. 31.

APPELLATE CRIMINAL.

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர்ரஹீம். மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்.

1915-ம் வருஷத்து கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 578. (1915-ம் வருஷத்து கிரிமினல் ரிவிஷன் பெடிஷன் நெ. 456).

ச்சண்டான் (எதிர் மனுதார்) மனுதார்.

v.

C. மாது (மனுதார்) எதிர் மனுதார்.

லாபாயின்ட் :—1898 ம் ஹூத்து 5-வது ஆக்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடு 488-வது பிரிவு "தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாத" என்பதின் அர்த்தம்—தன தாயாருடைய தவாஷி (குடும்பச் சொத்து) யிலிருந்து ஜீவனும்சம் பெற்றுக் கொள்ளும் குழந்தைக்கு தன் தகப்பனிடமிருந்து ஜீவனும்சம் கிடைக்க மாட்டாது.

தன்னுடைய தாயாரின் தவாஷியிலிருந்து ஜீவனும்சத்தைப் பெற்றுக்கொள்ள பாத்தியதையுள்ள குழந்தைக்கு கிரிமினல் புரொஸீஜர் கோடு 488-வது பிரிவின்படி அதன் தகப்பனுடமிருந்து ஜீவனும்சம் பெற்றுக் கொள்ளமுடியாது.

காரியாண்டான் போக்கருக்கும் காயத்பீரான் குட்டிக்கும் நடந்து (1896-ம் வருஷத்தில் இ-லா-ரி. 19 ம. 461 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற தீர்ப்பு அனுசரிக்கப் பட்டது.

பாரதி வலப்பில் மொய்தீன் ஸம்பந்தமான கேஸ் (1913)-ம் வருஷத்தில் ம. வீக்லி நோட்ஸ், 997-ல் பிரசுரிக்கப்பட்ட தீர்ப்பை, அனுஸரிக்க வில்லை.

488-வது பிரிவில் "தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ள முடியாத" என்ற வார்த்தைகளுக்கு தேஹ அசக்தி யென்று மாத்திரம் அர்த்தமல்ல, பொருள் ஸம்பந்தமான அசக்தியென்றும் அர்த்தம்.

கேசின் சுருக்கம் :—தலைச்சேரி ஆக்டிங் ஜாயிண்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு 1915-ம் வருஷத்து சில்லரை கேசு நெ. 52-ன் உத்தரவை புனராலோசனை செய்ய வேணுமென்று ஹைக்கோர்ட்டாரை பிரார்த்தித்து கிரிமினல் புரொஸீஜர் கோடு 435, 438-வது பிரிவுகளின்படி செய்யப்பட்ட மனு.

மனுதாரன் பெண்சாதியாகிய எதிர்மனுதார், மனுதார் தன்னுடைய மைனர் குழந்தைகளை காப்பாற்றாமல் அசட்டை செய்துவிட்டதாக ஜீவனும்சம்கேட்டு ஒரு மாஜிஸ்ட்ரேட்டிடம் மனுக்கொடுத்தாள். மேற்படி குழந்தைகள் அவைகளுடைய தாயின் தவாஷி (குடும்பச் சொத்து) யிலிருந்து காப்பாற்றப்பட்டு வருவதாக மாஜிஸ்ட்ரேட்டு அறிந்தும் எதிர் மனுதாரே தனது தவாஷியிலும் தார்வார்டி (குடும்பச் சொத்து) லும் கொஞ்சம் சொத்திருப்பதாக ஒப்புக்கொண்டிருந்தும் மனுதார் தன் குழந்தைகளை காப்பாற்றாமல் அசட்டை செய்துவிட்டானென்ற காரணத்தைக் கொண்டு மாஜிஸ்ட்ரேட்டு ஜீவனும்சம் கொடுக்கும்படி உத்தரவு செய்து விட்டார். ஆனது பற்றி இந்த புனராலோசனை மனுச் செய்யப்பட்டிருக்கிறது.

லாயர்கள்:—மனுதார் பக்கம் குன்ஹிராமன்.

எதிர்மனுதார் நேரிலாவது வக்கீல் மூலமாகவாவது ஆஜராகவில்லை.

மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர்ரஹீம் :—இந்த மனுவுக்காக கிரிமினல் புரொஸீஜர் கோடு 488-வது பிரிவின் அர்த்தத்தை நிர்த்தாரணம் செய்யவேண்டியதிருக்கிறது. மனுதாருடைய 4 குழந்தைகளுக்கும் அவைகளுடைய தாயின் தாவாஷியிலிருந்து ஜீவனும்சம் பெற்றுக்கொள்ள பாத்தியதை யிருப்பதாகவும் அப்படியே ஜீவனும்சம் பெற்று வருவதாகவும், ஆகையால் மனுதார் சட்டப்படி ஜீவனும்சம் கொடுக்க கட்டுப்பட்டவனல்லவென்றும், 488-வது பிரிவில் "தன்னை காப்பாற்றிக்கொள்ள சக்தியில்லாத" தன் பெண்சாதிக்குப் பிறந்த குழந்தைகளையாவது, அல்லது தன்வைப்பாட்டிக்குப் பிறந்த குழந்தைகளையாவது தான் (தகப்பன்) காப்பாற்றக்கடமைப்பட்டிருக்கிறான் என்று மனுதார் பக்கம் ஆஜரான கற்றறிந்த வக்கீல் வாதிக்கிறார். பாரதிவலாப்பி மொய்தீன் கேசில் "தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அசக்தியுள்ள" என்ற வார்த்தைகளுக்கு இந்தக் கோர்ட்டில் ஜஸ்டிஸ் ஸதாசிவ அய்யர் தன் ஜீவனும்சத்தை சம்பாதித்துக்கொள்வதற்கு குழந்தை தேக அசநிபாக யிருக்கவேண்டுமென்றும் தன் ஜீவனும்சத்தை தானே சம்பாதித்துக் கொள்ளும்படி போதுமான மட்டும் வளர்ந்திராவிட்டால் அந்தக் குழந்தையைக் காப்பாற்றக் கடமைப்பட்டவும், ஐவேஜ் வசியுமான தார்வார்டைச் சேர்ந்த குழந்தையாக யிருந்தாலுமே, கி பு. கோடு 488–வது பிரிவுப்படிக்குத் தகப்பனுக்குள்ள கடமை போய்விடமாட்டாது, என்று தீர்ப்புச் செய்திருப்பதையும் காண்பிக்கப்பட்டது. அந்தக் கற்றறிந்த ஜட்ஜுக்குரிய மரியாதையைச் செலுத்துவதோடு, "தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள சக்தியற்ற" என்ற வார்த்தைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த இடுக்கமாயுள்ள அர்த்தத்தை நான் ஒப்புக்கொள்ள அசக்தனாயிருக்கிறேன். அந்தப் பிரிவில் "சக்தி" என்று சொல்லியிருப்பது, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தன் சொந்த ஐவேஜுள்ள குழந்தைக்கும் சட்டப்படி மற்றொருவரால் காப்பாற்றப்பட வேண்டிய சுதந்திரத்தை யுடைத்தாய், இந்தக் கேசைப்போல அப்படியே காப்பாற்றி வரப்பட்ட குழந்தைகளுக்கும் தானே பாடுபட்டு சம்பாதித்துக்கொள்ளும் குழந்தைக்கும் ஒன்றுபோல உதவுகிறது. இது 488-வது பிரிவினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சுருக்கமான நடபடிக்கை. தன் குழந்தையைக் காப்பாற்றுவதில் தகப்பனுக்கு ஸிவில் கேசு சம்மந்தமாக யிருக்கும் பொறுப்பு இதற்குக் கிடையாது. ஐவேசுள்ள குழந்தைக்கும் தகப்பனிடமிருந்து ஜீவனும்சம் வசூல் செய்யும் பாத்தியதையை, 488-வது பிரிவு கொடுப்பது சட்டத்தினுடைய கருத்தென்று எனக்குத் தோன்றப்படவில்லை. இந்த அபிப்பிராயமானது காரியாண்டான் பொக்காருக்கும், காயத்பீரான் குட்டிக்கும் நடந்து (1896)-ல் இ. லா. ரி. 19 ம. 461-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற தீர்ப்பின் அபிப்பிராயத்துக்குக் கொஞ்சம் ஒத்துமையாயிருக்கிறது. அந்தக் கேசைத் தீர்மானித்த கற்றறிந்த ஜட்ஜுகள் தாயின் தார்வார்டிலிருந்து காப்பாற்றப்பட்டு வருகிற குழந்தைகள் கி. பு. கோடு 488-வது பிரிவுப்படி தங்கள் தாயிடமிருந்து ஜீவனும்சத்தைப் பெற்றுக் கொள்ள அர்ஹர்களல்ல வென்று அபிப்பிராயம் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்த அபிப்பிராயத்தின் மூலமாக குழந்தைகளைக் காப்பாற்றும்படி மனுதாருக்கு ஜாயிண்டு மாஜிஸ்ட்ரேட்டு பிறப்பிவித்த உத்தரவானது தப்பிதமாயுள்ளதென்று தீர்மானித்து அதை ரத்துச் செய்திருக்கிறது.

ஜஸ்டிஸ் எய்லிங் :—தன் தாயின் தார்வாடிலிருந்து ஜீவனும்சத்தை சட்டப்படி அடைய குழந்தைகளுக்கு யிருக்கும் பாத்தியதையானது தானே நேரில் அடைய பாத்தியதையுள்ள சொத்துக்கு சமானமானது. இவைகள் இரண்டையும் 488-வது பிரிவின் கருத்துப்படி "தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள அசக்தியுள்ளது" என்று சொல்ல முடியாது.

I. L. R. 39 Mad. 957. இ-லா-ரி, 39 ம. 957

நெ. 32.

ஜட்ஜிகள்.— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர். மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

அசல் விசாரணை சைட் (Original Side)

அப்பீல் நெ. 102 of 1913.

C. V. வேணுகோபால முதலியார் (இரண்டாவது பிரதிவாதி) அப்பீல் வாதி.

v.

C. வெங்கட சுப்பய்ய செட்டி வகையரா (வாதி 13, 14, பிரதிவாதிகள்)—ரெஸ்பான்டென்டுகள்.

லாபாயின்ட் :—சிவில் புரோஸீஜர் கோடு (Act v. of 1908) 21-வது ஆர்டர் 68-வது ரூலின் கீழ் கொண்டுவரப்பட்ட தாவாவிற்கு கால நிர்ணய சட்டத்தின் (Limitation Act IX of 1908) 11-வது ஆர்ட்டிகல் சம்மந்தப்படுமே யல்லாமல் 13-வது ஆர்ட்டிகல் சம்மந்தப்படாதென்பது.

வியாஜ்ஜிய சங்கிரஹம் :—வாதி மதராஸ் ஹைகோர்ட் அசல் விசாரணை ஸைடில் (Original Side) முதல் பிரதிவாதியின் பேரில் ஒரு டிக்ரி பெற்று அந்த

டிக்ரியை நிறைவேற்றுதலில் சில சொத்துகளை முதல் வாதியின் சொந்தமான சொத்துக்களென்று ஜப்தி செய்தார். இரண்டாவது பிரதிவாதி அந்த சொத்துக்கள் முதல் பிரதிவாதியின் சொந்தமான சொத்துகளல்லவென்றும் அவைகள் தன்னுடைய (இரண்டாவது பிரதிவாதியினுடைய) சொத்துகளென்றும் கண்டு ஜப்தி செய்வதற்கு அவைகள் பந்தப்பட்டவைகளல்லவென்று ஆட்சேபித்துக் பாத்திய மனு (Claim petition) தாக்கல் செய்தார். ஹைகோர்ட் அசல் விசாரணை ஸைடில் மேற்கண்ட மனுவை ஒரு ஜட்ஜ் விசாரணை செய்து மனுதாரராகிய இரண்டாவது பிரதிவாதிக்கு அனுகூலமாய் உத்தரவு செய்து பாத்திய (Claim) மனுவை பைசல் செய்தார். டிக்கிரிதாரராகிய வாதி ஷை உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டில் லெட்டெர்ஸ் பேடென்ட் (Letters Patent) சட்டத்தின் கீழ் அப்பீல் செய்தார். அந்த (Claim) பாத்திய மனுவின்பேரில் செய்யப்பட்ட பிரதம உத்தரவே சரியென்று அப்பீலில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது அதன்பேரில் வாதி சிவில் புரொஸீஜர் கோடு (Act V of 1908) 21-வது ஆர்டர் 63-வது ரூலின் கீழ் ஷை சொத்துக்களை ஜப்தி செய்வதற்கு தனக்கு ஹக்குண்டென்று தீர்மானம் செய்யும்படி பாத்திய (Claim) மனுவின் பேரில் செய்யப்பட்ட பிரதம உத்தரவுக்குப் பின் ஒரு வருஷ காலத்திற்கு மேலும் அப்பீலில் செய்யப்பட்ட உத்தரவிற்குப்பின் ஒரு வருஷத்திற்குள்ளாகவும் தாவா செய்தார்.

இப்படிப்பட்ட தாவாவிற்கு கால நிர்ணய சட்டத்தின் (Limitation Act IX of 1908) 11-வது ஆர்ட்டிகல் சம்மந்தப்பட்டதென்றும் 13-வது ஆர்ட்டிகல் சம்மந்தப்பட்டதல்லவென்றும் கண்டு அப்பீல் உத்தரவு தேதி முதல் தாவாவிற்கு காலாவதிதோஷம் நேரிடவில்லையென்றும், பாத்திய மனு(Claim petition) வின் பேரில் ஹைகோர்ட்டு ஜட்ஜுகளில் ஒருவர் அசல் விசாரணை ஸைடில் செய்த உத்தரவின்பேரில் லெட்டெர்ஸ் பேடென்ட் (Letters Patent) சட்டத்தின் கீழ் அப்பீல் செய்வதற்கு நியாயமுண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மதராஸ் ஹைக்கோர்ட்டு அசல் சிவில் விசாரணை ஸைடில் C. S. No. 14 of 1912-ல் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல் துரை அவர்கள் செய்த உத்தரவின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

கேஸின் முக்கியமான விவரங்களை தீர்மானத்தில் காணலாம்.

லாயர்கள் :—Mr. V. V. சீனிவாசய்யங்கார்...அப்பீல் வாதியின் வக்கீல்.

Mr. C. வெங்கடசுப்பராமய்ய....ரெஸ்பான்டென்டின் வக்கீல்.

ஹைகோர்ட்டார் தீர்மானம் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர்.

இரண்டாவது பிரதிவாதி இந்த அப்பீலில் வாதி. வாதி ஹைகோர்ட் அசல் விசாரணை ஸைடில் 1905-௵த்திய அசல் நெம்பர் 13-ல் முதல் பிரதிவாதியின் பேரில் பெற்ற டிக்ரியை நிறைவேற்றுதலில் தாவா சொத்துக்களை ஜப்தி செய்வதற்கு தனக்கு ஹக்குண்டென்று தீர்மானம் செய்யும்படி ஹைகோர்ட் அசல் விசாரணை ஸைடில் அவரால் இந்த தாவா செய்யப்பட்டது.

தாவா சொத்துகள் வாதியினால் நிறைவேற்றுதலில் ஜப்தி செய்யப்பட்டபொழுது இரண்டாவது பிரதிவாதி அவைகள் டிக்ரி கடன்தாரராகிய முதல் பிரதிவாதிக்குச் சொந்தமான சொத்துக்களல்லவென்றும் அவைகள் (அந்த சொத்துக்கள்) அவருடைய (இரண்டாவது பிரதிவாதியினுடைய) பெண்சாதியாகிய மூன்றும் பிரதிவாதிக்குச் சொந்தமான சொத்துக்களென்றும்: அந்த சொத்துக்களை மூன்றும் பிரதிவாதி இன்னொருவரிடத்தில் கொதுவை வைத்ததாகவும் அவர் ஷை கொதுவை ஹக்கை இரண்டாம் பிரதிவாதிக்கு மாற்றி விட்டதாகவும் (Transfer) சொல்லி தாவா சொத்துகளில் தனக்கு (இரண்டாம் பிரதிவாதிக்கு) ஹக்குண்டென்றும் ஆட்சேபித்து பாத்திய (Claim petition) மனு தாக்கல் செய்தார். அவருடைய (இரண்டாவது பிரதிவாதியினுடையப்) பாத்திய மனு(Claim petition) ஹைகோர்ட் அசல் விசாரணை ஸைடில் ஒரு ஜட்ஜியினால் 1909 வது ௵ ஆகஸ்டு௴ மனுதாரராகிய இரண்டாவது பிரதிவாதிக்கு அனுகூலமாய் பைசல் செய்யப்பட்டது. டிக்ரிதாரராகிய வாதி அந்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்தார்.

ஷை உத்தரவு இந்த கோர்ட்டு டிவிஷன் பெஞ்ச் ஜட்ஜிகளினால் 1910-ம் ௵ டிசம்பர்௴ 21௳ ஊர்ஜிதம் செய்யப்பட்டது. அதன்பேரில் வாதி ஒரு ஜட்ஜியினால் செய்யப்பட்ட உத்தரவுக்குப் பின் ஒரு வருஷ காலத்திற்கு மேலும் அப்பீல் கோர்ட்டாருடைய உத்தரவிற்குப்பின் ஒரு வருஷத்திற்குள்ளாகவும் 1911-ம் ௵ டிசம்பர்௴ 16௳ இந்த தாவா கொண்டுவந்தார்.

கால நிர்ணய சட்டத்தின் (Limitation Act) இரண்டாவது ஷெடியூல் 11-வது ஆர்ட்டிகலின் கீழ் தாவாவிற்கு காலாவதி தோஷம் வந்துவிட்டதென்று இரண்டாம் பிரதிவாதி பிரதமத்தில் ஆட்சேபித்தார். அவருடைய ஆட்சேபணையின் வாதங்களாவன :—

(a) பாத்திய மனு (Claim petition) வின் பேரில் செய்யப்பட்ட 1909-ம் ௵ ஆகஸ்டு மாதத்திய உத்திரவின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீலை ஷை ஆகஸ்டு மாதத்திய உத்திரவின்பேரில் அப்பீல் செய்ய நியாயம் கிடையாதென்று கண்டு தள்ளுபடி செய்து டிவிஷன் பெஞ்சார் செய்த 1910-ம் ௵ டிசம்பர் மாதத்திய உத்தரவு அதிகார வறம்பை கடந்து செய்யப்பட்ட உத்தரவென்றும்.

(b) அப்படி அப்பீல் செய்வதற்கு நியாயமிருந்தாலும் கால நிர்ணய சட்டத்தின் (Limitation Act) இரண்டாவது ஷெடியூல் 11-வது ஆர்ட்டிகலின் மூன்றுவது கலத்தில் கண்டிருக்கும் ஒரு வருஷ காலம் பாத்திய மனுவை (Claim petition) அனுக்கூலமாய் பைசல் செய்த பிரதம உத்தரவாகிய 1909-௵ ஆகஸ்டுமாதத்திலிருந்து ஆரம்பித்ததே யல்லாமல் அப்பீல் கோர்ட்டார் செய்த உத்தரவாகிய 1910-ம் ௵ டிசம்பர் மாதத்திலிருந்து தொடங்கினதல்லவென்றும்.

(b–1) அப்பீல் கோர்ட்டார் பிரதம உத்தரவின் விஷயமாய் யாதொன்றும் செய்யவில்லை யாகையால் ஆதியில் செய்யப்பட்ட பிரதம உத்தரவு ரத்தாய் விட்டதாக தீர்மானிக்கப்படாதென்றும்.

(b–2) அப்பீல் கோர்ட்டாருடைய உத்தரவு பிரதம உத்தரவை ரத்து செய்து விட்டதாக எண்ணினாலும் சட்ட நிரூபண சபையார் 13-வது ஆர்ட்டிகலில் செய்திருக்கும் வண்ணமாகவும் 182-வது ஆர்டிகல் 2-வது உட்பிரிவில் சொல்லி யிருக்கிறபடியாகவும் கால நிர்ணயம் "கடைசி தீர்மானம் அல்லது உத்தரவு" செய்யப்பட்ட தேதியிலிருந்து தான் தொடங்க வேண்டியதென்பதாய் வெளிப்படையாய்ச் சொல்லவில்லை யாகையால் 11-வது ஆர்டிகல் மூன்றுவது கலத்தில் செப்பியிருக்கும் உத்தரவு பிரதம உத்தரவென்று தான் அர்த்தமாகுமென்றும் வாதிக்கப்பட்டது.

பிரதமத்தில் வாதிக்கப்பட்ட காலாவதி தோஷத்தைப்பற்றி மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல் என்பவர் இதன் அடியிற் கண்டிருக்கும் காரணங்களைக் கொண்டு இரண்டாவது பிரதிவாதிக்கு விரோதமாக தீர்மானித்தார்.

(1) சபாபதி செட்டி v. நாராயணசாமி செட்டி (1902) இ-லா-ரி. 25 ம 555-ல் செய்திருக்கப்பட்ட தீர்மானத்தை ஆதாரமாகக் கொண்டு பாத்திய மனு (Claim petition) வில் செய்யப்பட்ட உத்தரவின் பேரில் கொண்டுவந்த அப்பீலைத் தீர்மானித்து பைசல் செய்த டிவிஷன் பெஞ்ச் அப்பீல் கோர்ட்டாருக்கு அப்படிப்பட்ட அப்பீலை தாக்கல் செய்துக்கொண்டு தீர்மானம் சொல்வதற்கு அதிகார வரம்புண்டென்னும் காரணத்தினாலும்.

(2) தாவா சொத்திற்கு ஆதியில் சுதந்தரவாளியாயிருந்தவர் வாதிக்கு தாவா நிலத்தில் யாதொரு சுதந்தரமும் கிடையாதென்று பாத்திய மனுவில் (Claim petition) மறுதளித்துச் சொல்லிய சுதந்தரம் தனக்குண்டென்று பிரஸ்தாப தாவாவில் தீர்மானிக்கும்படி கொண்டுவரப்பட்ட தாவா அல்லவென்றும் ஆனால் அப்பீல் கோர்ட்டார் லெட்டெர்ஸ் பேடென்ட் அப்பீலில் செய்த உத்தரவை ரத்து செய்யும்படிக்கு கொண்டுவரப்பட்ட தாவா என்னும் காரணத்தினாலும் கால நிர்ணய சட்டத்தின் 13–வது ஆர்ட்டிகல் தான் பிரஸ்தாப தாவாவிற்குச் சம்மந்தப்பட்டதென்று தீர்மானித்தார் பிரஸ்தாப தாவாவிற்கு 11-வது ஆர்ட்டிகல் சம்மந்தப்பட்டதல்லவென்றும் 13–வது ஆர்ட்டிகல் தான் சம்மந்தப்படுமென்றும் கற்றுணர்ந்த ஜட்ஜ் கொண்ட அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ள நியாயமில்லை யென்று அதிவிநயத்துடன் நான் கூறுகிறேன். பாத்திய மனு கேஸில் செய்யப்பட்ட உத்தரவின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீலின் நடவடிக்கைகளில் செய்யப்பட்ட உத்தரவு பாத்திய மனுவினால் தொடங்கிய நடவடிக்கைகளின் தொடர்ச்சியே யாகையால் அப்பீல் கோர்ட்டாருடைய உத்தரவும் க்ளெயிம் மனுவில் செய்யப்பட்ட உத்தரவென்பதாகத்தான் சொல்ல வேண்டும். பாத்திய மனு கேஸில் செய்யப்பட்ட உத்தரவு சரியான உத்தரவல்லவென்று வாதித்து தாவா கொண்டுவருவதற்காக சட்ட நிரூபண சபையார் பிரத்தியேகமாய் 11-வது ஆர்ட்டிகல் 1-வது உட்பிரிவில் நிபந்தனை செய்திருப்பதால் 13-வது ஆர்ட்டிகல் தான் பிரஸ்தாப தாவாவிற்குச் சம்மந்தப்பட்டதென்று சொல்ல நியாயமில்லை. இவ்விதமாய் கொண்டுவரப்பட்ட தாவா பாத்திய மனுவின் (Claim petition) பேரில் செய்யப்பட்ட உத்தரவை புனர் விசாரணை செய்யும்படிக்கு கொண்டுவரப்பட்ட தாவா என்பதாய் பாவிக்க வேண்டுமென்றும் சிவில் புரோஸிஜர் கோடு 283 பிரிவின் கீழ் செய்யப்பட்ட வியாஜ்ஜியத்தை கிரமப்படி கொண்டுவரப்பட்ட அசல் தாவாவாக பாவிப்பதற்கு நியாயமில்லையென்றும் மந்திராலோசனை சபையி (Pirvy Council) லுள்ள பிரபுக்கள் தீர்மானித்திருக்கிறார்கள். புல்குமாரி v. கன்ஷியாம் மிஸ்ரா (1908) இ-லா-ரி. 35 கல் 202. (P. C.) ; கிருஷ்ணப்ப செட்டி v அப்துல் காதர் சாயபு (1914) 26 ம.லா.ஜ. 449, 456 பார்க்கவும். பிறகு மேலே (a) (b) குறிப்பிட்ட வாதங்கள் தான் யோசிக்க வேண்டியதாயிருக்கிறது. மேலே கண்டிருக்கும் வாதங்களில் (a) குறிப்பிட்ட வாதத்திற்கு ஆதாரமாய் சபாபதி செட்டி v. நாராயணசாமி செட்டி (1902) இ.லா.ரி 25-ம 555-ல் சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னால்ட் ஒயிட் என்பவரும், மிஸ்டர் ஜஸ்டிஸ் பாஷ்யம் ஐயங்காரும் ஹைகோர்ட் அசல் விசாரணை ஸைடில் பாத்திய மனுவில் செய்யப்பட்ட ஒரு ஜட்ஜியினுடைய உத்தரவுகளின் பேரில் லெட்டெர்ஸ் பேடென்ட் சட்டத்தின் கீழ் அப்பீல் செய்ய நியாய முண்டென்று தீர்மானித்திருக்கிறார்களென்பதற்கு ஐயமே கிடையாது. ஆயினும் அந்த கேஸில் அப்பீல் கொண்டுவர நியாயம் கிடையாதென்று ரெஸ்பான்டென்டினால் பிரதமத்தில் ஆட்சேபிக்கப்பட்ட வாதம் சட்டப்படி செலாவணியுள்ளதல்லவென்று தள்ளிவிடப்பட்டது. அப்படிப்பட்ட வாதத்திற்கு ஆதாரமாய் சிவில் புரோஸீஜர் கோட் 590-வது பிரிவின்படி அப்பீல் செய்ய நியாயமில்லை யென்பதாய் நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறதென்று எடுத்துக் கூறப்பட்டது. மேலும் சிவில் புரோஸீஜர் கோடு 283-வது

பிரிவின்படி பாத்திய மனுவின்பேரில் ஒரு ஜட்ஜியினால் செய்யப்பட்ட உத்தரவு கடைசியாய் தீர்மானித்து செய்யப்பட்ட பரிஷ்காரமான உத்தரவென்பதாகவும் ரெஸ்பான்டென்டின் வக்கீல் அந்த கேசில் எடுத்துக் காண்பிக்கவுமில்லை. அந்த கேசில் ரெஸ்பான்டென்டின் வக்கீல்களின் சிரேஷ்டமான அந்தஸ்தையும், அந்த கேசை தீர்மானித்த ஜட்ஜுகளின் மேன்பாடான கௌரவத்தையும் நிதானிக்குமளவில் சிவில் புரோஸீஜர் கோட் 591-வது பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஆட்சேபனையை விட சி.பு.கோ. 283 (தற்காலத்திலுள்ள 21-வது ஆர்டர் 63-வது ரூல்) வது பிரிவின் கீழ் செய்யப்பட்ட வாதம் மிக்க வலிவானதென்று சொல்லுமிடத்து மிக்க வலிவான் வாதத்தை மாத்திரம் அவர்கள் பிரத்தியேகமாய் எடுத்துக் காண்பித்து அந்த வாதத்தின் விஷயமாய் தனியாய் யோசித்து தீர்மானித்திருக்க மாட்டார்களென்று தீர்மானிப்பதற்கு எனக்கு தைரியமில்லை "கடசியாய் தீர்மானித்து செய்யப்பட்ட பரிஷ்காரமான—Conclusive" உத்தரவென்பதற்கு மறுபடியும் அந்த உத்தரவு அப்பீலிலாவது, புனர் விசாரணையிலாவது மறு விசாரணையிலாவது றத்து செய்யப்படத்தக்கதல்லவென்பதைவிட விசேஷமான அர்த்தமாகாதென்பதை யோசிக்குமளவில் அப்பீல் செய்ய நியாய முண்டா இல்லையா வென்னும் வாதத்திற்கு 283-வது பிரிவின் கீழ் செய்யப்பட்டிருக்கும் நிபந்தனை சி.பு.கோ. 591-வது பிரிவின் கீழ் செய்யப்படும் வாதத்தைவிட மிக்க வலிவானதென்று சொல்ல நியாயமில்லை. அப்படிப்பட்ட உத்தரவின்பேரில் புனர் விசாரணை (Review) செய்யும்படி மனு கொடுக்கவும் அப்படிப்பட்ட மனுவை தாக்கல் செய்துக்கொண்டு விசாரணை செய்து தீர்மானிப்பதற்கும் நியாயமுண்டா வென்பதைப்பற்றி காக்ரேன் v. ஹீராலால் ஸீல் (1867) 7 வீ. ரி. 79 பைருப் செண்டர் ஸர்மா சௌத்ரி v. மாதுப்ராம் ஸர்மா (1873) 20 வீ. ரி. 84 தீர்மானங்களைப் பார்க்கவும். மறு விசாரணை Revision மனுவின் விஷயமாய் இட்டியாச்சென் v. வேலப்பன் (1885) இ.லா.ரி. 8 ம 484 (F. B) பார்க்கவும் லெட்டெர்ஸ் பேடென்ட் சட்டத்தின் 15-வது பிரிவின் கீழ் அப்பீல் செய்ய நியாய முண்டென்பதாய்ச் சொல்லப்பட்டிருக்கும் சுதந்தரம் சிவில் புரொஸீஜர் கோடு 591-வது பிரிவினால் றத்தாய் விட்டதென்று சொல்வதற்கு நியாமில்லை யென்பதற்கும் ஆதாரமாய் சபாபதி செட்டி v. நாராயணசாமி செட்டி (1902) இ. லா.ரி. 25 ம 558-ல் கண்டிருக்கும் தீர்மானத்திற்கு ஆதாரமாய் எடுத்துக் கூறியிருக்கும் முகாந்தரம் சி. பு. கோ. 283-வது பிரிவின் கீழ் செய்யப்பட்ட வாதமும் றத்தாய் விட்டதாக பாவிக்கப்படலாகாதென்று சொல்வதற்கு ஒரு ஏதுவாயிருக்கிறது. அப்படிப்பட்ட வாதத்திற்கு ஆதாரமாய்க் கூறப்பட்டிருக்கும் முகாந்தரத்தை யோசிக்குமளவில் சட்ட நிருபண சபையார் பிரத்தியேகமாய் ஒரு விஷயத்தைப் பற்றி முன்னமேயே தீர்க்க யோசித்து நிபந்தனை செய்திருக்கையில் அப்படிப்பட்ட நிபந்தனை அதற்குப் பின் செய்யப்பட்ட சாதாரண சட்டதிட்டத்தினால் மாற்றிவிடப் பட்டதென்று எண்ணுவதற்கு நியாயமில்லை. ஏனென்றால் அவ்விதமாய் மாற்றிவிடப்பட்டதென்று வெளிப்படையாய் நிபந்தனையில் சொல்லப்பட்டில்லை யென்பதே அதற்குத் தகுந்த காரணமென்பதாக விசிதமாய்ப் புலப்படுகின்றது. அதுவுமன்றி அப்பீல்களின் விஷயமாய் சிவில் புரோஸீஜர் கோடில் செய்யப்பட்டிருக்கும் நிபந்தனைகள் ஒரு கோர்ட்டிலிருந்து மேலான இதர கோர்ட்டுகளுக்குச் செய்யப்படும் அப்பீல்களின் விஷயமாய் செய்யப்பட்டிருக்கிறதே யல்லாமல் ஒரே கோர்ட்டிலுள்ள ஒரு ஜட்ஜ் செய்த உத்தரவு அல்லது தீர்மானத்தின் பேரில் அதே கோர்ட்டிலுள்ள இதர ஜட்ஜுகளுக்குச் செய்யப்படும் அப்பீல்களின் விஷயமாய் செய்யப்பட்ட நிபந்தனைகளல்ல. அப்படிப்பட்ட அப்பீல்களை லெட்டர்ஸ் பேடென்ட் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்துக்கொண்டு பைசல் செய்வதே அநேக காலமாய் தொன்று தொட்டு வழங்கிவரும் பழக்கமாயிருக்கின்றது. இவ்விதமாய் நீடித்த காலம் வழங்கி வரும் பழக்கத்தை ஆதாரமாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டிருக்கும் பழமையான தீர்மானங்களில் சொல்லப்பட்டிருக்கும் முகாந்தரங்கள் சரியானவைகளா அல்லவா யென்று மறுபடியும் இப்பொழுது மிக்க கவனத்துடன் யோசித்துப் பரிட்சிக்க வேண்டுமென்பது அவசிய மென்பதாக எனக்குத் தோன்ற வில்லை. இதற்காதாரமாய் ரவிவீரராகவலு v வெங்கட நரசிம்ஹ நாயுடு பஹதுர் (1914) இ.லா.ரி. 37 ம. 443 (P. C.) பார்க்கவும். ஆகையால் சபாபதி செட்டி v. நாராயணசாமிசெட்டி (1902) இ.லா.ரி. 25 ம 555-ல் செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தை ஆதாரமாகக் கொண்டு பாத்திய மனு (Claim petition) வில் செய்யப்பட்ட உத்தரவின்பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீலில் டிவிஷன் பெஞ்சாரால் செய்யப்பட்டுள்ள தீர்மானம் அதிகாரவரம்புடன் செய்யப்பட்டதென்றுதான் நான் தீர்மானிக்கிறேன்.

தாவாவிற்கு காலாவதி தோஷ முண்டா இல்லையா யென்பதை யோசிக்குமளவில் கிருஷ்ணமாசாரியார் v. மங்கம்மாள் (1903) இ.லா.ரி. 26 ம. 91, 96 (F. B.) கேசில் நியாய விசாரணை சம்பந்தமாய் யோசிக்குமளவில் ஒரு வியாஜ்ஜியம் இரண்டு கோர்ட்டுகளில் அதாவது முதல் ஒரு கோர்ட்டிலும் பிறகு அப்பீலுக்காக மாத்திரம் அப்பீல் கோர்ட்டிலும் வழக்காடப்பட்டதென்னும் காரணத்தினால் அந்த வியாஜ்ஜியம் இரண்டு வியாஜ்ஜியங்களாக பிறிந்து மாறிவிட்டதென்று எண்ணுவதற்கு நியாயமில்லை. அந்த வியாஜ்ஜியத்தில் ஒரே டிக்கிரி தான், அதாவது அப்பீல் கோர்ட்டு டிக்ரி ஒன்றுதானிருக்கக்கூடுமென்று மிஸ்டர் ஜஸ்டிஸ் பாஷியம் ஐயங்கார் சொல்லியிருக்கிறார். அந்த ஒரு வியாஜ்ஜியத்திலேயே

இரண்டு அதாவது முதல் கோர்ட்டு டிக்ரி ஒன்றும் அப்பீல் கோர்ட்டாருடைய டிக்ரி ஒன்றுமாக இரண்டு கடசி முடிவான டிக்ரிகளாக இருப்பதற்கு நியாயமில்லை.

அப்பீல் கோர்ட்டார் ஒரு வியாஜ்ஜியத்தில் டிக்ரி செய்கையில் சொற்ப பாகத்திற்கு மாத்திரம் டிக்ரி செய்தாலும் அந்த வியாஜ்ஜிய முழுவதற்கும் டிக்ரி செய்ததாகவேதான் எண்ணப்படும். அப்பீல் கோர்ட்டாருடைய டிக்ரி ஒன்றுதான் அந்த வியாஜ்ஜியத்தில் ஏற்பட்டிருக்கும் டிக்ரி யென்று சொல்ல வேண்டும். ஹைகோர்ட்டாரால் அப்பீலில் ஒரு டிக்ரி காயமாய் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு சப் கோர்ட்டார் அந்த டிக்ரியை சிவில் புரொஸீஜர் கோட் 206—வது பிரிவின் கீழ் திருத்துவதற்கு அதிகாரவரம்பு கிடையாதென்று மந்திராலோசனை சபையி (Privy Council) லுள்ள பிரபுக்கள் பிரிஜ் நாராயண் v. டேஜபால் பிக்ராம் பஹதூர் (1910) இ.லா.ரி. 32 அ 290, 293, 294 (P. C.)ல் தீர்மானித்திருக்கிறார்கள். முதல் கோர்ட்டாருடைய தீர்மானம் சில விஷயங்களுக்காக மாத்திரம் ஊர்ஜிதத்திலிருப்பதாய் சட்டத்தில் சொல்லியிருக்கும் சந்தர்ப்பங்கள் தவிர சாதாரணமாய் மற்றெல்லா விஷயங்களுக்கும் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்மானம் முதல் கோர்ட்டாருடைய தீர்மானத்தை காயமாய் ஊர்ஜிதப்படுத்துவதாயிருந்தாலும் அது (அப்பீல் கோர்ட்டு தீர்மானம்) கீழ் கோர்ட்டாருடைய தீர்மானத்தை றத்துசெய்து விடுகின்றது. (ஆஸ்மா பீபி v. ஆமத்ஹுஸேன் (1908) இ லா.ரி. 30 அ 290, 293, 294 பார்க்கவும்.

சிவில் புரொஸீஜர் கோட் 283-வது பிரிவின் (21-வது ஆர்டர் 63-வது ரூல்) கீழ் செய்யப்படும் ஒரு வியாஜ்ஜியத்தின் தாவா (Plaint) ஒரு பாத்திய மனுவின்பேரில் செய்யப்பட்ட உத்திரவை ரத்து செய்வதற்காக கொண்டுவரப்படும் தாவா வென்று அந்த பிரிவில் சொல்லியிராவிடினும் அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் (பாத்திய மனுவின் பேரில செய்யப்பட்ட உத்தரவை) சட்டத்தின் கருத்திற்கிணங்க றத்து செய்வதற்காக கொண்டுவரப்பட்ட தாவாவென்றுதான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் சுதந்தரமுண்டென்று தீர்மானிப்பதற்காக கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியமென்று சொல்வது சாதாரணமாய் வாசாவாய் வழங்கிவரும் பேதமேயல்லாமல் வேறல்ல [புல்குமாரி v. கன்ஷியாம் மிஸ்ரா (1908) இ.லா.ரி. 35 கல் 202 (P. C.); கிருஷ்ணப்ப செட்டி v. அப்துல்காதர் சாயபு (1914) 26 ம. லா.ஜ. 449, 456 பார்க்கவும்.] பிரஸ்தாப தாவா பாத்திய மனு (Claim petition) வின் பேரில் ஒரு ஜட்ஜியினால் செய்யப்பட்ட உத்தரவை றத்து செய்வதற்காக மாத்திரம் கொண்டுவரப்பட்ட தாவாவல்லவென்று இப்பொழுது தெளிவாய் ஏற்படுகிறது. அதே பாத்திய மனுவின் (Claim petition) பெரில் செய்யப்பட்ட டிவிஷன் பெஞ்சாருடைய உத்தரவில் முன் செப்பிய ஒரு ஜட்ஜியினுடைய உத்தரவும் அடங்கியிருக்கிறதென்னும் காரணத்தினால் பிரஸ்தாப தாவா டிவிஷன் பெஞ்சாருடைய தீர்மானத்தையும் றத்து செய்வதற்காக கொண்டுவரப்பட்ட தாவாவென்று தான் சொல்ல வேண்டுமாகையால் கால நிர்ணய சட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கும் ஒரு வருஷ காலத்தை அந்த பாத்திய மனுவில் தற்காலத்திலும் ஊர்ஜிதத்திலிருக்கும் பின்னிட்ட உத்தரவின் தேதி முதற்கொண்டு தான் கணக்கிடவேண்டியது.

ஆயினும் யாதேனும் ஒரு வியாஜ்ஜியத்தில் அப்பீலாயிருந்தால் அந்த அப்பீல் கோர்ட்டாருடைய உத்தரவின் தேதி முதற்கொண்டு தான் கால நிர்ணயத்தை கணக்கிடவேண்டுமென்று கால நிர்ணய சட்டத்துள்ள வேறே இரண்டு மூன்று ஆர்ட்டிகல்களில் பிரத்தியேகமாய் நிபந்தனை செய்யப்பட்டிருப்பதைப்போல் 11-வது ஆர்ட்டிகலில் அப்படிப்பட்ட பிரத்தியேகமான நிபந்தனைகளில்லாமையால் ஷை 11-வது ஆர்ட்டிகலில் செப்பியிருக்கும் வியாஜ்ஜியங்களில் லெட்டெர்ஸ்பேடென்ட் சட்டத்தின் கீழ் அப்பீல் செய்ய நியாயமுண்டென்பதாயிருந்திடினும் பிரதம உத்தரவின் தேதி முதற்கொண்டு தான் கால நிர்ணயத்தை கணக்கிட வேண்டுமென்பதாய் சட்ட நிருபண சபையார் உத்தேசித்து நிபந்தனை செய்திருக்கிறார்களென்பதாய் எடுத்துக் கூறப்பட்டது. இவ்விதமான வாதத்திற்கு அதமபக்ஷம் இரண்டு விதமான மறு உத்தரங்கள் கூறலாமென்பதாய் எனக்குத் தோன்றுகிறது. ஒரு மறு உத்தரம் என்னவென்றால் சட்ட நிருபண சபையார் எல்லா சந்தேகங்களையும் நிவர்த்தி செய்யும் பொருட்டு சில கேசுகளில் அப்பீலிருந்தால் அப்படிப்பட்ட கேசுகளில் மாத்திரம் அப்பில் உத்தரவின் தேதி முதற்கொண்டு கால நிர்ணயத்தை கணக்கிடவேண்டுமென்பதாய் மிக்க ஜாக்கிறதையுடன் பிரத்தியேகமாய் நிபந்தனைகள் செய்திருக்கிறார்கள். அப்படி செய்திருப்பதினாலேயே 11-வது ஆர்ட்டிகலில் பாத்திய மனுவின்பேரில் கடசியாய் ஊர்ஜிதமாயிருக்கும் உத்தரவென்றுசொல்லியிருப்பதை அப்பீல் லிருந்திருந்தால் அப்பீல் உத்திரவின் தேதிமுதலென்று அர்த்தம் செய்யலாகாதென்பதற்கு சட்டத்தில் தெளிவாயேற்பட்டிருக்கும் கோட்பாடுகளின்படி அது போதுமான காரணமாய்ச் சொல்லலாகாது. இரண்டாவது மறுஉத்தரமென்னவென்றால் அப்பீலிருந்தால் அப்படிப்பட்ட அப்பீலில் செய்யப்பட்டடிக்ரீயின் விஷயமாய் எவ்விதமாய் கால நிர்ணயத்தைக்கணக்கிட வேண்டுமென்பதைப்பற்றி காலநிர்ணயசட்டத்தில் அதமபக்ஷம் இன்னொரு ஆர்ட்டிகலிலும் பிரத்தியேகமாய் நிபந்தனைசெய்யப்பட்டில்லை. ஆனால் அப்பீலிருந்திருந்தால் அப்படிப்பட்ட அப்பீலில் கடசி

யாய் செய்யப்பட்ட உத்திரவின் தேதி முதற்கொண்டு தான் காலநிர்ணயத்தை கணக்கிடவேண்டுமேயல்லாமல் பிரதமத்தில் செய்யப்பட்ட டிக்ரியின் தேதிமுதலல்ல வென்று சட்ட நிரூபணசபையார் உத்தேசித்திருப்பார்களென்றுதான் சொல்லவேண்டும். டிக்ரிமொத்தத்தை சிவில் புரொஸீஜர் கோடின்படி வாய்தாவாய்ச் செலுத்துவதற்காக செய்யப்படும் மனு டிக்ரி தேதிமுதற்கொண்டு ஆறுமாதத்திற்குள்தான் செய்யவேண்டுமென்பதாய் நிபந்தனை செய்யப்பட்டிருக்கும் 175-வது ஆர்ட்டிகலை நான் உதகரிக்கையில் அப்படிப்பட்டமனு சிவில் புரொஸீஜர்கோட் 20-வது ஆர்டர் 11-வது ரூல் 2-வது உட்பிரிவின்படி செய்யப்படுகின்றதென்றும் அப்படிப்பட்ட மனுவின்பேரில் பிரதமகோர்ட்டார் சொற்பமொத்தம் கட்டிவரும்படி டிக்ரிசெய்திருந்து அவ்விதமான டிக்ரியின்பேரில் இன்னும்கொஞ்சம் மொத்தம் அதிகமாய் டிக்ரிசெய்திருக்கவேண்டுமென்னும் காரணத்தைக் கொண்டுவாதி அப்பீல்கோர்ட்டில் அப்பீல் தாக்கல்செய்திருந்து அப்படிப்பட்ட அப்பீலும் தள்ளுபடியாய்விட்டபிறகு ஷை உத்திரவு-ஷை ரூலின்கீழ் பிரதம டிக்ரியின் தேதிமுதல் ஆறுமாதம் கடந்த பின்பும் அப்பீல் டிக்ரியின் தேதிமுதல் ஆறுமாதத்திற்குள்ளாகவும் டிக்ரிதாரர் அப்படிப்பட்டஉத்தரவிற்கு ஒப்புக்கொண்டாரென்னும் காரணத்தைக்கண்டு டிக்ரி கடன்தாரன் மனுசெய்ய நியாயமில்லை.

ஒரு கேசில் அப்பீல் செய்யாமல் புனர் விசாரணை (Review) செய்யும்படி கொண்டுவரப்பட்ட மனுவின் பேரில் எந்த தீர்மானத்தை அல்லது உத்தரவை புனர் விசாரணை செய்யும்படி மனு செய்துக்கொள்ளப்பட்டதோ அந்த தீர்மானம் அல்லது உத்தரவின் விஷயமாய் சம்மந்தப் படாமல் மனு தள்ளிவிடப்பட்டாலும் அல்லது ஒரு கேசில் அப்பீல் செய்து அப்பீல் தாக்கல் செய்துக்கொள்ளப்பட மாட்டாதென்று நிராகரித்து விடப்பட்டாலும் அவ்விதமான விஷயத்தில் பிரதம டிக்ரி அல்லது உத்தரவு கடசியாய் ஊர்ஜிதத்திலுள்ள டிக்ரி அல்லது உத்தரவாக பாவிக்கப்படும். இது விஷயமாய் ஒரு ரிவியூ (புனர் விசாரணை) மனு தள்ளிவிடப்டால் அந்த உத்தரவிற்கும் ஒரு கேசில் அப்பீல் செய்யப்பட்டிருந்து அப்பீலில் கீழ்கோர்ட்டாருடைய தீர்மானத்தை காயப்படுத்தும் அல்லது அப்பீலை தள்ளிவிடப்படும் உத்தரவிற்கும் பேதமுண்டு. புனர் விசாரணை (Review) செய்யும்படிக்காவது அல்லது மறு விசாரணை (Revision) செய்யும்படிக்காவது மனு செய்யப்பட்டிருந்து அப்படிபட்ட மனுவின்பேரில் பிரதம தீர்மானத்தில் சம்மந்தப்படாமலேயே உத்தரவு செய்யப்பட்டால் பிரதம தீர்மானம்தான் கடசியாய் ஊர்ஜிதத்திலிருக்கும் தீர்மானமென்பதாகவும் அந்த தீர்மானமே ஒரு கிரமமான அப்பீலில் செய்யப்பட்ட தீர்மானமாக பாவிக்கப்படும். அப்படிப்பட்ட விஷயத்தில் அவ்விதமான தீர்மானத்தின் தேதி முதற்கொண்டு தான் காலநிர்ணயத்தை கணக்கிடவேண்டும்.

ஆகையால் நான் இந்த அப்பீலை சிலவுகளுடன் தள்ளுபடி செய்கிறேன்,

மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர் :—நானும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

Venugopal Mudali v Venkatasubbiah Chetty.

I. L. R. 39 Mad. 1196 இ லா. ரி. 39 ம. 1196.

நெ. 33.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 71-of-1914

(கி. ரி. பி. நெ. 62 of 1914)

நாச்சிமுத்து செட்டி...பிரியாதி—மனுதாரன்

v.

முத்துசாமி செட்டி...எதிரி-குற்றவாளி—ரெஸ்பான்டெண்ட்.

லாபாயின்ட் :—ஒரு குற்றத்தைப்பற்றிய பிராது கிரிமினல் புரொஸீஜர் கோடு 250—வது பிரிவின்படி செய்யப்பட்டதா அல்லவா யென்பது.

வியாஜ்ஜிய சங்கிரகம் :—ஒருவர் ஜாமீன்பேரில் விடத்தகுந்த ஒரு குற்றத்தைச் செய்ததாக ஒரு நபர் தான் போலீஸ் ஸ்டேஷனுக்கு நேரில் போய்த் தெரிவித்ததைப்போல் ஒரு கிராம முன்சீப்பி (Village Magistrate) னிடத்தில் முறையிட்டுக் கொள்வதின்பேரில் அவர் (கிராம மாஜிஸ்ட்ரேட்) அந்த குற்றத்தைப்பற்றி போலீஸாருக்கு சுருக்கமாய்த் தெரிவிக்க கடமைப்பட்டவரென்று அறிந்து பிராது செய்தால் அவ்விதமாய்த் தெரிவிப்பது கிரிமினல் புரொஸீஜர் கோடு 250-வது பிரிவின் நிபந்தனைகளின்படி போலீசாருக்கு நேரில் சமாச்சாரம் தெரிவித்துக் கொண்டு வரப்பட்ட கேசாக எண்ணப்படும். பழனி இரண்டாவது கிளாஸ் சப் மாஜிஸ்ட்ரேட் v. ராமசாமி ஐயர் காலெண்டர் கேஸ் நெ. 630 of 1913-ல் செய்த உத்தரவை ஊர்ஜிதம் செய்த திண்டிக்கல் முதல் கிளாஸ் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் J. W. Glasson என்பவர் கிரிமினல் அப்பீல் நெ. 84 of 1913-ல் செய்த தீர்மானத்தை புனர் விசாரணை செய்யும்படிக்கு கிரிமினல் புரொஸீஜர்கோடு (Act V of 1908) 435, 439-வது பிரிவுகளின்கீழ்கொண்டு வரப்பட்ட மனு.

கேசின் விவரம் :—மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் தீர்மானத்தில் காணலாம்.

லாயர்கள் :—Dr. S. ஸாமிநாதன்...மனுதாரர் தரப்பிலும்

ராஜாதரப்பில் பப்ளிக் பிராசிகூட்டருக்காக Mr. J. C. ஆடம் துரையும் ஆஜரானார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்—மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் :—முத்துசாமிசெட்டி என்பவர் மனுதாரருக்குச் சொந்தமான ஒரு பஞ்சு மூட்டையைத் திருடிக் கொண்டதாக ஆயக்குடி கிராம மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் மனுதாரர் முறையிட்டுக் கொண்டார். கிராமமாஜிஸ்ட்ரேட் கிரிமினல் புரொஸீஜர் கோடு 45 (c) பிரிவின்கீழ் போலீசாருக்குத் தெரிவித்து ரிபோர்ட்டு செய்தார். போலீசார் முத்துசாமி செட்டி என்பவர் பேரில் பழனி இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் முன்னில் இந்தியன் பீனல் கோடு 379-வது பிரிவின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார்கள். கேசை விசாரணை செய்து முடிவில் எதிரி குற்றம் செய்தவரல்ல வென்று தீர்மானித்து குற்றவாளியை விடுதலை செய்து விட்டதுமல்லாமல் கிரிமினல் புரொஸீஜர் கோடு, 250-வது பிரிவின் கீழ் மனுதாரரை பிரதிபலுக் கேசில் நேரிட்ட நஷ்டத்தை (compensation) கட்டிக்கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்டது.

இந்தக்கேசில் விவரித்திருக்கிற பிரகாரம் பிரஸ்தாப கேஸ் பிராது தாக்கல் செய்தாவது அல்லது போலீஸ் உத்தியோகஸ்தர் அல்லது மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் கிரிமினல் புரொஸீஜர் கோட் 250-வது பிரிவின்படி பிராது செய்துகொண்டுவரப்பட்டதல்ல வென்று ஆட்சேபித்து வாதிக்கப்பட்டது. இந்த வாதத்திற்கு ஆதாரமாய் சில தீர்மானங்களிருக்கின்றன :—சக்ரவர்த்தி v. தம்மன ரெட்டி—(1902) இ-லா-ரி-25 ம 667, (2) சொற்பகாலத்திற்கு முன் செய்யப்பட்ட தீர்மானங்களாகிய (1912) 22 ம. லா-ஜ 138 (அருளானந்தத்தைப்பற்றியது) ரிப்போர்ட்டாகாத கிரிமினல் ரிவிஷன்கேஸ் நெ. 627 of 1913 (சையத் அம்பலத்தைப் பற்றியதும்) பார்க்கவும். இதுவுமன்றிஇதேமதாராஸ்ஹைகோர்ட்டார் திருநெல்வேலி ஸெஷன்ஸ் ஜட்ஜ் vs. சிவன் செட்டி (1909) இ.லா-ரி.32 ம 258 புல் பெஞ்சு கேசில் செய்யப்பட்டிருக்கும் தீர்மானம், இது விஷயத்தைப்பற்றி சமுசயமற்ற முடிவான தீர்மானமென்று எனக்குத் தோன்றுகிறது மேலே கூறியிருக்கும் முதல் கேசு பின் செப்பிய இந்த தீர்மானத்திற்கு முன், பைசல் செய்யப்பட்டது மேலே செப்பி யிருக்கும் இரண்டாவது கேசை தீர்மானம் செய்த கற்றுணர்ந்த ஜட்ஜுகள் அந்த கேசில் இது விஷயத்தைப் பற்றி தீர்க்காலோசனை செய்து தீர்மானித்திருப்பதாக எங்களுக்குத் தோன்றவில்லையென்று அதிவினையத்துடன் சொல்லுகிறேன். மூன்றாவது கேசில் இது விஷயத்தைப்பற்றி ஜட்ஜுகளுடைய ஆலோசனைக்குத் தெரிவித்ததாக் தோன்றவில்லை. புல் பெஞ்ச் தீர்மானத்தில் விவரித்திருக்கும் கோட்பாடுகள் இந்த கேசில் நாங்கள் தீர்மானம் செய்யவேண்டிய விஷயத்திற்கு சம்பந்தப்பட்டவைகள் தானென்று சொல்வது தர்மநீதியாக யிருக்கிறதென்றும் அவைகள் மேற்கண்ட பிரிவின் நிபந்தனையின்கருத்திற்கும் வாஸ்தவமாய் பொருந்தியிருக்கிறதென்றும் வற்புறுத்தி உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

மேலே சொல்லிய புல் பெஞ்சு கேசில் கிராம முனிசிபுக்குத் தெரிவித்த சமாச்சாரம் அல்லது கிராமமுனிசிபினிடத்தில் தாக்கல் செய்த பிராது இந்தியன் பீனல்கோடு 211—வது பிரிவின் கீழ் செய்யப்பட்ட கிரிமினல் நடவடிக்கைகள் தானா அல்லவா என்பது தான் முக்கியமான கேள்வியாயிருந்தது. அந்த கேசில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸனும், மிஸ்டர் ஜஸ்டிஸ், மன்ரோவும் அவர்களுடைய தீர்மானத்தில் என்ன முகாந்திரங்களை எடுத்துக்கூறியிருக்கின்றார்களோ அவைகள் இப்பொழுது எங்களெதிரில் கூறும்வாதத்திற்கு சற்றேனும் குறைவுபாடின்றி தகுந்த முகாந்தரங்களாய் ஒத்திருக்கின்றன. ஆனால் அந்த கேசில் செய்யப்பட்ட தீர்மானத்தை ஒப்புக்கொள்ளாத கற்றுணர்ந்த ஜட்ஜ் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் என்பவர் கூறியிருக்கும் முகாந்தரங்கள் அந்த கேசுக்கு ஒவ்வினதாயிருந்த போதிலும் அவைகள் பிரஸ்தாப கேசுக்கு ஒவ்வினதல்ல வென்று தான் சொல்ல வேண்டும்.

அந்த கேசில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸனும் மிஸ்டர் ஜஸ்டிஸ் மன்ரோவும் அவர்களுடைய தீர்மானத்தில் என்ன சொல்லியிருக்கிறார்களோ அதை இதனடியில் எடுத்துக் கூறுவது நலமென்று நம்புகிறேன். "துன்ப மடைந்தவர் சாதாரணமாய் கிராம மாஜிஸ்ட்ரேடினிடத்தில் சமாச்சாரம்சொல்லியாவது அல்லது பிராது கொடுத்தாவது நேர்ந்த குற்றத்தைப்பற்றி முறையிட்டுக் கொள்வதின்பேரில் அவர் (அந்த கிராமமாஜிஸ்ட்ரேட்) அந்த குற்றத்தைப் பற்றி மாஜிட்ரேட்டுக்காவது அல்லது ஸ்டேஷன்ஹவுஸ் ஆபீசருக்காவது அல்லது அவர்களிருவருக்குமாவது அவர் (துன்பமடைந்தவர்) சொல்லிய சமாச்சாரத்தை (கிராமமாஜிஸ்ட்ரேட்) பிராது செய்து தெரிவிப்பாரென்று நன்குய் அறிந்து பிராது செய்கிறார். இந்த ராஜதானியில் பின்செப்பிய மார்க்கம் தான் பெரும்பாலும் சகஜமாய் நடந்தேரிவரும் பத்ததியாயிருக்கின்றது. அவர் இவ்விதமாய்ச் செய்வதினால் தான் (துன்பமடைந்தவர்) நேரில் போய் 154-வது பிரிவின் கீழ் ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீசருக்கு அல்லது 191-வது பிரிவின் கீழ் மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரிவித்து கிரிமினல் சட்ட விவகாரம் நடத்தினவராகவே எண்ணப்படுவார், ஏனென்றால்கிராம அதிகாரி அந்த சமாச்சாரத்தை அல்லது பிராதை அந்த உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்ப சட்டப்படி கடமைப்பட்டவராயிருக்கிறார். கிராம அதிகாரி மே

லதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டியதென்பதாய் சட்டப்படி கடமைப்பட்டவராயில்லாத சமாச்சாரம் அல்லது பிராதா யிருந்தால் அப்பொழுது அந்தகேசுக்கும் இதற்கும்பேதமுண்டென்றுசொல்லலாம்:— re ஜமுனாகேஸ்-(1881) இ—லா-ரி—6 ம்620பார்க்கவும். அந்தகேசில் பின்செப்பியதைப்போலிருப்பதால் கிரிமினல் சட்டவிவகாரம் எவ்விதத்திலாவது நடத்தப்பட்டதென்று சொல்லலாகாது. ஆனால் கிராம அதிகாரி சட்டப்படி அனுப்புவதற்கு கடமைப்பட்டவராயிருக்கும் சமாச்சாரம் அல்லது பிராதா யிருந்தால் மேலே உதகரித்த புல் பெஞ்சார் சொல்லியிருக்கும் முகாந்தரங்கள் நேரில் ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீசருக்குச் சொல்லிய சமாச்சாரம் அல்லது மாஜிஸ்ட்ரேட்டுக்கு கொடுத்த பிராதின் விஷயமாய் எப்படி சம்மந்தப் படுமோ அதைப்போலவே மேற்கூறிய சந்தர்ப்பத்திற்கும் சம்மந்தப்படும்."

ஆகையால் ஒருவர் ஜாமீன் பேரில் விடத்தகுந்த குற்றத்தைச் செய்ததாக ஒரு நபர் தான் நேரில் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்த் தெரிவிப்பதைப் போலவே ஒரு கிராம மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் சமாச்சாரம் தெரிவிப்பதின்பேரில் அந்தகிராமமாஜிஸ்ட்ரேட்அந்த குற்றத்தைப் பற்றி போலீசாருக்கு சுருக்கமாய்த் தெரிவிக்ககடமைப்பட்டவரென்று அறிந்து பிராது செய்ததின்பேரில்போலீசார்குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தால் அவ்விதமாய்த் தெரிவிப்பது கிரிமினல் புரொஸீஜர் கோடு 250-வது பிரிவிலுள்ள நிபந்தனையின் கருத்தின்படி போலீசாருக்கு நேரில்சமாச்சாரம் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட கேசாகவே பாவிக்கப்படும்.

கிரிமினல் புரொஸீஜர் கோடு 250-வது பிரிவின் முற்பாகத்தில் சொல்லியிருக்கும் வார்த்தைகளை ஷை கோடு 190-வது பிரிவுடன் ஒத்துப்பார்க்கையில் முன் செப்பியிருக்கும் சொற்கள் 190-வது பிரிவு a, b, c, யில் சொல்லியிருக்கும் எல்லா பத்ததிகளுக்கும் ஒத்திருக்க வேண்டுமென்பதாய் உத்தேசித்து செய்திருப்பதாகத் தெரியவருகின்றது. பின் செப்பிய (190-வது) பிரிவில் ஒரு மாஜிஸ்ட்ரேட் ஒரு கேசை தாக்கல் செய்துக் கொண்டுவைசல் செய்யலாமென்று ஏற்படுகிறது. ஆனால் ஒன்றில்மாத்திரம்மாஜிஸ்ட்ரேட் "தான் நேராய் அறிந்ததாகவாவது அல்லது தான் சந்தேகிப்பதாயாவது" என்று சொல்லியிருப்பது 250-வது பிரிவுக்குச் சம்பந்தப்படமாட்டாதென்று சொல்லக்கூடிய ஒரு விஷயம் தவிரமற்ற விஷயங்களெல்லாம் ஒத்திருப்பதாகவே சொல்லலாம். ஒருவன் குற்றம் செய்ததாக நிஷ்பிரயோஜனமாய் அல்லது கோபமூட்டக்கூடிய அலைக்கழிவுள்ளதாய் ஒரு நபரின் பேரில் குற்றம் சாட்டினால் அவன் அவ்விதமாய்ச் செய்வதினால் நேரிடும் நஷ்டத்தை (Compensation) கட்டிக்கொடுக்கப் பந்தப்பட்டவனாவான் என்று ஒரு பிரிவிலிருக்கையில் அது இன்னொரு பிரிவின்கீழ் கொண்டுவரப்பட்ட குற்றப்பத்திரிகைக்கு ஏன்சம்பந்தப்படாதென்றுசொல்வதற்குகாரணம்என் புத்திக்குப் புலப்படவில்லை. இவைகளெல்லாம் கிரிமினல் கோர்ட்டுகளில் நடவடிக்கைகள் நடத்துவதற்கு ஒன்றுக்கொன்று ஒவ்வின மார்க்கங்களாகவே யிருக்கின்றன.

மனுதாரர் தன்னுடைய வாதத்திற் காதாரமாய் கூறிய ராஜ சக்ரவர்த்தி v. தம்மன ரெட்டி (1902) இ-லா-ரி-25-ம. 667-Re. சையத் அம்பலம் கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 627-of-1913 இந்த இரண்டு கேசுகளிலும், பிரியாதி குற்றம் செய்ததாக பிராது செய்வதற்குப் போன கிராம அதிகாரி 250-வது பிரிவின்படி "மாஜிஸ்ட்ரேட்டா" அல்லவா என்பது தான் யோசிக்கப்பட்டது. போலீசாருக்குசமாச்சாரம்தெரிவிக்கப்பட்டதா இல்லையாயென்பதைப்பற்றி அந்த கேசுகளில் யோசிக்கப்படவில்லை. ஆயினும் அதைப் பற்றி புல் பெஞ்சு கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமான கேஸ் 250-வதுபிரிவின் கீழ் தாக்கல் செய்யத்தக்கதல்ல வென்றுசொல்லும் வாதத்திற்காதாரமாகிய சக்ரவர்த்தி v. தம்மன ரெட்டி (1902) இ-லா-ரி. 25 ம. 667-ல்செய்யப்பட்டிருக்கும் தீர்மானம் இந்த புல் பெஞ்சு கேசினால் நசித்துப் போயிற்று. நான் இந்த கிரிமினல் ரிவிஷன் மனுவை தள்ளுபடிசெய்கிறேன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர்:—இந்த கேசில் பிரியாதி (Complainant) எதிரி (குற்றவாளி) திருடினதாக குற்றம் சாட்டி அவர் பேரில் கிராமமாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் பிராது செய்தார். அந்தபிராது போலிசாருக்கு அனுப்பட்டது. குற்றவாளியின்பேரில் குற்றம் சாட்டி போலீசார் எந்தமாஜிஸ்ரேட் எதிரில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தார்களோ அந்த சப்மாஜிஸ்ட்ரேட்எதிரி குற்றம்செய்தவரல்ல வென்று தீர்மானித்து குற்றவாளியை விடுதலை செய்து விட்டுமனுதாரரை பிரதிபலனாகசேகில் நேரிட்டநஷ்டத்தை (Compensation) கட்டிக்கொடுக்கும்படி உத்தரவு செய்தார். இந்த உத்தரவு அப்பீலில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இந்த கேசில் ஒரு போலீஸ் உத்யோகஸ்தர் அல்லது ஒரு மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் சமாச்சாரம் தெரிவிக்காததினால் இந்தகேசுக்கு கிரிமினல் ப்ரொஸீஜர் கோடு 250 வது பிரிவு சம்மந்தப் படமாட்டாதென்று Dr. சாமிநாதன் வாதிக்கின்றார். "மாஜிஸ்ட்ரேட்" என்னும் பதம் கிராமமாஜிஸ்ட்ரேட் டென்று அர்த்தமாகாதென்பதாய் நான் திடமாய்ச் சொல்லமாட்டேன். 1-வது பிரிவு 2 (b) உட்பிரிவில் கிரிமினல் புரொஸீஜர் கோடு சென்னை ராஜதானியின் கிராம அதிகாரிகளுக்குச் சம்மந்தப்படமாட்டாதென்று சொல்லியிருக்கிறது. கிரிமினல் புரொஸீஜர் கோடு 6வது

பிரிவில் கிராமமாஜிஸ்ட்ரேட்டின் கோர்ட்டை அங்கீகரித்து (அது) ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஆனால் "மாஜிஸ்ட்ரேட்" என்னும் பதத்திற்கு பொருள் விவரித்துச் சொல்லப்படயில்லை அப்படிக்கிருந்திடினும் ஹைகோர்ட்டார்கேசுகளை ஒரு மாஜிஸ்ட்ரேட்டினிடத்திலிருந்து இன்னொரு மாஜிட்ரேட்டுக்கு மாற்றுதலில் மாற்றுதலைப் பற்றிய பிரிவுகளின் கீழ்கிராம மாஜிஸ்ட்ரேட்டுகளின் பேரிலும் அதிகார வரம்பைச் செலுத்துகின்றார்கள். ஆகையால் 250வது பிரிவில் சொல்லியிருக்கும் மாஜிஸ்ட்ரேட் என்னும் பதம் கிராமமாஜிஸ்ரேட் என்று அர்த்தமாகாதென்று சொல்வதைப்பற்றி நான் சந்தேகிக்கின்றேன். அது எப்படியிருந்திடினும் கிராமமாஜிஸ்ட்ரேட் பிராதை போலீசாருக்கு அனுப்பும்போது பிரியாதியினால் (Complainant) 250வது பிரிவின் கீழ் போலீசாருக்குச் சமாச்சாரம் தெரிவிக்கப் பட்டதென்று நான் திடமாய்ச் சொல்லுகிறேன். பிரியாதி பிராது செய்யும்பொழுது அது (பிராது) போலீசாருக்கு அனுப்பப்பட வேண்டுமென்கிற எண்ணத்துடன்தான் பிராது செய்கிறார். அவர் இவ்விதமாய் தெளிவான எண்ணத்துடன் பிராது செய்திருக்கையில் அவர் போலீஸ் உத்தியோகஸ்தருக்குச் சமாச்சாரம் தெரிவிக்க வில்லையென்று தீர்மானிப்பது பிரிவில் சொல்லியிருக்கும் பதங்களை சரியாய் அர்த்தம் செய்து தீர்ப்புசெய்வதாய்த் தோன்றவில்லை. போலீசாரிடத்தில் நேரில் போய் சமாச்சாரம் சொல்லும் ஒருவர் ஒரு கிராம மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் பிராது செய்து தன் கருத்தை நிறைவேற்றிக்கொள்பவரைவிட ஏன் தாழ்ந்தவராவா ரென்பதற்குக் காரணம் என் கருத்திற்குபுலப்படவில்லை. Re. அருளானந்தம்(1912)22ம. லா-ஜ. 138ல் அந்த கற்றுணர்ந்த ஜட்ஜுகள் தீர்மானித்திருப்பதை நான் ஒப்புக்கொள்ளசக்தியற்றவனாயிருக்கிறே னென்று அதிவினயத்துடன் கூறுகின்றேன். திருநெல்வேலி டிவிஷன் ஸெஷன்ஸ் ஜட்ஜ vs-சிவன் செட்டி (1909) இ-லா-ரி. 32 ம. 258 (F. B) கேசில் தீர்மானித்திருப்பது இந்தகேசுக்குப் பூராவும் சம்மந்தப்பட்டதா யிருக்கிறது. அந்த புல் பெஞ்ச் கேசைத் தீர்மானம் செய்த கற்றுணர்ந்த ஜட்ஜுகள் 262, 263-வது பக்கங்களில் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்கள். அதாவது "இந்த ராஜதானியில் சாதாரணமாய் பிரதமத்தில் கிராமமாஜிஸ்ட்ரேட்டுக்கு பிராது கொடுத்து அல்லது சமாச்சாரம் தெரிவித்துதான் கிரிமினல் சட்டத்தை அமுலுக்கு கொண்டுவருவது சகஜமான ஏர்ப்பாடாயிருக்கின்றது. துன்பமடைந்தவர் பெறும்பாலும் போலீஸ் ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீஸருக்கு நேரில் போய் சமாச்சாரம் தெரிவிப்பது மிக்க அறிதான காரியம். துன்பமடைந்தவர் சகஜமாய் கிராம மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தான் சமாச்சாரம் தெரிவித்தாவது அல்லது பிராது கொடுத்தாவது முறையிட்டுக் கொள்வதின் பேரில் கிராமமாஜிஸ்ட்ரேட் அந்த சமாசாரத்தை அல்லது பிராதை போலீசாருக்கு அல்லது மாஜிஸ்ட்ரேட்டுக்கு ரிப்போர்ட்டு செய்துதெரிவிப்பாரென்றுஅறிந்து கிராம மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் பெரும்பாலும் பிராது செய்கிறார். கிராம அதிகாரி மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டிய தென்பதாய் சட்டப்படி கடமைப் பட்டவராயில்லாத சமாச்சாரம் அல்லது பிராதாயிருந்தால் அப்பொழுது அந்த கேசுக்கும் இதற்கும் பேத முண்டென்று சொல்லலாம்,

இவ்விதமாய்க் கொள்ளும் அபிப்பிராயத்தையும் என்னுடனிருக்கும் கற்றுணர்ந்த ஜட்ஜின் தீர்மானத்தையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

இந்த மனு தள்ளுபடி செய்து விடப்படும்.

I. L. R. 39 Mad. 1006. இ-லா-ரி 39 ம. 1006

நெ. 34.

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர். மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரஸ்வாமிசாஸ்திரியார்.

1914-ம் ஆண்டு 2-வது அப்பீல் நெ. 70

வேலாயுதம்பிள்ளை (3-வது பிரதிவாதி) அப்பீல்வாதி.

v.

சுப்பரூயபிள்ளையும் பின்னும் 3 பேர்களும் (வாதியும் 2, 4, 5 பிரதிவாதிகளும்) அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாயின்ட்:—வாதியும் 3-வது பிரதிவாதியும் வலி என்பவனுடைய அனந்தர வார்ஸுகள்: அந்த வலி என்பவன் பிராதில் கண்ட எல்லா சொத்துக்களையும் பி என்பவனுக்கு அடமானம் செய்திருந்தான். 3-வது பிரதிவாதியின் தகப்பன் 1893-ம் ஆண்டில் ஒத்தி சங்கதி தெரியாமலே பி என்பவனிடத்திலிருந்து ஷை நிலங்களை கிரையத்துக்கு வாங்கி அது முதல் ஷை நிலங்களை அனுபவித்து வந்தான். வலி என்பவனுடைய விதவையான பெண்சாதி 1900 ஆண்டு செப்டம்பர்மீ 6உ இறந்துபோனாள். வாதி 1912-ம் ஆண்டு செப்டம்பர்மீ 2உ யன்று ஷை சொத்துக்களை அடைவதற்காக இந்த வியாஜ்ஜியத்தைக்கொண்டு வந்தான். 3-வது பிரதிவாதி இந்த வியாஜ்ஜியம் காலாவதியாய்ப் போய்விட்டதாக கக்ஷி சொன்னான்.

இந்த கேசானது காலாவதியாகவில்லை யென்று தீர்ப்பு செய்யப்பட்டது.

உடன் சொந்தக்காரர்களில் ஒருவருடைய அனுபோகமானது மற்ற உடன் பாத்தியஸ்தர்களுக்கு பாதகமானதாய் இருப்பதாக தெரியும்வரை (அப்

பேர்ப்பட்ட அனுபோகமானது) மற்றவர்கள் அனுபோகத்துக்கு கெடுதலாகமாட்டாது. அந்த அனுபோகமானது ஆரம்பிவிக்கப்பட்டபொழுது பிரதிகூலமாக இருந்தாலும் அவ்விதமான அனுபோகம் பாத்தியதை அற்றுப்போகக்கூடிய அனுபோகம் பூரணமாவதற்குமுன் சமாதான வழியால் பாத்தியம் ஏற்படும் விஷயத்தில் விரோதமாகவேயிருந்துகொண்டிராது.

கேசின் சுருக்கம்:—விருத்தாச்சலம் டிஸ்டிரிக்டு முனிசீபு டி. கிருஷ்ணன் நாயர் கோர்ட்டு 1912–ம் வருஷத்திய அசல் வியாஜ்ஜிய நம்பர் 910 ன் டிக்ரியின் பேரில் கடலோர் டெம்பொரரி ஸபார்டினேட் ஜட்ஜ் பி. அய்யாசாமிமுதலியார் கோர்ட்டு 1913–ம் வருஷத்திய அப்பீல் நெம்பர் 20-ன் டிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்ட 2-வது அப்பீல்.

தாவா சொத்துக்கள் ஆரம்பத்தில் வி யென்ற ஒருவனுடையதாயிருந்தது. அவன் பி யென்ற ஒருவனுக்குஷை சொத்துக்களைவிற்று அதே சொத்துக்களை தனக்கே திரும்ப எழுதிக்கொடுத்துவிடுவதாக அவனிடமிருந்து ஒரு உடன்படிக்கை யெழுதி வாங்கினன் 1893-ம் வருஷத்தில் பி யென்பவன் 3-வது பிரதிவாதியின் தகப்பனுக்கு ஷை நிலங்களை விற்று அதே தேதியில் அவைகளை அவனுடைய அனுபோகத்தில் விட்டுவிட்டான். வி யென்பவன் இறந்ததின் பேரில் வாதி வி என்பவனின் அனந்தரவார்ஸுகளில் ஒருவனாக வி என்பவனுடையவிதவைப்பெண்ஜாதியின் பேரிலும் ஷை சொத்தைக் கிரயத்துக்கு வாங்கின பி என்பவன் பேரிலும் 1885-ம் வருஷத்திய அசல் வியாஜ்ஜிய நம்பர் 371 ஐ, பி யுடன் செய்த நடவடிக்கையானது ஒத்தியே யொழிய அறுதியான கிறைய மில்லையென்று தீர்மானிக்கும்படி 1885 ம் வருஷத்தில் கொண்டு வந்து பி என்பவனுக்கு ஷை நிலத்தை யொத்திவைத்ததாகவும் ஷை நிலத்தை சி என்பவனுடைய விதவை பெண்சாதி அவளுடைய ஆயுசு காலத்தில் ஷை நிலத்தை மீட்டுக்கொள்ளாமல் போனல் வாதி மீட்டுக்கொள்ளலாமென்றும் தீர்ப்புப் பெற்றுக்கொண்டார் ஷை சொத்துக்களை மீட்காமலேயே அந்த விதவையானவள் 1900-ம் வருஷம் செப்டம்பர் மீ 6௳ இறந்து போய் விட்டாள். அவள் இறந்ததின் பேரில் வாதியும் 3-வது பிரதிவாதியும் ஷை யாள் புருஷனுக்கு வார்ஸாகயிருந்தார்கள். வாதி 1912 ம் வருஷம் செப்டம்பர் மீ 2௳ ஷை நிலத்தை மீட்டுக் கொள்ளும் பொருட்டு இந்த வியாஜ்யத்தை செய்தார் 3-வது பிரதிவாதியானவர் சொன்ன அநேக கக்ஷிகளுக்குள் இந்த வியாஜ்யம் காலாவதியால் பீடிக்கப்பட்டதாயும் தானும் தன் தகப்பனும் ஷை சொத்தை ஒத்தி வாங்கியிருந்த பி என்பவனிடமிருந்து கிறையத்துக்கு வாங்கி 1893-ம் ௵ முதல் கிரைய தஸ்தாவேஜு மூலமாய் அனுபவித்து வருகிறதாயும், பிராது தேதியில் வாதியின் பாத்தியதைக்கு கெடுதலாக அவர்கள் நீடித்த காலமாய் அனுபவித்து பாத்தியதை யேற்படுத்திக் கொண்டதாயும் கக்ஷி சொல்லி கால நிர்ணய ஆக்ட் 134 வது பிரிவை ஆதாரமாக காண்பித்தான். கீழ் அப்பீல்கோர்ட்டார் இந்தக் கேசானது காலாவதியால் பீடிக்கப்படவில்லை யென்று தீர்மானித்து பிராதுப்படி தீர்ப்புச் செய்தார். 3-வது பிரதிவாதி 2-வது அப்பீலைச் செய்தார். ஹைக்கோர்ட்டார் அடியில் கண்ட அம்சத்தின் விஷயமாக பைசல் செய்யும்படி கீழ்க்கோர்ட்டாருக்கு திரும்ப அனுப்பினர்கள். "பிரதிவாதியின் தத்து தகப்பனுருக்கு இந்த கேசின் பிறுதில் கண்ட கிறைய தஸ்தாவேஜினலும் எதிரிடை உடன்படிக்கையினுலும் தனக்கு கிறையம் செய்தவனுக்கு என்னவித பாத்தியதையிருந்த தென்பதையும் 1885-ம் வருஷத்து அசல் வியாச்சிய நம்பர் 371-ல் இந்தவிதவைக்கு விரோதமாய் வாதியால் பெறப்பட்ட டிக்ரீயைபற்றி ஏதாவது இவனுக்குத் தெரியுமா?" கீழ் அப்பீல் கோர்டார் மேல்கண்டசங்கதிகளை மறுத்துதீர்மானம் செய்தார். மேல்கண்ட தீர்மானம் கிடைத்தவுடன் ஹைக்கோர்ட்டார் அடியில்கண்ட தீர்ப்பைச் செய்தார்கள்.

லாயர்கள்.—அப்பீல் வாதிபக்கம் C. பத்மனுப அய்யங்கார்.

அப்பீல்முதல் பிரதிவாதிபக்கம் C. V. அனந்த கிருஷ்னய்யர்.

மற்றவர்களுக்கு வக்கீலில்லை

அடியில்கண்ட தீர்ப்பு மிஸ்டர்ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் அவர்களால் சொல்லப்பட்டது.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.—இந்த கேசில் சம்மந்தப்பட்ட சொத்துக்கள் செல்லபிள்ளை என்ற ஒருவருக்குப் பாத்தியப்பட்டது. அவர் ஷை சொத்துக்களை பழமலை என்ற ஒருவருக்கு விற்று அதே சொத்துக்களை தனக்கு திரும்ப கிரையம் செய்து விடுவதாக ஒரு உடன்படிக்கை எழுதி வாங்கினர். செல்லபிள்ளை யிறந்தபிரகு வாதி அவருடைய அனந்தர வார்ஸு ஸ்தானத்தில் ஷை சொத்தானது ஒத்திதான் வைக்கப்பட்டதென்றும் செய்ததாகச் சொல்லப்பட்ட கிரையத்தினல் கிரையம் வாங்கினவனுக்கு பூரா பாத்தியதையும் ஏற்பட்டுவிட மாட்டாதென்றும் தீர்மானிக்கும் பொருட்டு 1885–ம் ௵த்தில் விதவையின்பேரிலும் கிறையம் வாங்கின பழமலையின்பேரிலும் வியாஜ்ஜியம் செய்தார். அந்த வியாஜ்ஜியத்தில் விதவை உயிரோடு இருக்கும் பொழுது ஷை சொத்தை தானே மீட்டுக்கொள்ளாவிட்டால் அவள் இறந்த பிறகு ஷை சொத்துக்கள் வாதி மீட்டுக்கொள்ள அர்கனகி விடுகிறனென்று டிகரீ பிறப்பிக்கப்பட்டது.

(இன்னும் வரும்.)

The Indian Law Gazette.

PART II.

இந்திய சட்ட கெஜெட்.

1906-௵ ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917௵ ஜூலைமீ [நே. 7

Reports of Cases.

கேஸ்களின் ரிப்போர்ட்டுகள்.

Madras High Court.

மதராஸ் ஹைக்கோர்ட்டு.

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

(1917-௵ ஜூன்மீ 2-ம் பாகம் 92-ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்த டிக்ரிக்குப் பிறகு பழமலை யென்பவன் 1893-ம் ௵த்தில் 3-வது பிரதிவாதியின் தகப்பனுக்கு இந்த சொத்துக்களை விற்று அவனுடைய அனுபோகத்தில் ஷை சொத்துக்களை விட்டுவிட்டான். அந்த விதவையானவள் 1900-ம் ௵த்தில் இறந்து போனள். அவளுடைய மறணததின்பேரில் வாதியும் 3-வது பிரதிவாதியும் அவளுடைய புருஷனுக்கு வார்ஸுகளாகி விட்டார்கள். வாதி ஷை சொத்துக்களை திரும்ப மீட்டுக்கொள்ளுவதற்காக இந்த வியாஜ்ஜியத்தை செய்தார். 3-வது பிரதிவாதி சொன்ன மற்ற கக்ஷிகளுக்குள் தானும் தன் தகப்பனும் ஷை சொத்துக்களை ஒத்திவாங்கிய ஒருவனிடமிருந்து 1893-ம் ௵த்தில் கிரையத்துக்கு வாங்கி அது முதல் அவைகளை அனுபவித்ததின் மூலமாக பிராதுத்தேதியில் வாதியின் பாத்தியதைக்கு விரோதமாக சட்டப்படி பாத்தியதை ஊர்ஜிதத்துக்கு வருவதற்கு வேண்டுங்காலம் எவ்வளவோ அவ்வளவு காலமாக ஷை நிலங்களை தாங்கள் அனுபவித்ததின் மூலமாக தங்களுக்கு பாத்தியதை யேற்பட்டுவிட்டதாக கக்ஷி சொன்னன். இதற்குஆதாரமாககால நிர்ணய ஆக்ட்(Limitation Act)டின்134-வதுஷெடியூலின்விஷயத்தை எடுத்துச்சொல்லப்பட்டது. டிஸ்டிரிக்ட் முனிசீபு, ஆதியில் ஒத்தி வாங்கினவனுடைய பிரதிநிதியையும் கக்ஷிக்காரனுக சேர்க்காததைபிட்டு வியாஜ்ஜியத்தை தள்ளிவிட்டார். அப்பீலில் இந்த

விஷயத்தில் ஸ்பார்டினேட் ஜட்ஜ் கீழ் கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தில் கலந்துகொள்ளாமல் இந்த வியாஜ்ஜியமானது காலாவதியால் பாதிக்கப்படவில்லை யென்று தீர்மானித்து வியாஜ்ஜியத்தை வாதியின் பிருதின்படி தீர்ப்புச் செய்துவிட்டார். இரண்டாவது அப்பீலில், 1885ம் வருஷத்தில் வாதியினால் பெறப்பட்ட டிக்ரி விஷயம் 3வது பிரதிவாதியின் தகப்பனுக்கு தெரியுமா என்பதைப்பற்றிய தீர்மானத்தை செய்தனுப்பும்படி நாங்கள்கேட்டனுப்பினோம். தெரியாது யென்பதுதான்தீர்மானம்.

கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த தீர்மானத்தை நாங்களும் ஒப்புக் கொள்ளுகிறோம். ஷை சொத்தானது ஷை ஒத்திவாங்கிய ஒருவனால் விற்கப்பட்டிருக்கிறபடியால் 3-வது பிரதிவாதியின் தகப்பனுடைய அனுபோகமானது கால நிர்ணய ஆக்ட்134 வது பிரிவின்படி பூர்த்தியாய் விடும் என்பது உண்மைதான். ஆனால் 12-வருஷம் திகையுமுன் 3-வது பிரதிவாதிக்கு ஒரு புதிதான பாத்தியதை யேற்பட்டு விடுகிறது. 1900-ம் வருஷத்தில் அவன் ஷை சொத்துக்கு வாதியின் கூட ஒரு வார்ஸாய்விட்டான். ஷை சொத்துக்குவார்ஸ் கிரமம் தனக்கு இறங்கி விட்டபொழுது அந்த சொத்து தன்கூட கூட்டு சுதந்தரக்காரனாயுள்ள ஒருவன் வசம் இருந்ததாகவும் கூட்டு சுதந்தரக்காரனுக்கு தெரியும்படியாக தன்னுடைய பாத்தியதை விலக்கப்பட்டாலொழிய கூட்டு சுதந்தரக்காரன் அனுபோகம் தன் அனுபோகத்தை கெடுத்துவிடமாட்டாதென்றும் வாதி கக்ஷி சொல்லலாம். 3-வது பிரதிவாதி ஒத்திவாங்கினவனிடத்திலிருந்து தான் வாங்கிய கிரைய பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ள விரும்பினால் தான் கிரையம் வாங்கியிருக்கும் சங்கதியை வாதியின் தகவலுக்கு கொண்டுவந்திருக்க வேண்டியதுண்டு. இந்த கக்ஷிக்கு அனுசரணையாக அனேக ஆதாரங்கள் இல்லை.

"அனுபோகத்தின் பாதகமான தன்மை தெரியும்படியாக துராகிருதபிரவேசம் இல்லாதிருக்கும் விஷயத்தில் தனக்கு விரோதமாகக் கொண்டாடப்படும் பாத்தியமானது 12-வருஷ அனுபோகத்தினால் பாதிக்கப்பட்டு விட்டதாய் கக்ஷிசொல்லுகிறவன் தன்னுடைய சுவாதீனம் 12-வருஷத்துக்கு இருந்திருக்கிறது என்பதை மாத்திரம் அல்ல, அந்தக்காலம் முழுமையும் வாதி கொண்டாடும் பாத்தியதைக்கு நேர் விரோதமாய் இருந்திருக்கிறதென்றும், ருசு செய்யகடமைப்பட்டவன்" என்பதாக பாட்டி (Batty) என்பவர் தாருபாய்க்கும் வெங்கட்டராவுக்கும் நடந்து 1903-ம் வருஷத்தில் 27. பம். 43 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில் சொல்லியிருக்கிறார். சுவாதீனத்தை விட்டு எடுத்துக்கொள்ளுதல் அல்லது வெளிப்படையாகவும் தெரியும்படியாகவும் சுவாதீன மடைதல் இல்லாத விஷயத்தில் பாத்தியதையை மறுக்க தன்னுடைய சுவாதீனத்தின் பேரில் சார்ந்திருக்கிறவன் வாதியால் தனக்குண்டென்று கொண்டாடப்படக்கூடிய பாத்தியதைகளுக்கு விருத்தமான அனுபோகம் என்றும், அவ்வித பாத்தியதையை மறுக்கவியாச்சியத்துக்குமுற்பட்ட 12-வருஷக்கால முழுமையும் வாதிக்கு ஸந்தர்ப்பத்தை கொடுக்கக் கூடிய தன்மையுடையதா யிருந்ததென்றும் ருஜுச் செய்ய வேண்டும். சுவாதீனம் விரோதமாவதைப்பற்றிச் சொல்லுகிற 144-வது ஷெடியூலில் உபயோகித்திருக்கும் சொல்போக்கு இந்த அபிப்பிராயத்துக்கு அனுஸரணையாயிருக்கிறது. அஸன்ஸாப்ராவுத்தனுக்கும் வாமனராவுக்கும் நடந்து 1878-ம் வருஷத்தில் 2-ம. 203-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறவும், மொய்தீனுக்கும் ஊத்துமாங்கன்னிக்கும்நடந்து1888-ம் ஞுத்தில் 11-ம.416-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதுமான கேசுகளையும் பார்வையிடலாம். பொன்னுசாமி அய்யருக்கும் பெரமாயிக்கும் நடந்து1914-ம்ஞுத்தில் 16 ம-லா-டை 530ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசின் தீர்ப்பும் இந்த கக்ஷிக்கு அனுசரணையாயிருக்கிறது. உடன் பாத்தியஸ்தர்களில் ஒருவருடைய ஸ்வாதீனமானது மற்றவர்களுடைய பாத்தியதைக்கு விரோதமாக இருப்பதாக அவர்களுக்குத் தெரிகிறவரையில்பாதகமாயிராது என்பதைப் பற்றி யாதொரு சந்தேகமில்லை. சுவாதீனம் ஆரம்பித்த காலத்தில் அது விரோதமா யிருந்தது என்கிற விஷயத்தினால் இந்தக் கேசில் சிரமம் யேற்படுகின்றது. அவ்வித சுவாதீனமானது விரோதமான அனுபோகம் பூர்த்தியாவதற்குமுன் சமாதானமான பாத்தியம் யேற்பட்டாலும்கூட விரோதமாகவே யிருந்து கொண்டிருக்கிற தென்பதற்கு யாதொரு ஆதாரமும் காட்டப்படவில்லை. முதலாவது சுவாதீனம் சட்ட சம்மதமான பாத்தியதையை சார்ந்ததாயிருக்கவேண்டும். விதவை யிறந்தபிற்பாடு 3-வது பிரதிவாதி வாதிக்காகவும் சொத்தை அனுபவித்ததாகவே நினைக்கிறோம்.

I. L. R. 39 Mad. 879. இ-லா ரி, 39 ம. 879

நெ. 35

ஜட்ஜிகள்:— { ஸர் ஜான் வாலிஸ், சீப் ஜஸ்டிஸ். / மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர். }

R. M. M. S. T. வைரவன் செட்டி என்ற சோமசுந்தரம் செட்டி (எல்லா வியாஜ்ஜியங்களிலும் பிரதிவாதி,—1913-ம் ஞுத்து அப்பீல் 303,304-ம் நம்பர்களில் அப்பீல் வாதியும் 1913-ம் ஞுத்து 2-வது அப்பீல் நம்பர் 1873-ல் அப்பீல் பிரதிவாதியும்.

ஸ்ரீ மது தேவசிகாமணிநடராஜ தேசிகர் (திருவண்ணாமலை ஆதீனம் மடாதிபதி) (எல்லாவற்றிலும் வாதி)—1913-ம் ஞுத்து அப்பீல் 303, 304-ம் நம்பர்களில் அப்பீல் பிரதிவாதியும் 1913-ம் ஞுத்து 2-வது அப்பீல் நம்பர் 1873-ல் அப்பீல்வாதியும்.

லாபாயிண்ட்:—குத்தகைத் தொகைக்காக குத்தகை கொடுத்தவனால் செய்யப்பட்ட வியாச்சியத்தில், வியாச்சிய காலத்தில் காலாவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டதும் நிர்ணயிக்கப்படாததுமான ஒரு நஷ்டத்தொகையை நியாயப்படி உளவடைத்துக் கொள்ளவேண்டுமென்று குத்தகை பெற்றவன் கேட்கப்பாத்தியமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

இங்கிலீஷ் கேசுகள் மறுபடி சோதிக்கப்பட்டது.

கேசின் சுருக்கம்:—மதுரையிலுள்ள இராமநாதபுரம்டெம்பரரிஸபார்டிநேட்டு ஜட்ஜி T. மகாதேவ சாஸ்திரியால் 1913-ம் ஞுத்து அசல் நம்பர் 42 லும் 1911-ம் ஞுத்து அசல் நம்பர் 90 லும் பிறப்பிவிக்கப்பட்ட தீர்ப்புகளின்பேரில் அப்பீல்களும், மதுரையிலுள்ளஇராமநாதபுரம் ஜில்லாஜட்ஜி A. C. Dutt என்பவரால் மதுரையிலுள்ள இராமநாதபுரம் டெம்பரரி ஸபார்டிநேட் கோர்ட்டு 1910-ம்ஞுத்து அசல்நம்பர் 154ல் A. ஸாம்பமூர்த்தி அய்யர் பிறப்பித்த டிக்ரியின்பேரில் செய்யப்பட்ட 1911-ம் ஞுத்து அப்பீல் நம்பர் 585-ல் செய்த தீர்ப்பின் பேரில் 2-வது அப்பீலும் செய்யப்பட்டிருக்கின்றன.

வாதியின் முன் பாத்தியஸ்தரிடமிருந்து பிரதிவாதியின் தகப்பனார் 1306-ம்பசலி முதல்1323-ம்பசலிவரை 18 பசலிக்கு சில கிராமங்களைக் குத்தகைக்கு வாங்கினார். 1318, 1319-ம் பசலிகளுக்குக் குத்தகைத் தொகை செல்லாகவில்லை. அதற்காக வியாச்சியஞ் செய்ததில் 1313, 1314-ம்பசலிகளில்தன்னுடைய சுவாதீனத்திற்கு தொந்தரவு ஏற்பட்டதால் உண்டான நஷ்டத்தொகையை நியாயப்படிஉளவடைத்துக் கொள்ள வேண்டுமென்று பிரதிவாதி கக்ஷியாடினார். வியாச்சியத் தேதியில் அந்தபாத்தியம் காலாவதியால பாதிக்கப்பட்டிருந்தது என்ற காரணத்தின் பேரில் கீழ்கோர்ட்டார் அதை ஒப்புக் கொள்ளவில்லை.

லாயர்கள்:—1913 ம் ஞுத்து 303, 304-ம் நம்பர் அப்பீல்களில் அப்பீல் வாதிக்கும், 1913-ம் ஞுத்து 2-வது அப்பீல் நம்பர் 1873-ல் அப்பீல் பிரதிவாதிக்கும் K. ஸ்ரீனிவாஸய்யங்காரும் A. கிருஷ்ணஸ்வாமி அய்யரும்.

1913-ம் ஞுத்து 2 வது அப்பீல் நம்பர் 1873ல் அப்பீல் வாதிக்கும் 1913-ம்ஞுத்து 303, 304ம் நம்பர் அப்பீல்களில் அப்பீல் பிரதிவாதிக்கு S. வெங்கடாசாரியாரும் ஆஜரானார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்ப்பு.

வாலிஸ், சீ, ஜ.—1318, 1319-ம் பசலிகுத்தகை தொகைகளுக்காக வியாச்சியஞ்செய்யப்பட்டதில் தன்னுடைய சுவாதீனத்திற்கு 1313, 1314 ம் பசலிகளில் தொந்தரவு ஏற்பட்டதால் தனக்கு குத்தகை கொடுத்தவனாகிய வாதியின் பேரில் நியாயப்படி நஷ்டியை உளவடைத்துக் கொள்ளும்படியான பாத்தியமிருப்பதாக இந்தக்கேசுகளில் அப்பீல் வாதி கக்ஷியாடினான். வாதியின் வியாச்சிய மூலம் ஏற்பட்ட விஷயமாகவே நிர்ணயிக்கப்படாத நஷ்டிக்கும் பாத்தியமேற்படுகிறதனால் அதை நியாயப்படி உளவடைத்துக் கொள்ளவேண்டுமென்று கக்ஷிசொல்லலாமென்பது இந்தக் கோர்ட்டில் தெளிவாய்த் தீர்மானிக்கப்பட்ட விஷயம். ஆனால் அது வியாச்சியத் தேதியில் காலாவதியால் தடைபட்டிருந்தாலுங் கூட இதைப்போலொத்த கேசில் அப்படிப்பட்ட பாத்தியத்தைக் கொண்டாடலாமென்று நான்ஒப்புக்கொள்ளமுடியாது. லிமிடேஷன் சட்டத்தில்செய்யப்பட்ட ஏற்பாடுகளிலிருந்தும் இவ்விதமாய்த் தப்பித்துக் கொள்ள விடுவது நியாயமாகவாவது அல்லது சான்ஸரி கோர்ட்டாரால் கையாளப்படும் நியாயவிதிக்கு ஒற்றுமையாகவாவது நிச்சயமாய் இராது. என்னால் பார்வையிடப்பட்டஎன்னுடைய பாண்டித்தியமுள்ள என் சகோதரரின் தீர்ப்பில் ஆதாரங்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. சிதம்பர முதலியாருக்கும் கிருஷ்ணஸாமி அய்யருக்கும் நடந்து 1915-ம் ஞுத்து 28-ம. லா. ஜ. 285 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசு இந்த அபிப்பிராயத்திற்குப் பொருத்தமில்லாமலிருக்கும் விஷயத்தில் அந்தக் கேசை என்னால் அனுசரிக்கமுடியவில்லை. இந்தக்கேசு சம்பந்தப்பட்டமட்டில் எந்தப் பசலிகளின் குத்தகைத் தொகைக்காக தாவாச் செய்யப்பட்டதோ அந்தப் பசலிகளில் பிரதிவாதிக்குப் பூரணமான சுவாதீனமும் அனுபோகமுமிருந்தது. ஒத்திவைத்தவர் ஒத்திவாங்கினவர்களுக்குள்ளும் நம்பிக்கையான ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டவர்(Trustee)எவருடைய,நன்மைக்காக அந்தஸ்தானம் எற்படுத்தபட்டதோ அவர்(Cestequi trust) இவர்களுக்கும் கணக்குப் பார்ப்பதில் ஏற்படக்கூடிய எதிர் பாத்தியங்களின் தன்மைவேறுவிதமாக விருக்கிறது. நான் சொல்லிய சங்கதிகள் அவ்விதமான விஷயங்களுக்குப் பொருந்தக் கூடியதாக வைத்துக் கொள்ள எனக்கு விருப்பமில்லை மற்ற விஷயங்களில் என்னுடைய பாண்டித்திய முள்ள சகோதரரால் சொல்லப்பட்ட தீர்ப்புக்கு நானும் சம்மதிக்கிறேன்.

சேஷகிரி அய்யர், ஜ;—குத்தகைத் தொகைக்காக குத்தகை கொடுத்தவனால் செய்யப்பட்ட வியாச்சியத்தில் குத்தகை பெற்றவன் முன் வருஷங்களில் சமாதானமாய் அனுபவிப்பதற்குத் தடையேற்பட்டதாலுண்டானதும் காலாவதியால் பாதிக்கப்பட்டதுமான நிர்ணயிக்கப்படாத நஷ்டத்தொகையை உளவடைத்துக் கொள்ளவேண்டுமென்று கக்ஷி செய்யலாமா என்பது தான் இந்த அப்பீல்களில் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம். அப்படி செய்ய முடி

யாது என்பது என்னுடைய் மறுமொழி. சிவில் புரொசீஜர்கோடு 7-வது ஆர்டர் 6 வது ரூல்படி தொகை சட்டப்படி கிடைக்க முடியாதிருக்கும் பொழுது உளவடைத்துக் கொள்ளும்படியான பாத்தியம் கொண்டாடத்தக்கதில்லை. காலாவதி தோஷத்தாலோ அல்லது வேறுகாரணத்தாலோ தடைபட்டுச் செல்லக் கூடாத எந்தபாத்தியங்களையும் இதில் சேர்த்துக்கொள்ளப்படும். இந்த விதி சட்டப்படிஉளவடைத்துக் கொள்ளுதல் என்பதற்கு மட்டும் ஏற்பட்டது என்பது வாஸ்தவந்தான். வியாச்சியங் கொண்டுவரப்பட்ட விஷய சம்பந்தமாய்க் கேட்கக்கூடிய நிர்ணயிக்கப்படாத நஷ்டித்தொகையை நியாயமாய் உளவடைத்துக் கொள்ள வேண்டுமென்று பிரதிவாதி கேட்பதை சிவில்ப்ரோசீஜர் கோடு தடுக்கவில்லை யென்று இந்த தேசத்தில்அநேக கேசுகளில்தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும், நியாயம்சட்டத்தையனுசரித்திருக்கிறது என்ற கொள்கையின் காரணத்தால் சட்டப்படி கேட்கக்கூடிய தொகைகள் சம்பந்தப்பட்டமட்டில் தான் ஷை கக்ஷிசொல்லக்கூடியது என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். பிட்டன் என்பவருக்கும் க்ம்மெக்லெஸ்பீல்டு என்பவருக்கும் நடந்த 1684-ம் ௵த்து 1 வெர்னன் 287-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசில் லார்டு நார்த் ஷை கொள்கையைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார் "சட்டசபையாரால் சட்டத்தில் காலம் குறிப்பிடப்பட்டிருக்கும் பொழுது பார்லிமெண்டாரால் வரையறுக்கப்பட்ட காலத்திற்குமேற்பட்ட காலாதீதங்களை நியாயம் (Equity) ஒப்புக் கொள்ளுவதுவிபரீதமாயிருந்திருக்கும். ஆகையால் சட்டப்படிக்குள்ள பாத்தியம் பார்லிமெண்டாரால் தடை செய்யப்பட்டிருக்கும் கேசுகளிலெல்லாம், அது விஷயமாய் நியாயப்படிக்குள்ள பாத்தியமும் அதே தடையால் முடிவு பெற்றிருக்கிறது. ஹோவெண்டனுக்கும் லார்டு ஆன்ஸ்லீக்கும் நடந்த 1806-ம் ௵த்து ஷ. லெப். 630-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசில் லார்டு லிடெஸ்டேல் மேற்சொல்லியதற்குச் சமமானதெளிவுடன் பின்வருமாறு சொல்லியிருக்கிறார் "லிமிடேஷன் சட்டங்களுக்கு நியாய பரிபாலனம் செய்யும் கோர்ட்டுகள் உட்பட்டவைகள் அல்லவென்று சொல்லப்படுகிறது......நியாயம் பரிபாலனஞ் செய்யும் கோர்ட்டுகள் சட்டங்களுக்குஸாம்யோபமான தன்மையாய்(ஒத்தன்மையாய் அல்லது துல்லியமாய்) நடந்து கொள்ளுகிறதென்று சொல்லுவது தப்பு என்றுநான அபிப்பிராயப்படுகிறேன்; அவைகள்சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுகின்றன.

"ஆகையால் நியாய பரிபாலனஞ் செய்யும் கோர்ட்டுகள் சட்டப்படிக்குள்ள எல்லா பாத்தியங்கள் சம்பந்தமாயும் சட்டப்படிக்குக் கேட்கக்கூடியவைகள் சம்பந்தமாயும் லிமிடேஷன் சட்டத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டுமென்றும் அதன் ஏற்பாடுகளின் கருத்துக்கு விரோதமாய் நடந்து கொள்ளக்கூடாதென்றும் நான் நினைக்கிறேன், சிவில் புரோசீஜர் கோடு 20 வது ஆர்டர் 19 வது ரூலில் இது இந்திய சட்ட நிர்மாண சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அந்த ரூலின் 1-வது பிரிவுப்படி உளவடைத்துக் கொள்ளும் பாத்தியம் எதிர் வ்யாச்சியத்தில் பிராதாக மதிக்கப் படுகிறதுடன் பிரதிவாதிபக்ஷத்தில் டிக்ரி பிறப்பித்தலும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 8 வது ஆர்டர் 6 வது ரூலின் படிக்குள்ள அல்லது வேறெவ்விதமாயுள்ள உளவடைக்கும் பாத்தியத்திற்கும் இந்த ரூல் பொருந்துமென்று 3-வது பிரிவு சொல்லுகிறது. ஆகையால் பிரதிவாதியின் பாத்தியம் காலாவதியால் தடைபட்டிருப்பதால் நியாயப்படி உளவடைக்கும் பாத்தியங் கொண்டாடத் தக்கதில்லை யென்று நான் அபிப்பிராயப் படுகிறேன். இதற்கு விலக்கு சிலகேசுகளில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது, நம்பிக்கை யான ஸ்தானம் ஏற்றுக் கொண்டவர் (Trustee) எவருடைய நன்மைக்காக நம்பிக்கையான ஸ்தானம் ஏற்றுக் கொள்ளப்பட்டதே அவர் (Cesti que trust) இவர்களுக்குள்ளிருப்பது போல கக்ஷிக்காரர்களுக்குள் நம்பிக்கையேற்படும்படியான சம்பந்தமும் கணக்குக் கொடுக்கவேண்டிய பொறுப்பு மிருக்குமானால் கடைசியாகக் கணக்குகளை ஒத்துக்கொள்ளும் பொழுது தடைபட்டுப் போன பாத்தியதைகளைக் கூடக் கணக்கிலெடுத்துக் கொள்ளலாம். இந்தியாவில் சில தீர்ப்புக்களின் மூலமாய் கக்ஷிக்காரர்களுக்குள் கணக்கு ஒப்புவிக்கவேண்டிய பொறுப்பு இருக்கிறது. என்றகாரணத்தால் போக்கியங்களும் இந்தத் விலக்கில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பரசுராமபட்டருக்கும், வெங்கடாசலபட்டருக்கும் நடந்த 1913-ம் ௵த்து 25 ம. லா. ஜ. 561-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசையும் சிதம்பர முதலியாருக்கும் கிருஷ்ணசாமி பிள்ளைக்கும் நடந்த 1916 ம் ௵த்து 28 ம. லா. ஜ, 285-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசையும் இராமதாரி சிங்குக்கும்,பரமாநந்தசிங்குக்கும் நடந்த 1913-ம்௵த்து 19 க. வீ. நோ. 1183ல பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசையும் பார்வையிடவும். இந்த கேசுகள் சரியாய் தீர்மானிக்கப் பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி இப்பொழுது சொல்லவேண்டியஅவசியமில்லை. குத்தகை கொடுத்தவனுக்கும் குத்தகைபெற்றவனுக்கு முள்ள வியாச்சியங்களையும் ஷை விலக்குடன் சேர்த்துக் கொள்ள யாதொரு காரணமும் எனக்குப் புலப்படவில்லை. ஆக்ஷேபனை மிமோராண்டம் சம்பந்தமாய் பிரதிவாதிக்கு ரூ 100 க்கு ரூ 9 வீதம் வட்டிமட்டுந்தான் கிடைக்கப்பாத்திய மென்றும் வட்டிக்குவட்டி கிடைக்க பாத்திய மில்லையென்றும் நாங்கள் நினைக்கிறோம். குத்தகை பாக்கி யேற்பட்ட தேதிகளிலிருந்து

தனக்குச் செல்லவேண்டிய குத்தகைபாக்கிக்கு ரூ 100 க்கு ரூ 6 வீதம்வட்டிகிடைக்கவாதிக்குப்பாத்தியமுண்டு. முன் வியாச்சியத்தில் மடத்தைக்கட்டுப்படுத்தக்கூடியது என்று தீர்மானிக்கப்பட்ட தொகை ரூ 5130 க்கும் தாண்டவராயதேசிகர் இறந்தகாலத்திற்கு முன் பிரதிவாதிக்கு வட்டி கிடைக்கப்பாத்தியமில்லை யென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். 1312 ம் பசலியிலிருந்துமட்டும் வட்டிக்குத் தீர்ப்புச் செய்து டிக்ரியில் மாறுதல் செய்யவேண்டும். இந்தத் தீர்மானங்கள் 1913 ம் ௵க்குஇரண்டாவதுஅப்பீல் 1873-ம் நம்பருக்கும் பொருத்தமா யிருக்கின்றன. இந்த மாறுதலுக்குட்பட்டு இரண்டாவது அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு அப்பீல்களுக்குமுள்ள ஆக்ஷேபனை மிமோராண்டம் சம்பந்தமாயும் இரண்டாவது அப்பீல் சம்பந்தமாயுமுள்ள வீதிப்புப்படிக்குள்ள சிலவுகளை கக்ஷிக்காரர்கள் ஒருவருக்கொருவர் கொடுக்கவும் பெற்றுக்கொள்ளவும் வேண்டியது.

I. L. R. 39. Mad. 939—இ. லா. ரி. 39 ம. 939.

நெ. 36.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் கூட்ஸ்டிராட்டர்

1912 ௵ 2-வது அப்பீல் நெ. 1636.

கர்ரிராமையாவும் மற்றவர்களும (4, 5, பிரதிவாதிகள்)—அப்பீல் வாதிகள்.

வில்லூரி ஜகந்நாதனும் வேறு 9-பேர்களும் (வாதிகளும் 1, 3, 6, 11, பிரதிவாதிகளும்)—அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாயின்ட்:—(சென்னபட்டணம் 1894-ம் ௵த்திய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின் கிராம ஊழிய ஆக்ட்டு) (Proprietary Estates Village Service Act) 5-வது பிரிவுப்படிக்கும் 10-வது பிரிவு 2-வது உட்பிரிவுப்படிக்கும் ஊழிய இனம் சொத்துக்குத்தீர்வை யேற்படுத்துவதால ஷை சொத்தில் பரம்பரை பாத்தியமுள்ள அவிபக்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனுடைய பாத்தியத்தை அற்றுப் போக மாட்டாதென்றும்.

ஊழிய இனம் சொத்தைப் பராதீனஞ்செய்வது செல்லத் தக்கதில்லையென்றும், அந்த சொத்துக்குப் பின்னீடு தீர்வையேற்படுத்தப் பட்டபோதிலும் பராதீனம்பெற்றவன் தனக்கு அனுகூலமாய் டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் (Transfer of Property-Act) 43-வது பிரிவின் உதவியைப்பெற முடியாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ராமஸாமி நாயக்கனுக்கும் ராமஸாமி செட்டிக்கும்நடந்த 1907௵த்து 30ம. 255ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசும் நாபரிஸாஹு-வுக்கும் சிவகொரிதன் நாயுடுவுக்கும் நடந்த 1913௵த்து ம. வீ. நோ, 415ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசும் பச்சுராமய்யாவுக்கும் பரசாக்ஷிக்கும் நடந்த 1913௵ ம. வீ. நோ 999-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கும் கேசும் எடுத்து சொல்லப்பட்டது.

மாதா மகரிடமிருந்து (தாயைப் பெற்ற பாட்டனிடமிருந்து) அடையப்பட்ட சொத்து பூர்வீக சொத்தென்றும் அதில் பேரன்மார்களுக்கு மிதாக்ஷரசட்டத்தின்படி பிறப்பினால் பாத்தியதை ஏற்படுகிறதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கேசுகள் மறுபடி சோதிக்கப்பட்டது.

விசாகபட்டணம் டிஸ்டிரிக்ட் முன்சீபு டீ. ஸோமராவ் பந்துலு கோர்ட்டு 1910௵த்து அசல்நம்பர் 108-ல் பிறப்பிவிக்கப்பட்ட தீர்ப்பின்பேரில் விசாகபட்டணம் டெம்பரரி ஸபார்டிநேட்டு கோர்ட்டு 1911௵த்து 475 ம் நம்பர் அப்பீல் செய்யப்பட்டதில் மிஸ்டர் V. V. S. அவதானியால் பிறப்பிவிக்கப்பட்ட டிக்கிரியின்பேரில் இந்த இரண்டாவது அப்பீல் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

தீர்ப்பிலிருந்தே கேஸின் விஷயங்கள்விளங்கும்.

வக்கீல்கள்:—அப்பீல் வாதிகளுக்கு ஹானரபில் ராவ்பஹதூர் B. N. சர்மாவும் முதல் அப்பீல் பிரதிவாதிக்கு வீ. இராமேசமும் ஆஜரானார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பேன்ஸரால்:—அடியில் வருமாறு தீர்ப்பு சொல்லப்பட்டது.

முதல் பிரதிவாதியின் பேரில் 1905ம் வருஷம் தீர்வை யேற்படுத்தப்பட்ட 'பாரிகி' ஊழிய இனம் சொத்தைப் பாகஞ்செய்துக் கொள்வதற்காக இந்த வியாச்சியம் கொண்டுவரப்பட்டது. தாவா செய்த பிரதிவாதிகள், 1906௵ பிறப்பிவிக்கப்பட்ட ஒரு கிரயதஸ்தவேசு மூலமாய் முதல் பிரதிவாதி யிடமிருந்தும் அவன் மக்கள் மூவரிடமிருந்தும் கிரயம் பெற்றவர்கள். வாதி, 1-வது பிரதிவாதியின் மூத்தமகனிடமிருந்தும் அவனுடைய சகோதரர்கள் இருவர்களிடமிருந்தும் 1909-ம் வருஷத்தில் கிரயம் பெற்றவன். குடும்பப் பொதுசொத்தில் சகோதரர்களுக்கு மூன்றிலிரண்டு பாகமும் முதல் பிரதிவாதிவாதியின் மகனுக்குப் பதினைந்திலொருபாகமும் பாத்தியமாகையால் பூரா இனமில் பதினைந்தில் பதினொரு பாகத்தை அடைவதற்காக வாதியால் தாவாச்செய்யப்பட்டது. அந்தப்படியே அவனுக்கு முதலாவது கோர்ட்டில் தீர்ப்புசெய்யப்பட்டு அப்பீலிலும் உறுதி செய்யப்பட்டது.

தீர்வை யேற்படுத்துவதற்கு முன் 2, 3, பிரதிவாதிகளுக்கு விக்கிரயிக்கக்கூடிய பாத்தியம் உண்டா என்பது தான் இப்பொழுது முதலாவது தாவாச் செய்யப்படும் விஷயமாயிருக்கிறது. B. அடையாள தஸ்தவேசு மூலமாய்ச்செய்யப்பட்ட கிரயம் தீர்வை யேற்படுத்தியதற்குப்பின் 1909வருஷம் செப்டம்

பர்ரீ 21வல் பிறந்ததால் அப்பொழுது அவர்களுக்குரியபாத்தியங்கள் எல்லாவற்றையும் அடையும்படி செய்தது என்பது ஷை தாவாவுக்கு சுருக்கமானமறுமொழி. கிரயம் செய்து கொடுப்பதாக முந்திய ஒப்பந்தம் 1906ம்வருஷத்தில்இருந்தது. அது தாவாவை பாதிக்கவில்லை. அந்தக்காலத்தில் 1-முதல் 3-வரை பிரதிவாதிகளுடைய தாயாராகிய செல்லம்மா என்பவள் உயிரோடிருந்ததாகசூசிப்பிக்கப்படுகிறது. 5-அல்லது 6-வருஷங்களுக்குமுன் அவள் இறந்துபோனதாக ஸபார்டி நேட் ஜட்ஜி தீர்மானித்திருக்கிறார். அது சுமார் 1906ம்வருஷம் அல்லது 1907ம்வருஷம் ஆகிறது; கிரயக்காலத்தில் அவள் உயிரோடிருந்தால் அவளுடைய பத்தான்மையில் அப்பொழுது மிகுந்து கொண்டிருந்த பாகங்களைக் கிரயஞ்செய்ய 2, 3, பிரதிவாதிகளுக்குப்பாத்தியமில்லையென்று வாதிக்கப்படுகிறது. நாம் எடுத்துக்கொள்ள வேண்டியபடி ஸபார்டி நேட் ஜட்ஜின் தீர்மானம் சரியாயிருக்கும் விஷயத்தில் 1909-ம்வருஷத்தில் நடந்தகிரயக்காலத்தில் செல்லம்மா நிச்சயமாய் உயிரோடிருக்கவில்லை ஆனல் பின்வருமாறு இருக்கும் 1894ம் வருஷத்து மதராஸ் 2-வது ஆக்ட் 10-வது பிரிவு 2-வதுஉட்பிரிவு ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது அதாவது "எல்லாப்பரம்பரை கிராம உத்தியோகங்களுக்கும் வாரிசு பாத்தியம் தென்னிந்தியாவிலுள்ள பாகிக்கக்கூடாத ஜமீன்தாரிகளுக்கு ஏற்பட்ட வாரிசு பாத்தியத்தின் தன்மையாகிய பொதுவழக்கத்தின் படிக்கும் விதிப்படிக்குமுள்ள மூத்தவாரிசு (Primogeniture) முறைமைப்படி ஒரே வாரிசை அடையவேண்டியது."

இதனல் உத்தியோகத்தின் வருமானங்களில் எவ்விதப்பொது பாத்தியத்தையும் கொண்டாடுகிறவனுடைய பாத்தியங்களெல்லாம் போய்விடுகிறதென்று தாவாச்செய்யப்படுகிறது. மூலபுருஷனுடையபுத்திரியின் மகனாக 1-வது பிரதிவாதி 'பாரிகி' உத்தியோகத்தை அடைந்தபிற்பாடு ஷையார் பேருக்குத் தனிமையாய்த் தீர்வை யேற்படுத்தப்பட்ட நிலங்களில் அவனுடைய சகோதரர் ஒருவருக்கும் எவ்விதபாத்தியமும் கிடையாதென்று வாதிக்கப்படுகிறது. தீர்வையேறபடுத்தியதால், இனமில்பரம்பரை பாத்தியதையுடைய பொதுக்குடும்பத்தைச்சேர்ந்தவர்களுடைய பாத்தியதைகளும் கெட்டுப் போகாதென்று நாம் தெளிவாய் அபிப்பிராயப்படுகிறோம். இந்த விஷயம் குண்ணய்யன் என்பவருக்கும் காமாக்ஷி அய்யர் என்பவருக்கும்நடந்து 1903-ம் ஞூத்தில் 26-ம: 339ல பிரசுரிகப்பட்டிருக்கும் கேசில் பூர்ணமாய் ஆலோசிக்கப்பட்டுத் தீர்வையேற்படுத்தப் பட்ட ஊழியஇனம் சொத்துக்கள் பரம்பரை உத்தியோகசம்பந்தமில்லாமல் சாதாரணசொத்தாகவே பட்டாதாருக்கு இறங்கினல் அதற்கு எவ்விதமான தன்மையிருக்குமோ அதேதன்மையை உடைத்தானதாயிருக்குமென்றும் அவைகளைப் பாகிக்கக்கூடிய பொதுக்குடும்ப சொத்தாகவே பட்டாதாரிடமிருந்துவருகிறதென்றும் முடிவுசெய்யப்பட்டது. கிராம உத்தியோகங்களுக்கு வாரிசுமுறமையைப்பற்றியே 1894-ம் ஞூத்து மதராஸ் 2-வது ஆக்ட் 10-வதுபிரிவு 2-வது உட்பிரிவு வெளிப்படையாய்ச் சொல்கிறது அந்தபாத்தியம் மூத்தவாரிசு முறைமை என்னும் விதிக்குட்பட்டது என்று அது சொல்லுகிறது. சொத்து அன்னியன்கைப்படும் விஷயத்தில் அதைத்திருப்ப அடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் ஆக்டில் லப் பட்டிருந்தும் உத்தியோகத்தின் வருமானமாயிருக்கிற நிலங்களில் குடும்பத்திற்கிருக்கிற பாத்தியதையை பாதிக்கத்தக்கதாய் ஷைபிரிவில்யாதொன்றும் சொல்லப்படவில்லை. அதேவிஷயம் வெங்கடாளன்பவருக்கும்-இராமா என்பவருக்கும் நடந்து 1885-ம் ஞூத்து 8-ம. 249-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசில் தீர்மானிக்கப்பட்டது. ஒரு பரம்பரை கிராமஉத்தியோகத்திற்கு பாத்தியதைகொண்டாடும் பொதுக்குடும்பஸ்தர்களுடைய பாத்தியதைகளுக்கு, குண்ணய்யன் என்பவருக்கும்-காமாக்ஷி அய்யர் என்பவருக்கும் நடந்தகேசிலுள்ளபிந்தியதீர்ப்பின்மூலமாய் சரியான ஆதாரங்கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரகிருத கேசில் கீழ்கோர்ட்டார்களால் குறிப்பிட்டுச்சொல்லப்பட்ட இந்தக்குடும்பத்தாருடைய நிலஅனுபோகத்தின் சரித்திரமானது இனமின் பரம்பரைத்தன்மையைப் பற்றியும் அதில் குடும்பத்திற்குள்ள மிராசு பாத்தியதையையும் இந்தஸ்திதியில் ஆக்ஷேபிக்க இடங்கொடுக்கவில்லை. பாகமானதாக ஒப்புக்கொள்ளப்பட்டவாவது அல்லது ருசுச்செய்யப்பட்டவாவது இல்லாததால் வாரிசுபாத்தியம் மேற்பட்டகாலத்தில் குடும்பப்பிரிவினையாயிருந்திருந்தால் கக்ஷிக்காரர்களுடைய பாத்தியங்கள் எவ்விதமாயிருக்குமென்று நாம் கவனிக்கத்தக்கதல்ல. அந்தப்பாயிண்டு இரண்டாவது அப்பீல் மிமோராண்டத்திலும் சொல்லப்படவில்லை.

மாதாமகரிடமிருந்து புத்திரியின் மக்களுக்குக் கிடைத்தசொத்தில் பேரன்களுக்கு மிதாக்ஷரசட்டப்படி பிறப்பு மூலமாய்ப்பாத்திய மேற்படும்படி அது பூர்வீக சொத்து ஆகுமா என்பது விவாதிக்கப்படும் அடுத்த விஷமாயிருக்கிறது. இந்தக் கேள்விக்கு, 'இல்லை' யென்று ஜவாபுசெய்யும் விஷயத்தில் 7-வது பிரதிவாதியாகிய 1-வது பிரதிவாதியின் மகனுக்கு பதினொதிலொருபாகத்தைத் தாவாச்செய்யும் அப்பீல் பிரதிவாதிகளுக்கு விற்கப்பாத்தியதை கிடையாது. அவர்கள் சயாப்பாத்தியதை கொண்டாடக் கூடியதெல்லாம் 2, 3, பிரதிவாதிகளுடைய மூன்றிலிருபாகத்திற்குத்தான் இந்தபிரசினைக்குத்தெளிவாய் 'ஆம்' என்று வைத்தியநாத ஐயருக்கும்-எக்ய நாராயணய்யருக்கும் நடந்து 1904-ம் ஞூத்து 27-ம. 382-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கும் கேசில் மறுமொழி யுரைக்கப்பட்டது. அதே பிரசினைக்கு 'இல்லை' யென்று யமுனுபிரஸாதுக்கும்-இராம பிரதாபருக்கும் நடந்து 1907-ஞூத்து 29-கல் 667-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசில் உத்தரம் சொல்லப்பட்டது. மேய்ன் (Mayne) என்பவருடைய் ஹிந்து லா 7-வது 8-வது பதிப்புகளில் 275-வது பாராசம்பந்தமான குறிப்புகளிலிருந்தும் மதராஸ் தீர்ப்பின் பிழையின்மையைப் பற்றிப் பாண்டித்தியமுள்ள ஷை கிரந்தகர்த்தருக்கு சந்தேகங்களிருந்ததாகத்தெரிகிறது. அது விஷயத்திற்கு ஒரு புல் பெஞ்சின் (Full Bench) அபிப்பிராயங்கேட்டனுப்பும்படி நம்மிடம் கேட்கப்படுகிறது. ஆனல் அவ்விதங் கேட்டனுப்பும்படியாய் இந்தக் கேசு அவ்வளவு முக்கியமானதென்றுவது அல்லது இந்தக் கோர்ட்டு சம்பந்தப்பட்டவரையில் சட்டத்தினுடையதன்மை வாஸ்தவமாய் ஸந்தேகப்படக்கூடிய ஸ்திதியிலிருக்கிறதென்றுவது நாம் நினைக்கவில்லை.

கோல்ப்ருக்என்பவருடையமிதாக்ஷரத்தில் "பூர்வீக" (சொத்து) என்றபதம் பிரயோகிக்கப்பட்டிருப்பதற்கு பிதாமகர் சம்பந்தமானது என்பது சரியான மொழிபெயர்ப்பென்றும் மூலத்தில்பிரயோகிக்கப்பட்டிருக்கும் பதம் "பிதாமகருடைய" என்பது என்றும் அலஹபாத்து பாண்டித்தியமுள்ள ஜட்ஜிகளால் எடுத்துக்காட்டப்பட்டது. "பூர்வீகசொத்து" என்றபதங்களின் அர்த்தத்தை விசாரிக்கப்புகுந்து அவைகள் "பிறப்பு மூலமாய்ப் புத்திரர்களுக்குத் தங்களுடைய தகப்பனுருடன் சேர்ந்தபாத்திய மேற்படக்கூடிய சொத்து" என்றமிதமான அர்த்தத்தில் மிதாக்ஷரத்தில் பிரயோகிக்கப் பட்டிருப்பதாக அவர்கள் தீர்மானித்தார்கள். "சொத்து பூர்வீகமானதாயில்லாமல் பொதுவானதாயிருக்கலாமென்பது மிதாக்ஷரசட்டத்தின் ஒரு தெளிவானவிதி" என்றும் சொல்லியிருக்கிறார்கள். வெங்கயம்மகாருவுக்கும்-வெங்கடரமணய்யம்ம பஹதூர் காருவுக்கும் நடந்து 1902-ம் ஞூத்து 25 ம. 678-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கும் கேசில் "பூர்வீகசொத்து" என்று பிரிவி கௌன்ஸிலில் பதங்கள் பிரயோகித்திருப்பதற்கு இறந்து போகாமல் மீந்திருப்பவனுக்குச் சொத்துக் கிடைக்கிறது (Survivorship) என்னும் விதிக்குட்பட்ட பொதுக் குடும்பு சொத்து என்பதாக அவர்கள் (அலஹபாத்து ஹைகோர்ட்டு ஜட்ஜிகள்) விசாலமான அர்த்தம் சொல்லியிருக்கிறார்கள்.

கருப்பாயி நாச்சியாருக்கும்-சங்கரநாராயணன் செட்டியாருக்கும் நடந்து 1904-ம் ஞூத்து 27-மது 300-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும்கேசில் எதைப்பூர்வீக சொத்தாகக் கொள்ளலாமென்ற விஷயம் மறுபடியும் தாவாசெய்யப்பட்டது. அதுவிஷயமாய் புல்பெஞ்சு சொன்னதாவது "மிதாக்ஷரபொதுக்குடும்ப முறைமைப்படிசேர்ந்தபாத்தியஸ்தர்களுடையஆண்மக்கள் பிறப்புமூலமாய்த் தங்களுடைய தகப்பனுருடன் சேர்ந்தபாத்தியஸ்தர்கள் ஆகாதபடி பொதுக்குடும்ப மிருக்க முடியாது" சுதர்சனம் மேஸ்திரிக்கும்-நரசிம்மலு மேஸ்திரிக்கும் நடந்து 1902-ம் ஞூத்து 25-ம. 149-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசைப் பார்வையிடவும். ஆனபடியால் கனம் ஜட்ஜிகளுடைய தீர்ப்பில் 'பூர்வீக சொத்து' என்றபதப்பிரயோகத்திற்கு 'புத்திரனுக்குப்பிறப்பு மூலமாய்த்தகப்பனுருடன் சமமானபாத்தியம் ஏற்படக்கூடிய சொத்து, என்ற விசேஷ அர்த்தத்தைத்தவிர வேறுவிதமாக அர்த்தங்கொடுக்கும் விஷயத்தில் அவ்விததீர்மானததால் மிதாக்ஷரசட்டத்தில் சொல்லப்படாத ஒருவிதமான பொதுக்குடும்ப சொத்து ஏற்படுவதாயிருக்கும். முனுசாமி செட்டிக்கும்-மருதம்மாளுக்கும் நடந்து 1911-ம் ஞூத்து 34-ம. 211-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் புல் பெஞ்சில் தீர்மானிக்கப்பட்ட கேசிலும் அதேவிதமான அபிப்பிராயங்கள் சொல்லப்படுகின்றன. இந்த அபிப்பிராயங்கள் கேசின்தீர்மானத்திற்கு அவசியமில்லா (Obiter dicta) தன்மையுடையதென்று சொல்லப்படுகிறது. அந்தக்கேசுகளில் தீர்மானிக்கபபடவேண்டியவிஷயங்களுக்கு அவைகள் அவசியமில்லாமலிருந்திருக்கலாம். ஆனல் அவைகள். இந்தக் கோர்ட்டின் தீர்மானங்களின் தெளிவான போக்கு ஒரேவிதத்தில் தானிருக்கிறது, அதாவது தங்களுடைய பாதாமகரிடமிருந்து கிடைக்கும் சொத்தில் பேரன்மார்களுக்குப்பிறப்பு மூலமாய் பாத்திய மேற்படுவதற்கு அது அனுகுணமாயிருக்கிறது என்பதைக்காட்டுவதற்குப்போதுமானதாயிருக்கிறது. ஆத்மவிஷயங்களுக்கு தௌஹித்திரன் பௌத்ரனுக்குச் சமானமானவன் என்று சொல்லியிருக்கிற சில மூலங்களைக் குறிப்பிட்டுச் சொல்லித் தங்களுடைய அபிப்பிராயத்தை புல்பெஞ்சு ஜட்ஜிகள் உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

நாம் எடுத்துச்சொல்லிய கருப்பாயிநாச்சியாருக்கும்-சங்கர நாராயண செட்டிக்கும் நடந்த புல் பெஞ்சு கேசின் தீர்ப்பில் முத்தயன் செட்டிக்கும்-சிவகிரி ஜமீன்தாருக்கும் நடந்து 1879-ஞூத்தில் 3 ம. 370-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசிலும், சிவகங்கை ஜமீன்தாருக்கும் லக்ஷ்மணனுக்கும் நடந்து 1886-ம் ஞூத்தில் 9 ம. 188-ல் பிரசுரிககப்பட்டிருக்கும் கேசிலும் செய்யப்பட்டிருக்கும் முன் தீர்மானங்கள் ஆலோசிக்சப்பட்டுவாதிக்கப்பட்டதால் அவைகள் நம்முடைய தீர்மானத்தைப்பாதிக்ககூடியதல்ல. தவிரவும் அவார்சிங்குக்கும்-தாகார்சிங்குக்கும் நடந்து 1908-ம்ஞூத்து 35கல் 1039 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் பிரிவி கௌன்ஸிலால் செய்யப்பட்ட பிந்திய ஒரு தீர்மானத்திலிருந்தும் ஷை கௌன்ஸில் ஜட்ஜிகள் "பூர்வீக" என்ற பதத்தை என்ன அர்த்தத்தில் பிரயோகித்தார்கள் என்பது விளங்குகிறதாக வாதிக்கப்படுகிறது. ஆனல் ஷை ஜட்ஜிகள் பஞ்சாப் வழக்கமாகிய சட்டசம்பந்தமான ஒரு கேசைத் தீர்மானித்ததால் பிரயோகிக்கப்பட்டபதத்திற்குவேறு

சந்தர்ப்பத்தில் கொடுக்கக்கூடிய அர்த்தத்தைக் கொடுப்பது சரியாயிராதென்று நாம் எண்ணுகிறோம்.

அப்பீல் வாதிகளுக்காகச் செய்யப்பட்ட அடுத்த வாதம் என்னவென்றால் 1900-ம் ஹு ஏப்ரல் மீ 12உ பிறப்பிவிக்கப்பட்ட ஒத்தி தஸ்தாவேஜுப்படி ஷை ஒத்தி மீட்கப்படும் வரை தங்களுக்குச் சுவாதீனத்திலிருக்கப்பாத்தியமிருக்கிறதென்பது இந்தவிஷயம் ஸ்டேட்டு மெண்டில் சொல்லப்படவுமில்லை. அதைப்பற்றி இஷியூ ஏற்படவுமில்லை கிராம உத்தியோகங்களுக்கு ஏற்பட்ட வரும்படிகளைப் பராதீனப்படுத்துதல் அல்லது அவைகளை எவ்விதத்திலும் வில்லங்கப்படுத்துதல் முதலானது 1895-ம் ஹுத்து மதராஸ் 3-வது ஆக்ட் 5-வது பிரிவுப்படி சட்ட விரோதமானதென்று ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுவதே ஷை கக்ஷிக்குப் போதுமான ஜவாபாயிருக்கிறது. நரபரிசாஹுவுக்கும் சிவகொரிதன்னாயுடுவுக்கும் நடந்த கேஸிலும் பச்சு ராமய்யாவுக்கும் பரசாக்ஷிக்கும் நடந்தகேஸிலும் ஊழிய இனும் சொத்தைப்பராதீனப் படுத்துவது முற்றிலும் செல்லாதென்றும் இனும் சொத்துக்குப்பின்னால் தீர்வை ஏற்படுத்தப்பட்டாலும் பராதீனம் பெற்றவன் தனக்கு அனுகூலமாய் டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட் (Transfer of Property Act) 43 வது பிரிவின் உதவியைக் கோரமுடியாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தத்தீர்ப்புகள் இராமசாமி நாய்க்கனுக்கும்-இராமசாமிசெட்டிக்கும் நடந்த 1907-ம் ஹுத்து 30-ம. 255 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேஸிலுள்ள தீர்மானத்தைப் பின்பற்றியிருக்கின்றன. செல்லக்கூடிய கிரயதஸ்தாவேசு மூலமாய்க் கிரயம் பெற்றவர்களுக்கு விரோதமாய் அப்பீல் வாதிகள் ஒத்தி தஸ்தவேசின் பலத்தின் பேரில் யாதொருபாத்தியதையும் கொண்டாடத்தக்கதில்லை யென்று அந்தத் தீர்ப்புக்கள் மூலமாய்த் தெளிவாகிறது.

பூரா சொத்திலிருந்தும் ரூ 10 மத்தியகால வருமானமென்று கணக்குப்பார்க்கப்பட்டதாயும் அதனால் அந்தத்தொகையில் பதினைந்தில் பதினொரு பங்குக்கு மேல் மத்தியகால வருமானத்திற்காகத் தீர்ப்புச் செய்திருக்கக் கூடாதென்றும் கடைசியாக வாதிக்கப்படுகிறது. வருஷம் 1-க்கு ரூ 10 வீதம் வாதி கேட்டதாயும் அதற்குக் கக்ஷியாடின பிரதிவாதிகள் யாதொரு ஆட்சேபணையும் செய்ய வில்லை யென்றும் டிஸ்டிரிக்டு முன்சீபு சொல்லி வாதிக்கு வருஷம் ஒன்றுக்கு கிடைக்கக்கூடிய தொகை ரூ 10 என்று தீர்மானித்தார். இவ்விதவிஷயத் தீர்மானத்திலிருந்தும் பூராச்சொத்திலிருந்தும் வருஷம் 1 க்கு ரூ10தான் வருமானமென்று டிஸ்டிரிக்டு முன்சீபு அபிப்பிராயங்கொண்டதாக அப்பீல் வாதிகள் கக்ஷிசொல்லுவது ஒப்பக்கூடியதல்ல.

ஆகையால் இரண்டாவது அப்பீல் சிலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

I. L. R 39 Mad. 930 இ. லா. ரி. 39 ம. 930.

நெ. 37.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் கூட்ஸ் டிராட்டர். மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ்.

1914-ம் ஹுத்து 2-வது அப்பீல் நெ. 325

அள. அரு. அருணாசலம் செட்டியாரும் வேறு மூன்று பேர்களும்(வாதிகள்) அப்பீல் வாதிகள்.

லக்ஷுமணய்யரும் மற்றொருவரும் (பிரதிவாதிகள்) அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாயின்ட்:—தனது பரிசீலனைக்கு உட்பட்டதில்லை யென்றோ அல்லது அதுபோன்ற வேறு காரணத்தினாலோ வியாச்சியத்தை எடுத்துக் கொள்ளத்தக்கதில்லையென்று கோர்ட்டாராலேயே தீர்மானிக்கப்படுகிற கேசுகளுக்கு மட்டும் (இந்தியன்) லிமிடேஷன் ஆக்ட் (1908-ம் ஹுத்து 9 வது ஆக்ட்) 14-வது பிரிவு பொருந்துமென்றும் வியாச்சியம் தோற்றுப் போகக்கூடியதாய்ச் சட்டத்தால்ஏற்படுத்தப்பட்ட ஏதோ ஒரு குறையைத் தெரிந்து கொண்டதின்பேரில் வாதியே தன்வியாச்சியத்தை நிறுத்திக் கொண்டால் அதற்கு ஷை பிரிவு பொருந்தத் தக்கதில்லை யென்றும்தீர்மானிக்கப்பட்டது.

வராஜலாலுக்கும்-ஸோமேசருக்கும் நடந்து 1905 ஹுத்து 29 பம். 219ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசும் உபேந்திரநாத் நாகசௌதிரிக்கும்-சூரியகாந்தாபாய் சௌதிரிக்கும், நடந்த 1913-ம் ஹுத்து 20-இ. கே, 205 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் சேகம் அனுசரிக்கப்பட்டது.

திருநெல்வேலி அடிஷனல் டிஸ்டிரிக்டு முன்சீபு டி. மன்ரோ பிரெஞ்சுகோர்ட்டில் 1910-ம் ஹுத்து அசல் நம்பர் 300 ல் பிறப்பிவிக்கப்பட்ட தீர்ப்பின் பேரில் செய்யப்பட்ட 1912-ம்ஹுத்து அப்பீல் நம்பர் 273-ல் திருநெல்வேலி ஆக்டிங் ஜில்லா ஜட்ஜ் டி. ஜி. வாலர் செய்த தீர்ப்பின்பேரில் இந்த இரண்டாவது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

கேசின் விபரம் தீர்ப்பிலிருந்து விளங்கும்.

லாயர்கள்:—அப்பீல்வாதிகளுக்குS. ஸ்ரீனிவாஸய்யங்காரும், முதல் அப்பீல் பிரதிவாதிக்கு E. S. சிதம்பரம்பிள்ளையும் 2-வது அப்பீல் பிரதிவாதிக்கு S.E. சங்கரய்யரும் ஆஜரானார்கள்.

கேசின் சுருக்கம்:—அடியில் வரும் 'தீர்ப்பு ஜஸ்டிஸ் கூட்ஸ் டிராட்டரால் சொல்லப்பட்டது.—இந்த அப்பீலில் கொஞ்சம் விசேஷமான ஒருவிஷயம் தீர்மானிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. பின்வரும் சந்தர்ப்பங்களால் அந்த விஷயம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்பீல்வாதி தன்னால் கொடுக்கப்பட்ட பணங்கள் சம்பந்தமாய் ஒருகாலத்தில் கூட்டாளிகளாயிருந்த இரண்டுபேர்கள் பேரில் இந்தவியாச்சியம் செய்திருக்கிறார் இந்த வியாச்சியக் காலத்திற்கு மூன்று வருஷத்திற்கு முன்னாகவே செல்ல வேண்டியிருந்த கணக்கிலுள்ள அநேகபாபத்துக்கள் விஷயமாய் இந்தவியாச்சியம் காலாவதியால் தடைபட்டிருக்கிறதா என்பதுதான் தீர்மானிக்கப்படவேண்டிய ஒரேவிஷயம் இந்த பாபத்துக்கள் சம்பந்தப்பட்டமட்டில் இந்தவியாச்சியம் தடைபட்டிருக்கிறதென்று கீழ்க்கோர்ட்டார்கள் தீர்மானஞ்செய்திருக்கிறார்கள். அந்தத்தீர்ப்பு தப்பானதென்றும் வாதி லிமிடேஷன் ஆக்ட்டு 14-வது பிரிவின் நன்மையை அடையப் பாத்திய முள்ளவனென்றும் காட்டுவதற்கு ஒரு சாமர்த்தியமானவாதம் நம்முன்புக்குச்செய்யப்பட்டது. அந்த உதவி தனக்குக் கிடைக்கத்தக்கதென்று சொல்லும் காரணங்கள் பின்வருமாறு: இந்த வியாச்சியத்திலுள்ள இதேகக்ஷிக்காரர்கள் பேரிலேயே முன் ஒரு வியாச்சியம் வாதியால் கொண்டுவரப்பட்டது முன்போடப்பட்டபடி அந்த வியாச்சியத்தில் இப்பொழுது தடைபட்டிருப்பதாகச் சொல்லும் பாத்யம் சேர்க்கப்பட்டிருந்தது. தப்பாய் சேர்த்திருத்தல் அல்லது வேறுகாரணத்தால் முன் கொண்டுவரப்பட்ட ஸ்திதியில்ஷை வியாச்சியத்தை செல்லத்தகாததாய்ச்செய்யக்கூடிய யாதொருபாத்தியமும் சேர்க்கப்படவில்லையென்று பார்வைக்குத் தெரிகிறது. ஆனால் ஷை வியாச்சியமத்தியில் பிராதைச் சீர்திருத்தவும் வியாச்சியம் அப்பொழுது இருந்த நிலைமையில் சேர்க்கக்கூடாத வியாச்சிய மூலங்களைச் சேர்த்ததால் வியாச்சியங் கெட்டுப்போகும்படி செய்தது என்பதை பலமாய்த் தாவாச் செய்யமுடியாதபடி வேறுவியாச்சிய மூலத்தைச்சேர்க்கவும் அவனுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அதன் பேரில் வியாச்சியம் நடந்து கொண்டிருந்த கோர்ட்டில் அதைச்சீர்திருத்த அல்லது அதை நிறுத்தி கொண்டு அந்த வியாச்சியசொத்து விஷயமாய் (எவ்விதத்திலும் இப்பொழுது அவனால் இந்தவியாச்சியத்தில்சேட்கப்பட்டிருக்கும் பரிகாரத்தோடு ஒத்திருக்கும் அம்சம் சம்பந்தப்பட்டமட்டிலாவது) வேறுவியாச்சியங் கொண்டுவர அனுமதிகேட்டான். ஆர்டர் XXIII ரூல் 1-ன்படி அவ்விதங்கேட்கக்கூடும். ஆர்டர் XXIII ரூல் 1–சொல்லுகிறதாவது:—

(1) வியாச்சியம் தாக்கல் செய்தபிறகு எந்தச்சமயத்திலும் எல்லாப்பிரதிவாதிகள்பேரிலுமாவது அல்லது அவர்களில் எவர்கள் சம்பந்தப்பட்டமட்டிலாவது தன்னுடைய வியாச்சியத்தைநிறுத்திக்கொள்ளவாவது தாவாவில் ஒருபாகத்தை விட்டு விடவாவது செய்யலாம்.

(2) (a) சட்டப்படி செய்யப்படவேண்டிய சில விஷயங்களைச் செய்யத் தவறிவிட்டதற்காக ஒரு வியாச்சியமானது தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும், (b) ஒரு தாவாவில் சொல்லப்பட்ட பூரா சங்கதியைப் பற்றியாவது, அல்லது அதில் ஒருபாகத்தைப்பற்றியாவது, வாதியை வேறு வியாச்சியம் கொண்டுவர அனுமதிகொடுக்கப் போதுமான முகாந்திரங்களிருக்கிறதென்றும் ஒருகோர்ட்டாருக்குத் திருப்தியாகத் தோணினால், கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோணுகிற நிபந்தனைகளின்பேரில், அந்த வியாச்சியத்தில் சம்பந்தப்பட்ட பூரா சங்கதியைப் பற்றியாவது அல்லது அதில் ஒரு பாகத்தைப்பற்றியாவது பின் வியாச்சியம் தொடரும் சுதந்திரத்தைக் கொடுத்து, வாதிக்கு தாவாதை நிறுத்திக் கொள்ளும்படிக்காவது அல்லது பிராதில் கண்ட சிலவிஷயங்களை விட்டுக்கொடுத்து விடும்படிக்காவது, கோர்ட்டார் அனுமதி கொடுக்கலாம்.

அதுதான் வாதி இந்தக்கேசில் செய்தது. தன்னுடைய தாவா முழுவதையும் அவன்விட்டு விட்டானாலும்சரி அல்லதுஇந்தஅப்பீலில் நமக்குச்சம்பந்தப்பட்ட பாகத்தைமட்டிலும் விட்டுவிட்டானாலும்சரி வேறுவியாச்சியங்கொண்டுவரக்கூடிய பாத்தியதை அவனுக்குக்கொடுக்கப்பட்டது. ஆர்டர் XXIII ரூல்2-பின்வருமாறு இருக்கிறது: "முந்தின ரூல்படி கொடுக்கப்பட்ட அனுமதியின்பேரில் செய்யப்பட்ட எந்தப் புது வியாச்சியத்திலும் முதல் வியாச்சியம் செய்யப்படாமலிருந்தால் எப்படியோ அதேவிதமாய் வாதி லிமிடேஷன் சட்டத்திற்குக்கட்டுப்பட்டிருக்கிறான்."

மேற் பார்வையிலேயே அது முடிவானதாகவும் அப்பீல் வாதியின் கேசுக்கு முற்றிலும் விரோதமாகவுமிருக்கிறதாகத் தோன்றுகிறது; ஆனால் ஷைரூல் லிமிடேஷன் சட்டத்திற்குச் சம்பந்தப்பட்ட விஷயத்தில் தாவாமுழுமையும்அந்தக் காலத்தில் ஊர்ஜிதத்திலிருந்த லிமிடேஷன் சட்டத்திற்கு உட்கருத்தாக உட்படுத்துகிறதென்றும் லிமிடேஷன்ஆக்டு 14-வதுபிரிவு வெளிப்படையாகத் தன்பாத்தியதைகளைக் காப்பாற்றி வைத்திருப்பதாகவும் அவன்வாதிக்கிறான். லிமிடேஷன் ஆக்டு 14-வது பிரிவு பின்வருமாறு இருக்கிறது:

"ஒரு வியாச்சியத்திற்கு ஏற்படுத்தப்பட்ட காலாவதியைக்கணக்கிடும்போது வாதி பிரதிவாதியின்பேரில் அசல் கோர்ட்டிலோ அல்லது அப்பீல் கோர்ட்டிலோ சரியான சுறுசுறுப்புடன் வேறொரு வியாச்சியத்தை நடத்திய காலத்தை விலக்கிவிடவேண்டும். ஆனால் அந்தவியாச்சியம் அதே வியாச்சியமூலத்தின் பேரில் ஏற்பட்டதாயும் தனது பரிசீலனைக்குட்பட்டதல்லாததினாலோ அல்லது வேறு காரணத்தாலோ அந்தவியாச்சியத்தை விசாரிக்கமுடியாத ஒரு கோர்ட்டில் நல்ல எண்ணத்துடன் நடத்தப்பட்டதாயிருக்கவேண்டும்."

இந்தக்கேசு சம்பந்தப்பட்டமட்டில் அது முற்றிலும் தெளிவாயில்லாமற் போனாலும் வாதி தன்னுடைய வியாச்சியத்தை மற்றொரு கோர்ட்டில் சரியான சுறுசுறுப்புடன் நடத்தவில்லை யென்று வெளிப்படையாய்த் தீர்மானிக்கப்படவில்லையென்றுஒப்புக்கொள்ளலாம். தன்னுடைய வியாச்சியம் கோர்ட்டாரால் தள்ளுபடிசெய்யப்படாமல் வியாச்சியம் தோற்றுப் போகத்தக்கதாய் சட்டத்திலேற்படுத்தப்பட்ட ஒரு குற்றத்தைத்தெரிந்துகொண்டதின்பேரில் வாதி தானாகவே வேணுமென்று வியாச்சியத்தை விட்டுவிட்டால் அந்தக்கேசில் அவனு

161195

டைய பாத்தியதைகளை 14-வது பிரிவு காப்பாற்றி வைக்குமா என்ற விஷயம் அப்பால் ஏற்படுகிறது. அந்தவிஷயம் சிரமமில்லாமல் இருக்கவில்லை. வாஜ்லாலுக்கும் சோமேசுருக்கும் நடந்த கேசில் வியாச்சியத்தை நிறுத்திக்கொண்ட கேசுக்கு லிமிடேஷன் ஆக்டிலுள்ள தாவாப்பிரிவு பொருத்த முடையதல்லவென்றும் அது கோர்ட்டாரின் செய்கையினால் வியாச்சியம் தவறிப்போகும் கேசுகளுக்குமட்டும், பொருந்துமென்றும் தீர்மானிக்கப்பட்டது. உபேந்திரநாத் நாக சௌதுரிக்கும் சூரியகாந்தராய் சௌதுரிக்கும் நடந்தகேசிலும் கல்கத்தா ஹைகோர்ட்டார் அதே தீர்மானத்திற்கு வந்தார்கள். அப்பீல் பிரதிவாதியால் சொல்லப்படும் கக்ஷிக்கு இவைகள் தெளிவான ஆதாரங்களாய் இருக்கின்றன. லிமிடேஷன் ஆக்டின் பிரிவுக்கு அவ்விதமான அர்த்தங் கொடுப்பதால் இரண்டு பிரிவுகளும் ஒன்றற்கொன்று விருத்தமாயில்லாம லிருப்பதாலும் அவைகளை ஒற்றுமைப் படுத்துவதற்காகக் கஷ்டப்பட்டு பொருட்படுத்த வேண்டிய அவசிய மில்லா திருப்பதாலும் ஷை தீர்ப்புகளை அனுஸரிக்கவேண்டியதென்று நாம் நினைக்கிறோம். வேணுமென்று விட்டுவிடப்பட்ட அல்லது நிறுத்திக் கொள்ளப்பட்ட வியாச்சியங்களுக்கும் லிமிடேஷன் ஆக்டு பிரிவுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்று நாம் வைத்துக்கொண்டால் ஒவ்வொரு பிரிவும் வெவ்வேறு விஷயத்தைப்பற்றிச் சொல்லுவதால் அவைகளை ஒன்றோடொன்று ஒற்றுமைப் படுத்தவேண்டிய அவசியமில்லை. கோர்ட்டின்செய்கையால் முடிவு செய்யப்பட்ட வியாச்சியங்களைப்பற்றி லிமிடேஷன் ஆக்டு சொல்லுகிறது. ஆனால் ஸிவில் புரொஸீஜர் கோடு மேல்கண்ட ஆர்டரின் தலைப்பில் காட்டப்பட்டபடி, வாதியின் சுயேச்சையான செய்கையால் வியாச்சியம் நிறுத்திக்கொள்ளப்பட்ட அல்லது விட்டுவிடப்பட்ட கேசுகளைப் பற்றிச்சொல்லுகிறது.

அப்பீல் தோற்றுப் போகிறதாயிருக்கிற தென்றும் சிலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் நாம் அபிப்பிராயப் படுகிறோம்.

I. L. R. 39 Mad. 936. இ. லா. ரி. 39 ம 936.

நெ. 38.

ஸிவில் அப்பீல்.

ப்ரிவி கௌன்ஸில் என்னும் நியாய ஸபை.

முருகேசம் பிள்ளை (வாதி)

v

மாணிக்கவாசகதேசிக ஞானஸம்பந்த பண்டார ஸந்நதியும் மற்றவர்களும் (பிரதிவாதிகள்)

ஜட்ஜிகள் :—லார்ட்ச்சான்ஸெல்லர் (லார்ட்பக்மாஸ்டர்) லார்ட்ஷா, லார்ட்ரென்பரி, மிஸ்டர் அமிர் அலி.

(சென்னப்பட்டணம்ஹைக்கோர்ட்டு அப்பீல் தீர்மானத்தின்பேரில்செய்யப்பட்டஅப்பீல்.)

லாபாயிண்ட் :—ஹிந்துலா-தர்மம் செய்வதற்காக விடப்பட்ட சொத்து—ஆதீனத்தலைவரால் வாங்கப்பட்ட கடன்—கடன் வாங்கவேண்டியது அவசியந்தான் என்பதைப்பற்றிய ருஜு—தர்மம் செய்வதற்காக விடப்பட்ட சொத்தை ஒத்தி வைத்து வாங்கப்பட்ட கடன் தொகையை வசூல் செய்வதற்காக செய்யப்படும் வியாச்சியம்—சொத்தைக் கட்டுப்படுத்தி வாங்கப்பட்ட கடனை ஒருவர் பின் ஒருவராய் வந்த ஆதீனத்தலைவர்கள் அங்கீகாரம் செய்தது—கணக்குப் புஸ்தகங்கள் ஆஜர் செய்யப்படாமலிருந்தது.

கேசின் சுருக்கம் :—ஒரு ஆதீனம் அல்லது மடத்துத் தலைவருக்கு 1897-ம் ௵ நவம்பர் ௴ 4௳ யன்றுவெழுதிக்கொடுத்த ஒத்திதஸ்தாவேஜின்பேரில் கொடுத்த தொகையை வசூல் செய்வதற்காகவும், கடன் தொகைக்கு ஈடாக மடத்து சொத்தை பந்தகப்படுத்தி வைத்த ஒத்தியை ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரும்படியாகவும் அப்பீல் வாதி வியாச்சியம் செய்தார். 1883-ம் ௵ ஜுன் ௴ 24௳ யெழுதிக்கொடுத்தமுன் தஸ்தாவேஜில் கண்ட தொகையில் செலுத்தப்பட்டதுபோக பாக்கி செல்லவேண்டிய அஸல் வட்டித் தொகை ரூ. 20,000-க்கு எழுதிக் கொடுக்கப்பட்ட தஸ்தாவேஜில், "ஆதீனத்து சொத்துக்களையே கட்டுப்படுத்தி முன் எழுதிக்கொடுத்த தஸ்தாவேஜைப் போலவேயே இந்த தஸ்தாவேஜும் எழுதிக்கொடுத்திருப்பதாக ஷை தஸ்தாவேஜில் காணப்பட்டிருக்கிறது." 1883-ம் ௵த்தில் எழுதிக் கொடுக்கப்பட்ட தஸ்தாவேஜானது ஒரு பிராமிஸரி நோட்டின் மூலமாக கடனாக வாங்கப்பட்ட தொகையில் செல்லானதுபோக செல்லாகாமல் பாக்கி யிருந்த தொகையாகிய ரூ. 14,946-க்கு எழுதிக்கொடுக்கப்பட்டதாக விருக்கிறது. அந்த தஸ்தாவேஜில் "மேல்கண்ட ஆதீனத்துச் சிலவுகளுக்காக வாங்கப்பட்டதென்று கண்டிருக்கிறது." நம்முடைய "ஆதீனத்து சிலவுகளுக்காக நாம் இன்று ரொக்கம் பெற்றுக்கொண்ட தொகை ரூ.14,000." என்று முதலாவது வாங்கப்பட்ட கடனுக்காக எழுதிக்கொடுக்கப்பட்ட பிராமிஸரி நோட்டில் கண்டிருக்கிறது. ஆதீனத்து நன்மையை உத்தேசித்து செய்யவேண்டியதாக விருந்து சில கோர்ட்டு நடவடிக்கைகள் முடிவான சுவல்ப காலத்திற்குப் பிறகு 1881-ம் ௵த்தில் அந்தக் கடன் வாங்கப்பட்டது. இந்தக் கடனை ஆதீன ஐவேஜிலிருந்து செலுத்தவேண்டியது கடமைதானென்று உணர்ந்து, ஆதீனத்தலைமைக்கு ஒருவரின் பின் ஒருவராய் வந்த ஒவ்வொருவரும் ஷை கடனைத் தீர்க்கவேண்டியதற்காக கடன் தொகையின்பேரில் ஏற்படுகிற வட்டியையும், மற்றத் தொகைகளையும் 26 வருஷக்காலமாகச் செலுத்தி வந்திருக்கிறார்கள்.

மடத்துக் காரியாதிகளுக்காகவும், மடத்துக்கு அவசியமாக வேண்டிய சிலவுகளுக்காகவும்தான் இந்

தக் கடன் வாங்கப்பட்டதென்று ருஜுச்செய்ய வேண்டிய பொறுப்பு கடன்கொடுத்தவரைச் சேர்ந்ததாக விருந்தாலும், மடத்து ஆதீனகர்த்தர்களே ஷை கடன் மடத்தைக் கட்டுப்படுத்தினதாக ஒப்புக்கொண்டு அந்த எண்ணத்துக்கு அனுஸரணையாக நடந்து வந்திருக்கிறபடியால், மடத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய காரியாதிகளுக்காக வாங்கப்பட்ட கடன்தான் என்பதை ருஜுச் செய்வதற்குப் போதுமான சாக்ஷியம் ஆய்விட்டதாகவும், அதற்கு விரோதமாக யாதொரு சாக்ஷியமும் இல்லையென்றும், கனம்ஜட்ஜிகள் அபிப்பிராயப்பட்டார்கள். மடத்தின் தற்கால ஐவேஜு இன்னதென்பதைத் தெரிந்துக் கொள்ளும்படியான விதமாக, மடாதிபதிகள் தங்கள் மடத்தின் வரவு சிலவு கணக்குகளை விபரமாக எழுதிவைக்கிறது வழக்கம். கனம் ஜட்ஜிகளின் மேல்கண்ட அபிப்பிராயத்துக்கிணங்க மடத்து வரவு சிலவு கணக்குகள் இந்தக் கேசில் தாக்கல் செய்யப்படவில்லை. ஒரு கேசின் கக்ஷிக்காரர்கள், தங்களுக்கு அனுகூலமாக ஏற்படக்கூடிய மிகவும் நல்ல சாக்ஷியத்தைக் கொண்டுவரவேண்டும். அப்பேர்ப்பட்ட சாக்ஷியம் ஆஜர் செய்யப்படாவிட்டால், அந்த சாக்ஷியத்தை ஆஜர் செய்யும் பக்ஷத்தில் ஆஜர் செய்யும் கக்ஷிகாரருக்கு அனுகூலமாக ஏற்படமாட்டாதென்று கோர்ட்டார் தீர்மானிப்பது நியாயமாகவேயே ஏற்படும்.

கேசின் விபரம் :—மாயவரம் ஸபார்டிநேட் ஜட்ஜ் கோர்ட்டில் (1907-ம் ௵ நவம்பர் ௴ 6௳) செய்யப்பட்ட தீர்ப்பு.—டிக்கிரி இவைகளை மாற்றி சென்னபட்டணம் ஹைக்கோர்ட்டார் (1910-ம் ௵ ஜனவரி ௴ 18௳) செய்த தீர்ப்பின்பேரில் இந்த 1915 வருஷத்து 117-ம் நெம்பர் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த அப்பீலுக்குரிய அஸல் வியாச்சியமானது ரூ. 10,791 க்கு அப்பீல் வாதியால் செய்யப்பட்டது. அந்தத் தொகை தர்மபுரம் மடத்தைச் சேர்ந்த நிலங்களில் சிலதை ஏலம்போட்டு தனக்குக் கிடைக்க வேண்டுமென்று அப்பீல்வாதிதாவாசெய்தார். அப்படி மடத்து சொத்துகளை விற்று கடனைப்பெற்றுக்கொள்ள அப்பீல்வாதிக்கு பாத்தியதை யுண்டாவென்பதைப் பற்றியதீர்மானம்தான்இந்த அப்பீலை பைசல் செய்வதற்கு அவசியமானவிஷயமாகயிருக்கிறது.

தர்மபுரம் ஆதீனமானது சென்னை இராஜதானியிலிருக்கிறது. ஷை மடாதிபதிக்குப் பண்டார ஸந்நதியென்று பட்டபெயர். 1873-ம் ௵த்தில், மாணிக்கவாசக தேசிக ஞானஸம்மந்த பண்டார ஸந்நதி பட்டத்துக்கு வந்து 1888-ம் ௵த்தில் அவர் தேகவியோகம் அடையும் வரை ஆதீனம் நடத்தி வந்தார். அந்தக்காலத்தில் ஷை மாணிக்கவாசக தேசிக ஞானசம்மந்த பண்டார ஸந்நதி ஷை பட்டத்துக்கு வர அர்ஹர் அல்லவென்று அருணானந்தர் என்ற ஒருவர் தாவாச் செய்தார். ஷை யார் பட்டத்துக்கு வர அர்ஹரா இல்லையா என்பதைப் பற்றி நடந்த வழக்கானது 1875-ம் ௵ முதல் 1879ம் ௵வரை நடந்தது. கடைசியில் மாணிக்கவாசக தேசிகஞான ஸம்மந்த பண்டார ஸந்நதிக்கு அனுகூலமாக ஷை வியாச்சியம் முடிந்தது. இந்தவியாச்சியத்தினால் மடத்துக்கு கடன் ஏற்பட்டுவிட்டது.

இந்தத் தர்மபுரம் தலைமை ஆதீனத்துக் குள்பட்ட வேறுசில மடங்களின்விசாரணைபாத்தியதையைஸ்தாபித்துக் கொள்ளும்பொருட்டாக 1881-ம் ௵த்தில் மாணிக்கவாசக தேசிக ஞானஸம்மந்த பண்டார ஸந்நதி, வியாச்சியம் தொடரும்படி நேரிட்டது. ஷை வியாச்சியம் ஏற்பட்டதற்குரிய காரணங்களும், ஷை கேசின் முடிவும் ஞானஸம்மந்த பண்டார ஸந்நதிக்கும் கந்தசாமித் தம்பிரானுக்கும் நடந்த (1887-ம் ௵த்தில்) இ. லா. ரி. 10-ம. 375-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற தீர்ப்பில் வெளியாகிறது. ஷை வியாச்சியத்தின் சிலவுகளுக்காக 1881-ம் ௵ டிசம்பர் ௴ 8௳ சடையபிள்ளை என்பவருக்கு ஒரு பிராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்து மாணிக்கவாசக தேசிக ஞான சம்மந்த பண்டார ஸந்நதி கடன் வாங்கிக்கொண்டார்.

இதற்குக் கொஞ்சக்காலத்துக்கெல்லாம் சடையபிள்ளை யென்பவர் இறந்துபோய்விட்டார். அந்த சடையபிள்ளை இறக்கும் காலத்தில், அவருக்கு அவருடைய விதவை சாலாக்ஷி அம்மாளும், இப்போதைய அப்பீல்வாதியாகியமுருகேசம்பிள்ளையும், ரதனம் பிள்ளையும், துரைஸாமி பிள்ளையுந்தான் வார்சுகள். மேற்கண்ட பிராமிஸரி நோட்டின்பேரில் செல்லவேண்டிய தொகையில் செல்லானதுபோக பாக்கி செலலவேண்டியதாகவிருந்த ரூ. 14,916-க்கு ஈடாக மணக்குக் கிராமத்தில் ஷை மடத்துக்கு இருந்த சில நிலங்களை ஒத்திவைத்து, அவருடைய பிள்ளைகளுக்கு கார்டியனான சாலாக்ஷி அம்மாள் பேருக்கு 1883-ம் ௵ ஜுன் ௴ 24௳ மாணிக்கவாசக தேசிக ஞானஸம்மந்த பண்டார ஸந்நதி தஸ்தாவேஜு பிறப்பிவித்துக்கொடுத்தார். இந்தக்கடனைத் தீர்ப்பதற்காக அநேக தபா தொகைகள் செலுத்தப்பட்டுவந்தன.

1888-ம் ௵த்தில் மாணிக்கவாசக தேசிக ஞானசம்மந்த பண்டார ஸந்நதி தேகவியோகம் அடைந்துவிட்டார். அவருக்குப் பின்னால் சிவஞான பண்டார ஸந்நதி பட்டத்துக்கு வந்தார். அவர் இந்த ஒத்தி மடத்து சொத்துக்களைக் கட்டுப்படுத்துமென்று அபிப்பிராயம் கொண்டு, ஒத்தி வாங்கினவருக்கு 1897-வரை அநேகம் தடவைகளில் தொகைகள் செலுத்திவந்தார். முன் ஒத்தி வைக்கப்பட்ட அதே சொத்துகளையே சுட்டிக்காட்டி; (1883-ம் ௵த்தில் பிறப்பிவிக்கப்பட்ட ஒத்திதஸ்தாவெஜில் கண்ட அஸலுக்கும் வட்டிக்குமாக) ரூ. 20,000-க்கு இந்த அப்பீல் வாதிபேருக்கு 1897-ம் ௵ நவம்பர் ௴ 4௳ சிவஞான பண்டார ஸந்நதி, இந்த வியாச்சியத்தில் ஸம்மந்தப்பட்ட ஒத்திதஸ்தாவேஜை யெழுதிக்கொடுத்தார். இந்த ஒத்தித் தொகையைச் செலுத்தும் பொருட்டு சிவஞான பண்டார ஸந்நதி அநேகதபா தொகைசெலு

த்திவந்தார்.

1900-ம் ஹு௵த்தில் சிவஞான பண்டார ஸந்நதி மாணிக்கவாசகர் என்ற ஒருவரை ஆதீனத்தில் தனக்கு அடுத்த கீழ் தலைமை அதிகாரியாக நியமித்து 1903-ம் ஹு௵ஜூன்மீ 7௳ தன் மடாதிபதித்தலைமையை 2-வது மாணிக்கவாசகருக்குக் கொடுத்துவிட்டதாக ஒருதஸ்தாவேஜு பிறப்பிவித்தார். இந்த 2-வது மாணிக்கவாசகப் பண்டார ஸந்நதியும் அந்த ஒத்தி செல்லத்தக்கதுதானென்று அபிப்பிராயப்பட்டு அந்த ஒத்திக் கடனைத் தீர்க்கும்பொருட்டு 1904-ம் ஹு௵த்தில் அப்பீல் வாதிக்கு தொகைகள் செலுத்தினார்.

(1897-ம் ஹு௵ நவம்பர்மீ 4௳ எழுதிக்கொடுக்கப்பட்ட அடமானக் கடன் தஸ்தாவேஜில் கண்ட தொகையில் செல்லானதுபோக பாக்கியிருக்கும்) தொகையை வசூல் செய்யும்பொருட்டு 1906-ம் ஹு௵ அக்டோபர்மீ 9௳ யன்று இந்த வியாச்சியமானது தாக்கல் செய்யப்பட்டது. சிவஞானபண்டாரஸந்நதியும் 2-வது மாணிக்கவாசகப் பண்டார ஸந்நதியும், பின் ஒத்தி வாங்கினவர்களான 2 முதல் 4 வரை அப்பீல் பிரதிவாதிகளும், பின்னீடு அடமானம் வாங்கின 5-வது அப்பீல் பிரதிவாதியும் முதலில் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டார்கள். 1906-ம் ஹு௵ நவம்பர்மீ 30௳ சிவஞானப்பண்டார ஸந்நதி காலஞ்சென்றுவிட்டார். அந்த மடாதிபதி ஸ்தானம் தனக்குகிடைக்க வேண்டுமென்று 6-வதுஅப்பீல்பிரதிவாதிபாத்தியத்தைகொண்டாடிக் கொண்டிருந்த படியால் அவரையும் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டது. 2-வது மாணிக்கவாசகப்பண்டார ஸந்நதியும், 6-வதுஅப்பீல் பிரதிவாதியுமட்டும் தான் இந்த வியாச்சியத்தில் எதிர்வாதம் செய்தார்கள்.

இந்தக்கேசில் ஏற்படுத்தப்பட்ட 10 அம்சங்களில் (issues) கண்டபடி அனேகவிதமான கக்ஷிகள்சொல்லப்பட்டது. தர்மபுரம் மடத்து சொத்தைக்கட்டுப்படுத்தக் கூடியசங்கதிகளுக்காக ஒத்திதஸ்தாவேஜில்கண்ட கடன் தொகை வாங்கப்பட்டதா என்ற2-வதுஅம்சத்தில்(issue) கண்டவிஷயம் ஒன்றுதான்முக்கியமானதாகவிருப்பதால் அவர்கள் சொன்னகக்ஷிகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லவேண்டியது அனாவசியம்.

ஸபார்டிநேட் ஜட்ஜ் இந்தக்கேசில் ஏற்பட்ட சாக்ஷியத்தை ஆலோசித்து 1881-ம் ஹு௵த்தில் கடன் வாங்கப்பட்ட ரூ. 14,000 மும் ஆதீன சொத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய காரியாதிகளுக்காக வாங்கப் பட்டதாக தீர்மானித்து சொத்தை விற்று அப்பீல்வாதியின் தொகையைக்கொடுக்கும்படி தீர்ப்பு செய்துவிட்டார்.

2-வது மாணிக்கவாசகபண்டார ஸந்நதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து அந்த அப்பீல் ஸர். வி. ஆர்னால்டு ஒய்ட் (Chief Justice) ம் ஜஸ்டிஸ் மன்ரோ இவர்களால் விசாரிக்கப்பட்டது. இவர்கள் ஆதீனத்து சொத்துகளைக் கட்டுப்படுத்தக்கூடிய காரியாதிகளுக்காக கடன்வாங்கினதாக ருஜூச் செய்யப்படவில்லை யென்று தீர்மானித்தார்கள். இன்ன காரியத்துக்காக கடன் வாங்கப்பட்டதென்பதை யோசிக்காமலேயே ஷை வியாச்சியத்தில் சம்பந்தப்பட்ட ஒத்தியை ஆதீனத் தலைவர்பேரிலும் ஒத்திவைக்கப்பட்ட சொத்தின்பேரிலும் சட்டப்படி நிறைவேற்றலாமென்று இந்த அப்பீல்வாதி சொன்ன கக்ஷியை அங்கீகரிக்க ஹைக்கோர்ட்டார் மறுதளித்து விட்டார்கள். ஒத்திவைத்தவரிடமிருந்தும் சொத்துக்களின் பேரிலும் சட்டப்படி நிறைவேற்றக் கூடும் என்றும் கக்ஷி சொல்லப்பட்டது.

ஸபார்டிநேட் ஜட்ஜியினுடைய டிக்கிரியை மாற்றி ஹைக்கோர்ட்டார் டிக்கிரி பிறப்பிவித்தார்கள்.

மாட்சிமைதங்கிய ஆலோசனை ஸபையிலுள்ள சக்கிரவர்த்தி அவர்கள் முன் அப்பீல் நடந்து கொண்டிருக்கையில் 2-வது மாணிக்கவாசகப் பண்டார ஸந்நதி காலஞ்சென்று விட்டதின்பேரில் 7-வது அப்பீல் பிரதிவாதியாகிய சிதம்பரநாதத்தம்பிரானை இந்த அப்பீல் விஷயத்தில் அவர் ஸ்தானத்தில், ரிக்கார்ட்டில் ஏற்படுத்தப்பட்டது.

லாயர்கள்:—ஸர். ஆர். பின்லே, கே. ஸி. (Sir. R. Finlay, K. C.,) டி. கரைதர், கே. ஸி. (De Grayther, K. C.) ஓ. கார்மன். (O. Gorman) இவர்கள் அப்பீல் வாதிபக்கம் ஆஜரானார்கள். டக்ளாஸ் கிராண்டு (Douglas Grant) லாயர் (Solicitor)ரும் ஆஜரானார். ஸர். ஹெச். எர்ல் ரிச்சார்ட்ஸ், கே ஸி. (Sir. H Erle Richards, K. C.) கென்வர்த்தி ப்ரௌன் (Kenworthy Brown) இவர்கள் 7-வது அப்பீல் பிரதிவாதி பக்கம் ஆஜரானார்கள். டி. எல். வில்ஸன் அண்டு கோ. (T. L. Wilson & Co.,)வும் ஆஜரானார்கள்.

ஆதீனத்தைக் கட்டுப்படுத்தக் கூடியகாரியாதிகளுக்காக ஒத்தித்தொகை வாங்கப்பட்டதாகவும், இதற்கு விரோதமான , அபிப்பிராயமாக ஹைக்கோர்ட்டார் பைசல் செய்திருப்பது சரியானதில்லையென்றும் அப்பீல் வாதி பக்கம் லாயர்கள் வாதித்தார்கள். வியாச்சியச்சிலவுகளுக்காகவும் மற்றும் சிலவுகளுக்காகவும் மடத்தாருக்குக்கடன் வாங்கவேண்டியதற்கு அவசியமிருந்ததாக சாக்ஷியத்தால் ஏற்பட்டிருக்கிறது. ஒருவர்பின் ஒருவராய் பட்டத்துக்குவந்த ஒவ்வொருபண்டார ஸந்நதியும் இந்த ஒத்திக்கடனானது ஆதீனத்தைக் கட்டுப்படுத்துமென்றுஅறிந்து ஷை கடனைத்தீர்ப்பதற்காக தொகைகளும் செலுத்திவந்திருக்கிறார்கள். ஸபார்டிநேட்ஜட்ஜியினுடையதீர்மானமானது சரியானதென்றும், மடத்து சொத்தையெல்லம் போட்டு ஒத்தித் தொகையை வசூல் செய்யத் தக்கதுதானென்றும் வாதிக்கப்பட்டது.

மடத்து சொத்துக்களை கட்டுப் படுத்தும் படியான காரியாதிகளுக்காகவும், மடத்தின் பேரிலும் மடத்து தர்ம சொத்துக்களின் பேரிலும் வசூல் செய்யக் கூடிய சந்தர்ப்பங்களிலும் ஷை கடன் வாங்கினதாக ருஜூச் செய்யப்படவில்லை. அந்தப்படி ருஜூச்செய்யவேண்டிய பொறுப்பு கடன் கொடுத்தவரைச் சார்ந்திருக்கிறது.

(இன்னும் வரும்.)

The Indian Law Gazette.

PART II.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ஹு ஆகஸ்ட்மீ [நே. 8.

Reports of Cases.

கேஸ்களின் ரிப்போர்ட்டுகள்.

Madras High Court.

மதராஸ் ஹைகோர்ட்டு.

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

(1917-ஹு ஜூலைமீ 2-ம் பாகம் 104-ம் பக்கத் தொடர்ச்சி.)

அந்தப்பொறுப்பை அவர் அபிராம் கோஸாமிக்கும், ஷாயாமச்சரன் நந்திக்கும் நடந்து (1909-ம் ஹு௵த்தில்) இ. லா. ரி. 36-கல்-1003-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதும், ஹனுமான்ப்ரஸாத்பாண்டேக்கும் முன்ராஜ் கூன்வெரிக்கும் நடந்த (1856-ம் ஹு௵த்தில்) 6. மூ. இ. அ. 393-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசுகளின் தீர்மானங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடி நிறைவேற்றவில்லை. ஒருமடத்து மானேஜர் ஸ்தானமானது, குழந்தைகளை மேல்பார்த்து வரும்படி நியமிக்கப்படும் மானேஜர்கள் எப்படியோ அப்படித்தானிருக்கிறது. கடன் வாங்குவதற்கு அவசியத்தைப்பற்றியும், அப்படி கடன் வாங்குவதினால் ஆதீனத்துக்குப்பிரயோசன மிருப்பதைப்பற்றியும் ருஜூவிடவேண்டியது அவசியம். பஞ்சசந்திரதூள் பிஸ்வாஸ்க்கும் ஜெகத்கிஷோர் ஆச்சாரியா சௌத்ரானுக்கும் நடந்து 1916-ம் ஹு௵ ஜூலைமீ 18௳ பைஸல் செய்யப்பட்டு 43. இ. அ. 249-ல் பிரசுரிக்கப் பட்டிருப்பதும், பிரஸன்ன குமார் தெபியாவுக்கும், கொலாப்ச்சந்துக்கும் நடந்து 1875-ம் ஹு௵த்தில் 2. இ. அ 145-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதுமான கேசுகளையும் உதாரணமாக எடுத்துக் கொள்ளவேணும். இப்பேர்ப்பட்ட ஆக்ஷேபங்கள் வெகு காலமாக சொல்லப்படாமலிருந்ததானது எதிர்கக்ஷிக்கு ஒருவகையாக அனுகூலமாகயிருந்தாலும் ருஜூச் செய்யவேண்டிய பொறுப்பு நீங்கிவிடமாட்டாது. வியாச்சியம் செய்யவேண்டியது அவசியமாவென்பது முக்கிய சங்கதியல்ல, கடன் வாங்கவேண்டியது அவசியமா

வென்பதுதான் முக்கியமான சங்கதி. ஸபார்டிநேட் ஜட்ஜினுடைய தீர்மானமானது, ஸாமிநாதப்பண்டாரத்துக்கும் செல்லப்பசெட்டிக்கும் நடந்து 1879-ம் ஞூத்தில் இ. லா. ரி. 2. ம. 175-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசை ஒத்திருக்கிறது. ஷை தீர்ப்பில் ஸப்ஜட்ஜின் தீர்ப்பு சரியாயில்லையாவென்று சோதித்துப் பார்ப்பதற்குரிய விஷயங்களில்லை. ஆகையால் ஹைக்கோட்டாருடைய தீர்ப்பை உறுதி செய்யவேணும். மேல்கண்ட விதமாக 7-வது அப்பீல் பிரதிவாதிபக்கம் லாயர்கள் வாதித்தார்கள்.

இதற்கு ஜவாப் சொல்லும்படி அப்பீல் வாதிபக்கம் லாயர்களை கேழ்க்கவில்லை.

கனம் ஜட்ஜிகளுடைய தீர்மானம் லார்ட் ஷா என்பவரால் வெளியிடப்பட்டது.

லார்ட்ஷா:—மாயவரம் ஸபார்டிநேட் ஜட்ஜ் கோர்ட்டு 1907-ம் ஞூ நவம்பர்௴ 6௳ பிறப்பிவிக்கப்பட்ட டிக்கிரியை மாற்றி சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டார் 1910-ம் ஞூ ஜனவரி௴ 18௳ பிறப்பிவித்த டிக்கிரியின் பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. ஒத்தியின் பேரில் கொடுத்ததுகையை வசூல் செய்வதற்காகவும் துகையைச் செலுத்தத்தவறினல் ஒத்தி சொத்துக்களை ஏலம் போட்டு துகையை வசூல்செய்யும்பொருட்டு இந்தவியாச்சியம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஷை சொத்துக்கள் இப்போது சொல்லப்போகிறதும் மடத்தைச் சேர்ந்ததுமானவைகள். இந்தச்சொத்துக்களின் ஈட்டின் பேரில் வாங்கிய கடனனது மடாதிபதியினலேயே வாங்கப்பட்டிருந்த போதிலும், மடத்துக்கு அவசியமான காரியாதிகளுக்காக வாங்கப்படவில்லையென்பதும் அப்படி அவசியமிருந்ததாக ருஜுச்செய்யப்படவில்லை யென்பதும் தான் பிரதிவாதியின் கக்ஷி.

தர்மபுரம் ஆதீனம் அல்லது மடமானது சென்னை ராஜதானியிலிருக்கிறது. அது அனேக மடங்களையும், கோவில்களையும் ஜாஸ்தியான வரும்படிவருகிற சொத்துக்களையும் உடைய ஒரு மதஸம்பந்தமான ஆதீனமாகவிருக்கிறபடி கொஞ்சம் முக்கியமாகஉள்ளது. ஷை ஆதீனகர்த்தருக்கு பண்டாரஸந்நிதியென்றுபெயர். இப்பொழுது விசாரணையிலிருந்து வருகிற நடவடிக்கைகள். 1880-ம் ஞூ முதல் வியாச்சியத் தேதிவரையிலும் அதாவது கால் நூற்றூண்டாக நடந்துவருகிறது. 1880–1881-ம் ஞூங்களில் மொத்தத்தின் ரூ-100,000. சிலவு சென்ற ஒருபெரிய வியாச்சியத்தை மடத்தார் நடத்தினதாக ருஜுவாயிருக்கிறதாகத் தெரியவருகிறது. 1873-ம ஞூத்தில் பட்டத்துக்கு வந்த மாணிக்கவாசகப்பண்டார ஸந்நிதிக்கு ஷைபட்டத்துக்கு வரும் பாத்தியதை யில்லையென்று ஆக்ஷேபிக்கப்பட்டு அந்தவியாச்சியமானது 1875-ம் ஞூ முதல் 1879-ம் ஞூ வரை நடந்துகடைசியில் மாணிக்கவாசகப்பண்டாரஸந்நிதிக்கு அனுகூலமாக முடிந்தது. தர்மபுரம் ஆதீனத்துக்குட்பட்ட சிலமடங்களின் ஸம்மந்தமான சில பாத்தியதைகளை ஸ்தாபித்துக்கொள்ளும்பொருட்டு 1881-ம் ஞூத்தில் பண்டாரஸந்நிதியே, ஒருவியாச்சியம் தாக்கல் செய்தார். இந்தவியாச்சியத்துக்கு ரூ. 80,000 சிலவாகி ஒருவாறு மடத்துக்கு அனுகூலமானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக்கேசின் விபரங்கள் ஞானஸம்பந்தப் பண்டாரஸந்நிதிக்கும் கந்தசாமி தம்பிரானுக்கும் நடந்து 1887-ம் ஞூத்தில் இ. லா. ரி. 10-ம. 375-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற தீர்ப்பில் வெளியாகிறது.

மடத்தின் காரியாதிகள் இவ்விதமிருந்த நிலைமையில் மடத்தினுடைய நன்மையை உத்தேசித்து—கடன் வாங்கவேண்டியது முக்கியமானது தானென்பதற்கு கொஞ்சமும் ஸந்தேகமில்லை. அவ்விதமே அப்பீல் பிரதிவாதியால் மடத்துமானேஜராக யிருந்ததாகச் சொல்லப்படவும், ஆனல் ஏதோ ஒரு கோவிலுக்குமட்டும்மானேஜராக இருந்ததாகத் தெரிய வருகிறதுமான சடையபிள்ளை என்பவர் பேருக்கு 1881-ம் ஞூ டிஸம்பர்௴ 8௳யில் மாணிக்கவாஸகப்பண்டார ஸந்நிதி ஒரு பிராமிஸரி நோட்டுஎழுதிக்கொடுத்தார். "ஆதீனச்சிலவுக்காக இன்றுநம்மால் ரொக்கம் பெற்றுக்கொள்ளப்பட்ட துகை ரூ. 14,000" என்று பிராமிஸரி நோட்டில் கண்டிருக்கிறது.

அதற்கு கொஞ்சக் காலத்திற்கெல்லாம், தன் விதவையையும் மூன்று மைனர் பிள்ளைகளையும் விட்டுவிட்டுசடையபிள்ளை இறந்துபோய்விட்டார். 1883-ம் ஞூ ஜூன்௴ 24௳ மேல்கண்ட பிராமிஸரி நோட்டில் கண்டதுகைக்கும் அதன்மேல் கூடியவட்டிக்குமாகச்சேர்த்து ரூ. 14,946-க்கு ஷை மாணிக்கவாசகப் பண்டாரஸந்நிதி, சடைய பிள்ளையினுடைய விதவைபேருக்கும் பிள்ளைகள்பேருக்கும் ஒத்திதஸ்தாவேஜு எழுதிக்கொடுத்தார். ஷை ஒத்திதஸ்தாவேஜில் மடத்துச்சிலவுக்காகவேயே முன் பிராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்து துகைவாங்கினதாகவும் ஷை துகையை மடத்துக் காரியங்களுக்காகச்சிலவு செய்து விட்டதாகவும் கண்டிருக்கிறது. கடன் துகை அஸலுக்கும் வட்டிக்குமாக அப்போதைக்கப்போது அநேகம் துகைகள் செலுத்தப்பட்டு வரப்பட்டது.

அப்பால் 1888-ம் ஞூத்தில் மாணிக்கவாசகப் பண்டாரஸந்நிதி தேகவியோகம் அடைந்துவிட்டார். ஆகையால் ஷை மாணிக்கவாசகப் பண்டாரஸந்நிதியினுடையசெய்கைகளும், எழுத்து மூலமான நடவடிக்கைகளும் ஸம்மந்தப்பட்ட மட்டில், மடத்தினுடைய முக்கியமான சிலவுகளுக்காக வாங்கப்பட்ட கடன்தானென்று வியக்தமாகத்தெரிகிறது. மாணிக்கவாசக பண்டார ஸந்நிதிக்கு பின்பு சிவஞானப்பண்டார ஸந்நிதி பட்டத்துக்கு வந்தார். அவரும், இந்த ஒத்தி ஆதீனத்து சொத்துகளை கட்டுப்படுத்துமென்று ஒப்புக்கொண்டார். ஷை ஒத்திதஸ்தா வேஜின்படி, 1897-ம் ஞூவரை அப்போதைக்கப்போது துகைகளும் செலுத்திவந்தார். ஷை ஞூ நவம்பர்௴ 4௳ ரூ. 20,000-க்கு புதிதாக ஒரு ஒத்தி தஸ்தாவேஜு

எழுதிக்கொடுத்தார். இந்த ஒத்திதஸ்தாவேஜுவின் பேரில்தான் இந்த வியாச்சியம் செய்யப்பட்டிருக்கிறது. சிவஞானப்பண்டாரஸந்நிதிக்கு முன்னிருந்த மாணிக்கவாசகப்பண்டார ஸந்நிதியால் 1883-ம் ஞூத்தில் யெழுதிக்கொடுக்கப்பட்ட, முன்.தாஸ்தா வேஜில் கண்டபாக்கிதான் ரூ. 20,000-மென்று ஒத்திதஸ்தாவேஜிலேயே கண்டிருப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. "ஆகையால் ஆதீனத்து சொத்துகளை (நிலங்களை) ஈடுகாட்டி முன்போலவேயே தஸ்தாவேஜு பிறப்பிவிக்கப்பட்டிருக்கிறது." இந்த தஸ்தாவேஜானது முன் நடவடிக்கைகளை உறுதி செய்கிறதும், மடத்துக்கு அவசியமாகவேண்டிய சங்கதிகளுக்காக கடன்வாங்கப்பட்டதென்று காட்டுகிறதுமானதாகவுமிருக்கிறது.

1903-ம்ஞூத்தில் சிவஞானப்பண்டார ஸந்நிதி மடாதிபதி ஸ்தானத்தைவிட்டு விலகிக்கொண்டார். அவருடைய நடவடிக்கைகளும் அவருக்கு முன்னிருந்தவருடைய நடவடிக்கைகள் போலவேயே, இந்தக்கடனனது மடத்தைக்கட்டுப் படுத்துமென்ற அபிப்பிராயத்தை உறுதி செய்கிறதாகவேயேயிருந்தது.

3-வது பண்டாரஸந்நிதியாகிய 2-வது மாணிக்கவாசக பண்டார ஸந்நிதி அந்த ஞூத்தில் மடாதிபதி ஸ்தானத்தை வகிக்க ஆரம்பித்தார் 1904-ம் ஞூத்தில் ஒத்தித்துகையின்பேரில் ஏற்பட்ட வட்டித்துகையைச் செலுத்தினர். பண்டாரஸந்நிதிகளில் மூன்று தலைமுறையாரால் (அதாவது மூன்று பண்டார ஸந்நிதிகளால்) இந்தஒத்தியானது ஸ்தாபிக்கப்பட்டது.

மேல்கண்ட பற்பல பண்டார ஸந்நிதிகளும் இந்த ஒத்தியானது மடத்தைக் கட்டுப்படுத்துமென்று ஒப்புக்கொண்டு நடவடிக்கைகள் நடத்தியிருப்பதைமுக்கியமான அம்சமென்று கீழ் கோட்டார் அங்கீகரிக்கத் தவறிவிட்டபடியால் மேல்கண்டபடி இந்தக்கேசின் வரலாற்றைப்பற்றிய சரித்திரத்தை எடுத்துச்சொல்வது அவசியமென்று கனம் ஜட்ஜிகள் அபிப்பிராயப் பட்டார்கள்.

ஒரு மடத்தினுடைய ஆதீனகர்த்தர் மடத்து சொத்துகளை ஒத்திவைத்து கடன்வாங்கும்பொழுது ஒத்திவாங்கினவர் அல்லது அவர் ஸ்தானத்திலுள்ளவர்கள், ஷைகடனனது மடத்தினுடைய அவசியமான காரியாதிகளுக்காகத்தான் வாங்கப்பட்டதென்று ருஜுச்செய்யவேண்டுமென்ற சித்தாந்தத்தை ஸந்தேகாஸ்பதமாகச் செய்வதை நாங்கள் விரும்பவில்லை. ஆனல் மடத்து ஆதீனத்துக்கு ஒருவரின் பின் ஒருவராய் வந்த ஒவ்வொரு ஆதீன கர்த்தரும், இந்த ஒத்தியை ஒப்புக்கொண்டு இந்த ஒத்தியானது மடத்தைக் கட்டுப்படுத்து மென்ற அபிப்பிராயத்துடன் ஷைகடனை தீர்க்கவேண்டிய நடவடிக்கைகள் நடத்தியிருப்பதானது மிகவும் பலமான விஷயமாகவிருக்கிறது. நாளாவர்த்தியில் இந்த சங்கதியே கேசின் உண்மையைத் தெரிவிக்கக்கூடிய முக்கிய அம்சம் ஆய்விடும். காலம் செல்லச்செல்ல நடவடிக்கையில் ஸம்மந்தப்பட்ட கக்ஷிக்காரர்கள் இறந்துபோய் விடவாவது அல்லது காணமல் போய் விடவாவது கூடுமென்பதை நன்ருய் கவனத்தில் வைக்கவேண்டும். பிரகிருத கேசில் கடன்கொடுத்த சடையபிள்ளை இறந்துபோய்விட்டார். கடன்வாங்கின மாணிக்கவாசகப்பண்டார ஸந்நிதியும் தேகவியோகமாகி விட்டார். இப்பேர்பட்ட கேசுகளில் வருஷங்கள் செல்லச்செல்ல முக்கியமான சாக்ஷியங்களெல்லாம் மறைந்துவிடுமென்பது நமது புத்திக்கு எட்டக்கூடிய விஷயமாக விருக்கிறது. இது இப்படியிருக்கையில் வாங்கப்பட்டகடனனது செலுத்தப்படாமலேயே யிருப்பதோடுஷைகடன் வாங்கப்பட்ட தேதிமுதல் வியாச்சியத் தேதிவரை, இந்தக் கடனுக்கு ஸம்மந்தப்பட்ட ஒவ்வொருவராலும், ஆதீனத்தாரால் நியாயமான சிலவுகளுக்காக வாங்கப்பட்ட கடன்தானென்று ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தது. இவ்வளவு ருஜு ஏற்பட்டிருக்கிற கேசுகளில் கடனனது நியாயமான விஷயத்திற்காகத்தான் வாங்கப்பட்டதென்று கோர்ட்டார் எளிதில் திருப்தியடைந்து விடுவார்கள். ஆனல் கொடுக்கல்வாங்கல் ஸமீபகாலத்துக்குள் நடந்ததாகவிருந்தால் திருப்திகரமாயும் திட்டமாயுமுள்ள சாக்ஷியத்தை அபேக்ஷிப்பது ஸம்பாவிதம். வெகுநாளைக்குமுன்பட்ட நடவடிக்கையாக இருந்தாலும் ஷை ஆதீன விஷயத்தில் சிரத்தையுள்ளவர்களால் இந்த நடவடிக்கைகள் ஆக்ஷேபிக்கப் பட்டிருந்தாலும் கண்டிப்பான சாக்ஷியத்தை அபேக்ஷிப்பதும் ஸம்பாவிதம்தான்.

கனம் ஜட்ஜிகள் வாய்மொழிச்சாக்ஷியத்தில் பிரவேசிக்கவில்லை. அதைப்பற்றி யோசித்ததில் ஸபார்டிநேட் ஜட்ஜனுடைய ஊக்கமுள்ள தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கும் அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளாமலிருப்பதற்கு யாதொரு காரணமும் இல்லை.

கனம் ஜட்ஜிகள் மிகவும் மதிப்புக்கொடுக்கிற ஒரு விஷயம் இந்தகேசில் இருப்பதையும் சொல்லவேண்டுவதவசியம். மடத்தினுடைய காரியாதிகளுக்காக இந்தக்கடனனது வாங்கப்பட்டதென்பதற்குரிய சாக்ஷியம் இருக்கிறது. மடத்துக்காரியாதிகளுக்காக ஷை கடன் வாங்கப்படவில்லையென்று ருஜு செய்வதற்குரிய சாக்ஷியமேயில்லை. வாய் மொழிச் சாக்ஷியங்களுக்கு மேல்பட்டு இந்தக்கடன் விஷயத்தில் மடத்தில் வைக்கப்பட்டிருக்கிற கணக்குகளினல் என்ன வெளியாகிறது என்பது அதிக முக்கியமான விஷயமாய் இருக்கிறது. மடத்து தலைவர்கள் அல்லது மானேஜர்கள் மடத்தின் வரவு செலவுகளைப்பற்றி விவரமானகணக்குகள் வைப்பதுவழக்கம். அந்த மடத்தின் ஐவேஜு இன்னதுதான் என்று காட்டக்கூடிய ரிக்கார்டுகள் அவைகள்தான்.

முக்கியமான தஸ்தா வேஜுகளை உடையவர்கள் அல்லது முக்கியமான ஸமாச்சாரங்களைத் தெரிந்தவர்கள் அது ஸரியானது அல்லது நிஜமானதென்று ருஜுப்படுத்தவேண்டியதென்னும் பொறுப்பை அப்பேர்பட்

டவர்கள் பேரில் சுமத்தியும் கோர்ட்டாருடைய தீர்மானத்துக்காக சரியான சாக்ஷியம் விடாவிட்டால் அவர்கள் கேசு அபஜயப்பட்டுப் போகும்படியாயும், இந்தியாவில் நடவடிக்கை வழக்கத்திலிருந்து வருகிறது. முக்கியமான தஸ்தாவேஜுகளை வைத்துக்கொண்டிருப்பவர்கள் அல்லது முக்கியமான ஸமாசாரங்களை அறிந்தவர்கள் கக்ஷிக்காரரல்லாத மூன்ரும் மனிதர்களாக இருக்கும் பக்ஷத்தில் இந்த ஏற்பாடானது நியாயமாக இருக்கக்கூடும். ஏனென்ருல் வியாச்சியத்தை நடத்தும் பொருப்பு அவர்களுக்கு இல்லை. ஆனால் கேசில் சம்மந்தப்பபட்ட கக்ஷிக்காரர்கள் விஷயத்திலோவென்ருல் கக்ஷிக்காரர்கள் ருஜுச்செய்ய விரும்பும் கேசின் முக்கியமான விஷயத்தைப் பற்றி போதுமான தகவல் கொடுக்கக்கூடியதும், தங்கள் வசத்தில் எழுத்து மூலமாக இருக்கிறதுமான சாக்ஷியத்தையும் அவர்களை ஆஜர் செய்ய ஒட்டாமல் தடுப்பது நல்ல வழக்கத்துக்கு எதிரிடையானதாகஇருக்கிறது என்று கனம் ஜட்ஜிகள் அபிப்பிராயப்படுகிருர்கள். பிரகிருத கேசானது இந்தக் கெட்ட வழக்கத்தை காட்டுவதற்கு உதாரணமாக விருக்கிறது "மடத்தில் தினவாரி சிலவு குறிப்பு புஸ்தகங்கள் இருப்பதாகவும் அவைகள் இப்பொழுது கோர்ட்டு முன் ஆஜர் செய்யப்படவில்லை யென்றும், மடத்தில் பேரேடுவகையராக்கவிருப்பதாயும்" இந்தக் கேசில் 1-வது சாக்ஷியால் ருஜுச் செய்யப்பட்டிருக்கிறது, இந்தக்குறிப்புகளும், பேரேடுகளும், பிரதிவாதிகள் வசத்திலாவது அல்லது அவர்களில் மடாதிபதிகளாக இருந்தவர்களிடமாவது இருந்தும் அவைகளை அவர்கள் கோர்ட்டில் சாக்ஷியமாக ஆஜர் செய்யவில்லை. பிரதிவாதிகள் தாவாச் செய்ததெல்லாங் கூடி மடத்து அவசியமான காரியாதிகளை நடத்துவதற்காக கடன் வாங்கப்பட்டது என்பதுதான். இந்த தஸ்தாவேஜுகளை பரிசோதித்துப் பார்க்கும் அவகாசம் கோர்ட்டாருக்கு இருந்தால் மிகவும் உதவியாக இருக்கும் பிரதிவாதிகள் சொல்லுகிறதற்கு அனுஸரணையாகக் கணக்குகளும் இருக்கும் பக்ஷத்தில் பிரதிவாதிகள் அவைகளைக் கோர்ட்டில் தாக்கள் செய்திருப்பார்கள் என்று கனம் ஜட்ஜுகள் அபிப்பிராயப் படுகிருர்கள். இந்தவிஷயம் கனம் ஜட்ஜிகள் அபிப்பிராயத்தில் மிகவும் முக்கியமானது. இந்த விஷயத்தை ஹைக்கோர்ட்டில் சொல்லப்படவே யில்லை.

ஆகையால் கனம் ஜட்ஜிகள், இந்த அப்பீலை அங்கிகாரம் செய்யும்படிக்கும், ஹைக்கோர்ட்டு டிக்கிரியை மாற்றும்படிக்கும், ஸபார்டிநேட் ஜட்ஜின் டிக்ரியை ஊர்ஜிதத்துக்குக்கொண்டு வரும்படிக்கும்பைஸல்செய்யும்படிமாட்சிமைதங்கிய சக்கிரவர்த்தி அவர்களுக்குத் தெரிவிக்கிருேம். ஸபார்டிநேட் ஜட்ஜியினுடைய டிக்கிரி தேதி முதல் இந்த வியாச்சிய சிலவையும் இந்த அப்பீல் சிலவையும் அப்பீல் பிரதிவாதிகள் செலுத்த வேணும்.

அப்பீல் அங்கீகரிக்கப்பட்டது.

இ. லா. ரி. 40. ம. 409. I. L. R, 40 Mad. 409.

நெ. 39

APPELLATE CRIMINAL.

கிரிமினல் அப்பீல்.

1916-ம்ஹத்து கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 160
(1916-ம்ஹத்து ரிபர்ட்கேஸ் நெ. 19)

ஜட்ஜிகள்:— (மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்
(மிஸ்டர் ஜஸ்டிஸ் நேபியர்

சவரிமுத்து பிள்ளையும் இன்னும் 2 பெயர்களும்
(எதிரிகள்.)

லாப்பாய்ண்டு:—1898-ம் ஹத்து 5-வது ஆக்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடு-367-வது பிரிவு-ஒரு கேசில் தீர்ப்பை யெழுதிவைத்து, தீர்ப்பைச் சொல்லுமுன-மாற்றிவிடப்பட்டார்-மாற்றிவிடப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுக்குப் பின்வந்த மாஜிஸ்ட்ரேட்டுமுன், கி. பு. கோடு 350-வது பிரிவுப்படி, மறுபடி புதிதாய் விசாரணை செய்யவேணுமென்று கேட்பது-மறுபடி விசாரணை செய்யும்படி செய்யப்பட்ட உத்தரவு சட்டப்படி செல்லுமா-முன்னிருந்த மாஜிஸ்ட்ரேட் எழுதிவைத்த தீர்ப்பை, அவருக்குப்பின்னால் வந்த மாஜிஸ்ட்ரேட்டு, சொல்லக் கடமைப்படவில்லை யென்பது.

ஒரு கேஸை விசாரணைசெய்த ஒரு மாஜிஸ்ரேட்டு, தீர்ப்புச் சொல்வதற்காக குறிப்பிடப்பட்டிருந்ததினத்தில், தீர்ப்பை எழுதி, அதில் தேதி போட்டுக் கையொப்பமும் செய்துவிட்டார். பைசலுக்குக்குறிப்பிடப்பட்டிருந்த, தினத்தில் எதிரிகளில் ஒருவர் ஆஜராகாமலிருந்தகாரணத்தால் அந்த தினத்தில் பைசல் சொல்லாமல், பிந்திய தேதி ஒன்றுக்கு கேசை வாயிதாமாற்றிவிட்டார். இதற்கு மத்தியில் இந்த மாஜிஸ்ட்ரேட்டு வேறு இடத்துக்கு மாற்றிவிடப்பட்டார். இவருக்குப்பின்வந்த மாஜிஸ்ரேட்டிடத்தில் எல்லா எதிரிகளும் ஷை கேசை மறுபடி விசாரிக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டார்கள்.

கி. பு. கோடு 438-வது பிரிவுப்படி. ஹைக்கோர்ட்டுக்கு தெரியப்படுத்திக் கொண்டதில்.

கி. பு. கோடு 350-வது பிரிவுப்படி கேசை மறுபடி விசாரணை செய்ய ஷை மாஜிஸ்ரேட்டு சம்மதித்தது சட்டவிரோதமில்லை யென்றும், அவருக்கு முன்னிருந்த மாஜிஸ்ட்ரேட்டு எழுதிவைத்த தீர்ப்பை பின்வந்த மாஜிஸ்ட்ரேட்டு சொல்லக் கடமைப்படவில்லை யென்றும் பைசல் செய்யப்பட்டது.

Obitter:—தற்செயலான அபிப்பிராயம் (கேசுக்கு சம்மந்தமில்லாதது.)

ஆகையால் (Quaeri) மறுபடி விசாரிக்கவேண்டு மென்று எதிரிகள் கேழ்க்கும்பொழுது முன்னிருந்த மாஜிஸ்ட்ரேட்டு எழுதிவைத்த தீர்ப்பை பின்வந்த மாஜிஸ்ட்ரேட்டு சொல்லலாமா?

சங்கரபிள்ளை விஷயமாய் நடந்தகேசு 1908-ம் ஹத்தில் நடந்து மதுராஸ் லா ஜர்னல் 197 ல் பிரசுரம் செய்யப்பட்ட சேஸை யோசிக்கப்பட்டது.

கேஸின் சுருக்கம்:—திண்டுக்கல் 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டு 1915-ம்ஹத்து காலெண்டர் கேஸ் நெ. 716-ல் மதுரை டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்ட்ரேட்டு G. F. பாடிஸன் துரையவர்கள் 1916-ம் ஹ பிப்பரவரிமீ 10உ போட்ட R. O. C. நெ. 53 மாஜிஸ்ட்ரேட்ஸைட்டில் 1898-ம் ஹத்து 5-வது ஆக்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடு 438-வது பிரிவுப்படி ஹைக்கோர்ட்டார் அவர்களுடைய உத்தரவுக்காக அனுப்பப்பட்டகேஸ்.

லாயர்கள்:—ஏ. வெங்கட்டராயல் ஐயர் எதிரிதரப்பிலும், பப்ளிக் பிராஸிகியூட்டர் கவர்ன்மெண்டு தரப்பிலும் ஆஜரானுர்கள்.

இந்தக் கேசின் முக்கிய சங்கதிகளை ஜஸ்டிஸ் எய்லிங் தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறது.

மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்:—இந்தக் கேசு (திண்டுக்கல் 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டு 1915-ம் ஹத்து காலெண்டர் கேஸ் நெ. 716) ஷை கேசில் சாக்ஷி விசாரணை செய்த மிஸ்டர். D. K வெங்கடேசய்யர், ஷை கேசை தீர்ப்புச் சொல்லுவதற்காக 1915-ம் ஹ நவம்பர்மீ 30உக்கு வாயிதாப் போட்டார். ஷை தேதியில் ஷை கேசில் தீர்ப்பு எழுதி தேதி போட்டு கையெழுத்தும் போட்டுவிட்டார். ஷை கேசில் சேர்ந்த 3 எதிரிகளில் ஒருவர் ஷை கேசை 30உ கூப்பிடும்பொழுது ஆஜரில்லாததினல் தீர்ப்புச்சொல்லவில்லை. இந்த ஆஜரில்லாத எதிரி ஆஜராகவேண்டியதற்காக ஷை கேசு வாயிதா மாற்றப்பட்டது. 1915 ம்ஹ டிசம்பர்மீ 8உ எல்லா எதிரிகளும் ஆஜரானுர்கள். இதற்குள்ளாக மிஸ்டர் வெங்கடேசய்யர் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டு, அவருக்கு பதில் மிஸ்டர் N. சுப்பிரமணிய அய்யர் வந்துவிட்டார். எதிரிகள் கி. பு. கோடு 350-வது பிரிவுப்படி ஷை கேசை மறுபடி விசாரணை செய்யவேணுமென்று கேட்டுக்கொண்டார்கள். மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர், ஷை கேசின் ஸந்தர்ப்பங்களை யோசித்து, தான் தனக்கு முன்னிருந்த மாஜிஸ்ட்ரேட்டு எழுதிவைத்திருந்த தீர்ப்பைச் சொல்லலாமா என்று ஸந்தேகித்து எதிரிகள் வேண்டுதலின்படி உத்தரவு செய்தார்.

அதன்பேரில், மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர், அவருக்கு முன்னிருந்த மாஜிஸ்ட்ரேட்டு எழுதிவைத்த தீர்ப்பைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிருர் என்றும் அவரை அவ்விதம் செய்யும்படி உத்தரவு செய்யும்படிக்கும் ஷை கேசை மறுபடி விசாரிக்கும்படி செய்த உத்தரவை ரத்துச் செய்யும்படிக்கு சிபார்சுசெய்து கி. பு. கோடு 438-வது பிரிவின்படி டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்ட்ரேட்டு தெரிவித்திருக்கிருர்.

டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் சட்டத்தை பிசகாக அர்த்தம் செய்துக் கொண்டிருப்பதாகவும் ஷை கேசை மறுவிசாரணை செய்வதாகத் தீர்மானித்ததானது சட்டத்துக்குப் பொருத்தமான நடவடிக்கை யென்றும் எனக்குத் தோன்றுகிறது. சங்கரபிள்ளை கேசில், கேசில் சாக்ஷிவிசாரணை செய்த முன்னிருந்த ஒரு மாஜிஸ்ட்ரேட்டினுல் எழுதப்பட்ட தீர்ப்பில், அவருக்குப்பின்வந்த மாஜிஸ்ட்ரேட் தேதி போட்டு கையொப்பமிட்டு பயிரங்கமான கோர்ட்டில் படிப்பது சட்டவிரோதமான நடவடிக்கையில்லை யென்பதன் விஷயமாக கி. பு. கோடு 367-வது பிரிவை அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் முன்னிருந்த மாஜிஸ்ட்ரேட் எழுதிவைத்த தீர்ப்பையே பின்வந்த மாஜிஸ்ட்ரேட்டு சொல்லித்தான் தீரவேண்டுமென்ற நிபந்தனை யாதொன்றும் இருப்பதாக கற்றுணர்ந்த ஜட்ஜிகள் அபிப்பிராயப்பட்டதாகக் காணப்படவில்லை. கி.பு. கோடின் 350-வது பிரிவின் நிபந்தனைகள் மாஜிஸ்ட்ரேட்டினுடைய யுக்தத்தை எவ்வளவுதூரம் கட்டுப்படுத்து மென்பதைப்பற்றி யோசிக்கப்படவேயில்லை.

கி. பு. கோடு 366-367-வது பிரிவுகளைச் சேர்த்துப் படிப்பதனுல் ஒரு தீர்ப்பை (1) எழுதி, (2) கையொப்பமிட்டு (3) தேதி போட்டு (4) பயிரங்கமான கோர்ட்டுமுன் படிக்கவேண்டு மென்றும், கடைசியாய் சொல்லப்பட்ட மூன்று சங்கதிகளும் ஒரே காலத்தில் செய்யப்படவேண்டுமென்றும் தெரியவருகிறது. இந்த சங்கதிகளை எல்லாம் செய்து முடியும் வரை, தீர்ப்புச்சொன்னதாக ஆகயாட்டாது. அப்படித் தீர்ப்புச் சொல்லுமுன் ஷை தீர்ப்பை எழுதின மாஜிஸ்ட்ரேட்டு கிழித்துவிட்டு வேறு தீர்ப்பை எழுதுவதற்கு யாதொருதடையுமில்லை இவ்விதமாக அந்தத்தீர்ப்பு அரைகுறையாக பூர்த்தியாகாததாக, இருக்கிறது.

முன்னிருந்த மாஜிஸ்ட்ரேட், தீர்ப்பு எழுதி தேதிபோட்டு கைபெழுத்தும் செய்துவிட்டார் என்பதினுல், ஒரு பாதகமுமில்லை. ஏனென்ருல் அவர் அந்தத் தீர்ப்பைச் சொல்லிவிடவில்லை. தீர்ப்பைச் சொல்லுங்காலத்தில் தேதிபோட்டு கையெழுத்தும் போடவேண்டுமென்று 367-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் 2-வது மாஜிஸ்ட்ரேட் 1915-ம்ஹ டிஸம்பர்மீ 8உ யன்று அவருக்கு முன்னிருந்த மாஜிஸ்ட்ரேட்டினுல் எழுதிவைத்துவிட்டுப் போகப்பட்ட தீர்ப்பு ஒன்றை உடைத்தா யிருந்ததைத் தவிர வேறொன்றுமில்லை ஷை தீர்ப்போ சொல்லப்படாத தீர்ப்பு. கேஸை திரும்பவிசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண் டிருக்கப்படாவிட்டால், 2-வது மாஜிஸ்ட்ரேட்டுக்கு, முன் மாஜிஸ்ட்ரேட்டு எழுதிய தீர்ப்பிலேயே, தேதிபோட்டு கையொப்பமிட்டு அந்த தீர்ப்பைச் சொல்லும் யுக்தம் உண்டு. புனர் விசாரணை செய்யவேண்டுமென்று எதிரிகள் கேட்டுக்கொண்டிருக்கும்போது முன் தீர்ப்பையே சொல்லிவிடுவது சட்டத்துக்குப் பொருத்தமாக விருக்குமாவென்பது எனக்கு மிகவும் ஸந்தேகமாக விருக்கிறது.

ஆனுல் அந்த விஷயத்தைத் தீர்மானிக்கவேண்டிய தில்லை. எதிரி மறுவிசாரணை செய்யவேண்டுமென்று கேட்டாலுமே இல்லாவிட்டாலுமே முன் மாஜிஸ்ட்ரேட் எழுதிய தீர்ப்பையே பின்வந்த மாஜிஸ்ட்ரேட் சொல்லக்கடமைப்பட்வில்லை யென்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது.

மாஜிஸ்ட்ரேட் என்ன நடவடிக்கை நடத்தினுலுமே அது 350-வது பிரிவு 1-வது உட்பிரிவுப்படிக்குத்தான்வரும். அப்போது அவர் யுக்தம்போல செய்ய அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸிவில் புரோஸீஜர்கோடு 20-வது ஆர்டர் 2-வது ரூலில் 2-வது வரும் ஜட்ஜ் முந்தியிருந்த ஜட்ஜ்சொல்வதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறுர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட குறிப்பிட்ட நிபந்தனை ஒன்றும் கிரிமினல் புரொஸீஜர் கோடில் இல்லை. முன் மாஜிஸ்ட்ரேட் எழுதிவைத்த தீர்ப்பையே சொல்லுகிற மாஜிஸ்ட்ரேட் அந்தத் தீர்ப்பைத் தன் சொந்தத்தீர்ப்பாகவேயே பாவிக்கவேண்டும். இப்படிச் செய்யும்படி அவரைக்கட்டாயப்படுத்தக் கூடாது.

என் அபிப்பிராயத்தில் மாஜிஸ்ட்ரேட் செய்திருக்கிற உத்தரவில் பிரவேசிக்க மார்க்கமில்லை. ரிக்கார்டுகளை டிஸ்டிரிக்கட்மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பிவிடவேண்டும்.

ஜஸ்டிஸ் நேபியர்:—நானும் மேல்கண்ட அபிப்பிராயத்துடன் சலந்துகொள்ளுகிறேன்.

I. L. R. 40. Mad. 108 இ. லா. ரி. 40. ம. 108.

நெ. 40

APPELLATE CRIMINAL

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். மிஸ்டர் ஜஸ்டிஸ் நேபியர்.

1915-ம் வுத்து ரெபர்ட் (Referred) கேஸ் நெ. 5

J. கிருஷ்ணுராவ்—அப்பீல்வாதி.

v.

சென்னப்பட்டணம் முனிஸிபல் கார்பரேஷன் பிரஸிடெண்ட்—அப்பீல் பிரதிவாதி.

லாபாயின்ட்:—1904-ம் வுத்து 3-வது ஆக்ட்டாகிய சென்னப்பட்டணம் நகரத்திய முனிஸிபல் ஆக்ட்டு பிரிவு 150.—வைத்துக்கொண்டிருந்தது—என்பதின் அர்த்தம்—மராமத்தில் (Repair)ல் இருக்கிற வண்டி முதலியதும், வைத்துக்கொண்டிருக்கப்பட்டதானதும் தீர்வை போடக்கூடியதென்றும்—மராமத்திலிருக்கிற காரணத்தால் உபயோகத்திலில்லாததாகயிருக்கிற வண்டி முதலியதுகளும் (வாகனுதிகளும்—(Vehicles) 1904-ம்வுத்து 3-வது ஆக்டாகிய சென்னபட்டணம் நகரமுனிஸிபல் ஆக்ட்டு 150-வது பிரிவு 1-வது உட்பிரிவுப்படி வாகனமே ஆகும். ஆகையால் அந்தப்பிரிவுப்படி தீர்வை போடவும் லாயக்காகவேயே யிருக்கிறது.—"வைத்திருக்கிற" என்றவார்த்தை யானது வாடகைக்கு வைத்துக்கொண்டிருக்கிற என்று அர்த்தமல்ல—அதற்குத் தீர்வை ஏற்படுத்துவதற்கு லாயக்காக்கும் பொருட்டு, வாகனமானது சொந்தக்காரருடைய அனுபோகத்திலிருக்க வேண்டுமென்பதில்லை.

கேசின் சுருக்கம்:—1915-ம் வுத்து காலெண்டர் கேசு நெம்பர் 9747-ல் எழும்பூர் பிரதானப்ரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டு C. B. N. பெல்லி துரையால் 1904-ம் வுத்து 3-வது ஆக்ட்டாகிய சென்னப்பட்டணம் நகர முனிஸிபல் ஆக்ட்டின் 176-வது பிரிவுப்படி தெரிவித்துக் கொள்ளப்பட்ட கேஸ்.

இந்தக்கேசின் சங்கதிகள், எழும்பூர் பிரதான மாஜிஸ்ட்ரேட் ஹைக்கோர்ட்டாருக்கு யெழுதியிருக்கிற லெட்டரினுல் வெளியாகிறது.

"சென்னப்பட்டணம் முனிஸிபல் கார்பரேஷன் ப்ரெஸிடெண்டுனுடைய வேண்டுதலின் பிரகாரம், 1904-ம் வுத்திய 3-வது ஆக்ட்டாகிய சென்னப்பட்டணம் நகரமுனிஸிபல் ஆக்ட்டின் 176-வது பிரிவுப்படி அடியில்கண்ட கேசை ஹைக்கோர்ட்டாருடைய பைஸலுக்காக அனுப்புகிறேன்.

கிருஷ்ணுராவ் என்ற ஒருவர் 1914-ம் வு ஆகஸ்டுமீ த்தில் ஒரு மோட்டார்வண்டியைக் கிரையத்துக்கு வாங்கினுர். அந்த கிரையத்துக்குவாங்கிய உடன் அது அப்பொழுது ஓடக்கூடாத நிலைமையிலிருந்தபடியால் அதைமராமத்து (ரிப்பேர்)ச்செய்து கொடுப்பதற்காக மோட்டார்வண்டி ரிப்பேர் செய்து கொடுக்கும் ஒரு கம்பெனியாரிடம் கொடுக்கப்பட்டது. அது ரிப்பேர் செய்யப்பட்டு 1914-ம் வு செம்டம்பர்மீ 9உ அவருக்குத் திரும்பக் கொடுக்கப்பட்டது. இந்த ஸங்கதிகளை வைத்து முனிஸிபாலிட்டியார் மிஸ்டர் கிருஷ்ணுராவுக்கு 1914-ம் வு செப்டம்பர் மாஸத்தோடு முடிகிற அரை வருஷத்துக்கு இந்த மோட்டார் வண்டிக்காக ரூ. 25 தீர்வையேர்ப்படுத்திஞர்கள். இப்படித் தீர்வை ஏற்படுத்தியதானது ஷை ஆக்ட்டின் 152-வது பிரிவின் 2-வது உட்பிரிவின் பிரகாரம். ஷைபிரிவின் சங்கதி அடியில் கண்டபடியிருக்கிறது:—ஒரு வாகனமானது 30 நாள்களுக்குவைத்துக்கொண்டிருக்கப்பட்ட உடன் அல்லது வாடகைக்கு விடப்பட்ட உடன், அல்லது நகரத்துக்குள் உபயோகிக்கப்பட்ட உடன் தீர்வைக்கு லாயக்காய்விடும். 1914-ம் வு ஆகஸ்டு மாதத்தில் ஷை வண்டியை வாங்கிவிட்டபடியால், அது 30-நாளைக்கு மேற்பட்டு வைத்துக்கொள்ளப்பட்டதாய் விட்டதென்று முனிஸிபாலிடியார் தாவாசெய்கிறுர்கள்.

அப்பீல் செய்யப்பட்டதில், மோட்டார்வண்டி வைத்துக்கொண்டிருப்பதென்றுல், வண்டியை வைத்துக் கொண்டிருப்பதுமட்டும் போதாது, மிஸ்டர் கிருஷ்ணு ராவ் 1914-ம் வு ஆகஸ்டுமீ த்தில் வண்டியைவாங்கி வைத்துக் கொண்டிருந்தாலும், ஷை வண்டி மராமத்துச்செய்யப்பட்டு எப்போது அவர் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டதோ அந்தக்காலமாகிய 1914-ம் வு செப்டம்பர்மீ 9உ முதலே அவர் வண்டியை வைத்துக் கொண்டிருப்பவராவார் என்று இந்தக் கோர்ட்டில் பைசல் செய்யப்பட்டது.

"ஒருவண்டி அல்லது ஒருபிராணியை வைத்துக் கொண்டிருப்பது" என்பதற்கு இந்தக் கோர்ட்டார் முன் செய்த அர்த்தத்தை உறுதி செய்யாத விஷயத்தில் அப்பீல் வாதி சொல்கிறபடி. 150-வது பிரிவில் சொல்லுகிறதாவது ஒருவண்டியை வைத்துக்கொண்டிருப்பதற்காக தீர்வையேற்படுத்துகிறதா—அல்லது ஒரு வண்டியை வாடகைக்கு விடுவதற்காக வைத்துக் கொண்டிருப்பதற்காக தீர்வை ஏற்படுத்துகிறதா-என்ற விஷயத்தையும் யோசிக்கவேண்டியதிருக்கிறது.

இந்தக்கோர்ட்டார் அப்பீலில் செய்த பைசல் உத்தரவின் நகலையும் இத்துடன் ஆஜர் செய்யப்பட்டிருக்கிறது.

"இந்தக் கேசை ஹைக்கோர்ட்டுக்குத் தெரிவிப்பதினுல் ஏற்படும் சிலவு இவ்வளவு என்று தெரிவித்த உடன், சிலவு தொகையைக் கோர்ட்டில் கட்டப்படும்"

லாயர்கள்:—R. N. அய்யங்கார்—அப்பீல் வாதி பக்கம், P. துரைஸாமி அய்யங்கார் அப்பீல் பிரதிவாதிபக்கம்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்:—என் அபிப்பிராயத்தில் நகர முனிசிபல் ஆக்ட்டில் "வைத்துக் கொண்டிருப்பது" "வாடகைக்கு விடுவது" "உபயோகப்படுத்துவது" என்று 150-வது பிரிவில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் சொல்தொடர்கள் ஒன்றுக்கொன்று ஸம்மந்தமின்றி உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன. "வைத்துக் கொண்டிருப்பது" என்பதோடு "வாடகைக்கு" என்று சேர்க்கப்படவில்லை. ஒருபோதும் உபயோகப் படுத்தப்படாத ஒரு வண்டியை வைத்துக் கொண்டிருப்பதானது, 150-வது பிரிவுக்குள் பட்ட நிபந்தனையில் வராவிட்டால், 151-வது பிரிவு (f) உட்பிரிவில் கண்ட விலக்கின் நோக்கம் இன்னதென்பது கண்டுபிடிப்பது அஸாத்தியம்.

ஒரு வண்டியானது மராமத்திலிருந்து தர்க்கால உபயோகத்துக்கு லாயக்கில்லாமலிருக்கும் காரணத்தால், அவனுல் ஷை வண்டியை வைத்துக் கொள்ளப்படவில்லையென்று சொல்வதற்கு எனக்கு யாதொரு முகாந்திரமும் தெரியவில்லை.

தீர்வையை ரத்துச்செய்து அபராதத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி உத்தரவு செய்த மாஜிஸ்டிரேட்டுனுடைய உத்தரவை ரத்துச்செய்கிறேன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் நேபியர்:—மேல் கண்ட அபிப்பிராயத்தில் நானும் கலந்துகொள்கிறேன்.

மூன்று விஷயங்கள் பேசப்பட்டன முதலாவது மராமத்திலிருக்கப்பட்ட வண்டிகள் வண்டிகள் ஆகமாட்டாது. இந்தவாதத்தை நான் உபயோக முள்ளதென்று ஒப்புக்கொள்ளவில்லை. இரண்டாவது "வைத்துக்கொண்டிருப்பது" என்ற வார்த்தையை "வாடகைக்கு" என்பதுடன் சேர்த்துப் படித்துக்கொள்ள வேண்டும். 30-நாளைக்கு ஷை வண்டியை உபயோகப் படுத்தாத தனி மனிதர்களு(Private Persons)க்கு தீர்வை யேர்ப்படுத்தக்கூடாது 151-வது பிரிவு (f) உள்பிரிவு அந்த வாதத்தை ரத்துச்செய்கிறது. மூன்ருவது, அந்த் வண்டியானது சொந்தக்காரன் வசத்தில்லாதபடியால், அவன் அதை வைத்துக் கொண்டிருப்பதாக மாட்டாது, அந்தப் பிரிவுப்படி வண்டியானது சொந்தக்காரன் வசத்திலிருக்கவேண்டியதில்லை ஷை வண்டியார் வசத்திலிருந்தாலுமே சொந்தக்காரன் வசததிலிருந்ததே யாகும்.

வண்டியை வைத்துக்கொண்டிருந்தாலும், வண்டிக்குச் சொந்தக்காரன் தீர்வை செலுத்தவேண்டியதில்லையென்று கூஷி பேசப்படவில்லை. சென்னப்பட்டணம் நகர முனிசிபல் ஆக்ட்டு 150-வது பிரிவு (2)வது உள்பிரிவின்படி ஷை வண்டி அவனுடைய ஆளுகைக்குட்பட்டதாகவேயேயிருக்கிறது. முனிஸிபால்டியார் தீர்வை யேர்ப்படுத்தியது ஸரியானதுதான்.

I. L. R. 40. M. 545. இ. லா. ரி. 40. ம. 545.

நெ. 41

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் மிஸ்டர் ஜஸ்டிஸ் நேபியர்

1913-ம் வுத்து ஸிவில் ரிவிஷன் கேஸ் நெ. 879.

பத்ம கிருஷ்ண செட்டியார் என்ற கிருஷ்ணய்யர் (பிரதிவாதி) மனுதார்.

V

நாகமணி அம்மாள் (வாதி)எதிர் மனுதார்.

லாபாய்ண்ட்:—மைனா கார்டியன், மைனர் கார்டியனென்று கையெழுத்து (கையொப்பம்) செய்யாமல் எழுதிக்கொடுத்த பிராமிஸரி நோட்டு மைனர் சொத்துக்களை கட்டுப்படுத்துமா—1881-ம்வுத்து 26வது ஆக்ட்டாகிய நெகோஷியபில் இன்ஸ்டுருமெண்ட்ஸ் ஆக்டு 28-30-வது பிரிவுகளின் வியாபகம் இவ்வளவென்பது.

ஒரு ஹிந்து மைனருடைய உபயோகத்துக்காக மைனர் கார்டியன், மைனர் கார்டியன் என்ற ஹோதாவில் கையெழுத்துப் போட்டு யெழுதிக்கொடுக்காத பிராமிஸரி நோட்டு, மைனர் சொத்துக்களைக் கட்டுப்படுத்தும். அந்த தஸ்தாவேஜானது மைனரின் சரீரத்தை ஜவாப்தாரியாக்கமாட்டாது.

இந்த கேசுக்கு இந்துலாவின் கொள்கை சம்மந்தப்படுமே யல்லாது 1881-ம் வுத்து 26-வது ஆக்ட்டாகிய நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்ட் ஆக்டின் 28-30 வது பிரிவுகள் ஸம்மந்தப்படமாட்டாது.

சுப்பிரமணிய அய்யருக்கும், ஆறுமுக செட்டிக்கும் நடந்து 1903-ம் வுத்தில் இ. லா. ரி. 26 ம. 330-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசுப்படி செய்யப்பட்டது.

கேசின் சுருக்கம்:—1913-ம்வுத்துஸ்மால்காஸ் வியாச்சிய நெ. 692 ல், கும்பகோணம் ஸபார்டிநேட் ஜட்ஜி A. S. பாலசுப்பிரமணிய அய்யர் செய்த டிக்

ரிபை புனராலோசனை செய்யும்படி ஹைக்கோர்ட்டாரை பிரார்த்தித்து, 1887-ம் ௵த்து 9-வது ஆக்டாகிய ப்ரொவின்ஷியல் ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்டு 25-வது பிரிவுப்படி கொண்டுவரப்பட்ட மனு.

கேசின் சங்கதிகள் தீர்ப்பில் வெளியாகும்.

லாயர்கள் :—அப்பீல் வாதிக்காக K. பாஷியம் அய்யங்காரும், அப்பீல் பிரதிவாதிக்காக T. R. வெங்கட்ராம சாஸ்திரியார், V. S. கோவிந்தாச்சாரியார், V. S. கள்ளபிரான் அய்யங்கார் இவர்கள் ஆஜரானார்கள்.

(ஹைக்கோர்ட்டாருடைய, அடியில் கண்ட தீர்ப்பு ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரால் சொல்லப்பட்டது)

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்:—பிராதில் கண்டதுகையை பிரதிவாதியின் தாய், அவருடைய கார்டியன் ஸ்தானத்தில் வாதியிட மிருந்து கடன் வாங்கினதாகவும் ஷை துகை பிரதிவாதியைக் கட்டுப்படுத்த கூடிய செலவுகளுக்காக உபயோகப் படுத்தப்பட்டதென்றும் இந்தக்கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது மிஸ்டர் பாஷியம் அய்யங்காரால் மிகவும் ஊக்கத்துடன் வாதிக்கப்பட்ட சட்டதாத்பரியம் என்னவென்றால் தாயினால் கையெழுத்துச் செய்யப்பட்ட பிராமிஸரிநோட்டில் அவள் கார்டியன் ஸ்தானத்தில் கையொப்பம் செய்யாதபடியால் அந்த நோட்டுத்துகைக்கு அவாளே ஜவாப்தாரியாக யிருக்கவேண்டு மென்றும், பிரதிவாதி பேரில் டிக்கிரி பிறப்பிவித்தது பிசகென்பதும் தான். அவர் நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்ட் ஆக்ட்டில் உபயோகப் படுத்தப்பட்டிருக்கும் பாஷையை எடுத்துக்காட்டி முக்கியஸ்தனுக்காக அவனுடைய ஏஜெண்டினால் செய்யப்பட்ட உடன்படிக்கையானது ஏஜெண்டை நேரில் ஜவாப்தாரியாகச் செய்யும் கொள்கை, ஒரு கார்டியனுக்கும் சம்பந்தப் படுமென்றும் வாதிக்கிறார் இந்த வாதத்திற்கு அடியில் கண்டது தான் சுருக்கமான ஜவாப்பு. ஆக்டில் கார்டியன்களினால் கையொப்பம் செய்யப்பட்ட நோட்டுகள் விஷயமான சங்கதி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் 28-வது பிரிவில் ஏஜெண்டுகள் விஷயமாகவும் 30-வது பிரிவில் சட்டப்படிக்குள்ள பிரதிநிதிகள் விஷயமாகவும் குறிப்பிட்டு விதிக்கப்பட்டிருக்கிறது. யாதொரு விதமான ஏற்பாடும் சட்டத்தில் செய்யப்படாத கேசுகள் விஷயத்தில் மேல் கண்ட விதிகளை கோர்ட்டார்கள் உபயோகப்படுத்திவிடக்கூடாது. கற்றறிந்த வக்கீல் பில்ஸ் ஆப் எக்ஸ்ச்சேஞ்ச் ஆக்ட் (Bills of Exchange Act) 26-வது பிரிவை நமது கவனத்துக்குக் கொண்டுவந்து அதை யோசிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறார். 26-வது பிரிவு கார்டியன்களால் எழுதிக்கொடுக்கப்பட்ட தஸ்தாவேஜுகளுக்கு சம்மந்தப்படுமா வென்ற சங்கதி நீங்கலாக பொதுவான ஒரு பிரிவு யேர்ப்படுத்தப் படாததையும் நாம் முன் சொன்ன குறிப்பிட்ட கேசுகளின் சங்கதிகள் விஷயமாய் நிபந்தனைகள் யேர்ப்படுத்தியிருப்பதையும் பார்க்கும் பொழுது இந்திய சட்டங்களில் ஒருவருக்காக மற்றொருவர் நடபடிக்கைகள் நடத்தும் விஷயமாய் பொது விதிகள் ஏற்படுத்துவது யுக்தமில்லையென்று விட்டுவிட்டதாக வெளியாகிறது. மைனராகவாவது புத்தி ஸ்வாதீன மில்லாமை அல்லாதவனாகவாவது, அல்லது வேறு எவ்வகை சக்திக் குறையில்லாதவனாகவாவது இருக்கும் ஒருவனுக்காக (Sui Juris) மற்றொருவர் கையொப்பமிடும் விஷயமானது ஒப்பந்தம் செய்து நடபடிக்கை நடத்திக் கொள்ள சக்தியில்லாத ஒருவனுக்காக தஸ்தாவேஜு எழுதிக் கொடுப்பதற்கு ஸமானமாக மாட்டாது (Pari Pussu)

கோனேட்டி நாய்க்கருக்கும், கோபாலய்யருக்கும் நடந்து 1913 ம்௵த்தில் 25-ம. லா. ஜ. 425-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசும் கோவிந்த நாயருக்கும், நாணுமேனனுக்கும் நடந்து 1914 ம் ௵த்தில் 27 ம. லா. ஜ. 595-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசும் இனுகண்டி சின்ன வெங்கடராய நிம்முக்கும் கோடகிரி வெங்கட நரஸிம்மராய நிம்முக்கும் நடந்து 1904 ம்௵த்தில் 14 ம. லா. டை. 502-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசும் யேஜெண்டுகள் விஷயமான நடபடிக்கைகளைப்பற்றி வியவஹரிக்கின்றன. பிரகிருத கேசைத் தீர்மானிப்பதற்கு அந்தக் கேசுகளினால் யாதொரு உபயோகமுமில்லை. ராமசுவாமி முதலியாருக்கும், முத்துசாமி அய்யருக்கும் நடந்த 1914-ம் ௵த்து 224-ம் நெ. ஸிவில் சில்லரை அப்பீலில்சட்ட சங்கதியைப்பற்றி ஒன்றும் தீர்மானம் செய்யப்படவில்லை. கார்டியன் ஸ்தானத்தில் கடன்வாங்கப்பட்டதென்று ஸபார்டிநேட் ஜட்ஜி செய்த தீர்மானத்தை கற்றறிந்த ஜட்ஜிகள் ஒப்புக்கொள்ள வில்லை.

மைனருக்காக எழுதிக்கொடுக்கப்பட்ட தஸ்தாவேஜுகள் விஷயமாய் சட்டசம்மந்தமான விதியேதுமில்லாதபடியால், அப்பேர்ப்பட்ட கேசுகளைத் தீர்மானிப்பதற்கு ஹிந்து லாவின் கொள்கைகளைத்தான் அனுசரிக்கவேண்டும். ஹநுமான்ப்ரசாதபண்டேக்கும், முஸம்மெத்பாபோயி முன்ராஜகூன்வெரிக்கும் நடந்து 1856-ம் ௵த்தில், 6. மூ. இ. அ. 393-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற பிரசித்தமான கேசில் கார்டியனால் செய்யப்பட்ட நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் அவர்களைக் கட்டுப்படுத்தும் என்பதைப் பற்றி வியவஹரிக்கப்பட்டிருக்கிறது. ஹிந்து குடும்பங்களின் மானேஜர்களால் செய்யப்படும் நடவடிக்கைகளில் குடும்பத்தில் முக்கிய ஸ்தருக்கும் ஏஜெண்டுகளுக்கும் உள்ள தாக்கல்கள் இருப்பதாகயிருந்தும் நேகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் ஆக்டு (Negotiable Instruments Act) 28-வது பிரிவினால் அந்தக் குடும்பத்தில் கனிஷ்டர்களுடையஜவாப்தாரியை நீக்கிவிடமாட்டாதென்று இந்தக்கோர்ட்டு புல் பெஞ்சு (Full Bench) த்தீர்மானத்தில் பைசல் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு நடபடிக்கையின் உறுதிப்பாட்டை 2 விஷயங்களை வைத்து பைசல்செய்ய வேண்டியதிருந்தால் ஒருவிஷயத்தை வைத்துத்தான் மற்றொரு விஷயம் தீர்மானிக்கப்படவேண்டு மென்பதுதான் ஸரியான கொள்கை. ஹிந்து லாபடிக்கும் வரக்கூடிய சில விஷயங்கள் ஸம்மந்தமாய் வேறுசட்டமும்

இருப்பதை வைத்து ஹிந்துலாவின் கோட்பாடுகளை அசட்டை செய்து விடலாகாது. சுப்ப நாராயண வாத்தியாருக்கும்-ராமஸ்வாமி அய்யருக்கும் நடந்து 1907 ம் ௵த்தில் இ. லா. ரி. 30 ம. 88ல், பிரசுரிக்கப்பட்டிருக்கும் கேசில் கண்ட தீர்மானமானது, கிருஷ்ணய்யருக்கும்-கிருஷ்ணஸ்வாமி அய்யருக்கும் நடந்து 1900 ம ௵த்தில் இ. லா. ரி. 23 ம. 597-ல் பிரசுரிக்கப்பட்ட கேசின் தீர்மானத்திலிருந்து வித்தியாசப்படவில்லை இப்படிக்கிருக்க சுப்பிரமணிய அய்யருக்கும் ஆறுமுகம் செட்டிக்கும் நடந்து 1903 ம் ௵த்தில் இ. லா. ரி. 26. ம 330-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற தீர்மானத்தில் கண்ட விஷயங்கள் பிரகிருத கேசுக்கு முற்றிலும் ஒத்திருக்கிறது. மிஸ்டர் பாஷியம் அய்யங்கார் இந்தக் கேசு சம்மந்தப்படாது என்று சொன்ன தாவா உபயோகமில்லை அல்லாமலும், இந்தக்கேசின் பிராதின் 4 வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களைப் பார்வை யிடுவதினால் இந்தக் கடன் மைனரின் குடும்பசொத்தை எவ்வளவு தூரம்கட்டுப்படுத்துகிறதென்பதை வெளியாக்குகிறது. சொபாந்த்ரி அப்பாராவுக்கும்-ஸ்ரீராமுலுவுக்கும் நடந்து 1894 ம் ௵த்தில் இ. லா. ரி. 17-ம. 221 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசையும் பார்க்க.

கீழ் கோர்ட்டாருடைய டிக்ரியை சீர்திருத்தப்பட வேண்டுமென்று நினைக்கிறோம் ஏனென்றால் பிரதிவாதியின் சரீர ஜவாப்தாரியைக் கட்டுப்படுத்தி டிக்ரி செய்ய கூடாது. சங்க கிருஷ்ண மூர்த்திக்கும்-பர்மா பாங்குக்கும் நடந்து 1912-ம் ௵த்தில் இ. லா. ரி. 35, ம. 692-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசைப்பார்க்க.

மேல் கண்ட சீர் திருத்தத்துடன் இந்த ஸிவில் ரிவிஷன் மனுவை செலவுடன் தள்ளும்படி செய்கிறோம்.

I. L. R. 39. M. 915., இ. லா. ரி. 39. ம. 915.

நெ. 42

APPELLATE CRIMINAL.

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீம்
மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் }

1915-ம் ௵த்து கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 448.

(1915-ம் ௵த்து கிரிமினல் ரிவிஷன் பெட்டிஷன் நெ 1)

மஹம்பது கன்னிராவுத்தர் (வாதி) மனுதார்

V

பட்டாணி இணையதல்லா சாகிபும் இன்னும் 5-பேர்களும்

(4 முதல் 7, 9, 10-வது எதிரிகள்) எதிர் மனுதார்கள்

லாபாயிண்ட்:—1898-ம் ௵த்து 5-வது ஆக்ட்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடு 345-வது பிரிவு—ஒரு குற்றத்தை சமாதானம் செய்வது—ஷை கேஸ் வாயிதாவுக்குள் வாதி ராஜிக்கு சம்மதிக்காமல் மாறிக் கொள்வதின் முடிவு.

மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீம் அபிப்பிராயம்.
(ஜஸ்டிஸ் எய்லிங் ஸந்தேகப்படுகிறார்.)

ஒரு ராஜியாகக் கூடிய கேசில் கக்ஷிக்காரர்களுக்குள் ஸமாதான மாகிவிட்டால் அந்த ஸமாதானமாகிவிட்ட உடனேயே பூர்த்தியாகி விடுகிறது. பின்னிட்டு இரு கக்ஷிக்காரர்களில் ஒருவர் இராஜிக்கு சம்மதிக்காமல் மாறிவிட்டாலுமே அந்தக்கேசின் கக்ஷிக்காரர்களால் இராஜியான விபரத்துக்கு ஸ்டேட்டு மெண்டாவது, மனுவாவது தாக்கல் செய்யப்படாவிட்டாலும் அந்தக்குற்றம் சம்மந்தப் பட்டமட்டில் எதிரியை கி. பு. கோடு. 345-வது பிரிவுப்படி விடுதலை செய்ததாய் விடுகிறது.

மரேக்கும், மகாராணி சக்கிரவர்த்தினி அவர்களுக்கு நடந்து 1894-ம் ௵த்தில் இ. லா. ரி. 21. கல் 103-ல் பிரசுரிக்கப்பட்ட கேசையும் பார்வை யிடப்பட்டது.

கேசின் சுருக்கம்:—பாபநாசம் ஸ்டேஷனெரி 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்டிரேட்டு C. R. சக்கிரபாணி அய்யங்கார் கோர்ட்டு 1914-ம் ௵த்து காலெண்டர் கேசு நெம்பர் 249-ன் தீர்மானத்தின் பேரில், கும்பகோணம் ஸப்டிவிஷனல் 1-வது கிளாஸ் மாஜிஸ்ட்டிரேட்டு J. R. கிருஷ்ணம்மா கோர்ட்டில் 1915-ம் ௵த்து 38-ம் நெம்பர் கிரிமினல் அப்பீல் செய்யப்பட்டு அந்தத் தீர்மானத்தின்பேரில் புனராலோசனை செய்ய வேண்டுமென்று ஹைகோர்ட்டாரைப் பிரார்த்தித்து கி. பு. கோடு 435, 439-வது பிரிவுகளின்படி இந்த மனு தாக்கல்செய்யப்பட்டிருக்கிறது.

இந்தக்கேசின் சங்கதிகள் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீம் தீர்ப்பில் வெளியாகிறது.

லாயர்கள்:—மியர் ஸஅில் தான் முஹியுடீன் மனுதார் பக்கமும், எதிர் மனுதார்கள் பக்கம் T. ரங்காச்சாரியாரும் கவர்ன்மெண்டார் பக்கம் பப்ளிக் ப்ராஸிக்யூட்டாருக்காக P. R. கிராண்டும் ஆஜரானார்கள்.

ஜஸ்டிஸ் அப்துற் ரஹீம்:—இந்தக்கேசின் சாக்ஷியத்தினால் கக்ஷிக்காரர்கள் தங்களுக்குள்ளிருந்த தாவாக்களை கோர்ட்டுக்கு வெளியே ஸமாதானம் செய்து கொண்டுவிட்டதாக வெளியாகிறது. மனுதாருக்கும், எதிர் மனுதார்களுக்கும் இருந்த தாவாக்களினால் கக்ஷிக்காரர்களுக்குள் 3-கேசுகள் யேர்ப்பட்டு விட்டன. இந்தக்கேசுகளில் முதலாவது கேசில் இந்தமனுதார் எதிரியாகயிருந்தார். இந்தக் கேசுக்கு எதிரிடையான 2-வதுகேசில் மனுதார் வாதியாக யிருந்தார். 3-வது கேசாகிய பிரகிருதகேசில் மனுதார் வாதியாகயிருந்தார். மற்ற 2-கேசுகளிலும் எதிரிகள் ஒவ்வொருவருக்கும் 3-மீ கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அதன் பேரில் அவர்கள் ஜாயிண்டு மாஜிஸ்ட்டிரேட்டிடம் அப்பீல் செய்தார்கள் அப்பீல்கள் முடிவு செய்யப்படாமலிருக்கும் பொழுது, அவர்களுக்குள்ளிருந்த தாவாக்களையெல்லாம் தீர்த்துக்கொள்ள வேண்டு மென்று ஏற்

பாடுசெய்து கொண்டார்கள். தாவாக்களை யெல்லாம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று செய்துகொண்ட ஏற்பாட்டில் ஸப் மாஜிஸ்டிரேட்டுக் கோர்ட்டில் விசாரணையிலிருந்தகேசும் அடங்கினது தானென்று ஜாயிண்டு மாஜிஸ்ட்டிரேட் சொல்லியிருக்கிறார் இந்த ஸமாதானத்தின் முடிவாக கோர்ட்டாருடைய அனுமதியின் பேரில் இந்த இரண்டு அப்பீல் கேசுகளும் ராஜி செய்யப்பட்டு எதிரிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். அப்பொழுது இந்தக் கேசின் எதிரி இந்தக்கேசும் சமாதானம் செய்து விடப்பட்டதாகவும் இந்த மனுதாராகியவாதி, முன்கொடுத்த மனுவில் கண்ட ஸங்கதியை மறுதளித்து இந்தக்கேசு சமாதானம் செய்யப்படவில்லையென்று சொல்வதாகவும். கண்டு ஸப் மாஜிஸ்ட்டிரேட்டிடம் மனுக்கொடுத்தார் பிரகிருத கேசில் ராஜியாகவில்லை யென்று ஸப் மாஜிஸ்டிரேட்டு தீர்மானித்தார். அப்பீல் கோர்ட்டார் வேறு விதமாக அபிப்பிராயப்பட்டார். இந்த அபிப்பிராயம் கேசின் சங்கதிகள் சம்பந்தப்பட்டமட்டில் சரியானதுதானென் பதில் சந்தேகமில்லை யென்று அபிப்பிராயப்படுகிறோம். ஸப் மாஜிஸ்டிரேட்டுக் கோர்ட்டுக்கு வெளியில் செய்யப்பட்ட ராஜியானது கிரிமினல் புரொஸீஜர் கோடின் 435-வது பிரிவின்படி ஸமாதானம் செய்த தாகுமா வென்ற சட்ட சம்மந்தமான சங்கதி யேர்ப்படுகிறது. அந்த பிரிவுப்படி ஒரு குற்றத்தைச் சமாதானம் செய்து விட்டால் எதிரியை விடுதலை செய்ததாய் விடுமென்று அந்தப்பிரிவின் 6-வது உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. கோர்ட்டுக்கு வெளியில் குற்றத்தை சமாதானம் செய்துவிட்டு அப்பால் கோர்ட்டில் ஷை கேசுவிசாரணைக்கு வரும்போது கக்ஷிக்காரர்களில் சமாதானம் யேர்ப்பாட்டின்படி நடக்கத்தவறிவிட்டால் இன்னபடி செய்ய வேண்டுமென்று அதில் சொல்லப் படவில்லை இந்தக் கேசைப் போல் முன் ஒரு கேசு மாத்திரம் நடந்திருக்கிறது அதுதான் மரே என்பவருக்கும்-மகாராணி சக்கிரவர்த்தினி அவர்களுக்கும் நடந்த கேசு அந்தக் கேசில் கற்றறிந்த ஜட்ஜிகள் எந்தக்கோர்ட்டில் கேசு விசாரணையிலிருக்கிறதோ அந்தக் கோர்ட்டார் கோர்ட்டுக்கு வெளியில் ஸமாதானம் நடந்த விஷயத்தைப்பற்றி சாக்ஷி விசாரணை செய்யலாமென்று தீர்மானித்திருக்கிறார்கள். அந்தக்கேசில் ராஜி செய்யப் பட்டதாவென்பதைப்பற்றியும், அந்த ராஜி செல்லுமா செல்லாதாவென்பதைப் பற்றியும் தாவாச் செய்யப்பட்டது. ஏனென்றால் வாதிகள் இராஜிச்சங்கதி இன்னதென்று தெரிந்து மனப்பூர்வமாக ராஜிக்குச் சம்மதிக்க வில்லையென்று சொல்லப்பட்டது, இப்போது நம்முடைய முன் தீர்மானிக்கப்பட வேண்டியதாயிருக்கிற விஷயத்திற்கு ஸாதகமாக ஷை பிரிவில் யாதொரு சங்கதியும் துலங்கவில்லை. மேலே மரே என்பவருக்கும் மகாராணி சக்கிரவர்த்தினி அவர்களுக்கும் நடந்த கேசில் வெளியாகிற அபிப்பிராயம் போலவேயே நானும் அபிப்பிராயப்படுகிறேன் கி. பு. கோடு 345-வது பிரிவில், சில குற்றங்களை கோர்ட்டாருடைய அனுமதி யில்லாமலேயே இராஜிசெய்யலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட குற்றங்களில் (துன்பம்) செய்த குற்றமும் ஒன்று கொடுந்துன்பம் போன்றவேறு சில குற்றங்களை எந்தக் கோர்ட்டு முன் கேசு நடக்கிறதோ; அந்தக்கோர்ட்டார் அனுமதியின்றி ஸமாதானம் செய்யக்கூடாது. நான்குவகையான கேசுகளிலும் கக்ஷிக்காரர்கள் ஸமாதானமாகப் போயிருக்கையில் அந்தச் சமாதானத்தை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு அந்தச்சமாதானத்தை ஒப்புக்கொண்டு மனு எதற்காகக் கொடுக்கவேண்டும். செய்யப்பட்ட ஸமாதானத்திலிருந்து ஒரு கக்ஷிக்காரன் விலகுவதற்கு யேன் இடம் கொடுக்கவேண்டும் என்ற விபரங்கள் தெளிவாகத் தெரியவில்லை. 345-வது பிரிவில் சொல்லப்படுகிற ஸமாதானமானது, திரவிய ஸம்மந்த மில்லாவிட்டாலும் ஒரு உடன் படிக்கைக்கு சமானமான தாக யிருக்கிறது ஆனால் இந்தக்கேசில் யோசிக்கவேண்டிய சில் விஷயங்களிருக்கின்றன. ஏனென்றால், கக்ஷிக்காரர்களுக்குள் அப்போது விசாரணையிலிருந்த மற்ற கேசுகளும் யிருந்தன அவர்கள் செய்து கொண்ட ஸமாதான ஏற்பாடானது ஒவ்வொரு கக்ஷிக்காரனும் மற்றொரு கக்ஷிக்காரன் எதிரியாக யிருந்தகேசை மேல் நடத்தக்கூடாது என்பதுதான். கோர்ட்டுக்கு வெளியில் ராஜி செய்யப்பட்டு பின்னீடு கோர்ட்டில் கேசு விசாரணைக்கு யெடுக்கப்படும் பொழுது கக்ஷிக்காரர்களில் ஒருவர் ஷை ராஜி செய்யவேயில்லை என்று சொல்லிவிடும்கேசுகளில் இராஜி செய்ததைப்பற்றி சாக்ஷியம் எடுப்பது கோர்ட்டாருடைய கடமையாக ஏற்பட்டு விட்டால் நடபடிக்கைகள் நீடித்துக் கொண்டுபோகும் என்பதற்கு சந்தேகமில்லை. சமாதானமானது கோர்ட்டில் வைத்தே செய்யப்பட வேண்டு மென்றுவது அல்லது செய்யப்பட்ட ஸமாதானமானது உபய கக்ஷிக்காரர்களும் ஷை சமாதானத்துக்கு சம்மதித்தாக ஒப்புக்கொண்டு கோர்ட்டில் மனு மூலமாகவோ அல்லது வேறுவிதமாகவோ தெரியப்படுத்திக் கொண்டாலொழிய முற்றுபெறமாட்டாதென்பது சட்டத்தின் கருத்தாக யிருக்கும் பக்ஷத்தில் சட்டத்தில் அப்படிச் சொல்லப்பட்டிருக்கு மென்றே எதிர் பார்க்கவேண்டும். அப்பேர்ப்பட்ட குறிப்பிட்ட நிபந்தனைக ளில்லாதவரை கோர்ட்டில் வைத்துச் செய்யப்படும் சமாதானத்துக்குத் தான் சமாதானமென்றும்—சமாதானம் செய்து விட்டு கக்ஷிக்காரர்கள் கோர்ட்டில் விசாரணைக்குக் கேசு எடுக்கும் வரை ஒரே மனதாக யிருந்து சமாதானம் செய்ததை ஒப்புக்கொள்ளுகிற கேசுகளாக யிருக்கவேண்டுமென்றும் சொல்வதற்கிடமில்லை.

ஆகையால் சரியானபடி இந்தக்கேசு சமாதானம் செய்யப்பட்ட தென்றும் அதனால் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டு விட்டார்களென்றும் நான் தீர்மானிக்கிறேன்.

ஜஸ்டிஸ் எய்லிங்—கேசை ராஜி செய்ததாக கோர்ட்டுக்கு வெளியில் கக்ஷிக்காரர்களுக்குள் யேர்ப்பாடுசெய்து கொண்டு அப்பால் கக்ஷிக்காரர்களில் ஒருவர் ராஜி செய்யவில்லை என்று சொல்வதின் முடிவு

இன்னதென்று தீர்மானிப்பது கஷ்டமான விஷயம். அது எனக்கு சந்தேகமான விஷயமாக யிருக்கிறது. கி. பு. கோடின் 345-வது பிரிவில் உபயோகிக்கப் பட்டிருக்கிற பதங்களினால் இந்த சந்தேகம் நிவர்த்தி யாவதற்கு மார்க்கமில்லை ஒரு தலைக்கக்ஷியாய் பேசப்பட்ட வாதத்தை வைத்துக் கொண்டு நான் முடிவான அபிப்பிராயம் கொடுக்கத்தயாரில்லை இந்தக்கேசில் எடுத்துக் காட்டப்பட்ட ஒரே ஆதாரமும், மிஸ்டர் ரங்காச்சாரியாருடைய வாதத்துக்கு அனுஸரணையாக யிருக்கிறது. ஜாயிண்டு மாஜிஸ்ட்டிரேட்டினால் தீர்மானிக்கப்பட்டிருக்கிற சங்கதிகளினால், நாம் செலுத்தக்கூடிய யுகத்தை இந்தக்கேசில் செலுத்த மாட்டோமென்று சொல்லிவிடுவதே ஸரியென்று எனக்குத் தோன்றுகிறது. என்னுடைய கற்றறிந்த சகோதரர் செய்த தீர்ப்பில் நானும் கலந்து கொள்கிறேன்.

I. L. R. 39. M. 946., இ. லா. ரி. 39 ம. 946.

நெ. 43

APPELLATE CIVIL.
ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர்ரஹீம்
மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்

1915-ம் ஹு த்து 2-வது அப்பீல் நெ. 265.

K. ரங்கப்பாவும், இன்னும் இரண்டு பெயர்களும் (1-முதல் 3-வரை பிரதிவாதிகள்) அப்பீல் வாதிகள்.

V

கரணம் பீமப்பா-(வாதி) அப்பீல் பிரதிவாதி

லாபாயிண்ட்:—1863 வது வருஷத்து 20 வது ஆக்டாகிய ரிலிஜிபஸ் எண்டௌமெண்ட் ஆக்டு (Religious Endowment Act) ரிவினியூ விஷயங்களுக்காக ஒரு கிராமம், ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவுக்கு மாற்றப் படுவது—அந்தக் கிராமத்திலுள்ள ஒரு தேவாலயம்—பழய ஜில்லாவிலிருக்கும் பழய கமிட்டியார் இந்த தேவாலயத்தை மேல்பார்த்து வருவதற்கு அவருக்குள்ள அதிகாரம்—புது ஜில்லாவிலுள்ள கமிட்டியாருக்கு தர்மகர்த்தா நியமிப்பதற்கு அதிகாரமில்லை.

1863-ம் ஹு த்து 20 வது ஆக்ட்டாகிய ரிலிஜியஸ் எண்டௌமெண்டு ஆக்ட்டில் ஷை ஆக்டு ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரப்பட்ட உடனே 1817-ம் ஹு த்து 7-வது ரெகுலேஷனில் சொல்லப்பட்ட ரிவினியூ போர்டார்—ஸ்தலம் காரியஸ்தர்கள் இவர்கள் ஸ்தானத்திலிருந்து வரும்படி, ஒரே அடியாய், டிவிஷன் கம்மிட்டி, அல்லது ஜில்லாக் கம்மிட்டி இவர்களை நியமித்து விடும்படியாய் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி நியமிக்கப்பட்ட கம்மிட்டியார் அல்லது அவர்கள் ஸ்தானத்தில் அவர்களுக்குப் பின் வருகிறவர்கள் தான், ஒரு குறிப்பிட்ட கோவிலின் விஷயமாய் அதிகாரம் செலுத்தலாம். ரிவினியூ விஷயங்களுக்காக ஒரு கிராமத்தை ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவுக்கு மாற்றினதாக பிறப்பிவிக்கப்படும் கவர்ன்மெண்டு உத்தரவினால், அந்தக் கோவில் எந்த தேவஸ்தானம் கம்மிட்டியாருடைய மேல் பார்வையிலிருந்ததோ, அந்தக்-கமிட்டியாரை விட்டு ஷை கோவிலுக்குதர்மகர்த்தா முதலியது நியமிப்பது போலொத்த அதிகாரங்கள் போய்விடாது ஷை கிராமமானது புதிதாக எந்த ஜில்லாவுடன் சேருகிறதோ அந்த ஜில்லா தேவஸ்தானம் கமிட்டியார் அந்தக் கிராமத்திலுள்ள தேவாலயத்தில் அதிகாரம்செலுத்தவும் கூடாது.

கேசின் சுருக்கம்:—பெனுகொண்டா ப்ரின்ஸ்பல் டிஸ்டிரிக்கட்டு முனிஸீப் கோர்ட்டு 1911-ம் ஹு த்து அசல்வியாச்சிய நெ. 1502 ஆக யிருந்து அப்பால் பெனுகொண்டா அடிஷனல் டிஸ்டிரிக்டு முனிசீப் கோர்ட்டு 1913-ம் ஹு த்து அஸல்வியாச்சியநெ. 16ல் M. A. ஸ்ரீரங்காச்சாரியாருக்காக, J. வெங்கட்டராவ் செய்த டிக்ரியின் பேரில் பெல்லாரி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் 1914 ம் ஹுத்து அப்பீல் நெ. 92 செய்யப்பட்டு ஷை அப்பீலில் ஆக்டிங் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் B. C. ஸ்மித் செய்த டிக்ரியின் பேரில்செய்யப்பட்ட 2 வது அப்பீல்.

கேசின் சங்கதிகள் தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறது.

லாயர்கள்:—கனம் மிஸ்டர் L. A. கோவிந்தராகவ அய்யர் அப்பீல் வாதிகளுக்காகவும்—P. சென்ஸய்யாவும், A. வெங்கட்டராயலய்யாவிம் அப்பீல் பிரதிவாதிகளுக்காகவும் ஆஜரானார்கள்.

அடியில் கண்ட, ஹைகோர்ட்டார் தீர்ப்பு மிஸ்டர் ஜஸடிஸ் அப்துர்ரஹீமினால் சொல்லப்பட்டது.

மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீம்:—தக்கு பார்டியென்னும் கிராமத்திலுள்ள ஆஞ்சநேய ஸ்வாமி கோவிலுக்குத் தர்மகர்த்தாவான வாதியால், ஷை கோவிலுக்குப் பாத்தியப்பட்ட சில நிலங்களிலிருந்து பிரதிவாதிகளை அப்புறப் படுத்துவதற்காக இந்த வியாச்சியம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. பிரஸ்தாப நிலங்கள் முன் ராயட்ருக் தாலுக்காவைச் சேர்ந்திருந்தது. 1894-ம் ஹு த்தில் புது ஜில்லா ஏற்படுத்த வேண்டியதற்காக தாலுக்காக்கள் ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவுக்கும், கிராமங்கள் ஒரு தாலுக்காவிலிருந்து மற்றொரு தாலுக்காவுக்குமாக மாற்றப்பட்டது. அப்படி மாற்றியதில் பிரஸ்தாப நிலங்கள் அனந்தபுரம் ஜில்லாவிலுள்ள கலியாண்ட்ருக் தாலுக்காவுக்கு மாற்றப்பட்டது. ராயட்ருக் தாலுக்

கா பெல்லாரி ஜில்லாவிலிருக்கிறது வாதி கலியாண்ட்ரூக் தேவஸ்தானம் கம்மிட்டியாரால் தர்ம கர்த்தாவாக நியமிக்கப்பட்டார் பிரஸ்தாப கோவிலுக்கு தர்ம கர்த்தா நியமுகம் செய்ய கலியாண் ட்ரூக் தேவஸ்தானம் கம்மிட்டியாருக்கு அதிகாரமில்லையென்று, இந்த 2-வது அப்பீலில் வாதிக்கப்படுகிறது 1863-ம் ஸ்ரீத்து 20-வது ஆக்டாகிய ரிலிஜியஸ் எண்டௌமெண்டு ஆக்ட் ஊர்ஜிதத்துக்கு வந்த காலத்தில் ராயட்ரூக் தாலுக்கா கம்மிட்டியார்தான் முதலில் நியமிக்கப்பட்டார்கள். தாலுக்கா எல்லைகை விஷயமாக ரிவினியூ அதிகாரிகள் பின்னிடு எவ்விதமான மாறுபாடுகளைச் செய்தபோதிலும் அந்தக் கோவில் விஷயமாய் அந்தக் கமிட்டியாருக்கே அதிகாரமிருந்து வருகிறதென்று அப்பீல் வாதிகள் பக்கம் ஆஜரான கற்றறிந்த வக்கீல் வாதித்தார். இந்த ஆக்டினால் ரத்துச் செய்யப்பட்ட சட்டங்களினால் நியமிக்கப்பட்ட ரிவினியூ போர்டார் அல்லது ஸ்தலம் காரியஸ்தர்கள் (Local Agents) இவர்களால் தேவஸ்தானங்களின் விஷயமாய் பார்த்து வரப்பட்ட காரியாதிகளை அவர்கள் ஸ்தானத்தில் மேல் பார்த்து வருவதற்காக ஒவ்வொரு டிவிஷன் அல்லது ஜில்லாவிலும் ஒரேதடவையாக ஒன்று அல்லது அதற்கு மேல்பட்ட கமிட்டிகளை, பிரதேச கவர்ன்மெண்டார் நியமித்து விடவேண்டுமென்று 7-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. நடபடிக்கை பிசகுக்காவது அல்லது வேலை பார்க்க லாயக்கில்லாமலிருப்பதற்காகவாவது வேலையிலிருந்து நீக்கப்பட்டாலொழிய மேல் கண்டபடி நியமிக்கப்பட்ட கமிட்டி மெம்பர்களில் ஒவ்வொருவரும் தான் ஜீவதிசை வரையில் வேலை பார்க்கலாமென்றும் 9-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. கமிட்டி மெம்பர் ஸ்தானம் காலி யாகும் பொழுது அந்த ஸ்தானத்தில் வேறு மெம்பர் நியமிக்கப்படுமென்றும் 10-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது இவ்வித முதலில் நியமிக்கப்பட்ட கமிட்டியேயிருந்துவந்து ஒரு குறிப்பிட்ட டிவிஷன் அல்லது ஜில்லாவிலுள்ள கோவிலை மேல் விசாரணை செய்யும் அதிகாரத்தை அந்தக் கமிட்டியே வகிக்கிறது. கமிட்டி நியமிக்கப்பட்டவுடன் அந்தக் கமிட்டியின் அதிகார எல்லைக்குட்பட்டிருக்கிற தேவஸ்தானங்கள் மகுதிகள் வகையறுக்களை சேர்ந்த சொத்துக்களெல்லாம் அந்தக் கமிட்டி யாருடைய அதிகாரத்துக்கு வந்து விடுமென்றும் அந்தக் கமிட்டியார் அதற்கு முன் ரிவினியூ போர்டாராலும் ஸ்தலம் காரியஸ்தர்களாலும் ஷெ கோவில்கள் விஷயமாகவும் அவைகளைச்சேர்ந்த சொத்துகள் விஷயமாகவும் வாகித்துவரப்பட்ட சகல அதிகாரங்களையும் செலுத்தலாமென்றும் 12-வதுபிரிவில் சொல்லியிருக்கிறது. தாலுக்கா எல்லைகள் மாற்றப்படுகிற இந்தக்கேசைப்போலொத்த சில கேசுகளில் சில அசௌகரியங்களை உண்டாக்குமென்பதற்கு ஸந்தேகமில்லை. ஆனால் ரிவினியூ காரியாதிகளுக்காக தாலுக்கா எல்லை மாற்றப்படும் பொழுது கமிட்டியும் மாறுமென்று அப்பீல் பிரதிவாதிகள்பக்கம் செய்யப்படுகிறவாதத்தை ஆலோசிக்கும் விஷயத்தில் இன்னும் அதிக சிரமத்துக்கே இடமாகயிருக்கும். இரண்டு தாலுக்காக்களிலிருந்து புதிதாக ஒருதாலுக்கா ஏற்படுத்தப்படுகிறதென்று வைத்துக்கொள்வோம் அப்போது அப்பீல் பிரதிவாதிகள்பக்கம் சொல்லப்படுகிற கக்ஷிப்பிரகாரம் அந்தப் புது தாலுக்கா எல்லைக்குள் இருக்கக்கூடிய கோவில் காரியாதிகளை மேல்பார்த்து வருவதற்கு கமிட்டியேயிருக்கமாட்டாது. ஏனென்றால் இந்த ஆக்ட்டுப் பிரகாரம் முற்றிலும் புதிதான கமிட்டியை நியமுகம்செய்ய சட்டம் இடங் கொடுக்கவில்லை. 'கமிட்டிகள் எப்படியிருந்தாலுமே, ஒரே தபாவாக அவர்கள் நியமிக்கப்பட்டவர்கள். புதிதாக கமிட்டியை நியமிக்க கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமிருப்பதாக நமக்கு அப்பீல் பிரதிவாதியின் வக்கீல்களால் காண்பிக்கப் படவுமில்லை.

அந்த ஒரு சங்கதிதான் இந்த அப்பீலில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம். பிரஸ்தாப தேவஸ்தானத்துக்கு தர்மகர்த்தா நியமுகம் செய்வதற்கு அதிகாரமுள்ள கமிட்டியாரால் வாதி நியமிக்கப்படாவிட்டாலும், பிரதிவாதிகள் ஷெ நிலங்களில் துராகிருதமாய் பிரவேசித்தவர்களாதலால் வாதி இந்த வியாச்சியத்தில் அனுகூலம் அடைந்து சொத்துக்களின் அனுபோகத்தை அடைய அர்ஹராகயிருப்பதாக அப்பீல் பிரதிவாதியின் கற்றறிந்த வக்கீல் வாதிக்க ஆரம்பித்தார். ஆனால் பிரதிவாதிகளை அப்புறப்படுத்துவதற்காக இந்த வியாச்சியம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஷெ நிலங்கள் கோவிலுக்குப் பாத்தியப்பட்டவைகள் அல்லவென்று சொல்லப்படுகிறது. வியாச்சியம் செய்த வாதி இந்த வியாச்சியத்தில் ஜெயிப்பதற்குள்ள ஆதாரங்கள் தன்னிடமிருப்பதாக ருஜு செய்ய முடியாவிட்டால், அந்த வியாச்சியம் தள்ளுபடி செய்யப்படத்தான் வேண்டும்.

2 கீழ்க் கோர்ட்டுகளுடையவும் டிக்ரிகளையும் மாற்றி, வாதியின் வியாச்சியத்தை ஆதி முதலுள்ள சிலவுகளுடன் தள்ளுபடி செய்திருக்கிறது.

I. L. R. 39. M. 949. இ. லா. ரி 39, ம. 949.

The Indian Law Gazette.

PART II.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஸ்ரீ ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II.

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம், 10.] சென்னப்பட்டணம், 1917ஸ்ரீ செப்டம்பர்மீ [நெ. 9.

Reports of Cases.

கேஸ்களின் ரிப்போர்ட்டுகள்.

Madras High Court.

மதராஸ் ஹைகோர்ட்டு.

FULL BENCH.

புல்பெஞ்சு

ஜட்ஜிகள்:— அபிஷியேடிங் சீப் ஜஸ்டிஸ்,
Mr. அப்துர்ரஹீம்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ்

இரண்டாவது அப்பீல் நெம்பர் 2062 of 1904.

சிவசுப்பிரமணிய ஐயர்...வாதி, அப்பீல்வாதி.

V

சுப்பிரமணிய ஐயர்...பிரதிவாதி, ரெஸ்பான்டெண்ட்.

லாபாயிண்ட்:—ஒரு பூஸ்திதியை விக்கிரயம் செய்கையில் கிரய மொத்தத்தையாவது கிரயமொத்தத்தில் ஒரு பாகத்தையாவது கிரயம் செய்தவருக்காக ஒரு மூன்றுவது நபரிடத்தில் செலுத்தவேண்டிய தென்பதினாலேயே-கிரயம் செய்தவருக்கு செலுத்தப் படாத கிரய மொத்தத்தை வசூல் செய்வதற்கு கிரயம் செய்தவருக்கு விக்கிரயம் செய்யப்பட்ட பூஸ்திதியிலிருந்த பாத்தியதையை அவர் (விக்கிரயம்செய்தவர்) இழந்துவிடுவதாய் ஒப்புக்கொண்டு உடன்படிக்கை செய்துக்கொண்டதாக அவசியமாய் யூஹிக்கலாகாதென்பது.

நாமக்கல டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட் அசல்நெம்பர் 37 of 1913-ல், பிறப்பிக்கப்பட்ட டிக்ரியின் பேரில் திருச்சினாப்பள்ளி சப்கோர்ட் அப்பீல் நெ. 417 of 1913 ல், செய்யப்பட்ட டிக்ரியின் பேரில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது அப்பீல்.

கேசின் விவரங்கள் புல்பெஞ்சாருடைய அபிப்பிராயத்திற்குத் தெரிவித்த உத்தரவின் (Order of reference) முதல் பாராவில் வெளியிட்டிருக்கின்றன.

லாயர்கள் :—Mr. G. S. ராமச்சந்திர அய்யருக்காக Mr. A. V. விஸ்வநாத ஸாஸ்திரியார் அப்பீல் வாதிக்காகவும் Mr. N. ராஜகோபாலாசாரியார் ரெஸ்பான்டென்டுக்காகவும் ஆஜரானர்கள்.

இந்த இரண்டாவது அப்பீல் பிரதமத்தில்மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியார், மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் ஜட்ஜுகள் எதிரில் விசாரணைக்கு வந்தபோது பின்வருமாறு புல்பெஞ்சாருடைய அபிப்பிராயத்திற்குத் தெரிவித்து, மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் என்பவரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் :—அப்பீல் வாதி ரெஸ்பான்டென்டுக்கு சில நிலங்களை ரூபாய் 2700 க்கு விற்பனை செய்தார். கிரயம் செய்தவராகிய அப்பீல்வாதிக்குச் சொந்தமான வேறுசில இதர நிலங்களை கொதுவை வைத்து வாங்கியிருந்த கடனை கொதுவை வைத்துக்கொண்டவருக்குச் செலுத்தி விடுவதற்காக கிரயமொத்தத்தை நிறுத்திவைக்கப்பட்டது. கிரய தஸ்தாவேஜியில் கண்டெழுதியிருந்த பதங்களென்னவென்றால் :—"Mr. T. V. சேஷகிரிஐயருக்கு கொதுவை தஸ்தாவேஜியின் பேரில் பாக்கியாயிருக்கும் அசலையும் வட்டியையும் செலுத்திவிடும்படி" இவ்விதமாய் எழுதியது1901ம் ௵ ஜனவரி௴ 4உ ஆனல்ரெஸ்பான்டென்ட் 1903ம் ௵ நவம்பர்௴ 26உ வரையில் கொதுவை வைத்துக்கொண்டவருக்கு ஒன்றும் செலுத்தவில்லை. மேற்கண்டஅந்தடயத்திற்குள் கொதுவை கடன் மொத்தம் ரூபாய் 3401-4-0,ஆய்விட்டது. ரெஸ்பான்டென்ட்ரூபாய்3000 தான் செலுத்தினர். பாக்கியாயிருந்த மிகுதிமொத்தம் ரூபாய்401-4-0)ம்அப்பீல் வாதிபிறகு செலுத்த வேண்டியதாயிற்று. அப்பீல்வாதி ரூபாய்401-4-0க்கும்அதன் பேரில்1903-ம் ௵ நவம்பர்௴ 26உ முதல் வட்டியும் தனக்கு வசூலாக வேண்டியதென்று தாவா செய்கிறர். அந்தத் தொகை ட்ரான்ஸ்பர் ஆப்ப்ராப்பெர்ட்டி ஆக்ட் (Transfer of Property Act) 55 வது பிரிவின் கீழ் தான் ரெஸ்பான்டென்டுக்கு விக்கிரயம் செய்த சொத்தின் பொறுப்பினுல் (charge) வசூலாக வேண்டியதென்பதாகவும் வியாஜ்ஜியம் செய்கிறர். கீழ்கோர்ட்டார்கள் அந்த சொத்தின் பொறுப்பினுல் வசூலாவதற்கு சட்டம் கிடையாதென்று தீர்மானித்து, அப்துல்லா பீரி v. மம்மலி பீரி (1910) இ. லா. ரி. 33 ம. 446-ல் செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தை யனுசரித்து வியாஜ்ஜியத்திற்கு கால வதிதோஷம் வந்துவிட்டதென்று தாவாவைதள்ளுபடி செய்துவிட்டார்கள். ட்ரான்ஸ்பர் ஆப்ப்ராப்பெர்டி ஆக்ட் 55 (4) வது பிரிவின் கீழ் விற்பனை செய்தவர் (Vendor)செலுத்தப்படாத கிரய மொத்தத்தின் மிகுதியை வேறே விதமாய் எதிரிடையான ஒப்பந்தமில்லாவிடில் கிரயம் செய்தசொத்தின் பொறுப்பினுலேயேவசூல் செய்துக்கொள்ள ஹக்குண்டென்பதாய் நிபந்தனைசெய்யப்பட்டிருக்கிறது. இவ்விதமானபொறுப்பு சட்டப்படி ஏற்பட்டிருக்கும் ஹக்கென்றும், கிரயமொத்தம் செலுத்தப்படாத கிரயம் செய்தவரின் விஷயமாய் இங்லாந்தின் நியாய விசாரணை கோர்ட்டாரால் (Court of Equity) கிரயம் செய்தவருக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பின் ஆதீனத்திற்கும் சுபாவத்திற்கும் பேதமுண்டென்றும் மந்திராலோசனை சபையாரால் (Privy Council) வெப் (Web) v-மெக்பெர்ஸான் (Mecpherson)1904-இ. லா. ரி. 31கல் 57 (P. C.)யில் செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தில் எடுத்துக்கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் இதற்காதாரமாய் எடுத்துக் கூறிய இங்கிலீஷ் கேசுகள் இதற்கு விவரணமாய் செய்யப்பட்டுள்ள ஆதாரங்களென்பதற்கு பிரயோஜனகரமானவைகளென்பதாய் பாவிக்க வேண்டியது. அப்படி வெளிப்படையான ஒப்பந்த மிருந்ததாகவாவது அல்லது அவ்விதமான வெளிப்படையான ஒப்பந்த மிருந்ததாக யூகிக்கக் கூடியதா மிருந்தாலாவது சட்டப்படிக்குள்ள பொறுப்பை நிவர்த்தி செய்வதற்காக செய்யப்பட்ட ஒப்பந்தமென்றுதான் சொல்லவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கிரயமொத்தத்தின் விஷயமாயுள்ள பொறுப்புநீடித்திருக்கக்கூடியதல்லவென்பதற்கு ஒவ்வாமல் ஒரு ஏற்பாடு செய்துக்கொள்வதற்கு ஒருஒப்பந்தம் அல்லதுபந்தம்உடன்படிக்கைசெய்துக்கொள்வதினுல் அந்தப்பொறுப்பு நிவர்த்தியாய் விட்டதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அப்துல்லா பீரிv. மம்மலிபீரி(1910) இ. லா. ரி. 33 ம. 446ல் கிரய மொத்தத்தை வேறே ஒரு புதிய நபருக்குச் செலுத்த வேண்டியதென்று செப்பி கிரயம் செய்யப்பட்டிருந்து, அப்படி செப்பியிருக்கிறபடி கிரய மொத்தம்செலுத்தப்படாத விஷயத்தில் அப்படி சொல்லியிருப்பது அதனுலுண்டாகும் நஷ்டங்களை பிரதிபலனுப் செலுத்தவேண்டுமென்னும் ஒரு உடன்படிக்கையே யல்லாமல் மிற்றப்படி கிரயமொத்தம் செலுத்தப்படாத கிரயம் செய்தவரின் (Unpaid Vendor) விஷயமாய் அந்தப் பணத்தை வசூல் செய்வதற்காக கிரயம் செய்த நிலத்தின் பேரில் சட்டப்படி பொறுப்புண்டென்பதாய் சொல்வதற்கிடமில்லை யென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. வெப் v. மெக்பெர்ஸான் 1904 இ. லா. ரி. 31 கல் 57(P. C.) கேசும் யோசிக்கப்பட்டது. ஆனல் அந்த கேசை தீர்மானித்த ஜட்ஜ் "பின் செப்பிய கேசில் (இ. லா. ரி. 31 கல். 57 P. C,)ல் அப்படி தீர்மானித்திருந்தபோதிலும் Earl of Jersey v. Briton Ferry Floating Dock Company (1869) L R. 7 Equity 409 In re Bentwood Brick and Coal Company (1876) Chancery Division 562 இங்கிலீஷ் கேசுகளில் தீர்மானிக்கப்பட்டிருப்பதின் கருத்து இன்னும் ரத்தாய் விடவில்லையாகையால் கிரய மொத்தம் இனி செலுத்தப்படுமென்று செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகளினுலும், கிரயம் செய்தவருக்குச் செலுத்தவேண்டிய கிரயமொத்தம் ரொக்கமாய் செலுத்தப்படுமென்றுசெப்பியிராததினுலும், பின்செப்பியபடி விக்கிரய மொத்தம் உடனே செலுத்தப்படு மென்றிருந்தால்தான் அதை

வசூல் செய்ய சட்டப்படி நிபந்தனை செய்திருக்கப்பட்ட பொறுப்பு ஏற்படுமென்றும் தீர்மானிக்கலாமென்று சொல்லியிருக்கிறர். கடைசியாய் அந்த கேசை தீர்மானித்த கற்றுணர்ந்த ஜட்ஜுகள் கிரயம் செய்தவருக்குச் செலுத்த வேண்டிய கிரயமொத்தம்ஒன்றுமில்லையென்று கண்டிருப்பதின் பேரில், வாதி அந்த கிரயமொத்தத்தை கிரயம் செய்தசொத்தின்பேரில் வசூல்செய்வதற்கு சட்டப்படிபொறுப்பு ஏற்படவில்லையென்று சொல்லுகிறர்கள். நாங்கள் அந்த தீர்மானத்தின் கருத்து யாதென்பதாக அறியுமளவில் கிரயம் செய்தவர் எந்த மூன்றுவது நபருக்கு கடன் கொடுக்கப் பந்தப்பட்டிருக்கிறரோ அந்த நபருக்கு கிரய மொத்தத்தையாவது அல்லது அதில் யாதேனும் ஒருபாகத்தையாவது செலுத்தப் பந்தப்பட்டவருயிருக்கிறரோ அவருக்கு அதை செலுத்த வேண்டியதாக செய்துக்கொள்ளும் ஒப்பந்தமே அந்த கிரய தஸ்தாவேஜியின் பிரதிபலனுக (Consideration) கிரயம் செய்தவர் அடைவதினுல்கிரயம் செய்தவருக்கு அனுகூலமாயுள்ள பொறுப்பை மறுதளித்து வேறே விதமாய் எதிரிடையான ஒப்பந்தம் செய்யப்பட்டதென்று யாதொரு ஐயமின்றி பரிஷ்காரமாய் சொல்லலாமென்று கண்டிருப்பது இங்கிலாந்தில் நியாயப்படி ஏற்படும் பொறுப்பென்பதைப் பற்றி செய்யப்பட்டுள்ள இங்கிலீஷ்கேசுகளின் ஆதாரத்தின் பேரில் இவ்விதமாய்க் கண்டு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. வேறே விதமாய் எதிரிடையான ஒப்பந்த மிருந்ததாக யூகித்திருப்பது கிரயம் செய்தவருக்குசெலுத்தப்படவேண்டிய மொத்தம் ஒன்று மில்லையென்பதையே ஆதாரமாய் ஏற்படுத்தி சொல்லியிருக்கிறது. அவ்விதமான ஒப்பந்தத்தின் பிரதிபலனும் மூன்றுவது நபருக்குச் செலுத்த வேண்டு மென்று செப்பியிருக்கும் உடன்படிக்கையே (Covenant) அல்லாமல் கிரயமொத்தமென்பதல்ல ஆயினும் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்டி ஆக்ட் 55 (4) வது பிரிவினுல் நிபந்தனை செய்யப்பட்டிருக்கும் பொறுப்பும் கிரயமொத்தத்தின் விஷயமாகவே யல்லாமல் கிரயம் செய்தவருக்கு செலுத்தப்பட வேண்டிய கிரயமொத்தத்தைப் பற்றியல்லவென்று அர்த்தமாகும் கிரய மொத்த மென்று கிரயப்படி சொல்லப்படும் மொத்தம் செலுத்தப்படா திருக்கும் வரையில் அது கிரயம் செய்தவருக்காவது அல்லது ஒரு மூன்றுவது நபருக்குச் செலுத்தப்பட வேண்டியதாயிருந்தாலும் பொறுப்பு உண்டென்று தெளிவாய் ஏற்படும். ஒப்பந்தத்தின் பிரதிபலனுக மூன்றுவது நபருக்குச் செலுத்தவேண்டியதொகை கிரய மொத்தமல்லவென்று சொல்லலாகுமா? அது நாம் நினைப்பதைப் போலிருந்தால் கிரயம் செய்தவருக்கு ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 55-வது பிரிவின் கீழ் தனக்குச் செலுத்தப்படாத மிகுதி மொத்தம் யாதேனுமிருக்கும் பக்ஷத்தில் அதை கிரயம் செய்த நிலத்தின் பொறுப்பினுலேயே வசூல் செய்ய கிரயம் செய்தவருக்கு ஹக்குண்டு. மேலும் வேறே விதமாய் எதிரிடையான ஒப்பந்த மிருந்தாலொழிய அவ்விதமான பொறுப்பு நிவர்த்தியாய்விடாது. அப்துல்லாபீரி. v. மம்மலிபீரி (1910) இ. லா. ரி. 33 ம. 446, கேஸின் தீர்மானம் சிவசுப்பிரமணிய முதலியார் v. ஞான சம்பந்த பண்டார ஸந்நிதி (1911) 21 ம. லா. ஜ. 359. கேசில் அனுசரிக்கப்பட்டது. - பின் செப்பிய கேசில் (21. ம. லா. ஜ. 359)ல், மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன், மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யர் இவர்கள் கிரயம் செய்பவர் கிரய மொத்தத்தை அல்லது அதன் ஒருபாகத்தை ஒரு மூன்றுவது நபருக்குச் செலுத்தும்படி உத்தரவு செய்தால் அவர் (கிரயம் செய்பவர்) அவருடைய நடத்தையினுல் அந்த உடன் படிக்கையின்படி கிரய மொத்தத்தின் எவ்வளவு பாகத்தை ஒரு மூன்றுவது நபருக்குச் செலுத்தும்படி ஆக்யாபித்தாரோ அவ்வளவு பாகத்திற்கு தன்னுடைய சுதந்தரத்தை விட்டு விட்டவராக உள்ளபடியாய் ஒப்பந்தம் செய்துக் கொண்டவரென்று அவசியமாய் பாவிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறர்கள். அவர் (கிரயம் செய்தவர்) அப்படி செலுத்தும்படி உத்தரவு செய்வதினுல் ஏன் அவருக்குள்ள சுதந்தரத்தை அல்லது பொறுப்பை விட்டு விட்டவராக எண்ணப்பட வேண்டு மென்பதற்கு யாதொரு காரணமும் சொல்லவில்லை. கிரய மொத்தம் நேராய் கிரயம் செய்தவருக்குச் செலுத்த வேண்டியதா யிருந்தாலும், மேலும் அந்த தொகையை அவர் வாங்கி அவருக்கு கடன் கொடுத்தவருக்குச் செலுத்த வேண்டியதாயிருந்தாலும் அல்லது கிரயம் பெற்றவர் அந்த தொகையை நேராய் அந்த கடன் கொடுத்தவருக்குச் செலுத்த வேண்டியதாயிருந்தாலும் சாதாரணமாய் கிரயம் செய்தவர் சட்டப்படி அவருக்குள்ள ஹக்கை (lien)அவரிடமே நிறுத்திக்கொள்ள இஷ்டப்படுவாரென்றுதான் எனக்குத் தோன்றுகிறதென்று வினயத்துடன் சொல்லுகிறேன். கடன் கொடுத்தவருக்கும் கிரயம் பெற்றவருக்கும் யாதொரு ஒப்பந்தமு மில்லாமையால் கிரயம் செய்தவர் கடன் கொடுத்தவருக்கு பந்தப்பட்டிருப்பது நீடித்துக் கொண்டேயிருப்பதால் அவர் அந்த தொகையை கிரயம் பெற்றவரிடத்திலிருந்து வசூல் செய்வதற்கு அவருக்குச் சட்டப்படிக்குள்ள சுதந்தரத்தை அல்லது பொறுப்பை (lien) அவருடைய அதிகாரத்திலேயே தான் சகஜமாய் நிறுத்திக்கொள்ளக் கோருவார். ஆகையால் வெப். v. மெக் பெர்ஸான் (1904)இ. லா. ரி. 31. கல். 57 (P. C.)ல், மந்திரா லோசனை சபையாரால் எடுத்துக் காட்டியபடி அவ்விதமான பொறுப்பை நிவர்த்தி செய்வதற்காக அப்படிப்பட்ட ஹக்குண்டாயிருப்பதற்கு ஒவ்வாத ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கவேண்டும். மேலும் கருப்பய்யபிள்ளை v. ஹரிராவ் (1911) 21. ம. லா. ஜ. 849-ல் கூறியபடி அவ்விதமான பொறுப்பு இன்னுமிருக்கிறதா இல்லையா வென்பதற்கு கிரயம் செய்தவருடைய எண்ணம் யாதென்று யோசித்தறிய

வேண்டும். இந்த இரண்டு கேசுகளிலும் தீர்மானித்திருக்கும் ஆதாரத்திற்கு விரோதமாய் ராமகிருஷ்ணய்யா v சுப்பிரமணிய ஐயன் (1906) இ. லா. ரி. 29. ம. 305-ல் தீர்மானித்திருப்பதை நாம் காண்கிறோம். பின் செப்பிய கேஸ்(இ. லா. ரி. 29. ம. 305) இப்பொழுது விவாதத்திலிருக்கும் இந்த கேசுக்கு எல்லா விதத்திலும் ஒத்திருக்கிறது. அந்த கேஸில் செலுத்தப்படாத கிரய மொத்தத்திற்காக (கிரயதாரருக்கு) பொறுப்பு உண்டென்று தான் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதே மாதிரியான இன்னொரு கேஸிலும் ஷியோநந்தன் லால் v. ஜெயினுல் அப்டீன் (1914) இ. லா. ரி. 41. கல். 849-ல் சந்தேகமின்றி இந்த பொறுப்பு உண்டென்பதாக தான் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதுவுமன்றி அந்த கேஸில் அந்த பொறுப்பு கிரயம் செய்தவருக்கு மாத்திரமுள்ளதல்ல வென்றும் ஆனால் அந்த பொறுப்பை அவருடைய ஒரு கடனுடன் மாற்றத்தக்கதென்றும் தீர்மானித்திருக்கிறது. மேக்ராஜ் v. அப்துல்லா (1914) 12. அ. லா. ஜ. 1034-ல் கடன்கொடுத்தவர்களுக்கு செலுத்தப் படவேண்டிய கிரய மொத்தத்திற்குள்ள பொறுப்பு கிரயம் பெற்றவர் பேரில் மாத்திரமல்லாமல் அவரிடமிருந்து நோட்டீசுடன் மாற்றுதலாக அடைந்தவர் பேரிலும் நிர்ப்பந்தித்து வசூல் செய்யப்பட்ட தென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இது இப்படிக்கிருக்க கர்தயால் சிங் v. கரம் சிங்க் (1916) இ. லா. ரி. 38. அ. 254-ல்கிரயத்திற்கு வாங்கினவர்(கிரயம் செய்தவருக்கு) கடன் கொடுத்திருக்கிறவருக்கு செல்லாகும்படி கிரயமொத்தத்தை செலுத்துவதாய் ஒப்புக்கொண்டால் அந்த உடன்படிக்கையே அந்த கிரயத்திற்காக செலுத்தவேண்டிய மொத்தத்திற்கு பிரதிபலனாகுமென்றும், அப்படி கிரயம் செய்தவருடைய கடன்தாரருக்குச் செலுத்தவேண்டிய மொத்தம் கிரய மொத்தத்தின் ஒரு பாகமாசாதென்றும் கண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த கேஸில் கிரயம் செய்யப்பட்ட சொத்து கிரயம் பெற்றவருடைய ஆதீனத்திலில்லாமல் அது யாருக்கு கிரய மொத்தத்தைச் செலுத்தும்படியாக இன்னொருவருக்கு மாற்றி விடப்பட்டதோ அவருடைய ஆதீனத்திலிருப்பதாக எண்ணப்படுமென்றும் காரணத்தையே முக்கியமான ஆதாரமாகக்கொண்டு அந்த கேஸ் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விதமாய் ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் விரோதமாயிருக்கும் தீர்மானங்களைநோக்கி இதனடியிற் கண்டிருக்கும் கேள்வியை புல் பெஞ்சாருடைய அபிப்பிராயத்திற்குத்தெரிவிப்பது உசிதமாயிருக்குமென்று கருதுகிறோம்.

" ஒருபூஸ்திதியை விக்கிரயம் செய்கையில் அந்த கிரயத்திற்கு பிரதிபலனாக செலுத்தவேண்டிய மொத்தத்தை பூராகவாவது அல்லது அதில் ஒரு பாகத்தையாவது கிரயம் செய்தவருக்காக ஒரு மூன்றுவது நபரிடத்தில் செலுத்த வேண்டியதென்பதாய் ஒப்புக்கொள்வதினாலேயே கிரயம் செய்தவருக்கு விக்கிரயம் செய்யப்பட்ட ஸ்தாவரசொத்திலிருந்த பாத்தியதையை பொறுப்பை (charge) அவர் (விக்கிரயம் செய்தவர்) இழந்துவிடுவதாய் ஒப்புக்கொண்டு உடன்படிக்கை செய்துக்கொண்டதாக யூஹிக்கலாகுமா ?

புல் பெஞ்சாருடைய அபிப்பிராயத்திற்குத் தெரிவித்திருக்கும் உத்தரவு அப்பீல்வாதிக்கு அனுகூலமாய் செய்திருப்பதால் ரெஸ்பான்டென்டின் வக்கீல் கேசை ஆரம்பித்து பேசவேண்டுமென்பதாய் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளாகிய பிரபுக்கள் உத்தரவு செய்தார்கள்.

ரெஸ்பான்டென்டின் வக்கீல் Mr. N. ராஜகோபாலாச்சாரியார் பேசியது :—

கிரயமொத்தத்தைவேறே ஒரு புதிய நபருக்குச் செலுத்தும்படி ஆக்யாபித்த (விக்கிரயம் செய்தவருடைய) உத்தரவினாலேயே அந்த நிலத்திலுள்ள பொறுப்பு நிவர்த்தியாய்விட்டது. இந்த வாதத்திற் காதாரமாய் நான் பூராகவும் அப்துல்லாபீரி. v. மம்மலிபீரி (1910) இ. லா. ரி. 33. ம. 446-ல் கண்டிருக்கும் முகாந்திரங்களை அனுசரவாய் கூறுகிறேன். மேலும் அந்த கேஸில் எடுத்துக் காட்டியிருக்கும் இங்கிலீஷ் கேசுகள் மேற்கூறிய கேஸில் செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்திற்கு பூராகவும் ஆதாரமாயிருக்கின்றன. நான் சிவசுப்பிரமணிய முதலியார். v: ஞான சம்பந்தபண்டார சன்னிதி (1911) 21. ம. லா. ஜ. 359-ல் செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தையும் என் வாதத்திற் காதாரமாய் எடுத்துக் கூறுகிறேன். இதுவுமன்றி அப்படிப்பட்ட உடன் படிக்கையை நம்பியே கிரயத்திற்கு வாங்கினவர் அந்த நிலத்தை வாங்குவதற்கு ஒப்புக் கொண்டவராயிருப்பதால் அவ்விதமான ஒப்பந்தத்திற்குப்பின் கிரயம் செய்தவர் கிரயமொத்தம் செலுத்தப் படவேண்டிய விதத்தை மாற்றுவதற்கு யாதொரு ஹக்கும் கிடையாது; ஏனென்றால் அவர் (கிரயம் செய்தவர்) அப்படி செய்வாராகில் அது அவர்களுக்குள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மாற்றி அதற்கு பதிலாய் ஒரு புதுஉடன்படிக்கை செய்துகொண்டவர்களாக ஏற்படுமென்பதையும் ஒருகாரணமாய் எடுத்துக்கூறுகிறேன். கிரயத்திற்கு வாங்கினவர் அவர் ஒப்புக்கொண்டபடி அந்த புதிய நபருக்குச் செலுத்தத்தவறிப்போய் கிரயம் செய்தவருக்கு நஷ்டம் நேரிடுமாகில் அவர் (கிரயம் செய்தவர்) அந்த நஷ்டங்களை வசூல்செய்வதற்கு ஒருதாவா செய்துதான் பரிகாரமடையவேண்டியது. இவ்விதமான கேசுகளில் கிரயம் செய்தவர் தனக்கு நேரிடும் நஷ்டங்களை கட்டிக்கொடுக்கும்படிகேட்க அக்குள்ளவராவாரென்று இஜாட் உன்னீசாபீகம் v. பர்டப்சிங் (1909) இ. லா. ரி. 31. அ. 583 (P C.)ல் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இதுவுமல்லாமல் In re. Albert Life Assurance Co. v. Western Life Assurance Society (1870) L. R. 11. Equity 164, கேசையும் பார்க்கவும்.

அப்பீல்வாதியின் வக்கீல் Mr. G. S. ராமசந்திர ஐயருக்காக Mr. A. V. விஸ்வநாத சாஸ்திரி பேசியது:—

வேறேவிதமாய் எதிரிடையான ஒப்பந்த மிருப்பதாக ருஜுசெய்கிறவரையில் (நிலத்தில்உள்ள)பொறுப்பு ஏற்கனவே நீங்காமலிருக்கின்றது. (வெப் v. மெக்பெர்ஸான் (1904) இ. லா. ரி. 31. கல் 57 (P. C.) பார்க்கவும். ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்டினால் கொடுத்திருக்கப்பட்ட பொறுப்பு நோக்குமளவில் இங்கிலீஷ் தீர்மானங்கள் இந்த கேசுக்கு சம்பந்தப்பட மாட்டாது. (கிரய மொத்தத்தை) ஒரு நபருக்குச் செலுத்தும்படி உத்தரவு செய்திருப்பதினாலேயே அவசியமாய் பொறுப்பு உள்ளபடியாக நீங்கி விட்டதென்று சொல்லலாகாது; ஏனென்றால் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 55(5) (b)பிரிவின் கீழ்விக்கிரயம் செய்தவர் கிரய மொத்தத்தை தனக்கேயாவது அல்லதுதான் நேமிக்கும் நபரிடத்திலாவது செலுத்தும்படி உத்தரவு செய்ய ஹக்குண்டென்று நிபந்தனை செய்யப்பட்டிருக்கிறது. எனக்கு விரோதமாய் எடுத்துக் கூறியிருக்கும் இரண்டு மதராஸ் தீர்மானங்கள் சரியானவைகளல்லவென்று நான் அதிவினயத்துடன் கூறுகிறேன். நான் கூறும் வாதத்திற்கு அனுகூலமாய் புல் பெஞ்சாருடைய உத்தரவில் கண்டிருக்கும் முகாந்தரங்களை அங்கீகரிக்கவேண்டியதென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அதனுடன் மாக்ரெத் v. ஸிம்மன்ஸ் Mackrette Symmons (1808) 2 Whiteand Tudor's Leading Cases(VIIIth edi. ton)946-ல் Lord Eldon, L. C. என்பவர் கண்டிருக்குமவைகளையும் என்னுடைய கேஸிற்கு ஆதாரமாய்க் கூறுகிறேன். அப்துல்லா பீரி v. மம்மலிபீரி (1910) இ. லா. ரி. 33. ம. 446-ல் சொல்லப்பட்டிருக்கும் தீர்மானமும் என்னுடைய வாதத்திற்கு விரோதமாயில்லையென்றுதான் நான் சொல்லுகிறேன். ஏனென்றால் அந்த கேஸில் கிரயத்திற்கு வாங்கினவர் ஒப்பந்தத்தின்படி நடவாமற் போனால் கிரயம் செய்தவர் தனக்கு நேரிடும் நஷ்டங்களை ஒரு தாவாசெய்து வசூல் செய்துக் கொள்வதாக வெளிப்படையாய் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அபிஷியேட்டிங் சீப்ஜஸ்டிஸ் அப்துர் ரஹீம் அவர்களின் உத்தரவு:—

எங்களுடைய அபிப்பிராயத்திற்குத்தெரிவித்திருக்கும் கேள்வியை எதிரிடையாக அப்படி யூகிக்கலாகாதென்று தான் நாங்கள் மறு உத்தரம் கூறவேண்டியதாயிருக்கிறது. ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்ட்டி ஆக்ட் 55-வது பிரிவின் கீழுள்ள 4-வது பிரிவின் (b) உட்பிரிவு வேறேவிதமாய் எதிரிடையான ஒப்பந்த மில்லாவிடில் செலுத்தப்படாத கிரய மொத்தத்திற்காவது அல்லது அதன் யாதேனும் ஒரு பாகத்திற்காவது கிரயத்துக்கு வாங்கினவருடைய ஆதீனத்திலிருக்கும் சொத்தின் பேரில் கிரயம் செய்தவர் வசூல் செய்ய பொறுப்பு உண்டாகின்றதென்று சொல்லுகின்றது. இந்த கேஸில் கிரயம் செய்தவர் செலுத்தப்படாத கிரயமொத்தத்தை அவருக்கு கடன் கொடுத்தவர்களில் ஒருவருடைய கடனைச்செலுத்திவிடும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார். கிரயம் செய்தவர் அவருக்கு கடன் கொடுத்தவருடைய கடனைச் செலுத்துவதற்காக பந்தப் பட்டிருப்பதிற்கு பதிலாய் கிரயம் வாங்கினவர் அந்தக்கடனைச் செலுத்தவேண்டிய பந்தத்தை ஒப்புக் கொண்டதாக (தாவாவில்) சொல்லப்படவில்லை. ஆனால் கிரயத்திற்கு வாங்கினவர் கிரயம் செய்தவருக்கும் அவருக்கும் (கிரயம் வாங்கினவருக்கும்) இவர்கள் இருவருக்குள் கிரயம்செய்தவருடைய உத்தரவின் பிரகாரம் கிரய மொத்தத்தை செலுத்துவதாக அவர் கிரயத்திற்கு வாங்கினவர் பந்தப்பட்டிருப்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார். ட்ரான்ஸ்பர் ஆப்ப்ராப்பெர்ட்டி ஆக்ட்55-வது பிரிவினால் நிபந்தனை செய்யப்பட்டு நிரூபிக்கப்பட்டிருக்கும் பொறுப்பு வேறேவிதமாய் எதிரிடையான ஒப்பந்தம் வெளிப்படையாகவாவது அல்லது அவசியமாய் உள்ளபடியாகவது ஏற்படுவதா யிருந்தாலொழிய மற்றப்படி நிவர்த்தியாய்விட்டதாக சொல்லலாகாதென்று வெப் v. மெக் பெர்ஸான் 1903. 31. கல். 57. (P. C.) மந்திராலோசனை சபையாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாய் ஏற்படும் 'பொறுப்பு ஆதீனத்திலும் ஸ்வாபீகத்திலும்' இங்கிலீஷ் லாவின்படி ஏற்படும் கிரயம் செய்தவருடைய பொறுப்பிற்கு பேதித்த வித்தியாசமாயிருக்கிறதென்று எடுத்துக் காட்டியிருக்கிறார். கிரய மொத்தத்தின் ஒருபாகத்தை தாமதித்து செலுத்தும்படி ஒத்திவைத்து ஒருவருக்கொருவர் உடன்படிக்கை செய்துக் கொள்வதினாலாவது அல்லது கிரய மொத்தத்தை வாய்தாக்களாய் பெற்றுக்கொள்ள ஒப்பந்தம் செய்துக் கொள்வதினாலாவது (அவ்விதமாய் ஏற்பட்டிருக்கும்) பொறுப்பு நிவர்த்தியாய் விடவில்லை யென்றும், மேலும் கிரய மொத்தத்தின் விஷயமாயுள்ள பொறுப்பு நீடித்திருக்கக் கூடிய தல்ல வென்பதற்கு (ஒவ்வாமல்) ஒரு ஏற்பாடு செய்துக்கொள்வதற்கு யாதேனும் ஒரு ஒப்பந்தம் அல்லது உடன் படிக்கை செய்துக்கொள்வதினால் அந்த பொறுப்பு நிவர்த்தியாய் விடவில்லை என்றும் கண்டிருக்கிறார்கள்." கிரய மொத்தத்தை கிரயம் செய்தவருக்கு கடன் கொடுத்திருப்பவருக்கு கிரயத்திற்கு வாங்கினவரைச் செலுத்தும்படி உத்தரவு செய்வதினால் அவ்விதமான உத்தரவு செய்வதினால் அவ்விதமான உத்தரவு அந்த பொறுப்பு நீடித்திருப்பதற்கு ஒவ்வினதாகவில்லை யென்று காண்பதற்கு சுஷ்டமாயிருக்கிறது. ஹார் சந்த. v. கிஷோரிசிங் (1910) 7. இ. கே. 639-லும் மேக்ராஜ் v. அப்துல்லா (1914) 12. அ. லா. ஜ. 1034-லும் அலகபாத் ஹைக்கோர்ட்டாரால் இவ்விதமாகவே அபிப்பிராயம் கொண்டு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆயினும் இந்த கோர்ட்டில் இதற்கு விரோதமாய் அப்துல்லாபீரி. v. மம்மலிபீரி (1910) இ. லா. ரி. 33. ம. 446-ல் அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களென்றும் அந்த தீர்மானத்தை சிவசுப்பிரமணிய முதலியார் v. ஞான சம்பந்த பண்டார ஸந்நிதி (1911) 21. ம. லா. ஜ. 359-ல் அனுசரிக்கப்பட்டது. முன் செப்பிய கேசை தீர்மானித்த கற்றுணர்ந்த ஜட்ஜீகள் அவர்கள் ஆலோசிக்க வேண்டியதாயிருந்த ஒப்பந்தத்தின் ஷரத்துகளின்படி கிரய மொத்தத்தை வாதிக்குச் செலுத்தப்பட வேண்டியதில்லையென்றும், மேலும் வாதி அந்தப்பணத்தை வசூல்செய்வதற்கு விபாஜ்ஜிய மூலமில்லையென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். ஆயினும் பிரஸ்தாப கேசில் அவ்விதமான சந்தர்ப்பம் ஒன்றும் கிடையாது. ஷியோ நந்தன்லால் v. ஜெய்னல் ஆப்டீன் (1914) இ. லா. ரி. 41. கல் 849-ல் செலுத்தப்படாத கிரயமொத்தத்திற்காக விக்கிரயம் செய்தவருக்குள்ள பொறுப்பு அவருக்கு (கிரயம் செய்தவருக்கு) மாத்திரம் சுதந்தரமுள்ளதென்று சொல்லலாகாது. ஆனால் அது (charge) மூன்றுவது நபருக்கு மாற்றக்கூடியதென்றும் மேலும் ராமகிருஷ்ணய்யர் v. சுப்பிரமணிய ஐயன் (1903) இ. லா. ரி. 29 ம. 305-ல் ஒரு பொறுப்பை ஊர்ஜிதப்படுத்தி நிறைவேற்றுவதற்காக செய்யப்படும் தாவாவிற்கு 12-வருஷகால காலாவதி உண்டென்பதாய் விதிமேற்பட்டிருக்கிறதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். நபர் ஜாமீன் வாங்குவதினாலேயேகிரயம்செய்தவருடைய பொறுப்பு அல்லது ஹக்கு நிவர்த்தியாய் விடவில்லை. கருப்பப்பிள்ளை v. ஹரிராவ் (1911)21. ம. லா. ஜ. 849; மாக்ரெத் v. ஸ்ம்மன்ஸ் (1808) 2. White and Tudor's Leading cases? ,VII edition. 946. பார்க்கவும். இனிமேல் கிரயமொத்தம் செலுத்தப்படுமென்று செப்பி செய்யப்பட்ட விக்கிரயத்திற்கும் கிரயம் செய்தவர் கிரய மொத்தத்தைச் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு செய்யப்பட்ட விக்கிரயத்திற்கும் மந்திராலோசனை சபையார் வெப் v. மெக்பெர்ஸான் 204 (1904) இ. லா. ரி. 318. கல் P. C. எடுத்துக் காண்பித்திருப்பதைப்போல் கோட்பாட்டிலும் செய்யப்பட்டுள்ள தீர்மானத்திலும் சந்தேகமின்றி பேதமுண்டென்று ஏற்படுகிறது. இந்த கேசில் செய்யப்பட்ட கிரயத்திற்காக கிரயத்திற்கு வாங்கினவரால் செலுத்தப்படவேண்டிய மொத்தத்தை கிரயத்திற்கு வாங்கினவர் ஒரு மூன்றுவது நபருக்குச் செலுத்துவதாக கிரயம் செய்தவரிடத்தில் ஒப்புக்கொண்டதே பிரதி பலனாகும். அப்துல்லாபீரி v. மம்மலிபீரி (1910) இ. லா. ரி. 33. ம. 446 கேசை தீர்மானம் செய்த கற்றுணர்ந்த ஜட்ஜிகள் கிரயமொத்தத்தை இன்னொருவனுக்குச் செலுத்த வேண்டியதாயிருந்தால் அப்பொழுது கிரயம் செய்தவர் அவருக்குள்ள பொறுப்பை(charge)அவரிடத்திலேயே நிறுத்திக்கொள்கிறார் என்பதற்கு அவசியமாய் ஒவ்வாமலிருப்பதாக அவர்களுடைய தீர்மானத்தின் ஒரு பாகத்தில் தீர்மானிப்பதாக தோன்றுகிறது.

கிரயமொத்தம் கிரயம் செய்தவருக்குத்தான் செலுத்தப்படவேண்டும்: மேலும் அவருடைய(கிரயம் செய்தவருடைய)உத்தரவினால் மூன்றுவதுநபருக்குச் செலுத்தப்படலாகாதென்றும், அப்படிக்கிருந்தால் தான் ட்ரான்ஸ்பர் ஆப்ப்ராபெர்ட்டி ஆக்ட் 55-வது பிரிவின் 4 வது (b) உட்பிரிவிலுள்ள பொறுப்பு (Charge) ஏற்படும் அல்லது நீடித்திருக்குமென்பதற்கு அந்தப்பிரிவில் ஒன்றும் சொல்லப்படவில்லை. மேலே செப்பிய கேசில் அப்படிக்கின்றி வேறே விதமாய் தீர்மானிக்கப்பட்டிருந்தால் அது பிசகாய் தீர்மானிக்கப்பட்டதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ராமகிருஷ்ண ஐயர் v. சுப்பிரமணிய ஐயன் (1903) இ. லா. ரி. 29. ம. 305 லும் கோபால ஐயர் v. ராமசாமி சாஸ்திரிகள் (1911) 22 ம. லா. ஜ. 207லும், செய்யப்பட்டுள்ள தீர்மானங்கள் நான் இப்பொழுது வெளியிட்டிருக்கும் அபிப்பிராயத்திற்கு ஒவ்வினதாயிருக்கின்றன.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர்:—கிரய மொத்தத்தை மூன்றுவது நபருக்கு செலுத்தவேண்டுமென்று உத்திரவு செய்திருப்பதினாலேயே கிரயம் செய்தவருக்குள்ள பொறுப்பு நிவர்த்தியாய்விடவில்லையென்று புல்பெஞ்சாருடைய அபிப்பிராயத்திற்குத் தெரிவித்த கற்றுணர்ந்த ஜட்ஜுகளின் தீர்மானங்களுடன் நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அந்த ஹக்கு கிரயமொத்தத்திற்காக் ஏற்படும் பொறுப்பாகையால் அந்த கிரயமொத்தம் நேராய் கிரயம் வாங்கினவருக்குச் செலுத்தப்பட வேண்டியதல்ல வென்பது அனுவசியம். ரெஸ்பான்டென்டின் கற்றுணர்ந்த வக்கீல் எடுத்துக் காட்டியது போல் கிரயம் செய்தவர் கிரய மொத்தத்தை அவர் நேமிக்கும் நபருக்குச் செலுத்தும்படி உத்தரவு செய்ய சட்டத்திலுள்ள நிபந்தனையினாலேயே அதிகாரமுண்டு. கிரயமொத்தத்தை இன்னொருவருக்குச் செலுத்தவேண்டியதென்று உத்தரவு செய்திருப்பதினால் சகஜமாய் அதற்கு (கிரய மொத்தம்) என்பதற்குண்டான வாஸ்தவமான பொருள் போய்விடாதென்று தெளிவாய் அறிந்துக் கொள்ளலாம். ரெஸ்பான்டென்டின் வக்கீல் Mr. N. ராஜகோபாலசாரியாரின் முக்கியமான வாதமென்னவென்றால் :—மூன்றுவது நபருக்குச்செலுத்தவேண்டுமென்றும் உத்தரவின்படி நடக்கத்தவறினால் தனக்குத்தானே செலுத்திக்கொள்ளும்படி. பந்தப்பட்டவரான கிரயம் செய்தவர் ஒப்பந்தப்படிநடவாமல் மீறிப் போனதற்காக நஷ்டங்களுக்காகத் தான் தாவா செய்ய ஹக்குண்டு. ஆகையால் மூன்றுவதுநபருக்குச் செலுத்தும்படி உத்தரவு செய்திருப்பதால் வேறே

விதமாய் எதிரிடையான ஒப்பந்தமிருப்பதாக எண்ணப்படுமென்று வாதிக்கிறார். அந்த பொறுப்பு ஒருவருக்குமாத்திரம் தான் உண்டென்றுவாதிக்கலாகாது. ஷியோமந்தன்லால்-v. ஜெய்னல் ஆப்டீன் (1914) இ. லா. ரி. 41 கல் 849 பார்க்கவும்) ஆகையால் செலுத்தப்படாத பணத்திற்குள்ள ஹக்கும் அந்தப் பொறுப்பு (Charge) ஒரு மூன்றுவது நபருக்குச் செலுத்தவேண்டிய .தென்றும் உத்தரவினால் செய்தவருக்கு பொறுப்பு ஏன் நிவர்த்தியாய் விடுமென்பதும் தெளிவாய் தெரியவில்லை. புதிய நபருக்கு சட்டப்படி மாற்றிக்கொடுத்து விட தகுந்தது தான். இஜாட் உன்னீசாபீசும்—v. பெர்டெட்சிங்க் (1909) இ. லா. ரி. 31 அ 583 லுள்ள ஜாடிஷல் கமிட்டியாருடைய தீர்மானத்தை தன்னுடைய வாதத்திற்கு மிக்க வலிவான ஆதாரமாய் எடுத்துக் கூறப்பட்டது. அந்த கேசில் ஏலத்தில் கிரயத்திற்கு வாங்கினவர் சொத்தை வில்லங்களுக்கு உட்படுத்தி கிரயத்திற்கு வாங்கினார். அந்த வில்லங்கள் சட்டப்படி செலாவணியுள்ளவைகளல்லவென்று கண்டு தீர்மானிக்கப்பட்டது.

அதன் பேரில் தீர்ப்புகடனாளி கிரயத்திற்கு வாங்கினவர் லாபமடைந்த வில்லங்களின் மொத்தத்தை வசூல்செய்ய தாவா செய்து அந்த, மொத்தம் விக்கிரயம் செய்யப்பட்ட நிலங்களின் பேரில் வசூலாக வேண்டுமென்னும் ஹக்கு தனக்குண்டென்பதாய் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். சொத்து வில்லங்களுக்குட் படுத்தி விக்கிரயம் செய்யப்பட்டிருப்பதால் கிரயம் செய்தவர் சாதாரணமாக கைவிலைக்கோ அல்லது கோர்ட்டு ஏலத்திலோ அந்த சொத்து விற்பனையாகையில் வில்லங்கமுள்ளவர்கள் கிரயம் செய்தவரின் பேரில் நஷ்டத்திற்காக தொடர்வார்களாகில் அதைச் சரிப்படுத்துவதற்கான ஹக்கை மாத்திரம் அவரிடத்திலேயே (கிரயம் செய்தவரிடத்திலேயே) நிறுத்திக்கொள்ளுகிறாரென்பதாய் அந்த பிரப்புகளாகிய ஜட்ஜுகள் தீர்மானித்திருக்கிறார்கள். இன்னும் வில்லங்கள் சட்டப்படி செலாவணியுள்ளதல்லவென்று கண்டு தீர்மானத்திருப்பதின் பலன் தனக்கு கிடைக்க வேண்டுமென்று கேட்பதற்குக்கூட கிரயம் செய்தவருக்கு ஹக்கு கிடையாதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கிரயத்திற்கு வாங்கினவர் அதனாலுண்டாகும் லாப நஷ்டங்களுக்குடன்பட்டு வாங்கினவராகையால் அதனாலுள்ள லாபத்தை மாத்திரம் அவர் அடையவேண்டியவராவார்.

இவ்விதமாய்ச் சொல்லியிருக்கும் தீர்மானம் 55 (4) (b) வது பிரிவின் தெளிவான நிபந்தனைகளுக்கு விரோதமாய்ச் சொல்ல எப்படி ஓர் ஆதாரமாகுமென்பதாய் எனக்குப் புலப்படவில்லை. ட்ரான்ஸ்பர் ஆப்ப்ரர்பெர்ட்டி ஆக்டின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் ஹக்கு அல்லது பொறுப்பின் ஆதினமும் ஸ்வாபீகமும் செலுத்தப்படாத கிரயம் செய்தவருக்கு இங்கிலாந்தின் நியாய விசாரணை கோர்ட்டாரால் கொடுக்கப்பட்டிருக்கும ஹக்கு பொறுப்பிற்கு பேதிக்கிறதென்பதாய் வெப் (Web) v. மெக்பெர்ஸான் (Macpherson) 1904. இ. லா. ரி. 31. கல் 57 (P. C) கேசில் ஜுடிஷல் கமிட்டியார் வற்புறுத்தி கண்டிதமாய்ச் சொல்லியிருந்தும், அப்துல்லாபீரி v. மம்மலிபீரி (1910) இ. லா. ரி. 33 ம. 446 ல் இந்தகோர்ட்டின் கற்றுணர்ந்த ஜட்ஜுகள் அவர்களுடைய தீர்மானத்திற்கு இங்கிலீஷ் தீர்மானங்களையே விசேஷமான ஆதாரமாய்க் கொண்டு தீர்மானித்திருக்கிறார்கள் இங்கிலீஷ் லாவின்படி மூன்று விதமான பொறுப்புகள்(Charges)உண்டு (a) ஒப்பந்தத்தின் பேரில் ஏற்படும் நியாயமான பொறுப்பு; (b)நியாய விசாரணை கோர்ட்டாரால் நிர்ப்பந்தித்து நிறைவேற்றக்கூடிய பொறுப்பு (c) கிரயம் செய்தவர் அவருக்கு கிரயமொத்தம் செல்லாகும் வரையில்ஸ்வாதீனம் தொடாமல் தன்னிடத்திலேயே நிறுத்திக் கொள்ளக்கூடிய சட்டத்திலுள்ள சாதாரண பொறுப்புஅல்லது ஹக்கு(19 Halsbury's Laws of England, Paragraph20 பார்க்கவும்) இந்த கலவரங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்தியாவிலுள்ள சட்டநிருபண சபையார் சுலபமாய் ஒரு சட்டதிட்டம் செய்து நிபந்தனை செய்திருக்கிறார்கள். இந்த தேசத்தில் அனுவசியமான அநிச்சயமான ஓர் விதியை ஏற்படுத்துவதாக எனக்குத் தோன்றுகிறதென்று (அப்துல் லாபீரி v. மம்மலிபீரி (1910) இ. லா. ரி. 33 ம. 446 கேசை தீர்மானித்தகற்றுணர்ந்த ஜட்ஜுகளுக்கு அதிவினயத்துடன்) நான் சொல்லுகிறேன். இப்படி செய்வது யாதொருசந்தேகமுமின்றி அர்த்தமாகும். ஒரு பிரிவின் பொருள் யாதென்று தெரிந்துக் கொள்வதற்காக இங்கிலீஷ் தீர்மானங்களை ஆதாரமாய்க் கொள்வதாய் எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் இங்கிலாந்தில் இது விஷயத்தைப்பற்றியவிதி அப்துல் லாபீரி v. மம்மிலாபீரி (1910) இ. லா. ரி. 33 ம. 146-ல் செப்பியிருக்கிறபடி அல்லவென்பதை காண்பிப்பதாய் ரெஸ்பான்டென்டின் வக்கீல் அவருடைய வாதத்திற்காதாரமாய் கூறியகேசுகளை யோசிக்க வேண்டு மென்பது அவசியமென்று நான் நினைக்கவில்லை.

இன்னும் ஒருவாதத்தைப்பற்றி தான் கவனிக்க வேண்டியது அவசியமாயிருக்கின்றது. கிரயமொத்தத்தை மூன்றுவது நபருக்குச் செலுத்தும்படி கிரயத்திற்கு வாங்கினவருக்கு உத்தரவு செய்தபிறகு விக்கிரயம் செய்தவர் அதை மாற்றி வேறே விதமாய் எதிரிடையான உத்திரவு செய்ய அவருக்கு (கிரயம் செய்தவருக்கு) ஹக்கு கிடையாதென்று மிக்க வற்புறுத்தி வாதிக்கப் பட்டது; சந்தேகமின்றி யாருக்கு அந்த மொத்தம் கொடுக்கப்படவேண்டியதென்று சந்தேகிக்கப்பட்டதோ அவருக்கு கிரயம் செய்தவரின்

உத்தரவு தெரியப்படுத்தப்பட்டிருந்தால்கிரயத்திற்கு வாங்கினவருக்கும் அந்த மூன்றுவது நபருக்கும் ஒரு பூர்த்தியான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கும்; அப்படி செய்யப்பட்ட ஒப்பந்தத்தினால் கிரயம்செய்தவர்தான் மொத்தத்தைச்செலுத்துவதற்குமுன் அதைக்கேட்க ஹக்குண்டாக மாட்டாது. கிரயம் செய்தவர் மூன்றுவது நபருக்குச் செலுத்தும்படி செய்த உத்தரவு அந்த மூன்றுவது நபருக்குத் தெரியப் படுத்தாததினால், கிரயதாரர் அந்த மொத்தத்திற்காக தாவா செய்ய ஹக்கு கிடையாதென்பதால் கோபால ஐயர் v. ராம சாஸ்திரிகாள் (1911) 22. ம. லா. ஜ. 207-ல் தீர்மானித்திருப்பதாக நான் நினைக்கவில்லை.

இது இப்படிக்கிருக்க சிவசுப்பிரமணிய முதலியார் v. க்ஞன சம்பந்த பண்டாரசந்நிதி (1911) 21. ம. லா. ஜ. 359 இதற்கு நேர்விரோதமான தீர்மானம் பிரஸ்தாப கேசில் கிரயத்திற்கு வாங்கினவர் அந்த மொத்தத்தைச் செலுத்துவாரென்பதாக மூன்றுவது நபர் எதிர்பார்த்திருந்ததாய் ருஜு செய்யவில்லை. ஆகையால் சகஜமாய் கிரயம் செய்தவர் மூன்றுவது நபருக்கு செலுத்தவேண்டிய வராயிருந்தபடியால் அவர் செலுத்திய மொத்தம் எவ்வளவோ அவ்வளவிற்கு பொறுப்பு (charge) ஏற்கனவே உண்டென்பதாய் தான் சொல்லவேண்டும். நான் அபிப்பிராயத்திற்கு தெரிவிக்கப்பட்ட கேள்வியை எதிரிடையாக அப்படி யூகிக்கலாகாதென்று தான் மறு உத்தரம் செய்கிறேன். அப்துல்லா பீரி v. மம்மலி பீரி (1910) இ. லா. ரி. 33. ம. 446-ல் செய்யப்பட்டுள்ள தீர்மானம் சரியான தல்லவென்று தீர்மானிக்கிறேன்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ்:—இந்தகேசில் அபிப்பிராயத்திற்கு தெரிவிக்கப்பட்ட உத்தரவில் நான் என்னுடைய அபிப்பிராயங்களை முன்னமேயே வெளிப்படையாய் கூறியிருக்கிறேன். இப்பொழுது எங்களெதிரில் கூறிய வாதங்களினால் என்னுடைய அபிப்பிராயத்தை மாற்றுவதற்கு நான் ஒன்றும் கேட்கவில்லை: ஆகையால் இந்த கேள்விக்கு எதிரிடையாய் அப்படி யூகிக்கலாகாதென்று மறுஉத்தரம் கூறியிருப்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

சிவசுப்பிரமணிய ஐயர் v. சுப்பிரமணிய ஐயர் இ. லா. ரி. 39 ம 997.

நெ. 45

APPELLATE CRIMINAL.
கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்; மிஸ்டர் ஜஸ்டிஸ் குட்ஸ்ட்ராட்டர் }

1914-ம் ஹூ த்து லெட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் நெம்பர் 376 அப்பாசி (மனுதார்) அப்பீல் வாதி.

அப்பம்மா (எதிர் மனுதார்) அப்பீல் பிரதிவாதி

லாபாய்ண்ட்:—1898-ம் ஹூ த்து 5-வது ஆக்ட்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடு 488-வது பிரிவு—ஜீவனும்சம், ஹைகோர்ட்டாருக்கு கிரிமினல் புனராலோசனை மனு (Criminal Revision Petition) ஒரு ஜட்ஜினுடைய உத்தரவு—அதற்கு மேல் அப்பீல் செய்தால் செல்லுமா—லெட்டர்ஸ் பேடெண்டு ஆர்டிகில் 15—கிரிமினல் விசாரணையில் செய்யப்பட்ட உத்தரவு—

1898-ம் ஹூ த்து 5-வது ஆக்ட்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடு 488-வது பிரிவின்படி ஒரு ஜாயிண்டு மாஜிஸ்ட்ரேட்டு செய்த உத்தரவின் பேரில் ஹைகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட ரிவிஷன் மனுவில் ஒரு ஜட்ஜி செய்த உத்தரவை ரத்து செய்யும்படி லெட்டர்ஸ்பேடெண்டு 15-வது ஆர்டிகலின் பிரகாரம் அப்பீல் கிடையாது.

கேசின் சுருக்கம்:—பார்வதிபூர் ஜாயிண்டு மாஜிஸ்ட்ரேட்டு T. G. பட்லர், அவர்கோர்ட்டு 1914-ம் ஹூ த்து ஜீவனும்சக்கேசு நெம்பர் 9-ல் செய்த உத்தரவின் பேரில் ஹைகோர்ட்டில் 1914-ம் ஹூ த்து 756-ம் நெம்பர் கிரிமினல் ரிவிஷன் கேசு தாக்கல் செய்யப்பட்டு அதில் ஜஸ்டிஸ் எய்லிங் செய்த உத்தரவை ரத்துச் செய்யும் பொருட்டு லெட்டர் ஸ்பேடெண்டு 15-வது கிலாஸின் பிரகாரம் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

பார்வதிபூர் டிவிஷன் ஜாயிண்டு மாஜிஸ்ட்ரேட்டு ஒரு ஜீவனும் சக்கேசில் செய்த உத்தரவின் பேரில் செய்யப்பட்ட 1914-ம் ஹூ த்து கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெம்பர் 756 ஐத்தள்ளுபடி செய்து ஜஸ்டிஸ் எய்லிங் செய்த உத்தரவை ரத்துச்செய்யும்படி லெட்டர்ஸ் பேடெண்டு 15-வது கிளாஸின்படி இந்த அப்பீல் செய்யப்பட்டது. ஒரு ஜட்ஜியினுடைய உத்தரவானது ஒருகிரிமினல் விசாரணையில் செய்யப்பட்டபடியால் லெட்டர் ஸ்பேடெண்டு 15-வது கிளாஸின் பிரகாரம் அப்பீல் கிடையாதென்றும் ஆகையால் அப்பீல் செல்லத்தக்கதல்ல வென்றும் ஆக்ஷேபிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிபக்கம் V. இராமேசமும், அப்பீல் பிரதிவாதிபக்கம் கனம் B. N. சர்மாவும் ஆஜரானார்கள்.

அடியில்கண்ட தீர்ப்பு ஜஸ்டிஸ் ஸ்பென்ஸரால் சொல்லப்பட்டது.

தீர்ப்பு.

கிரிமினல் புரொஸீஜர் கோடு 488-வது பிரிவுப்படி ஜீவனும் சம் கொடுத்தகாய்ச் செய்த உத்தரவானது ஒரு கிரிமினல் விசாரணையில் செய்யப்பட்ட உத்தரவாகையால் அதன் பேரில் அப்பீல் கிடையாதென்று ஆக்ஷேபிக்கப்பட்டது. இந்த ஆக்ஷேபனை ஸரியானதென்று நாங்கள் நினைக்கிறோம். 7-வது உட்பிரிவில் யார்பேரில் நடவடிக்கை நடத்தப்படுகிறதோ அவனை எதிரி என்றுசொல்லி அவன் தன்பக்கம் சாக்ஷியாகவு மிருக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை சாக்ஷிசொல்லும் பாத்தியதையானது, ஸிவில் கேசாக விருந்தால் சட்டத்தில் சொல்லப்படாமலேயே எதிரிக்கு உண்டானதாகவிருக்கிறது.

6-வது உட்பிரிவில் ஸம்மன் கேசுகளில் எப்படி வாக்கு மூலங்கள் எழுதப்படுகின்றனவோ அதைப் போலவேயே செய்யவேண்டுமென்றும் 13-வது உட்பிரிவில் அந்த உத்தரவுப்படி நடக்க அசட்டை செய்கிறவனை ஜெயிலில் வைக்கலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மஹாராணி அவர்களுக்கும், தாகுபின் ராஜாவுக்கும் நடந்த 1868-ம் ஹூ த்தில் 5. பம். ஹைகோர்ட். யில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறதுமான கேசில் அப்போதைய கிரிமினல் புரொசீஜர் கோடின்படி நடத்தப் பட்ட நடபடிக்கைகள் ஒரு கிரிமினல் கோர்ட்டாரால் நடத்தப்படும் நீதி விசாரணையைச் சேர்ந்ததென்றும் அதன் பேரில் அப்பீல் கிடையாதென்றும் அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். நாங்கள் அந்தத் தீர்ப்பை ஒப்புக்கொண்டு இந்த அப்பீலை சிலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

I. L. R. 39 M. 472. இ. லா. ரி, 39. ம. 472.

நெ. 46

APPELLATE CIVIL.
ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர்; மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர் }

1914-ம் வருஷத்து 2-வது அப்பீல் நெம்பர் 329.

ரெங்கய்யங்காரும் இன்னும் 6 பேர்களும் (வாதிகள்) அப்பீல் வாதிகள்.

v.

நாராயணாச்சாரியாரென்ற சக்ரவர்த்தி விஜயராகவாச்சாரியாரும் இன்னும் 4 பேர்களும் (பிரதிவாதிகள்) அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாய்ண்ட்:—1882-ம் வருஷத்து 4-வது ஆக்டாகிய டிரான்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் (Transfer of Property Act) 60, 67—93-வது பிரிவுகள். ஒத்தியை மீட்க வியாஜ்ஜியம்—ஒத்திவாங்கினவரால் சொத்தை, ஏலம் போடவேண்டும் என்று முன் வியாஜ்ஜியம்—ஏலம் போடும்படி டிக்ரி நிரைவேருதவில் ஒத்தியை மீட்டு சுவாதீனத்தை மறுபடி அடையும்படி பிரதிவாதி ஸ்தானத்திலிருந்த ஒத்திவைத்தவருக்கு அனுகூலமாக டிக்ரி—ஒத்திவாங்கினவராலாவது அல்லது ஒத்தி வைத்தவராலாவது நிறைவேற்றப்படாத டிக்ரீ ஒத்தியை மீட்டுக் கொள்ளவேண்டுமென்று ஒத்திவைத்தவரால் செய்யப்படும் வியாஜ்ஜியம் செல்லுமா?—முன் பைசல்செய்யப்பட்ட அதே விஷயத்தை மறுபடியும் கோர்ட்டுமுன் கொண்டு வருவது 1864 ம் வருஷத்தில் பிறப்பிவிக்கப்பட்ட ஒரு ஒத்தி தஸ்தாவேஜின் பேரில் ஒத்திவாங்கினவர் வியாஜ்ஜியம் செய்து 1872 ம் வருஷத்தில் டிக்ரி பெற்றுக் கொண்டார். அந்த டிக்ரியில், ஷை வியாஜ்ஜியத்தில் பிரதிவாதிகளில் ஒருவராயிருந்த ஒத்திவைத்தவருக்கு அனுகூலமாக, டிக்ரியை நிறைவேற்றுதலில் ஒற்றி நிலங்களை மீட்டுக் கொண்டு அனுபவிக்கலாமென்று ஓர் நிபந்தனை அடங்கியிருந்தது. ஆனால் அந்த டிக்ரியானது உபய கக்ஷிக்காரர்களில் ஒருவராலும் நிறைவேற்றப்படவில்லை.

ஒத்தியை மீட்டுக்கொள்வதற்காக ஒத்திவைத்தவரால் கொண்டுவரப்படும் புது வியாஜ்ஜியமானது ஏற்கனவே கோர்ட்டு முன் கொண்டுவந்திருந்த சங்கதியை மறுபடிகொண்டு வரக்கூடாது என்றவிதி (Rule of res-judicata)யினால் தடுக்கப்பட்டிருக்கிற தென்று தீர்மானிக்கப்பட்டது.

வேதப்புருட்டிக்கும்-வல்லப வலிய ருஜாவுக்கும் நடந்த 1902-ம் ஹூ த்தில் இ. லா. ரி. 25. ம. 300-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற புல் பெஞ்சு கேசையும் ஆதிபூர்ணம் பிள்ளைக்கும் கோபாலசுவாமி முதலிக்கும் நடந்த 1908-ம் ஹூ த்தில் இ. லா. ரி. 31. ம. 354-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசுகளையும் பார்வையிடப்பட்டது.

ராமாவுக்கும்-பாக்சணதுக்கும் நடந்த 1915-ம் ஹூ த்தில் இ. லா. ரி 39. பம். 41-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசை அங்கீகரிக்க வில்லை.

கேசின் சுருக்கம்:—திருவாடி டிஸ்டிரிக்டு முன்சிபுகோர்ட்டு 1911-ம் ஹூ த்து அஸல் வியாஜ்ஜிய நம்பர் 473-ல் P. C. ருமய்யர் செய்த டிக்கிரியின் பேரில் தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்டு 1912-ம் வருஷத்து அப்பீல் நம்பர் 750 செய்யப்பட்டு அதில் ஆக்டிங் டிஸ்டிரிக்சட்டு ஜட்ஜி D. வெங்கோபா ராவ் செய்தடிக்கிரியை மாற்றவேண்டுமென்று இந்த 2-வது அப்பீல் வரப்பட்டிருக்கிறது.

இந்த கேசில் சங்கதிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயருடைய தீர்ப்பில் வெளியாகிறது.

லாயர்கள்:—T. M. கிருஷ்ணஸாமி அய்யர் 1, 3, 5, 7. அப்பீல் வாதிகளுக்காகவும் C. V. அனந்த கிருஷ்ணய்யரும் R. R. ரங்கஸாமி அய்யங்காரும் 1-வது அப்பீல் பிரதிவாதிக்காகவும் ஆஜரானார்கள்.

ஹைகோர்ட்டு தீர்ப்பு.

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸதாசிவ அய்யர்:—வாதிகள் தான் அப்பீல்வாதிகள் 1864-ம் ஹூ த்தில் பிரதிவாதியுடைய பாட்டனார் ஸ்ரீனிவாஸாச் சாரியாருக்கு பிராதில்கண்ட சொத்துக்களை 1—வது வாதியினுடைய தகப்பனார் ஸ்ரீனிவாஸய்யங்கார் ஸ்வாதீன ஒத்தியாக விட்டுவிட்டார். ஒத்தி தஸ்தாவேஜில் ஒத்தித் தொகையைத்தானே நேரில் செலுத்துவதாய் ஒத்தி வைத்தவரால் எழுதிக் கொடுக்கப் பட்ட

ஒரு நிபந்தனை காணப்பட்டிருந்தது பிரதிவாதியினுடைய பாட்டனார் ஒத்தி சொத்தின்பேரில் ஈடு காட்டப்பட்டிருந்த ஒத்தித்தொகை ரூ. 136-க்கு 1867-ம் ௵த்தில் ஸ்ரீனிவாஸய்யங்காருடைய பிள்ளைகள்பேரில் ஒரு வியாஜ்ஜியம் செய்தார் (இந்த வியாஜ்ஜியத்தின் பிருது ரிக்கார்டுகளுடன் இல்லை. ஆனால் வழக்கமாய் எல்லாப் பிருதுகளிலும் எழுதப்படுகிற பிறார்த்தனைகள் போலவேயே இந்தப் பிருதிலும் பணம் செலுத்த தவறினால் சொத்தை ஏலம் போடவேண்டுமென்றும் அப்பீல் பிரதிவாதிகளிடமிருந்து வசூலாகவேண்டிய தொகை பின்னும் பாக்கி யிருந்தால் அவர்களுடைய பூர்வீக சொத்திலிருந்து வசூலிக்கப்படவேண்டுமென்று எழுதப்பட்டிருந்ததாக வைத்துக்கொள்ளலாம்). 1872-ம் ௵ ஏப்ரல் மாதத்தில் A. அடையாளமிட்ட டிக்ரீ பிறப்பிவிக்கப்பட்டது. அதில் முக்கியமான பாகம் அடியில் கண்டபடி யிருக்கிறது.

“வாதிக்கு பிருதில் கண்ட தொகையும் வியாஜ்ஜியச் சிலவு பூராவும் பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவேணுமென்றும் இன்றுமுதல் 6 மாததங்களுக்குள் டிக்கிரி தொகை செலுத்தப்படாத விஷயத்தில் டிக்ரீயை நிறைவேற்றும் பொருட்டு ஒத்திச்சொத்துக்களை ஏலம் போடும்படிக்கும் கோர்ட்டுச் சிலவு தொகையின்பேரில் வாதிக்கு இன்று முதல் 100-க்கு 12 வீதம் வட்டி கிடைக்கவேணுமென்றும் டிக்ரீ நிறைவேற்றப்பட்டதின்பேரில் பிரதிவாதிகளுக்கு ஒத்தி நிலங்களை கோர்ட்டு மூலமாக நிறைவேருதலில் தங்கள் வசப்படுத்திக்கொண்ட பாத்தியதை யிருப்பதாகவும் கண்டிருக்கிறது”

இந்தப்பிரதிவாதியினுடைய பாட்டனாருக்கு அனுகூலமாக இந்த டிக்ரியை பிறப்பிவிக்கப் பட்டிருந்தாலும், அதில் டிக்ரி செய்யப்பட்டிருக்கிற தொகையைச் செலுத்தி விட்டு, நிறைவேற்றுதலில், எதிரியினுடைய பாட்டனாரிடமிருந்து ஒத்தியை மீட்டு அனுபவித்துக் கொள்ளும் பாத்தியதை வாதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த டிக்கிரியை இருகக்ஷிக்காரர்களில் ஒருவராலும் நிறைவேற்றப்படவில்லை. இதே ஒத்தியை மீட்டுக்கொள்வதற்காகச் செய்யப்பட்ட பழய டிக்கிரித் தேதிக்கு, சுமார் 40-வருஷத்துக்குப் பிறகு இந்த வியாச்சியம் கொண்டுவரப்பட்டிருக்கிறது (இந்த வியாச்சியத்தின் 1, 2, 3, வாதிகள், 1867-ம் ௵த்து முன் வியாச்சியத்தில் 4, 5, 6, பிரதி வாதிகளாயிருந்தார்கள்.) இந்த வியாச்சியத்தின் 4, 5, 6, வாதிகள் முன் வியாச்சியத்தில் 1-வது பிரதி வாதியாக யிருந்த இறந்துபோன ஆறுவமுது அய்யங்காருடைய பிள்ளைகள். இந்த வியாச்சியத்தின் 7-வது வாதி முன் வியாச்சியத்தின் 2-வது பிரதிவாதியின்குமாரன். நான் சுருக்கமாக யிருப்பதை உத்தேசித்து வாதிகளுக்கும் அவர்களுடையமுன்னோர்களுக்குமாகட்டும், பிரதிவாதிகளுக்கும் அவர்களுடைய முன்னோர்களுக்குமாகட்டும் யாதொரு வித்தியாசமும் பாராட்டமாட்டேன்.

முன் வியாச்சியத்தில் பிறப்பிவிக்கப்பட்ட டிக்கிரியினால்இந்தவியாச்சியம்ரெஸ்ஜுடிகேடா(Resjudicata) என்னும் தோஷத்தால் பாதிக்கப்படுகிறதா வென்ற ஒரேவிஷயம்தான், இப்போது தீர்மானிக்கப்பட வேண்டியதிருக்கிறது. கீழ் கோர்ட்டுகள் இரண்டிலும், ஷை தோஷத்தால் வியாச்சியம் பீடிக்கப்படுகிறதென்று தீர்மானித்திருக்கிறார்கள் அதன் பேரில்தான் இந்த 2-வது அப்பீல் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

முன் வியாச்சியத்தில் இந்த வியாச்சியத்தின் வாதிகளுக்கு அனுகூலமாக (அவர்கள் முன் வியாச்சியத்தில் பிரதி வாதிகளாயிருந்தாலும்) டிக்கிரி செய்யப்பட்டிருந்தால், அதுநிறைவேற்றப்படக்கூடிய டிக்கிரியாக யிருந்து அவர்கள் இந்த வியாச்சியத்தில் கேழ்க்கிறஅதே பரிகாரங்களை அந்த டிக்கிரியில் கொடுக்கப்பட்டிருந்தால் அவர்கள் இந்த வியாச்சியம் கொண்டுவர ரெஸ்ஜுடிகேடா தோஷத்தால் தடுக்கப் பட்டிருக்கிறார்களென்பது எனக்குத் தெளிவாக தெரிகிறது. அப்பீல் வாதிகள் பக்கம் ஆஜரான மிஸ்டர் T. M. கிருஷ்ணஸாமி அய்யரவர்களுடைய திறமைவாய்ந்த வாதங்களைக் கோர்ட்டார் கேட்டும் ரெஸ்ஜுடிகேடா விஷயத்தில் கீழ்கோர்ட்டார் செய்த தீர்ப்பு சரியானதுதானென்ற முடிவுக்கே நானும் வரவேண்டியதாக யிருக்கிறது.

முதலாவது A. அடையாள தஸ்தா வேஜாகிய 1872-ம் ௵த்து டிக்கிரி மூலமாக இந்த வாதிகளுக்கு ஒத்தித்தொகையைச் செலுத்தி சொத்துக்களை அனுபவிக்கும் பாத்தியதை யேர்ப்பட்டதே யல்லது அந்த வியாச்சியத்தின் நிறைவேறுதலில் சொத்துக்களை மீட்டுக்கொள்ள அவர்களுக்கு யாதொருபாத்தியதையும் யேர்ப்படவில்லையென்று சொல்லப்பட்ட கக்ஷியை நான் ஒப்புக்கொள்ளவில்லை. வசப்படுத்தி என்றதமிழ்வார்த்தைக்கு தஞ்சாவூர் ஜில்லாவில் “கோர்ட்டு மூலமாய் நிறைவேறுதலில் அனுபோக பாத்தியதையைப் பெறுவது” என்றுதான் எப்போதும் அர்த்தம்! A. அடையாள தஸ்தா வேஜாகிய டிக்கிரியினால், 1867-ம் ௵த்து வியாச்சியத்தில் பிரதிவாதிகளாக யிருந்த இந்த வாதிகளுக்கு, ஒத்தித்தொகையைச் செலுத்தியதின் பேரில் ஒத்திச் சொத்துக்களை, அந்த டிக்கிரியின் நிறைவேறுதலில் அனுபோகப்படுத்திக்கொள்ளும் பாத்தியதையேர்ப்படுகிறதென்று நினைக்கிறேன். இந்தவிஷயத்தை இன்னும் விளங்கச்செய்யும் பொருட்டு 1872-ம் ௵த்தில் பிறப்பிவிக்கப்பட்ட A. அடையாள டிக்கிரியானது, டிரான்ஸ்பர் ஆப்பிராபர்டி (Transfer of Property) யேர்ப்படு முன்னும் இப்போதய ஸீவில் புரொஸீஜர் கோடு ஊர்ஜிதத்துக்கு வருமுன்னுடியும், பிறப்பிவிக்கப்பட்டது. A. அடையாளமிட்ட தஸ்தா வேஜாகிய இந்தடிக்கிரியினால் நான் முன் சொன்னபடி அந்த வியாச்சியத்தில் பிரதிவாதிகளாக யிருந்த இந்தக்கேசின் வாதிகளுக்கு, இப்போதைய பிரதிவாதி (அப்போதையவாதி)க்கு அனுகூலமாய் பிறப்பிவிக்கப்பட்ட டிக்கிரித் தொகையைச் செலுத்திய பிறகு

நிறைவேறுதலில் பிராதில்கண்ட நிலத்தை கோர்ட்டு மூலமாய் வாழ்வித்துக்கொள்ளும் பாத்தியதை யேர்ப்பட்டிருக்கிறது. வேதப்புராட்டிக்கும், வல்லபராஜாவுக்கும் நடந்து 1902-ம் ௵ இ. லா. ரி. 25. ம. 300-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில் ஜஸ்டிஸ் ஸர். பாஷ்யம் அய்யங்காரால் எழுதப்பட்ட விஸ்தாரமான தீர்ப்பில் அநேக விஷயங்கள் வெளியாகின்றன. 301-வது பக்கத்தில் அடியில் கண்டபடி சொல்லி யிருக்கிறார்:—“ஒத்தியை ரத்துச் செய்வதற்காகவோ, சொத்தை ஏலம்போடுவதற்காகவோ, அல்லது ஒத்தியை மீட்டுக் கொள்வதற்காகவோ இவைகளில் எதற்காகக்கொண்டு வரப்பட்ட வியாச்சியமாக யிருந்தாலுமேஸரி, அந்தவியாச்சியத்தில் செய்யப்பட்ட டிக்கிரி ஒவ்வொன்றிலும், ஒத்திவைத்தவன் டிக்கிரித்தொகையை வாயிதாவுக்குள் செலுத்திவிட்டால் ஒத்திவைத்தவன் ஒத்தியை மீட்டுக் கொள்ளலாம் என்ற பாத்தியதை உண்டென்று சொல்லப்பட்டிருக்கும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை செய்துக் கொடுக்கும்படி செய்யப்பட்ட டிக்கிரியாக யிருந்தாலுமே, அக்கம் பக்கத்திலுள்ள ஸௌகரியங்களை அனுபவித்துக்கொள்ளும் விஷயமாய் (Rights of easement) ப்பிறப்பிவிக்கப்பட்ட டிக்கிரியாக யிருந்தாலுமே, இன்னும் இதைப்போலொத்த மற்ற டிக்கிரிகளாகயிருந்தாலுமே இவைகளெல்லாம் ஒரு நிபந்தனைக்குட் படுத்தப்பட்டே செய்யப்படுகிறது. இருந்தாலும் அவைகள் முடிவான தீர்ப்புகளேயாகுமாகையால், அவைகளுக்கும் ரெஸ்ஜுடி கேடா உண்டு இங்கிலீஷ்லாவிலும் இந்த விஷயத்தைப்பற்றி இதேமாதிரிதான் சொல்லப்பட்டிருக்கிறது, நிபந்தனைகளோடு கூடிய டிக்ரியாக யிருந்தாலுமே, நிபந்தனைகளில்லாத டிக்ரியாக யிருந்தாலுமே, அவைகளிலெல்லாம் நடவடிக்கை நடத்தி நிறைவேறுதலில் ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவரவேண்டும்” நான் மேல்கண்ட விஷயங்களையெல்லாம் மிகவும் கோருவதுடன் பூராவும் ஒப்புக்கொள்கிறேன். ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட்டுப்படி சொத்துக்களை யேலம் போடுவதற்காகவும் ஒத்தியைமீட்டுக்கொள்ளுவதற்காகவும் கொண்டு வரப்பட்ட வியாச்சியங்களில் செய்யப்படுகிற டிக்ரிகளைப் பற்றி அந்த கற்றறிந்த ஜட்ஜி சொல்லியிருக்கிறார் என்பதில் ஸந்தேகமில்லை. ஒத்திவாங்கப்பட்டவரால் சொத்தை ஏலம்போடுவதற்காக கொண்டுவரப்பட்டவியாச்சியமாக யிருந்த போதிலும், அந்த வியாச்சியத்தில் ஒத்தி வைத்தவர்களுக்கு அனுகூலமாக ஒத்தியைமீட்டுக்கொள்ளலாமென்ற நிபந்தனைக்குள்பட்ட டிக்ரிசெய்யப்பட்டிருக்கிறபடியால், அவரால் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்கள் 1872-ம் ௵த்தில் பிறப்பிவிக்கப்பட்ட டிக்ரிக்கும் சம்மந்தப்படுகிறது. ஆதி பூர்ணம் பிள்ளைக்கும், கோபாலசாமி முதலிக்கும் நடந்து 1908 ம் ௵த்தில் இ. லா. ரி. 31, மது. 354-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில், 360-ம் பக்கத்தில் அடியில்கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது :—“வேதப்புராட்டிக்கும், வல்லபராஜாவுக்கும் நடந்து 1902-ம் ௵த்தில் இ. லா. ரி. 25. ம. 300 ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசில் புல் பெஞ்சில் (Full Bench) செய்திருக்கிற தீர்மானத்துக்குறிய முகாந்தரங்களினால், அதே ஒத்தியில் சம்மந்தப்பட்ட சொத்தை யேலம்போட வேணுமென்று ஒத்திவாங்கினவன் வியாச்சியம் கொண்டுவந்து, அந்த வியாச்சியத்தில் அபஜயமடைந்த ஒத்திவைத்தவன் ஷை ஒத்திசொத்தை மீட்டுக்கொள்ளுவதற்காக திரும்ப வியாச்சியம்கொண்டு வரலாமா வென்ற ஸந்தேகம் யேர்ப்படுகிறது.”

மேற்கண்டபடி வெளியிடப்பட்டிருக்கிற ஸந்தேகமானது மிகவும்ஸரியானஸந்தேகம். வேதப்புராட்டிக்கும், வல்லபராஜாவுக்கும் நடந்தகேசின் பைசலில் சொல்லப்பட்ட முகாந்திரங்களில் ஒத்திவாங்கினவன், ஒத்திசொத்தைஏலம் போடும் விஷயமாய் டிக்ரிபெரப்பட்டவியாச்சியத்தில் பிரதிவாதியாக யிருந்து ஒத்திசொத்தைத்திருப்பி கொள்ளும் நிபந்தனைகளடங்கிய டிக்ரிபெற்ற ஒத்திவைத்தவன், முதலாவதுவியாச்சியத்தில், ஒத்திசொத்தை மீட்டுக் கொள்ளும்படி பிறப்பிவிக்கப்பட்ட நிபந்தனை டிக்ரியை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, ஒத்தி சொத்துக்களைமீட்டு அனுபவிப்பதற்காக பின்னிட்டு, வேறு வியாச்சியம் கொண்டுவருவதைத் தடுக்கத் தான் செய்கிறது. ஒத்தியை மீட்டுக் கொள்ளுவதற்காகச் செய்யப்படும் டிக்ரியானது ஒத்திவாங்கினவனால் ஒத்தி சொத்தை ஏலம் போடுவதற்காக கொண்டுவரப்பட்டவியாச்சிய விஷயமாய் செய்யப்பட்டாலுமே, அல்லது ஒத்தி வைத்தவனால் ஒத்தியை மீட்டுக்கொள்வதற்காகச் செய்யப்பட்ட வியாச்சிய விஷயமாய் செய்யப்பட்டாலுமே, அந்த டிக்ரியானது எப்போதும் நிபந்தனைக் குட்பட்ட டிக்ரியாகவேயே யிருக்கும். ஒத்திவாங்கினவனால் சொத்தை ஏலம்போடுவதற்காக கொண்டு வரப்பட்ட வியாச்சியத்தில் செய்யப்படும் டிக்ரியானது ஸாதாரணமாக அந்தவியாச்சியத்தில்பிரதிவாதியாக யிருக்கும் ஒத்திவைத்தவனுடைய வேண்டுதலின் பேரில் செய்யப்படுகிறதில்லையென்பதற்குச்சந்தேகமில்லை. ஆதிபூர்ணம் பிள்ளைக்கும், கோபாலசாமி முதலிக்கும்நடந்து 1908-ம் ௵த்தில் இ. லா. ரி. 31 ம. 354 ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேஸ் ஸம்மந்தமாக 359-ம் பக்கத்தில் கனம் ஜட்ஜ்கள் அடியில் கண்டபடி எழுதியிருக்கிறார்கள். “பிரதிவாதி தான் கேழ்காமலேயே தனக்கு அனுகூலமான ஒரு டிக்ரியை உடையவன் ஆகிறான்.”

ஆனால் அப்பேர்ப்பட்ட டிக்ரி கொடுக்கப்பட்ட ஒத்தி வைத்த பிரதிவாதிக்கு அந்தடிக்ரியை நிறைவேற்றிக் கொள்ளத்தான் பாத்தியதை யிருக்கிறதா அல்லது, அவன் ரெஸ்ஜுடிகேடா தோஷமிருந்தாலுமே ஒத்தியை மீட்டுக் கொள்ளுவதற்காக புது வியாச்சியம் கொண்டுவரலாமா வென்ற விஷயங்களைத் தீர்மானிப்பதில் யாதொரு அபிப்பிராய பேதமும், இதனால் ஏற்படமாட்டாது. நான் முன்னமேயே சொல்லி யிருக்கிற பிரகாரம், 1872-ம் ௵த்து டிக்ரியானது நிறைவேறுதலில் ஒத்தி சொத்தை மீட்டுக்கொள்ள ஒத்தி

வைத்தவனுக்கு அதிகாரம் கொடுக்கிறபடியால், அந்த
டிக்ரியானது, ஒத்தி வைத்தவனுக்கும் அனுகூலமான
டிக்ரிதான். 1882 ம் ஹுத்து 4 வது ஆக்டில் ஒத்தி ஸம்
மந்தப்பட்ட வியாச்சியங்களில் ஷை வியாச்சியமானது
ஒத்திவைத்தவனுல்கொண்டுவரப்பட்டாலுமே, அல்லது
ஒத்திவாங்கினவனுல் கொண்டுவரப்பட்டாலுமே, டிக்ரி
யில் ஒத்திவாங்கினவனுக்குச் செலுத்தி விடும்படியாய்
காணப்பட்ட தொகையை ஒத்தி வைத்தவன் செலுத்தி
விட்டால் ஒத்திவாங்கினவன் ஒத்தி சொத்தை ஒத்தி
வைத்தவனிடம் ஒப்புவித்து விடவேணு மென்ற நிபந்
தனைகளடங்கிய டிக்ரி பிறப்பிவிக்கப்பட வேண்டுமென்று
சொல்லப்பட்டிருக்கிறது.

ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட்டு 86,88,89-வது
பிரிவுகளைப்பார்க்க. ஷை பிரிவுகள் இப்போது ஸிவில்
புரோஸீஜர்கோடினுல் ரத்துச்செய்யப்பட்டிருக்கின்றன.
ஆனுல் ஸிவில் புரோஸீஜர் 34 வது ஆர்டர் 2-வது ரூல்
(c) உள்பிரிவு, 4-வது ரூல் (1) உள்பிரிவு, 5-வது ரூல்
(1) c உள்பிரிவு இவைகளைப் பார்வையிடுவதினுல் முன்
டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்டிலிருந்த அதே நிபந்தனை
களையே யெடுத்து எழுதியிருக்கிறதாகத் தெரியவரும்.
1872 ம் வருஷத்து டிக்ரியில் அதே உத்தரவுதான் செய்
யப்பட்டிருக்கிறது. ஒத்தி வைத்தவன் ஒத்தியை மீட்டு
கொள்ளும் விஷயமாய்சொல்லப்பட்டிருக்கும் பிரிவாகிய
(1882-ம் ஹுத்து 4-வது ஆக்ட்டின்) 60-வது பிரிவில்
யெழுதப்பட்டிருக்கிற வாசக நடைக்கும், ஒத்தி வைத்த
வனுல், ஒத்தியை ரத்துச்செய்யவோ அல்லது ஒத்தி
சொத்தை ஏலம்போடவோ உத்தரவு பெறும்படி
கொண்டு வரப்பட்டும் வியாச்சியங்கள் விஷயமாய்ச்
சொல்லப்பட்டிருக்கிற 67-வது பிரிவில் உபயோகிக்கப்
பட்டிருக்கிற வாசகநடைக்கும் முக்கியமான வித்தியாஸ
மிருப்பதாக மிஸ்டர். கிருஷ்ணஸாமி அய்யர் வற்
புறுத்திப்பேசுகிருர். 67-வதுபிரிவில், ஒத்திவாங்கினவன்
ஒத்தியைரத்துச்செய்யவாவது அல்லது ஒத்திசொத்தை
ஏலம் போடவாவது உத்திரவு பெறும் பாத்தியதை
யானது "ஒத்திசொத்தை மீட்டுக் கொள்வதற்கு டிக்கிரி
செய்யப்படுமுன்" தான் உண்டென்றுவரையறுத்துச்
சொல்லப்பட்டிருக்கிறது. "ஒத்திசொத்தைமீட்டுக்கொள்
வதற்கு டிக்கிரி பிறப்பிவிக்கப்படுமுன்" அல்லது இதற்
கிணையுரிமையுள்ள (பரஸ்பர ஸம்பந்தமான) வார்த்தைக
ளாகிய "ஒத்திசொத்தை ஏலம் போடுவதற்கு டிக்கிரி
பிறப்பிவிக்கப்படுமுன்" என்பவைகளும்,60-வது பிரிவில்
காணப்படவில்லை. ஆகையால், ஒத்தி வாங்கினவரால்
கொண்டுவரப்படும் வியாச்சியத்தில் பிறப்பிவிக்கப்பட்ட
டிக்கிரியில் பிரதிவாதியான ஒத்தி வைத்தவன் ஒததியை
மீட்டுக்கொள்ளும்படிக்கும் டிக்கிரியில்அடங்கி யிருந்தா
லும், அதனுல் ஒத்தி வாங்கினவர் ஒத்தியை மீட்டுக்
கொள்ளும்படி பிரத்தியேகமான வியாச்சியம் செய்துக்
கொள்ளுவதற்குத் தடையில்லை யென்றும், ஆனுல் ஒத்
திவைத்தவரால் கொண்டுவரப்பட்ட வியாச்சியத்தில்
ஒத்தியை மீட்டுக் கொள்ளும்படி பிறப்பிவிக்கப்படும்
டிக்கிரியினுல் ஒத்திவாங்கினவர், ஒத்திசொத்தை யேலம்
போடுவதற்காக பிரத்தியேகமான வியாச்சியம்செய்வதற்
குத் தடையாயிருக்கு மென்றும் அவர் வாதித்தார்.
"ஒத்திசொத்தை மீட்டுக்கொள்ளும்படி டிக்கிரி பிறப்பி
விக்கப்படுமுன்" என்ற பதங்கள் 67-வது பிரிவில்யிருப்
பதினுலும், இதற்கொப்பந்தமான வார்த்தைகள்60-வது
பிரிவில் இல்லாமலிருப்பதனுலும், வக்கீல்வாதிக்கிறபடிக்
குள்ள தாத்பரியத்தைக் கொடுப்பதாக நான் நினைக்க
வில்லை. அடியில்கண்ட தாத்பரியம் உண்டாக வேண்டு
மானுல் இந்த வார்த்தைகள் 67-வது பிரிவில்அமைக்கப்
பட்டிருக்கவேண்டும்.ஒத்திவாங்கினவனுக்குப்பிரதிவாதி
ஸ்தானத்தில் டிரான்ஸ்பர் ஆப் ப்ராப்பெர்டி ஆக்ட்டு
(Transfer of Property Act) 93-வது பிரிவுப்படி
கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரமானதுஒத்திவைத்தவ
ரால் ஒத்தியை மீட்டுக்கொள்வதற்காகக் கொண்டுவரப்
பட்ட வியர்ச்சியத்திலும் இருப்பதாக எண்ணுவதற்கு,
தன்தொகையைப்பெறுக்கொள்வதற்காக ஒத்திசொத்தை
ஏலம்போட விரும்பினுல், பிரதிவாதியான ஒத்தி வைத்
தவனுல் அதே வியாச்சியத்தில் அந்த யுக்தத்தை உப
யோகிக்கவேண்டும். ஒத்தி வைத்தவன் செய்த வியாச்
சியத்துக்கு எதிரிடையாக தன் யுக்தம்போல் இந்த
வியாச்சியத்தை செய்யக்கூடாது. 93-வது பிரிவு 2-வது
பாரா, 24-வது ஆர்டர், 8-வது ரூல் 1-வது உட்பிரிவை
பார்வை யிடுவதினுல், ஒத்திவாங்கினவனுகிய பிரதிவாதி
யின் பிரார்த்தனைப்படி யேலம் போடுவதற்காகச்
செய்யப்படும் உத்தரவானது டிக்ரியில் செய்யப்பட்ட
வுத்தரவின் ஒரு பாகமாக மாட்டாது. ஆனுல்அதுஒத்தி
வைத்தவனுகிய வாதி தொகை செலுத்தத்தவறிவிட்டதற்
காக அவன் பேரில், பிரத்தியேகமாகச் செய்துக் கொள்
ளப்படும் மனுப்படிசெய்யப்படும்உத்தரவாகயிருக்கிறது
ஆனுல் 80-வது பிரிவை 86, 88-வது பிரிவுகளுடன்
சேர்த்துப்படிப்பதினுல், ஒத்தி வாங்கினவர் சொத்தை
ஏலம்போடுவதற்காகக் கொண்டுவரும் வியாச்சியத்தில்,
பிரதிவாதியான ஒத்தி வைத்தவருக்கு அனுகூலமாக
ஒத்தியை மீட்டுக் கொள்ளும்படி செய்யப்படும் உத்தர
வானது, பிரதான டிக்கிரியின் ஒருபாகமாகவோ ஆய்
விடுகிற தென்பது தெரியவரும். பின் சொல்லப்பட்ட
கேஸில் அந்த உத்தரவானது அதே விதமாக
டிக்கிரியின் ஒருபாகம் ஆய்விடும் பக்ஷத்தில் ஒத்தியை
மீட்டுக்கொள்வதற்காகவாவது அல்லது ஒத்திசொத்தை
ஏலம் போடுவதற்காகவாவது டிக்கிரி செய்யப்பட்ட
பொழுது, ஒத்திவைத்தவனுக்கு, ஒத்தி வைத்த
சொத்தை திருப்ப மீட்டுக்கொள்ளும் பாத்தியதை
யில்லையென்று 60-வது பிரிவில் சொல்லப்பட்டிருப்பது
அனுவசியம். மேல்சொல்லப்பட்ட டிக்கிரி பிறப்பிவிக்கப்
பட்ட பிறகு, அந்த பாத்தியதையானது அந்த வியாச்சி
யத்திலேயேதீர்மானிக்கப்பட்டுவிட்டதாகஆய்விடுகிறது.
அது அப்பால், ஒத்தி வைத்தவரால் ஒத்தியை மீட்டுக்

கொள்வதற்காகக் கொண்டுவரப்படும் வியாச்சியமாக
விருந்தாலுமே சரி அல்லது ஒத்தி வாங்கினவரால்,
ஒத்தியை ரத்துச் செய்வதற்கோ அல்லது ஒத்தி
சொத்தை ஏலம்போடுவதற்கோ கொண்டுவரப்பட்ட
வியாச்சியமாக விருந்தாலுமே சரி, அது ரெஸ்ஜூடி
கேட்டாவென்னும்தோஷத்தால் பாதிக்கப்பட்டதாய்
விடுகிறது.

ராமாவுக்கும் பாச்சந்துக்கும் நடந்த 1915-ம்
ஹுத்தில் இ. லா. ரி. 39. பம் 41-ல், பிரசுரிக்கப்பட்
டிருக்கிறதும் அப்பீல்வாதிபக்கம் வக்கீலால் காண்பி
விக்கப்பட்டதுமான கேஸின் தீர்மானம் அவர் சொல்
லுகிற கக்ஷிக்கு அனுகூலமாயிருக்கிற தென்பதற்குச்
சந்தேகமில்லை. ஆனுல் அந்தத் தீர்ப்பு மரியாதை
பெறத்தக்கதாகினும் அந்தத்தீர்ப்பில் நான் கலந்து
கொள்ள நான் அசக்தனுகவிருக்கிறேன். மதருஸ்
லா ஜர்னல் 29-வது வாலம் 6, 7-வது பக்கங்களில்
ஸிவில் புரொஸீஜர் கோடின் 11-வது பிரிவின் வார்த்
தைகளை உபயோகப்படுத்தி கொடுக்கப்பட்டிருக்
கும் திட்டமான நோட்டில் (குறிப்பில்) சொல்லப்
பட்டிருக்கிற பிரகாரம் இதே விஷயமானது—அதாவது
வாதிக்கு ஒத்தியை மீட்டுக்கொள்ளும் பாத்தியதை
யான கேஸில் தீர்மானிக்கப்படவேண்டிய அம்சங்
களில் ஒன்றுயிருந்து, விசாரணை செய்யப்பட்டு முன்
வியாச்சியத்தில் தீர்மானிக்கப்பட்டு, விடப்பட்டதா
வென்ற விஷயமானது 2-வது வியாச்சியத்தில் ஒரு
அம்சமாகவிருந்ததா இல்லையா ? 2-வது வியாச்சியத்
தில் என்னபுதிய விஷயம், பாத்தியதை அல்லது அம்
சத்தைப்பற்றி கோர்ட்டார் விசாரித்துத் தீர்மானிக்க
வேண்டிய திருக்கிறது? ரெஸ்ஜூடி கேடாவுக்கு சம்
பந்தப்பட்ட விதிகளை [அம்சங்களுக்கு (Issues) உப
யோகிக்கும் மாதிரியிலிருந்து தொகுத்து] வியாச்சி
யங்கள் சம்பந்தமாய் உபயோகிப்பதிலும், கக்ஷிக்காரர்
வாதியாக வந்தாலுமே, பிரதிவாதியாக வந்தாலுமே
அவர் அந்த 2-சந்தர்ப்பங்களிலும் ஒன்று போல
தயாராகயிருக்க வேண்டுமென்று கக்ஷி சொல்வது
அஸாத்தியமான காரியம். ஒத்தி வாங்கினவரால்
கொண்டுவரப்பட்ட முன் வியாச்சியத்திலேயே ஒத்தி
வைத்தவர் டிக்கிரித்தொகையைச் செலுத்துவதற்கு
டிக்கிரியில் கொடுக்கப்பட்டிருக்கும் 6-மாத வாயிதா
வுக்குள் தொகையைச்செலுத்தி ஒத்தியை மீட்டுக்
கொள்ளும் பாத்தியதை ஒத்தி வைத்தவருக்கு இருப்
பதோடு ஆதிபூர்ணம் பிள்ளைக்கும் கோபாலசாமி
முதலியாருக்கும் நடந்த 1908 ம் ஹுத்தில் இ. லா.
ரி. 31. ம. 354-ல், பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற
கேஸின் தீர்ப்பில் கண்டபடி, ஸிவில் புரொஸீஜர் கோ
டின் பிரகாரம் அந்த 6-மாதங்களுக்குப் பின்னீடும்
நிறைவேறுதலில் ஏலமாகுமுன், எப்போதாவது
ஏலத்தை நிறுத்தும்படியாக தொகையைச் செலுத்தி
ஒத்தியை மீட்டுக்கொள்ளும் பாத்தியதை ஒத்தி
வைத்தவருக்கு உண்டு. என்ன வந்தாலும் வரட்டு
மென்று அஜாக்கிரதையாக யிருந்த ஒத்திவைத்தவ
னுக்கு உதவிசெய்ய கோர்ட்டாரே முன்வரவேண்டிய
தில்லை. ஒத்தித்தொகை செலுத்துவதற்கு ஏற்பட்டிருக்
கும் வாயிதாவிலிருந்து 12-வருஷங்களுக்குள், ஒத்தி
சொத்தை ஏலம்போடுவதற்காக ஒத்தி வாங்கினவர்
வியாச்சியம் செய்துக் கொள்ள வேண்டு மென்பதும்,
148-வது விஷயத்தின் (Article) பிரகாரம் ஒத்தி
யை மீட்டுக் கொள்வதற்காக ஒத்தி வைத்தவர்
60-வருஷங்களுக்குள் வியாச்சியம் தொடரலாமென்ப
தும் ஒத்தி வாங்கினவரால் ஒத்தி சொத்தை ஏலம்
போடுவதற்காகக் கொண்டுவரப்பட்ட வியாச்சியத்
தில் முன்னமேயே ஒரு டிக்கிரி பெற்றபிறகு தானே
வேறு வியாச்சியம் செய்து ஒத்தியை மீட்டுக்கொள்
வதற்கு பிரத்தியேகமான வியாச்சியம் செய்து
கொள்ளும் படிக்கு இடம் கொடுப்பதற்கு போதாத
முகாந்திரமாக விருக்கிறது.

ஆகையால் இந்த 2-வது அப்பீலை செலவுடன்
தள்ளுபடி செய்திருக்கிறேன் :—

ஜஸ்டிஸ் நேபியர்:—மேல்கண்ட தீர்ப்பில் நான்
கலந்து கொள்ளுகிறேன். வேதப்புறுட்டிக்கும் வல்
லப ராஜாவுக்கும் நடந்த 1902-ம் ஹுத்தில் இ. லா.
ரி. 25. ம. 300-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேஸில்
முன்னிருந்த பிரதான ஜட்ஜி (The late Chief
Justice)அடியில் கண்டபிரகாரம் சொல்லியிருக்கிறர்.
ஒத்தியை மீட்டுக் கொள்ளுவதற்காகச் செய்யப்படும்
வியாச்சியத்தில், ஒத்தியை மீட்டுக்கொள்ளலாம் அல்
லது கூடாது என்ற விஷயங்கள் தான் தீர்மானிக்கப்
படவேண்டிய அம்சமாகவிருக்கிறது.

"ஒத்திவைத்தவர் ஒத்தியை மீட்டுக் கொள்வதற்
காகக் கொண்டுவரும் வியாச்சியத்தில், அவனுக்கு
ஜயமாகிறதாக விருந்தால், அதில் கோர்ட்டார்
192-வது பிரிவின்படி டிக்கிரிசெய்து தான் தீரவேண்டு
மென்னும்பாத்தியதை, ஒத்திவைத்தவருக்குண்டா?"
என் அபிப்பிராயத்தில், ஒத்தி வாங்கினவரால்
கொண்டுவரப்பட்ட வியாச்சியத்தில், அந்த வியாச்சி
யமானது இங்கிலீஷ் லாப்படிக்குக் கொண்டுவரப்பட்
டாலுமே, டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்டி ஆக்ட்டுப்படி
கொண்டுவரப்பட்டாலுமே புது புரொஸீஜர் கோடில்
என்னென்ன வித்தியாசமான நிபந்தனைகளிருந்தா
லுமே அதேவிஷயந்தானிருக்கிறது. இந்தஅபிப்பிரா
யத்தில் இந்த வியாச்சியமானது ரெஸ்ஜூடிகேடா என்
னும் தோஷத்துக்கு உட்பட்டதென்று தீர்மானித்து
அப்பீலைத் தள்ளுபடி செய்கிறேன்.

I. L R. 39 M. 896. இ. லா. ரி. 39 ம. 896.

நெ. 47

APPELLATE CRIMINAL.

கிரிமினல் அப்பீல்.

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் }

1916-ம் ஹூத்து கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 451.

மதுளி வெங்கடசுப்பய்யா (எதிரி) மனுதார்.

லாபாயிண்ட் :—1884-ம் ஹூத்து 4-வது ஆக்ட்டாகிய டிஸ்டிரிக்கட்டு முனிஸிபாலிடி ஆக்ட்டு 188-வது பிரிவு (கிளாஸ் 5) ம் 189-வது பிரிவும். நெல் அவித்துக்கொள்ள லைஸென்ஸ்-மனுத் தேதிக்கு 30 நாள்களுக்குப் பிறகு லைஸென்ஸ் கொடுக்க மறுதளித்த உத்திரவு-லைஸென்சு கொடுக்க மறுதளித்த பிறகு நெல் அவித்தல் ஷை ஆக்ட்டு 189-வது பிரிவுப்படி குற்றம் சாற்றப்படுதல்—தண்டனை சட்ட விரோதமாவென்பது.

ஒருமனுதார் ஒரு இடத்தில் நெல் அவிக்கக் கொடுக்கப்பட்டிருக்கும் லைஸென்ஸை அடுத்த வருஷத்துக்கும் துயர்ந்து கொடுக்கவேண்டுமென்று ஒரு முனிஸிபாலிடி அக்கிராஸனாதிபதிக்கு மனு செய்துகொண்டதில், மனுதேதிக்கு முப்பது நாளைக்குமேற்பட்ட காலத்திற்குப் பிறகு, லைஸென்ஸ் கொடுக்கமாட்டேனென்று மறுதளித்து விடப்பட்டது. இப்படி லைஸென்ஸ் கொடுக்க மறுதளிக்கப்படப்பட்டும் மனுதார் ஷை இடத்திலேயே நெல் அவித்தார்.

ஷை ஆக்ட்டு 188-வது பிரிவு (5) வது கிளாஸ்படி தாவா இடத்துக்கு எந்த வருஷத்துக்கு லைஸென்ஸ் கேழ்கப்பட்டதோ அந்த வருஷத்துக்கு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டதாய் தீர்மானிக்கப்படவேண்டியதிருப்பதால், டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிடிஸ் ஆக்ட்டு 189-வது பிரிவுப்படிக்குள்ள குற்றத்தை எதிரி செய்யவில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது.

கேசின் சுருக்கம் :—இது 1916-ம் ஹூத்து ஸம்மேரி விசாரணைக்கேசு நெ. 2-ல் குடிவாடா ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டு W. H. H. சாட்டர்டன் செய்த உத்தரவை புனராலோசனை செய்யும்படி 1898-ம் வருஷத்திய 5-வது ஆக்ட்டாகிய கிரிமினல் புரோஸீஜர்கோடு 435, 439 வது பிரிவுகளின்படி தாக்கல் செய்யப்பட்டமனு.

அந்த முனிஸிபாலிடியின் எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நெல் அவிப்பதற்கு மனுதாருக்கு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த லைஸென்ஸில் கண்டகாலமானது 1915-ம் ஹூ ஏப்பிரல் மீ 30உ யோடு முடிந்துவிட்டது. அடுத்த வருஷத்துக்கு லைஸென்ஸ் வேணுமென்று கேட்டு 1915-ம் ஹூ மேமீ 4உ மனு செய்துகொண்டார். அந்த மனுவின் பேரில் லைஸென்ஸ் கொடுத்திருப்பதாகவாவது அல்லது இல்லை யென்று மறுதளித்தாவாவது 1915-ம் ஹூ செப்டம்பர்மீ 6உ வரை யாதொரு உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. அந்தத் தேதியில் அக்கிராஸனாதிபதி லைஸென்ஸ் கொடுக்க மறுதளித்து உத்தரவு பிறப்பித்துவிட்டார். அப்பால் மனுதார் ஷை உத்தரவின் பேரில் முனிஸிபல் ஸபையில் (Municipal Council) அப்பீல் செய்ததில் ஷை அப்பீல் தள்ளுபடி செய்துவிடப்பட்டது. லைஸென்ஸ் பெறுமல் ஷை யிடத்தில் 1915-ம் ஹூ ஸெப்டம்பர் மீ 2உ யில் நெல் அவித்ததற்காக 1884 ம் ஹூத்திய 4-வது ஆக்ட்டாகிய டிஸ்டிரிக்கட்டு முனிஸிபாலிடிஸ் ஆக்ட் 189-வது பிரிவுப்படி குற்றஞ்சாட்டப்பட்டு குடிவாடா சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டினால் ரூ. 100 அபராதம் விதிக்கப்பட்டது. ஸப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டினால் விதிக்கப்பட்ட இந்ததண்டனையின்பேரில் மனுதார் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்.

லாயர்கள் :—மனுதார் பக்கம் B. நரஸிம்மராவும், கவர்மெண்டார் பக்கம் ஆக்டிங் பப்ளிக் ப்ராஸிக்யூடர் E. R. ஆஸ்பர்ன்துரையும் ஆஜரானார்.

ஹைகோர்ட்டார் உத்தரவு—1884-ம் ஹூத்து 4-வது ஆக்ட்டு 189 வது பிரிவுப்படிக்குள்ள குற்றத்திற்காக மனுதாரை தண்டனை செய்யப்பட்டிருக்கிறது. அதாவது லைஸென்ஸ் வாங்காத இடத்தில் நெல் அவித்ததற்காக.

கேசின் சங்கதிகளைப்பற்றி தாவா செய்யப்படவில்லை. 1915-ம் ஹூ செப்டம்பர் மீ 29உ யன்று குற்றம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. மனுதாருடைய கடைசி லைஸென்ஸானது 1915 ஹூ ஏப்ரல்மீ 30உ யோடு முடிந்துவிட்டது. அவர் புது லைஸென்ஸுக்காக 1915-ம் ஹூ மேமீ 4உ யன்று மனு செய்துகொண்டார். ஆனால் மனுப்படி லைஸென்ஸ் கொடுத்தாவது அல்லது லைஸென்ஸ் கொடுக்க மறுதளித்தாவது 1915 ம் ஹூ செப்டம்பர் மீ 6உ வரை உத்தரவு கிடைக்கவில்லை. ஷை தேதியில் ஷை மனுவின் பேரில் லைஸென்ஸ் மறுதளிக்கப்பட்டுவிட்டது. அதன் பேரில் அப்பீல் செய்யப்பட்டு அப்பீலும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. ஆனால் அது முக்கியமான விஷயமல்ல. ஏனென்றால் 188-வது பிரிவு 5-வது உட்பிரிவின் பிரகாரம் லைஸென்ஸுக்காக மனு செய்த தேதி முதல் 30 தினங்களுக்குள் லைஸென்ஸ் மறுதளிக்கப்படாவிட்டால், எந்த இடத்திற்காக, லைஸென்ஸ் கேழ்க்கப்படுகிறதோ அந்த இடத்துக்கு அந்த வருஷத்துக்கு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டதாகவேயே நினைக்கவேண்டுமென்று மனுதார் பக்கம் வாதிக்கப்படுகிறது. 188 வது பிரிவு 5-வது உட்பிரிவில் உபயோகிக்கப்பட்டிருக்கிற சொல்தொகுதிகளைப் பார்க்கும்பொழுது, இந்த வாதம் நியாயமாகவேயேயிருக்கிறது. ஏனென்றால் 188 (5)வது பிரிவை 189 வது பிரிவில் லைஸென்ஸ் கொடுக்கமறுத்த ஸங்கதியுடன் சேர்த்துப்படிக்க வேண்டுமென்று கற்றறிந்த பப்ளிக் ப்ராஸிக்யூடர் சொல்லுவதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. அதை அப்படிப் படிக்கும் விஷயத்தில் 188-வது பிரிவ் 5 வது உட் பிரிவையே அநேகமாக எடுத்துவிடவேண்டியதாக விருக்கும். ஆகையால் நாங்கள் ஸப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவை ரத்துச் செய்து, எதிரியை விடுதலை செய்து, அபராதம் செலுத்தப்பட்டிருந்தால் அதை வாப்ஸ் கொடுக்கும்படி உத்தரவு செய்கிறோம்.

I. L. R. 40 M. 589. இ. லா. ரி. 40 ம. 589.

நெ. 48.

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் }

ஸிவில் மிஸலேனியஸ் மனுக்கள்

நெ. 1234, 1633 of 1913.

லெட்டெர்ஸ் பேடென்ட் அப்பீல்

நெ. 26, 28, of 1912.

ஐயம் வெங்கடசுப்பராயடு வகையறாக்கள்.

(26, 28, லெட்டெர்ஸ் பேடென்ட் அப்பீல்களில் (ரெஸ்பான்டெண்டுகள்)....................மனுதாரர்கள்

v.

ஸ்ரீ ராஜவெலுகோடி கோவிந்தகிருஷ்ண யச்செந்துருலுவாரு பகதூர் ஜெமீன்தார்காரு(மேற்படி லெடர்ஸ்பேடென்ட் அப்பீல்களில் அப்பீல் வாதிகள்)...........ரெஸ்பான்டேன்ட்

லாபாயிண்ட் :—லெடெர்ஸ் பேடென்ட் சட்டத்தின் 15 வது பிரிவின்படி கொண்டுவரப்பட்ட அப்பீல்களில் ஹைகோர்ட்டார் ரிவியூ (Review) யென்னும் புனர்விசாரணை மனுக்களை தாக்கல் செய்துக்கொண்டு விசாரணை செய்ய சட்டமுண்டா என்பது.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—லெட்டெர்ஸ் பேடென்ட் சட்டம் 15 வது பிரிவின்கீழ் கொண்டு வரப்பட்ட அப்பீல்களில் செய்யப்பட்ட தீர்மானங்களை புனர் விசாரணை (Review) செய்ய ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமுண்டென்று தீர்மானிக்கப்பட்டது.

எல்லூர் டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட் அசல் நெ. 432, 430 of 1908-ல் பிறப்பிக்கப்பட்ட டிக்ரியின் பேரில் கிருஷ்ணா சப் கோர்ட் (Ellore) அப்பீல் நெ. 218, 220 of 1910-ல் செய்யப்பட்ட டிக்ரிகளின் பேரில் மதராஸ் ஹைகோர்ட் இரண்டாவது அப்பீல் நெ. 1107, 1109 of 1911-ல் மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்டுர் ரஹீம் செய்த உத்தரவின் பேரில் கொண்டுவரப்பட்ட லெட்டெர்ஸ் பேடெண்ட் அப்பீல்களில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சனும், மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரையரும், ஸ்ரீராஜ கிருஷ்ணசெந்துருலு பகதூர் v. வெங்கட சுப்பராயுடு கேசுகளில் செய்த தீர்மானத்தை புனர் விசாரணை (Review) செய்யும் படிக்கு ஹைகோர்ட்டாருக்கு செய்துக்கொண்டமனுக்கள்.

கேசின் விவரம் தீர்மானத்தில் காணலாம் :—

லாயர்கள் :—மனுதாரர்களின் வக்கீல் Mr. பி. நாராயண மூர்த்திக்காக மிஸ்டர் எஸ். சுப்பிரமணி அய்யர், ரெஸ்பாண்டென்டின் வக்கீல் மிஸ்டர் C. R. இராமசந்திரையர்.

ஹைகோர்ட்டார் தீர்மானம்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி ஐயர் :—லெட்டெர்ஸ் பேடென்ட் சட்டத்தின் 15-வது பிரிவின்கீழ் கொண்டுவரப்பட்ட அப்பீல்களில் ஹைகோர்ட்டார் புனர் விசாரணை (Review) மனுதாக்கல் செய்துக் கொள்வதற்கு நியாயம் கிடையாதென்று Mr. சுப்பிரமணிய அய்யர் பிரதமத்தில் ஆக்ஷேபித்தார். இந்த பாயிண்டைப்பற்றி ஹாபீஜ் மஹமத் போவின் v. ஷியோபிரசாத் (1904) 1. அ. லா. ஜ. 509-ல், வாதிக்கப்பட்டிருந்தும் அதில்செய்திருக்கப்பட்ட தீர்மானத்திற்கு தகுந்த முஹாந்தரம் கூறப்படவில்லை. உபயக்கக்ஷிதாரர்களினுடைய வக்கீல்களால் மிக்க வற்புறுத்தி வாதிக்கப்பட்ட வாதங்களை பூராய் கேட்ட பின்பு இதில் வாதிக்கப்பட்டவாதம் செலாவணியுள்ளதல்லவென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். லெட்டர்ஸ் பேடென்ட் சட்டத்தின் 44-வது உட்பிரிவில்சொல்லியிருப்பது ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜனரல் அவர்களுடைய சட்ட நிருபண அதிகாரங்களுக்கு உட்பட்ட நிபந்தனைகளென்று அதில் கூறியிருக்கின்றது. தற்காலத்தில் Mr. சுப்பிரமணிய ஐயர் சொல்வதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம், அதன்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரல் அவர்களால் ஜாரி செய்யப்பட்ட சட்டங்களை லெட்டர்ஸ் பேடெண்ட் சட்டத்தில் சேர்த்து வாசிக்க கோர்ட்டார்களுக்கு இந்த நிபந்தனையின்படி அதிகாரங்கிடையாதென்றும்; அதில் சொல்லியிருக்கும் நிபந்தனை லெட்டர்ஸ் பேடென்ட் சட்டத்தில் யாதேனும் தவறுதலிருந்தால் அவ்விதமாய் விட்டு விடப்பட்டவைகளை லெட்டர்ஸ் பேடென்ட் சட்டத்தில் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரல் அவர்கள் சேர்பிணையான சட்ட நிருபணங்கள் செய்ய அவர் ஒருவருக்குத்தான் அதிகாரமுண்டென்று அந்த நிபந்தனையில் உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதமான அபிப்பிராயத்தை அனுசரித்து ஸிவில் புரொஸீஜர்கோட் (Act V of 1908)ன் 117-வது பிரிவின்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரல் அவர்கள் லெட்டர்ஸ் பேடென்ட் சட்டத்தில் புனர்விசாரணை (Review) செய்துக்கொள்வதற்கான நிபந்தனைகளை சேர்த்து சட்ட நிருபணம் செய்திருக்

கிருரென்று நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம். ஷை கோட் (Act V of 1908) 114-வது புனர் விசாரணையை (Review) ப்பற்றிய பிரிவு சிவில் புரொஸீஜர் கோடின் கீழ் செய்யப்பட்ட டிக்கிரிகளையும் அல்லது உத்தரவுகளையும் புனர் விசாரணை (Review) செய்வதற்காக நிபந்தனைகள் செய்யப் பட்டிருக்கிறதேயன்றி, அவைகள் இந்தக் கேசுக்கு சம்பந்தப்பட மாட்டாதென்று பிறகு வாதிக்கப்பட்டது. இந்த வாதம் சரியான வாதமென்று எங்கள் மனதிற்குத் தோன்றவில்லை. முதலில் லெட்டர்ஸ் பேடென்ட் சட்டத்தின் கீழ்விசாரிக்கப்படும் அப்பீல்களில் செய்யப்படும் டிக்கிரிகள் சிவில் புரொசீஜர் கோடின் கீழ்தான் செய்யப்படுகின்றன.

இரண்டாவது 114-வது பிரிவு B. உட்பிரிவின்படி உத்தரவுகளும் டிக்கிரிகளும் ஷை கோடின்படிதான் செய்யப்பட வேண்டுமென்பது அவசியமல்ல. மேலும் டிக்ரி அல்லது உத்தரவு என்னும் பதம் தீர்ப்பு என்றும் அர்த்தமாகும். கிருஷ்ணடாயல் v. இருஷடாலி (1915)22. கல். லா. ஜ. 525ப்பார்க்கவும். Mr. சுப்பிரமணிய ஐயர் என்பவர் லெட்டர்ஸ் பேடென்ட் சட்டத்தின் 15-வது பிரிவு சிவில் புரொசீஜர் கோடின்படி உட்படுத்தி வாசிக்கவேண்டியதென்பது அவசியமல்லவென்று அவர் கூறியவாதத்திற்கு ஆதாரமாய் சபாபதி செட்டி v. நாராயணசாமி செட்டி (1902) இ. லா. ரி. 25. ம. 555. எடுத்து காண்பிக்கின்ருர். அந்தகேசில் தீர்மானித்திருப்பது யாதென்று கவனிக்குமளவில் லெட்டர்ஸ் பேடென்ட் சட்டத்தின் 15-வது பிரிவின்கீழ் ஒரு ஜட்ஜியினுல் செய்யப்பட்ட ஒவ்வொரு தீர்மானத்தின் பேரிலும் அப்பீல் செய்துக்கொள்ள சர்வ அதிகாரங் கொடுத்திருப்பதினுல், சார்டர்ட் ஹைகோர்ட்டுகளுக்கு சம்பந்தப்பட்ட சிவில் புரொசீஜர் கோட் Act XIV of 882-ன் 540-வது பிரிவை வியாச்சியம் செய்யும் கக்ஷிக்காரன் சம்பந்தப்படுத்திக் கொள்ள அதிகார முண்டென்பதை ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரல் அவர்கள் நிவர்த்தி செய்து விடக் கருதினுரென்று அர்த்தம் செய்யலாகாது. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரல் அவர்கள் அப்பீல் செய்து பரிகாரமடைவதுடன் புனர் விசாரணை (Review) செய்தும் பரிகாரமடைய ஒரு கக்ஷிகாரனுக்கு அதிகார முண்டென்பதாக ஒரு நிபந்தனை செய்வதற்கு அவருக்கு அதிகார முண்டென்னும் விதி அல்லது கோட்பாடு இதனுல் ரத்தாய் விடவில்லை.

பாபாஜி பின்பட்லோஜி v. பாபாஜிபின் மஹாஜு (1891) இ. லா. ரி. 15. பம். 650; லாலா பியர்க்லர்ல் v. ஜெய் நாராயிங் சிங் (1895) இ. லா. ரி 22. கல். 419; நாஞபின் ஆபா v. ஷேகுபின் அந்து (1908) இ. லா. ரி. 32 பம். 337; இந்தகேசில் செய்யப்பட்டிருக்கும் தீர்மானங்களினுல் ஒருசட்டம் பூர்த்தியாய் செய்யப்பட்டிருக்கையில் அதனுடன் சிவில் புரொஸீஜர் கோடின் நிபந்தனைகளை சேர்க்க லாகாதென்று தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது. இது பிரஸ்தாப கேசிலுள்ள பாயண்டை பாதிக்காது.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் ஹைக்கோர்ட்டார் புனர்விசாரணை மனுக்கள் (Reviews) தாக்கல் செய்துக் கொண்டிருக்கிருர்களென்று Mr. இராமச்சந்திர அய்யர் என்பவர் ரிபோர்டுகளில் பிரசுரிக்கப்பட்ட இரண்டு கேசுகளையும் ரிபோர்ட்டில்வெளிவராத ஒரு தீர்மானத்தையும் ஆதாரமாக எங்களெதிரில் உதாகரித்துக் கூறினுர். லெட்டர்ஸ் பேடென்ட் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட அப்பீல்களில் ரிவியூ மனுக்கள் தாக்கல் செய்துக் கொள்வது ஹைகோர்ட்டில் ஏற்கனவே ஒரு பழக்கமாயிருக்கிறதென்பது புலப்படுகின்றது.

ரகி வீராகவலு v. வெங்கட நரஸிம்ஹ நாயுடு பஹதூர் (1914) இ. லா. ரி. 37. ம. 443 (P. C.)ல் அப்பீல்கள் தாக்கல்செய்துக்கொள்ளத் தகாதென்று சட்டத்தின் தாத்பரியப்படி மிக்க வற்புறுத்திச் சொல்லியிருந்திடினும் அவ்விஷயத்தைப் பற்றி கோர்ட்டாரின் வழக்கம் எவ்விதமாக நடந்தேறி வந்ததோ அதை விட்டு நடவடிக்கை நடத்துவது நியாயமல்லவென்று ஜுடிஷல் கமிடீயார் எடுத்துக்காண்பித்திருக்கின்ருர்கள். அப்பீல்களின் விஷயமாய் சட்டம் யாதோ அச்சட்டத்தையே புனர் விசாரணைகளுக்கு (Reviews) ஏற்கனவே சம்பந்தப்படுத்தி நடவடிக்கைகள் நடத்தலாம். ஆகையால் பிரதமத்தில் செய்த ஆக்ஷேபங்களை நாங்கள் ஆமோதிக்காமல் தள்ளுபடி செய்கின்ருேம்.

இந்த கேசுகளில் செய்யப்பட்டிருக்கும் புனர் விசாரணை மனுக்களின்படி தீர்மானிக்கநாங்கள் அபிப்பிராயப் படுவோமாகில் அப்பீல்களை விசாரித்து தீர்மானம் செய்த ஜட்ஜிகள் கேசுகளின் சாராம்சத்தைப் பற்றி தீர்மானித்த விஷயங்களை நாங்கள் ரத்து செய்ய வேண்டியதாகும். இவ்விதமான நடவடிக்கை நடத்த எங்களுக்கு மனமில்லை. ஆகையால் இந்த மனுக்கள் செலவுகளுடன் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

I. L. R. 40 M. 651. இ. லா. ரி. 40 ம. 651.

The Indian Law Gazette.

PART II.

இந்திய சட்ட கெஜெட்.

1906-ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II

பிரதிமாதமும் கடைசி வாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம். 10.] சென்னப்பட்டணம், 1917ஞு அக்டோபர்மீ [நெ. 10.

Reports of Cases.

கேஸ்களின் ரிப்போர்ட்டுகள்.

Madras High Court.

மதராஸ் ஹைகோர்ட்டு.

நெ. 49.

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி }

1912-ம் ஞுத்து 2-வது அப்பீல் நெ. 2601, 2118.

விஜயபூஷண அம்மாளும் மற்றும் 2-பேர்களும், (1. 2. 13-வது பிரதிவாதிகள்)—அப்பீல் வாதிகள்.

v.

C. N. எல்லப்ப முதலியாரும் பின்னும் ஒருவரும் (வாதிகள்)—அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாயிண்ட் :—ஒத்தி—ஒத்தி வாங்கினவனுடைய ஒததிபாத்தியதைகளை பிரித்து கோர்ட்டாருடைய டிக்கிரி—1882-ம்ஞுத்து 4-வது ஆக்ட்டாகிய ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட்டு 67-வது பிரிவு-(d) உள்பிரிவின் விஷயம்.

ஒத்தி வைத்தவருடைய சம்மதத்தின் பேரில், ஒத்திசொத்தை ஒத்திவாங்கினவர்கள் பலர் ஷை சொத்தில் தங்களுக்குள்ள பாத்தியதைகளை நீக்கிக்கொள்ளும் போது, ஒத்தி வாங்கினவர்கள் பலரில் ஒருவர் தன் பங்கு ஒத்திந்தொகையை பெற்றுக்கொள்ளும் பொருட்டாக வியாச்சியம் செய்யும் விஷயத்தில் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபர்ட்டி ஆக்ட்டின் 67-வது பிரிவு (டி) உள்பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிற நிபந்தனையானது, ஒத்திவைத்தவரைக் கட்டுப்படுத்திப் பிறப்பிவிக்கப்பட்ட கோர்ட்டு டிக்கிரியால் பிரிவினைசெய்யப்படும் கேசுக்கும் சம்பந்தப்படும்.

கேசின் சுருக்கம்.—பூந்தமல்லி டிஸ்டிரிக்ட்டு முன்ஸிப்கோர்ட்டு 1910-ம் ஞுத்து அசல் வியாச்சிய நெம்பர்கள் 693, 695 இவைகளில் டிஸ்டிரிக்ட்டு முன்ஸிப் K. கிருஷ்ணமாச்சாரியார் செய்த டிக்கிரிகளின்பேரில் செங்கல்பட்டு ஆக்டிங் டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜ் பி. ஏ. பூட்டி முன்பாக 1911-ம் ஞுத்து அப்பீல் நெ. 428, 499, இவைகள் செய்யப்பட்டு அவைகள் ஷை

டிஸ்டிரிக்டு ஜட்ஜி கொடுத்த டிக்கிரிகளின் பேரில் கொண்டுவரப்பட்ட, 2-வது அப்பீல்கள்தான் இவைகள்.

இந்தக்கேசின் சங்கதிகள் யெல்லாம் கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்ப்பில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஷை தீர்ப்பிலிருந்து அடியில்கண்ட சங்கதிகளை எடுத்து எழுதப்பட்டிருக்கிறது.

"இந்த வியாச்சியமானது ஒரு ஒத்தி தஸ்தாவேஜை மீட்டுக் கொள்ளும் பொருட்டாகக் கொண்டுவரப்பட்டு, கீழ்க்கோர்ட்டாரும் அதில் ஒரு பாகத்துக்கு டிக்கிரி செய்திருக்கிறார்."

"பிராதில் கண்ட ஒத்தி தஸ்தாவேஜை 1870-ம் ஹூ த்தில் 1-வது பிரதிவாதியினுடைய காலஞ்சென்றுபோன தகப்பனார் தன்னுடைய அவிபக்த குடும்பத்தை சேர்ந்தவர்களும் தன் மருமக்களுமான கந்தசாமி முதலி கிரிபானு முதலி இவர்களுக்கு எழுதிக் கொடுத்தார். செங்கல்பட்டு டிஸ்டிரிக்டு கோர்ட்டு 1886-ம் ஹூ த்திய அசல் வியாச்சிய நெ. 4-ல், இந்த ஒத்தித் தொகையில் மேல்கண்ட மருமக்களில் ஒவ்வொருவருக்கும் ஒத்தித்தொகையில் பாதி கிடைக்கவேண்டுமென்று தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கேசின் வாதி, இப்போது இறந்துபோய்விட்ட கந்தசாமி முதலியினுடைய அவிபக்த சகோதரன். பூந்தமல்லி டிஸ்டிரிக்டு முன்ஸீப் கோர்ட்டு 1894-ம் ஹூ த்து அசல் வியாச்சிய நெ. 456-ல் கிரிபானு முதலியினுடைய பிரதிநிதியால் கந்தசாமி முதலியினுடைய பிரதிநிதியை வியாச்சியத்தில் கக்ஷிக்காரராகச் சேர்க்காமலேயே ஒத்தித்தொகையில் பாதி தனக்குக் கிடைக்கவேண்டுமென்று வியாச்சியம் கொண்டுவரப்பட்டு அது தள்ளுபடி செய்துவிடப்பட்டது. டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட்டு 85-வது பிரிவின் நிபந்தனைகளை உத்தேசித்து அந்த வியாச்சியம் செல்லத்தகாத தாய்போய்விட்டது. இந்தக்கேசின் பிரதிவாதிகள், சொன்ன மற்ற வாதங்களுடன், தொகை செலுத்திவிட்டதாகவும் கக்ஷி சொன்னார்கள். டிஸ்டிரிக்கட்டு முன்ஸீப் செலுத்தப்பட்டு விட்டதாகச் சொல்லப்பட்ட சில தொகைகளை ஒப்புக்கொண்டு செலுத்தப்படவேண்டியதாகத் தான் தீர்மானித்த தொகையில் பாதியை கொடுக்கும்படி தீர்ப்பு செய்தார். தீர்ப்புக்கிடைக்காத தொகை கிடைக்க வேணுமாய், வாதி 1911-ம் ஹூ த்திய 474-ம் நெம்பர் அப்பீலையும், கொடுக்கும்படியாகத் தீர்ப்புச் செய்யப்பட்ட தொகைகள் விஷயமாய் 1. 2. பிரதிவாதிகள் 1911-ம் ஹூ த்திய அப்பீல் நெ. 449-ம் செய்திருக்கிறார்கள். இந்த இரண்டு அப்பீல்களையும் ஒன்றாக ஈயரிங் செய்யப்பட்டது".

" ஒத்தித் தொகையில் ஒரு பாகம் மாத்திரம் கிடைக்கவேண்டுமென்று வாதி வியாச்சியம் கொண்டு வரக் கூடாதென்றும் மற்றொரு பாகஸ்தரையும் சேர்த்துக் கொண்டு பூராத்தொகைக்கும் வியாச்சியம் தொடர்ந்திருக்க வேண்டுமென்றும் இரண்டாவது ஆக்ஷேபனை செய்யப்பட்டிருக்கிறது. அதல்லாமலும் தள்ளுபடி செய்யப்பட்டுப்போன 1894-ம் ஹூ த்திய அசல் வியாச்சிய நெம்பர் 456-ன் முடிவானது இந்த வியாச்சியம் கொண்டுவருவதற்கு ஒரு தடையாக யேர்ப்பட்டிருப்பதாகவும் தெரியப்படுத்தப்படுகிறது. அந்த வியாச்சியமானது சட்டப்படி செல்லத்தகாத ஒழுங்கு தப்பானதாக யிருந்தாலும், 1894-ம் ஹூ த்திய அசல் வியாச்சிய நெம்பர் 456 ஆனது ரெஸ்ஜுடிகேடா (Res Judicata) என்னும் தடையாக இந்த வியாச்சியத்தை பாதிக்குமென்பதற்கு சந்தேகமே இல்லை. 1894-ம் ஹூ த்தில் மற்றொரு பாகஸ்தரையும் கக்ஷிக்காரனைச்சேர்த்து பூராத்தொகைக்கும் வியாச்சியம் செய்து பிராதை சீர்திருத்தவாவது அல்லது, இது விஷயமாய் பிரத்தியேகமான வேறு வியாச்சியம் கொண்டுவர அனுமதி பெற்று அவ்விதம் செய்யவாவது செய்திருக்க வேண்டும். வாதியாவது அவர் வகுப்பைச் சேர்ந்த யாருமாவது அந்த வியாச்சியத்தில் கக்ஷிக்காரராகச் சேர்க்கப்படாததால், அந்த வியாச்சியத்தின் முடிவானது அவனைக் கட்டுப்படுத்தமாட்டாது. தனக்கு சம்பந்தமில்லாத வேறொருவர் செய்த குற்றத்துக்காக அவர் தன் பாத்தியதைகளை இழந்து விடமாட்டார். தொகையில் பாதி வசூல் செய்யப்படத்தக்கதில்லை யென்று ஒப்புக்கொண்டும், பூராத் தொகையையும் வசூல் செய்வதற்காக இருகிளையாரும் (அதாவது கந்தசாமி முதலி-கிரிபானு முதலி இவர்களைச் சேர்ந்தவர்கள்) இப்பொழுது வியாச்சியம் செய்திருக்க வேண்டுமா? இவ்விதமான பிரயோசனமற்ற விதமாக கிரிபானு வம்சத்தார் நடபடிக்கை நடத்துவார்கள் யென்று நான் எதிர்பார்க்க வில்லை. ஒத்தி பாத்தியதை பூராவையும் தீர்மானம் செய்யக்கூடிய விதமாக கிரிபானுவினுடைய இப்போதய பிரதிநிதியையும் 14-வது பிரதிவாதியின் ஸ்தானத்தில் கக்ஷிக்காரனை வாதி சேர்த்திருக்கிறார். பாதி பாகத்துக்காக சட்டப்படி வியாச்சியம் செய்யக்கூடாது என்று தாவா செய்து பரிசோதித்தம் ஸாரத்துக்கும் மூனுவுக்கும் நடந்து 1887-ம் ஹூ த்தில் இ. லா. ரி. 9. அ. 68, (Full Bench) கேசில் பிரசுரிக்கப்பட்டிருப்பதும், காளிதாஸ் கேவுல் தாஸுக்கும், நாது பகவானுக்கும் நடந்து 1883-ம் ஹூ த்தில் இ. ல. ரி. 7. பம். 217-ல், பிரசுரிக்கப்பட்டிருப்பதும், ராம் ஸேபக்குக்கும், ராம்லால் கொண்டுவுக்கும் நடந்து 1881-ம் ஹூ த்தில் இ. லா. ரி. 6 கல். 815-ல், பிரசுரிக்கப் பட்டிருப்பதுமான கேசுகளை ஆதாரமாக எடுத்துக் காட்டப்பட்டது. நான் இந்தத் தீர்ப்புகளை எல்லாம் படித்துப் பார்த்ததில் அவைகள் இந்தக் கேசுக்குப் பொருத்தமில்லை. ஒத்தி தஸ்தாவேசின் மூலமாக சட்டப்படி கிடைக்கக்கூடிய சகலபாத்தியதைகளையும் பெற்றுக்கொள்வதற்காக வாதி வியாச்சியம் செய்திருப்பதாகவும், இந்த வியாச்சியம் பைசல் செய்யப்பட்ட பிறகு பின்னும் ஒரு வியாச்சியம் செய்வதற்குரியயாதொரு விஷயமும் பைசல் செய்யப்படாமல் பாக்கி யிருக்கமாட்டாதென்றும் சொல்லுவதே மேல் கண்ட ஆக்ஷேபனைக்கு ஜவாப்பாகிவிடும். ஆகையால் இந்த விஷயத்துடன் ஸம்பந்தப்பட்ட அம்சங்களை மறுத்து பைசல் செய்வதில் டிஸ்டிரிக்டு முன்ஸீபுடன் சேர்ந்து கொள்ளுகிறேன்."

முடிவில் டிஸ்டிரிக்டு ஜட்ஜி வாதியின் அப்பீலைத் தள்ளுபடி செய்தும், வாதியால் கேழ்கப்பட்ட தொகையில் ரூ. 140 மட்டும் தள்ளியதின் மூலமாக பிரதிவாதிகளின் அப்பீலில் சில பாகத்தை ஒப்புக்கொண்டும் பைசல் செய்தார்.

1, 2, பிரதிவாதிகள் இந்த 2-வது அப்பீலைச் செய்தார்கள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்கு S. T. ஸ்ரீநிவாஸ கோபாலாச்சாரியாரும், அப்பீல் பிரதிவாதிகளுக்கு T. நரஸிம்ம அய்யங்காரும் ஆஜரானார்கள்.

ஹைகோர்ட்டுத் தீர்ப்பு:—இந்த 2-வது அப்பீலில் யாதொரு ஸாரமான விஷயங்களும் இல்லை. சில சட்ட சம்பந்தமான ஆக்ஷேபனைகள் சொல்லப்பட்டது. டிரான்ஸபர் ஆப் ப்ராபர்டி ஆக்டின் 67 வது பிரிவு (d) உள்பிரிவினால் ஒத்தி வைத்தவருடைய சம்மதத்தின் பேரில் ஒத்தி சொத்தில் தங்களுக்குள்ள பாத்தியதைகளை எல்லாம் கூட்டாக ஒத்தி வாங்கின மற்ற ஒத்தி வாங்கினவர்கள் நீங்கிக்கொண்டாலொழிய அப்பேர்ப்பட்ட ஒத்தி வாங்கினவர்கள் அநேகர்களில் சொற்ப பாத்தியதை மட்டும் உடைய ஒருவர் வியாச்சியம் கொண்டு வரத்தடைப்பட்டிருப்பதாகவும், இந்த வியாச்சியம் அப்பேர்ப்பட்ட வியாச்சியம் தானென்றும் தெரியப்படுத்திய ஒரு ஆக்ஷேபனைதான் வாதம் செய்யக்கூடிய ஆக்ஷேபனையாக யிருக்கிறது.

"அந்தப் பிரிவில் உபயோகப் படுத்தப்பட்டிருக்கும் திருப்திகரமில்லாத வாசக நடையினால் இப்பேர்ப்பட்டவாதம் செய்வதற்கு காரணம் ஏற்படுகிறதென்பதற்கு சந்தேகமில்லை. (ஒத்திவைத்தவரையும் கக்ஷிக்காரராகச் சேர்த்துக் கொண்டு வரப்பட்ட வியாச்சியத்தில் ஒத்தியை நிவர்த்தி செய்யும் முடிவைக் கொடுக்கிற டிக்கிரியைப் பிறப்பிப்பதற்கு ஒத்திவைத்தவர் சம்மதிக்காவிட்டாலுமே) ஒத்திவைத்தவரை கட்டுப்படுத்தக் கூடியவும் சட்டப்படி செல்லக்கூடியவுமான வேறு எந்த வகையிலுமாவது ஒத்தி பாத்தியதையை நிவர்த்தி செய்திருந்தாலும், ஒத்திபாத்தியதை நிவர்த்தி செய்யப்பட்டதை யிட்டு ஒத்தி வைத்தவர், ஒத்தித்தொகையின் ஒரு பாகத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சொத்தை ஏலம் போட்டு தொகை வேணுமென்று கொண்டு வரப்பட்ட வியாச்சியத்தில் எதிர்வாதம் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக நாங்கள் அபிப்பிராயப்படவில்லை. அதே சொத்தை ஒத்திவாங்கினவர்கள் பலர்கள் தங்களுடைய ஒத்தி பாத்தியதைகளை ஒத்திவைத்தவருடைய சம்மதமின்றியே நிவர்த்தி செய்து கொள்ளுகிற கேசுகளில் ஒத்தி வைத்தவர் பேரில் அநேக வியாச்சியங்கள் ஏற்படாமல் ஒத்திவைத்தவரைக் காப்பாற்றிக் கொடுப்பதுதான் சட்டத்தின் நோக்கம். ஒத்திபாத்தியதையை நிவர்த்தித்துப் பிறப்பிக்கப்படுகிற ஒரு கோர்ட்டுத் தீர்மானமானது ஒத்தி வைத்தவனைக் கட்டுப்படுத்துகிறதாக யிருந்தால் அது ஒத்தி பாத்தியதையை நீக்குவதற்கு ஒத்தி வைத்தவர் சம்மதம் கொடுத்திருந்தால் எப்படியோ அது போலவேயுள்ள முடிவை யுடையதாகவே யிருக்கும். பிரகிருத கேசில் ஒத்திவைத்தவனையும் கக்ஷிக்காரராகச் சேர்த்து வாதியுடன் கூட கூட்டாக ஒத்திவைத்தவரால் கொண்டுவரப்பட்ட வியாச்சியத்தில் ஒரு டிக்கிரி பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்த டிக்கிரியினால் ஒத்திவைத்தவரைக் கட்டுப்படுத்தக் கூடியவிதமாக ஒத்திபாத்தியதையை நிவர்த்தி செய்ததாக யேர்ப்பட்டது. அந்த டிக்கிரியானது தப்பானதாக யிருக்கக்கூடும். ஆனால் அப்பீல்செய்யப்படாததினால் உறுதி அடைந்துவிட்டதாய் விடுகிறது. ஒத்தி பாத்தியதையை நிவர்த்தித்துக் கொண்டுவிட்ட காரணத்தையிட்டு ஒத்தித்தொகையில் தனக்குள்ள பாகத்தைக் கேட்டுக்கொண்டுவரப்படுகிற வியாச்சியத்தில் ஒத்தி வைத்தவன் எதிர்வாதம் செய்ய முடியாது.

இந்த 2-வது அப்பீலை சிலவுடன் தள்ளுபடி செய்திருக்கிறது. இத்துடன் சேர்ந்த 1912-ம் ஹூ த்து 2118-ம் நெம்பர் 2-வது அப்பீலுக்கும் இதே முடிவு தான்.

நெம்பர் 2601. 2-வது அப்பீலின் ஆக்ஷேபனை மனுவிஷயமாகச் சொல்ல வேண்டியது யாதெனில் ஒத்தி சொத்தில் சிலதை ஏலம் போட்டுக் கிடைத்த தொகையை ஒத்திக்கடன் அசலுக்குச் செல்லு வைத்துக் கொள்ளும்படி டிஸ்டிரிக்டு ஜட்ஜி உத்தரவு செய்தது சரியானது தானென்பது தான். செய்து கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை உத்தேசித்து வட்டித் தொகையையே முன் செலுத்துவது வழக்கமாக யிருந்தாலும் முதல் தொகையே முன் வாங்கிய தொகையாகையால் அதை செலுத்தியது சரியான காரியம்தான். இந்தியன்காண்ட்ராக்ட் ஆக்ட்டு 60-வது பிரிவையும், 1882-ம் ஹூ த்து 4-வது ஆக்ட்டாகிய டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்டு 76-வது பிரிவு, (6) உள்பிரிவையும் பார்க்க. இதற்கு நேர் எதிரிடையாகச் சொல்லக்கூடிய ஸந்தர்ப்பங்களும் நேரிடக்கூடும். கற்றறிந்த டிஸ்டிரிக்டு ஜட்ஜி அப்பேர்ப்பட்ட ஸந்தர்ப்பங்கள் இந்தக் கேசில் இருந்ததாக அபிப்பிராயப்பட்டது சரியான விஷயம்தான். ஆக்ஷேபனை மனுவையும் சிலவுடன் தள்ளுபடி செய்திருக்கிறது.

I. L. R. 39. M. 17. இ. லா. ரி. 39 ம. 17.

கே. 50

APPELLATE CRIMINAL.

கிரிமினல் அப்பீல்

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

இராஜா—சக்ரவர்த்தி—அப்பீல் வாதி.

v.

மூசாவும் மற்றொருவனும்—எதிரிகள்.

1915-ம் ௵த்து அப்பீல் நெம்பர் 658, 659.

லாபாயின்ட்:—1889-ம் ௵த்து 3-வது ஆக்டாகிய சென்னப்பட்டணம் டவுன் நியூஸென்ஸ் ஆக்ட்டு 3-வது பிரிவு 10-வது உட்பிரிவு "சூதாடுவது"," பயிரங்கமான இடம்" என்பதின் அர்த்தம்.

இந்தக் கேசின் எதிரிகள் ஒரு ஹிந்து தேவாலயத்தின் மதில் சூழ்ந்ததும் ஆனால் வெம்பாப்பாக உள்ளதுமான இடத்தில் பந்தயத்துக்காக வளையம் வைத்து அதன் மூலமாய் சூதாடினார். 1889-ம் ௵த்து 3-வது ஆக்ட்டு 3-வது பிரிவு 10-வது உட்பிரிவுப்படி அந்த இடமானது பயிரங்கமான இடந்தானென்றும், ஷை விளையாட்டானது சூதுவிளையாட்டுத்தானென்றும், எதிரிகளைத் தண்டிப்பதில் அடியில்கண்ட விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

(a) "சூதாடுவது" என்பது, பொதுவாகவும், 3வது பிரிவு 10-வது உட்பிரிவிலும், "பந்தயத்துக்காக விளையாடுகிறது" என்று அர்த்தம்.

(b) "பயிரங்கமான இடமென்பது," பொது ஜனங்கள் எல்லாரும் அவர்களுக்கு பாத்தியதை யிருந்தாலுமே இல்லாவிட்டாலுமே, சாதாரணமாகப்போகும் இடம்—பயிரங்கமான இடம் ஆவதற்கு ஹிந்துக்களை போலொத்த ஒரு குறிப்பிட்ட வகுப்பு ஜனங்கள் போகக்கூடியதாக யிருப்பதே போதும்.

(c) பந்தயத்தின் மாதிரி சாதுரியத்தைப் பொறுத்ததாக இருந்தாலும் அதிர்ஷ்டத்தைப் பொறுத்ததாக யிருந்தாலும், அது இந்தப் பிரிவின்படி முக்கியமான விஷயமில்லை.

ஹரிசிங்குக்கும் ஜர்டு நந்தன் சிங்குக்கும் நடந்து 1904-ம் ௵த்தில் இ. லா. ரி. 31. கல். 542-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற தீர்மானத்தை பின்பற்றப்பட்டது.

கேசின் சுருக்கம்:—கோயம்புத்தூர் பெஞ்சு மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டு 1915-ம் ௵த்து ஸம்மேரி கேசுகள் நெம்பர் 957-958-ல் ஷை கோர்ட்டு அக்கிராஸனாதிபதி A. சாமவேல் பிள்ளை மேல்கண்ட எதிரிகளை விடுதலை செய்துவிட்டதின் பேரில் கி. பு. கோடு. (1898-ம் ௵த்து 5-வது ஆக்ட்டு) 417-வது பிரிவுப்படி செய்து கொள்ளப்பட்ட அப்பீல்கள்.

மோதிர விளையாட்டு என்ற ஒரு சூதாட்டத்துக்கு எதிரி முதலாளி. ஷை சூதாட்டத்தை கோயம்புத்தூரிலுள்ள ஒரு ஹிந்து தேவாலயத்தில் நடந்த உத்ஸவக்காலத்தில் ஒரு பயிரங்கமான இடத்தில் நடத்தினான். எதிரிபேரில் ப்ராஸிகியூஷன் (கிரிமினல் கேஸ்) நடத்தியதில், ஷை ஆட்டமானது சாதுரியத்தைப் பொறுத்ததேயல்லாமல் அதிர்ஷ்டத்தை பொறுத்ததல்லவென்றும், ஷை சூதாட்டம் ஆடியஇடமானது பயிரங்கமான இடமல்லவென்றும் அபிப்பிராயப்பட்டு கோயம்புத்தூர் பெஞ்சுமாஜிஸ்ட்ரேட்டுகள் சென்னப்பட்டணம் டவுன்ஸ் நியூஸென்ஸ் ஆக்ட்டு 3-வது பிரிவு 10-வது உட்பிரிவின்படி குற்றம் செய்ததாக கொண்டுபோன கேசிலிருந்து எதிரியை விடுதலை செய்து விட்டார்கள். அதன்பேரில் பப்ளிக் ப்ராசிகியூட்டர் இந்த அப்பீலை ஹைக்கோர்ட்டில் செய்தார்.

அந்த சூதாட்டமானது அடியில் கண்டபடி விளையாடப்பட்டது:—ஒரு தட்டையான அல்லது சாய்வான மேஜையின்பேரில் துணிவிரித்து, ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய், அரைக்கால் ரூபாய், இவைகள் கொஞ்சதூரம் விட்டுவிட்டு ஒட்டப்பட்டிருக்கின்றன. இந்த நாணயங்களில் எதையாவது அடைய விரும்புகிறவர்கள், அந்த ஆட்டத்தின் முதலாளியிடம் வளையம் ஒன்றுக்கு 3-பைஸா விதம் செலுத்தி வளையங்களை வாங்கி ஷைமேஜையிலிருந்து சுமார் மூன்று கெஜதூரத்துக்கப்பால் நின்று ஷை வளயத்தை எறிகிறதில் அந்த வளையம் எந்த நாணயத்தைச் சுற்றி விழுமோ அந்த நாணயம் வளையம் எறிகிறவனுடையதாகிவிடுகிறது.

லாயர்:—கவர்ன்மெண்டுபக்கம்பப்ளிக்ப்ராசிகியூட்டருக்காக C. ஸிட்னிஸ்மித் ஆஜரானார்.

ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்:—(1) இந்த விளையாட்டானது, அதிர்ஷ்டத்தைப் பொறுத்ததேயல்லாது, சாதுரியத்தைப் பொறுத்ததல்ல (2) அது பொது ஜனங்கள் வரக்கூடிய இடத்தில் ஆடப்பட்டது, என்ற இரண்டு விஷயங்களைப்பற்றி கீழ்கோர்ட்டார் திருப்தி அடையாமையால் 1889-ம் ௵த்து 3-வது ஆக்ட்டு 10-வது உட்பிரிவின்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றத்திலிருந்து எதிரியை விடுதலை செய்துவிட்டார்கள்.

2-வது விஷயத்தைப் பற்றி அது பயிரங்கமான இடமில்லையென்று கீழ் கோர்ட்டார் அபிப்பிராயப் பட்டதின் காரணம் ஷை கோவிலுக்கு ஹிந்துக்கள் மாத்திரம்தான் போகலாமென்பதும் இதர ஜாதிக்காரர்கள் போகவேண்டுமானால் ஷை கோவில் தர்மகர்த்தாவினுடைய அனுமதியின் பேரிலேயே போகவேண்டுமென்பதும்தான். சூதாடின இடமானது கேட்டு முதலியது யாதொன்று மில்லாத துறவையான இடமென்று சாக்ஷியத்தினால் யேர்ப்பட்டிருக்கிறது. அல்லாமலும், எந்தக் காலத்திலாவது தர்மகர்த்தா யாரையாவது கோவிலுக்கு வரக்கூடாதென்று விலக்கிவைத்ததற்கும் சாக்ஷியமில்லை. பயிரங்கமான இடமென்பதற்கு பிரவேசிக்கபாத்தியதை இருந்தாலுமே இல்லாவிட்டாலுமே, பொது ஜனங்களெல்லாம் பிரவேசிக்கிற இடமென்று 1884-ம் ௵த்தில் 14. லா. ரி. க்வீன் பெஞ்சு டிவிஷன்

63-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதே ஏற்பாட்டின்படி இந்தத் தேசத்தில் நடந்து வருகிறது. ஹரிஸிங்குக்கும்-ஜாடு நந்தன் ஸிங்குக்கும் நடந்து 1904-ம் ௵த்து இ. லா. ரி. 31. கல் 542-ல், பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசிலும் அதேவிதம். தான் பைசல் செய்யப்பட்டிருக்கிறது இந்தக் கேசின் பிரகாரம் இந்தவிஷயத்தில் கீழ் கோர்ட்டாருடைய தீர்மானம் அங்கிகரிக்கத் தக்கதில்லை.

கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பில் இந்த ஆட்ட விஷயமாய் விவரிக்கப்பட்ட சங்கதிகளை பப்ளிக் பிராசிகியூட்டராவது எதிரியாவது ஆக்ஷேபிக்கவில்லை. எதிரிபக்கம்யாரும் ஆஜராகவுமில்லை. இந்த விளையாட்டிலும் மற்ற எல்லா ஆட்டங்களைப் போலவேயே சாதுரியமாக விளையாடத் தெரியாதவர்களும் தற்செயலாய் ஜெயித்து விடுகிறது ஸம்பாவிதமாகையால் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பில் இந்த ஆட்டத்தில் ஜெயிப்பதானது சாதுரியத்தைப் பொறுத்தது என்று சொல்லப்பட்டிருக்கிற விஷயத்தை மட்டும் யோசிக்கவேண்டியதாக யிருக்கிறது. இப்பேர்ப்பட்ட தீர்மானமானது ஹரிசிங்குக்கும்-சக்கரவர்த்தி அவர்களுக்கும் நடந்து 1907-ம் ௵த்து க. லா. ஜ. 703-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில் எதிரிக்கு முற்றிலும் அனுகூலமான விஷயமாய் எடுத்து கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நடவடிக்கைகள் 1867-ம் ௵த்து பெங்கால் ஆக்ட்டு II-வது ஆக்டுப்படி யுள்ள நடபடிக்கை. அந்த ஆக்ட்டு 10—வது பிரிவில் சாதுரியத்தின் பேரில் விளையாட வேண்டிய ஆட்டங்களை செய்பக் கூடாத செய்கைகளிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ராமநியூவஸ்லாலுக்கும்-சக்கரவர்த்தி அவர்களுக்கும் நடந்து 1914-ம் ௵த்து 23. இ. கே. களில் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில் விவஹரிக்கப் பட்டிருக்கிற வித்தியாசங்களின் உறுதிப்பாட்டைப் பற்றி யோசிப்பது அனாவசியம். அதில்கண்ட சாதுரியமானது போட்டி போட்டு விளையாடுகிற உபயதாரப்புக்காரர்களையும் பொறுத்தது. ஆனால் பிரகிருதகேசில்விளையாடுகிறவர்கள் எதிரிக்கு விரோதமாய் தங்கள் சாதுரியத்தைக் காட்டுகிறார்கள். கீழ் கோர்ட்டுத் தீர்ப்பில் இந்த பாகத்துக்கு இருக்கும் உண்மையான ஆக்ஷேபனை என்னவென்றால் 1889-ம் ௵த்து 3-வது ஆக்டுப்படி குற்றமாவதற்கு விளையாடுகிற ஆட்டமானது சாதுரியத்தைப் பொறுத்ததா, அதிர்ஷ்டத்தைப் பொறுத்ததா வென்பது முக்கியமான விஷயமில்லை.

இந்தக் கேசு எந்தப் பிரிவுப்படி கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அந்தப் பிரிவாகிய 3-வது பிரிவு 10-வது உட்பிரிவுப்படி, பந்தய ஆட்டத்துக்கு வேண்டிய கருவிகள் ஸஹிதம் ஒரு பயிரங்கமான இடத்தில் விளையாடுகிறவர்கள் தண்டனைக்குள்ளாகவேண்டியது. ஆனால் பந்தய விளையாட்டு (Gaming) என்பதில் எதெல்லாம் சேர்ந்திருக்கிறது என்பது தான் நமக்கு இப்போது வேண்டிய விஷயம். அந்தச் சொல்லுக்கு, ஒரு ஆட்டத்தை விளையாடுகிறது என்ற சொல் இலக்கணத்திற்குறிய அர்த்தம்தான் கொடுக்க வேண்டுமென்று காண்பிக்கப் படவில்லை. இராஜாங்கத்திற் குறிய அகராதியில் (Imperial Dictionary) "அந்த விளையாட்டில் பந்தயமாக வைக்கப்பட்ட நாணயம் (ரூபாய்) அல்லது மற்றும் சாமான்களை ஜெயிக்கும் பொருட்டு, அததற்குஏற்பட்ட விதிகளின் பிரகாரம் சீட்டுகள் அல்லது மற்றும் கருவிகளை உபயோகிப்பது" என்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. 1901-ம் ௵த்திய மர்ரேஸ் அகராதியில் (Murray's Dictionary) 'பந்தயத்திற்காக விளையாடுகிறது' என்று கண்டிருக்கிறது. மேற்கண்டவைகளினால் வெறும் விளையாட்டா அல்லது சூதாட்டமா வென்று அறிவதற்கு பந்தயத்தொகை அல்லது மற்றும் சாமான் வைத்திருப்பது முக்கியமானதே யன்றி அந்தவிளையாட்டானது சாதுரியத்தைப் பொறுத்ததா அல்லது அதிருஷ்டத்தைப் பொறுத்ததா வென்பது முக்கியமான விஷயமில்லை. இதற்கு சட்ட சம்பந்தமான ஆதாரமுமிருக்கிறது. வார்ட்டன் என்பவரால் எழுதப்பட்ட சட்ட அகராதியில் (Wharton's Law Lexicon) "சூதாடுவது" என்பது ஷை ஆட்டத்தை விளையாடும் செய்கை. அது முக்கியமாய் அதிர்ஷ்டத்தைப் பொறுத்ததுஎன்று சொல்லப்பட்டிருப்பதில் ஸந்தேகமில்லை. முன் எடுத்துச் சொல்லப்பட்ட இந்து தேசத்துக் கேசுகளிலும், 36, 37-விக்டோரியா அத்தியாயம் 38, பிரிவு 3 ப்படி பைசல் செய்யப்பட்ட இங்கிலாண்டுகேசுகளிலும்,(உதாரணத்துக்கு ரெட்ஜ்வேக்கும், பாம்டேல் (Famdale) க்கும் நடந்து 1892 ம் ௵த்து 2 க்வீன்ஸ் பெஞ்சு டிவிஷன் 300 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசை வைத்துக் கொள்ளுவோம்) அதிர்ஷ்டவசமான ஸங்கதியை முக்கியமானதாக எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் அப்படிச் செய்யப்பட்டதற்குக் காரணம், அந்தச் சட்டங்களில்,' அதிர்ஷ்டவசத்தினால், அல்லது சாதுரியத்தினால் என்ற விபரங்கள் கண்டிருக்கின்றன. அல்லாமலும் 17, 18, விக்டோரியா 38-வது அத்தியாயம் 4-வது பிரிவில் பைசல்செய்யப்பட்டிருக்கிறபீல்டிங்குக்கும் (Feelding)டர்னருக்கும் நடந்து 1903ம் ௵த்து 1 கிங்க்ஸ் பெஞ்சு டிவிஷன் 866-ல், பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேசைப்போலொத்த இங்கிலீஷ் கேசுகளால் நமக்கு யாதொரு பிரயோசனமுமில்லை. ஏனென்றால் அவைகள் நியாயவிரோதமான சூதாட்டங்களைப்பற்றி சொல்லுகின்றன. ராமப்ரதாபநீமானிக்கும்-சக்கரவர்த்தி அவர்களுக்கும் நடந்து 1912-ம் ௵த்து இ. லா. ரி. 39. கல். 968-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிறதுமான இந்து தேசத்துக் கேசு ஒன்றிருக்கிறது. அந்தக் கேசில் சாதாரணமான "சூதாட்டம்" இன்னதென்பது வியவஹரிக்கப் பட்டிருக்கிறது. அதில் சூதாட்டம் என்பது, விளையாட்டினுடைய முடிவில், பந்தயம் கட்டியிருக்கிறவனுடைய ஜயம் அல்லது அபஜெயம் இதற்குத் தக்கபடி பந்தயத்தொகையை ஜெயிப்பது அல்லது இழப்பது என்ற தீர்மானத்துடன் விளையாடுவது தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதேவிதமாக ஹரிசிங்குக்கும் ஜாடுநந்தன் சிங்குக்கும் நடந்து 1904-ம் ௵த்து இ. லா. ரி. 31. கல. 542-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேசில், சூதாடுவதற்கும், பந்த

ய்ம் வைப்பதற்குமுள்ள வித்தியாஸங்களைப் பற்றி வியவஹரிக்கப் பட்டிருக்கிறது. சூதாட்டமென்பது அதிர்ஷ்ட வசம் தானென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஜஸ்டிஸ் ஸ்டிபென்ஸ் என்பவர், "சூதாட்டம்" என்பதை சாதாரணச்சீட்டு ஆட்டம், ஓட்டம், இவைகளை முடிவில் பந்தயம் வைக்கப்பட்டிருக்கிறதோ இல்லையோ அதற்குத்தக்கப்படிக்குள்ள வித்தியாஸங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார். மேல் கண்ட கேசுகளின் அபிப்பிராயங்களை நான் பின்பற்றுகிறேன்.

ஆட்டக் காரர்கள் ஜயித்த உடன், எதிரி அவர்களுக்கு ரூபாய் கொடுத்துவிடுவதும், அவர்கள் விளையாடுவதற்குமுன் தான் பந்தயம் கட்டவில்லையென்பதும், தான் தோற்றுப்போனால் அவர்களுக்குப் பந்தயத்தைக் கொடுத்துவிடுவதாக ஒப்பந்தம்செய்து அவர்களை விளையாடும்படிசெய்தபடியால், அவனுடைய ஜவாப்தாரியைக் குறைக்கமாட்டாது.

ஆகையால் எதிரி சூதாடினதாகவேயே தீர்மானித்து அவனை 1889-ம் ஆண்டு 3-வது ஆக்ட்டு 3-வது பிரிவு 10-வது உட்பிரிவுப்படி குற்றம் செய்ததாகத் தண்டிக்கிறேன். பப்ளிக் ப்ராஸிகியூடர் ஜாஸ்தியான தண்டனை விதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளாததினால் எதிரிக்கு ரூ. 1—0—0 அபராதம் விதித்திருக்கிறது. அதைச் செலுத்தத் தவறினால் ஒருநாள் வெறுங்காவலிலிருக்கவேணும்.

ஜஸ்டிஸ் ஸதாசிவய்யர்:—இப்பொழுது என்னுடையகற்றறிந்த சகோதரரால் சொல்லப்பட்ட தீர்ப்பை நான் முற்றிலும் ஒப்புக்கொண்டு, இந்தக்கேசில் வியவஹரிக்கப்பட்டிருக்கிற விஷயங்களைப் பற்றியும், அதிலும் முக்கியமாய் ஹிந்து தேவாலயம் இப்பேர்க்கொத்தது என்பதைபற்றியும் என் அபிப்பிராயத்தையும் சொல்லுகிறேன். 1889-ம் ஆண்டு 3-வது ஆக்ட் 3-வது பிரிவு 10-வது உட்பிரிவில், சீட்டாடுவது, பாச்சிகை உருட்டுவது, முதலியதைநாணயம் அல்லது சூதாடுவதற்குறிய இதுபோலொத்த மற்ற கருவிகளை வைத்துக்கொண்டு, ஒரு பயிரங்கமான தெரு, பாதை அல்லது எல்லா ஜனங்களும் நடமாடக்கூடிய இடங்களில், சூதாடுவதற்கு தண்டனைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

1864-ம் ஆண்டில் சீர்திருத்தம் செய்யப்பட்ட வெப்ஸ்டர் என்பவரால் எழுதப்பட்ட அகராதியில் (Webster's Dictionary) "சூதாட்டம்" (Gambling) என்பதற்கு மூன்று அர்த்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (1) ஏதும் விளையாட்டை விளையாடுவது, (2) பந்தயத்துக்காக விளையாடுவது; (3) அந்த விளையாட்டில்சீட்டுகள், பாச்சிகைமுதலியதுகளை, உபயோகித்து, பந்தயத்தைக் கெலிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் விளையாடுவது, பந்தயமாக வைக்கப்பட்டிருக்கிற பணம் அல்லது வேறுவஸ்துவை கெலிக்க வேண்டுமென்று விளையாடுவது; "சூதாடுவது" இந்த அர்த்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளில் முதலாவது அர்த்தத்தை எடுத்துக் கொள்ளும் விஷயத்தில் "சூதாடுவது" என்பதில் பந்தயம் இருக்கவேண்டியதே இல்லை. ஆனால் இங்கிலீஷ் பாஷைக்கு சொற்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கிற இடத்துக்கும், சந்தர்ப்பத்துக்கும் தக்கபடி அர்த்தம் கொடுக்கக்கூடியதாக யிருக்கிறது. மர்ரே என்பவரால் எழுதப்பட்ட அகராதிப்பிரகாரம், (Murray's Dictionary) "சூதாடுவது" என்கிற வார்த்தை (Gambling) வினைச்சொல்லாக உபயோகிக்கப் பட்டபோது சூதாட்டத்தின் முடிவில், கெலிக்கிற அல்லது தோற்கிற பந்தயத்தை அடக்கிக் கொண்டிருக்கிறது. ஆகையால் 1889-ம் ஆண்டு 3-வது ஆக்ட்டில் "சூதாட்டம்" என்ற வார்த்தையானது பந்தயத்துக்காக ஆடுகிற ஆட்ட மென்றே அபிப்பிராயப்படுகிறேன்.

"சூதாட்டம்" என்ற வார்த்தையும் அதை வினைச்சொல்லாக உபயோகப்படுத்தப்படும் பொழுதும், விளையாடுவதில் சாதுரியத்தைப் பார்க்கிலும் அதிர்ஷ்டத்தாலே கெலிக்கப்படுகிறதா வென்ற விஷயமும் தீர்மானிக்கப்பட வேண்டியதாக யிருக்கிறது. வினைச்சொல்லாக உபயோகிப்பதிலும் சாதுரியம், அதிர்ஷ்டவசம் இந்த விஷயங்கள் என்றுமே தோன்றமாட்டாது.

சக்கிரவர்த்தி அவர்களுக்கும், அகம்மதுகான் என்பவனுக்கும் நடந்த 1912-ம் ஆண்டு இ. லா. ரி. 34. அல. 96-ல், பிரசுரிக்கப்பட்டிருக்கிறவும் ஹரிலிங்குக்கும், சக்கிரவர்த்தி அவர்களுக்கும் நடந்த 1907-ம் ஆண்டு 6. கல். லா. ஜ. 708-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதுமான கேசுகளிலும் அதைப்போலொத்த மற்றக் கேசுகளிலும், சாதுரியத்தால் விளையாடப்படுகிற ஆட்டங்களை சட்டத்திலிருந்து விலக்கி எழுதப்பட்டிருக்கிற பாஷையைப் பொறுத்தே பைசல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், "சூதாடுதல்" என்ற வார்த்தையின் அர்த்தத்தைப்பற்றி உபயோகமாயுள்ள யாதொரு தகவலும், அவைகளினால் வெளியாகவில்லை.

பிரகிருத கேசில் சம்பந்தப்பட்ட ஆட்டமானது "வளைய ஆட்டமென்று" பெயர்கொண்டது. நான் மேலே சொல்லியிருக்கிற பிரகாரம், இந்த ஆட்டமானது, சாதுரியத்தை பொறுத்ததாக யிருந்தாலுமே, அதிர்ஷ்டத்தைப் பொறுத்ததாக யிருந்தாலுமே அதைப்பற்றி அவசியமில்லை. அதிர்ஷ்ட வசத்தால் கெலிக்கிற ஆட்டங்கள் கிடையாது. பாச்சிகை உருட்டுவதில் கூட அதிகநாளையப் பழக்கமிருந்தால், சாதுரியம் ஏற்பட்டுவிடும். இந்தக் கேசின் சாக்ஷியங்களைப் பார்வையிட்டதில், இந்தக்கேசில் ஸம்பந்தப்பட்ட ஆட்டத்துக்கு சாதுரியத்தைப் பார்க்கிலும் அதிர்ஷ்டமே ஜாஸ்தியாகவேண்டு மென்று நான் நினைக்கிறேன்.

இந்தச் சூதாட்டம் ஆடப்பட்டதாகச்சொல்லப்பட்ட இடம், பயிரங்கமானதா வென்று தீர்மானிக்கப்படவேண்டியதிருக்கிறது. "பயிரங்கமான இடம்" (Place of Public Resort) என்பது 1888-ம் ஆண்டு 3-வது ஆக்டாகிய சென்னப்பட்டணம் நகரம்போலீஸ் ஆக்ட்டி (Madras City Police Act) லும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. க்ரௌன் ப்ராஸிகியூட்டருக்கும் முனிசாமிக்கும் நடந்த 1910-ம் ஆண்டு இ. லா. ரி. 33 ம.-83-ல், பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசில், லைஸென்ஸ் பெற்ற சாராய்க்கடை பயிரங்கமான இடமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஜனங்கள் பிரவேசிக்ககூடியது துறவையான இடமானது, இந்தியன் பினல் கோடு159-வது பிரிவில் கண்டபிரகாரம் பயிரங்கமான இடம்தானென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஹரிலிங்குக்கும்-ஜாடு நந்தன் லிங்குக்கும் நடந்த 1904-ம் ஆண்டு இ. லா. ரி. 31. கல். 542-ல், பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசைப்பார்க்கவும். (1879) வயர் என்பவரால் எழுதப்பட்ட புஸ்தகம் 1-வது வாலியத்தில்68-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிற 1879-ம்ஆ ஆகஸ்ட்டு மாதம் 5-ம்தேதி போட்ட1140-ம் நெ.ஹைக்கோர்ட்டு ப்ரோஸீடிங்ஸில் ஹிந்துதேவாலயத்துக்குள் பிரவேசிக்கும்நடைபாதையைபயிரங்கமான இடமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கேசில் சம்பந்தப்பட்ட இடத்தை ஒரு ஹிந்து தேவாலயத்தின் சுற்றுச்சுவருக்குள் அடங்கிய இடத்தை சேர்ந்ததென்றும், தெருவைச் சேர்ந்ததில்லையென்றும் வைத்துக் கொள்வேன். அப்படியிருந்தாலும் மகமதியர்கள்மட்டும் பிரவேசித்து தொழக்கூடிய இடமாகிய பள்ளிவாசலை பயிரங்கமான ஆலயமென்று சொல்வது போல, மற்ற மதஸ்தர்கள் பிரவேசிக்கக்கூடாதென்று தடுக்கக்கூடியதாக யிருந்தாலும் இந்த இடத்தை பைரங்கமான இடமென்றே நினைக்கிறேன். ஒரு இடமானது பயிரங்கமான இடமாக வேண்டியதற்காக பொது ஜனங்களில் ஒவ்வொருவருக்கும் அதில் பிரவேசிக்கும் பாத்தியதை யிருக்க வேண்டியது அவசியமில்லை. ஹிந்து தேவாலயங்களில் அநேகத்தில், கீழ் ஜாதிக்காரர்கள் போகக்கூடாது. அந்தக் காரணத்தால், அவைகள் பயிரங்கமான இடங்கள் ஆகாமல், ஒருவருடைய சொந்த இடம் ஆய்விடமாட்டாது.

I. L. R. 40 M. 556, இ. லா. ரி. 40 ம. 556.

நெ. 51

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் / மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹான்னே }

1913-ம் ஆண்டு இரண்டாவது அப்பீல் நெ. 123.

மதார் ஸாய்புவும் மற்றொருவரும்

(பிரதிவாதிகள்)—அப்பீல் வாதிகள்.

v.

கர்தர் மொய்தீன். சாய்புவும் பின்னும் 6-பேர்களும் (1-முதல் 7-வரை வாதிகள்)—அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாயிண்ட்:—அவிபக்த சொத்து கூட்டுப் பங்காளிகள்—அவிபக்தசொத்தில் சிலபாகத்தை விலைக்கு வாங்குவது ஒரு அடமான தஸ்தாவேஜின் பேரில் ஷை சொத்தின் மற்றபாகத்தை அனுபவிப்பது-பிந்திய அனுபோகம்—1908-ம் ஆண்டிய 9-வது ஆகட்டாகிய கால நிர்ணயச்சட்டத்தின் 110, 115, 120-வது விஷயங்கள் (Article) இந்த விஷயத்தின் உபயோகம் இன்னதென்பது.

கால நிர்ணய ஆக்ட்டு 110, 115-வது பிரிவுகளினால் வெளிப்படையான அல்லது உள்ளரங்கமான ஒப்பந்த மிருப்பதாக வெளியாகிறது; கக்ஷிக்காரர்களுக்குள் அப்படிப்பட்ட ஒப்பந்தமாவது அல்லதுநிலஸ்வான்-குடியானவன்என்கிற ஸம்பந்தமாவது இல்லாவிட்டாலு மேகுடியானவனாகயிருந்து நிலத்தைஅனுபவியாவிட்டாலுமே ஆனால் உடன்கூட்டாளிகளாகயிருந்து நிலத்தை அனுபவிக்கிற கேசுகளில் ஒரு வீட்டின் ஒரு பாகத்தை அடையவும் 6-ஆண்டு வாடகைத்தொகையைப்பெற்றுக்கொள்ளவும் காலநிர்ணய ஆக்ட்டு 120-வது பிரிவுப்படி அமல் நடத்த வேணுமென்று ராபர்ட்டு வாட்ஸன் கம்பெனியாருக்கும், ராம்ச்சண்ட்டட்டுக்கும் நடந்த 1896-ம் ஆண்டு இ. லா. ரி. 23. கல். 790-ல், பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தை பார்வையிட்டு அனுஸரிக்கப் பட்டது.

கேள்வி:—அனுபோகத்தை சகித்துக் கொண்டிருக்கிறதினால் ஏற்படும் பாத்தியமானது ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபர்ட்டி ஆக்ட்டு ஊர்ஜிதத்துக்கு வந்த பிறகு அனுஸரிக்கப் பட்டுவர வேண்டுமா.

சுப்ரவதிராமய்யாவுக்கும், குண்டல் ராமண்ணாவுக்கும் நடந்த 1910-ம் ஆண்டு 1. ம. வீ. நோ. 145-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசை எடுத்துச் சொல்லப்பட்டது.

கேசின் சுருக்கம்:—ஈரோடு டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டு 1909-ம் ஸுத்திய அஸல் வியாச்சிய நெ. 1883-ல் ஆக்டிங் டிஸ்டிரிக்ட் முன்சீப் R. V. கிருஷ்ணன் செய்த டிக்கிரியின்பேரில் கோயம்புத்தூர் ஸபார்டினேட் கோர்ட் 1911-ம் ஸுத்து 105-ம் நெம்பர் அப்பீல் செய்யப்பட்டு ஷை அப்பீலில் ஸப்ஜட்ஜ் K. ஸ்ரீனிவாஸராவால் பிறப்பிவிக்கப்பட்ட டிக்கிரியின் பேரில் இந்த இரண்டாவது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தக்கேசின் சங்கதிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்கினுடைய தீர்ப்பினால்வெளியாகும்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக T. R. வெங்கட்ராம சாஸ்திரியாரும், 1. 2, 4, அப்பீல் பிரதிவாதிகளுக்காக கனம். Messrs. L. A. கோவிந்தராகவ அய்யரும், A. விசுவநாதஅய்யரும் ஆஜரானார்கள்.

ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பு:—இந்த வியாச்சியத்தில் ஸம்பந்தப்பட்ட வீட்டுக்கு வாதிகளும் பிரதிவாதிகளும் கூட்டுச் சொந்தக்காரர்கள். பிரதிவாதிகள் 1896-ம் ஸுத்தில் 1-முதல் 7-வரையுள்ள வாதிகளின் தகப்பனிடமிருந்து இந்த வீட்டில் பிரிவினை செய்யப்படாத ஓர் பாகத்தை வாங்கினார்கள். அதே வருஷத்தில் அதற்குக் கொஞ்ச காலத்துக்குப்பிறகு அதேவீட்டின் மற்றொரு பாகத்தை அவருக்கு 3-வருஷத்துக்கு அடமானம் செய்து தஸ்தாவேஜு எழுதிக்கொடுத்தார்கள். அந்த ஒத்தியானது 1899-ம் ஸுத்தில் திகைந்துபோய் விட்டது. அந்தக்காலம் முதல் வாதிகளுக்கு பின்னும் புதிதாக அடமான தஸ்தாவேஜு எழுதிக் கொடுக்காமலும் வாடகை செலுத்தாமலும் பூரா வீட்டையும் பிரதிவாதிகள் அனுபவித்து வந்தார்கள். ஷை வீட்டை பாகம் செய்து அதில் பாதியை தங்களுக்கு இறக்கிவிடவேணுமென்றும் முன்பாக்கி வாடகையும் வியாச்சியத் தெய்திக்குபின்னுள்ள வாடகையும் தங்களுக்குகிடைக்க வேண்டுமென்று வாதிகளுடைய வியாச்சியம். அவர்கள் வியாச்சியத்தின் பிரார்த்தனை பிரகாரமே வீட்டை பாகம் செய்து பாதியை அவர்கள் வசம் விடும்படிக்கும் வியாச்சியத் தெய்திக்கு முன் 6-வருஷ வாடகைத் தொகையை அவர்களுக்கு கொடுக்கும்படியாயும் காலநிர்ணயச்சட்டம் 120-வது ஆர்டிகலின்படி கீழ்கோர்ட்டுகள் இரண்டிலும் வாதிகளுக்கு அனுகூலமாக டிக்கிரி செய்யப்பட்டது. இந்த 2-வது அப்பீலில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதிக ளெல்லாம்கூடி 6-வருஷ வாடகைத்தொகையை கொடுக்கும்படி கீழ்கோர்ட்டுகள் 2-னும் தீர்ப்புச்செய்தது சரியானதா வென்பது தான். காலநிர்ணய ஆக்ட்டு 110, அல்லது, 115-வது விஷயம் (article) இவைகள் இரெண்டில் ஒன்றை உபயோகித்திருக்க வேண்டுமென்றும் வியாச்சியத்துக்குமுன் மூன்று வருஷத்துக்கு மேல்பட்டகாலத்துக்கு வாடகை கேழ்ப்பது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய் விட்டதாகவும் அப்பீல் வாதிகள் பக்கம் வாதிக்கப்பட்டது.

கீழ் கோர்ட்டார்கள் 120-வது விஷயத்தை உபயோகித்ததற்கு, ராபர்ட் வாட்ஸன் கம்பெனிக்கும், ராம்ச்சண்ட்டட்டுக்கும் நடந்து 1896-ம் ஸுத்து இ. லா. ரி 23 கல். 799-ல் பிரசுரிக்கப்பட்ட கேசின் தீர்மானத்தை ஆதாரமாக எடுத்துக் கொண்டார்கள். அந்தக்கேசின் சங்கதிக்கும் பிரகிருதகேசின் சங்கதிகளுக்கும் வித்தியாச மிருப்பதாக அப்பீல் வாதிகள் பக்கம் வாதிக்கப்படுகிறது. ஏனென்றால் அந்தக் கேசில் வெளியாகிற சங்கதிகளால் கால நிர்ணயச்சட்டம்110 அல்லது 115-வது விஷயத்தின் நிபந்தனைக்குள் வருமாறு கக்ஷிக்காரர்களுக்குள் யாதொரு ஒப்பந்தமும் செய்யப்படவில்லை. ஆனால் பிரகிருத கேசில் கக்ஷிக்காரர்களுக்குள் ஒரு அடமானமும் அந்த அடமானக் காலம் திகைந்த உடன் வாடகை செலுத்துவதாக உள்ளார்ந்தமான ஒப்பந்தமும் யேர்ப்பட்டிருந்தது. இந்தக்கேசில் பிரதிவாதிகள் நிலத்தை அனுபவிக்கும் குடிகளுடைய ஸ்தானத்திலிருப்பதாகவும், ஆகையால் 1896-ம் ஸு அடமான தஸ்தாவேஜில் குறிப்பிடப்பட்டிருக்கிற வாடகைத் தொகையைச் செலுத்தக்கடமைப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்ட வாதத்துக்கு அனுசரணையாக லீக்கும், டிக்ஸனுக்கும் நடந்த1884ம் ஸுத்து லா. ரி. 15 க்வீன்ஸ்பெஞ்சுடிவிஷன் 60-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தை ஆதாரமாக எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கேசில் காட்டன் L. J. லிண்ட்லே. J. இவர்களுடைய தீர்மானமானது மேலே சொல்லப்பட்ட கக்ஷிக்கு அனுசரணையாக யிருக்கிறது. அந்தக் கேசிலும் ஒரு வீட்டில் கூட்டுப் பங்காளியாக யிருந்த ஒருவன் மற்றும் கூட்டுப்பங்காளிகளிடமிருந்து வாங்கப்பட்ட அடமான பாத்தியதையைக் கொண்டு ஷை வீட்டை அனுபவித்து வந்தான். அப்படி அடமானம் வாங்கி யிருந்ததினாலேயே ஒத்திக் காலம் திகைந்து போய்விட்ட போதிலும், ஷை வீடு கூட்டாகப் பாத்தியப்பட்டிருந்த போதிலும் கூட்டுப்பங்காளியாகயிருந்து அடமானம் பெற்றவன் யேர்ப்பட்ட வாடகையைச் செலுத்தவேண்டும் என்று யேர்ப்பட்டது.

இந்தக் கேசிலும், மேலே சொல்லப்பட்ட சீமையில் நடந்த கேசு போலவேயே 1899 ம் ஸுத்தில் அடமானம் தீர்ந்துபோன காலம் முதல் சௌஜன்யத்தின் பேரில் பிரதிவாதிகள் ஷை வீட்டை அனுபவித்து வந்ததாக யேர்ப்படுகிறது. பிரதிவாதிகள் அடமானம் வாங்கினவர்களின் ஸ்தானத்தில் ஷை வீட்டை அனுபவித்து வந்ததாகக் காட்டக்கூடிய யாதொரு ஆதாரமும் கிடையாது. கேசின் சந்தர்ப்பங்களை யோசிக்கும்போது ஷை வீட்டின் உடன் சொந்தக்காரராகயிருக்கும் ஸ்தானத்தில் அனுபவித்திருக்கலாம். வாடகைத்தொகை யேதும் செலுத்தப்பட்டதாக வாதி சொல்லவில்லை. ஆனால் சுப்ரவெதி ராமய்யாவுக்கும் குண்டல ராமண்ணாவுக்கும் நடந்த 1910-ம் ஸுத்தில் 1. ம. வீ. நோ. 145-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேசில் எடுத்துச் சொல்லியிருக்கிறபடி, இந்த தேசத்தில் டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட்டு ஊர்ஜிதத்துக்கு வந்தபிறகு ஸௌஜன்யத்தின் பேரில் அனுபவம் செய்யும் வழக்கத்தை அனுசரித்து வரவேண்டுமா வென்பது சந்தேகமாக யிருக்கிறது.

இத்தியாதி காரணங்களால், இந்தக்கேசில் காலநிர்ணய ஆக்டின் 110, 115, அல்லது 120-வது விஷயத்தை (article) உபயோகிக்கவேண்டுமா வென்ற விஷயமானது கக்ஷிக்காரர்களுக்குள் 1899-ம் ஸுத்தில் அடமானம் திகைந்தபிறகு அந்த வீட்டை அனுபவிப்பது வெளிப்படையான ஒப்பந்தத்தின் பேரிலா அல்லது ஸ்தூலமான ஒப்பந்தத்தின் பேரிலாவென்ற கேள்விகளுக்குக்கிடைக்கும் ஜவாப்பை பொறுத்ததாகயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம். 110, 115, இந்த விஷயங்களினால் அப்பேர்ப்பட்ட ஒப்பந்தம் இருந்ததாகவேயே யேர்ப்படும். இந்த வியாச்சியமானது உண்மையாய் வாடகைக்காகவாவது அல்லது ஷைவீட்டை உபயோகப்படுத்தி அனுபவித்ததால் யேர்ப்பட்ட நஷ்டத்திற்காகவாவது கொண்டுவரப்பட்டதாக யிருந்தால், 110 அல்லது 115-வது விஷயமானது (article) பொருத்தமாக யிருக்கும். அப்படிக் கில்லாவிட்டால் 120-வது விஷயம் பொருந்தும்.

இந்த விஷயத்தில் அப்பீல்வாதிகள் ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட்டு 111, 116-வது பிரிவுகளின் நிபந்தனைகள் தங்களுக்கு அனுகூலமாக யிருப்பதாக வாதிக்கிறார்கள். 111-வது பிரிவுப்படி 1896-ம் ஸுத்தில் செய்யப்பட்ட அடமானமானது 1899-ம் ஸுத்தில் காலஹரணமாய் போய்விட்டதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதற்குப்பிறகு பிரதிவாதிகளிடமிருந்து வாதிகள் வாடகையை ஒப்புக்கொள்ளாததாலும், அல்லது அடமானம் வாங்கினவர்கள் ஸ்தானத்தில் பிரதிவாதிகள் ஷை நிலத்திலிருக்க வாதிகள் சம்மதிக்காதபடியாலும், ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட்டு 116-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபடி இந்த அடமானத்தைப் புதிப்பித்ததாகச் சொல்லமுடியாது இந்தக் காரணங்களினாலும், பிரதிவாதிகளும் பிரா நில்கண்ட வீட்டுக்கு கூட்டுப்பங்காளிகளாக யிருப்பதை யோசித்தும், ஷைசொத்தை அனுபவிக்கும் கக்ஷிக்காரர்களாக தங்களை நினைக்கப்படாதென்றும் இந்தக் கேசை 110 அல்லது 115-வது விஷயத்தின் நிபந்தனைக்குள் வரும்படி செய்யும்படியான விதமாக 1899-ம் ஸுத்துக்குப்பின் வீடு தங்களுக்கும் அப்பீல் வாதிகளுக்கும் நிலஸ்வான் குடிபானவன் என்கிற சம்பந்தம் இருந்திருப்பதில்லையென்று அப்பீல் பிரதிவாதிகள் சொல்லும் தாவாவில் அதிக அர்த்தம் அடங்கி யிருக்கிறது 1899-ம் ஸுத்துக்குப்பின் ஷை வீட்டை அனுபவித்தது அவர்களும் கூட்டுப் பாத்தியஸ்தர்களாக யிருக்கும் ஸ்தானத்தில் அனுபவித்ததாக வைத்துக் கொள்ளலாம். அந்த விதமான அபிப்பிராயத்தில் சங்கதியில் காண்பிவிக்கப்பட்ட வித்தியாசங்களிருந்த போதிலும் ராபர்ட் வாட்ஸன் கம்பெனிக்கும் ராமச்சண்ட் டட்டுக்கும் நடந்த 1896-ம் ஸுத்து இ. லா. ரி. 23. கல். 799-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற தீர்மானத்தில் கண்ட அபிப்பிராயத்தை இந்தக்கேசில் உபயோகித்தது சரியானதுதானென்று அபிப்பிராயப்படுகிறோம்.

கீழ்க்கோர்ட்டு டிக்கிரியை உறுதிசெய்து இந்த 2-வது அப்பீலை சிலவுடன் தள்ளுபடி செய்திருக்கிறோம்.

I. L. R. 39 M. 54. இ. லா. ரி. 39 ம 54.

நெ. 52

APPELLATE CRIMINAL.

கிரிமினல் அப்பீல்

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் }

1915-ம் ஸுத்து கிரிமினல் அப்பீல் நெ. 470.

க்ரௌன் ப்ராஸிகியூடர்—அப்பீல்வாதி,

v.

கோவிந்த ராஜலு—எதிரி

லாபாயிண்ட்.—1888-ம் ஸுத்து 3-வது ஆக்ட்டாகிய சென்னப்பட்டணம் நகரபோலீஸ் ஆக்ட் 75-வது பிரிவு—சகல ஜனங்களும் போகக்கூடிய பகிரங்கமான இடம் என்பதின் அர்த்தம், பட்டணத்துத் துறைமுகம் எல்லா ஜனங்களும் பிரவேசிக்கக்கூடிய இடமா—துறை முகத்தைச் சேர்ந்த இடத்தில் கலகாஸ்பதமான நடபடிக்கைகளைச் செய்தால் அது 75-வது பிரிவுப்படி குற்றமாகுமா—பகிரங்கமான இடம் என்பதின் அர்த்தம்—ஜனங்களுக்கு அங்கே போவதற்கு பாத்தியதை யிருக்க வேண்டியது அவசியமா 1905-ம் ஸுத்து 2-வது ஆக்ட்டாகிய மதராஸ் போர்ட் ட்ரஸ்டு ஆக்ட் 22-வ விதியின் அர்த்தம்.

சென்னப்பட்டணம் போலீஸ் ஆக்ட்டு 75-வது பிரிவின்படிக்கு சென்னப்பட்டணம் துறைமுகம் பொது ஜனங்கள் போக்குவரத்தாயுள்ள இடம்தான.

போர்ட் ட்ரஸ்ட் ஆக்ட்டு(Port Trust Act)ப்படி செய்யப்பட்டிருக்கிற விதிகளில் அந்த இடத்தில் யாதொரு வேலையுமில்லாமல் அல்லது துறைமுகத்திலிருக்கும் கப்பல்களில் யாதொரு அலுவலுமில்லாமலிருக்க, துறை முகத்தைச் சேர்ந்த இடத்துக்கு யாரும் உத்தரவில்லாமல் போவார்களேயாகில் அவர்களை பிராஸிகியூஷன் செய்யும்படி சொல்லப்பட்டிருந்தாலும் துறைமுகத்தைச் சேர்ந்த இடங்களிலெல்லாம்

கௌரவமுள்ளவர்கள் வழக்கமாயும் தாராளமாயும் போய்க் கொண்டிருந்தவர்களைப் போகவொட்டாமல் தடுப்பது அந்த விதிகளின் கருத்தல்ல

அந்த இடத்தில் பிரவேசிப்பதற்கு பொது ஜனங்களுக்கு சட்டப்படி பாத்தியதை யிருக்கவேண்டுமென்பதில்லை. போகிறதற்குப்பாத்தியமிருந்தாலுமே இல்லாவிட்டாலுமே ஜனங்கள் வழக்கமாய்ப் போய்க் கொண்டிருக்கும் இடம் பயிரங்கமான இடம் தான்.

மகாராணி அவர்களுக்கும், வாலர்ட்டுக்கும் நடந்த 1864-ம் ௵ 14-க்வீன்ஸ் பெஞ்சு டிவிஷன் 63-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேஸ்படி செய்யப்பட்டது.

கின்ஸ்டனுக்கும், ஆஷிக்கும் நடந்த 1899-ம் ௵ 1-க்வீன்ஸ் பெஞ்சு 245-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேஸையும் எடுத்துச் சொல்லப்பட்டது.

1915-ம் ௵ 6575-ம் நெ. காலெண்டர் கேசின் மேல்கண்ட எதிரியை, ஜியார்ஜ்டவுன் 3-வது ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் P. நாராயணமேனன் விடுதலை செய்துவிட்ட தீர்ப்பின் பேரில்1898-ம் ௵ 5-வது ஆக்ட்டாகிய, கிரிமினல் ப்ரொஸீஜர் கோடின் 417-வது பிரிவின்படி கொண்டு வரப்பட்டிருக்கிறது.

சென்னப்பட்டணம் துறைமுகத்தைச் சேர்ந்த இடத்தில் எதிரி, வாதிபக்கம் சாக்ஷியை தி டி, அடித்ததன் மூலமாக அவர்க்கு கெடுதலாக நடந்து கொண்டதர்க்காக 1888-ம் ௵ 3-வது ஆக்டாகிய சென்னப்பட்டனம் ஸிடிபோலீஸ் ஆக்ட்டு 75-வது பிரிவின்படி எதிரிபேரில் பிரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டில் பிராது செய்யப்பட்டது. செய்கை நடந்ததாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆனால் சென்னப்பட்டணம் துறைமுகமானது 1888-ம் ௵ 3-வது ஆக்டாகிய சென்னப்பட்டணம் ஸிடிபோலீஸ் ஆக்ட்டு 75-வது பிரிவில்சொல்லப்படுகிறபடி பொது ஜனங்கள் எல்லாரும் பிரவேசிக்கக் கூடிய பயிரங்கமான இடமாகுமா வென்ற விஷயம் தீர்மானிக்கப்பட வேண்டியதாக யிருக்கிறது. கற்றறிந்த ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டு ஷை இடம் பைரங்கமான இடம் ஆகமாட்டாதென்று தீர்மானித்து எதிரியை விடுதலை செய்துவிட்டார். கற்றறிந்த ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டு தன் தீர்ப்பில் அடியில் கண்டபடி சொல்லியிருக்கிறார் :—சென்னப்பட்டணம் துறைமுகமானது, ஒரு தெருவென்றாவது; எல்லாரும் சாதாரணமாகப் போகக்கூடிய பாதை என்றாவது, ஜனங்கள் எல்லாரும் வேடிக்கை பார்க்கப்போகும் இடமென்றாவது சொல்லப்படவில்லை. ஆனால், பயிரங்கமான இடமென்று மாத்திரம் சொல்லப்படுகிறது. இந்தத் துறைமுகமானது ஸந்தேகமில்லாமலே முன் அப்படித்தானிருந்தது. அதாவது எல்லா ஜனங்களும் அங்கே வழக்கமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அல்லது எல்லாரும் போகக்கூடிய இடமாகத்தானிருந்தது. ஜனங்கள் எல்லாரும் நிராக்ஷேபனையாய் காட்சி பார்க்கவோ அல்லது தேகசுகத்துக்காகவோ போய்க்கொண்டு வந்தார்கள். போர்ட் ட்ரஸ்டு விதிகளினால் சாதாரணமான ஜனங்கள் போகக்கூடாதென்று, ஜனங்கள் சம்பந்தப்பட்டமட்டில் அது மூடப்பட்டிருக்கிறது. அவ்விடத்திலுள்ள கப்பல்கள் எதிலாவது பிரயாணியாகவாவது அல்லது அங்கே போவதற்கு அனுமதிச் சீட்டு வைத்துக்கொண்டாவது இருந்தாலொழிய, அந்த இடத்தில் வேறு யாரும் இருந்தால் அவர்கள் பேரில் கேஸ் நடத்தப்படுகிறது. மேல்கண்ட விடுதலைத் தீர்ப்பின் பேரில் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

லாயர்கள்:—அப்பீல் வாதியாகிய கவர்ன்மெண்டார் பக்கத்தில்க்ரௌன் ப்ராஸிக்யூட்டர் J. C. ஆடாம் ஆஜரானார் ; எதிரி ஸ்வதாவிலாவது வக்கீல் மூலமாகவாவது ஆஜராகவில்லை.

அடியில்கண்ட தீர்ப்பு ஜஸ்டிஸ் எய்லிங்கால் சொல்லப்பட்டது,

தீர்ப்பு.

ஜஸ்டிஸ் எய்லிங்:—இந்தக்கேசின் எதிரி பேரில் பொது ஜனங்கள் பிரவேசிக்கக் கூடிய பயிரங்கமான இடமாகிய சென்னப்பட்டணம் துறைமுகத்தில் கலகாஸ்பதமாய் (கிரமந்தப்பி) நடந்து கொண்டதாக மதராஸ் ஸிடிபோலீஸ் ஆக்ட்டு 75-வது பிரிவுப்படி கேஸ் நடத்தப்பட்டது. சென்னப்பட்டணம் துறைமுகமானது எல்லா ஜனங்களும் பிரவேசிக்கக்கூடிய பயிரங்கமான இடம் அல்லவென்று சொல்லி எதிரியை விடுதலை செய்யப்பட்டிருக்கிறது.

எங்களுடைய அபிப்பிராயத்தில் ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டு, சட்டத்தை விசாலமாக அர்த்தப்படுத்திக் கொள்ளவில்லை. துறைமுகத்தில் நிற்கும் கப்பலிலாவது, அல்லது துறைமுகத்தைச் சேர்ந்த இடத்திலாவது யாதொரு அலுவலும் இல்லாமல் அங்கே போகிறவர்கள் பேரில் துராகிருதமாக பிரவேசித்ததர்க்காக கேசு நடத்தும்படி போர்ட் ட்ரஸ்ட்டு ஆக்ட்டுப்படி விதிகள் யேர்ப்படுத்தி யிருப்பது வாஸ்தவம் தான். இப்படி பிரவேசிக்கிறவர்களான கூலிக்காரர்களையும் பட்டணம் பார்க்கவந்தவர்களையும் தன் முன் விசாரணைக்குக் கொண்டுவந்திருப்பதாகவும் மாஜிஸ்ட்ரேட்டினுடைய தீர்ப்பினால் தெரியவருகிறது. 1912-ம் ௵ அக்டோபர்௴ 22உ போட்ட கவர்ன்மெண்டு உத்தரவு நெ. 341 (marine) ல் சீர்திருத்தப்பட்டிருக்கிற விதிகளின் நோக்கங்களும் முகாந்தரங்களும் இன்னதென்

யதைப்பற்றி சொல்லப்பட்டிருப்பதைப் பார்வையிடுவதினால், பொது ஜனங்கள் பிரவேசிக்கக்கூடாதென்று 22-வது விதியில் சொல்லப்பட்டிருந்தாலும் கௌரவமுள்ளவர்களைப் பிரவேசிக்கக் கூடாதென்று தடுக்கப்படவில்லை யென்பது வெளியாகும். அதில் ஆதீன கர்த்தர்கள் (Trustees) அடியில்கண்டபடி சொல்லியிருக்கிறார்கள் :—

“வேலை செய்யும் நேரங்களில் கௌரவ முள்ளவர்களையும் நமது இடத்துக்கு வரக்கூடாதென்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் தங்களுக்கு உள்ளே பிரவேசிக்க பாத்தியதை யிருக்கிறதாக அவர்கள் சொல்லக்கூடாது. முன் “வரக்கூடாதென்று” சொல்லியிருப்பதை இப்போது இவ்விதம் சொல்லியிருக்கிறோம்”

இவ்விதமாகவே ஷை விதிகள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. துறைமுகத்தைச் சேர்ந்த இடத்திலெல்லாம் கௌரவமுள்ளவர்கள் சாதாரணமாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஷை துறைமுகத்தில் வேலையுள்ளவர்களும் கப்பலில் வேலையுள்ளவர்களும் அப்படியே போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இத்தியாதி காரணங்களால் துறைமுகமும் அதைச்சேர்ந்த இடங்களும் பயிரங்கமான இடமென்றே எண்ணப்படவேண்டும். பயிரங்கமான இடம் ஆவதற்கு பொது ஜனங்களுக்கெல்லாம் பிரவேசிக்கும் பாத்தியதை வேண்டுமென்பதில்லை. மகாராணிக்கும் வெல்லார்டுக்கும் நடந்த 1884-ம் ௵ 14 க்வீன்ஸ் பெஞ்சு டிவிஷன் 63-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசைப்பார்க்க. ஜஸ்டிஸ் க்ரோவ் என்பவர் அடியில்கண்டபடி சொல்லியிருக்கிறார், “பாத்தியதையின்பேரிலோ பாத்தியதையில்லாமலோ பொதுஜனங்கள் போகிறஇடம் பயிரங்கமான இடம். கின்ஸ்டனுக்கும்,ஆஷிக்கும்நடந்த1899-ம் ௵ 1. க்வீன்ஸ் பெஞ்சு டிவிஷன் 245-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசைப்பார்க்க.

எதிரியை விடுதலைசெய்திருக்கிற தீர்ப்பை மாற்றி எதிரி சார்ஜ் செய்யப்பட்டிருக்கிற குற்றத்திர்க்காக எதிரி கோர்ட்டுக்கலையும் வரை வெறுங்காவலிலிருக்கும்படி தீர்ப்பு செய்கிறோம். இந்தக்கேசு நடத்தப்பட்டதினால் எதிரிக்கு அநேகம் அசௌகரியம் நேரிட்டிருப்பதனால் அவனுக்கு லேசான தண்டனை விதித்திருக்கிறோம்.

I. L. R. 39. M. 886. இ. லா. ரி. 39 ம. 886.

நெ. 53

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்

1913-ம் ௵ 294-ம் நெ. உத்தரவின் பேரில் அப்பீல்.

ஸ்ரீமத் கடாம்பி ஜகன்னாதாச்சார்யுலு அய்யவார்லு (வாதி)—அப்பீல் வாதி.

v.

பிடிக்கிட்டி குடும்பராயுடுவும் மற்றொருவனும் (பிரதிவாதிகள்)—அப்பீல் பிரதிவாதிகள்.

லாபாயிண்ட்:—ஸிவில் கோர்ட்டுகள்—அதிகார வரம்பைமீறுவது—ருஜுச்செய்யும் பொறுப்பு—இனும் ஜாரி—குடிவாரபாத்தியதையின் ஹக்கு ஸாதாரணமான ஸிவில் கோர்ட்டுகளுக்கு ஒரு கேசை விசாரிக்க அதிகாரமில்லையென்று கக்ஷி சொல்லுகிறவன் அப்படி கக்ஷி சொல்ல தனக்கு பாத்தியதை யிருப்பதாக ருஜுச் செய்யவேண்டும்.

இண்டெடி சின்ன நாகடுவுக்கும் பொட்டு கொஞ்சிக்கும் நடந்த 1910-ம் ௵ 1. ம. வீ. நோ. 639-ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதும், வீரபத்திரய்யாவுக்கும், கொண்டி வெங்கண்ணவுக்கும், நடந்த 1913-ம் ௵ 24. ம. லா. ஜ-வில் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதுமான கேசுகளின் தீர்மானங்களை அனுசரிக்கப்பட்டது.

இனும் ஜாரி செய்யப்பட்ட ஒரு இனும்தாருக்கு இனும் ஜாரி செய்யப்பட்ட காலத்தில் குடிவார பாத்தியதை கிடையாது என்ற யூகம் கிடையாது.

வெங்கட்ட சாஸ்துருலுவுக்கும், திவி ஸீதாராமுடுவுக்கும் நடந்த 1914-ம் ௵ 26. ம. லா. ஜ. 585-ல் பிரசுரிக்கப் பட்டதும், பொன்னுசாமிப் படையாச்சிக்கும் கருப்புடையானுக்கும் நடந்த1914-ம் ௵ 26. ம. லா. ஜ. 285-ல் பிரசுரிக்கப் பட்டிருப்பதுமான கேசுகளின் தீர்ப்புகளை பார்வையிட்டு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

கேசின் சுருக்கம் :—மசூலிப்பட்டணம் அடிஷனல் டிஸ்டிரிக்ட்டு முன்ஸீப்கோர்ட்டு 1910-ம் ௵ அசல் வியாச்சிய நெம்பர் 479-ல் டி. முன்ஸீப் S. நீலகண்டம் செய்த டிக்கிரியின் பேரில் மசூலிப்பட்டணம் டெம்பரரி ஸபார்டிநேட் ஜட்ஜ் கோர்ட்டு 1912-ம் ௵ அப்பீல் நெ. 172-ல் செய்யப்பட்டு அதில் ஸப்ஜட்ஜ G. கோதண்ட ராமான்ஜுலு செய்த டிக்கிரியின் பேரில் கொண்டுவரப்பட்ட அப்பீல்.

பிராதில் கண்ட நிலங்களிலிருந்து பிரதிவாதிகளை அப்புறப்படுத்த வேண்டுமென்றும் ஷை நிலங்களின் சென்ற கால வரும்படியும் வருங்கால வரும்படியும் தனக்கு கிடைக்க வேண்டுமென்றும் வாதியால் இந்த வியாச்சியம் கொண்டுவரப்பட்டது. பிரதிவாதிகள் தங்களுக்கு அனுபோக பாத்தியதை யிருப்பதாகவும் இதைப்பற்றி விசாரித்து பைஸல் செய்வதற்கு ஸிவில் கோர்ட்டாருக்கு அதிகாரம் கிடையாதென்றும் கக்ஷி சொன்னார்கள். வாதி ஒரு அக்கிரகாரம் தாரென்றும் ஷை நிலத்தில் அவருக்குக் குடிவாரப் பாத்தியமும் மேல் வாரப்பாத்தியமும் இருப்பதாகவும் தீர்மானித்து பிராதின் பிரார்த்தனைப்படி டிஸ்டிரிக்டு முன்ஸீபு டிக்ரி செய்துவிட்டார். அக்கிரகாரம் என்பது பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப் பற்றிய ஆக்டின் (Estates Land Act)3-வது பிரிவு (டி) உள்பிரிவுக்குள் அடங்கினதென்றும், பிரதிவாதிகளை ஷை நிலத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்காகவும், அவர்களிடமிருந்து தீர்வை வசூல் செய்வதற்காகவும், வாதியால் கொண்டுவரப்பட்ட வியாச்சியம் ஸிவில் கோர்ட்டாரால் பைசல் செய்யப்படத்தக்கதில்லை யென்றும் கீழ் அப்பீல் கோர்ட்டார் பைசல் செய்து, ஸரியான கோர்ட்டில் ஷை பிராதை தாக்கல் செய்யும்படியான உத்தரவுடன் ஷை பிராதை வாப்ஸ் செய்துவிடும்படி உத்தரவு செய்தார். அந்த உத்தரவின்பேரில் வாதி இந்த ஸிவில் ஸில்லரை அப்பீலை தாக்கல் செய்திருக்கிறார்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்கு P. நாகபூஷணமும் அப்பீல் பிரதிவாதிகளுக்கு P. ஸோமசுந்தரமும் ஆஜரானார்கள்.

ஹைக்கோர்ட்டு தீர்ப்பு:—ஒரு அக்கிரகாரம்தாராகிய வாதி பிரதிவாதிகளாகிய தன் குடிகளை ஷை நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தும் பொருட்டு ஷை கிராமமானது பூஸ்திதி (Estate) ஆகையால், ஷை வியாச்சியத்தை ஒரு ரிவினியூகோர்ட்டில் தாக்கல் செய்திருக்க வேண்டுமே யல்லது டிஸ்டிரிக்ட் முன்சீபு கோர்ட்டில் தாக்கல் செய்யக் கூடாதென்று கற்றறிந்த ஸபார்டினெட் ஜட்ஜி தீர்மானம் செய்திருக்கிறார். அடியில் கண்ட முகாந்தரங்கள் இந்த அப்பீல் ஈயரிங் செய்யும்பொழுது தெரிவிக்கப்பட்டது.

(1) இந்தகிராமமானது இன்னவகையான கிராமமென்று வாதி தான் ருஜு செய்யவேண்டுமென்று கீழ் கோர்ட்டார் சொன்னது பிசகு—(2) முக்கியமான சாக்ஷியங்களை யோசிக்கப்படவில்லை.

வாதி பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய ஆக்டின் 8-வது பிரிவு தனக்கு அனுகூலமாக இருப்பதாகத் தெரிவிக்கவில்லை. ஆகையால் நாம் தீர்மானிக்கவேண்டிய விஷயமெல்லாம் கூடி பிரஸ்தாப பூஸ்திதியானது 3-வது பிரிவு 2-வது உள்பிரிவு (டி)க்குள் அடங்கினதா இல்லையா வென்று மட்டும்தான். அதாவது (1) வாதிக்கு நிலத்தீர்வையை மட்டும் தான் இனமாக விடப்பட்டதா (2) இனமாக விட்டவருக்கு குடிவாரப் பாத்தியதை கிடையாதா—பிரதிவாதிகளை ஷை நிலத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்காக வியாச்சியம் கொண்டுவருகிற விஷயமாக வாதி ஷை பூஸ்திதியை இன்னவிதமாக அனுபவித்து வந்தார் என்று யோசிப்பதாகயிருந்தால்—கீழ் கோர்ட்டாரால் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிற ஆதாரங்கள் சரியானதாக யிருக்கும். அவருடைய பைசலும் அப்படியே யிருக்கும். ஆனால் பிரகிருத தாவாவானது ஷை வியாச்சியத்தை விசாரித்து பைசல்செய்ய ஸிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டா இல்லையா வென்பதாக யிருக்கிறது. இதுவிஷயமாகச் சொல்லவேண்டியது யாதெனில் அப்படி ஸிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்று வாதம்செய்கிற கக்ஷிக்காரர் அப்படி அதிகாரமில்லையென்பதை ருஜு செய்யவேண்டும். இதற்கு ஆதாரம் அடியில் கண்டவைகள்தான். அதாவது இண்டெடி சின்ன நாகுடுவுக்கும் பொட்டு கொஞ்சி வெங்கடசுப்பய்யாவுக்கும் நடந்து 1910-ம் ஷூத்து 1. ம. வீ. நோ. 639 ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசு. இது பிரகிருதகேசைப் போலவேயே எல்லா விஷயத்திலும் ஒத்திருக்கிறது. வீரபத்திரப்பாவுக்கும்—கொண்டி வெங்கண்ணாவுக்கும் நடந்து 1913-ம் ஷூத்து 24. ம. லா. ஜ. 659-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறகேசு இந்த விதியானது பொதுவான விஷயங்களை உத்தேசித்து வியக்தமாகச் செய்யப்பட்டிருக்கிறது. அந்த விதிக்கு விருத்தமாகச் செய்யவேண்டுமாகில் சரியானவும் தெளிவானதுமான முகாந்தரங்களிருக்க வேண்டும். மேலே சொல்லப்பட்ட 2-வது தீர்மானத்தில் சொல்லப்பட்டபடி கோர்ட்டின் அதிகார வரம்பைத் தீர்மானம் செய்யும் விஷயத்தில் அதே வியாச்சியத்தில் சம்பந்தப்பட்ட இரு கக்ஷிக்காரர்களில், ஷை விஷயத்தை ருஜுச் செய்யும் பாரம் யாரைச் சேர்ந்த தென்பதைப் பற்றியும் நிலஸ்வானுக்கு குடிகளை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தும் விஷயத்தைப்பற்றியும் பரஸ்பர விருத்தமாகச் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. சூரிய நாராயணராவுக்கும், பொட்டண்ணாவுக்கும் நடந்து 1914-ம் வருஷத்து, 26. ம. லா. ஜ. 99. ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசை பைசல் செய்த ஜட்ஜிகளில் ஒருவர் இந்த விஷயத்தை "மிகவும் நுட்பமான தென்றும் அதிக ஸமீப சம்பந்தமில்லாதது" என்றும் சொல்லியிருக்கிறார். மற்றொரு ஜட்ஜ் அது இன்னதென்று விவரிக்கவேண்டுவது அவசியம் யென்று நினைத்தார். அப்படிச்செய்வதில் மேலேசொல்லியபடி பொது விதியின் உறுதி யின்னதென்று ஒப்புக்கொண்டார் யென்று நான் தெரிகிறேன். ஆனால்கவர்ன்மெண்டாரால் விடப்பட்ட இனமானது நிலவரித்துகைமாத்திரம் தானென்று கோர்ட்டுகளில் ஒப்புக்கொள்ளும் சங்கதியானது வேறுவிதமாக உறுதியாகச் சொல்லுவதற்கு முகாந்தரம் இருந்தாலன்றி பிரதிவாதி பக்கம் அனுகூலம் செய்வதற்கும் போதுமான தென்றும் சொன்னார். இது அந்த ருஜுத்தான் என்றாவது அல்லது அந்தக் கிராமமானது இனம் தானென்று ஒப்புக்கொள்ளுதல்தான் என்றாவது அர்த்தப்படுமாகில், 3-வது பிரிவு (2) (d) உள்பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற நிபந்தனைகள் நிறைவேறிவிட்டதாகவேயே யேர்ப்படுகிறது. அதாவது இனமாக நிலத்தீர்வைதான் விடப்பட்டதென்ற கக்ஷியை ஒப்புக்கொள்ளலாமென்று ஏற்படுகிறது. இந்த அர்த்தமானது சரியானதென்பது ஸம்பாவிதம்தான். ஏனென்றால் அந்தக் கேசின் பைசலுக்கு வேண்டிய விஷயம் மேல்கண்ட சங்கதியாகவேயே யிருந்தது. அந்த கேசின் வாதி தனக்கு மேல் வாரமும் குடிவாரமும் இரண்டும் தனக்கு இனமாக விடப்பட்டதாக கக்ஷி சொன்னான். அல்லது குடிவாரப் பாத்தியம் பின்னால் தனக்கு கிடைத்ததாகச் சொன்னான். இந்த விஷயங்களை மட்டும்தான், வெங்கட சாஸ்துருலுவுக்கும், ஸீதாராமுடுவுக்கும் நடந்து 1914-ம் ஷூத்து 26. ம. லா. ஜ. 585-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தில் யோசிக்கப்பட்டது. பொன்னுசாமிப் படையாச்சிக்கும், கறுப்புடையானுக்கும் நடந்து 1914-ம் ஷூத்து 26. ம. லா. ஜ. 285-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசில் பின் சொல்லப்பட்ட விஷயம் யோசிக்கப்பட்டிருக்கிறது. முதல் சொல்லப்பட்ட விஷயமும் இனம் விடப்படுமுன் வாதிக்குள்ள குடிவாரப் பாத்தியமும் ஸந்தர்ப்பங்களினால் இல்லையென்று யேர்ப்பட்டுப் போய்விட்டதென்று ஜஸ்டிஸ் மில்லரின் ஜட்ஜமெண்டால் விளங்குகிறது. இந்தக் கேசுகளெல்லாம் பிரகிருத கேசிலிருந்து வித்தியாசப்படுகின்றன. ஏனென்றால் அந்தக் கேசுகளில் இனமாக எவ்வளவு விடப்பட்டது, அல்லது அந்த இனம் விடப்பட்டகாலத்தில் அந்த இனம் நிலம் இன்னாருக்குப் பாத்தியப்பட்டது என்ற விஷயத்தைப்பற்றி யில்லாமல், குடிவாரப் பாத்தியதையை வாதி பின்னீடு அடைந்தானா என்றவிஷயத்தைப்பற்றி மட்டும் தீர்மானிக்க வேண்டியதாக ஏற்பட்டது. இந்த விஷயத்தைப்பற்றி வாதி ஒப்புக்கொள்ளவே யில்லை. ஆனால் வாதிக்குப் பாத்தியப்பட்டதில்லை யென்று ருஜுச் செய்யவேண்டிய பாரம் பிரதிவாதியைச் சேர்ந்த தென்று மட்டும் சொல்லுகிறான்.

இதற்கு எதிரி தரப்பில் சொல்ல முயற்சிக்கப்பட்ட எதிர் வாதம் எல்லாம் கூடி, இந்த விஷயத்தை பிரதிவாதிக்கு அனுகூலமாகவேயே யோசிக்க வேண்டுமென்கிற சட்ட அனுமானத்தை (Presumption) கவனிக்க வேண்டுமென்பதுதான். ஆனால் அப்பேர்ப்பட்ட அனுமானத்தை இந்தக்கேசின் சங்கதிகளையும் சந்தர்ப்பங்களையும் உத்தேசித்து எப்படி உபயோகிக்கக்கூடும் என்பதற்குறிய ஆதாரங்கள் ஒன்றும் எடுத்துக்காட்டப்படவில்லை. இந்தக்கேசின் சங்கதிகளையும் சந்தர்ப்பங்களையும் யோசிக்குங்கால் அக்கிரகாரமென்றும்; இனம்விடப்பட்டதற்கும், இனமாக விடப்பட்ட நிலத்தை இனம் விடுவதற்குமுன் இனம் விட்டவர் எவ்வித பாத்தியம் கொண்டாடி அனுபவித்தார் என்பதற்கும் சம்பந்தம் யாதொன்று மிருப்பதாகத் தெரியவில்லை. கிராமத்தில் குடியிராத பிராமணர்களுக்கு குடிவார இனம் விட்டிருப்பது விஷயமாயும், அந்தத் தெய்தியில் அவர்களுக்கு குடிவாரப்பாத்தியதை யிருந்தது விஷயமாயும் ஊஹியாமலிருப்பதற்காகக் காட்டப்பட்டிருக்கிற காரணங்களை உறுதியானவைகளென்று நினைக்கிறதாகயிருந்தால், அதற்கு சொல்லக்கூடியமறு மொழியானது, பிரகிருத கேசில் இனம் பெற்றவராகிய வாதியின் பாட்டன், கிராமத்தில் குடியிருக்கவில்லை யென்ற விஷயமானது ருஜுப்படுத்தப்படவேண்டுமென்பதும், பிரதிவாதிகள் அதை ருஜுப்படுத்தி விட்டால், அதை வைத்து பைசல் செய்யலாம் என்பதும்தான், ஆனால், ஊஹித்துக் கொள்ளும்படி சொல்வதற்கு அனுசரணையாக யாதொரு ஆதாரமும் யிருக்கிறதாகத் தெரியவில்லை. ஆனால், வீரபத்திரப்பாவுக்கும், கொண்டி வெங்கண்ணாவுக்கும் நடந்து 1913-ம் ஷூத்து 24. ம. லா. ஜ. 659-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசை பைசல் செய்த கற்றறிந்த ஜட்ஜிகள், "அப்பேர்ப்பட்ட ஊஹத்தை அனுசரிப்பது நியாயமானது என்று சொல்வது லேசானது அல்ல" என்று சொல்லி யிருக்கிறார்கள். அப்படி ஊஹிப்படுவது சரியானதில்லை என்பதைப்பற்றி இண்டெடி சின்னநாகடுவுக்கும், பொட்டு கொஞ்சி வெங்கடசுப்பய்யாவுக்கும் நடந்து 1910-ம் ஷூத்து 1. ம. வீ. நோ. 639-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு தீர்மானங்களில் சொல்லப்பட்டிருக்கிற அபிப்பிராயத்தை விட்டு ஏன் விலகவேண்டுமென்பதற்கு போதுமான முகாந்தரம் தெரியப்படுத்தப்படவில்லை. இண்டெடி சின்ன நாகடுவுக்கும் பொட்டு கொஞ்சி வெங்கடசுப்பய்யாவுக்கும் நடந்து 1910-ம் ஷூத்து 1. ம. வீ. நோ. 639-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற முகாந்தரங்களை அனுசரித்தே இந்தத் தீர்மானத்தைச் செய்ய வேண்டியதிருக்கிறது. 3-வது பிரிவு (2) (d) உள்பிரிவுப்படி இனம் விடப்படுமுன் குடிவாரப் பாத்தியதையானது யாரைச் சேர்ந்ததாக யிருந்த தென்பதை ருஜுச் செய்யும் பொறுப்பை வாதிமேல் சாட்டிய விஷயத்தில் கீழ்கோர்ட்டார் பிசகி விட்டார்கள்.

ஆகையால் கீழ்கோர்ட்டாருடைய தீர்ப்பைமாற்ற வேண்டியது அவசியம். இந்த அப்பீலை மறுபடி பைசல் செய்து கொண்டு மேலே சொல்லப்பட்ட சங்கதிகளை அனுசரித்து பைசல் செய்யவேண்டும். அப்பீலின் முடிவின்பேரில் இந்தக் கோர்ட்டு செலவுகள் விஷயமாக பைசல் செய்யப்படும். இத்தியாதி காரணங்களால் முக்

கியமான சாக்ஷியத்தைக் கவனிக்கப்படவில்லை யென்று சொல்லப்பட்ட மற்றொரு வாதத்தைக் கவனிக்கவேண்டுவது அனுவசியம்.

I. L. R. 39 M. 21. இ. லா. ரி. 39. ம. 21.

நெ. 54

APPELLATE CRIMINAL.

கிரிமினல் அப்பீல்

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

1917–ஹுத்து கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 62

1917-ஹுத்து ரிபர்ட் கேஸ் நெ. 5

நட்டிச்செங்காடு—விஷயமாய் (எதிரி)

லாபாயிண்ட் :—1898-ம் ஹுத்து 5-வது ஆக்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடு 565-வது பிரிவின்படி எதிரிதான் குடியிருக்கும் இடத்தையும்—குடியிருக்கும் இடத்தை மாற்றினுல் அப்படி மாற்றப்பட்ட இடத்தையும் தெரிவிக்கும்படி உத்தரவு செய்யப்பட்டான். அப்படியிருந்தும் போகுமிடம் இன்னதென்று தெரிவிக்காமல் ஒரு இரவு போய்விட்டான். அவன் பேரில் ருஜுவான குற்றம் எல்லாம் கூடி இதுதான்.

தாத்காலிகமாக குடியிருக்கும் இடத்தை விட்டுப் போயிருந்ததானது குடியிருப்பை மாற்றினதாகமாட்டாதென்றும், 1860-ம் ஹுத்து 40-வது ஆக்டாகிய இந்தியன் பினல் கோடின் 176-வது பிவிரின்படி எதிரி குற்றம் செய்தவன் ஆகமாட்டான் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கேசின் சுருக்கம் :—புத்தூர் 2-வது கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டு 1916-ம்-ஹுத்திய காலெண்டர் கேஸ் நெ. 277-ன் விஷயமாய் சித்தூர் டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்ட்ரெட்டு H Z. ப்ரெய்ட்உட் துரை 1917-ம் ஹு ஜனவரி மீ 17உ போட்ட லெட்டர் மூலமாக 1898-ம் ஹுத்திய 5-வது ஆக்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடு 438-வது பிரிவின்படி, இந்தக் கேசானது ஹைக்கோர்ட்டாருடைய உத்தரவுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

லாயர்கள்:—எதிரிபக்கம் வக்கீல் யாரும் ஆஜராகவில்லை. கவர்ன்மெண்டார்பக்கத்தில் பப்ளிக்ப்ராஸிக்யூடர் E. R. ஆஸ்பர்ன் துரை ஆஜராஞர்.

ஹைக்கோர்ட்டு உத்தரவு:—இந்தக்கேசில் எதிரியைத் தண்டித்தது நியாயத்தப்பென்றும் தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென்பதுமான டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்ட்ரேட்டினுடைய அபிப்பிராயத்தில் நாங்கள் கலந்து கொள்ளுகிறோம். தனக்குவிரோதமாக கிரிமினல் புரொஸீஜர் கோடின் 565-வது பிரிவின்படி உத்தரவு பிறப்பிவிக்கப்பட்ட ஒருவன், விடுதலையான பிறகு தான் யிருக்கும் இடத்தையும் ஷை குடியிருக்கும் இடத்தை குடிமாற்றினுல் அதைப்பற்றியும், அவன் தெரிவிக்கவேட்டும் கடமைப் பட்டிருக்கிறான். அதே இடத்தில் அவன் குடியிருக்கும் வரையிலும், அவன் ஷை இடத்தைவிட்டு ஒன்று அல்லது இரண்டு நாள்களுக்கு வெளியே போயிருந்தால் அதைப்பற்றி தெரிவிக்க வேண்டியது அவசியம் இல்லை. ஆனுல் அதே இடத்தில் தான் குடியிருந்து வருகிறுனென்ற விஷயம் ருஜுவைப் பொருத்தது. ஆனுல் தன் ஜனங்களையும் (சம்ஸாரத்தையும்) தன் ஸாமான்களையும் தான் குடியிருந்தஇடத்திலேயே விட்டு வைத்திருந்தால் அதே இடத்தில்தான் அவன் குடியிருப்பதாக எண்ணவேண்டும்.

பிரகிருத கேசில், ருஜுவாயிருப்பதெல்லாங்கூடி அவனுடைய குடியிருப்பு இடமென்று போலீசாரால் எண்ணப்பட்டிருந்த இடத்திலிருந்து எதிரி ஒரு இராத்திரி வெளியே போயிருந்ததாகத்தான். குடியிருப்பு ஸ்தலத்தையே மாற்றிவிட்டதாக எண்ணுவதற்கு யாதொரு ருஜுவுமில்லை.

ஆகையால் தண்டனையை ரத்துசெய்து அபராதம் செலுத்தப்பட்டிருந்தால் அதை அவனுக்கு வாப்ஸ் கொடுக்கும்படிக்கு உத்தரவு செய்திருக்கிறோம்.

I. L. R. 40. M. 789. இ. லா. ரி. 40. ம. 789.

நெ. 55

APPELLATE CIVIL.

ஸிவில் அப்பீல்.

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங். மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹானனே.

1912-ம் ஹுத்திய 2-வது அப்பீல் நெ. 2026.

பெய்ஜநாத் லாலா (வாதி) அப்பீல்வாதி

v.

ராமதாஸ் (பிரதிவாதி) அப்பீல் பிரதிவாதி.

லாபாயிண்ட் :—1908-ம் ஹுத்திய 9-வது ஆக்டாகிய காலநிர்ணயச் சட்டத்தின் 62, 120-வது விஷயங்கள் (Articles) தப்பான தாமாஷாப்போட்டு தனக்குள்ள ஈவுத்தொகையைக் கொடுக்கச் சொன்னபடியால் கால நிர்ணயச் சட்டத்தின் 120-வது விஷயத்தின்படிக்கல்லாது 62-வது விஷயத்தின் பிரகாரம் தொகைக்காக வியாச்சியம், கால நிர்ணயச் சட்டத்தின் 14-வது பிரிவு தப்பான தாமாஷாப்போட்டு தொகை கொடுக்கும்படி செய்யப்பட்ட உத்தரவின் பேரில் புனராலோசனை மனு தாக்கல் செய்து அது விஷயமான நடபடிக்கைகள் நடத்துவதற்காக சென்ற காலத்தை 14-வது பிரிவுப்படி கழிக்கக்கூடாதென்பது.

ஸிவில் புரொஸீஜர் கோடு 73-வது பிரிவு (2) வது உள்பிரிவின்பிரகாரம் தாமாஷாப்படி தனக்குக்கிடைக்க வேண்டிய பாகத்தொகை விஷயமாய் பிறப்பிவிக்கப்பட்ட டிக்கிரி நிறைவேறுதல் நடபடிக்கையில் பிரதிவாதியல்ல—வாதிதான் ஷை தொகையைப் பெற்றுக்கொள்ள அர்ஹன் என்ற காரணத்தால் தொகைக்காகக் கொண்டுவரப்பட்ட வியர்ச்சியமானது 1908-ம் ஹுத்து 9-வது ஆக்டாகிய கால நிர்ணய ஆக்ட்டு 120-வது பிரிவுப்படிக்கல்ல. ஆனுல் 62-வது பிரிவுப்படித்தான் யென்றும் வியர்ச்சியமூலமானது பிரதிவாதிக்கு தொகை தப்பாக செலுத்தப்பட்ட தெய்தி முதல் ஆரம்பிவிக்கிறதென்றும் வெளியாகிறது.

அப்பேர்ப்பட்ட வியாச்சியம் தாக்கல் செய்வதற்கு காலாவதியைக் கணக்கிடுவதில் வாதிக்கு ஹைக்கோர்ட்டில் ரிவிஷன்மனு (புனராலோசனைமனு) தாக்கல் செய்வதற்கு பிடித்த காலம், அல்லது தப்பான தாமாஷாப்படி தொகை கொடுக்கும்படி பிறப்பிவிக்கப்பட்ட உத்தரவின்பேரில் ரிவிஷன்மனு தாக்கல் செய்து நடபடிக்கை நடத்துவதற்காகப் பிடித்த காலத்தை கழித்துக் கணக்கிட காலநிர்ணய ஆக்ட்டு 14-வது பிரிவுப்படி பாத்தியதை கிடையாது.

விஷ்ணுபிக்காஜீ பாட்டிக்கும், அச்சுத ஜகன்னுத காடிக்கும் நடந்த 1891-ம் ஹுத்து இ. லா. ரி. 15. பம் 438-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசின் தீர்மானம் அனுஸரிக்கப்பட்டது.

ராமசாமி செட்டிக்கும், ஹரிகிருஷ்ண செட்டியாருக்கும் நடந்த 1911-ம் ஹுத்து 21. ம. லா. ஜ. 705-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தை அனுஸரிக்கவில்லை.

கேசின் சுருக்கம்:—இது திருப்பதி டிஸ்டிரிக்ட்டு முன்சிபுக்கோர்ட்டு 1910-ம் ஹுத்திய அஸல் வியாச்சிய நெ. 402-ல் டிஸ்டிரிக்ட்டு முன்சிபு P. அய்யாசுவாமி முதலியார் செய்த டிக்கிரியின் பேரில் வட ஆர்க்காடு டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டு 1911-ம் ஹுத்து 255-ம் நெம்பர் அப்பீல்செய்யப்பட்டு அதில் டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜ் L. G. மூர் செய்த டிக்கிரியின் பேரில் கொண்டுவரப்பட்ட 2-வது அப்பீல்.

இந்தக் கேசின் சங்கதிகள் கேசின் தீர்ப்பில் வெளியாகும்.

லாயர்கள் :—வி. வி. அனந்தகிருஷ்ணய்யர் அப்பீல் வாதிக்கும், கனம் மிஸ்டர். L. A. கோவிந்தராகவய்யர் அப்பீல் பிரதிவாதிக்கும் ஆஜராஞர்கள்.

ஹைக்கோர்ட்டு தீர்ப்பு :—இந்த 2-வது அப்பீலில் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயங்கள் அடியில் கண்டவைகள் தான். (1) இந்தக் கேசின் சங்கதிகளை உத்தேசித்து காலநிர்ணய ஆக்டின் நமூனுவில் கண்ட 120-வது விஷயம் அல்ல, 62-வது விஷயம்தான் இந்தக் கேசுக்குப் பொருந்துமென்று கீழ் கோர்ட்டார்கள் பைசல் செய்தது சரியானதா? (2) 62-வது விஷயம் (article) பொருந்தினுலும் காலநிர்ணய ஆக்ட்டு 14-வது பிரிவுப்படி தனக்குக் கழித்துக்கொள்ள பாத்தியதை யுண்டென்று வாதி சொல்லுகிறபடி பார்த்தால் பிராது காலாவதி தோஷத்துக்கு உள்பட்டுப் போகவில்லையா? 2-வது பாயிண்டை அப்பீலில் சொல்லும்படியான விதமாக பிராதை சீர்திருத்தக் கீழ்கோர்ட்டார் இடம் கொடுத்திருக்கவேண்டுமா?

இப்போது அப்பீல் வாதியாக நம்முடைய முன் வந்திருக்கிற வாதி இந்த அப்பீலுக்குக் காரணமான வியாச்சியத்தை ஸிவில் புரொஸீஜர் கோடின் 73-வது பிரிவுப்படி செய்தார். இந்த வியாச்சியம் செய்ததற்கு காரணம் அடியில் கண்ட விஷயம்தான். வாதியும் பிரதிவாதியுமாக ஒரு மூன்றுவது மனுஷன் பேரில் டிக்கிரி பெற்று அவன் கோர்ட்டில் தொகை கட்டி யிருந்தான். ஷை தொகையை பிரதிவாதிக்கு விரோதமாக தாமாஷாப்படி தனக்குக் கொடுக்கும்படி உத்தரவு செய்யவேண்டுமென்று செய்துகொண்ட மனுவை டிஸ்டிரிக்டு ஜட்ஜ 1905-ம்ஹு அக்டோபர்மீ 18உ தள்ளுபடி செய்துவிட்டார். பிரதிவாதி 1905–ம்ஹு டிஸம்பர்மீ 21உ யன்று கோர்ட்டிலிருந்து தொகையைப் பெற்றுக்கொண்டார். டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜியினுடைய உத்தரவை ரத்துசெய்யும் பொருட்டாக 1905-ம் ஹு டிஸம்பர்மீ 21உ யன்று வாதி ரிவிஷன் மனுவை ஹைக்கோர்ட்டில் தாக்கல் செய்தார். அந்த மனுவும் 1906-ம் ஹு டிஸம்பர்மீ 12உ தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த வியாச்சியம் 1909-ம் ஹு டிஸம்பர்மீ 11உ தாக்கல் செய்யப்பட்டது. இந்தக் கேசுக்கு 120-வது விஷயம் ஒவ்விறதாக யிருந்தால், எப்படிப் பார்த்த போதிலும் இந்தக்கேசானது சரியான காலத்தில் தாக்கல் செய்யப்பட்டதாகும். ஆனுல் 62–வது விஷயத்தை உபயோகிக்கிறதாக யிருந்தால் காலநிர்ணயச்சட்டத்தின் 14-வது பிரிவுப்படி அதிகமாக யேர்ப்படுகிற காலத்தைக் கழித்துக்கொண்டு கணக்கிட தனக்கு பாத்திய மிருக்கிறதென்றுகாட்டினுலொழிய பிராது காலாவதியால் பாதிக்கப்படும். கால நிர்ணய ஆக்ட்டில் வேறு விஷயங்கள் ஒன்றும்பொருந்தாமல் போனுல்மட்டும்தான், 120-வது விஷயத்தை (article) உபயோகிக்கலாம். 62-வது விஷயம் தான் பொருந்துமென்று சொல்லும் அபிப்பிராயத்துக்குப் பொருத்தமாக விஷ்ணுபிக்காஜீ பாட்டிக்கும், அச்சுதஜகன்னுத காட்டிக்கும் நடந்த 1891-ம் ஹுத்து இ. லா. ரி. 15. பம். 438–ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதும், ஷங்கர்ஸ்ருப்புக்கும், மேஜோமாலுக்கும் நடந்த 1901-ம் ஹுத்து இ. லா. ரி. 23. அல. 313-ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிற கேசு விஷயமாக 322–ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருப்பதும், மகம்மது வஹிப்புக்

கும், மஹம்மது ஹமீருக்கும் நடந்த 1905-ஹுத்து இ. லா. ரி. 32.கல் 527சம்பந்தமாய்531-ம்பக்கத்தில்சொல்லப்பட்டிருப்பதும் ஷண்முகம் பிள்ளைக்கும் மைனர்கோவிந்தசாமிக்கும் நடந்த 1907-ம் ஹுத்து இ. லா. ரி. 30 ம.459-ல் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதுமான கேசுகளை இந்தக் கோர்ட்டிலும், கீழ்க் கோர்ட்டிலும் ஆதாரமாக எடுத்துக் காட்டப்பட்டது. இவைகளில் முதலாவது சொல்லப்பட்டகேசு இந்த விஷயத்துக்கு மிகவும் பொருந்திய ஆதாரம். இப்போதைய ஸீவில்புரொஸீஜர் கோடின் 73-வது பிரிவுக்குச் சரியான 1882-ம் ஹுத்து ஸீவில் புரொஸீஜர் கோடின் 295-வது பிரிவின்படி அந்தக்கேசில் வியாச்சியம்கொண்டுவரப்பட்டது. அப்பேர்ப்பட்ட வியாச்சியமானது 62-வது விஷயத்தின்கீழ் (article) வருமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மோஸெஸுக்கும் மக்பர்லானுக்கும் நடந்த கேசின் தீர்ப்பை, வாதியின் உபயோகத்துக்காகவேயேவாங்கப்பட்ட தொகைக்காக வியாச்சியம் கொண்டுவரப்பட்டதற்கு ஆதாரமாகக் காட்டப்பட்டிருக்கிறது. விஷ்ணு பிக்காஜி பாட்கிக்கும் அச்சுதஜநார்தந காடிக்கும் நடந்த 1891-ம் ஹுத்து இ. லா. ரி. 15. பம். 438-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்தை; 295-வது பிரிவுப்படி கொண்டுவரப்படும் வியாச்சியமானது, அந்தப்பிரிவின்படி செய்யப்படும் உத்தரவை ரத்துச்செய்வதற்காகச் செய்யப்படும் வியாச்சியமா வென்ற விஷயத்தை பைசல்செய்வதற்காக பிரிவிகௌன்ஸிலில் ஒப்புக்கொள்ளப்பட்டதும் ஷங்கர்ஸரூப்புக்கும் மேஜோமாலுக்கும் நடந்த 1901-ம் ஹுத்து இ. லா. ரி. 23. அல, 313-ல் பிரசுரம்செய்யப்பட்டிருக்கிற கேசு விஷயமாய் 322-ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கும் அபிப்பிராயத்தை ஆதாரமாக எடுத்துக் கூறப்பட்டது அதில் அப்பேர்ப்பட்ட வியாச்சியம் இல்லையென்றும் ஆகையால் கால நிர்ணய ஆக்ட்டின் 13-வது விஷயம் (article) பொருந்தாது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அந்த விஷயத்துக்காக மட்டும் தான் அந்தக் கேசு எடுத்துக் காட்டப்பட்டது. அந்தக்கேசின் சங்கதிகளுக்கு அந்த விஷயத்தை பைசல் செய்வதே போதுமானது இந்தக் கேசுக்கு பொருத்தமாயுள்ளது 62-வது விஷயமா (article) அல்லது 120-வது விஷயமா வென்பதைப்பற்றி கனம் ஜட்ஜிகள் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள். (அந்தக்கேசானது கூடியவரை கீழ்க்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்துக்கு அனுசரணையாகயிருந்தாலும்) அந்த விஷயத்துக்கு அது நேரிடைய் ஆதாரமில்லை. மகம்மதுவாஹிப்புக்கும் மகம்மது ஹமீருக்கும் நடந்த 1915-ம் ஹுத்து இ. லா. ரி. 32. கல் 527-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசு விஷயமாய் 531-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற அபிப்பிராயமும் ஷண்முகம் பிள்ளைக்கும் மைனர் கோவிந்தஸாமிக்கும் நடந்த 1907-ம் ஹுத்து இ. லா. ரி. 30. ம. 459-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசின் தீர்மானமும், ஸீவில் புரொஸீஜர் கோடின் 73-வது பிரிவுப்படி கொண்டுவரப்பட்ட கேசின்பேரில் செய்யப்பட்டவைகள் அல்ல. காலநிர்ணயச்சட்டத்தின் 62-வது பிரிவில் சொல்லப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வியாச்சியங்கள் வாஸ்தவத்தில் இன்னவிதமான தென்பதைப்பற்றி முன் சொன்ன தீர்ப்பில் யோசிக்கப்பட்டிருக்கிறது. பின் சொல்லப்பட்ட கேசில், ஸர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர் கல்கத்தா ஹைகோர்ட்டு கற்றறிந்த ஜட்ஜிகளுடைய அபிப்பிராயத்தில் கலந்து கொண்டிருக்கிறார். வாதியினுடைய பிரயோசனத்துக்காக பிரதிவாதியால் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகைவிஷயமான வியாச்சியங்களைப்பற்றி காலநிர்ணயச் சட்டத்தின் 62-வது விஷயத்தில் சொல்லியிருப்பதானது, இங்கிலீஷ் கேசுகளுக்கும் ஒத்திருக்கிறதென்பதைத் தெரிவிக்கிறதாக கல்கத்தா தீர்மானத்தால் வெளியாகிறது. ஆகையால் வாதியினுடைய பிரயோனத்துக்காக பிரதிவாதி எப்போது தொகை வாங்கினாலுமே சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் ஷை தொகையானது வாதியைச் சேரவேண்டியது தானென்று அந்தக் கேசின் ஸந்தர்ப்பங்களினால் யேர்ப்படும் விஷயத்தில் ஷை விஷயத்தை (article) உபயோகிக்க வேண்டியது அவசியம்தான். பகவான்தாஸுக்கும், ராம்லூஸிலாலுக்கும் நடந்த 1911-ம் ஹுத்து இ. லா. ரி. 33 அ. 708-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிற கேசின் தீர்மான சம்பந்தமாக 726-ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிற அபிப்பிராயத்திலும், சங்குண்ணிமேனனுக்கும் கோவிந்த மேனனுக்கும் நடந்த 1912-ம் ஹுத்து 22. ம. லா ஜ. 485-ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற கேசின் தீர்மானத்திலும் இந்தக்கொள்கையை அனுசரிக்கப்பட்டிருக்கிறது. பிரதிவாதி பணம்வாங்குகிற காலத்தில், வாதியின் பிரயோசனத்துக்கு என்று வாங்காமல் தன்னுடைய பிரயோசனத்துக் கென்றே என்ற நம்பிக்கையுடன் வாங்கினாரா இல்லையா வென்ற சங்கதியை பணம் வாதியினுடைய பிரயோசனத்துக்காகத் தான் வாங்கப்பட்டதா வென்பதைத் தீர்மானிக்கும் விஷயத்தில் யோசிப்பது அனாவசியமென்று கல்கத்தா கேசில் ஜஸ்டிஸ் மூகர்ஜி சொல்லியிருக்கும் அபிப்பிராயத்தில் நாம் கலந்து கொள்ளுகிறோம். ஷங்கர் ஸரப்புக்கும் மேஜோமாலுக்கும் நடந்த 1901-ம் ஹுத்து இ. லா. ரி. 23. அ.322-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறபிரிவிகௌன்ஸில் கேசில் அவர்கள் அடியில் கண்டபடி சொல்லியிருக்கிறார்கள். "அந்தக்காலத்தில் க்கூதிக்காரர்களுடையபாத்தியதை என்னவென்று தோன்றுகிறதோ அந்தமட்டில் தீர்ப்புச் செய்யும்படிக்கும் பின்னீடு தர்போதயவியாச்சியத்தைப்போலொத்த வேறுவியாச்சியத்தின் மூலமாக பைசல் செய்யப்படக்கூடிய விஷயங்களைப்பற்றி பைசல் செய்ய வேண்டியதில்லை யென்றும் இவ்விதமான யுக்தங்களை 29-வது பிரிவில் கோர்ட்டுக்குக் கொடுக்கபட்டிருக்கிறது." இந்த விஷயத்தைப்பற்றி திரும்ப பைசல் செய்யும் பொழுது 73-வது பிரிவுப்படி கொண்டு வரப்பட்ட வியாச்சியத்தில் பிரதிவாதியிடம் செலுத்தப் பட்ட தொகையில் ஒருபாகம் வாதிக்குச் சேரவேண்டுமென்று தெரியும் விஷயத்தில் அந்தத் தொகையை பிரதிவாதி—வாதிக்காகவேயே வாங்கினதாக [illegible] அபிப்பிராயப் படுகிறோம்.

(இன்னும் வரும்.)

161195